PUBLICATIONS DU DÉPARTEMENT D'INDOLOGIE - 68.3

# தேவாரம்
## ஆய்வுத்துணை

# TĒVĀRAM
## ÉTUDES ET GLOSSAIRE TAMOULS

## III

T.V. GOPAL IYER

INSTITUT FRANÇAIS DE PONDICHÉRY

# தேவாரம்
# TĒVĀRAM

PUBLICATIONS DU DÉPARTEMENT D'INDOLOGIE - 68.3

# தேவாரம்

## ஆய்வுத்துணை

# TĒVĀRAM

## ÉTUDES ET GLOSSAIRE TAMOULS

## III

T.V. GOPAL IYER

INSTITUT FRANÇAIS DE PONDICHÉRY

© Institut Français, Pondichéry, 1991
(ISSN 0073-8352)
Composition – Art Prints, Madras 600 004
Impression – Sudarsan Graphics, Madras 600 017
Couverture – Serge Brelin

# பதிப்புரை

மூவர் தேவாரத்தின் இம் மூன்றும் தொகுதிக்கண் தொடக்கத்தில் தேவாரம் பற்றிய இன்றியமையாச் சில குறிப்புக்கள் இடம் பெற்றுள.

அடுத்து, சம்பந்தர் தேவாரத்தில் பொருளுணர அரியனவாகிய ஏகபாதம், எழுகூற்றிருக்கை, இயமகம், மாலைமாற்று ஆகிய பதிகங்கட்குத் தொன்று தொட்டு வரும் பழைய உரை, எளிதிற் பொருள் புலப்படும் புத்துரையோடு வரையப் பட்டுள்ளது.

ஒரு பதிகம் பெற்ற திருத்தலங்கள் முதலாக, இரண்டும் மூன்றும் நான்கும் முதலாகப் பல பதிகங்களையும் பெற்றுள்ள திருத்தலங்களின் பெயர்களைப் பதிக எண்ணிக்கை முறையில் வரிசைப்படுத்தி யுரைக்கும் 'திருப் பதிகக்கோவை' என்ற சிறு பிரபந்தம் அடுத்து நிகழ்கிறது. தலமுறைத் தேவார அமைப்பு வருவதற்கு அடிப்படையாய்ச் சோழநாட்டுச் சிதம்பரம் முதலாகத் தொடங்கி வடநாட்டுத் திருக்கயிலாயம் ஈறுகக் குறிப்பிடும் திருத்தலங்களின் நிரலான அமைப்பினை விளக்கும் 'திருப்பதிக்கோவை'யும், வைப்புத்தலங்களது நிரலை வழங்கும் 'வைப்புத் தலக்கோவை'யும் முறையே அடுத்துக் குறிப்பிடப்பெற்றுள்ளன.

அடுத்து, தலமுறைத் தேவாரத் திருத்தலங்களின் பதிகங்களுக்குரிய பண்முறைத் தேவாரப் பதிக எண்கள் குறிக்கப்பெற்றுள. தலமுறைத் தேவாரப் பதிப்பினைக் கையிற் கொண்டார்க்குத் தேவை நேரும்போது பண்முறைத் தேவாரப் பதிகங்களை ஒப்பு நோக்குதற்கு இவ்வட்டவணை உதவ வல்லது.

தேவாரப்பதிகங்கள் பெற்ற திருத்தலங்களின் அட்டவணை, அவ்வத் திருத்தலம் பெற்ற பதிகம் அல்லது பதிகங்கள் இப்பண்முறைத் தேவாரத் தொகுப்பில் பெற்ற எண்ணோடு அகரவரிசையில் அடுத்து அமைக்கப்பட்டுள்ளது.

தேவாரப் பதிகம் பெறுமல் தம் பெயர்மாத்திரம் தேவாரத் திருப்பாடல்களில் குறிப்பிடப்பெற்றுள்ள திருத்தலங்கள் 'வைப்புத் தலம்' எனப்படுகின்றன. அவற்றின் அகரவரிசை அவை பெயர்சுட்டப்பெற்றுள்ள தேவாரப் பாடல் எண்ணோடு அடுத்து இடம்பெறுகிறது.

இன்ன திருத்தலத்துக்கு உரிய தேவாரப்பதிகம் என்று குறிக்கப்பெருமல் பொதுவாக அமைந்துள்ள பதிகங்கள் 'பொதுப் பதிகங்கள்' என்ற பெயரால் அடுத்துக் குறிக்கப்பெற்றுள.

தேவாரத் திருத்தலங்களுடைய இருப்பிடம், அவற்றை எய்தும் இருப்புப்பாதை வழி, அததலங்களிலுள்ள இறைவன்இறைவியர்தம் இக்காலத் திருப்பெயர்கள், தலவிருட்சம், தீர்த்தம் எனபன அடுத்து இடம்பெறுகின்றன.

இவ்வாறே பெரும்பான்மையான வைப்புத்தலங்களுடைய இருப்பிடம் முதலி யனவும் அடுத்து இடம்பெற்றுள.

அடுத்து, சிற்சில பதிகங்கள் தேவாரமுதலிகளின் ஒரொரு வரலாற்று நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு தோன்றியுள்ள செய்தி சேக்கிழார் பெருமானது கருத் தையும் கொண்டு சொல்லப்பட்டுள்ளது.

சில திருத்தலங்களிலுள்ள திருக்கோயில்கள் சிறப்புப் பெயரால் தேவார காலத் திலேயே வழங்கப்பட்டுள்ளன. அவையும், அன்ன பிற சிறப்புச் செய்திகளும் அடுத்துக் கூறப்பட்டுள.

அடுத்து, தேவாரத்தில் சிவபெருமானைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள புராண வரலாறுகள் முதலியன, ஒவ்வொன்றற்கும் ஒரு தேவாரப்பாடல் எண்ணேடு சுட்டப் பெற்றுள.

அடுத்து, சிவபெருமானுடைய திருவுருவங்கள் தேவாரப் பாடல் பலவற்றில் இடம்பெற்றுள்ளமை சுட் டப்பெறுகிறது.

தொடர்ந்து, விநாயகன் முருகன் என்னுமிவர்களைக் குறிப்பிடும் தேவாரப் பாடலடிகள் அவ்வத் தேவாரப்பாடல் எண்ணேடு எடுத்துக்காட்டப்பெற்றுள.

சிவபெருமானுடைய அட்ட வீரட்டங்கள், அட்ட மூர்த்தங்கள், அப்பெருமானை எண்குணத்தான் என்று குறிக்கும் செய்தி என்னுமிவை பயின்ற பாடலடிகள் முறை யே தொடர்ந்து இடம்பெறுகின்றன.

அடுத்து, தேவாரத்திற் பயிலும் பழமொழிகள் வரையப்பெற்றுள்ளன.

தேவாரத்திற் காணப்படும் அகப்பொருட் பதிகங்களும், அகப்பொருட் பாடல் களும் அடுத்து வைக்கப்பட்டுள்ளன.

தேவாரப் பதிகப் பாடல்களின் யாப்பமைதி தொடர்ந்து இடம்பெறும்.

பாசுரங்களின் பாடபேதங்கள் அடுத்துச் சொல்லப்பட்டுள.

அருஞ்சொற்பொருள் அகரவரிசையோடு இத்தொகுதி நிறைவு பெறுகிறது.

# பாகம் - 1

# முன்னுரை

# 1. தேவாரம் பற்றிய சில செய்திகள்

## மூவர் தேவாரம்

சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் இற்றைக்கு ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்கு முற்பட்டவரான திருஞானசம்பந்தர் தாம் வழிபட்ட திருத்தலங்கள் பற்றியும் பொதுவாகவும் இயற்றியருளிய திருப்பதிகங்கள் பலவும் முதல் மூன்று திருமுறைகளாகவும், அவருக்கு ஒத்த காலத்தவரான திருநாவுக்கரசர் அவ்வாறே அருளிய திருப்பதிகங்கள் பலவும் அடுத்த மூன்று திருமுறைகளாகவும், இவ்விருவருக்கும் பிற்பட்டவரான சுந்தரர் அருளிய திருப்பதிகங்கள் பலவும் ஏழாம் திருமுறையாகவும் அமைக்கப்பெற்று இக்காலத்தில் தேவாரம் என்ற பொதுப்பெயரான் வழங்கப்பெற்றுவருகின்றன. இவற்றின் தொகுப்பு மூவர்தேவாரம் எனவும் அடங்கன் முறை எனவும் கூறப்படுகிறது.

இம்மூவரும் இறைவனோடு கலந்த காலத்தை அடிப்படையாகக்கொண்டு, ஞானசம்பந்தர் முதலில் சோதியில் கலந்தமையால் அவர் பாடல்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், நாவுக்கரசர் புகலூரில் இறைவனடி அடைந்த காலம் ஞானசம்பந்தர் சோதியில் கலந்த காலத்துக்குச் சில ஆண்டுகள் பிற்பட்டதாதலின் அவர் அருளிய பாடல்கள் அடுத்த மூன்று திருமுறைகளாகவும், இவ்விருவருக்கும் பிற்பட்டு அவதரித்துக் கயிலை சேர்ந்த சுந்தரர் பாடல்கள் ஏழாம் திருமுறையாகவும் இவர்கள் காலத்தை ஒட்டித் தோன்றிய முன்னோர்களால் முறையே வைக்கப்பட்டன.

## 'முறை' என்ற வழக்கு

இத்திருமுறைகளை முதல்திருமுறை இரண்டாம் திருமுறை என்று குறிப்பிடாது, 'முதல் முறை' 'இரண்டாம் முறை' என்று குறிப்பிடும் வழக்கமும் ஏட்டுச்சுவடிகள் வாயிலாக அறியப்படுகிறது.

திருமுறைகளை அடையின்றி முறை என்ற பெயரான் வழங்கிய வழக்கமும் உண்டு.

எடுத்துக்காட்டு:

> "திருஞானசம்பந்தமூர்த்தி பாடல் மூன்றுவது முறை முற்றிற்று. முதல்முறை 1448, இரண்டாம் முறை 1383 மூன்றும் முறை 1341; ஆக முறை மூன்றுக்கும் 4172"
>
> — அருணசலம்பிள்ளை சுவடி எண் 5; ஏடு - 163 B.

திருநாவுக்கரசர் திருமுறையைத் தனியே பிரித்து மூன்றாக எண்ணும் மரபும் ஏட்டுச்சுவடிகளில் காணப்பெறுகிறது. நாவுக்கரசரின் இரண்டாம் திருமுறையைத்

திருக்குறுந்தொகை என்றும், மூன்ரும் திருமுறையைத் திருத்தாண்டகம் என்றும் குறிப்பிடுதலையும் காண்கிரேம்.

"திருக்குறுந்தொகை முற்றும் — பதிகம் - 100
திருநெடுந்தாண்டகம் முற்றும் — பதிகம் - 99"
— அருணசலம்பிள்ளை சுவடி எண்-2.

"ஆரும் திருமுறை திருத்தாண்டகப்பதிகம் - 99 ஆக, திருநாவுக்கரசுமூர்த்தி பாடியருளின திருமுறை மூன்றுக்குத் திருப்பதிகம் — 312"
— அருணசலம்பிள்ளை சுவடி எண்-1.

"நாவுக்கரசுதேவநாயனர் ஓதியருளின திருத்தாண்டகம் மூன்ரும் முறை முற்றிற்று"
— காஞ்சிபுரச் சுவடி.

"அப்பர் பண்டாரம் பாடல் முறை மூன்றுக்குப் பண் பதினன்குக்குப் பதிகம் 312. அப்பர் தம்பிரானர் திருமுறை மூன்று முற்றும்"
— உ.வே.சா. நூல்நிலையச் சுவடி எண்-1367.

## சுவடிகளில் பாடல், பதிகம் இவற்றின் வேறு பெயர்கள்

திருமுறை என்ற சொல் பாடல்களைக் குறிக்கவும் ஏட்டுச்சுவடிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"திருமுறை மூன்றுக்குப் பண் 22க்குப் பதிகம் - 383க்குத் திருமுறை 4080$^{1}/_{2}$.
மூன்ரும் திருமுறை பண் 10க்குப் பதிகம் - 126க்குத் திருமுறை 1364.
முதல் திருமுறை பண் 6க்குப் பதிகம் - 135க்குத் திருமுறை 1468$^{3}/_{4}$.
இரண்டாம் திருமுறை பண் 6க்குப் பதிகம் - 122க்குத் திருமுறை 1347"
— உ.வே.சா. நூல்நிலையச்சுவடி எண்-1367.

ஆனல் ஒவ்வொரு பதிகத்தையும் திருக்கடைக்காப்பு என்று குறிப்பிடும் வழக்கம் ஏட்டுச் சுவடிகள் வாயிலாக அறியப்படுகிறது.

"திருஞானசம்பந்தமூர்த்தி திருமுறை 3க்குத் திருக்கடைக்காப்பு — 384
அப்பர் தம்பிரானர் திருமுறை 3க்குத் திருக்கடைக்காப்பு — 312
சுந்தரமூர்த்தி திருமுறைக்குத் திருக்கடைக்காப்பு — 100"
— அருணசலம்பிள்ளை சுவடி எண் - 1.

"ஆக, திருமுறை மூன்றுக்குத் திருக்கடைக்காப்பு — 384
அப்பர் தம்பிரானர் திருமுறை 3க்குத் திருக்கடைக்காப்பு — 311"
— திருவாவடுதுறை ஆதீனச்சுவடி எண்-38/166.

"அப்பர் தம்பிரானர் செய்த முதன்முறைத் திருக்கடைக்காப்பு — 114
அப்பர் தம்பிரானர் செய்த இரண்டாம் முறைத் திருக்கடைக்காப்பு — 100
அப்பர் தம்பிரானர் செய்த மூன்ரும் முறைத் திருக்கடைக்காப்பு — 100
திருஞானசம்பந்தப் பிள்ளையார் செய்த திருமுறை மூன்றுக்குத் திருக்கடைக்காப்பு — 384"
"சுந்தரப் பெருமானர் திருமுறை ஒன்றுக்குத் திருக்கடைக்காப்பு — 101"
— கீழ்க்கலை நூல்நிலையச் சுவடி எண்-D-1131, D-1132.

இத்திருக்கடைக்காப்பு என்னும் சொல் பதிகத்தைக் குறிப்பிடுவது போலவே, சுவடி ஒன்றில் பாடல்களையும் குறிப்பிடுகிறது.

"திருஞானசம்பந்தமூர்த்தி திருவாய்மலர்ந்தருளின திருப்பதிகமுறை 3க்குப் பதிகம் - 384 க்குத் திருக்கடைக்காப்பு - 4224"

— தருமபுர ஆதீனச்சுவடி எண்-20.

திருஞானசம்பந்தர் பதிகங்களைத் 'திருக்கடைக்காப்பு'எனவும், திருநாவுக்கரசர் பதிகங்களைத் 'தேவாரம்' எனவும், சுந்தரர் பதிகங்களைத் 'திருப்பாட்டு' எனவும் குறிப்பிடும் மரபும் இந்த நாட்டில் உண்டு. (திருவருட்பா-ஊரனடிகள் பதிப்பு பக்கம் 597.)

திருநாவுக்கரசருடைய நான்காம் திருமுறையின் 22 முதல் 79 முடியப் பதிகங்கள் 'திரு நேரிசை' எனவும், 80 ஆம் பதிகம் முதல் அத்திருமுறையின் இறுதிப் பதிகமாகிய 114 ஆம் பதிகம் முடிய உள்ள பதிகங்கள் 'திரு விருத்தம்' எனவும் வழங்கப் பெறுகின்றன. ஆனால் ஏட்டுச் சுவடி ஒன்றில் ஞானசம்பந்தர் பாடல்களும் திரு விருத்தம் என்றே பெயரிட்டு எண்ணப்பட்டுள்ளன.

"முதல் திருமுறை பதிகம் - 141க்குத் திருவிருத்தம் 1471
இரண்டாம் திருமுறை பதிகம் - 121க்குத் திருவிருத்தம் 1323
மூன்றாம் திருமுறை பதிகம் - 125க்குத் திருவிருத்தம் 1347
ஆகத் திருப்பதிகம் - 387க்குத் திருவிருத்தம் 4141"

— கீழ்க்கலை நூல்நிலையச் சுவடி எண்-D. 1130

## அடங்கல் முறை

பொதுவாக 'அடங்கன் முறை' என்ற தொடர் மூவர் பாடிய திருமுறைகளையும் ஒருசேரக் குறிக்கும் தொடராயினும், தனித்தனி ஒவ்வொருவருடைய பாடல் தொகுப்பைக் குறிப்பிடவும் எட்டுச்சுவடிகளில் அத்தொடர் பயன்படுத்தப் பட்டுள்ளது.

"ஏழாந் திருமுறை முற்றும். அடங்கன் முறை முற்றும்"

— திரு. இராசம் அவர்களின் செப்பறைச் சுவடி- ஏடு 428B

"சுந்தரப்பெருமானார் திருமுறை முடிந்தது. முற்றும் ஏழாம் திருமுறை முற்றும். அடங்கன் முறை முற்றும்."

— திருவாவடுதுறை ஆதீனச் சுவடி எண்-38/......

என 'அடங்கன் முறை' என்ற சொல் மூவர் பாடிய திருமுறைகளையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம். ஆனால்,

"திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்த மூன்றாம் திருமுறை முற்றும். அடங்கன் முறை முற்றும்."

— திருவாவடுதுறை ஆதீனச் சுவடி எண்-38/161; ஓலை எண்-121

"ஆகத் திருமுறை மூன்றுக்குத் திருக்கடைக் காப்பு 384
திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அடங்கன் முறை முற்றிற்று"
"ஆகத் திருமுறை மூன்றுக்குத் திருக்கடைக் காப்பு 311
திருநாவுக்கரசு சுவாமிகள் அடங்கன் முறை முற்றிற்று"

— திருவாவடுதுறை ஆதீனச் சுவடி எண்-38/166

என்பனவற்றை நோக்கத் தனித்தனியே ஞானசம்பந்தர் பதிகங்களின் தொகுப்பும், நாவுக்கரசர் பதிகங்களின் தொகுப்பும் 'அடங்கன் முறை' என்று குறிப்பிடப் பட்டமையும் போதரும்.

## தேவாரத் திருமுறை

சில சுவடிகளில் இம்மூவர் பாடலும் தேவாரத் திருமுறை என்ற பெயராலும் சுட்டப்பட்டுள்ளன.

"தேவாரத் திருமுறை எழுதி முடிந்தது"
— திருவாவடுதுறைச் சுவடி எண்-38/163.

## சுவடிகளால் அறியலாவன

இவற்றை நோக்கத் திருமுறைகளைத் 'திரு' என்ற அடையின்றி வாளா 'முறை' என்று வழங்குதலும், நாவுக்கரசர் திருமுறைகளைத் தனியே எண்ணிட்டு 1,2,3 என்று வழங்குதலும், ஐந்தாம் திருமுறையைத் 'திருக்குறுந்தொகை' என்று வழங்கு தலும், ஆறும் திருமுறையைத் 'திருத்தாண்டகத் திருமுறை' என்று வழங்குதலும், மூவர் பதிகங்களையும் 'திருக்கடைக்காப்பு' என்று வழங்குதலும், ஒரோவழிப் பாடல்களையும் 'திருக்கடைக்காப்பு' என்று குறிப்பிடுதலும், மூவர் திருமுறைகளை யும் 'அடங்கன் முறை' என்று வழங்குதலும், தனியே ஞானசம்பந்தர் திருமுறை களையும் நாவுக்கரசர் திருமுறைகளையும் 'அடங்கன் முறை' என்று வழங்குதலும், எல்லோருடைய பாடல்களையும் 'திருவிருத்தம்' என்று வழங்குதலும், மூவர் பாடிய பாடல்களையும் தொகுத்த தொகுப்பைத் 'தேவாரத் திருமுறை' என்று வழங்கு தலும் ஏட்டுச் சுவடிகள் வாயிலாக உணரப்படுகின்றன. திருமுறைகளைத் திருப்பதிக முறை என்று வழங்குதலும் அருகிக் காணப்படுகிறது.

## மூவர் பாடல்தொகை

ஞானசம்பந்தப் பெருமான் பதினாறாயிரம் பதிகங்கள் அருளிச்செய்தார் என்ற செய்தியை நம்பியாண்டார் நம்பி தாம் அருளிச்செய்த ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியின் 15 ஆம் பாடலில்

'நான்மறைகள்
பகர்அம் கழலவ னைப்பதி னாறு யிரம்பதிகம்
மகரம் கிளர்கடல் வையம் துயர்கெட வாய்மொழிந்த
நிகர்அங்(கு) இலிகலிக் காழிப் பிரான்என்பர் நீள்நிலத்தே'

எனவும்,

ஆளுடைய பிள்ளையார் திருஉலாமாலையில்,
'பன்னு தமிழ்ப்பதினா றாயிரம் நற்பனுவல்
மன்னு புவியவர்க்கு வாய்ப்பவும்' (கண்ணி-62)

எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் ஆளுடைய பிள்ளையார் திருத்தொகையில் 41 ஆம் கண்ணியில்

'கொச்சைச் சதுரன்தன் கோமானைத் தான்செய்த
பச்சைப் பதிகத் துடன்பதினா றாயிரம்பா'

என்று குறிப்பிடுகிறார். இங்குப் பா என்பது பதிகம் என்ற பொருளில் அமைந் துள்ளதுபோலும்.

திருநாவுக்கரசர் 4900 பதிகங்கள் பாடினார் என்ற செய்தியைச் சுந்தரர் தாம் பாடிய திருப்பதிகங்களுள் ஒன்றில்,

'இணைகொள் ஏழெழுநூறு இரும்பனுவல்
ஈந்தவன் திருநாவினுக்கு அரையன்' (தே.7901)

என்று குறிப்பிட்டுள்ளார். நம்பியாண்டார் நம்பி தாம் அருளிய திருநாவுக்கரசுதேவர் திரு ஏகாதச மாலையில்,

'கசிந்துஇதயம் ஏழெழுநூறு அரும்பதிக நிதியே
பொழிந்தருளும் திருநாவின் எங்கள் அரசினையே' (3)

எனவும்,

'பதிகம் ஏழெழுநூறு பகரும் மா கவியோகி' (7)

எனவும் கூறிச் சுந்தரர் குறிப்பிட்ட தொகையை வலியுறுத்தியுள்ளார்.

சேக்கிழார் பெருமான் சுந்தரரைப் பற்றிப் பாடுங்கால்,

'நின்றியூர் மேயாரை நேயத்தால் புக்கிறைஞ்சி
ஒன்றியஅன்பு உள்ளுருகப் பாடுவார் உடையஅரசு
என்றும்உலகு இடர்நீங்கப் பாடியஏழ் எழுநூறும்
அன்றுசிறப் பித்துஅஞ்சொல் திருப்பதிகம் அருள்செய்தார்'

என்று ஏயர்கோன் கலிக்காமநாயனர் புராணத்தின் 150 ஆம் பாடலில், நாவுக்கரசர் பதிகங்கள் 4900 என்று சுந்தரர் குறிப்பிட்டுள்ள செய்தியை எடுத்துக் கூறியுள்ளார்.

14 ஆம் நூற்ருண்டினராகிய உமாபதிசிவம் இயற்றியதாகக் கூறப்படும் திருமுறை கண்ட புராணம் தன் 14,15,16 ஆம் பாடல்களில், ஞானசம்பந்தர் 'தோடுடைய செவியன்' முதல் நல்லூர்ப்பெருமணப் பதிகம் ஈருக 16,000 பதிகங்கள் அருளிச் செய்தார் எனவும், நாவுக்கரசர் 'கூற்ருயினவாறு' முதல் புகலூர்ப்பதிகம் ஈருக 49,000 பதிகங்கள் அருளிச் செய்தார் எனவும், சுந்தரர் 'பித்தா பிறைசூடீ' என்ற வெண்ணெய்நல்லூர்ப் பதிகம் முதல் நொடித்தான்மலைப் பதிகத்தின் இறுதிப் பாடலாகிய 'ஊழிதோறூழி' என்பது ஈருக 38,000 பதிகம் பாடினுர் எனவும் குறிப்பிடுகிறது. பதிகம் என்பது இங்குப் பாடலையே குறிக்கும் என்ற கருத்தும் அறிஞரிடையே உண்டு. (பன்னிரு திருமுறை வரலாறு I-பக்.39)

இத் திருமுறை கண்ட புராணத்தை நம்பியாண்டார் நம்பி இயற்றியதாகத் தலமுறைத் தேவாரத்தை கி.பி. 1894 இல் பதிப்பித்த செந்தில்வேலு முதலியார் கருதுகிருர். அவர் கருத்துக்கு ஆதாரம் எது என்பது புலப்படவில்லை.

திருமுறை கண்ட புராணத்தின் 26 ஆம் பாடல், செல்லரித்த சுவடிகள் நீங்கலாக எஞ்சியவற்றில் இம் மூவர் பதிகங்கள் முறையே 384, 307, 100 என்ற அளவிலேயே கிட்டியுள்ளன என்று குறிப்பிடுகிறது.

## திருவிடைவாய்ப் பதிகம்

பழைய பதிப்புக்களில் ஞானசம்பந்தர் அருளிய 383 பதிகங்களே காணப்பட்டன. திருவிடைவாய்த் தலம் பற்றி ஞானசம்பந்தர் அருளிய பதிகம் ஒன்று அவ்வூர்க் கோயில் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்லெழுத்து 12,13 ஆம் நூற்ருண்டுகளுக்கு உரியது என்பர். இப்பதிகமே திருமுறை கண்ட புராணம் குறிப்பிடும் 384 ஆம் பதிகம் என்பர். ஞானசம்பந்தர் இப்பொழுது லால்குடி என்று வழங்கப்பெறும் திருத்தவத்துறைக்குச் சென்று அங்கு இறைவன்மீது பதிகம் பாடியதாகச் சேக்கிழார் பெருமான்,

'.........மன்னும் தவத்துறை வானவர்தாள்,
எய்தி இறைஞ்சி எழுந்து நின்றே
இன்தமிழ்மாலை கொண்டு ஏத்திப் போந்து' (திருஞான. 347)

என்ற பாடலடிகளில் குறிப்பிடுகிருர். அக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள முதல் பராந்தகனின் 37 ஆம் ஆண்டுக் கல்வெட்டு (கி.பி. 977) சிவகோசரி பிடாரன்

என்பான் திருத்தவத்துறை பட்டாரகர் (இறைவன்) முன்பு நாள்தோறும் மூன்று காலமும் பிராமணர் இருவர் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய நிலம் உதவிய செய்தியைக் குறிப்பிடுகிறது.

திருவிடைவாய்க்குச் சேக்கிழார் பதிகம் பாடப்பட்ட சிறப்பினைக் குறிப்பிடாமை யால், 384 ஆம் பதிகம் இப்பொழுது, சேக்கிழார் காலத்துக்குப் பின் வழக்கிறந்த திருத்தவத்துறைப் பதிகமே யாகலாம் என்பது மு. இராகவ ஐயங்காரவர்கள் கருத் தாகும்.(ஆராய்ச்சித்தொகுதி கட்டுரை -21)

[கிளியன்னவூர்ப் பதிகம் சுவடிவாயிலாகக் கிட்டவே, 'சித்தாந்தம்' என்ற திங் கள்இதழில் 1932 ஆம் ஆண்டு அது வெளியிடப்பட்டது.]

## சுந்தரர் பதிகத்தொகை

சுந்தரர் பதிகம் 100 என்று குறிப்பிடப்பட்டுள்ளமையால், திருநாகைக்காரோ ணம் பற்றிய 'பொன்னும் இதழி விரைமத்தம்' என்ற சுந்தரர் பதிகத்தோடு 101 ஆதலின், அப்பதிகத்தை 'வெள்ளிப் பாட்டு' என்று குறிப்பிடுகின்றனர்.

## மூவர்முதலிகளது காலம்

இனி, ஞானசம்பந்தர் காலம் கி.பி. 638-654 எனவும், திருநாவுக்கரசர் காலம் கி.பி. 575-656 எனவும், சுந்தரர் காலம் கி.பி. 690 க்கும் 720 க்கும் இடைப்பட்ட 18 ஆண்டுகள் எனவும் தமிழறிஞர்கள் முடிவு செய்துள்ளனர். ஞானசம்பந்தர் முதலிய மூவரும் இவ்வுலகில் முறையே 16,81,18 ஆண்டுகள் இருந்தனர் என்று குறிப்பிடும் பழம்பாடலை அடியொற்றியே, இவர்கள் வாழ்ந்த காலத்தை வரையறுத்துள்ளனர்.

'அப்பருக்கு எண்பத்தொன்று, அருள்வாத வூரர்க்குச்
செப்பிய நாலெட்டில் தெய்வீகம், — இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு, தொல்ஞான சம்பந்தர்க்கு
அந்தம் பதினாறு அறி'

என்பதே அப்பாடல்.

## 'திருமுறை'த் தொண்டு

இம் மூவரும் பல தலங்களுக்கும் சென்று பாடிய பாடல்கள் நன்மக்களால் தொகுத்துவைக்கப்பெற்று இவர்கள் காலத்திலும், தொடர்ந்து இவர்களுக்குப் பின்னும் கோயில்களில் பாடப்பட்டன. சுந்தரரும் சேரமான் பெருமாளும் முதலி ருவர் திருப்பதிகங்களைப் பாடி வழிபட்டதைச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். (ஏயர். 44, கழறிற். 9)

நாயன்மார்கள் அறுபத்துமூவருள் ஒருவரும், சுந்தரர் காலத்தை யொட்டி வாழ்ந்த வரும், காழிப்பதியினரும் ஆன கணநாதர் என்பவர்,

'எல்லையில் விளக்கு எரிப்பவர், திருமுறை எழுதுவோர், வாசிப்போர்' (3)

'இனைய பல் திருப்பணிகளில் அணைந்தவர்க்கு ஏற்ற அத்திருத்தொண்டின்
வினை விளங்கிட வேண்டிய குறையெலாம் முடித்து மேவிடச் செய்தே
அனைய அத்திறம் புரிதலின் தொண்டரை ஆக்கி அன்புறு வாய்மை
மனையறம் புரிந்து அடியவர்க்கு இன்புற வழிபடும் தொழிலின் மிக்கார்'

(பெரிய புராணம் கணநாதர். 4)

என்றவாறு, திருமுறை எழுதுவோர் வாசிப்போர் ஆகியவர் செயல்களைத் திருத் தொண்டாக உட்கொண்டு அவர்களை ஆதரித்து வந்த செய்தியைச் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

விஜயநந்தி விக்கிரமவர்மன் என்னும் மூன்றாம் நந்திவர்மனுடைய பதினேழாம் ஆண்டில் (கி.பி. 847) இத் திருப்பதிகங்கள் கோயில்களில் பாடப்பட்ட செய்தியைத் தீக்காலிவல்லம் கோயில் கல்வெட்டால் அறிகிறோம். (தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் -மூன்றாம் தொகுதி எண்-43)

## மூவர்முதலிகளைப் பற்றி நம்பியாண்டார் நம்பிகள் நவில்வன

நம்பியாண்டார் நம்பிகள் ஆதித்த சோழன் காலத்தவர் என்று சான்றோர்கள் தக்க ஆதாரங்களுடன் முடிவு செய்துள்ளனர் (செந்தமிழ்த் தொகுதி 45: நம்பி யாண்டார் நம்பி காலம் — T.V. சதாசிவ பண்டாரத்தார்). ஆதித்த சோழன் காலம் கி.பி.' 871-907. நம்பியாண்டார் நம்பி காலத்திலும் திருமுறைகள் கோயில்களில் பரவலாக ஓதப்பட்டுவந்தன என்ற செய்தியைத் திருமுறை கண்ட புராணம் 23 ஆம் பாடலில், நம்பியாண்டார் நம்பி முதல் ஏழு திருமுறைகளையும் முன்பு போலவே தொகுத்தார் என்ற கருத்தில் 'எழில் முறையை முன்போல வகுக்க எண்ணி' என்று சுட்டுவது கொண்டு உணரலாம். சிதறிக் கிடந்த முதல் ஏழு திருமுறைகளையும் பண் அமைதிக்கு ஏற்ப முறையாகத் தொகுத்த பெருமை நம்பியாண்டார் நம்பியைச் சாரும்.

நம்பியாண்டார் நம்பி, சுந்தரர் அருளிய திருத்தொண்டத்தொகைப் பதிகச் செய்தியைச் சற்று விரித்து 89 பாடல்கள் கொண்ட திருத்தொண்டர் திருவந்தாதி யைப் பாடியுள்ளார். அதன்கண் 8,16,23,32,40,48,57,63,69,77, 86 என்ற எண்ணு டைய பதினொரு பாடல்கள் சுந்தரரைப் பற்றியவை.

இவர் ஞானசம்பந்தரைப் பற்றி, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை, ஆளுடைய பிள்ளை-யார் திருவுலாமாலை, ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், ஆளுடைய பிள்ளை-யார் திருத்தொகை என்ற ஆறு பிரபந்தங்களைப் பாடியுள்ளார்; திருநாவுக்கரசரைப பற்றித் திருநாவுக்கரசுதேவர் திரு ஏகாதச மாலை என்ற பதிகம் பாடியுள்ளார்.

இவற்றுள், திருத்தொண்டர் திருவந்தாதியின்

'அருட்டுறை அத்தற்கு அடிமைப்பட்டேன; இனி அல்லன் என்னும், பொருட்டுறை யாவது என்னே'

என்ற 16 ஆம் பாடலடிகள் சுந்தரருடைய 'பித்தா! பிறை சூடீ' என்ற முதற்பாடற் கருத்தை உட்கொண்டு எழுந்தனவாகும். சுந்தரரை, 'சிந்திப் பரியன சேவடி பெற்றவன் சேவடியே, வந்திப்பவன்' (32 ஆம் பாடல்) என்று சுட்டும் தொடர், நாவுக்கரசர் அருளிய 'சிந்திப் பரியன ...... ஐயாறன் அடித்தலமே' (தே. 5052) என்ற பாடலடிகளை உட்கொண்டு எழுந்ததாகும்.

நம்பியாண்டார் நம்பிகள் சுந்தரரைப் பற்றித் திருத்தொண்டர் திருவந்தாதியில் பாடிய பதினொரு பாடல்களில் அவரை, நம்பி ஆரூரன், நாவற்பதிக்குப் பிரான், நாவலர்கோன், வன்தொண்டன், ஆரூரன், திருவாரூரன, அரன்பால செம பொன் கொள்ள வல்லவன், மதுரகவி தொடுத்தான், நாவலூர் அரசு, ஞான ஆரூரன் என்று குறிப்பிட்டுள்ளார்.

சுந்தரருடைய தந்தைவழிப் பாட்டன் பெயர் ஆரூரன் என்பதனைச் சேக்கிழார் 'அருமறை நாவல் ஆதிசைவன் ஆரூரன் செய்கை' (தடுத்தாட். 59) முதலிய இடங் களில் குறிப்பிடுகிறார். திருவாரூர்க் கல்வெட்டு ஒன்று (தென்னிந்தியக் கல்வெட்டுத்

தொகுதி 7; எண்-485) சுந்தரருடைய தாய்ப்பாட்டன் திருவாரூருக்கு அண்மையில் கமலாபுரத்தில் வாழ்ந்த கௌதமகோத்திரத்து ஞான சிவாசாரியார் என்பவனைக் குறிப்பிடுகிறது. தாய்வழிப் பாட்டன் தந்தைவழிப் பாட்டன் இருவர் பெயரையும் இணைத்து இருமரபுக்கும் சிறப்புத் தேடித்தந்த சுந்தரருக்கு 'ஞான ஆரூரன்' என்று நம்பியாண்டார் நம்பி பெயர் அமைத்தார்போலும்.

இனி, ஆளுடைய பிள்ளையார் என்று போற்றப்படும் ஞானசம்பந்தரைப் பற்றிய ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில், நம்பியாண்டார் நம்பி, அவரைத்

'தோட்டியல் காதன் இவன்என்று தாதைக்குச் சூழ்விசும்பில், காட்டிய கன்று' (13)

என்று குறிப்பிடுமிடத்து, அவர் முதன்முதல் பாடியருளிய 'தோடுடைய செவியன்' என்ற பாடலை நினைவுகூர வைக்கிறார்; 71 ஆம் பாடலில் ஞானசம்பந்தர் அனல் வாதத்தின்போது ஏட்டில் எழுதித் தீயில்இட உதவிய நள்ளாற்றுப் பதிகமாகிய 'போகம் ஆர்த்த' என்று தொடங்கும் பதிகத்தை,

'போக மார்ப்பைக்
காந்தும் கனலில் குளிர்படுத் துக்கடல் கூடலின்வாய்
வேந்தின் துயர்தணித் தானைப் போதும் விரும்புமினே'

என்று குறிப்பிடுகிறார்.

ஞானசம்பந்தர் அருளிச்செய்த பாடல்கள்யாவும் அக்கால இலக்கண முறைப்படிக் கலிப்பா வகையைச் சார்ந்தன என்பது அவர் பாடியருளிய,

'கந்தண் பூங் காழி ஊரன் கலிக்கோவையால்
சந்தமே பாடவல்ல தமிழ் ஞான சம்பந்தன்' தே.1600

என்ற திருக்கடைக் காப்புப் பாடல் ஒன்றன் அடிகளால் போதரும். அச்செய்தியை நம்பியாண்டார் நம்பியும்,

'நல்லசங்கத்து, ஒன்றும் புலவர்கள் யாப்புக்கு உரியன ஒண்கலியை'
(மும்மணிக்கோவை -3)

என்று குறிப்பிடுகிறார்; (இப்பாடலில் நாலாமடியில் உள்ள 'பொன்றும்' என்ற சொற்கு, 'மற்றவர் கலிப்பா இயற்றும் வீற்றினை அழிக்கும்' என்று பொருள் செய்க.)

ஞானசம்பந்தர் அருளிச்செய்தன பதினாறாயிரம் பனுவல் என்ற செய்தியை,

'பன்னு தமிழ்ப்பதினா றாயிரம் நற்பனுவல்
மன்னு புவியவர்க்கு வாய்ப்பனவும்' (உலாமாலை : கண்ணி - 62)

எனவும்,

'கொச்சைச் சதுரன்தன் கோமானைத் தான்செய்த
பச்சைப் பதிகத் துடன்பதினா றாயிரம்பா' (திருத்தொகை : கண்ணி-41)

எனவும்,

'பதினாறாயிரம் பதிகம் .... வாய்மொழிந்த .... காழிப்பிரான்' (அந்தாதி-15)

எனவும் குறிப்பிட்டுள்ளார்; ஞானசம்பந்தர் தம்பதிகங்களின் திருக்கடைக்காப்புப் பாடல்களில் (2387, 3645, 4078 முதலியன) 'வானில் அரசாள்வர் ஆணை நமதே' (2398) என்றாற் போலக் குறிப்பிடும் செய்தியை உட்கொண்டு,

'அத்திக்கும் பத்தரெதிர் ஆணைநமது என்னவலான்' (திருத்தொகை : கண்ணி-45)

என்று சுட்டியுள்ளார்; திருஉலாமாலையில், ஞானசம்பந்தர் அருளியுள்ள பல பாடல்களையும்,

'நீக்கரிய இன்பத் திராகம்இருக் குக்குறள்
நோக்கரிய பாசுரம்பல் பத்தோடும் — ஆக்கரிய
யாழ்மூரி சக்கரமாற்று ஈரடி முக்காலும்
பாழிமையால் பாரகத்தோர் தாம்உய்ய — ஊழி
உரைப்பமரும் பல்புகழால் ஓங்க உமைகோனைத்
திருப்பதிகம் பாடவல்ல சேயை' கண்ணி 83-85

என்று குறிப்பிடுகிறார்; ஞானசம்பந்தர் நிகழ்த்திய அற்புதச் செயல்களை ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில்,

'அணங்கமர் யாழ்முரித்து, ஆண்பனை பெண்பனை ஆக்கி, அமண்
கணம்கழு ஏற்றி, கடுவிடம் தீர்த்து, கதவுஅடைத்து,
பிணங்குஅலை நீர்எதிர் ஓடம் செலுத்தின — வெண்பிறையோடு
இணங்கிய மாடச் சிரபுரத் தான்தன் இருந்தமிழே ' (39)

'இருந்தண் புகலி, கோலக்கா, எழில் ஆவடுதுறை, சீர்
பொருந்தும் அரத்துறை — போனகம், தாளம், நன் பொன், சிவிகை —
அருந்திட, ஒத்த, முத்தீச்செய, ஏற — அரன்அளித்த
பெருந்தகை சீரினை எம்பர மோ, நின்று பேசுவதே?' (40)

'அடைத்தது மாமறைக் காடர்தம் கோயில் கதவினை, அன்று,
உடைத்தது பாணன்தன் யாழின் ஒலியை, உரகவிடம்
துடைத்தது, தோணி புரத்துக்கு இறைவன் சுடர்ஒளிவாய்
படைத்து தண்மையை, நள்ளாற் றரசு பணித்திடவே' (91)

என்ற பாடல்களிற் குறிப்பிடுகிறார்; ஞானசம்பந்தப் பெருமான் வரலாற்றினை,

'அடுசினக் கடகரி அதுபட உரித்த
படர்சடைக் கடவுள்தன் திருவருள் அதனால்; பிறந்தது,
கழுமலம் என்னும் கடிநகர் அதுவே; வளர்ந்தது,
தேங்கமழ் வாவிச் சிலம்பரை யன்பெறு
பூங்குழல் மாதுஇடு போனகம் உண்டே; பெற்றது,
குழகனைப் பாடிக் கோலக் காப்புக்கு
அழகுடைச் செம்பொன் தாளம் அவையே; தீர்த்தது,
தாதுஅமர் மருகல் உடையனைப் பாடிப்
பேதுறு பெண்ணின் கணவனை விடமே; அடைத்தது,
அரைசோடு இசையா அணிமறைக் காட்டுக்
குரைசேர் குடுமிக் கொழுமணிக் கதவே; ஏறிற்று,
அத்தியும் மாவும் தவிர அரத்துறை
முத்தின் சிவிகை முன்னாள் பெற்றே; பாடிற்று,
அருமறை ஒத்தூர் ஆண்பனை யதனைப்
பெருநிறம் எய்தும் பெண்பனை யாவே; கொண்டது,
பூவிடு மதுவில் பொறிவண்டு உழலும்
ஆவடு துறையில் பொன்ஆ யிரமே; கண்டது,
உறியொடு பீலி ஒருகையில் கொள்ளும்
பறிதலைச் சமணைப் பல்கழு மிசையே; நீத்தது,
அவிழ்ச்சுவை யேஅறிந்து அரனடி பரவும்
தமிழ்ச்சுவை அறியாத் தம்பங் களையே; நினைந்தது,
அள்ளல் பழனக் கொள்ளம் பூதூர்
இக்கரை ஓடம் அக்கரைச் செலவே; — மிக்கவர்,

ஊனசம் பந்தம் அறுத்துஉயக் கொளவல
ஞானசம் பந்தன்இஞ் ஞாலத் திடையே'

எனத் திருமும்மணிக்கோவையில் (4) குறிப்பிட்டுள்ளார்.

நம்பியாண்டார் நம்பிகள் தாம் பாடிய பிரபந்தங்களில் ஞானசம்பந்தரைப் பிரமபுர நகர் மன்னன், காழிக் கவுணியர் தீபம், பரமத கோளரி, சண்பையர் நாதன், வேணுத் தலைவன், அருகாசனி, சைவசிகாமணி, கொச்சை நாதன், பரசமயக் கோளரி, இன்சொல் சிறுக்கன், வீறு தேறும் தமிழால் வழிகண்டான், பந்தம் முந்தும் தமிழ் செய்த பராபரன், நற்றமிழ் விரகன், மலைமகள் புதல்வன், விப்ர சிகாமணி, தமிழ்க் கேசரி, காழி முதல்வன், கவுணியர்தம் போரேறு, பூம்புகலி நாயகன் முதலிய பல பெயர்களால் குறிப்பிட்டுள்ளார்.

நம்பிகள், திருநாவுக்கரசரைத் தம் ஏகாதசமாலையில்,

'கசிந்து இதயம் ஏழெழுநூறு அரும்பதிக நிதியே' (3)

எனவும்,

'பதிகம்ஏழ் எழுநூறு பகரும்மா கவியோகி
பரசும்நா வரசான பரமகாரண ஈசன்' (7)

எனவும் புகழ்கிறார்.

## பட்டினத்தடிகள் பகர்வன

நம்பியாண்டார் நம்பிக்கு முற்பட்டவரான பட்டினத்தடிகள், திருக்கழுமல மும் மணிக் கோவையின் முதற்பாடலில்,

''தாதையொடு வந்த வேதியச் சிறுவன்,
..............................................................
தோடு டைய செவியன் என்றும்
பீடு டைய பெம்மான் என்றும்
கையில் சுட்டிக் காட்ட,
ஐய! நீ வெளிப்பட்டு அருளினை ஆங்கே'

என ஞானசம்பந்தர் 'தோடுடைய செவியன்' என்ற தம் முதற்பாடலை அருளிச் செய்த சந்தருப்பத்தைக் குறிப்பிட்டுள்ளார்; திருவிடைமருதூர் மும்மணிக் கோவை யின் 28 ஆம் பாடலில் சிவனடியார்களைக் குறிப்பிடுமிடத்து,

'வசிட்டனும் கபிலனும் அகத்தியன் தானும்
தும்புரு நாரதர் என்றிரு திறத்தரும்
வித்தகப் பாடல் முத்திறத்து அடியரும்'

என, இயல் இசை வல்லாரோடு, ஞானசம்பந்தர் முதலிய மூவரையும் 'முத்திறத்து அடியர்' என்ற தொகைப்பெயரால் இணைத்துக் கூறியுள்ளார்.

## உய்யவந்த தேவநாயனார் ஓதுவன

திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த வர். அவர் தாம் அருளிய திருக்களிற்றுப்படியார் என்ற நூலில், ஞானசம்பந்தர் செய்த அற்புதங்களை.

'ஓடம், சிவிகை, உலவாக் கிழி, அடைக்கப்
பாடல், பனை, தாளம், பாலைநெய்தல், — ஏடுஎதிர், வெப்பு,
என்புக்கு உயிர் கொடுத்தல், ஈங்கிவைதாம் ஓங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்' (70)

என்று சுட்டியுள்ளார்.

ஓடம் — திருக்கொள்ளம்பூதூர்ப் பதிகம் — 264
சிவிகை — நெல்வாயில் அரத்துறைப் பதிகம் — 226
உலவாக் கிழி — திருவாவடுதுறைப் பதிகம் — 262
அடைக்கப் பாடல் — மறைக்காட்டுச் 'சதுரம்மறை'ப் பதிகம் — 173
பனை — திருஓத்தூர்ப் பதிகம் — 54
தாளம் — திருக்கோலக்காப் பதிகம் — 23
பாலை நெய்தல் — திருநனிபள்ளிப் பதிகம் — 220
ஏடு எதிர் — திருப்பாசுரம் — 312
வெப்பு — திருநீலகண்டப் பதிகம் — 116
என்புக்கு உயிர்கொடுத்தல் — திருமயிலாப்பூர்ப் பதிகம் — 183

இங்ஙனமே, திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் திருநாவுக்கரசர் நிகழ்த்திய அற்புதங்களைத் தம் திருக்களிற்றுப்படியாரில்,

'கொல்கரியின், நீற்றறையின், நஞ்சின் கொலைதவிர்தல்,
கல்லே மிதப்பாய்க் கடல்நீந்தல், — நல்ல
மருவார் மறைக்காட்டின் வாசல்திறப் பித்தல்
திருவாமூர் ஆளி செயல்' (71)

என்று குறிப்பிட்டுள்ளார்.

கொல்கரியின் கொலை தவிர்தல் — திருவதிகைப்பதிகம் — 2
நீற்றறையின் கொலை தவிர்தல் — 'மாசில் வீணையும்' — 203
நஞ்சின் கொலை தவிர்தல் — திருநனிபள்ளிப் பதிகம் — 70
கல்மிதப்பின் கொலை தவிர்தல் — நமசிவாயத் திருப்பதிகம் — 11
மறைக்கதவு திறப்பித்தல் — மறைக்காட்டுப் பதிகம் — 123

இனி, உய்யவந்த தேவர் சுந்தரர் நிகழ்த்திய அற்புதங்களில், தோகையர்பால் இறைவனைத் தூதாகப் போகவிடும் செயலை மாத்திரம் குறிப்பிடுகிறார். (72)

திருக்களிற்றுப்படியாரின் 86 ஆம் பாடல்,

'ஈறாகி அங்கே முதல்ஒன்றாய் ஈங்குஇரண்டாய்
மாறாத எண்வகையாய் மற்றவற்றின் — வேறாய்
உடனாய் இருக்கும் உருவுடைமை என்றும்
கடனாய் இருக்கின்றான் காண்' என்பது.

இது ஞானசம்பந்தர் அருளிய

'ஈறாய்முதல் ஒன்றாய்இரு பெண்ஆண் குணம்மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்மவை ஐந்தாய்
ஆறுஆர்சுவை ஏழ்ஓசையொடு எட்டுத்திசை தானாய்
வேறாய்உடன் ஆனான்இடம் வீழிம்மிழ லையே' (தே. 109)

என்ற பாடற்கருத்தைக் கொண்டது.

## ஒட்டக்கூத்தர் உரைப்பன

12 ஆம் நூற்றுண்டினராகிய ஒட்டக்கூத்தர் தாம் இயற்றிய தக்கயாகப்பரணியில் திருஞானசம்பந்தருக்கு,

'வழிஏறு குடகூடல் வடஆறு வழிமாற மணலால் ஒரோர்
கழுஏறும் அமண்மூகர் கருமாள வருமீளி கழல்பாடுவாம் (7)

என்று வணக்கம் சொல்லியதோடு அமையாது, 'கோயிலைப் பாடியது' என்ற பகுதியில் ஞானசம்பந்தரை முருகப்பெருமான் அவதாரமாகக் கூறி, அம்முருகப்பெருமானே ஞானசம்பந்தராக அவதரித்துச் சமணரை வாதில் வென்றுன் என்ற செய்தியை,

'எழுமலை கொல்லும் அசனி, இளமயில் வள்ளி கணவன்,
இறைமலை வில்லி புதல்வன், இகல்மகள் ஐயை களிறு,
கழுமலம் உய்ய விரவு கலியுக எல்லை பொருத
கதைகளில் உள்ளது அமணர் கழுமிசைக் கொள்வது இதுவே' (170)

என்ற பாடல் முதல்,

'மண்ணு உடம்பு தம்குருதி மண்ணக் கழுவின் மிசைவைத்தார்
எண்ணு யிரவர்க்கு எளியரோ நாற்பத் தெண்ணு யிரவரே' (219)

என்ற பாடல் இறுதியாக 50 பாடல்களில் விரித்துக் கூறியுள்ளார்.

அதுமுதல் ஞானசம்பந்தரை முருகப்பெருமான் அவதாரம் என்று கொள்ளும் கொள்கை நாட்டில் நிலவத் தொடங்கியது. பதினைந்தாம் நூற்றுண்டினராகிய அருணகிரியாரும் திருப்புகழில் முருகப்பெருமான் பெருமைகளைக் கூறுமிடத்து,

'பொறியுடைச் செழியன் வெப்பு ஒழிதரப்
பறிதலைப் பொறியிலிச் சமணர்அத்தனை பேரும்
பொடிபடச் சிவமணப் பொடிபரப் பியதிருப்
புகலியில் கவுணியப் புலவோனே'

— திருத்தணிகைத் திருப்புகழ்

என்றுற்போலக் குறிப்பிட்டுள்ளார்.

தக்கயாகப்பரணியில் ஞானசம்பந்தர் கீழ்க்கண்ட திருநாமங்களால் குறிக்கப்படுகிறுர்.

| | | |
|---|---|---|
| அமண்மூகர் கருமாள வருமீளி | — தாழிசை எண் | 7 |
| இமவான்மகளார் மகன் | — தாழிசை எண் | 194 |
| ஐயை களிறு | — தாழிசை எண் | 170 |
| கொச்சைப் பெருமான் | — தாழிசை எண் | 180 |
| நான்மறையோார் ஏறு | — தாழிசை எண் | 211 |
| பரசமய கோளரி | — தாழிசை எண் | 172 |
| பிள்ளை | — தாழிசை எண் | 173,174,220,221 |
| பிள்ளையார் | — தாழிசை எண் | 178 |
| புகலிக்கு இறை | — தாழிசை எண் | 217 |
| புகலிப் பெருந்தகை | — தாழிசை எண் | 171 |
| மலையாள்முலை ஆரமுது உண்டவன் | — தாழிசை எண் | 186 |
| மலைவில்லி புதல்வன் | — தாழிசை எண் | 170 |
| வெள்ளிமலைப்பெருமான் மகனுர் | — தாழிசை எண் | 185 |

| | | |
|---|---|---|
| வைதிக ராசசிங்கம் | — தாழிசை எண் | 179 |
| வைதிக வாரணம் | — தாழிசை எண் | 183 |

## அருணந்தி தேவர் அருளுவன

12ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியைச் சார்ந்த அருணந்தி தேவநாயனுர் அருளிய இருபா இருபஃது என்ற நூலில் காணப்படும்

'இருநிலன் தீநீர் இயமானன் கால்எனும்
பெருநிலத் தாண்டவம் பெருமாற்கு இலாமையின்' (2)

என்ற அடிகளில்

'இருநிலனுய்த் தீயாகி நீரும் ஆகி
இயமான னுய்எறியும் காற்றும் ஆகி' (தே. 7174)

என்ற 'நின்ற திருத்தாண்டக' அடியையும்,

'காண்பார் யார்கெரல் காட்டாக் கால்எனும்
மாண்புரை உணர்ந்திலே' (2)

என்ற அடிகளில்

'காட்டுவித்தால் ஆர்ஒருவர் காணு தாரே
காண்பார்ஆர் கண்ணுதலாய் காட்டாக் காலே' (தே. 7186)

என்ற தனித் திருத்தாண்டகப் பாடலடிக் கருத்தினையும்,

'ஆட்பா லவர்க்குஅருள் என்பதை அறியே' (2)
என்ற அடியில்

'ஆட்பா லவர்க்குஅருளும் வண்ணமும்'
என்ற ஞானசம்பந்தரின் திருப்பாசுரஅடிக் கருத்தினையும் அமைத்துள்ளார். (தே. 3375)

'உன்னில் உன்னி உனுவிடில் பெயர்குவம்
என்னும் அதுவே நின்இயல்பு எனினே' (12)

என்ற அடிகளில்,

'பன்னில் ஊறும் பழத்தினும் இன்சுவை
என்னில் ஊறி எனக்கே களிதரும்,
உன்னில் உன்னும், உன்னுவிடில் விட்டிடும்,
என்னுள் ஈசன் இருந்த இயற்கையே!' (தே. II பக். 508)

என்ற தேவாரக்கருத்து அமைந்திருப்பதாக நமசிவாயத் தம்பிரான் தாம் இயற்றிய இருபா இருபஃது உரையில் குறிப்பிடுகிருர். இத்தேவாரப் பாடல் இப்பொழுது தொகுக்கப்பட்டிருக்கும் மூவர் தேவார அடங்கன்முறையில் காணப்பெறவில்லே.

## சேக்கிழார் செப்புவன

12 ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியைச் சார்ந்த சேக்கிழார் தம் பெரியபுராணத்தில் ஞானசம்பந்தர் வரலாற்றினை 1256 பாடல்களிலும், நாவுக்கரசர் வரலாற்றினை 429 பாடல்களிலும் விளக்கியுள்ளார்; சுந்தரர் வரலாற்றினைத் திருமலேச்சிறப்பு,

தடுத்தாட் கொண்ட புராணம், ஏயர்கோன் கலிக்காமநாயனுர் புராணம், கழறிற்றறி வார் நாயனுர் புராணம், வெள்ளானைச்சருக்கம் என்ற ஐந்து இடங்களில் பகுத்துக் கொண்டு (40+203+409+175+52), 879 பாடல்களில் குறிப்பிடுகிருர்; இவர்களு டைய வரலாற்றைக் குறிப்பிடும்போதே இவர்கள் அருளிய பதிகங்கள் பலவற்றின் தொடக்கத்தை இடம் நோக்கிக் குறிப்பிட்டுள்ளார்.

### திருஞானசம்பந்தர் புராணம்

'தோடுடைய செவியன்' எனும் மெய்ம்மைமொழித் திருப்பதிகம் — 76
'மடையில் வாளைகள் பாய' என்னும் வாக்கால் — 102
எடுத்தருளினுர் 'பூவார் கொன்றை' — 107
'காரைகள் கூகைமுல்லை' என நிகழ் ....... பதிகம் — 115
'கொடியுடை' ஏத்தி — 120
செப்பரும்பதிக மாலை 'கண்காட்டு நுதல்' — 126
'கற்ருங்கு எரிஓம்பி' எடுத்தார்.......... — 162
'ஆடிஞய்நறு நெய்யொடு பால்தயிர்' என்றெடுத்து — 174
'முரசதிர்ந்து எழும்'எனும் தண்தமிழ்த் தொடைசாத்தி — 183
'தீங்கு நீங்குவீர் தொழுமின்கள்' எனும் இசைப்பதிகமும் — 184
'எந்தை ஈசன்' என எடுத்து — 214
'கோடல் கோங்கம் குளிர் கூவிளம்' என்னும் திருப்பதிகம் — 303
'அங்கை ஆரழல்' என்னும் திருப்பதிகம் — 306
'மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல்செய்வதோ இவர் மாண்புஅது' என்று, பிணிதவிர்க்கும் பதிகம் — 318
'அவ்வினைக் கிவ்வினை' என்றெடுத்து — 335
'இடும்பைகள் தீர்த்தருள் செய்வாய்' என்னும் இன்னிசை மாலை — 349
'வாரு மன்னும் முலை' பாடி — 350
'அந்தம் இல்லவர் வண்ணம் ஆரழல் வண்ணம்' என்று .... செந் தமிழ்ப்பதிகம் — 372
'குடமூக்கை உவந்திருந்த பெருமான் எம் இறை' என்று பரவினுர் — 407
'ஓடே கலன்' என்றெடுத்தருளி — 413
'உன்னடி அல்லதொன் றறியேன்', என்று பேரருள் வினவிய செந்தமிழ் — 424
'வரைத்தலைப் பசும்பொன்' என்னும் வண்தமிழ்ப் பதிகம் — 436
'மாதர் மடப்பிடி' பாடி — 447
'போகம் ஆர்த்த பூண்முலையாள்' என்று எடுத்துப் போற்றி — 456
தங்கள்பெருந் தகையாரைச் சிறுத்தொண்டர் தொழஇருந்த தன்மை போற்றி இசைபாடி — 470
'உடையானே தகுமோ, இந்த ஒள்ளிழையாள் உள்மெலிவு' என் றெடுத்துப் பாட — 482
'அங்கமும் வேதமும்' என்றெடுத்து — 486
'முருகனுர்தம் உயர்திருத் தொண்டு சிறப்பித் தோங்கும் ......... தமிழ்பாடி — 491
'பாடலன் நான்மறை' பாடி — 497
'அள்ளற் கழனி ஆரூர் அடைவோம்' என ....... செந்தமிழ் கொண்டு போற்றி — 498
'பருக்கை யானை' பதிகத் தமிழிசை பாடி — 499
திருவிருக்குக் குறள் பாடி — 500

'அந்தமாய் உலகுஆதியாம்' பதிகம் — 507
'பவனமாய்ச் சோடையாய்' எனும் திருப்பதிகம் — 518
'குறிகலந்திசை' எனும் பதிகமுன் ஆன பாடல் — 524
'புல்கு பொன்னிறம்' முதற் பதிகங்களால் போற்றி — 532
'சடையுடையான்' எனும் பதிக இன்னிசை பாடி — 534
'அரையார் விரி கோவண ஆடை', ஒப்பு ஓதரும் பதிகம் — 542
'சடையார் புனலுடையான்' என்றெடுத்து — 545
'மைம்மரு பூங்குழல்' என்றெடுத்து — 557
'வாசி தீர்த்தருளும்' எனப் பதிகம் பாடி — 570
'சதுரம்' என்னும் இன்தமிழ்ப் பதிகப்பாடல் — 587
'தளரிளவள'ரும் பாடி — 596
'வேயுறு தோளி'யை எடுத்து விளம்பினரே — 616
'மங்கையர்க் கரசி' என்றெடுத்தே — 663
'நீல மாமிடற்று ஆலவாயான்' என நிலவும் ....... திரு இருக்குக் குறள் — 667
'செய்யனே திருவாலவாய்' எனும் திருப்பதிகம் — 704
'காட்டுமா உரி' முன் பாடி — 739
'வேத வேள்வி' என்றெடுத்து — 739
பன்னிரண்டு பெயர் பற்றும் பரவிய சொல் திருப்பதிகம் — 754
'மானினேர் விழியினாய் கேள்'......... என்றெழும் திருப்பதிகம் — 760
'ஆலவாய் அண்ணல் நீறே, மன்னும் மந்திரமு மாகி மருந்துமாய்த்
தீர்ப்பது'' என்று ........ பகர்திருப் பதிகம் — 764
'தளிரிள வளரொளி' பாடி — 784
'அந்தணர் தேவர் ஆனினங்கள் வாழ்க' என்று — 821
'வன்னி' என்றெடுத்துப் பாட — 850
'எனை அறியாப் பருவத்தே எடுத்தாண்ட
பெருந்தகை எம் பெருமாட்டி யுடன்இருந்த தேஎன்று
பொருந்துபுகழ்ப் புகலியின்மேல் திருப்பதிகம் போற்றிசைத்தார்' — 880
'மண்ணி னல்ல' என்றெடுத்து — 881
'கொட்டம்' என நவின்று பாட — 898
'பாடக மெல்லடி' எடுத்துப் பாடி — 902
'உற்றுமை சேர்வது' எனும் திருவியமகம் — 954
முடக்கால் முயற்கு அருள்செய்த வண்ணமும் மொழிந்தேத்தி — 963
'குண்டைக் குறட்பூதம்' என்றெடுத்து — 965
'குன்ற வார்சிலை' எனும் திருப்பதிகம் — 967
'உண்ணாமுலை'யாள் எனும் பதிகம் பாடி — 970
'குரும்பை ஆண்பனை ஈனும்' என்னும் வாய்மை — 980
'மறையான்' என்று .......... எடுத்தருளி — 995
'துஞ்ச வருவார்' என்றே எடுத்த — 1010
'வானவர்கள் தானவர்' என்றெடுத்து — 1020
எந்தையார் இணையடிஎன் மனத்த' என்று ...... திருப்பதிக இசை — 1028
'விடையவன்' என்றெடுத்துப் பாடி — 1031
'மட்டிட்ட' என்னும் நற்பதிகம் — 1088
'இருந்த இடைச்சுரம் மேவும் இவர்வண்ணம் என்னே!' என்று
அருந்தமிழின் திருப்பதிகம் — 1128
'காதல்செயும் கோயில் கழுக்குன்று' என்று திருப்பதிகம் — 1131
'ஆட்சி கொண்டார்' என மொழியும் கோதில் திருப்பதிகம் — 1133
'வண்டார் குழல் அரிவை' என்றெடுத்து — 1147

'காழி நகர் சேர்மின்' எனக் கடை முடிந்த திருப்பதிகம் — 1148
'கல்லூரப் பெருமணம்' எடுத்து — 1245
'ஞானமெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவாயச் சொலாம்'என்று ஆனசீர் நமச்சிவாயத் திருப்பதிகத்தை — 1248

## திருநாவுக்கரசர் புராணம்

'கூற்றுயினவாறு விலக்ககிலீர்' என நீடிய கோதில் திருப்பதிகம் — 70
'நாமார்க்கும் குடியல்லோம்' என்றெடுத்து — 93
'சுண்ணவெண் சந்தனச் சாந்து' தொடுத்த திருப்பதிகத்தை — 115
'சொற்றுணை வேதியன்' என்னும் ...... நற்றமிழ் மாலையாம் — 126
'ஈன்றுளு மாயெனக்கு எந்தையு மாகி' எனஎடுத்து — 134
'எம்பெருமான்தனை ஏழையேன் நான்பண்டு இகழ்ந்தது' என்று தம்பரிவால் திருத்தாண்டகச் செந்தமிழ் சாற்றி — 143
'பொன்னார்ந்த திருவடிக்கென் விண்ணப்பம்' என்றெடுத்து — 151
'பத்தனாய்ப் பாட மாட்டேன்' என்றுமுன் எடுத்து — 169
'அன்னம் பாலிக்கும்' என்னும் திருக்குறுந்தொகைகள் — 171
'வனபவள வாய்திறந்து வானவர்க்கும் தானவனே என்கின்றாளால்' என்று, அனையதிருப் பதிகம் — 173
'அரியானை' என்றெடுத்தே ....... பெரிய திருத்தாண்டகச் செந்தமிழ் — 175
'செஞ்சடைக் கற்றை முற்றத் திளநிலா எறிக்கும்' எனும்..... தமிழ் மாலை — 176
'பார்கொண்டு மூடி' எனும் பதிகம் — 187
'ஆவடுதண் துறையாரை அடைந்துஉய்ந்தேன்' என்றளவில் திருத்தாண்டகம் — 191
'கோவாய் முடுகி' என்றெடுத்து — 194
'நனைந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார்' என்று,....... திருத்தாண்டகத்தால் — 196
திருப்பதிகச் 'சொன்மாலை' பாடினார் — 211
'காண்டலே கருத்தாய் நினைந்து' என்னும் கலைப்பதிகம் — 223
'கொய்யுமா மலர்ச்சோலை .......... காய் கவர்ந்த கள்வனேன்' என்று ........... திருப்பதிகம் — 224
'பாடிளம் பூதத்தினான்' எனும் பதிகம் — 226
'முத்து விதான மணிப்பொற் கவரி' மொழிமாலை — 235
'செய்ய சடையார் தமைச்சேரார் தீங்குநெறி சேர்கின்றார்' என்று ....... தாண்டகம் — 253
'பண்ணின் நேரும் மொழியாள்' என்றெடுத்து — 268
'வாஎன்று போனார் என்கொல்' எனப் பாடி — 277
'தலையில் மயிரைப் பறித்துஉண்ணும் சாதி அமணர்.......... மறைக்க ஒண்ணுமோ' என்னும் ........ குறுந்தொகைகள் — 300
'ஆடல் புரிந்தார் அடியேனைப் பொருளா அளித்த கருணை' எனப் பாடல் புரிந்து — 309
'கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியானை' என்றெடுத்து — 324
'ஏகம்பன் காண்அவன்என் எண்ணத்தான்' எனப்போற்றி — 328
'வண்டோங்கும் செங்கமலம்' என எடுத்து — 336
'திருவாலங் காடுறையும் செல்வர்தாம்' என எடுத்து — 342
'என் கண்உளான்' எனும் திருத்தாண்டகம் — 345

'மாதர் பிறைக்கண்ணியானை' ....... என்னும் ........ திருப்பதிகங்கள் — 384
'இருப்போம் திருவடிக் கீழ்நாம்' என்னும் குறுந்தொகை பாடி — 388
'முளைத்தானை' என்றெடுத்து — 404
'வடியேறு திரிசூலத்' தாண்டகத்தால் வழுத்தி — 407
'அம்மானுக்கு ஆளானேன் அலையேன்மின், நீர்' எனும் திருத் தாண்டகம் — 423
'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்' எனப்புகன்று — 427

## தடுத்தாட்கொண்ட புராணம்

'பித்தாபிறை சூடீ' எனப் பெரிதாம் திருப்பதிகம் — 74
'அடியேற்குத் தவநெறி தந்தருள்' என்று ...... திருப்பதிகம் பாடினார் — 79
'தம்மானை அறியாத சாதியார் உளரே' என்று ........... பாடினார் — 88
'தெண்திரை வேலையின் .........விற்றிருந்தபடி' என்று .........பாடினார் — 113
'எந்தை இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்' என்னும், சந்த இசைப்பதிகங்கள் — 123
'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று — 199

## ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்

'வாளன கண் மடவாள் வருந்தாமே' எனும் பதிகம் — 20
'பூண்நாண்' என்றெடுத்து — 41
பதிகம் 'வலிவலத்துக் கண்டேன்' என்று — 43
'நன்று மகிழும் சம்பந்தர் நாவுக்கரசர் பாட்டுகந்தீர்' என்று ..... ஏத்தி — 44
'தம்மையே புகழ்ந்து' என்றெடுத்து — 51
'அரங்காட வல்லார் அவரே அழகியர்' என்று ........ பாடி — 53
'தண்ணியல் வெம்மையினான்' என்னும் தமிழ்மாலை — 56
'அடங்கல் வீழி கொண்டிருந்தீர்! அடியேனுக்கும் அருளும்' என, ............ தமிழ்மாலை — 59
'பொருவனார்' என்னும் ....... பதிகம் — 60
'மறையவன்' என்றெடுத்து — 63
பெருகும்பதிகம் 'பிறையணி வாள்நுதலாள்' பாடி — 66
'குரும்பைமுலை உமையாள்' என்னும் திருப்பதிகம் — 67
'அழல்நீர் ஒழுகி யனைய' என்னும் அஞ்சொற் பதிகம் — 70
'பொன்னார் மேனி' என்றெடுத்து — 74
'மறைகளாய நான்கும்' என மலர்ந்த ...... பதிகம் — 76
'வைத்தனன் தனக்கே தலையும் என் நாவும்' என வழுத்தினார் — 81
'காருலாவிய' என்று ........... அருந்தமிழ் புனைந்தார் — 84
'மற்றுப் பற்றிலேன்' எனச் செழுந்தமிழால் — 87
'அங்கம் ஓதியோர் ஆறைமேற்றளி' என்றெடுத்து — 96
'வடிவுடை மழு' என்றேத்தி — 103
'நஞ்சியிடை' எனும் செஞ்சொல்மாலை — 105
'மெய்யில் வெண்பொடி'யும் பாட — 106
'மடித்தாடும் அடிமைக்கண்' என்றெடுத்து — 115
'சிம்மாந்து' என்னும் தமிழ்மாலை — 117
'முன்னவன்' என்றேத்தி — 118
'தலைக்கலன்' என்றெடுத்துப் போற்றி — 118

'வள்வாய்' என்னும் வண்டமிழின் தொடைமாலை — 120
'மத்தயானை' எடுத்து — 121
'மூப்பதிலை' எனும் பதிகம் — 121
'பொன்செய்த மேனியினீர்' எனப் பதிகம் — 132
'பாறு தாங்கி' என எடுத்தருளி — 141
'மருவார் கொன்றை' எனப் போற்றி — 145
'பொடியார் மேனி' மரு ஈரத் தமிழ்மாலை — 146
'எனக்கினி' ஓதி — 147
உடைய அரசு, என்றும்உலகு இடர்நீங்கப் பாடியஏழ் எழுநூறும், அன்று சிறப்பித்து — 150
'மடலாரும் புனல் நீடூர்' ................ எனும் திருப்பதிகம் — 152
திருஞானசம்பந்தர் ................ திருத்தாளம் ............. சிறப்பித்துப் பொருள்மாலைத் திருப்பதிகம் பாடியே — 154
'இத்தனையா மாற்றம் அறிந்திலேன்' எனஎடுத்து — 163
'கோவலன் நான்முகன்' எடுத்து — 170
'முதுவாய் ஓரி' என்றெடுத்து — 182
'நுந்தா ஒண்சுடராம்' ............ திருப்பதிகம் — 190
'நெய்யும் பாலும்' கலைவிளங்கும் யாணர்ப் பதிகம் — 191
'தேனெய் புரிந்து' என்றெடுத்த தமிழ் — 192
'விடையின்மேல் வருவான்' எனும் ............ பதிகம் — 194
'செண்டாடு' எனும் பதிகம் — 197
'பாட்டும் பாடிப் பரவி' எனும் பதிகம் — 204
'பத்திமையும் அடிமையையும் கைவிடுவான்' என்னும் இசைத் திருப்பதிகம் — 272
'அழுக்கு மெய்கொடு' என்றெடுத்த சொற்பதிகம் — 276
'பிழையுளன பொறுத்திடுவர்' என்றெடுத்து — 280
'முத்தா' என் றெடுத்தருளி — 283
'ஆலந்தான் உகந்தவன்' என்றெடுத்து — 288
'அந்தியும் நண்பகலும்' எனஎடுத்து — 291
'கல்வாய் அகில்' என்னும் தொடை சாத்தி — 294
'இங்கெனக்கு ஆர்உறவு' என்னும் திருப்பதிகம் — 296
'மின்னுமா மேகம்' எனும் சொற்பதிகம் — 300
'தூவாயா' என்றெடுத்தே — 303
'குருகு பாய' எனக் கோத்தெடுத்தே — 305
'மீளா அடிமை' எனஎடுத்து — 309
அந்தணாளன்' என்றெடுத்துப் பாடி — 406

## கழறிற்றுஅறிவார் புராணம்

'யாழைப்பழித்' தென்னும் ............ பதிகத் தமிழ்மாலை — 87
'கடிதாய்க் கடற்காற்று' என்றெடுத்து — 89
'திருவுடையார்' என்றெடுத்து — 98
'அஞ்சுதும்' என்று ஆரூர் பாடுவார் — 102
'கோத்திட்டை' என்றெடுத்து — 103
'ஊனுய் உயிர்' எனும் பாமலர் — 111
'தொண்டர் அடித்தொழலும்' எனும் சொற்பதிகத் தொடைமாலை — 114
'சித்தம் நீநினை என்னெடு' என்றே ......... தமிழ்பாடி — 118

'பரவும் பரிசொன்று' எடுத்தருளி — 134
'முடிப்பது கங்கை' என்றெடுத்து — 146
'ஆரூரானை மறக்கலும் ஆமே' என்னும் மேவிய சொல் திருப்பதிகம் — 156
'கொடுகு வெஞ்சிலை' அஞ்சொற்பதிகம் — 170

வெள்ளானைச் சருக்கம்

'உரைப்பார் உரை' என்றெடுத்த 11
'தலைக்குத் தலைமாலை' என்றெடுத்தனர் 29
'தானெனை முன்படைத்தான்' எனும் தமிழ்மாலை 39

மேல் குறிப்பிடப்பட்ட பெரியபுராணப் பாடல்களுள், சேக்கிழார், மூவரும் திருத்தலங்களைப் பற்றிப் பதிகம் பாடிய செய்தியைப் பதிகத்தின் முதற்பாடலின் தொடக்கத்தாலோ, முதற்பாடலடிகளுள் ஒன்றாலோ, முதற்பாடற் கருத்தாலோ பிறபாடற் கருத்தாலோ குறிப்பிட்டுள்ளார். மேலும்,

'செந்தமிழ்மாலை விகற்பச் செய்யுட்களான் மொழிமாற்றும்
வந்த சொற்சீர் மாலைமாற்றும், வழிமொழி எல்லாம் மடக்குச்
சந்த இயமகம் ஏகபாதம் தமிழ் இருக்குக்குறள் சாத்தி
எந்தைக்கு எழுகூற்றிருக்கை ஈரடி ஈரடி வைப்பு' (276)

'நாலடிமேல் வைப்பு மேன்மை நடையில் முடுகும் இராகம்
சால்பினில் சக்கரம் ஆதி விகற்பங்கள் சாற்றும் பதிகம்
மூல இலக்கியமாக எல்லாப் பொருள்களும் முற்ற
ஞாலத்து உயர்காழியாரைப் பாடினர் ஞானசம்பந்தர்' (277)

என்ற திருஞானசம்பந்தர்புராணச் செய்யுட்களான் மொழிமாற்று, மாலைமாற்று, இயமகம், ஏகபாதம், இருக்குக்குறள், எழுகூற்றிருக்கை, ஈரடிமேல் ஈரடிவைப்பு, நாலடிமேல் ஈரடிவைப்பு, முடுகியற்பதிகம், சக்கரம் முதலிய பலவகைப் புதுப் பாடல்களுக்கு இவருடைய பாடல்களே மூலஇலக்கியம் என்னும்படி இப்பாடல்களை இவரே முதன்முதலில் பாடினர் என்ற செய்தியைச் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார்.

இம்மூவரும் பதிகம் பாடிய கோயில்கள் பெரும்பாலும் சேக்கிழாரால் குறிக்கப் பட்டுள்ளன. இதனை நோக்க, நம்பியாண்டார் நம்பி தொகுத்த மூவர்திருமுறை களும் சேக்கிழார் காலத்தில் பெருவாரியாக வழக்கில் இருந்தமை புலப்படும். சேக்கிழார் திருத்தவத்துறைக்கு ஞானசம்பந்தர் பதிகம் பாடியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். அப்பதிகம் இக்காலத்தில் வழக்கில் இல்லை. அஃது ஒன்று மாத்திரம் கிட்டிற்றிலது என்று சான்றோர் கருதுகின்றனர். (மு. இராகவ ஐயங்கார் ஆராய்ச்சித்தொகுதி கட்டுரை எண்-21)

'உளங்கொள் திருவிருத்தங்கள், ஓங்கு திருக்குறுந்தொகைகள், களங்கொள் திருநேரிசைகள்' 337
'குறுந்தொகையும் தாண்டகமும் சந்தம்நிறை நேரிசையும்' 340
'நின்ற திருத்தாண்டகமும் நீடு தனித்தாண்டகமும் .................. குறைந்த திருநேரிசையும் துன்று தனிநேரிசையும்' 414
'தசபுராணத் தடைவும் ............பாவநாசப் பதிகம்' 415

முதலிய திருநாவுக்கரசுநாயனர் புராணப் பாடலடிகளை நோக்க, இன்றுள்ள பதிகப் பெயர்கள் சேக்கிழார் காலத்துக்கு முன்புதொட்டே இருந்தமை பெறப்படும்.

## கொற்றவன்குடி உமாபதிசிவம் கூறுவன

14 ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தினரான உமாபதிசிவம் இயற்றிய கொடிக் கவியின் நான்காம் பாடலில்

'அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும்'

என்ற அடிகளில் உள்ள 'பெருவெழுத்து'என்பது, திருவெறும்பியூர்த் திருத் தாண்டகத்தின் ஆரும் பாடலில் உள்ள (தே. 7157) 'பேரெழுத்தொன் றுடையானை' என்ற தொடரை உட்கொண்டு அமைந்ததாகும். அவர் இயற்றிய சங்கற்ப நிரா கரணம் என்ற நூலின்

'கரணம் எல்லாம் கடந்தனை என்றும்
மரணம் ஐயைந்தின் அப்புறத்து என்றும்
உன்னருள் தலைவர் பன்னினர் எனவும்' (10: 39-41)

என்ற தொடர்,

'பொய்அஞ்சி வாய்மைகள் பேசிப் புகழ் புரிந்தார்க்கு அருள்செய்யும்
ஐ அஞ்சின் அப்புறத்தானும் — ஆரூர் அமர்ந்த அம்மானே' (தே. 4210)

என்ற திருநாவுக்கரசரின் பாடற்கருத்தை உட்கொண்டது.

'சலமில னுகிச் சார்ந்தவர்க்கு என்றும்
நலமிக நல்கும் நாதனை அணைந்து' (10: 60,61)

என்ற அடிகள்,

'சலம்இலன் சங்கரன்; சார்ந்தவர்க்கு அலால்
நலம்இலன்; நாள்தொறும் நல்குவான் நலன்' (தே. 4278)

என்ற நாவுக்கரசர் பதிகஅடிகளை ஒட்டி அமைந்தன.

சங்கற்ப நிராகரணம் 11 ஆம் பாடலின்

'தாமே தாமாய்ச் செய்தனர் என்றும்' (73)

என்ற அடி,

'சேர்வார் தாமே தானுகச் செயுமவன் உறையும் இடம்' (தே. 1365)

என்ற ஞானசம்பந்தர் பாடல் அடியினையும்,

'ஊனுய், உயிராய், உணர்வாய், என்றும்' (71)

என்ற அடி,

'ஊனுகி, உயிராகி, அதனுள் நின்ற உணர்வாகி' (தே. 6875)

என்ற திருத்தாண்டக அடியினையும்,

'மானக் கண்ணே! மணியே! என்றும்' (72)

என்ற அடி,

'கண்ணே! கண்ணின் கருமணியே! மணி ஆடு பாவாய்!' (தே. 6723)

என்ற திருத்தாண்டக அடியினையும்,

'காயாய்ப் பழமாய்ச் சுவையாய் நுகர்வும்
ஒயாது உண்போன் தானே என்றும்' (75,76)

என்ற அடிகள்,

'காயாகி, பழமாகி, பழத்தில் நின்ற
இரதங்கள் நுகர்வானும் தானே ஆகி' (தே. 7178)

என்ற நின்ற திருத்தாண்டக அடியினையும் உட்கொண்டு அமைந்தனவாகும்.

## நச்சிஞர்க்கினியர் உரை

14 ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த பன்னூல் பயின்ற செந்நெறிச் செல்வராகிய நச்சிஞர்க்கினியர் தாம் இயற்றிய தொல்காப்பியச் செய்யுளியல் 149 ஆம் நூற்பா உரையில், "பதிகப்பாட்டிற்கு ஈண்டுக் கூறிய வேறுபாடுகள் திருவாய் மொழி, திருப்பாட்டு, திருவாசகம் என்கின்ற கொச்சக ஒருபோகுகளில் காண்க" என்று குறிப்பிடுமிடத்து, ஞானசம்பந்தர் முதலிய மூவர் பதிகங்களையும் 'திருப்பாட்டு' என்ற பெயரால் குறிப்பிடுகிருர்.

பதிஞன்காம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த இரட்டையர்கள் தாம் பாடிய ஏகாம்பரநாதர் உலாவில்,

'மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரம் செய்த திருப்பாட்டும்' (கண்ணி - 78)

என்று குறிப்பிடுமிடத்தும் மூவர் பாடல்களும் 'திருப்பாட்டு' என்ற பெயரால் வழங்கப்பட்டுள்ளன.

## வள்ளலார் சாத்திரத்தில் மூவர்

15 ஆம் நூற்றுண்டில் தோன்றிய வள்ளலார் சாத்திரத்தில் 'சித்தாந்த தரிசனம்' என்ற தலைப்பில் ஞானசம்பந்தர் வணக்கமாக அமைந்த,

'திருப்பா சுரத்தால்நற் சித்தாந்தம் செய்தோன்
திருப்பாதம் என்றன் சிரம்' (பாடல் - 4)

என்ற பாடலில், ஞானசம்பந்தர் 'வாழ்க அந்தணர்' எனத்தொடங்கும் 'திருப்பாசுரப் பதிகம்' (பதிகம் - 312) அருளிய செய்தி சுட்டப்பட்டுள்ளது.

'நின்றதிருத் தாண்டகத்தால் நீடுஉயிர்பொய்ப் போதம்அற
அன்றுஉரைத்தோன் தாள்அகம்வைப் பாம்' (பாடல் - 5)

என்ற பாடலில், திருநாவுக்கரசர் நின்ற திருத்தாண்டகம் (பதிகம் - 307) அருளிய செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

'வாழ்வா வதுமாயம் என்றுஉரைத்தோன் மாமலர்த்தாள்
தாழ்வாம்எப் போதும் தலை' (பாடல் - 6)

என்ற பாடலில், சுந்தரமூர்த்திசுவாமிகள் வணக்கமாக அவர் 'வாழ்வாவது மாயம்' (பதிகம் - 78) என்ற பதிகத்தை அருளிய செய்தி சுட்டப்பட்டுள்ளது.

## பிரபந்தம் முதலியவற்றில் மூவர்

பிற்காலத்துப் புலவர் பலரும் இயற்றிய பிரபந்தங்கள் பலவற்றிலும் ஞானசம் பந்தர் முதலிய மூவரும் குறிப்பிடப்பட்டுள்ளனர். சிவபெருமானைப் பற்றிய உலாப் பிரபந்தங்களில் பெருமான் உலாவரும்போது இம்மூவர் பாடல்களும் பாடப் பட்ட செய்தி தவருது குறிக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டுக்களாகச் சில நோக்கு வோம்.

திருச்செந்தூருக்குத் தெற்கே உள்ள குலசேகரப் பட்டினத்தில் எழுந்தருளியிருக் கும் கச்சி கொண்ட பாண்டீசுவரர்மீது 15 ஆம் நூற்றுண்டில் பாடப்பட்ட குலசை உலாவில்,

'நாவாரத் தேவாரம் நண்ணுதிரு வாசகமும்
பாவாணர் பண்ணில் படித்துவர' (கண்ணி - 80)

'ஆல்ால சுந்தரரும் அற்புதநா வுக்கரசும்
பாலரு வாயரெனும் பண்டிதரும் ........... அருகணைய' (கண்ணி - 97)
என்று காண்கிறோம்.

தருமை ஆதீனத்தை நிறுவியவரும் 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவரும் ஆகிய குருஞானசம்பந்தர் தாம் இயற்றிய சிவபோகசாரம் என்ற நூலில்,

'சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்' (பாடல் - 138)
என்று மூவர் அருளிய திருமுறைகள் ஓதுதல் வாழ்வின் பயன் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதே நூற்றாண்டைச் சார்ந்த புராணத்திருமலைநாதர் தாம் பாடிய மதுரைச் சொக்கநாதர் உலாவில்,

'வையைஎதிர்
ஏடேற்றித் தென்னவனை ஈடேற்றி, வெஞ்சமணக்
காடேற்றம் ஏறக் கழுவேற்றி, — நீடேற்றம்
தானேற்ற புத்தன் தலையில் இடியேற்றும்
கானேற்ற பாடல் கவுணியனும்; — மேனாள்
நிலைகடந்த கற்றூணால் நீண்டகட லாழி
அலைகடந்த நாவுக் கரசும்; — மலரடைந்த
புள்ளவாம் பொய்கையிடைப் புக்க முதலைவாய்ப்
பிள்ளைவா என்ற பெருமாளும்' (86-89)
என்ற கண்ணிகளால் திருமுறை பாடிய மூவரையும் குறிப்பிட்டுள்ளார்.

அதே நூற்றாண்டைச் சார்ந்த சேறைக் கவிராயர் இயற்றிய காளத்திநாதர் உலாவில்

'முத்தமிழால்
பல்அக்கைப் பெண்ணாகப் பாடினோன் வெண்தரளப்
பல்லக்கி லேஇருந்து பண்பாட, — கல் ஒக்க
மேல்நாள் மிதந்தானை மெய்க்கா வணம்ஏந்த,
மாநாவ லின்அரசை மாஏந்த' (கண்ணி - 182,183)
என்று இம்மூவரும் சுட்டப்பட்டுள்ளனர்.

அதே நூற்றாண்டினராகிய வீரைக் கவிராசபண்டிதர் தாம் இயற்றிய சௌந்தர்ய லகரி தமிழாக்கத்தில்,

'தருண மங்கலை உனது சிந்தை தழைந்த பாலமுது ஊறினால்
அருண கொங்கையில் அதுபெ ருங்கவி அலைநெ'டுங்கடல் ஆகுமோ?
வருணம் நன்குறு கவுணி யன்சிறு மதலை அம்புயல் பருகியே
பொருள்ந யம்பெறு கவிதை என்றுஒரு புனித மாரிபொ ழிந்ததே' (73)
என ஞானசம்பந்தர் ஞானப்பாலுண்டு கவிமழை பொழிந்த திறத்தைச் சந்த இசையில் குறிப்பிடுகிறார்.

தமிழாக்கமாய் அமைந்த சௌந்தர்யலகரிக்கு உரை வரைந்த சைவ எல்லப்ப நாவலர் தாம் இயற்றிய அருணைக்கலம்பகத்தில் அடியார்வணக்கப் பாடலாக,

'சைவத்தின் மேல்சமயம் வேறு இ(ல்)லை அதில் சார்சிவமாம்
தெய்வத்தின் மேல்தெய்வம் இல்எனும் நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவா ரமும்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாள்எம் உயிர்த்துணையே' (2)
என்று தேவாரம் பாடிய மூவரையும் வணங்குகிறார்.

நம்பி திருவிளையாடலும், பரஞ்சோதி திருவிளையாடலும் சம்பந்தருடைய மதுரைவெற்றி பற்றி விரிவாகப் பேசுகின்றன.

17 ஆம் நூற்றுண்டினர் ஆகிய தாயுமானவர் இம்மூவரையும் வணங்குவதோடன்றி, அவர்கள் பாடல்கள் சிலவற்றையும் குறிப்பிட்டுள்ளார்;

அடியார் வணக்கம் என்ற தலைப்பில்,
'வெம்பந்தம் தீர்த்துஉலகாள் வேந்தன் திருஞான
சம்பந்தனைஅருளால் சாரும்நாள் எந்நாளோ?'
'ஏரின் சிவபோகம் இங்கிவர்க்கே என்னஉழ
வாரம்கொள் செங்கையர்தாள் வாரம்வைப்பது எந்நாளோ?'
'பித்தர்இறை என்றறிந்து பேதைபால் தூதனுப்பு
வித்த தமிழ்ச்சமர்த்தர் மெய்புகழ்வது எந்நாளோ?'
என்று மூவரையும் குறிப்பிடுகிறுர்;

அறிஞர் உரை என்ற தலைப்பில்,
'இருநிலனய்த் தீயாகி என்ற திருப்பாட்டின்
பெருநிலையைக் கண்டணைந்து பேச்சறுவது எந்நாளோ?' (தே. 7174)
'அற்றவர்கட்கு அற்றசிவ னும்என்ற அத்துவித
முற்றுமொழி கண்டருளின் மூழ்குநாள் எந்நாளோ?' (தே. 7423)
'தானென்னை முன்படைத்தான் என்ற தகவுரையை
நானென்னு உண்மைபெற்று நாம்உணர்வது எந்நாளோ?' (தே. 8252)
'என்னுடைய தோழனுமாய் என்ற திருப்பாட்டின்
நன்னெறியைக் கண்டுரிமை நாம்செய்வது எந்நாளோ?' (தே. 7762)
என்று திருமுறைகளின் நான்கு பதிகங்களைச் சுட்டியுள்ளார்.

அதே நூற்றுண்டினராகிய குமரகுருபரர் தில்லையம்பலத்தைப்

'பரசிருக்கும் தமிழ்மூவர் பாட்டிருக்கும் திருமன்று' (515)
என்று குறிப்பிடுகிறுர்;

'சொல்மாலை தொடுத்தணிந்த தொண்டர்' (538)
என்று சுந்தரரைக் குறிப்பிடுகிறுர்;

'செழுமறை தெளியவ டித்தத மிழ்ப்பதி கத்தோடே
திருவருள் அமுதுகு ழைத்துவி டுத்தமு லைப்பாலால்
கழுமல மதலைவ யிற்றைநி ரப்பிம யிற்சேயை' (43)
'அமண்மாசு அறுத்த கவுணியர் பெருந்தகை' (566: 35)
'புகலியர் குரிசில்ப ணைடுதமி ழருமை
அறிந்துஒரு தாளம் வழங்கப் புகுந்தன' (115)
என ஞானசம்பந்தரைக் குறிப்பிடுகிறுர்;

'பொன்னர் திருவடிக்கு ஒன்றுஉண்டு விண்ணப்பம்' (தே. 5197)
என்ற திருமுறை அடிக்கருத்தினை,
'பொன்னடிக்கு ஒன்றிது பன்னுவன் கேண்பதி' (469: 13)
என்ற பாடலில் அமைத்துள்ளார்.

இவர் சீடரான வெள்ளியம்பலவாணத் தம்பிரான் தம் ஞானவரண சுபக்க உரை விளக்கத்தில் 'நீநாளும் நல்நெஞ்சே நினைகண்டாய்.... நல்வினையே' (தே. 1908) என்ற ஞானசம்பந்தர் பாடலை மேற்கோள் காட்டுகிறுர்.

அதே நூற்றுண்டினராகிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தாம் இயற்றிய நால்வர் நான்மணி மாலையில் உள்ள நாற்பது பாடல்களில் பத்து வெண்பாக்

களால் ஞானசம்பந்தரையும், பத்துக் கட்டளைக் கலித்துறைகளால் நாவுக்கரசரையும் பத்து விருத்தங்களால் சுந்தரரையும் புகழ்ந்து பாடியுள்ளார்;

தாம் இயற்றிய வெங்கை உலாவில், சிவபெருமானை,

'வேத உணவு வெறுத்துப் புகழ்மூவர்
ஓதுதமிழ் ஊணுக்கு உழல்செவியான்' (கண்ணி-27)

என்று குறிப்பிடுவதன் வாயிலாக இம்மூவர் திருமுறைகளும் சிவபெருமானுடைய திருச்செவிகளுக்கு மிகவும் இன்பம் தரும் தெய்விகப்பாடல்கள் என்ற கருத்தைத் தெரிவிக்கிறார்.

அதே நூற்றாண்டினராகிய குகை நமசிவாயர் தாம் இயற்றிய அருணகிரி அந்தாதியின் 17 ஆம் பாடலில் இம்மூவர் பாடலகளின் சிறப்பை,

'வன்பெருக்கில் கல்மிதக்கும், வாய்முதலை பிள்ளைதரும்,
என்புஉருக்கொள் பெண்ணாய் இருக்குமே; — அன்பருக்கு
நாட்டுகுரு சோணகிரி நாதன்அடி யார்மூவர்
பாட்டின்இசை கேட்ட பயன்'

என்று தெரிவிக்கின்றார்.

கந்தசாமிக் கவிராயர், தாம் இயற்றிய திருப்பூவணநாதர் உலாவில்,

'தந்தைதாய்
வேணுபுரக் கோலம் வீழி மிழலையிடைப்
பேணும் வகைபார்த்த பிள்ளையும்; — பூணும்அருள்
மெய்யாக் கயிலைமலை வீற்றிருந்த தன்கோலம்
ஐயாற்றில் கண்டருள்என் அப்பனும்; — எய்யாமல்
ஆடிச் சிவக்கும் அடியைத்தென் ஆரூரில்
பாடிச் சிவப்பேற்றும் பாவலனும்...... மேற்செல்ல' (கண்ணி: 83-85)

என்று மூவர் வாழ்க்கையின் அற்புத நிகழ்ச்சிகளைச் சுட்டி அவர்களைச் சிறப்பிக்கிறார்.

அதே நூற்றாண்டினதாகக் கருதப்படும் சங்கரலிங்கன் உலாவில்

'பொன்இசைய மேவும் புகலியர்கோன் பாட்டிசையும்' (கண்ணி-269)
'தென்புகலி வேந்து செழியன்உடல் கூன்நிமிர
முன்புகலும் செஞ்சொல் முதுதமிழும்' (278)

என ஞானசம்பந்தர் பாடல் பற்றியும்,

'வேம்படிக்குக்
கூடிப் பறிதலைவன் குண்டர்இட்ட நீற்றறையைப்
பாடிக் குளிர்வித்த பாவலன்' (80)

'வன்புலையர்
கல்துணையாச் சேர்த்துக் கடல்படுத்த, அஞ்செழுத்தும்
நல்துணைஎன்று ஓதினோன்' (279)

என நாவுக்கரசரைப் பற்றியும்,

'ஏடவிழ்ந்து
புள்ளை அழைக்கும் புனலில் முதலைவாய்ப்
பிள்ளை அழைக்கும் பெருமான்' (81)

'முற்றுலகும்
அண்டத் தொகையும் அருமறையும் போற்றுதிருத்
தொண்டத் தொகைவகுத்தோன்' (280)

எனச் சுந்தரரைப் பற்றியும்,

'தமிழ்மூவர் செஞ்சொல் அமுதம்' (55)

'மதுரம் பழுத்த தமிழ்மூவர் இசைப்பாட்டு' (74)
என மூவர் பாடல்களைப் பற்றியும் செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

திரிகூடராசப்பக்கவிராயர் இயற்றிய குற்றாலநாதர் உலா, சொக்கநாதப்பிள்ளை இயற்றிய தேவை உலா, பண்டாரக் கவிராயர் இயற்றிய திரு இலஞ்சி முருகன் உலா என்பன பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தன.

குற்றாலநாதர் உலா,
'தேவாரப் பண்ணும், திருவா சகத்தமிழும்,
பாவார் திருவிசைப்பா, பல்லாண்டும்' (109)
என மூவர்தமிழைக் குறிப்பிடுகிறது.

தேவை உலா,
'கோவ மொடுங்கரா உண்ட குலமைந்தர்
மூவரையும் வாழ்வித்த மூவர்களும்' (135)

['கோவமொடுங்கரா' என்பதனைக் கோவம் ஒடுங்கு அரா (-கோபத்தோடு பதுங்கிக் கிடந்த பாம்பு) எனவும், கோவமொடும் கரா (-கோபத்தோடு முதலை) எனவும் பிரித்துப் பொருள் கொள்க] என மூவரையும் அவர்தம் அற்புதச்செயல் கூறி அறிமுகம் செய்கிறது.

திரு இலஞ்சி முருகன் உலா காப்புச் செய்யுளிலேயே,
'ஒண்தா மரைமலர்த்தாள் வேலன் உலாத்தமிழ்க்குத்
தண்தா மரையாள், தமிழ்முனிவன், — பண்தரும்ஓர்
அப்பன் முதல்மூவர் ஆனதிரு வாசகத்தேன்
அப்பனுமே காப்பர் அடுத்து'
எனப் 'பண்தரும் ஓர் அப்பன் முதல் மூவர்' என்ற தொடரால் இம்மூவரையும் குறிப்பிடுகிறது.

இம் மூவர் பாடல்களையும் 'வேதமொழி ஒரும் தமிழ்' (கண்ணி-112) என்ற தொடரால் இவ்வுலா குறிப்பிடுகிறது.

அழகியகூத்ததேசிகர் இயற்றிய செப்பறைக் கனகசபை நாதன் உலா 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. அதன்கண் கனகசபா நாதர் திருவுலா வரும்போது இசை வல்லார்கள் தேவாரம் பாடிக்கொண்டு உடன்வந்த செய்தி,

'வான மதிஎன்ன வட்டக் குடைகவிப்ப,
ஞானசம் பந்தனொடு நாவரசும் — ஈனமறு
தென்நாவ லூர்அரசும் செப்பியநல் தேவார
இன்னிசைவல் லோர்ஒருபால் ஏத்தெடுப்ப' (கண்ணி-39,40)
என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, வடலூர் இராமலிங்க அடிகளார் ஆகியோரும் இந்நூற்றாண்டைச் சேர்ந்தவர்களே.

சிவக்கொழுந்து தேசிகர் தஞ்சைப்பெருவுடையார் உலாவில் 40-42 கண்ணிகளில் தேவாரம் பாடிய மூவரைப் பற்றி,

சாலக்காத் தாளும்உயர் சங்கரனார் தம்மிடத்தில்
கோலக்காத் தாளம்கொள் கோமானும் — மால, விழிப்
பாலத் தனுக்குவிண்ணோர் பண்டுஉதவல் போல்அமணர்
ஆலத்தை ஊட்டஉண்ட ஐயனும் — வேலைஎன
நீர்ஊர்முத் தாற்றில்இட்ட நீள்நிதியந் தன்னைஎழில்
ஆரூர்க் குளத்துஎடுத்த அண்ணலும்'
என்று குறிப்பிட்டுள்ளார்.

மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம்பிள்ளை திருஞானசம்பந்தரைப் பற்றித் 'திருஞானசம்பந்தர் பதிற்றுப்பத்தந்தாதி' என்ற பிரபந்தம் பாடியுள்ளார். அவர் பாடிய பிள்ளைத்தமிழ் பலவற்றிலும் தேவாரம் பாடிய மூவர்வணக்கம் காணப்படுகிறது. மேலும் அவர், தாம் இயற்றிய திருவிடைமருதூர் உலாவில்,

'தூயவையை
நீரும் நெருப்பும் நிரம்பு தமிழ்ப்பெருமை
ஒரும் படிஅருள்கொள் ஒண்மழவும் — தீராத்துன்பு
ஆய கடல்அமணர் ஆழ வரையொடுஅலை
மேய கடல்மிதந்த வித்தகனும் — மாயவன் கண்
காணுக் கமலம்நடுக் கங்குலில்ஆ ரூர்த்தெருவில்
மாணுகப் பூத்துஉழல வைத்தோனும் (கண்ணி: 203-205)

என, ஞானசம்பந்தர் அனல்வாதம் புனல்வாதம் இவற்ருல் சமணரைத் தமிழ்ப் பாசுரங்கொண்டு மதுரையில் வென்ற திறம், நமச்சிவாயப்பதிகம் பாடி நாவுக்கரசர் தம்மைக் கடலில் கட்டி வீழ்த்திய கல்லேயே தெப்பமாகக் கொண்டு மிதந்த திறம், சுந்தரர் தம் துணைவியாரான பரவை நாச்சியாரின் புலவி தீர்க்கச் சிவபெருமானை அவரிடத்தில் திருவாரூர்த் தெருவழியே இருமுறை தூது நடப்பித்த திறம் என மூவரும் நிகழ்த்திய அற்புதச்செயல்களைச் சுட்டியுள்ளார்.

## திருவருட்பாவில் மூவர்

இராமலிங்கசுவாமிகள் ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் என்ற மூவரையும் பற்றி ஆளுடையபிள்ளையார் அருள்மாலை, ஆளுடையஅரசுகள் அருள்மாலை, ஆளுடையநம்பிகள் அருள்மாலை என்ற மூன்று பதிகங்கள் அருளியுள்ளார். அவை அவருடைய திருவருட்பாத் தொகுப்பின் ஐந்தாம் திருமுறையில் இடம்பெற்றுள்ளன.

இராமலிங்க அடிகளார் ஞானசம்பந்தரைத் தெள்ளமுதாம் சிவகுருவே, ஓங்கு சற்குருவே, சற்குருமணியே, உத்தம சுத்த சற்குருவே, சிவ குருவே, அருள்நெறியின் முதல் அரசு இயற்றிய துரையே, அருள் பெற்ற மணியே, என்உயிர் எனும் குருவே, உயர்தனிக் கவுணிய மணியே, அமணஇருள் அற எழுந்த தீபமே, சம்பந்தத் தேவே என்று தம் குருநாதராக விளித்துப் பேசுகிருர்.

நாவுக்கரசர் பெருமானைப் புண்ணியன், புனிதன், கலைமதி, கருணை ஞானக் கடல், சோதிமணிவிளக்கு, பெருந்தகை, சொல்லரசு எனும் பேர் அமைந்த தே, பண்புடைய பெருமான், கற்பகம், முக்கனி, நாவரசு, கரும்பு, அருட்பயன், உயிர்த் துணையாய் விளங்கும் கோ, ஞானத்துணை, ஆகமநெறியை வளர்க்க வந்த வள்ளல், அப்பூதி அடிகட்கு இன்பம் தந்த பெருந்தகை, குரு, குலதெய்வம், சைவக்கொழுந்து, துன்பம் தீர்த்த பெருநெறித்துணை, ஒப்பில்லாத செல்வம் என்றெல்லாம் குறிப்பிடுவதோடு, அவர் பாடிய திருப்புகலூர்த் திருத்தாண்டகத்தின் முதற்பாடல் மூன்றும் அடியைச் சுட்டி (தே.7226)

'ஒன்றுளே ஒன்பது வாய் வைத்தாய் என்ற உத்தமனே' (திருவருட்பா-3242) என்றும் வடலூர் வள்ளலார் குறிப்பிடுகிருர்.

சுந்தரரை மறைநெறியும் ஆகமநெறியும் விளங்க வைத்த வன்ருெண்டப் பெருந்தகை, அருட்டலைமைப் பெருந்தகை, உயர்கருணைப் பெருந்தகை, நாவலூர்ப் பெருந்தகை, தனிக்கருணைப் பெருந்தகை, அருட்பாட்டுப் பெருந்தகை என்று குறிப்பிடுவதோடு, 'அவர் பெருமை அயன் மாலும் அளப்பரிது' (3256) என்றும் குறிப்பிடுகிருர், அருட்பிரகாசர்;

சுந்தரர் பாடல்களைத்
'தேன் படிக்கும் அமுதாம் உன் திருப்பாட்டு' (3253)
என்று குறிப்பிடுகிருர்;

சுந்தரர் திருவாரூர்ப்பதிகத்தில்,
'ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய்' எனக் குறிப்பிட்டதனைத் (தே.7762)
தம்முடைய திருவருட்பாவில் எடுத்தோதி,

'அத்தொடர்ப் பொருளை, ஆழநினைந்து அடியேன் அருங்கரணம் கரைந்து கரைந்து, ஊழியல் இன்புறுவது காண்' (3251) என்று குறிப்பிடுகிறார்.

மேலும், இராமலிங்கர் இம்மூவருடைய அற்புதச்செயல்கள் பலவற்றையும் தம் முடைய 'விண்ணப்பக் கலிவெண்பா'விலும் (1962) 'நெஞ்சறிவுறுத்த'விலும் (1965) குறிப்பிட்டுள்ளார்; 'விண்ணப்பக் கலிவெண்பா'வில், தலமுறைத் தேவாரத் திரட்டின் அடிப்படையில், மூவரும் தேவாரம் பாடிய திருத்தலங்களை 279 கண்ணிகளில் காவிரியின் வடகரைத் தலங்கள் முதல் வடநாட்டுத்தலங்கள் முடிய நிரலாகத் தலச்சிறப்போடு குறிப்பிட்டுள்ளார்; ஞானசம்பந்தர் பாடிய 'புலனைந்தும் பொறிகலங்கி' (தே. 1394) என்ற பாடலை 'நெஞ்சறிவுறுத்த'வின் 470 ஆம் கண்ணியிலும், 'வெற்றவே அடியார் அடிமிசை வீழும்' (தே. 4091) என்ற பாடலின் 'அற்றவர்க்கு அற்ற சிவன்' என்ற தொடரை,

'சம்பந்தர்
அற்றவர்க்கு அற்றசிவன் ஆம்எனும்அப் பொன்மொழியை
மற்றைமொழி போன்று மறந்தனையே'
என்ற 525 ஆம் கண்ணியிலும் குறிப்பிட்டுள்ளார்.

## புராணங்களில் தேவாரச் செய்தி

13 ஆம் நூற்றாண்டை ஒட்டிய கந்தபுராணம் முதலாக, சென்ற நூற்றாண்டைச் சார்ந்த பட்டீசுவரத் தலபுராணம் ஈறாகப் புராணங்கள் பலவற்றிலும் திருமுறை பாடிய மூவர் துதிகள் காணப்படுகின்றன.

ஞானசம்பந்தர் பாடிய அற்புதப் பதிகங்கள் சில, புராணங்களில் முதல்நினைப்பு உணர்த்தியும், நிகழ்செய்தியை உரைத்தும் அவரைப் பற்றிய வணக்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

அவற்றுள் சிலவற்றை நோக்குவோம்:

| செய்தி | பதிகம் | புராணம் |
|---|---|---|
| 'வாதிடும் சமண் வேரோடே அற வாழ்க அந்தணர் வானோர் ஆன் என ஓது பண்டிதன்' | 'வாழ்க அந்தணர்' | திருவையாற்றுப்புராணம் |
| 'அருந்தமிழ்ப்பதிகம் புரம் மூன்று எய்த ஒருவனைப் பாடிச் சமணக் குறும்பகற்றி' | 'வாழ்க அந்தணர்' | மச்ச புராணம் |
| 'தமிழ்ப்பதிகம் தீயிலிட்டுப் பசுமை யாக்கிப் பாசுரம் வையையின்மீது ஏற்றி | 'தளிரிளவளர்' | திருவாவடுதுறைப் புராணம் |

| செய்தி | பதிகம் | புராணம் |
|---|---|---|
| 'தமரொடு வெள்ளம் நீந்த நாவாய் கட்டவிழ்த்துத் தாவாது அமர் ஒரு பதிகம் செவ்வாய் மலர்ந்தவர்' | 'கொட்டமே கமழும்' | மயூரப் புராணம் |
| 'குரும்பை முதிர் ஆண்பனையில் குருத்து உதிக்கத் தமிழ் கூறும் மீளி' | 'பூத்தேர்ந்தாயன' | அருணகிரிப் புராணம் |
| 'பூம்பாவாய் போதியோ என்று அழைத்த பூசுரன்' | 'மட்டிட்ட' | பரமத திமிர பானு |
| 'என்பு பெண்கொடியாகி மெல்ல வந்து எழுந்திட இறைதாள் அன்பினில் பாடும் காளமுகில்' | 'மட்டிட்ட' | இலிங்க புராணம் |
| 'மயிலைப்பதி என்பாகிய பெண்ணைப் பாடிய புகலிப்பிள்ளை' | 'மட்டிட்ட' | திருக்கழுக்குன்றப் புராணம் |
| 'என்பு அரிவை உருப்படைத்து உயிர் பெற்று எழப் பதிகம் பாடி' | 'மட்டிட்ட' | சிவராத்திரிப் புராணம் |
| 'பொடிஎலும்பு ஓர் தோகையஞ் சாயலாகப் பொருவரு மலர் வாய் விண்ட புதல்வன்' | 'மட்டிட்ட' | திருவாழ்கொளிப்புத்தூர்ப் புராணம் |

## அ) புராணங்களில் காணப்படும் ஞானசம்பந்தர் பெயர்கள்

| பெயர் | புராணம் |
|---|---|
| அமுதக்கவி பொழி சிறுவன் | —கூர்ம புராணம் |
| அமுதமறைக் குழவி | — குறுக்கைப் புராணம் |
| அருளும் சொல் பனவன் | — பேரூர்ப் புராணம் |
| ஆட்கொள் கவுணியன் | — விளத்தொட்டிப் புராணம் |
| ஆணை பெண்ணை உறு பெண்ணுகச் செய்தவன் | — நல்லூர்ப் புராணம் |
| எலும்பு பெண்ணுக வாய் விண்ட புதல்வன் | — வாழ்கொளிபுத்தூர்ப் புராணம் |
| கமழ்வாய்ச் செல்வன் | — ஆப்பனூர்ப் புராணம் |
| கவிதைக் காழி முகில் | — பிரமோத்தர காண்டம் |
| கவுணியக் கொண்டல் | — மருதவனப் புராணம் |
| கவுணிய நாயகன் | — பாதிரிப்புலியூர்ப் புராணம் |
| கவுணியர் சேய் | — மச்சபவானி கூடல் புராணம் |
| கவுணியர் சூளாமணி | — வெண்காட்டுப் புராணம் |
| கவுணியர்தம் குலதீபம் | — காஞ்சிப் புராணம் |
| கவுணியர்தம் குலமணி | — புள்ளிருக்குவேளூர்ப் புராணம் |
| கவுணியர் மணி | — பூவாளூர்ப் புராணம் |
| கவுணிய வேதியன் | — முருகன்பூண்டிப் புராணம் |
| கழுமலப்பேரூரின் வரு பிள்ளை | — மயூராசலப் புராணம் |
| கழுமலப் பேரொளி | — சுழியல் புராணம் |
| காழி ஞானப்பிள்ளை | — பட்டீசுவரப் புராணம் |

காழி ஞானபூரணன் — நாகைக்காரோணப் புராணம்
காழி நாடன் — குடந்தைப் புராணம்
காழிப்பிள்ளை — கருவூர், மருதூர், கோயிலூர்ப் புராணங்கள், உபதேச காண்டம்
காழிப் பொருள் — சுழியல் புராணம்
காழி மாமுகில் — இலிங்க புராணம், காசிகண்டம், வாயுசங்கிதை
காழிமுனிவன் — பரஞ்சோதி திருவிளையாடல் புராணம்
காழியர் கோன் — பஞ்சாக்கரமாலை
காழி வந்த கவுணியன் — நல்லூர்ப்.புராணம்
காழி வேந்து — பரங்கிரிப் புராணம்
காழி வைதிகச் சூளாமணி — திருவாரூர்ப் புராணம்
கொச்சைவய அமுது — சுழியல் புராணம்
சண்பை நறுந்தேன் — சுழியல் புராணம்
சண்பையர் கோன் — உத்தரகோசமங்கைப் புராணம்
சண்பையார் — திருநெல்வேலிப் புராணம்
சமணரைக் கழுவேற்றின மீளி — அருணகிரிப் புராணம்
சம்பந்தப் பெருமான் — ஆதிபுரிப் புராணம்
சம்பந்த முனிவர் — புலியூர்ப் புராணம்
சிரபுரக் கல்விக்கடல் — சுழியல் புராணம்
சிரபுரக் கோன் — திருவாவடுதுறைப் புராணம்
செந்தமிழ்ப் பாடல்...... அறிஞன் — திருவானைக்காப் புராணம்
செந்தமிழ்ப் பாவலன் — சீகாளத்திப் புராணம்
தண்டமிழ் விரகன் — கந்த புராணம்
தமிழ்ப் பதிகத்து இன்னமுதம் பொழியும் மதிச்செல்வன் — உத்தரகோசமங்கைப் புராணம்
திருஞானசம்பந்தன் — பெரிய புராணம், கூவ புராணம், ஆதித்தபுரிப் புராணம், நெல்வேலிப் புராணம்
திருஞானசம்பந்த தேவன் — உறையூர்ப் புராணம்
திருநீற்றன் சம்பந்தன் — மயூரகிரிப் புராணம்
திருப்பாசுரத்தால் நல்சித்தாந்தம் செய்தோன் — சித்தாந்த தரிசனம்
தோணிபுரக் கனி — சுழியல் புராணம்
நான்மறையவன் — சிவபுண்ணியத் தெளிவு
பண்டித ஞானசாரியன் — திருவையாற்றுப் புராணம்
பரசமய கோளரி — வெண்காடு, பழனி, சுழியல் புராணங்கள்
பரஞ்சுடரைத் தெரிக்கும் தோன்றல் — சேது புராணம்
பாலை நெய்தல்இயற்றினோன் — தனியூர்ப் புராணம்
பிரமபுரச் செழுஞ்சுடர் — சுழியல் புராணம்
புகலிக் குணவரை — சுழியல் புராணம்
புகலிப் பிள்ளை — திருக்கழுக்குன்றப் புராணம்
புறவ நான்மறை — சுழியல் புராணம்
பூந்தராய்ப் பேறு — சுழியல் புராணம்
மணிச்சிவிகை ஏறினோன் — குற்றாலத்தல புராணம்

| | |
|---|---|
| மலைமகளார் திருமுலைப்பால் கமழ்வாய்ச் செல்வன் | — ஆப்பனூர்ப் புராணம் |
| ம்ழவிளங் களிறு | — கடம்பர்கோயில் புராணம் |
| முத்தீச் செல்வன் | — காசிரகசியம் |
| வாது வென்ற பூசுரன் | — சங்கற்ப நிராகரணம் |
| வெங்குரு நாயகம் | — சுழியல் புராணம் |
| வெண்டரளச்சிவிகை ஏறிய கவிஞன் | — சிவ ரகசியம் |
| வெண்ணீறு எடுத்து ........ சாத்தினர் | — திருப்பூவணப் புராணம் |
| வேணுபுரக் கோ | — சுழியல் புராணம் |
| வேதியர் சூளாமணி | — பழனித்தல புராணம் |

சிவபெருமானைப் பற்றிப் பாடப்பட்ட நூற்றுக்கணக்கான பிரபந்தங்களிலும் சிவத்தல புராணங்களிலும் திருப்பதிகம் பாடிய மூவர்துதி தவறாது அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக ஒரு சிலவே கூறப்படுகின்றன.

திருநாவுக்கரசர் கல்லே தெப்பமாகக் கடலைக் கடந்த செயல், நல்லூரில் சிவ பெருமான் அவருக்குத் திருவடி தீட்சை செய்த செயல், பெண்ணாகடத்தில் அவருக்கு முத் தலைச்சூலம் பொறிக்கப்பட்ட செயல், அவருக்கு உண்பிக்கப்பட்ட நஞ்சு அமுதான செயல், புகலூரில் அவர் பொன்னையும் மணியையும் பற்றின்றி உழவாரத்தால் அகற்றிய செயல் முதலிய அற்புதங்கள் திருநாவுக்கரசரைப் பற்றிய துதிப்பாடல் களில் காணப்படுகின்றன. நாவுக்கரசர் என்று பொருள்படும் பரியாயப் பெயர் களாகிய நாவுக்கரசு, நாவுக்கரையர், நாவினுக்கரசு, நாவினுக்கரையர், நாவரசு, நாவினுக்கு வேந்தர், சொல்லரசு, சொல்லரசர், சொல்வேந்தர் முதலிய பலவும் இவரைப் பற்றிய துதிப்பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## ஆ) புராணங்களில் காணப்படும் நாவுக்கரசர் பெயர்கள்

| பெயர் | புராணம் |
|---|---|
| அப்பன் | — உபதேச காண்டம் |
| அப்பர் | — சிவபுண்ணியத் தெளிவு, மயூராசல புராணம் |
| அரசு | — சூத சங்கிதை |
| அருந்தமிழ் மாற்றருந் தவத்தோன் | — சீகாளத்திப் புராணம் |
| ஆர்கலியது கடந்தோன் | — நல்லூர்ப்பெருமணப் புராணம் |
| இறையடி தலைமேல் பெற்ற தூயர் | — தனியூர்ப் புராணம் |
| கடலில் கல் மிதப்ப வந்தவர் | — ஆதிபுரிப் புராணம் |
| கருங்கடலில் மிதந்தவர் | — பூவாளூர்ப் புராணம் |
| கல் புணையாகக் கடல் கடந்தவன் | — ஸ்வாநந்த கணேச புராணம் |
| கல்லோடு மிதந்தான் | — திருச்சுழியல் புராணம் |
| கற்றூணி உகைத்தார் | — குற்றாலப் புராணம் |
| சிவனடி தன்உச்சி பரித்த சொல்வேந்தன் | — பரமத திமிர பானு |
| சூலம் பெற்று உய்ந்த ஐயர் | — அம்பர்ப் புராணம் |
| செந்தமிழ் நாவுக்கரசர் | — திருப்பூவணப் புராணம் |
| சொல்லரசர் | — கந்தபுராணம் |
| சொல்லரசு | — ஆதித்தபுரிப் புராணம் |
| சொல்லரையன் | — புலியூர்ப் புராணம் |
| சொல்வேந்தன் | — திருக்கூவப் புராணம் |

| | |
|---|---|
| ஞானத்தமிழ் வாகீசர் | — பழனித்தல புராணம் |
| ஞானப் பெருந்தகை | — விளத்தொட்டிப் புராணம் |
| தண்டமிழ் பாடினர் | — திருநெல்வேலிப் புராணம் |
| தாண்டகச் சதுரர் | — பெரிய புராணம் |
| தாண்டகச் செந்தமிழ் வகுத்த சதுரன் | — சிவரகசியம் |
| தாண்டகம் பொழி முகில் | — கடம்பர்கோயில் புராணம் |
| திருநாவுக்கரசர் | — சீகாழிப் புராணம், மச்ச புராணம் |
| திருநாவுக்கரசன் | — திருவாரூர்ப் புராணம், காசி கண்டம் |
| திருநாவுக்கரையன் | — மயூரகிரிப் புராணம் |
| திருவாமூர் விளங்க வந்தோன் | — வெண்காட்டுப் புராணம் |
| துறவிக்கரசு | — கோயிலூர்ப் புராணம் |
| நாவரசு | — சிவராத்திரி புராணம், பாதிரிப் புலியூர்ப் புராணம் |
| நாவரையர் | — சேது புராணம் |
| நாவலன் | — பிரமோத்தர காண்டம் |
| நாவினுக்கரசு | — நல்லூர்ப் புராணம் |
| நாவினுக்கரையர் | — பவானி கூடற்புராணம் |
| நாவினுக்குவேந்தர் | — திருப்பரங்கிரிப் புராணம் |
| நாவின் வேந்தர் | — காசி ரகசியம் |
| நாவுக்கரசு | — கழுக்குன்றப் புராணம், திருவாவடுதுறைப் புராணம், திருவானைக்காப் புராணம், திருவாலங்காட்டுப் புராணம், திருஒத்தூர்ப் புராணம், புள்ளிருக்குவேளூர்ப் புராணம் |
| பரோபகாரத் தொண்டாற்றி இருந்தவர் | — திருவாழ்கொளிபுத்தூர்ப் புராணம் |
| பவக்கடலும் கடந்தான் | — திருச்செந்தூர்ப் புராணம், கூர்ம புராணம் |
| பாவிடை நஞ்சம் பதைப்பின்றி உண்டோன் | — திருப்பெருந்துறைப் புராணம் |
| பிறப்பெனும் கடல் நீத்த பிரான் | — பரஞ்சோதி திருவிளையாடல் புராணம் |
| பிறவிவேலை கடந்த முதல்வன் | — நாகைக்காரோணப் புராணம் |
| பிறவிவேலை நீந்திய மன்னன் | — பேரூர்ப் புராணம் |
| புகலூரில் தஞ்சமுதல் கண்ட பிரான் | — திருவையாற்றுப் புராணம் |
| புண்ணிய வாகீசர் | — திருக்குறுக்கைப் புராணம் |
| முதல்வனை வழுத்திய கோமான் | — சங்கரநாராயணன்கோயில் புராணம் |
| முழுத்துறவு உடைய பிரான் | — உறையூர்ப் புராணம் |
| மெய்ஞ்ஞானம் பூத்தவன் | — வாயுசங்கிதை |
| வன்கதவை நீக்கினன் | — சங்கற்ப நிராகரணம் |
| வன்கதவைத் திறந்த வாக்கு இறைவன் | — இறைவன் நூற்பயன் |
| வாகீசப் பெருந்தகை | — காஞ்சிப் புராணம் |
| வாகீசர் | — உத்தரகோசமங்கைப் புராணம், கருவூர்ப் புராணம், மருதூர்ப் புராணம், மருதவனப் புராணம், சைவசமய நெறி |
| வாகீசன் | — உருத்திராக்க விசிட்டம், அருணகிரிப் புராணம், திருமுருகன்பூண்டிப் புராணம் |

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பெயர்கள் தொண்டர்நாதனைத் தூதிடை விடுத்தது, முதலை உண்ட பாலனை அழைத்தது, குண்டையூர் நெல் படைத்தது, காவிரிநீர் வழிவிடச் செய்தது என்ற அற்புதங்களை உட்கொண்ட பெயர்களாகவே பெரும்பாலும் உள்ளன.

## இ) புராணங்களில் காணப்படும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பெயர்கள்

| பெயர் | புராணம் |
|---|---|
| அமுதப்பாடல் தரு முதல் | — திருவெண்காட்டுப் புராணம் |
| அரக்கன்முடி திரித்த தாளைப் பரவை மனையகம் தேடி உறுமா செய்தோன் | — சீகாழிப் புராணம் |
| அரி காணாப் பாதனைத் தூதேவினன் | — திருக்கழுக்குன்றப் புராணம் |
| ஆரூரர் | — அருணகிரிப் புராணம் |
| ஆரூர்ச் சுந்தரப்பெருமாள் | — பவானி கூடற் புராணம் |
| ஆலாலசுந்தரன் | — திருச்சுழியற் புராணம், ஆதித்தபுரிப் புராணம் |
| ஆற்றினில் வீழ்த்திக் குளத்தினில் எடுத்து அளித்தோன் | — ஆப்பனூர்ப் புராணம் |
| இரும்பொருளைத் தூதுகொண்டார் | — சேது புராணம் |
| ஓர்உந்தி தான் வழிவிட முன்பாடி ஐயாறு மேய விமலர் | — திருப்பெருந்துறைப் புராணம் |
| கரிமேல் வெள்ளிவெற்பில் போன பாவலன் | — திருவாவடுதுறைப் புராணம் |
| குண்டையூர் நெல் படைத்தவன் | — நல்லூர்ப் புராணம் |
| சங்கிலி அகற்றிப் பரவையில் படிந்து ஆடுறும் ஒருதனிப் பகடு | — உபதேச காண்டம் |
| சவுந்தரியப் பெருமாள் | — செவ்வந்திப் புராணம் |
| சுந்தரன் | — திருமுருகன்பூண்டிப் புராணம், புலியூர்ப் புராணம், ஆதித்தபுரிப் புராணம், கந்த புராணம், சிவராத்திரிப் புராணம் |
| செங்கலை அரும்பொன் ஆக்கிய தென்தமிழ் நாவலன் | — ஸ்வாநந்த கணேச புராணம் |
| செந்தமிழ்ச் சுந்தரன் | — மயிலைப் புராணம் |
| சோதிதனைத் தூதுகொண்ட சுந்தரன் | — திருப்பூவணப் புராணம் |
| ஞான மறையவன் | — மயிலைப் புராணம் |
| ஞானமாம் அகத்தின் கண்ணும் அடைந்தவன் | — வாயுசங்கிதை |
| தமிழ் பகர் சுந்தரன் | — திருப்பரங்கிரிப் புராணம் |
| தம்பிரான் தோழன் | — திருவாரூர்ப் புராணம் |
| தலைவன்தன்னை இரவினில் தூது கொண்டோன் | — பரஞ்சோதி திருவிளையாடல் புராணம் |
| திரிசூலம் எனும் படையினனைப் புலவி தீர்த்து வருகஎன விடுத்த பண்பினன் | — நல்லூர்ப் பெருமணப் புராணம் |

| | |
|---|---|
| திருத்தொண்டத்தொகை விரித்த பெருமான் | — காஞ்சிப் புராணம் |
| திருநாவலூர்ப் பெருமான் | — காஞ்சிப் புராணம் |
| திருப்பதிகமாரி பொழிந்திடு புயல் | — மயிலைப் புராணம் |
| திருமணக்கோலப் பெருமாள் | — காஞ்சிப் புராணம் |
| தூதால் இம்பர்மிசை ஆளவந்த சுந்தரன் | — மயூரகிரிப் புராணம் |
| தூதுசெலப் பணித்தருளும் சுந்தரர் | — மச்ச புராணம் |
| தூது சென்றுவா என்ற தீரன் | — திருக்கூவப் புராணம் |
| தூது நடத்தும் கவிராசன் | — பிரமோத்தர காண்டம் |
| தூதுவிட்ட கவியான் | — குற்றாலப் புராணம் |
| தூதுவிட்ட புலவன் | — சீகாளத்திப் புராணம் |
| நம்பி | — திருவாலங்காட்டுப் புராணம் |
| நாவலம்பதியில் வந்தவன் | — நெல்வேலிப் புராணம் |
| நாவலன் மன்னன் | — சங்கரநாராயணன்கோயில் புராணம் |
| நாவலூர் நம்பி | — பாதிரிப்புலியூர்ப் புராணம் |
| நாவலூர் நாவலர் | — உத்தரகோசமங்கைப் புராணம் |
| நாவல் நம்பி | — திருவையாற்றுப் புராணம் |
| பரவை சூழ்ந்து சங்கிலி சிமிழ்ப்புற்று ஆசு தள்ளிய களிறு | — கருவூர்ப் புராணம் |
| மழவினை முதலைவாயில் வரவழைத்த எங்கோன் | — கடம்பர்கோயில் புராணம் |
| மறைப்பெருமாள் | — காஞ்சிப் புராணம் |
| மாது கொண்ட பாகரைத் தூது கொண்ட சுந்தரன் | — மருதூர்ப் புராணம் |
| முதலை ஒரு மகவு தரச்செய்து உகந்த முன்னோன் | — மருதவனப் புராணம் |
| முதலை வாய்க்கொண்ட மதலையைத் தந்திட வழுத்தும் குரிசில் | — இலிங்க புராணம் |
| முதலைவாய்ப் பிள்ளை தந்த முதல்வன் | — காசி கண்டம் |
| முனைப்பாடி வளநாடன் | — பூவாளூர்ப் புராணம் |
| வன்றொண்டர் | — திருவானைக்காப் புராணம் |
| விரகன் | — வேளூர்ப் புராணம் |

இவ்வாறு சைவ பரமான பிரபந்தங்கள் புராணங்கள் முதலிய பலவற்றுள்ளும் திருப்பதிகம் பாடிய இம்மூவரும் போற்றப்பட்டுள்ளனர்; இவர்கள் இயற்றிய அற்புதச் செயல்கள் பலவும் சுட்டப்பட்டுள்ளன.

## மூவர் திருப்பெயர்கள்

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் என்பன இவர்களுக்குப் பெற்றோர் வைத்த பெயர்கள் அல்ல. ஞானசம்பந்தருக்கு அவருடைய பெற்றோர் இன்ன பெயரிட்டனர் என்று சேக்கிழாரும் குறிப்பிடவில்லை. ஞானப்பால் குடித்துச் சிவஞானம் பெற்றுப் பதிகம் பாடத் தொடங்கிய அளவில் இறைவன் அருளை உட்கொண்டு தோன்றிய பெயரே ஞானசம்பந்தன் என்பது. இச்செய்தி நீலகண்ட தீக்கிதரின் சிவலீலார்ணவத்துள்ளும் 22 ஆம் சருக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாவுக்கரசர் என்ற பெயர் மருள்நீக்கியார் திருவதிகையில் வீரட்டத்து அமர்ந்த பெருமா

ஞர் திருமுன்னர் நின்று 'கூற்ருயினவாறு விலக்ககிலீர்' என்ற பதிகம் பாடிய அள வில் அவ்வதிகை வீரட்டரால் அளிக்கப்பெற்றது.

ஆரூரன் என்று பெற்ருேரால் பெயரிடப்பெற்ற சுந்தரர் வெண்ணெய்நல்லூரில் சிவபெருமான் தடுத்தாட்கொண்டபின் அப்பெருமானுல் வன்தொண்டன் என்று பெயரளிக்கப்பெற்றவர். பண்டு கயிலையில் இருந்தபோது அவருக்கு வழங்கப் பெற்ற 'ஆலால சுந்தரன்' என்ற பெயரின் சுருக்கமே 'சுந்தரர்' என்பது.

எனவே, இப்பதிகம் பாடிய மூவரும் இறைவன் அளித்த பெயராலேயே பெரும் பாலும் உலகவரால் நினைவில் கொள்ளப்பெறுகின்றனர். இவர்கள் செய்த அற்புதச் செயல்களும் அச்செயல்கள் பொருட்டாக இவர்கள் பாடிய பதிகங்களும் இன்று வரை மக்களால் சிதைவின்றி உணரப்படுகின்றன.

## சுந்தரர், சம்பந்தர் பதிக எண்ணிக்கை

இவர்கள் பாடியனவாகக் கூறப்படும் பதிகங்களில் நம்பியாண்டார் நம்பிகள் தொகுத்தனவாகத் திருமுறை கண்ட புராணம் குறிப்பிடும் பதிகங்கள் பெரும்பா லும் இந்நாட்டு மக்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்டுவந்துள்ளன. வெள்ளியம் பலவாணத் தம்பிரான் பாடிச் சேர்த்தனவாகச் சுந்தரர் பதிகங்கள் இரண்டு திருநாகைக் காரோணத்தைப் பற்றி உள்ளன. அவற்றுள் 'பத்தூர் புக்கு' என்ற முதற்பதிகம் சுந் தரர் பாடியதே என்று சான்றோர் பலரும் கொள்வர். 'பொன்னும் இதழிவிரை மத்தம்' என்ற இரண்டாம் பதிகம் வெள்ளிப்பாடல் என்று கொண்டாலும், அதனை அடியோடு நீக்க மனமின்றிச் சுவடிகளில் 'வெள்ளி நாகைக்காரோணப் பாடல்' என்ற பெயரில் பொறித்துள்ளனர். திருமுறை கண்ட புராணத்தில் சுந்தரர் பதிகங் கள் 100 கிட்டியுள்ளன என்று கூறப்பட்டதையும், நாகைக்காரோணத்தைச் சுந்தரர் பாடியுள்ளதாகச் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளதையும் (கழறிற்றறிவார். 84,85) மனத் துக் கொண்டு, முதல் நாகைக்காரோணப் பதிகத்தை ஏற்று, இரண்டாம் பதி கத்தையும் நீக்க மனமின்றி ஏற்றுக்கொண்டுள்ளனர். ஞானசம்பந்தர் பதிகங்கள் 384 என்று திருமுறை கண்ட புராணம் கூறியிருப்பவும், இப்பொழுது 383 பதிகங் களே இருப்பினும், மறைக்கதவினை மீண்டும் மூடுவிக்க ஞானசம்பந்தர் பாடிய பதிகமாக ' விடைத்தவர் புரங்கள்' என்று காணப்படும் பதிகம் சேக்கிழாரால் குறிப்பிடப்படாமையின் அதனை வெள்ளியம்பலவாணத் தம்பிரான் பாடிய பதி கம் என நெகிழ்த்துவிட்டனர். திருத்தவத்துறைக்கு ஞானசம்பந்தர் பாடிய பதிகம் சேக்கிழார் காலத்துக்குப் பின் இறந்தது என்று கொள்வாரும், கல்லில் வெட்டப் பட்ட திருவிடைவாய்ப் பதிகத்தைக் கொண்டு 384 என்ற எண்ணினை நிரப்பிக் கொள்வாரும் எனச் சான்றோர் இருதிறத்தவராக உள்ளனர்.

## தேவாரம் போற்றப்பட்டு வந்துள்ளமை

இம் மூவரும் 7,8 ஆம் நூற்ருண்டினைச் சார்ந்தவராகவே, இவர்கள் பாடிய பதிகங்கள் இவர்கள் காலத்திலேயே மக்களால் திருக்கோயில்களில் பாடப்பட, இங்ஙனம் பாடுதல் தொடர்ந்துவரக் கோயில்களில் திருப்பதிகம் பாடுவதற்கு நிவந்தம் அரசர்களால் விடப்பட்டன என்பதும், பல்லாயிரக்கணக்கில் பாடப் பட்ட இவர்கள் பாடல்களில் ஒருசில ஆயிரப் பாடல்களே மக்களால் நினைவிற கொண்டு பாடப்பட அவற்றை 10ஆம் நூற்ருண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பிகள் தொகுத்ததோடு இவர்கள் பெருமையை விளக்கச் சிறு பிரபந்தங்கள் பாடினுர் என்பதும், இவர்கள் பதிகங்களை நன்கு ஆராய்ந்து நோக்கிச் சேக்கிழார் இவர்கள் வரலாற்றை விரிவாக வரைந்துள்ளார் என்பதும், இவர்கள் பதிகப்பாடல்கள் பல பிற்கால அநுபூதிமான்களால் எடுத்தாளப்பட்டன என்பதும்,

இவர்களைப் பற்றிப் பிற்காலச் சான்றோர்களும் பிரபந்தங்கள் பாடியுள்ளனர் என்பதும், இவர்களைப் பற்றிக் குறிப்பிடாத சைவசமய நூல் ஒன்றும் இல்லை என்பதும், சுவடிகளில் இவர்கள் பாடிய பாடல்களில் இறந்துபட்டனவாகக் குறிக்கப்படும் பாடல்களையோ, அடிகள் சிதைவுற்ற பாடல்களையோ நம் முன்னோர்கள் அப்படியே குறிப்பிட்டு வந்துள்ளனர் என்பதும், இவர்கள் பாடல்களைத் தெய்விகப் பாடல்களாகக் கொண்டு, சிதைவுற்ற பாடல்களை நிரப்பவோ, குறைப்பாடல்கள் உடைய பதிகங்களை நிறைவு செய்யவோ நம்முன்னோர்யாரும் முயலவில்லை என்பதும், இம் மூவர் பாடல்களும் பாடப்பட்ட காலம்தொட்டு இன்றுகாறும் தமிழ்ச்சான்றவர் இதயங்களில் இடம்பெற்றுள்ளன என்பதும் அறியப்படுகின்றன.

## மூவர் திருமுறையும் தேவாரம் என வழங்கியமை

இம்மூவர் பாடிய திருப்பதிகங்களும் இக்காலத்தில் தேவாரம் என்ற பெயராலேயே வழங்கப்படுகின்றன. தேவாரம் என்ற சொல்வழக்கு இலக்கியத்தில் புகுவதன் முன்னரே கல்வெட்டில் காணப்படுகிறது. தேவாரம் என்பது வீட்டில் வழிபடும் இறைவன் வடிவைக் குறித்துப் பின் வழிபாடு என்ற பொருளில் வழங்கியிருப்பதைக் குறிப்பிடும் கல்வெட்டுக்கள் பல உள்ளன.

14 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த இரட்டையர்கள் இயற்றிய ஏகாம்பரநாதர் உலாவில் காணப்படும்

'மூவாத பேரன்பின். மூவர் முதலிகளும்
தேவாரம் செய்த திருப்பாட்டும்' (78)

என்ற கண்ணியிலும் தேவாரம் என்பது வழிபாடு என்ற பொருளிலேயே வந்துள்ளது. திருப்பாட்டு என்பதே மூவர் திருமுறையைக் குறிக்கிறது.

அதே நூற்றாண்டில் தோன்றிய கோயில் புராணத்துள்ளும்
'தாவா மறையொடு தேவாரக் கைப்பற்றிய பணி' (திருவிழாச்சருக்கம்-27)

(-என்றும் அழியாத வேதங்களால் வழிபாடு செய்த திருத்தொண்டு) என்ற அடியில், தேவாரம் என்பது 'வழிபாடு' என்ற பொருளிலேயே வந்துள்ளது.

15 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட தக்கயாகப்பரணி உரை மூவர் திருமுறைகளையும் திருப்பாட்டு என்றே குறிக்கிறது.

அந்நூற்றாண்டைச் சார்ந்த குலசை உலா,
'நாவாரத் தேவாரம் நண்ணுதிரு வாசகமும்
பாவாணர் பண்ணில் படித்துவர' (கண்ணி-80)
என்று மூவர் திருமுறைகளையும் 'தேவாரம்' என்று குறிப்பிடுகிறது.

பதினாறும் நூற்றாண்டில் இயற்றப்பட்ட அருணைக்கலம்பகத்தில் சைவ எல்லப்ப நாவலரும்,

'(வாய்)மை வைத்த சீர்த் திருத்தேவாரமும் திருவாசகமும்
உய்வைத் தரச் செய்த நால்வர்' (பாடல்-2)
என்று யாத்த பாடலடியில் மூவர் திருமுறையையும் தேவாரம் என்ற பெயரால் வெளிப்படையாகக் குறித்துள்ளார்.

தேவாரம் என்பது தேவபாணி; அஃதாவது இறைவனைப் பற்றிப் பாடப்பட்ட இசைப்பாடல் என்னும் பொருளது.

தொல்காப்பியனார் பெயரியலில்,
'யான்யாம் நாம்என வரூஉம் பெயரும்' (தொல்.சொல்.162)

எனத் தன்மை ஒருமைப்பெயராக யான் என்பது ஒன்றனை மாத்திரம் குறித்துள்ளார். ஆனால் பிற்பட்ட பரிபாடலில்,

'நல்லாள் கரைநிற்ப நான்குளித்த பைந்தடத்து' (6: 87)

என நான் என்ற தன்மைஒருமைப்பெயர் யான் என்பது போலவே வழங்கத் தலைப்பட்டது. அது,

'நான் தமிழ்ப், பாவினால் இது இயற்றிய பண்புஅரோ' கம்பரா. 10
'நாயகன் உரையான் வாயால் நான் இது பகர்வென் என்னா' கம்பரா. 1597
'ஈண்டு நான்இருந்து இன்னுயிர் மாயினும்' கம்பரா. 5379

எனக் காப்பியங்களிலும்,

'நான் ஆர்? என்உள்ளம் ஆர்? ஞானங்கள் ஆர்?' கோத்தும்பி-2
'நானேயோ தவம் செய்தேன்' ஏசறவு-10

'நானும் என்சிந்தையும் நாயகனுக்கு எவ்விடத்தோம்?' கோத்தும்பி-15

எனத் திருவாசகப் பாடல்களிலும் இடம்பெற்றுப் பிற்காலத்து உலக வழக்கில் 'யான்' என்பதனை அடியோடு நீக்கி அதன் இடத்தைத் தான் பற்றிக்கொண்டாற்போல, 'மூவர் திருமுறை' என்ற பொருளில் 16 ஆம் நூற்றாண்டை ஒட்டித் தோன்றிய 'தேவாரம்' என்ற சொல்லே அடுத்த நூற்றாண்டுகளில் பொறிக்கப்பெற்ற சுவடிகளிலும் இடம்பெற்று, நாளடைவில் உலக வழக்கில் 'மூவர் திருமுறை' என்ற பெயரைப் பொதுவாக அடியோடு நீக்கி, மூவர் பாடல்களையும் குறிக்கும் பிரசித்தமான பெயராக இக்காலத்தில் வழக்கில் வந்துவிட்டது. ஆதலின் மூவர் திருமுறைகளையும் 'தேவாரம்' என்ற பொதுப்பெயரால் குறிப்பிடுவதே இக்காலத்தில் எளிமையும் தெளிவும் தருவதாகும்.

இனி, இம்மூவரைப் பற்றித் தமிழ்நாட்டில் தோன்றியனவும் வழங்குவனவும் ஆகிய வடநூல்களில் காணப்படும் செய்திகளைச் சுருங்கக் காண்போம்:

## வேதத்தின் உட்பொருள்

ஞானசம்பந்தப்பெருமான் இக்காலத்து வஞ்சித்தாழிசை என்று கூறப்பெறும் செய்யுளமைப்பில் தாம் பாடிய பதிகங்கள் இருசீரடியினவாதலின் அவற்றை அடியமைப்பை ஒட்டி, ஈரடிமேல் வைப்பு நாலடிமேல் வைப்பு எனப் பெயரிட்டாற்போல, இரு சீரடிப்பாடல் என்று பெயரிடாமல், அவற்றைத் 'திரு இருக்குக் குறள்' என்று பெயரிட்டமை அவருக்கு இருக்குவேதத்தோடு இருந்த தொடர்பைக் குறிக்கிறது. எனலாம். இருக்குவேதத்தில் இறைவனே உலகனைத்துக்கும் தந்தையாவான் என்ற கருத்து வந்துள்ளமையின், 'தந்தை மகன்' உறவில் இறைவனோடு தொடர்புகொண்ட ஞானசம்பந்தர் தம் கருத்து இருக்குவேதக் கருத்து என்ற நினைவில் இப்பதிகங்களுக்குத் 'திருவிருக்குக் குறள்' என்று பெயரிட்டுள்ளார்.

"உலகத்தந்தையானவனும் துன்பத்தைப் போக்குபவனும் ஆகிய ருத்ரனைக் குறித்த துதியைப் பகலிலும் இரவிலும் செய்வோம். அந்த ருத்ரன் சாலவும் மிக்கோன்; காண்டற்கு இனியவன்; நரையில்லாது என்றும் இளமையன்; மங்களகரமான இன்பத்தோடு கூடியவன். அவன் திருப்தியுறும் வகையில் நாம் அவனை அழைப்போமாக" (ரிக்வேதம்: மண்டலம் 6-சூக்தம் 49- ரிக் 10)

என்ற இருக்கின் கருத்தை நோக்குக. 'பகலும் இரவும் வழிபடவேண்டும்' என்ற இக்கருத்தை ஞானசம்பந்தப் பெருமானும்,

'........ பைங்கண் வெள்ளேற் றண்ணல் பாதம்,
இரவும் பகலும் பணிய இன்பம் நமக்கு அதுவாமே' (தே. 2201)

என்று குறிப்பிட்டிருப்பதும் நோக்கத்தக்கது. சாமவேத ருத்ரத்தின் முதல் மந்திரத்தில்,

"இடி விழுந்தால் ஏற்படும் சிதறல் போல இறப்புக்குமுன் உன் புலன்பொறிகள் சீர் கேடடைவதன்முன், பொன்னுர் மேனியனும் வெள்வித்தலைவனும் அழைக்கத்தகுந் தவனும் ஆகிய ருத்ரனுடைய உகப்பைத் தேடிக்கொள்" என்று கூறப்பட்ட கருத்தை ஞானசம்பந்தர் தேவாரத்தில்

'காலினேடு கைகளும் தளர்ந்துகாம நோய்தனுல்
ஏலவார் குழலினுர் இகழ்ந்துரைப்ப தன்முனம்
மாலினேடு நான்முகன் மதித்தவர்கள் காண்கிலா
நீலம்மேவு கண்டனுர் நிகழ்ந்தகாழி சேர்மினே!'

என்றுற்போல இரண்டாம் திருமுறையின் 97 ஆம் பதிகம் முழுவதும் (2518-2526) குறிப்பிடுகிறுர்.

வேதத்தின் அதர்வ சிரோபநிஷத்தில் குறிப்பிடப்படுவது திருநீறு என்பதனை உட்கொண்டு, ஞானசம்பந்தப்பெருமான் 'வேதத்தில் உள்ளது நீறு' (தே. 2179) என்று குறிப்பிட்டுள்ளார். யஜுர்வேதத்தின் 4 ஆம் காண்டம் 5 ஆம் ப்ரபாடகத் தில் ஸ்ரீருத்திரம் முதலாக யஜுர்வேத சாகைகள் எல்லாவற்றிலும் வரும் திருவைந் தெழுத்தை

'வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமசி வாயவே' (தே. 3320)

என்று நான்கு வேதங்களினும் காணப்படும் மெய்ப்பொருள் என்று ஞானசம் பந்தர் குறிப்பிடுகிறுர்.

ஞானசம்பந்தர் முதலியோர் இறைவனை 'நுண்ணியான் மிகப் பெரியான்' (தே. 661); 'பரியர்; நுண்ணியர்' (தே. 5508) என்று குறிப்பிடும் சொற்கள் சுவேதாசுவத ரோபநிஷத் மூன்றும் அத்தியாயத்தின் 20 ஆம் மந்திரத்தின் கருத்தை உட்கொண்டு சொற்றனவாம்.

'பொன் ஒப்பானை' (தே. 5268); 'பொன்னுர் மேனியனே' (தே. 7474) என்றுற்போல வரும் தொடர்கள், தைத்திரிய ஆரண்யகம் பத்தாவது ப்ரபாடகத் தின் கருத்தை உட்கொண்டன.

'அண்டம் ஆர் இருள்ஊடு கடந்து உம்பர்
உண்டுபோலும் ஓர் ஒண்சுடர்; அச்சுடர்
கண்டு இங்கு ஆர் அறிவார்? அறிவார்எலாம்
வெண்திங்கள் கண்ணி வேதியன் என்பரே' (தே. 6196)

என்ற திருக்குறுந்தொகை சுவேதாசுவதரோபநிஷத் 3 ஆம் அத்தியாயம் 8 ஆம் மந் திரக் கருத்தை எடுத்துரைப்பதாம்.

'ஏற்றேன் பிறதெய்வம் எண்ணு நாயேன்
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்' (தே. 6724)

என்ற திருத்தாண்டகத் தொடர் அதர்வ சிகோபநிஷத் 2 ஆம் மந்திரக் கருத்தை உட்கொண்டது. சாமவேதத்தைச் சார்ந்த சாந்தோக்கிய ப்ராம்மணத்துள் வரும் ப்ரபத மந்திரத்தில் (ப்ரபாடகம் 2: கண்டம் 4: மந்திரம் 2,3), "நீ வானவர்களுக் குள் அந்தணன். நான் மனிதர்களுக்குள் அந்தணன். அந்தணனுகிய யான் அந்தண னுகிய உன்னை அடைக்கலமாக அடைகிறேன்" என்ற கருத்தை உட்கொண்டு,

வேதியா! வேத கீதா! விண்ணவர் அண்ணு! (தே. 4768)

முதலிய தேவாரச் சொற்றொடர்கள் அமைந்துள்ளன.

"ஏ ருத்ரா! நீ பிறப்பற்றவன் என்பதனுல் பிறப்பில் பயந்தவனுகிய நான் உன்னைச் சரணம் அடைகிறேன். உன் தெற்கு நோக்கிய திருமுகத்தால் என்னை நாடோறும் காப்பாற்று" என்ற சுவேதாசுவதரோபநிஷத் நான்காம் அத்தியாயம் 21 ஆம் மந்திரக் கருத்து,

'ஒரு காலத்து ஒன்ருகி நின்ருர் போலும்.....
பிறப்பு இடும்பை சாக்காடு ஒன்று இல்லார் போலும்' (தே. 6542)
முதலிய தேவாரப்பாடல்களில் எடுத்தோதப்பட்டுள்ளது.

சிவபெருமானை நாவுக்கரசர் 'எண்குணத்தார்' (தே. 6416) எனவும், சுந்தரர் 'இறையவனை, மறையவனை, எண்குணத்திஞனை' (தே. 7641) எனவும் குறிப்பிடும் தொடர்களுக்கு உரிய விளக்கத்தை, சாந்தோக்கிய உபநிஷத் எட்டாம் அத்தியாயம் முதல் காண்டம் ஐந்தாம் மந்திரத்தில்,

"இந்த ஆன்மா பாவமற்றவர்; நரையற்றவர்; மரணமற்றவர்; சோகமற்றவர்; பசியற்றவர்; தாகமற்றவர்; நிறைவேறும் விருப்பமுடையவர்; எண்ணிய எண்ணியாங்கு முடிப்பவர்" என்று காண்கிறோம்.

'ஓதி யாரும் அறிவார்இலை ஓதி உலகுஎலாம்
சோதியாய் நிறைந்தான்; சுடர்ச்சோதியுள் சோதியான்' (தே. 1530)
என்று சம்பந்தர் குறிப்பிடும் இறைவனுடைய ஒளியானது, 'ப்ருஹதாரண்யகம்: அத்தியாயம்-4, ப்ராம்மணம்-4, மந்திரம்-16'

"ஒளிகளுக்கெல்லாம் ஒளியாக, அழிவற்றவராக அவர் உபாசிக்கப்படுகிருர்" என்று குறிப்பிடும் கருத்தாகும்.

"அவர் பெண் ஆண் அலிஅல்லர்" என்று 'சுவேதாசுவதரோபநிஷத்: 5 ஆம் அத்தியாயம்-10 ஆம் மந்திரம்' குறிக்கும் கருத்து,

'பெண்ணலல்லை; ஆணலல்லை பேடுமல்லை' (தே. 6710)
என்று நாவுக்கரசரால் திருத்தாண்டகத்தில் குறிக்கப்படுகிறது.

"விறகில் தீயினன், பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்" (தே. 6132)
என்பது,

'சுவேதாசுவதரோபநிஷத்: அத்தியாயம்-1 மந்திரம்-15'இல் "எள்ளில் எண்ணெய், தயிரில் நெய், நீரில் பெருக்கு, அரணியில் நெருப்பு இவ்விதம் இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறுன். அவனைச் சத்தியத்திஞலும் தவத்திஞலும் காணுகிருர்கள்" என்ற கருத்தை உட்கொண்டது.

இறைவன் அட்டமூர்த்தமாய் உள்ளான் என்ற செய்தி தேவாரத்தில் பல இடங்களில் காணப்படுகிறது (தே. 111,571,1984,2743,3342,4719,5281,7174,7320, 8054). இறைவன் அஷ்டமூர்த்தமாக உள்ள செய்தி வேதத்தில் சொல்லப்படுவதே. ரிக் வேதத்தைச் சேர்ந்த கௌஷீதகி ப்ராம்மணத்தில் 6:1:52 இல் இறைவன் அஷ்டமூர்த்திகளாக விரிந்துள்ள விரிவும், தைத்திரீய ப்ராம்மணமாகிய மந்திர ப்ரச்னத்தில் 'பவாய தேவாய சுவாஹா' என்பது முதலாக அஷ்டமூர்த்திகளின் வழிபாடும் என இவை கூறப்பட்டுள்ளன.

'அட்ட வீரட்டம்' என்று கூறப்படும் இறைவனுடைய எட்டு வீரச் செயல்களில், ஐந்து

| | |
|---|---|
| தக்கன் வேள்வியை அழித்தமை | தைத்திரீய சம்ஹிதை 2 ஆம் காண்டம் - 6 ஆம் ப்ரச்னம்- 8 ஆம் அந்வாகத்திலும், |
| முப்புரங்களை அழித்தமை | 6 ஆம் காண்டம்-2 ஆம் ப்ரச்னம்- 3 ஆம் அந்வாகத்திலும், |
| பிரமனை அழித்தமை | ஐதரேயப்ராஹ்மணம்-13 ஆம் அத்தியாயம்-9 முதல் 11 ஆம் கண்டம் முடிய உள்ள பகுதியிலும், |

| | |
|---|---|
| யானைத்தோலைப் போர்த்தமை | தைத்திரீய சம்ஹிதை முதல் காண்டம் - 8 ஆம் ப்ரச்னம் 6 ஆம் அந்வாகத்திலும், |
| காலனை வென்றமை | வேதத்தில் பல இடங்களிலும் காணப்படும் 'ம்ருத்யுஞ்ஜயன்' என்ற பெயரிலும் |

வேதத்தில் காணப்படுகின்றன. நாவுக்கரசர் அருளிய 'நின்ற திருத்தாண்டகம்' ஸ்ரீருத்ரத்தைத் தழுவியது.

'எழும் சுடராய் எம் அடிகள் நின்ற வாறே!' என்று 'நின்ற திருத்தாண்டக'த்தின் பல பாடல் ஈற்றிலும் வரும் தொடர் இறைவனுடைய மஹாக்நி ஸ்வரூபத்தை உட்கொண்டு சொற்றதாகும். (தைத்திரீய சம்ஹிதை: 5 ஆம் காண்டம் - 4 ஆம் ப்ரபாடகம் - 3 ஆம் அந்வாகம்; 7 ஆம் ப்ரபாடகம் - 3 ஆம் அந்வாகம் முதலியன).

இவற்றை நோக்க, தேவாரம் என்னும் திருப்பாடல்கள்,

'மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள்
நிற்கப் பாடி (நம்) நெஞ்சுள் நிறுத்திய' (நாலா. 945)

தெய்விகப் பனுவல்கள் என்பது தெளியப்படும்.

## சைவாகமம் முதலியவற்றுச் செய்திகள்

அ) காரணாகமம் முதலியவை விதிப்பன

சைவ ஆகமங்கள் இருபத்தெட்டனுள் ஒன்றாகிய காரணாகமத்தில் 141 ஆம் படலமாகிய மகோற்சவவிதிப் படலத்தில் 81 முதல் 83 முடிய உள்ள சுலோகங்களில் ஞானசம்பந்தருடைய வரலாற்றினை உற்சவமாகச் செய்யும் முறை காணப்படுகிறது. அவை "பிரமபுரத்தில் அந்தணர் மரபில் அவதரித்த புதல்வனுக்கு அன்போடு உமாதேவி பால்கொடுத்த திருவிழாவை நிகழ்த்துவது உமாதேவிக்கு உவகை தருவதாகும். சமணர்களைச் சமணாந்தகர் ஆகிய ஞானசம்பந்தர் வாதிட்டு வென்ற உற்சவத்தையும் நிகழ்த்த வேண்டும். இஃது ஆறாம் நாள் உற்சவமாதல் வேண்டும்" என்ற கருத்தைத் தெரிவிக்கின்றன.

காரணாகமத்தை ஒப்ப மற்றொரு மூலஆகமமாகிய அம்சுமதாகமமும் ஞானசம்பந்தருடைய சமணவாத வெற்றியை உற்சவமாகக் கொண்டாட வேண்டுவதனை விளக்கிக் கூறுகிறது. க்ஷபணவாதந விதிப் படலத்தில் கீழ்க்கண்ட முறையில் விழா நிகழ்ச்சி விவரிக்கப்பட்டுள்ளது :

"க்ஷபண த்வேஷி (-சம்பந்தர்) மூர்த்தியைச் சிவிகையில் எழுந்தருளச் செய்து, அம்மன்கோயிலை அடைந்து அங்குச் சம்பந்தருக்குப் பாற்சோறு நிவேதனம் செய்ய வேண்டும். ஸ்தோத்ர பாடகராகிய ஓதுவாரை அழைத்து ஞானசம்பந்தருடைய தமிழ்ப்பாடல்களைப் பாடச்செய்யவேண்டும். நிவேதனம் செய்யப்பட்ட பாற்சோற்றை ஓதுவாருள்ளிட்ட பக்தர்களுக்கு வழங்கவேண்டும். ஞானசம்பந்தர் படிவத்தை நன்கு அலங்கரித்துத் திருவீதிகளில் வலமாக எழுந்தருளுவித்து இறைவனுக்கு எதிரே நிறுத்தவேண்டும். ஞான வைராக்கிய பக்தியில் சிறந்த அன்பர்கள் சூழ்ந்திருக்கும் அவ்விடத்தில், ஓதுவாரைக்கொண்டு ஞானசம்பந்தர் வரலாற்றைச் செவிமடுக்கும் வாய்ப்பினை உண்டாக்கவேண்டும். ஞானசம்பந்தர் சரித்திரத்தைப் பாடிய ஓதுவாரை ஆடைமுதலியன அளித்துக் கௌரவிக்கவேண்டும். விழாமுடிவில் சமணர்களைக் கழுவேற்றிய நிகழ்ச்சியை உற்சவவடிவில் கொண்டாடவேண்டும்." [T.745 பக். 190-192] இச்செய்திகள் மிகப்பழமையான இவ்வாகமங்களில் பின் இணைக்கப்பட்ட செய்திகளாம்.

ஆ) சௌந்தர்யலகரி பாடுவது:

ஞானசம்பந்தரைப் பற்றி 9 ஆம் நூற்றுண்டினராகிய ஆதிசங்கரரும் குறிப்பிட்டுள்ளார்; தாம் அருளிச்செய்த சௌந்தர்யலகரியின் 75 ஆம் சுலோகத்தில் "மலைமகளே! உன் திருமுலைப்பாலை இதயத்திலிருந்து வெளிப்படும் அமுதவெள்ளம் போலவும், நாமகளே பால் வடிவில் வந்தது போலவும் நான் நினைக்கிறேன். ஏனெனில், நீ கருணையால் ஈந்த அப்பாலைப் பருகித் தமிழ்ச்சிறுவன் கவிகளுக்குள் மேதக்கவனுகி விட்டான்" என்ற பொருளமைத்து ஞானசம்பந்தருடைய அருட்கவிகளை வியந்து பேசுகிறுர். இந்தச் சுலோகத்தின் தமிழாக்கப்பாடல் முன்னரே (பக். 24) குறிப்பிடப் பட்டுள்ளமை காண்க.

இ) சிவானந்தலகரி பாடுவது

ஞானசம்பந்தரையும் அவர் பாடல்களையும் நன்கு உணர்ந்த ஆதிசங்கரர் ஏனைய இருவர் பாடல்களையும் தம் காலத்தில் செவிமடுக்கும் வாய்ப்பினைப் பெற்றமையால் அவர்கள் பாடற்கருத்துக்கள் பலவற்றையும் தாம் அருளிய சிவானந்தலகரி முதலிய சிவத் தோத்திரங்களில் குறிப்பிட்டுள்ளார்.

"சிறுநலன்களை நல்கவல்லனவாயுள்ள ஆயிரக்கணக்கான சிறு தெய்வங்களை நான் வழிபடேன்; அரிபிரமர்க்கு எட்டாச் சிறப்பினை உடைய உன் திருவடிகளில் கொள்ள வேண்டிய பக்தியையே நான் உன்னிடம் இரக்கிறேன்" என்ற கருத்தமைந்த சிவானந்தலகரியின் 4 ஆம் தோத்திரம்,

'சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்;
சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றேம்!' (தே. 7220)

என்ற திருத்தாண்டகக் கருத்தை உட்கொண்டது.

அந்நூலின் 7 ஆம் சுலோகத்தில்,

"என்மனம் உன்திருவடியில் ஈடுபடுக; வாய் நின்புகழ் பாடுக; கைகள் உன்னை அர்ச்சிக்க; செவிகள் நின்புகழ் கேட்க; புத்தி உன்னையே தியானிக்க; கண்கள் உன்வடிவழகில் ஈடுபடுக. இச்செயல்களை விடுத்துப் பல நூல் பயிறலால் பயனென்?" என்றமைந்த கருத்து,

'தலையே நீ வணங்காய்' என்ற நாவுக்கரசர் 9 ஆம் பதிகத்தையும் (தே, 4251-4262), 'விடையின்மேல் வருவானை' என்ற சுந்தரர் 86 ஆம் பதிகத்தையும் (தே. 8107-8115), 'நீ நாளும் நன்னெஞ்சே நினைகண்டாய்' என்ற சம்பந்தர் திருப்பாட்டையும் (தே. 1908) உட்கொண்டுள்ளது.

அந்நூலின் 10 ஆம் பாடலில்,

"யான் மனிதன் தேவன் பறவை விலங்கு கொதுகு புழு இவை முதலிய பலபிறவிகள் எடுக்க நேரினும், உன் திருவடித் தாமரைகளைத் தியானிக்கும் பெருவெள்ளத்தில் திளைக்கும் உள்ளம் படைக்கப்பெறின், அவை பற்றிக் கவலையுறேன்" என்று அமைந்துள்ள கருத்து,

'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா! உன்னடி என்மனத்தே
வழுவாது இருக்க வரந்தர வேண்டும்'

என்ற நாவுக்கரசரின் திருவிருத்தக் கருத்தை ஒத்ததாம்.

அந்நூலின் 82 ஆம் பாடலில்,

"திருமால் சிவபெருமானுக்கு அம்பாகவும், இடபமாகவும், தேவியாகவும், திருவடி தேடும் பன்றியாகவும், தாருகவனத்துக்கு அவர் பிக்ஷாடனராய்ச் சென்றபோது தோழியாகிய மோகினியாகவும், நடனமாடும்போது மத்தளிகராகவும்,

திருவடிகளில் கண்ணிடந்து அர்ச்சித்த அடியாராகவும், அவர் திருமேனியில் பாதியைத் தாம் பெற்றவராகவும் இருப்பதனால் அவரினும் மேதக்க சான்றவர் யாவர் உளர்?" என்று ஆதிசங்கரர் அமைத்துள்ள கருத்துக்களில் பலவும் தேவாரங்கள் குறிப்பிடுவனவாம். (தே. 2004,6913,4567,9,4312 முதலியன)

அந்நூலின் 63 ஆம் பாடலில்,
கண்ணப்ப நாயனாரைப் பற்றி, "நடந்து தேய்ந்த செருப்பு சிவபெருமான் திருமுடியைத் தீண்ட, வாய் கொப்புளித்த நீர் புனித தீர்த்தமாக, கடித்துச் சுவைபார்த்த புலாலுணவின் பகுதி புதிய நிவேதனமாகப் பக்தி ஒன்றே பற்றுக்கோடாக வழிபட்ட அறியாமையை உடைய வேடன் பக்தர்களுக்குள் மேதக்கவனாகிவிட்டான் என்றால், பக்தி எதனைத்தான் செய்ய இயலாது?" என்று குறிப்பிடும் கருத்து,

"காப்பதோர் வில்லும் அம்பும் கையதுஓர் இறைச்சிப் பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலசம் ஆட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய குருதிநீர் ஒழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கைவீ ரட்டனாரே" (தே. 4651)

என்றாற்போலத் தேவாரம் குறிப்பிடும் கருத்துக்களை நிகர்ப்பதாகும்.

அந்நூல் 89 ஆம் பாடலில், திருநாவுக்கரசர் குறிப்பிடும்
'கல்லினால் எறிந்து கஞ்சிதாம் உண்ணும் சாக்கிய(ன்)னார்' (தே. 4650) வரலாறு இடம் பெறுகிறது. சுந்தரர் தேவாரமும் (7798) சாக்கிய நாயனாரைப் பற்றிக் குறிப்பிடுவதும் காண்க. அந்நூல் 22 ஆம் பாடலில் "என் உள்ளத்தைக் கவர்ந்து நீ கள்வர் தலைவனாகிவிட்டாய்" என்று குறிப்பிடும் கருத்து,
'என் உள்ளம் கவர் கள்வன்' (தே.1) என்ற தொடரை நினைவுறுத்துகிறது.

### ஈ) சிவபுஜங்கம் துதிப்பது

சங்கரர் தாம் அருளிய சிவபுஜங்கத்தின் 13 ஆம் சுலோகத்தில்,
"கயிலை மலையானே! மனைவி, மகன், தந்தை ஆகியோருக்குத் துரோகம் செய்தவருக்கே அருள் பாலிக்கும் நீ யாருக்கும் எனைத்தானும் மனத்தாலும் மாறு செய்யாத எனக்கு யாங்கனம் அருளுவையோ?" என்றமைத்துள்ள கருத்து, இல்லையே என்னாத இயற்பகை, செங்காட்டங்குடி மேய சிறுத்தொண்டர், வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த சண்டிப் பெருமான் என்று திருத்தொண்டத் தொகையில் போற்றப்படும் அடியார்களுடைய செயல்களை உட்கொண்டு எழுந்ததாகும்.

### உ) பிற வடநூல்கள் பாடுவன

17 ஆம் நூற்றாண்டினரான நீலகண்ட தீக்ஷிதர் இயற்றிய சிவலீலார்ணவத்தின் 22 ஆம் சருக்கத்தில் ஞானசம்பந்தர் முருகனுடைய திருவவதாரமாகக் கூறப்பட்டுள்ளார்; அவருடைய மதுரை விஜயம் கூறப்பட்டுள்ளது.

அகஸ்திய பக்த விலாசம் ஞானசம்பந்தர் முதலிய மூவர் வரலாற்றையும் கூறுகிறது. உபமந்யு பக்த விலாசமும் அது. ஹாலாஸ்ய மாஹாத்மியமும் சம்பந்தருடைய மதுரை விஜயம் பற்றிக் கூறுகிறது. சிவரஹஸ்யம் அம்சம் 9: அத்தியாயம் 18-21 இல் சுந்தர பக்த சரித்திரமும், அத். 46 இல் சம்பந்தர் சரித்திரமும் வாகீசர் சரித்திரமும் கூறப்பட்டுள்ளன.

# திருமுறைகளும் தமிழ்இலக்கியமும்

தொல்காப்பியத்தில் சிவபெருமான்வழிபாடு வெளிப்படையாகக் கூறப்படவில்லை. எனினும் சங்க இலக்கியத்தில் சிவபெருமான் உருவவழிபாடும் அவன் செயல்களும் கூறப்பட்டுள்ளன.

*சங்க இலக்கிய வாயிலாக அறிவன*

| | |
|---|---|
| சிவபெருமான் கொன்றைப் பூவை அணிபவன். | அகநா. கடவுள் வாழ்த்து |
| மார்பில் பூணூல் அணிபவன். | அகநா. கடவுள் வாழ்த்து |
| நெற்றியில் இமையாக் கண்ணை உடையவன். | அகநா. கடவுள் வாழ்த்து |
| கையில் கணிச்சி, வேல், முத்தலைச் சூலம் இவற்றைக் கொண்டவன். | அகநா. கடவுள் வாழ்த்து |
| செவ்வான் அன்ன மேனியை உடையவன். | அகநா. கடவுள் வாழ்த்து |
| பிறையை ஒத்த எயிற்றினன். | அகநா. கடவுள் வாழ்த்து |
| நெருப்பினை ஒத்த சிவந்த சடையன். | அகநா. கடவுள் வாழ்த்து |
| புலித்தோலை அணிபவன். | அகநா. கடவுள் வாழ்த்து |
| வேதம் ஓதும் மிடற்றை உடையவன். | அகநா. கடவுள் வாழ்த்து |
| பார்வதியைத் தன் உடலில் ஒரு பாகமாகக் கொண்டவன். | புறநா. கடவுள் வாழ்த்து |
| பிறையை நெற்றியில் அணிந்தவன். | புறநா. கடவுள் வாழ்த்து |
| விடக்கறையைக் கழுத்தில் கொண்டவன். | புறநா. கடவுள் வாழ்த்து |
| காளையை ஊர்தியாக உடையவன். | புறநா. கடவுள் வாழ்த்து |
| காளையையே கொடியிலும் கொண்டவன். | புறநா. கடவுள் வாழ்த்து |
| அவன் எருக்கம் பூவையும் பேணுபவன். | புறநா. 106 |
| ‘பயில் இருள், காடு அமர்ந்து ஆடிய ஆடலன்’ | பதிற். கடவுள் வாழ்த்து |
| ‘நுண்ணூல், சிரந்தை இரட்டும் விரலன்’ | பதிற். கடவுள் வாழ்த்து |
| அவன் காலக் கடவுள். | பதிற். கடவுள் வாழ்த்து |
| அவன் தாள்நிழலில் மூவகை உலகமும் முகிழ்த்தன. | ஐங். கடவுள் வாழ்த்து |
| படுபறை பல இயம்பக் கொடுகொட்டி ஆடியவன். | கலித். கடவுள் வாழ்த்து |
| நீறணிந்து பண்டரங்கக்கூத்து ஆடியவன். | கலித். கடவுள் வாழ்த்து |
| தலை அங்கைக் கொண்டு காபாலக்கூத்து ஆடியவன் | கலித். கடவுள் வாழ்த்து |
| கங்கையைச் சடையில் கரந்தவன். | கலித். கடவுள் வாழ்த்து |
| பூதப்படையை உடையவன். | கலித். கடவுள் வாழ்த்து |
| அவன் கல்லால மரத்தில் தன் கமண்டலத்தைத் தொங்கவிட்டிருப்பவன். | கலித். 133-3,4 |
| அவன் முருகனுக்குத் தந்தை. | பரி. 5:13 |
| ‘ஆதி அந்தணன் அறிந்து பரி கொளுவ, வேதம் மாபூண் வையத்தேர் ஊர்ந்து’ நாகம் நாணாகவும் மேரு வில்லாகவும் கொண்டு, மூவகை ஆர்எயிலைத் தீயாகிய அம்பால் அழித்தவன். | பரி. 5: 22-26 |

இவையே சங்க இலக்கியத்தில் சிவபெருமானைப் பற்றிய குறிப்புக்கள்.

சிவனுக்கு யானைத்தோல் போர்வை

'ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரிஉடுத்துக்
கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்ருயால்' (சிலப். 12:8)

என்ற சிலப்பதிகார வேட்டுவவரிப் பாடல் கொற்றவைக்கு உடைமையாக்கியுள்ள யானையின் தோலைச் சிவபெருமானும் போர்த்தியவர் என்று கொள்ளலாம்.

## தேவார வாயிலாக அறிவன

சிவபெருமான்

| | |
|---|---|
| அந்தகனை அழித்தவர். | தே. 7198 |
| ஆமை ஓடும் பன்றிக்கொம்பும் அணிந்தவர். | தே. 2 |
| எலும்பை மாலையாகச் சூடியவர். | தே. 5510 |
| ஒருகாதில் தோடும், ஒருகாதில் குழையும் அணிந்தவர். | தே. 1112 |
| காமனை நெற்றிக்கண்ணல் நீறு ஆக்கியவர். | தே. 886 |
| காலனை உதைத்தவர். | தே. 561 |
| குன்றங்களை எல்லாம் உடையவர். | தே. 3436 |
| கையில் தீ ஏந்தியவர். | தே. 5496 |
| கோவணம் ஒன்றே ஆடையாக உடையவர். | தே. 6273 |
| சலந்தரனைக் கொன்றவர். | தே. 207 |
| சிங்கம் புலி யானை ஈருரி போர்த்தவர். | தே. 8246 |
| செம்பட்டினை உடுத்தவர். | தே. 4361 |
| தக்கன்வேள்வியை அழித்தவர். | தே. 1407 |
| திரிபுரத்தைச் சிரிப்பினல் எரித்தவர். | தே. 3102 |
| திருமாலும் பிரமனும் காண முடியாதபடி அழற்பிழம்பாய் நின்றவர். | தே. 9 |
| திருமாலை அம்பாகக் கொண்டவர், வாகனமாகக் கொண்டவர், தேவியாகக் கொண்டவர். | தே. 2004, 6913, 4567 |
| நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கமேறி நற்கனகக்கிழி தருமிக்கு அருளியவர். | தே. 7011 |
| பஞ்சவடி தரித்த மார்பினர். | தே. 7146 |
| பட்டினையே மேலாடையாக அணிந்தவர். | தே. 4222 |
| பாம்பை அணியாகப் பூண்டவர். | தே. 2 |
| பார்வதியின் கைகளால் தம் கண்கள் புதைக்கப்பட்டவர். | தே. 4310 |
| பிரமன்சிரத்தில் பிச்சை ஏற்றவர். | தே. 2621 |
| பிரமன்சிரத்தைக் கொய்தவர். | தே. 6455 |
| மலைமகளை மார்பத்து அணைத்தவர். | தே. 6470 |
| மாலுக்குச் சக்கரம் ஈந்தவர். | தே. 202 |
| மான்கன்றைக் கையில் ஏந்தியவர். | தே. 7148 |
| யானையைக் கொன்று அதன்தோலை உரித்துப் போர்த்தவர். | தே. 13 |
| விசயன்பின் வேடனுய் வந்தவர். | தே. 7081 |
| வீணை வாசிப்பவர். | தே. 7203 |

இவை போன்ற செய்திகள் மூவர் திருமுறைகள் வாயிலாக அறியப்படுவனவாம். இவையாவும் பிற்கால நூல்கள் பலவற்றிலும் இயைபு நோக்கிக் குறிப்பிடப் பட்டுள்ளன.

# தேவாரம் திவ்வியப் பிரபந்தங்களிடையே ஒற்றுமை

ஆழ்வார்கள் பன்னிருவருள் முதலாழ்வார்களாகிய பொய்கையார் பூதத்தார் பேயார் என்ற மூவரும் நீங்கலான ஒன்பதின்மரும், திருமுறை அருளிய மூவருக்கும் ஒத்த காலத்தவராகவோ பிற்பட்ட காலத்தவராகவோ உள்ளனர். முதலாழ்வார் மூவரும் அருளியன வெண்பாயாப்பில் அமைந்த மூன்று அந்தாதிப் பிரபந்தங்களே. ஆழ்வாருள் ஏனையோர் தேவாரமுதலிகளைப் போல் பல இசைப்பாக்களை அருளியுள்ளனர். நான்முகன் திருவந்தாதி, பெரிய திருவந்தாதி என்பன வெண்பாக்கள். திருவாய்மொழியும் திருவாசிரியமும் அந்தாதித் தொடையான் அமைந்தன. திருச்சந்தவிருத்தம் பல தனிப்பாடல்களின் தொகுப்பு. ஆழ்வார்கள் அருளிய ஏனைய பதிகங்களில் பெரும்பாலன இம் மூவர் பதிகங்களில் பெரும்பாலன போலவே பதிகத்தின் முதற்பாடலின் ஈற்றுச்சீர்கள் சில ஏனைய பாடல்களுக்கும் ஈற்றுச்சீராக அமையப் பாடப்பெற்றனவாம்.

நாவுக்கரசர் திருத்தாண்டகத்தின் 66 ஆம்பதிக ஈற்று அரையடி 'சேராதார் நன்நெறிக்கண் சேராதாரே' என்பது. இம்முதற்பாடல் போலவே, இப்பதிகத்தின் ஏனைய ஒன்பது பாடல்களும் 'சேராதார்...... சேராதாரே' என்றே ஈற்றுப்பகுதி பெற்று அமைந்துள்ளன. இது போலவே, பெரிய திருமொழியின் 4:10 ஆம் பதிகத்தின் முதற்பாடல் 'திருவெள்ளி யங்குடி அதுவே' என்று முடிகிறது. அப்பதிகத்தின் திருக்கடைக் காப்பு நீங்கலான ஏனைய எட்டுப்பாடல்களும் 'வெள்ளி யங்குடி அதுவே' என்றே ஈற்றடியின் அரையடி முடிகின்றன.

இங்ஙனம் காணப்படும் பதிகங்கள் இருதிறத்தும் பலவாகியுள்ளன. பிற்காலத்து நூல்செய்தவர்களும் ஒவ்வொரு தலைப்பில் அமையும் பல பாடல்களிலும் முதற்பாடல் ஈற்றடியின் சில சீர்கள் ஏனைய பாடல்களின் ஈற்றடியிலும் வருமாறு அமைந்துள்ளமைக்கு இத்திருமுறைகளே வழிகாட்டியாக உள்ளன. இந்நிலையினைப் பிள்ளைத் தமிழ், சதகம் முதலியவற்றில் மிகுதியாகக் காண்கிறோம். சென்ற நூற்றாண்டினரான இராமலிங்க சுவாமிகள் பாடிய பலபதிகங்களிலும் இம் முறையைக் காணலாம்.

இனி, இறைவனைப் பற்றிக் கூறுமிடத்தும் அடியார்களைப் பற்றிப் பேசுமிடத்தும், இயற்கை வருணனைகளை அமைக்குமிடத்தும் இத்திருமுறைகள் குறிப்பிடும் பல செய்திகள் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திலும் அமைந்திருக்கும் சீரினைக் காணலாம்.

## 1. இறைமை பற்றிய செய்திகள்

இறைவன் எல்லா உலகிற்கும் அந்தமும் ஆதியுமாக உள்ளான் என்ற கருத்து,

'அந்தமும் ஆதியும் ஆகிய அண்ணல்' தே. 415

'அந்தமாய் ஆதியாகி...... ஆனாய்' நாலா. 1306

என்றும்,

இறைவன் ஆயிரம் பேர்களை உடையவன் என்னும் கருத்து ,

'ஆயிரம்பேர் மிக உடையார்' (2490)

'ஆயிரம்பேர் உகந்தானும்' (4208)

'பேர் ஆயிரங்கள் ஏந்தும் பெரியவன்காண்' (6908)

என்று தேவாரத்தில் காணப்படுவது போலவே,

'ஆயிரம் பெயரால் அமரர் சென்றிறைஞ்ச' (1413)

'பேர்ஆயிரம் உடைய பேராளன்' (1653)

'ஆயிரம் பேரானை' (1981)

'பேராளன் பேரான பேர்கள் ஆயிரங்களுமே' (2006)

என்று நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் காணப்படுகிறது என்றும்,

இறைவன் நான்மறை ஆறங்கம் ஆயினன் என்ற கருத்து,

'நான்மறையோடு ஆறங்கம் ஆயினன்காண்' தே. 6560
'அங்கம் ஆறும் வேதம் நான்கும் ஆகிநின்று' நாலா. 766

என்றும்,

இறைவன் நான்மறை ஆறங்கம் ஓதினன் என்ற கருத்து,

'வேதத்தோடு ஆறங்கம் சொன்னார்போலும்' தே. 6466
'வேதங்கள் நான்கும்..... அங்கம் ஆறும் கண்டானை' நாலா. 1096
'வேதம் நான்கும் ஓதினாய்' நாலா. 770

என்றும்,

இறைவன் சந்தோக சாமத்தைப் பெரிதும் உவந்து பாடுபவன் என்ற கருத்து,

'சந்தோக சாமம் ஓதும் வாயானை' தே. 6756
'சாமவேதம் பெரிது உகப்பானை' தே. 7864

என்று காணப்படுவது போலவே,

'சந்தோகன், பௌழியன், ..........சாமவேதி' நாலா. 1396
'சந்தோகா! பௌழியா! ........ சாமவேதியனே! நாலா. 1609
'சாமவேத கீதனாய சக்ரபாணி' நாலா. 765

என்று காணப்படுகிறது என்றும் அறிகிறோம்.

இறைவன் மூவராகிய மூர்த்தி என்ற கருத்தும் அவன் மூவரினும் முதலானவன் என்ற கருத்தும்,

'மூவனாய் முதலாய்' தே. 5558
'மூலம் ஆகிய மூவர்க்கும் மூர்த்தியை' தே. 5815
'மூவரின் முதலாகிய மூர்த்தியை' தே. 5860
'மூவுருவத்து ஓர்உருவாய் முதலாய் நின்ற' தே. 7039
'சிவனாகித் திசைமுகனாய்த் திருமாலாகி' தே. 7042
'மூவன்காண் மூவருக்கும் முதலானான்காண்' தே. 7100
'காரணனை நாரணனை கமலத்தோனை' தே. 7047

என்று திருமுறைகளிலும்

'மூவருமாய் முதலாய மூர்த்தி' நாலா. 1249
'மூவராகிய ஒருவனை' நாலா. 1157
'மூவரின் முதல்வனாய ஒருவனை' நாலா. 2037
'ஏருருவில் மூவருமே........ சோதி' நாலா. 2053
'முதலாவார் மூவரே, அம்மூவ ருள்ளும்
முதலாவான் மூரிநீர் வண்ணன்' நாலா. 2096
'திருமால் நான்முகன் செஞ்சடையான் என்றிவர்கள்
பெருமான் தன்மையை யாரறிகிற்பார்' நாலா. 3477

என்று பிரபந்தத்திலும் இடம்பெற்றுள்ளன.

இறைவன் மூத்தீ, நான்மறை, ஐவேள்வி, ஆறங்கம், ஏழிசை, எட்டுத்திசை என்பனவாக உள்ளான் என்ற கருத்தினை,

'மணம் திகழ் திசைகள் எட்டும் ஏழிசையும் மலியும் ஆறங்கம் ஐவேள்வி
இணைந்த நால்வேதம் மூன்று எரி இரண்டு பிறப்பென ஒருமையால்' தே. 4116

'இசைஏழ் ஆறங்கம் ஐந்துவளர் வேள்வி நான்மறைகள்
மூன்று தீயும், சிந்தனை செய்து' நாலா. 1139
'முத்தீயர் நால்வேதர் ஐவேள்வி ஆறங்கர்
ஏழின் இசையோர்' நாலா. 1221
'நால்வேதம் ஐந்துவேள்வியோடு ஆறங்கம்' நாலா. 1244
என இரண்டு நூல்களும் குறிப்பிடுகின்றன.

இறைவன் ஆண் பெண் அலியாகவும் அல்லனாகவும் உள்ளான் என்ற கருத்து,

'பெண்ணவனை, ஆணவனை, பேடு ஆனானை' தே. 6860
'ஆணொடுபெண் அலி அல்லர் ஆனார் போலும்' தே. 7002

'ஆணினோடு பெண்ணுமாகி' நாலா. 777
'ஆண்அல்லன் பெண்ணல்லன் அல்லா அலியும் அல்லன்'. நாலா. 2838
என்று இருநூல்களிலும் காணப்படுகிறது.

இறைவன் ஐம்பூதங்களாகவும் உள்ளான் என்ற கருத்தினை,
'மண் நீர் தீ வெளி கால்........ உரு ஆனவனே' தே. 7519
'பார், ஏற்றுநீர், தீ, காலும், மேலைவிண்,.......... ஆனான்' தே. 571

'பாரும் நீர்எரி காற்றினோடு ஆகாசமும் இவை ஆயினான்' நாலா. 1024
'பாரும் நீ, வானும் நீ, காலும் நீ, தீயும் நீ,
நீரும்நீ யாய்நின்ற நீ' நாலா. 2595
என இரு துதிநூற்றொகுப்பும் சாற்றுகின்றன.

இறைவன் சுவைதரும் இனிய பொருள்கள் பலவற்றின் தொகுப்பாக உள்ளான் என்ற கருத்தினை,
'என் உள்ளத்துள்ளே ஊறும், அத்தேனை அமுதத்தை
ஆவின் பாலை அண்ணிக்கும் தீங்கரும்பை' தே. 6797

'தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகி' நாலா. 3038
'தேனே பாலே கன்னலே அமுதே' நாலா. 3734
என இரண்டன்கண்ணும் காண்கிறோம்.

இறைவனை விலை உயர்ந்த மணிகளாக,
'பொன் ஆனாய், மணி ஆனாய், பொரு கடல்வாய் முத்து ஆனாய்' தே. 4300
'முத்தினை, மணியை, பொன்னை' தே. 4885
'முத்தினை, மணியை, பவளத்து ஒளிர் தொத்தினை' தே. 5870
'முத்தினை, மணிதன்னை, மாணிக்கத்தை' தே. 6551

'முத்தினை மணியை மணி மாணிக்க, வித்தினை' நாலா. 1855
'பொன்னப்பன் மணியப்பன் முத்தப்பன்' நாலா. 3257
என இருதிறநூல்களும் குறிக்கின்றன.

இறைவன் முரண்பட்ட கருத்துக்களாகவும் உள்ளான் என்ற கருத்து,
'நுண்ணியான், மிகப்பெரியான்' தே. 661
'நெடியாய், குறியாய்' தே. 1690
'செய்யானை, வெளியானை, கரியான் தன்னை' தே. 6856

'எளியானை......... அரியான் தன்னை' தே. 6923
'பெருநலமும் குற்றமும் ...... தாமே ஆகி' தே. 7174
என்று தேவாரத்தின்கண்ணும்,

'சிறியன் பெரியன்' நாலா. 1055
'மிகப்பெரியன் நுண்நேர்மையினாய்' நாலா. 1386
'சேயன் அணியன்' நாலா. 1045
'பாவமும் அறமும்........... எந்தை' நாலா. 1296
'புண்ணியம் பாவம் புணர்ச்சி பிரிவு என்றிவையாய், நாலா. 3252
'செம்மை கருமை வெளுமையுமாய்
மெய்பொய் இளமை முதுமை புதுமை பழமையுமாய்' நாலா. 3253
என்று பிரபந்தத்தின்கண்ணும் காணப்படுகிறது.

இறைவன் உண்ணத் தெவிட்டாத அமுதமாய் இருக்கும் செய்தி,
'ஆரா அமுதம் ஆனார் தாமே' தே. 6618

'சீரார் திருவேங்கடமாமலை மேய, ஆரா அமுதே' நாலா. 1040
'ஆரா அமுதே..................... நெடுமாலே' நாலா. 3194
என்று இரு தொகுப்புக்களிலும் கூறப்படுகிறது.

இறைவன் முக்காலங்களாயும், நேற்று இன்று நாளையாயும் இருக்கும் செய்தி,
'காலம் மூன்றாய்' தே. 7177
'இறப்பு எதிர்காலக் கழிவும் ஆனானை' நாலா. 1269
'நாளை இன்று நெருநலாய்' தே. 7642
'நென்னலைப் பகலை இற்றை நாளினை
நாளையாய் வரும் திங்களை ஆண்டினை' நாலா. 1639
என்று இரு தொகுப்புக்களிலும் சுட்டப்பட்டுள்ளது.

இறைவன் எங்கும் கலந்து மறைந்திருககும் செய்தி,
'பாலுள் படுநெய்போல், மறைய நின்றுளன்' தே. 6132
என்று தேவாரத்திலும்,

'பாலுள் நெய்யினை' நாலா. 1646
என்று பிரபந்தத்திலும் கூறப்பட்டுள்ளது.

இறைவன் பழுதற்ற சோதி வடிவாய் இருக்கும் செய்தி,
'மாசறு சோதியனை' தே. 8089
என்று தேவாரத்திலும்,

'மாசூணாச் சுடருடம்பாய்' நாலா. 2904
'மாசறு சோதி....... குன்றத்தை' நாலா. 3139
என்று பிரபந்தத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறைவன் அடியார் உள்ளத்தைக் கவருபவன் என்ற கருத்து,
'என் உள்ளம் கவர் கள்வன்' தே. 1
'என்னை உள்ளம் கொண்ட கள்வா' நாலா. 1558
எனவும்,
'கருத்தழித்து வளைகவர்ந்தார்' தே. 6609
'பெருமாற்கு இழந்தேன் என் வரி வளையே' நாலா. 1668
எனவும்,

'பொய்யாது என் உயிருள் புகுந்தாய் இன்னும் போந்தறியாய்' தே. 7518
'எங்கே போவேன் ஆயிடினும் அங்கே வந்து என் மனத்தீராய்,
சங்கை ஒன்றும் இன்றியே தலைநாள் கடைநாள் ஒக்கவே' தே. 8017
'வந்தாய்! என் மனம் புகுந்தாய், மன்னிநின்றாய்' நாலா. 1046
வந்தாய் என் மனத்தே வந்து நீ புகுந்த பின்னை
எந்தாய் போயறியாய்' நாலா. 1732
'என்னை நெகிழ்க்கிலும் என்னுடை நன்னெஞ்சம்
தன்னை நெகிழ்க்கத் தானும் கில்லான்' நாலா. 2748
எனவும் தேவாரத்திலும் பிரபந்தத்திலும் இடம் பெற்றுள்ளது.

எண்வகை மலர்களைக் கொண்டு இறைவனை வழிபடும் திறத்தை,
'எட்டு நாண்மலர் கொண்டு, அவன் சேவடி
மட்டு அலர் இடுவார்' தே. 5781
என்று தேவாரமும்,

'கந்த மாமலர் எட்டும் இட்டு' நாலா. 1193
என்று பிரபந்தமும் குறிப்பிடுகின்றன.

இறைவனுக்கு அபிடேகம் செய்து பூவிட்டு வழிபடவேண்டும் என்னும் செய்தி,
'மலரும் புனலும் கொடு தூவி' தே. 21
'அப்போடு மலர் தூவி' தே. 4233
'பிரிவகை யின்றிநன் னீர்தூய்ப்
புரிவது வும்புகை பூவே' நாலா. 2730
என்று இருவகைத் தொகுப்பிலும் கூறப்பட்டுள்ளது.

இறைவன் பரமேட்டி என்றுதேவாரத்திலும் (2580) திவ்வியப் பிரபந்தத்திலும் (12) குறிப்பிடப்படுகிறான்.

இறைவனை அன்புபற்றி 'ஆனை' என்று குறிப்பிடுவதை,
'என்ஆனைக் கன்றினை' தே. 6884
'என்ஆனை என்அப்பன்' நாலா. 2985
எனத் தேவாரத்திலும் பிரபந்தத்திலும் காண்கிறோம்.

இறைவன் தன் மாயையால் செய்யும் செயல்களைக் 'கிறி' என்ற சொல்லால் இரு திறத்து நூல்களும் குறிப்பிடுகின்றன.
'பொறி கிளர் அரவமும்........... கிறிபட நடந்து' தே. 3790
'கிறி பேசி நின்றிடுவார்' தே. 8028
'மாணி என்னைக் கிறிசெய்ததே' தே. 8169
என்பன தேவாரம்.

'கிறி அம்மான் கவராத கிளரொளியால் குறைவிலமே' நாலா. 3089
'இத்தனைக் காலமும் போய்க் கிறிப்பட்டேன்' நாலா. 460
'கிறிக்கொண்டு இப்பிறப்பே ................ எய்தினேன்' நாலா. 2814
என்பன பிரபந்தம்.

இறைவன் இசைவடிவமாக உள்ளான் என்ற செய்தியை,
'பண் அவன்காண்; பண் அவற்றின் திறம் ஆனான்காண்' தே. 6774
என்று தேவாரமும்,
'பண்ணினை, பண்ணில் நின்றதோர் பான்மையை' நாலா. 1646

'பண்ணின் இன்மொழி யாழ்நரம்பில் பெற்ற பாலையாகி' நாலா. 1574
என்று பிரபந்தமும் கூறும்.

இறைவன் அடியார்க்கு இரங்கி அருள் செய்வதனை,
'ஆஆ என்று அங்கு அடியார்தங்கட்கு அருள்செய்வாய்' தே. 2157
என்று தேவாரமும்,
'அடியார்க்கு ஆஆ என்று இரங்கி' நாலா. 1599
'ஆஆ என்று எனக்கருளி' நாலா. 2708
'ஆஆ என்று இரங்கி' நாலா. 1328
என்று பிரபந்தமும் குறிப்பிடும். ஆஆ என்பது ஐயோ என்ற இரக்கப்பொருளது.

இறைவன் அடியார்உள்ளத்தே அமர்ந்து தன்னை அடியார்களைக் கொண்டு பாடுவித்தான் எனவும், உண்மையில் பாடல்கள் யாவும் அவன் சொல்ல அடியார்கள் வெளிப்படுத்தியனவே எனவும், இவ்விருதிறத்து அடியவர் பாடல்களும் குறிப்பிடுகின்றன.

'எனதுரை தனதுரை யாக' தே. 820-829
'என்னைத் தன்னாக்கி என்னால் தன்னை இன்தமிழ் பாடிய ஈசன்' நாலா. 3425

என்பன காண்க.

இறைவன் அறுவகைச் சமயமும் ஆகியுள்ளான் என்ற செய்தியை,
'அறிவினன் மிக்க அறுவகைச் சமயம்
அவ்வவர்க்கு அங்கே ஆர்அருள் புரிந்து' தே. 7803
என்று தேவாரமும்,
'விளம்பும் அறுசமயமும் அவைஆகியும்' நாலா. 3114
'ஆறு சமயங்கட்கெல்லாம் பொருவாகி நின்றான்' நாலா. 3597
என்று பிரபந்தமும் குறிப்பிடும்.

எல்லாச் சமயங்களையும் அவற்றிற்கு என வெவ்வேறு கோட்பாடுகளையும் இறைவனே அமைத்துள்ளான் என்ற கருத்தினைத் தேவாரம்,
விரிவுஇலா அறிவினர்கள் வேறு ஒரு சமயம் செய்து(வ்)
எரிவினால் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றது ஆகும்' தே. 4755
என்று குறிப்பிடுவது போலப் பிரபந்தமும்,

'வணங்கும் துறைகள் பலபல ஆக்கி மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபல ஆக்கி அவைஅவைதோறு
அணங்கும் பலபல ஆக்கிநின் மூர்த்தி பரப்பிவைத்தாய்' நாலா. 2573
என்றும்,
'யாவையும் எவரும் தானாய் அவரவர் சமயம் தோறும்
தோய்விலன்' நாலா. 2939
என்றும் இறைவன் எல்லா மதங்களாகவும் அவ்வம் மதத் தெய்வங்களாகவும் இருப்பதோடு, அவற்றிற்கு அப்பாற்பட்டவனாகவும் இருத்தலின், ஒவ்வொரு சமயவாதி கூறும் கூற்றும் இறைவனுக்கு ஏற்றதே என்ற கருத்தைக் குறிப்பிடுகிறது.

இறைவன் தமிழாகவும் வடமொழியாகவும் உள்ள செய்தியையும், தமிழாலும் வடமொழியாலும் இறைவனை வழிபடும் செய்தியையும்,

'தமிழ்ச்சொலும் வடசொலும் தாள்நிழல் சேர' தே. 834

'தென்சொல் விஞ்சு அமர் வடசொல்..... எழில் நரம்பு எடுத்து' தே. 2470
'ஆரியம் தமிழோடு இசை ஆனவன்' தே. 5415
என்று தேவாரமும்,

'வேதம் உரைத்து இமையோர் வணங்கும்,
செந்தமிழ் பாடுவார் தாம்வணங்கும் தேவர்' நாலா. 1119
'செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி' நாலா. 2055
'புல்லாணித் தென்னன் தமிழை வடமொழியை' நாலா. 2674
(அடிகள் 131,132)

'செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்
திசைமுகனே அனையவர்கள் செம்மை மிக்க, அந்தணர்கள்' நாலா. 1624
என்று பிரபந்தமும் குறிப்பிடுகின்றன.

இறைவன் தன்னுடைய அடியார்களுக்குத் தானே தாயும் தந்தையும் ஆவான் என்ற செய்தியை,

'தாயும் நீயே! தந்தை நீயே! சங்கரனே' தே. 543
'எம்மான் எம்மனை என்றவர் விட்டு இறந்தொழிந்தார்
...... பெம்மான் உன்னையல்லால் பெரிது ஏத்த மாட்டேனே' தே. 7448
என்று தேவாரமும்,

'எம்மானும் எம்மனையும் என்னைப்பெற் றொழிந்ததற்பின்
அம்மானும் அம்மனையும் அடியேனுக்கு ஆகிநின்ற...... நம்பீ!' நாலா. 1560
'பெற்றார் பெற்றொழிந்தார் பின்னும் நின்று அடியேனுக்கு
உற்றானாய் வளர்த்து என் உயிராகி நின்றானே' நாலா. 1734
என்று பிரபந்தமும் குறிப்பிடும்.

இறைவன் எல்லாப் பொருள்களுமாய் உள்ளான் என்ற செய்தியை,
'நீள்நிலவும் அம்தீயும் நீரும் மற்றை, நெறிஇலங்கு இரு காலும் ஆகாச(ம்)மும்
வான் நிலவு தாரகையும் மண்ணும் விண்ணும்,மன்னுயிரும் என்னுயிரும் தானும்'
தே. 7158

என்று தேவாரமும்,
'வானாய்த் தீயாய் மாருதமாய் மலையாய் அலைநீர் உலகனைத்தும்
தானாய்' நாலா. 994
'வானொடும் மண்ணொடும் மற்றுள்ள பல்லுயிரும்
தானாய எம்பெருமான்' நாலா. 1250
'திடவிசும்பு எரி நீர் திங்களும் சுடரும்
செழுநிலத்து உயிர்களும் மற்றும்
படர் பொருள்களுமாய் நின்றவன்' நாலா. 1270
என்று பிரபந்தமும் இயம்புகின்றன.

இறைவன் பேரழகுடையவன் என்ற செய்தியை,
'ஆடுமாறு வல்லார் அவரே அழகியரே' தே. 8117
'ஆறு சூட வல்லார் அவரே அழகியரே' தே. 8118
'அங்கிருந்து உறைவார் அவரே அழகியரே' தே. 8119
'ஆளுமாறு வல்லார் அவரே அழகியரே' தே. 8120
'அங்கைத் தீ உகப்பார் அவரே அழகியரே' தே. 8121
'ஆவில் ஐந்து உகப்பார் அவரே அழகியரே' தே. 8122

'அரங்கில் ஆட வல்லார் அவரே அழகியரே' தே. 8123
'அண்ணலாகி நின்றார் அவரே அழகியரே' தே. 8124
'அரக்கனை அடர்த்தார் அவரே அழகியரே' தே. 8125
என்று தேவாரம் குறிப்பிடுவது போலவே, பிரபந்தமும்

'அன்னை என்நோக்குமென்று அஞ்சுகின்றேன் அச்சோ ஒருவர் அழகியவா!' நாலா. 1758
'ஆடகம் பூண்டு ஒரு நான்கு தோளும் அச்சோ ஒருவர் அழகியவா!' நாலா. 1759
'ஆயிரம் தோளொடு இலங்கு பூணும் அச்சோ ஒருவர் அழகியவா!' நாலா. 1760
'அம்பவளத் திரளேயும் ஒப்பர் அச்சோ ஒருவர் அழகியவா!' நாலா. 1761
'ஆழி ஒன்றேந்தி ஓர் சங்கு பற்றி அச்சோ ஒருவர் அழகியவா!' நாலா. 1762
'அஞ்சன மாமலையேயும் ஒப்பர் அச்சோ ஒருவர் அழகியவா!' நாலா. 1763
'அணிகெழு மாமுகிலேயும் ஒப்பர் அச்சோ ஒருவர் அழகியவா!' நாலா. 1764
'அஞ்சிறைப் புள்ளும் ஒன்று ஏறிவந்தார் அச்சோ ஒருவர் அழகியவா! நாலா. 1765
'அண்டத் தமரர் பணிய நின்றார் அச்சோ ஒருவர் அழகியவா!' நாலா. 1766
என்று பேசுகிறது.

## 2. பிற தெய்வம் வேண்டாமை

இறைவன் ஒருவனைத் தவிர மற்ற தெய்வங்களை அடியவர் ஏத்தமாட்டார்கள் என்ற செய்தியை,

'நொந்தா ஒண்சுடரே! நுனையே நினைந்திருந்தேன்;
எந்தாய்! உன்னையல்லால் இனிஏத்த மாட்டேனே!' தே. 7444
என்று தேவாரமும்,

'நன்மான ஒண்சுடரே! நறையூர் நின்ற நம்பீ! உன்
மைம்மான வண்ணம் அல்லால் மகிழ்ந்து ஏத்த மாட்டேனே!' நாலா. 1560

என்று பிரபந்தமும் குறிப்பிடுகின்றன.
'சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்' தே. 7220
என்று தேவாரமும்,
'கண்ணபுரம் ஒன்று, உடையானுக்கு அடியேன்
ஒருவர்க்கு உரியேனோ?' நாலா. 1730
'மற்றிங்கோர் புதுத்தெய்வம் கொண்டாடும்
தொண்டீர் ............ தகவற்றீரே' நாலா. 2007
என்று பிரபந்தமும் குறிப்பிடும்.
'ஏற்றேன் பிறதெய்வம் எண்ணு நாயேன்
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்' தே. 6724
என்று தேவாரமும்,
'மற்றோர் தெய்வம் எண்ணேன்' நாலா. 1472
'கூறேன்......... மற்றோர் தெய்வம்
தேறேன் உன்னை யல்லால்' நாலா. 1474

'மற்றுமோர் தெய்வம் உளதென்று இருப்பாரோடு
உற்றிலேன்' நாலா. 1740
'மறந்தும் புறம்தொழா மாந்தர்' நாலா. 2449
என்று பிரபந்தமும் பகருகின்றன.

'இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டாது' தே. 6867
என்று தேவாரமும்,

'அவர்இவர் என்றில்லை அநங்கவேள் தாதைக்கு
எவரும் எதிரில்லை' நாலா. 2437

என்று பிரபந்தமும் இயம்புகின்றன.

### 3. இருதலைக் கொள்ளி எறும்பு போன்றவர் அடியார்

தேவாரம் பாடிய சான்றோர்,

'இருதலை மின்னுகின்ற, கொள்ளிமேல் எறும்பு என் உள்ளம்' தே. 4900

என்று குறிப்பிடுவது போலப் பிரபந்தம் பாடிய ஆழ்வாரும்,

'இருபாடு எரிகொள்ளியின் உள் எறும்பே போல்
உருகாநிற்கும் என் உள்ளம்' நாலா. 2025

என்று குறிப்பிடுகின்றார்.

### 4. இறைவன் அருட்குக் கைம்மாறில்லை

தேவாரம் பாடிய சான்றோர் இறைவனுக்கு ஆட்படுவதைத் தவிர அவன் செய்த பேரருளுக்குச் செய்யத்தக்க கைம்மாறு இல்லை என்பதனை,

'ஆளலால் கைம்மாறில்லை, ஐயன் ஐயாறனார்க்கே' தே. 4569

என்று குறிப்பிடுவது போலப் பிரபந்தம் பாடிய சான்றோரும்,

'உதவிக் கைம்மாறு......... எதுவும் ஒன்றில்லை செய்வது
இங்கும் அங்கே' நாலா. 3434

என்று தெரிவிக்கின்றனர்.

### 5. தம் பக்தி போலி என்றல்

நாவுக்கரசர் தம் பக்தி போலியானது என்ற கருத்தில்,

'கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியேன் ஆகி நின்று தேடினேன், நாடிக் கண்டேன்;
உள்குவார் உள்ளிற்று எல்லாம் உடன்இருந்து அறிதி என்று
வெள்கினேன்; வெள்கி, நானும் விலாவிறச் சிரித்திட்டேனே' தே. 4897

என்று குறிப்பிடுவது போலத் தொண்டரடிப்பொடியாழ்வாரும்,

'உள்ளத்தே உறையும் மாலை உள்ளுவான் உணர்வுஒன்று இல்லா
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த் தொண்டுக்கே கோலம் பூண்டேன்;
உள்ளுவார் உள்ளிற்று எல்லாம் உடன்இருந்து அறிதி என்று
வெள்கிப்போய், என்னுள்ளே நான் விலவறச் சிரித்திட்டேனே' நாலா. 905

என்று குறிப்பிடுகிறார்.

### 6. பாசம் நீக்கிப் பரமனைப் பணிதல்

சுற்றத்தாரிடம் கொண்ட பாசம் நீக்கி இறைவனைத் தொழுது உய்யுமாறு நெஞ்சிற்கு ஞானசம்பந்தர்,

'தந்தை, தாய், தன்னுடன் தோன்றினார், புத்திரர், தாரம், என்னும்
பந்தம் நீங்காதவர்க்கு உய்ந்துபோக்கு இல்லெனப் பற்றினையே?

வெந்தநீறு ஆடியார், ஆதியார், சோதியார், வேதகீதர்,
எந்தை ஆரூர் தொழுது உய்யலாம்; மையல் கொண்டு அஞ்சல் நெஞ்சே!'
தே. 2332

என்று குறிப்பிடுவது போல், திருமங்கைமன்னனும்,

'தந்தை, தாய், மக்களே, சுற்றம் என்று உற்றவர் பற்றி நின்ற
பந்தமார் வாழ்க்கையை நொந்து நீ பழியெனக் கருதினுயேல்,
அந்தமாய் ஆதியாய் ஆதிக்கும் ஆதியாய் ஆயனுய
மைந்தனுர் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய், மருவு நெஞ்சே!' நாலா. 1808

என ஒரு பதிகம் முழுவதும் குறிப்பிடுகிறுர்.

## 7. பயனில்லா வாழ்வு

இறைவனிடம் அன்பு பூணுதவர் வாழ்க்கை பயனற்றது என்று குறிப்பிட்டு ஒரு பதிகம் முழுதும் சுந்தரர்,

'சடையில் கங்கை தரித்தானைச் சாராதார் சார்பு என்னே!'
'உணராதார் உணர்வு என்னே!' 'பேசாதார் பேச்சு என்னே!'
'பரவாதார் பரவு என்னே!' 'பயிலாதார் பயில்வு என்னே!'
'அறியாதார் அறிவு என்னே!' 'நினையாதார் நினைவு என்னே!'
'குழையாதார் குழைவு என்னே!' தே. 8107 முதலியன

என்று குறிப்பிடுவதுபோலத் திருமங்கைமன்னனும்,

'பூணுர மார்வனைப் புள்ளூரும் பொன்மலையைக்
காணுதார் கண்என்றும் கண்ணல்ல கண்டாமே' நாலா. 2012
'கேளாச் செவிகள் செவியல்ல கேட்டாமே' நாலா. 2013
'பேசாதார் பேச்சென்றும் பேச்சல்ல கேட்டாமே' நாலா. 2014
'பாடாதார் பாட்டென்றும் பாட்டல்ல கேட்டாமே' நாலா. 2015
'சங்கேந்தும், கையானைக் கைதொழாக் கையல்ல கண்டாமே' நாலா. 2016
'உள்ளாதார் உள்ளத்தை உள்ளமாக் கொள்ளோமே' நாலா. 2017
'நினையாதார் நெஞ்சுஎன்றும் நெஞ்சல்ல கண்டாமே' நாலா. 2018
'அறியாதார் என்றும் அறியாதார் கண்டாமே' நாலா. 2019
'ஆன்விடைஏழ் அன்றுஅடர்த்தார்க்கு ஆளானுர் அல்லாதார்
மானிடவர் அல்லர்என்று என்மனத்தே வைத்தேனே' நாலா. 2020

என்று அக்கருத்தை இன்னும் அழுத்தமாகக் குறிப்பிடுகிறுர்.

## 8. தமிழியைபு

ஞானசம்பந்தர் தம்மைத் 'தமிழ்ஞானசம்பந்தன்' (தே. 162) என்று குறிப்பிடுவது போலவே, ஆழ்வார்களும்,

'இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது' நாலா. 2255
'நற்றமிழை வித்திஎன் உள்ளத்தை நீ விளைத்தாய்
கற்றமொழி யாகிக் கலந்து' நாலா. 2462

என்று தம்மைத் தமிழோடு இணைத்துப் பேசுவதில் பெருமிதம் கொள்கின்றனர்.

## 9. இசைப்பாடல்கள்

தேவார ஆசிரியர்தம் பாடல்கள் இசைத்தமிழ் மாலைகள் என்று அவர்களால்,

'ஞானசம்பந்தன் தமிழ்பத்தும் யாழின்(ன்) இசைவல்லார்' தே. 118
'நாவலர்கோன் ஆரூரன் நாவில் நயந்து உரைசெய்,
பண்பயிலும் பத்தும்' தே. 7401

என்பன முதலாகக் குறிப்பிடப்படுமாறு போல, ஆழ்வார்களாலும் அவர்கள் பாடிய பதிகங்கள்

'விட்டுசித்தன் சொன்ன மாலை பத்தும்,
பண்ணின்பம் வரப் பாடும் பத்தருள்ளார்' நாலா. 263
'மங்கையர்கோன் கலிகன்றிசொல்,
நல்லிசை மாலைகள் நாலிரண்டும் இரண்டும்' நாலா. 1387
'பண்தலையில் சொன்ன தமிழ்' நாலா. 2874

என்று குறிப்பிடப்படுகின்றன.

## 10. அடியார்கள்தம் வள்ளன்மை

செல்வ நிலையாமையை உணர்ந்து நிலையான இறையருளைப் பேணும் அடியார்கள் சிறந்த கொடையாளராக உள்ள தன்மையை,

'மரம் நிகர் கொடை மனிதர்கள் பயில் மறைவனம்' தே. 229
'விலங்கல் அமர் புயல் மறந்து மீன் சனி புக்கு, ஊன் சலிக்கும் காலத்தானும்
கலங்கல் இலா மனப் பெரு வண்கை உடைய மெய்யர் வாழ் கழுமல(ம்)மே'
தே. 1385

என்று தேவாரம் போற்றுவது போல,

'காசின் வாய்க்கரம் விற்கிலும் கரவாது மாற்றிலி சோறிட்டுத்
தேச வார்த்தை படைக்கும் வண்கையினர் வாழ் திருக்கோட்டியூர்' நாலா. 369

என்று பிரபந்தமும் போற்றுகிறது.

## 11. ஆர்வசெற்றங்களை நீக்குதல்

இறைவன்அடியை அடைய ஆசை, பகைமை, கோபம் முதலிய தீக்குணங்களை நீக்கவேண்டும் என்று,

'ஆர்வச் செற்றக் குரோதம் நீக்கி' தே. 4219

என்று தேவாரம் குறிப்பிடுவது போலவே,

'ஆர்வச் செற்றம் அவைதம்மை மனத்து அகற்றி' நாலா. 1458

என்று பிரபந்தமும் குறிப்பிடுகிறது.

## 12. மூப்பு வாராமுன் தலங்களை எய்தி வணங்குதல்

மூப்பு எய்தும் முன் இறைவனுடைய திருப்பதிகளை வணங்கவேண்டும் என்பதனைத் தேவாரம்,

'காலினோடு கைகளும் தளர்ந்து காமநோய்தனால்
ஏல வார்குழலினார் இகழ்ந்து உரைப்பதன் முனம்

மாலினோடு நான்முகன் மதித்தவர்கள் காண்கிலா
நீலம் மேவு கண்டனார் நிகழ்ந்த காழி சேர்மினே!' தே. 2525

என்று வற்புறுத்துவது போலவே, பிரபந்தமும்

'முதுகு பற்றிக் கைத்தலத்தால் முன் ஒருகோல் ஊன்றி
விதிர்விதிர்த்துக் கண் சுழன்று மேல் கிளைகொண்டு இருமி,
"இது என் அப்பர் மூத்தவாறு!" என்று இளையவர் ஏசாமுன்
மது உண் வண்டு பண்கள் பாடும் வதரி வணங்குதுமே' நாலா. 969

என்று வற்புறுத்தி அழைக்கிறது.

## 13. அடியார்க்கு அடிமை வேண்டுதல்

அடியார்க்கு அடியவராம் பேற்றினை இரு திறத்தாரும் வேண்டுகின்றனர்.

'ஆலங்காடா! உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே' தே. 7765-7773

எனச் சுந்தரர் ஒரு பதிகம் முழுவதும் குறிப்பிடுகிறார்.

'எந்தைபிரான் தனக்கு
அடியார் அடியார்தம் அடியார் அடியார்தமக்கு
அடியார் அடியார்தம் அடியார் அடியோங்களே' நாலா. 2972

என்றும்,

'நீக்கமில்லா அடியார்தம் அடியார் அடியார் அடியார் எம்
கோக்கள்' நாலா. 3555

என்றும் நம்மாழ்வார் குறிப்பிடுகிறார்.

## 14. தொண்டரடிப்பொடி யாடுதல்

தொண்டர் அடிப்பொடியில் ஆடுதல் மிகத் தூய்மையாகும் என்பதனை,

'ஆடுமின், அன்புடையீர்! அடிக்கு ஆட்பட்ட தூளி கொண்டு
சூடுமின் தொண்டருள்ளீர்!' தே. 7456

என்று சுந்தரரும்,

'ஆடிப்பாடி அரங்கவோ என்று அழைக்கும் தொண்டர் அடிப்பொடி
ஆட நாம் பெறில், கங்கைநீர் குடைந்தாடும் வேட்கை என் ஆவதே!' நாலா. 659

என்று குலசேகரப்பெருமாளும் அருளியுள்ளனர்.

## 15. இறைவனைக் காணும் வழி

இறைவனைக் காண்பதற்குரிய வழியாக, நாவுக்கரசர்,

'உடம்பு எனும் மனைஅகத்து(வ்) உள்ளமே தகளி ஆக
மடம்படும் உணர்நெய் அட்டி, உயிர் எனும் திரி மயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள, இருந்து நோக்கின்,
கடம்பு அமர் காளை தாதை கழல்அடி காணலாமே' தே. 4898

என்று குறிப்பிடுகிறார்.

பூதத்தார் தம் இரண்டாம் திருவந்தாதியில்,

'அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா — நன்புருகி

ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்' நாலா. 2182
என்று தெரிவிக்கின்றார். ஈண்டு இருவரும் ஞானத்தீயால் சுடர்விளக்கு ஏற்றியதைக் காண்கிறோம்.

## 16. தேவர் எதிர்கொள்ளுதல்

சுந்தரர் தாம் கயிலை சென்றபோது

'இந்திரன், மால், பிரமன்(ன்), எழில் ஆர் மிகு தேவரெல்லாம்
வந்து எதிர்கொள்ள'ச் சென்றதைக் குறிப்பிட்டது போல, (தே. 8260)
நம்மாழ்வாரும் 'சூழ் விசும்பு அணிமுகில்' (நாலா. 3755-3764)

என்ற பதிகம் முழுதும் திருமால்அடியாரைத் தேவர்கள் முதலானோர் வரவேற்று உபசரிக்கும் திறத்தை விளக்கியுள்ளார்.

## 17. இயமபயம் நீங்க இறையடி பணிதல்

எமனால் ஏற்படும் அச்சம் பற்றியும், அதனை இறைவனே போக்குவான் என்பது பற்றியும், சுந்தரர் தம் 90 ஆம் பதிகம் முழுதும் குறிப்பிட்டுள்ளார். திருமங்கை மன்னன் எமனால் ஏற்படும் அச்சம் நீங்க நைமிசாரண்யத்தில் பெருமான் அடியிணையைத் தாம் அடைந்தமையைப் பிரபந்தத்தின் 1000-1003 என்ற பாடல்களில் குறிப்பிடுகிறார்.

## 18. தாயர் கூற்று

திருத்தாயர் கூற்றாக அப்பர் பெருமான் பதிகம் முழுதும் (எண் 6) அருளியிருப்பது போலவே, திருமங்கைமன்னனும் அவ் யாப்பிலேயே பதிகம் முழுதும் அமைத்துள்ளார்.

'வனபவள வாய்திறந்து வானவர்க்கும் தானவனே என்கின்றாளால்;
சினபவளத் திண்தோள்மேல் சேர்ந்திருக்கும் வெண்ணீற்றன் என்கின்றாளால்;
அனபவள மேகலையோடு அப்பாலைக்கு அப்பாலான் என்கின்றாளால்;
கனபவளம் சிந்தும் கழிப்பாலைச் சேர்வானைக் கண்டாள்கொல்லோ!'
என்பது தேவாரம் (4221).

'வண்டுஅமரும் வனமாலை மணிமுடிமேல் மணம்நாறும் என்கின்றாளால்;
உண்டுஇவர்பால் அன்புஎனக்குஎன்று ஒருகாலும் பிரிகிலேன் என்கின்றாளால்;
பண்டு இவரைக் கண்டுஅறிவது எவ்வூரில் யாம்என்றே பயில்கின்றாளால்;
கண்டவர்தம் மனம்வழங்கும் கண்ணபுரத்து அம்மானைக் கண்டாள்கொல்லோ!'
என்பது திவ்வியப் பிரபந்தம் (1656).

## 19. ஒரே ஒலி அமைப்பு

அப்பர் சுவாமிகளின் 'தலையே நீ வணங்காய்' என்ற பதிகம் (எண் 9) போலவே, திருமங்கைமன்னனுடைய 'திருத்தாய் செம்போத்தே' என்ற பதிகம் முழுதும் அமைந்துள்ளது.

'தலையே நீ வணங்காய் — தலைமாலை தலைக்கு அணிந்து,
தலையாலே பலிதேரும் தலைவனைத் — தலையே நீ வணங்காய்' தே. 4251
திருத்தாய் செம்போத்தே — திருமாமகள்தன் கணவன்,
மருத்தார் தொல்புகழ் மாதவனை வரத் — திருத்தாய் செம்போத்தே'
நாலா. 1942

### 20. "மறந்தாலும் ஆட்கொள்க!" என வேண்டல்

தாம் உயிர் போகும் நேரத்தில் அழைப்பதற்கு மறந்தாலும் இறைவன் தம்மை ஆட்கொள்ள வேண்டும் என்று நாவுக்கரசர்,

'தென்திசைக்கே, உந்திடும்போது மறக்கினும் என்னைக் குறிக்கொண்மினே!'
தே. 5093

என்று ஒருபதிகம் முழுதும் (95) வேண்டுவது போல, பெரியாழ்வாரும்,
'எய்ப்பு என்னை வந்து நலியும்போது அங்கேதும் நான் உன்னை நினைக்கமாட்டேன்;
அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன்; அரங்கத்து அரவணைப்
பள்ளியானே!' நாலா. 423

என ஒரு பதிகம் முழுவதும் குறிப்பிடுகிறார்.

### 21. இறைவனைப் போற்றாத நாள்கள்

இறைவனுடைய புகழையெல்லாம் பேசாத நாள்களை வீண்நாள்களாகக் கருதி நாவுக்கரசர்,

'பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே!'

என்று ஒரு பதிகம் முழுவதும் (214) குறிப்பிடுகிறார். அங்ஙனமே, பெரியாழ்வார் ஒரு பாசுரத்தில்,

'கண்ணா! நான்முகனைப் படைத்தானே! காரணா! கரியாய்! அடியேன் நான்
உண்ணா நாள் பசியாவது ஒன்றில்லை; ஓவாதே நமோ நாரணா என்று
எண்ணா நாளும், இருக்கு எசுச் சாமவேத நாள்மலர்கொண்டு உனபாதம்
நண்ணா நாள்அவை தத்துறுமாகில், அன்று எனக்கு அவை பட்டினி நாளே!'
நாலா. 438

என்று அக்கருத்தை விளக்கிக் கூறுகிறார்.

### 22. இயற்கை வருணனை

இனி, இயற்கை வருணனைக் காட்சியில் சில ஒற்றுமைகள் கூறப் புகுவோம்:

தாமரைத்தவிசில் இலைக்குடை நிழலில் செந்நெல் கவரிவீச அன்னம் வீற்றிருக்கும் அழகிய காட்சியை,

'செறி இதழ்த் தாமரைத்தவிசில் திகழ்ந்து ஓங்கும் இலைக்குடைக்கீழ்ச்
செய்ஆர் செந்நெல், வெறி கதிர்ச்சாமரை இரட்ட, இளஅன்னம்
வீற்றிருக்கும் மிழலை ஆமே' தே. 1417

என்றும்,

'தளை அவிழ் கமலத்தவிசின்மேல் அன்னம் தன் இளம் பெடையொடும் புல்கி
விளை கதிர்க்கவரி வீச வீற்றிருக்கும் மிழலை' தே. 4087

என்றும், குறிப்பிட்டு வருணிப்பது போலவே, பிரபந்தமும்

'அன்னம், மாமலர் அரவிந்தத்து அமளியில் பெடையொடும் இனிது அமரச்
செந்நெல்லார் கவரிக்குலை வீசு தண் திருவயிந்திரபுரமே' நாலா. 1154
'அன்னம் மென்கமலத்து அணிமலர்ப் பீடத்து அலைபுனல் இலைக்குடை நீழல்
செந்நெல் ஒண்கவரி அசைய வீற்றிருக்கும் திருக்கண்ணங்குடி' நாலா. 1752
'செங்கால் அன்னம் திகழ் தண்பணையில் பெடையோடும்
கொங்கு ஆர் கமலத்து அலரில் சேரும் குறுங்குடியே' நாலா. 1799

என்று வருணிக்கிறது.

தாழைமலரைக் கெண்டைமீன்கள் நாரை என அஞ்சுகின்றன என்ற கருத்து,
'தாழைமலர் நிழலைக் குருகு என்று, தடம் மண்டு துறைக் கெண்டை
தாமரையின்பூ மறைய' தே. 1985

என்று தேவாரம் குறிப்பிடுவது போலவே, பிரபந்தமும்
'அருகு கைதை மலரக் கெண்டை, குருகு என்று அஞ்சும் கூடலூரே'
நாலா. 1366

என்று குறிப்பிடுகிறது.

மலைப்பகுதி குளிர்ந்த சோலையில் மயில் பெடையொடு உடன்ஆடக் குயில் இன்னிசை பாடும் என்ற கருத்தில்,
'மயில்புல்கு தண்பெடையோடு உடன்ஆடும் வளர் சாரல்
குயில் இன்(ன்)னிசை பாடும் குளிர்சோலைக் கொடுங்குன்றம்' தே. 142

என்று தேவாரம் குறிப்பிட, பிரபந்தம், சற்று மாற்றி, மயிலாட மேகம் முழவு அதிர வண்டு பாடும் திறத்தை,
'கான் உலாம் மயிலின் கணங்கள் நின்று ஆடக் கணமுகில் முரசம் நின்றுஅதிர,
தேன் உலா வரிவண்டு இன்னிசை முரலும் திருக்கண்ணங்குடி' நாலா. 1754
என்று குறிப்பிடும் இயற்கை வருணனையையும் காண்கிறோம்.

பிரபந்தம் குறிப்பிடும் வருணனையையும் தேவாரம்,
'பக்கம் பலமயில் ஆடிட மேகம் முழவு அதிர,
மிக்க(ம்) மது வண்டு ஆர் பொழில் வேணுபுரம்' (90)
என்று குறிப்பிடுகிறது.

கமலம், குமுதம், குவளை முதலியன தேவாரத்தில்,
'வாவிதொறும் வண்கமலம் முகம் காட்டச் செங்குமுதம் வாய்கள் காட்டக்
காவி இருங்கருங்குவளை கருநெய்தல் கண் காட்டும் கழுமல(ம்)மே' தே. 1383

என்று வருணிக்கப்படுவது போலவே, பிரபந்தத்திலும்
'நெல்லில் குவளை கண் காட்ட, நீரில் குமுதம் வாய் காட்ட
அல்லிக் கமலம் முகம் காட்டும் கழனி அழுந்தூர்' நாலா. 1597
'வாள்நெடுங்கண் குவளை காட்ட அரவிந்தம் முகம் காட்ட' நாலா. 1182
என்று காண்கிறோம்.

காவிரியாறு தேவாரத்தில்,
'கந்தம்ஆர் மலரொடு கார்அகில் பன்மணி
சந்திளுேடு அணை புனல்' தே. 3089
'செழுமணி முத்தொடு பொன் வரன்றி,
கரைகள் எல்லாம் அணிசேர்ந்து உரிஞ்சி, காவிரி கால் பொரு' தே. 46
'சலசல சந்து அகிலோடும் உந்திச் சந்தனமே கரை சார்த்தி எங்கும்
பலபல வாய்த்தலை................காவிரி' தே. 48
'செம்பொன் ஆர்தரு வேங்கையும், ஞாழலும், செருந்தி, செண்பகம், ஆனைக் கொம்பும், ஆரமும், மாதவி, சுரபுனை, குருந்து அலர் பரந்து உந்தி....................
வரு காவிரி
தே. 2659
'கோங்கு, செண்பகம், குருந்தொடு, பாதிரி, குரவு, இடை மலர் உந்தி
ஓங்கி நீர் வரு காவிரி' தே. 2663

என்று சிறப்பிக்கப்படுவது போலவே, பிரபந்தத்திலும் ஆறுகள்

'யானைமருப்பும் அகிலும் அணிமுத்தும் வெண்சாமரையோடு பொன்னி,
மலைப்பண்டம் அண்டத்திரை உந்து' நாலா. 1220
'களிற்றின் மருப்பும்....... கமழ்சந்தும் உந்தி நிவா வலம்கொள்' நாலா. 1164
என்றாற் போலச் சிறப்பிக்கப்பட்டிருத்தலைக் காண்கிறோம்.

ஓர் ஆண்யானைக்குப் பெண்யானை தன் தூய்மையை இறைவன்மீது ஆணை கூறித் தெளிவிக்கும் அரிய காட்சியைச் சுந்தரர்,

'மாற்றுக் களிறு அடைந்தாய் என்று மதவேழம் கையெடுத்து,
மூற்றிக் கனல் உமிழ்ந்தும் மதம் பொழிந்தும் முகம் சுழிய,
தூற்றத் தரிக்கில்லேன் என்று சொல்லி(ய்) அயல் அறியத்
தேற்றிச் சென்று பிடிசூள் அறும் சீ பர்ப்பத மலையே' தே. 8042

என்று வருணித்திருப்பது போலவே, சற்றுச் சுருக்கியும் ஆனால் வலியுறுத்தியும் பெரியாழ்வார் திருமாலிருஞ்சோலைமலைக் காட்சியாக,

'கருவாரணம் தன் பிடி துறந்து ஓடக் கடல்வண்ணன்
திருஆணை கூறத் திரியும் தண் மாலிருஞ்சோலையே' நாலா. 342

என்று, சுந்தரருடைய தேவாரத்தால் பொருள் நன்கு விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் தம் வருணனையை அமைத்துள்ளார்.

களிறு பிடிக்கு மூங்கில்முளையை அன்போடு உண்பிக்கும் காட்சியைத் தேவாரம்,

'மருங்கு அளி ஆர் பிடி வாயில் வாழ் வெதிரின்முளை வாரிக்
கருங்களியானை கொடுக்கும் கற்குடி' தே. 462

என்று குறிப்பிடுகிறது. பிரபந்தமோ, இன்னும் சுவைபட,

'வரைசெய் மாக்களிறு இளவெதிர் வளர் முளை அளை மிகு தேன்தோய்த்து
பிரசவாரி தன் இளம்பிடிக்கு அருள்செயும் பிருதி' நாலா. 962

என்று மூங்கில்முளையைத் தேனில் தோய்த்து அருத்தியதாகக் குறிப்பிடுகிறது.

கிளி மாந்தளிர்களைக் கோதும் காட்சியினை,

'பால்நாறு மலர்ச்சூத பல்லவங்கள் அவை கோதி
ஏனோர்க்கும் இனிதாக மொழியும் எழில் இளங்குயில்'

என்று தேவாரமும் (652)

'சினைஆர் தேமாஞ் செந்தளிர் கோதிக் குயில் கூவும்
நனை ஆர் சோலை சூழ்ந்து அழகாய நறையூரே'

என்று பிரபந்தமும் (1489) குறிப்பிடுகின்றன.

'கொல்லை முல்லை மெல் அரும்பு ஈனும் குற்றாலம்'

எனத் தேவாரமும் (1071)

'கொல்லை முல்லை மெல்அரும்பு ஈனும் குறுங்குடி'

எனப் பிரபந்தமும் (1804)

இயம்புகின்றன.

குற்றாலத்தைத் தேவாரம்,

'பக்கம் வாழைப் பாய் கனியோடு பலவின் தேன்
கொக்கின் கோட்டுப் பைங்கனி தூங்கும் குற்றாலம்' (1072)

என்று வருணிப்பது போலவே, பிரபந்தமும் கோட்டியூரை,

'தூங்குதண் பலவின்கனி தொகு வாழையின் கனியொடு மாங்கனி
தேங்கு தண்புனல் சூழ் திருக்கோட்டியூர்' (1845)

என்று வருணிக்கிறது.

கமுகினைத் தேவாரம்
'எண் ஆர் முத்தம் ஈன்று, மரகதம் போல் காய்த்து,
கண் ஆர் கமுகு பவளம் பழுக்கும் கலிக்காழி' (1105)

என்று குறிப்பிடுவது போலவே, பிரபந்தமும்
'கருங்கமுகு பசும்பாளை வெண்முத்து ஈன்று
காயெல்லாம் மரகதமாய்ப் பவளம் காட்ட' (1144)
என்று தெரிவிக்கிறது.

## 23. சொற்றொடர் ஆட்சி ஒற்றுமை

அ) தமக்கு ஒரு கண்ணின் பார்வையை அளித்த பெருமான் மற்றைக்கண் பார்வையையும் வழங்கவில்லையே என்ற வருத்தத்தாலும் வெறுப்பாலும் திருவாரூர்ப் பெருமானை நோக்கிச் சுந்தரர்,
'ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங்கு இருப்பீர் திருவாரூரீர்! வாழ்ந்து போதீரே!' தே. 8199

என்று அப்பதிகம் முழுதும் (தே. 8199-8209) 'வாழ்ந்து போதீரே' என்று பாடினராக, திருமங்கைமன்னன் தம் இந்தளூர்ப் பெருமானை நோக்கி,
'ஆசை வழுவாது ஏத்தும் எமக்கு இங்கு இழுக்காய்த்து; அடியோர்க்குத்
தேசம் அறிய உமக்கே ஆளாய்த் திரிகின்றோமுக்கு,
காசின் ஒளியில் திகழும் வண்ணம் காட்டீர், எம்பெருமான்
வாசிவல்லீர் இந்தளூரீர்! வாழ்ந்தே போம் நீரே!' நாலா. 1331
என்று ஒரு பாடலில் குறிப்பிடுகிறார்.

ஆ) சிவனடியார்கள் தங்களை மிகவும் தாழ்த்திக்கொண்டு,
'பிறதெய்வம் எண்ணு நாயேன்' தே. 6274
'பேயேன் நாயேன்' தே. 7191
என்று குறிப்பிடுவது போல, ஆழ்வார்களும், தம்மை 'அடி நாயேன்' (நாலா. 2080) என்று கூறிக்கொள்கின்றனர்.

இ) திருநாவுக்கரசர் இறைவன் செய்கையை வியந்து,
'ஐயோ! எம்பெருமான் திருக்கருணை இருந்தவாறே!' தே. 7191

என்று குறிப்பிடுவது போலத் திருப்பாணாழ்வாரும், இறைவன் திருமேனிஅழகினை வியந்து,

'நீலமேனி ஐயோ! நிறை கொண்டது என் நெஞ்சினையே' நாலா. 935
என்று குறிப்பிடுகிறார்.

ஈ) அடியார்கள் _ தாம் தலைமுறை தலைமுறையாக இறைவனுக்குத் தொண்டராம் செய்தியை,
'எம்மான் எந்தை மூத்த(அ)ப்பன் ஏழேழ் படிகால் எமை ஆண்ட
பெம்மான்' தே. 7773
என்று சுந்தரரும்,

எந்தை தந்தை தந்தை தம்மூத்தப்பன் ஏழ்படிகால் தொடங்கி
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம்' நாலா. 6
என்று பெரியாழ்வாரும் சுட்டியுள்ளனர்.

உ) பெருவடிவெடுத்த மகாவராகத்தின் நகங்களிடையே மேருமலை அகப்பட்டு ஒளி வீசியது என்ற செய்தியை ஞானசம்பந்தர்,

'கதம்மிகு கருஉருவொடு உகிரிடை வடவரை கணகணஎன' தே. 223

என்று குறிப்பிட்டுள்ளது போலத் திருமங்கைமன்னனும்,

'சிலம்பினிடைச் சிறுபரல் போல் பெரிய மேரு திருக்குளம்பில் கணகணப்ப' நாலா. 1285

என, 'கணகணத்தல்' என்ற சொல்லைக் கையாண்டுள்ளார்.

ஊ) தேவாரம் 'செங்கால் வெண் மட நாராய்' (4288) என்று நாரையை அழைப்பது போலவே,

பிரபந்தமும் 'செங்கால மட நாராய்' (2078) என நாரையை அழைக்கிறது.

எ) வண்டின் ஒலியையும் புகழ்பாடும் ஒலியையும் 'தென்ன' என்று இருப்பனவாகக் கூறும் கருத்து,

'தென்னஎன்று வரிவண்டு இசைசெய்' தே. 1536
'தென்னென இசைமுரல் சரிதையர்' தே. 3717

என்று தேவாரத்திலும்,

'தென்ன என்று அளி முரன்றிடும்' நாலா. 1756
'தென்னு தெனு எனு வண்டு முரல்' நாலா. 2985
'தென்னு என்னும் என்னம்மான்' நாலா. 3737

என்று பிரபந்தத்திலும் காணப்படுகிறது.

ஏ) பெண்களைப் 'பந்தரர் விரலியர்' என்வும் 'பஞ்சின் மெல்லடியினார்' எனவும் கூறும் மரபு இருவகைத் தொகுப்புக்களிலும் காணப்படுகிறது.

'பந்து ஆர் விரல் உமையாள்' தே. 178
'பந்து அண் விரலாள்' தே. 758
'பந்து அமர் மெல்விரல்' தே. 1299
'பந்து அமரும் விரல்மங்கை' தே. 2926
'பந்து அணவு மெல்விரலாள்' தே. 7113

என்பன தேவாரம்.

'பந்து அணைந்த மெல்விரலாள்' நாலா. 1061
'பந்து இருக்கும் மெல்விரலாள்' நாலா. 1066
'பந்து ஆர் விரலாள்' நாலா. 1515

என்பன பிரபந்தம்.

'பஞ்சின் மெல்அடி மாதர்' தே. 2031
'பஞ்சின் மெல் அடியினார்கள்' தே. 4669
'பஞ்சின் மெல்லடிப் பாவை ஓர் பங்கனை' தே. 5530
'பஞ்சு ஏரும் மெல்லடியாள்' தே. 8214

என்பன தேவாரம்.

'பஞ்சுஇயல் மெல்அடிப் பின்னை திறத்து' நாலா. 1181
'பஞ்சு இயல் மெல்அடி எம் பணைத்தோளி' நாலா. 1210
'பஞ்சி அன்ன மெல்அடி நல் பாவைமார்கள்' நாலா. 1595
'பஞ்சி அன்ன மெல்அடியாள்' நாலா. 1319
என்பன பிரபந்தம்.

ஐ) இனி, தேவார ஆசிரியர்கள் சமணர்களை,
'குண்டர்கள்' தே. 53
'முது மட்டையர்' தே. 3436

எனப் பலஇடங்களில் குறிப்பிடுவது போல, மிக அருகி ஆழ்வார்களும் அவர்களை,
'துவரி ஆடையர் மட்டையர்' நாலா. 1053
'பீலிச் சமணகுண்டர்' நாலா. 1102
என்று குறிப்பதையும் காண்கிறோம்.

ஒ) 'மான் அன நோக்கி வைதேவிதன்னை' தே. 2902
என்று ஞானசம்பந்தர் குறிப்பிடுவது போலவே,

'மான் அமரும் மென்நோக்கி வைதேவி இன்துணையா' நாலா. 1992
என்று திருமங்கைமன்னனும் குறிப்பிடுகிறார்.

ஓ) சுந்தரர் திருப்புன்கூர்ப் பதிகத்தில்,

'தாதை தாள் அற எறிந்த தண்டிக்கு உன்
சடைமிசை மலர் அருள்செயக் கண்டு
பூதஆளி! நின் பொன்அடி அடைந்தேன் —
பூம்பொழில் திருப்புன்கூர் உளானே!' தே. 7797

'குற்றம் செய்யினும் குணம் எனக் கருதும்
கொள்கை கண்டு, நின் குரைகழல் அடைந்தேன் —
பொற்றிரள் மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ் திருப்புன்கூர் உளானே!' தே. 7798

'அயர்ப்பு ஒன்று இன்றி நின் திருவடிஅதனை
அர்ச்சித்தார் பெறும் ஆர் அருள் கண்டு,
திகைப்பு ஒன்று இன்றி நின் திருவடி அடைந்தேன் —
செழும்பொழில் திருப்புன்கூர் உளானே!' தே. 7800

என்று குறிப்பிடுவது போலவே, திருமங்கைமன்னனும் தம் திருவரங்கப் பதிகம் ஒன்றில்,

'தோழன் நீ எனக்கு; இங்கு ஒழி என்ற
சொற்கள் வந்து அடியேன் மனத்து இருந்திட,
ஆழி வண்ணா! நின் அடிஇணை அடைந்தேன் —
அணிபொழில் திரு அரங்கத்து அம்மானே!' நாலா. 1418

'கோதில் வாய்மையினுெயொடும் உடனே
உண்பன் நான் என்ற ஒண்பொருள் எனக்கும்

ஆதல் வேண்டும் என்று அடிஇணை அடைந்தேன் —
அணிபொழில் திரு அரங்கத்து அம்மானே!' நாலா. 1419

'ஏதலார் முன்னே இன்அருள் அவர்க்குச்
செய்து, உன்மக்கள் மற்று இவர் என்று கொடுத்தாய்;
ஆதலால் வந்து உன் அடிஇணை அடைந்தேன் —
அணிபொழில் திரு அரங்கத்து அம்மானே!' நாலா. 1425

என்றாற்போல வைணவ அடியார்களுக்கு இறைவன் அருள்செய்த திறம் கண்டு தமக்கும் தம் குறை காணாது அருளுவான் என்று தாம் அவன்அடி அடைந்த திறத்தை, சுந்தரர் பின்பற்றிய அதே யாப்பினை உடைய பாடற்பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஔ) இறைவழிபாட்டைச் 'சோத்தம்' என்ற சொல்லால்

'சோத்தம் எம்பெருமான் என்று தொழுது தோத்திரங்கள் சொல்ல' (4656) என்று தேவாரமும்,

'சோத்தம் நாம் அஞ்சுதும்' நாலா. 1743
'சோத்தம் நம்பீ! சுக்கிரீவா! உம்மைத் தொழுகின்றோம்' நாலா. 1868
'சோத்து என நின்னைத் தொழுவன் வரம்தர' நாலா. 1892

என்று பிரபந்தமும் குறிப்பிடுகின்றன.

ஃ) உண்ணும் உணவினைச் 'சோறு' என்றும் உடுக்கும் உடையினைக் 'கூறை' யென்றும் கூறுவதும், இவ்விரண்டனையும் இணைத்துக் கூறுவதும் தேவாரத்தில்,

'அரைக் கூறை இல்லார்' தே. 53
'கூறை துவர் இட்டார்களும்' தே. 2559
'சோறு கூறை இன்றியே' தே. 2520
'இம்மையே தரும் சோறும் கூறையும்' தே. 7575

என்று காணப்படுவது போலவே, பிரபந்தத்திலும்,

'கூறை சோறு இவை வேண்டுவது இல்லை' நாலா. 436
'கூறை சோறு இவை தந்து எனக்கு அருளி' நாலா. 1615
'கூறை சோறு இவை தா என்று' நாலா. 1616

என்று காணப்படுகின்றன.

இதுகாறும் கண்டவாற்றால், தேவார காலத்தும் அதற்குச் சற்றுப் பிற்பட்டும் தோன்றிய நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில், தேவாரத்தில் இறைவனைப் பற்றியும் அடியாரைப் பற்றியும் இறை வழிபாடு பற்றியும் குறிப்பிடப்பட்ட கருத்துக்கள், இயற்கை வருணனைப் பகுதிகள், ஓரோர் கருத்தைக் குறிப்பிடுதற்குப் பயன்படுத்தப்பட்ட யாப்புவகை சொற்கள் சொற்றொடர்கள் என்பன பலவும் ஏற்ற பெற்றி பயன்படுத்தப்பட்டிருத்தலை நோக்கவே, தேவாரம் தான் இயற்றப்பட்ட காலத்திலும் அதனை அடுத்த காலத்திலும் மக்களால் பெரிதும் பொருளுணர்வோடு பயிலப்பட்டிருத்தல் வேண்டும் என்பதும், அத்தேவாரச் செய்யுட்களின் அமைப்பும் பொருள் அமைப்பும் மக்களைப் பெரிதும் கவர்ந்து அவர் நெஞ்சில் இடம்பெற்றன என்பதும் புலனாகும்.

இனி, தேவாரத்தை அடுத்துத் தோன்றிய திருவாசகம், அதனை அடுத்துத் தோன்றிய திருவிசைப்பா இவற்றிற்கும் தேவாரத்திற்கும் இடையே உள்ள தொடர்பை நோக்குவோம்.

## தேவாரத்திற்கும் திருவாசகத்திற்குமிடையே ஒற்றுமை

திருவாசகத்தின் முதற்பாடலாகிய சிவபுராணத்தில் உள்ள 'இன்பமும் துன்பமும் உள்ளானே இல்லானே' (அடி 70) என்ற கருத்து 'இன்பன் காண்; துன்பங்கள் இல்லாதான்காண்' (தே. 6735) என்ற திருத்தாண்டகக் கருத்தை ஒருபுடை ஒத்துள்ளது.

திருவண்டப் பகுதியிலுள்ள 'தடக்கையின் நெல்லிக்கனி எனக்கு ஆயினன்' (162) என்ற கருத்து, 'அங்கை நெல்லியின் பழத்திடை அமுதே' (7787) என்று சுந்தரர் தேவாரத்திலும் வந்துள்ளது.

போற்றித் திருவகவலில் உள்ள 'காவாய் கனகக் குன்றே! போற்றி!' (98) என்ற தொடர், 'காவாய் கனகத் திரளே, போற்றி!' (6813) எனத் திருத்தாண்டகத்தில் வந்துள்ளது.

அப்பாடலிலேயே உள்ள
'பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி!
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி!
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி!
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி!
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி!' (அடி 137-141)

என்ற கருத்து திருத்தாண்டகத்தில்,
'மண் அதனில் ஐந்தை, மா நீரில் நான்கை,
வயங்கு எரியில் மூன்றை, மாருதத்து இரண்டை,
விண்அதனில் ஒன்றை' (6857)
என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்பாடலில் உள்ள 'பேராயிரம் உடைப் பெம்மான்' (200) என்பது, 'பேர் ஆயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானை' (6802) என்று திருத்தாண்டகத்தில் வந்துள்ளது.

திருச்சதகத்தில் உள்ள 'உள்ளேன் பிறதெய்வம் உன்னை அல்லாது' (2) என்ற தொடர், 'உன்னை அல்லால் ஒரு தெய்வம் உள்கேன்' (6570) என்ற தாண்டகக் கருத்தை நினைப்பிக்கிறது.

அத்திருச்சதகத்தின் 30 ஆம் பாடலில் உள்ள
'யாம் ஆர்க்கும் குடி அல்லோம்; யாதும் அஞ்சோம்'
என்ற தொடர், 'நாம் ஆர்க்கும் குடி அல்லோம் நமனை அஞ்சோம்' (7216) என்ற திருத்தாண்டகத்தொடரை நினைப்பூட்டுகிறது.

திருச்சதகத்தின் 66 ஆம் பாடலில் உள்ள
'பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை போற்றி' என்ற தொடர்,
'பிழை பொறுத்தி என்பதுவும் பெரியோய்! நின்தன் கடன்அன்றே!' (6729) என்ற திருத்தாண்டகத்தொடரையும், 'பிழை உளன பொறுத்திடுவர் என்று அடியேன் பிழைத்தக்கால்' (8137) என்ற சுந்தரர் வாக்கினையும் ஒத்துள்ளது.

திருச்சதகம் 90 ஆம் பாடலில் உள்ள
'அழுதால் உன்னைப் பெறலாமே' என்ற தொடர்,
'அழுது ஊற்றுஊறும் அடியார்கட்கு எளியன்' (2129)
'அழுது காமுற்று அரற்றுகின்றாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு — இன்னம்பர் ஈசனே' (5451)

'அழும் மலர்க்கண்இணை அடியவர்க்கு அல்லால்
அறிவு அரிது, அவன் திருவடிஇணைஇரண்டும்' (7837)
என்ற மூவர் வாக்கினையும் நினைவுறுத்துகிறது.

திருச்சதகம் 99 ஆம் பாடலில் உள்ள
'முன்ன! எம்பிரான் வருக என்; எனை
முழுதும் யர்வையும் இறுதி உற்ற நாள்
பின்ன! எம்பிரான் வருக! என்;' என்ற அடிகள்
'முன்னவன் காண்; பின்னவன் காண்' (6740)
என்ற திருத்தாண்டகத் தொடரின் விளக்கமாம்.

நீத்தல் விண்ணப்பம் 9 ஆம் பாடலில் உள்ள
'இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு ஒத்து' என்ற உவமம்,
'இருதலை மின்னுகின்ற கொள்ளிமேல் எறும்பு என் உள்ளம்' (4900)
என்ற அப்பர் வாக்கினும் நுட்பமானது.

அத்தலைப்பில் உள்ள 39 ஆம் பாடலின்
'எனக்கு எய்ப்பில் வைப்பே' என்ற தொடர்,
'நல் அடியார் மனத்து எய்ப்பினில் வைப்பை' (7913)
என்ற சுந்தரர் பாடல்அடியிலும் காணப்படுவதாகும்.

திருவெம்பாவையின் 18 ஆம் பாடலில் உள்ள
'பெண்ணாகி ஆணாகி அலியாய்' என்ற தொடர்
'பெண்ணானை ஆணானை பேடியானை' (6476)
என்ற தாண்டகத் தொடரை உட்கொண்டது.

திருத்தெள்ளேணத்தின் 7 ஆம் பாடலில் உள்ள
'பூஆர் அடிச்சுவடு என் தலைமேல் பொறித்தலுமே' என்ற தொடர்,
'பூவார் அடிச்சுவடு என்மேல் பொறித்துவை' (5102)
என்ற அப்பர் வாக்கினை நினைக்கச் செய்கிறது.

திருச்சாழலின் 9 ஆம் பாடலில் உள்ள
'பெண்பால் உகந்திலனேல் பேதாய்! இருநிலத்தோர்
விண்பால் யோகு எய்தி வீடுவர்காண் சாழலோ' என்ற தொடர்,
'போகத்து இயல்பினால் பொலிய, அழகு ஆரும்
ஆகத்தவளோடும் அமர்ந்து' (923)
என்ற ஞானசம்பந்தர் வாக்கினை விளக்குவது.

திருச்சாழலின் 11 ஆம் பாடலில் உள்ள
'கங்காளம் தோள்மேலே காதலித்தான்' என்ற தொடர்,
'கங்காளம் தோள்மேல் கொண்டார்' (7196)
என்ற திருத்தாண்டகத்தொடரை நினைப்பூட்டுகிறது.

திருப்பூவல்லியின் 3 ஆம் பாடலில் உள்ள
'நாயில் கடைப்பட்ட நம்மையும்' என்ற தொடர்,
'நாயினும் கடைப்பட்டேனை' (4910)
என்ற அப்பர் வாக்கை நினைவுபடுத்துகிறது.

திருஅருட்பத்தின் முதற்பாடலில் உள்ள
'சோதியே! சுடரே'என்ற தொடர்,

சம்பந்தர் (தே. 2009) நாவுக்கரசர் (தே. 5526)
என்ற இருவராலும் கொள்ளப்பட்ட தொடரேயாம்.

அச்சப்பத்தின் 9 ஆம் பாடலில் உள்ள
'நஞ்சமே அமுதம் ஆக்கும் நம்பிரான்' என்ற தொடர்,
'நஞ்சு அமுது ஆக்குவித்தார் நனிபள்ளி அடிகளாரே' (4852)
என்ற அப்பர் திருவாக்கை நினைப்பிக்கிறது.

அதிசயப் பத்தின் 3 ஆம் பாடலில் உள்ள
'தன்னை யாவரும் அறிவதற்கு அரியவன், எளியவன் அடியார்க்கு'
எனற தொடர்,
'அன்புசெய்வார் அவர்க்கு எளியவர்; அரியவர், அல்லார்க்கு' (2643)
என்ற சம்பந்தர் வாக்கை ஒத்தது.

திருத்தோணோக்கத்தின் 5 ஆம் பாடலில்,
'தான் ஒருவனுமே பலவாகி நின்றவா' என்ற தொடர்,
'ஒருவனுமே பலவாகி நின்றது ஒரு வண்ணமே' (2907)
என்ற தேவாரத்தொடரை நினைப்பூட்டுகிறது.

இவ்வாறு 7,8 ஆம் நூற்றுண்டுகளில் அவதரித்த தேவார மூவர்களுடைய சொற்களும் சொற்றொடர்களும் கருத்துக்களும் 9 ஆம் நூற்றுண்டினர் என்று ஆராய்ச்சியாளர் பலரானும் உறுதி செய்யப்பட்ட மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தில் வந்துள்ளமை மூவர்தேவாரம் அக்காலத்துப் பயில வழங்கிய செய்தியை வலியுறுத்துவதாம்.

## தேவாரத்திற்கும் ஒன்பதாம் திருமுறைக்குமிடையே ஒற்றுமை

ஒன்பதாம் திருமுறையின் 2 ஆம் பாடலிலுள்ள 'தூய நற்சோதியுள் சோதீ' என்ற தொடர் தேவாரத்தின் 'சுடர்ச்சோதியுள் சோதியான்' (1530) என்பதனையும்,

109 ஆம் பாடலிலுள்ள 'கேதகை நிழலைக் குருகு என மருவி' என்ற தொடர், தேவாரத்தின் 'தாழைமலர் நிழலைக் குருகு என்று' (1985) என்ற தொடரையும்,

151 இல் உள்ள 'வெண்கோவணம் கொண்டு, வெண்தலை ஏந்தும் குழகனை' என்ற தொடர், தேவாரத்தின் 'வெண்கோவணம் கொண்டு ஒரு வெண்தலை ஏந்தி' (340) என்ற தொடரையும்,

290 இல் உள்ள 'மிண்டு மனத்தவர் போமின்கள்; மெய்யடியார்கள் விரைந்து வம்மின்' என்பது, தேவாரத்தின் 'மிண்டுமொழிப் பொருள் என்னும் பேதையர்கள் அவர்; பிரிமின், அறிவுடையீர்! இது கேண்மின்' (1991) என்பதனையும்,

291 இல் உள்ள 'சிட்டன் .... ஆல நிழல் பட்டன்' என்பது, தேவாரத்தில் உள்ள 'சிட்டன் ..... செழுமா மறைப் பட்டன்' (1556) என்ற தொடரையும்,

296 ஆம் பாடலில் உள்ள 'சேலும் கயலும் திளைக்கும் கண்ணார்' என்ற தொடர், தேவாரத்தில் உள்ள 'சேலும் கயலும் திளைத்த கண்ணார்' என்ற 64 ஆம் பாடல் தொடரையும் நினைப்பூட்டும் வகையில் அமைந்துள்ளன.

இனி, 9,10 ஆம் நூற்றுண்டுகளைச் சார்ந்த சமணசமய நூல்களாகிய பெருங்கதை, சீவகசிந்தாமணி, சூளாமணி என்பனவற்றில் காணப்படும் தேவாரச் சுவடுகள் பற்றி நோக்குவோம்.

## பெருங்கதையில் தேவாரச் சுவடுகள்

(9 ஆம் நூற்றூண்டு)

உஞ்சைக் காண்டத்தில் உள்ள

'என் நெஞ்சகம் புகுந்து, கள்வன் கொண்ட உள்ளம்' (33:150,151)

என்ற தொடர்,

'என் உள்ளம் கவர் கள்வன்' (1)

என்ற ஞானசம்பந்தர் அருளிய சொற்றொடரைக் கொண்டது.

'மந்தர வில்லின் அந்தணன் விட்ட' (43:120)

என்ற தொடர்,

'மந்தரம் நல் பொரு சிலையா வளைத்துக்கொண்டார்' தே. 7198

என்ற திருத்தாண்டகவரியை நினைப்பூட்டுகிறது.

'குரவு........ அரவு கொண்டு அரும்ப' (49:99)

என்ற தொடர்,

'பையுடை நாக வாயில் எயிறு ஆர மிக்க குரவம் பயின்று மலர' (2375)

என்ற தேவாரஅடியை உட்கொண்டது.

'அன்புடை அருண்மொழி நன்புபல பயிற்றி' (57:13)

என்ற தொடரில் உள்ள 'நன்பு' என்ற சொல்

'நன்புடை நல்லூர்ப்பெருமணம் (4139)

என்ற தேவாரத்தில் வந்த சொல்லாகும்.

இலாவாண காண்டத்தில் உள்ள

'நந்தி வட்டமும் இடையிடை வலந்த' (3:32)

என்ற தொடரில் உள்ள 'நந்தி வட்டம்' என்ற சொல்,

'நந்திவட்டத்தொடு கொன்றை வளாவிய நம்பனையே' (5233)

என்று தேவாரத்திலும் வந்துள்ளது.

படை என்பது சுவரின் பகுதி. 'படைமதில்' என்பது பல படையாகச் செய்யப் பட்ட மதில்சுவர் என்று பொருள்படும்.

மகத காண்டத்தில் உள்ள

'விண்ணுற நிவந்த பண்அமை படைமதில்' (4:3)

என்ற தொடர்,

'படையுடை நெடுமதில்' (2828)

என்ற தேவாரத் தொடரை நினைப்பூட்டுகிறது.

சிம்புளித்தல் என்பது கண்ணை மூடிக்கொள்ளுதல் என்று பொருள்படும். இச் சொல் வத்தவ காண்டத்தில்

'சிம்புளித்து அடித்தும் கம்பிதம் பாடியும்' (12:240)

என்று வந்துள்ளது. இது

'சிம்மாந்து சிம்புளித்து' (7534)

என வரும் தேவாரத்தொடரை நினைப்பூட்டுகிறது.

## சீவகசிந்தாமணியில் தேவாரச்சுவடுகள்

(9 ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி)

நின் என்பதன் திரிபாகிய 'நுன்' என்பதனையும் அஃது உருபு ஏற்றுவரும் நுனை, நுன என்பனவற்றையும் இடைக்காலச் சான்றோர் கொண்டனர். தேவாரத்தில்,

'நொந்தா ஒண்சுடரே! நுனையே நினைந்திருந்தேன்' (7444)
'புகழுமாறும் அலால் நுன பொன்னடி' (6192)

என்று காணப்படுவது போல், சீவகசிந்தாமணியிலும்
'நுன்பழம்பகை தவ நூறுவாய் என' சீவக. 324
நுன சீறடி நோவ நடந்து செலேல்' சீவக. 1517
என நின் என்பதன் திரிபாகிய 'நுன்' என்பது கொள்ளப்பட்டுள்ளது.

நல்வினை செய்து பெற்ற உடம்பைப் 'பொன்உடம்பு' என்று தேவாரம் 'பொன் ஆகத்து அடியேனைப் புகப்பெய்து'(4215) என்று குறிப்பிடுவதுபோல,

'அழிப்பரும் பொன்னுடம்பு அடைந்தது ஒப்பவே' (325)
என்று சிந்தாமணியும் கூறுகிறது.

முள்குதல் என்பது முயங்குதல் என்னும் பொருளது. தேவாரத்தில்,
'முள்குவார் போகம் வேண்டின்' (4621)

என்று குறிப்பிடப்படுவது போலவே, சிந்தாமணியிலும்
'விளங்குதோள் ந(ல்)லார் முள்கும் ஆயரும்' (420)
என்ற இடத்து, முள்குதல் முயங்குதல் என்னும் பொருளில் வந்துள்ளது.

சிந்தாமணியில் சிவபெருமான் 'போகம் ஈன்ற புண்ணியன்' எனவும், திருமால் அவனுடைய அம்பு எனவும் கொண்டு, 'போகம் ஈன்ற புண்ணியன் எய்த கணையே போல்' (362) என வரும் தொடர், 'போகத்து இயல்பினுல் பொலிய அழகு ஆகும், ஆகத்தவளோடும் அமர்ந்து' (923) 'குன்ற வார்சிலை, நாண் அரா, அரிவாளி' (2004) முதலிய தேவாரத்தொடர்க் கருத்தை உட்கொண்டது.

ஆந்தை யொலியைப் 'பாட்டு' என்று சொல்லும் மரபு,
'பொத்தின்னிடை ஆந்தைபல பாடும் புளமங்கை' (167)
'பொத்தில் ஆந்தைகள் பாட்டு அறாப் புனவாயிலே' (7743) என்று தேவாரத்தில் காணப்படுவது போலவே, சீவகசிந்தாமணியிலும்
'தங்குதேன் அரவ யாழின் தானிருந்து ஆந்தை பாடும்' (1281) என்று வந்துள்ளது.
'வெண் குழை ஓர் காதின் கோமாற்கே' (7216) என்று தேவாரம் கூறும் மரபு,
'எரி நிறக் குழை ஓர் காதிற்கு இருள் அறச் சுடர வைத்தான்'(696) என்று சீவக சிந்தாமணியிலும் வந்துள்ளது.

தேவாரத்தில் 'செதுமதித் தக்கன்' (3803) என்புழிச் 'செது' என்பது அழிவு என்ற பொருளில் வந்திருப்பது போலவே, சீவகசிந்தாமணியிலும் 'செதுமகப் பலவும் பெற்று' (1124) என்புழிச் 'செது மக' என்பது சாம்பிள்ளைகள் என்ற பொருளில் வந்துள்ளது.

தொட்டிமை என்பது ஒற்றுமை என்னும் பொருளது.
'தொட்டிமை உடைய தொண்டர்' (4679)
என்று தேவாரத்தில் வரும் அச்சொல்,

'தொட்டிமை உருவம் நோக்கி' (1255)
என்று சிந்தாமணியிலும் வருகிறது.

'ஒண்ணுளே ஒன்பதுவாசல் வைத்தாய்' (7226)
என்ற தேவாரக் கருத்து,

'ஒன்பது வாயில் ஆக்கி ஊன் பயில் குரம்பை செய்தான்' (1577)
எனச் சிந்தாமணியிலும் வந்துள்ளது.

தேவாரத்தில் 'இளங்கிளை ஆரூரன்' (7533) என்ற தொடரில் வரும் இளங்கிளை என்ற உறவினரைக் குறிக்கும் சொல், சிந்தாமணியிலும்

'எழுமையும் பெறுக இன்ன இளங்கிளைச் சுற்றம் என்றாள்' (1730) என வந்துள்ளது.

'செய்வனகள் செய்யக் கண்டு' (6724) எனத் தேவாரத்தில் குறிப்பிடப்படும் விகுதிமேல் விகுதி புணர்க்கும் மரபு,

'கற்றனங்கள் யாமும் உடன் கற்பனகள் எல்லாம்' (1795) என்றாற்போலச் சிந்தாமணியுள்ளும் கையாளப்பட்டுள்ளது.

தேவாரத்தில் 'சாமவேத கந்தருவம்' (6287) என்று குறிக்கப்படும் தொடர், சிந்தாமணியில் 'சாம கீதம்' (2038) என்று இயம்பப்படுகிறது.

'துளக்கி' என்பது வணங்கி என்று பொருள்படும். படவே' 'துளங்கா' என்பது வணங்காத என்னும் பொருளது.

'துளங்கா மணிமுடியார்' (6355) என்று தேவாரத்தில் அச்சொல் கையாளப் பட்டிருப்பது போலவே, சிந்தாமணியில்

'முனைவற் றொழுது முடி துளக்கி' (2357) என்புழித் 'துளக்கி' என்ற சொல் வணங்கி என்ற பொருளில் வந்துள்ளது.

கமுகின் மட்டைகளைக் 'கூந்தல்' என்று குறிப்பிடும் மரபு,
'பூகமும் கூந்தலின் குலை வாரி' (2661)

என்று தேவாரத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போலவே, சிந்தாமணியிலும்
'கூந்தல் ஏந்திய கமுகம் காய்க்குலை' (2403)
என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

விருத்த யாப்பில் பெருங்காப்பியம் வரையச் சிந்தாமணியாசிரியருக்கு வழி காட்டி ஊக்கமளித்தன தேவாரத்திலுள்ள பலவகை யாப்பிலமைந்த பாடல்களே எனலாம். இது சூளாமணிக்கும் ஒக்கும்.

## சூளாமணியில் தேவாரச் சுவடுகள்

'தாழைமுகிழ் வேழம்மிகு தந்தம்என உந்துதகு சண்பைநகரே' (தே. 3605)
'முள்தாழைகள் ஆனைவெள்ளைக்கொம்பு ஈனும் விரிபொழில்' (தே. 4079)

என்று தாழை யானைக்கொம்பு போலத் தோற்றமளிக்கும் செய்தி,
'கோடு உடைந்த(ன்)ன தாழையும்' (20)
என்று சூளாமணியில் இடம் பெறுகிறது.

'காரும் கருங்கடல் நஞ்சு அமுதுண்டு' (7415)
'கார் ஆர் கடலின் நஞ்சு உண்ட கண்டர்' (7781)
என்று தேவாரத்தில் 'கருங்கடல்' என்று தேவர்கள் கடைந்த பாற்கடலைக் கூறும் மரபு,

'கடைந்த கார்க்கடல் போல்' (1353)
என்று சூளாமணியுள்ளும் கொள்ளப்பட்டுள்ளது.

கிளிகளை வெருட்டும் ஒலியை 'ஆயோ' என்று குறிப்பிடும் வழக்கம்,
'ஆயோ என்னும் அண்ணுமலையாரே' தே. 744
என்ற தேவாரத்திலிருந்து,
'ஆயோ என மொழியும் அம்மழலை இன்இசையால்' (1658) என்று சூளாமணியிலும் எடுத்தாளப்பட்டுள்ளது.

தேவாரத்தில் காணப்படும்
'தளை அவிழ் கமலத்தவிசின் மேல் அன்னம்
தன் இளம்பெடையொடும் புல்கி,
விளை கதிர்க்கவரி வீச, வீற்றிருக்கும்' (4087)

என்ற வருணனை, சூளாமணியில்
'அழல் நக்கு அலர்ந்த அரவிந்த அமளி சேர்ந்த இளஅன்னம்
கழனிச் செந்நெல்கதிர் என்னும் கவரி வீசக் கண்படுக்கும்' (1749)
என்று எடுத்தாளப்பட்டுள்ளது.

கூழைமை என்ற சொல்,
'கூத்தனுக்கு ஆட்பட்டு இருப்பது அன்றோ நந்தம் கூழைமையே' (4953)
என்று தேவாரத்தில் கடமை என்ற பொருளில் வந்துள்ளது போலவே,
'கூழைமை பயின்ற கூற்ற அரசனை' (1858)
என்று சூளாமணியுள்ளும் வந்துள்ளது.

இவ்வாற்றால், புறச்சமய நூல்களாகிய பெருங்கதை, சிந்தாமணி, சூளாமணி என்பவற்றுள்ளும் தேவாரச் சொற்கள், சொற்றொடர்கள், கருத்துக்கள் ஆகியவை இடம்பெற்றுள்ள செய்தி புலப்படுகிறது.

## பெரிய புராணத்துள் தேவாரச் சந்தமும் பதிகவிளக்கமும்

12 ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் வாழ்ந்த சேக்கிழார் தம் பெரிய புராணத்தில் தேவாரச் சந்தங்கள் பலவற்றைக் கையாண்டுள்ளார்; மூவரும் பாடிய பதிகங்களைக் குறிப்பிடுமிடத்து அவ்வப் பதிகத்தின் சந்தத்திலேயே சில பாடல் அமைத்துள்ளார். எடுத்துக்காட்டாக,

'கொத்தார்மலர்க் குழலாள்ஒரு கூறாய்அடி யவர்பால்
மெய்த்தாயினும் இனியானைஅவ் வியன்நாவலர் பெருமான்
பித்தாபிறை சூடியெனும் பெரிதாம்திருப் பதிகம்
இத்தாரணி முதலாம்உல கெல்லாம்உய எடுத்தார்' தடுத்தாட். 74

'நீற்றால்நிறை வாகிய மேனியுடன்
நிறைஅன்புறு சிந்தையில் நேசமிக
மாற்றார்புரம் மாற்றிய வேதியரை
மருளும்பிணி மாயைஅ றுத்திடுவான்
கூற்றாயின வாறுவி லக்ககிலீர்
எனநீடிய கோதில்தி ருப்பதிகம்
போற்றாலுல கேழின்வ ருந்துயரும்
போமாறெதிர் நின்றுபு கன்றனரால்' திருநாவுக்.70
என்பனவற்றைக் கூறலாம்.

ஞானசம்பந்தப்பெருமான் அருளிய 'தோடுடைய செவியன்' (தே.1) என்ற பதிகத்துக்கு, அவரது புராணத்தில் ஆறு பாடல்களால் (75-80) விளக்கம் தந்துள்ளார் சேக்கிழார்; அவர் அருளிய 'வாழ்க அந்தணர்' (3372-83) என்ற பதிகத்திற்கு 25 பாடல்களில் (820-844) விளக்கம் தந்துள்ளார்; ஞானசம்பந்தர் தம் திருமடத்தில் அமணர்களால் இடப்பட்ட தீ 'பையவே சென்று பாண்டியற்கு ஆக' (தே. 3339) என்று குறிப்பிட்ட தொடருக்கு,

'பாண்டிமாதேவியார் தமது பொற்பில்
பயிலும்நெடு மங்கலநாண் பாதுகாத்தும்,
ஆண்டகையார் குலச்சிறையார் அன்பினாலும்,
அரசன்பால் அபராதம் உறுதலாலும்,
மீண்டுசிவ நெறிஅடையும் விதியினாலும்,
வெண்ணீறு வெப்பகலப் புகலிவேந்தர்
தீண்டியிடப் பேறுடையன் ஆதலாலும்,
தீப்பிணியைப் பையவே செல்க என்றார்' ஞானசம். 705

என்று அழகான விளக்கம் தந்துள்ளார்.

## கம்பராமாயணத்துள் 'அட்டமூர்த்தி'

அடுத்து வந்த கம்பர்பெருமான், சிவபெருமானைக் குறிப்பிடும்

'எட்டு மாதிரத்து இறுதி நாளும் உற்று
அட்டமூர்த்தி தாள் பணியும் ஆற்றலான்' கம்பரா. 3825

என்பதும்,

'எனக்கும் எண்வகை ஒருவற்கும், இமையவர்க்கு இறைவன்
தனக்கும்' கம்பரா. 10053

என்று பிரமன்கூற்றாக வரும் தொடரும்,

சிவபெருமான் அட்டமூர்த்தியாய் உள்ளான் என்று தேவாரம் பல இடங்களிலும் (111,571,1984,2743,3342,4719,5281,7174,7320,8054 முதலியன) குறிப்பிட்ட செய்தியை உட்கொண்டதன் விளைவேயாகும்.

## ஞானசம்பந்தர்பால் பேராசிரியர் ஈடுபாடு

தொல்காப்பியப் பொருளதிகாரப் பிற்பகுதிக்குப் பேராசிரியர் வரைந்த உரை கிட்டியுள்ளது. அவர் நச்சினார்க்கினியரால் மூன்று இடங்களில் (தொல். பொருள். 46,96,238 ஆம் நூற்பாக்கள்) போற்றப்பட்டவர்.

அவர் 13 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவராதல் கூடும். அவர் தொல்காப்பிய மரபியலின்

'மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை
மரபுவழிப் பட்ட சொல்லி னான' (90)

என்ற நூற்பா உரையுள்,

"இனி, நிறைமொழிமாந்தர் மறைமொழி போல்வன சில மிறைக்கவி பாடினார் உளர் என்பதே பற்றி, அல்லாதாரும் அவ்வாறு செய்தல் மரபு அன்று என்றற்கும் இது கூறினான் என்பது; அவை சக்கரம் (சுழிகுளம்), கோமூத்திரிகை, ஏகபாதம், எழுகூற்றிருக்கை, மாலைமாற்று என்றாற்போல்வன." (ஞானசம்பந்தர் தேவாரப் பதிகங்கள்: 209,210,127,128,375 காண்க)

"இவை மந்திர வகையானன்றி வாளாது மக்களைச் செய்யுள் செய்வார்க்கு அகனைந்திணைக்கும் மரபு அன்று என்பது கருத்து. அல்லாதார் இவற்றை எல்லார்க்கும் செய்தற்குரியன என இழியக் கருதி அன்ன வகையான் வேறு சில பெய்து கொண்டு அவற்றிற்கும் இலக்கணம் சொல்லுப"

(தண்டியலங்காரச் சொல்லணியியல், யாப்பருங்கலம் இறுதிச்சூத்திர விருத்தியுரை இவற்றுள் சித்திரகவியின் பலவகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.)

இவ்வாறு குறிப்பிட்டிருப்பது கொண்டு, ஞானசம்பந்தர்பால் பேராசிரியர் கொண்ட பெருமதிப்பும், அவர் பாடிய மிறைக்கவிகள் மந்திரமொழி போல்வன என்று அவர் கொண்ட கருத்தும், தண்டியலங்காரம் போல்வன சித்திரகவி வகைகள் பல கற்பனைசெய்து கூறுவதற்கு ஞானசம்பந்தர் பாடல்களே மூல இலக்கியம் என்பதும் பெறப்படும்.

## ஆமாத்தூர்க் கலம்பகம்

திருமாலும் பிரமனும் சிவபெருமானுடைய அடிமுடி காண இயலவில்லை என்ற கருத்தை ஞானசம்பந்தர் பெரும்பாலும் தம் பதிகந்தோறும் ஒன்பதாம் பாடலில் குறிப்பிட்டுள்ளதாலும், ஏனைய இருவரும் இக்கருத்தைப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளதாலும், இக்கருத்து தமிழ்நாட்டில் மிகுதியும் பரவிவிட்டது. இச்செய்தி பெரும்பான்மையான சைவப் பிரபந்தங்களில் இடம்பெற்றுவிட்டது. மேலும் திருமாலைச் சிவபெருமான் தம் அம்பாகவும் காளைவாகனமாகவும் தேவியாகவும் கொண்டார் என்பதும், எலும்பு ஆமையோடு பன்றிக்கொம்பு இவற்றை மார்பில் பூண்டார் என்பதும் தேவாரத்தில் பயில இடம்பெற, பிற்காலப் பிரபந்தங்கள் அவற்றையும் குறிப்பிடத் தொடங்கின.

திருமால் சிவபெருமானுக்கு முப்புரத்தை அழிக்கும்போது அம்பாக இருந்தார், எப்பொழுதும் தேவியாகவும் உள்ளார் என்ற தேவாரச் செய்தி 14 ஆம் நூற்றாண்டினராகிய இரட்டையர்கள் இயற்றிய திருவாமாத்தூர்க் கலம்பகத்தில் சுவைபடக் கூறப்பட்டுள்ளது.

திருமாலுடைய இருப்பிடங்கள் ஆல்இலை, ஆதிசேடன், ஆயர்பாடி இல்லங்கள், பாற்கடல், திங்கள் என்பன. திருமால் சிவபெருமானுடைய அம்பு ஆதலின், இவை யாவும் சிவபெருமானுடைய அம்பறாத்தூணிகள் என்ற கருத்தில், இரட்டையர்

'ஆல்குழையோ அரவோ ஆயர்பாடி அருமனையோ
பாற்கடலோ திங்களோ தங்கும்ஆவம் பலபலவாம்;
மார்க்கமும் ஆகிநின்றார், மாதைநாதர், வலங்கொள் பம்பை
மேற்கரை கோயில் கொண்டார், புரம் சீறிய வெங்கணைக்கே' 61

என்று பாடியுள்ளனர். (ஆவம்-அம்பறாத்தூணி)

திருமால் திருமகளை மார்பில் கொண்டவர்; அவர் சிவபெருமானுக்குத் தேவியாவார் என்ற செய்தியை, 'தேவி திருமார்பில் உறை தேவி மணவாளர்' (72) என்று சிவபெருமானைத் திருமாலுக்குக் கணவர் என்று காட்டுமுகத்தான் தெரிவிக்கின்றனர், இரட்டையர்.

## வில்லிபாரதம்

திருமால் பன்றி வடிவெடுத்துக் கீழே தோண்டியும் திருவடியினைக் காணமுடியாதவாறு சிவபெருமான் இருந்தார் என்பது தேவாரத்தில் பல இடங்களில் காணப்படுவதால், அக்கதை தமிழகத்தில் மிகவும் பிரசித்தமாகவே, 15 ஆம் நூற்

றுண்டினராகிய வில்லிபுத்தூரார் தம் பாரதத்தில் அருச்சுனன் தவநிலைச் சருக்கத்தில், சிவபெருமான் பன்றியைப் பின் தொடர்ந்து சென்ற செய்தியைக் குறிப்பிடும் இடத்து,

'ஓர் ஏனம் தனைத்தேட ஒளித்தருளும்
இருபாதத்து ஒருவன் அந்தப்
போர் ஏனம்தனைத் தேடிக் கணங்களுடன்
புறப்பட்டான்' (87)

எனப் பன்றியால் தேடப்பட்டவர் மற்றொரு பன்றியைத் தேடிப் புறப்பட்டார் எனச் சுவைபடக் கூறுகிறார்.

## தக்கயாகப்பரணியுரை

தேவாரத்தில், வேள்வி செய்த தக்கனும் அவ்வேள்விக்கு வந்த தேவர்களும் பெரிதும் துன்புறுத்தப்பட்ட செய்தி பல இடங்களிலும் கூறப்பட்டுள்ளது. (208, 1407,2796,3152,4072,5016,6939,6994,7202,7396,8075,8224 முதலியன) இச்செய்தியை அடிப்படையாகக் கொண்டே, 12 ஆம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் ஒட்டக் கூத்தரால் தக்கயாகப்பரணி இயற்றப்பட்டது.

பதினைந்தாம் நூற்றுண்டில் வரையப்பட்ட தக்கயாகப்பரணி உரையில் தேவாரக்கருத்துக்களும் தேவாரப்பாடல்களும் மேற்கோளாக வந்துள்ளன.

'இட்ட விற்கள் இரண்டும் தங்கள்
இரண்டு விற்களும் என்னவே' (160)

உரை: தங்கள் வில்லாவன பிநாகமும் சார்ங்கமும் என அறிக. விட்ணு ஈசுவரருக்குத் தேவி. ['அரி அலால் தேவி இல்லை, ஐயன் ஐயாறனார்க்கே' (4567) என்பது தேவாரம்.]

'ஏயேய் இமவான் மகளார் மகனே' (194)

உரை: ஏயேய் இமவான் மகளார் — இசையை ஒக்கும் உமாபரமேசுவரி; இன்னும், இசையைப் பொருந்தும் பரமேசுவரி என்றும் ஆம்; இசை மகாதேவர் ஆதலால். ['ஏழிசையாய், இசைப்பயனாய்' என்பது தேவாரம் (7762)]

'புக்குப் பெருமானடி சேவடியில்
பொன்மாமலர் கொண்டு புனைந்து' (323)

உரை: பெருமானடி என்பது மகாதேவர் திருநாமம்; இதில் 'கள்' என்பது தொக்கது என்பாரும், இல்லை என்பாரும் உளர். 'பேய் பேய் என்ன வருவார் அவர் எம்பெருமான் அடிகளே' (தேவாரம் - 2344) இத்திருப்பாட்டு உணர்க. பெருமானும் அடிகளும் அவரே. பெருமான் என்பது பெம்மான் என்றுமாம். 'பிரமபுரத்து உறை பெம்மான்' (தேவாரம் -1370) என்னும் ஏகபாதத்தில் கண்டுகொள்க.

'ஆடும் மஞ்சனமும் கொதித்தது
இருப்பரோ தனி ஐயரே' (332)

உரை: ஆடும் மஞ்சனம் - அக்கினி; 'அங்கமே பூண்டாய் அனல் ஆடினாய்' (தேவாரம்- 7227) என்னும் திருப்பாட்டில் கண்டுகொள்க.

'கால்களால் உரிய கங்கையும்' (417)

உரை: 'உரிய கங்கை' என்றதனால், கங்காதேவியையே கொள்க, உயர்திணையாக; 'கங்கையாளோ வாய் திறவாள்' (தேவாரம் - 7278) என்பதை உணர்க.

'சிங்கப் பசுந்தோல்கொடு ஏகாசமிட்டும்' (551)

உரை: சிங்கப் பசுந்தோல் என்றது, பண்டு இரணியனைச் சங்கரித்த சிங்கரூபத்தைச் சிம்புளாய் இருஞ்சிக்கொண்டு உரித்தருளிய தோலால் ஏகாசமிட்ட கதையை நினைந்து; 'சிங்கத்து உரி மூடுதிர், தேவகணம் தொழ நிற்றீர்' என்பது திருப்பாட்டு (தே. 7252).

'யானை யாளி பரி' (594)
உரை: யாளி வாகனம் ஆதற்கு, 'யாமாமா நீ யாமா மாயாளீ' (தேவாரம் - 4057) என்பது மேற்கோள். இது திருமாலைமாற்று.

இவ்வாறு இலக்கிய உரைக்கு மேற்கோளாகத் தேவாரப் பாடல்களும் தேவாரக் கருத்துக்களும் எடுத்தாளப்பட்டுள்ளன.

## அருணைக்கலம்பகம்

16 ஆம் நூற்றாண்டினரான சைவ எல்லப்ப நாவலர், அருணைக்கலம்பகத்தில், திருமால் சிவபெருமானுக்கு அம்பாயிருந்த தன்மையை மடக்கணியில்

'நாகம் எடுத்தவ ரம்பானார், நாலு மறைக்குவ ரம்பானார்' (26) என்று சுட்டுகிறார். (எடுத்தவர் அம்புஆனார், வரம்பு ஆனார்)

சிவபெருமானிடத்து ஈடுபட்ட தலைவி ஒருத்தியின் நிலையைத் திருமாலோடு சிலேடையாக அமைத்து,

'மேலாடை தோற்று, அணி சங்கு ஆழி கைவிட்டு, மென்சிலம்பின்
காலால் வருந்தி, நிலம் கீறும் கோலத்தைக் கண்டிருந்தும்,
ஆலாலம் உண்டவர் அண்ணாமலையர் தம் அன்பர்க்கன்றி
மாலானவர்க்கு இரங்கார்கொல் இங்ஙனே ஒரு வன்கண்ணரே' (32)
[சங்காழி-சங்குவளையல், சங்கும் சக்கரமும்; சிலம்பு-கால்அணி, மலை; கோலம்-அழகு, பன்றி; மாலானவர் - விருப்பமுடையவர், திருமால்]
என்று பாடியுள்ளார்.

திருமாலைச் சிவபெருமான் தேவியாகக் கொண்ட செய்தியை,
'ஆர் அணி துங்கன் நாரணி பங்கன் அருணேசன்' (72)
என்று குறிப்பிடுகிறார்.

சிவபெருமானுக்குத் திருமால் செந்தாமரை போன்ற தன் கண்ஒன்றைப் பறித்து அருச்சித்ததனால் தாமரை மலரும் ஓடை, திரிபுரத்தை அழிக்கும் பாணம், இடபக் கொடி, இடப வாகனம், இடத்தில் உறை தேவி என்ற நிலைகளில் அவன் இருப்பதாகத் தேவாரம் பல இடங்களில் கூறுவனவற்றைத் தொகுத்து ஒரே பாடலில் கூறி, அத்தகைய திருமாலுக்குச் சிவபெருமான் காட்சி கொடுக்காதது நீதியோ என்று வினவுகிறார் நாவலர்.

அப்பாடல் பின்வருமாறு:
'வரைக்கனக சாப! சோணகிரிப் புனித! காலகால!
மதிக்கும் நெடு மாயர் போலவே
தரைக்குள் இனியார் யாவர்? அவர்க்குமுன் நி(ல்)லாமல்
தழல்சிகரி ஆகல் நீதியோ?
விரைக் கமல ஓடை ஆவர்; புரத்தை முனி பாணம்ஆவர்;
விரித்த கொடி ஆவர்; ஈதுஅலால்
இரக்கும் மனைதோறும் ஏறி நடத்தும் எருது ஆவர்; மேவி
இடத்தில் உறை தேவி ஆவாரே!' (42)

சிவபெருமான் நகம், சிரிப்பு, நெற்றிக்கண்பார்வை இவற்றாலேயே பிறரை

அழித்தலின் அவருக்குச் சூலம் மழு முதலிய படைகள் தேவையில்லை என்ற கருத்தில்,

'காலில் துலங்கும் நகத்தாலும்,
கையில் பொலிகூர் நகத்தாலும்,
சீலத்து அரக்கன் உரம் கொண்டீர்!
திசைமா முகனைச் சிரம் கொண்டீர்!
மேலைப் புரத்தை நகைத்து எரித்தீர்!
வில்வேள் புரத்தைப் பகைத்து எரித்தீர்!
சூலப்படை ஏன், மழுப்படை ஏன்,
சுமந்தீர்? அருணை அமர்ந்தீரே!' (22)

என்று குறிப்பிடுகிறார். திரிபுரத்தைச் சிவபெருமான் சிரிப்பினால் எரித்தார் என்பது தேவாரச் செய்தியே (3102); ஏனையவும் தேவாரச் செய்திகளே.

## குமரகுருபரர் பாடல்

சைவ எல்லப்பநாவலர் சிவபிரானுடைய திருவடியின் நகங்களுக்கு இராவணனைக் கயிலைமலையடியில் அழுத்தி ஒறுத்த சிறப்பினைக் கூறவும், 17 ஆம் நூற்றாண்டினராகிய குமரகுருபரர் சிவபெருமான் திருவடிக்குக் காலனை ஒறுத்த சிறப்பினைச் சுட்டி ஏனைய செய்திகளோடும் இணைத்து,

'வில்மதனை வென்றது அலர்விழியே; ஒன்னார்தம்
பொன்எயில் தீமடுத்தது இன்னகையே; பூமிசையோன்
தார்முடி கொய்தது கூர்உகிரே; ஆர்உயிர் உண்
கூற்றுஉயிர் உண்டது அடித்தலமே; ஏற்றான்
பரசும் பினாகமும் சூலமும் என்னே,
கரமலர் சேப்பக் கொளல்?' (501)

என்று குறிப்பிடுவாராயினர். [தே. 1802,1342,4976,212]

சிவபெருமான் பாம்பினை அணிகலன்களாகப் பூணுபவன் (தே. 6483) என்பதனை உட்கொண்டு,

'திருமுடியில் கண்ணியும் மாலையும் பாம்பு
திருமார்பில் ஆரமும் பாம்பு — பெருமான்
திருவரையில் சுட்டிய கச்சையும் பாம்பு
பொருபுயத்தில் கங்கணமும் பாம்பு' (484)

என்று வருணித்துள்ளார்.

சிவபெருமானுக்கு உமாதேவியும் திருமாலும் தேவியாவர் ஆதலின்,

'பூந்தண் பசுந்துழாய்ப் போது நறுவிரி
தேந்தண் திரள்திண்தோள் தேவற்கும் தேவிக்கும்
காந்தன்' என்றும், (491)

'ஒன்றே உடம்புஅங்கு; இரண்டே இடும்பங்கு; உடம்புஒன்று இலார்' (110)

என்றும்,

'ஒருபாதி மால் கொள, மற்றொரு பாதி உமை கொளவே,
இருபாதியையும் இழந்தான், புராரி' (தனிப்பாடல்)

என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார். (தே. 1152,4567)

'உரம் கொள் பல் கலன் என்பு, அரவு, ஆமையே,
உணர்வு உறுமையும் என் பரவாமையே' (142)

என்று சிவபெருமான் மார்பில் எலும்பு அரவு ஆமை (தே. 2) பூண்ட செய்தியை

மடக்கு என்னும் தொடைநயம் தோன்றக் குறிப்பிடுகிறார்.

இறைவன் அட்டமூர்த்தியாய், அம்மையப்பனாய், ஒருவன் எனவோ ஒருத்தி எனவோ கூற இயலாது, 'ஒருவர்' என்று குறிப்பிடுமாறு இருக்கும் செய்தியை,

'அருவருக்கும் உலகவாழ்வு அடங்க நீத்தோர்க்கு
ஆனந்தப் பெருவாழ்வாம் ஆடல் காட்ட,
மருஅருக்கன் மதிவளிவான் யமானன் தீநீர்
மண்எனும்எண் வகைஉறுப்பின் வடிவு கொண்ட
ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உருவுஒன் றால்; அவ்
உருவைஇஃது ஒருத்தன்என்கோ? ஒருத்தி என்கோ?
இருவருக்கும் உரித்தாக 'ஒருவர்' என்றோர்
இயற்சொல்இலது எனின், யான்மற்று என்செய் கேனே!' (534)

என்று நயம்படக் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

## பிள்ளைப்பெருமாளையங்கார் பாடல்

17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் இயற்றிய திருவரங்கக் கலம்பகத்தின்,

'பாதியாய் அழுகியகால் கைய ரேனும்
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தா ரேனும்
ஆதியாய் அரவணையாய் என்ப ராகில்
அவரன்றோ யாம்வணங்கும் அடிக ளாவார்!
சாதியால் ஒழுக்கத்தால் மிக்கோ ரேனும்
சதுர்மறையால் வேள்வியால் தக்கோ ரேனும்
போதின்நான் முகன்பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றாதார் புலையர் தாமே' (15)

என்பது,

'சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வான்ஆளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்ல ராகில்;
அங்கம்எலாம் குறைந்துஅழுகு தொழுநோ யரா(அ)ய்
ஆஉரித்துத் தின்றுஉழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்ப ராகில்
அவர்கண்டீர், நாம்வணங்கும் கடவு ளாரே!' (7193)

என்ற தேவாரப்பாடலின் யாப்பு, சொல், சொற்றொடர், பொருளமைப்பு என்பனவற்றை ஒருபுடை கொண்டதாகும்.

இனி, தேவாரம் இலக்கணச்செய்திகளுக்கும் சாத்திரச்செய்திகளுக்கும் எடுத்துக்காட்டாக அமையுமாற்றை, 18 ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற இலக்கண உரை சாத்திரஉரை இவைகொண்டு சுருங்கக் காண்போம்.

## இலக்கண உரையில் தேவாரம்

நன்னூல் எழுத்தியலில் மொழிஇடைப்போலி பற்றிய
'ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகான் உறழும் என்மரும் உளரே' (124) என்ற நூற்பா, ஐகாரத்தின் பின்னும்

யகர ஒற்றின் பின்னும் இயல்பாய் வரும் நகரத்துக்கு ஞகரம் அருகிப் போலியாக வரும் என்ற செய்தியைச் சொல்லுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக விருத்தியுரை யாசிரியரான சங்கரநமச்சிவாயப்புலவர்,

'செய்ஞ்ஞின்ற நீலம் அலர்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின்று எரியும் விளக்குஒத்த நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற ஆடல்கண் டால்பின்னைக் கண்கொண்டு காண்பதுஎன்னே?' (4943)

என்ற தேவாரப்பாடலைத் தந்துள்ளார்.

வினையெச்சங்கள் காரண காரியம் இன்றியும் வரும் என்பதற்கு நன்னூல் வினையியல் 25 ஆம் நூற்பா உரையில்,

'கடிக்கமலம் முகம்காட்ட ........... கருநெய்தல் கண்காட்டும்' (தே. 1383) என்ற தேவாரப் பாடற்பகுதியை எடுத்துக்காட்டாகத் தருகிறார்.

## சைவசமயச்சாத்திர உரைகளிடைத் தேவாரம்

18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிவஞான சுவாமிகள் தாம் இயற்றிய சிவஞான சித்தியார் சுபக்கப் பொழிப்புரையில் முதல் சூத்திரத்தின் மூன்றாம் அதிகரணத் தொடக்கப் பாடலின் (60)

'அயன்தனை ஆதி ஆக அரன் உரு என்பது என்னை'

என்ற அடிக்குப் பொருள் கூறுங்கால், அரன்உரு என்ற தொடருக்கு, அரன் உருவோடு ஒத்த உரு என்று பொருள் கூறி, 'அரன்உரு' என்னும் உவமைத் தொகை,

'செய்யதாமரைமேல் அன்னமே அனைய சேயிழை, திருநுதல் செல்வி,
பையர வல்குல் பாண்டிமாதேவி, நாடொறும் பணிந்து இனிது ஏத்த' (தே. 4094)

என்பதன்கண் உள்ள 'பையரவல்குல்' போல் நின்றது எனவும் குறிப்பிடுகிறார்.

'சத்திதன் வடிவு ஏது என்னில்' (62)

என்ற பாடலின் ஈற்றிலுள்ள 'ஞானன் மருவிடும் கிரியை எல்லாம்' என்ற தொடரில், 'ஞானம்' என்பது அம்முக்கெட்டு உருபு ஏற்று 'ஞானன்' என நின்றது என்பதற்கு எடுத்துக்காட்டாகப் 'பெற்றம்' என்பது அம்முக் கெட்டுப் 'பெற்று' என்று அமைந் துள்ள ஞானசம்பந்தர் தேவாரப் பாடலடியாகிய

'பெற்றொன்று உயர்த்த பெருமான்' (3382)

என்பதனையும்,

'நாகம்' என்பது அம்முக் கெட்டு வருமொழி 'அணை' என்பதனோடு பொருந்தி 'நாகணை' என்று வரும் தேவார அடியாகிய

'கோள் நாகணை யானும் குளிர் தாமரையானும் (872)

என்பதனையும் குறிப்பிடுகிறார்.

சிவஞான மாபாடியத்தில், தொடக்கத்தில் சிறப்புப்பாயிர அடியாகிய

'மலர்தலை உலகின் மாயிருள் துமிய'

என்ற அடியில் உள்ள 'மாயிருள்' என்ற தொடர் பற்றிக் குறிப்பிடும்போது, "மா-பெருமை; ஆகாரம் முன்னும் யகரம் உடம்படுமெய்யாய்ச் சிறுபான்மை அருகி வருதலை,

'மாயிரு ஞாலம் எல்லாம்' (மலர்அடி வணங்கும் போலும்) (4707) என்றாற் போலக் கொள்க" என்று தேவாரத் தொடரை எடுத்துக்காட்டாகத் தந்து விளக்குகிறார்.

'கல்லால் நிழல்மலை, வில்லார் அருளிய, பொல்லார் இணைமலர், நல்லார் புனைவரே'

என்ற மங்கலவாழ்த்துப் பாடலில் உள்ள அருளிய என்ற சொல்லின் இலக்கணத்தை விளக்கும்போது, "அருளிய என்பது செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; 'உண்ணிய புகில்' என்றாற்போல. அது 'புனைவர்' என்னும் பிற வினைமுதல் வினையைக் கொண்டு முடிந்தது" என்று குறிப்பிடுகிறார்.

'உண்ணிய புகில்' என்ற தொடர்,

'விண்உற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகில்அவை ஒன்றும் இல்லையாம்' (4275)

என்ற தேவாரப் பாடலில் உள்ள தொடராகும்.

முதல் சூத்திரம் 3 ஆம் அதிகரண உரையில், "பொதுவாகச் சிவன் என்று கூறியொழியின் அது மங்கலம் தருபவன் என்ற பொருளில் எல்லாத் தெய்வங்களுக்கும் உரியதாக முடியும் என்ற கருத்தான் 'சிவனெனும் நாமம் சிவனுக்கே உரித்து' என்று செவியுறுத்தாதவழிப் பொதுவகையான் மங்கலப்பொருள் பற்றி ஏனைப் பொருள்களினும் செல்லுமாகலின், அதனை நீக்குதற்கு அங்ஙனம் செவியறிவுறுப்பது, எய்தியது ஒருமருங்கு மறுப்பதாம் என்க" என்று கூறுமிடத்தே,

'சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி அம்மான்' (தே. 5227) என்ற திருநாவுக்கரசர் வாக்கினை நினைவிற்கொண்டுள்ளார்.

பத்தாம் சூத்திரம் 2 ஆம் அதிகரண உரையில் உள்ள

'நண்ணனல் வேவாத நற்றவர் தம்மினும்
பண்ணமர மாச்செலுத்தும் பாகரினும்'

என்ற வெண்பா அடிகளுக்கு விளக்கம் தரும்போது,

"'நள்ளனல்' என்பது 'நண்ணனல்' என மரீஇயிற்று, 'நீணுல கெலாம்' என்புழிப் போல" என்று குறிப்பிட்டுள்ளார்.

'நீணுலகெலாம்' என்பது,

'மாணி பால்கறந்து ஆட்டி வழிபட
நீணுலகு எலாம் ஆளக் கொடுத்த என்
ஆணியை, செம்பொன் அம்பலத்துள் நின்ற
தாணுவை, தமியேன் மறந்து உய்வனோ?' (5254)

என்ற தேவாரப் பாடலில் உள்ள தொடராகும்.

இனிச் சாத்திரக் கருத்துக்களுக்கும் தேவாரம் மேற்கோளாமாற்றைக் காண்போம்:

சிவஞான சித்தியார் முதல் சூத்திரம் 43 ஆம் பாடலில் உள்ள

'எந்தைதான் இன்னன் என்றும், இன்னது ஆம் இன்னது ஆகி
வந்திடான் என்றும் சொல்ல வழக்கொடு மாற்றம் இன்றே'

என்ற அடிகளுக்கு விளக்கம் தரும்போது, "'எந்தையாரவர் எவ்வகையார் கொலோ' என்ற பாசுரமும் இது" என்று முனிவர் குறிப்பிட்டுள்ளார். இங்கு

வெந்த சாம்பல் விரைஎனப் பூசியே
தந்தையாரொடு தாய் இலர்; தம்மையே
சிந்தியா எழுவார் வினை தீர்ப்பரால்;
எந்தையார்அவர் எவ்வகையார் கொலோ?' (3374)

என்ற ஞானசம்பந்தருடைய திருப்பாசுரப் பாடலடி மேற்கோளாக வந்துள்ளது.

ஒன்பதாம் சூத்திரம் மூன்றும் அதிகரணம் 10 ஆம் பாடலில் உள்ள
'கந்தமலர் புகை ஒளி மஞ்சனம் அமுது முதலாக்
கண்டனஎலாம் மனத்தால் கருதிக்கொண்டு
சிந்தைதனில் அர்ச்சிக்க'

என்ற தொடருக்கு விளக்கம் எழுதும்போது "......... கருதிக்கொண்டு சிந்தையினில் அர்ச்சிக்க எனவே, அவற்றை அங்ஙனம் கற்பித்துக் கோடலும் அனுவாத முகத் தால் பெற்றும். மனத்தால் கருதுமாறு,

'காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக' (4908)
என்பது முதலாய திருவாக்குக்களானும் அறிக" என்று குறிப்பிடும் இடத்துத் திருநாவுக்கரசர் பாடலடி மேற்கோளாக வந்துள்ளது.

மகாருத்திரனுகிய பரமசிவனைக் குணிருத்திரனுக வைத்து எண்ணக்கூடாது என் பதற்கு,

'தேவராயும், அசுரராயும், சித்தர், செழுமறை சேர்
நாவராயும், நண்ணு பாரும் விண் எரி கால் நீரும்
மேவராய, விரைமலரோன் செங்கண்மால் ஈசன் என்று
மூவராய, முதல்ஒருவன் மேயது முதுகுன்றே' (570)

'வரி ஆய மலரானும் வையம்தன்னை
உரிதுஆய அளந்தானும் உள்ளுதற்கு அங்கு
அரியானும் — அரிதுஆய கள்ளில் மேயான்,
பெரியான் என்று, அறிவார்கள் பேசுவாரே' (1290)

'மாவை உரித்து அதள் கொண்டு அங்கம் அணிந்தவனை,
வஞ்சர் மனத்து இறையும் நெஞ்சு அணுகாதவனை,
மூவர் உருத் தனது ஆம் மூலமுதல்கருவை' (8093)

'படைத்து, அளித்து, அழிப்ப, மும்மூர்த்திகள் ஆயினை' (1382-4)
என்ற தேவாரப் பாடல்களையும் பாடல் அடிகளையும் மேற்கோளாகச் சுட்டுகிறுர். (சிவஞான பாடியம் - பிரமாணவியல்-முதற் சூத்திரத் தொடக்கவுரை)

"நித்தப் பொருள்கள் பொதுமையில் சுட்டி அறியப்படுமாயினும் அனுபவநிலை யில் சுட்டி அறியப்படா என்பது,

'ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில் அளவு இல்லை; கிளக்க வேண்டா' (3375)

'ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா' (3376)
எனவும் ஓதுவனவற்றுல் அறியப்படும்" என்று முதல்சூத்திர முதல்அதிகரண உரை யில் குறிப்பிடுகிறுர். முதல் சூத்திரம் 2 ஆம் அதிகரணத்துள்,

'நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்தில்'
என்ற வெண்பா உரையில், "நொடித்தல்-அழித்தல்; அது 'நொடித்தான்மலை' என் பதனுனும் அறிக" என்று குறிப்பிட்டுள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் 100 ஆம் பதிகம் 'நொடித்தான் மலை' பற்றியது என்பது பிரசித்தம்.

முதல் சூத்திரம் மூன்றும் அதிகரணத்துள்,
'ஒன்றலா ஒன்றுல் உளதாகி நின்றவாறு'
என்ற வெண்பா உரையில்,

"'ஒன்றலா' என்பது உருவும் அருவுமாகிய இருகூற்றுப் பிரபஞ்சத்துள் ஒன்றல் லாத என்றவாறு. ஒன்று என்பது இலக்கணத்தான் வேறுபாடில்லது என்னும் பொருட்டு. 'எந்தையார்அவர் எவ்வகையார்கொலோ' என்றதும் அது" என்று குறிப்பிட்டுள்ளார்.

'வெந்த சாம்பல் விரை எனப் பூசியே,
தந்தையாரொடு தாய் இலர்; தம்மையே
சிந்தியா எழுவார் வினை தீர்ப்பரால்;
எந்தையார்அவர் எவ்வகையார்கொலோ!' (3374)

என்ற ஞானசம்பந்தர் திருப்பாசுரப் பாடல் இங்கும் எடுத்துக்காட்டாகத் தரப்பெற் றுள்ளது.

இரண்டாம் சூத்திரம் இரண்டாம் அதிகரண உரையில் வரும்
'ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவலிட்டாங்கு, அவை அவனது ஆக்கினையாக லான்' என்ற தொடரை விளக்குமிடத்து, "பாடிகாவல் என்பது நெறியின் வழீஇ யினரை வழக்கு வினாய் ஒப்ப நாடிச் செய்யும் தண்டத்தொழில் உணர்த்துவதொரு சொல்.

'கோடிகாவனைக் கூறீரேல் கூறினேன்:
பாடிகாவலில் பட்டுக் கழிதிரே' (6019)

'கோடிகாவனைக் கூறாத நாள்எலாம்
பாடிகாவலில் பட்டுக் கழியுமே' (6023)

எனத் திருப்பாட்டு ஓதியதூஉம் அது" என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரமம் பிரபஞ்சத்துக்கு முதற்காரணம் என்பதற்கு மேற்கோளாக இரண்டாம் சூத்திர இரண்டாம் அதிகரண பிரமமுதற்காரணவாத மறுப்பில்,

"'இரு நிலனாய், தீஆகி, நீரும்ஆகி,
இயமானனாய், எறியும் காற்றும்ஆகி,
அரு நிலைய திங்களாய், ஞாயிறுஆகி,
ஆகாசமாய், அட்டமூர்த்திஆகி,
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறர் உருவும் தம் உருவும் தாமேஆகி,
நெருநலையாய், இன்றுஆகி, நாளைஆகி,
நிமிர் புன்சடையடிகள் நின்ற ஆறே!' (7174)

என நின்ற திருத்தாண்டகத்தும் பிறாண்டும் முதல்வனே எல்லாமானான் என்பத னானும்" எனப் பூர்வபக்கத்தில் குறிப்பிடுகிறார்.

இரண்டாம் சூத்திர இரண்டாம் அதிகரணத்தில் பிருதிவிதத்துவம் பற்றிக் குறிப்பிடும்போது,

"'இரு நிலன்அது புனலிடை மடிதர, எரி புக, எரிஅது மிகு
பெரு வளியினில் அவிதர, வளி கெட வியன் இடை முழுவது கெட,
இருவர்கள் உடல்பொறையொடு திரி எழில் உரு உடையவன்' (234)

எனச் சங்காரமுறை பற்றி வேதவாக்கியப் பொருளை வலியுறுத்தோதிய திருப்பாட்டு" எனக் குறிப்பிடுகிறார்.

ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலங்களையும் ஆறும் சூத்திர உரையில் 'அசத்து' என்று குறிப்பிட்டு, அதற்கு மேற்கோளாக, "'பொய்ம்மாயப் பெருங்கட லுள்' எனப் பிறாண்டும் இவ்வாறு ஓதியதூஉம் என்க" என்று குறிப்பிடுகிறார். இத் தொடர்,

'பொய்ம் மாயப் பெருங்கடலில், புலம்பாநின்ற
புண்ணியங்காள்! தீவினைகாள்! திருவே!' (6523)
என்று தொடங்கும் திருநாவுக்கரசர் திருத்தாண்டகத்துள் உள்ளது.

ஆறும் சூத்திரம் முதல்அதிகரண வுரையில்,
'அசத்து அறியாய் கேள் நீ' என்ற தொடரை விளக்குமிடத்து, "'எந்தை, தாட்பால் வணங்கித் தலைநின்று இவை கேட்க' (3375) என்பார், 'கேள்நீ' என்றும்" என்று குறிப்பிடுமிடத்து, ஞானசம்பந்தர் தேவாரம் மேற்கோளாகிறது.

ஆறும் சூத்திரம் இரண்டாம் அதிகரண உரையில், "சிவன் என்னேடொப்ப நீயும் எண்குணங்களும்உடையை எனத் தெரிவித்துத் தன்னைப் போலாக்கி உதவி செய்தவழி....... சிவனைப் போலத் தன்வயத்தனாய் நின்று இன்புற்று வாழ்வன் என்பது பெறப்படுதலானும், 'உன்னைப் போல் என்னைப் பாவிக்கமாட்டேன்' எனவும் 'எண்குணத்துளோமே' எனவும் பிறுண்டும் ஆன்றோரெல்லாம் இவ்வாறே கூறுதலானும்" என்ற தொடரில்,

'வழித்தலைப் படுவான் முயல்கின்றேன்;
உன்னைப் போல் என்னைப் பாவிக்கமாட்டேன்;
சுழித்தலைப் பட்ட நீர்அது போலச் சுழல்கின்றேன்' (7789)
என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடலடியும்,

'நாஆர நம்பனையே பாடப் பெற்றோம்;...........
கோஆடி; "குற்றேவல் செய்கு" என்றாலும்,
குணம் ஆகக் கொள்ளோம்; எண் குணத்து உளோமே' (7225)
என்ற நாவுக்கரசர் திருத்தாண்டக அடிகளும் மேற்கோளாகச் சுட்டப்பட்டுள்ளன.

ஏழாம் சூத்திரம் முதல் அதிகரண உரையில்,
"சத்தின் முன்னர் அசத்தெல்லாம் சூனியமாகலின் அஃது அதனை அறிதல் கூடாது எனின், சத்தின் முன்னர் அசத்துச் சூனியம் என்றல்...........

'இரு நிலனாய், தீஆகி, நீரும்ஆகி' (7174)
எனவரும் இத்தொடக்கத்துச் சுருதிகளோடு முரணி மாயாவாதி கூற்றாய் முடியும்" எனத் திருத்தாண்டக அடியை மேற்கோள் காட்டியுள்ளார்.

எட்டாம் சூத்திரம் முதல்அதிகரண உரையில்,
"வேள்வி முதலியனவும் சிவபெருமானை நோக்கிப் பொதுநீக்கிச் செய்யின், அஃது ஏனைய போலப் பசுபுண்ணியம் ஆகலின்றிப் பொதுச் சிவபுண்ணியம் ஆம் எனக்கொள்க. இஃது உலகவினைக்கண்ணும் ஒக்கும். 'வேம்பினொடு தீங்கரும்பு விரவி எனைத் தீற்றி' என்று ஓதியதூஉம் இவ்வியல்பு நோக்கி என்க" என்று குறிப்பிடுமிடத்தில்,

'வேம்பினொடு தீங்கரும்பு விரவி எனைத் தீற்றி,
விருத்தி நான் உமை வேண்ட, துருத்தி புக்கு அங்கு இருந்தீர்!' (7703)
என்ற சுந்தரர் பாடலடி மேற்கோளாகச் சுட்டப்பட்டுள்ளது.

மேலும், "சிவபுண்ணியம் அபுத்திபூர்வம், புத்திபூர்வம் என்று இருவகைப் படும். அவற்றுள், அபுத்திபூர்வம் வேள்வி முதலியவற்றுள் போலப் பொதுநீக்கி அறியுமாறு இன்றிச் சிவபிரானை நோக்கிச் செய்வதூஉம், அந்நோக்கமும் இன்றி மாவலி முன்னைப் பிறப்பில் செய்தது போலச் செய்த வினை யாதானும் ஓர் ஆற்றான் சிவபிரானுக்குரிய பணியாய் முடிவதூஉம் என இருவகைப்படும்" என்று, எட்டாம் சூத்திர முதல்அதிகரண உரையில் குறிப்பிட்டுள்ளார்.

'நிறை மறைக்காடுதன்னில் நீண்டு எரி தீபம் தன்னைக்
கறை நிறத்து எலி தன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட,
நிறை கடல் மண்ணும் விண்ணும் நீண்ட வான்உலகும் எல்லாம்
குறைவு அறக் கொடுப்பர்போலும் — குறுக்கை வீரட்டனாரே' (4652)

என்ற திருநாவுக்கரசர் தேவாரம் மாவலி முன்னைப் பிறப்பில் செய்த செயலைக் குறிப்பிடுகிறது.

இவ்வாறு சிவஞான சுவாமிகள் சிவஞான சித்தியார் சுபக்கம் பொழிப்புரை, சிவஞானபோதபாடியம் என்ற இருநூல்களிலும் தேவாரப்பாடல்கள் பலவற்றை மேற்கோள்காட்டியிருப்பினும், திருப்பாசுரம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்ற பெயரானும் திருப்பாட்டு என்ற பொதுப்பெயரானுமே தேவாரப் பதிகங்களைக் குறிப்பிட்டிருப்பது குறித்துணரத்தக்கது.

இனி, 19 ஆம் நூற்றாண்டு பற்றிச் சிறிது நோக்குவோம்:

19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை சைவ மடத்துத் தொடர்புடையவராய் ஏறத்தாழ ஐம்பது நூல்கள் பாடியுள்ளார். அவற்றுள் தேவாரக் கருத்துக்கள் பலவாக வந்துள்ளன. ஒன்றிரண்டு காண்போம்:

| | |
|---|---|
| சிவபெருமான் சிங்கத்தோலைப் போர்த்தியவர் | தே. 7252 |
| திருமாலைத் தேவியாகக் கொண்டவர் | தே. 4567 |
| திருமாலுக்குச் சக்கரம் அளித்தவர் | தே. 202 |
| திருமாலின் பள்ளியாக உள்ள பாற்கடலில் தோன்றிய விடத்தை அருந்தியவர் | தே. 30 |
| திருமாலைத் திரிபுர சங்கார காலத்தில் அம்பாகக் கொண்டவர் | தே. 2004 |
| திருமால் தன் கண்இடந்து அர்ச்சிக்கப்பெற்றவர் | தே. 4312 |
| திருமாலைக் காளைவாகனமாகக் கொண்டவர். | தே. 6913 |
| திருமாலைக் காளைக்கொடியாகக் கொண்டவர். | தே. 275 |

சிவபெருமான் மோதிரமாக அணியத் திருமால் தன் படுக்கையாகிய ஆதிசேடனைக் கொடுத்தார் என்பது சிவபெருமான் சர்ப்பாபரணன் என்பதனை உட்கொண்டு ஆசிரியர் செய்த கற்பனையாம்.

இவைஅனைத்தும் வாட்போக்கிக் கலம்பகத்தின் இரண்டாம் தரவில்,

'குப்பாயம் கொடுப்பவனே கொழுங்கண்மலர் இடுபவனே
செப்பாய முலை உமையாய்த் திகழ்ந்து இடப்பால் உறைபவனே
வெருவு ஆழி கொள்பவனே விரல் ஆழி கொடுப்பவனே
மருவு ஆழி என்றுரைக்கும் மடைப்பள்ளி காப்பவனே
கை அம்பாய் எழுபவனே கருமுகிலாய்ச் சுமப்பவனே
வையம் பாய் வெள்விடையாய் வண்கொடியாய் உறுபவனே
தேரா ஓர் மனையாளைச் சேர்பவனே நெடுமால் என்று
ஓரா ஓர் புலவரெலாம் உவந்தேத்தப் பொலிவோய்! கேள்!'

என்று தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

திருஞானசம்பந்தர் பதிற்றந்தாதியிலும் திருஞானசம்பந்தர் ஆனந்தக்களிப்பிலும் பல அற்புதத் திருப்பதிகங்கள் தோன்றிய வரலாற்றைக் குறிப்பிட்டிருப்பதோடு, அவரை, 'வகைசெய் மூலமா இலக்கியமாகவும் மறையின், 'தகைசெய் பல்பொருள் முற்றவும் தமிழ் பொழி தருவை' (2740) என்று குறிப்பிடுகிறார். மகாவித்துவான் பிள்ளை அவர்கள்.

காந்திமதியம்மை பிள்ளைத்தமிழின் சிவபெருமான் பற்றிய இரண்டாம் காப்புப் பாடலில்

'தேனெழுகு செழுமலர்ப் பொழில் சுலவு கழுமலச்
சிறுகுழவி, நாவரசு, நல்
தென் நாவலூர் நம்பி, வாதவூர் எம்பிரான்,
திகழும் இந்நால்வர்தம் வாய்க்
கானெழுகும் அமுதமழைகொடு குளிர்ப்பித்திடக்
கண்டு, வெண்துண்டமதியும்
கங்கையும் மிலைந்து அவை தரும் குளிர்க்கு ஆற்றான்
கடுப்பக் கரத்தில் நுதலில்
வானெழுகு செந்தழல் இருத்திக் கரித்தோல்
வயங்கு திருமேனி போர்த்த
வள்ளலைப் பரசி எமது உள் அலைக்கும் கொடிய
மாசு அறுப்பாம்'

எனத் தேவாரம் பாடிய மூவரைப் பாராட்டியதோடு தேவாரக்கருத்தை உட்கொண்டு சிவபெருமானைக் கற்பனை தோன்ற வருணித்துள்ளார்.

19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இராமலிங்க சுவாமிகள் தம்முடைய திருவருட்பாவில் மூவர் தேவாரக் கருத்துக்களைப் பல இடங்களில் பாடியுள்ளார்.

இறைவன் ஐம்பூதங்களாகவும் அவற்றாலாகிய இப்பூமியிலுள்ள பொருள்களாகவும் உயிராகவும் சுவைப்பொருளாகவும் இருப்பதாகத் தேவாரம் குறிப்பிடும் செய்திகளை உட்கொண்டு,

'வானே! அவ் வான் உலவும் காற்றே! காற்றின்
வரு நெருப்பே! நெருப்பு உறு நீர்வடிவே! நீரில்
தான் ஏயும் புவியே! அப்புவியில் தங்கும்
தாபரமே!சங்கமமே! சாற்றுகின்ற
ஊனே! நல் உயிரே! உள் ஒளியே! உள்ளத்து
உணர்வே! அவ் வுணர்வு கலந்து ஊறுகின்ற
தேனே! முக்கனியே! செங்கரும்பே! பாகின்
தீஞ்சுவையே! சுவை அனைத்தும் திரண்ட தேவே!' (2095)

எனவும், (தே. 111,6723,6139,832,5383,6255,6875 முதலியன.)

'சொற்றுணை வேதியன் என்னும் பதிகச் சுருதியை நின்
பொற்றுணை வார்கழற்கு ஏற்றி அப்பொன்னடிப் போதினையே
நற்றுணையாக் கரை ஏறிய புண்ணிய நாவரசைக்
கற்று உள் நையாது இந்தக் கல்துணை ஆம் என் கடைநெஞ்சமே' (2302)

எனவும், [சொற்றுணை வேதியன்: நமசிவாயப் பதிகத்தின் முதல்பாடல் தே. 4273]

'சடையவ! நீ முன் தடுத்து ஆண்ட நம்பிக்குச் சற்றெனினும்
கடையவனேன் செயும் கைம்மாறு அறிந்திலன் — கால் வருந்தி.
நடை உற நின்னைப் பரவைதன் பாங்கர் நடத்தி, அன்பர்-
இடை வரும் உன்தன் இரக்கத்தைத் தான் வெளியிட்டதற்கே" (2305)

எனவும்,

'கள்ள நெஞ்சக னேனும் கடையனேன்,
வள்ளல்! நின் மலர் வார் கழல் பாதமே
உள்ளுவேன்; மற்றை ஓர் தெய்வ நேயமும்
கொள்ளலேன்; என் குறிப்பு அறிந்து ஆள்கவே!' (2653)

எனவும் (தே. 7220) தேவாரக் கருத்துக்கள் அடங்கிய பாடல்பல பாடியுள்ளார்.

இதுகாறும் நோக்கியவாற்றால், மூவர்தேவாரப் பாடல்களில் சுட்டப்பட்ட சிவபெருமான் செயல்கள், திருமால் பல்லாற்றானும் சிவனோடு தொடர்பு கொண்ட செயல்கள் முதலிய யாவும் பிற்காலச் சைவப் புலவர்களாலும் அருளாளர்களாலும் உட்கொள்ளப்பட்டன என்பதும், தேவாரம் இலக்கணம் - சாத்திரம் - சொற்பொருள் விளக்கம் - இவற்றிற்கு மேற்கோளாகக் கொள்ளப்பட்டது என்பதும், தமிழிலக்கியங்களிலே தேவாரத்திற்கு நிலைத்த தனியிடம் உண்டு என்பதும் பெறப்படும்.

## தேவாரப்பதிகங்களின் யாப்பு நிலை

ஞானசம்பந்தர் முதலிய மூவரும் திருப்பதிகங்கள் அருளிச்செய்த காலத்து வழக்கிலிருந்த இயற்றமிழ்நூல் தொல்காப்பியமேயாம். தொல்காப்பியத்தில் தனிப்பாக்களாகிய ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சி என்பனவும் கலப்புப்பாடல்களாகிய மருட்பா, பரிபாடல் என்பனவுமே குறிப்பிடப்பட்டுள்ளன. பாஇனங்களாகிய தாழிசை துறை விருத்தம் என்ற பகுப்பு தொல்காப்பியத்தில் இடம் பெற்றிலது.

சங்ககாலத்தில் வெண்பா முதலிய நால்வகைப் பாக்களே சான்றோர்களான் யாக்கப்பட்டன. சிலப்பதிகாரத்துக் கானல் வரி, வேட்டுவ வரி, குன்றக் குரவை, ஆய்ச்சியர் குரவை முதலியவற்றில் குறிப்பிடப்படும் இசைப்பாடல்களே பாவினங்களின் தோற்றத்துக்கு அடிப்படையாய் அமைவன. இவற்றையெல்லாம் கொச்சக ஒருபோகு என்று தொல்காப்பிய உரையாசிரியர்களாகிய பேராசிரியர், நச்சினார்க்கினியர் என்போர் கொண்டனர் (செய்யுளியல் 149). சீவகசிந்தாமணிப் பாடல்களைத் தாழிசை, துறை, விருத்தம் என்ற பகுப்பில் அடக்காது, தொல்காப்பியத்தின் அடிப்படையில் கொச்சக ஒருபோகு என்றே நச்சினார்க்கினியர் அதன் முதற் பாடலுரையில் குறிப்பிட்டுள்ளார்.

'தரவின்றாகித் தாழிசை பெற்றும்' (தொல். செய். 149) என்ற நூற்பா உரையில் நச்சினார்க்கினியர், "இனி, பத்தும், பதினொன்றும், பன்னிரண்டுமாகி ஒருபொருள் மேல் வரும் பதிகப்பாட்டு நான்கு அடியின் ஏறாது வருதலும், அங்ஙனம் வருங்கால் தாழ்ந்த ஓசை பெற்றும் பெறாதும் வருதலும், அவை இருசீர் முதல் எண்சீர் அளவும் வருதலும் என்று இன்னோரன்ன பல பகுதியெல்லாம் வரையறையின்றித் தழுவப்பட்டன. இவ்வேறுபாடெல்லாம் உளவேனும் தாழம்பட்ட ஓசை பெரும்பான்மை யாதலின் 'தாழிசை' என்றார். இங்ஙனம் தாழிசைப் பேறு விதந்து ஓதவே, ஒழிந்த உறுப்பெல்லாம் விலக்குண்டமை பெற்றாம்......... யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையது எனவே, தேவபாணியும் காமமுமேயன்றி வீடும் பொருளாம் என்பது ஆசிரியர் கருத்தாயிற்று. பதிகப்பாட்டிற்கு ஈண்டுக் கூறிய வேறுபாடுகள் திருவாய்மொழி, திருப்பாட்டு, திருவாசகம் என்கின்ற கொச்சக ஒருபோகுகளில் காண்க. அவை உலகவழக்கு அன்மையின் காட்டாமாயினும்" என்று குறிப்பிடுவதை நோக்க, தேவாரப்பதிகங்கள் உலகஇன்பத்தை மாத்திரம் குறிக்கோளாகக் கொள்ளாமல் பேரின்பமாகிய வீடுபேற்றினைப் பொருளாகக் கொண்டு பாடப்பட்டன ஆதலின், இவற்றை ஏனைய உலகியல் பற்றிய செய்யுட்களைப் போல இலக்கணநூல்களில் யாப்பியல் அமைப்புக்கு எடுத்துக்காட்டாகக் கூறுதல் கூடாது என்பதும், இவை இயலிசைச் சந்தப் பாடல்களுக்கு மூல இலக்கியமாமாறு இறைவன் திருவருள் பெற்ற சான்றோரால் அருளப்பட்டன என்பதும் நச்சினார்க்கினியர் கருத்தாகும். மூவர் தேவாரமும் 'திருப்பாட்டு' என்றே சிவஞானபாடியம் முதலியன குறிப்பிடுதலை முன்னர்க் கூறினாம்.

தேவாரத் திருப்பதிகங்கள் பலவகை ஓசைகளை உடையனவாய்ச் சீர்கள் மிக்கும் குறைந்தும் வருதலின், மிக்கும் குறைந்தும் வரும் சீர்களைக் கொண்டு எடுத்தல்

படுத்தல் நவிதல் ஓசையோடு இயங்கும் கலிப்பாக்களின் வகையாகவே தம் பதிகங்களை ஞானசம்பந்தப் பெருமானும்

'அம் தண் பூங்கச்சி ஏகம்பனை, அம்மானை,
கந்து அண் பூங்காழி ஊரன் கலிக்கோவையால்
சந்தமே பாட வல்ல தமிழ் ஞானசம்-
பந்தன் சொல் பாடி ஆடக் கெடும், பாவமே' (1600)

என்ற பாடலில் கலிக்கோவை என்றே குறிப்பிட்டுள்ளார்.

யாப்பிலக்கண நூல்களாகக் கூறப்படும் அவிநயம், காக்கை பாடினியம், பனம்பாரம், மயேச்சுரம் முதலியன யாவும் தேவாரம் பாடிய மூவர்காலத்துக்குப் பின்னும் யாப்பருங்கலத்தின் காலமாகிய 11 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திற்கு முன்னும் தோன்றியனவாகவே கருதவேண்டியுள்ளோம். அவை குறிப்பிடும் தாழிசை துறைவிருத்தங்கள் யாவும் நிரம்பா இலக்கணத்தனவே. கலிவிருத்தத்தில் கலித்தளையோ, வெளிவிருத்தத்தில் வெண்டளையோ, வஞ்சிவிருத்தத்தில் வஞ்சித்தளையோ காணப்படுமாறு இல்லை. தாழிசை, துறை நிலைகளும் இத்தகையனவேயாம். ஆகவே, நச்சினார்க்கினியர் முதலோர் தம் காலத்துக்கு மிக முற்பட்டனவாயினும் இவ்விலக்கண நூற்செய்திகளை ஏற்க உளம் கொண்டிலர். எனினும், இக்காலத்தில் யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை இவற்றையே மக்கள் பெரிதும் பயின்று பயன்படுத்துதலின் இந்நூல்களை அடிப்படையாகக் கொண்டு, மூவர் தேவாரமாகிய இயல் இசைப்பாடல்களின் யாப்பினை இக்காலச் சான்றோர் பகுத்துக் கூறியுள்ளனர்.

| | | |
|---|---|---|
| சம்பந்தர் தேவாரத்தில் | | |
| கலிவிருத்தம் | — 106 | பதிகங்கள் |
| ஆசிரிய விருத்தம் | — 88 | பதிகங்கள் |
| கலித்துறை | — 79 | பதிகங்கள் |
| கொச்சகங்கள் | — 54 | பதிகங்கள் |
| ஆசிரியத்துறை | — 27 | பதிகங்கள் |
| வஞ்சிவிருத்தம் | — 13 | பதிகங்கள் |
| வஞ்சித்துறை | — 9 | பதிகங்கள் |
| குறட்டாழிசை | — 3 | பதிகங்கள் |
| நாலடிமேல் வைப்பு | — 3 | பதிகங்கள் |
| ஈரடிமேல் வைப்பு | — 2 | பதிகங்கள் |
| இணைக்குறள் ஆசிரியம் | — 1 | பதிகம் |
| ஆக, | 385 | பதிகங்கள். |
| இவற்றுள் சொல்லணி வகையாகிய | | |
| திருவியமகம் | — 4 | பதிகங்கள் |
| திருச்சக்கரமாற்று | — 2 | பதிகங்கள் |
| ஏகபாதம் | — 1 | பதிகம் |
| சித்திரகவியாகிய கோமூத்-திரிகை | — 1 | பதிகம் |
| மாலைமாற்று | — 1 | பதிகம் |
| எழுகூற்றிருக்கை | — 1 | பதிகம் |
| ஆக, | 10 | பதிகங்கள். |

## நாலடிமேல் வைப்பு

கலிவிருத்தம் போன்று ஆனால் ஈற்றடி ஒருசீர் குன்றி வரும் நான்குஅடிகளைத் தொடர்ந்து, சிறிது ஓசை வேறுபட்டுக் கொச்சகம் போல வரும் இரண்டடிகள் பாடல்தோறும் பதிகம் முழுதும் வரப் பாடப்பட்ட பாடல்கள் 'நாலடிமேல் வைப்பு' எனப்பட்டன. இப்பதிகமும் நாலடிமேல் வைப்புப் பதிகம் எனப்பட்டது.

எ-டு : 'நிலையுறும் இடர்நிலை யாத வண்ணம்
இலையுறு மலர்கள்கொண் டேத்து தும்யாம்;
மலையினில் அரிவையை வெருவ, வன்தோல்
அலைவரு மதகரி உரித்தவனே!
இமையோர்கள் நின்தாள்தொழ எழில்திகழ் பொழில்புகலி
உமையாளொடு மன்னினை உயர்திரு வடிஇணையே' (2824)

இறுதியில் வரும் இரண்டடிகள் பதிகப் பாடல்கள்தோறும் வெவ்வேறாய் வருதலைக் காண்கிறோம். 'இடரினும் தளரினும்' (2834-43) ஒன்றாய் வருதலுக்கு எடுத்துக்காட்டு.

இந் நாலடிமேல்வைப்புப் பாவினம் ஒன்றனுள்ளும் அடங்காததாம்.

## ஈரடிமேல் வைப்பு

கலிவிருத்தம் போன்று நாற்சீருடையவாய் முதலில் அமைந்த ஈரடிகளைத் தொடர்ந்து, கொச்சகம் போன்று சிறிது ஓசை வேறுபட்டு வரும் இரண்டடிகள் பாடல்தோறும் பதிகம் முழுதும் வரப் பாடும் பாடல்கள் ஈரடிமேல் வைப்பாம். அக்கொச்சகம் போன்ற பகுதி பாடல்தோறும் வேறுபடுதலும், பதிகம் முழுவதும் ஒன்றாகவே இருத்தலும் என்ற இருவகையும் காணப்படுகின்றன.

எ-டு : 'தக்கன் வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
மிக்க செம்மை விமலன், வியன்கழல்
சென்று சிந்தையில் வைக்க, மெய்க்கதி
நன்ற தாகிய நம்பன் தானே' (2845)

கலிவிருத்தம் பெரும்பாலும் ஒரே விகற்பமுடையது. இதன் நான்கு அடிகளும் கலிவிருத்தமாக அமைக்கத் தக்கன எனினும், இரு விகற்பமுடைமையின், முதல் விகற்ப ஈரடிகளும் பாடலாய், பின்விகற்ப ஈரடிகளும் 'மேல்வைப்பு' எனப்பட்டன. இப்பதிகத்தில் ஈற்றடிகள் இரண்டும் பாடல்தோறும் வேறுபடுவன.

எ-டு : 'கொட்டமே கமழும் கொள்ளம் பூதூர்
நட்டம் ஆடிய நம்பனை உள்க,
செல்ல உந்துக — சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே!' (2856)

இப்பதிகம் முழுவதும் பின் 'மேல்வைப்பு அடிகள்' இரண்டும் 'செல்ல உந்துக சிந்தை யார்தொழ, நல்கு மாறருள் நம்பனே' என்பனவாகவே உள்ளன. இப்பின்னீரடிகளின் முதலடி நாற்சீர், ஈற்றடி முச்சீர் என்பதும் குறித்துணரத்தக்கது.

இவ்வீரடிமேல்வைப்பும் பாவினங்களுக்குக் கூறப்பட்ட இலக்கணத்துள் அடங்காது வேறாக உள்ளது. இவற்றைக் கொச்சகங்கள் என்ற பகுப்பில் அடக்குகிறோம்.

சம்பந்தர் திருமுறைகளில் 'திருவிராகம்' (I 19-22, 120-125; II 29-34,97,98,100,101; III 52,53,68-88) என்று பெயரிடப்பட்டுள்ளவை அராகத்திற்குரிய குற்றெழுத்துப் பயிற்சி மிக்க முடுகியல்ஓசை அடிப்படையில் பெயரிடப்பட்டவை. அவை யாப்பு வகையில் அறுசீர் ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலித்துறை என்ற யாப்பினை உடையன. 'வழிமொழித் திருவிராகப் பதிகமும் (III 67) கலித்துறை யாப்பினது.

I 136 ஆம் பதிகமாகிய 'யாழ்மூரி' அடிதோறும் பிற்பகுதி அராகஓசையாக முடுகிச் செல்லும்.

'திருமுக்கால்' என்று குறிக்கப்படுவன (III 94-99) ஆசிரியத்துறையாகவும், திருவிருக்குக்குறள் (I 90-96, III 41) என்று குறிக்கப்படுவன ஒருபொருள்மேல் பத்தடுக்கி வரும் வஞ்சித்தாழிசையாகவும் கொள்ளத் தக்கன.

சம்பந்தர்பாடல்கள் முழுதும் யாப்பைவிட இசைக்கே முதலிடம் அமைத்து 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பு'தற்கு அருளிச்செய்யப்பட்டன ஆதலின், இயற்றமிழ்த் தாழிசை துறை விருத்த யாப்புஇலக்கணங்கள் அவற்றில் நெகிழ்க்கப்பட்ட நிலையைக் காணலாம்.

திருநாவுக்கரசர் பாடலாகத் தொடக்கத்தில் நான்காம் திருமுறையில் காணப்படும் 21 பதிகங்கள் ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலித்துறை, கலித்தாழிசை (எண்-2,3) தரவு கொச்சகம், ஆசிரியத்துறை (எண்-20) என்ற யாப்பினவாகும். திருவங்கமாலைப்பதிகம் ஆசிரியத்துறைச் சாயலை உடையது. திருநாவுக்கரசர் தேவாரத்தில் 58 பதிகங்கள் 'திருநேரிசை' எனவும் 34 பதிகங்கள் 'திருவிருத்தம்' எனவும், நூறுபதிகங்கள் 'திருக்குறுந்தொகை' எனவும், 99 பதிகங்கள் 'திருத்தாண்டகம்' எனவும் பெயர் பெறுகின்றன.

திருநேரிசை என்பன அறுசீர் ஆசிரியவிருத்தமாகவும்,
திருவிருத்தம் என்பன கட்டளைக் கலித்துறையாகவும்,
திருக்குறுந்தொகை என்பன கலிவிருத்தமாகவும்,
திருத்தாண்டகம் என்பன எண்சீர் ஆசிரியவிருத்தமாகவும்,

இக்காலத்தில் யாப்புமுறையை ஒட்டிக் கொள்ளத் தக்கன எனினும், இவற்றிற்குத் தனிச் சிறப்பியல்பும் உண்டு.

| | |
|---|---|
| ஆசிரியத்துறை | — 2 |
| எண்சீர் ஆசிரியவிருத்தம் | — 99+3 |
| அறுசீர் ஆசிரியவிருத்தம் | — 58+4 |
| கலித்தாழிசை | — 2 |
| கலிநிலைத்துறை | — 1 |
| கட்டளைக் கலித்துறை | — 34 |
| கலிவிருத்தம் | — 100+5 |
| தரவுகொச்சகம் | — 4 |
| | 312 |

திருநேரிசை என்பது,

'கூவிளம் புளிமா தேமா கூவிளம் புளிமா தேமா'

எனவரும் கட்டளைஅடியினை உடைய செய்யுளாகும். அறுசீர்களால் இயன்ற இக் கட்டளை யடியில் முதல்சீரும் நான்காம் சீரும் ஒரோவழிக் கருவிளம் ஆதலும், இரண்டாம் சீரும் ஐந்தாம் சீரும் தேமா ஆதலும் உண்டு எனவும், மூன்றும் சீரும் ஆறும்சீரும் ஒருதலையாகவே தேமாவாக நிற்பன எனவும் இதன் யாப்பு அமைதியினை யாழ்நூலாசிரியர் (பக்கம் - 217) விளக்கியுள்ளார். நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் திருமங்கைமன்னன் அருளிய திருக்குறுந்தாண்டகமும் திருநேரிசை யாப்பிலேயே அமைந்துள்ளது.

திருவிருத்தம் என்பன யாவும், நம்மாழ்வார் அருளியுள்ள திருவிருத்தம் போல, அடி நான்காய், முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாமல் நிற்க, ஐந்தாம் சீர் விளங்காயாக, பாடல் நேரசையில் தொடங்கின் அடிதோறும் ஒற்று நீங்கலாகப்

பதினாறெழுத்தும், நிரையசையில் தொடங்கின் அடிதோறும் ஒற்று நீங்கலாகப் பதினேழெழுத்தும் பெற்று ஒருவிகற்பம் உடையனவாக அமைந்துள்ளன. சிற்சில வேறுபாடுகள் II தொகுதி பதிப்புரையுள் காண்க. விருத்தம் என்பது ஒன்றன் நிகழ்ச்சியைக் குறிக்கும் சொல். இப் பெருமக்களுடைய ஆன்மாநுபவ நிகழ்ச்சியை விளக்கும் இப்பாடல்கள் திருவிருத்தம் எனப்பட்டன. இவ்விருத்தங்கள் இக்காலக் கட்டளைக் கலித்துறை யாப்பின.

திருநாவுக்கரசர் அருளிய திருக்குறுந்தொகை முழுவதும் ஐந்தாம் திருமுறையாக உள்ளது. குறுந்தொகை பொதுவாகக் கலிவிருத்த யாப்பினது என்று கொள்ளினும், இக்குறுந்தொகை முழுதும் ஒரேவிதமாக அமைந்த கலிவிருத்தமாகும்.

குறுந்தொகை யாப்பு என்பது நாற்சீர் நாலடியாய், அடிதோறும் தேமா புளிமா என்னும் மாச்சீர்களுள் ஒன்று முதற்சீராகவும், கருவிளம் கூவிளம் என்னும் விளச்சீர்களுள் ஒன்று நான்காம் சீராகவும் இடையிலுள்ள இரண்டாம் மூன்றாம் சீர்கள் பெரும்பாலும் விளச்சீர்களாகவும் சிறுபான்மை மாச்சீர்களாகவும் அமைவதாகும். ஆகவே, குறுந்தொகை முழுதும் அடிகள்தோறும் (பெரும்பான்மையும்) ஈரசைச்சீர்களையே உடையது.

"தேமா (அல்லது) புளிமா கூவிளம் கூவிளம் கூவிளம்'

என்பது திருக்குறுந்தொகை என்னும் செய்யுளின் கட்டளையடியாகும். முதற்சீர் தேமாவாயின் அடியின் எழுத்துத்தொகை ஒற்று நீக்கிப் பதினொன்றாம்; புளிமாவாயின் பன்னிரண்டாம். ஓரடிக்குள் அமைந்த மூன்று தளைகளுள் முதல்தளை நேரொன்றாசிரியத்தளை; இரண்டாம் தளையும் மூன்றாம் தளையும் வெண்டளை. மேற்குறித்த எழுத்துக் கணக்கும் தளையமைதியும் வேறுபடாது நிற்கச் சீர்கள் வேறுபட்டு வரலாம்" என யாழ்நூலாசிரியர் (பக்கம் - 210) குறுந்தொகை யாப்பினை விளக்கியுள்ளார். இடை இருசீர்களில் கூவிளம் வரவேண்டிய இடத்தில் தேமாங்காய் வருதலும் கொள்ளப்படுகிறது. அதனால் எழுத்துமிகுதியோ தளை வேறுபாடோ ஏற்படாது. 10 எழுத்து முதல் 14 எழுத்து அளவும் பெற்றுவரும் நாற்சீரடியே அளவடியாகும். இத்திருமுறைப்பாடல்கள் முழுதும் அளவடியாய் 11,12 எழுத்துக்களாகிய குறைந்த தொகை எழுத்துக்களையே பெற்றுவருதலின் 'குறுந்தொகை' என்று பண்டுதொட்டுப் பெயரிடப்பட்டுள்ளன. இதற்கு மூலஇலக்கியம் சிலப்பதிகார வேட்டுவவரியில் வந்துள்ள 'நாகம் நாறும்' முதலிய வரிப்பாடல்களாம்.

திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகம் முழுதும் ஆறாம் திருமுறை. இவை எண்சீரான் வந்த கொச்சக ஒருபோகுகளாம். பிற்காலத்து எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தின் ஒருவகை அமைப்பினை இவை பெற்றுள்ளன. பல செய்திகளையும் விளங்க விரித்துரைப்பதற்கேற்ற நீண்ட அடிகளை உடையன தாண்டகப் பாடல்கள். இத்தாண்டகப் பாடல்களின் அடிதோறும் உள்ள எண்சீர்களில் 1,2,5,6 ஆம் சீர்கள் காய்ச்சீர்கள்; சிறுபான்மை ஈரசைச்சீர் பெற்று வேறுபடுதலும் உண்டு; 4,8 ஆம் சீர்கள் தேமா; 3,7 ஆம் சீர்கள் பெரும்பாலும் தேமா; சிறுபான்மை புளிமா. இங்ஙனம் 2 மூவசைச்சீர், 2 ஈரசைச்சீர், 2 மூவசைச்சீர், 2 ஈரசைச்சீர் என எட்டுச் சீரானும் அடிகளையுடைய தாண்டகம் அடிதோறும் ஒற்றெழுத்து நீங்கலாக எண்ண 20க்கு மேற்பட்டு 27க்கு உட்பட்ட எழுத்துக்களை யுடையது. 20க்குக் குறைந்த எழுத்துக்களை யுடைய அடிகளைக் கொண்டது குறுந்தாண்டகம் எனவும், 20க்கு மேற்பட்ட எழுத்துக்களை யுடைய அடிகளை யுடையது நெடுந்தாண்டகம் எனவும் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் பெயரிடப்பட்டுள்ளன. குறுந்தாண்டகங்கள் திருநேரிசை யாப்பின.

தாண்டக யாப்பிற்கு மூலஇலக்கியமாகப் பல பதிகங்களைப் பாடிய நாவுக்கரசர் 'தாண்டக வேந்து' எனவும், 'தாண்டகச் சதுரர்' எனவும் முன்னோர்களால் புகழப்பட்டவர்.

'குலம் பொல்லேன்; குணம்பொல்லேன்; குறியும் பொல்லேன்;
குற்றமே பெரிதுடையேன்; கோல மாய
நலம்பொல்லேன்; நான்பொல்லேன்; ஞானி அல்லேன்;
நல்லாரோ(டு) இசைந்திலேன்; நடுவே நின்ற
விலங்கல்லேன்; விலங்கல்லா தொழிந்தேன் அல்லேன்;
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேச வல்லேன்;
இலம்பொல்லேன்; இரப்பதே; ஈய மாட்டேன்;
என்செய்வான் தோன்றினேன் ஏழை யேனே!' (7192)

இத்தாண்டகத்தில் அடிதோறும் 3,4,7,8 ஆம் சீர்கள் மாச்சீர்கள் 1,2,5,6 ஆம் சீர்கள் காய்ச்சீர்கள்; சிறுபான்மை விளச்சீர்கள். குற்றமே, இசைந்திலேன், இரப்பதே, தோன்றினேன் என்பன விளச்சீர்களாகவும், அடிதோறும் ஏனைய 1,2,5,6 ஆம் சீர்கள் காய்ச்சீர்களாகவும் இருத்தல் காண்க.

ஒவ்வோரடியிலும் 3,4,7,8 ஆம் சீர்களை விடுத்து 1,2,5,6 ஆம் சீர்களை இணைத்து அடியாக்கிப் பாடலைக் கொள்ளின், அப்பாடல் தரவுகொச்சகக்கலிப்பா நிலையது ஆகும்.

'குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குற்றமே பெரிதுடையேன்
நலம்பொல்லேன் நான்பொல்லேன் நல்லாரோ டிசைந்திலேன்
விலங்கல்லேன் விலங்கல்லா(து) வெறுப்பனவும் மிகப்பெரிதும்
இலம்பொல்லேன் இரப்பதே என்செய்வான் தோன்றினேன்'

என்று ஆதல் காண்க.

மொழிமுதல் எழுத்துக்களைப் பாடல்களில் தொடர்ந்து தொடங்கி அமைக்கும் வருக்கமாலைப் பதிகம் 'சித்தத்தொகை' என்னும் பெயரோடு (V-97) 30 குறுந்தொகைப் பாடல்களையுடையது.

'சரக்கறைத் திருவிருத்தம்' வகர எழுத்தின் இனங்களை முதலாகக் கொண்டு அமைகிறது (IV-111). திருக்கயிலாயம் பற்றிய திருநேரிசை (IV-47) முழுதும் ஒவ்வொரு பாடலும் ககரத்திலேயே தொடங்குகிறது.

சுந்தரர் தேவாரமாகிய ஏழாம் திருமுறையிலுள்ள நூறு பதிகங்களும் யாப்பு முறையில் கலிவிருத்தம், கட்டளைக்கலித்துறை, ஆசிரியத்துறை, 6-7-8-சீர்களை உடைய ஆசிரிய விருத்தங்கள், தரவுகொச்சகக்கலி என்ற பாவினப் பிரிவுகளாக உள்ளன. அப்பர் தேவாரம் போலவே சுந்தரர் தேவாரமும் பதிகத்தின் முதற்பாடலின் ஈற்றுச்சீர்கள் சில ஏனைய பதிகப்பாடல்களின் ஈற்றுச்சீர்களாக அமைந்துள்ளன.

| | | |
|---|---|---|
| கலிவிருத்தம் | 26 | பதிகங்கள் |
| கட்டளைக்கலித்துறை | 10 | பதிகங்கள் |
| கலிநிலைத்துறை | 5 | பதிகங்கள் |
| ஆசிரியத்துறை | 3 | பதிகங்கள் |
| தரவு கொச்சகம் | 3 | பதிகங்கள் |
| 6 சீர் விருத்தம் | 16 | பதிகங்கள் |
| 7 சீர் விருத்தம் | 10 | பதிகங்கள் |
| 8 சீர் விருத்தம் | 27 | பதிகங்கள் |
| ஆக, | 100 | பதிகங்கள் |

'ஏழுதிருமுறைகள்-யாப்பமைதி' என்னும் தலைப்பிற் காணப்படும் தொகை ஈண்டுக் கூறியதின் சற்றே வேறுபடுமாறு கண்டுகொள்க.

இங்ஙனம் இயலிசைப்பாடல்களாகிய மூவர் தேவாரத்துக்கும் இக்கால இயற்றமிழ் யாப்பினை ஒட்டி, ஒருபுடை ஒப்புமை கொண்டு இன்ன இன்ன பாவினங்களாக

உள்ளன என்று அறிஞர் முடிவு செய்துள்ளனர். இனி, தேவாரம் இயலினும் மேலாக இசையை ஒட்டிப் பண்முறையில் நிரலே இணைத்து வைக்கப்பட்ட செய்தியைச் சுருங்கக் காண்போம்.

## தேவாரத்தில் இசை

தேவாரம் முழுமையும் இயல்இசைப் பாடல்களாகும். தேவாரப் பதிகங்கள் தொடக்கத்தில் பண்முறையை ஒட்டியே ஏழு திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்றன.

முதல்திருமுறையில் நட்டபாடை, தக்கராகம், பழந்தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி, மேகராகக்குறிஞ்சி என்ற ஏழு பண்களுக்கு உரிய 135 திருப் பதிகங்களும் யாழ்மூரிப்பதிகம் ஒன்றும் ஆக 136 பதிகங்கள் உள்ளன. யாழ்மூரிப் பதிகமும் மேகராகக் குறிஞ்சிப் பண்ணினையே சேர்ந்தது என்பது இசைவல்லார் சிலருடைய கருத்தாகும். ஞானசம்பந்தர் அவதரித்தருளிய சீகாழி பற்றிய பதிகத்தையே முதலில் அமைத்திருப்பதை இத்திருமுறையில் காணலாம்.

மறைமுதல் எழுத்தாம் 'ஓம்' என்பதிலுள்ள ஓகாரத்தினைத் 'தமிழ்' என்பதன் முதல்எழுத்தாகிய தகரத்துடன் சேர்த்துத் 'தோடுடைய செவியன்' என்று ஞானசம்பந்தரால் முதற்கண் பாடப்பட்ட பதிகம் பண்டு 'நைவளம்' என்று வழங்கப்பட்ட இக்கால நட்டபாடைப் பண்ணில் அமைந்தது. காரைக்கால் அம்மையாருடைய திருவாலங்காட்டுத் திருப்பதிகங்கள் இரண்டனுள் 'கொங்கை திரங்கி' என்ற முதற் பதிகமும் நட்டபாடைப் பண்ணிலேயே அமைந்திருப்பது குறித்துணரத்தக்கதாம். ஆகவே, நட்டபாடைப் பண்ணில் அமைந்த திருப்பதிகங்கள் யாவும் 'தோடுடைய செவியன்' என்ற சீகாழிப் பதிகத்தை அடுத்து இணைத்துக்கொள்ளப்பட்டன. அடுத்து, ஞானசம்பந்தருக்குத் திருக்கோலக்காவில் இறைவனால் பொற்றாளம் வழங்கப் பட்டது. இப்பதிகம் தக்கராகப் பண்ணில் பாடப்பட்டமையின் தக்கராகப்பண் பற்றிய பதிகங்கள் அனைத்தும் தொடர்ந்து இணைக்கப்பட்டன. தக்கராகப் பண்ணுடன் பெயரால் ஒற்றுமையுடைய பழந்தக்கராகப் பண்ணில் அமைந்த பதிகங்கள் அடுத்து வைக்கப்பட்டன. 'தக்ககைசிகம்' என்ற பெயரே 'தக்கேசி' எனத் திரிந்தது ஆதலின், 'தக்க' என்ற பெயர்த்தொடர்பு கொண்டு தக்கேசிப் பண் பற்றிய பாடல்கள், அடுத்து இணைக்கப்பெற்றன. பழந்தமிழ்ப் பண்களுள் முதன்மை பெற்ற குறிஞ்சிப் பண்ணும் அதனோடு பெயரொற்றுமை யுடைய வியாழக்குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி என்ற பண்களும் பின் முறையே கொள்ளப்பட, அவற்றிற்குரிய பதிகங்கள் முறையாக இணைக்கப்பட்டன. ஒவ்வொரு பண்ணுக்கும் உரிய கட்டளைகள் எவ்வளவு என்பதனைத் திருமுறை கண்ட புராணம் விளக்கிக் கூறுகிறது.

'தோடுடைய செவியன்' முதல் 'சிலைதனை நடுவிடை' என்பது ஈறாக 22 பதிகங்கள் நட்டபாடைப் பண்ணில் அமைந்தவை. இப்பதிகங்களுக்கு அமைந்த கட்டளை எட்டு.

தேவாரத்தில் ஒவ்வொரு பண்ணிலும் அமைந்த யாப்பு வகையினைக் கட்டளை என்று வழங்குவர். கட்டளை என்பது மாத்திரை அளவும் எழுத்தியல் நிலையும் பற்றிச் செய்யுட்களில் அமைந்துள்ள ஓசைக் கூறுபாட்டைக் குறிப்பதாம். இதனை உட் கொண்டு நோக்க, நட்டபாடைப் பண்ணில் எட்டு வகையான வேறுபட்ட யாப்பினை உடைய பதிகங்கள் இணைக்கப்பட்டிருத்தல் போதரும்.

இயற்றமிழில் சீர்வகை பற்றிச் செய்யுட்களின் அமைப்பினைப் பகுத்துணர்தல் எளிது. இசைத்தமிழில் ஒரெழுத்து மிகினும் குறையினும் இசை அமைப்புக்குரிய தாளம் முதலியன மாறுபடும். ஆதலின் நெடில்குறில் ஆகிய எழுத்தளவு பற்றி இசைப்பாக்களின் அமைப்பினைப் பகுத்துணரல் வேண்டும். இயற்றமிழில் பொதுவாகக் கலிவிருத்தம் என்ற ஒரே பெயரில் அமையும் பலபாக்கள், சீர்கள் பலவகை

யாக அடிகளில் அமைந்துள்ள ஓசை வேறுபாட்டால், பலவகையாகப் பகுக்கப் பட்டுப் பலபண்களுக்கு உரியனவாக வரையறுக்கப்படுமாற்றைத் தேவாரத்தில் காண்கிறோம். ஒரேவகைப் பாடல்கள் பலவகைப் பண்களுக்கு உரியவாமாறு போல, ஒரே பண்ணுக்குள் இயற்றமிழ் யாப்புமுறை பற்றிய பலவகைப் பாடல் களும் இணைந்திருக்குமாற்றையும் காண்கிறோம். மிக நுணுக்கமான இசைப்பாக் களின் ஓசை அமைப்பினை அறிதற்குக் கருவியாகத் தான, தன, தானு, தனு முதலிய சந்தக் குழிப்புக்கள் கையாளப்படுகின்றன. அம்முறையில் நோக்க, நட்டபாடை என்ற ஒரே பண்ணில் இணைக்கப்பட்ட 22 பதிகங்களும் எட்டுவகைச் சந்தவேறு பாடுடையனவாகச் சுட்டப்பட்டுள்ளன.

கட்டளை — 1

தோடு டைய செவி யன்விடை யேறியொர் தூவெண் மதிசூடி
தான தான தன தானன் தானன தானு தனதானு

கட்டளை — 2

தானுதல் செய்திறை காணிய மாலொடு தண்டா மரையானும்
தானன தானன தானன தானன தானு தனதானு

கட்டளை — 3

மைம்மரு பூங்குழல் கற்றைதுற்ற வானுதல் மான்விழி மங்கையோடும்
தானன தானன தானதான தானன , தானன தானதானு

கட்டளை — 4

தோலுடையான் வண்ணப் போர்வையினுன் சுண்ணவெண் ணீறுது தைந்திலங்கு
தானதனு தான தானதனு தானன தானன தானதானு

கட்டளை — 5

வண்டார்குழ லரிவையொடு பிரியாவகை பாகம்
தானுதன தனனுதன தனனுதன தானு

கட்டளை — 6

குரவங் கமழ்நறுமென் குழலரிவை யவள்வெருவ
தனனு தனதனனு தனதனனு தனதனனு

கட்டளை — 7

பிறையணி படர்சடை முடியிடை பெருகிய புனலுடை யவனிறை
தனதன தனதன தனதன தனதன தனதன தனதன

கட்டளை — 8

பிறையணிபடர் சடைமுடியிடை பெருகியபுன லுடையவனிறை
தனதனதன தனதனதன தனதனதன தனதனதன

இங்ஙனம் நட்டபாடையில் அமைந்த 22 பதிகங்களுக்கும் எட்டுக் கட்டளைகள் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றின் விரிவினைப் 'பன்னிரு திருமுறை வரலாறு' முதற் பாகத்தில் காணலாம்.

| | | |
|---|---|---|
| தக்கராகப் பண்ணின் பதிகங்கள் | : 23 - 46; | அடங்கும் கட்டளைகள் - 7 |
| பழந்தக்கராகப் பண்ணின் பதிகங்கள் | : 47 - 62; | அடங்கும் கட்டளைகள் - 3 |
| தக்கேசிப் பண்ணின் பதிகங்கள் | : 63 - 74; | அடங்கும் கட்டளைகள் - 2 |
| குறிஞ்சிப் பண்ணின் பதிகங்கள் | : 75 - 103; | அடங்கும் கட்டளைகள் - 5 |
| வியாழக்குறிஞ்சிப் பண்ணின் பதிகங்கள் | : 104 - 128; | அடங்கும் கட்டளைகள் - 6 |
| மேகராகக்குறிஞ்சிப் பண்ணின் பதிகங்கள் | : 129 - 135; | அடங்கும் கட்டளைகள் - 2 |

இத்திருமுறையில் 45 ஆம் பதிகமாக உள்ள 'துஞ்ச வருவார்' என்று தொடங்கும் திருவாலங்காட்டுப் பதிகம் பழம்பஞ்சுரம் என்ற பண்ணுக்கு உரியது என்பதும், இப்பதிகம் தக்கராகப் பண்ணில் சேர்க்கப்பட்டது பொருந்துவதன்று என்பதும்,

'துஞ்சவரு வார்என்றே எடுத்த ஓசைச்
சுருதிமுறை வழுவாமல் தொடுத்த பாடல்
எஞ்சல்இலா வகைமுறையே பழைய னூரார்
இயம்புமொழி காத்தகதை சிறப்பித்து ஏத்தி
அஞ்சனமா கரியுரித்தார் அருளாம் என்றே
அருளும்வகை திருக்கடைக்காப்பு அமையச் சாத்திப்
பஞ்சுரமாம் பழையதிறம் கிழமை கொள்ளப்
பாடினார், பாரெல்லாம் உய்ய வந்தார்' (1010)

என்று, திருஞானசம்பந்தநாயனார் புராணத்தில் சேக்கிழார் குறிப்பிட்டுள்ள செய்தியால் போதரும். இப்பதிகம் மூன்றும் திருமுறையில் பழம்பஞ்சுரம் என்ற பண்ணுக்குரிய 100-116 ஆம் பதிகங்களை ஒட்டி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது 'பன்னிருதிருமுறை வரலாறு' எழுதிய சான்றோர் துணிவு.

இரண்டாம் திருமுறையில் இந்தளம், சீகாமரம், காந்தாரம், பியந்தைக் காந்தாரம், நட்டராகம், செவ்வழி என்னும் ஆறு பண்களுக்கு உரிய 122 பதிகங்கள் உள்ளன.

காரைக்காலம்மையாரின் இரண்டாம் 'மூத்ததிருப்பதிகம்' 'எட்டி இலவம்' என்பது. அஃது இந்தளப் பண்ணில் பாடப்படுவது. அதுபோலவே இந்தளப்பண்ணில் ஞானசம்பந்தர் அருளிய சீகாழிப் பதிகம் இரண்டாம் திருமுறையின் தொடக்கத்தில் வைக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| இந்தளப் பண்ணிற்குரிய பதிகங்கள் | 1 - 39; | அடங்கும் கட்டளைகள் - 4 |
| சீகாமரப் பண்ணிற்குரிய பதிகங்கள் | 40 - 53; | அடங்கும் கட்டளைகள் - 2 |
| காந்தாரப் பண்ணிற்குரிய பதிகங்கள் | 54 - 82; | அடங்கும் கட்டளைகள் - 3 |
| பியந்தைக் காந்தாரப் பண்ணிற்குரிய பதிகங்கள் | 83 - 96; | அடங்கும் கட்டளைகள் - 3 |
| நட்டராகப் பண்ணிற்குரிய பதிகங்கள் | 97 - 112; | அடங்கும் கட்டளைகள் - 2 |
| செவ்வழிப் பண்ணிற்குரிய பதிகங்கள் | 113 - 122; | அடங்கும் கட்டளை - 1 |

மூன்றும் திருமுறையில் காந்தாரபஞ்சமம், கொல்லி, கொல்லிக் கௌவாணம், கௌசிகம், பஞ்சமம், சாதாரி, பழம்பஞ்சுரம், புறநீர்மை, அந்தாளிக் குறிஞ்சி என்னும் 9 பண்களுக்கு உரிய 125 பதிகங்கள் உள்ளன. திருவிடைவாய், கிளியன்னவூர்ப் பதிகங்களைச் சேர்க்க 127 ஆகும்.

காந்தாரபஞ்சமப் பண்ணில் தில்லை பற்றிய பதிகம் முன்னரும் சீகாழி பற்றிய பதிகம் பின்னருமாக மூன்றும் திருமுறையின் தொடக்கத்தில் இடம்பெற்றுள்ளன. ஞானசம்பந்தப் பெருமான் சோதியில் கலந்த நல்லூர்ப்பெருமணப் பதிகத்தோடு மூன்றும் திருமுறை நிறைவுறுகிறது.

| | | |
|---|---|---|
| காந்தாரபஞ்சமப் பண்ணில் அமைந்த பதிகங்க்ள் | 1 - 23; | அடங்கும் கட்டளைகள் - 3 |
| கொல்லிப் பண்ணில் அமைந்த பதிகங்கள் | 24 - 41; | அடங்கும் கட்டளைகள் - 4 |
| கொல்லிக்கௌவாணப் பண்ணில் அமைந்த பதிகம் | 42 மாத்திரம்; | அடங்கும் கட்டளைகள் - 1 |
| கௌசிகப் பண்ணில் அமைந்த பதிகங்கள் | 43 - 54,117; | அடங்கும் கட்டளைகள் - 2 |
| பஞ்சமப் பண்ணில் அமைந்த பதிகங்கள் | 55 - 66; | அடங்கும் கட்டளை -1 |
| சாதாரிப் பண்ணில் அமைந்த பதிகங்கள் | 67 - 99; | அடங்கும் கட்டளைகள் - 4 |
| பழம்பஞ்சுரப் பண்ணில் அமைந்த பதிகங்கள் | 100 - 116; | அடங்கும் கட்டளைகள் - 5 |

| | | |
|---|---|---|
| புறநீர்மைப் பண்ணில் அமைந்த பதிகங்கள் | 118 - 123; | அடங்கும் கட்டளை - 1 |
| அந்தாளிக்குறிஞ்சிப் பண்ணில் அமைந்த பதிகங்கள் | 124,125; | அடங்கும் கட்டளை - 1 |

நான்காம் திருமுறையில் அவை வருமாறு :

| | | |
|---|---|---|
| முதற்பதிகம் | — கொல்லிப்பண் — | கட்டளை - 1 |
| பதிகம் 2 - 7 | — காந்தாரம் — | கட்டளை - 1 |
| பதிகம் 8 | — பியந்தைக்காந்தாரம் — | கட்டளை - 1 |
| பதிகம் 9 | — சாதாரி — | கட்டளை - 1 |
| பதிகம் 10,11 | — காந்தாரபஞ்சமம் — | கட்டளை - 1 |
| பதிகம் 12,13 | — பழந்தக்கராகம் — | கட்டளை - 1 |
| பதிகம் 14,15 | — பழம்பஞ்சுரம் — | கட்டளை - 2 |
| பதிகம் 16 - 18 | — இந்தளம் — | கட்டளை - 1 |
| பதிகம் 19,20 | — சீகாமரம் — | கட்டளை - 2 |
| பதிகம் 21 | — குறிஞ்சி — | கட்டளை - 1 |
| பதிகம் 22 - 79 | (நேரிசை) — கொல்லி — | கட்டளை - 1 |
| பதிகம் 80 - 113 | (விருத்தம்) — விருத்தக்கொல்லி — | கட்டளை - 1 |
| ஐந்தாம் திருமுறையில் (திருக்குறுந்தொகை) | | கட்டளை - 1 |
| ஆறும் திருமுறையில் (தாண்டகம்) | | கட்டளை - 1 |

ஏழாம் திருமுறையில் அவை வருமாறு :

| | | |
|---|---|---|
| பதிகம் 1 - 12 | இந்தளம் — | கட்டளை - 2 |
| பதிகம் 13 - 16 | தக்கராகம் — | கட்டளை - 2 |
| பதிகம் 17 - 30 | நட்டராகம் — | கட்டளை - 2 |
| பதிகம் 31 - 37 | கொல்லி — | கட்டளை - 3 |
| பதிகம் 38 - 41 | கொல்லிக்கௌவாணம் — | கட்டளை - 3 |
| பதிகம் 42 -53 | பழம்பஞ்சுரம் — | கட்டளை - 5 |
| பதிகம் 54- 70 | தக்கேசி — | கட்டளை - 1 |
| பதிகம் 71 - 75 | காந்தாரம் — | கட்டளை - 2 |
| பதிகம் 76 | பியந்தைக்காந்தாரம் — | கட்டளை - 1 |
| பதிகம் 77. | காந்தாரபஞ்சமம் — | கட்டளை - 1 |
| பதிகம் 78 - 82 | நட்டபாடை — | கட்டளை - 2 |
| பதிகம் 83 - 85 | புறநீர்மை — | கட்டளை - 2 |
| பதிகம் 86 - 89 | சீகாமரம் — | கட்டளை - 1 |
| பதிகம் 90 - 94 | குறிஞ்சி — | கட்டளை - 2 |
| பதிகம் 95 | செந்துருத்தி — | கட்டளை - 1 |
| பதிகம் 96 | கவுசிகம் — | கட்டளை - 1 |
| பதிகம் 97 - 100 | பஞ்சமம் | கட்டளை - 1 |

இவ்வாற்றால், ஞானசம்பந்தர் திருமுறைகளில் 22 பண்களும், நாவுக்கரசர் திருமுறைகளில் 10 பண்களும், சுந்தரர் திருமுறையில் 17 பண்களும், ஒவ்வொரு பண்ணுக்கும் உரிய பதிகங்களில் ஒன்றும் பலவுமாகிய யாப்பமைதி வேறுபாடாகிய கட்டளைகளும் அமைந்துள்ளன என்பதும், தேவாரம் பண்முறையில் தொகுக்கப் பெற்றதால் ஒரே விதமான யாப்புஅமைதி உடைய பாடல்கள் பல பண்களிலும், பலவகை யாப்பமைதி உடைய பாடல்கள் ஒரே பண்ணிலும் அமைந்திருப்பதைக் காணலாம் என்பதும், இசையின் இன்றியமையாமை கருதி இயல்இசைப்பாடல் களாகிய தேவாரங்களில் இயற்றமிழுக்கு உரிய யாப்புவிதி நெகிழ்க்கப்படுதலும் கூடும் என்பதும், இயல் யாப்பு உறுதி கருதி இசை யாண்டும் நெகிழ்க்கப்படத்

தக்கது அன்று என்பதும், இவை இயலிசைத்தமிழ்ப் பாடல்களுக்கு மூல இலக்கிய மாகக் கொள்ளத்தக்கன என்பதும் பெறப்படும்.

சில பண்களை வெவ்வேறு இராகங்களில் பாடும் மரபும் தேவாரம் பாடுவோரி டையே இருந்துவந்துள்ளது. கீழ்க்கலை நூல்நிலைய ஞானசம்பந்தர் திருமுறை பற்றிய ஏட்டுச்சுவடிகளில் பண்கள் பெயரோடு இராகத்தின் பெயரும் இணைத்துப் பொறிக்கப்பட்டுள்ளன. புறநீர்மையைப் பூபாளத்திலும், காந்தாரம் பியந்தைக் காந்தாரம் கொல்லி கொல்லிக்கௌவாணம் என்ற பண்களை நவரோசு ராகத்தி லும், இந்தளப்பண் திருக்குறுந்தொகைப் பதிகங்கள் இவற்றை நாதநாமக்கிரியை யிலும், நட்டபாடையை நாட்டையிலும், தக்கராகத்தைக் காம்போதியிலும், குறிஞ்சிப்பண்ணை அரிகாம்போதி எதுகுலகாம்போதிக் கலப்பிலும், அந்தாளிக் குறிஞ்சியைச் சாமா ராகத்திலும், திருத்தாண்டகத்தை அரிகாம்போதியிலும் பாடும் வழக்கம் இன்ன பண்ணமைந்த பதிகங்களை இன்ன இராகங்களில் பாடுதல் தக்கது என்று பின்னோர் வகுத்த இசைமுறையே என்பது உளங்கொளத்தக்கது.

திருவரங்கம், ஆழ்வார்திருநகரி, வில்லிபுத்தூர் என்ற மூன்று திவ்விய தேசங் களிலும் இன்றும் நிகழ்ந்துவரும் பகற்பத்து இராப்பத்து உற்சவங்களில் அரையர் சேவையில் ஆழ்வார்பாசுரங்கள் பலவும் பழைய தமிழ்ப்பண்களால் இறைவன் திருமுன்னர்ப் பாடப்பட்டுவரும் செய்தி குறித்துணரத்தக்கது.

இவ்வியலிசைப் பனுவல்கள் பற்றிய விரிவான செய்திகளை, திரு. வெள்ளை வாரணனர் எழுதியுள்ள 'பன்னிரு திருமுறை வரலாறு' என்பதன் முதற்பகுதியில் கண்டு தெளியலாம்.

## பாகம் - 2

# சில பதிகங்களுக்கு உரை

(பழையவும் புதியவும்)

# 2. திரு ஏகபாதம் முதலியன

## பழைய உரையும் இன்றைய உரையும்

முதல் திருமுறையிலுள்ள ஏகபாதம் (127), எழுகூற்றிருக்கை (128) என்னும் இருபதிகங்கட்கும் பழைய உரை உள்ளது. அது சுவடியிலுள்ளவாறு ஓரளவு செப்பம் செய்யப்பட்டுப் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

மூன்றும் திருமுறையில், திருக் கழுமலம் திரு ஏகம்பம் திரு ஆலவாய் திரு வீழி மிழலை என்னும் இந்நான்கு திருத்தலங்களைப் பற்றிய இயமகப் பாடல்கள் 113, 114, 115, 116 ஆம் பதிகங்களாக உள்ளன. அடுத்து 117ஆம் பதிகமாகச் சீகாழி யைப் பற்றிய மாலைமாற்றுப் பதிகம் அமைந்துள்ளது. இவ்வைந்து பதிகங்கட்கும் பழைய உரை ஒன்று காணப்படுகிறது.

ஏகபாதத்திற்கு உரை வரைந்தவர் ஞானப்பிரகாச தேசிகர் என்பது குறிக்கப் பெற்றுள்ளது. பிறவற்றிற் கெல்லாம் உரையாசிரியர் இன்னார் என்பதனை உறுதிப் படக் கூற இயலவில்லை. அவ்வுரையாசிரியர் சைவ நூல்களில் நல்ல பயிற்சியுடை யவர் என்பதொன்றும் துணிவு. உரை பலவிடத்தும் வலிந்து கூறப்பட்டுள்ளது. ஆதலின், தருமையாதீனத்து மூன்றும் திருமுறையின் குறிப்புரையில் (113-117) இவ்வைந்து பதிகங்கட்கும் பழைய உரையைப் பின்பற்றி எழுதாமல், பாடல்களின் கருத்தினை எளிமையில் நோக்கி விளங்கிக் கொள்ளும் வகையில் உரை வரையப் பட்டுள்ளது.

மூன்றும் திருமுறை (113-117) ஐந்து பதிகங்கட்கும் தருமையாதீனக் குறிப்புரையைப் பெரிதும் பின்பற்றி இன்றைய உரை பழைய உரையை அடுத்துப் பதிக்கப்பிக்கப் பெற்றுள்ளது.

## திரு ஏகபாதம் - பழைய உரை

1) பிரம புரத்துறை பெம்மான் எம்மான்
பிரம புரத்துறை பெம்மான் எம்மான்
பிரம புரத்துறை பெம்மான் எம்மான்
பிரம புரத்துறை பெம்மான் எம்மான்

I பிரமம் புரத்துறை பெம்மான் எம்மான்
II பிரமம் புரத்துறை பெம் மான் எம் ஆன்
III பிரமம் புரத்துறை பெம்ஆன் எம்மான்
IV பிரமபுரத்து உறை பெம்மான் எம்மான்

I பிரமம் = ஞானகாசமாகிய பராசக்தியை;
புரத்துறை = அந்தப் பரிபூரணத்தை மிகுதியாக வியக்கப்பட்டது;
(பெம்மான்: பெருமான் என்பது, ரகர உகரம் கெட்டு மகரம் மிக்குப் 'பெம்மான்' என்று ஆயிற்று)
எம்மான் = எந்தப் பெரியோன்

பொழிப்புரை: ஞானகாசமாகிய பராசக்தியான பரிபூரணத்தை மிகவும் வியந்து, அந்தப் பராசக்திக்கு அதீதமாகிய சுகமே வடிவாய், முதல் நடு இறுதி காணாத வஸ்து எந்தப் பெரியோன்?

II பிரமம் = மேலே; புரம் = நிலம்; உறை = தண்ணீர்; பெம் = விருப்பம்; மான் = மான் போலும் விழியை உடைய பெண்; (எம்: எம்மை என்ற சொல், உருபு கெட்டு 'எம்' என நின்றது) எம் ஆன்: எம்மை நீங்காத நிலைமையை உடைய ஆன்மா.

பொழிப்புரை: ஆகாயத்தின்கண்ணே ஓடும் கங்காதேவியைத் திருமுடியிலே வைத்தவன் என்னை நீங்கா நிலைமையை உடைய எமது உயிர்.

III பிரமம் = பிரமத்துவம்; புரம் = சரீரம்; உறை = எண்ணுதல்; பெம் = ஆசை; ஆன் = அமையாமை (- திருப்தி இன்மை); எம்மான் = என்னை ஒக்க வந்தவன்.

பொழிப்புரை: பிரம ரூபத்திலே எண்ணப்பட்ட என்னை முத்தியிலே விடுகைக்கு அமையாத இச்சை உடையனாய் வந்தவன், என்னை[1] ஒத்த தன்மையன்.

பாட பேதம்:[1] எம்மை

IV பிரமபுரத்து = பிரமபுரம் எனும் திருப்பதியிலே; உறை = தங்கியுள்ள; பெம்மான் = கர்த்தா ஆனவன்; எம்மான் = என்னுடைய சுவாமி.

பொழிப்புரை : பிரமபுரம் என்னும் திருப்பதியிலே உறையும் கர்த்தாஆனவன் என்னுடைய சுவாமி என்றவாறு.

2) விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்

I விண்டு அலர் பொழில் அணிவு ஏண் நுபுரத் தரன்
II விண்டு அலர் பொழில் அணி வேணு புரத்து அரன்
III விண்தலர் பொழில் அணிவு ஏணு புரந்(த்) தரன்
IV விண்டு அலர் பொழில் அணி வேணுபுரத்துஅரன்

I விண்டு = மலை; அலர் = ஒலி; பொழில் = அகில லோகங்களும்; அணிவு = அகப்படுதல்; ஏண் = பெருமை; நூபுரம் = சிலம்பு; ('நுபுரம்' எனக்குறுகி வந்தது.) தரன் = தரித்துள்ளவன்.

பொழிப்புரை: விண்டு என்று சொல்லப்பட்ட அட்ட குலபர்வதங்களையும் ஒலி

சிறக்கும் பரிசு மணியாகக் கொண்டு அகில லோகங்களேயும் உள்ளே அகப்படுத்தும் தன்மையவாய் இவ்வாறு பெரிதாய் உள்ள திருச்சிலம்பினைத் தரித்துள்ளவன்.

II விண்டு = விஷ்ணு; அலர் = புறனுரை (- பழிச் சொல்); பொழில் = போதி நிழல்; அணி = பொருந்தி (அண்ணி என்பது இடை கெட்டு நின்றது); வேணு = விருப்பம்; புரத்து அரன் = புரத்தை அரித்தவன்.

பொழிப்புரை: விஷ்ணுவினது புறன்உரையாகிய சிவதூடணத்தை அவன் இருந்த போதி நிழலைப் பொருந்தி விரும்பாநின்ற மூன்று புரங்களேயும் சங்கரித் துள்ளானே!

III விண்தலர் = விண்தலத்து உள்ளாராகிய தேவர்கள்; பொழில் = கற்பகப் பூஞ் சோலே; அணிவு = சூடுதல்; ஏணும் = எண்ணும் (எணும் என்பது 'ஏணும்' என நீண்டது); புரத்தரன் = இந்திரன் (புரந்தரன் என்பது 'புரத்தரன்' என வலித்து நின்றது).

IV விண்டு = இதழ் விண்டு; அலர் = மலருகின்ற; பொழில் = சோலே; அணி = சூழ்ந்த; வேணுபுரத்து அரன் = வேணுபுரத்தில் உண்டாகிய கர்த்தா.

III, IV பொழிப்புரை: கற்பகப் பூஞ்சோலே மலர்களேச் சூடுதலே எண்ணும் விண்தலத் தில் உள்ளாராகிய தேவர்களின் தலேவனுகிய தேவேந்திரன், வேணு (- மூங்கில்) வழியாக வந்து பூசித்தலால், வேணுபுரம் என்று பெயர் பெற்ற, அரும்புதலேயும் மலர்தலேயும் உடைய மலர்ச்சோலே சூழ்ந்த திருவேணுபுரம் என்னும் திருப்பதிக்குக் கர்த்தாவாய் உள்ளவனே என்றவாறு.

3) புண்டரி கத்தவன் மேவிய புகலியே
புண்டரி கத்தவன் மேவிய புகலியே
புண்டரி கத்தவன் மேவிய புகலியே
புண்டரி கத்தவன் மேவிய புகலியே

I புண்டரிகத்தவன் மேவிய புகலியே
II புண்டரிக(ம்)தவன் மேவிய புகலி ஏ
III புண்டரிக தவன் மே விய பு கலியே
IV புண்டரிகத்தவன் மேவிய புகலியே

I புண்டரிகத்தவன் = இதயகமலத்தில் உள்ளவன்ஆனவன்; மேவிய = எனக்கு இன்பம் தருவதற்கு; புகலி = மீளா வழியாகிய புகலிடமாய் உள்ளான்.

பொழிப்புரை: இதயகமலத்தில் இருந்து இடையறு ஆனந்தம் பொழிந்து, என்னே மலபோதத்தில் தள்ளாமல், எனக்கு அடைக்கலமாக உள்ளவன்.

II புண்டரிகம் = திரிபுண்டரம் அணிந்த; தவன் = மிக்க பெருமை உடையவன்; மேவிய = பொருந்திய; புகலி = சொல்லப்பட்டவன் (ஏ: ஈற்றசை).

பொழிப்புரை: ஆன்மாக்களுக்கு இரட்சையாக, முண்டம் போலிருந்த திருநீற்றை அணிந்த மிக்க கருணேயாளனே யான் பாடும் பாட்டை உகந்துள்ளவன்.

III புண்டரிகம் = புலிக்காலனுகிய; தவன் = தவமுனி; மே = கூத்து; விய = பொன் (வியம என்பது 'விய' எனக் கடைக் குறைந்தது); பு(து) = பொது (-மன்று) (புது என்பது ஈறு குறைந்தது); கலி = கற்றவன்.

பொழிப்புரை: புலி உருவாகிய வடிவைப் பொருந்திய தபோதனன் ஆகிய வியாக்கிரபாத முனிக்கு ஞானனந்தமாகிய நாடகத்தைக் கனகசபையிலே ஆடும் பரத வித்தையைக் கற்றுள்ளான்.

IV புண்டரிகத்தவன் = பிரம்மா; மேவிய = தனது போதத்தாலே பணியலுற்ற; புகலியே = புகலி என்னும் திருப்பதியே.

பொழிப்புரை: கீழ்ச் சொன்ன லீலேகள் எல்லாம் சொன்ன சிவன் தனது இச்சையால் பொருந்தி இருக்கும் ஊர் பிரம்மாவினுல் பூஜிக்கப்பட்ட புகலி என்னும் திருப்பதியே.

4) விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்

I விளங்கொளி தி கழ்தரு எங்கு உரு மேவினன்
II விளங்கு ஒளி தி கழ்தரு எங்கு உருமு ஏவினன்
III விள அங்கு ஒளிது இகழ்தரு எம் குரு மேவினன்
IV விளங்கு ஒளி திகழ்தரு வெங்குரு மேவினன்

I விள கொளி = (கன்று குணிலாக) விளங்கனி எறிந்த விட்டுணு; தி = ஒளிவிட்டு விளங்காநிற்கும்; கழ்தரு (கழுதரு) = நின்மலம் நீடிய; எங்கு = எவ்விடத்திலே; உரு மேவினன் = தனது திருவடிவிலே வைத்துள்ளான்.

பொழிப்புரை: கன்று குணிலாக விளங்கனி எறிந்த நாரணனைப் பிரகாசம் பொருந்திய நிர்மலமாய் உள்ள தன் பெரிய திருமேனியிலே ஒன்று பாதியாக வைத்துள்ளான்.

II விளங்கு = விலங்கு (லகரம் திரிந்தது); ஒளி = ஒலி (லகரம் திரிந்தது); தி = தீ (நெடில் குறுகிற்று); கழ்தரு = காழ்தரு (நெடில் குறுகிற்று); எங்கு = ஏங்கு (நெடில் குறுகிற்று); உருமு = இடி; ஏவினன் = செலுத்தினன்.

பொழிப்புரை: விலங்கு ஒலி தீ காழ்தரு ஏங்கு உருமு ஏவினன் என்று பொருள் செய்க. அவனேடு மாறுபாடாய்க் கத(ற்)றப்பட்ட பௌத்தனது தலையிலே அக்கினியைக் கான்று சொரியும் மிக்க பயம் தந்துகொண்டு விழுகின்ற இடியை ஏவி ஒறுத்தானும் தானே அன்றி யான் அல்லேன்.

III விள = நீங்க (விள்ள என்பதன் இடைஒற்றுக் கெட்டது); அங்கு = அவ்விடத்து; ஒளிது = ஒள்ளிது (ளகர ஒற்று தொக்கது); இகழ்தரு = தூஷணப்படும்; என் குரு = என்னுடைய குரு; மேவினன் = கலந்தனன்.

பொழிப்புரை: தனது பரிபூரணத்திலே தன்னை இழந்து இரண்டாய் விசுவம் உருகி(க்கா)த்தான் விஷமாகத் தூஷணம்பண்ணப்பட்டு நிற்கின்ற எனக்குக் குருமூர்த்தியாய் வந்து, என் பிறவியை ஒழித்துத் தனது பேரின்பமாகிய பரிபூரணத்திலே எனது அடிமை குலையாமல் இரண்டற வைத்தவன்.

IV விளங்கு ஒளி = எங்கும் பிரகாசியாநின்ற சீர்த்தி; திகழ்தரு = சிறக்கும்; வெங்குரு = இயமனால் பூசிக்கப்பட்ட திருப்பதி; மேவினன் = விரும்பினான்.

பொழிப்புரை: கீழ்ச்சொல்லிப்போந்த செய்திகள் எல்லாம் உடையவன் எத்தன்மையனோ எனின், எங்கும் பிரகாசியாநின்ற சீர்த்தி சிறந்துள்ள, இயமனால் பூசிக்கப்பட்ட திருவெங்குரு என்னும் திருப்பதியை விரும்பியுள்ளான் என்றவாறு.

5) சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்

I சுடர்மணி இமம் ஆளி கைத்தோணி புரத்து அவன்
II சுடர்மணி மாளி கைத்தோள் ணிபுரத்தவன்
III சுடர் மணி மாளி கைத்தோணி புரத்தவன்
IV சுடர்மணி மாளிகைத் தோணிபுரத்தவன்

I சுடர்மணி = சூடார் மணி (நெடில் குறுகியது); (இமம்: ஈமம் என்பதன் குறுக்கம்) ஆளி = ஆளப்பட்டவன்; கைத்தோணி = போர் தொலைத்த வெற்றித் தும்பை [துரோணம் (-தும்பை) என்பது 'தோணி' என்று ஆயிற்று]; புரத்து = திரிபுரங்களையும்; அவன் = அவம் பண்ணினான்.

பொழிப்புரை: சுடுநிலமாகிய மயானத்தை நடம் ஆடும் இடமாகக் கொண்டு முப்புரங்களையும் அவம்செய்து சுடப்பட்ட வெற்றிப் போரை உடைய தும்பை-மாலைக் கடவுள்.

II சுடர் மணி = சூடார்மணி; மாளி = மாலினை உடையான்; (மாலி என்பது திரிந்தது.) கைத்தோள்= (தோல் என்பது 'தோள்' எனத் திரிந்தது ) துதிக்கையினை உடைய யானை; ணிபுரத்தவன் = வடிவு இல்லாமல் செய்தவன்.

பொழிப்புரை : எனது உச்சிக்குச் சூடாமணியுமாய், என்மேல் வைத்த மாலினை உடையனுமாய், யாகத்தின்கண் வந்த யானையை வடிவழித்துப் போர்க்கும் தன்மையை உடையவன்.

III சுடர் = சூரியன்; மணி = கழுவி; (மண்ணி என்பது தொகுத்தது); மாளி = கெட்டவன்; கைத்தோணி= தெப்பம்; புரத்தவன் = புரந்தவன் (வலித்தல் விகாரம்).

பொழிப்புரை: ஆதித்தன் களங்கம் கழுவப்பட்ட சமுத்திரம் போன்ற ஜன்மக் கடலிலே கீழ்ப்பட்டழுந்திக் கெடாநின்ற ஆன்மாக்களுக்குக் கைப்பற்றிக் கரை ஏறும் தெப்பமாகப் பிரணவம் என்கிற மந்திரத்தை அவரது செவியின்கண்ணே உண்டாக்காநின்றவன்.

IV சுடர் = விளக்கத்தை உடைய; மணி = நவரத்தினங்களால் அலங்கரிக்கப் பட்ட; மாளிகை = மாளிகைகள் சூழ்ந்த; தோணிபுரத்தவன் = திருத்தோணிபுரத் தின்கண்ணே வாழும் சிவன் இத்தன்மையுடையவன் என்றவாறு.

பொழிப்புரை: கீழ்ச் சொல்லிப்போந்த தன்மையெல்லாம் உடையவன் யாவனோ என்னில், விளக்கத்தையுடைய நவரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட மாளிகை சூழ்ந்த திருத்தோணிபுரத்தின்கண் வாழும் சிவன் என்றவாறு.

6) பூசுரர் சேர்பூந் தராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந் தராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந் தராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந் தராயவன் பொன்னடி

I பூ சுரர் சேர் பூந்தராயவன் பொன்னடி
II பூசுரர் சேர்பூம் தராய் அவன் பொன் நடி
III பூசு உரர் சேர்பு உந்தராய் யவன் பொன் அடி
IV பூசுரர் சேர் பூந்தராயவன் பொன்னடி

I பூ = பூமியில் உள்ளோர்; சுரர் = தேவர்கள்; சேர் = தோன்றிய; பூ = இதயகமலம்; தராயவன் = தரித்தவன்; பொன் = பொலிவு; அடி (ஆடி என்பதன் குறுக்கம்) = கண்ணாடி.

பொழிப்புரை: பூமியில் உள்ளாரையும், தேவகணங்களாய் உள்ளவரையும், தனது நாபிகமலத்திலே தோற்றுவிக்கப்பட்ட பிரம்மா விஷ்ணுவினது போதத்திலே, கண்ணாடியும் நிழலும் போலப் பிரதிபிம்பியாநின்றவனே!

II பூசுரர் = மலத்தைக் கழுவப்பட்ட சிவஞானிகள்; சேர்பூ = திரட்சிப் பொலிவு; தராய் = பெறப்பட்ட; (அவன்: சுட்டு) பொன் = வனப்பு; நடி = நாடகம் ஆடுபவன்.

பொழிப்புரை: மலத்தைக் கழுவப்பட்ட சிவஞானிகளின் திரட்சி பொலிவு பெறும் வனப்பை உடைய ஆனந்தநிருத்தத்தை உடையவன்.

III பூசு உரர் = திருநீற்றை உத்தூளித்த மார்பை உடையவர்; சேர்பு = ஏயது அறிந்து; உந்தராய் = தள்ளுதலை உடையவராய்; யாவன் = எங்ஙனம்[1]; பொன் = அழகு; அடி = மூலம்.

பொழிப்புரை : சர்வாங்க உத்தூளனம் பண்ணின மார்பை உடைய சிவஞானி களுமாய்ப் புண்ணியபாவக்கட்டு அரியப்பட்டு, விசுவத்தைத் தள்ளிய சிறப்பை யுடையருமாய் இராநின்றவருக்கு மிகுதிப்பட்ட மூலமாய் உள்ளவன்.

பாட பேதம்: [1]யெளவனம்

IV பூசுரர் = மறையோர்; சேர் = திரண்ட; பூந்தராயவன் = பூந்தராய் என்னும் திருப்பதியின்கண் உறையும் சிவன்; பொன்னடி = அழகிய திருவடித்தாமரை.

பொழிப்புரை : மறுவிலா மறையோர் வாழும் திருப்பூந்தராய் என்னும் திருப் பதியின்கண் உறையும் சிவனது அழகிய திருவடித்தாமரை என்னை ஆண்டிடுவதாகுக.

7) செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்

I செருக்கு வாய்ப்பு உடையான் சிரபுரம் என்னில்
II செர் உ கு வாய்ப்புடையான் சிர் அபுரம் என்னில்
III செருக்கு வாய் புடையான் சிரம் புரம் என்னில்
IV செருக்கு ஆய்ப்பு உடையான் சிரபுரம் என்னில்

I செருக்கு = மயக்கம்; வாய்ப்பு = மேலீடு; உடையான் = கேடு செய்யான்; சிரபுரம் = மேலாகிய விருப்பு; என்னில் = என்னும் போதமே.

*பொழிப்புரை:* தனது திருவடிப் பிரசாதம் இல்லாதாருக்கு மலமயக்கத்தின் மேலீட்டைக் கெடாத சிவனுக்கு, விசுவாதீனமான இருப்பிடம் எனது சைதன்யம் ஆமே.

II செர் (சேர் என்பதன் குறுக்கம்) = சத்தாதிகள் அஞ்சும் சேரப்பட்ட; (உ: சுட்டு) கு = பூமி; வாய்ப்பு = சகல லோகங்களையும் உண்ட விஷ்ணுவினது வாயாகிய அத்தன்மை; உடையான் = பெறுவாய்ப்பு உடைமையை உடையான்; (சிர்: சீர் என்பதன் குறுக்கம்) அபுரம் = உயிர் போன களேபரம்; என்னில் = மேல்நிலை .

*பொழிப்புரை:* விசுவத்தை உணவு பண்ணுநின்றுள்ள நாராயணனது களேபரத்தைத் திருமேனியில் தரித்துள்ளானே!

III செருக்கு = ஆத்மவிகாரமாகிய கர்வம்; வாய் = இந்திரியம்; புடையான் = இடத்தான்; சிரம் = மேல்; புரம் = சரீரம்; என்னில் = சத்தியம்.

*பொழிப்புரை:* ஆத்மவிகாரமாகிய சுவர்க்கத்தில் இச்சைஉடையானுக்குச் சுவர்க்கமோ என்னில் மிகவும் மெய்யாக விசேடித்திருக்குமன்றே!

IV செருக்கு = இந்திரியம் உய்த்த தருக்கு[1]; ஆய்ப்பு = இளைப்பு; உடையான்[2] = உடையவன்; சிரபுரம் என்னில் = சிரபுரம் என்று உரைக்கில்.

*பொழிப்புரை:* இந்திரிய வன்மையாகிய யுத்தத்தில், அதற்கு இளையாமல், அந்த இந்திரியமாகின்ற பாணங்கள் தனது அறிவுக்குள் தைக்கப்படான், ஒருகால் சிரபுரம் என்று சொன்னஇடத்துப் பொறிவாயில் ஐந்தினையும் அவியப் பொருது சிவனுடைய சீர் பாதத்திலே அடையாநிற்பன்.

பாட பேதம்: 1 யுத்தத்திற்கு
2 உள் தையான் - உள் தைக்கப்படான்

8) பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்

I பொன்நடி மாது அவர் சேர் புறவத்தவன்
II பொன் அடி மாதவர் சேர் புறவம் தவன்
III பொன் அடி மாதுஅவர் சேர்பு உறு அவ(ம்) (அ)த்து அவன்
IV பொன் அடி மாதுஅவர் சேர் புறவத்தவன்

I பொன் = பொலிவு; நடி = கூத்து உடையவள்; மாது = பத்திரகாளி; அவர் = பூத கணங்கள்; சேர் = தங்குதல்; புறவத்தவன் = சுடுகாட்டில் உள்ளவன்.

பொழிப்புரை : பொலிவினை உடைய மாயாநிருத்தம் புரியும் பத்திரகாளியும் பூதபசாமும் பொருந்திய மயானமே திருக்கோயிலாக உடையவன்.

II பொன் = தூய்மை; அடி = வழி; மாதவர் = தபோதனர்; சேர் = திரட்சி; புறவம் = முல்லைநில வனம்; தவன் = தவம்புரிந்துள்ளான்.

பொழிப்புரை : சுத்தமான வழியைத் தரப்பட்ட மகாஇருடியர் திரண்டு தபசு பண்ணுநிற்கும் ஆரணியத்தின்கண்ணே தனித்தே தபசு புரியாநிற்கும் தபோதனன்.

III பொன் = இலட்சுமியை ஒத்த; அடி = ஆபரணத் தொகுதியை உடைய; மாது அவர் = இருடி பத்தினிகள்; சேர்பு உறு = பிச்சை இட வந்து அணையும்; அவம் = கலை சோர்தல்; அவன் = நிர்வாணி.

பொழிப்புரை : அழகிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள இருடிபத்தினி-கள் பிச்சை இட வந்து அணையுமிடத்துத் தனக்குள்ள நிர்வாணத்தை அவர்களுக்குக் கொடுத்தவன்.

IV பொன் அடி = பொன்னுல் செய்யப்பட்ட பாடகம், நூபுரம், காலாழி முதலிய வும் இடப்பட்ட பாதம்; மாதுஅவர் = கன்னியர்; சேர் = இனமாய் விளையாடுதல்; புறவத்தவன் = திருப்புறவம் என்கின்ற திருப்பதியில் வாழ்கின்றவன்.

பொழிப்புரை: பொன்னுல் செய்யப்பட்ட பாடக நூபுராதிகளைப் பாதங்களிலே அணிந்துள்ள கன்னியர் திரண்டு விளையாடும் புறவம் என்னும் திருப்பதியில் வாழ் கின்ற சிவன்.

9) தெசமுக னெரிதர வூன்று சண்பையான்
தெசமுக னெரிதர வூன்று சண்பையான்
தெசமுக னெரிதர வூன்று சண்பையான்
தெசமுக னெரிதர வூன்று சண்பையான்

I தெசமுகன் எரிதர ஊன்று சண் பையான்
II த சமுகம் நெரிதர ஊன் துசு அண் பையான்
III தெசம் உக நெரிதரம் ஊன் து சண் பையான்
IV தசமுகன் நெரிதர ஊன்று சண்பையான்

I தெசமுகன் = தயமுகன் = தயாவை உடையவன்; எரிதர = எரி வீச; ஊன்று = அழுந்து; சண் = வேகம்; பையான் = படம் பொருந்திய பாம்பை உடையான்.

பொழிப்புரை : ஆத்மாக்களிடத்துக் கருணை பிறக்கும் இடமாய் உள்ளவன், அக்கினி வீசும், திரு அரையிலே அழுந்தச் சாத்தியுள்ள விரிந்த படத்தினை உடைய பாம்பு அரைஞாணேன்.

II த = அது என்றது; சமூகம் = திரட்சி; (நெரி: நேரீ என்பதன் குறுக்கம்) தர = தரக்கு = புலி; ஊன்துசு = தோல் ஆடை (தூசு என்பதன் குறுக்கம்); அண் பையான் = விரித்து உடுத்தான் (பாயான் என்பது 'பையான்' எனத் திரிந்தது).

பொழிப்புரை: எல்லாம் இறந்து, அந்தமாயுள்ள சிவஞானிகள் குழாத்துக்கு நேரிதாகிய சூனியமாயுள்ள பொருளைத் தோற்றுவித்துள்ளானுய்த் தரக்கு என்ற பெயரை உடைய வன்புலியினது தோலைத் திருஅரையிலே விரித்து உடுத்துள்ளான்.

III தெசம்: தைசதம் என்பதன் திரிபு. உக = கெட; நெரி = எதிர்ப்பட்டவன் (நேரி என்பதன் குறுக்கம்); தரம் = மலை; ஊன் (உன் என்பதன் நீட்டம்) = திருவுள்ளத் தடைத்தவன்; து = விசேடணம் (விசேஷ ஞானமுடையவன்); சண் பையான் = சட்சமயத்துக்கும் பயனுய் உள்ளவன் (பயன்: பையான் என நீண்டது).

பொழிப்புரை: ஆத்மவிகாரமான அகங்காரம் போம்படி என் அறிவில் எதிர்ப் பட்டவன், கயிலாயம் என்னும் திருமலையைத் திருவுள்ளத்து அடைத்து எழுந் தருளி இருந்து, ஆத்மாக்களை இரட்சிக்க விசேஷஞானத்தை உடையவன் என்று ஏத்தும் சட்சமயங்களுக்கும் அவரவர் கொண்ட பயனுய் உள்ளவன்.

IV தசமுகன் = பத்துத் தலைகளை உடைய இராவணன்; நெரிதர = முரிய; ஊன்று = அமுக்கிய; சண்பையான் = சண்பை என்னும் திருப்பதியில் உள்ளான்.

பொழிப்புரை: இராவணனுடைய பத்துத் தலைகளும் முரியத் திருவிரலால் அடர்த்தவர் யார் என்னில், சண்பை என்னும் திருப்பதியிலே வாழ்பவர்.

10) காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே

I காழியான யன உள்ளவா காண்பரே
II காழியான் நயன் உள்ளவா காண்பரே
III காழியான் அயன் உள்ள ஆ காண்பரே
IV காழியான் அயன் உள்அவா காண்பரே

I காழியான = நிலை உண்டாகிய நின்மலமான சித்தத்தை உடைய; யன = பத்தரிடத்து; உள்ளவா = சத்தியம்; காண்பரே = நோக்குவரே.

பொழிப்புரை: நிலைபெற்ற நின்மலமாகிய சித்தத்தை உடைய பத்தரிடத்துச் சத்தியமாகிய பொருள் விளைவான்பொருட்டு ஞானநாட்டத்தாலே அவர்களைக் கடாக்ஷிக்கின்றவன்.

II காழியான் = களங்கம் உடையவன்; நயன் உள்ளவா = ஞானக்கண் உள்ளவா; காண்பரே = நிலைமையாக நினைப்பரே.

பொழிப்புரை: திருமிடற்றில் உண்டாகிய களங்கத்தை உடையானது கருணையை நினைத்து ஞானநாட்டத்தை உடைய சிவஞானிகள், சிவனுக்கு இச்சை தன் அடியாரது ஆங்காரத்தைத் தடுக்குமதே பணி என்று தமது அறிவிலே கருதாநிற்பர்.

III காழியான் = விட்டுணு; அயன் = பிரம்மா; உள்ள = நினைக்க; ஆ = அதிசயம்; காண் = கண் = கருதுதல் (நீட்டல் விகாரம்); பரே = அந்நியம்.

பொழிப்புரை: திருமாலும் பிரம்மாவும் திருவடியும் திருமுடியும் காண்பான் பொருட்டு வராகமும் அன்னமுமாகக் கருதி, வடிவு கொண்டனர். ஐயோ! உள்ள படிக்குச் சிவனைப் பெறுமல் இவர்கள் கருதியது எது என்னில், அந்நியமே கண்டனர் என்பது.

IV காழியான் = தொழில்[1] உள்ளான்; அயன் = ஐயன்; உள்அவா = எனது அறிவில் உண்டாகிய ஆசை; காண்பரே = தரிசிப்பரே.

பொழிப்புரை: என் பொருட்டாகக் காழி என்னும் திருப்பதியைப் படைத்தானை, என் ஐயனை, எனது ஆசையைக் கீழ்ச் சொன்ன இருவரும், தாங்கள் தேடும் தேட்டப் பிரிவின்[2] மயக்கத்திலே தேட்டம் அழிந்து தோன்றுநிற்பவனைத் தேடி மறத்தல் ஒழிந்து எவ்வாறு காண்பர்?

பாட பேதம்: 1. காழிப்பதியில் 2. பிறவின்

11) கொச்சை யண்ணலைக் கூடகிலா ருடன்மூடரே
கொச்சை யண்ணலைக் கூடகிலா ருடன்மூடரே
கொச்சை யண்ணலைக் கூடகிலா ருடன்மூடரே
கொச்சை யண்ணலைக் கூடகிலா ருடன்மூடரே

I கொச்சை அண்ணலைக் கூடகிலார் உடல் மூடரே
II கொச்சை அண்ணலைக் கூடகிலார் உடல் மூடரே
III கொச்சையள் நலை கூடு அகில் ஆர் உடன் மூடரே
IV கொச்சை அண்ணலைக் கூடகிலார் உடல் மூடரே

I கொச்சை = அறியாமையைப் பொருந்தியுள்ள ஆணவ மலம்; அண்ணலை = பொருந்துதலை; கூடகிலார் = மாறுபட்டார்; உடல் மூடரே = உடலாலே மறைக்கப் படாரே (மூடார் என்பது 'மூடர்' எனக் குறுகிற்று).

பொழிப்புரை: ஆணவ மலத்துடனே கூடியுள்ள மயக்கத்துடன் மாறுபட்டோர்கள், மாயா தனுவாலும் மந்திர தனுவாலும் மறைக்கப்படார்கள்.

II கொச்சை = புலால் நாற்றம்; அண்ணல் = அணுகுதல்; கூடகிலார் = மனம் பொருந்த மாட்டாதார்; உடல் மூடரே = சரீரத்தைப் புதைப்பரே.

பொழிப்புரை: புலால் நாற்றத்தைப் பொருந்திய அழுக்கு மெய்யைப் பொய் என்று மனம் கொள்ளமாட்டாமல், அதுவே தமது நிலைபெற்ற உருவாக நினைத்துத் துவர்ஆடையாலே உடம்பைச் சூழப்பட்ட பௌத்தரும்

III கொச்சையள் = பேதைத்தன்மை உடைய மத்ஸ்யகந்தை; நலே = அத்தன்மையாளைப் புலப்படாநின்ற நலத்தைக் கருதி; கூடு = சரீரம்; அகில் ஆர் = அகில்மணம் வீசப்பட்ட; உடன் = அத்தன்மையாளுடன்; மூடரே = மொய்க்குமாறு பண்ணினது - அது பொருந் துதல்.

பொழிப்புரை : பேதைத்தன்மை யுடைய மத்ஸ்யகந்தைஆகின்றவளது நலத்தைக் கொள்வான்பொருட்டு, அவளது சரீரம் எல்லாம் சுகந்தம் மொய்க்கும்படி அவளுடனே பொருந்தப்படாநின்ற பராசரனுகிய மகாஇருடி வந்து சிவனைப் பொருந்தி அர்ச்சித்த லால்,

IV கொச்சை = கொச்சையாகிய பராசரன் பேர்[1] உள்ள கொச்சை என்னும் திருப்பதி; அண்ணலே = கர்த்தாவை; கூடகிலார் = நேர்ப்பட மாட்டார்; உடல் (உள்+தல்) = உள்ளுதல்; மூடரே = அந்தகாரம் நிறைந்த போதத்தை[2] உடையவரே.

பொழிப்புரை : பராசரன் பூசித்தலால் அவன் பெயராலே பெயர் பெற்றுள்ள கொச்சை நகர் என்னும் திருப்பதியிலே எழுந்தருளியிராநின்றுள்ள தலைமை-யோனை உள்ளபடி தரிசனம்பண்ணி வழிபடமாட்டார்களது நினைவு எவ்வாறு இருக்கும் எனின், மழைக்கால இருளும் வெளிது என இருண்ட மயக்கத்தை உடைய ஆணவபோதமாய் இருக்கும்.

பாட பேதம்: 1. பேரால் 2. போகத்தை

12) கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை

I கழுமல் அமுது பதிக்க உள்நி அன் கட்டு உரை
II கழு மலம்உது பதி கவுணி அன்கண் து உரை
III கழும் அலம் அமுது பதி கம் உணியன் கட்டு உரை
IV கழுமலம் முதுபதிக் கவுணியன் கட்டு உரை

I கழுமல் = மிகுதிப்பட்ட குற்றம்; அமுது =சலம்; பதிக்க = விளைவிக்க; உள்நி = உள்ள நீ (நீ 'நி' எனக் குறுகியது); கட்டு = வடிவாகக் கட்டுண்பன; உரை = தேய்தல்.

பொழிப்புரை: மிகுதிப்பட்ட தோஷமாய் உள்ள சுக்கில சுரோணிதம் ஆகிய இரு நீரின்கண் பதிந்து விளைவதற்குள்ள நீயுமாய் அந்தக் கர்ப்பாசய நீரின்கண்ணே சிரம் முதலாகிய அவயவம் ஆகத் தோன்றிப் பூமியின்கண் செனித்துப் பரிணமித்துப் பின்பு தேய்ந்து மரிக்கின்ற ஜன்மத்தையும்,

II கழு = கழுவப்படும்; மலம் உது = ஆணவமலமும் மற்றும் அதனுடன் சுட்டிச் சொல்லப்பட்ட மாயாமலமும் கன்மமலமும்; (பதி: 'பாதி' - குறுக்கல் விகாரம்); கவுணி = உள்ளே அகப்படுத்திக் கவளீகரித்துக்கொள்ளுதல்; அன்கண் = ஆன்மாவி னிடத்து; உரை = கருத்தா.

பொழிப்புரை: கீழ்ச் சொல்லிப்போந்த ஜன்மத்தையும் கழுவி மலத்திரயங்களை யும் கழுவாநிற்கும் என்ற பதம் நிற்க, இனிச் சிவனது நாமம் உரைக்கற்பாற்று.

தனது பாதி ஆகிய திருவருளிலே என்னை அகப்படுத்திக் கவளீகரித்துக்கொண்டு, அந்த அருள்வழியாகவே எனது இடத்தில் இடையறாமல் வாழும் தன்னை எனக்குத் தந்து அடிமை குலையாமல் எஞ்ஞான்றும் ஒளிவிட்டு விளங்கும் கர்த்தா.

III கழும் = மயக்கம்; அலம் = அலக்கண்படுதல்; அமுது = அமுதம்; பதி = கர்த்தா; கம் = சிரசு; உணியன் = உண்ணப்பட்டவன் (உண்ணி 'உணி' எனத் தொக்கது); கட்டு = விளக்கம்; உரை = பொன்.

பொழிப்புரை: மாயாமல மயக்கத்தின்கண்ணே மயங்கிப் பெத்தம் முத்தி இரண்டும் தெரியாமல் திண்டாடும் மலபோதர்க்கு, அமுதம் போன்று அரிதாய் உள்ளவனுமாய், ஒளிவிட்டு விளங்காநின்ற பொன் உருவை உடையனும்ச் சிருட்டிக்குக் கர்த்தா ஆகிய பிரம்மாவினது சிரக்கபாலத்திலே பிச்சை கொண்டு நுகரும் கருணை உடையவன்.

IV கழுமலம் = கழுமலம் என்ற பெயருடைய; முதுபதி = அநாதி மூலமாகிய பதியிடத்து; கவுணியன் = கவுணிய கோத்திரத்துத் தோன்றிய ஞானசம்பந்தன்; கட்டு (காட்டு என்பதன் குறுக்கம்) = நிவேதிக்கப்பட்ட காட்டாகிய இப்பாடலை; உரை = உரைப்பீராக.

பொழிப்புரை: திருக்கழுமலம் என்னும் மூலப் பழங்கிழமைப் பன்னிரு பெயர் பெற்ற அநாதி மூலமாகிய பதியிடத்துக் கவுணிய கோத்திரத்திலே தோன்றிய யான் நிவேதிக்கும் காட்டாகிய இப்பாடலைக் கீழ்ச் சொன்னவையிற்றிலும், மலத்திரயங் களிலும் அழுந்தாநின்ற ஒருத்தர்ஆகிலும் பலர்ஆகிலும் உரைசெய்வார் உயர்ந் தார்களே ஆதலால், இவ் ஏகபாதப் பாடலை இடைவிடாமல் உரைசெய்வீராக என்றவாறு.

இப்புத்தகம் தொண்டைமண்டலத்தைச் சார்ந்த காஞ்சிப்பதியில் வாழும் ஞானப்பிரகாச தேசிகர் தம் கைப்பட எழுதியது.

## திரு ஏகபாதம் - இன்றைய உரை

(பாடல்கள் அடிதோறும் பொழிப்புரையாக உரையெழுதப்படுகின்றன)

1) பிரம புரத்துறை பெம்மா னெம்மான் -

அறிவுவெளியாகவும் பராசக்தியாகவும் எங்கும் நிறைந்து நிற்கும் பூரணத்தன் மையை வியந்து, அத்தகைய பூரணத்தன்மைக்கும் மேலாய் இன்பமே வடிவாய் முதல் நடு இறுதி அற்று விளங்கும் பெரியோன்,

வானத்தினின்று பெருகும் கங்கை நங்கையைத் தரித்தவன், எம்மை நீங்காத ஆன்மாவானவன்,

எனது உடற்பற்றை அறுக்க, என்னைப் போலவே உடலோடு வந்து என்னைப் பிரம்மானுபவம் என்னும் முத்திநிலையை அடையும்படி செய்தவன் (யாவன் என்னில்,)

பிரமபுரம் என்னும் திருத்தலத்தைக் கோயிலாகக் கொண்டு விளங்கும் பெருமான்.

2) விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன் -

(நீல, நிஷத, விந்திய, மால்யவான், மலய, கந்தமாதன, ஹேமகூட, ஹிமய என்னும்) எட்டுக் குலமலைகளையும் தன் சிலம்பின் உள்ளிடு பரல்களாக உடைய வனும்,

திருமாலின் அவதாரமான புத்தரது சொற்கேட்டு ஒழுகிய மூன்று அசுரர்கள்தம் முப்புரங்களேயும் எரித்தவனும் ஆகிய எம்பெருமான்,

கற்பகமலர்களேச் சூடும் வானவர்தலேவனுகிய இந்திரன் மூங்கில் வழியாக வந்து வழிபட்ட,

இதழ் விண்டு மலர்கின்ற பூஞ்சோலேகளேயுடைய திருத்தலமாகிய வேணு புரத்தில் திருக்கோயில்கொண்டு விளங்குபவன்.

3) புண்டரி கத்தவன் மேவிய புகலியே -

எனது சித்தமலம் அறுத்து என் இதயத்தாமரையின்கண் காட்சி கொடுத்து இடையரு ஆனந்தம் கொடுத்துப் புகலிடமானவன்,

திருநீற்றினே அணிந்தவன், கருணேயாளன், எனது பாட்டினேயும் உவந்தவன்,

புலிக்கால் முனிவரனுக்குத் தனது ஞானக்கூத்தினேப் பொற்றில்லே மன்றினுள் காட்டிய நடனக் கலேயைக் கற்றவன் (என்றது, அக்கலேயில் வல்லவன் என்றவாறு) ஆகிய அப்பெருமான் கோயில்கொண்ட திருத்தலம், மலர்மிசையிருக்கும் நான்முகன் தனது அறிவினுல் பணிந்து பூசிக்கப்பெற்ற திருப்புகலியேயாம்.

4) விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன் -

கன்று குணிலாகக் கொண்டு விளங்கனியை எறிந்த திருமாலினேத் தன் ஒளி திகழும் திருமேனியில் பாதியாக மேவியவன்,

வாதிட்ட பௌத்தனது தலேயில் இடியை வீழும்படி ஏவித் தண்டித்தவன்,

பழிக்கப்படுகிற என்னேக் குருமூர்த்தியாய் வந்து, தனது பேரின்பமாம் பரி பூரணத்தில் சேர்த்துக்கொண்டவன் ஆகிய அப்பெருமான்,

இயமனுல் பூசிக்கப்பெற்ற, எங்கும் ஒளி வீசுகின்ற வெங்குரு என்னும் திருத் தலத்தை விரும்பியுள்ளான்.

5) சுடரொளி மாளிகைத் தோணி புரத்தவன் -

சுடுநிலமாகிய மயானத்தை நடமாடும் இடமாக உடையவனும், முப்புரம் செற்ற போர் செய்தற்குரிய தும்பைப்பூமாலேயைச் சூடியவனும்,

என் தலேயுச்சிக்குச் சூடாமணி அனேயானும், என்மீது கொண்ட அன்பெனும் மயக்கத்தினே உடையானும், (தாருகாவனத்துஇருடியர் செய்த ஆபிசாரவேள்வியி னின்று வெளிப்பட்ட) யானேயை அழித்து அதன் தோலேப் போர்த்தியவனும்,

பிறவிப்பெருங்கடலினின்று ஆன்மாக்கள் கரையேறத் தெப்பமாக ஓரெழுத் தாம் பிரணவத்தை உபதேசிக்கிறவனும் ஆகிய அப்பெருமான்,

நவமணிகள் இழைத்த மாளிகைகள் சூழ்ந்த திருத்தோணிபுரத்தை இடமாக உடையவன்.

6) பூசுரர் சேர்பூந் தராயவன் பொன்னடி -

பூமியிலுள்ளோர் தேவர்கள் என்னுமிவர்களேத் தோற்றுவிக்கும் நான்முகனே யும் திருமாலேயும் (அருட்சக்தியாகிய) கண்ணுடியிற் காணும் பிரதிபிம்பமாகக் கொண்டவன் [தானே பிம்பம், மற்ற இருவரும் பிரதிபிம்பம் என்றவாறு],

சிவஞானிகளுக்கு அருள ஆனந்தக்கூத்து ஆடுபவன்,

முழுநீறு பூசிய முனிவர்களின் அனுபவத்தில் விளங்கும் அழகிய மூலப் பொருளாகின்றவன்,

மறுவிலா மறையோர் வாழும் பூந்தராய் என்னும் திருப்பதியில் கோயில் கொண்டிருக்கும் எம்பிரான் ஆகிய சிவபெருமானுடைய அழகிய திருவடித்தாமரைகள் என்னே ஆட்கொள்வனவாகுக!

7) செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில் -

தன் அடி சாராதார்தம் செருக்கினை அழியாதவனும், அடிச் சார்ந்த எனது ஆன்மாவையே தனது இடமாக உடையவனும்,

மண்ணை யுண்ட மாயோனின் எலும்புக் கூட்டினைத் தன் திருமேனியில் தரித்தவனும்,

விண்ணுலக போகத்தை விரும்பியவர்க்கு அவ்வாறே அளிக்க வல்லவனும் ஆகிய எம் இறைவன்,

ஒருவன் தன்னிடம் நிகழும் ஐம்புலப்போர்க்கு இளையாமல் ஒருமுறை "சிரபுரம்" என்று சொல்லின், அவனுடைய பொறிவாயில்கள் ஐந்தனையும் பொருதழித்து, அவனைத் தன் திருவடியில் சேர்த்துக்கொள்வான்.

8) பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன் -

பொலிவுடைய மாயாநாடகம் ஆடும் காளியும் பூதங்களும் வாழும் மயானத்தையே தன் கோயிலாக உடையவனும்,

தூநெறிக்கண் ஒழுகும் முனிவர்கள் தவம் செய்யும் காட்டின்கண் தானும் தனித்தவம் செய்பவனும்,

திருமகள் போன்று அணிகலன்களைப் பூண்ட தாருகவனத்து இருடிபத்தினியர் தனக்குப் பிச்சையிட வந்தபோது தனது நிர்வாணநிலையை அவர்கட்கும் அருளியவனும் ஆகிய அப்பரமன்,

பொன்னிழைகளை அணிந்த கன்னியர் விளையாடும் புறவம் என்னும் திருத்தலத்தில் வாழ்கின்ற சிவபெருமானவான்.

9) தெசமுக னெரிதர வூன்று சண்பையான் -

ஆன்மாக்களிடம் கருணையுடையவன், தீயை உமிழும் வேகம் மிக்க படத்தினையுடைய பாம்பினை அரையிற் சுற்றியவன்,

புலித்தோலை ஆடையாக விரித்துடுத்தவன்,

அகங்காரம் நீங்குமாறு எனது அறிவிற் காட்சி கொடுத்தவன், கயிலாயத் திருமலையைத் திருவுளம் கொண்டு தோன்றி ஆன்மாக்களைக் காப்பாற்றும் விசேடஞானமுடையவன், அறுவகைச் சமயத்தோர்க்கும் அவரவர் சமயப்பயனை விளங்குபவன்,

பத்துத் தலைகளையுடைய இராவணனைக் கால்விரலால் முரிய அடர்த்தவன் ஆகிய எம் ஈசன் சண்பை என்னும் திருத்தலத்தில் கோயில்கொண்டுள்ளவன்.

10) காழி யானய னுள்ளவா காண்பரே -

நிலைத்த சித்தமுடையரான தன் அன்பர்கட்குச் சத்தியப்பொருள் மனத்தில் தோன்றவேண்டி ஞானக்கண் பாலித்து அருளுபவன் என் இறைவன்.

அவனுடைய அடியார்கள், கருணையால் வெளிப்பட்ட அவனது திருநீலகண்டத்தைக் கண்டு தமது ஆங்காரம் அழித்து அவன்அடியை அடைய எண்ணுவர்.

திருமாலும் நான்முகனும் எம்பெருமானுடைய அடிமுடி காணமுடியாமல் அந்நியத்தையே கண்டனர்.

என்பொருட்டுக் காழிப்பதியைப் படைத்தவனும், என் ஐயனும், பிறவற்றைத் தேடும் மயக்கத்தால் தான் காணப்பட இயலாத தன்மையனும் ஆகிய எம்பெருமானை அயனும் மாலும் எவ்வாறு காணவல்லராவர்?

11) கொச்சை யண்ணலைக் கூடகிலா ருடன்மூடரே -

ஆணவமலமுடைய ஆன்மாக்கள் பருவுடம்பாலும் நுண்ணுடம்பாலும் மறைக்கப்பட்டவர்கள்.

புலால் நாற்றமுடைய உடலின்கண் பற்றிஞல் அது தமது நிலையான உருவம் என்று பௌத்தர்கள் மயங்கித் துவராடையினை அணிகிருர்கள்.

மீன்மணம் கமழ்ந்த மச்சகந்தியை, அவள் நறுமணம் மூடிக் கமழுமாறு, இறைவனை வழிபட்டு மகிழ்ந்த பராசரன் வழிபட்டமையால்,

கொச்சைநகர் எனப் பெயர் பெற்ற திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள தலைமையுடையோனை வழிபடமாட்டாதார் மும்மல மயக்கத்தினின்றும் மீளமாட்டார்கள்.

*12)* கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை -

பிறந்து இறக்கும் இப்பிறப்பினையும் கழுவி, மும்மலங்களையும் கழுவி, தன்னருளிஞலே தன்னை எனக்குத் தந்து என் அடிமையை ஏற்றவனும்,

அறிவிலார்க்கு அரியவனும், ஒளி திகழும் பொன்னுருவ மேனியனுய் அயன் தலையிற் பிச்சை ஏற்பவனும் ஆகிய சிவபெருமானைப் பாடிய,

பன்னிரு பெயர்களையுடைய திருக்கழுமலம் என்னும் திருத்தலத்தில், கௌணிய கோத்திரத்தில் பிறந்த யான் இசைத்த இவ் ஏகபாதத் திருப்பதிகத்தை (த் தனித்தோ, பலர் கூடியோ, பக்தியுடன் ஓதிஞல் ஞானத்தால் உயர்ந்தோராவர் ஆதலின், இதனை) இடைவிடாது ஓதுமின்!

## திரு எழுகூற்று இருக்கை - பழைய உரை

[1,2 முதலிய அரேபிய எண்களும், அ ஆ முதலிய தமிழெழுத்துக்களும், I II முதலிய உரோமன் எண்களும் முறையே சென்னை-கீழ்க்கலை நூல்நிலையச் சுவடி ஒன்றும், டாக்டர் உ.வே.சா. நூல்நிலையச் சுவடிகள் இரண்டும் பற்றியவை. அவை பழைய உரை(த் தொடர்)க்கு விளக்கமாய் அமைவன, தேவாரம் முதல்தொகுதி பக். Lxxxviii காண்க.]

ஓர் உரு ஆயினை என்றது, [1]எல்லாத் தத்துவங்களையும் கடந்து, வாக்கு மனம் ஆதிகளுக்கு எட்டாமல் இருந்துள்ள தற்சுருபம்தான், [2]பஞ்ச கிருத்தியங்களையும் நிகழ்த்தவேண்டி, நினது [3]இச்சையால் [அ]எடுத்துக்கொண்டிருக்கும் திருமேனியை (நீ) என்றவாறு.

மான் ஆங்காரத்து ஈர் இயல்பாய் என்றது, மான் என்பது சக்தி; ஆங்காரத்து ஈர் இயல்பாய் - தற்சக்தியைக் கொண்டு சர்வானுக்கிரகமான பஞ்சகிருத்தியங்களை நடத்த வேண்டி, [4] [ஆ]சக்தி சிவம் ஆகிய இரண்டு உரு ஆயினை என்றவாறு.

ஒரு என்றது, அந்தச் சத்தியுடனே கூடி ஒன்ருகி நின்றனை என்றவாறு.

விண்முதல் பூதலம் ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும் படைத்து, அளித்து, அழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை என்றது, ஆகாசம் முதலாகப் பூமி ஈருக உள்ள பஞ்சபூதங்களையும், சந்திரஆதித்தர்களையும், தேவர்களையும் மற்றும் உள்ள ஆத்மாக்களையும் படைக்கைக்கும் காக்கைக்கும் அழிக்கைக்கும், பிரம்மா விஷ்ணு உருத்திரன் என்கின்ற திரிமூர்த்திகளும் ஆயினை என்றவாறு.

1. தத்துவாதீத பரஞன வாக் மஞதீதஞய்
2. சிட்டி திதி சங்காரம் திரோபவம் அநுக்ரஹம் என்கிற பஞ்ச கிருத்தியங்களையும்
3. சித்சக்தி இடமாய்
அ. எடுத்துக்கொண்டிருக்கும் - சர்வத்தையும் அடக்கி ஏகீகரிச்சுத் தன்னை எடுத்துக்கொண்ட
4. அர்த்தநாரீசுரஞகிய
ஆ. சக்தி சிவம் ஆகிய - அர்த்தநாரீசுவரமாகச் சக்தி என்றும் சிவம் என்றும் ஆகிய

இருவரோடு ஒருவன் ஆகி நின்றனை என்றது, பிரம்மாவையும் விஷ்ணுவையும், [இ]இடத்தினும் வலத்தினும் அடக்கிக்கொண்டு, ஏகமாய்த் திரிமூர்த்திஆகி நின்றனை என்றவாறு.

ஓர் ஆல் நீழல் ஒண்கழல் இரண்டும் முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி காட்டினை என்றது, [ஈ]விருக்ஷங்களுக்கெல்லாம் தலைமையாய் இருப்பதொரு வட விருக்ஷத்தின் நீழலிலே எழுந்தருளியிருந்து, நின் அழகிய ஸ்ரீபாதங்களை உதயம், மத்தியானம், அத்தமனம் என்கிற மூன்று காலமும் [உ]தோத்திரம் செய்யாநின்ற அகஸ்தியன், புலஸ்தியன், [5]ஜனகன், சனற்குமாரன் என்னும் நால்வகை இருடிகளுக்கும் [6]தற்சுருபமான [ஊ]திருமேனியைக் காட்டி அருளினை என்றவாறு

நாட்டம் மூன்றுகக் கோட்டினை என்றது, [எ]பிரம்மா முதலாய் இருந்துள்ள ஆத்மாக்கள் ரூபம் என்னும் புலனுலே சர்வபதார்த்தங்களையும் காணுதபடியாலே, சந்திர ஆதித்தர்களையும் அக்கினியையும் மூன்று கண்ணுகக் கொண்டருளி அந்தகாரமான இருளை ஓட்டினை என்றவாறு.

இருநதி அரவமோடு ஒருமதி சூடினை என்றது, [ஏ]பெரிதாகிய கங்கையையும், ஒப்பில்லாத பாம்பினையும், ஒரு காலத்தினும் முதிராத பிறைக்கண்ணியையும் சூடி அருளினை என்றவாறு.

[7]ஒரு தாள் ஈர் அயில் மூஇலைச்சூலம், நாற்கால் மான்மறி, ஐந்தலை அரவம் ஏந்தினை என்றது, பிரணவமாய் இருந்துள்ள ஒரு காம்பினையும், [1]ஈருகின்ற கூர்மையினையும், பிரம்மா விஷ்ணு உருத்திரன் என்கின்ற மூன்று இலையினையும் உடையதொரு சூலத்தினையும், இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்கின்ற நாலு வேதங்களையும் நாலுகாலாய் இருந்துள்ள ஒரு மான்கன்றினையும், ஸ்ரீ பஞ்சாக்ஷரங்களையும் அஞ்சு தலையாக உடையதொரு மகாநாகத்தினையும் [ஒ] அஸ்தங்களிலே தரித்தருளினை என்றவாறு.

காய்ந்த நால்வாய், மும்மதத்து இருகோட்டு, ஒரு கரி ஈடு அழித்து உரித்தனை என்றது, தன் நிழலைக் காயத்தக்க கோபத்தினையும், [ஓ]தொங்கும் வாயினையும், இரண்டு கொம்பினையும் உடையதொரு ஒப்பில்லாத ஆனையினுடைய பெலங்களை எல்லாம் கெடுத்து உரித்துப் போர்த்தனை என்றவாறு.

இ. இடத்தினும்........... நின்றனை - தன்னிடத்திலே கரந்துகொண்டு ஈசுவரம் சதாசிவமாகி இருவரோடு ஒருவனுகி நின்றனை என்றவாறு.

ஈ. விருக்ஷங்களுக்கு - ஆகமவிருக்ஷங்களுக்கு

உ. தோத்திரம் செய்யாநின்ற - செபம், ஹோமம், தர்ப்பணங்களாலும் வழிபாடு செய்து அர்ச்சித்திருந்த

5. சனகன்

6. உண்மைஞானமான ஒளி பொருந்தின முத்திமூர்த்தி நெறியைக் காட்டியருளினே.

ஊ. திருமேனியை - தன்னிடம் உண்மை ஞான போதங்களில் ஒளி உடைத்தாகிய ஸ்ரீபாதத்தின் வழிபாட்டினை

எ. பிரம்மா முதலாய்........... காணுதபடியாலே - ஆகாசம் முதலாகப் பூமி அந்தம் ஈருக இருந்துள்ள சர்வாத்மாக்களும் தங்கள் ஐம்புலன்களிலே சர்வமாய் நிற்கிற பதார்த்தங்களைக் கண்டு நடத்த வேண்டுதலாலே

ஏ. பெரிதாகிய கங்கையையும் - பெருமை பொருந்தி இருக்கப்பட்ட கங்கை மகாப்ரளயம் ஆகாமல் அந்தப் பெரிய கங்கையினையும்

7. இந்தப் பிரணவத்திலே தோன்றிப் பிறப்பை ஈர்த்த வடிக்கூர்மை உடைத்தாய் அகார உகார மகாரங்களாகிய மூன்று இலையை உடைய சூலத்தையும்

1. பிர்மாவிஷ்ணுக்களாகிய இரண்டு இலையையும் உருத்திரன் என்கின்றதொரு கூரிய வேலையும் கூடியுடைத்தாயிருந்துள்ளதொரு சூலத்தினையும்

ஐ. ஈருகின்ற கூர்மையினையும் - நாதமும் விந்துவும் இரு பாரிசமும் அண்டையாக

ஒ. அஸ்தங்களிலே - ஸ்ரீபாதத்திலே

ஓ. தொங்கும் வாயினையும் - நான்கு தகையினையும்

[8]ஒரு தனு இருகால் வளைய வாங்கி முப்புரத்தோடு நால்நிலம் அஞ்சக் கொன்று [11] தலத்துறு அவுணரை அறுத்தனை என்றது, [ஔ]ஒப்பில்லாத பொன்மலையாகிய வில்லை இருதலையும் வளைய வாங்கி அஸ்திரத்தைத் தொடுத்து, மூன்றுபுராதிகள் ஆகிய அவுணரை அறுத்தனை என்றவாறு.

[9]ஐம்புலம், நாலு ஆம் அந்தக்கரணம், முக்குணம், இருவளி ஒருங்கிய வானோர் ஏத்த நின்றனை என்றது, [க]சத்த பரிச ரூப ரச கந்தம் (செவி, தோல், கண், நா, மூக்கு) எனப்பட்ட ஐம்புலன்களையும், மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்கின்ற அந்தக்கரணங்கள் நான்கினையும், ராசத தாமத சாத்துவிகம் என்கின்ற மூன்று குணங்களையும், பிராணன் அபானன் என்கின்ற இரண்டு வாயுவையும் மூலாதாரத்திலே ஒடுக்கிக்கொண்டு ஏகாக்கிரசித்தராய் இருந்துள்ள தேவர்கள் ஏத்த நின்றனை என்றவாறு.

ஒருங்கிய மனத்தோடு, இரு பிறப்பு ஓர்ந்து, முப்பொழுது குறை முடித்து,

8. சவியா நிலைமையுடைத்தாய், பன்னிரண்டு நூறாயிரம் யோசனை கீழ் வீழ்நது எண்பத்து நான்குநூறாயிரம் யோசனை மேலோங்கி, பதினாறுநூறாயிரம் யோசனை சுற்றளவுடையதாய், பதினாலு லோகத்துக்கும் ஆதாரமான மகாமேருவை ஒரு வில்லாக்கி, இந்த வில்லில் கீட்கால் மேல்கால் என்னப் பட்ட இரண்டு காலையும் வளைய வாங்கி, பொன்மதில் வெள்ளிமதில் செம்புமதில் என்றுசொல்லப் பட்ட மூன்று மதிலும் உடைத்தாய்ப் பரந்து திரியும் முப்புரங்களில் அசுரர்கள் நலியத் தப்பிட்டாராய தேவலோக முள்ளிட்ட லோகங்களையும் அழித்துத் தாங்கள் வேண்டியபடியே செய்கையாலும், தேவர்களும் இருடிகளும் பதினெண்கணங்களும் ஸ்ரீவாரணவாசியிலே வந்து தண்டன்பண்ணி ரக்ஷித்தருள வேணும் என்று விண்ணப்பம் செய்ய விரதப்பிரட்டான் அரியே தெய்வம் உண்டென்று, மருதம் குறிஞ்சி நெய்தல் முல்லை என்கிற நாலு நிலத்திலும் அஞ்சக் கொன்று, தலத்திலே உறவீழ அறுத்து, வஞ்சி தும்பை உழிஞை நொச்சி என்கின்ற பூவும் சாத்தி, வெற்றி வாகையும் சூடினை.

11. தேவர்களும், ரிஷிகளும், பதினெண்கணங்களும் மற்றும் எல்லாரும்....... செய்ய, அரிய தேவன் நமக்கு உண்டென்று, சிவலிங்கப் பெருமானைக் கைவிடாதே இருந்த மூவரை ஒழிய அல்லாத அசுரரை, மூன்றுபுரங்களோடே கூட, மருதம் குறிஞ்சி நெய்தல் முல்லை என்கின்ற நாலு நிலத்திலும் படப்பட, வஞ்சி தும்பை உழிஞை என்கின்ற போதும் நொச்சிப்பூவும் தனதாகச் சூடுதலாலே அஞ்சினம் எனச் சென்று(ற) அவுணரை அறுத்தல்மேல் சென்றது.

ஔ. ஒரு மகாமேரு என்று நிலையுடைத்தாகியதாய், பதினொருநூறாயிரம் யோசனை கீழ்த்தாழ்ந்து, எண்பத்துநான்குநூறாயிரம் யோசனை சுற்றுடைத்தாய், இதில் நான்கு மடங்கு உயரம் உடைத்தாய் அண்டங்களும் சர்வலோகங்களும் உட்படத் தாங்கி நின்ற மகாமேருவினை வில்லாக இருதலையும் வளைய வாங்கி, திரிபுராதிகளாகிய அசுரர் பர்வதரூபமாய்ப் பொன்னாலும் வெள்ளியாலும் இரும்பினாலும் உருச் செய்யப்பட்ட மதிலினையும் சிறகினையும் உடைத்தாய்ப் பறந்து திரிந்து மாத்திரைப்பொழுது குடியிருந்து, அசுரர், தெய்வலோகங்கள் உட்பட்ட லோகங்களையும் சங்கரித்துத் தாங்கள் வேண்டும்படி சர்வபிராணிகளையும் உபத்திரவம் செய்து திரிகையாலே, தேவாதிகளும் இருடிகளும் மற்றும் உள்ள சர்வாத்மாக்களும் வாரணசியிலே சென்று பரமேசுவரனைத் தெண்டன் பண்ணி, "சுவாமி! அடியோங்கள் மிகவும் முப்புராதிகளாலே மெலிந்தோம். ரட்சித்தருளும்" என்ன, அப்பொழுது விஷ்ணுவை அழைத்து அவர்கள் சிவலிங்கம் நீக்குவிக்கச் சொல்ல, அந்தப் படிக்கு அவர் புத்தசமயமாய்ப் பொய் போதிக்க, அசுராதிகள் சிவலிங்கத்தை விட்டு விரதப் பிரட்டர்கள் ஆனார்கள். சிவலிங்கத்தை விடாமல் இதுவே நமக்கு உறுதி என்று புத்தர்சமயம் புகாமல் இருந்தவரை ரக்ஷித்து, அல்லாத பேரை முப்புரத்தோடே சங்கரித்து, மருதம் குறிஞ்சி நெய்தல் முல்லை என்கிற நானிலத்திலேயும் வஞ்சி கொன்றை தும்பைப்போது நொச்சில் மத்தம் தாங்கிக் கொண்டு வாகை சூடுதலாலே, "அஞ்சினேன்" எனச் சொல; அசுரரை அறுத்தனை - அசுரர் தானவர் ராக்கதர் சதாமாய(ா)வாதர் மாகாயர் அவுணர் என்கிற அரக்கரை அறுத்தருளினை என்றவாறு.

9. சோத்திரம் துவக்கு சக்சு ஆக்ராணம் சிக்குவை என்ற ஐம்பொறிகளுக்குரிய, சத்த...

க. சத்த பரிச... ஏத்த நின்றனை - மெய் வாய் கண் மூக்கு செவி என்கிற ஐம்புலன்களையும், பிரிதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்கிற பூதமைந்தும், மனம் புத்தி ஆங்காரம் சித்தம் என்கிற அந்தக்கரணங்கள் நான்கும், ராசச தாமச சாத்துவிதம் என்கிற முக்குணங்களும், பிராண அபான உதான வியான சமான நாக கூர்ம கிருகர தேவதத்த தனஞ்சயன் என்கிற இருவகைப் பட்ட வாயு பத்தும் முதலான இவை மூலாதாரத்திலே ஒடுக்கி ஏகசித்தனாய் இருந்துள்ள தேவர்கள் ஏத்த அருளினை.

நான்மறை ஓதி, ஐவகை வேள்வி அமைத்து, ஆறு அங்கம் முதல் எழுத்து ஓதி, வரன்முறை பயின்று, எழு வான்தனை வளர்க்கும் பிரமபுரம் பேணினை என்றது, ஆகாரம் நித்திரை பயம் [ங]மைதுனம் இவற்றில் செல்லும் மனத்தைப் [III]பரமேசுவரனுடைய ஸ்ரீபாதங்களிலே ஒருக்கி, முன்பு தாம் [10]மாதாவின் உதரத்திலே பிறந்த பிறப்பும் உபநயனத்தின் பின்பு உண்டான பிறப்புமாகிய இரண்டையும் விசாரித்து, மூன்று சந்தியும் செப தர்ப்பண அனுட்டான ஓமங்களை முடித்து, இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்கின்ற நாலு வேதங்களையும் ஓதி, [ச]சிவபூஜை குருபூசை மகேசுர பூசை [11]பிராமண போசனம் அதிதிபுசிப்பு என்கின்ற [12]ஐந்து வேள்வியும் முடித்து, ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் [ரு] என்னும் [13] ஆறு அங்கங்களையும் நடத்தி, இவைகளுக்கு முதலாய் இருந்துள்ள பிரணவத்தையும் உச்சரித்து, தேவலோகத்தில் உள்ள தேவர்களுக்கும் அவி கொடுத்து, மழையைப் பெய்விக்கும் பிராமணராலே பூசிக்கப்பட்ட பிரமபுரமே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனை என்றவாறு. ஆறு அங்கமாவன: (1) மந்திரம், (2) வியாகரணம், (3) நிகண்டு, (4) சந்தோபிசிதம், (5) நிருத்தம், (6) சோதிடம் என இவ்வாறு வழங்கப்படுகின்ற முறை ஒன்று.

அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை என்றது, அறுகாலுடைய வண்டுகள் [14]இசை பாடும் பொழில் சூழ்ந்த வேணுபுரம் என்பதே திருப்பதியாக விரும்பி எழுந்தருளினை என்றவாறு.

வேணுபுரம் என்பதற்குக் காரணம்: வேணுஎன்பான்ஒருஇந்திரனுடன், கசமுகன் என்பான்ஒருஅசுரன் வந்து யுத்தம்பண்ண. அவனுடனே பொருது அபசெயப்பட்டுப் பிரமபுரம் என்னும் முன் சொன்ன பதியிலே வந்து, பரமேசுவரன் திருவடிகளிலே, "தம்பிரானே! அடியேனுக்கு அமைத்தருளின சுவர்க்கலோகத்தைக் கசமுகன் சங்கரிக்க, அவனுடன் யுத்தம்பண்ணி அபசெயப்பட்டுப் போந்தேன்" என்று விண்ணப்பம் செய்து பூசிக்கையாலே, தம்பிரானும் கணேசுரனைத் திருஉளத்து அடைத்து, "வாராய், கணேசுரனே! கசமுகன் வரப்பிரசாதம் உடையவன்; ஒரு ஆயுதத்தாலும் ஒருவராலும் அவனைச் செயிக்கப்போகாது; நீயும் அவன் வடிவாகச் சென்று, உன் வலக்கொம்பை முறித்து, (அதனால்) எறிந்து அவனைக் கொன்று, வேணு என்கின்ற இந்திரனைச் சுவர்க்கலோகத்திலே குடிபுகவிட்டு வா" என்று திருவுளம்பற்றக் கணேசுரனும், அவன்வடிவாகச் சென்று தன் வலக்கொம்பை முறித்து எறிந்து அவனையும் கொன்று வேணு என்கின்ற இந்திரனையும் சுவர்க்கலோகத்திலே குடிபுகவிட உண்டானது என்க.

ங. மைதுனம் இவற்றில் செல்லும் - மைதுனம சொம் என்கிற அவற்றினுலே செலுத்துகின்ற

III. ஸ்ரீகுருவின் ஸ்ரீபாதங்களிலே

[10]மாதாவின் உதரத்திலே பிறந்த பிறப்பை விட்டு நீருருருவங்கொண்டு வந்து இரட்சித்தருளின சிறீபாதத்தில் பிறந்த பிறப்பையும் விசாரித்து

ச. சிவபூஜை... ஐந்து வேள்வியும் - பிர்மவேள்வி, தெய்வவேள்வி, பூதவேள்வி, மறலிவேள்வி, மனுஷவேள்வி என்கிற ஐவகை வேள்வியும் அமைத்து

11. பிராமண பூஜை, அதிதி பூஜை

12. கார்கபத்தியம், தெக்கனுன்னியம், ஆகவன்னியம், அகப்படியும், அவசப்பியம் (சப்பியம், ஆவசத்தியம்) என்னும் ஐந்து வேள்வியையும்

ரு. என்னும் ஆறு அங்கங்களையும் நடத்தி - என்கிற ஆறு தொழிலும், நிருத்தம், வியாகரணம், சாதாரம், சந்தோஷம், சித்திரம், சோதிஷம் ஆறு அங்கங்களும் நடத்தி

13. ஆறங்கங்களையும் நடத்தி இருக்கு முதலாயுள்ள ஆறங்கங்களை வேண்டி முறைமையினுலே பிராமணராயுள்ளார் உதயகாலத்திலே எழுவானுகிய ஆதித்த நமக்கிரா அர்க்கியம் கொடுத்து வளர்க்கும் பிரமபுரம் என்னும் திருப்பதியே இடமாகப் பேணி இருந்தருளியிருந்தனை.

14. மணங்கொள்ளும்

இகலி அமைந்து உணர் புகலி அமர்ந்தனே என்றது, தேவர்கள் முன்பு புகலிடம் என்று புகுதலால் திருப்புகலி என்பதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனே என்றவாறு: தேவலோகம்ஆன அமராபதியைச் சூரபத்மா என்பான்ஒருஅசுரன் வந்து சங்காரம்பண்ண, அவனுடனே தேவேந்திரன் முதலாயுள்ளார் பொருது அபசெயப்பட்டு, யுத்தத்தை ஒழிந்து, "இனி நமக்குப் பரமேசுவரன் ஸ்ரீபாதம் ஒழியப் புகலிடம் இல்லை" என்று வேணுபுரத்திலே வந்து பரமேசுவரனைத் தெண்டம்பண்ணி, அவனால் உண்டான நலிகையை விண்ணப்பம் செய்து, "எங்களை ரக்ஷித்து அருளவேண்டும்" என்ன, பரமேசுவரனும், சுப்பிரமணியரைத் திருஉளத்து அடைத்து, "வாராய், சுப்பிரமணியனே! நீ ஆறுமுகமும் பன்னிரண்டு கையுமாகப் போய்ச் சூரபத்மாவையும் செயித்துத் தேவலோகத்திலே தேவர்களையும் குடிபுகுதவிட்டு வா" [15] என வருகை காரணம்.

பொங்கு நாற்கடல் சூழ் வெங்குரு விளங்கினே என்றது, மிகவும் கோபிக்கப் பட்ட கடல் சூழ்ந்த 'வெங்குரு' என்றதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனே என்றவாறு: லோகங்களுக்கெல்லாம் தேவகுருவாகிய பிருகஸ்பதி பகவான், "[ட]என்னை ஒழிந்து கர்த்தா உண்டோ!" என்று மனோகர்வம் சொல்லுகையாலே, பரமேசுவரனும், "இவன் மகாகர்வியாய் இருந்தான்; இவனுடைய கொர்வத்தை அடக்க வேண்டும்" என்று திருவுளத்து அடைத்தருளித் தேவர்க்குக் குரு ஆகிய அதிகாரத்தை மாற்றியருள, (பிருகஸ்பதிபகவான்) பயப்பட்டுப் புகலி என்கின்ற [ண]திருப்பதியிலே போய்ப் பரமேசுவரனைத் தெண்டம்பண்ணி, "அடியேன் செய்த அபராதங்களைப் பொறுத்தருளி அடியேனை ரக்ஷித்து அருளவேண்டும்" என்று விண்ணப்பம் செய்யத் தம்பிரானும், "நீ மகாவிவேகியாய் இருந்தாய்" என்று திருவுள்ளமாய், முன்பு போல் தேவர்களுக்குக் குருவாகிய அதிகாரத்தையும் [16]கொடுத்த காரணத்தால் வெங்குரு என்ற பெயர் உண்டாயது.

பாணி மூவுலகும் புதைய மேல் மிதந்த தோணிபுரத்து உறைந்தனே என்றது, பாணி என்கின்ற சலம் பிரளயமாய்ப் பூமி அந்தரம் சுவர்க்கம் மூன்று லோகங்களையும் புதைப்ப, [த]அதைச் சங்காரம் பண்ணியருளி, அதின்மேலே தோணி போல் மிதந்த வெங்குருவாகிய தோணிபுரம் என்றதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனே என்றவாறு.

**15.** என்று அருளிச்செய்யச் சுப்பிரமணியரும் அருளிச்செய்தபடியே சூரன்பன்மாவைச் செயித்துத் தேவர்களையும் அமராவதியிலே குடியேற்றி மீள, வியம் என்ற பெயரை உடைய குடமுழா அஞ்சுமுகமும் ஒன்றுக்கொன்று இகலிச் செய்வித்து உனது நிருத்தத்தை உணர, வேணுபுரம் என்ற திருப்பதியைத் தேவர்கள் தங்களுக்குப் புகலிடமென்று புகுந்தபடியாலே புகலி என்ற திருநாமமாக்கி அமர்ந்து எழுந்தருளியிருந்தனே.

ட. என்னை ஒழிந்து கர்த்தா உண்டோ என்று மனோகர்வம் சொல்லுகையாலே - நம்மை ஒழியப் பிரபஞ்சத்துக்குத் தக்கார் உண்டோ என்று மகத்துவம் சொல்லுகையாலே

ண. திருப்பதியிலே போய் - திருப்படைவீட்டிலே வந்து

**16.** கொடுத்தருளி, நீ வெவ்வியையாய் இருந்தாய் என்பது திருவுள்ளத்தடைத்து, இவனுக்கு வெங்குரு என்ற நாமத்தையும் தரித்தருளித் திருப்புகலியைப் பொலிவினை உடைத்தான நாற்கடல் சூழ்ந்த வெங்குரு என்று திருநாமமாக்கி இதிலே விளங்கி இருந்தருளியிருந்தனே.

த. அதைச் சங்காரம்... திருப்பதியாக - இதன்மேலே திருத்தோணியாக மிதந்து பிரளயசங்காரம் பண்ணின பிறகு சலம் வைத்த அந்தத் தலம் திருத்தோணியாக மிதந்து மீண்டும் வந்து முன் போல் இருக்கையாலே தோணிபுரம் என்கின்ற பதியே திருப்படைவீடாகப் பிரியப்பட்டு

தொலையா இருநிதி வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை என்றது, ந‌வேண்டினர் வேண்டினது [17]கொடுத்துத் தொலைவறச் [IV] சங்கநிதி, பத்மநிதி என்று சொல்லப்பட்ட இரண்டுநிதிகளும், பூவும், தாராயும் பூசிக்கையாலே திருப்பூந்தராய் என்னப்பட்ட திருப்பதியிலே எழுந்தருளியிருந்தனை என்றவாறு. அவை ஒரு காலத்துத் தொலையாத வரத்தைப் பெறுவது காரணமாகத் திருத்தோணிபுரத்திலே வந்து தம்பிரானைப் பூசித்த அளவில், அவன், "உங்களுக்கு வேண்டுவது என்?" என்று கேட்டருள, "தம்பிரானே! அடியோங்களுக்கு எல்லாக் காலங்களும் தொலையாமல் கொடுக்கத் தக்க வரத்தைப் பிரசாதித்தருள வேண்டும்" என்று விண்ணப்பம் செய்ய, அவ்வாறே தொலையாத வரத்தையும் கொடுத்தருளி, மகாசங்காரத்தினும் தம்முடைய ஸ்ரீஅஸ்தங்களிலே தரித்தருளும் வரப்பிரசாதமும் கொடுத்துஅருளினதால் பூந்தராய் எனப் பெயர் உண்டாயது.

வரபுரம் என்று உணர் சிரபுரத்து உறைந்தனை என்றது, வரத்தைத் தருவதான புரம் என்று உணரத்தக்க சிரபுரம் என்பதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனை என்றவாறு: தேவர்களும் பிரம்மவிஷ்ணுக்களுமாகக் கூடி அமிர்தத்தை உண்டாக்கித் தேவர்களை இருத்தி, விஷ்ணு பகவான் அமிர்தம் படைத்துக்கொண்டுவருகிற வேளையில், ராகு கேது என்கிற இரண்டு பாம்பும் கூடிக் கரந்திருந்து அமிர்தபானம் பண்ணுவதாக பஇருப்பது கண்டு விஷ்ணுபகவான் அமிர்தம் படைத்துவருகின்ற சட்டுவத்தைக்கொண்டு தலை அற வெட்டுகையால், உடல் இழந்து அந்நாகம் இரண்டும், "நம் உடல் தரக்கடவான் பரமேசுவரன் ஒழிய வேறே இல்லை" என்று திருப்பூந்தராயிலே வந்து, [18]பரமேசுவரனை நோக்கி இரண்டு சிரங்களும் பூசித்தலால் சிரபுரம் என்று பெயர் உண்டாயது.

ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன் விறல் கெடுத்து அருளினை என்றது, மபெருமை உள்ள கயிலாயம் என்னும் பேரை உடைத்தாய் உனக்கே ஆலயமாய் இருப்பதொரு வெள்ளிமலையை எடுத்த பெரிய புசபலம் கொண்ட ராவணனுடைய கர்வத்தைக் கெடுத்தருளினை என்றவாறு.

புறவம் புரிந்தனை என்றது, பிரசாபதி என்கின்ற பிரம்மருஷி கௌதமருஷியை நோக்கி, "நீ ஸ்திரீபோகத்தைக் கைவிடாமல் இருக்கிறவன்அல்லவோ!" என்று

ந. வேண்டினர் வேண்டினது கொடுத்துத் தொலைவறப் பூசித்த அளவில் - ஒரு காலத்திலும் தொலையாத சங்கநிதி பதுமநிதி உண்டான வரங்களையும் பெற்று, மகாசங்காரத்தினை ஈசுவரன் ஸ்ரீபாதத்திலே தரித்தருள வேண்டினரது வேண்டும் வரங்களையும் கொடுக்கவல்லான பூந்தார் என்கின்றவர்கள் மிகவும் வேண்டுவோர்க்கு வேண்டும் வரங்களையும் கொடுக்கத் தொலையா இவருக்குக் காலம் அறிந்து நமக்கு அழியாத வரம் தந்தருளத் தம்பிரானே அல்லாமல் வேறில்லை என்று திருத்தோணிபுரத்திலிருந்து பூசிக்கையாலே

17. கொடுத்தும் தொலையாதபடியாலே அவனைப் பிரியப்பட்டருளி அந்தத் திருத்தோணிபுரத்தைத் திருப்பூந்தராய் என்று திருநாமமாக்கி எழுந்தருளியிருந்தனை.

IV. சங்குநிதி, பதுமநிதி என்ற இரு பூசுரர்கள்

ப. இருப்பது கண்டு விஷ்ணு பகவான் - வந்து இருக்கையில் சந்திரபகவான் வாக்கியத்தினாலே விஷ்ணுபகவான்

18. நாம் பரமேசுவரனைச் சிரசாலே பூஜித்து உடல் பெறும்படி வாங்கிக்கொள்ளக்கடவோம் என்று பூஜையாலே இவர்களுக்குப் புரமாகிய உடல் பிரசாதித்தருளி இவர்கள் சிரத்தின் பேராலே திருத்தோணிபுரத்தைச் சிரபுரமென்று பேராக்கிக் கோயில்கொண்டருளியிருந்தனை.

ம. பெருமை உள்ள... வெள்ளிமலையை.. கெடுத்தருளினை -

ஒரு மலை என்கின்ற கயிலாயம் என்னும் மலை உள்ள மகாமேரு என்னும் பொன்மலை அநேகம் நூறாயிரம் கொடுமுடி இருக்குமதன் நடுவே ஒருமலை என்று சொல்லப்பட்ட வெள்ளிமலையைப் பெரிய ஆங்காரபலத்தையுடைய இராவணன் தனது வலியைக் கெடத் தக்கதாக வேரோடே எடுக்க, அப்போது தம்முடைய இடப்பாகத்தின் பெருவிரல்உகிர்நுதியாலே ஊன்றி அவன் வீரப் பாட்டைக் கெடுத்தருளினை.

தூஷணிக்கையாலே, கௌதமருஷியும் பிரசாபதிபகவானைப் பார்த்து, "நீ புறு என்னும் ஒரு பக்ஷியாய் நரமாமிசம் புசிப்பாய் ஆக" என்று சபிக்க, பிரசாபதியும் ஒரு புறுவாய்ப் போய்ப் பலவிடத்தினும் நரமாமிசம் புசிக்கையிலே, ஒருநாள் மாமிசம் தேடிச் சோழ வம்சத்திலே ஒரு ராசா [19]தினசரிதனாய் இருக்கிற இடத்திலே இந்தப் புறுவாகிய ருஷியும் போய், ராசாவைப் பார்த்து, "எனக்கு அதிக தாகமாய் இருக்கின்றது; சற்று நரமாமிசம் இடவல்லையோ?" என்ன, ராசாவும், "உனக்கு எவ்வளவு மாமிசம் வேண்டும்?" எனப் புறுவும், "உன் சரீரத்திலே ஒன்று பாதி தர வேண்டும்" என்ன, ராசாவும் தன் சரீரத்திலே ஒன்று பாதி அரிந்து இட, புறுவுக்கு நிறையப் போதாமல், சர்வ மாமிசத்தையும் அரிந்து இட்டு ராசாவும் சோர்ந்து விழ, இந்தப் புறுவாகிய பக்ஷியும் தனக்குத் தன்சரீரத்தை அரிந்து இட்டுப் பிழைப்பித்த ராசா சரீரம் பெறும்படி எங்ஙனே என்று விசாரிக்கும் அளவில், பரமேசுவரன்ஒழிய வேறு இல்லை என்று சிரபுரத்திலே வந்து, பரமேசுவரனை நோக்கி அர்ச்சிக்க, பரமேசுவரனும் திருஉள்ளத்துஅடைத்தருள, "தம்பிரானே! அடியேன் தாகம் தீரத் தன் சரீரத்தை அரிந்து இட்ட ராசாவுக்கு முன்போல உடலும் பிரசாதித்து அடியேனுக்கும் இந்தச் சாபதோஷம் நீக்க வேண்டும்" என்று விண்ணப்பம் செய்ய, ராசாவுக்குச் சரீரமும் கொடுத்துப் புறுவுக்கு வேண்டும் வரப்பிரசாதங்களையும் பிரசாதித்துச் சாபதோஷமும் மாற்றியருளிப் புறுவும் பூசிக்கையாலே, புறவம் என்கின்றதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனை என்றவாறு.

முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப் பண்பொடு நின்றனை என்றது, ஆற்றுநீர், வேற்றுநீர், ஊற்றுநீர் என்று சொல்லப்பட்ட முந்நீராகிய சமுத்திரத்திலே துயிலாநின்ற நாராயணனும் நான்முகத்தினையுடைய பிரம்மாவும் [ய]அடியும் முடியும் தேடற்கு அரிதாய் நின்ற பண்பினை உடையையாய் எழுந்தருளியிருந்தனை என்றவாறு.

சண்பை அமர்ந்தனை எனறது, தூர்வாசமகரிஷி யாசிரமத்தே கிருஷ்ணவதாரத்தில் உள்ள கோபாலப்பிள்ளைகள் [ர]எல்லாம் இந்த ருஷியை அசங்கதித்துத் தங்களிலே ஒருவனைக் கெர்ப்பிணியாகப் பாவித்துச் சென்று, "இவள் பெறுவது ஆணோ பெண்ணோ" என்று அந்த ருஷியைக் கேட்கையாலே, அவர் கோபித்து, "இவள் பெறுவது ஆணும் அல்ல, பெண்ணும் அல்ல, உங்கள் வம்சத்தைஎல்லாம் சங்கரிக்கைக்கு ஒரு இரும்புஉலக்கை பிறக்கக்கடவது" என்று சபிக்கையாலே, அவன் வயிற்றிலிருந்து ஒரு இரும்புஉலக்கை விழ, அந்தச் சேதியைக் கிருஷ்ணன் கேட்டுத் தூர்வாசமகரிஷியினுடைய சாபம் கேவலம் அல்ல என்று, அந்த இரும்புஉலக்கையைப் பொடியாக அராவி, அந்தப் பொடியைச் சமுத்திரத்திலே போட, அராவுதலுக்குப் பிடிபடாத ஒரு வேப்பம்விதைப் பிரமாணம் உள்ள இரும்பை ஒரு மீன் விழுங்கி, ஒரு வலைக்காரன் கையிலே அந்த மீன் அகப்பட்டது; அவன் மீனினது வயிற்றில் கிடந்த இரும்பைத் தன் அம்புத் தலையிலே வைத்தான்; மற்றும் சமுத்திரத்தில் போடப்பட்ட இரும்புப்பொடிகள்எல்லாம் அலையுடனே வந்து கரை சேர்ந்து சண்பையாக முளைத்துக் கதிராய் நின்ற இடத்திலே கோபால குமாரர்கள் விளையாடி வருவோமென்று இரண்டு வகையாகப் பிரிந்து சென்று, அந்தச் செண்பைக் கதிரைப் பிடுங்கி எறிந்துகொண்டு அதனாலே பட்டு விழுந்தார்கள். இதைக் கிருஷ்ணன் கேட்டு, இதனாலே நமக்கு மரணமாயிருக்கும் என்று விசாரித்து ஆலின்மேலே ஒரு இலை

19. வனசரிதனாய்

ய. அடியும் முடியும் தேடற்கு அரிதாய் நின்ற - வராகமும் அன்னமுமாய்ப் பறந்தும் இடந்தும் தேடுதற்கு அரிதாகிய

ர. எல்லாம் - பதினாறாயிரம் பிள்ளைகளும்

யிலே யோகாசனமாக ஒரு பாதத்தை மடித்து, ஒரு பாதத்தைத் தூக்கி அமர்ந்திருக்கிற சமயத்திலே அந்த மீன்வேடன் பக்ஷிசாலங்களைத் தேடி வருகிறபோது, தூக்கிய பாதத்தை, ஒருசெம்பருந்து இருக்கிறதாகப் பாவித்து, அம்பைத் தொடுத்து எய்யக் கிருஷ்ணனும் பட்டுப் பரமபதத்தை அடைந்தான். இந்தச் சாபதோஷம் தூர்வாச மகரிஷியைச் சென்று நலிகையாலே, அவர் இந்தத் தோஷத்தை நீக்கப் பரமேசுவரனை நோக்கி அர்ச்சிக்கப் பரமேசுவரனும் திருஉள்ளத்து அடைத்தருள, ருஷியும் தெண்டம்பண்ணி, "தம்பிரானே! அடியேனுடைய சாபத்தாலே கிருஷ்ணனுடைய வம்சத்தில் உள்ள கோபாலர்எல்லாரும் சண்பைக் கதிர்களால் சங்காரப் படுகையாலே அந்தத் தோஷம் அடியேனை வந்து நலியாதபடி திருஉள்ளத்து அடைத்தருளி ரக்ஷிக்க வேண்டும்" என்று விண்ணப்பம் செய்ய, தூர்வாச மகரிஷிக்குச் சண்பைசாபத்தினுல் உள்ள தோஷத்தை நீக்கிச் சண்பைமுனி என்கின்ற நாமத்தையும் தரித்தருளிச் சண்பை என்கின்றதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனை என்றவாறு.

ஐயுறும் அமணரும் அறுவகைக் தேரரும் ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை என்றது, வேத ஆகம புராண சாத்திரங்களில் உள்ள பலத்தை இல்லை என்று ஐயமுற்று இருக்கின்ற அமணரும். கைப்பு புளிப்பு கார்ப்பு துவர்ப்பு உவர்ப்பு தித்திப்பு என்கிற அறுவகை ரசங்களையும் உச்சிக்கு முன்னே புசிக்கின்றதே பொருள் என்று இருக்கின்ற புத்தரும் ஊழிக்காலத்தும் அறியாமல், மிகவும் காளிதமான விஷத்தை உடைய காளி என்கின்ற நாகம் பூசிக்கையாலே சீகாழி என்கின்றதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனை என்றவாறு.

எச்சன் ஏழிசையோன் கொச்சையை மெச்சினை என்றது, (1) குரல், (2) துத்தம், (3) கைக்கிளை, (4) உழை, (5) இளி, (6) விளரி, (7) தாரம் என்பன ஏழிசை; குரலாவது சங்கத்தொனி; துத்தமாவது ஆண்மீன் பிளிறு; கைக்கிளையாவது குதிரையின் குரல்; உழையாவது மானின் குரல்; இளியாவது மயிலின் குரல்; விளரியாவது கடலோசை; தாரமாவது காடையின் குரல் - என்னும் நாதங்களை மெச்சினை. மகத்தான இருடிகள் எல்லாரினும் விருத்தராய் உள்ள பராசரப் பிரம்மருஷியானவர் மற்ற ருஷிகள் எல்லாரையும் நோக்கி, "நீங்கள் சமுசாரிகளே ஒழிய விரதத்தை அனுஷ்டிப்பார் இல்லை" என்று அவர்களைத் தூஷிக்க, அவர்களும், "நீ மச்சகந்தியைப் புணர்ந்து மச்சகந்தமும் உன்னைப் பற்றி (ஒருபோதும்) விடாமல் அனுபவிப்பாய்" என்று சபிக்கையாலே, பராசரரும் அந்தச் சாபத்தின்படி போய் மச்சகந்தியைப் புணர்ந்து, அந்த துர்கந்தம் இவரைப் பற்றி ஒரு யோசனை தூரம் துர்கந்தித்த படியாலே, "இது போக்கவல்லார் பரமேசுவரனை ஒழிய இல்லை" என்று சீகாழியிலே வந்து பரமேசுவரனை அர்ச்சிக்கப் பரமேசுவரன், "உனக்கு வேண்டியது என்ன?" என்று கேட்க, "தம்பிரானே! அடியேனைப் பற்றியுள்ள துர்கந்தத்தை விடுவிக்கவேண்டும்" என்று விண்ணப்பம் செய்ய, தம்பிரானும், "இவன் என்ன கொச்சை முனியோ!" என்று திருவுள்ளமாய், இவன்மேல் பற்றின துர்கந்தத்தையும் போக்கிச் சுகந்தத்தையும் பிரசாதித்தருளிக் கொச்சை என்கின்ற சந்தானநாமத்தையும் தரித்தருளிக் கொச்சை என்கின்றதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனை என்றவாறு.

ஆறுபதமும், ஐந்து அமர் கல்வியும், மறைமுதல் நான்கும், மூன்று காலமும் தோன்ற நின்றனை என்றது, [ல]பிரபத்தி பிரத்தியாகாரம் துரீயம் துரீயாதீதம் வித்தை அவித்தை என்கின்ற ஆறுபதங்களும், [வ]ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் விரையம்

ல. பிரபத்தி... ஆறு பதங்களும் - பிரம்மபதம், விஷ்ணுபதம், ருத்திரபதம், மகேசுவரபதம், சதாசிவ பதம், பரமபதம் என்ற ஆறு பதமும்

வ. ஆசுமதுரம்... ஐந்தும் - ஐந்தமர் கல்வியாவன - வச்சிமப் பிரபந்தம், துல்யம், வித்தை, அருத்தம், வியாகரணம்; ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், யமகம், வாக்கி என்கின்ற இவையும்

என்கின்ற ஐந்தும், இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்கின்ற நாலு வேதங்களும், செல்காலம் வருங்காலம் நிகழ்காலம் என்கின்ற மூன்று காலங்களும் தோன்றுநின்ற திரிமூர்த்தி ஆயினை என்றவாறு.

இருமையின் ஒருமையும் என்றது, சக்திசிவங்களாய் இருந்துள்ள இரண்டும் ஒன்ருய், அர்த்தநாரீசுவர வடிவமாய் இருந்துள்ளதை.

ஒருமையின் பெருமை என்றது, தானே ஒரு எல்லை இல்லாத சிவமாய் இருந்துள்ளதை.

*மறுவிலா மறையோர் கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை, கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்* என்றது, மறு அற்ற பிரம்ம வமிசத்தில் தோன்றித் தீக்கைகளாலே மலத்தைக் கழுவப்பட்ட கவுணியர்கோத்திரத்திலே வந்த சீகாழிப்பிள்ளை கட்டுரையை, விரும்பிக் கழுமலம் என்கிற முதுபதியிலே எழுந்தருளின, கம் என்கின்ற பிரம்மசிரசிலே உண்கின்றவனே அறியும் என்றவாறு.

*அனைய தன்மையை ஆதலின்* என்றது, அத்தன்மையாகிய இயல்பினை உடையை ஆதலின் என்றவாறு.

*நின்னை, நினைய வல்லவர் இல்லை நீள் நிலத்தே* என்றது, நின்னை நினைக்க வல்லார்களுக்குப் பிறப்பு இல்லை என்றவாறு.

## திரு எழுகூற்றிருக்கை- இன்றைய உரை

*ஒருரு ஆயினை -*

சக்தியையே திருமேனியாகக் கொண்டு ஓர்உருவத் திருமேனி உடையாய் ஆயினை;

*மான் ஆங்காரத்து, ஈர்இயல்பாய் -*

சக்தி சிவம் என்னும் இரண்டுருவாய் எழுந்தருளி,

*ஒரு விண்முதல் பூதலம்,*
*ஒன்றிய இருசுடர், உம்பர்கள், பிறவும்,*
*படைத்தளித்(து) அழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை -*

ஒப்பற்ற ஆகாயம் முதல் பூமி ஈருகவுள்ள ஐம்பெரும்பூதங்களையும், சூரிய சந்திரரையும், தேவரையும், மற்றுமுள்ளவற்றையும் படைத்தற்கும் காத்தற்கும் அழித்தற்கும் அயன் அரி அரன் என்னும் மும்மூர்த்திகளும் ஆயினை;

*இருவரோ(டு) ஒருவன் ஆகி நின்றனை -*

திருமால் நான்முகன் ஆகிய இருவரையும் நின்னிடம் கரந்துகொண்டு, அவ்விருவரோடும் ஒருவனுய் இருந்தாய்; 'மூவனுய் முதலாய்...' (தே. V 32-4) என்றுர் அப்பரடிகளும்.

*ஓர்ஆல் நீழல் உன்கழல் இரண்டும்*
*முப்பொழு(து) ஏத்திய நால்வர்க்(கு) ஒளிநெறி*
*காட்டினை -*

ஒப்பற்ற கல்லால் நிழலில் நின் இருபாதங்களையும் முப்போதும் வழிபட்ட சனகர், சனந்தனர், சனுதரர், சனற்குமரர் என்னும் நால்வர்க்கும் ஞானநெறியைக் காட்டினுய்;

*நாட்டம் மூன்றுகக் கோட்டினை -*
ஞாயிறு திங்கள் தீயாகிய முச்சுடர்களையும் முக்கண்களாய் ஏற்றாய்;

*இருநதி அரவமோ(டு) ஒருமதி சூடினை -*
பெரிய கங்கையாறு, பாம்பு, மூன்றும் பிறைமதி என்னுமிவற்றைத் தரித்தாய்;

*ஒருதாள் ஈர்அயில் மூஇலைச் சூலம்,*
*நாற்கால் மான்மறி, ஐந்தலை அரவம்,*
*ஏந்தினை -*

ஒப்பற்ற பிரணவமாம் காம்பினையுடைத்தாய்ப் பெரிய கூரிய மூவிலைச் சூலத்தையும், நாற்கால் மான்குட்டியையும், ஐந்தலைப் பாம்பினையும் ஏந்தினாய்;

*காய்ந்த நால்வாய் மும்மதத்(து)*
*இருகோட்(டு) ஒருகரி ஈ(டு)அழித்(து) உரித்தனை -*
தன் நிழலைச் சுளிகின்ற பெருங்கோபத்தையும், தொங்கும் துதிக்கையையும், மும்மதங்களையும் இரு தந்தங்களையும் உடைய ஒப்பற்ற யானையின் வலிமையை அழித்து உரித்து அதன் தோலைப் போர்த்துக்கொண்டாய்;

*ஒருதனு இருகால் வளைய வாங்கி,*
*முப்புரத்தோடு நானிலம் அஞ்சக்*
*கொன்று, தலத்துற, அவுணரை அறுத்தனை -*
ஒப்பற்ற மாமேருமலையினை வில்லாக இருதலையும் வளையும்படி வளைத்து அதில் அம்பினைத் தொடுத்து, முப்புரத்தோடும் அவற்றில் உறைந்திருந்த அசுரர் மூவரையும் மருதம் குறிஞ்சி நெய்தல் முல்லை என்னும் நால்வகை நிலத்திலேயும் பண்டு வாகை சூடியவர்கள், இதுபோது அஞ்சுமாறு கொன்று, அவருடல் நிலம் சேரப் பகை தீர்த்தாய்;

*ஐம்புலன், நாலாம் அந்தக் கரணம்,*
*முக்குணம், இருவளி, ஒருங்கிய வானோர்*
*ஏத்த நின்றனை -*
சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐம்புலன்களையும், மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் நான்கு அந்தக்கரணங்களையும், சத்துவம் இராசதம் தாமதம் என்னும் முக்குணங்களையும், பிராணன் அபானன் என்னும் இரண்டு வாயுவையும் மூலாதாரத்தில் ஒடுக்கி வென்றவரான தேவர்கள் வழிபட நின்றாய்;

*ஒருங்கிய மனத்தோடு,*
*இருபிறப்(பு) ஓர்ந்து, முப்பொழுது குறைமுடித்து,*
*நால்மறை ஓதி, ஐவகை வேள்வி*
*அமைத்(து), ஆ(று) அங்கம் முதலெழுத்(து) ஓதி,*
*வரல்முறை பயின்(று) எழுவான்தனை வளர்க்கும்*
*பிரமபுரம் பேணினை -*
ஒருமைப்பட்ட மனத்தோடே இருபிறப்பாகிய துவிஜத்துவத்தை நுணுகி ஆராய்ந்து, முப்பொழுதும் தத்தம் கர்மாவாகிய இன்றியமையாதவற்றைச் செய்து, நான்மறையையும் ஓதி, ஐவகை வேள்வியையும் ஆற்றி, ஆறங்கங்களையும் அனைத்திற்கும் முதலெழுத்தாகிய பிரணவத்தையும் ஓதுதலையும் செய்து, இவ்வாறு தம் வருணத்து

வரலாற்று முறை பிறழாது வைகி, அவி சொரிந்து வானுலகையும் வாழ வைக்கும் மறையவர்கள் வழிபடும் பிரமபுரத்தை விரும்பினை;

அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை -
ஆறுகால்களையுடைய வண்டுகள் ஒலிக்கும் பூஞ்சோலைகள் சூழ்ந்த வேணுபுரத்தை விழைந்து இடமாகக் கொண்டனை;

இகலி அமைந்(து) உணர் புகலி அமர்ந்தனை -
சூரபன்மா என்ற அவுணனோடு போரிட்டுத் தோல்வியுற்று வானுலகை விட்டு விண்ணவர்களால் புகலிடமாகக் கருதிப் புகுந்துகொள்ளப்பட்ட புகலியை விரும்பி இடமாகக் கொண்டனை;

பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை -
ஊழிக்காலத்தே பொங்கும் நாற்கடலாலும் உலகனைத்தும் மூழ்கத் தான்மாத் திரம் மூழ்காதிருந்து கடலால் சூழப்பெற்ற வெங்குரு என்னும் திருத்தலத்தைக் கோயி லாகக்கொண்டு திகழ்ந்தனை; (தேவகுரு வழிபட்ட தலமாதலின், இப்பெயர்த்தா யிற்று.)

பாணிமூ உலகும் புதைய, மேல் மிதந்த
தோணிபுரத்(து) உறைந்தனை -
ஊழிக்கடல் எல்லா உலகத்தையும் மூடவே, தான் மூழ்காமல், அதன்மிசைத் தோணி என்னுமாறு மிதந்தமையால் தோணிபுரம் எனப் பெயர் பெற்ற திருத்தலத் தின்கண் கோயில் கொண்டனை;

தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை -
சங்கநிதி, பதுமநிதி என்னும் இரு நிதிகளும் குறையாமல் நிறைந்து நிலவும் திருப்பூந்தராய் என்னும் திருப்பதியில் எழுந்தருளினை;

வரபுரம் ஒன்றுணர் சிரபுரத்(து) உறைந்தனை -
வேண்டுவார் வேண்டுவன ஈயும் ஓர் புரம் என்று கருதத்தக்க சிரபுரத்துள் மேவினை; (தான் அமிர்தம் படைக்கலுற்றபோது, வானவர்களூடே கரந்து இருந்த அவுணனைத் திருமால் தன் கைச் சட்டுவத்தால் எறியவே, அவ்வசுரன் சிரம் அறுபட, அச்சிரம் சீகாழியில் இறைவனை வழிபட்டமையால், அவனருளால் சிரமும், உடலும் முறையே இராகு, கேது ஆகப் பெற்றமை ஈண்டு வரலாறு.)

ஒரு மலை எடுத்த இருதிறல் அரக்கன்
விறல்கெடுத்(து) அருளினை -
ஒப்பற்ற கயிலைமலையை எடுத்த மிக்க திறலினையுடைய இராவணனது வெற்றி யைச் செகுத்துப் பின்னர் அவனுக்கு வாளாயுதம் முதலியன கொடுத்தருளினை; (இருந்திறல் எனற்பாலது நகரம் தொகுத்தல்விகாரமாயிற்று.)

புறவம் புரிந்தனை -
புறாவடிவு கொண்ட கௌதமர் வந்து தவம்செய்து பேறுற்றமையால், புறவம் எனப் பெயர் பெற்ற தலத்தின்கண் விரும்பிக் கோயில்கொண்டனை; (புறாவடிவு கொண்டவர் பிரசாபதி என்றலும் ஒன்று.)

*முந்நீர்த் துயின்றோன், நான்முகன், அறியாப்*
*பண்பொடு நின்றனை -*

பாற்கடலில் துயின்ற நாரணனும், ஏனைப் பிரமனும் முறையே அடிமுடி காண்ப தற்கு அரிய பரம்பொருளாம் இயல்போடே அனல்வடிவாய் நிமிர்ந்தனை;

*சண்பை அமர்ந்தனை -*

சண்பைமுனி வழிபட்டுப் பாவம் நீங்கிய தலமாகிய சண்பைவனத்தின்கண் விரும்பி எழுந்தருளினாய்;

*ஐயுறும் அமணரும், அறுவகைத் தேரரும்,*
*ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை -*

வேதத்தையும் தெய்வத்தையும் ஐயுறும் அமணர்களாலும், அறுவகைச் சுவை யோடு உணவு அருந்தித் தம்முடலை வீக்கும் புத்தர்களாலும், கற்பகாலத்திலும் அறிதற்கு அரியையாய்ச் சீகாழிப்பதியில் கோயில்கொண்டாய்;

*எச்சன்ஏழ் இசையோன் கொச்சையை மெச்சினை -*

வேள்வி செய்தோனும் ஏழிசை வல்லோனுமான பராசரமுனியால் வழிபடப் பெற்ற கொச்சைவயத் திருப்பதிக்கண் விரும்பியிருந்தாய்;

*ஆறு பதமும், ஐந்தமர் கல்வியும்,*
*மறைமுதல் நான்கும்,*
*மூன்று காலமும், தோன்ற நின்றனை -*

ஆறு பதங்களும், ஐவகைக் கல்வியும், நான்மறைகளும் மூன்று காலங்களும் தோன்ற அவற்றைப் படைத்து அருளினாய்;

*இருமையின் ஒருமையும், ஒருமையின் பெருமையும்*
*(தோன்ற நின்றனை) -*

சக்தி சிவம் என இருக்கும் இரண்டும் ஒன்றாய் (-பின்னப் பொருள்களில் அபின்னமான ஒருவனாய்) இருந்தாய்;

அகண்டாகாரமாக இரண்டற்ற ஒருவனாக இருக்கும் பெருமையும் உடையாய் (என்றிவ்வாறு);

*மறுஇலா மறையோன்*
*கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை,*
*கழுமல முதுபதிக் கஉ(ண்)ணியன் அறியும் -*

குற்றமற்ற மறையவர் குடியில் கழுமலம் என்னும் (தொன்றுதொட்டு அநாதி யாக நிலைபெறுதலையுடைய) பழம்பதிக்கண்ணே, கவுணிய கோத்திரத்திலே தோன்றிய சிவஞான சம்பந்தனாகிய எனது உரையைக் கழுமலமாகிய தொல்பதித் தலைவனும், பிரமனது கபாலத்தில் பிச்சையேற்று உண்ணுதலையுடையவனுமான அவ்விறைவன் அறிவான்; (கம்-பிரமசிரம்; கவுணியன்: தன்மை படர்க்கைககண் வந்த இடவழுவமைதி.)

*அனைய தன்மையை ஆதலின் -*

கழுமலப் பெருமானே! அத்தன்மையெல்லாம் உடையாய் நீயாதலின்;

*நின்னை, நினைய வல்லவர் இல்லை, நீள்நிலத்தே -*

நின்னைத் தியானிக்க வல்ல அடியார்க்கு இப்பெரிய மண்ணுலகில் மீண்டும் வந்து பிறக்குமாறு இல்லை. (வல்லவர்க்கு என்னும் நான்கனுருபு விகாரத்தால் தொக்கது.)

## திருவியமகம் - பழைய உரை

*திருப் பிரமபுரம்* *பண்: பழம்பஞ்சுரம்*

*பாடல் 1:*

*உற்று உமை சேர்வது மெய்யினையே; உணர்வதும் நின் அருள்மெய்யினையே;*
*கற்றவர் காய்வது காமனையே; கனல்விழி காய்வது காமனையே;*
*அற்றம் மறைப்பதும் உன் பணியே; அமரர்கள் செய்வதும் உன் பணியே;*
*பெற்று முகந்தது கந்தனையே; பிரமபுரத்தை உகந்தனையே.*

*பொழிப்புரை:* உமாபரமேசுவரியானவள் பொருந்தச் சேர்ந்து வாழ்வது நினது திருமேனியினையே; யான் உணர்ந்துகொண்டிருப்பதும் சிவஞானம் பொருந்திய சத்தியமாகிய தெரிசனத்தையே. உனது சத்தியதெரிசனத்தை அலைவற அதுவாக நிற்கக் கற்றவர், விரக பாவத்தாலே விட்டதும் கேடு அறப் பசுத்துவம் பொருந்திய க்ஷேத்திரமாகிய தேகாதிப் பிரபஞ்சமே; கனல் சேர்ந்த திருநெற்றிவிழியினுல் சுடுவது காமனுகிய மன்மதனையே. உனது நிருவாணத்தை மறைப்பது உன் தொங்கலான பாம்புகளே; தேவர்கள் செய்து ஒழுகுவதும் நினது குற்றேவலே. ஈன்று எடுத்துக் கொண்டது கந்தனுகிய சுப்பிரமணியனையே; திருப்பிரமபுரம் என்னும் திருப்படைவீட்டை உனக்கு இடமாக விரும்பினையே - என்றவாறு.

*பாடல் 2:*

*சதி மிக வந்த சலம் தரனே! தடி சிரம் நேர்கொள் சலந்தரனே*
*அதிர் ஒளி சேர் திகிரிப்படையே; அமர்ந்தனர் உம்பர் துதிப்பு அடையே;*
*மதி தவழ் வெற்புஅது கைச்சிலையே; மரு விடம் ஏற்பது கைச்சிலையே;*
*விதியினில் இட்டவர் விரும்பு அரனே! வேணுபுரத்தை விரும்(பு) பரனே!*

*பொழிப்புரை:* நினைவு அற வந்த கங்காபரமேசுவரியைத் தரித்த திருச்சடாபாரத்தை உடையவனே! எதிர்கொண்டு எழுந்த சலந்தரனது சிரத்தை நடுங்கச் செய்து, பிரகாசம் வீசாநின்ற சக்கரம் என்னும் பெயரை உடைத்தாகிய நினது கைவாளால் அவனது தலையை அரிந்தவனே! நரராலும், தேவர்களது தோத்திரத்தினது நெருக்கத்தாலும் பூரணமாக நிறையப்பட்டவனே! இத்தன்மையான உனக்குச் சந்திரன் தவழும் மகாமேருவே கைக்கு வில்லாகப் பொருந்தாநின்றது; ஊழிக் காலத்து அக்கினி வேகம் போன்ற மகாவேகத்தைப் பொருந்தின ஆலகாலத்தை நினது கண்டத்தில் ஒழியாமல் வைத்திருந்த கருணையாளனே! ஆகமங்கள் சொல்லும் ஞானம், யோகம், கிரியை, சரியை என்னும் விதியின்கண்ணிலே நன்ருக இருதயத்தை வைக்கின்ற தபோதனரால் ஆதரிக்கப்படாநின்ற அரன் என்னும் திருநாமத்தை உடையவனே! திருவேணுபுரம் என்னும் திருப்பதியிடத்து மிகவும் விருப்பை உடையவனுகிய மகாதேவனே! - என்றவாறு.

பாடல் 3:

காது அமரத் திகழ் தோடினனே! கானவனாய்க் கடிது ஓடினனே!
பாதம்அதால் கூற்று உதைத்தவனே! பார்த்தன் உடல் அம்பு தைத்தவனே!
தாது அவிழ் கொன்றை தரித்தனனே! சார்ந்த வினைஅது அரித்தனனே!
போதம் அமரும் உரைப்பொருளே! புகலி அமர்ந்த பரம்பொருளே!

பொழிப்புரை: நின் திருச்செவியில் அமராநின்ற அந்தப் பிரணவமாகி விளங்கும் திருத்தோட்டைத் தரித்துள்ளவனே! தனஞ்சயன் நிலையைச் சோதிக்கும் தன்மையதாக வேட்டு உருவம் கொண்டருளி, அவன்கண்ணே எதிர்நிற்க விரைவின்கண் நடந்தவனே! மார்க்கண்டேயனை அடைந்து வந்த கூற்றுவன் உருண்டு விழும்படி நின் சீர்பாதத்தாலே உதையாநின்றவனே! எதிர்நின்று பொருத அருச்சுனனது சரீரமெல்லாம் சரக்கூடாகச் சரம் விட்டவனே! இதழ் விரியாநின்ற இதழிமாலையை நினது தலையிலும் மார்பிலும் தரியாநின்றவனே! சஞ்சிதமும் ஆர்ஜிதமும் உனது பார்வையினாலும் ஞானத்தினாலும் கழல, நடுநின்ற பிராரத்தமாகிப் பொருந்திய வாதனைக் கன்மமாகிய அதனை நினது சிவானுபவத்தால் ஒழியாநின்றவனே! சிவம் பொருந்தாநின்ற சத்திய பஞ்சாக்கரத்துக்கு அத்தமாகி நின்றவனே! திருப்புகலி என்னும் திருப்படைவீட்டை இடமாக உகந்த பரவத்துவே! - என்றவாறு.

பாடல் 4:

மைத் திகழ் நஞ்சு உமிழ் மாசுணமே, மகிழ்ந்து அரை சேர்வது; மா சுணமே
மெய்த்து உடல் பூசுவர்; மேல் மதியே வேதம்அது ஓதுவர்; மேல்மதியே,
பொய்த்தலை ஓடு, ஒரு மத்தம்அதே, புரிசடை வைத்தது; மத மத்தம்அதே
வித்தகர்ஆகிய எம்குருவே, விரும்பி அமர்ந்தனர் வெங்குருவே.

பொழிப்புரை: நினது அரையின்கண்ணே விரும்பி நாண்ஆகச் சாத்தியதும், மையான கார்இருளும் வெளி என இருண்ட விடத்தைக் காலும் நாகங்கள் ஆயினவே; விசேடத்தை உடைத்தாகிய கற்பத் திருநீற்றினையே மிகவும் விரும்பித் திருமேனியிலே அணிபவரே; வித்துவத்துக்கு அதீதமாகிய ஞானபோதத்தைக் கொண்டே வேத ஆகமங்களை உரையாநிற்பரே; ஆகாயத்தின்கண்ணே ஓடுகிற சந்திரனையும், உயிர் போன நகு வெண்தலையையும், மதமத்தத்தையும் நினது ஈண்டுகின்ற சடையின்கண்ணே வைத்துள்ளவரே; முன்னம் பயனில்லாமையை விரும்பி அணிந்த பிரான் அதுக்கு ஒவ்வாநிற்குமெனக்கு விசிர்தமாகக் குருமூர்த்தம் கொண்டு எழுந்தருளி வந்த கருணையாளனே; இத்தன்மையராகிய கருணையாளர் என்தனதுபொருட்டாக, ஆசைப்பட்டு உறையாநின்றனர் வெங்குரு என்னும் திருப்பதியில் - என்றவாறு.

பாடல் 5:

உடல் பயில்கின்றவன் மாதவனே; உறுபொறி காய்ந்து இசை மா தவனே!
திடம்பட மாமறை கண்டவனே! திரிகுணம் மேவிய கண்டவனே!
படம் கொள் அரவு அரை செய்தனனே! பகடுஉரி கொண்டு அரைசு எய்தனனே!
தொடர்ந்து துயர்க்கு ஒரு நஞ்சு இவனே; தோணிபுரத்து உறை நம் சிவனே.

பொழிப்புரை : நினது திருமேனியுடனே பொருந்தாநின்றவன் நாராயணனே; மிகுதிப்பட்ட இந்திரியங்களை நிக்கிரகித்து உள்ளபடியே இருக்கின்ற மகா தபோதனனே! [(இங்கு, இசை மாது அவனே எனக்கொண்டு) ஒரு பாகத்திலே பரமேசுவரியை வைத்த அத்தன்மையனே எனவும் பொருள்கொள்ள இடம் உண்டு.] (கருவிகரணங்களை ஒழித்து இருக்கின்ற தபோதனனும் அவனே என்றலும் ஆம்.) நாத்திக சித்தாந்தம்

வாராமல் சற்காரிய அத்துவித மோட்சமானது சிருட்டிகரிப்பான்பொருட்டாக மிக்க வேதாந்த உண்மையினை உண்டாக்கியவனே! பஞ்சகிருத்திய காரணமாகத் தற்குணமாகிய இச்சாஞானக்கிரியைகளைப் பொருந்தி, அவையிற்றைப் பிரேரிக் கினும் அவற்றினது தொழிலாகிய பற்றறிவுத் தொழிலில் தோயாதவனே! ஐவகைப் பணமகுடங்களை உடைய நாகத்தைத் திருஅரையிலே கச்சாகப் புனைந்தவனே! மாறுபட்டு வந்த யானையை உரித்து அதனைப் போர்த்துத் தலைமைப்பாட்டை எய்தாநின்றவனே! இடைவிடாது வரும் ஜன்மவியாதி கெடுதற் பொருட்டாகிய விடம் யாது எனின், என்னைப் போலத் திருமேனி கொண்ட தேசிகனே. அத்தன் மைப் பிறவிப்பிணிக்கு மருந்தாகிய அவன் யார் என்னில், திருத்தோணிபுரத்தின்-கண்ணே எனக்குப் புலப்படத் தோன்ற இருந்த சிவன் ஆகும் - என்றவாறு.

பாடல் 6:

திகழ் கையதும் புகை தங்கு அழலே; தேவர் தொழுவதும் தம் கழலே;
இகழ்பவர்தாம் ஒரு மானிடமே; இருந் தனுவோடு எழில் மான் இடமே;
மிக வரும் நீர் கொளும் மஞ்சு அடையே, மின் நிகர்கின்றதும் அம் சடையே;
தக விரதம் கொள்வர் சுந்து அரரே; தக்க தராய் உறை சுந்தரரே.

பொழிப்புரை: தனது (ஒளி) விட்டு விளங்காநின்ற சீஅத்தத்தில் ஏந்துவது எது என்னில், தன்னை அடைந்தார் மும்மலத்தைத் தகிப்பான்பொருட்டாகிய சிவாக்கினியே; மந்திரமூர்த்தங்கள் முதலாகிய தேவகணங்கள் அர்ச்சியாநிற்பதும் நின் சீபாதங் களையே. அறிவுக்கு அறிவாகிய நீ உடனே இருக்க, உன்னை உணராமல் சன்மத்திலே விழுவார்களும் ஒரு மக்கள்யாக்கையைப் போலத் திரிவதே! முதல் நடு இறுதி காணுத் திருமேனியின்கண்ணே, அழகு பொருந்திய பரமேசுவரியை இடப்பாகத்திலே வைத்தனையே. மிகுதியாக வரத் தக்க கங்காநதியானது மஞ்சினிடத்தில் ஒளிரும் மின் போன்று, அழகிய திருச்சடையில் இருக்கின்றது என்ன வியப்போ! மிகுதிப் பட்ட விரதசீலங்கள் அனைத்தும், உறங்கினவன்கையில் பதார்த்தம் போலே, ஒழிந்த ஞானவான்களது மலத்திரயங்களை அரிக்கின்றவரே; அத்தன்மையான கருணை யாளன் யாரோ என்னின், முறைமை பொருந்திய பூந்தராய் என்னும் திருப்பதியிலே பொருந்தி நின்ற அழகு பொருந்திய நின்மல வத்துவே - என்றவாறு.

பாடல் 7:

ஓர்வு அரு கண்கள் இணைக்கு அயலே; உமைஅவள் கண்கள் இணைக் கயலே;
ஏர் மருவும் கழல் நாகம்அதே; எழில் கொள் உதாசனன் ஆகம்அதே;
நீர் வரு கொந்தள கங்கைஅதே நெடுஞ்சடை மேவிய; கம் கையதே;
சேர்வு அரு யோகுஅது இயம்பு அகனே! சிரபுரம 'மேய தியம்பகனே!

பொழிப்புரை : நினைத்தற்கு அரிதாகிய நினது மூன்று கண்களை உரைக்கின், சோம சூர்ய அக்கினியாக என்று ஒப்புச் சொல்லப்படும் தன்மைக்கு அந்நியமாய் இருக்கும்; உமாபரமேசுவரியுடைய திருநயனங்களும் இருவகையாகிய கயல் போன்றனவே. மலங்களை ஒழித்து விளங்கப்பட்ட நினது திருவடியிலே நூபுரமாகச் சாத்தப்பட்ட தும் பாம்பு வலயமே; உன்னுடைய திருமேனி எவ்வாறு என்னில், தேஜசை உடைய ஆஜ்யபோஜனன் ஆகிய அக்நியே. நீர்மை பொருந்திய அளகபாரத்தை உடைய கங்காபரமேசுவரியே பெரிய திருச்சடையின்கண்ணே இருப்பாளும்; பிரமாவினது குறளைவாக்கே பொருந்தி, உனது நகத்தால் அரியப்பட்ட சிரசானது நினது சீஅத்தத்தின்கண்ணே இருப்பது என்ன காருண்யமோ! கிட்டுதற்கு அரி தாகிய அட்டாங்க யோகங்களை அருளிச்செய்த இருதயத்தை உடையவனே! சிர

புரம் என்னும் திருப்பதியிலே வாழும் முக்கண்ணனே! - என்றவாறு.

பாடல் 8:

ஈண்டு துயில் அமர் அப்பினனே, இருங்கண் இடந்து அடி அப்பினனே;
தீண்டல் அரும்பரிசு அக்கரமே, திகழ்ந்து ஒளி சேர்வது சக்கரமே;
வேண்ட வரும் தன கைத்தலேயே; மிகைத்தவரோடு நகைத்தலேயே
பூண்டனர் சேரலும் மா பதியே; புறவம் அமர்ந்த உமாபதியே!

பொழிப்புரை: இவ்விடத்துப் பாற்கடலின்கண்ணே மிகுதிப்பட்ட ஞானநித்திரையை அடைந்த நாராயணன் ஆகின்றவனே, தனது செந்தாமரை போன்ற பெரிய திரு நயனத்தை இடந்து நின் திருவடிக்கண்ணே பொருந்தச் சாத்தாநின்றவன். அவ்வாறு தனது கண்ணை இடந்து அப்பாநின்ற விட்டுணுவினது, ஒருவராலும் தீண்டற்கு அரிய முறையை உடைத்தாகிய கையின்கண்ணே, (ஒளி)விட்டு விளங்கச் சேராநிற்பது, கண் இடந்து பூசிக்க, பூசைப்பயனாய்த் தம்பிரான் பிரசாதித்த சக்கிர மாகிய படையே. இத்தன்மை வேண்டுவார் வேண்ட வரும் தனது வரத அத்தத் தில் இருப்பது யாது எனில், பிரமகபாலமே; தங்களுள் மாறுபட்டு வியதிரேகம் சொல்லும் பெத்தான்மாக்களை முத்தான்மாக்கள் சபிப்பரோ என்னில், அவர்கள் கோபாதிசயம் கொண்டு சபிப்பார்கள்; எவ்வாறு செய்வார் என்னில், அவர்கள் இடத்திலே நின்று மயக்காநின்ற ஆணவமலத்தைப் பார்த்துச் சிரிப்பாராதலால்; இவ்வகை மலபோதம் ஒழிந்து சிவபோதம் ஆனவர்களே தன்னைக் கூடி இரண்டற்ற வர்கள். பூலோகத்தில் உண்டாகிய திவ்விய தலங்களில் இதுவே விசேடத்தலம் என்று வியந்து தான் மகிழ்ந்த திருப்புறவம் என்னும் திருப்பதியிலே அமராநின் றுள்ளவனாய் உமாபரமேசுவரிக்குப் பதியாயும் உள்ளவனே! - என்றவாறு.

பாடல் 9:

நின்மணி வாயது நீழலேயே, நேசம்அது ஆனவர் நீழலேயே;
உன்னி மனத்து எழும் சங்கம்அதே, ஒளிஅதனோடு உறு சங்கம்அதே,
கன்னியரைக் கவரும் களனே; கடல்விடம் உண்ட கருங்களனே;
மன்னி வரைப் பதிசண்பு ஐயதே, வாரி வயல் மலி சண்பை அதே.

பொழிப்புரை: உனது ஒளி பொருந்திய திருவாயின்கண்ணே விளைந்த அருட்பிரகா சுத்தையுடைய திருப்புன்முறுவலுக்கு ஆசைப்பட்ட முத்தான்மாக்களுக்குக் கன்ம மாகிய அநாதித் தீயை அவிக்கும் நிழலாய் உள்ளவனே, திருவுள்ளத்து அமைத் தருளிக் கன்னியர் ஆகிய திரள்களினது ஒளி பொருந்திய கைவளைகளைக் கவர்ந்து கொள்ள நின்ற கள்வன்; சமுத்திரத்தே எழுந்த ஆலகாலத்தை அமுதுசெய்து கண்டம் கறுக்க இருக்கின்ற கருணையாளன்; அத்தன்மையான கருணையாளன் நிலைபெறுக வரைந்து வாழும் பதி ஏது என்னில், சண்பைப்புல்லாலே சூழப்பட்ட, சமுத்திர மானது வந்து வயலின்கண்ணே மோதும் சண்பைநகர் என்னும் திருப்பதி - என்ற வாறு.

பாடல் 10:

இலங்கை அரக்கர்தமக்கு இறையே, இடந்து கயிலை எடுக்க இறையே
புலன்கள் கெட உடன்பாடினனே! பொறிகள் கெட உடன் பாடினனே;
இலங்கிய மேனி இரா வணனே, எய்தும் பெயரும் இராவணனே;
கலந்து அருள் பெற்றதும் மா வசியே? காழி அரன்அடி மா வசியே.

*பொழிப்புரை:* இலங்கை என்னும் திருப்பதியிலே வாழும் இராக்கதருக்கு எல்லாம் கர்த்தாவாய் உள்ள இராவணன், தனது வீரியத்தாலே வந்து ஸ்ரீகயிலாயத்தை இருபதுகரங்களாலும் அகழ்ந்து எடுத்த அந்த நிமிடமாத்திரையிலேயே, அவனது உத்தமாங்கம் முதலாகிய அவயவங்கள் ஒருங்கே அழியத் திருவிரலாலே நெரித்தற்கு உடன்பட்டு ஒருப்பாடு கொண்ட செய்தி உடையானே! கேட்டாரது இந்திரியங்கள் எல்லாம் ஒருதன்மையாக உருகும்படி, அழியாமல் நின்ற அந்நிலைமையிலே இராவணனுனவன் பாடாநின்றனன். உள்ளும் கருகியதன்றி மேலும் கரியனுய் உள்ளானுமான இத்தன்மையன், பொருந்திய பெயரும் இராவணனுய் இருக்கின்றவன். இத்தன்மை, சிவனை உருக்கப் பாடியும் பொருந்திய திருவருளாலே கொடுக்கப் பெற்றதும் ஐயோ! ஒரு வாளோ? காழியின்கண் வாழ்கின்ற சிவனது காருண்யமானது இத்தன்மை வசீகரிக்குமாயின் அவன் என் செய்வான்? - என்றவாறு.

*பாடல் 11:*

கண் நிகழ் புண்டரிகத்தினனே, கலந்து இரிபுண்தரிகத்தினனே.
மண் நிகழும் பரிசு ஏனம்அதே, வானகம் ஏய் வகை சேனம்அதே,
நண்ணி, அடிமுடி எய்தலரே; நளிர் மலி சோலையில் எய்துஅலரே,
பண் இயல் கொச்சைப் பசுபதியே! பசு மிக ஊர்வர், பசுபதியே.

*பொழிப்புரை:* (ஒளி) விட்டு விளங்காநின்ற தன் விழிகளானவை புண்டரிகம் போன்று இருக்கின்ற விட்டுணுவும், முன்பு கூடி உளதாய்ப் பின் சிவனுல் அரியப்பட்ட புண் பொருந்தாநின்ற கபாலத்தைத் தனக்குத் தலையாக உடைய பிர்மாவும், மண்ணை இடக்கும்படி வராகரூபத்தைக் கொண்டும், ஆகாயத்திலே பொருந்திப் பறக்கும் படிக்காகவே அன்னமே வடிவாகியும், இத்தன்மை வராகரூபமும் அன்னரூபமுமாய், சிவனுடைய சீபாதமும் திருமுடியும் தேடி நின்றனர்; ஆதலால் என்ன மாறுபாடோ என வியந்தனர். குளிர் பொருந்திய வனப்பை உடைய சோலையில் பூக்கள் நிறைந்த, சிவம் பொருந்திய அன்பை உடைய கொச்சை என்னும் திருப்பதியின்கண் இருக்கின்ற பாசுபதவிக்கிரகத்தை உடையவனே! அத்தன்மையானவர் மிகவும் உகந்து ஊர்வது ஏதென்னில் இடபமே; அவரது திருநாமம் ஏது என்னில் பசுபதி என்னும் திருநாமம் - என்றவாறு.

*பாட்டு 12:*

பரு மதில் மதுரை மன் அவை எதிரே, பதிகம்அது எழுது இலைஅவை எதிரே
வரு நதி இடைமிசை வரு கரனே! வசையொடும் அலர் கெட அருகு அரனே!
கருதல் இல் இசை முரல் தருமர்உளே, கழுமலம் அமர் இறை தரும் அருளே,
மருவிய தமிழ் விரகன மொழியே வல்லவர்தம் இடர் திடம் ஒழியே

*பொழிப்புரை:* பருத்த மதில் சூழ்ந்த மதுரைக்குப் பதியாகிய பாண்டியனது சபை முன்பே, பதிகம் எழுதப்பட்ட ஏடுகள்அவை வருகின்ற வையை ஆற்றின்மீதே எதிரிட்டுப் போம்வகை துணை செய்து செலுத்திப் போகின்ற சீஅத்தங்களை உடையவனே! ஏடு எதிர்போக விசயம் செய்து, சமணரது புறனுரையும் பரிபவச்சொல்லும் கெடுவான்பொருட்டாகச் சமண்குலத்தைக் கெடுத்தவனே! கேட்டாரது கருத்தை அழிக்கும் இசைத்திறத்திற்கு உரியோருமாய்த் தன்மசீலருமாய் இருக்கும் மறையோர் வாழும் திருக்கழுமலத்திலே பொருந்திய தம்பிரான் பிரசாதத் திருவருளை இடைவிடாமல் பொருந்திய தமிழ்விரகனுகிய யான் பாடிய பாடலை எல்லாம் உரைக்கின்றவரது பிறவித்துக்கமானது விட்டு நீங்குமது சத்தியம் - என்றவாறு.

திரு ஏகம்பம் பண்: பழம்பஞ்சுரம்

பாடல் 1:

பாயும் மால்விடைமேல் ஒரு பாகனே! பாவைதன் உரு மேல் ஒருபாகனே!
தூய வானவர் வேதத்துவனியே! சோதிமால் எரி வேதத்து வனியே!
ஆயும் நன்பொருள் நுண்பொருள் ஆதியே, ஆலநீழல் அரும்பொருள் ஆதியே;
காய வில் மதன் பட்டது கம்பமே; கண்-நுதல் பரமற்கு இடம் கம்பமே.

பொழிப்புரை: வான் அளவு உந்தும் பெரிய இடபத்தைச் செலுத்துகைக்கு ஒப்பில்லாத பாகனும் உள்ளவனே! பரமேசுவரி திருமேனியினை உனது திருவடிவின் பாதியிலே வைத்தவனே! நிர்மலராகிய வானவர் துதியாகிய வேதங்களினுடைய நாதஸ்வரூப மாகி இருக்கின்றவனே! பிரகாசத்தை உடைத்தாகிய மிகுதிப்பட்டு அஞ்சத் தீயினுடைய பிரகாசம் எப்படியிருக்கும், அப்படித்தான வழியாய் உள்ளவனே! மன போதத்தால் உணரப்பட்ட நன்மை உடைத்தாகிய அர்த்தங்களுக்கெல்லாம் கிட்டுதற்கு அரிதாகிய சூன்யமாய் உள்ள சிறுவத்துவினை, வடவிருக்கத்தின்கீழ் எழுந்தருளி இருந்து, ஆத்மபோதத்தால் உண்டாதற்கு அரிய பொருள் என உணர்த்தி, அப்பொருளைத் தெருட்சிப்பட ஆயாநின்றனையே [ஆ(ய்)தியே]. உனது நெற்றி-விழியாலே தகனம் செய்ய, எவராலும் செயித்தற்கு அரிய காமன் பட்டவாறு அங்கம் எடாத நடுக்கம்; இவ்வாறு காமன் வடிவு அழிய நுதற்கண்ணாலே விழித்த கருணையாளனாகிய சிவனுக்கு இடம் ஏது என்னில், திருவேகம்பம் என்னும் திருப்பதி - என்றவாறு.

பாடல் 2:

சடை அணிந்ததும் வெண்டு அலைமாலையே; தம் உடம்பிலும் வெண் தலைமாலையே;
படையில் அம் கையில் சூலம்அது என்பதே; பரந்து இலங்கு-ஐயில்-சூலம் அது என்பதே;
புடை பரப்பன பூத கணங்களே; போற்று இசைப்பன பூதகணங்களே;
கடைகள்தோறும் இரப்பது மிச்சையே? கம்பம் மேவி இருப்பதும் இச்சையே.

பொழிப்புரை: நினது சடாமகுடத்தின்கண் தரிக்கப்பட்டது பகீரதன் வேண்டிய அலைப்பெருக்கத்தை உடைய கங்காநதியே; விட்டுணுவை ஒரு பாகத்திலே பொருந்தாநின்ற திருமேனியில் அணிவது ஏதென்னில் வெள்ளிதாகிய தலைமாலையே. ஆயுதங்களில் வைத்து, அழகிய சீஅத்தத்தில் திறம் கொண்ட படையாக ஏந்தியது ஏது என்னில் திரிசூலமே; பிச்சைஇட வந்த பத்தினிகளின் உதரம்தொறும் சுக்கில சுரோணிதங்கள் பெருகி மிளிர, அவர்களைச் சூலிகள் ஆக்காநின்ற தன்மை நுமக்கு அழகு தரும் என்று சொல்லுவார்களே. நின்னைச் சூழச் சேவித்து வருவன பூதங்களும் கணங்களுமே; உன்னைத் துதித்து, அந்தத் துதிப்பின் வழியே, நின்னுடைய திருவடியின்கண்ணே சேர்வன நின்மல ஆன்மாக்களே. இத்தன்மையாகிய நீ இல்லங்கள்தோறும் பிச்சைக்கு எழுந்தருளுவது மிடி ஆகுமே? இன்னவாறு கருணையன் ஆகிய நீ திருஏகம்பத்தைத் திருப்படைவீடாகப் பொருந்தி எழுந்தருளியிருப்பதுவும் நினது இச்சாசக்தியால் - என்றவாறு.

பாடல் 3:

வெள்எருக்கொடு தும்பை மிலைச்சியே; ஏறு முன் செலத் தும்பை மிலைச்சியே;
அள்ளி நீறுஅது பூசுவது ஆகமே; ஆன மாசுணம் மூசுவது ஆகமே;
புள்ளி ஆடை உடுப்பது உகத்துமே? போன ஊழி உடுப்பது உகத்துமே;
கள் உலாம் மலர்க் கம் பம் இருப்பதே, காஞ்சி மா நகர்க் கம்பம் இருப்பதே.

பொழிப்புரை : வெள்ளெருக்க மாலையுடனே தும்பை மாலையை நின்னை அடைந் தார் கன்மத்தை ஒழிக்குமதே தும்பைவெற்றியாக நினது சடாமகுடத்திலே சூடா-நின்றனை; இடபத்தேவர் விரையப் போக அவரது வாய்க்கயிற்றினைச் செலுத்தா நின்றனை. நினது திருமேனியிலே அள்ளி நிறைய உத்தூளனம் பண்ணுவது திருநீறே; உனக்கு ஆபரணமாய் உள்ள பாம்புகள்ஆயின உனது திருமேனியிலே மூச்சு விடுவன; (அத்திருமேனி) அவற்றினுடைய பதியேயோ? புள்ளிமானினது உரியைப் பரிவட்டமாகச் சார்த்தியருளியது நினது திருவுள்ளத்துக்கு உவகையாயோ? கழிந்த கழிந்த உகங்கள்தோறும் நீ அழியாதவன் ஆகிய சாமர்த்தியம் உன்னை மேல் ஆக்குமே. மதுமலர் பொருந்திய திருக்கம்பையாற்று நீர் நட்சத்திரபதம் அளவாகப் பொருந்திப் பெருக்கப்பட்ட காஞ்சி மாநகர்க்குள்ளாகிய திருஏகம்பமே உனக்குப் பூமியில் சிறந்த திருப்பதி - என்றவாறு.

பாடல் 4:

முற்றல் ஆமை அணிந்த முதல்வரே! மூரியா(ம்)மை அணிந்த முதல்வரே!
பற்றி வாள்அரவு ஆட்டும் பரிசரே! பாலும் நெய் உகந்து ஆட்டும் பரிசரே!
வற்றல்ஓடு கலம் பலி தேர்வதே? வானினேடு கலம் பலி தேர்வதே?
கற்றிலா மனம் கம்பம் இருப்புஅதே; காஞ்சி மாநகர் கம்பம் இருப்பதே.

பொழிப்புரை: முற்றலாய் இருக்கின்ற ஆமையைத் திருமார்பிலே ஆபரணமாக அணிந்த கர்த்திருபாவத்தை உடையவரே! யாவராலும் மட்டுப்படாமல் மிகைத்து வருகின்ற ஆலகாலத்தை அமுதுசெய்து, அமுதத்தைத் தேவர்களுக்குக் கொடுத்த தலைவரே! ஒளியை உடைத்தான பாம்பைச் சீஅத்தத்தாலே பிடித்து அதனை ஆட்டு விக்கும் முறைமையை உடையவரே! பஞ்சகவ்வியங்களைக் கொண்டு அபிஷேகம் பண்ணத் தேவர்களுக்குக் கருத்தாவாய் உள்ளவரே! உலர்ந்த ஓடாகிய பிரம்மகபாலத் திலே பிச்சை வாங்கும் தன்மை எவ்வாறு? தேவலோகம் முதலாயுள்ள லோகங்களை எல்லாம் சங்கரித்து நீ அழியாமை இருக்கின்றாய்; அன்றி, இகழ்வார் இகழும் புறனு ரையாகிய இது உனக்கு அழகிதாய் இருப்பதே? உன்னை உள்ளபடி தெரிசித்துத் தான் தவ(ம்) அனுபவியாதது சித்அசித்துஆயினவற்றுக்கு இருப்பு(ஆகும்); இத்தன்மை யனை உனக்குக் காஞ்சி மாநகர்த் திருஏகம்பமே மண்ணில் பதி - என்றவாறு.

பாடல் 5:

வேடன் ஆகி விசயற்கு அருளியே! வேலை நஞ்சம் மிசையல் கருளியே!
ஆடுபாம்பு அரை ஆர்த்தது உடைஅதே; அஞ்சு பூதமும் ஆர்த்தது உடையதே;
கோடு வான் மதிக்கண்ணி அழகிதே; குற்றம் இல் மதிக்கு அண்ணி அழகிதே,
காடு வாழ் பதி ஆவது; 'உம்'அதே கம்பம் மா பதி ஆவதும் உம்மதே.

பொழிப்புரை: வேட்டுவ வடிவைக் கொண்டு அருச்சுனற்குப் பாசுபதம் கொடுத்தவனே! சமுத்திரத்தில் எழப்படாநின்ற ஆலகாலத்தை அமுதுசெய்ய, அதனால் கண்டம் கறுத்தவனே! ஆடாநின்ற பாம்பினைத் திருவரையிலே கச்சாகவும் பரிவட்டமாகவும் கொண்டவனே! கண்டார்க்கு வெருவுதலைக் கொடுக்கும் பூதப்படைகளை நிறைத்துச் சூழப் போத, அதற்கு நடுவே நிற்கின்றது உனக்கு உடைமை ஆவதே. வளைந்து ஒளியைப் பொருந்திநின்ற வாலசந்திரன் நினது திருமுடிச் சூட்டாக விளங்காநிற் பது உனக்கு அழகிது ஆவதே; மலபோதம் தட்டாத சிவஞானத்துக்கு அண்ணி யனாய் உள்ள உமக்கு அரிபிரம்மாதிகள் ஒருங்கியே அழியப்பட்ட மயானமாகிய காட்டில் பொருந்தி நின்று கர்த்தாஆவானும் நீரே; சோலையில் வண்டினங்கள்

'உம்' என்று பாடும் கானத்தைப் பொருந்திய திருஏகம்பமாகிய திருப்பதியே உமது ஊராகஉடையவரே! - என்றவாறு.

பாடல் 6:

இரும் புகைக்கொடி தங்கு அழல் கையதே; இமய மாமகள் தம் கழல் கையதே;
அரும்பு மொய்த்த மலர்ப்பொறை தாங்கியே, ஆழியான்தன் மலர்ப்பொறை தாங்கியே;
பெரும்பகல் நடம்ஆடுதல் செய்துமே, பேதைமார் மனம் வாடுதல் செய்துமே;
கரும்பு மொய்த்து எழு கம்பம் இருப்பதே, காஞ்சி மாநகர்க் கம்பம் இருப்புஅதே.

பொழிப்புரை: பெரிய புகைக்கொடி தங்கிய அக்கினியானது நினது கையில் இருப்பதே; இமயமாமகளாராகிய பரமேசுவரியது சீபாதத்தை உமது திருமுடியினது பணிவு ஒருகாலும் ஒழியாது. மாலாம் அவன் ஆயிரம்தாமரைப் பூக்கொண்டு அர்ச்சனே செய்யும் கரதலங்களாலே மொய்க்கப்பட்ட தாமரை ஆயிரங்களின் ஒரு பூவைத் தங்குதல் செய்விப்பவர் ஆழிகொடு விளேயாட நினேந்த நாராயணனது மலர்ந்த கண்ணே வாங்கும் வருத்தத்தைத் திருஉள்ளத்திலே தரித்துக்கொண்டு அவனுக்குச் சக்கரம் பிரசாதித்தவனே! உச்சிநேரத்தில் இருடிபத்தினிகளது மனே-தொறும் எழுந்தருளி, அவரவரது இதயங்கள் எல்லாம் அழியும்படி பிச்சை வாங்குபவனே! செய்கள்தொறும் அவிடேகிக்கப் பொருந்தி எழுகின்ற கருப்பங்காடு கண்கள்தொறும் முத்து உதிர மேவுதலுக்கு இடமாகிய வனப்பைப் பொருந்திய இத்தன்மை கரும்பார் வயல் சூழ்ந்த காஞ்சி மாநகரின் திருஏகம்பம் உனக்கு மண்ணில் தன்பதி - என்றவாறு.

பாடல் 7:

முதிர மங்கை தவம் செய்த காலமே, முன்பும் அங் கைதவம் செய்த காலமே,
வெதிர்களோடு அகில் சந்த முருட்டியே, வேழம் ஓடகில் சந்தம் உருட்டியே
அதிர ஆறு வரத்து அழுவத்தொடே, ஆனே ஆறு ஊடுவரத் தழுவத்தொடே,
கதிர்கொள் பூண்முலேக் கம்பம் இருப்பதே; காஞ்சி மாநகர்க் கம்பம் இருப்பதே.

பொழிப்புரை: முற்காலத்திலே பரமேசுவரி முக்கியமான தபசுகளேச் செய்கின்ற அளவிலே, பரமேசுவரி செய்த தபசின் ஒழுக்கம் கெட, அத்தன்மையாளுக்குப் பயமானது வந்து உற, ஆங்கு அவளுக்கு வந்து எய்திய காலம் அல்லாக் காலத்தில் வந்த கம்பைஆற்றின் பெருக்கை உறைக்கும் மூங்கில்திரளும் அகில்மரங்களும், சந்தனக் கட்டைகளும் பொருத்தப்படாநின்ற யானேத்தந்தங்கள் இவை அனேத்தும் பெருக்கில் கொண்டு வரும் எல்லேயில் கீழ்ச் சொன்ன மரங்களுக்குத் தன்வசமற்ற தன்மைபோல ஆனேகளும் முன் பிழைத்து ஓடாத வண்ணம் தள்ளிக்கொண்டு நிலம் பனிப்பக் கம்பையாறு விரியப் பரந்து பெருகி வருமிடத்து அதனுடன், கீழ்ச் சொன்ன கம்பையாற்றின் பெருக்கு தன்னே உண்டு கீழ்ப்பட்டு வருந்தாமல் உள்ள பரமேசு-வரி, தன்கேடு பாராமல் தம்பிரானே இரண்டற விளங்கத் தழுவ, இதழ்களே உடைத்தாகிய போதுகளும், பிரகாசத்தை உடைத்தாகிய ஆபரணங்களும் ஒருங்கே பொருந்தப்படாநின்ற அழகிய திருமுலேத்தடங்களாகிய அசைவற்ற கம்பங்கள் அழகிய திருமார்பில் அழுந்த இருப்பதே; அத்தன்மையாகிய பெண்முலேக்கு நொய்யானுக்கு உறைவிடம் ஏது என்னில், காஞ்சி மாநகர்த் திருஏகம்பமே - என்றவாறு.

பாடல் 8:

பண்டரக் கல் நெடுத்த (உ) பலத்தையே, பாய்ந்து அரக்கன் எடுத்த பலத்தையே,
கொண்டு அரக்கியதும் கால் விரலையே; கோள்வு அரக்கியது உம்கால்வு இரலையே;
உண்டு உழன்றதும் முண்டத் தலையிலே; உடுபதிக்கு இடம் உண்டு அத்தலையிலே;
கண்டு, அந்நஞ்சம் அடக்கினை கம்பமே; கடவுள்நீ இடம் கொண்டது கம்பமே.

பொழிப்புரை: வெள்ளைச் சிலையினுலே நீளப்பட்டு உயர்ந்த கயிலாயத்தையே, தேரினின்றும் குதித்துப் பாய்ந்து வேருடன் பிடுங்கி எடுத்த இராவணனது வீரியத்தையே, எறும்புக்கு யானை பொர வேண்டாமையான், அவனது அற்பச்சேட்டைக்கு ஈடாக நினது திருவிரலினுலேயே, இடாரில் பட்ட எலி போல நெரித்தாய்; நின்னுடன் மாறுபட்ட கோட்பாட்டை உடைய மகாஇருடிகளது ஆபிசார ஓமத்தின்கண்ணே, மேல்நோக்கித் துள்ளிஎழுந்த மானை ஏந்தியவனே! கடைகள்தோறும் பிச்சைவாங்கித் திரிந்து அமுதுசெய்ததும், மயிர் கழிந்த பிரம்மகபாலத்திலே; சந்திரனுக்கு வாழ்விடம் ஏது என்னில், (நின்) திருமுடியாகிய இடத்திலே. தேவர்களது நடுக்கத்தைக் கண்டு, உங்கரித்து வந்த ஆலகாலத்தை அமுதுசெய்தவனே! இத்தன்மை கர்த்தாவான நீ, உனக்கு உறைவிடமாகக் கருதியது, திருஏகம்பம் என்னும் திருப்பதியே - என்றவாறு.

பாடல் 9:

தூணி ஆன சுடர்விடு சோதியே, சுத்தமான சுடர்விடு சோதியே;
பேணி ஓடி பிரமப்பறவையே, பித்தன் ஆன பிரமப் பறவையே,
சேணினேடு கீழ் ஊழி திரிந்துமே, சித்தமோடு கீழ் ஊழி திரிந்துமே,
காண நின்றனர் உற்றது கம்பமே; கடவுள்நீ இடம் உற்றது கம்பமே.

பொழிப்புரை: விட்டுணுவும் பிரம்மாவும் நினது சீர்பாதத்தையும் திருமுடியையும் மாறுகொண்டு தேடுமிடத்து, அனற்பிழம்பாய்த் தூணுகி, அந்தச் சூனியமாய், அவர்கள் அளவிடற்கு அரிதாகி நின்றுயும் நீயே. நின்மலராய் இருந்து மலபோதகர் அட்டம் செய்யப்பட்ட ஆகாசமும் பூமியும் உருவ இடந்தும் பறந்தும் ஊழிக் காலமாகத் திரிந்தும் சித்தமொடு நீடூழி திரிந்து, தேடிக் காணநின்ற இவர்களது சித்தம் பொருந்திய கீழ்மையிடத்துச் சிவக்கேடே பொருந்திய தெரிசனமாகப் பெற்ற அவர் அதியாகப் பெற்றது, தத்தம் சித்தத்தின் நடுக்கமே; இத்தன்மை கர்த்தா ஆகிய நீ, உனக்கு உறைவிடமாகத் திருவுள்ளத்து அடைத்தது திருஏகம்பம் என்ற திருப்பதி - என்றவாறு.

பாடல் 10:

ஓர் உடம்பினை ஈர்உரு ஆகவே, உன் பொருள் திறம் ஈர் உரு ஆகவே,
ஆரும் எய்தற்கு அரிது, பெரிதுமே ஆற்ற எய்தற்கு அரிது பெரிதுமே;
தேரரும் அறியாது திகைப்பரே; சித்தமும் மறியா துதி கைப்பரே;
கார் நிறத்து அமணர்க்கு ஒரு கம்பமே; கடவுள்நீ இடம் கொண்டது கம்பமே.

பொழிப்புரை: நினது ஒப்பிலாத் திருமேனியின்கண்ணே, சத்தி இரண்டறக் கூடியிருத்தலால், ஒரு திருமேனியிலே இரண்டு வடிவாய் இருந்தனை; உனது சத்தியமா

கிய திருமேனியை உணருமிடத்துப் பெத்தத்தில் என் அறிவை நீங்காமை நிற்கையிலே உன்னை ஒழித்து யான் செய்த அபாரதங்களை நினைக்கில் மிகுந்த பயத்தைத் தருதலாலும், ஐயோ, நினது உண்மை ஞானுகாசமாய் இருத்தலாலும் எப்படி உன்னை யான் சென்று அணைவது? இத்தன்மை பரிபூரணமான உன்னை அநாதியிலே இழந்து தாம் கண்ட காட்சி கொடுத்த தம் சமயமே பெருமை உடைத்து என்று, தர்க்கம் என்ற பாணத்தாலே மிகவும் எய்யாநின்ற தர்க்கபலத்தை உடைய பௌத்தர் எனப்படுமவராகிய சமயிகள், ஈது என்று உணராததோர் தலைமை உடையது, நினது திருநாமமாகிய பஞ்சாக்கரத்தின் பெருமை; இத்தன்மையாகிய புத்தசமயத்தோரும் உன்னை அறியாமையே சமயமாகக் கொண்டு மயங்காநிற்பரே. உனது திருவடியின்கண் சிந்தைவையாமல், தமது சித்தத்தை அந்நிய மார்க்கங்களிலே மறித்திட்டு, உனது வேதாகமங்களாகிய துதிகளைத் தோஷம்சொல்லி, உள்ளும் புறம்பும் இருளாநின்ற அருகந்தர்க்கு இன்றளவாக, ஒப்பில்லாத சித்தசலனமாய் இருப்பவனே! இத்தன்மையார் பௌத்தர்க்கு எட்டாத் தலைமை உடைய நீ வாழும் இடமாகக் கொண்ட பதி திருஏகம்பம் - என்றவாறு.

பாடல் 11:

கந்தம் ஆர் பொழில் சூழ்தரு கம்பமே, காதல் செய்பவர் தீர்த்திடு கம்பமே;
புந்திசெய்வது விரும்பி, புகலியே பூசுரன்தன் விரும்பிப் புகலியே;
அந்தம் இல் பொருள்ஆயின கொண்டுமே, அண்ணலின் பொருள்ஆயின
கொண்டுமே,
பந்தன் இன் இயல் பாடிய பத்துமே: பாட வல்லவர் ஆயின பத்துமே.

*பொழிப்புரை :* மணம் பொருந்திய சோலை சூழ்ந்த திருஏகம்பத்தை இடைவிடாமல் காதலித்து நினைக்கின்றாரது நடுக்கத்தை ஒழிப்பவனே! இத்தன்மை திருஏகம்பத்தைக் காதலித்தாரது சன்மநடுக்கத்தை நீ ஒழிப்பை என்பதை யானும் உணர்ந்து, கனக மாடங்கள் சூழப்பட்ட புகலி என்னும் பதியின்கண் வாழ்கின்ற இந்த மறையோனாகிய யான், அத்தன்மை கருணையாளனாகிய உன்னைக் காதலித்து உரைத்த தமிழ்மாலையை, முடிவில்லாத அத்தங்களில் எனக்குத் தோன்றின மதி ஆதியைக் கொண்டு, கர்த்தாஆகிய நினது சிவானந்தரது அறிவினுள்ளே தோன்றும் சிவானந்தம் ஏகமாகிய விசேடத்தை உடைய நின்னை இரண்டறத் தழுவிய ஞானசம்பந்தனான நான், இனிய தமிழாகப் பாடிய இம்மாலை பத்துமே; இம்மாலையைக்கொண்டு நின்னைப் பாடுவார்க்கு ஆகுவ்து ஏது என்னில், அழகாகிய பத்தி ஞான வைராக்கியங்கள் - என்றவாறு.

திரு ஆலவாய் பண்: பழம்பஞ்சுரம்

பாடல் 1:

ஆலம் நீழல் உகந்தது இருக்கையே; ஆன பாடல் உகந்த திருக் கையே;
பாவின் நேர் மொழியாள் ஒருபங்கனே! பாதம் ஓதலர் சேர் புரபங்கனே!
கோல நீறு அணி மேதகு பூதனே! கோதுஇலார் மனம் மேவிய பூதனே!
ஆல(ம்) நஞ்சு அமுதுஉண்ட களத்தனே! ஆலவாய் உறை அண்டர்கள்
அத்தனே!

*பொழிப்புரை :* பரிபாகம் பிறந்து நின்னை அடைந்த மகாஇருடிகள்ஆகின்றார், நூல் அடைந்த கொள்கையாலே நினது அடி கூடுதற்கு மேலாகிய மோக்ஷத்தைக் கொடுப்பான்பொருட்டாக வடவிருட்ச நிழலில் எழுந்தருளியிருந்ததும் ஓர்

இருப்புஆமே; இருக்கு முதலாகிய சதுர்வேதங்களையும் அருளிச்செய்து பின்பு உண்டாகிய மௌனவாசகத்தை சீஅத்தத்தாலே அருளிச்செய்பவனே! பால் நிகர்த்த மொழியை உடைய பரமேசுவரியை ஒருபாகத்தில் உடையவனே! நினது சீபாதத்தைத் துதியாத இராக்கதர் வாழ்கின்ற முப்புரத்தையும் பங்கப்படுத்தினவனே! அழகிய திருநீற்றை அணிந்து மிகுதியை உடைய பூதங்களால் சூழப்பட்டவனே! மலத்திரயங்களும் அற்றுரது சத்திய போதத்திலே வாழும் நின்மலமூர்த்தியே! தேவர்களுக்கு மட்டுப்படாமல், அவர்களையும் சங்கரித்து மேலிட்டு வந்த ஆலகாலத்தை அமுது செய்தருளி, அதனைத் தேக்கிட்டுவிடாமல் திருமிடற்றிலே சான்று காட்ட வைத்திருக்கும் கருணையாளனே! திருஆலவாயின்கண்ணே வாழ்பவனுமாய், தேவர்களுக்கெல்லாம் தேவனுமாய் உள்ளவனே! - என்றவாறு.

பாடல் 2:

பாதியாய் உடன்கொண்டது மாலையே; பம்புதார் மலர்க்கொன்றை நன்மாலையே;
கோது இல் நீறுஅது பூசிடும் ஆகனே! கொண்ட நன் கையில் மான் இடம்ஆகனே!
நாதன் நாள்தொறும் ஆடுவது ஆன்ஐயே; நாடி அன்று உரிசெய்ததும் ஆனையே;
வேதநூல் பயில்கின்றது வாயிலே; விகிர்தன் ஊர் திரு ஆலநல்வாயிலே.

பொழிப்புரை : தனது திருமேனியின்கண்ணே, ஒருபாகத்துக் கொண்டது நாராயணனையே; இத்தன்மையனுகிய கருணையாளனுக்குத் திருமார்பு நெருங்கச் சாத்திய திருமாலை ஏது என்னில், திருக்கொன்றைமாலையே. ஆத்மாக்களது பாசங்களை ஒழிப்பான்பொருட்டாக நின்மலமாகிய திருநீற்றை அணியும் திருமேனி உடையவனே! நன்றுகிய சீஅத்தத்திலே மானை இடமாகக் கொண்டவனே! இத்தன்மையனுகிய கர்த்தாஆனவன் அபிடேகம்செய்வது ஏது என்னின், பசுவின்பால் உண்டாகிய பஞ்சகவ்வியங்களே; திருவுள்ளம்பற்றி உரித்துப் போர்த்ததுவும், இருடிகள் யாகத்தின்கண்ணே வந்த யானையையே. உனது திருவாக்கிலே சதுர்வேதங்களையும் இருபத்தெட்டுக் கோடி ஆகமங்களையும் அருளிச்செய்யாநிற்பவனே! இத்தன்மைகளாகிய லீலைகள்எல்லாம் செய்தருளிய ஸர்வக்ஞபாவத்தை உடைய உனக்கு வாழ்விடம் ஏதென்னில், திருஆலவாய் என்னும் திருப்பதி - என்றவாறு.

பாடல் 3:

காடு நீடது உறப் பல கத்தனே! காதலால் நினைவார்தம் அகத்தனே!
பாடு பேயொடு பூதம் அசிக்கவே, பல் பிணத்தசை நாடி அசிக்கவே,
நீடு மாநடம் ஆடும் விருப்பனே! நின் அடி தொழ நாளும் இருப்பனே;
ஆடல் நீள்சடை மேவிய அப்பனே! ஆலவாயினில் மேவிய அப்பனே!

பொழிப்புரை: சுடுகாட்டின்கண்ணே மிகுதியாகப் பொருத்தப்பட்ட தலைகளால் செய்த திருமாலையை உடையவனே! பத்தியினுல் உன்னை இடைவிடாமல் அநுசந்தானம் பண்ணுவார் இதயகமலத்தில் இருக்கின்றவனே! நின்னைச் சூழப் பேய்களும் பூதங்களும் ஹாஸம் பண்ணி வர, அது ஒழிந்து மயானத்தில் உண்டான பிணங்களின் மாங்கிசங்களைப் பொசியாநின்று களிக்க, மிகுதிப்பட்ட சங்கார தாண்டவத்தைச் செய்தற்கு உண்டான ஆசையை உடையவனே! அத்தன்மை நிருத்தம்செய்யாநின்ற நின் திருவடிகளை இடைவிடாமல் அநுசந்தானம் பண்ணுதலே எனது எண்ணமாதலின் அவ்வாறுள்ள திருவடியிலே வழிபாடே என்றும் எண்ண

மாக எண்ணி இருப்பன்; நீ ஆனந்தநிருத்தம் பண்ணுமிடத்து, திசைகள்தோறும் அலையும் சடாமகுடத்திலே தரித்த கங்கையை உடையவனே! திருஆலவாயைத் திருப்படைவீடாகப் பொருந்தி, ஜகதேகபீஜமாய் (- உலகிற்கு ஒன்றே ஒன்றான வித்தாக) இருந்து, விசுவத்துக்குப் பிதாவாக இருக்கின்றவனே! - என்றவாறு.

பாடல் 4:

பண்டு அயன்தலை ஒன்றும் அறுத்தியே; பாதம் ஓதினர் பாவம் மறுத்தியே;
துண்ட வெண்பிறை சென்னி இருத்தியே; தூய வெள்ளெருது ஏறி இருத்தியே;
கண்டு காமனை வேவ விழித்தியே; காதல் இல்லவர்தம்மை இழித்தியே;
அண்டர் நாயகனே மிகு கண்டனே! ஆலவாயினில் மேவி அகண்டனே!

பொழிப்புரை : ஆதிபிரம்மாவினுடைய ஐந்து தலையில் உளதாகிய உச்சித்தலையாகிய ஒரு தலையை, ஆத்மரக்ஷை காரியமாக அரிந்த கருணையாளனே! உனது திருவடியினை ஓதி உணர்ந்தாரது ஆன்மபாவத்தை அவர்கள் மறுக்கும்படி அவரது உள்ளே நின்று ஒழியாநின்றவனே! சந்திரனது சகலத்தைத் திருமுடியின்கண்ணே, நித்தத்துவம் பிறக்க இருத்தித் தரியாநின்றவனே! நின்மலபாவத்தை உடைய இடபத்தின்மீது ஏறிய, ஊழிக்காலத்தில் மிகுந்த பிரகாசத்தை உடைய அக்னி போன்றவனே! நினது திருநுதற்கண்ணால் காமனைப் பார்த்தருளி, அவனது உருவானது வெந்து நீறுப்போம்படி விழியாநின்றனையே! நின்னுடைய திருவடிகளில் பத்தி இல்லாதாரை மாயாந்தகாரத்திலே தள்ளாநின்றவனே! தேவர்களுக்கெல்லாம் தேவனுமாய்ப் பரதெய்வங்களுக்கெல்லாம் மணவாளனாய் உள்ளவனே! திருவாலவாய் என்னும் திருப்பதியைத் தனக்கு உறைவிடமாகக் கொண்டிருக்கும் அகண்ட பரிபூரணனே! - என்றவாறு.

பாடல் 5:

சென்று தாதை உகுத்தனன் பாலையே, சீறி அன்பு செகுத்தனன்பால் ஐயே,
வென்றி சேர் மழுக்கொண்டு முன்காலையே வீட வெட்டிடக் கண்டும்
உன்காலையே,
நின்ற மாணியை ஓடின கங்கையான், நிலவம் மல்கி உதித்து அந்நகம் கையால்,
அன்று நின்று உரு ஆகத் தடவியே, ஆலவாய் அரன் நாகத்து அடவியே.

பொழிப்புரை: விசாரசர்மனாகிய சண்டேசுர நாயனார், மண்ணியாற்றின் குறையின்கண், ஆத்தித்தூறிடத்துச் சிவபூசை பண்ணுங்கால், பூசையின் செய்தி உணராமல், மணலின்கண்ணே பிராம்மணர்களுடைய பசுக்களில் உண்டாகிய பாலை உகுக்கின்றான் என்று, எச்சதத்தனாகிய பிதாவானவன் சென்று, அவர் தாபித்து வைத்த பாலைக் காலாலே சிந்தினன்; சிவபாவத்தாலே தாபித்துவைத்த பாலைச் சிந்துதலால், வைராக்கியத்தினாலே வெகுண்டு பார்த்துப் பிதா என்கிற சிநேகத்தை ஒழித்துச் சிவத்துரோகி என்னப் பார்த்த அவரிடத்திலே (- சண்டேசுர நாயனாரிடத்திலே) செய்யப்பட்ட இராகபாவங்கள் எல்லாம் எங்ஙனம் என்னில், தாதை முன்னிட்ட காலைச் சிவோகம்பாவத்தால் உண்டாகிய வெற்றிமழுவைக் கொண்டு இருதுண்டமாகி எறியக் கண்டருளி, தியானகாலத்திலே நின்ற சண்டேசுரநாயனார்க்குப் பிரம்மஹத்தியும், பிதாவதையும் குருவதையுமான பாபங்கள் விளைய, அத்தன்மையான சண்டேசுரநாயனாரை, திருச்சடாபாரத்திலே குதிகொண்டு பாயத் தக்க கங்காநதியை உடைய தம்பிரான், பஞ்சசந்திரர்கள் திருக்கையில் அஞ்சுதிருவிரலிலும் வந்து இருந்து ஒளிவிடும் தன்மை போன்ற நகங்களை உடைய

திருக்கைமலரால், தனது நின்மலமாகிய வடிவாகவே நோக்கிப் பரிசதீக்கை பண்ணின கருணையாளனே! இத்தன்மை ஆக்கிய பாதகத்துக்கு மோக்ஷத்தைக் கொடுத்த அரன் என்னும் பெயருடைய, ஞானம் என்னும் மதத்தைப் பொழியும் தேவவாரணத்துக்கு இடமாகிய பெருங்காடு ஏது என்னில், அருட்காடாகிய திருஆலவாய் என்னும் திருப்பதியே - என்றவாறு.

*பாடல் 6:*

*நக்கம் ஏகுவர் நாடும் ஓர் ஊருமே; நாதன் மேனியில் மாசுணம் ஊருமே;*
*தக்க பூ மனைச் சுற்றக் கருளொடே, தாரம் உய்த்ததும் பாணற்கு அருளொடே;*
*மிக்க தென்னவன் தேவிக்கு அணியையே; வெல்ல நல்கிய தொண்டர்க் கணியையே;*
*அக்கினர் அமுது உண்கலன் ஓடுமே; ஆலவாய், அரனார் உமையோடுமே.*

*பொழிப்புரை:* பிக்ஷாடனம் காரணமாக நாட்டிடத்தும் ஊரிடத்தும் நிருவாணமாகத் திரியாநின்றனரே; இத்தன்மை கர்த்தா ஆகிய உனது திருமேனியிலே பாம்புகள் நெருங்கி ஊர்வது என்ன வியப்போ! திருநீலகண்டப் பெரும்பாணனார்க்குப் பரிசிலாகப் பொற்பூவும், ஏறுபலகையும், வருடுவான்பொருட்டாகிய கரிக்கூறையும் கிருபையாலே பிரசாதித்தவனே! மிகுதிப்பட்ட கீர்த்தியை உடைய பாண்டியனுக்கு நம்பிராட்டியாராகிய மங்கையர்க்கரசியாருக்கு மிகவும் அண்ணித்தாய் உள்ளவனே! தம்மை அழிந்து உருகிய தாஸோஹத்தைப் பொருந்திய குலச்சிறையார் கருதப்பட்டவனே! அக்குமணியை ஆரமாகவும், அமுதுசெய்கின்ற பரிகலமானது பிரம்மகபாலமாகவும் ஆக வியக்கப்பட்டவனே! இவ்வாறு லீலைகளைப் பொருந்தியிருக்கும் அரன் உமையாளொடும் நீங்காது உறையும் பதி திருவாலவாய் - என்றவாறு.

*பாடல் 7:*

*வெய்யவன் பல் உகுத்தது குட்டியே; வெங்கண் மாசுணம் கையது குட்டியே;*
*ஐயனே, அனல் ஆடிய மெய்யனே; அன்பினால் நினைவார்க்கு அருள் மெய்யனே;*
*வையம் உய்ய அன்று உண்டது காளமே; வள்ளல் கையது மேவு கங்காளமே;*
*ஐயம் ஏற்பது உரைப்பது வீண், ஐயே! ஆலவாய் அரன் கையது வீணையே.*

*பொழிப்புரை:* யாகத்தின்கண்ணது தேவர்களுக்கு முன்னாக அவிர்ப்பாகத்தைக் கொள்வான் கருதியிருந்த ஆதித்தியனைத் திருவுள்ளம்பற்றியருளி, "நமக்கு நிவேதியாமல் தேவர் தரும் அவிர்ப்பாகத்தை அசையிட்டு விழுங்க இருந்த பற்களைக் கொடுவா" என்னும் திருவுள்ளம்பற்றித் தீண்டற்கு அரிய சீஅத்தத்தாலே ஒரு குட்டுக் குட்டியருள, அந்நிலையே அவன்பற்கள் அனைத்தும் உதிர்ந்து விழுதலால், இது சிவநிவேதனம் பண்ணின பிரசாதப்படாதார்க்குப் பிராயச்சித்தமாக, இவ்வாறு செய்த கருணையாளனே! கீழ்ச் சொன்ன யாகத்திடத்துத் தேவர்கள் திருமேனிக்கு விரோதமாக வரவிட்ட, ஊழித்தீ எரிந்தாற் போலச் சொலியாநின்ற விழிகளை உடைய மகாநாகங்களைச் சீஅத்தங்கள் முதலியவாகிய அவயவங்கள்தோறும் தரித்தருளியும், இது ஒழிந்தும், ஆபிசாரமான கன்றை அவர்கள் விட்ட அளவில், விசுவத்தைச் சங்கரியாமல் அதனையும் தரியாநின்றவனே! என்னை ஆண்ட சுவாமியே! சங்கார காலத்து ஊழித்தீயைத் திருமேனியாக உடையவனே! உள்உருகி உன்னை நினைவார்க்குத் தோன்றாநின்ற சத்தியஞானமே! பூமி, அந்தரிக்ஷம், சொர்க்கம் ஆகிய மூன்றும் உய்வான்பொருட்டாக, தேவர்களுக்கு மட்டுப்படாமல் வந்த

ஆலகாலத்தை அமுதுசெய்த கருணையாளனே! இத்தன்மையான கிருபையாளன் ஆகின்ற உனது புயங்கள் இரண்டிலும் தரித்தது ஏது என்னில், பிரம்ம விஷ்ணுக் களது உயிர் போன உடலாகிய களேபரங்களே. நீ பிக்ஷாடனமே பண்ணிலும் நீ சொல்கின்றதெல்லாம் எங்கட்கு உறும்பாய் இராநின்றதே; இத்தன்மை பிக்ஷாடன லீலையைப் புரிகின்றவனுத் திருவாலவாயின்கண் இருக்கும் அரனது திருக்கரத்தில் தரியாநிற்பது வீணை என்று சொல்லப்பட்ட கருவி (ஆதலால், 'வேதத்து ஒலி கொண்டு வீணை கேட்பார்') - என்றவாறு.

பாடல் 8:

தோள்கள் பத்தொடுபத்தும் அயக்கியே, தொக்க தேவர் செருக்கை மயக்கியே,
வாள் அரக்கன் நிலத்துக் களித்துமே, வந்து அ மால்வரை கண்டு உகளித்துமே,
நீள் பொருப்பை எடுத்த உன்மத்தனே, நின்விரல் தலையால் மதம் மத்தனே,
ஆளும் ஆதி முறித்தது மெய்கொலோ; ஆலவாய் அரன் உய்த்ததும்
மெய்கொலோ.

பொழிப்புரை: இராவணன் வந்து கயிலாயத்தை எடுக்குமிடத்து எவ்வாறு செய்து எடுத்தான் என்னில், இருபது தோள் ஆக்கிய பாகுபெலங்களைக் கொண்டு தனது வீரியத்தாலே அசைத்துப் பார்த்துத் தனது சாமர்த்தியத்தை உட்கொண்டு, தேவர் களுடைய மேம்பாடுகள் எல்லாம் கெட ஒருங்கே பார்த்திட்டே இறுக வவ்வி, அவர்கள் மயங்கி விழும் தன்மையதாக மற்கொட்டிக் கொக்கரித்தும், இத்தன்மை செய்யாநின்ற இராவணனுனவன், தான் செலுத்திவரும் புட்பகத்தேரினின்றும் நிலத்தின்கண்ணே குதித்து, கயிலாயத்தைச் சூழ்ந்து வந்து வாரம் அளவாக வெடித்துச் சுற்றிவந்து, அக்கயிலாயத்தினின்று, பெருமையைப் பார்த்திருந்த மலையோ நம்முன் நிற்பது எனக் கம்பீரித்து, மிகுதிப்பட்ட திருமலையை வேருடன் அகழ்ந்து எடுத்துத் தனது கரத்து ஏந்தும் உன்மத்தத்தைப் பொருந்தி, "இவைஎல் லாம் சிவன் செயல்!" என்று உணராத மலபெத்தனை, அத்தன்மை தானே எடுப் பான் போன்று, அகங்காரத்தால் எடுத்த அவனது கர்வத்தைத் திருவிரல் நுனியாலே மதனம்செய்து, பின்பு அவனை அடிமைகொள்ளும் கருணையுடைய கர்த்தாஆனவன், கரம் முதலிய அவயவம் பொருந்திய அவனது உடலை வெவ் வேறுபட முறிக்கின்ற திறல் உடையான் ஆகுமே; அத்தன்மை கர்வத்தால் எடுத்து முறியுண்ட இராவணனுனவன், முன்கை நரம்பே வீணையாகச் சாமவேதத்தைப் பாட, அப்பாடலைக் கேட்டு உருகியருளி, அவன் உடலும் உயிரும் பெற்று உய்யும் படித் திருவுள்ளம்செய்தருளும் திருஆலவாய் உடையான் இவ்வாறு கருணை செய்து அவனுக்கு வாளும் நாளும் பிரசாதித்தது சத்தியம் ஆகும் - என்றவாறு.

பாடல் 9:

பங்கயத்து உள நான்முகன் மாலொடே, பாதம் நீள்முடி நேடிட மாலொடே,
துங்க நல்தழலின் உருஆயுமே, தூய பாடல் பயின்றது வாயுமே;
செங்கயல் கணினுர் இடு பிச்சையே, சென்று கொண்டு உரைசெய்வது
பிச்சையே;
அங்கியைத் திகழ்விப்பது இடக்கையே; ஆலவாய் அரனுரது இடக்கையே.

பொழிப்புரை: பத்மாஸனனுகிய பிரம்மாவும் விட்டுணுவும் இருவரும் கூடி, மயக்க மாகி மாறுபட்டுத் தம் சீபாதத்தையும் திருமுடியையும் தேடுமிடத்து, அவரது

தேட்டத்துக்கு எவ்வாறு தோன்றினுர் என்னில், தழற்பிழம்பே வடிவாகி அடிமுடியும் அளக்கப்படாமல் நின்ருர்; தூய பாடலாகிய நான்குவேதங்களையும் பொருந்த அருளிச்செய்து, அந்த வேதத்து உண்மையினைத் தெளிவு பெற ஆராய்ந்து உரையாநின்ருர்; சிவந்த கயல் போன்ற விழிகளை உடைய இருடிபத்தினிகள் கொண்டு வந்து இட்ட பிச்சையை, அவரது இடத்தினைச் சென்று வாங்கிக்கொண்டு அவர்களுக்கு அருளிச்செய்தது, அவர்களது பித்தாடல் கொள்ளப்பட்ட திருவார்த்தைகளே; தன்னை அடைந்தாரது மலத்தைத் தகனம் செய்யும் சிவாக்கினி (ஒளி) விட்டு விளங்க இடக்கரத்தில் ஏந்தி நின்று திருத்தியவர்; இத்தன்மையாகிய அரனுக்கு ஒழுக்கம் பொருந்திய இடம் ஏது என்னில், திருஆலவாய் என்னும் திருப்பதி என்றவாறு.

பாடல் 10:

தேரரோடு அமணர்க்கு நல்கான் ஐயே; தேவர் நாள்தொறும் சேர்வது கானையே?
கோரம் அட்டது புண்டரிகத்தையே; கொண்ட நீள் கழல் புண்டரிகத்தையே;
நேர் இல் ஊர்கள் அழித்தது நாகமே; நீள் சடைத் திகழ்கின்றது நாகமே;
ஆரம்ஆக உகந்ததும் என்புஅதே; ஆலவாய் அரனுர் இடம் என்பதே.

பொழிப்புரை: பரசமயிகள் ஆகிய பௌத்தருக்கும் அருகந்தர்க்கும், ஊழிக்காலத்திலும் அவருக்கு இரங்கிக் கிருபை பண்ணுதவனுமாய் எனக்குக் கர்த்தவாய் உள்ளவனே! இத்தன்மையாகிய மகாதேவன் இடைவிடாமல் வாழ இடமாகக் கொண்டது, பிரம்மவிட்டுணுக்கள் இறந்த புறங்காட்டையோ? எல்லைப்படாத உக்கிர வேகத்தைக் கெடுத்தது, இருடிகள் யாகத்தில் விட்ட வேங்கைப் புலியையே; எனது உச்சிப்பூவாக யான் கொண்டிருப்பது நினது வீரக்கழல் பொருந்திய மிகுதிப்பட்ட உன் சீபாதபங்கயங்களையே. ஒப்பற்று இருந்துள்ள முப்புரங்களைத் தகனம்செய்தது நினது அத்தத்தில் ஏந்தப்பட்ட வில்லே; நினது திருச்சடாபாரத்தில் ஒளிவிட்டு விளங்கத் தெரியாநின்றன மிகுதிப்பட்ட மாசுணங்களே. உனது திருமார்புக்கு ஆரமாகப் பூணப்பட்டது ஏதென்னில், மாண்ட பிரம்மவிட்டுணுக்களது எலும்புகளே; இத்தன்மையனுகிய அரனுக்கு உறைவிடம் ஆகிய பதி ஏது என்னில், திரு ஆலவாய் எனப்படும் - என்றவாறு.

பாடல் 11:

ஈன ஞானிகள்தம்மொடு விரகனே! ஏறு பல் பொருள் முத்தமிழ் விரகனே,
ஆன காழியுள் ஞானசம்பந்தனே, ஆலவாயினில் மேவு சம்பந்தனே,
ஆன வானவர் வாயினுள் அத்தனே! அன்பர்ஆனவர் வாயின் உளத்தனே!
நான் உரைத்தன செந்தமிழ்பத்துமே, வல்லவர்க்கு இவை நற்றுஅமிழ் பத்துமே.

பொழிப்புரை: சிவஞானிகள் அல்லாத மலபோதருடன் வேறுபாடாய் இருந்துள்ளவனே! மிகுதிப்பட்ட வித்தையை உடைய அர்த்தங்கள் பொருந்தி, இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என்னப்பட்ட மூன்று தமிழுக்கும் சாமர்த்தியவான் ஆகிக் காழியின்கண்ணே வந்து தோன்றிய ஞானசம்பந்தனுகிய நான், திருஆலவாயைப் பதியாகப் பொருந்தியுள்ள உன்னை, நிலைபெற்ற ஞானுகாசத்தை இடமாக உடையவர்களிடத்திலே உண்டாகிய பிரியாச் சுவாமியே! தன்னழிவு பெற்ற சிவ பக்தரது வாக்கிலும் இதயத்திலும் உள்ளவனே! என்று, கீழ்ச் சொல்லிப் போந்த நாமங்களைப் பொருந்தாநின்ற யான் புகன்ற செவ்விதாகிய அத்தமிழ் மாலை பத்தும் வல்லவர்களுக்குப் பிரசாதியாநிற்பது, முதல் நடு இறுதி காணுத பேரின்பத்திலே அமிழ்தலை உடைய, எல்லை காணுத பத்திக்கடலினையே - என்றவாறு.

திரு வீழிமிழலை பண்: பழம்பஞ்சுரம்

பாடல் 1:

துன்று கொன்றை நம் சடையதே; தூய கண்டம் நஞ்சு அடையதே;
கன்றின் மான் இடக்கையதே; கல்லின் மான் இடக்கை அதே;
என்றும் ஏறுவது இடவமே; என்னிடம் பலி இட வ(ம்)மே;
நின்றதும் மிழலைஉள்ளுமே; நீர் எனைச் சிறிது உள்ளுமே.

பொழிப்புரை: செறியாநின்றுள்ள திருக்கொன்றைமாலை நமது சடையின்கண்ணே வைத்தலால், ஈது ஒழிய உமக்கு வேறு பெறு மலர் இலதோ? அழகிய திரு மிடற்றிலே ஆலகாலத்தை நீங்காமல் வைத்தருளுவதே! துள்ளும் மடமான்கன்று இடன்கீழ் அத்தத்தின்கண்ணே இருப்பதே! இமவான்மகளான பரமேசுவரி உமது திருமேனியின்கண் ஒழியாமல் இருப்பது எவ்வாறு? கச துரக ரதங்கள் இருக்க, நீர் ஆரோகணித்து நிற்பது இடபவாகனமே; யான் இடுகின்ற பிச்சை கொள்வான் பொருட்டு என்னை அணைய வம்மே (- வாருமே). தேவரீர் நிலைநிற்க வாழும் பதியும் திருவீழிமிழலையின்கண்ணேயோ? இத்தன்மையாகிய தேவரீர் என்னையும் சிறிது திருவுள்ளம்பற்றியருளவேண்டும் - என்றவாறு.

பாடல் 2:

ஓதி வாயதும் மறைகளே; உரைப்பதும் பல மறைகளே;
பாதி கொண்டதும் மாதையே; பணிகின்றேன் மிகு மா தயே;
காது சேர் கனங்குழையரே, காதலார் கனம் குழையரே,
வீதிவாய் மிகும் வேதியா, மிழலை மேவிய வேதியா!

பொழிப்புரை: தேவரீர் திருவாக்கால் ஓதுவது நாலுவேதங்களே; மௌனவாசகம் அருளிச்செய்வதும் பெறுதி இல்லாத அத்துவிதமுத்தியினில் அனுபவமே. திருமேனியின்கண் ஒருபால் வைத்ததும் அழகிய பரமேசுவரியையே; தேவரீரது காருண்யத்தை மிகவும் வியந்து நமக்கரியாநின்றேன். விழிவேல் வந்து பொருகின்ற காதின்கண்ணே மகரக்குழை பொருந்திய பெருங்காதினை உடைய மாதரது சொம்மாகிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு ஒழிவான்பொருட்டு, அந்தப் பத்தினிகள் வாழ்கின்ற ஆச்சிரமத்தினது மறுகின்கண்ணே எழுந்தருளி, அவர்கள் உள்ளங்களைப் பேதித்து, அவரது இடந்தொறும் உலாவி வரும் தன்னலம் உடையானே! மிழலையில் விரும்பித் தங்கிய வேதியா! - என்றவாறு.

பாடல் 3:

பாடுகின்றன பண் தாரமே; பத்தர் அன்ன பண்டாரமே;
சூடுகின்றது மத்தமே; தொழுத என்னை உன்மத்தமே
நீடுசெய்வதும் தக்கதே; நின் அரைத் திகழ்ந்த அக்குஅதே;
நாடு சேர் மிழலை ஊருமே; நாகம் நஞ்சுஅழலை ஊருமே.

பொழிப்புரை: நீ சர்வசங்காரகாலத்தில் உனது சீஅத்தத்தின்கண்ணே நாதத்தை எழுப்பும் பிரணவத்தை வீணையாக்கிப் பாடுகின்ற பண் ஏதோ என்னில், தாரம் என்னும் இசை ஈறுகிய எழுவகை இசையுமே; உனது திருவடியின்கண்ணே அழிபத்தர்க்கு மூலபண்டாரமாய் உள்ளவனே! நீ திருச்சடாபாரத்தில் தரியாநிற்பது மத்தம் ஆகிய மலரே; உம்மை எதிர்வந்து பணிகின்ற என்னை மிகவும் பிராந்தன் ஆக்காநின்றது, தேவரீர் பெருமைக்குத் தகுதியாய் இருக்குமே? உனது திருஅரை

யில் ஒளிவிட்டு விளங்க அணியாநிற்பது அக்குமாலைகளே. உமக்கு உறைவிடமாக உவந்ததும் அழகிய சோணாட்டுக்குத் திலதமாகிய திருவீழிமிழலை என்னும் சிறந்த ஊரே உமது ஊர்; நச்சுஅழலைக் காலாநின்ற சர்ப்பங்களானவை உமது திருமேனி யில் ஊராநின்றது என்ன வியப்போ! - என்றவாறு.

பாடல் 4:

கட்டுகின்ற கழல் நாகமே; காய்ந்ததும் மதன் ஆகமே;
இட்டம்ஆவது இசை பாடலே; இசைந்த நூலின் அமர்பு ஆடலே;
கொட்டுவான் முழவம் வாணனே; குலாய சீர் மிழலை வாணனே;
நட்டம் ஆடுவது சந்தியே; நான் உய்தற்கு இரவு சந்தியே.

பொழிப்புரை: தேவரீர் சீபாதத்தில் திருவீரக்கழலாகச் சார்த்தியது சர்ப்பம் என்று சொல்லப்படும்; உனது நுதல்விழியால் எரிக்கப்பட்டதும் காமனது வடிவமே. தேவரீருக்குத் திருவுள்ளமாய் இருப்பதும், பரநாதமாய் இருந்து யாரும் பயின்று அறியாத பாட்டே; பரதநூல்களால் சொல்லுதற்கு அரிதாய், எவ்விடத்தும் பூரண மாய் இருக்கும் ஆனந்தநிருத்தம் ஆகிய அரங்கிடை நூல்அறிவாளரால் அறியப் படாத ஓர் கூத்தே. உனது ஆனந்தநிருத்தத்தின் அறுதியும், சதியும், தாளகதியும் ஒருதன்மையிலே நிகழ, உனது எடுத்த பாதத்தின் ஒழியாத வீசுதலை உனது அரு ளாலே பெற்று ஆயிரமுகத்தவாகிய குடமுழவம் கொட்டுவான், வாணாசுரன் என் னும் பெயரை உடைய தானவனே; விளங்காநின்ற அழகினை உடைய திருவீழி மிழலை என்னும் பதியிலே வாழாநின்றவனே! கீழ்ச் சொன்ன சிவானந்தநிருத்தத் தைப் பண்ணும் இடம் ஏது என்னில், சந்தி, பொது, மன்று என்னும் பெயர்களை உடைய சிதம்பரமே; அடியேன் உன்னைப் பெற்று உய்வான்பொருட்டு, ஆணவம் என்கிற அந்தகாரம் கிழிய என் அறிவிலே வந்து தோன்றுவாயாக. - என்றவாறு.

பாடல் 5:

ஓவிலாது இடும் கரணமே, உன்னும் என்னுடைக் கரணமே,
ஏவு சேர்வு நின் ஆணையே; அருளில், நின்ன பொற்று ஆணையே;
பாவியாது உரைமெய்இலே, பயின்ற நின்நடி! மெய்யிலே
மேவினான் விறல் கண்ணனே; மிழலை மேய முக்கண்ணனே!

பொழிப்புரை: எனது அறிவாகிய அம்பலத்தின்கண்ணே, நீ ஒழிவில்லாமல் ஆடு கின்ற அனவரத தாண்டவத்தையே இரண்டு அற்ற அத்துவிதபாவனையாலே அறிந்து அனுபவியாநிற்கும் உள்வடிவாகப் பெற்ற எனது அறிவு, எவ்வாறு உணரும் என்னிலே, எய்வான் வைத்ததொரு இலக்கினை... உனது நிருத்தம் பண்ணா- நின்ற திருவடியிலே எனது போதம் அறியாநிற்கும் நினது ஆணையே; இத்தன்மை கீழ்ச்சொல்லிப் போந்த நிருத்தானந்தத்தை எனக்கு நீ அருளிச்செய்யில், உனது பொன் போன்ற திருவடியின்கண்ணே என்னை ஒழித்தருளி எனது போதத்தால் பாடாத பாட்டினைச் சத்தியமாகப் பொருந்தத் தருவாயுள்ள நடத்தை உடை யானே! இத்தன்மையான உனது திருமேனியிலே பொருந்தாநின்றான் வெற்றி பொருந்திய விக்கிரமத்தை உடைய கிருட்டிணனே; திருவீழிமிழலையைத் திருப் படைவீடாகப் பொருந்த எழுந்தருளியிராநின்ற திரியம்பகனே! - என்றவாறு.

பாடல் 6:

வாய்ந்த மேனி எரிவண்ணமே; மகிழ்ந்து பாடுவது வண்ணமே;
காய்ந்து வீழ்ந்தவன் காலனே; கடுநடனம் செயும் காலனே!
போந்தது எம்மிடை இரவிலே; உம்மிடைக் கள்வம் இரவிலே;
ஏய்ந்ததும் மிழலை என்பதே; விரும்பியே அணிவது என்புஅதே.

பொழிப்புரை: நினது காருண்யத்தால் கொண்டருளிய திருமேனியானது அக்னி யிலும் சிவந்த தன்மையாய் இருந்தது; தேவர் திருவுள்ளம் மகிழ்ந்து பாடாநிற்பது, உள்ளே புங்கம் பண்ணப்பட்ட மதுரம் பொருந்திய இசையே. தேவரீர் மார்க் கண்டர் காரணமாகக் காலனை உதைத்தருள, அந்தக் காலன், நீலமலை போல வீழா நின்றனனே. சங்காரதாண்டவம் செய்தருளும் சீபாதத்தை உடையவனே! எங்க ளிடத்து நீ பிச்சைக்கு வந்தது உனது பெருமைக்குப் பொருந்தாததே; உமது பக்கல் உண்டாகிய ஆத்மகாமமானது மலஇருளைத் துரந்தன்றே. உமக்கு விரும்பியதும் திருவீழிமிழலை என்னும் திருப்பதியே; நீர் ஆதரித்த ஆபரணங்களாக அணிவது சங்கார காலத்தில் அழிந்த பிரம்மவிட்டுணுக்கள் எலும்புகளே - என்றவாறு.

பாடல் 7:

அப்பு இயன்ற கண் அயனுமே, அமரர்கோமகனும் மயனுமே,
ஒப்புஇல் இன்று அமரர் தருவதே, ஒண்கையால் அமரர் தருஅதே,
மெய்ப் பயின்றவர் இருக்கையே, மிழலை ஊர் உமது இருக்கையே;
செப்புமின்; எருது மேயுமே, சேர்வு உமக்கு எருதும் ஏயுமே.

பொழிப்புரை: சமுத்திரத்தின்கண்ணே துயில் பொருந்திய விட்டுணுவும், பிரம்மா வும், தேவர்களுக்கெல்லாம் தலைவனாகிய தேவேந்திரனும், மயன் என்று சொல்லப் பட்ட விசுவகன்மனும், ஒப்பில்லாத் தேவகணங்களுமாகக் கூடிப் பூலோகத்தில் இழிசப்பட்ட திவ்விய விமானத்தை, உயர்ந்த கொடையால் தேவர்களது கற்பக விருக்கத்தை ஒத்த கொடையராய், அச்சத்திய தரிசனமான் இருக்குப் போன்ற வேதத்தை ஓதினருமாய் இருக்கும் அந்தணர் வாழும் திருவீழிமிழலையின்கண்ணே, கீழ்ச் சொல்லிப்போந்த விமானத்தைத் தேவர் அனைவரும் இழிச்சியிருத்தலால், அந்த விமானம் பொருந்திய பதியே நீர் எழுந்தருளியிருக்கும் ஊர்; தேவரீர் எமக் குச் சொல்லுவீர் ஆகவேணும்: உமக்கு இந்நகர் ஒழிய உமது பதி வேறும் உளதோ? இத்தன்மையான தலைமைப்பாட்டைப் பொருந்திய, தேவர்களுக்குத் தேவனாக உள்ள நீர் யானை, குதிரை, தேர் ஏறாமல் இவ்எருத்தை ஏறிப் போதாநின்றதால் இஃது உமக்குப் பொருந்தாநின்றது - என்றவாறு.

பாடல் 8:

தானவக்குலம் விளக்கியே, தாரகைச் செலவு இளக்கியே,
வான் அடர்த்த கயிலாயமே, வந்து மேவு (ை)கயில்ஆயமே,
தான் எடுத்த வல் அரக்கனே, தடமுடித்திரள் அரக்கனே!
மேல் நடம் செல இருப்பனே! மிழலை நன் பதி விருப்பனே!

பொழிப்புரை: இராக்கதரது மரபெல்லாம் பிரகாசிக்க வந்த இராவணன், நக்கத் திரங்களது சதாகதியை ஒழித்து உள்ளதுமாய், மேக ஒழுங்கிடை ஊடு செல்லாமல் மிகவும் வளர்ந்த ஸ்ரீகயிலாயத்தை, புட்பகத்தேரைக் கடாவிக்கொடு வந்து, தனக்குப் பொருந்திய கைகளாகிய இருபது கைத்தோளாலும், சாரதி தடையில் நில்லாமல், தானே வந்து வேருடன் பிடுங்கி எடுத்த மகாபலத்தை உடைய இராவ ணனது பெரிய முடிகளாகிய பத்தினையும் நினது சீபாதத்தினது விரல்தலையாலே அமுக்காநின்றவனே! திருவீழிமிழலை என்ற நன்றாகிய பதியை இடமாக விரும்பி உள்ளானே! தன்னைக் கீழிட்டு மேலிட்ட என் மலபோதத்துக்கு விடைகொடுத் தருளி, எனது உருவே இருப்பிடமாக நீங்காமல் வர்த்திக்கப்பட்டவனே! - என்றவாறு.

பாடல் 9:

காயம் மிக்கது ஒரு பன்றியே, கலந்த நின் உருபு அன்றியே,
ஏய இப்புவி மயங்கவே, இருவர்தாம் மனம் அயங்கவே,
தூய மெய்த்திரள் அகண்டனே! தோன்றி நின்ற மணிகண்டனே!
மேய இத்துயில் விலக்கு, அணு! மிழலை மேவிய இலக்கணு!

பொழிப்புரை: மிகுந்த வடிவை உடைய ஒப்பில்லாத பன்றிவடிவாயும், பொருந்தி நிண்ணயமாய் இருக்கும் பிரம்மாவானவன் வடிவை ஒழித்து அன்னமாகிய வடிவாயும், (விட்டுணுவும் பிரம்மாவும் எவ்வாறு சிவனைத் தேடினர் என்னில்,) பொருந்தாநின்ற பூமியிலும் விண்ணிலும் சிவனைத் தேடாநின்றுகொண்டு மயங்கி, இத்தன்மை தேடுகின்ற இருவரது சித்தம் தடுமாற, சுத்தமாகிய தழல்தம்பமாகத் திரண்டு அடிமுடியும் கண்டிக்கப்படாமல் நிற்பவனே! கீழ்ச் சொல்லிப்போந்த அவ்விருவர்களும் திருவடிக்கும் திருமுடிக்கும் எல்லை காணுமல் அலறி விழுந்து, பஞ்சாக்கரத்தை உரைக்கும் அகங்காரம் போன எல்லையில், அவர்களுக்குத் தழற் பிழம்பான தம்பத்தினின்று பிரத்தியக்ஷம் ஆகாநின்றவனும் ஆகிய மணி போன்ற ஆலகாலம் பொருந்திய கண்டத்தை உடையவனே! அடியோங்களிடத்து அநாதி யிலே பொருந்தி விடியாத் துயிலாகிய மாயமோக நித்திரையை ஒழித்து அருளு வது எக்காலம்? எமக்குச் சுவாமியாய் உள்ளவனே! திருவீழிமிழலை என்னும் பதி யில், என்போல்வாரை இரட்சித்தல்பொருட்டாகப் பொருந்தி, என் சென்மத்தை ஒழிக்கின்றதே இலக்கமாக உடையவனே! - என்றவாறு.

பாடல் 10:

கஞ்சியைக் குலவு கையரே, கலக்கம் ஆர் அமணர் கையரே,
அஞ்ச வாதில் அருள்செய்ய நீ, அணைந்திடும் பரிசு செய்ய நீ;
வஞ்சனே வரவும் வல்லையே; மதித்து எனைச் சிறிதும் வல்லையே;
வெஞ்சல் இன்றி வரு இவ் தகா; மிழலை சேரும் விறல் வித்தகா!

பொழிப்புரை : மனம் திரியாக் கஞ்சியை அருந்தல் உடையருமாய்க் கூரிதாகச் சத்திக்கப்பட்ட தர்க்கத்தையே குலாவும் ஒழுக்கத்தினை உடைய பௌத்தரும், ஒரு காலத்திலும் கலக்கம் தெளியாத சமணராகிய தூர்த்தரும், வாது செய்கின்ற சமணர்கள் அஞ்சித் தோற்கும்படி கிருபைபண்ணி, எனது அறிவில் இரண்டறப் பொருந்தி நின்று, அவ்வவர்களது வாது அழியும்படி பரசமய நிராகரணத்தைப் பண்ணி உள்ளவனே! பவளம் போன்ற திருமேனியை உடைய நீ எனது போதத் தில் தோன்றுமல் நின்று வஞ்சகம் பண்ணுமல், பாவம் அற, என் அறிவிலே விரைய எழுந்தருளி வருவாயாக; அடியேனைச் சிறிதாகிலும் கடாக்ஷித்துத் திருவுள்ளம்பற்ற வல்ல நீ இவ்வாறு என்னைச் சென்மத்திலே தள்ளுவதே? சர்வ ஆத் மாக்களுடனும் விரோதம் இன்றி, அவரவரது உள்ளந்தோறும் இடைவிடாமல் நிற்கின்ற நீ, என் உள்ளத்திலே வந்து தோன்றி என்னை இரட்சியாதிருக்கின்ற மரபா னது உனக்கு எக்கண்ணும் தக்கிராது; திருவீழிமிழலையை மேவி உள்ளவனுகிய நின்னை அடைந்தாரது அநாதி மலங்களைச் சங்காரம் பண்ணும் வெற்றியை உடைய சாமர்த்தியவானே! - என்றவாறு.

பாடல் 11:

மேய செஞ்சடையின் அப்பனே! மிழலை மேவிய என் அப்பனே!
ஏயுமா செய இருப்பனே! இசைந்தவா செய விருப்பனே;
காயவர்க்கு அசம்பந்தனே, காழி ஞானசம்பந்தனே,
வாய் உரைத்த தமிழ்பத்துமே வல்லவர்க்கும் இவை பத்துமே.

பொழிப்புரை: திருச்சடையிலே வாழும் கங்காபரமேசுவரியை உடையவனே! திருவீழிமிழலை என்னும் திருப்பதியை உனக்கு உறைவிடமாகப் பொருந்திய என்னுடைய சுவாமியே! தான் உணர்த்தும் தன்மையிலே நின்றேனது உள்ளத்திலே தான் பாடுவிக்கும் பாடலால் யான் பாடக் கேட்டிருந்தவனே! தனக்குப் பொருந்திய சங்காரநிருத்தியமாகிய செயப்பாட்டை இடைவிடாமல் விரும்பி உள்ளவனே! சிவசமயத்துடனே மாறுகொண்டு காயப்பட்ட பரசமயங்களுக்கு மாறுபாடாய் அவர்களுடன் பொருத்தம் அற்ற விராகத்தை உடையவனுமாய் இராநின்றுள்ள காழி ஞானசம்பந்தனாகிய யான், சத்தியமாக உரைத்த இப்பாடல் பத்தினையும் தரியாநின்ற செய்தியை உடையார்க்குப் பாடலை ஓதும் தெய்வபக்தியும் ஞானமும் வைராக்கியமும் கிட்டும் - என்றவாறு.

## திருவியமகம் இன்றைய உரை

*திருப் பிரமபுரம்* *பழம்பஞ்சுரம்*

பாடல் 1:

உற்று உமை சேர்வது மெய்யினையே; உணர்வதும் நின் அருள் மெய்யினையே;
கற்றவர் காய்வது காமனையே; கனல்விழி காய்வது காமனையே;
அற்றம் மறைப்பது முன் பணியே; அமரர்கள் செய்வதும் உன் பணியே;
பெற்று முகந்தது கந்தனையே; பிரமபுரத்தை உகந்தனையே.

(பதவுரை) உமை - உமாதேவி; உற்று - பிரியாது பொருந்தி; சேர்வது - இருப்பது; மெய்யினையே - சிவபெருமானாகிய உன்னுடைய திருவுடம்பினையாகும்; உணர்வதும் - சிவஞானிகள் அறிவதும்; நின் அருள் மெய்யினையே - உன்னுடைய உண்மையான அருளையேயாகும்; கற்றவர் - ஞானநூல்களைக் கற்ற துறவியர்; காய்வது - வெறுத்து ஒதுக்குவது; காமனையே - மண், பொன், பெண் பற்றிய விருப்பமே யாகும்; கனல் விழி - தீக்கண்ணாகிய நெற்றிக்கண்; காய்வது - எரித்தது; காமனையே - மன்மதனையே ஆகும்; முன் - முன்பக்கத்தில் படம்விரித்துக் கோவணமாகத் தங்கி; அற்றம் மறைப்பது - உன் மானத்தைக் காப்பது; பணியே - பாம்பேயாகும்; அமரர்கள் செய்வதும் - தேவர்களால் செய்யப்படுவதும்; உன் பணியே - உன்னுடைய பணிவிடைகளேயாம்; பெற்று - மகனைப் பெற்று; முகந்தது - தூக்கிச் சுமந்தது; கந்தனையே - முருகப்பெருமானுடைய திருவடிவேயாம்; பிரமபுரத்தை - சீகாழியை; உகந்தனையே - வீற்றிருக்கும் இடமாக மகிழ்ந்து கொண்டுள்ளாய்.

பாடல் 2:

சதிமிக வந்த சலந்தரனே தடிசிரம் நேர்கொள் சலம் தரனே;
அதிர் ஒளி சேர் திகிரிப்படையால், அமர்ந்தனர் உம்பர் துதிப்பு அடையால்;
மதி தவழ் வெற்புஅது கைச்சிலையே; மரு(வு)விடம் ஏற்பது கைச்சிலையே;
விதியினில் இட்டு அவிரும் பரனே! வேணுபுரத்தை விரும்பு அரனே!

(பதவுரை) சதி மிக வந்த - வஞ்சனை மிகுமாறு வந்துசேர்ந்த; சலந்தரனே - சலந்தரன் என்ற அசுரனின்; சிரம் தடி - தலையை வெட்டுதலுக்கு; நேர்கொள் - முறையாகக் கொண்ட; சலம் தரனே - வஞ்சனையைக் கொண்டவனே! (வஞ்சனையாவது: காலால் சக்கரம் போல் கோடு கிழித்து அதனை எடுக்கச் சொல்லியது.) அதிர் -

கண்டார் நடுங்கத்தக்க; ஒளி சேர் - பிரகாசம் பொருந்திய; திகிரிப்படையால் - (சலந்தரனைக் கொன்ற) சக்கராயுதத்தினால்; துதிப்பு அடையால் - உன்னைத் துதித்தல் பொருந்திய காரணத்தால்; உம்பர் - தேவர்கள்; அமர்ந்தனர் - மனம் மகிழ்ச்சியுற்றனர்; மதி தவழ் வெற்புஅது - சந்திரமண்டலத்தை அளாவிய மேருமலை; கைச்சிலையே - கையில் ஏந்திய வில்லாகும்; மரு(வு)விடம் ஏற்பது - பொருந்திய விடத்தை உணவாக ஏற்பதனை; கைச்சிலையே - கசந்து வெறுத்தாயல்லை; விதியினில் இட்டு - தான் விதித்த முறையிலே உலகை நடைபெறச் செய்து; அவிரும் பரனே - விளங்குகின்ற தெய்வமே! வேணுபுரத்தை - சீகாழிப்பதியை; விரும்பும் அரனே - இருப்பிடமாக விரும்பும் சிவபெருமானே!

பாட்டு 3:

காது அமரத் திகழ் தோடினனே; கானவனாய்க் கடிது ஓடினனே;
பாதம்அதால் கூற்று உதைத்தனனே; பார்த்தன் உடல் அம்பு தைத்தனனே;
தாது அவிழ் கொன்றை தரித்தனனே; சார்ந்த வினைஅது அரித்தனனே;
போதம் அமரும் உரைப்பொருளே, புகலி அமர்ந்த பரம்பொருளே.

(பதவுரை) போதம் அமரும் - சிவஞானக்கருத்து அடங்கிய; உரைப் பொருளே - உபதேசமொழியின் பொருளாய் உள்ளவன் ஆகிய; புகலி அமர்ந்த - சீகாழியிலே விரும்பித் தங்கியிருக்கும்; பரம்பொருளே - மேலான பொருளாகிய சிவபெருமான்; காது... தோடினனே - காதுகளுக்குப் பொருத்தமாக விளங்கும் தோடு என்ற காதணியை உடையவன்; கானவனாய் - வேடன் வடிவம் எடுத்து; கடிது ஓடினனே - விரைந்து அருச்சுனனை நோக்கி ஓடினான்; பாதம்அதால் - தன் இடக்காலினால்; கூற்று உதைத்தனனே - யமனை உதைத்தான்; பார்த்தன் உடல் - அருச்சுனனுடைய உடலில்; அம்பு தைத்தனனே - அம்புகள் ஊடுருவிப் பாயுமாறு செலுத்தினான்; தாது அவிழ் - மகரந்தத்தோடு மலர்கின்ற; கொன்றை தரித்தனனே - கொன்றைப் பூவை அணிந்துள்ளான்; சார்ந்த வினைஅது - தன் அடியார்களைப் பொருந்திய இருவினையை; அரித்தனனே - போக்கி அருளியவன் ஆவான்.

பாடல் 4:

மைத்திகழ் நஞ்சு உமிழ் மாசுணமே, மகிழ்ந்து அரை சேர்வது; மா சுணமே
மெய்த்து உடல் பூசுவர்; மேல் மதியே; வேதம்அது ஓதுவர், மேல்மதியே;
பொய்த்தலையொடு உறும், அத்தம்அதே; புரிசடை வைத்தது மத்தம்அதே;
வித்தகர் ஆகிய எம் குருவே விரும்பி அமர்ந்தனர் வெங்குருவே.

(பதவுரை) மைத் திகழ் நஞ்சு - கருமை பொருந்திய விடத்தை; உமிழ் மாசுணமே - கக்கும் பாம்பே; மகிழ்ந்து அரை சேர்வது - இடுப்பில் மகிழ்ச்சியோடு அரைஞாணாகவும் கோவணமாகவும் அணியப்படுவதாகும்; மா சு(ண்)ணமே - சிறந்த திருநீற்றையே; மெய்த்து - உடலில் பூசப்படும் சந்தனமாகக் கொண்டு; உடல் பூசுவர் - உடம்பில் பூசிக்கொள்வர்; மேல் மதியே - சடைமேல் சூட்டப்பட்டிருப்பதும் மதியமே; மேல் மதியே - மேலான கருத்துக்களை வெளியிடும்; வேதம்அது ஓதுவர் - வேதத்தை எப்பொழுதும் ஓதிக்கொண்டிருப்பார்; பொய்த்தலையோடு - உயிரற்ற தலையின் மண்டையோடு; அத்தம்அதே உறும் - கையிலே பொருந்தியிருக்கும்; புரிசடை வைத்தது - முறுக்குண்ட சடைமுடியில் சுற்றப்படுவது; மத்தம்அதே - ஊமத்தம்பூவே ஆகும்; வித்தகர் ஆகிய - சதுரப்பாடுடையவர் ஆகிய; எம் குருவே - எம் குருநாதராகிய சிவபெருமான்; வெங்குருவே - சீகாழிப்பதியையே; விரும்பி அமர்ந்தனர் - இருப்பிடமாக விரும்பித் தங்கியுள்ளார்.

பாடல் 5:

உடன் பயில்கின்றனன் மாதவனே, உறுபொறி காய்ந்து இசை மா தவனே;
திடம்பட மாமறை கண்டனனே; திரிகுணம் மேவிய கண்டனனே;
படம் கொள் அரவு அரைசெய்தனனே; பகடு உரிகொண்டு அரை செய்தனனே;
தொடர்ந்த துயர்க்கு ஒரு நஞ்சு இவனே, தோணிபுரத்து உறை நம் சிவனே.

(பதவுரை) உறு - தம் வழியில் செல்லுகின்ற; பொறி - இந்திரியங்களை; காய்ந்து - கோபித்து; இசை - அறிவு குறிப்பிடும் வழி செலுத்தும்; மா தவனே - மிக்க தவத்தை உடையவன் சிவபெருமான் ஆதலின்; மாதவன் - திருமால்; உடன் பயில் கின்றனன் - சிவபெருமானுடன் கூடவே இருக்கின்றான்; திடம்பட - (அச்சிவ பெருமான்) உறுதிப்பாடு அமைய; மாமறை - சிறந்த வேதங்களை; கண்டனன் - செய்தருளியுள்ளான்; திரிகுணம் மேவிய - முக்குண வயப்பட்டுச் செய்தனவாகிய புறச்சமயக் கொள்கைகளை; கண்டனனே - கண்டனம் செய்பவன்; படம் கொள் அரவு - படம் எடுக்கும் பாம்பினை; அரைசெய்தனனே - அரையில் அணிந்தவன்; பகடு - (தன்னை எதிர்க்க வந்த) யானையை; உரிகொண்டு - தோலை உரித்தலைச் செய்து; அரை செய்தனனே - அழித்தலைச் செய்தவன்; தோணி... சிவனே - சீகாழி யில் வீற்றிருக்கும் நம் சிவபெருமான் ஆகிய; இவனே - இப்பெருமானே; தொடர்ந்த துயர்க்கு ஒரு நஞ்சு - நம்மைத் தொடர்ந்து வரும் துன்பங்களுக்குப் பரிகாரமாவான்.

பாடல் 6:

திகழ் கையதுவும் தங்கு அழலே; தேவர் தொழுவதும் தம் கழலே;
இகழ்பவர்தாம் ஒரு மான் இடமே; இருந் தனுவோடு எழில் மானிடமே;
மிக வரும் நீர் கொளும் மஞ்சு அடையே, மின் நிகர்கின்றதும் அம் சடையே;
தக இரதம் கொள் வசுந்தரரே, தக்க தராய் உறை சுந்தரரே.

(பதவுரை) திகழ் கையதுவும் - விளங்குகின்ற கையிலுள்ளதும்; தங்கு அழலே - அதன்கண் தங்கியிருக்கும் நெருப்பேயாம்; தேவர் தொழுவதும் - தேவர்களால் வணங்கப்படுவதும்; தம் கழலே - சிவபெருமானுடைய திருவடியே ஆகும்; இகழ் பவர் - சிவபெருமானை அலட்சியம் செய்தவராகிய; தாம் - தாருகாவனத்து முனிவர் ஏவிய; ஒரு மான் - ஒரு மான் மறி; இடமே - சிவபெருமானுடைய இடக் கரத்தில் உள்ளது; இருந் தனுவோடு - பக்குவ ஆன்மாக்களுக்கு உபதேசிக்கும் முனிவர் (ஏவிய); ஒரு மான் - ஒரு மான்மறி; இடமே - சிவபெருமானுடைய இடக் கரத்தில் உள்ளது; இருந் தனுவோடு - பக்குவஆன்மாக்களுக்கு உபதேசிக்கும் பொ ருட்டுச் சிறந்த உடம்போடு; எழில் மானிடமே - அழகிய மனிதவடிவில் வருபவன்; மிக வரும் நீர் கொளும் - மிகுதியான தண்ணீரைத் தன்னுட் கொண்ட; மஞ்சு அடை - கார்மேகங்கள் தன்னிடத்துத் தங்குதலை உடைய; அம் சடை - அழகிய சடைமுடி; மின் நிகர்கின்றது - மின்னலை ஒத்துப் பிரகாசமானது; தக - ஏற்ற வகை யில்; இரதம் கொள் - தேராகக் கொண்ட; வசுந்தரர் - இவ்வுலகத்தை உடையவர்; தக்க தராய் உறை - மேம்பட்ட சீகாழியில் வீற்றிருக்கும்; சுந்தரரே - அழகியராகிய சிவபெருமான் ஆவர்.

பாடல் 7:

ஓர்வு அரு கண்கள் இணைக்க(அ)யலே; உமையவள் கண்கள் இணைக்கயலே;
ஏர் மருவும் கழல், நாகம்அதே; எழில் கொள் உதாசனன் ஆகம்அதே;
நீர் வரு கொந்து அளகம் கையதே, நெடுஞ்சடை மேவிய கங்கையதே;
சேர்வுஅரு யோக தியம்பகனே, சிரபுரம் மேய தி அம்பு அகனே.

*(பதவுரை)* ஓர்வு அரு கண்கள் - அடியார்களை இறைவனாகவே காணாத கண்கள்; இணக்க - அடியார்களோடு பொருந்துவதற்கு; அயலே - புறம்பானவைகளாம்; உமையவள் கண்கள் - பார்வதிதேவியின் கண்கள்; இணைக்கயலே - இரண்டு கயல் மீன்கள் போன்றவை; நாகம்அதே - பாம்பே; ஏர் மருவும் கழல் - அழகு பொருந்திய வீரக்கழல் ஆகும்; ஆகம்அதே - சிவபெருமானுடைய உடம்பானது; எழில் கொள் - அழகு பொருந்திய; உதாசனன் - நெருப்புப் போன்ற செந்நிறத்ததாகும்; நெடுஞ்சடை மேவிய - நீண்ட சடையில் தங்கியிருக்கும்; கங்கையதே - கங்காதேவியின்; நீர்வரு - தண்ணீர் மயமான; கொந்து அளகம் - கொத்தான கூந்தல்; கையதே - ஒழுங்காய் உள்ளது; சேர்வுஅரு - கிட்டுவதற்கு அரிய; யோகம் - யோகநிலையை(க் காட்டிய); தியம்பகனே - மூன்று கண்களை உடைய சிவபெருமான்; சிரபுரம் மேய - சீகாழிப்பதியில் தங்கியிருக்கும்; தி(தீ)அம்பு அகனே - நெருப்பாகிய அம்பினைத் தன் கையிடத்தே கொண்டவன்.

*பாடல் 8:*

*ஈண்டு துயில் அமர் அப்பினனே, இருங்கண் இடந்து அடி அப்பினனே;*
*தீண்டல் அரும் பரிசு அக் கரமே திகழ்ந்து ஒளி சேர்வது சக்கரமே;*
*வேண்டி வருந்த, நகைத் தலையே மிகைத்து அவரோடு நகைத்தலையே,*
*பூண்டனர்; சேரலும் மா பதியே, புறவம் அமர்ந்த உமாபதியே.*

*(பதவுரை)* ஈண்டு துயில் - நெருங்கின உறக்கத்தை; அமர் அப்பினன் - திரவ வடிவான திருப்பாற்கடலில் விரும்பிய திருமால்; இருங் கண் - தன் பெரிய கண்ணை; இடந்து - பெயர்த்து; அடி அப்பினன் - சிவபெருமானுடைய திருவடிகளில் மலராகச் சூட்டினான்; தீண்டல் அரும் பரிசு - கிட்டுவதற்கு அரிய தன்மையுடன்; அக்கரம் - கண்ணைப் பெயர்த்து அப்பிய அந்தக் கையினில்; திகழ்ந்து ஒளி சேர்வது - விளங்கி ஒளியோடு கூடியிருப்பது; சக்கரமே - சக்கராயுதமாகும்; வேண்டி - தாருகவனத்து முனிவர் விரும்பி; வருந்த - வேள்வி செய்து சிரமப்பட (அதனின்றும் தோன்றிய); நகைத் தலை - சிரித்தலை உடைய தலையானது; அவரோடு - அம்முனிவரோடு; மிகைத்து - மிகவும் பகைமை கொண்டு; நகைத்தலையே - அவர்களையே நோக்கிப் பரிகசித்துச் சிரித்தலை (உடையதாகவே); பூண்டனர் - சிவபெருமான் அதனைத் தம் தலைக்கண் அணிந்துள்ளார்; புறவம் அமர்ந்த - சீகாழியில் வீற்றிருக்கும்; உமாபதியே - பார்வதியின் பதியாகிய சிவபெருமான்; சேரலும் - சென்று சேர்வதும்; மா - எவற்றினும் சிறந்த; பதியே - அடியார்களின் உள்ளமாகிய இடமாகும்.

*பாடல் 9:*

*நின் மணி வாயது நீழலையே நேசம்அது ஆனவர் நீழலையே;*
*உன்னி மனத்து எழு சங்கம்அதே, ஒளிஅதனோடு உறு சங்கம்அதே;*
*கன்னியரைக் கவரும் களனே, கடல்விடம் உண்ட கருங்களனே,*
*மன்னி வரைப் பதி சண்பு ஐயதே வாரி வயல் மலி சண்பைஅதே.*

*(பதவுரை)* நின் மணி வாயது - உனது ஆராய்ச்சிமணி கட்டிய கோயிலின் திருவாயிலினுடைய; நீழலையே - நிழலையே; நேசம்அது ஆனவர் - விருப்பமாகக் கொண்ட அடியார்களுக்கு; நீழலையே - பிறவிவெப்பத்தைப் போக்கும் நிழலாக உள்ளாய்; உன்னி மனத்து - மனத்தில் உன்னை நினைத்து; எழு சங்கம்அதே - எழுகின்ற அடியார்கூட்டமே; ஒளிஅதனோடு உறு - சைவஒளியோடு பொருந்திய; சங்கம் அதே - தொகுதியாகும்; கன்னியரைக் கவரும் - தாருகவனத்து இருடிமனை

வியர் நிறையைக் கைப்பற்றும்; க(ள்)ளனே - கள்வனும்; கடல்விடம் உண்ட - பாற்கடலில் தோன்றிய விடத்தை உண்டதனுல்; கருங்களனே - கறுத்த கழுத்தை உடையவனுமாகிய சிவபெருமானே; மன்னி - மனம் பொருந்தி; வரைப் பதி - வரையறுத்தல் செய்து வாழும் பதி; சண்பு ஐயதே - சண்பைப்புல்லாலே அழ காகச் சூழப்பட்டதாகிய; வாரி - செல்வங்கள்; வயல் மலி - வயல் வளத்தால் மிக்க; சண்பைஅதே - சீகாழிப்பதியே ஆகும்.

பாடல் 10:

இலங்கை அரக்கர்தமக்கு இறையே, இடந்து கயிலேயை எடுக்க, இறையே,
புலன்கள் கெட உடன் பாடினனே, பொறிகள் கெட உடன்பாடினனே;
இலங்கிய மேனி இரா வணனே எய்து பெயரும் இராவணனே;
கலந்து அருள் பெற்றது மா வசியே; காழி அரன்அடி மா வசியே.

(பதவுரை) இலங்கை - இலங்கை மாநகரத்து வாழும்; அரக்கர்தமக்கு இறை - அரக்கர் தலேவன்; இடந்து கயிலேயை - கயிலேமலேயைப் பெயர்த்து; இறையே எடுக்க - சிறிது எடுத்த அளவில்; புலன்கள் கெட - இந்திரியங்கள்எல்லாம் மயங்க(ச் சோர்ந்து); உடன் பாடினன் - தான் உய்வதற்காக உடனே பாடினுன்; பொறிகள் கெட - அவனுடைய ஐம்பொறிகளும் பழைய செருக்குநிலே கெட்டுப் பத்திநிலே யில் செல்ல; உடன்பாடினனே - அவனுடைய பாடலுக்கு இறைவன் உடன்பட் டான்; இலங்கிய மேனி - விளங்கிய உடம்பையுடைய; இரா வணனே - இரவு போன்ற கருவண்ணத்தனுகிய இராவணனுக்கு; எய்து பெயரும் - அதனுல் உண்டான பெயரும்; இராவணனே - அழுதவன் என்று பொருள்படும் இராவணன் என்பதாம்; அருள் கலந்து பெற்றது மா வசியே - அருளில் கலந்து அவன் பெற்ற தும் சிறந்த வாளாயுதமே; காழி அரன் அடி - சீகாழியிலுள்ள சிவபெருமான் திருவடிகள்; மா வசியே - மிகுந்த வசீகரத்தை உடையவாம்.

பாடல் 11:

கண் நிகழ் புண்டரிகத்தினனே, கலந்து இரி புண்டரிகத்தினனே,
மண் நிகழும் பரிசு ஏனம்அதே, வானகம் ஏய் வகை சேனம்அதே,
நண்ணி அடிமுடி எய்தலரே; நளிர் மலி சோலேயில் எய்து அலரே
பண் இயல் கொச்சைப் பசுபதியே, பசு மிக ஊர்வர், பசுபதியே.

(பதவுரை) கண் நிகழ் புண்டரிகத்தினனே - கண்ணுகப் பொருந்திய செந் தாமரைப்பூவினே உடைய திருமாலும்; கலந்து இரி - அவனேடு சேர்ந்து மனம் திரிந்த; புண்டரிகத்தினனே - திருமாலின் உந்தியந்தாமரையில் உதித்த பிரம னும்; மண் நிகழும் பரிசு - பூமியைத் தோண்டும் தன்மையை உடைய; ஏனம் அதே - பன்றியாகியும்; வானகம் ஏய் வகை - ஆகாயத்தில் பறக்கும் இயல்பு டைய; சேனம்அதே - கழுகினே ஒத்த ஆற்றலுடைய அன்னம் ஆகியும்; நண்ணி அடிமுடி எய்தலரே - அணுகிச் சிவபெருமானின் அடியையோ முடியையோ காணமாட்டாதவராயினர்; நளிர் மலி சோலேயில் - குளிர்ச்சி மிக்க பொழில் களிலே; எய்து அலரே - பொருந்திய மலர்கள்; பண்இயல் - சிவபூசை பண்ணு தற்குப் பொருந்திய; கொச்சை - சீகாழித்தலத்திலுள்ள; பசுபதியே - ஆன்மநாயக னும் சிவனே; பசு - இடபத்தை; மிக ஊர்வர் - என்றும் ஏறிச் செலுத்துபவர் ஆதலின்; பசுபதியே - பசுவினே ஏறும் பதி என்ற பெயரை உடையவர்.

பாடல் 12:

பரு மதில் மதுரை மன் அவை எதிரே, பதிகம்அது எழுது இலைஅவை எதிரே
வரு நதியிடை மிசை வரு கரனே! வசையொடும் அலர் கெட அருகு அரனே!
கருதல் இல் இசை முரல்தரும் மருளே, கழுமலம் அமர் இறை தரும் அருளே;
மருவிய தமிழ் விரகன மொழியே, வல்லவர் தம் இடர் திடம் ஒழியே.

(பதவுரை) பரு மதில் மதுரை மன் அவை எதிரே - பருத்த மதில்களையுடைய மதுரைக்கு அரசனான பாண்டியனுடைய சபைக்கு முன்னால்; பதிகம்அது எழுது இலைஅவை - பாடல்கள் எழுதப்பட்ட ஏடுகள்; வருநதியிடை - வெள்ளமாக ஓடி வரும் வையைநதியிலே; மிசை எதிர் வரு கரனே - மேலே எதிரே வரச்செய்த செய்கையை உடையவனே! வசையொடும் அலர் கெட - சைவர்களுக்கு வந்த பழியும் பழி தூற்றலும் கெடுமாறு, அருகு அ(ஹ)ரனே - அருகர்களாகிய சமணர்களை அழித்தவனே! கருதல் இல் இசை - நினைக்கவும் முடியாதபடி சைவர் அடைந்த புகழ்; முரல்தரும் - உலகம் முழுதும் ஒலிக்கும்படி செய்த; மருள் - வியப்பானது; கழுமலம்... அருளே - சீகாழியில் வீற்றிருக்கும் இறைவன் திருவருளாம்; மருவிய... மொழியே - அத்திருவருளைப் பெற்ற முத்தமிழ் விரகனான ஞானசம்பந்தனுடைய பாடல்களை; வல்லவர்தம் - ஓதிஉணர வல்லவர்களது; இடர் ஒழி திடம் - துன்பம் தீர்தல் நிச்சயமாகும்.

திரு ஏகம்பம் பழம்பஞ்சுரம்

பாடல் 1:

பாயும் மால் விடைமேல் ஒரு பாகனே; பாவை தன் உருமேல் ஒருபாகனே;
தூய வானவர் வேதத் துவனியே; சோதி மால் எரி வேதத்து வ(ன்)னியே;
ஆயும் நன் பொருள் நுண்பொருள் ஆதியே; ஆலநீழல் அரும்பொருள் ஆதியே!
காய வில் மதன் பட்டது கம்பமே; கண்ணுதல் பரமற்கு இடம் கம்பமே.

(பதவுரை) பாயும் மால் விடைமேல் - தாவித் திரியும் பெரிய காளைமீது ஏறி; ஒரு பாகனே - ஒப்பற்ற வகையால் அதனைச் செலுத்துவோனாய் உள்ளாய்; பாவை - உமாதேவியை; தன் உருமேல் - தன் வடிவாகிய திருமேனியிலே; ஒரு பாகனே - ஒரு பகுதியாகக் கொண்டுள்ளாய்; வானவர் - தேவர்கள் ஓதும்; தூய வேதத் துவனியே - தூய்மையான வேதங்களின் நாதஸ்வரூபமாக உள்ளாய்; சோதி - உடலின் பிரகாசத்தால்; மால் - பெரிய; எரி - பற்றி எரிகின்ற; வேதத்து வ(ன்)னியே - வேதவிதிப்படி வளர்க்கப்பெறும் வேள்வித்தீயினை ஒப்பாய்; ஆயும் நன் பொருள் - ஆராயத்தக்க நல்ல கருத்துக்களில்; நுண்பொருள் ஆதியே - நுட்பமான கருத்தாக உள்ளாய்; ஆலநீழல் - கல்லாலமரநீழலில்; அரும்பொருள் ஆதியே - கிட்டுதற்கரிய பொருளாய் உள்ள முதல்வனே! காய - போர் புரிய (வந்த); வில் மதன் - வில்லை ஏந்திய மன்மதன்; பட்டது - முதற்கண் அடைந்தது; கம்பமே - நடுக்கமேயாம்; கண்ணுதல் பரமற்கு - நெற்றிக்கண்ணனாகிய சிவபெருமானுக்கு; இடம் கம்பமே - இருப்பிடம் திருஏகம்பம் ஆகும். (ஒற்றை மாமரம் எனப் பொருள்படும் ஏகாம்பரம் 'ஏகம்பம்' என மருவிற்று.)

பாடல் 2:

சடை அணிந்ததும் வெண்டு அலைமாலையே; தம் உடம்பிலும் வெண்தலைமாலையே;
படையில் அம் கையில் சூல் அம் அது என்பதே; பரந்து இலங்கு ஐயில் சூலம் அது என்பதே;

புடை பரப்பன பூதகணங்களே; போற்றுஇசைப்பன பூதகணங்களே;
கடைகள்தோறும் இரப்பதும் மி(ச்)சையே; கம்பம் மேவி இருப்பதும் இச்சையே.

*(பதவுரை)* சடை அணிந்ததும் - சடையில் சூடியதும்; வெண்டு (வேண்டு) - தம் மால் விரும்பப்பட்ட (பகீரதனால் விரும்பப்பட்ட); அலைமாலையே - அலையின் வரிசையை உடைய கங்கையே; தம் உடம்பிலும் - தம் உடல் பகுதியிலும்; வெண் தலைமாலையே - இறந்த தேவர்களின் வெள்ளிய தலையாலாகிய மாலையே உள்ளது; படையில் - ஆயுதத்தைப் போல, அம் கையில் - அழகிய கை விரலால், சூல் - தோண்டப்பட்ட; அம் - அழகு செய்வதாகிய அணிகலன்; அது என்பதே - அத்திரு மாலின் கண்ணேயாகும் [மச்சாவதாரத்தின் செருக்கை அடக்க உருத்திர பகவான் திருமாலின் கண்ணைக் கைவிரலால் தோண்ட, அது விரலுக்கு அணிகலம் ஆகிய கண்ணையாழி ஆயிற்று என்பது ஈண்டுக் கூறிய வரலாறு.] பரந்து இலங்கு ஐயில் - ஒளி பரவி விளங்குகின்ற படைக்கலம்; சூலம்அது என்பதே - முத்தலைச் சூலமே யாகும்; புடை பரப்பன - தம்மைச் சுற்றிப் பரவியுள்ளன; பூதகணங்களே - பூதங் களின் கூட்டங்களேயாம்; போற்றுஇசைப்பன - தம் புகழைக் கூறுவன; பூதகணங் களே - பரிசுத்தமான அடியார் கூட்டங்களே; கடைகள்தோறும் - வீடுகளின் முகப் புக்கள்தோறும் சென்று; இரப்பதும் - பிச்சை எடுப்பதும்; மி(ச்)சையே - உண வுக்கு உரிய பொருள்களேயாகும்; கம்பம் - காஞ்சி ஏகாம்பரத்தை; மேவி இருப் பதும் - பொருந்தித் தங்கி இருப்பதும்; இச்சையே - சிவபெருமானது விருப்பமே யாகும்.

பாடல் 3:

வெள் எருக்கொடு தும்பை மிலைச்சியே; ஏறு முன் செலத் தும்பை மிலைச்சியே!
அள்ளி நீறுஅது பூசுவ தாகமே; ஆன மாசுணம் மூசுவது ஆகமே;
புள்ளி ஆடை உடுப்பது கத்துமே; போன ஊழி உடுப்பது உகத்துமே;
கள் உலாம் மலர்க் கம்பம் இருப்பதே காஞ்சி மா நகர்க் கம்பம் இருப்புஅதே.

*(பதவுரை)* வெள் எருக்கொடு - வெண்ணிற எருக்கம்பூவினொடு; தும்பை மிலைச் சியே - தும்பைப் பூமாலையைச் சூடியுள்ளாய்; ஏறு முன் செல்ல - இடபவாகனம் தன்முன்னே செல்லுமாறு; தும்பை மிலைச்சியே - தும்புக் கயிற்றை அதற்குக் கட்டு கின்றவனே! அள்ளி... தாகமே - திருநீற்றினை அள்ளிஅள்ளிப் பூசிக்கொள்வதில் விருப்பம் உடையாய்; ஆன மாசுணம் - தாருகவனத்து இருடியரால் படைத்து அனுப்பப்பட்ட பாம்புகள்; மூசுவது ஆகமே - சுற்றியுள்ள இடம் உன் உடல் முழுதும் ஆகும்; புள்ளி ஆடை உடுப்பது - புள்ளியை உடைய ஆடையாக உடுப் பது; கத்துமே - ஒலிக்கும் மான் தோல் ஆகும்; ஊழி - பிரளய காலத்தில்; போன - தனுகரணபுவனபோகங்கள் அழியப்பெற்ற உயிர்களை; உடுப்பது - தன்னுள் ஒடுக் கிக் கொள்வது; உகத்துமே - ஒவ்வோர் உகத்திலும் நிகழ்வதாகும்; கள் உலாம் மலர் - தேன் பொழியும் மலர்களைச் சுமக்கும்; கம்பம் இருப்பது(ஏ) - கம்பையாற் றின் இருப்பிடமாகிய; காஞ்சி மாநகர் - காஞ்சிபுரமாகிய சிறந்த நகரத்தின்; கம்பம் - ஏகாம்பரம்; இருப்புஅதே - சிவபெருமானுக்கு இருப்பிடமாகும்.

பாடல் 4:

முற்றல்ஆமை அணிந்த முதல்வரே! மூரி ஆமை அணிந்த முதல்வரே!
பற்றி வாள்அரவு ஆட்டும் பரிசரே! பாலும் நெய் உகந்து ஆட்டும் பரிசரே!
வற்றல்ஓடு கலம், பலி தேர்வதே; வானினோடு கலம் பலி தேர்வதே;
கற்றிலா மனம் கம்பம் இருப்பதே; காஞ்சி மா நகர்க் கம்பம் இருப்பதே.

*(பதவுரை)* முற்றல் ஆமை - ஆண்டு முதிர்ந்த ஆமையின் ஓட்டினை; அணிந்த முதல்வரே - அணிந்துகொண்ட தலைவரே! மூரி ஆமை அணிந்த முதல்வரே - பெருமை மிக்க நீராகிய (ஆம்-நீர்) கங்கையைத் தலையில் அணிந்த முதலாமவரே! பற்றி வாள்அரவு - ஒளி பொருந்திய பாம்பைப் பிடித்து; ஆட்டும் பரிசரே - ஆட்டு கின்ற தன்மை உடையவரே! பாலும் நெய் உகந்து - பாலையும் நெய்யையும் விரும்பி; ஆட்டும் பரிசரே - அபிடேகம் செய்யப்படும் பெருமை உடையவரே! பலி தேர்வது - பிச்சை எடுப்பது; வற்றல்ஓடு கலம் - வற்றிய மண்டையோடாகிய பாத்திரமே; வானினோடு - தேவருலகத்தவரோடு; கலம் - சற்பாத்திரங்களாகிய அடியார்கள்; தேர்வது - ஆராய்வது; பலியே - சிவபெருமானுக்குச் செய்யும் பூசைமுறைகளேயாம்; கற்றிலா மனம் - தெய்வத் திருவருளை உணராத மனத்தில்; இருப்பது. கம்பமே - இருப்பது நடுக்கமேயாம்; காஞ்சி... இருப்பதே - காஞ்சிநகரிலுள்ள ஏகாம்பரம் என்ற இடமே சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடம்.

பாடல் 5:

வேடன் ஆகி விசையற்கு அருளியே; வேலை நஞ்சம் மிசையல் கருளியே;
ஆடுபாம்பு அரை ஆர்த்தது உடையதே; அஞ்சுபூதமும் ஆர்த்தது (து)டையதே;
கோடு வான் மதிக்கண்ணி அழகிதே; குற்றம் இல் மதிக் கண்ணி அழகிதே;
காடு வாழ் பதி ஆவதும் உம்மதே; கம்ப மா பதி ஆவதும் உம்மதே.

*(பதவுரை)* விசையற்கு - அருச்சுனனுக்கு; வேடன் ஆகி அருளியே - வேடன் வடிவெடுத்து அருள் செய்தோன் ஆவாய்; வேலை நஞ்சம் - கடலில் தோன்றிய விடத்தை; மிசையல் கருளியே - உண்டதால் (கண்டம்) கருமையடைந்தவன் ஆவாய்; ஆடுபாம்பு - படம் எடுத்து ஆடும் பாம்பு; அரை ஆர்த்தது உடையதே - இடுப்பில் உடையின்மேல் கட்டப்பட்டது; அஞ்சு பூதமும் - நிலம் முதலிய ஐம் பூதங்களாலும்; ஆர்த்தது - அமைக்கப்பட்ட இவ்வுலகம்; துடையதே - சிவபெருமானாகிய உம்மால் அழிக்கப்பட்டது; வான் கோடு மதிக்கண்ணி அழகிதே - ஆகாயத்தில் தோன்றிய வளைந்த பிறையாகிய முடிமாலை உமக்கு அழகிதாக உள்ளது; குற்றம் இல் மதி - களங்கம் இல்லாத அறிவினை உடைய; கண்ணி - அடியார்கள் வீசும் பத்திவலை; அழகிதே - உணர்தற்கு இனியது; காடு... உம்மதே - சுடுகாட்டில் வாழ்வதும் உமக்கு உரியது; கம்ப... உம்மதே - காஞ்சிபுரமாகிய சிறந்த நகரமும் உம்முடைய உடைமையாம்.

பாடல் 6:

இரும் புகைக்கொடி தங்கு அழல் கையதே; இமயமாமகள் தம் கழல் கையதே;
அரும்பு மொய்த்த மலர்ப்பொறை தாங்கியே; ஆழியான்தன் மலர்ப்
பொறை தாங்கியே;
பெரும் பகல் நடம்ஆடுதல் செய்துமே, பேதைமார் மனம் வாடுதல் செய்துமே,
கரும்பு மொய்த்து எழு கம்பம் இருப்பதே, காஞ்சி மாநகர்க் கம்பம்
இருப்புஅதே.

*(பதவுரை)* இரும் புகைக்கொடி தங்கு - பெரிய புகைக்கொடிகள் சூழ்ந்த; அழல் கையதே - நெருப்பு சிவபெருமான் கையின்கண்ணது; தம் கழல் - சிவபெருமானுடைய பாதங்கள்; இமயமாமகள் கையதே - இமவான்மகளான பார்வதியால் வருடப்படுவன; அரும்பு மொய்த்த மலர்ப் பொறை தாங்கியே - அவர், செறிந்த அரும்புகள் மலர்கள் ஆகியவற்றைச் சூடுதலால் அவற்றின் பாரத்தைச் தாங்கியிருப்பவர்; ஆழியான்தன் - திருமாலுடைய; மலர்ப் பொறை - பரவியிருத்தலை

உடைய உடல்எனும்பாகிய பாரத்தை; தாங்கியே - தோளில் சுமந்திருப்பவர்; பெரும்பகல் நடம்ஆடுதல் செய்துமே - நல்ல பகற்காலத்தில் கூத்தாடுதலைச் செய்து; பேதைமார் மனம் வாடுதல் செய்துமே - தாருகவனத்து முனிபத்தினி களின் மனம் தம்மைக் கண்டு காமத்தீயால் வாடுதலைச் செய்து; கரும்பு மொய்த்து எழு கம்பம் இருப்பதே - செறிந்து ஓங்கிய தூண்கள் போலக் கரும்புகள் செழித் திருக்கும்; காஞ்சிமாநகர்க் கம்பம் இருப்புஅதே - காஞ்சி நகரத்திலுள்ள ஏகாம் பரத்தை இருப்பிடமாகக் கொண்டுள்ளார்.

பாடல் 7:

முதிர மங்கை தவம் செய்த காலமே, முன்பும் அம் கைதவம் செய்த காலமே,
வெதிர்களோடு அகில் சந்தம் முருட்டியே, வேழம் ஓடகில்சந்தம் உருட்டியே,
அதிர ஆறு வரத்து அழுவத்தொடே, ஆன்ஐஆடுவ(ை)ரத் தழுவத் தொடே,
கதிர் கொள் பூண் முலைக் கம்பம் இருப்பதே; காஞ்சி மா நகர்க் கம்பம்
இருப்பதே.

(பதவுரை) முதிர மங்கை தவம் செய்த காலமே - மேகம் போன்ற நிறத்தை உடைய உமாதேவி கம்பையாற்றங்கரையில் தவம் செய்தபோது; முன்பும்-முன்பு (இமயமலையில் தவம் செய்தபோது கிழவடிவில் வந்து வஞ்சனை செய்தது) போலவே; அம் கைதவம் செய்த காலமே - அழகிய வஞ்சனை செய்து கம்பை மா நதியைப் பெருக்கெடுத்துக் கரைபுரண்டுவரச் செய்த காலத்து; வெதிர்களோடு அகில் சந்தம் முருட்டியே - மூங்கில், அகில், சந்தனம், ஏனைய முருட்டு மரங்கள் ஆகியவற்றையும்; வேழம் - யானை முதலிய விலங்குகளையும்; ஓடகில்சந்தம் - ஓட முடியாதபடி; உருட்டியே - உருட்டிக்கொண்டு; அதிர - ஒலிக்கும்படியாக; ஆறு - கம்பைமாநதி; அழுவத்தொடே வரத்து - பரப்போடு வருதலால்; ஆன் ஐ ஆடு வர(ை) - பஞ்சகவ்யஅபிஷேகம் செய்யும் சிவபெருமானை; தழுவத் தொடே - தழுவுதற்கு உமாதேவி தொடுதலால்; கதிர் கொள் பூண் முலை - ஒளி வீசும் அணிகளணிந்த முலைத் தழும்பு; கம்பம் இருப்பதே உறுதியாகச் சிவபெருமான் மார்பில் சுவடு உண்டாக்கி இருப்பதாம்; காஞ்சி... இருப்பதே - அத்தகைய சுவடு டைய சிவபெருமான் காஞ்சிநகரில் ஏகம்பத்தில் உள்ளார்.

பாடல் 8:

பண்டு அரக்கன் எடுத்த பலத்தையே, பாய்ந்து அரக்கல், நெடுத்த
அபலத்தையே
கொண்டு, அரக்கியதும் கால்விரலையே; கோள் அரக்கியதும் கால்வு இரலையே;
உண்டு உழன்றதும் முண்டத்தலையிலே; உடுபதிக்கு இடம் உண்டு, அத்தலையிலே;
கண்டம் நஞ்சம் அடக்கினை கம்பமே; கடவுள்நீ இடம் கொண்டதும் கம்பமே.

(பதவுரை) பண்டு... பலத்தையே - பண்டு இராவணன் கயிலைமலையைத் தூக்கிய வலிமையை; பாய்ந்து அரக்கல் - மேற்சென்று சிதறுவித்தலால்; நெடுத்த அபலத் தையே கொண்டு - மிக்க வலியின்மையையே அவன் கொள்ளுமாறு; அரக்கிய தும் கால்விரலையே - கால்விரலால் அவனை அமுக்கித் தேய்த்தார் (சிவபெரு மான்); கோள் - முனிவர் ஏவலால் தம்மைத் தாக்கும்பொருட்டு; அரக்கியதும் - எதிர்த்து வந்ததும்; கால்வு - கோபத்தைக் கக்கிய; இரலையே - மானே ஆகும்; உண்டு உழன்றதும் - பிச்சை ஏற்று உண்டு ஊர் சுற்றியதும்; முண்டத்தலையிலே - தலைமுண்டமாகிய மண்டைஓட்டிலே; உடுபதிக்கு... தலையிலே - சிவபெருமானு டைய தலையிலே சந்திரனுக்கும் இடம் உண்டு; கண்டம் நஞ்சம் அடக்கினை- (எம்பெருமானே!) கழுத்திலே ஆலகால விடத்தை அடக்கிக்கொண்டு; கம்பமே -

தம்பம் போல உறுதியாக இருந்தாய்; கடவுள்நீ இடம் கொண்டது கம்பமே - இறைவனுகிய நீ உகந்து ஏற்ற இடம் ஏகம்பமாகும்.

பாடல் 9:

தூணி ஆன சுடர்விடு சோதியே, சுத்தமான சுடர்விடு சோதியே;
பேணி ஓடு பிரமப் பறவையே பித்தனுன பிரமப்பறவையே
சேணினேடு, கீழ், ஊழி திரிந்துமே, சித்தமோடு கீழ் ஊழி திரிந்துமே,
காண நின்றனர் உற்றது கம்பமே; கடவுள்நீ இடம் உற்றது கம்பமே.

(பதவுரை) தூணி - அம்பருத்தூணியான நெற்றிவிழியினின்றும்; ஆன - தோன்றிய; சுடர்விடு சோதியே - ஒளிவீசும் அனற்பொறிகள்; சுத்தமான - இயல்பாகவே பாசங்களின் நீங்கிய; சுடர்விடு - ஞானமயமாகிய; சோதி - முருகக் கடவுளாம்; (நெற்றிவிழிப் பொறி அம்பாக நின்று மன்மதனை எரித்ததால் நெற்றிவிழி தூணி எனப்பட்டது.) பேணி - தன் ஆற்றலைப் பெரிதாகக் கருதி; ஓடு - முடியைக் காண மேல் நோக்கிப் புறப்பட்ட; பிரமப் பறவை - பெரிய பறத்தல் தொழிலை உடைய; பித்தனுன - முடியைக் காண்பதில் தீவிரமாக ஈடுபட்ட; பிரமப்பறவை - பிரமனுகிய அன்னப்பறவை; சேணினேடு - ஆகாயத்திலும்; கீழ் - (திருமால்) பாதாளத்திலும்; ஊழி திரிந்து - ஊழிக்காலம் திரிந்து; சித்தமோடு - தங்கள் மனச்செருக்கோடு; கீழ் - தங்கள் கீழ்த்தன்மையும்; ஊழி - முறையே; திரிந்து - மாறுபட்டு; காணநின்றனர் - உம்மைக் காண நின்ற அவர்கள்; உற்றது கம்பமே - கண்டது அக்கினித் தம்பமாகிய உமது வடிவத்தையே; கடவுள்நீ - இறைவனுகிய நீ; இடம் உற்றது கம்பமே - ஏகம்பத்தையே இருப்பிடமாகக் கொண்டு இருக்கிறுய்.

பாடல் 10:

ஓர் உடம்பினை ஈர் உரு ஆகவே, உன் பொருள்திறம் ஈர்உரு ஆகவே,
ஆரும் மெய் தன் கரிது பெரிதுமே; ஆற்றல் எய்தற்கு அரிது, பெரிதுமே;
தேரரும் அறியாது திகைப்பரே; சித்தமும் மறியா; துதி கைப்பரே;
கார்நிறத்து அமணர்க்கு ஒரு கம்பமே; கடவுள்நீ இடம் கொண்டது கம்பமே.

(பதவுரை) ஓர் உடம்பினை ஈர் - யானையின் ஓர் உடம்பினை உரித்ததாகிய தோல்; உரு ஆக - உடம்பில் போர்வையாக; உன் பொருள்திறம் - உம்முடைய உண்மைத் தன்மை; ஈர்உரு ஆகவே - சக்தி, சிவம் என்ற இருதிறத்தது ஆக; ஆரும் - உம் உடம்பில் பொருந்திய; மெய்தன் - அம்பிகையின் திருவுடம்பினது; கரிது - கரிய நிறம்; பெரிதுமே - மிகவும் ஒளி வாய்ந்தது; ஆற்றல் - அடியவர்தம் சுயமுயற்சியால்; எய்தற்கு - கிட்டுவதற்கு; பெரிதும் அரிது - உம் திருவடி முற்றிலும் இயலாதனவாகும்; தேரரும் - புத்தர்களும்; அறியாது திகைப்பரே - உம் பெருமையை அறியாது தடுமாறுபவர்; சித்தமும் மறியா - அவருடைய மனமும் தம் நிலையிலிருந்து மாற மாட்டா (அதனுல்); துதி கைப்பரே - உம்மைத் துதித்தலை வெறுப்பர்; கார்நிறத்து அமணர்க்கு - கரிய நிறத்தவரான சமணருக்கு; ஒரு கம்பமே - நினைத்த அளவிலேயே நடுக்கம் செய்பவர் சிவபெருமான்; கடவுள்நீ இடம் கொண்டது கம்பமே - இறைவனுகிய நீ கச்சிஏகம்பத்தையே இருப்பிடமாகக் கொண்டுள்ளாய்.

பாடல் 11:

கந்தம் ஆர் பொழில் சூழ்தரு கம்பமே காதல்செய்பவர் தீர்த்திடு உகு அம்பமே;
புந்திசெய்வது விரும்பிப் புகலியே, பூசுரன்தன் விரும்பிப் புகலியே
அந்தம் இல் பொருள்ஆயின கொண்டுமே, அண்ணலின் பொருள்ஆயின
கொண்டுமே,
பந்தன் இன்னியல் பாடிய பத்துமே பாடவல்லவர், ஆயின, பத்துமே.

(பதவுரை) கந்தம் ஆர் பொழில் சூழ்தரு கம்பமே - நறுமணம் கமழும் சோலைகளால் சூழப்பட்ட திருவேகம்பத்தை; காதல்செய்பவர் - விரும்பும் அடியார்கள்; தீர்த்திடு உகு அம்பமே - வெளிப்படுப்பது பெருகி வரும் பக்திக்கண்ணீரே; புந்தி செய்வது விரும்பி - எல்லாம் சிவன் செயலாகப் பாவித்து விருப்பங்கொண்டு; புகலியே - சீகாழியையே (இருப்பிடமாகக் கொண்ட); பூசுரன்தன் - அந்தணரான ஞானசம்பந் தருடைய; விரும்பிப் புகலியே - விரும்பிச் சரண்புக்க இடமானவன்ஆகிய சிவபெரு மானுடைய; அந்தம் இல் பொருள்ஆயின கொண்டு - அழிவில்லாப் பொருளாந் தன்மையை உட்கொண்டு; அண்ணலின் - அச்சிவபெருமானுடைய; பொருள் ஆயின கொண்டு - புகழை விஷயமாகக் கொண்டு; பந்தன் இன்னியல் பாடிய பத்துமே - ஞானசம்பந்தன் இனிய இயல்பால் பாடிய பத்துப் பாடல்களையும்; பாடவல்லவர் - பாடும் ஆற்றலுடையவர்க்கு; பத்துமே ஆயின - பக்தி செலுத்தும் வகைகள் பலவும் உளவாகும்.

திரு ஆலவாய் பழம்பஞ்சுரம்

பாடல் 1:

ஆலம்நீழல் உகந்தது இருக்கையே; ஆன பாடல் உகந்தது இருக்கையே;
பாலின் நேர் மொழியாள் ஒருபங்கனே; பாதம் ஓதலர் சேர் புரபங்கனே;
கோலம் நீறு அணி மேதகு பூதனே; கோதிலார் மனம் மேவிய பூதனே;
ஆலநஞ்சு அமுதுஉண்ட களத்தனே; ஆலவாய் உறை அண்டர்கள் அத்தனே.

(பதவுரை) ஆலம்நீழல் - கல்லாலமரத்தின் நிழலிலே; உகந்தது இருக்கையே - சிவபெருமானுடைய இருப்பிடம் விரும்பப்பட்டது; ஆன பாடல் - தனக்குப் பிடித்தமான பாடலாக; உகந்தது இருக்கையே - விரும்பியது இருக்குவேதத்தை யேயாம்; பாலின் நேர் மொழியாள் - பாலை ஒத்த மொழியினை உடைய அம்பிகையை; ஒருபங்கனே - ஒருபாகமாக அவன் உடையவன்; பாதம் ஓதலர் சேர் - தன் திருவடி களைப் புகழாதவர் ஆகிய அசுரர்கள் தங்கிய; புரபங்கனே - திரிபுரங்களையும் அழித்தவன்; கோலம் நீறு அணி - அழகிய திருநீற்றினை அணியும்; மேதகு பூதனே - மேம்பட்ட பூதகணங்களை உடையவன்; கோதுஇலார் மனம் மேவிய - குற்றமற்ற வர் உள்ளத்தே பொருந்திய; பூதனே - உயிருக்கு உயிராய் இருப்பவன்;
ஆலநஞ்சு அமுது உண்ட - ஆலகாலவிடத்தை உணவாக உண்ட; களத்தனே - கழுத்தை உடையவன்; ஆலவாய் உறை - திருவாலவாயில் தங்கியிருக்கும்; அண் டர்கள் அத்தனே - தேவர்களுக்குத் தந்தையானவன்.

பாடல் 2:

பாதியா உடன்கொண்டது மாலையே; பம்பு தார் மலர்க்கொன்றை நன்மாலையே;
கோது இல் நீறுஅது பூசிடும் ஆகனே; கொண்ட நன் கையில் மான் இடம் ஆகனே;
நாதன் நாள்தொறும் ஆடுவது ஆன்ஐயே; நாடி அன்று உரிசெய்ததும் ஆனையே;
வேதநூல் பயில்கின்றது வாயிலே; விகிர்தன் ஊர் திரு ஆலநல்வாயிலே.

(பதவுரை) பாதியா... மாலையே - தன் உடம்பில் பாதியாகத் திருமாலைக் கொண்டுள்ளான்; பம்புதார்... மாலையே - மார்பில் நெருங்கிய மாலை கொன்றைப் பூமாலையாகும்; கோதுஇல்... ஆகனே - குற்றமற்ற திருநீறு பூசப்பட்ட உடம்பை

உடையவன்; கொண்ட... ஆகனே - தன் இடக்கையில் மான் இடமாகத் தங்கப் பெற்றவன்; நாதன்... ஆன்ஐயே - தலைவனாகிய சிவபெருமான் நாடொறும் பஞ்ச கவ்வியத்தில் நீராடுகிறான்; நாடி அன்று... ஆனையே - பகையாகக் கொண்டு முன் னொரு காலத்து யானை ஒன்று அவனால் தோல் உரிக்கப்பட்டது; வேதநூல்... வாயிலே - தன் திருவாயிலே எப்பொழுதும் வேதம் ஓதப்பெற்றவன்; விகிர்தன்... வாயிலே - மற்றவரிடமிருந்து வேறுபட்டவனான சிவபெருமானுடைய திருத்தலம் நல்ல திருவாலவாய் ஆகும்.

*பாடல் 3:*

*காடுநீடது உறப் பல கத்தனே! காதலால் நினைவார்தம் அகத்தனே!*
*பாடு பேயொடு பூதம் மசிக்கவே, பல்பிணத்தசை நாடி அசிக்கவே,*
*நீடு மாநடம் ஆட விருப்பனே! நின் அடித்தொழ நாளும் இருப்பனே;*
*ஆடல் நீள்சடை மேவிய அப்பனே! ஆலவாயினில் மேவிய அப்பனே!*

(பதவுரை) காடு...... பல கத்தனே - பரவியுள்ள சுடுகாட்டில் பொருந்தி எல்லா வற்றிற்கும் கருத்தாவாக இருப்பவனே! காதலால் ......... அகத்தனே - அன்போடு தியானிப்பவருடைய உள்ளத்தில் இருப்பவனே! பாடு ......... மசிக்கவே - பாடு கின்ற பேய்களோடு பூதங்கள் நன்கு குழைவித்து; பல் ....... அசிக்கவே - பலபிணங் களின் தசைகளை விரும்பி உண்ண; நீடு ...... விருப்பனே - நீண்ட திருக்கூத்தாடு தலில் விருப்பம் உடையவனே! நின் ...... இருப்பனே - உன் திருவடிகளை நாள்-தோறும் தொழுவதற்கு இப்பிறவியில் தங்கியுள்ளேன்; ஆடல் .......... அப்பனே - நீண்ட சடையில் அசைதலையுடையதாய் விரும்பிய கங்கையை உடையவனே! ஆலவாயினில் .............. அப்பனே - திருவாலவாயில் தங்கிய தலைவனே!

*பாடல் 4:*

*பண்டு அயன்தலை ஒன்றும் அறுத்தியே; பாதம் ஓதினர் பாவம் மறுத்தியே;*
*துண்டவெண்பிறை சென்னி இருத்தியே, தூய வெள்ளஎருது ஏறி இருத்தியே;*
*கண்டு காமனை வேவ விழித்தியே; காதல்இல்லவர்தம்மை இழித்தியே;*
*அண்டர்நாயகனே! மிகுகண்டனே! ஆலவாயினில் மேவிய (அ)கண்டனே!*

(பதவுரை) பண்டு........... அறுத்தியே - முன்னொருகாலத்தில் பிரமனுடைய தலை ஒன்றனை அறுத்தாய்; பாதம் ............ மறுத்தியே - உன் திருவடிகளைத் துதிப்பவர் தீவினைகளைப் போக்குவாய்; துண்ட ......... இருத்தியே - வெள்ளிய பிறைச்சந்தி ரனைத் தலையில் தங்கவைத்து; தூய .............. இருத்தியே - தூய்மையான வெள்ளை இடபத்தை ஏறியிருக்கின்றாய்; கண்டு .............. விழித்தியே - காமன் உடல் வேகு மாறு அவனை நெற்றிக்கண்ணால் பார்த்து உற்றுநோக்கினாய்; காதல் ................ இழித்தியே - உன்னிடத்தில் அன்புஇல்லாதவர்களைக் கீழ்ப்படச் செய்கின்றாய்; அண்டர் ........... கண்டனே - தேவர்கள் தலைவனே! குற்றங்களை நீக்குபவனே! ஆலவாயினில் ............ அகண்டனே - திருவாலவாய் என்ற திருக்கோயிலில் விரும்பித் தங்கிய அளவிட முடியாதவனே!

*பாடல் 5:*

*சென்று தாதை உகுத்தனன் பாலையே, சீறி அன்பு செகுத்தனன்பால் ஐயே*
*வென்றி சேர் மழுக்கொண்டு முன்காலையே, வீழ வெட்டிடக் கண்டு முன்காலையே,*
*நின்ற மாணியை ஓடின கங்கையால் நிலவ மல்கி உதித்து, அனகம் கையால்,*
*அன்று, நின் உருஆகத் தடவியே! ஆலவாய் அரன்! ஆகத்து அடு அவியே.*

(பதவுரை) முன்காலையே தாதை சென்று பாலை உகுத்தனன் - முன்னொருகாலத்தில் விசாரசருமனின் தந்தையாகிய எச்சதத்தன் போய் இலிங்கத்து அபிடேகத்திற்கு வைத்திருந்த பாலைக் கீழே கவிழ்த்தான்; அன்பு - அன்போடு செய்யும் சிவபூசனையை; சீறி-கோபித்து; செகுத்தனன்பால் - அழித்த தன் தந்தையிடத்தில்; ஐயே - வியக்கத்தக்க வகையில்; வென்றி சேர் மழுக்கொண்டு - வெற்றி தரும் மழுவாயுதத்தால்; முன்காலையே வீட - முன்கால் துண்டித்து விழுமாறு; வெட்டிடக் கண்டு - வெட்டியதனைப் பார்த்து; நின்ற மாணியை - அங்ஙனம் வெட்டி நின்ற பிரமசாரியாகிய விசாரசருமனை; ஓடின கங்கையால் - பரந்த கங்கையோடு; நிலவ மல்கி உதித்து - எல்லாச்சிறப்புக்களும் நிறைந்து விளங்க இடபவாகனத்தில் தோன்றி; அனகம் கையால் - தன் பாவமற்ற தூய கைகளாலே; அன்று - அந்நிகழ்ச்சி நடந்த அன்று; நின் உருஆகத் தடவியே - மனிதவடிவினை விடுத்துத் தெய்வவடிவம் உறுமாறு தடவினவனே! ஆலவாய் அரன் - ஆலவாயில் அமர்ந்த சிவபெருமானே! ஆகத்து - உன் உடம்பில் அணியும் மாலை முதலியவற்றையும், அடு அவியே - உனக்கு என்று சமைத்து நிவேதித்த உணவையும் (அவனுக்கு அருளினாய்.)

பாடல் 6:

நக்கம் ஏகுவர், நாடும் ஓர் ஊருமே; நாதன் மேனியில் மாசுணம் ஊருமே;
தக்க பூமனைச் சுற்ற, கருளொடே, தாரம் உய்த்தது, பாணற்கு அருளொடே;
மிக்க தென்னவன்தேவிக்கு அணியையே மெல்ல நல்கிய தொண்டர்க்கு
அணியையே;
அக்கினார் அமுது உண்கலன் ஓடுமே; ஆலவாய், அரனார் உமையோடுமே.

(பதவுரை) நாடும் ஓர் ஊருமே - நாடுகளிலும் ஊர்தோறும்; நக்கம் ஏகுவர் - ஆடையற்ற கோலத்தோடு பிச்சைக்குச் செல்வர்; நாதன் மேனியில் - சிவபெருமானுடைய திருமேனியிலே; மாசுணம் ஊருமே - பாம்புகள் ஊர்ந்துகொண்டிருக்கும்; பாணற்கு மனைச் சுற்ற - திருநீலகண்ட யாழ்ப்பாணர் இல்லத்தில் அடியார் சூழ்ந்திருப்ப அவருக்கு; கருளொடு - இரவின்கண்; தக்க பூ - பரிசிலாகச் சிறந்த பொற்பூவினையும்; தாரம் - யாழ் வைக்கும் பலகையினையும்; அருளொடே உய்த்தது - அருளினால் சிவபெருமானே! நீ செலுத்தினாய்; மிக்க தென்னவன்தேவிக்கு - மேம்பட்ட பாண்டியமன்னன் தேவியான மங்கையர்க்கரசிக்கு; அணியையே - மங்கலியம் முதலிய ஆபரணங்களை; மெல்ல நல்கிய - மெல்லவே காத்துத் தந்த; தொண்டர்க்கு அணியையே - அடியார்க்கு மிகவும் அருள்செய்ய அணியவனாக உள்ளாய்; அக்கினார் - அக்குமணி அணிந்த சிவபெருமானுடைய; அமுது உண் கலன் ஓடுமே - உணவுண்ணும் பாத்திரம் பிரமனுடைய மண்டைஓடே; ஆலவாய் அரனார் உமையோடுமே - சிவபெருமான் உமையோடு தங்கியிருக்கும் இடம் திருவாலவாய் ஆகும்.

பாடல் 7:

வெய்யவன் பல் உகுத்தது, குட்டியே; வெங்கண் மாசுணம் கையது குட்டியே;
அய்யனே! அனல்ஆடிய மெய்யனே! அன்பினால் நினைவார்க்கு அருள்
மெய்யனே!
வையம் உய்ய அன்று உண்டது காளமே; வள்ளல் கையது மேவு கங்காளமே;
ஐயம் ஏற்பது உரைப்பது வீண், ஐயே! ஆலவாய் அரன் கையது வீணையே.

(பதவுரை) வெய்யவன்... குட்டியே - (சிவபெருமான்) தக்கயாக இறுதியில் பகன்

என்ற சூரியனைத் தலையில் குட்டிப் பல்லை உதிர்த்தார்; வெங்கண்... குட்டியே - அவர் கையிலிருப்பது கொடிய பாம்புக்குட்டியே; அய்யனே - எல்லோருக்கும் தலைவனே! அனல் ஆடிய மெய்யனே - நெருப்பின் நடுவே நடனம்ஆடிய திரு மேனியை உடையவனே! அன்பினுல்... மெய்யனே - அன்பினுல் தியானிப்பவர் களுக்கு உண்மையாக அருள் செய்பவனே! வையம்... காளமே - உலகம் உயிர் பிழைப்பதற்காகப் பாற்கடலைக் கடைந்த காலையில் வெளிப்பட்ட விடத்தை விழுங்கினுர் சிவபெருமான்; வள்ளல்... கங்காளமே - சிவபெருமான் தோளில் அணிவது தாம் விரும்பிய எலும்புக் கூடு; ஐயம் ஏற்பது உரைப்பது வீண் ஐயே - ஐயனே! நீ பிச்சை ஏற்பதாகக் கூறுவதும் பிச்சை ஏற்பதும் பயனற்ற செயல்களே! ஆலவாய் அரன் கையது வீணையே - திருவாலவாய்ச் சிவபெருமான் கையில் இருப் பது வீணை என்ற இசைக்கருவியே.

பாடல் 8:

தோள்கள்பத்தொடு பத்தும் மயக்கியே, தொக்க தேவர் செருக்கை மயக்கியே,
வாள் அரக்கன் நிலத்துக் களித்துமே, வந்து அ(ம்)மால் வரை கண்டு உகளித்துமே,
நீள்பொருப்பை எடுத்த உன்மத்தனே, நின் விரல்தலையான் மதமத்தனே!
ஆளும் ஆதி முறித்தது மெய்கொலோ? ஆலவாய் அரன் உய்த்ததும் மெய்கொலோ?

(பதவுரை) தோள்கள்... மயக்கியே - இருபதுதோள் வலிமையையும் சேர்த்து; தொக்க... மயக்கியே - வந்த தேவர்களது செருக்கை அழித்து; வாள் அரக்கன்... களித்துமே - இராவணன் புஷ்பகவிமானத்திலிருந்து நிலத்தில் களிப்போடு குதித்து; வந்து அ(ம்)மால் வரை கண்டு உகளித்து - அப்பெரிய கயிலைமலையைக் கண்டு துள்ளி; நீள்... உன்மத்தனே - அம்மலையைத் தூக்கிய மதமயக்கத்தை உடையனுயினுனை; நின்விரல்... மதமத்தனே - விரல்நுனியால் அழுத்தி அவன் செருக்கை அழித்தவனே! ஆளும் ஆதி - எல்லா உலகையும் ஆளுகின்ற முதற் பொருளாகிய சிவபெருமான்; முறித்தது மெய்கொலோ - துன்புறுத்தியது இராவணன் உடலைத்தானே? ஆலவாய் அரன் - திருவாலவாயிலுள்ள சிவபெரு மான்; உய்த்ததும் - இராவணனை வரம் கொடுத்து மீளச் செலுத்தியதும்; மெய் கொலோ - உண்மை வரலாறுதானே?

பாடல் 9:

பங்கயத்து உள நான்முகன் மாலொடே, பாதம் நீள்முடி நேடிட மாலொடே,
துங்க நல் தழலின் உரு வாயுமே; தூய பாடல் பயின்றது, வாயுமே;
செங்கயல்கண்ணினுர் இடு பிச்சையே சென்று கொண்டு உரை செய்வது பிச்சு ஐயே!
அங்கியைத் திகழ்விப்பது இடக்கையே; ஆலவாய் அரனுரது இடக்கையே.

(பதவுரை) பங்கயத்து... மாலொடே - தாமரையிலுள்ள பிரமன் திருமாலோடு; மாலொடே பாதம் நீள்முடி நேடிட - மயக்கத்தோடு அடிமுடி தேடவும், துங்க... உருவாயுமே - தூய பெரிய அனற்பிழம்பாகக் காட்சி வழங்கினுர் சிவபெருமான்; தூய... வாயுமே - அவரது திருவாய் தூய பாடலாகிய வேதத்தைச் சொல்லுவ தாகும்; செங்கயல் கண்ணினுர் இடு - தாருகவனத்து முனிவர்கள்பத்தினியர் வழங் கிய; பிச்சையே சென்று கொண்டு - பிச்சையைச் சென்று அவர்கள்பால் பெற்று; உரை செய்வது பிச்சு ஐயே - அவர்களுக்குக் காமப்பித்துண்டாகுமாறு பேசுகின்ற

சிவபெருமானே! அங்கியைத்... இடக்கையே - நீ தீயினை விளங்க வைத்திருப்பது இடக்கையின்கண்ணே; ஆலவாய் அரனுரது கை இடம் - திருவாலவாய், சிவபெருமானுடைய ஒழுக்கம் பொருந்திய இடம்.

பாடல் 10:

தேரரோடு அமணர்க்கு நல்கானையே, தேவர் நாள்தொறும் சேர்வது கானையே;
கோரம் அட்டது புண்டரிகத்தையே; கொண்ட நீள் கழல் புண்டரிகத்தையே;
நேர் இல் ஊர்கள் அழித்தது, நாகமே; நீள்சடைத் திகழ்கின்றது, நாகமே;
ஆரம்ஆக உகந்ததும், என்புஅதே; ஆலவாய் அரனுர் இடம் என்பதே.

(பதவுரை) தேரரோடு... நல்கானையே - பவுத்தசமணருக்கு அருளாத சிவனை; தேவர்... கானையே - தேவர்கள் நாடோறும் சென்று சந்திப்பது கடம்ப வனத்திலேயாம்; கோரம்... புண்டரிகத்தையே - (அப்பெருமான்) தன்னைத் தாக்கத் தாருகவனத்து முனிவர் உய்த்த புலியின் கொடுமையை நீக்கினுன்; கொண்ட நீள்கழல் புண்டரிகத்தையே - சிவபெருமானுடைய கழலணிந்த திருவடிகள் தாமரையை ஒத்துள்ளன; நேர் இல்... நாகமே - மேருமலையாகிய வில் ஒப்பற்ற திரிபுரங்களை அழித்தது; நீள் நாகமே - நீண்ட சடையில் பாம்பு விளங்கிக் கிடக்கின்றது; ஆரம்... என்புஅதே - எலும்பே மாலையாக விரும்பிப் பூணப்பட்டதாகும்; அரனுர் இடம் ஆலவாய் என்பதே - சிவபெருமானுடைய இருப்பிடம் திருவாலவாய் என்ற திருக்கோயில் ஆகும்.

பாடல் 11:

ஈனஞானிகள்தம்மொடு விரகனே, ஏறு பல்பொருள் முத்தமிழ் விரகனே
ஆன காழியுள் ஞானசம்பந்தனே, ஆலவாயினில் மேய சம்பந்தனே
ஆன வானவர் வாயினுள் அத்தனே! அன்பர்ஆனவர் வாயின் உளத்தனே!
நான் உரைத்தன செந்தமிழ் பத்துமே, வல்லவர்க்கு இவை நற்று அமிழ்
பத்துமே.

(பதவுரை) ஆல... சம்பந்தனே - திருவாலவாயில் வீற்றிருக்கும் தொடர்புடையன் ஆகிய; வானவர் வாயினுள் அத்தனே - தேவர்கள் தம் வாயினுல் துதிசெய்யும் தலைவனே! அன்பர்... உளத்தனே - அடியார்களுடைய வாயினும் உளத்தினும் எப்பொழுதும் தங்கியிருப்பவனே! ஈன... விரகனே - சிவஞானிகள் அல்லாதாரோடு சேராத சூழ்ச்சியுடையவனுய்; ஏறு... விரகனே ஆன - பல செய்திகளையும் கொண்ட இயல்இசைநாடகம் என்ற முத்தமிழிலும் வல்லவனுன; காழி... சம்பந்தனே - சீகாழியில் தோன்றிய ஞானசம்பந்தனுகிய; நான்... பத்துமே - நான் திருவாலவாயில் பாடிய இப்பத்துப் பாடல்களையும்; வல்லார்க்கு... பத்துமே - கற்றுவல்ல சான்றோருக்கு இப்பத்துப்பாடல்களும் பேரின்பத்தில் அமிழ்தலையுடைய எல்லை காணுத பத்திக்கடலை நல்கும்.

திரு வீழிமிழலை பழம்பஞ்சுரம்

பாடல் 1:

துன்று கங்கை நம் சடையதே; தூய கண்டம் நஞ்சு அடையதே;
கன்றின்மான் இடக்கையதே; கல்லின் மான் இடக்கையதே;
என்றும் ஏறுவது இடவமே; என்னிடைப் பலி இட வ(ம்)மே;
நின்றதும் மிழலையுள்ளுமே; நீர் எனைச் சிறிதும் உள்ளுமே.

*(பதவுரை)* துன்று கங்கை நம் சடையதே - நீர் செறிந்த கங்கை சிவபெருமான் ஆகிய உம் சடையின்கண் உள்ளது; தூய கண்டம் நஞ்சு அடையதே - தூய செந் நிறத்த கழுத்துக் கருநிறம் பெறுமாறு விடம் தங்குதலை உடையது; கன்றின்மான் இடக்கையதே - மான்கன்று இடக்கையில் கொள்ளப்பட்டுள்ளது; கல்லின் மான் இடம் கையதே - இமவான்மகளான மான் போன்ற பார்வதி உம் இடப்பாகமாக உள்ளாள்; என்றும் ஏறுவது இடவமே - எப்பொழுதும் காளையையே வாகனமாக உடையவர் நீர்; என்னிடைப் பலி இட வம்மே - யான் பிச்சையிடுமாறு என்னிடம் நீர் வருவீராக; நின்றதும் மிழலை உள்ளுமே - நீர் திருவீழிமிழலையிலும் தங்கி இருக் கிறீர்; நீர் எனைச் சிறிதும் உள்ளுமே - நீர் கருணைசெய்ய என்னைச் சிறிது நினைத்துப் பார்ப்பீராக.

பாடல் 2:

ஓதி வாயதும், மறைகளே; உரைப்பதும், பலமறைகளே;
பாதி கொண்டதும், மாதையே; பணிகின்றேன், மிகும் மாதையே;
காது சேர் கனங்குழையரே; காதலார் கனம் குழையரே;
வீதிவாய் மிகும் வேதியா! மிழலை மேவிய வேதியா!

*(பதவுரை)* ஓதி வாயதும் மறைகளே - வேதங்களே உம் வாயினால் ஓதப்படு கின்றன; உரைப்பதும் பல மறைகளே - பல இரகசியமான செய்திகளைச் சனகர் முதலிய முனிவர்களுக்கு உரைக்கின்றீர்; பாதி கொண்டதும் மாதையே - பெண்ணா கிய பார்வதியை உம் பாதிஉடம்பில் கொண்டுள்ளீர்; பணிகின்றேன் மிகும் மாதையே - உம்முடைய மிக்க அழகைக் கண்டு வணங்குகின்றேன்; காது சேர் கனங்குழையரே - காதில் பொருந்திய கனவிய குண்டலத்தை உடையவர் நீர்; காத லார் கனம் குழையரே - காதல் கொள்ளும் பெண்களின் மனத்திண்மையைக் குழையச் செய்பவர் நீர்; வீதிவாய் மிகும் வேதியா - பிச்சை எடுக்கும் தெருக்களில் பிச்சையிட வரும் பெண்களது உள்ளங்களைத் தடுமாறச் செய்யும் வேதியரே! மிழலை மேவிய வேதியா - திருவீழிமிழலையில் வீற்றிருக்கும், வேதங்களால் உணர்த் தப்படும் பரம்பொருளே!

பாடல் 3:

பாடுகின்ற பண் தாரமே; பத்தர் அன்ன பண்டாரமே;
சூடுகின்றது மத்தமே; தொழுத என்னை உன் மத்தமே
நீடு செய்வதும் தக்கதே? நின் அரைத் திகழ்ந்தது அக்குஅதே;
நாடு சேர் மிழலை ஊருமே; நாகம் நஞ்சு அழலை ஊருமே.

*(பதவுரை)* பாடுகின்ற பண் தாரமே - ஊழி இறுதியில் சிவபெருமான் ஆகிய நீ பாடுகின்ற பண் தாரம் என்னும் இசை ஈறாகிய எழுவகை இசையுமே; பத்தர் அன்ன பண்டாரமே - அடியார்களுக்கு உடலுக்கும் உள்ளத்திற்கும் உணவு வழங்கு கின்ற மூல பண்டாரமாய் உள்ளாய்; சூடுகின்றது மத்தமே - நீ ஊமத்தமாலையைச் சூடுகின்றாய்; உன் தொழுத என்னை மத்தமே நீடு செய்வதும் தக்கதே - உன்னை வந்து பணிந்த என்னை மயக்கமுடையவளாகப் பல காலமாகச் செய்வது உன் பெரு மைக்குத் தக்கதா? நின் அரைத் திகழ்ந்தது அக்குஅதே - உன் இடுப்பில் ஒளிவீசு வது அக்கு மாலையே ஆகும்; நாடு சேர் மிழலை ஊருமே - சோழநாட்டில் சிறந்த திருவீழிமிழலையே உனக்கு உகப்பான ஊர்; நஞ்சு நாகம் அழலை ஊருமே - நஞ் சினைக் கக்கும் பாம்பு உன் திருமேனியில் வெம்மையை உயிர்த்தவாறு ஊர்கின்றது.

பாடல் 4:

கட்டுகின்ற கழல் நாகமே; காய்ந்ததும் மதனன் ஆகமே;
இட்டம் ஆவது இசை பாடலே; இசைந்த நூலின் அமர்பு ஆடலே;
கொட்டுவான் முழவம் வாணனே; குலாய சீர் மிழலைவாணனே!
நட்டம் ஆடுவது சந்தியே; நான் உய்தற்கு இரவு சந்தியே.

(பதவுரை) கட்டுகின்ற கழல் நாகமே - கட்டப்பட்ட வீரக்கழல் பாம்பே ஆகும்; காய்ந்ததும் மதனன் ஆகமே - கோபிக்கப்பட்டது மன்மதன் உடல் ஆகும்; இட்டம் ஆவது இசை பாடலே - இசை பாடுதலே தமக்கு விருப்பமாகும்; இசைந்த நூலின் அமர்பு ஆடலே - கூத்துநூலில் கூறப்பட்ட அமைதியை உட்கொண்டு ஆடுதலே தமக்கு விருப்பமாகும்; கொட்டுவான் முழவம் வாணனே - முழாவை ஒலிப்பவன் வாணன் என்ற அடியவனே; குலாய சீர் மிழலை வாணனே - சிறப்புற்ற மிழலை நகரில் தங்கியிருப்பவனே! நட்டம் ஆடுவது சந்தியே - நடனம் ஆடுகின்ற நேரம் மாலைச்சந்தியே ஆம்; நான் உய்தற்கு இரவு சந்தியே - நான் பிழைத்துப்போகுமாறு என் அகவிருள் நீங்க இரவில் என்னைச் சந்திப்பாயாக.

பாடல் 5:

ஒவிலாது இடும் கரணமே, உன்னும் என்னுடைக் கரணமே;
ஏவு சேர்வும் நின் ஆணையே? அருளின், நின்ன பொன் தாள் நையே?
பாவியாது உரை மெய்யிலே; பயின்ற நின் அடி மெய்யிலே
மேவினன், விறல் கண்ணனே; மிழலை மேய முக்கண்ணனே!

(பதவுரை) ஒவிலாது கரணமே இடும் - ஓயாமல் ஐந்தொழிலையும் செய்பவன் ஆகிய நீ; உன்னும் என்னுடைக் கரணமே - உன்னையே தியானம் செய்யும் என் அந்தக்கரணத்தில் உள்ளாய்; ஏவு சேர்வும் நின் ஆணையே - மன்மதபாணம் எங்கள் மேல் தைப்பதும் உன் ஆணையினால்தானே? அருளின் நின்ன பொன்தாள் நை.ஏ - உன்னுடைய அழகிய திருவடிகளை எமக்கு அருளினால் எங்களுக்குத் துன்பம் ஏற் படுமோ? பாவியாது உரை மெய்இல்ஏ - உன்னை மனத்துக்கொள்ளாது பேசும் சொற்கள் உண்மையில்லாதனவாம்; பயின்ற நின் அடி மெய்யிலே மேவினன் விறல் கண்ணனே - பழகிய உன் திருவடிகளை உண்மையாகவே பொருந்தப்பெற்ற வன் ஆற்றல் மிக்க திருமாலே; மிழலை மேய முக்கண்ணனே - திருவீழிமிழலையில் வீற்றிருக்கும் முக்கண்மூர்த்தியே!

பாடல் 6:

வாய்ந்த மேனி எரிவண்ணமே; மகிழ்ந்து பாடுவது வண்ணமே;
காய்ந்து வீழ்ந்தவன் காலனே; கடுநடம் செயும் காலனே;
போந்தது எம்மிடை இரவிலே; பு(க்)கு உ(ம்) இடைக் கள்வம், இரவிலே;
வேய்ந்ததும் மிழலை என்பதே; விரும்பியே அணிவது என்புஅதே.

(பதவுரை) வாய்ந்த மேனி எரி வண்ணமே - நினக்கு வாய்த்த திருவுடல் தீ வண் ணத்தது; மகிழ்ந்து பாடுவது வண்ணமே - நீ விரும்பிப் பாடுவதும் தாளத்தோடு கூடிய இயலிசைப் பாடல்களாகிய வண்ணப் பாடல்களே; காய்ந்து வீழ்ந்தவன் காலனே - உன்னால் கோபிக்கப்பட்டுக் கீழே விழுந்தவன் இயமனே; கடுநடம் செயும் காலனே - நீ விரைந்து நடனம் ஆடும் பாதங்களை உடையாய்; போந்தது எம்மிடை இரவிலே - எம் வீட்டிற்கு நீ பிச்சையேற்றலை உட்கொண்டு வந்துள் ளாய்; பு(க்)கு உ(ம்)மிடை இரவிலே கள்வம் - உம்மோடு சேர்ந்து இரவு நேரத்தில்

கள்ளத்தனமாக மகிழ்வோம்; வேய்ந்ததும் மிழலே என்பது - நீ பொருந்திய ஊர் மிழலே; விரும்பியே அணிவது என்புஅதே - விரும்பி அணிகலனாக அணிவது எலும்பேயாகும்.

பாடல் 7:

அப்பு இயன்ற கண் அயனுமே, அமரர்கோமகனும், அயனுமே,
ஒப்பு இல் இன்று அமரர் தருவதே, ஒண்கையால் அமரர்தரு அதே;
மெய்ப் பயின்றவர், இருக்கையே, மிழலேஊர் உமது இருக்கையே;
செப்பும் இன் எருது மேயுமே; சேர்வு உமக்கு எருதும் ஏயுமே.

(பதவுரை) அப்பு இயன்ற கண் அ(ஐ)யனுமே - கடலில் உறங்கும் கண்களையுடைய திருமாலும்; அமரர்கோமகனும் அயனுமே - இந்திரனும் பிரமனும்; அமரர் - ஏனைய தேவரும்; இன்று ஒப்பு இல் தருவதே - இப்பொழுது தமக்குச் சமானமில்லாத வகையில் பிறருக்குக் கொடுக்கும் ஆற்றல்; ஒண்கையால் அமரர்தருஅதே - நீ வரம் தரும் ஒள்ளிய கையினால் கற்பகமரம் போல வாரி வழங்கியதனாலேயாம்; இருக்கையே மெய்ப் பயின்றவர் - இருக்குவேதத்தையே உண்மையாகப் பயின்ற சான்றோர்கள் (வாழும்); மிழலேஊர் உமது இருக்கையே - மிழலேயாகிய ஊர் உம்முடைய இருப்பிடம் ஆகும்; செப்பும் இன் எருது மேயுமே - பிறரால் புகழ்ந்து கூறப்படும் மன்மதன் அம்பாகிய எருது என் உடம்பில் மேய்கின்றது; சேர்வு உமக்கு எருதும் ஏயுமே - அவ்வெருதினை வெருட்டுவதற்கு நீர் என்னை நோக்கி வர எருது வாகனமாக உள்ளது.

பாடல் 8:

தானவக்குலம் விளக்கியே, தாரகைச் செலவு இளக்கியே,
வான் அடர்த்த கையில் ஆயமே, வந்து மேவு கயிலாயமே-
தான் எடுத்த வல் அரக்கனே தட முடித்திரள் அரக்கனே,
மேல் நடைச் செல இருப்பனே, மிழலே நல் பதி விருப்பனே.

(பதவுரை) தானவக்குலம் விளக்கியே - அசுரர்குலத்தை விளங்கச்செய்தவனும்; தாரகைச் செலவு இளக்கியே - விண்மீன்கள் முதலியவற்றின் போக்கினைத் தடுத்து; வான் அடர்ந்த கையில் ஆயமே - தேவர்களை வருத்திய தன் இருபதுகைகளாகிய தொகுதியினால்; வந்து மேவு கயிலாயமே தான் எடுத்த வல் அரக்கனே - தான் செல்லும் வழியில் பொருந்திய கயிலாயமலேயைப் பெயர்த்து எடுத்த வலிய அரக்கனும் ஆகிய இராவணனுடைய தட முடித்திரள் அரக்கனே - பெரிய முடிகளணிந்த தலேத்தொகுதிகளை அழுத்தித் தேய்த்தவனாகிய; மிழிலேநல்பதி விருப்பனே - திருவீழிமிழலேயில் விரும்பித் தங்கியிருக்கும் சிவபெருமான்; மேல் நடைச் செல இருப்பனே - உலகநடையிலே மக்கள் மேலும்மேலும் செல்லுமாறு அவர்களைச் செலுத்திக்கொண்டிருக்கிறான்.

பாடல் 9:

காயம் மிக்கது ஒரு பன்றியே, கலந்த நின்ன உருபு அன்றியே,
ஏய இப்புவி மயங்கவே, இருவர், தாம் மனம் அயங்கவே,
தூய மெய்த்திரள் அகண்டனே, தோன்றி நின்ற மணிகண்டனே!
மேய இத்துயில் விலக்கு, அணு! மிழலே மேவிய இலக்கணு!

(பதவுரை) காயம் மிக்கது ஒரு பன்றியே - பெரிய பன்றி வடிவெடுத்த திருமாலும்;

இருவர் - பிரமனும் ஆகிய இருவரும்; கலந்த நின்ன உருபு அன்றியே - அடியார்கள் தம் உள்ளம் கலத்தற்குக் காரணமான திருவடிமுடிகளாகிய நின் உருவம் தாம் காணப்பெறுமையால்; ஏய இப்புவி மயங்கவே - பொருந்திய இப்புவிக்கண் கீழே நோக்கித் தோண்டவும், மேல் நோக்கிப் பறக்கவும், ஒன்று சேர்ந்து முயன்று; தாம் மனம் அயங்கவே - தம்முடைய மனம் தடுமாற; தூய மெய்த்திரள் அகண்டனே - தூய உடலாகிய அக்கினிப்பிழம்பு அளவிடப்படாதவன் ஆகி; தோன்றி நின்ற மணிகண்டனே - அடியார்களுக்குக் காட்சி வழங்கும் நீலகண்டனே! அண்ணு - என் தலைவனே! மிழலை மேவிய இலக்கணு - திருவீழிமிழலையில் பொருந்தியிருக்கும் அழகனே! மேய இத்துயில் விலக்கு - எங்கள் தலைவி மனையகத்துப் பொய்த்துயிலோடு மடிந்து வைகுவதை நீக்கி அவளை மணந்துகொள்வாயாக.

பாடல் 10:

கஞ்சியைக் குலவு கையரே, கலக்கம் ஆர் அமணர்கையரே,
அஞ்ச வாதில் அருள் செய்ய நீ, அணைந்திடும் பரிசு செய்ய நீ
வஞ்சனே! வரவும் வல்லையே? மதித்து எனைச் சிறிதும் வல்லையே;
வெஞ்சல் இன்றி; வரு இவ் தகா; மிழலை சேரும் விறல் வித்தகா!

(பதவுரை) கஞ்சியைக் குலவு கையரே - கஞ்சியை விரும்பிக் குடிக்கும் கைகளை உடைய பௌத்தர்கள்; கலக்கம் ஆர் அமணர் கையரே - மனத்தெளிவில்லாத சமணராகிய வஞ்சகர்கள் ஆகியோர்; வாதில் அஞ்ச அருள் - வாதில் தோற்று அஞ்சுமாறு அருளும்; செய்ய நீ - செய்யநிறத்தவனாகிய நீ; அணைந்திடும் பரிசு செய்ய - தழுவும் சூழ்ச்சி செய்வதை; நீ வஞ்சனே - நீக்கும் வஞ்சகனே! எனைச் சிறிதும் மதித்து - சிறிதளவாயினும் என்னைக் கருதி; வல்லையே - விரைவாயாக; வரவும் வல்லையே - எனக்கு அருள் செய்ய வருவாயா? மிழலை சேரும் வித்தகா - திருவீழிமிழலையிலுள்ள சதுரப்பாடு உடையவனே! வெஞ்சல் இன்றி - யாரிடமும் விரோதம் இன்றி; வரு இவ் தகா - வருகின்ற இத்துயரங்கள் எனக்குத் தக்கன அல்ல (அஃதாவது என்னைத் துன்புறுத்துவது நியாயம் ஆகாது என்றவாறு).

பாடல் 11:

மேய செஞ்சடையில் அப்பனே! மிழலை மேவிய என் அப்பனே!
ஏயுமா செய இருப்பனே! இசைந்தவா செய விருப்பனே!
காய வர்க்க(அ) சம்பந்தனே! காழி ஞானசம்பந்தனே
வாய் உரைத்த தமிழ்பத்துமே வல்லவர்க்கும் இவை பத்துமே.

(பதவுரை) செஞ்சடையில் மேய அப்பனே - சிவந்த சடையில் பொருந்திய நீர் வடிவமான கங்கையை உடையவனே! மிழலை மேவிய என் அப்பனே - திருவீழிமிழலையில் வீற்றிருக்கும் எம் தலைவனே! ஏயுமா செய இருப்பனே - முத்தேவரும் தன் சந்நிதியில் அவரவர்க்குப் பொருந்திய முத்தொழிலும் செயத் தான் வாளா இருப்பவனே! இசைந்தவா செய விருப்பனே - அடியார்கள் விரும்பிய வண்ணம் செய்ய விருப்பம் உடையவனே! காய வர்க்க(அ) சம்பந்தனே - ஆகாயம் முதலிய ஐம்பெரும்பூதங்களோடு தொடர்ந்து அற்று இருப்பவனே! காழி ஞான சம்பந்தனே வாய் உரைத்த தமிழ் பத்துமே சீகாழியில் தோன்றிய ஞான சம்பந்தன் ஆகிய நான் சத்தியமாக உரைத்த இப்பத்துப்பாடல்களையும்; வல்லவர்க்கும் இவை பத்துமே - ஓதுதலில் வல்லவர்களுக்கும் பத்திஞானவைராக்கியங்கள் கிட்டும்.

# திரு மாலைமாற்று - பழைய உரை

[உரையில் வரும் எண்கள் பாடபேதங்களைக் குறிப்பன.]

பாடல் 1

யாமாமாநீ யாமாமா யாழீகாமா காணுகா
காணுகாமா காழீயா மாமாயாநீ மாமாயா.
யா மாம்ஆ நீ ஆம் மா! மா யாழீ!கா, மாகா நாகா!
காண் ஆகா! மா காழீயா! மாமா யாநீ! மா மாயா.

| | |
|---|---|
| யா மாம்ஆ | எந்த ஆத்மபோத சேட்டையும் கருவிகளினது சேட்டையும் இவையிற்றினுல் அவையவை ஆமாறு |
| நீ ஆம் மா | அறிவுக்கு அறிவாகி நிற்கின்ற நினது[1] சேட்டை ஒழிந்து வேறென்று அற்ற சற்காரியமாய் உள்ளவனே! |
| மா யாழீ | மிகுதிப்பட்டு மேலாய் இருந்துள்ள நாதஸ்வரூபமாய் இராநின்ற யாழை உடையவனே! அத்தன்மை மிகுதிப்பட்டு நலம் சிறந்துள்ள யாழை இடைவிடாமல் தடவி வாசித்தலான் மிக[2] நல்ல வீணை தடவி என்று பொருள். |
| (கா: | இதனைப் பாடல் இறுதியில் கொள்க.) |
| மாகா நாகா | பரமாகாசத்தைக் கீழ்ப்படுத்தி மலைகளுக்கு எல்லாம் குலமலை ஆகிய ஸ்ரீகயிலாயத்தின்கண்ணே எழுந்தருளியிருப்பவனே! |
| காண் ஆகா | என் உள்ளக்கண்ணுக்குத் தோன்றும் திருமேனியை உடையவனே! |
| மா காழீயா | ஊழிக்காலத்தின்கண்ணும் அழிவின்மையாகிய மேன்மையைப் பொருந்தியுள்ள காழியை உடையானே! |
| மாமா | இங்கு உனது அருள்பெருத இழப்பை உடையனுகிய வெறுமை[3] (தீர) |
| யாநீ | இடபவாகனத்தில் ஏறி வந்து எனக்குப் பொய்கைக் கரையின்கண்ணே வெளிப்பட்டவனே! |
| மா மாயா | மாமாயை ஆகிய குடிலையைக் கொண்ட சுத்த[4] மாயையில் உள்ள தத்துவங்களை உண்டாக்கிக் கன்மம் பொசித்தல் காரணமாகத் திரோதாயி[5] சத்தியாலே மறைந்துள்ள மயக்கமே அறிவாகப் பெத்தத்தைச்[6] செலுத்துபவனே! |
| கா | அந்த மாயாமயக்கம் எனது அறிவிலே சீவியாமல் ஒழிந்து[7] உன்னை எனக்கு உள்ளபடி தந்து என்னை நீ இகழாமல் கொண்டு, இவ்வாறு நீ இரண்டற வாழ்ந்து இரட்சிப்பாயாக - என்றவாறு. |

1. இவனது 2. மிக்க 3. ஏழ்மை
4. அசுத்த 5. திரோதாய 6. பெந்தத்தைச் 7. ஒழித்து

பாடல் 2

யாகாயாழீ காயாகா தாயாராரா தாயாயா
யாயாதாரா ராயாதா காயாகாழீ யாகாயா.
யாகா! யாழீ! காயா! கா, தாய் யார்? ஆராதாய்! ஆயாய்;
ஆய் ஆதாரா! ரா! யாது ஆகாய்! ஆ? காழீ! ஆகாயா!

| | |
|---|---|
| யாகா | இடைவிடாத[1] தீக்கையாக உனது தீண்டுதற்கு அரிய கிரியா சத்தியின்கண்ணே[2] சிவாக்நியைக் கொண்டு என் மலத்ரயத்தை மோசனம்[3] பண்ணினவனே! |
| யாழீ | பரநாதம் முதலாகிய மந்திரயாழை இடைவிடாமல் ஆத்ம உபதேசமாக வாசியாநின்றவனே! |
| காயா | மானைக் காட்டி மானைப் பிடிப்பவரைப் போல, எனது கட்புலன் வெளிப்படத் தோன்றி என்னை உனது சரமபவம் ஆகின்ற பார்வையினுலே பர்ராநின்றவனே! |
| (கா: | இதனை இறுதியில் கூட்டிப் பொருள்செய்க.) |
| தாய் யார் | உன்னை ஒழிய என்னை ஈன்றுர் வேறு[4] உளரோதான்? |
| ஆராதாய் | உனது பேரானந்தத்தை உனது அருள் பெற்றுர் அனுபவிக்கு மிடத்து ஈறு நடுவு முதலுமறத் திருந்தி உள்ளவனே![5] |
| ஆயாய் | கீழ்ச் சொன்ன முதல் நடு இறுதி இல்லாத பேரின்பம் இடையருமல் விளைவான்பொருட்டுத் திருஉள்ளத்து அடையாய். |
| ஆய் ஆதாரா | அத்தன்மை திருவுளத்து அடைக்கப்பட்ட காருண்ய சத்தியாகிய அருட்சத்திக்கு ஆதாரமாய் உள்ளவனே! |
| ரா | எனக்கு ஞானனந்த ஐசுவரியமாகிய இருநிதியம் ஆகின்றவனே! |
| யாது ஆகாய் | கீழ்ச் சொல்லிப்போந்த[6] பொருள்கள் யாவும் நீயாய் இருத்தலானும், எனக்கு விசுவமாகத் தோற்றும் சித் அசித்துக்களுக்கும் எனக்கும் உயிரேயாய்[7] இருத்தலானும், யாரும் யாவையும் ஆகாநின்றவனே! |
| ஆ | இவ்வாறு உயிர்க்கு உயிராய் நிற்க[8] உன்னை எல்லையில் காலமாக இழவாது, இகழப்படுவாயேயோ?[9] |
| காழீ | என்போல்வாரை இரட்சித்தல்பொருட்டாகக் காழி என்னும் பதியைப் படைவீடாக[10] வையாநின்றுள்ளவனே! |
| ஆகாயா | ஞாளுகாசமே திருமேனியாக உடைய நீ நெய்யும் விந்தும் தரித்தாற் போலத் திருமேனியில்லாத் திருமேனி உடையவனே! |
| கா | இத்தன்மை வடிவில்லாத நீ வடிவு ஆகையால், எம் இடத்தில் வடிவு வந்து அடையாதபடி இரட்சிப்பாயாக - என்றவாறு. |

1. இடைவிடாது 2. நிபாதத்தின் 3. விமோசனம் 4. ஆர் வேறு
5. முதலுமற்று இருந்துள்ளவனே. 6. சொல்லிய போன்ற 7. நீயேயாய்
8. இருக்கின்ற 9. இருப்பதே 10. படையா

பாடல் 3

தாவாமூவா தாசாகா ழீநாதாநீ யாமாமா
மாமாயாநீ தாநாழீ காசாதாவா மூவாதா.
தாவா! மூவாத ஆசா! காழீநாதா! நீ ஆம்ஆ மா;
மா மாயா; நீதான்; ஆழீகாசா! தாவா மூவா தா.

| | |
|---|---|
| தாவா | ஆத்மாக்களுக்குச் சடைகட்டித் தபசு பண்ண ஞானம் இன்மையால் அவர்கள்பொருட்டால் கட்டப்பட்ட அருளோங்கும் சடையனே! |
| மூவாத ஆசா | எப்போதும் தருண[1]பாவத்தை அடைந்திருக்கும் தீர்க்காயுவை[2] உடையவனே! |
| காழீ நாதா | காழி என்னும் திருப்பதிக்குச் சுவாமியாய் உள்ளவனே! |
| நீ ஆம் மா | எனக்கு உளதாகிய மலபாவத்தை[3] ஒழித்து உனது சித்சொரூபத்திலே செறிந்து மீண்டும் வாராவழி ஆகிய நீயாம்தன்மையை அருளுவாயாக. |
| மா மாயா | மிகுதிப்பட்ட மா மாயையாலே மயங்கி உன்னை அடையும்படி திருவுள்ளத்தடையாய். |
| நீதான் | கருணையாளனாகிய நீதான் உனது அருளைத் தந்து பிரிவு தோன்றாமல் இரட்சிப்பாயாக. |
| ஆழீகாசா | கடல் பயந்த[4] கறையினை நினது கண்டத்தே தரித்துள்ள கருணையாளனே! |
| தாவா மூவா தா | ஒரு காலத்தில் கேடற்ற, மூப்புஇன்மையை அடைந்துள்ள, ஊழிக்கு அன்றாகிய உனது நித்தத்துவத்தை உன்னை இரண்டற அடைந்த எனக்குத் தருவாயாக - என்றவாறு. |

1. அருண 2. ஆயுளை 3. பந்தத்தை 4பயின்ற

பாடல் 4

நீவாவாயா காயாழீ காவாவானோ வாராமே
மேராவானோ வாவாகா ழீயாகாயா வாவாநீ.
நீவா; வாய்ஆகாய்; யாழீ! கா; வா வானோ வாரா மேய்;
ஏரா வானோ; ஆஆ! காழீ! ஆகாயா! வாவா நீ.

| | |
|---|---|
| நீவா | பதமுத்தியாகிய சாலோக சாமீப சாரூபங்கள் மூன்றும் உனது அருள் பெற்ற எனக்குச் சென்மமாகத் தோன்று தலால்[1]<br>பராசக்திக்கு அதீதமாகிய நின்னை எனக்குத் தருவாயாக. |
| வாய்ஆகாய் | அடியேன் விண்ணப்பம் கேட்டருளி[2] எனக்கு மொழியா[3] மொழியாகிய உனது மௌனவாசகத்தை அருளிச் செய்யாதது என்ன கருணையோ? |
| யாழீ | வேதத்து ஒலி கொண்டு வீணை கேட்கின்ற தன்மை உடையானே! |
| கா வா | வந்து இரட்சிப்பாயாக. |

| | |
|---|---|
| வாஞே வாரா மேய் | சொர்க்காதி இன்பங்களோ என்னில், அவையிற்றில் எனது இச்சையை நீ எழுப்பாமல், இரண்டற்ற உன் திருவடியின்-கண்ணே எனக்கு ஆராத காதலை அருள்செய். |
| ஏரா வாஞே | எனக்கு ஆத்மலாபமாகிய தனமோ சுவர்க்கத்தில் உண்டாகின்ற சுகமோ தருவதாகத் திருவுள்ளம்கொண்டு இருக்கின்றீர். |
| ஆஆ காழீ | ஐயோ! ஈது என்ன காருண்யமோ? காழியின்கண்ணே என் பொருட்டாய்த் திருமேனிகொண்ட கருணையாளனே! |
| ஆகாயா | ஞாஞகாசமாகிய காருண்ய சக்தியை உடையானே! |
| வாவா நீ | எந்தச்[4] சக்தியும் கழலப்பட்ட உன்னேடு ஆராத காதல் உடையார்க்கு அந்தக் காதலுக்குப் பயஞகிய நீயே வந்து தண்ணீர்[5] விடாய் (தீரத்) தண்ணீர் கொடுக்கும் தன்மை போல எனது சன்ம பரிதாபத்தைத் தீர்ப்பாய் - என்றவாறு. |

---

1. தோற்றுதலால் 2. கேட்டருளிய 3. மொழியும் 4. அந்தச் 5. தன்னை

பாடல் 5

யாகாலாமே யாகாழீ யாமேதாவீ தாயாவீ
வீயாதாவீ தாமேயா ழீகாயாமே லாகாயா.
யா கால் ஆம்; ஏயா; காழீ! யாம் ஏது? ஆவீ! தாய் ஆவீ!
வீயா தா; ஈது ஆமே? ஆழீ! காயா! மேல் ஆகாயா!

| | |
|---|---|
| யா கால் ஆம் | தேவரீர் சிவதருமமாக அருளிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று சொல்லப்பட்ட நாலு பாதத்துக்கும் அடியேன் பிராத்தன் அல்லாவகையால், நான், அநாதியிலே[1] இரண்டற நிற்கப்பட்ட அஞ்ஞான நிலையுடனே அஞ்சாம் பாதமாகத் திருவுளம்பற்றிக் காருண்யம் செய்யில் உய்யும் நிலை போலாம். |
| ஏயா | ஈது ஒழிந்து எனக்குக் கீழ்ச்சொல்லிப்போந்த சதுர்வித சேஷ்டங்களிஞலும் செய்தி விளேயாது.[2] |
| காழீ | காழீ என்னும் பதியின்கண்ணே என்பொருட்டாகத் திருமேனி கொண்ட கருணலயனே! |
| யாம் ஏது | இவ்விடத்தில் விண்ணப்பம் செய்த விண்ணப்பமும் அடியேஞல் விண்ணப்பம் செய்தற்கு யான் ஆர்? உனது சேட்டையால் எழுந்திருந்த வாக்கு எனப்படும். |
| ஆவீ | எனது போதத்துக்கு மூல சேட்டையாய் உள்ளவனே! |
| தாய் ஆவீ | எனது உயிர்க்கு உயிராய் நின்றவனே! |
| வீயா தா | எனது அறிவுக்கு அறிவாய் நீ நின்ற சற்காரிய தரிசனமானது அடியேனுக்கு இடையற்று அழியாதிருத்தலைத்[3] தருவாயாக. |
| ஈது ஆமே | அடியேன் விண்ணப்பம் உன் திருவுள்ளத்துக்கு [4] வருமே? |
| ஆழீ | ஞாஞனந்தமாகியுள்ள முதல் நடு இறுதி காணுத பேரின்பக் கடலே! |

| | |
|---|---|
| காயா | என்னைப் போலத் திருமேனி கொண்ட கருணையாளனே! |
| மேல் ஆகாயா | எடுத்தருளிய திருமேனியில் தோயாமல்[5] தன் பரிபூரண போதாகாசமாய் நிற்கும் தன்மையை அநாதியாக அடையக்[6] கர்த்தாஆகின்றவனே! - என்றவாறு. |

---

1. ஆதியிலே 2. க்ஷேமங்களிலும் செய் தீவினையானது 3. அழியாத காதலைத் 4. உள்ளப் பக்குவமே 5. தோமற 6. உடைய

பாடல் 6

மேலேபோகா மேதேழீ காலாலேகா லாஞயே
யேஞலாகா லேலாகா ழீதேமேகா போலேமே.
மேலே போகாமே தேழீ; காலாலே கால் ஆஞயே
ஏல், நாலா கால் ஏலா; காழீ! தேம் ஏகா போலே மே.

| | |
|---|---|
| மேலே போகாமே தேழீ | தேவரீர் உமது திருவருள் இடைவிடாமல் என் அறிவிலே நின்று அறிவிக்கின்ற நிலையை இழந்து உனது செயலைக் கீழ்ப்படுத்தி எனது போதம் மேலிட்டு உன்னை இகழ்ந்து சென்மத்திலே உழந்த[1] நாள் அமையும் அத்தன்மையாகிய உன்னைப் பின்னிட்டு எனது போதமானது சீவியாநின்ற அசத்திய நிலையைத் தள்ளி உன்னை உன்ஞக்கி உள்ளபடி என்னைப் பின்னிடுவாய். |
| காலாலே கால் ஆஞயே ஏல் | தாசமார்க்கம், சத்புத்ரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்று சொல்லப்பட்ட நான்கு பாதங்களாலே உன்னை அடைவார்க்கு வழி செய்திருந்தாய்ஆஞலும், |
| நாலா கால் ஏலா | கீழ்ச் சொல்லிப்போந்த நாலு பாதத்தாலும் உன்னை வழிபடுதல் அடியேற்கு யாது? |
| காழீ | எனது சன்மம் ஒழித்தல் காரணமாகக் காழி என்னும் பதியை உவந்து இருந்துள்ளானே! |
| தேம் ஏகா போலே மே | அடியேற்கு நீ அநுக்கிரகிக்க வேண்டுவது நின்னுடைய[2] சரீரமானது என்னுடைய ஆத்மாவை விட்டு நீங்காதது போலவும், எனது உயிரானது இந்தச் சரீரத்தை விட்டு நீங்காதது போலவும், இத்தன்மை[3] ஒத்த அத்துவிதமாக எனது அறிவிலே ஒழியாமல் பொருந்தி வாழ்வாயாக - என்றவாறு. |

---

1. உழன்ற 2. என்னுடைய 3. அத்தன்மை

பாடல் 7

நீயாமாநீ யேயாமா தாவேழீகா நீதானே
நேதாநீகா ழீவேதா மாயாயேநீ மாயாநீ.
நீ ஆம் ஆ நீயே யாம்ஆ தா; ஏழீ! கா நீதானே
நே தா,நீ; காழீ! வேதா! மாயாயே நீ மாயா நீ!

| | |
|---|---|
| நீஆம் ஆ<br>நீயே யாம்ஆ தா | பதமுத்திகள் ஆகின்ற முத்திகளெல்லாம் கழித்து உனது சத்தியமாகிய சுகாதீதத்தின்கண், அத்துவிதமாகின்ற நீ நாமாம்படியும், அதாஸோகமாகிய நாம் நீயாம்படியும் அனுக்ரகிப்பாயாக. |
| ஏழீ | சப்தகோடி மகாமந்திரங்களுக்கும்[1] பிராணனுய் உள்ளவனே! |
| (கா: | இறுதியில் கூட்டிமுடிக்க) |
| நீதானே | அப்படியே அடியேன் என்னை ஒழியப்பட்ட கருவி ஆதிகள்[2] அனைத்தும் |
| நே தா நீ | ஈதல்ல ஈதல்ல என்று நேதிபண்ண உனது அருளைத் தருவாயாக. |
| காழீ | காழி என்னும் பதியை உடையவனே! |
| வேதா | சதுர்வேதங்களுக்கும் அத்தமாய்[3] உள்ளவனே! |
| மாயாயே நீ | ஒரு காலத்திலும் அழிவற்று[4] இருந்துள்ளவனே! மாயா |
| மாயா நீ | கதியைக் கொண்டு அடியேனை மயக்கி மலபோதத்திலே என்னைத் தள்ளும் மாயங்களை வளர்த்தவனே! |
| கா | எனது மயக்கத்தை உனது காருண்யத்தாலே ஒழிப்பாயாக - என்றவாறு. |

1. மந்திரங்களுள் 2. உபாதிகள் 3. அந்தமாய் 4. அறிவற்று

பாடல் 8

நேணவராவிழ யாசைழியே[1] வேகதளேரிய ளாயுழிகா[2]
காழியுளாயரி(ரு)ளே[3] தகவே யேழிசையாழ விராவணனே.
நேண அராவிழ; ஆசை இழியே! வேக தள் நேரி அளாய் உழி கா;
காழி உளாய்! அரு(ரி)ளே தகவே, ஏழிசை யாழ இராவணனே.

| | |
|---|---|
| நேணஅரா விழ | உனக்குத் திருஅரைஞாணும் நின் மானத்தை மறைக்கும். |
| ஆசை இழியே | பரிவட்டமும் மாசுணமாக விரும்பியுள்ளவனே! |
| வேக தள் நேரி | ஆர்வச் செற்றக் குரோதம் ஆதி ஆகிய வேகங்களைத்[4] |
| அளாய் உழி கா | தள்ளப்பட்டுள்ள வழியாகிய[5] ஞானசக்தியுடனே அளாவி இரண்டறக் கலந்த கருணையாளனே! என்னையும் அந்த ஞானசக்தியிடத்திலே நிறுத்தி உன்னை ஒழிய விசுவம் தோன்றுமல் இரட்சிப்பாயாக. |
| காழி உளாய் | சீகாழி என்னும் திருப்பதியில் பத்தருக்குச் சான்னித்தியம் ஆகாநின்றவனே! |
| அருளே தகவே | தன் அருட்கண்ணை முறைமை பெற எனக்குத் தாராநின்முன் யாரோ என்னின் |
| ஏழிசை யாழ<br>இராவணனே | ஏழிசையும் பொருந்தப்பட்ட யாழை உடைய இராவணனுகி நின்றவனே - என்றவாறு. |

1. நினைவரா மிழையா சழியே 2. வேத கனேரியளாயுழிகான
3. அரியனே 4. எங்களைத் 5. வழகிய

பாடல் 9

காலேமேலே காணீகா ழீகாலேமா லேமேபூ
பூமேலேமா லேகாழீ காணீகாலே மேலேகா.
காலே மேலே காணீ காழீ! காலே மாலே மே பூ;
பூ மேலே மாலே காழீ காணீ! காலே மேலே கா.

| | |
|---|---|
| காலே மேலே காணீ | உனது திருவடியும் திருமுடியும் காண்பான்பொருட்டாக |
| காழீ | காழியுள்ளானே! |
| காலே மாலே | உன் சீபாதம் தேடினன் ஆரோ என்னில், விஷ்ணுவானவன் |
| மே பூ | வராகரூபத்தைப் பொருந்திப் பூமியை இடந்து[1] தேடாநின்றான். |
| பூமேலே மாலே | தாமரைஆதனத்(தைப் பொருந்தின மயக்கத்)தையுடைய |
| காழீ காணீ | பிர்மாஆனவன் அன்னவடிவாய் வயிரம் கொண்டு, இருவரும் மயக்கமே அறிவாக நின்று மயங்கும் படிகள் ஆணயவனே![2] |
| காலே மேலே கா | கீழ்ச் சொன்ன இருவரையும் மயங்கச்[3] செய்வித்தாற் போல, அடியேனையும் மயங்கச்[4] செய்வியாதே, உன் சீபாதங்கள் இரண்டனையும்[5] எனது ஒழிவாகிய உச்சியிலே தந்தருளி, இடையறாமல் உன்னைத் தந்து என்னை இரட்சிப்பாயாக - என்றவாறு. |

1. பூமியிடம் 2. கண்டவனே 3,4. மயக்கம்
5. இரண்டினையே

பாடல் 10

வேரியுமேணவ காழியொயே யேனநிணேமட ளோகரதே
தேரகளோடம ணேநினையே யொழிகாவணமே யுரிவே.
வேரியும் ஏணவ! காழியொயே! ஏனை நி ணே மடளோ கரதே;
தேரர்களோடு அமணே நினையே ஒழி; காவணமே உரிவே.

| | |
|---|---|
| வேரியும் ஏணவ | வெருவுதலை உடைத்தாகிய மான்கன்றினைச் சீஅத்தத்தில் தரியாநின்றுள்ளவனே! |
| காழியொயே | காழி என்னும் திருப்பதியை உறைவிடமாக உடையவனே! |
| ஏனை நி ணே மடளோ கரதே | வாக்குருபமாக வடிவுகொண்டு பதினான்கு உலகத்தையும் ஸ்ரீவண்மை[1] உடையதாகிய ஒரு கோட்டு நுனியிலே கொண்ட விஷ்ணுவான் பெரும்பன்றியினது கோட்டினை அவனது ஆங்காரம் தீரப் பறித்தருளி அப்பன்றியது வெற்றியைக் கெடுத்தருளியது. அப்பன்றியைச் சிட்சை பண்ணி அதனது ஆங்காரம் கெடுத்து, அன்றே தன்னை அடையும் தலைமை யுடையாரிடத்து உண்டாக்கப்பட்ட அகங்காரத்தை ஒழிப்பான்பொருட்டாக உனது திருமார்பிலே ஏன முளைக்கொம்பு பூணுதலால் இவ்வாறு பன்றிக்கு அருள் செய்ததன்றி இராது,[2] ஆத்மாக்களது[3] அகங்காரங்களையும் கெடுத்தருளாநின்ற கருணையாளனே! |

| | |
|---|---|
| தேர(ர்)களோடு அமணே நினையே ஒழி | பவுத்தரையும் அமணரையும் வாதின்கண் அழிவித்தல் நீயே அன்றி, யான் அழிவித்தேன் என்னும் தத்போதத்தை என்னைப் போந்து பொருந்தாமல் உனது செயல் செயலாக என்னுற்றம் சிறிதும் வாராமல் ஒழிப்பாயாக. |
| காவணமே உரிவே | இவ்வாறு எனது தொழிலாயுள்ள யாவைகளும் உனது செயலாகத் தந்து இடையிடாமல் எனது அறிவிலே நின்று இரட்சிப்பாயாக, எனது அறிவுக்குத் ததோத்தமான முத்திகள் இரண்டிலும் உரித்தாய் உள்ளவனே! - என்றவாறு. |

1. மை 2,3. சாவாத மாக்களது

பாடல் 11

நேரகழாமித யாசழிதா யேனனியேனனி ளாயுழிகா
காழியுளானின யேனினயே தாழிசயாதமி ழாகரனே.
நேர் அகழாம் இதய ஆசு அழிதாய்! ஏனன் நீயே; நனிளாயுழிகா!
காழியுளாய்! நினையே நினையே தாழிசயா, (ஆ!)தமிழாகரனே!

| | |
|---|---|
| நேர் அகழாம் இதய ஆசு அழிதாய் | மானைக் காட்டி மானைப் பிடித்தாற் போல ஏன்ற பாலத்திரு-மேனி கொண்டருளி, என்னை ஒரு காலத்திலும் விட்டு நீங்காமல் என்னிடத்தில் மிகுதியாக சீவிக்கப்பட்ட மலத்ரய மாகிய குற்றங்களை அழியாநின்றுள்ளவனே! |
| ஏனன் நீயே | உனது பரிபூரணமான அனுபவ[1] நிலையில் எனக்கு உண்டான தாலோக[2] நிலையெல்லாம் நீயே! |
| நனிளாயுழிகா | என்னிடத்திலே நின்று என்னை ஒழித்துக் கோதிலா அமுதாக நீயே வாழ்ந்து என்னைச் சிறிதும் தோன்றவிடாமல் இரட்சியாநின்றவனே! |
| காழியுளாய் | இத்தன்மையான பரமசாயுச்சியத்தை அடியேற்குப் பிரசாதிப்பான்பொருட்டாகக் காழி என்னும் பதியைப் படைத்துள்ளானே! எனது ஒரு விண்ணப்பம் கேட்பாயாக. |
| நினையே நினையே தாழிசயா | நின்னைச் செய்யுட் கருத்தாக உடைய இம்மாலைமாற்று என்னும் பெயரை உடையதாய்ச் சித்தாய் விரிந்துள்ள தாழிசையாம் பாடலானது |
| (ஆ)தமிழாகரனே | ஐயோ! ஐயோ! தமிழுக்குப் படுதுறையாகிய - யான் எனது போதத்தால் பாடிய - பாடல் என்று உலகத்தார்உரை[3] செய்வதே. ஆதலால் நீ அறிய யான் பாடியது இல்லை என்கிற செய்தி உமக்கே நிகழும் ஆதலால் இப்பாடலை ஏதத் தத்துவம்[4] செய்தாரும் நீயே. அடிமை குலையாதார் சாயுச்சி யத்தைப் பெறுவார்கள் - என்றவாறு. |

1. அருவ உருவ 2. தாக சுக
3. உலகத்தாரைச் 4. ஏத்தத் தவம்

# திருமாலைமாற்று - இன்றைய உரை

*பாடல் 1:*

*யாமாமாநீ யாமாமா யாழீகாமா காணுகா*
*காணுகாமா காழீயா மாமாயாநீ மாமாயா.*
*யாம் ஆமா? நீ ஆம் ஆம்; மா யாழீ! காமா! காண் நாகா!*
*காணு காமா! காழீயா! மா மாயா! நீ, மா மாயா.*

*(பதவுரை)* யாம் - ஆன்மாக்களாகிய நாங்கள் கடவுள் என்றால்; ஆமா - அது பொருந்துமா? நீ - நீயே கடவுள் என்றால்; ஆம் ஆம் - அது முற்றிலும் பொருந்தும்; மா யாழீ - பெரிய வீணையை வாசிப்பவனே! காமா - யாவரும் விரும்பத்தக்க கட்டழகனே! காண் நாகா - யாவரும் காணுமாறு பூண்ட பாம்புகளை அணிகலனாக உடையவனே! காணு காமா - காமனைக் கைகால் முதலிய அவயவங்கள் தோன்றாதவாறு அழித்தவனே! காழீயா - சீகாழியில் இருப்பவனே! மா மாயா - இலக்குமிக்குக் கணவனான திருமாலாகவும் வருபவனே! மா மாயா - கரியனவாகிய மாயை முதலிய மலங்களினின்றும்; நீ - எம்மை விடுவிப்பாயாக.

*பாடல் 2:*

*யாகாயாழீ காயாகா தாயாராரா தாயாயா*
*யாயாதாரா ராயாதா காயாகாழீ யாகாயா.*
*யாகா! யாழீ! காயா! காதா! யார்ஆர் ஆ தாய்ஆயாய்!*
*ஆயா! தார் ஆர் ஆயா! தாக ஆயா! காழீயா! காயா.*

*(பதவுரை)* யாகா - வேள்விவடிவானவனே! யாழீ - வீணை வாசிப்பவனே! காயா - அடியவருக்கு அருள உருவத்திருமேனி கொண்டவனே! காதா - சங்கார மூர்த்தியே! யார்ஆர் - எவர்எவருக்கும்; ஆ - பொருந்திய; தாய்ஆயாய் - தாய் ஆனவனே! ஆயா - பிறரால் ஆராய முடியாதவனே! தார் ஆர் ஆயா - மாலையை ஆத்திப் பூவாகக் கொண்டவனே! தாக - நின்னிடம் வேட்கை கொண்ட; ஆயா - முனிபத்தினிகளான கூட்டத்தை உடையவனே! காழீயா - சீகாழியில் வீற்றிருப்பவனே! யா - எவ்வகைப்பட்ட துன்பங்களிலிருந்தும்; கா - எம்மைக் காப்பாற்றுவாயாக.

*பாடல் 3:*

*தாவாமூவா தாசாகா ழீநாதாநீ யாமாமா*
*மாமாயாநீ தாநாழீ காசாதாவா மூவாதா.*
*தாவா மூவா தாசா! காழீநாதா! நீ யாமா! மா!*
*மா மா யாநீ! தான ஆழீ! காசா! தா, வா, மூ வாதா!*

*(பதவுரை)* தாவா - அழிவில்லாத; மூவா - மூத்தல் இல்லாத; தாசா - தசகாரியத்தால் அடையப்படும் பொருளாக உள்ளவனே! காழீ நாதா - சீகாழிப்பதியின் தலைவனே! நீ - எவரும் நடமாடுவதற்கு அஞ்சி நீக்குகின்ற; யாமா - இரவுயாமத்தில் நட்டம் ஆடுபவனே! மா - பெருமை வாய்ந்தவனே! மா மா - பெரிய அயிராவணம் என்ற யானையை; யாநீ - வாகனமாக உடையவனே! தான ஆழீ - கொடைக்கடலே! காசா - இரத்தினம் போன்ற ஒளி உடையவனே! மூ - எவற்றிற்கும் முன்னே தோன்றிய; வாதா-காற்று முதலான ஐம்பூத வடிவாய் உள்ளவனே! வா - என்முன் எழுந்தருளுவாயாக; தா - கேட்ட வரங்களை எல்லாம் தருவாயாக.

பாடல் 4:

நீவாவாயா காயாழீ காவாவானோ வாராமே
மேராவானோ வாவாகா ழீயாகாயா வாவாநீ.
நீவா வாயா! கா யாழீ! கா, வா, வான் நோ வாராமே;
மேரா, வான் நோவாஆ! காழீயா! காயா! வா வா, நீ.

(பதவுரை) நீவா - என்றும் மாறாத; வாயா - உண்மைப் பொருள் ஆனவனே! கா - தாங்கிய; யாழீ - வீணையை உடையவனே! வான் நோ வாராமே - கொடிய பிறவித்துன்பம் எம்மை எய்தாமல்; வா கா - வந்து காத்தருள்வாயாக; வான் நோவாஆ - தேவர்கள் துன்பமடையாதவாறு; மேரா - மேருமலையை ஏந்தினவனே! காழீயா - சீகாழியில் எழுந்தருளியுள்ளவனே! காயா-ஆகாய சுவரூபியே! வா வா நீ - நீ அருள் செய்ய விரைந்து வருவாயாக. (காயா: ஆகாயா என்பதன் முதற்குறை)

பாடல் 5:

யாகாலாமே யாகாழீ யாமேதாவீ தாயாவீ
வீயாதாவீ தாமேயா ழீகாயாமே லாகாயா.
யா காலா! மேயா! காழீயா! மேதாவீ! தாய் ஆவீ!
வீயாதா! வீதாம் மே யாழீ! கா, யாம் மேல் ஆகு ஆயா.

(பதவுரை) யா - எல்லாப் பொருள்களுக்கும்; காலா - இறுதி செய்பவனாக உள்ளவனே! மேயா - எல்லாவற்றினுள்ளும் அந்தர்யாமியாய் மேவி இருப்பவனே! காழீயா - சீகாழிப்பதியில் வீற்றிருப்பவனே! மேதாவீ - அறிவில் மிக்கவனே! தாய் ஆவீ - எமக்குத் தாயும் உயிருமாக இருப்பவனே! வீயாதா - என்றும் அழிவில்லாதவனே! வீதாம் - கின்னரம் முதலிய பறவைகள்; மே - விரும்பிவந்து அணுகுமாறு; யாழீ - யாழ் வாசித்தலை உடையவனே! யாம் - அடியோமாகிய யாங்கள்; மேல் - மேற்கொண்டு; ஆகு - எதிர்காலத்து நிகழ்வனவற்றிற்கு; ஆயா - ஆயாதவாறு; கா - எம்மைக் காப்பாயாக.

பாடல் 6:

மேலேபோகா மேதேழீ காலாலேகா லானையே
யேனலாகா லேலாகா ழீதேமேகா போலேமே.
மேலே போகாமே தேழீ, காலாலே, கால் ஆனையே!
ஏல் நால் ஆகி ஆல் ஏலா! காழீ தே! மேகா! போலேமே?

(பதவுரை) மேலே போகாமே - மார்க்கண்டன்மீது தாக்கச் செல்லாதபடி; தேழீ - எமனைக் கடுங்குரலால் உரப்பி; காலாலே - இடத்தாளினால்; கால் ஆனையே - அந்த எமனுக்கு எமன் ஆயினையே! ஏல் நால் ஆகி - பொருந்திய சனகர் முதலிய நால்வருக்கும் குரு ஆகி; ஆல் ஏலா - கல்லாலமர நிழலைத் தங்கும் இடமாக ஏற்றவனே! காழீ தே - சீகாழியில் உள்ள தெய்வமே! மேகா - திருமாலை மேகவடிவினராக்கி வாகனமாகக் கொண்டவனே! போலேமே - யாங்கள் அத்திருமாலை ஒத்திலேமோ?

பாடல் 7:

நீயாமாநீ யேயாமா தாவேழீகா நீதானே
நேதாநீகா ழீவேதா மாயாயேநீ மாயாநீ.
நீயா மாநீ! ஏயா மாதா! ஏழீ! கா, நீ தானே;
நே தாநீ! காழீ வேதா! மாயாயே, நீ, மாய் ஆநீ?

(பதவுரை) நீயா - உன்னை நீத்தல் அறியாத; மானீ - உமாதேவியை உடையவனே! ஏயா - தன்னை ஒப்பார் இல்லாத; மாதா - தாய் ஆனவனே! ஏழீ - ஏழிசை வடிவானவனே! கா நீதானே - நீயே வலிய வந்து என்னைக் காப்பாற்றுவாயாக; நே - அன்புக்கு; தாநீ - இருப்பிடமாக உள்ளவனே! காழீ வேதா - சீகாழியில் எழுந்தருளியிருக்கும் வேதவடிவானவனே! மாய் - எங்களை வருத்தும்; ஆநீ (ஹாநி) - துன்பங்களை; நீ - எங்கள் தெய்வமாகிய நீ; மாயாயே - போக்கமாட்டாயா?

பாடல் 8:

நேணவராவிழ யாசைழியே வேகதளேரிய ளாயுழிகா
காழியுளாயரி ளேதகவே யேழிசையாழவி ராவணனே.
நே அணவர் ஆ விழ, யா ஆசை இழியே! வேக அதள ஏரி அளாய உழி கா;
காழிஉளாய்! அரு இளவு ஏது! அகவே; ஏழிசை, யாழ, இராவணனே.

(பதவுரை) நே அணவர் ஆ - உன் திருவடியில் நேசம் பொருந்தும் அடியவரான பசுக்கள்; விழ - தம்வசமற்றுக் கிடக்க; யா ஆசை - கட்டிய ஆசையாகிய கயிற்றை; இழியே - அவிழ்த்து விடுபவனே! வேக அதள ஏரி - வேகமாக ஓடும் மானின் தோலை உடுத்து அழகாகக் காட்சி வழங்குபவனே! அளாய உழி கா - துன்பங்கள் எம்மைச் சூழ்ந்தவிடத்துக் காப்பாற்றுவாயாக; காழிஉளாய் - சீகாழிப்பதியில் உள்ள பெருமானே! அரு ஏது - மன்னித்தற்கு அரிய குற்றங்கள்; இளவு - எமது சிறுமைத்தன்மையால் செய்தன ஆகலின், அ(ஃ)கவே - அவை மன்னிக்கத்தக்கன ஆகும்; ஏழிசை இராவணனே - ஏழிசை பாடிய இராவணனும் அல்லனோ பெரும் பிழை செய்து அது மன்னிக்கப்பெற்றுத் திருவருளுக்குப் பாத்திரம் ஆயினன்! (ஆதலின் செருக்கினால் செய்த பிழையையே மன்னித்த கருணை, சிறுமையால் செய்த பிழையை மன்னிக்கும் என்று வேண்டியவாறு.) யாழ: அசை.

பாடல் 9:

காலேமேலே காணீகா ழீகாலேமா லேமேபூ
பூமேலேமா லேகாழீ காணீகாலே மேலேகா.
காலே, மேலே, காண் நீ காழீ! காலே! மாலே மே பூ
பூமேல் ஏ(ய்), மாலே, காழீ! காண் ஈ; காலே மேலே கா.

(பதவுரை) காலே - காற்றாகி எங்கும் கலந்தவனே! மாலே - எவற்றிற்கும் மாயம் செய்பவனே! மே - சிறந்த; பூ - மலர்ந்த; பூமேல் ஏ(ய்) - தாமரையில் தங்கும் பிரமனும்; மாலே - திருமாலும்; காலே மேலே காண் நீ - அடியையும் முடியையும் காண்டலை ஒழித்த; காழீ - சீகாழிப்பதியில் உள்ளவனே! காழீ - வயிரத்தன்மையனே! காண் - எங்களைக் கடைக்கணிப்பாயாக; காலே ஈ - உன் திருவடிகளை எங்களுக்கு வழிபடத் தருவாயாக; மேலே கா - இதுவரை காத்தது போலவே, இனி வருங்காலத்தும் எம்மைக் காப்பாயாக.

பாடல் 10:

வேரியுமேணவ காழியொயே யேனைநிணேமட ளோகரதே
தேரகளோடம ணேநினையே யேயொழிகாவண மேயுரிவே.
வேரியும் ஏண் நவ காழியொயே! ஏனை நீள் நேம் அடு அள் ஓகரதே;
தேர(ர்)களோடு அமணே நினை ஏ ஏய் ஒழி; கா வணமே உரிவே.

(பதவுரை) வேரியும் - நறுமணமும்; ஏண் - பெருமையும்; நவம் - புதுமையும்

உடைய; காழியொயே - சீகாழிப்பதிக்கு உரியவனே! ஏனே - மற்றைய துன்பத்தையும்; நீள் நேம் - மிக்க அன்பினையும்; அடு - அழித்தலும்; அள் - அள்ளிக் கொள்ளுதலும் ஆகிய செய்கைகள்; ஒகரதுஏ - யோகிகளுடைய செயல்களேயாம்; தேர(ர்) களோடு - புத்தர்களின் உபதேசங்களோடு; அமணே - சமணர்களின் உபதேசங்களையும்; நினை - நினைத்தலையும்; ஏ - ஏவுதலையும்; ஏய் - பொருந்துதலையும்; ஒழி - நீக்குவாயாக; கா வணமே - அவைதிக நெறிகளில் சேராதவாறு எம் மனத்தைக் காக்கும் திறன்; உரிவே - உனக்கு உரியதேயாம்.

பாடல் 11:

நேரகழாமித யாசழிதா யேனனியேனனி ளாயுழிகா
காழியுளானின யேனினயே தாழிசயாதமி ழாகரனே.
நேர் அகழ் ஆம் இதய ஆசு அழி! தாய் ஏல் நன் நீயே; நன் நீள்! ஆய்உழி கா;
காழி உளான் இன் நையே நினையே, தாழ் இசையா, தமிழ்ஆகரனே.

(பதவுரை) நேர் அகழ் ஆம் - நேர்மையை அகழ்ந்து எறிவனவாகிய; இதய ஆசு - உள்ளத்தே தோன்றும் காமவெகுளிமயக்கங்களாகிய குற்றங்களை; அழி - அழிக்க வல்லானே! (அழி : 'அழீ' என்பதன் குறுக்கல்.) தாய் ஏல் நன் நீயே - இவ்வுலகத்திற்கெல்லாம் தாயாம் தன்மையை ஏற்கத்தகும் பெரியோன் நீயே ஆவை; நன் நீள் உயிர்கட்கு நன்மை செய்வதில் மிக்கோனே! ஆய்உழி கா - யாங்கள் உடல் நுணுகித் தளர்ந்தவிடத்துக் காப்பாயாக; தமிழ்ஆகரனே - தமிழினது இருப்பிடமாகிய திருஞானசம்பந்தன் பாடிய; காழி உளான் - சீகாழிப்பதியில் எழுந்தருளியுள்ள பெருமானைப் பற்றிய; இன் - இனிய; நையே - கேட்போர்தம் மனத்தைக் குழைவிப்பனவாகிய இப்பாடல்களை; நினையே - நினைத்துப் பாடவே; தாழ் (தாழ்வு) - குறைபாடுகள்; இசையா - பொருந்தமாட்டா.

# பாகம் - 3

# தலங்கள்

# 3. திருப்பதிகக்கோவை முதலியன

## அ) திருப்பதிகக்கோவை

ஒன்று ஆதி ஓர்எழுபத்தொன்று ஈறுய் மூவர்தமிழ்
சென்ருர் சிவதலங்கள் செப்புதற்கு - நின்று
கடக்கும் சரமுகன் நேர் காய்விழியான் ஈன்ற
கடக் குஞ்சரமுகனே காப்பு.

பன்னு சிவதலம் ஒருநூற்றுஐம்பத்துமூன்று
பதிகம் ஒன்ரும்; நாற்பத்தொன்பது பதிகம் இரண்டாம்;
முன்னும் இருபத்தெட்டுநகர் பதிகம் மூன்ரும்;
ஒரு பதினேர்தலம் பதிகம் ஒருநான்கு என்று உணர்க;
மன்னும் இருநான்குதலம் ஓர்ஐந்தே பதிகம்;
மற்றும் ஐந்துதலங்களுக்கு வரு பதிகம் ஆரும்;
பின்னும் ஐந்து வள நகர்க்குப் பெறும் பதிகம் ஏழாம்;
பேசும் ஒருநான்குதலம் பெறும் பதிகம் எட்டே. 1

பரவும் ஒருநான்குதலம் பதினென்ரும் பதிகம்;
பன்னு இருதலம் பதிகம் பன்னிரண்டாப் பகரும்;
உரைசெய் இருதலம் பதிகம் பதினெட்டாம்; இப்பால்
ஒருமூன்றுதலங்களுக்கு இங்கு உறும் பதிகம் உரைக்கின்,
நிரவி வரும் அறுநான்கும், முப்பதிற்றுநான்கும்,
நீடு எழுபத்தொன்றும் என நிரல்நிறையாம்; ஆகக்
கருது சிவதலம் இருநூற்றெழுபத்துநான்கு;
கடைக்காப்பு ஓர்எழுநூற்றுநாற்பதிற்ருென்பானே. 2

திருப்பழுவூர், சேய்ஞலூர், திருமுல்லைவாயில்.
திருவைகா, கொடி மாடச் செங்குன்றூர், வியலூர்,
கருக்குடி, தெங்கூர், பனந்தாள், கலிக்காமூர்,
தலைச்சங்காடு, மயேந்திரப்பள்ளி, கச்சினம், கன்ருப்பூர்,
குரக்குக்கா, பெரும்புலியூர், திருக்காட்டுப்பள்ளி,
குடந்தைக் கீழ்க்கோட்டமொடு, குடந்தைக்காரோணம்,
எருக்கத்தம்புலியூர், வெண்டுறை, கண்ணர்கோயில்,
இலம்பையங்கோட்டூர், சிக்கல், இராமனதுஈச்சரமே. 3

பள்ளியின்முக்கூடல், திருஇரும்பூளை, ஆலூர்ப்
பசுபதீச்சரம், பாலைத்துறை, பருதிநியமம்,

கள்ளில், குரங்கணில்முட்டம், திருமுருகன்பூண்டி,
கஞ்சனூர், கச்சிநெறிக்காரைக்காடு, ஒத்தூர்,
புள்ளமங்கை, நாட்டியத்தான்குடி, கலையநல்லூர்,
புக்கொளியூர் அவிநாசி, பூவனூர், துறையூர்,
கொள்ளிக்காடு, இடைச்சுரம், அச்சிறுபாக்கம், விளமர்,
கொட்டையூர், கொடுங்குன்றம், கூடலையாற்றூரே. 4

நெல்வேலி, திருஅழுந்தூர், தருமபுரம், பயற்றூர்,
நெடுங்களம், வக்கரை, இரும்பைமாகாளம், வடுகூர்,
நெல்வெண்ணெய், வடமாந்துறை, திருவிற்கோலம்,
நீடூர், சக்கரப்பள்ளி, அகத்தியான்பள்ளி,
நெல்வாயில், பேணுபெருந்துறை, நாலூர்மயானம்,
நெல்லிக்கா, விற்குடிவீரட்டம், மதிமுற்றம்,
வல்லம், அறைஅணிநல்லூர், தலையாலங்காடு,
வாட்போக்கி, திருநாவலூர், மயிலாப்பூரே. 5

திருஆரூர் பரவையுள்மண்டளி, சாத்தமங்கை,
சிற்றேமம், தெளிச்சேரி, திருஉசாத்தானம்,
கரவீரம், திருஆலம்பொழில், வெண்ணெய்நல்லூர்,
கச்சி அநேகதங்காவதம், கோடிக்குழகர்,
அரசிலி, தென்குடித்திட்டை, வடமுல்லைவாயில்,
அம்பர்ப் பெருந்திருக்கோயில், வெண்பாக்கம், சுழியல்,
பெருமணம், இந்திரநீலப்பருப்பதம், வேற்காடு,
பேரெயில், பாற்றுறை, மூக்கீச்சரம், சாமுண்டீச்சரமே. 6

பறியலூர்வீரட்டம், கானாட்டுமுள்ளூர்,
பாதாளீச்சரம், எதிர்கொள்பாடி, வலிதாயம்,
சிறுகுடி, கச்சூர்ஆலக்கோயில், கொள்ளம்பூதூர்,
திருப்புறவார்பனங்காட்டூர், விளநகர், தண்டலைநீள்-
நெறி, அரதைப்பெரும்பாழி, ஊறல், கருவூர் ஆ-
னிலை, இடும்பாவனம், கடுவாய்க்கரைப்புத்தூர், கடப்பந்-
துறை, திருஏடகம், திருஅஞ்சைக்களம், ஆடானை,
சோபுரம், கற்குடி, வடகுரங்காடுதுறையே. 7

திருமாணிகுழி, வேட்டக்குடி, திருவாப்பாடி,
திருந்துதேவன்குடி, மாகறல், சத்திமுற்றம்,
திருஆப்பனூர், மீயச்சூர், அவ்வூர்தன்னில்
திகழ்ந்த திருஇளங்கோயில், வெஞ்சமாக்கூடல்,
பெருநீலக்குடி, மண்ணிப்படிக்கரை, நன்னிலத்துப்-
பெருங்கோயில், திருநணா, திருப்பட்டீச்சரமே,
திருஈங்கோய்மலை, வன்பார்த்தான்பனங்காட்டூரே,
திருப்புகலூர், வர்த்தமானேச்சரம், பாம்புரமே. 8

கடைமுடியே, ஓணகாந்தன்தளி, கோட்டூர், வை-
கல்மாடக்கோயில், இடையாறு, பழையாறை

வடதளி, நல் தினைநகரம், கோணமாமலை, சீர்
வன்னியூர், கருவிலி, அநேகதங்காவதம், நல்
இடம் மேவு கடிக்குளம், நல் திருக்களர் என்று இவைகட்கு
இரும் பதிகம் ஒவ்வொன்று என்று இசைத்திடுக; இப்பால்
குடவாயில், புனவாயில், தூங்கானைமாடம்,
கோழம்பர், அவள்இவள்நல்லூர், கோலக்காவே. 9.

குருகாவூர், திருவேள்விக்குடி, விசயமங்கை,
குற்றாலம், குடமூக்கு, கோட்டாறு, பனையூர்,
கருகாவூர், குரங்காடுதுறை, ஓமாம்புலியூர்,
கண்டியூர், வேதிகுடி, கானூர், கோகரணம்,
திருவாரூர்அரநெறி, பந்தணைநல்லூர், நல்லம்,
திருக்கண்டீச்சரம், தேவூர், திருச்சிராப்பள்ளி,
பெருவேளூர், கீழ்வேளூர், எறும்பியூர், கானப்-
பேர், திருமங்கலக்குடி, ஆக்கூர், கோவலூரே. 10.

திருப்பரங்குன்றம், திருப்பாதிரிப்புலியூர், குறுக்கை,
திருப்புத்தூர், மணஞ்சேரி, பாச்சில்ஆச்சிராமம்,
கருப்பறியலூர், கேதீச்சரம், திருக்கேதாரம்,
கச்சிமேற்றளி, மேலைத்திருக்காட்டுப்பள்ளி,
அருத்திஉறு பட்டினத்துப் பல்லவனீச்சரம், பேர்
அன்பில்ஆலந்துறை, பராய்த்துறை, வேட்களம், இங்கு
உரைத்த சீர் அன்னியூர், இவ்விரண்டாம் பதிகம்
உள்ள தலம்; கடவூர்மயானம், வாஞ்சியமே. 11.

துருத்தி, திருநனிபள்ளி, திருமருகல், திருப்பூந்-
துருத்தி, புறம்பயம், கடவூர், புள்ளிருக்குவேளூர்,
அரத்துறை, வாழ்கொளிபுத்தூர், வான்மியூர், பாசூர்,
அம்பர்மாகாளம், மயிலாடுதுறை, வாய்மூர்,
திருக்கழுக்குன்றம், பாண்டிக்கொடுமுடி, இராமேச்சரம்,
செங்காட்டங்குடி, வெண்ணி, திருச்செம்பொன்பள்ளி,
பருப்பதம், புன்கூர், அரிசிற்கரைப்புத்தூர், சேறை,
பைஞ்ஞீலி, கற்குடிமாமலை, பதிகம் மூன்றே. 12.

வலம்புரம், ஆலங்காடு, சிவபுரம், காளத்தி,
வலிவலம், சாய்க்காடு, திருக்கோடிகா நகரம்,
நலம் திகழும் பூவணம், கோளிலி, நின்றியூரும்,
நறையூர்ச் சித்தீச்சரமும், நான்கு ஆகும் பதிகம்;
வலஞ்சுழி, நல்லூர், பழனம், ஆமாத்தூர், அண்ணா-
மலை, கடம்பூர், இன்னம்பர், நாரையூர், ஐந்தாம்;
நிலம் திகழ் நாகேச்சரம், மாற்பேறு, மழபாடி,
நெய்த்தானம், வெண்காடு, நீள் பதிகம் ஆறே. 13.

கயிலாயம், ஆனைக்கா, நள்ளாறு, நாகைக்-
காரோணம், திருச்சோற்றுத்துறை, ஏழு; புகலூர்,
வயல் ஆரும் கழிப்பாலை, ஒற்றியூர், திருஆ-
வடுதுறை, எட்டாம்; தில்லை, மறைக்காடு, மதுரை,
இயல் ஆரும் முதுகுன்றம், பதினொன்று; கச்சி
ஏகம்பம், இடைமருது, ஈர்ஆறு; ஐயாறு, அதிகை,
அயல் ஈர்ஒன்பான்; வீழி, ஆரூர், சீகாழி,
அறுநான்கு, முப்பான்நான்கு, எழுபத்தொன்று ஆமே. 14.

திருஞானசம்பந்தர் அருளிச்செய்த
திருப்பதிகம் பொதுவகையால் ஓர்ஏழ் ஆகும்;
அரு நாவுக்கரசர்பிரான் முப்பத்தேழ் ஆம்;
ஆரூரன் நம்பி ஒரு நான்கு ஆம்; கை-
வரு ஞானப் பொதுப்பதிகம் நாற்பத்தெட்டு ஆம்;
மற்றும் இந்தப் பதிகமொடு மறை தேர் மூவர்
இரு நாவின் மொழிந்த திருப்பதிகம் யாவும்
எண்ணியிடின் எழுநூற்றுத்தொண்ணூற்றேழே. 15.

தொகுத்த ஒருமூவர்களும் முறை ஏழாகச்
சொல் பதிகம் எழுநூற்றுத் தொண்ணூற்றேழில்
பகுத்த தமிழ்விரகன் முறை மூன்றதாகப்
பகர் பதிகம் முந்நூற்றுஎண்பத்துநான்காம்;
வகுத்த திருவாக்கரசர் முறை மூன்றுக்கும்
வரும் பதிகம் முந்நூற்றுப்பன்னிரண்டாம்;
மிகுத்த புகழ் வன்தொண்டர் முறை ஒன்றுக்கு
விளம்பிய நல் பதிகம் நூற்றொன்று ஆமே. 16.

சேடர் மலி வளர் காழிக் கவுணியர்தாம் இந்தத்
தாரணியில் திருத்தோணிச் சிவனார் பங்கில்
பீடு உடைய உமைமுலைப்பால் அருளால் உண்டு,
பிஞ்ஞகனைச் சினவிடைமேல் பெருகக் கண்டு,
"தோடு உடைய செவியன்" முதல் "கல்லூர்" என்னும்
தொடர் முடிவாய்ப் பரசமயத் தொகைகள் மாளப்
பாடினர்; அப்பதிகங்கள் பரவின் ஒன்றாய்ப்
பதினாறாயிரம் என்று பகரும், நூலே. 17.

திருநாவுக்கரசர் எனும் செம்மையாளர்
தீஅமணர் சிறை நீங்கித் திருஉவகை அருளும்
குருநாமப் பரஞ்சுடரால் சூலை நீக்கிக்
"கூற்றாயின" என எடுத்துக் கோதில் புகழ்ப் புகலூர்
ஒரு மானைத் தரித்தானை, "ஒருவனையும் அல்லாது
உணராது" என்று அவர் நாற்பத்தொன்பதினாயிரம் நல்
பெரு நாமத் திருப்பதிகம் அருளியவாறு அப்
பிஞ்ஞகனார் அடி அடையப்பெற்றுளாரே. 18.

பின்பு சிலநாளின்கண் வன்தொண்டப்பெருமான்
பிறங்கு திருவெண்ணெய்நல்லூர்ப் "பித்தா" என்று எடுத்தே
இன்ப முதல் திருப்பதிகம் "ஊழிதோறு" ஈறாய்
எடுத்த தொகை முப்பத்தேழாயிரம் ஆம் பனுவல்;
முன்பு அவன்தன்கவி நொடித்தான்மலையைச் சேர்த்து
முறைகளெல்லாம் திருத்தில்லைமூதூர்தன்னில்
அன்பவர்கை இலச்சினையால் வைத்து மன்னர்
ஆராய்ந்து தருக என அருளிச் செய்தார். 19.

## ஆ) திருப்பதிக்கோவை

கோயில், திருவேட்களம், நெல்வாயில், கழிப்பாலை,
குலவு பெருமணம், மயேந்திரப்பள்ளி, முல்லை-
வாயில், கலிக்காமூர், சாய்க்காடு, திருப்பல்லவனீச்சரம்,
வெண்காடு, வளர் திருக்காட்டுப்பள்ளி,
தாய்இலான் குருகாவூர், காழி, கோலக்கா,
தருக் கிளர் புள்ளிருக்குவேளூர், கண்ணார்கோயில்,
ஞாயில் இயல் கடைமுடியே, நின்றியூர், புன்கூர்,
நாடிய நீடூர், அன்னியூர், வேள்விக்குடியே. 1

கருது எதிர்கொள்பாடி, மணஞ்சேரி, திருக்குறுக்கை,
கருப்பறியலூர், கதியே காட்டு குரக்குக்கா,
மருவும் வாழ்கொளிபுத்தூர், மண்ணிப்படிக்கரையே,
வளரும் ஓமாம்புலியூர், கானாட்டுமுள்ளூர்,
திருநாரையூர், கடம்பூர், பந்தணைநல்லூர், பொன்
திகழ் கஞ்சனூர், கோடிகா; மங்கலக்குடியே,
திருப்பனந்தாள், ஆப்பாடி, சேய்ஞலூர்,
திருந்துதேவன்குடி, திருவியலூர், திருக்கொட்டையூரே. 2

இன்னம்பர், திருப்புறம்பயம், விசயமங்கை,
இயல் வைகாவூர், நல் வட குரங்காடுதுறையே,
பின்னம் அறு பழனம், ஐயாறு, நெய்த்தானம்,
பெரும்புலியூர், மழபாடி, திருப்பழுவூர், கானூர்,
அன்ன அன்பில்ஆலந்துறை, மாந்துறை, பாற்றுறையே,
ஆனைக்கா, பைஞ்ஞீலி, பாச்சிலாச்சிராமம்,
மன்னும் ஈங்கோய்மலையினோடு, அறுபான்மூன்றே,
வடகரையில் பதி; தென்பால் வாட்போக்கி ஆமே. 3

கடம்பந்துறை, திருப்பராய்த்துறை, கற்குடி, மூக்கீச்சரம்,
கருது திருச்சிராப்பள்ளி, திருஎறும்பியூரே,
நெடுங்களம், மேலைக்காட்டுப்பள்ளி, ஆலம்பொழில், சீர்
நிகழ் திருப்பூந்துருத்தி, கண்டியூர், சோற்றுத்துறை, மால்
அடும் வேதிகுடி, தென்குடித்திட்டை, புள்ளமங்கை,
அணி ஆர் சக்கரப்பள்ளி, அருங் கருகாவூரே,
படர் பாலைத்துறை, நல்லூர், திருஆவூர்அதனில்
பசுபதீச்சரம், சத்திமுற்றம், பட்டீச்சரமே. 4

ஆறை வடதளி, திருவலஞ்சுழியே, குடமூக்கு-
அதனில் கீழ்க்கோட்டம், காரோணம், நாகேச்சரம்,
கூறும் இடைமருது, குரங்காடுதுறை, நீலக்-
குடி, வைகல்மாடக்கோயில், நல்லம், கோழம்பம்,
சாறு அமர் ஆவடுதுறை, தண் துருத்தி, திருஅழுந்தூர்,
சகம் புகழ் மாயூரம், விளநகர், பறியலூரே,
வீறு செம்பொன்பள்ளி, நனிபள்ளி, வலம்புரமே,
வியன் தலைச்சங்காடு, ஆக்கூர், விளங்கு கடவூரே. 5

திருக்கடவூர்மயானமொடு, திருவேட்டக்குடியே,
தெளிச்சேரி, தருமபுரம், நள்ளாறு, கோட்டாறு,
உரைக்கும் அம்பர்ப் பெருந்திருக்கோயில், மாகாளம்,
உயர் மீயச்சூர் இளங்கோயில், திலதைப்பதி, பூ
மருக் கமழ் பாம்புரம், நல் சிறுகுடி, வீழிமிழலை,
வன்னியூர், கருவிலி, வன் பேணுபெருந்துறை, என்
கருத் துடைக்கும் நறையூர்ச் சித்தீச்சரத்தோடு, அரிசில-
கரைப்புத்தூர், சிவபுரமும், கலையநல்லூர், காணே. 6

கருக்குடி, வாஞ்சியம், திருநன்னிலத்துப் பெருங்கோயில்,
கவின் கொண்டீச்சரம், பனையூர், விற்குடி, தென்புகலூர்,
இருக்கும் வர்த்தமானேச்சரம், இராமனதீச்சரமே,
இயல் பயற்றூர், செங்காட்டங்குடி, மருகல், இருளே
முருக்கு திருச்சாத்தமங்கை, நாகைக்காரோணம்,
முன் திருச்சிக்கல், திருக்கீழ்வேளூர், தேவூரே,
அரிக்கு அரியான் பள்ளியின் முக்கூடல், திருவாரூர்
அரநெறி, மூலட்டானம், பரவையுள்மண்தளியே. 7

மேல் ஆரும் விளமர், கரவீரம், பெருவேளூர்,
மிளிர் தலையாலங்காடு, குடவாயில், சேறை,
நாலூர்மயானம், கடுவாய்க்கரைப்புத்தூர்,
நவிலும் இரும்பூளை, திருஅரதைப்பெரும்பாழி,
மால் ஊரும் அவள்இவள்நல்லூர், பருதிநியமம்,
வாழ் வெண்ணி, பூவனூர், பாதாளீச்சரம், நீர்ச்
சேல் ஊரும் திருக்களர், சிற்றேமம், உசாத்தானம்,
திருஇடும்பாவனத்தோடு, சேர்ந்த கடிக்குளமே. 8

தண்டலைநீள்நெறி, கோட்டூர், வெண்துறையோடு, அழகே
தரு கொள்ளம்பூதூர், பேரெயில், கொள்ளிக்காடு,
கண் தரு தெங்கூர், நெல்லிக்கா, நாட்டியத்தான்குடியே,
காறுயில், கன்றுப்பூர், வலிவலம், கைச்சினத்தோடு,
அண்டர்பிரான் கோளிலி, தென் திருவாய்மூர், மறைக்காடு,
அகத்தியான்பள்ளி, கோடிக்குழகரும், தென்கரையில்
எண் தரு நூற்றுஇருபத்தேழு; இப்பால் ஈழத்தில்,
இசை கோணமாமலை, கேதீச்சரம், என்று இரண்டே. 9

ஆலவாய், ஆப்பனூர், பரன்குன்று, ஏடகத்தோடு,
அருங் கொடுங்குன்றம், திருப்புத்தூர், புனவாயிலினோடு,
ஏலும் இராமேச்சரம், ஆடானை, கானப்பேர்,
எழில் திருப்பூவணம், சுழியல், இன்புறு குற்றாலம்,
பாலலோசனன் திருநெல்வேலியொடு, பாண்டி
பதினான்கு; மலைநாட்டில் அஞ்சைக்களம் ஒன்றே;
சீலம் மிகு அவிநாசி, திருமுருகன்பூண்டி,
திருநணா, கொடிமாடச்செங்குன்றூர் தானே. 10

வெஞ்சமாக்கூடல், கொடுமுடி, கருவூர், கொங்கின்
மேவும் ஏழ்; அரத்துறை, வண் தூங்கானைமாடம்,
எஞ்சல் இல் கூடலையாற்றூர், எருக்கத்தம்புலியூர்,
இணை அகலும் தினைநகர், சோபுரம், அதிகை, புகழே
விஞ்சு திருநாவலூர், முதுகுன்றம், திருநெல்-
வெண்ணெய், திருக்கோவலூர், அறைஅணிநல்லூரே,
மஞ்சு திகழ் இடையாறு, வெண்ணெய்நல்லூர், துறையூர்,
வடுகூர், வீடே அருளும் திருமாணிகுழியே. 11

தண் ஆர் தண்டலை பாதிரிப்புலியூர், முண்டீச்சரம்,
புறவுஆர்பனங்காட்டூர், திருஆமாத்தூரே,
எண் ஆர் அண்ணாமலையும், நடுநாட்டில் இருபத்-
திரண்டாகும்; இப்பால் ஏகம்பம், மேற்றளி, விண்
கண் ஓங்கு மதில் ஓணகாந்தன்தளி, அநேக-
தங்காவதம், கச்சிநெறிகாரைக்காடே,
உள் நாடு குரங்குஅணில்முட்டம், திருமாகறல், ஓத்தூர்,
வன்பார்த்தான்பனங்காட்டூர், வல்லம், மாற்பேறே. 12

ஊறல், இலம்பையங்கோட்டூர், விற்கோலம், ஆலங்காடு,
உயர் பாசூர், வெண்பாக்கம், கள்ளில், காளத்தி,
மாறு இல் திருஒற்றியூர், வலிதாயம், பாலி
வடமுல்லைவாயில், வேற்காடு, திருமயிலை,
ஈறு இல் திருவான்மியூர், கச்சூர்ஆலக்கோயில்,
இடைச்சுரம், கழுக்குன்றம், அச்சிறுபாக்கம்மே,
மாறு இல் திருவக்கரையே, அரசிலி, தொல் இரும்பை-
மாகாளம், தொண்டைநன்னாடு எண்ணின் முப்பான்இரண்டே. 13

கோகரணம், துளுவதேசத்தில் ஒன்றே; இப்பால்
குலவு பருப்பதம், நீலப்பருப்பதம், அம்பிகைதன்
பாகர் உறை அநேகதங்காவதம், திருக்கேதாரம்,
பகர் நொடித்தான்மலை, வடக்கில் பதிஐந்தே; இவற்றோடு
ஆக இருநூற்றுஎழுபான்நான்கு என்பர், மூவர்
அருள்பதிகம் இருக்கும் ஊர்; அதிகம் ஆம் வைப்பு;
தாகமுடன் நினைப்போர்க்கும் துதிப்போர்க்கும் வினைகள்
சாராஆம்; பிறப்பு அகலும்; சத்தியம் முத்தியுமே. 14

காவிரித் தென்கரையில் நூற்றுஇருபத்தேழ் மூவர்
கருது பதி, வடகரையில் அறுபத்துமூன்றும்,
நா ஏறு புகழ்த் தொண்டைநாட்டில் முப்பத்திரண்டு,
நடுநாட்டிலே இருபத்திரண்டு, வைகையாற்றில்
பாஏறு தமிழ்நாட்டில் பதினாலு, கொங்கில்
பதி ஏழு, வடக்கு ஐந்து, ஈழத்தில் இரண்டு,
சே ஏறுபவர்க்கு மலைநாட்டில் ஒன்று, துளுவ-
தேசத்தில் ஒன்று; இருநூற்றுஎழுபத்துநாலே.

## இ) வைப்புத்தலக்கோவை

1. திங்களூர், பிடவூர், கோவந்தபுத்தூர், குருக்கேத்-
திரம், பொதியமலை, தேனூர், விராடபுரம், சூல-
மங்கை, அளப்பூர், ஊற்றத்தூர், சேற்றூர், மாநிருபம்,
இராப்பட்டீச்சரம், சித்தவடம், கா-
ளிங்கம், உஞ்சைமாகாளம், நல்லாற்றூர், பேரூர்,
ஏமப்பேறூர், குன்றியூர், இடவை, வேங்கூர்,
செங்குன்றூர், வெற்றியூர், மூவலூர், கருப்பூர்,
திருத்தேவனூர், மயிண்டீச்சரம், குருந்தங்குடியே. (29)

2. காட்டூர், கோங்கணம், பிரம்பில், ஏமநல்லூர், மணற்கால்,
கருமாரி, திருப்பெருமூர், களப்பாழ், பேராவூர்,
மாட்டூர், காம்பீலி, நெடுவாயில், நெய்தல்வாயில்,
வாதவூர், குணவாயில், வழுவூர்வீரட்டம்,
கோட்டுக்காடு, இடைப்பள்ளி, இடைக்குளம், நெற்குன்றம்,
கூரூர், கஞ்சாறு, தஞ்சைத்தளிக்குளம், மாமேரு,
நாட்டுத்தஞ்சை, தஞ்சாக்கை, பஞ்சாக்கை, நியம-
நல்லூர், தேரூர், பொய்கைநல்லூர், பொற்குளமே. (31)

3. வடபேரூர், காரிகரை, கொடுங்கோளூர், அண்ணல்-
வாயில், இறையாஞ்சேரி, மாணிகுடி,
விடைவாய்க்குடி, வாரணசி, கருந்திட்டைக்குடி, கடையக்குடி,
தகடூர், அசோகந்தி, கொல்லி, அறப்பளி,
துடையூர், திண்டீச்சரம், செம்பங்குடி, புற்குடி, பூந்-
துறை, தண்டந்தோட்டம், தண்டங்குறை, மாத்தாரம், (28)
சடைமுடி, மத்தங்குடி, சாலைக்குடி, சோமேசம்,
தக்களூர், தளிச்சாத்தங்குடி, அரிச்சந்திரமே.

4. புலிவலம், மாநிதி, அகுளீச்சரம், ஏமகூடம்,
பூழியூர், முழையூர், பொன்னூர், புரிசை, கச்சிப்
பலதளி, சீக்காலி, திருவேட்டி, மணிமுத்தம்,
பனங்காடு, புதுக்குடி, தென்களக்குடியொடு, உதைய-
மலை, தென்னூர், அத்தமலை, மயேந்திரம், தெள்ளாறு,
மாகாளேச்சரம், கச்சிமயானம், மக்கீச்சரம், மாந்-
தலம், அயனீச்சரம், நல்லக்குடி, அத்தீசம்,
தவப்பள்ளி, இனத்தொடு அடியாள் தெக்கேச்சரமே. (29)

5. கந்தமாதனம், நாழல்வாயில், திருநாங்கூர்,
கடங்களூர், ஆழியூர், கிள்ளிகுடி, வேளூர்,
விந்தமாமலே, அகத்தீச்சரம், கிழையம், விளத்தூர்,
வேலனூர், நாலனூர், மூலனூர், துவையூர்,
நந்திகேசுவ்ரம், திருவண்குடி, திருநற்குன்றம்,
நாழற்கோயில், குரக்குத்தளியூர், உத்தரகோடி,
பந்தையூர், இடைத்தானநகர், பாவநாசம்,
பாப்பள்ளி, வேதீசுரம், திரிபுராந்தகமே. (27)

6. தாழையூர், தென்பரம்பைக்குடி, நாலூர், கொண்டல்,
தஞ்சம், வளேகுளம், தேவீச்சரம், தஞ்சை, எழுமூர்,
கூழையூர், விவீசுரம், கூந்தலூர், குந்தங்-
குடி, ஏமூர், மாகுடி, ஏயீச்சரம், கோட்டுக்கா,
தோமூர், தெற்கேறு குக்குடேச்சரம், நாலாறு,
சோதி தவத்துறை, நாகளேச்சரம், மாகோணம்,
கீழையில், மாமணிக்கோயில், பொருப்பள்ளி, மாத்தூர்,
குளிர்ந்த சிவப்பள்ளி, திருமலம், முந்தையூரே. (30)

7. மறையவனூர், பிறைய்வனூர், தேனூர்காவதமே,
வரந்தை, எச்சில்இளமர், கச்சையூர், விடங்களூர், சீர்
நிறையனூர், எச்சனூர், பேறனூர், உடனே
நிகர்த்தும் உண்ணீர், ஓரேடகம், (12) என் நெஞ்சு அகலாது இருக்கும்
இறையவனூர் மருவிய வைப்புத்தலங்கள்இவை நூற்று
எண்பத்தாறு ஆகும் என இயம்பிடும் இத்தலத்தை
முறையுடனே தரிசிப்போர் துதிப்போர் இப்புவியின்
முசியாமல் வாழ்ந்திருந்து முடிவில் முத்தி பெறுவார்.

# 4. தலமுறை அமைப்பும் பண்முறைப் பதிகங்களும்

சோழநாட்டில் காவிரிக்கு வடகரையில் உள்ள தலங்கள்

| தொடர் எண் | திருத்தலப்பெயர் | ஞானசம்பந்தர் திருமுறை எண், பதிக எண் | நாவுக்கரசர் திருமுறை எண், பதிக எண் | சுந்தரர் பதிக எண் | கூடுதல் எண் |
|---|---|---|---|---|---|
| 1. | கோயில் | I-80, III-1 | IV-22,23,80,81, V-1,2, VI-1,2 | 90 | 11 |
| 2. | திருவேட்களம் | I-39 | V-42 | – | 2 |
| 3. | திருநெல்வாயில் | II-26 | – | – | 1 |
| 4. | திருக்கழிப்பாலை | II-21, III-44 | IV-6,30,106, V-40, VI-12 | 23 | 8 |
| 5. | நல்லூர்ப்பெருமணம் | III-125 | – | – | 1 |
| 6. | மயேந்திரப்பள்ளி | III-31 | – | – | 1 |
| 7. | தென்திருமுல்லைவாயில் | II-88 | – | – | 1 |
| 8. | கலிக்காமூர் | III-105 | – | – | 1 |
| 9. | திருச்சாய்க்காடு | II-38,41 | IV-65, VI-82 | – | 4 |
| 10. | திருப்பல்லவனீச்சுரம் | I-65, III-112 | – | – | 2 |
| 11. | திருவெண்காடு | II-48,61, III-15 | V-49, VI-35 | 6 | 6 |
| 12. | கீழைத்திருக்காட்டுப் பள்ளி | I-5 | – | – | 1 |
| 13. | திருக்குருகாவூர் வெள்ளடை | III-124 | – | 29 | 2 |
| 14. | பிரமபுரம் | I-1, II-40,65, III-37,56 | – | – | 5 |
| | வேணுபுரம் | I-9, II-17,81 | – | – | 3 |
| | புகலி | I-30,104, II-25,29,54,122, III-3,7 | – | – | 8 |
| | புகலியும் வீழிமிழலையும் | I-4 | – | – | 1 |
| | வெங்குரு | I-75, III-94 | – | – | 2 |

| தொடர் எண் | திருத்தலப்பெயர் | ஞானசம்பந்தர் திருமுறை எண், பதிக எண் | நாவுக்கரசர் திருமுறை எண், பதிக எண் | சுந்தரர் பதிக எண் | கூடுதல் எண் |
|---|---|---|---|---|---|
| | தோணிபுரம் | I-60, III-81,100 | V-45 | – | 4 |
| | பூந்தராய் | II-1, III-2,5,13 | – | – | 4 |
| | சிரபுரம் | I-47,109, II-102 | – | – | 3 |
| | புறவம் | I-74,97, III-84 | – | – | 3 |
| | சண்பைநகர் | I-66, III-75 | – | – | 2 |
| | சீகாழி | I-24,34,81,102, II-11,49,59,75, 96,97,113, III-43,117 | – | – | 13 |
| | கொச்சைவயம் | II-83,89, III-89 | – | – | 3 |
| | திருக்கழுமலம் | I-19,79,126,129, III-24,118 | IV-82,83 | 58 | 9 |
| | பல்பெயர்ப்பத்து | I-63 | – | – | 1 |
| | திருஇருக்குக்குறள் | I-90 | – | – | 1 |
| | மொழிமாற்று | I-117 | – | – | 1 |
| | ஏகபாதம் | I-127 | – | – | 1 |
| | எழுகூற்றிருக்கை | I-128 | – | – | 1 |
| | சக்கரமாற்று | II-70,73 | – | – | 2 |
| | கோமூத்திரி | II-74 | – | – | 1 |
| | வழிமொழித் திருவிராகம் | III-67 | – | – | 1 |
| | திருஈரடி | III-110 | – | – | 1 |
| | திருவியமகம் | III-113 | – | – | 1 |
| 15. | திருக்கோலக்கா | I-23 | – | 62 | 2 |
| 16. | திருப்புள்ளிருக்குவேளூர் | II-43 | V-79, VI-54 | – | 3 |
| 17. | திருக்கண்ணார்கோயில் | I-101 | – | – | 1 |
| 18. | திருக்கடைமுடி | I-111 | – | – | 1 |
| 19. | திருநின்றியூர் | I-18 | V-23 | 19,65 | 4 |
| 20. | திருப்புன்கூர் | I-27 | – | – | 1 |
| | திருப்புன்கூரும் திருநீடூரும் | | VI-11 | 55 | 2 |
| 21. | திருநீடூர் | – | – | 56 | 1 |
| 22. | திருஅன்னியூர் | I-96 | V-8 | – | 2 |
| 23. | திருத்துருத்தியும், திருவேள்விக்குடியும் | III-90 | – | 74,18 | 3 |
| 24. | திருஎதிர்கொள்பாடி | – | – | 7 | 1 |
| 25. | திருமணஞ்சேரி | II-16 | V-87 | – | 2 |
| 26. | திருக்குறுக்கை | – | IV-49,50 | – | 2 |

| தொடர் எண் | திருத்தலப்பெயர் | ஞானசம்பந்தர் திருமுறை எண், பதிக எண் | நாவுக்கரசர் திருமுறை எண், பதிக எண் | சுந்தரர் பதிக எண் | கூடுதல் எண் |
|---|---|---|---|---|---|
| 27. | திருக்கருப்பறியலூர் | II-31 | – | 30 | 2 |
| 28. | திருக்குரக்குக்கா | – | V-75 | – | 1 |
| 29. | திருவாழ்கொளிபுத்தூர் | I-40, II-94 | – | 57 | 3 |
| 30. | திருமண்ணிப்படிக்கரை | – | – | 22 | 1 |
| 31. | திருஓமாம்புலியூர் | III-122 | VI-88 | – | 2 |
| 32. | திருக்கானாட்டுமுள்ளூர் | – | – | 40 | 1 |
| 33. | திருநாரையூர் | II-86,III-102,107 | V-55,VI-74 | – | 5 |
| 34. | திருக்கடம்பூர் | II-68 | V-19,20 | – | 3 |
| 35. | திருப்பந்தணைநல்லூர் | III-121 | VI-10 | – | 2 |
| 36. | திருக்கஞ்சனூர் | – | VI-90 | – | 1 |
| 37. | திருக்கோடிகா | II-99 | IV-51,V-78,<br>VI-81 | – | 4 |
| 38. | திருமங்கலக்குடி | II-10 | V-73 | – | 2 |
| 39. | திருப்பனந்தாள் | III-62 | – | – | 1 |
| 40. | திருவாப்பாடி | – | IV-48 | – | 1 |
| 41. | திருச்சேய்ஞலூர் | I-48 | – | – | 1 |
| 42. | திருந்துதேவன்குடி | III-25 | – | – | 1 |
| 43. | திருவியலூர் | I-13 | – | – | 1 |
| 44. | திருக்கொட்டையூர் | — | VI-73 | – | 1 |
| 45. | திருஇன்னம்பர் | III-95 | IV-72,100<br>V-21,VI-89 | – | 5 |
| 46. | திருப்புறம்பயம் | II-30 | VI-13 | 35 | 3 |
| 47. | திருவிசயமங்கை | III-17 | V-71 | – | 2 |
| 48. | திருவைகாவூர் | III-71 | – | – | 1 |
| 49. | திருவடகுரங்காடுதுறை | III-91 | – | – | 1 |
| 50. | திருப்பழனம் | I-67 | IV-12,36,87<br>V-35,VI-36 | – | 6 |
| 51. | திருவையாறு | I-36,120,130,<br>II-6,32 | IV-3,13,38-40,<br>91,92,98,<br>V-27,28,<br>VI-37,38 | 77 | 18 |
| 52. | திருநெய்த்தானம் | I-15 | IV-37,89,V-34,<br>VI-41,42 | – | 6 |
| 53. | பெரும்புலியூர் | II-67 | – | – | 1 |
| 54. | திருமழபாடி | II-9,III-28,48 | VI-39,40 | 24 | 6 |
| 55. | திருப்பழுவூர் | II-34 | – | – | 1 |
| 56. | திருக்கானூர் | I-73 | V-76 | – | 2 |

| தொடர் எண் | திருத்தலப்பெயர் | ஞானசம்பந்தர் திருமுறை எண், பதிக எண் | நாவுக்கரசர் திருமுறை எண், பதிக எண் | சுந்தரர் பதிக எண் | கூடுதல் எண் |
|---|---|---|---|---|---|
| 57. | அன்பில் ஆலந்துறை | I-33 | V-80 | – | 2 |
| 58. | திருமாந்துறை | II-110 | – | – | 1 |
| 59. | திருப்பாற்றுறை | I-56 | – | – | 1 |
| 60. | திருவானைக்கா | II-23,III-53,109 | V-31,VI-62,63 | 75 | 7 |
| 61. | திருப்பைஞ்ஞீலி | III-14 | V-41 | 36 | 3 |
| 62. | தருப்பாச்சிலாச்சிராமம் | I-44 | – | 14 | 2 |
| 63. | திருஈங்கோய்மலே | I-70 | – | – | 1 |
| | | 137 | 79 | 22 | 239 |

காவிரியின் வடகரைத் தலங்கள் 63இல் ஞானசம்பந்தர் பாடியன 54; நாவுக்கரசர் பாடியன 33; சுந்தரர் பாடியன 20.

| | |
|---|---|
| சம்பந்தர்மாத்திரம் பாடிய தலங்கள் | — 21 |
| நாவுக்கரசர்மாத்திரம் பாடிய தலங்கள் | — 5 |
| சுந்தரர்மாத்திரம் பாடிய தலங்கள் | — 4 |
| சம்பந்தரும், நாவுக்கரசரும் பாடிய பதிகங்களைக் கொண்டுள்ள தலங்களின் எண் | — 17 |
| சம்பந்தரும், சுந்தரரும் பாடிய பதிகங்களைக் கொண்டுள்ள தலங்களின் எண் | — 6 |
| மூவரும் பாடிய பதிகங்களைக் கொண்டுள்ள தலங்களின் எண் | — 10 |
| தலங்களின் கூடுதல்எண் | 63 |

# சோழநாட்டில் காவிரிக்குத் தென்கரையில் உள்ள தலங்கள்

| தொடர் எண் | திருத்தலப்பெயர் | ஞானசம்பந்தர் திருமுறை எண், பதிக எண் | நாவுக்கரசர் திருமுறை எண், பதிக எண் | சுந்தரர் பதிக எண் | கூடுதல் எண் |
|---|---|---|---|---|---|
| 1. | திருவாட்போக்கி | – | V-86 | – | 1 |
| 2. | திருக்கடம்பந்துறை | – | V-18 | – | 1 |
| 3. | திருப்பராய்த்துறை | I-135 | V-30 | – | 2 |
| 4. | திருக்கற்குடி | I-43 | VI-60 | 27 | 3 |
| 5. | திருமூக்கீச்சுரம் | II-120 | – | – | 1 |
| 6. | திருச்சிராப்பள்ளி | I-98 | V-85 | – | 2 |
| 7. | திருவெறும்பியூர் | – | V-74, VI-91 | – | 2 |
| 8. | திருநெடுங்களம் | I-52 | – | – | 1 |
| 9. | மேலைத்திருக்காட்டுப்பள்ளி | III-29 | V-84 | – | 2 |
| 10. | திருஆலம்பொழில் | – | VI-86 | – | 1 |
| 11. | திருப்பூந்துருத்தி | – | IV-88, V-32, VI-43 | – | 3 |
| 12. | திருக்கண்டியூர் | III-38 | IV-93 | – | 2 |
| 13. | திருச்சோற்றுத்துறை | I-28 | IV-41,85, V-33, VI-44 | 94 | 6 |
| 14. | திருவேதிகுடி | III-78 | IV-90 | – | 2 |
| 15. | திருத்தென்குடித்திட்டை | III-35 | – | – | 1 |
| 16. | திருப்புள்ளமங்கை | I-16 | – | – | 1 |
| 17. | திருச்சக்கரப்பள்ளி | III-27 | – | – | 1 |
| 18. | திருக்கருகாவூர் | III-46 | VI-15 | – | 2 |
| 19. | திருப்பாலைத்துறை | – | V-51 | – | 1 |
| 20. | திருநல்லூர் | I-86, II-57, III-83 | IV-97, VI-14 | – | 5 |
| 21. | திருஆவூர்ப்பசுபதீச்சுரம் | I-8 | – | – | 1 |
| 22. | திருச்சத்திமுற்றம் | – | IV-96 | – | 1 |
| 23. | திருப்பட்டீச்சுரம் | III-73 | – | – | 1 |
| 24. | திருப்பழையாறை வடதளி | – | V-58 | – | 1 |
| 25. | திருவலஞ்சுழி | II-2,106, III-106 | V-66, VI-72 | – | 5 |
| 26. | திருக்குடமூக்கு | III-59 | V-22 | – | 2 |
| 27. | திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் | – | VI-75 | – | 1 |
| 28. | திருக்குடந்தைக் காரோணம் | I-72 | – | – | 1 |
| 29. | திருநாகேச்சுரம் | II-24,119 | IV-66, V-52, VI-66 | 99 | 6 |
| 30. | திருஇடைமருதூர் | I-32,95,110,121, 122, II-56 | IV-35 V-14,15, VI-16,17 | 60 | 12 |

| தொடர் எண் | திருத்தலப்பெயர் | ஞானசம்பந்தர் திருமுறை எண், பதிக எண் | நாவுக்கரசர் திருமுறை எண்; பதிக எண் | சுந்தரர் பதிக எண் | கூடுதல் எண் |
|---|---|---|---|---|---|
| 31. | திருத்தென்குரங்காடு துறை | II-35 | V-63 | – | 2 |
| 32. | திருநீலக்குடி | – | V-72 | – | 1 |
| 33. | திருவைகல்மாடக் கோயில் | III-18 | – | – | 1 |
| 34. | திருநல்லம் | I-85 | V-43 | – | 2 |
| 35. | திருக்கோழம்பம் | II-13 | V-64 | – | 2 |
| 36. | திருஆவடுதுறை | III-4 | IV-56,57,V-29, VI-46,47 | 66,70 | 8 |
| 37. | திருத்துருத்தி | II-98 | IV-42 | – | 2 |
| 38. | திருஅழுந்தூர் | II-20 | – | – | 1 |
| 39. | திருமயிலாடுதுறை | I-38, III-70 | V-39 | – | 3 |
| 40. | திருவிளநகர் | II-78 | – | – | 1 |
| 41. | திருப்பறியலூர் வீரட்டம் | I-134 | – | – | 1 |
| 42. | திருச்செம்பொன்பள்ளி | I-25 | IV-29,V-36 | – | 3 |
| 43. | திருநனிபள்ளி | II-84 | IV-70 | 97 | 3 |
| 44. | திருவலம்புரம் | III-103 | IV-55,VI-58 | 72 | 4 |
| 45. | திருத்தலைச்சங்காடு | II-55 | – | – | 1 |
| 46. | திருஆக்கூர்த்தான்-தோன்றிமாடம் | II-42 | VI-21 | – | 2 |
| 47. | திருக்கடவூர்வீரட்டம் | III-8 | IV-31,107,V-37 | 28 | 5 |
| 48. | திருக்கடவூர்மயானம் | II-80 | V-38 | 53 | 3 |
| 49. | திருவேட்டக்குடி | III-66 | – | – | 1 |
| 50. | திருத்தெளிச்சேரி | II-3 | – | – | 1 |
| 51. | திருத்தருமபுரம் | I-136 | – | – | 1 |
| 52. | திருநள்ளாறும் திருஆலவாயும் | I-7,49,II-33, III-87 | V-68,VI-20 | 68 | 7 |
| 53. | திருக்கோட்டாறு | II-52,III-12 | – | – | 2 |
| 54. | திருஅம்பர்ப்பெருந்திருக் கோயில் | III-19 | – | – | 1 |
| 55. | திருஅம்பர்மாகாளம் | I-83,II-103,III-93 | – | – | 3 |
| 56. | திருமீயச்சூர் | II-62 | – | – | 1 |
| 57. | திருமீயச்சூர் இளங்கோயில் | — | V-11 | – | 1 |
| 58. | திருத்திலதைப்பதி | II-118 | – | – | 1 |
| 59. | திருப்பாம்புரம் | I-41 | – | – | 1 |

| தொடர் எண் | திருத்தலப்பெயர் | ஞானசம்பந்தர் திருமுறை எண், பதிக எண் | நாவுக்கரசர் திருமுறை எண், பதிக எண் | சுந்தரர் பதிக எண் | கூடுதல் எண் |
|---|---|---|---|---|---|
| 60. | திருச்சிறுகுடி | III-97 | — | — | 1 |
| 61. | திருவீழிமிழலை | I-11,20,35,82, 92,124,132, III-9,80,85,98, 111,116,119 | IV-64,95, V-12,13 VI-50,51,52,53 | 88 | 23 |
| 62. | திருவன்னியூர் | – | V-26 | – | 1 |
| 63. | திருக்கருவிலி கொட்டிட்டை | – | V-69 | – | 1 |
| 64. | திருப்பேணு பெருந்துறை | I-42 | – | – | 1 |
| 65. | திருநறையூர்ச் சித்தீச்சுரம் | I-29,71,II-87 | – | 93 | 4 |
| 66. | திருஅரிசிற்கரைப்புத்தூர் | II-63 | V-61 | 9 | 3 |
| 67. | திருச்சிவபுரம் | I-21,112,125 | VI-87 | – | 4 |
| 68. | திருக்கலயநல்லூர் | – | – | 16 | 1 |
| 69. | திருக்கருக்குடி | III-21 | – | – | 1 |
| 70. | திருவாஞ்சியம் | II-7 | V-67 | 76 | 3 |
| 71. | திருநன்னிலத்துப் பெருங்கோயில் | – | – | 98 | 1 |
| 72. | திருக்கொண்டீச்சுரம் | – | IV-67,V-70 | – | 2 |
| 73. | திருப்பனையூர் | I-37 | – | 87 | 2 |
| 74. | திருவிற்குடிவீரட்டம் | II-108 | – | – | 1 |
| 75. | திருப்புகலூர் | I-2,II-115 | IV-16,54,105, V-46, VI-99 | 34 | 8 |
| 76. | திருப்புகலூர் வர்த்த மானீச்சுரம் | II-92 | – | – | 1 |
| 77. | திருஇராமனந்தீச்சுரம் | I-115 | – | – | 1 |
| 78. | திருப்பயற்றூர் | – | IV-32 | – | 1 |
| 79. | திருச்செங்காட்டங்குடி | I-61,III-63 | VI-84 | – | 3 |
| 80. | திருமருகலும் திருச்செங்-காட்டங்குடியும் | I-6,II-18 | V-88 | – | 3 |
| 81. | திருச்சாத்தமங்கை | III-58 | – | – | 1 |
| 82. | திருநாகைக்காரோணம் | I-84,II-116 | IV-71,103,V-83, VI-22 | 46,101 | 7+1 |
| 83. | திருச்சிக்கல் | II-8 | – | – | 1 |
| 84. | திருக்கீழ்வேளூர் | II-105 | VI-67 | – | 2 |
| 85. | திருத்தேவூர் | II-82,III-74 | – | – | 2 |

| தொடர் எண் | திருத்தலப்பெயர் | ஞானசம்பந்தர் திருமுறை எண், பதிக எண் | நாவுக்கரசர் திருமுறை எண், பதிக எண் | சுந்தரர் பதிக எண் | கூடுதல் எண் |
|---|---|---|---|---|---|
| 86. | திருப்பள்ளியின் முக்கூடல் | – | VI-69 | – | 1 |
| 87. | திருஆரூர் | I-91,105,II-79,101, III-45 | IV-4,5,19,20,21, 52,53,101,102, V-6,7,VI-24,25, 26,27,28,29,30, 31,32,34 | 8,37, 39,51 59,73 83,90 | 34 |
| 88. | திருஆரூர்அரநெறி | – | IV-17,VI-33 | – | 2 |
| 89. | திருஆரூர்ப்பரவையுள் மண்டளி | – | – | 96 | 1 |
| 90. | திருவிளமர் | III-88 | – | – | 1 |
| 91. | திருக்கரவீரம் | I-58 | – | – | 1 |
| 92. | திருப்பெருவேளூர் | III-64 | IV-60 | – | 2 |
| 93. | திருத்தலையாலங்காடு | – | VI-79 | – | 1 |
| 94. | திருக்குடவாயில் | II-22,58 | – | – | 2 |
| 95. | திருச்சேறை | III-86 | IV-73 V-77 | – | 3 |
| 96. | திருநாலூர்மயானம் | II-46 | – | – | 1 |
| 97. | திருக்கடுவாய்க்கரைப் புத்தூர் | – | V- 62 | – | 1 |
| 98. | திருஇரும்பூளை | II-36 | – | – | 1 |
| 99. | திருஅரதைப்பெரும்பாழி | III-30 | – | – | 1 |
| 100. | திருஅவளிவள்நல்லூர் | III-82 | IV-59 | – | 2 |
| 101. | திருப்பரிதிநியமம் | III-104 | – | – | 1 |
| 102. | திருவெண்ணியூர் | II-14 | V-17 VI-59 | – | 3 |
| 103. | திருப்பூவனூர் | – | V-65 | – | 1 |
| 104. | திருப்பாதாளீச்சுரம் | I-108 | – | – | 1 |
| 105. | திருக்களர் | II-51 | – | – | 1 |
| 106. | திருச்சிற்றேமம் | III-42 | – | – | 1 |
| 107. | திருஉசாத்தானம் | III-33 | – | – | 1 |
| 108. | திருஇடும்பாவனம் | I-17 | – | – | 1 |
| 109. | திருக்கடிக்குளம் | II-104 | – | – | 1 |
| 110. | திருத்தண்டலைநீள்நெறி | III-50 | – | – | 1 |
| 111. | திருக்கோட்டூர் | II-109 | – | – | 1 |
| 112. | திருவெண்டுறை | III-61 | – | – | 1 |
| 113. | திருக்கொள்ளம்பூதூர் | III-6 | – | – | 1 |
| 113. | அ.திருவிடைவாய் | ( III-126 ) | – | – | (1) |

| தொடர் எண் | திருத்தலப்பெயர் | ஞானசம்பந்தர் திருமுறைஎண், பதிகஎண் | திருநாவுக்கரசர் திருமுறைஎண், பதிகஎண் | சுந்தரர் பதிகஎண் | கூடுதல் எண் |
|---|---|---|---|---|---|
| 114. | திருப்பேரெயில் | – | V-16 | – | 1 |
| 115. | திருக்கொள்ளிக்காடு | III-16 | – | – | 1 |
| 116. | திருத்தெங்கூர் | II-93 | – | – | 1 |
| 117. | திருநெல்லிக்கா | II-19 | – | – | 1 |
| 118. | திருநாட்டியத்தான்குடி | – | – | 15 | 1 |
| 119. | திருக்காறாயில் | II-15 | – | – | 1 |
| 120. | திருக்கன்றாப்பூர் | – | VI-61 | – | 1 |
| 121. | திருவலிவலம் | I-50,123 | VI-48 | 67 | 4 |
| 122. | திருக்கைச்சினம் | II-45 | – | – | 1 |
| 123. | திருக்கோளிலி | I-62 | V-56,57 | 20 | 4 |
| 124. | திருவாய்மூர் | II-111 | V-50, VI-77 | – | 3 |
| 125. | திருமறைக்காடு | I-22, II-37,91, III-76 | IV-33,34, V-9,10, VI-23 | 71 | 10 |
| 126. | திருஅகத்தியான்பள்ளி | II-76 | – | – | 1 |
| 127. | திருக்கோடிக்குழகர் | – | – | 32 | 1 |
| | | 148+1 | 133 | 35 | 316+1 |

காவிரியின் தென்கரைத் தலங்கள் 128இல் ஞானசம்பந்தர் பாடியன 101; நாவுக்கரசர் பாடியன 66; சுந்தரர் பாடியன 26.

| | |
|---|---|
| சம்பந்தர்மாத்திரம் பாடிய தலங்கள் | — 55 |
| நாவுக்கரசர்மாத்திரம் பாடிய தலங்கள் | — 22 |
| சுந்தரர்மாத்திரம் பாடிய தலங்கள் | — 5 |
| சம்பந்தரும் நாவுக்கரசரும் பாடிய பதிகங்களைக் கொண்ட திருத்தலங்கள் | — 25 |
| சம்பந்தரும் சுந்தரரும் பாடிய பதிகங்களைக் கொண்ட திருத்தலங்கள் | — 2 |
| மூவரும் பாடிய திருத்தலங்கள் | — 19 |
| | 128 |

# ஈழநாட்டுத் தலங்கள், பாண்டியநாட்டுத் தலங்கள்

| தொடர் எண் | திருத்தலப்பெயர் | ஞானசம்பந்தர் திருமுறைஎண், பதிகஎண் | நாவுக்கரசர் திருமுறைஎண், பதிகஎண் | சுந்தரர் பதிகஎண் | கூடுதல் எண் |
|---|---|---|---|---|---|
| | ஈழநாட்டுத் தலங்கள் | | | | |
| 1. | திருக்கோணமலை | III-123 | – | – | 1 |
| 2. | திருக்கேதீச்சுரம் | II-107 | – | 80 | 2 |
| | பாண்டியநாட்டுத் தலங்கள் | | | | |
| 1. | திருஆலவாய் | I-94, II-66, III-39,47,51,52, 108,115,120 | IV-62, VI-19 | – | 11 |
| 2. | திருஆப்பனூர் | I-88 | – | – | 1 |
| 3. | திருப்பரங்குன்றம் | I-100 | – | 2 | 2 |
| 4. | திருஏடகம் | III-32 | – | – | 1 |
| 5. | திருக்கொடுங்குன்றம் | I-14 | – | – | 1 |
| 6. | திருப்புத்தூர் | I-26 | VI-76 | – | 2 |
| 7. | திருப்புனவாயில் | III-11 | – | 50 | 2 |
| 8. | திருஇராமேச்சுரம் | III-10,101 | IV-61 | – | 3 |
| 9. | திருஆடானை | II-112 | – | – | 1 |
| 10. | திருக்கானப்பேர் | III-26 | – | 84 | 2 |
| 11. | திருப்பூவணம் | I-64, III-20 | VI-18 | 11 | 4 |
| 12. | திருச்சுழியல் | – | – | 82 | 1 |
| 13. | திருக்குற்றாலம் திருக்குறும்பலா | I-99 II-71 | – | – | 2 |
| 14. | திருநெல்வேலி | III-92 | – | – | 1 |
| | | *24* | *5* | *5* | *34* |

ஈழநாட்டுத் தலங்கள் 2
ஞானசம்பந்தர் பதிகம் — 2
சுந்தரர் பதிகம் — 1

பாண்டியநாட்டுத் திருத்தலங்கள் 14- திருப்பதிகங்கள் — 34
ஞானசம்பந்தர் பதிகங்கள் — 24
நாவுக்கரசர் பதிகங்கள் — 5
சுந்தரர்பதிகங்கள் — 5
ஞானசம்பந்தர் பாடிய தலங்கள் — 13
நாவுக்கரசர் பாடிய தலங்கள் — 4
சுந்தரர் பாடிய தலங்கள் — 5
ஞானசம்பந்தர்மாத்திரம் பாடிய தலங்கள் — 6
சுந்தரர்மாத்திரம் பாடிய தலம் — 1
ஞானசம்பந்தரும் அப்பரும் பாடிய தலங்கள் — 3
ஞானசம்பந்தரும் சுந்தரரும் பாடிய தலங்கள் — 3
மூவரும் பாடிய தலம் — 1

| தொடர் எண் | திருத்தலப்பெயர் | ஞானசம்பந்தர் திருமுறைஎண், பதிகஎண் | நாவுக்கரசர் திருமுறைஎண், பதிகஎண் | சுந்தரர் பதிகஎண் | கூடுதல் எண் |
|---|---|---|---|---|---|
| **மலைநாட்டுத் தலம்** | | | | | |
| 1. | திருஅஞ்சைக்களம் | – | – | 4 | 1 |
| **கொங்குநாட்டுத் தலங்கள்** | | | | | |
| 1 | திருப்புக்கொளியூர் அவிநாசி | – | – | 92 | 1 |
| 2. | திருமுருகன்பூண்டி | – | – | 49 | 1 |
| 3. | திருநணு | II-72 | – | – | 1 |
| 4. | திருக்கொடிமாடச் செங்குன்றூர் | I-107 | – | – | 1 |
| 5. | திருவெஞ்சமாக்கூடல் | – | – | 42 | 1 |
| 6. | திருப்பாண்டிக்கொடுமுடி | II-69 | V-81 | 48 | 3 |
| 7. | திருக்கருவூர் ஆனிலை | II-28 | – | – | 1 |
| | | 4 | 1 | 4 | 9 |

திருத்தலங்கள் — 7
திருப்பதிகங்கள் — 9
ஞானசம்பந்தர்மாத்திரம் பாடிய தலங்கள் — 3
சுந்தரர்மாத்திரம் பாடிய தலங்கள் — 3
மூவரும் பாடிய தலம் — 1

**நடுநாட்டுத்தலங்கள்**

| தொடர் எண் | திருத்தலப்பெயர் | ஞானசம்பந்தர் | நாவுக்கரசர் | சுந்தரர் | கூடுதல் எண் |
|---|---|---|---|---|---|
| 1. | திருநெல்வாயில் அரத்துறை | II-90 | V-3 | 3 | 3 |
| 2. | திருத்தூங்கானைமாடம் | I-59 | IV-109 | – | 2 |
| 3. | திருக்கூடலையாற்றூர் | – | – | 85 | 1 |
| 4. | திருஎருக்கத்தம்புலியூர் | I-89 | – | – | 1 |
| 5. | திருத்தினைநகர் | – | – | 64 | 1 |
| 6. | திருச்சோபுரம் | I-51 | – | – | 1 |
| 7. | திருஅதிகைவீரட்டம் | I-46 | IV-1,2,10,24, 25,26,27, 28,104, V-53,54, VI-3-7 | 38 | 18 |
| 8. | திருநாவலூர் | – | – | 17 | 1 |
| 9. | திருமுதுகுன்றம் | I-12,53,93,131, II-64, III-34,99 | VI-68 | 25,43, 63 | 11 |
| 10. | திருநெல்வெண்ணெய் | III-96 | – | – | 1 |
| 11. | திருக்கோவலூர்வீரட்டம் | II-100 | IV-69 | – | 2 |
| 12. | திருஅறையணிநல்லூர் | II-77 | – | – | 1 |

| தொடர் எண் | திருத்தலப்பெயர் | ஞானசம்பந்தர் திருமுறைஎண், பதிகஎண் | திருநாவுக்கரசர் திருமுறைஎண், பதிகஎண் | சுந்தரர் பதிகஎண் | கூடுதல் எண் |
|---|---|---|---|---|---|
| 13. | திருஇடையாறு | – | – | 31 | 1 |
| 14. | திருவெண்ணெய்நல்லூர் | – | – | 1 | 1 |
| 15. | திருத்துறையூர் | – | – | 13 | 1 |
| 16. | திருவடுகூர் | I-87 | – | – | 1 |
| 17. | திருமாணிகுழி | III-77 | – | – | 1 |
| 18. | திருப்பாதிரிப்புலியூர் | II-121 | IV-94, | – | 2 |
| 19. | திருமுண்டீச்சுரம் | – | VI-85 | – | 1 |
| 20. | திருப்புறவார்பனங்காட்டூர் | II-53 | – | – | 1 |
| 21. | திருஆமாத்தூர் | II-44,50 | V-44,VI-9 | 45 | 5 |
| 22. | திருஅண்ணாமலை | I-10,69 | IV-63,V-4,5 | – | 5 |
| | | 23 | 27 | 12 | 62 |

சம்பந்தர் பாடிய தலங்கள் — 15
நாவுக்கரசர் பாடிய தலங்கள் — 9
சுந்தரர் பாடிய தலங்கள் — 10
சம்பந்தர்மாத்திரம் பாடியவை — 7
நாவுக்கரசர்மாத்திரம் பாடியவை — 1
சுந்தரர்மாத்திரம் பாடியவை — 6
சம்பந்தரும் அப்பரும் பாடியவை — 4
மூவரும் பாடியவை — 4

## தொண்டைநாட்டுத் தலங்கள், துளுநாட்டுத் தலங்கள், வடநாட்டுத் தலங்கள்

| தொடர் எண் | திருத்தலப்பெயர் | ஞானசம்பந்தர் திருமுறைஎண், பதிகஎண் | நாவுக்கரசர் திருமுறைஎண், பதிகஎண் | சுந்தரர் பதிகஎண் | கூடுதல் எண் |
|---|---|---|---|---|---|
| | தொண்டை நாட்டுத் தலங்கள் | | | | |
| 1. | திருக்கச்சி ஏகம்பம் | I-133,II-12, III-41,114 | IV-7,44,99, V-47,48,VI-64,65 | 61 | 12 |
| 2. | திருக்கச்சிமேற்றளி | – | IV-43 | 21 | 2 |
| 3. | திருஓணகாந்தன்தளி | – | – | 5 | 1 |
| 4. | திருக்கச்சிஅனேக தங்காவதம் | – | – | 10 | 1 |
| 5. | திருக்கச்சிநெறிக் காரைக்காடு | III-65 | – | – | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. திருக்குரங்குஅணில் முட்டம் | I-31 | – | – | 1 |
| 7. திருமாகறல் | III-72 | – | – | 1 |
| 8. திருஓத்தூர் | I-54 | – | – | 1 |
| 9. திருவன்பார்த்தான் பனங்காட்டூர் | – | – | 86 | 1 |
| 10. திருவல்லம் | I-113 | – | – | 1 |
| 11. திருமாற்பேறு | I-55,114 | IV-108,V-59,60, VI-80 | – | 6 |
| 12. திருஊறல் | I-106 | – | – | 1 |
| 13. திருஇலம்பையங்-கோட்டூர் | I-76 | – | – | 1 |
| 14. திருவிற்கோலம் | III-23 | – | – | 1 |
| 15. திருஆலங்காடு | I-45 | IV-68,VI-78 | 52 | 4 |
| 16. திருப்பாசூர் | II-60 | V-25,VI-83 | – | 3 |
| 17. திருவெண்பாக்கம் | – | – | 89 | 1 |
| 18. திருக்கள்ளில் | I-119 | – | – | 1 |
| 19. திருக்காளத்தி | III-36,69 | VI-8 | 26 | 4 |
| 20. திருஒற்றியூர் | III-57 | IV-45,46,86,V-24, VI-45 | 54,91 | 8 |
| 21. திருவலிதாயம் | I-3 | – | – | 1 |
| 22. வடதிருமுல்லைவாயில் | – | – | 69 | 1 |
| 23. திருவேற்காடு | I-57 | – | – | 1 |
| 24. திருமயிலாப்பூர் | II-47 | – | – | 1 |
| 25. திருவான்மியூர் | II-4,III-55 | V-82 | – | 3 |
| 26. திருக்கச்சூர் ஆலக்கோயில் | – | – | 4 | 1 |
| 27. திருஇடைச்சுரம் | I-78 | – | – | 1 |
| 28. திருக்கழுக்குன்றம் | I-103 | VI-92 | 81 | 3 |
| 29. திருஅச்சிறுபாக்கம் | I-77 | – | – | 1 |
| 30. திருவக்கரை | III-60 | – | – | 1 |
| 31. திருஅரசிலி | II-95 | – | – | 1 |
| 32. திருஇரும்பைமாகாளம் | II-117 | – | – | 1 |
| 32.(அ) திருக்கிளியன்னவூர் | III-127 | – | – | 1 |
| | 31 + 1 | 24 | 13 | 68 + 1 |

| | |
|---|---|
| ஞானசம்பந்தர் பாடிய தலங்கள் | — 25+1 |
| நாவுக்கரசர் பாடிய தலங்கள் | — 9 |
| சுந்தரர் பாடிய தலங்கள் | — 12 |
| ஞானசம்பந்தர்மாத்திரம் பாடியவை | — 17+1 |
| சுந்தரர்மாத்திரம் பாடியவை | — 6 |
| ஞானசம்பந்தரும் அப்பரும் பாடியவை | — 3 |
| சுந்தரரும் அப்பரும் பாடியது | — 1 |
| மூவரும் பாடியவை | — 5 |

## துளுநாட்டுத் தலம், வடநாட்டுத் தலங்கள்

| தொடர் எண் | திருத்தலப்பெயர் | ஞானசம்பந்தர் திருமுறைஎண், பதிகஎண் | திருநாவுக்கரசர் திருமுறைஎண், பதிகஎண் | சுந்தரர் பதிகஎண் | கூடுதல் எண் |
|---|---|---|---|---|---|
| | **துளுநாட்டுத் தலம்** | | | | |
| 1. | திருக்கோகரணம் | III-79 | VI-49 | – | 2 |
| | **வடநாட்டுத் தலங்கள்** | | | | |
| 1. | திருப்பருப்பதம் | I-118 | IV-58 | 79 | 3 |
| 2. | திருஇந்திரநீலப்பருப்பதம் | II-27 | – | – | 1 |
| 3. | திருஅனேகதங்காவதம் | II-5 | – | – | 1 |
| 4. | திருக்கேதாரம் | II-114 | – | 78 | 2 |
| 5. | திருக்கயிலாயம் | I-68, III- 68 | IV-47, VI- 55,56,57 | 100 | 7 |
| | | 6 | 5 | 3 | 14 |

ஞானசம்பந்தர் பாடிய தலங்கள் — 5
நாவுக்கரசர் பாடிய தலங்கள் — 2
சுந்தரர் பாடிய தலங்கள் — 3
ஞானசம்பந்தர்மாத்திரம் பாடிய தலங்கள் — 2
ஞானசம்பந்தரும் சுந்தரரும் பாடிய தலம் — 1
மூவரும் பாடிய தலங்கள் — 2

## பொதுப்பதிகங்கள்

| தொடர் எண் | பொதுப்பதிகங்கள் | திருமுறை எண்ணும், பதிக எண்ணும் |
|---|---|---|
| | **ஞானசம்பந்தர்** | |
| 1 | திருநீலகண்டம் | I-116 |
| 2 | க்ஷேத்திரக்கோவை | II- 39 |
| 3 | கோளறுபதிகம் | II- 85 |
| 4 | பஞ்சாக்கரத் திருப்பதிகம் | III- 22 |
| 5 | தனித் திருஇருக்குக்குறள் | III- 40 |
| 6 | நமசிவாயத் திருப்பதிகம் | III- 49 |
| 7 | திருப்பாசுரம் | III- 54 |
| | **நாவுக்கரசர்** | |
| 8 | சிவன்எனும் ஓசை | IV- 8 |
| 9 | திருஅங்கமாலை | IV- 9 |
| 10 | நமசிவாயத் திருப்பதிகம் | IV- 11 |
| 11 | தசபுராணம் | IV- 14 |
| 12 | பாவநாசத் திருப்பதிகம் | IV- 15 |
| 13 | விடம் தீர்த்த பதிகம் | IV- 18 |
| 14 | நினைந்த திருநேரிசை | IV- 74 |
| 15 | தனித் திருநேரிசை-1 | IV- 75 |
| 16 | தனித் திருநேரிசை-2 | IV- 76 |
| 17 | தனித் திருநேரிசை-3 | IV- 77 |
| 18 | குறைந்த திருநேரிசை-1 | IV- 78 |
| 19 | குறைந்த திருநேரிசை-2 | IV- 79 |

| தொடர் எண் | திருத்தலப்பெயர் | ஞானசம்பந்தர் திருமுறைஎண், பதிகஎண் | திருநாவுக்கரசர் திருமுறைஎண், பதிகஎண் | சுந்தரர் பதிகஎண் | கூடுதல் எண் |
|---|---|---|---|---|---|
| 20 | ஆருயிர்த் திருவிருத்தம் | IV- 84 | 33 | சித்தத்தொகைத் திருக் குறுந்தொகை | V- 97 |
| 21 | பசுபதித் திருவிருத்தம் | IV-110 | | | |
| 22 | சரக்கறைத் திருவிருத்தம் | IV-111 | 34 | உள்ளத் திருக்குறுந்- தொகை | V- 98 |
| 23 | தனித் திருவிருத்தம் - 1 | IV-112 | | | |
| 24 | தனித் திருவிருத்தம்-2 | IV-113 | 35 | பா. வநாசத் திருக்குறுந்- தொகை | V- 99 |
| 25 | தனித் திருக்குறுந்தொகை-1 | V- 89 | | | |
| 26 | தனித் திருக்குறுந்தொகை-2 | V- 90 | | | |
| 27 | தனித் திருக்குறுந்தொகை-3 | V- 91 | 36 | ஆதிபுராணத் திருக் குறுந்தொகை | V-100 |
| 28 | காலபாசத் திருக்குறுந் தொகை | V- 92 | 37 | க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம் | VI- 70 |
| 29 | மறக்கிற்பனே என்னும் குறுந்தொகை | V- 93 | 38 | அடைவு திருத்தாண்டகம் | VI- 71 |
| | | | 39 | பலவகைத் திருத்தாண்டகம் | VI- 93 |
| 30 | தொ ழற்பாலதே என்னும் குறுந்தொகை | V- 94 | 40 | நின்ற திருத்தாண்டகம் | VI- 94 |
| | | | 41 | தனித்திருத்தாண்டகம்-1 | VI- 95 |
| 31 | இலிங்கபுராணத் திருக் குறுந்தொகை | V- 95 | 42 | தனித்திருத்தாண்டகம்-2 | VI- 96 |
| | | | 43 | விஞவிடைத் திருத் தாண்டகம் | VI- 97 |
| 32 | மனத்தொகைத் திருக் குறுந்தொகை | V- 96 | 44 | மறுமாற்றத் திருத் தாண்டகம் | VI- 98 |
| | | சுந்தரர் | | | |
| 45 | திருநாட்டுத்தொகை | VII- 12 | 47 | முடிப்பது கங்கை | VII- 44 |
| 46 | நமக்கு அடிகளாகிய அடிகள் | VII- 33 | 48 | ஊர்த்தொகை | VII- 47 |

# காவிரி வடகரைத் தலங்கள் முதலியவற்றினது தொகை

| தொடர் எண் | தலைப்புக்கள் | கூடுதல் எண்ணிக்கை | ஞானசம்பந்தர் பாடியவை | நாவுக்கரசர் பாடியவை | சுந்தரர் பாடியவை |
|---|---|---|---|---|---|
| 1 | காவிரி வடகரைத் தலங்கள் | 63 | 54 | 33 | 20 |
| 2 | காவிரி வடகரைத்தலப் பதிகங்கள் | 239 | 137 | 79 | 23 |
| 3 | காவிரித் தென்கரைத் தலங்கள் | 128 | 101 | 66 | 26 |
| 4 | காவிரித் தென்கரைத் தலப் பதிகங்கள் | 317 | 148+1 | 133 | 35 |
| 5 | ஈழநாட்டுத் தலங்கள் | 2 | 2 | — | 1 |
| 6 | ஈழநாட்டுத் தலப் பதிகங்கள் | 3 | 2 | — | 1 |
| 7 | பாண்டியநாட்டுத் தலங்கள் | 14 | 13 | 4 | 5 |
| 8 | பாண்டியநாட்டுத் தலப் பதிகங்கள் | 34 | 24 | 5 | 5 |
| 9 | மலைநாட்டுத் தலம் பதிகம் | 1 | — | — | 1 |
| 10 | கொங்குநாட்டுத் தலங்கள் | 7 | 4 | 1 | 4 |
| 11 | கொங்குநாட்டுத் தலப் பதிகங்கள் | 9 | 4 | 1 | 4 |
| 12 | நடுநாட்டுத் தலங்கள் | 22 | 15 | 9 | 10 |
| 13 | நடுநாட்டுத் தலப் பதிகங்கள் | 62 | 23 | 27 | 12 |
| 14 | தொண்டைநாட்டுத் தலங்கள் | 33 | 26 | 9 | 12 |
| 15 | தொண்டைநாட்டுத் தலப் பதிகங்கள் | 69 | 32 | 24 | 13 |
| 16 | துளுநாட்டுத் தலம் | 1 | 1 | 1 | — |
| 17 | துளுநாட்டுத் தலப் பதிகங்கள் | 2 | 1 | 1 | — |
| 18 | வடநாட்டுத் தலங்கள் | 5 | 5 | 2 | 3 |
| 19 | வடநாட்டுத் தலப் பதிகங்கள் | 14 | 6 | 5 | 3 |
| 20 | பொதுப்பதிகங்கள் | 48 | 7 | 37 | 4 |

தலங்கள் : 276
பதிகங்கள் : 750
பொதுப்பதிகங்கள் : 48

# 5. தேவாரத் திருத்தலங்கள் - அகரவரிசை

| தொடர் எண் | திருத்தலப்பெயர் | தலஇருப்பிடம் | எண் | சம்பந்தர் தேவாரம் திருமுறைஎண்ணும், பதிகமும் | நாவுக்கரசர் தேவாரம் திருமுறைஎண்ணும், பதிகமும் | சுந்தரர் தேவாரம் பதிகஎண் | கூடுதல் எண் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகத்தியான்பள்ளி | காவிரி தென்கரை | 126 | II-76 | — | — | 1 |
| 2 | அச்சிறுபாக்கம் | தொண்டைநாடு | 29 | I-77 | — | — | 1 |
| 3 | அஞ்சைக்களம் | மலைநாடு | 1 | — | — | 4 | 1 |
| 4 | அண்ணுமலை | நடுநாடு | 22 | I-10,69 | IV-63; V-4,5 | | 5 |
| 5 | அதிகைவீரட்டம் | நடுநாடு. | 7 | I-46 | IV-1,2,10,24,25,26, 27,28,104; V-53,54; | | 93 |
| | | | | | VI-3-7 | 38 | 18 |
| 6 | அம்பர் பெருந்திருக்கோயில் | காவிரி தென்கரை | 54 | III-19 | — | — | 1 |
| 7 | அம்பர்மாகாளம் | காவிரி தென்கரை | 55 | I-83; II-103; III-126 | — | — | 3 |
| 8 | அரசிலி | தொண்டைநாடு | 31 | II-95 | — | — | 1 |
| 9 | அரதைப்பெரும்பாழி | காவிரி தென்கரை | 99 | III-30 | — | — | 1 |
| 10 | அரிசிற்கரைப்புத்தூர் | காவிரி தென்கரை | 66 | II-63 | V-61 | 9 | 3 |
| 11 | அவள்இவள்நல்லூர் | காவிரி தென்கரை | 100 | III-82 | IV-59 | — | 2 |
| 12 | அவிநாசி | கொங்குநாடு | 1 | — | — | 92 | 1 |
| 13 | அழுந்தூர் | காவிரி தென்கரை | 38 | II-20 | — | — | 1 |
| 14 | அறையணிநல்லூர் | நடுநாடு | 12 | II-77 | — | — | 1 |
| 15 | அனேகதங்காவதம் | வடநாடு | 3 | II-5 | — | — | 1 |
| 16 | அன்பில் ஆலந்துறை | காவிரி வடகரை | 57 | I-33 | V-80 | — | 2 |
| 17 | அன்னியூர் | காவிரி வடகரை | 22 | I-96 | V-8 | — | 2 |
| 18 | ஆக்கூர் | காவிரி தென்கரை | 46 | II-42 | VI-21 | — | 2 |
| 19 | ஆடானை | பாண்டிநாடு | 9 | II-112 | — | — | 1 |
| 20 | ஆப்பனூர் | பாண்டிநாடு | 2 | I-88 | — | — | 1 |
| 21 | ஆப்பாடி | காவிரி வடகரை | 40 | — | IV-48 | — | 1 |

| தொடர் எண் | திருத்தலப்பெயர் | தலஇருப்பிடம் | எண் | சம்பந்தர் தேவாரம் திருமுறைஎண்ணும், பதிகமும் | நாவுக்கரசர் தேவாரம் திருமுறைஎண்ணும், பதிகமும் | சுந்தரர் தேவாரம் பதிகஎண் | கூடுதல் எண் |
|---|---|---|---|---|---|---|---|
| 22 | ஆமாத்தூர் | நடுநாடு | - 21 | II-44,50 | V-44; VI-9 | 45 | 5 |
| 23 | ஆரூர் | காவிரி தென்கரை | - 87 | I-91,105; II-79, 101; III-45 | IV-4,5,19,20,21,52,53, 101,102; V-6,7; VI-24,25,26,27,28, 29,30,31,32,34 | 8,37,39, 51,59,73, 83,90 | 34 |

இறைவர் தான்தோன்றியீசர், எழுத்தறிந்த நாதர். இறைவி கொந்தார் பூங்குழல் அம்மை. தீர்த்தம் ஐராவததீர்த்தம்.
சம்பந்தர் III-95; 1
அப்பர் IV-72,100; V-21; VI-89 4
கூடுதல் - 5.

43. ஈங்கோய்மலை: (திருவிங்கநாதமலை) சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 63.

திருச்சி வழியாகச் சென்னையிலிருந்து ஈரோடு செல்லும் (குறுக்கு வழி) இரயில் பாதையில் 374 கி.மீ.இல் குழித்தலை என்னும் நிலையம் உண்டு. அதற்கு வடமேற்கில் $1^1/_2$ கி.மீ. தொலைவில் கடம்பந்துறையும், மேலும் $1^1/_2$ கி.மீ. தொலைவில் (அகண்ட காவிரியின் மறுகரையில்) திருத்தலமும் அமைந்துள்ளன. திருச்சியிலிருந்து பேருந்து வசதியுண்டு.

இறைவர் மரகதாசலர். இறைவி மரகதவல்லி. தீர்த்தம் அமிர்ததீர்த்தம்.
சம்பந்தர் I-70.

44. உசாத்தானம்: (கோயிலூர்) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 107.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ. தொலைவில் மயிலாடுதுறைச் சந்திப்பும், மயிலாடுதுறை - காரைக்குடிக் கிளைப்பாதையில் 88 கி.மீ: தொலைவில் முத்துப்பேட்டை நிலையமும் உள்ளன. நிலையத்திலிருந்து வடக்கே 3 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது. மயிலாடுதுறையிலிருந்து பட்டுக்கோட்டை வழியாகப் பேருந்து வசதியுண்டு.

இறைவர் மந்திரபுரீசுவரர். இறைவி பெரியநாயகி.
சம்பந்தர் III-33.

45. ஊறல்: தொண்டைநாட்டுத் தலம். எண் 12.

சென்னை - அரக்கோணம் இரயில் பாதையில் 113 கி.மீ. தொலைவில் தக்கோலம் நிலையமும், அதன் கிழக்கில் 5 கி.மீ. தொலைவில் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் உமாபதீசுவரர், ஜலநாதேசுவரர். இறைவி உமையம்மை. தீர்த்தம் பார்வதிதீர்த்தம், நந்திதீர்த்தம்.
சம்பந்தர் I-106.

46. எதிர்கொள்பாடி: (மேலைத் திருமணஞ்சேரி) சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 24.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 290 கி.மீ. தொலைவில் குத்தாலம் இரயில் நிலையம் உள்ளது. நிலையத்திற்கு வடகிழக்கில் 5 கி.மீ.இல் வேள்விக்குடியும், அதற்கு வடமேற்கே 3 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன. குத்தாலத்திலிருந்து பேருந்து வசதியுண்டு.

இறைவர் ஐராவதேசுவரர். இறைவி மலர்க்குழல் நாயகி.
சுந்தரர் VII-7.

47. எருக்கத்தம்புலியூர்: (இராஜேந்திரப் பட்டணம்) நடுநாட்டுத் தலம். எண் 4.

குறுக்கு வழியாகச் செல்லும் சென்னை - திருச்சிராப்பள்ளி இரயில் பாதையில் 216 கி.மீ. தொலைவில் விருத்தாசலம் இரயில் நிலையமும், அங்கிருந்து தெற்கே 12 கி.மீ. தொலைவில் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் நீலகண்டர். இறைவி நீலமலர்க்கண்ணி. தலவிருட்சம் வெள்ளெருக்கு.
சம்பந்தர் I-89.

48. எறும்பியூர்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 7.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 391 கி.மீ. தொலைவில் உள்ளது திருவெறும்பியூர் நிலையம். நிலையத்திற்கு வடமேற்கே 1 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது. குன்றின்மேல் கோயில் உள்ளது. தஞ்சை - திருச்சிராப்பள்ளி பேருந்து நெடும்பாதையில் திருச்சிக்கு 8 கி.மீ. முன்னரே உள்ளது திருத்தலம்.

இறைவர் எறும்பீசர். இறைவி நறுங்குழல் நாயகி.
அப்பர் V-74; VI-91 கூடுதல் 2.

49. ஏடகம்: பாண்டியநாட்டுத்தலம். எண் 4.

சென்னை - தூத்துக்குடி இரயில் நெடும்பாதையில் 535 கி.மீ. தொலைவில் உள்ள சோழவந்தான் நிலையம், மதுரைக்கு அணிமையில் உள்ளது. நிலையத்திற்குத் தெற்கில் 4 கி.மீ.இல் திருத்தலம் உள்ளது. மதுரையிலிருந்து பேருந்து வசதியுண்டு.

இறைவர் ஏடகநாதர். இறைவி ஏலவார்குழலி. தீர்த்தம் வையை நதி.
சம்பந்தர் III-32.

50. ஐயாறு: சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 51.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 351 கி.மீ. தொலைவில் தஞ்சாவூர் சந்திப்பு நிலையம் உள்ளது. நிலையத்திலிருந்து வடக்கே நெடுஞ்சாலை வழியில் 13 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது. தஞ்சாவூரிலிருந்து பேருந்துவசதி அடிக்கடியுண்டு.

இறைவர் ஐயாறப்பர், பஞ்சநதேசுவரர். இறைவி அறம் வளர்த்த நாயகி, தருமாம்பாள். தலவிருட்சம் வில்வம். தீர்த்தம் காவிரி, சந்திரபுஷ்கரணி, சூரிய-புஷ்கரணி, தேனமிர்ததீர்த்தம்.

| | |
|---|---|
| சம்பந்தர் I-36,120,130; II-6,32; | 5 |
| அப்பர் IV-3,13, 38,39,40,91,92,98; V-27,28; VI-37,38; | 12 |
| சுந்தரர் VII-77 | 1 |
| | கூடுதல் 18. |

51. ஒற்றியூர்: தொண்டைநாட்டுத் தலம். எண் 20.

சென்னை - கூடூர் இரயில் பாதையில் 10 கி.மீ.இல் திருஒற்றியூர் நிலையம் உள்ளது. நிலையத்திற்குக் கிழக்கில் திருத்தலம் அமைந்துள்ளது. சென்னைநகரப் பேருந்து வசதியுண்டு.

இறைவர் படம்பக்க நாதர். இறைவி வடிவுடையம்மை. தலவிருட்சம் மகிழமரம். தீர்த்தம் பிரமதீர்த்தம்.

| | |
|---|---|
| சம்பந்தர் III-57; | 1 |
| அப்பர் IV-45,46,86; V-24; VI-45; | 5 |
| சுந்தரர் VII-54,91 | 2 |
| | கூடுதல் 8. |

52. ஓணகாந்தன்தளி: தொண்டைநாட்டுத்தலம். எண் 3.

சென்னை - அரக்கோணம் செங்கற்பட்டு இரயில் பாதையில் 91 கி.மீ. தொலைவில் காஞ்சிபுர நிலையமும், அங்கிருந்து வடமேற்கில் 2 கி.மீ. தொலைவில் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் ஓணேசுவரர், காந்தேசுவரர். இறைவி காமாட்சியம்மை.
சுந்தரர் VII-5.

53. ஒத்தூர்: தொண்டைநாட்டுத் தலம். எண் 8.

முற்கூறிய காஞ்சிபுரம் இரயில் நிலையத்திற்கு மேற்கில் 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது இத்தலம்; அச்சிறுபாக்கம் என்னும் இரயில் நிலையத்திற்கு வடமேற்கில் 18 கி.மீ. தொலைவில் உள்ளது.

இறைவர் வேதநாதர். இறைவி இளமுலை நாயகி. தீர்த்தம் சேயாறு.
சம்பந்தர் I-54.

54. ஓமமாம்புலியூர்: (ஓமாம்புலியூர்) சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம்.
எண் 31.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 290 கி.மீ. தொலைவில் உள்ள குத்தாலம் இரயில் நிலையம் மயிலாடுதுறை நிலையத்திற்கு அணித்தாகும். குத்தாலத்திற்கு வடக்கே 18 கி.மீ.இல் அமைந்துள்ளது இத்திருத்தலம்; சிதம்பரத்துக்குத் தென்மேற்கே 30 கி.மீ. தொலைவில் உள்ளது. சிதம்பரத்திலிருந்து பேருந்து வசதியுண்டு.

இறைவர் துயர் தீர்த்த நாதர். இறைவி பூங்கொடி நாயகி. தீர்த்தம் கொள்ளிடம், பேராறு.
சம்பந்தர் III-122;
அப்பர் VI-88 கூடுதல் 2.

55. கச்சி அனேகதங்காவதம்: தொண்டைநாட்டுத் தலம். எண் 4.

சென்னையிலிருந்து அரக்கோணம் செங்கல்பட்டு வழிச் செல்லும் இரயில் பாதையில் 91 கி.மீ.இல் உள்ளது காஞ்சிபுரம் நிலையம். நிலையத்திற்கு வடமேற்கில் வயல்வெளியில் அமைந்துள்ளது திருத்தலம்.

இறைவர் அனேகதங்காவதேசுவரர். இறைவி காமாட்சிஅம்மை.
சுந்தரர் VII-10.

56. கச்சி ஏகம்பம்: தொண்டைநாட்டுத் தலம். எண் 1.

முன்னர்க் கூறிய காஞ்சிபுரம் நிலையத்திற்கு மேற்கே $1^1/_2$ கி.மீ.இல் அமைந்துள்ளது திருத்தலம்.

இறைவர் ஏகாம்பரநாதர், பெரியகம்பர். இறைவி காமாட்சியம்மை, ஏலவார் குழலி. தலவிருட்சம் மாமரம். தீர்த்தம் சிவகங்கை, கம்பாநதி.
சம்பந்தர் I-133; II-12; III-41,114; 4
அப்பர் IV-7,44,99; V-47,48; VI-64,65; 7
சுந்தரர் VII-61 1
கூடுதல் 12.

57. கச்சிநெறிக் காரைக்காடு: தொண்டைநாட்டுத் தலம். எண் 5.

முதலிற் கூறிய காஞ்சிபுரம் நிலையத்திற்கு வடகிழக்கில் அமைந்துள்ள திருத்தலம்.

இறைவர் காரைத் திருநாதர். இறைவி காமாட்சியம்மை. தலவிருட்சம் காரை. தீர்த்தம் இந்திரதீர்த்தம்.
சம்பந்தர் III-65.

58. கச்சிமேற்றளி: தொண்டைநாட்டுத் தலம். எண் 2.

முன்னர்ச் சொல்லிய காஞ்சிபுரம் நிலையத்திற்கு மேற்குப் பகுதியாகிய பிள்ளையார்பாளையத்தில் அமைந்துள்ளது திருத்தலம்.

இறைவர் திருமேற்றளி நாதர். இறைவி திருமேற்றளி நாயகி. தீர்த்தம் விஷ்ணுதீர்த்தம்.
அப்பர் IV-43;
சுந்தரர் VII-21 கூடுதல் 2.

59. கச்சூர்: (ஆலக்கோயில்) தொண்டைநாட்டுத் தலம். எண் 26.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 48 கி.மீ.இல் (செங்கற்பட்டுக்கருகே) சிங்கப்பெருமாள்கோயில் நிலையம் உள்ளது. நிலையத்திற்கு வடமேற்கே $2^1/_2$ கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது திருத்தலம்.

இறைவர் விருந்திட்டநாதர். இறைவி உமையம்மை. தீர்த்தம் கூர்மதீர்த்தம்.
சுந்தரர் VII-4.

60. கஞ்சனூர்: சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 36.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 297 கி.மீ.இல் நாரசிங்கம்பேட்டை நிலையம் உள்ளது. அதற்கு வடக்கே 2 கி.மீ. தொலைவில் (காவிரியின் வடகரையில்) உள்ளது திருத்தலம்.

இறைவர்அக்நீசுவரர். இறைவி கற்பகநாயகி. தீர்த்தம் அக்நிதீர்த்தம்.
அப்பர் VI-90.

61. கடம்பந்துறை: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 2.

திருச்சிராப்பள்ளி வழியே, சென்னை - ஈரோடு செல்லும் இரயில் குறுக்குப் பாதையில் 374 கி.மீ.இல் உள்ளது குழித்தலை நிலையம். நிலையத்திற்கு வடமேற்கே $1^1/_2$ கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது திருத்தலம். கடம்பர்கோயில் எனவும் வழங்கப்படும் இத்தலத்திற்குத் திருச்சியிலிருந்து பேருந்து வசதியுண்டு.

இறைவர் கடம்பவனேசுவரர். இறைவி முற்றிலாமுலையாள். தலவிருட்சம் கடம்பு. தீர்த்தம் காவிரி.
அப்பர் V-18.

62. கடம்பூர்: (மேலைக் கடம்பூர்) சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 34.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 290 கி.மீ.இல் உள்ள குத்தாலம் நிலையத்திற்கு வடக்கே 18 கி.மீ. தொலைவில் உள்ள ஓமாம்புலியூருக்கு

வடமேற்கே அமைந்துள்ளது திருத்தலம். சிதம்பரத்திலிருந்து பேருந்திலும் (24 கி.மீ.) செல்லலாம்.

இறைவர் அமிர்தகடேசர். இறைவி சோதிமின்னம்மை.
சம்பந்தர் II-68;
அப்பர் V-19,20 கூடுதல் 3.

63. கடவூர்மயானம்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 48.

முன்னர்க் கூறிய திருக்கடையூர் நிலையத்திற்குக் கிழக்கே 2 1/4 கி.மீ.இல் அமைந்துள்ளது திருத்தலம். மயிலாடுதுறையிலிருந்து பேருந்து வசதியுண்டு.

இறைவர் பெரியபெருமான் அடிகள், பிரமபுரீசர். இறைவி மலர்க்குழல் மின்னம்மை. தீர்த்தம் காசிதீர்த்தம்.
சம்பந்தர் II-80;
அப்பர் V-38;
சுந்தரர் VII-53 கூடுதல் 3.

64. கடவூர் (வீரட்டம்): சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 47.

சென்னை - இராமேசுரம் இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், மயிலாடுதுறை - தரங்கம்பாடிக் கிளைப்பாதையில் 22 கி.மீ.இல் திருக்கடையூர் நிலையமும் உள்ளன. நிலையத்திற்குக் கிழக்கே 3/4 கி.மீ.இல் அமைந்துள்ள திருக்கோயில், அட்டவீரட்டங்களுள் ஒன்றாகும்.

இறைவர் அமிர்தகடேசர், அமுதலிங்கம். இறைவி அபிராமிஅம்மை. தலவிருட்சம் சாதிமல்லிகைக்கொடி, வில்வம் என்பன. தீர்த்தம் சிவகங்கை, அமிர்தபுட்கரணி.

| | |
|---|---|
| சம்பந்தர் III-8; | 1 |
| அப்பர் IV-31,107; V-37; | 3 |
| சுந்தரர் VII-28 | 1 |
| | கூடுதல் 5. |

65. கடிக்குளம்: (கற்பகனார் கோயில்) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 109.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறை நிலையம் உள்ளது. மயிலாடுதுறை - காரைக்குடிப் பாதையில் 80 கி.மீ. தொலைவில் தில்லைவளாகம் நிலையம் உள்ளது. நிலையத்திலிருந்து 6 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது. திருத்தருப்பூண்டியிலிருந்து பேருந்து வசதியுண்டு.

இறைவர் கற்பகநாயகர். இறைவி சௌந்தரநாயகி. தீர்த்தம் விநாயகதீர்த்தம்.
சம்பந்தர் II-104

66. கடுவாய்க்கரைப் புத்தூர்: (ஆண்டான்கோயில்) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 97.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 313 கி.மீ.இல் கும்பகோணம் நிலையம் உள்ளது. நிலையத்திற்குத் தென்கிழக்கில் 16 கி. மீ.இல் உள்ள குடவாசலுக்கு மேற்கில் 5 1/2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள திருத்தலத்திற்குக் கும்பகோணத்திலிருந்தே பேருந்து வசதியுண்டு.

இறைவர் சொர்ணபுரீசுவரர். இறைவி சொர்ணபுரீசுவரி, சிவாம்பிகை.
அப்பர் V-62.

67. கடைமுடி: (கீழையூர்) சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 18.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 274 கி.மீ.இல் ஆனந்த தாண்டவபுரம் நிலையம் உள்ளது. நிலையத்திற்கு வடகிழக்கில் 3 கி.மீ.இல் நின்றியூர் உள்ளது. அதற்குத் தென்கிழக்கில் 6 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் கடைமுடிநாதர். இறைவி அபிராமியம்மை. தீர்த்தம் கருணைதீர்த்தம்.
சம்பந்தர் I-111.

[தஞ்சைமாவட்டத்தில் கல்லணைக்குக் கிழக்கில் 8 கி. மீ.இல் உள்ள கோயிலடிக்குக் கிழக்கில் 3 கி.மீ.இல் உள்ள திருச்சென்னம்பூண்டி என்னும் ஊரே திருக்கடைமுடி என்ற கருத்தும் உண்டு. இது தஞ்சை - கல்லணைப் பேருந்து வழியில் உள்ள இடமாகும்.]

68. கண்டியூர்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 12.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 351 கி. மீ.இல் தஞ்சாவூர் நிலையம் உள்ளது. நிலையத்திலிருந்து வடக்கே செல்லும் நெடுஞ்சாலையில் 10 கி.மீ.இல் அமைந்துள்ளது திருத்தலம். தஞ்சையிலிருந்து நகரப்பேருந்துவசதி அடுத்து அடுத்து உண்டு.

இறைவர் வீரட்டேசர். இறைவி மங்களநாயகி. தீர்த்தம் காவிரி.
சம்பந்தர் III-38;
அப்பர் IV-93 கூடுதல் 2.

69. கண்ணார் கோயில்: (குறுமாணக்குடி) சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 17.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 267 கி. மீ.இல் வைத்தீசுவரன்கோயில் நிலையம் உள்ளது. நிலையத்திற்குத் தென்கிழக்கில் 3 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் கண்ணாயிர நாதர். இறைவி முருகுவளர் கோதை. தீர்த்தம் இந்திரதீர்த்தம்.
சம்பந்தர் I-101.

70. கயிலாயம்: வடநாட்டுத் தலம். எண் 5.

சென்னையிலிருந்து 2720 கி.மீ. தொலைவில் உள்ள தலம். இமயமலையின் வடபால் மேற்குத் திபேத்தின் பகுதியில் அமைந்துள்ளது.

இறைவர் கயிலாயநாதர். இறைவி பார்வதி பிராட்டி. தீர்த்தம் மகாசிவதீர்த்தம்.
சம்பந்தர் I-68; III-68; 2
அப்பர் IV-47; VI 55-57; 4
சுந்தரர் 100 1
கூடுதல் 7.

71. கரவீரம்: (கரையபுரம்) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 91.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், மயிலாடுதுறை - காரைக்குடிப் பாதையில் 39 கி.மீ.இல் திருவாரூர் நிலைய

மும் உள்ளன. திருவாரூருக்கு மேற்கே $11^1/_2$ கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந் துள்ளது. (மாயூரம் - திருவாரூர்ப் பேருந்து வசதியுண்டு.)

இறைவர் கரவீரநாதர். இறைவி பிரத்தியட்ச மின்னம்மை. தலவிருட்சம் அலரி.

சம்பந்தர் I-58.

72. கருகாவூர்: (திருக்களாவூர்) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம்.
எண் 18.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 334 கி.மீ.இல் ஐயம் பேட்டை நிலையம் உள்ளது. நிலையத்திற்குத் தென்கிழக்கில் 6 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது. தஞ்சையிலிருந்தும் பேருந்து வசதியுண்டு.

இறைவர் முல்லைவனேசுவரர். இறைவி கர்ப்பரட்சகி, கரும்பனையாள். தலவிருட்சம் முல்லைக்கொடி. தீர்த்தம் பாற்குளம்.

சம்பந்தர் III-46;
அப்பர் VI-15 கூடுதல் 2.

73. கருக்குடி: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 69.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 313 கி.மீ.இல் கும்ப கோணம் நிலையம் உள்ளது. நிலையத்திலிருந்து நீடாமங்கலம் செல்லும் நெடுஞ் சாலையில் தென்கிழக்கில் உள்ள கலயநல்லூர் வழியில் 6 கி.மீ. தொலைவில் திருத் தலம் அமைந்துள்ளது.

இறைவர் சற்குணர். இறைவி சுரும்பார்குழல் அரிவை.
சம்பந்தர் III- 21.

74. கருப்பறியலூர்: (தலைஞாயிறு) சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம்.
எண் 27.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 267 கி.மீ. தொலைவில் வைத்தீசுவரன்கோயில் நிலையம் உள்ளது. நிலையத்திற்கு வடமேற்கே 8 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது. (இது கொகுடிக்கோயில் ஆகும்.)

இறைவர் குற்றம் பொறுத்த நாதர். இறைவி கோல்வளை நாயகி. தலவிருட்சம் கொகுடி (முல்லையின் வகைகளில் ஒன்று). தீர்த்தம் இந்திரதீர்த்தம்.

சம்பந்தர் II-31;
சுந்தரர் VII-30 கூடுதல் 2.

75. கருவிலிக் கொட்டிட்டை: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 63.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 313 கி.மீ.இல் கும்ப கோணம் உள்ளது. அந்நிலையத்திற்குத் தென்கிழக்கில் 9 கி.மீ.இல் நறையூர்ச் சித்தீச் சுரமும், அங்கிருந்து ஒரு கி.மீ.இல் நாச்சியார் கோயிலும், அங்கிருந்து கிழக்கே 10 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன. (குடந்தை - நாச்சியார்கோயில் பேருந்து உண்டு.)

இறைவர் சற்குருநாதர். இறைவி சர்வாங்கநாயகி.
அப்பர் V-69.

76. கருவூர் ஆனிலை: கொங்குநாட்டுத் தலம். எண் 7.

கருவூர் - திருத்தலம்: ஆனிலை - ஆலயம்.
திருச்சிராப்பள்ளி வழியே செல்லும் சென்னை - ஈரோடு இரயில் நெடும் பாதையில் 477 கி.மீ. தொலைவில் உள்ளது கரூர் நிலையம். நிலையத்தின் மேற்கே கற் சாலையில் 1.5 கி.மீ.இல் உள்ளது திருத்தலம். திருச்சியிலிருந்து பேருந்து வசதி யுண்டு.

இறைவர் பசுபதீசுவரர். இறைவி கிருபாநாயகி, கற்பகவல்லி. தீர்த்தம் ஆம்-பிராவதி நதி.
சம்பந்தர் II-28.

77. கலயநல்லூர்: (சாக்கோட்டை) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம்.
எண் 68.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 313 கி.மீ.இல் கும்ப கோணம் நிலையம் உள்ளது. நிலயத்திலிருந்து நீடாமங்கலம் போகும் நெடுஞ்சாலை யில் $4^{1}/_{2}$ கி.மீ. தொலைவில் (அரிசிலாற்றங்கரையில்) திருத்தலம் அமைந்துள்ளது. குடந்தையிலிருந்து நகரப்பேருந்து வசதியுண்டு.

இறைவர் அமிர்தகலாநாதர். இறைவி அமிர்தவல்லி.
சுந்தரர் VII-16.

78. கலிக்காமூர்: (அன்னப்பன் பேட்டை) சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம்.
எண் 8.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 261 கி.மீ.இல் சீகாழி நிலையம் உள்ளது. அந்நிலையத்திற்குக் கிழக்கே 15 கி.மீ.இல் முல்லைவாயில் என்னும் தலமும், அத்தலத்திற்குத் தென்மேற்கில் 5 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் சுந்தரேசர். இறைவி அழகம்மை. தீர்த்தம் அம்புவிதீர்த்தம்.
சம்பந்தர் III - 105.

79. கழிப்பாலை: (காரைமேடு) சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 4.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 244 கி.மீ.இல் சிதம் பரம் உள்ளது. நிலையத்திற்குத் தென்கிழக்கில் 3 கி.மீ. தொலைவில் (சிவபுரிக்கு அணிமையில்) திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் பால்வண்ணநாதர். இறைவி வேதநாயகி.
சம்பந்தர் II-21; III-44; 2
அப்பர் IV-6,30,106; V-40; VI-12; 5
சுந்தரர் VII-23 1
கூடுதல் 8.

80. கழுக்குன்றம்: தொண்டைநாட்டுத் தலம். எண் 28.

சென்னை - விழுப்புரம் இரயில் பாதையில் 56 கி.மீ.இல் செங்கற்பட்டு நிலையம் அமைந்துள்ளது. நிலையத்திற்குத் தென்கிழக்கில் மகாபலிபுரம் செல்லும் சாலையில் 15 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது. சென்னை - திருக்கழுக்குன்றம் பேருந்து வசதியுண்டு.

இறைவர் பக்தவத்சலர். இறைவி திரிபுரசுந்தரி. தீர்த்தம் (சங்கு பிறந்த குளம்) சங்கதீர்த்தம்.

சம்பந்தர் I-103;
அப்பர் VI-92;
சுந்தரர் VII-81 கூடுதல் 3.

81. களர்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 105.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடு துறை நிலையம் உள்ளது. மயிலாடுதுறை - காரைக்குடிக் கிளைப்பாதையில் 66 கி.மீ.இல் திருத்தருப்பூண்டி நிலையமும், அங்கிருந்து 15 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள. மயிலாடுதுறையிலிருந்து திருத்தருப்பூண்டிக்கும், திருத்தருப்பூண்டி யிலிருந்து திருக்களர்த்தலத்துக்கும் பேருந்து வசதியுண்டு.

இறைவர் களர்முளைநாதர். இறைவி கொம்பன்னாள். தீர்த்தம் துருவாசதீர்த்தம்.
சம்பந்தர் II-51.

82. கள்ளில்: தொண்டைநாட்டுத் தலம். எண் 18.

சென்னை - கூடூர் இரயில் பாதையில் 35 கி.மீ.இல் பொன்னேரி நிலையம் உள்ளது. நிலையத்திற்குத் தென்மேற்கே 19 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந் துள்ளது.

இறைவர் சிவானந்தர். இறைவி ஆனந்தவல்லி. தீர்த்தம் ஸ்ரீநந்திதீர்த்தம்.
சம்பந்தர் I-119.

83. கற்குடி: (உய்யக் கொண்டான் மலை) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 4.

சென்னையிலிருந்து குறுக்கு வழியாகச் செல்லும் இரயில்பாதையில் 337 கி.மீ.இல் திருச்சிராப்பள்ளி நிலையம் உள்ளது. நிலையத்திற்குத் தென்மேற்கில் 4 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் உச்சிநாதர், முத்தீசர். இறைவி அஞ்சனாட்சி. தீர்த்தம் பொன்னொளி ஓடை.
சம்பந்தர் I-43;
அப்பர் VI-60;
சுந்தரர் VII-27 கூடுதல் 3.

84. கன்றாப்பூர்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 120.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயி லாடுதுறை நிலையமும், மயிலாடுதுறை - காரைக்குடிக் கிளைப்பாதையில் 49 கி.மீ. இல் மாவூர் நிலையமும் உள்ளன. நிலையத்திற்குக் கிழக்கே 9½ கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் நற்குறியப்பர், நடுதறியப்பர். இறைவி மாதுமையம்மை.
அப்பர் VI-61.

85. காட்டுப்பள்ளி (கீழை): சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 12.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 261 கி.மீ.இல் சீகாழி

நிலையம் உள்ளது. நிலையத்தின் தென்கிழக்கில் 11 கி.மீ. தொலைவில் திருவெண்காட்டுத் தலமும், அத்தலத்திற்கு மேற்கில் $1^1/_2$ கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன. (சீகாழி - திருவெண்காடு பேருந்துண்டு.)

இறைவர் ஆரணிய சுந்தரர். இறைவி அகிலாண்டநாயகி.
சம்பந்தர் I - 5.

86. காட்டுப்பள்ளி (மேலை): சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 9.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 369 கி.மீ.இல் பூதலூர் நிலையம் அமைந்துள்ளது. நிலையத்திற்கு வடக்கில் 8 கி.மீ.இல் (குடமுருட்டி ஆற்றின் கரையில்) திருத்தலம் அமைந்துள்ளது. தஞ்சையிலிருந்து அடுத்தடுத்துப் பேருந்து வசதியுண்டு.

இறைவர் தீயாடியப்பர். இறைவி வார்கொண்டமுலையாள். தீர்த்தம் காவிரி, அக்நிதீர்த்தம்.
சம்பந்தர் III-29;
அப்பர் V - 54 கூடுதல் 2.

87. காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சுரம்: சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 10.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 261 கி.மீ.இல் சீகாழி நிலையம் உள்ளது. நிலையத்தின் தென்கிழக்கே 16 கி.மீ.இல் திருத்தலம் அமைந் துள்ளது. மயிலாடுதுறை, சீகாழி இவற்றினின்றும் பேருந்து வசதியுண்டு.

இறைவர் பல்லவனேசுவரர். இறைவி சௌந்தரநாயகி. தீர்த்தம் காவிரி சங்கமத் தீர்த்தம்.
சம்பந்தர் I - 65; III - 112 கூடுதல் 2.

88. காழி: சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 14.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 261 கி.மீ.இல் சீகாழி இருப்புப்பாதை நிலையம் அமைந்துள்ளது. நிலையத்திற்குக் கிழக்கில் 2 கி.மீ.இல் திருத் தலமுள்ளது.

இறைவர் பிரமபுரீசுவரர். இறைவி திருநிலைநாயகி. தீர்த்தம் பிரமதீர்த்தம்.

| | |
|---|---|
| 1. பிரமபுரம் I-1,63,90,117,127,128; II-40,65,70,73,74; III-37,56, 67,110 | 15 |
| 2. வேணுபுரம் I-9; II-17,81 | 3 |
| 3. புகலி I-4,30,104; II-25,29,54,122; III-3,7 | 9 |
| 4. வெங்குரு I-75; III-94 | 2 |
| 5. தோணிபுரம் I-60; III-81,100; V-45 | 4 |
| 6. பூந்தராய் II-1; III-2,5,13 | 4 |
| 7. சிரபுரம் I-47,109; II-102 | 3 |
| 8. புறவம் I-74,97; III-84 | 3 |
| 9. சண்பைநகர் I-66; III-75 | 2 |
| 10. சீகாழி I-24,34,84,102; II-11,49,59,75,96,97,113; III-43,117 | 13 |
| 11. கொச்சைவயம் II-83,89; III-89 | 3 |
| 12. கழுமலம் I-19,79,126,129; III-24,113,118; IV-82,83; VII-58 | 10 |

கூடுதல் 71.

89. காளத்தி: தொண்டைநாட்டுத் தலம். எண் 19.

சென்னை - இராய்ச்சூர் இரயில் நெடும்பாதையில் இரேணுகுண்டா - கூடூர்க் கிளைப்பாதையில் 161 கி.மீ.இல் அமைந்துள்ளது, ஸ்ரீகாளத்தி நிலையம். திருத்தலம் நிலையத்திலிருந்து 3 கி.மீ.இல் உள்ளது. இரேணுகுண்டாவிலிருந்து பேருந்துவழியுண்டு.

இறைவர் திருக்காளத்திநாதர். இறைவி ஞானப்பூங்கோதை. தலவிருட்சம் கல்லால மரம். தீர்த்தம் பொன்முகலி.

சம்பந்தர் III-36,69; அப்பர் VI-8; சுந்தரர் VII-26 கூடுதல் 4.

90. காறாயில்: (திருக்காறைவாசல்) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 19.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறை நிலையமும், மயிலாடுதுறை - காரைக்குடிக் கிளைப்பாதையில் 39 கி.மீ.இல் திருவாரூர் நிலையமும் உள்ளன. திருவாரூர் நிலையத்திற்குத் தெற்கில் 13 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் கண்ணாயிரநாதர். இறைவி கைலாசநாயகி. தீர்த்தம் இந்திரதீர்த்தம்.

சம்பந்தர் II-15.

91. கானப்பேர்: (காளையார்கோயில்) பாண்டிநாட்டுத் தலம். எண் 10.

சென்னை இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 525 கி.மீ.இல் நாட்டரசன்கோட்டை நிலையம் உள்ளது. நிலையத்திலிருந்து 10 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் காளையீசுரர். இறைவி சொர்ணவல்லி. தீர்த்தம் யானைமடு.

சம்பந்தர் III-26;
சுந்தரர் VII-84 கூடுதல் 2.

92. கானாட்டுமுள்ளூர்: சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 32.

முன்னர்க் காணும் இரயில் பாதையில் 290 கி.மீ.இல் குத்தாலம் நிலையம் உள்ளது. நிலையத்திற்கு வடக்கே 18 கி.மீ.இல் ஓமாம்புலியூரும், அதற்குத் தென்கிழக்கில் 3 கி.மீ. தொலைவில் (கொள்ளிடக்கரையில்) இத்திருத்தலமும் அமைந்துள்ளன. சிதம்பரத்திலிருந்து பேருந்து வழியில் 16 கி.மீ.இல் உள்ளது இத்தலம்.

இறைவர் பதஞ்சலிநாதர். இறைவி கானார்குழலி, கோல்வளைக்கை அம்மை.

சுந்தரர் VII-40.

93. கானூர்: சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 56.

முதலிற் கூறிய இரயில் பாதையில் 369 கி.மீ.இல் பூதலூர் நிலையம் உள்ளது. நிலையத்திற்கு வடக்கில் 11 கி.மீ.இல் உள்ளது திருத்தலம். தஞ்சையிலிருந்து திருக்காட்டுப்பள்ளிக்குப் பேருந்தில் சென்று வடக்கே 4 கி.மீ.இல் கொள்ளிடக்கரையில் அமைந்துள்ள இக்கோயிலை அடையலாம். (இன்று அங்குக் கோயிலே உள்ளது; ஊர் ஏதும் இல்லை.)

இறைவர் கரும்பேசுவரர், செம்மேனிநாதர். இறைவி சிவயோகநாயகி. தீர்த்தம் கொள்ளிடம்.

சம்பந்தர் I-73; அப்பர் V-76 கூடுதல் 2.

94. கிளியன்னவூர்: (கிளிநலூர், கிளியனூர்) தொண்டைநாட்டுத்தலம்.
எண் 33.

சென்னை - விழுப்புரம் இரயில்பாதையில் 122 கி.மீ.இல் திண்டிவனம் நிலையம் உள்ளது. நிலையத்திலிருந்து புதுச்சேரி செல்லும் பேருந்து சாலையில் 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது திருத்தலம்.

இறைவர் அகத்தீசுவரர். இறைவி பிருகந்நாயகி
சம்பந்தர் III-127.

95. கீழ்வேளூர்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 84.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 351 கி. மீ.இல் தஞ்சாவூர் நிலயம் உள்ளது. தஞ்சாவூர் - நாகூர்க் கிளைப்பாதையில் 67 கி.மீ.இல் அமைந்துள்ளது திருத்தலம். தஞ்சையிலிருந்து பேருந்துவசதி உண்டு.

இறைவர் கேடிலியப்பர். இறைவி வனமுலைநாயகி. தீர்த்தம் சரவணப் பொய்கை.
சம்பந்தர் II-105; அப்பர் VI-67 கூடுதல் 2.

96. குடந்தைக் காரோணம்: (விசுவநாதர் கோயில்) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 28.

முன்னர்க் காணும் இரயில் பாதையில் 313 கி.மீ.இல் கும்பகோணம் அமைந்துள்ளது. நிலையத்தை அடுத்துள்ள மகாமகக் குளக்கரையில் திருக்கோயில் அமைந்துள்ளது.

இறைவர் காசி விசுவநாதர். இறைவி விசாலாட்சி, தேனார்மொழி.
சம்பந்தர் I-72.

97. குடந்தைக் கீழ்க்கோட்டம்: (நாகேசுவரர் கோயில்) காவிரித் தென்கரைத்தலம்.
எண் 27.

முன்னர்க் காணும் கும்பகோண நிலயத்திலிருந்து 2 கி.மீ.இல் திருக்கோயில் அமைந்துள்ளது.

இறைவர் நாகேசுவரர். இறைவி பெரிய நாச்சியார், பெரிய நாயகி.
அப்பர் VI-75.

98. குடமூக்கு: (கும்பகோணம்) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம்.
எண் 26.

முன்னர்க் காணும் கும்பகோண நிலயத்திற்கு மேற்கே $1^1/_2$ கி.மீ.இல் திருக்கோயில் அமைந்துள்ளது.

இறைவர் கும்பேசுவரர். இறைவி மங்களாம்பிகை. தீர்த்தம் மகாமகத் தீர்த்தம், காவிரி.
சம்பந்தர் III-59;
அப்பர் V-22 கூடுதல் 2.

99. குடவாயில்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 94.

சென்னை - இராமேசுவரம் இரயில்பாதையில் 351 கி.மீ.இல் தஞ்சாவூர் நிலைய

மும், தஞ்சாவூர் - நாகூர்க் கிளைப்பாதையில் 38 கி.மீ.இல் கொரடாச்சேரி நிலைய மும் உள்ளன. நிலையத்திற்கு வடக்கே 10 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது. கும்பகோணத்திலிருந்து பேருந்து வசதியுண்டு.

இறைவர் கோணேசுவரர். இறைவி பெரிய நாயகி.
சம்பந்தர் II-22,58 கூடுதல் 2.

100. குரக்குக்கா: சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 28.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 267 கி.மீ.இல் வைத்தீசுவரன் கோயில் உள்ளது. நிலையத்திற்கு வடமேற்கில் 8 கி.மீ. தொலைவில் உள்ள (தலைஞாயிறு) திருப்பறியலூர்க்கு வடக்கே $1^1/_2$ கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் குந்தளேசுவரர். இறைவி குந்தளநாயகி.
அப்பர் V-75.

101. குரங்கணில் முட்டம்: தொண்டைநாட்டுத் தலம். எண் 6.

சென்னையிலிருந்து செங்கல்பட்டு வழியாக அரக்கோணம் செல்லும் இரயில் பாதையில் 91 கி.மீ.இல் காஞ்சிபுரம் உள்ளது. நிலையத்தை அடுத்துள்ள ஏகாம்பர நாதர் கோயிலுக்குத் தெற்கே 10 கி.மீ.இல் (பாலாற்றின் கரையில்) திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் வாலீசுவரர். இறைவி இறையார் வளையம்மை.
சம்பந்தர் I-31.

102. குரங்காடுதுறை (தென்): சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 31.

முற்கூறிய இரயில் பாதையில் 301 கி.மீ. தொலைவில் ஆடுதுறை நிலையம் உள்ளது. நிலையத்திற்கு வடக்கில் $^3/_4$ கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் ஆபத்சகாயர். இறைவி வண்டார் கருமென்குழல் மங்கை, பவளக்கொடியம்மை. தீர்த்தம் காவிரி.
சம்பந்தர் II-35;
அப்பர் V-63 கூடுதல் 2.

103. குரங்காடுதுறை (வட): சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 49.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 313 கி.மீ.இல் கும்பகோணம் நிலையம் உள்ளது. நிலையத்திற்கு மேற்கே கும்பகோணம் - திருவையாறு நெடுஞ்சாலையில், 24 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் அழகுசடைமுடிநாதர். இறைவி அழகுசடைமுடியம்மை. தீர்த்தம் காவிரி.
சம்பந்தர் III-91.

104. குருகாவூர் (வெள்ளடை): (திருக்கடாவூர்) சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 13.

முற்கூறிய இரயில் பாதையில் 261 கி.மீ.இல் சீகாழி நிலையம் உள்ளது. நிலையத்

திலிருந்து தென்கிழக்கில் (திருமுல்லைவாயிலுக்குப் போகும் வழியில்) 6 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் வெள்ளடைநாதர். இறைவி காவியங்கண்ணி.
சம்பந்தர் III-124;
சுந்தரர் VII-29 கூடுதல் 2.

*105*. குறுக்கை வீரட்டம்: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் *26*.

முன்னர்க் காணும் (102) இரயில் பாதையில் 277 கி.மீ. தொலைவில் உள்ளது நீடூர் நிலையம். நிலையத்திற்கு வடமேற்கே 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது திருத்தலம்.

இறைவர் வீரட்டேசுவரர், யோகீசுவரர். இறைவி ஞானம்பிகை. தலவிருட்சம் கடுக்காய் மரம். தீர்த்தம் சூலதீர்த்தம், ஞானதீர்த்தம்.
அப்பர் IV-49,50 கூடுதல் 2.

*106*. குற்றாலம்: பாண்டிநாட்டுத் தலம். எண் *13*.

சென்னை - தூத்துக்குடி இரயில் நெடும்பாதையில் 772 கி.மீ.இல் தென்காசி நிலையம் உள்ளது. நிலையத்திற்கு மேற்கில் 6 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது. நகரப்பேருந்து வசதி அடிக்கடி யுண்டு.

இறைவர் குறும்பலாவீசர். இறைவி குழல்வாய்மொழிஅம்மை. தலவிருட்சம் குறும்பலா. தீர்த்தம் சித்திராநதி.
சம்பந்தர் I-99; II-71 கூடுதல் 2.

*107*. கூடலையாற்றூர்: நடுநாட்டுத்தலம். எண் *3*.

குறுக்கு வழியாகச் சென்னை - திருச்சி செல்லும் இரயில் பாதையில் 216 கி.மீ.இல் விருத்தாசலம் நிலையம் உள்ளது. நிலையத்திற்குக் கிழக்கே 23 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் நெறிகாட்டு நாயகர். இறைவி புரிகுழல்நாயகி.
சுந்தரர் VII-85.

*108*. கேதாரம்: வடநாட்டுத்தலம். எண் *4*.

இமயமலைச் சாரலில் அரித்துவாரத்திலிருந்து 253 கி.மீ.இல் உள்ளது திருத்தலம்.

இறைவர் கேதாரநாதர். இறைவி கேதார்கௌரியம்மை.
சம்பந்தர் II-114;
சுந்தரர் VII-78 கூடுதல் 2.

*109*. கேதீச்சுரம்: ஈழநாட்டுத்தலம். எண் 2.

இலங்கை (ஈழ)த் தீவில் தலைமன்னார் இரயில் நிலையத்திற்குக் கிழக்கே 32 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது. கோட்டைமன்னார் நிலையத்தினின்றும் மேற்கில் பேருந்துசாலை வழியாக 10 கி.மீ.இல் உள்ளது திருத்தலம்; பாலாவி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.

இறைவர் கேதீசுவரர். இறைவி கௌரியம்மை. தீர்த்தம் பாலாவி ஆறு.

சம்பந்தர் II-107;
சுந்தரர் VII-80 கூடுதல் 2.

110. கைச்சினம்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 122.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், மயிலாடுதுறை - காரைக்குடிக் குறுக்குப் பாதையில் 53 கி.மீ.இல் நெல்லிக்காவல் நிலையமும் உள்ளன. நிலையத்திற்குக் கிழக்கே 3 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் கைச்சினநாதர். இறைவி வெள்ளைநாயகி, வெள்வளைநாயகி. தலவிருட்சம் கோங்கிலவு.
சம்பந்தர் II-45.

111. கொடிமாடச் செங்குன்றூர்: (திருச்செங்கோடு) கொங்குநாட்டுத் தலம். எண் 4.

சென்னை - கோயம்புத்தூர் இரயில் நெடும்பாதையில் 374 கி.மீ.இல் சங்ககிரித்துர்க்கம் நிலையம் உள்ளது. நிலையத்திலிருந்து தென்கிழக்காகக் கற்சாலை வழியாக 8 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது. சேலத்திலிருந்து பேருந்து உண்டு.

இறைவர் அர்த்தநாரீசுவரர். இறைவி பாகம்பிரியாள். தீர்த்தம் பிரமதீர்த்தம்.
சம்பந்தர் I-107.

112. கொடுங்குன்றம்: (பிரான்மலை) பாண்டிநாட்டுத் தலம். எண் 5.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறை நிலையமும், மயிலாடுதுறை - காரைக்குடிக் கிளைப்பாதையின் முடிவில் காரைக்குடியும் உள்ளன. நிலையத்திற்குத் தென்கிழக்கில் 42 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் கொடுங்குன்றீசர். இறைவி குயிலமுதநாயகி.
சம்பந்தர் I-14.

113. கொட்டையூர்: சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 44.

முன்னர்க் கூறிய இரயில் பாதையில் 313 கி.மீ.இல் கும்பகோணம் நிலையம் உள்ளது. நிலையத்திற்கு மேற்கில் 6 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது. (நகரப் பேருந்து வசதியுண்டு.)

இறைவர் கோடீச்சுரர். இறைவி பந்தார்விரலி. தீர்த்தம் காவிரியாறு, அமுதக் கிணறு.
அப்பர் VI-73.

114. கொண்டீச்சுரம்: (வில்வாரணியம்) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 72.

முன்னர்க் காணும் மயிலாடுதுறைக் கிளைப்பாதையில் 25 கி.மீ.இல் உள்ள நன்னிலத்திற்கு மேற்கே $2^1/_2$ கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது. மயிலாடுதுறை - நன்னிலம் பேருந்து வசதியுண்டு.

இறைவர் பசுபதிநாதர். இறைவி சாந்தநாயகி. தலவிருட்சம் வில்வம். தீர்த்தம் க்ஷீரபுஷ்கரணி.

அப்பர் IV-67; V-70 கூடுதல் 2.

*115*. கொள்ளம்பூதூர்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் *113*.

முன்னர்ச் சொல்லிய இரயில் பாதையில் தஞ்சை - நாகூர்க் கிளைப்பாதையில் 38 கி.மீ.இல் கொரடாச்சேரி நிலையம் உள்ளது. நிலையத்திற்கு வடக்கே 5 கி.மீ.இல திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் வில்வவனேசுவரர். இறைவி சௌந்தராம்பிகை.
சம்பந்தர் III-6.

*116*. கொள்ளிக்காடு: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் *115*.

முன்னர்க் கூறிய இரயில் பாதையில், காரைக்குடிக் கிளைப்பாதையில் 58 கி. மீ.இல் ஆலத்தம்பாடி நிலையம் உள்ளது. நிலையத்திற்கு மேற்கில் 10 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது. திருத்தருப்பூண்டியிலிருந்தும் செல்ல வசதியுண்டு.

இறைவர் அக்நீசுவரர். இறைவி பஞ்சினும் மெல்லடியாள்.
சம்பந்தர் III-16

*117*. கோகரணம்: துளு நாட்டுத்தலம். எண் *1*.

சென்னை - பம்பாய் இரயில் நெடும்பாதையில் (குண்டக்கல் வழி) 693 கி.மீ.இல் ஹுப்ளி நிலையம் உள்ளது. நிலையத்திலிருந்து 144 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது. மார்மகோவாவிலிருந்து கடல்வழியாகவும் செல்லலாம். சிவராத்திரி வழிபாடு சிறந்தது.

இறைவர் மகாபலநாதர். இறைவி கோகர்ணநாயகி. தீர்த்தம் கோடிதீர்த்தம்.
சம்பந்தர் III-79;
அப்பர் VI-49 கூடுதல் 2.

*118*. கோடி: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் *127*.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ. தொலைவில் மயிலாடுதுறை நிலையமும், அங்கிருந்து காரைக்குடி செல்லும் கிளைப்பாதையில் 66 கி.மீ.இல் திருத்தருப்பூண்டி நிலையமும் உள்ளன. நிலையத்திலிருந்து 46 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் அமிர்தகடேசர். இறைவி மையார்தடங்கண்ணி. தீர்த்தம் அமுதவாரி.

சுந்தரர் VII-32.

*119*. கோடிகா: சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 37.

முன்னர்க் காணும் இரயில் பாதையில் 297 கி.மீ.இல் உள்ள நாரசிங்கம்பேட்டை நிலையத்திற்கு வடக்கே $1^1/_2$ கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது திருத்தலம்.

இறைவர் கோடிகாவீசுவரர், திருக்கோடீசுரர். இறைவி வடிவம்மை, வடி-

வாம்பிகை. தீர்த்தம் சிருங்கதீர்த்தம் (குளம்).

சம்பந்தர் II-99;

அப்பர் IV-51; V-78; VI-81 கூடுதல் 4.

120. கோட்டாறு: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 53.

118 இல் காணும் இரயில் பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து காரைக்கால் செல்லும் கிளைப்பாதையில் 25 கி.மீ.இல் பத்தகுடி நிலைய மும் உள்ளன. நிலையத்திற்கு வடகிழக்கில் 3 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் ஐராவதேசுவரர். இறைவி வண்டார் பூங்குழலி.

சம்பந்தர் II-52; III-12 கூடுதல் 2.

121. கோட்டூர்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 111.

முன்னர்க் காணும் மயிலாடுதுறை - காரைக்குடிக் கிளைப்பாதையில் 66 கி.மீ.இல் திருத்தருப்பூண்டி நிலையம் உள்ளது. அங்கிருந்து வடமேற்கில் 14 1/2 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் கொழுந்துநாதர், கொழுந்தீசர். இறைவி தேன்மொழிப் பாவை, மதுரவசனாம்பிகை.

சம்பந்தர் II-109.

122. கோணமலை: (தக்ஷிணகயிலாயம்) ஈழநாட்டுத் தலம். எண் 1.

ஈழநாட்டில் (இலங்கைத் தீவில்) யாழ்ப்பாணத்திற்குக் கிழக்கே அமைந் துள்ளது திருத்தலம்.

இறைவர் கோணேசுவரர். இறைவி மாதுமையம்மை.

சம்பந்தர் III-123.

123. கோயில்: (சிதம்பரம்) சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 1.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 244 கி.மீ.இல் உள்ளது சிதம்பரம் நிலையம். நிலையத்திற்கு வடமேற்கே 1 கி.மீ.இல் கோயில் என்னும் திருத் தலம் அமைந்துள்ளது.

இறைவர் திருமூலட்டானேசுவரர், (பொன்னம்பலத்தில்) சபாநாயகர். இறைவி உமையம்மை, சிவகாமியம்மை. தீர்த்தம் சிவகங்கை, பரமானந்தக்கூபம்.

சம்பந்தர் I-80; III-1; 2

அப்பர் IV-22,23,80,81; V-1,2; VI-1,2; 8

சுந்தரர் VII-90 1

கூடுதல் 11.

124. கோலக்கா: சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 15.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 261 கி.மீ.இல் சீகாழி நிலையம் உள்ளது. நிலையத்திற்கு மேற்கே 1 கி.மீ. தொலைவில் திருத்தலம் உள்ளது. திருத்தாளமுடையார் கோயில் என்றும் கூறுவர்.

இறைவர் சப்தபுரீசுவரர். இறைவி ஓசைகொடுத்த நாயகி. தீர்த்தம் சூரியதீர்த்தம்.
சம்பந்தர் I-23;
சுந்தரர் VII-62 கூடுதல் 2.

*125.* கோவலூர்: நடுநாட்டுத் தலம். எண் *11.*

விழுப்புரம் வழியே செல்லும் சென்னை - காட்பாடி இரயில் பாதையில் 185 கி.மீ.இல் திருக்கோயிலூர் நிலையம் உள்ளது. நிலையத்திலிருந்து அறையணிநல்லூர் வழியாக 1/2 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் வீரட்டநாதர். இறைவி சிவானந்தவல்லி. தீர்த்தம் பெண்ணையாறு.
சம்பந்தர் II-100;
அப்பர் IV-69 கூடுதல் 2.

*126.* கோழம்பம்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் *35.*

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 297 கி.மீ.இல் நாரசிங் கன்பேட்டை நிலையமும், நிலையத்திற்குத் தென்கிழக்கில் 3.2 கி.மீ.இல் திருத் தலமும் அமைந்துள்ளன.

இறைவர் கோகிலேசுவரர். இறைவி சௌந்தரநாயகி.
சம்பந்தர் II-13;
அப்பர் V-64 கூடுதல் 2.

*127.* கோளிலி: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் *123.*

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடு துறையும், மயிலாடுதுறை - காரைக்குடிக் கிளைப்பாதையில் 53 கி.மீ.இல் நெல்லிக்கா நிலையமும் உள்ளன. நிலையத்திற்குக் கிழக்கே 6 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் பிரமபுரீசுவரர், கோளிலிநாதேசுவரர். இறைவி வண்டார் குழலாள். தலவிருட்சம் தேற்றுமரம். தீர்த்தம் முத்திநதியாகிய சந்திரதீர்த்தம், பிரம-தீர்த்தம்.

சம்பந்தர் I-62; அப்பர் V-56,57; சுந்தரர் VII-20 கூடுதல் 4.

*128.* சக்கரப்பள்ளி: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் *17.*

முன்பு (127) சொன்ன இரயில் பாதையில் 334 கி.மீ.இல் ஐயம்பேட்டை நிலையம் உள்ளது. நிலையத்திற்கு மேற்கில் 1 கி.மீ. தொலைவிலும் கும்பகோணத்திற் குத் தெற்கில் 23 கி.மீ. தொலைவிலும் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் சக்கரவாகேசுவரர், ஆலந்துறையீசர். இறைவி தேவநாயகி, அல்லி யங்கோதை. தீர்த்தம் காவிரி.
சம்பந்தர் III-27.

*129.* சக்திமுற்றம்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் *22.*

முன்பு (127) சொன்ன இரயில் பாதையில் 317 கி.மீ.இல் தாராசுரம் நிலையம் உள்ளது. நிலையத்திற்குத் தெற்கே 3 கி.மீ.இல் தலம் அமைந்துள்ளது. கும்ப கோணத்திலிருந்து நகரப்பேருந்து உண்டு.

இறைவர் சிவக்கொழுந்துநாதர். இறைவி பெரியநாயகி. தீர்த்தம் சூலதீர்த்தம்.
அப்பர் IV-96.

*130. சாத்தமங்கை: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 81.*

முன்பு (127) சொன்ன இரயில் பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும் அங்கிருந்து காரைக்குடி செல்லும் கிளைப்பாதையில் 25 கி.மீ.இல் நன்னிலமும் உள்ளன. நிலையத்தின் கிழக்கேயுள்ள (புகலூருக்கு அண்மையில்) 11 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது. நன்னிலத்திலிருந்து பேருந்து வசதியுண்டு.

இறைவர் அயவந்தீசுவரர். இறைவி மலர்க்கண்ணம்மை.
சம்பந்தர் III-58.

*131. சாய்க்காடு: (சாயாவனம்) சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 9.*

முன்னர்ச் சொன்ன இரயில் பாதையில் 261 கி.மீ.இல் உள்ள சீகாழிக்குத் தென்கிழக்கில் 15 கி.மீ.இல் தலம் அமைந்துள்ளது. மயிலாடுதுறை, சீகாழி இவற்றிலிருந்து பேருந்தில் செல்லலாம். பூம்புகார் வரையில் கற்சாலையுண்டு.

இறைவர் சாயாவனேசுவரர். இறைவி குயிலினும் நன்மொழியம்மை. தீர்த்தம் ஐராவததீர்த்தம், காவிரி.
சம்பந்தர் II-38,41;
அப்பர் IV-65; VI-82 கூடுதல் 4.

*132. சிக்கல்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 83.*

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 351 கி.மீ.இல் தஞ்சாவூரும், அங்கிருந்து நாகூர் செல்லும் பாதையில் 73 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன. நாகப்பட்டினத்திலிருந்து பேருந்து வசதியுண்டு.

இறைவர் வெண்ணெய்ப்பிரான். இறைவி வேல்நெடுங்கண்ணி.
சம்பந்தர் III-8.

*133. சிராப்பள்ளி: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 6.*

சென்னையிலிருந்து 337 கி.மீ.இல் திருச்சிராப்பள்ளி நிலையம் உள்ளது. நிலையத்தை அடுத்து மலையில் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் திருமலைக்கொழுந்தர், தாயுமானேசுவரர். இறைவி மட்டுவார் குழலம்மை. தீர்த்தம் காவிரி, சிவகங்கை.
சம்பந்தர் I-98;
அப்பர் V-85 கூடுதல் 2.

*134. சிவபுரம்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 67.*

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 313 கி.மீ.இல் கும்பகோணமும் அங்கிருந்து தென்கிழக்கில் 5 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன. நகரப்பேருந்து வசதியுண்டு.

இறைவர் சிவபுரநாதர். இறைவி சிங்காரவல்லி. தீர்த்தம் சந்திரபுஷ்கரணி.

தலவிருட்சம் சண்பகவிருட்சம்.
சம்பந்தர் I-21,112,125;
அப்பர் VI-87 கூடுதல் 4.

135. சிறுகுடி: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 60.

முன்னர்ச் சொன்ன இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து காரைக்குடி செல்லும் கிளைப்பாதையில் 16 கி.மீ.இல் பேரளம் நிலையமும் உள்ளன. நிலையத்தின் மேற்கில் 8 கி.மீ.இல் திருத்தலம் உள்ளது. (மீயச்சூர், பாம்புரம் வழியே செல்லவேண்டும்.) மயிலாடுதுறையிலிருந்து பேருந்து வசதியுண்டு.

இறைவர் மங்களேசுரர். இறைவி மங்களநாயகி.
சம்பந்தர் III-97.

136. சிற்றேமம்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 106.

முன்னர்க் கூறிய சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறை உள்ளது. மயிலாடுதுறை - காரைக்குடிக் கிளைப்பாதையில் 58 கி.மீ.இல் ஆலத்தம்பாடியும், நிலையத்திலிருந்து 2 கி.மீ.இல் ஊரும், அங்கிருந்து கிழக்கே சென்றால், வடக்காக 2 கி.மீ.இல் திருத்தலமும் காணலாம். இத்திருத்தலம் பட்டுக்கோட்டை - அறந்தாங்கிக் கிளைப்பாதையில் உள்ள திருச்சிற்றம்பலம் என்ற ஊரே என்ற கருத்தும் நிலவுகிறது.

இறைவர் சிற்றேமமுடையார், மகாதேவர், பொன் வைத்த நாதேசுவரர். இறைவி மானார்விழி நன்மாது, அகிலாண்டநாயகி.
சம்பந்தர் III-42.

137. சுழியல்: பாண்டிநாட்டுத் தல்ம். எண் 12.

சென்னை - தூத்துக்குடி இரயில் பாதையில் 599 கி.மீ.இல் விருதுநகர் நிலையமும், அங்கிருந்து மானமதுரைக் கிளைப்பாதையில் 22 கி.மீ.இல் அருப்புக்கோட்டை நிலையமும், நிலையத்திற்குக் கிழக்கில் 13 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன. (பேருந்திலும் செல்லலாம்.)

இறைவர் திருமேனிநாதர். இறைவி துணைமாலைநாயகி.
சுந்தரர் VII-82.

138. செங்காட்டங்குடி: (கணபதீச்சுரம்) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 79.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து காரைக்குடிக் கிளைப்பாதையில் 25 கி.மீ.இல் நன்னிலம், நிலையத்தின் தென்கிழக்கில் 9 கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன. (புகலூர், திருக்கண்ணபுரம் வழியே பேருந்தில் செல்லலாம்.)

இறைவர் கணபதீச்சுரத்தார். இறைவி திருக்குழல் நன்மாது. தலவிருட்சம் ஆத்தி. தீர்த்தம் சூரியதீர்த்தம்.
சம்பந்தர் I-61; III-63;
அப்பர் VI-84 கூடுதல் 3.

139. செம்பொன்பள்ளி: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 42.

முன்னர்க் காணும் இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து தரங்கம்பாடி செல்லும் கிளைப்பாதையில் 13 கி.மீ.இல் செம்பனார் கோயில் நிலையமும் உள்ளன. தலத்தின் பெயர் செம்பொன்பள்ளியாகும். மயிலாடுதுறையிலிருந்து பேருந்து வசதியுண்டு.

இறைவர் சுவர்ணபுரீசுவரர். இறைவி சுகந்தவனநாயகி, மருவார்குழலி. தலவிருட்சம் வன்னிமரம். தீர்த்தம் இந்திரதீர்த்தம், காவிரி.
சம்பந்தர் I-25; அப்பர் IV-29; V-36 கூடுதல் 3.

140. சேய்ஞலூர்: சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 41.

முன்னர்ச் சொன்ன இரயில் நெடும்பாதையில் 313 கி.மீ.இல் உள்ள கும்பகோணத்திற்கு வடகிழக்கில் 15 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது. நகரப்பேருந்து உண்டு.

இறைவர் சத்தகிரீசுவரர். இறைவி சகிதேவி. தீர்த்தம் மண்ணியாறு.
சம்பந்தர் I-48.

141. சேறைச் செந்நெறி: (உடையார்கோயில்) காவிரித் தென்கரைத்தலம். எண் 95.

முன்னர்க் காணும் இரயில் பாதையில் 313 கி.மீ.இல் உள்ள கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் 11 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது. கும்பகோணம் - குடவாசல் சாலையின் நடுவில் திருத்தலம் உள்ளது.

இறைவர் செந்நெறியப்பர். இறைவி ஞானவல்லி.
சம்பந்தர் III-86;
அப்பர் IV-73; V-77 கூடுதல் 3.

142. சோபுரம்: (தியாகவல்லி) நடுநாட்டுத் தலம். எண் 6.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 217 கி.மீ.இல் ஆலப்பாக்கம் நிலையமும், அங்கிருந்து கிழக்கில் 3 கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன. கடலூர் - சிதம்பரம் நெடுஞ்சாலை வழியேயும் செல்லலாம்.

இறைவர் சோபுரநாதர். இறைவி சோபுரநாயகி. தீர்த்தம் பரமதீர்த்தம்.
சம்பந்தர் I-51.

143. சோற்றுத்துறை: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 13.

முன்னர்க் காணும் இரயில் பாதையில் 351 கி.மீ.இல் தஞ்சாவூர் நிலையமும், நிலையத்திலிருந்து வடக்கே செல்லும் நெடுஞ்சாலையில் 10 கி.மீ.இல் கண்டியூரும் உள்ளன. அங்கிருந்து கிழக்கில் $2^{1}/_{2}$ கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது. தஞ்சாவூர் - மாத்தூர் நகரப்பேருந்து மூலமும் செல்லலாம்.

இறைவர் தொலையாச் செல்வர். இறைவி ஒப்பிலாம்பிகை. தீர்த்தம் காவிரி.
சம்பந்தர் I-28; 1
அப்பர் IV-41,85; V-33; VI-44; 4
சுந்தரர் VII-94 1
கூடுதல் 6.

144. தண்டலை நீள்நெறி: (தண்டலைச் சேரி) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 110.

முன்பு காணும் இரயில் பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து காரைக்குடி செல்லும் பாதையில் 66 கி.மீ.இல் திருத்தருப்பூண்டியும், நிலையத்திற்கு வடக்கே 4 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன. (தஞ்சை - திருத்தருப்பூண்டி, மயிலாடுதுறை - திருத்தருப்பூண்டிப் பேருந்து வசதியுண்டு.)

இறைவர் நீள்நெறிநாதர். இறைவி ஞானம்பிகை. தலவிருட்சம் குருந்தமரம்.
சம்பந்தர் III-50.

145. தருமபுரம்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 51.

முன்னர் உள்ள இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து காரைக்கால் செல்லும் கிளைப்பாதையில் 33 கி.மீ.இல் திருநள்ளாறு நிலையமும், நிலையத்திலிருந்து செல்லும் காரைக்கால் நெடுஞ்சாலையில் 2 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன. தஞ்சை - காரைக்கால் பேருந்து வழியில் காரைக்காலை அடுத்துள்ளது திருத்தலம்.

இறைவர் யாழ்மூரிநாதர். இறைவி தேனமிர்தவல்லி, மதுரமின்னம்மை.
சம்பந்தர் I-136.

146. தலைச்சங்காடு: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 45.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து தரங்கம்பாடி செல்லும் கிளைப்பாதையில் 19 கி.மீ.இல் ஆக்கூர் நிலையமும், நிலையத்திற்குக் கிழக்கே 5 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன. (மயிலாடுதுறை - ஆக்கூர்ப் பேருந்துண்டு.)

இறைவர் சங்கருணுதேசுவரர். இறைவி சௌந்தரநாயகி. தீர்த்தம் காவிரி.
சம்பந்தர் II - 55.

147. தலையாலங்காடு: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 93.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 351 கி.மீ.இல் தஞ்சாவூரும், தஞ்சை - நாகூர்க் கிளைப்பாதையில் 38 கி.மீ.இல் கொராடாச்சேரியும் அங்கிருந்து 10 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் ஆடவல்ல ஈசன். இறைவி திருமடந்தையம்மை.
அப்பர் VI-79.

148. திருந்துதேவன்குடி: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 42.

முன்னர்க் காணும் இரயில் பாதையில் 313 கி.மீ.இல் கும்பகோணம் நிலையமும், நிலையத்தின் கிழக்கில் 10 கி.மீ.இல் உள்ள திருவிடைமருதூரிலிருந்து 8 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் கற்கடேசுவரர். இறைவி அருமருந்தம்மை.
சம்பந்தர் III-25.

149. திலதைப்பதி: (திலதர்ப்பணபுரி) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 58.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து காரைக்குடிக் கிளைப்பாதையில் 20 கி.மீ.இல் பூந்தோட்ட நிலையமும், நிலையத்திலிருந்து மேற்கில் $2^{1}/_{2}$ கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் மதிமுத்தர், முத்தீசர். இறைவி பொற்கொடிநாயகி. தலவிருட்சம் மந்தாரம். தீர்த்தம் சந்திரதீர்த்தம்.

சம்பந்தர் II-118.

*150*. தினைநகர்: (தீர்த்தனகிரி) நடுநாட்டுத் தலம். எண் 5.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 226 கி.மீ.இல் புதுச்சத்திரம் நிலையம் உள்ளது. நிலையத்தின் மேற்குத் திசையில் 5 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது. கடலூரிலிருந்து குண்டியமல்லூருக்குப் போகும் பேருந்தில் போகலாம்.

இறைவர் சிவக்கொழுந்தீசர், நந்தீசர். இறைவி இளங்கொம்பன்னாள், ஒப்பிலாநாயகி. தலவிருட்சம் கொன்றை.

சுந்தரர் VII-64.

*151*. துருத்தி: (குத்தாலம்) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 37.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 291 கி.மீ.இல் உள்ள மயிலாடுதுறைக்கு அணிமையில் குத்தாலம் நிலையம் உள்ளது. திருத்தலம் $^{3}/_{4}$ கி.மீ.இல் உள்ளது.

இறைவர் சொன்னவாறு அறிவார், வீங்குநீர் துருத்தி உடையார், சுற்றளி மகாதேவர். இறைவி அரும்பன்ன வனமுலை அம்மை, மிருதுமுகிழாம்பிகை. தீர்த்தம் காவிரி.

சம்பந்தர் II-98;
அப்பர் IV-42 கூடுதல் 2.

*152*. துறையூர்: நடுநாட்டுத் தலம். எண் 15.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 173 கி.மீ.இல் விழுப்புரத்திற்கு அருகில் உள்ளது திருத்துறையூர் நிலையம். நிலையத்திற்கு மேற்கே $^{3}/_{4}$ கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் துறையூர்நாதர், பசுபதீசுவரர். இறைவி பூங்கோதைநாயகி. தீர்த்தம் பெண்ணைத்தீர்த்தம்.

சுந்தரர் VII-13.

*153*. தூங்கானைமாடம்: (பெண்ணாகடம்) நடுநாட்டுத் தலம். எண் 2.

சென்னை - திருச்சிராப்பள்ளி இரயில் குறுக்குப் பாதையில் 233 கி.மீ.இல் பெண்ணாகடம் நிலையம் உண்டு. (பெண் - தேவகன்னியர்; ஆ - காமதேனு; கடம் - வெள்ளையானை) கோயில் பெயர் தூங்கானைமாடம் என்பதாம்.

இறைவர் சுடர்க்கொழுந்துநாதர். இறைவி கடந்தைநாயகி. தீர்த்தம் கெடிலநதி.

சம்பந்தர் I-59;
அப்பர் IV-109 கூடுதல் 2.

*154*. தெங்கூர்: (தேங்கூர்) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் *116*.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் *281* கி.மீ.இல் மயிலாடு துறையும், அங்கிருந்து காரைக்குடிக் கிளைப்பாதையில் *53* கி.மீ.இல் நெல்லிக்காவல் நிலையமும் உள்ளன. நிலையத்தின் தென்மேற்கே $1^1/_2$ கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் வெள்ளிமலைநாதர். இறைவி பெரியநாயகி.
சம்பந்தர் II-93.

*155*. தெளிச்சேரி: (கோயில்பத்து) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் *50*.

முன்னர்க் காணும் இரயில் நெடும்பாதையில் மயிலாடுதுறையும், அங்கிருந்து காரைக்கால் பாதையில் *37* கி.மீ.இல் கோயில்பத்து நிலையமும் உள்ளன. நிலையத்தை அடுத்துள்ள ஊருக்கு மேற்கில் திருக்கோயில் உள்ளது.

இறைவர் பார்வதீசுவரர். இறைவி சத்தியம்மை.
சம்பந்தர் II-3

*156*. தென்குடித்திட்டை: (திட்டை) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் *15*.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் *243* கி.மீ.இல் தஞ்சைக்கு அருகில் திட்டை நிலையம் உள்ளது. நிலையத்தை அடுத்தே தலம் அமைந்துள்ளது.

இறைவர் பசுபதிநாதர். இறைவி உலகநாயகி.
சம்பந்தர் III-35.

*157*. தேவூர்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் *85*.

முன்னர்க் காணும் இரயில் பாதையில் *351* கி.மீ.இல் தஞ்சாவூரும், அங்கிருந்து நாகூர்க் கிளைப்பாதையில் *67* கி.மீ.இல் கீழ்வேளூர் நிலையமும் உள்ளன. நிலையத்திற்குத் தெற்கில் *3* கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது. தஞ்சை - நாகூர்ப் பேருந்து சாலையில் நாகைக்கு முன்பு *6* கி.மீ.இல் கீழ்வேளூர் உள்ளது.

இறைவர் தேவகுரு. இறைவி மதுரபாடணியம்மை. தலவிருட்சம் வாழை. தீர்த்தம் தேவதீர்த்தம்.
சம்பந்தர் II-82; III-74 கூடுதல் *2*.

*158*. நணா: (பவானி முக்கூடல்) கொங்குநாட்டுத் தலம். எண் *3*.

சென்னை - கோயம்புத்தூர் இரயில் நெடும்பாதையில் *394* கி.மீ.இல் ஈரோடு நிலையம் உள்ளது. நிலையத்திற்கு மேற்கில் $14^1/_2$ கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது. ஈரோடு - பவானி பேருந்து வசதியுண்டு.

இறைவர் சங்கமுகநாதர். இறைவி வேதநாயகியம்மை. தலவிருட்சம் இலந்தை. தீர்த்தம் காவிரி, பவானி, அமுதநதி (திரிவேணி சங்கமம்).
சம்பந்தர் II-72.

*159*. நல்லம்: (கோனேரிராஜபுரம்) காவிரித் தென்கரைத் தலம். எண் *34*.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் (கும்பகோணத்திற்கு அருகே) 304 கி.மீ.இல் உள்ளது இடைமருதூர் நிலையம். நிலையத்தின் தென்கிழக்கில் 10 கி.மீ.இல் அமைந்துள்ளது திருத்தலம். ஆடுதுறையிலிருந்து பேருந்து வசதியும் உண்டு.

இறைவர் உமாமகேசுவரர். இறைவி மங்களநாயகி. தீர்த்தம் சக்திதீர்த்தம்.
சம்பந்தர் I-85;
அப்பர் V-43 கூடுதல் 2.

*160.* நல்லூர்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 20.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 322 கி.மீ.இல் கும்பகோணத்தை அடுத்துச் சுந்தரப் பெருமாள்கோயில் நிலையம் உள்ளது. நிலையத்திற்குத் தெற்கே 3 கி.மீ.இல் திருத்தலம் உள்ளது.

இறைவர் பெரியாண்டேசுவரர், பஞ்சவர்ணேசர், கல்யாணசுந்தரேசுவரர். இறைவி பர்வதசுந்தரி, கல்யாணசுந்தரி, தீர்த்தம் சப்தசாகரதீர்த்தம்.
சம்பந்தர் I-86; II-57; III-83;
அப்பர் IV-97; VI-14 கூடுதல் 5.

*161.* நல்லூர்ப் பெருமணம்: (ஆச்சாள்புரம்) சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 5.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 251 கி.மீ.இல் உள்ள கொள்ளிடம் நிலையத்திற்குக் கிழக்கே 6 கி.மீ.இல் திருத்தலம் உள்ளது.

இறைவர் சிவலோகத் தியாகர். இறைவி திருவெண்ணீற்று உமையம்மை, கங்கையுமையம்மை. தீர்த்தம் பஞ்சாக்கரதீர்த்தம்.
சம்பந்தர் III-125.

*162.* நள்ளாறு: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 52.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து செல்லும் காரைக்கால் கிளைப்பாதையில் 33 கி.மீ.இல் திருநள்ளாறு நிலையமும் உள்ளன. திருத்தலம் தெற்கே ஒரு கி.மீ.இல் உள்ளது. தஞ்சாவூர் - காரைக்கால் நெடுஞ்சாலையில் காரைக்காலை ஒட்டியுள்ளது.

இறைவர் நள்ளாறர். இறைவி போகம்ஆர்த்த பூண்முலைஅம்மை. தீர்த்தம் நளதீர்த்தம்.
சம்பந்தர் I-7,49; II-33; III-87;
அப்பர் V-68; VI-20;
சுந்தரர் VII-68 கூடுதல் 7.

*163.* நறையூர்ச் சித்தீச்சுரம்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 65.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 313 கி.மீ.இல் அமைந்துள்ள கும்பகோண நிலையத்திற்குத் தென்கிழக்கில் 9 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது. கும்பகோணத்திலிருந்து நகரப்பேருந்து வசதியுண்டு.

இறைவர் சித்தநாதர், சித்தநாதேசுவரர். இறைவி அழகம்மை, அழகாம்பிகை. தீர்த்தம் பிரமதீர்த்தம்.

சம்பந்தர் I-29,71; II-87;
சுந்தரர் VII-94 கூடுதல் 3.

164. நனிபள்ளி: (புஞ்சை) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 43.

முன்னர்ச் சொன்ன இரயில்பாதையில் மயிலாடுதுறையும் அங்கிருந்து தரங்கம் பாடிக் கிளைப்பாதையில் 13 கி.மீ.இல் செம்பனார்கோயில் நிலையமும் உள்ளன. நிலையத்திற்கு வடக்கே 2 கி.மீ. தொலைவில் திருத்தலம் உள்ளது. மயிலாடுதுறையிலிருந்து பேருந்துவசதி யுண்டு.

இறைவர் நற்றுணையப்பர். இறைவி மலையான்மடந்தை.
சம்பந்தர் II-43; அப்பர் IV-70; சுந்தரர் VII-97 கூடுதல் 3.

165. நன்னிலத்துப் பெருங்கோயில்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 71.

முன்னர்ச் சொன்ன இரயில் பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து செல்லும் காரைக்குடிக் கிளைப்பாதையில் 25 கி.மீ.இல் நன்னிலம் நிலையமும் உள்ளன. நிலையத்திற்கு மேற்கே 5 கி.மீ.இல் திருத்தலம் உள்ளது. தஞ்சை, குடந்தை, மயிலாடுதுறை இவற்றிலிருந்து பேருந்துண்டு.

இறைவர் பிரகேசுரர், மதுவனேசுவரர். இறைவி பிரகேசுவரி, மதுவனநாயகி. தீர்த்தம் பிரமதீர்த்தம்.
சுந்தரர் VII-98.

166. நாகேச்சுரம்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 29.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 308 கி.மீ.இல் அமைந்துள்ள நிலையமே (சண்பகாரண்யம் எனப்படும்) இத்திருத்தலமாகும். கும்பகோணத்திலிருந்து நகரப்பேருந்து வசதியுண்டு.

இறைவர் சண்பகாரணியர். இறைவி குன்றமுலைநாயகி. தீர்த்தம் சூர்யபுஷ்கரணி.
சம்பந்தர் II-24,109; அப்பர் IV-66,V-52, VI-66; சுந்தரர் VII-99 கூடுதல் 6.

167. நாகைக்காரோணம்: (நாகப்பட்டினம்) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 82.

சென்னை - இராமேசுவரம் இரயில்பாதையில் 351 கி.மீ.இல் தஞ்சாவூரும், அங்கிருந்து நாகூர்க் கிளைப்பாதையில் 78 கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன. தஞ்சை - நாகப்பட்டினம் பேருந்து வசதியுண்டு.

இறைவர் காயாரோகணேசுவரர், ஆதிபுராணர். இறைவி கருந்தடங்கண்ணி, நீலாயதாட்சி. விருட்சம் மா.

சம்பந்தர் I-84; II-116; 2
அப்பர் IV-71,103; V-83; VI-22 4
சுந்தரர் VII-46,101 2
கூடுதல் 8.

168. நாட்டியத்தான்குடி: சோணாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 118.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடு துறையும், மயிலாடுதுறை - காரைக்குடிக் கிளைப்பாதையில் 39 கி.மீ.இல் திரு வாரூர் நிலையமும், நிலையத்திற்குத் தெற்கில் 9½ கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன. திருவாரூரிலிருந்து பேருந்து வசதியுண்டு.

இறைவர் இரத்தினகிரிநாதர், மாணிக்கவண்ணர். இறைவி மலர்மங்கைநாயகி, மலர்மங்கையம்மை.

சுந்தரர் VII-15.

169. நாரையூர்: சோணாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 33.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 244 கி.மீ.இல் சிதம் பரம் நிலையமும், நிலையத்திற்குத் தென்மேற்கில் (காட்டுமன்னார்குடிப் பாதையில்) 16 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் சௌந்தரேசுவரர். இறைவி திரிபுரசுந்தரி. தலவிருட்சம் புன்னகம். தீர்த்தம் காருண்யதீர்த்தம்.

சம்பந்தர் II-96; III-102,107; 3
அப்பர் V-55; VI-74 2
கூடுதல் 5.

170. நாலூர்மயானம்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 96.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 313 கி.மீ.இல் கும்பகோணமும், அங்கிருந்து தென்கிழக்கேயுள்ள (16 கி.மீ.) குடவாசலுக்கு வடக்கில் 4½ கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன. குடந்தை - திருவாரூர்ப் பேருந்துசாலையின் இடையே திருத்தலம் உள்ளது.

இறைவர் பலாசவனநாதர். இறைவி பெரியநாயகி.
சம்பந்தர் II-46.

171. நாவலூர்: நடுநாட்டுத் தலம். எண் 8.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 179 கி.மீ.இல் பண்ணுருட்டி நிலையமும், நிலையத்திற்கு மேற்கே 16 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன. உளுந்தூர்ப்பேட்டை வழியாகத் திருமுதுகுன்றம் செல்லும் பேருந்திலும் செல்லலாம்.

இறைவர் நாவலேசுவரர். இறைவி சுந்தராம்பிகை.
சுந்தரர் VII-17.

172. நின்றியூர்: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 19.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 274 கி.மீ.இல் உள்ள ஆனை-தாண்டவபுரம் நிலையத்தின் வடகிழக்கே 3 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது. மாயூரம் - சீகாழியிலிருந்து பேருந்து வசதியுண்டு.

இறைவர் லக்ஷ்மிபுரீசுவரர், மகாலட்சுமிநாதர். இறைவி உலகநாயகி. தீர்த்தம் நீலதீர்த்தம், மகாலட்சுமிதீர்த்தம்.

சம்பந்தர் I-18;
அப்பர் V-23;
சுந்தரர் VII-19,65 கூடுதல் 4.

173. நீடூர்: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 21.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 277 கி.மீ.இல் மயிலாடுதுறையினை அடுத்து நீடூர் நிலையமும், அதன் மேற்கில் $2^1/_2$ கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன. நகரப்பேருந்து வசதியுண்டு.

இறைவர் அருட்சோமநாதர், கானநிருத்தசங்கரர். இறைவி வேயுறுதோளியம்மை. தலவிருட்சம் மகிழமரம். தீர்த்தம் இந்திரதீர்த்தம்.
சுந்தரர் VII-56.

174. நீலக்குடி: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 32.

முற்கூறிய (173) இரயில் பாதையில் 301 கி.மீ.இல் ஆடுதுறை நிலையமும், அதற்குத் தெற்கே 4 கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன.

இறைவர் நீலக்குடியீசர், நீலகண்டேசுவரர். இறைவி அழகம்மை.
அப்பர் V-72.

175. நெடுங்களம்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 8.

முற்கூறிய (173) இரயில் பாதையில் தஞ்சாவூருக்கு அருகே 380 கி.மீ.இல் சோழகம்பட்டி நிலையமும், அதற்குத் தெற்கில் 3 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் நித்தியசுந்தரர். இறைவி ஒப்பில்லாநாயகி. தீர்த்தம் சுந்தரதீர்த்தம்.
சம்பந்தர் I-52.

176. நெய்த்தானம்: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 52.

முன்பு கூறிய (173) இரயில் நெடும்பாதையில் 351 கி.மீ.இல் தஞ்சாவூரும், அங்கிருந்து வடக்கே செல்லும் நெடுஞ்சாலையில் 13 கி.மீ.இல் திருவையாறும், அங்கிருந்து மேற்கில் 2 கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன.

இறைவர் நெய்யாடியப்பர். இறைவி பாலாம்பிகை, இளமங்கையம்மை. தீர்த்தம் காவிரி.
சம்பந்தர் I-15;
அப்பர் IV-37,89; V-34; VI-41,42 கூடுதல் 6.

177. நெல்விக்கா: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 117.

முன்பு கூறிய (173) இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து காரைக்குடி செல்லும் கிளைப்பாதையில் 53 கி.மீ.இல் நெல்விக்காத் திருத்தலமும் உள்ளன.

இறைவர் நெல்லிவனநாதர். இறைவி மங்களநாயகி. தலவிருட்சம் நெல்லி. தீர்த்தம் பிரமதீர்த்தம், சூரியதீர்த்தம்.
சம்பந்தர் II-19.

178. நெல்வாயில்: (சிவபுரி) சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 3.

முன்பு கூறிய (173) இரயில் பாதையில் 244 கி.மீ.இல் சிதம்பரம் நிலையமும், நிலையத்திற்குத் தென்கிழக்கில் $2^1/_2$ கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன.

இறைவர் உச்சிநாதர். இறைவி கனகாம்பிகை. தீர்த்தம் கிருபாசமுத்திரம்.
சம்பந்தர் II-26.

*179.* நெல்வாயில்: (அரத்துறை) நடுநாட்டுத் தலம். எண் 1.

சென்னை - திருச்சிராப்பள்ளி இரயில் குறுக்குப் பாதையில் 233 கி.மீ.இல் பெண்ணுகடம் நிலையம் உள்ளது. நிலையத்திற்குத் தென்மேற்கில் 7 கி.மீ.இல் திருத் தலம் அமைந்துள்ளது.

இறைவர் அரத்துறைநாதர். இறைவி ஆனந்தநாயகி. தீர்த்தம் வெள்ளாறு.
சம்பந்தர் II-90;
அப்பர் V-3;
சுந்தரர் VII-3 கூடுதல் 3.

*180.* நெல்வெண்ணெய்: நடுநாட்டுத் தலம். எண் 10.

சென்னை - திருச்சிராப்பள்ளி இரயில் குறுக்குப் பாதையில் 195 கி.மீ.இல் உள்ளது, உளுந்தூர்ப்பேட்டை நிலையம். நிலையத்திற்கு வடமேற்கில் 17 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் வெண்ணெயப்பர். இறைவி நீலமர்ச்கண்ணி. தீர்த்தம் பெண்ணையாறு.
சம்பந்தர் III-96.

*181.* நெல்வேலி: பாண்டியநாட்டுத் தலம். எண் 14.

சென்னை - செங்கோட்டை இரயில் நெடும்பாதையில் 713 கி.மீ.இல் நெல்வேலி நிலையம் உள்ளது. நிலையத்திலிருந்து $^{3}/_{4}$ கி.மீ.இல் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் நெல்லையப்பர். இறைவி காந்திமதியம்மை. தீர்த்தம் தாமிரவருணி.
சம்பந்தர் III-92.

*182.* பட்டீச்சுரம் : காவிரித் தென்கரைத் தலம். எண் 23.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 313 கி.மீ.இல் கும்பகோணம் நிலையம் உள்ளது. நிலையத்திற்குத் தென்மேற்கில் 6 கி.மீ.இல் திருத்தலம் உள்ளது. நகரப்பேருந்து வசதியுண்டு.

இறைவர் பட்டீச்சுரநாதர். இறைவி பல்வளைநாயகி. தலவிருட்சம் வன்னிமரம். தீர்த்தம் ஞானதீர்த்தம்.

சம்பந்தர் III-73.

*183.* பந்தணை நல்லூர்: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 35.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 290 கி.மீ.இல் குத்தாலம் நிலையம் உள்ளது. நிலையத்தின் வடமேற்கில் 10 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது. குத்தாலம், கும்பகோணம் இவற்றிலிருந்து பேருந்து வசதியுண்டு.

இறைவர் பசுபதீசுவரர். இறைவி காம்பன்னதோளி. தலவிருட்சம் கொன்றை.
சம்பந்தர் III-121;
அப்பர் VI-10 கூடுதல் 2.

184. பயற்றூர்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 78.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடு துறையும், அங்கிருந்து காரைக்குடிக் கிளைப்பாதையில் 32 கி.மீ.இல் விற்குடி என்னும் நிலையமும் உள்ளன. நிலையத்திற்குக் கிழக்கே $4^1/_2$ கி.மீ.இல் திருத்தலம் உள்ளது.

இறைவர் திருப்பயற்றுநாதர். இறைவி காவியங்கண்ணி. தலவிருட்சம் சிலந்தி மரம். தீர்த்தம் கருணைதீர்த்தம்.
அப்பர் IV-32.

185. பரங்குன்றம்: பாண்டிநாட்டுத் தலம். எண் 23.

சென்னை - தூத்துக்குடி (திருச்சி வழியாக) இரயில் நெடும்பாதையில் 556 கி.மீ.இல் மதுரை நிலையமும், நிலையத்திலிருந்து தென்மேற்கில் $5^1/_2$ கி.மீ.இல் திருத் தலமும் அமைந்துள்ளன. மதுரையிலிருந்து நகரப்பேருந்து அடுத்தடுத்துள்ளது.

இறைவர் பரங்கிரிநாதர். இறைவி ஆவுடைநாயகி. தீர்த்தம் சரவணப்பொய்கை.
சம்பந்தர் I-100;
சுந்தரர் VII-2 கூடுதல் 2:

186. பராய்த்துறை: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 3.

திருச்சிராப்பள்ளி வழியாகச் சென்னை - ஈரோடு இரயில் பாதையில் 358 கி.மீ.இல் அமைந்துள்ளது திருத்தலம்; திருச்சிக்கும் குழித்தலைக்கும் இடையில் உள்ளது.

இறைவர் பராய்த்துறைநாதர். இறைவி மயிலம்மையார். தலவிருட்சம் பராய் மரம். தீர்த்தம் காவிரி.
சம்பந்தர் I-135;
அப்பர் V-30 கூடுதல் 2.

187. பரிதிநியமம்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 101.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 351 கி.மீ.இல் தஞ்சா வூரும், அங்கிருந்து நாகூர் செல்லும் கிளைப்பாதையில் 15 கி.மீ.இல் சாலியமங்கல மும், நிலையத்திலிருந்து தென்மேற்கில் 13 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன. தஞ்சை - பட்டுக்கோட்டைப் பேருந்து வழியில் திருத்தலம் உள்ளது.

இறைவர் பரிதியப்பர். இறைவி சௌந்தரநாயகி, மங்களநாயகி. தீர்த்தம் காவிரி, சங்கமதீர்த்தம்.
சம்பந்தர் III-104.

188. பருப்பதம்: (ஸ்ரீசைலம்) வடநாட்டுத் தலம். எண் 1.

கர்னூல் (ஆந்திரம்) மாவட்டத்தில் நந்தியால் இரயில் நிலையத்திலிருந்து வட கிழக்கில் 105 கி.மீ.இல் உள்ள திருத்தலம் இது. 50 கி.மீ.இல் உள்ள ஆத்மகூர் வரை யில் பேருந்துசாலை யுண்டு. பின்னர் 42 கி.மீ.இல் உள்ள பெத்தசெரு வரையில் வண்டிப்பாதை யுண்டு. அடுத்து, கால்நடையாகவும், டோலி, குதிரை முதலியவற் றின் மூலமும் செல்லலாம். இன்று ஆத்மகூரிலிருந்து பேருந்துவசதி உள்ளது.

இறைவர் பருப்பதநாயகர். இறைவி பிரமராம்பிகை. தலவிருட்சம் மருது. தீர்த்தம் பர்வததீர்த்தம்.

சம்பந்தர் I-118;
அப்பர் IV-58;
சுந்தரர் VII-79

கூடுதல் 3.

*189. பழனம்: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 50.*

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 313 கி.மீ.இல் கும்பகோணம் நிலையமும், நிலையத்திலிருந்து 30 கி.மீ. தொலைவில் திருத்தலமும் உள்ளன. திருவையாற்றுக்குக் கிழக்கில் 3 கி.மீ.இல் உள்ள இத்தலத்திற்கு நகரப்பேருந்து வசதியுண்டு.

இறைவர் ஆபத்சகாயர். இறைவி பெரியநாயகி. தீர்த்தம் காவிரி.
சம்பந்தர் I-67; 1
அப்பர் IV-12,36,87; V-35; VI-3 5

கூடுதல் 6.

*190. பழுவூர்: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 55.*

சென்னை - திருச்சிராப்பள்ளி இரயில் குறுக்குப் பாதையில் 268 கி.மீ. தொலைவில் உள்ளது அரியலூர் நிலையம். நிலையத்திற்குக் கிழக்கே 11 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது; திருவையாற்றிலிருந்து அரியலூர் செல்லும் பேருந்து சாலையின் இடையே உள்ளது; பரசுராமர் வழிபட்ட தலம். அந்தணர்களான மலையாளர்கள் பூசித்த தலம் என்பார் திருஞானசம்பந்தர்.

இறைவர் வடமூலநாதர். இறைவி அருந்தவநாயகி. தீர்த்தம் கொள்ளிடம்.
சம்பந்தர் II-34.

*191. பழையாறை வடதளி: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 24.*

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 313 கி.மீ.இல் கும்பகோணம் நிலையமும், அதன் தென்மேற்கில் 6 கி.மீ.இல் பட்டீச்சுரமும், அதற்கருகில் திருத்தலமும் உள்ளன.

இறைவர் தர்மபுரீசுவரர், சோமேசுவரர். இறைவி விமலநாயகி, சோமகலா நாயகி. தீர்த்தம் சோமதீர்த்தம்.
அப்பர் V-58.

*192. பள்ளியின் முக்கூடல்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 86.*

முன்னர்ச் சொன்ன இரயில் பாதையில் 351 கி.மீ.இல் தஞ்சாவூரும், அங்கிருந்து நாகூர் செல்லும் பாதையில் 55 கி.மீ.இல் திருவாரூரும், நிலையத்திற்கு வடகிழக்கில் 5 கி.மீ. தொலைவில் திருத்தலமும் அமைந்துள்ளன. திருவாரூரிலிருந்து பேருந்து வசதியுண்டு.

இறைவர் முக்கோணநாகேசுவரர். இறைவி மைம்மேவுகண்ணி.
அப்பர் VI-69.

*193. பறியலூர்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 41.*

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடு துறையும், அங்கிருந்து தரங்கம்பாடிக் கிளைப்பாதையில் 9 கி.மீ.இல் மண்ணம்பந்தல் நிலையமும், நிலையத்திலிருந்து $1^1/_2$ கி.மீ.இல் விளநகர்ப் பதியும், அங்கிருந்து கிழக்கே $1^1/_2$ கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் வீரட்டேசுரர். இறைவி இளங்கொம்பனையாள்.
சம்பந்தர் I-134.

194. பனந்தாள்: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 39.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 301 கி.மீ.இல் ஆடுதுறை நிலையமும், நிலையத்தின் வடக்கே 10 கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன. குடந்தை, ஆடுதுறை இவற்றிலிருந்து நகரப்பேருந்து உண்டு.

இறைவர் செஞ்சடையப்பர். இறைவி பெரியநாயகி.
சம்பந்தர் III-62.

195. பனையூர்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 73.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து காரைக்குடி செல்லும் கிளைப்பாதையில் 25 கி.மீ.இல் நன்னிலம் நிலையமும், நிலையத்திற்குத் தென்கிழக்கில் $2^1/_2$ கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் சௌந்தரியநாதர். இறைவி பெரியநாயகி. தீர்த்தம் அமுதபுஷ்கரணி.
சம்பந்தர் I-37;
சுந்தரர் VII-87 கூடுதல் 2.

196. பாசூர்: தொண்டைநாட்டுத் தலம். எண் 16.

சென்னை - இராய்ச்சூர் இரயில் பாதையில் 42 கி.மீ.இல் திருவள்ளூர் நிலையமும், நிலையத்திற்கு வடமேற்கில் 7 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன. திருவள்ளூரிலிருந்து பேருந்துவசதி யுண்டு.

இறைவர் பாசூர்நாதர். இறைவி பசுபதிநாயகி. தலவிருட்சம் மூங்கில்.
சம்பந்தர் II-60;
அப்பர் V-25; VI-83 கூடுதல் 3.

197. பாச்சிலாச்சிராமம்: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 62.

சென்னை - திருச்சிராப்பள்ளிக் குறுக்கு இரயில் வழியில் 276 கி.மீ.இல் திருவரங்கமும், அடுத்து ஒரு கி.மீ.இல் ஆனைக்காவும், அங்கிருந்து வடமேற்கே 5 கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன. திருச்சியிலிருந்து பேருந்து வசதியுண்டு.

இறைவர் மாற்றறி வரதர், சமீவனேசுவரர். இறைவி பாலசௌந்தரி. தலவிருட்சம் வன்னி. தீர்த்தம் அன்னமாம் பொய்கை.
சம்பந்தர் I-44;
சுந்தரர் VII-14 கூடுதல் 2.

198. பாண்டிக்கொடுமுடி: கொங்குநாட்டுத் தலம். எண் 6.

திருச்சி வழியாகச் சென்னையிலிருந்து ஈரோடு செல்லும் இரயில் பாதையில்

504 கி.மீ.இல் அமைந்துள்ளது திருத்தலம். நிலையத்திலிருந்து $3^1/_4$ கி.மீ.இல் உள்ள தலத்திற்குத் திருச்சியிலிருந்து பேருந்து வசதியுண்டு.

இறைவர் கொடுமுடிநாதர், மருக்கொழுந்தீசர். இறைவி பண்மொழிநாயகி. தலவிருட்சம் வன்னி. தீர்த்தம் காவிரி.
சம்பந்தர் II-69;
அப்பர் V-81;
சுந்தரர் VII-48 கூடுதல் 3.

199. பாதாளீச்சுரம்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 104.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 351 கி.மீ.இல் தஞ்சாவூரும், அங்கிருந்து நாகூர் செல்லும் கிளைப்பாதையில் 21 கி.மீ.இல் நீடாமங்கலமும், அங்கிருந்து 13 கி.மீ.இல் ராஜமன்னார்குடியும், அங்கிருந்து $2^1/_2$ கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன. தஞ்சை, குடந்தை இவற்றிலிருந்து ராஜமன்னார்குடி செல்லப் பேருந்து வசதியுண்டு.

இறைவர் நாகநாதர், சர்ப்பபுரீசுவரர். இறைவி அமிர்தநாயகி. தீர்த்தம் நாக-தீர்த்தம்.
சம்பந்தர் I-108.

200. பாதிரிப்புலியூர்: (கடலூர்) நடுநாட்டுத் தலம். எண் 18.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 202 கி.மீ.இல் பாதிரிப்புலியூர் நிலையமும், நிலையத்திற்கு மேற்கில் 1 கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன.

இறைவர் தோன்றுத்துணைநாதர். இறைவி பெரியநாயகி, தோகைநாயகி. தலவிருட்சம் பாதிரிமரம். தீர்த்தம் கெடிலம்.
சம்பந்தர் II-121;
அப்பர் IV-94 கூடுதல் 2.

201. பாம்புரம்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 59.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து காரைக்குடி செல்லும் கிளைப்பாதையில் 16 கி.மீ.இல் பேரளம் நிலையமும், நிலையத்திற்கு மேற்கில் 7 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன. பேரளத்திலிருந்து பேருந்துவசதி யுண்டு.

இறைவர் பாம்புரேசுவரர். இறைவி வண்டார்பூங்குழலி. தலவிருட்சம் வன்னி. தீர்த்தம் ஆதிசேஷ தீர்த்தம்.
சம்பந்தர் I-41.

202. (வன்) பார்த்தான் பனங்காட்டூர்: தொண்டைநாட்டுத் தலம். எண் 9.

சென்னையிலிருந்து அரக்கோணத்துக்குச் செங்கல்பட்டு வழியாகச் செல்லும் இருப்புப்பாதையில் 91 கி.மீ.இல் காஞ்சிபுரம் உள்ளது. நிலையத்திற்கு 14 கி.மீ.இல் திருத்தலம் உள்ளது. காஞ்சிக்குத் தெற்கேயுள்ள ஐயன்குளம், அதன் மேற்கேயுள்ள ஆற்காடு வழியே சென்றாலும் தலத்தை அடையலாம்.

இறைவர் பனங்காட்டுநாதர், கிருபாநாதேசுவரர். இறைவி அமிர்தவல்லி,

கிருபாநாயகி. தலவிருட்சம் பனை. தீர்த்தம் ஜடாகங்கை.
சுந்தரர் VII-86.

203. பாலைத்துறை: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 19.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 327 கி.மீ.இல் (குடந்தையை அடுத்துப்) பாபநாசம் நிலையமும், நிலையத்திற்கு வடகிழக்கே $1^1/_2$ கி.மீ.இல் திருத் தலமும் உள்ளன. தஞ்சை - பாபநாசம் பேருந்து மூலமும் செல்ல முடியும்.

இறைவர் பாலைவனநாதர். இறைவி தவளவெண்ணகையாள்.
அப்பர் V-51.

204. பாற்றுறை: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 59.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 391 கி.மீ.இல் (திருச்சி-ராப்பள்ளிக்கு முன்னே) திருவெறும்பியூர் நிலையமும், அதற்குக் கிழக்கில் 6 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் திருமூலநாதர். இறைவி மோகநாயகி, மேகலாம்பிகை. தீர்த்தம் திருக்குளம்.
சம்பந்தர் I-56.

205. புகலூர்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 75.

முற்கூறிய இரயில் பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து காரைக்குடி செல்லும் கிளைப்பாதையில் 25 கி.மீ.இல் நன்னிலம் நிலையமும், நிலையத் திற்குக் கிழக்கில் $6^1/_2$ கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன.

இறைவர் அக்நிபுரீசுவரர். இறைவி கருந்தாழ்குழலியம்மை. தலவிருட்சம் புன்னை. தீர்த்தம் அக்நிதீர்த்தம்.

| | |
|---|---|
| சம்பந்தர் I-2; II-115; | 2 |
| அப்பர் IV-16,54,105; V-46; VI-99; | 5 |
| சுந்தரர் VII-34 | 1 |
| கூடுதல் | 8. |

206. புகலூர் வர்த்தமானீச்சுரம்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 76.

முன்பு சொல்லிய இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறை யும், அங்கிருந்து செல்லும் காரைக்குடிக் கிளைப்பாதையில் நன்னிலம் நிலையமும் உள்ளன. நிலையத்திற்குக் கிழக்கே அமைந்துள்ள மேலே சொல்லிய (205) திருத்தல ஆலயத்தின் கோணப்பிரான் சந்நிதியின் வடக்கில் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் வர்த்தமானேசுரர். இறைவி கருந்தாழ்குழலம்மை.
சம்பந்தர் II-92.

207. புத்தூர்: பாண்டிநாட்டுத் தலம். எண் 6.

முன்பு சொல்லிய இரயில் பாதையில் மயிலாடுதுறையும், அங்கிருந்து செல்லும் கிளைப்பாதையின் கோடியில் காரைக்குடியும், நிலையத்திலிருந்து 20 கி.மீ.இல் திருத் தலமும் அமைந்துள்ளன.

இறைவர் புத்தூரீசர், ஸ்ரீதளிநாதர். இறைவி சிவகாமியம்மை. தலவிருட்சம் கொன்றை. தீர்த்தம் திருத்தளித் தீர்த்தம்.
சம்பந்தர் I-26;
அப்பர் VI-76 கூடுதல் 2.

208. புள்ளமங்கை: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 16.

204-இல் கூறிய இரயில் பாதையில் 337 கி.மீ.இல் உள்ள பசுபதிகோயில் நிலையத்திற்கு வடமேற்கே $2^1/_2$ கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் ஆலந்துறை நாதர், பசுபதிநாதர். இறைவி அல்லியங்கோதை. தீர்த்தம் காவிரி.
சம்பந்தர் I-16.

209. புள்ளிருக்குவேளூர்: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 16.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 267 கி.மீ.இல் (சீகாழியை அடுத்து) உள்ளது வைத்தீசுவரன்கோயில் நிலையம். நிலையத்தின் கிழக்கே $^1/_2$ கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது. தலத்தின் மறுபெயரே புள்ளிருக்குவேளூர் ஆகும்.

இறைவர் வைத்தியநாதர். இறைவி தையல்நாயகி. விருட்சம் வேம்பு. தீர்த்தம் சித்தாமிர்ததீர்த்தம்.
சம்பந்தர் II-43;
அப்பர் V-79; VI-54 கூடுதல் 3.

210. புறம்பயம்: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 46.

முற்கூறிய இரயில் பாதையில் 313 கி.மீ.இல் கும்பகோணம் நிலையமும், நிலையத்தின் வடமேற்கில் 8 கி.மீ.இல் மண்ணியாற்றங்கரையில் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் புறம்பயநாதர், சாட்சிநாதர். இறைவி கரும்படுசொல்லி. தலவிருட்சம் வன்னி. தீர்த்தம் பிரமதீர்த்தம், சத்தசாகரதீர்த்தம்.
சம்பந்தர் II-30;
அப்பர் VI-13;
சுந்தரர் VII-35 கூடுதல் 3.

211. புறவார் பனங்காட்டூர்: (பனையபுரம்) நடுநாட்டுத் தலம். எண் 20.

சென்னை - விழுப்புரம் இரயில் பாதையில் (153 கி.மீ.இல்) விழுப்புரத்திற்கு வடக்கேயுள்ளது முண்டியம்பாக்கம் நிலையம். நிலையத்திற்குக் கிழக்கில் (3 கி.மீ.இல் ) திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் பனங்காட்டீசர். இறைவி புறவம்மை. தலவிருட்சம் பனைமரம்.
சம்பந்தர் II-33.

212. புனவாயில்: பாண்டிநாட்டுத் தலம். எண் 7.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறை

யும், அங்கிருந்து காரைக்குடி செல்லும் கிளைப்பாதையில் 161 கி.மீ.இல் அறந்தாங்கி நிலையமும், நிலையத்திற்கு 48 கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன.

இறைவர் பழம்பதிநாதர். இறைவி கருணைநாயகி. தலவிருட்சம் புன்னை. தீர்த்தம் இலட்சுமிதீர்த்தம், பிரமதீர்த்தம்.

சம்பந்தர் III-11;
சுந்தரர் VII-50 கூடுதல் 2.

213. புன்கூர்: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 20.

முற்கூறிய இரயில் பாதையில் 267 கி.மீ.இல் உள்ள வைத்தீசுவரன்கோயில் நிலையத்திற்கு மேற்கில் 5 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் சிவலோகநாதர். இறைவி சொக்கநாயகி. விருட்சம் புன்கமரம். தீர்த்தம் கணபதிதீர்த்தம்.

சம்பந்தர் I-27;
அப்பர் VI-11;
சுந்தரர்VII-55 கூடுதல் 3.

214. பூந்துருத்தி: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 11.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 351 கி.மீ.இல் தஞ்சாவூரும், அங்கிருந்து வடக்கே செல்லும் நெடுஞ்சாலையில் 10 கி.மீ.இல் திருக்கண்டியூரும், அதன் மேற்கில் 3 கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன.

இறைவர் புஷ்பவனநாதர். இறைவி அழகார்ந்த நாயகி.
நாவுக்கரசர் IV-88; V-32; VI-43 கூடுதல் 3.

215. பூவணம்: பாண்டிநாட்டுத் தலம். எண் 11.

சென்னை - தூத்துக்குடி இரயில்பாதையில் 556 கி.மீ.இல் உள்ள மதுரை நிலையத்திற்குக் கிழக்கில் 19 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் பூவணநாதர். இறைவி மின்னம்மை. விருட்சம் பலா. தீர்த்தம் வைகை.

சம்பந்தர் I-64; III-20;
அப்பர் VI-18;
சுந்தரர் VII-11 கூடுதல் 4.

216. பூவனூர்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 103.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 351 கி.மீ.இல் தஞ்சாவூரும், அங்கிருந்து நாகூர்க் கிளைப்பாதையில் 21 கி.மீ.இல் நீடாமங்கலம் நிலையமும், நிலையத்திற்குத் தென்மேற்கில் 3 கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன.

இறைவர் புஷ்பவனநாதர். இறைவி கற்பகவல்லி. விருட்சம் பலா.
அப்பர் V-65.

217. பெரும்புலியூர்: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 53.

முன்னர்க் காணும் தஞ்சாவூர் நிலையத்திற்கு மேற்கில் 17 கி.மீ.இல் உள்ளது

திருத்தலம்; ஐயாற்றிலிருந்து வடமேற்கில் 4 கி.மீ.இல் உள்ளது.

இறைவர் வியாக்ரபுரீசுவரர். இறைவி சௌந்தரியநாயகி. தீர்த்தம் காவிரி.
சம்பந்தர் II-67.

218. பெருவேளூர்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 92.

சென்னை - இராமேசுவரம் இரயில்பாதையில் மயிலாடுதுறையும், அங்கிருந்து காரைக்குடிக் கிளைப்பாதையில் 39 கி.மீ.இல் திருவாரூரும், நிலையத்திற்கு மேற்கில் $11^1/_2$ கி.மீ. தொலைவில் உள்ள கரவீரத்தின் வடமேற்கே $2^1/_2$ கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன.

இறைவர் பிரியா நாதர், பிரியா ஈசர். இறைவி ஏலவார்குழலி, மின்னனையாள்-அம்மை.
சம்பந்தர் III-64;
அப்பர் IV-60 கூடுதல் 2.

219. பேணுபெருந்துறை: (திருப்பந்துறை) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 66.

முன்னர்க் கூறிய இரயில் பாதையில் 313 கி.மீ.இல் உள்ளது கும்பகோணம். நிலையத்திலிருந்து 9 கி.மீ.இல் உள்ள நறையூருக்கு அருகில் (2 கி.மீ.) அமைந்துள்ளது திருத்தலம்.

இறைவர் சிவானந்தர். இறைவி அம்மைமலையரசி. விருட்சம் வன்னி. தீர்த்தம் மங்களதீர்த்தம்.
சம்பந்தர் I-42.

220. பேரெயில்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 114.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 351 கி.மீ.இல் தஞ்சாவூரும், அங்கிருந்து நாகூர் செல்லும் பாதையில் குழிக்கரை நிலையமும், நிலையத்திற்குத் தெற்கில் 5 கி.மீ.இல் (வயல்வழி) திருத்தலமும் உள்ளன.

இறைவர் ஜகதீசர். இறைவி பெண்ணமிர்த நாயகி, ஜகந்நாயகி. தீர்த்தம் அக்நி.
அப்பர் V-16.

221. பைஞ்ஞீலி: சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 61.

சென்னை - திருச்சிராப்பள்ளி இரயில் குறுக்குப் பாதையில் 321 கி.மீ.இல் பிட்-சாண்டார்கோயில் நிலையம் உள்ளது. நிலையத்திலிருந்து நொச்சியம் வழியாகத் திருத்தலத்தை அடையலாம்.

இறைவர் திருநீலகண்டர். இறைவி விசாலாட்சி, நீணெடுங்கண்ணி.
சம்பந்தர் III-14;
அப்பர் V-41;
சுந்தரர் VII-36 கூடுதல் 3.

222. மங்கலக்குடி: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 38.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 301 கி.மீ.இல் ஆடுதுறை நிலையமும், நிலையத்திற்கு வடக்கே 3 கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன.

இறைவர் புராணேசுவரர், புராணவரதேசுவரர். இறைவி மங்களநாயகி. தலவிருட்சம் கோங்கிலவம். தீர்த்தம் காவிரி.
சம்பந்தர் II-10;
அப்பர் V-73 கூடுதல் 2.

223. மணஞ்சேரி: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 25.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 290 கி.மீ.இல் குற்றாலம் நிலையமும், நிலையத்திற்கு வடகிழக்கே 6 கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன.

இறைவர் அருள்வள்ளல்நாதர். இறைவி யாழினும் மென்மொழி யம்மை.
சம்பந்தர் II-16;
அப்பர் V-87 கூடுதல் 2.

224. மண்ணிப்படிக்கரை: (இலம்பைப்பட்டு) சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 30.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 267 கி.மீ.இல் வைத்தீசுவரன்-கோயிலும், நிலையத்தின் மேற்கே 14 கி.மீ.இல் உள்ள வாழ்கொளிபுத்தூருக்கு அருகில் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் நீலகண்டர். இறைவி அமிர்தகரவல்லி.
சுந்தரர் VII-22.

225. மயிலாடுதுறை: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 39.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 281 கி.மீ.இல் உள்ள தலம். கோயில் நிலையத்திலிருந்து 3/4 கி.மீ.இல் உள்ளது.

இறைவர் மயூரநாதர், மயூரநாதேசுவரர். இறைவி அஞ்சல்நாயகி, அபயாம்பிகை. தீர்த்தம் காவிரி.
சம்பந்தர் I-38; III-70;
அப்பர் V-39 கூடுதல் 3.

226. மயிலாப்பூர்: தொண்டைநாட்டுத் தலம். எண் 24.

சென்னை மத்திய இரயில் நிலையத்தின் தெற்கில் 8 கி.மீ.இல் அமைந்துள்ளது திருத்தலம்.

இறைவர் கபாலீசுவரர். இறைவி கற்பகவல்லி. விருட்சம் புன்னைமரம்.
சம்பந்தர் I-47.

227. மயேந்திரப்பள்ளி: (கோயிலடிப்பாளையம்) காவிரி வடகரைத்தலம். எண் 6.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 251 கி.மீ.இல் கொள்ளிடம் நிலையமும், நிலையத்திற்குக் கிழக்கே (6 கி.மீ.இல் உள்ள) நல்லூர்ப் பெருமணம் என்னும் தலத்திற்கு வடகிழக்கே 6 கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன.

இறைவர் திருமேனியழகர். இறைவி வடிவாம்பிகை, வடிவம்மை. தீர்த்தம் மந்திரபுஷ்கரணி.
சம்பந்தர் III-31.

228. மருகல்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 80.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து செல்லும் காரைக்குடிப் பாதையில் 25 கி.மீ.இல் நன்னிலம் நிலையமும், நிலையத்திற்கு 6 கி.மீ.இல் திருப்புகலூரும், அதன் தென்கிழக்கே 5 கி.மீ.இல் தலமும் உள்ளன. நாகப்பட்டினம் - மருகல் பேருந்து வசதியுண்டு.

இறைவர் மாணிக்கவண்ணர். இறைவி வண்டுவார்குழலியம்மை. விருட்சம் வாழை. தீர்த்தம் இலக்குமிதீர்த்தம்.
சம்பந்தர் I-6; II-18;
அப்பர் V-88 கூடுதல் 3.

229. மழபாடி: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 54.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 351 கி.மீ.இல் தஞ்சாவூரும், அங்கிருந்து வடக்கே செல்லும் நெடுஞ்சாலையில் 13 கி.மீ.இல் திருவையாறும், அதன் வடமேற்கில் 5 கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன. திருத்தலம் கொள்ளிடத்து வடகரையில் உள்ளது.

இறைவர் வயிரத்தூண்நாதர். இறைவி அழகம்மை. விருட்சம் பனை.
சம்பந்தர் II-99; III-28,48; 3
அப்பர் VI-39,40; 2
சுந்தரர் VII-24 1
கூடுதல் 6.

230. மறைக்காடு: (வேதாரண்யம்) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 125.

முற்கூறிய இரயில் பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து காரைக்குடி செல்லும் கிளைப்பாதையில் 66 கி.மீ.இல் திருத்தருப்பூண்டி நிலையமும், அங்கிருந்து திருக்கோடிகா பாதையில் 35 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன. தஞ்சை, கும்பகோணம் என்ற ஊர்களிலிருந்து நேரான பேருந்து வசதி உண்டு.

இறைவர் வேதாரண்யேசுவரர். இறைவி வீணைகானவிதூஷணி. விருட்சம் வன்னி.
சம்பந்தர் I-22; II-37,91; III-76; 4
அப்பர் IV-33,34; V-9,10; VI-23; 5
சுந்தரர் VII-71 1
கூடுதல் 10.

231. மாகறல்: தொண்டைநாட்டுத் தலம். எண் 7.

செங்கல்பட்டு வழியே சென்னை - அரக்கோணம் செல்லும் இரயில் பாதையில் 91 கி.மீ.இல் காஞ்சிபுரமும், நிலையத்திற்குத் தெற்கில் 16 கி.மீ. தொலைவில் (வேகவதி, பாலாறு இவற்றைக் கடந்து) திருத்தலமும் உள்ளன. காஞ்சிபுரம் - உத்தரமேரூர்ப் பேருந்து வசதியுண்டு.

இறைவர் அடைக்கலங் காத்த நாதர், அகத்தீசுவரர். இறைவி புவனநாயகி. தீர்த்தம் அக்நிதீர்த்தம்.

சம்பந்தர் III-72.

232. மாணிகுழி: நடுநாட்டுத் தலம். எண் 17.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 202 கி.மீ.இல் திருப்பாதிரிப் புலியூர் நிலையமும், நிலையத்தின் மேற்கில் செல்லும் (பாதிரிப்புலியூர் - பாலூர்) நெடுஞ்சாலையில் 8 கி.மீ.இல் கெடிலநதியின் தென்பால் இத்திருத்தலமும் உள்ளன.

இறைவர் மாணிக்கவரதர். இறைவி மாணிக்கவல்லி. தீர்த்தம் கெடிலநதி.

சம்பந்தர் III-77.

233. மாந்துறை: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 58.

சென்னை - திருச்சிராப்பள்ளிக் குறுக்கு இரயில் பாதையில் 311 கி.மீ.இல் லால்குடியும், நிலையத்தின் மேற்கில் 5 கி.மீ.இல் தலமும் உள்ளன.

இறைவர் ஆம்பிரவனநாதர். இறைவி அழகம்மை. விருட்சம் மாமரம்.

சம்பந்தர் II-110.

234. மாற்பேறு: தொண்டைநாட்டுத் தலம். எண் 11.

சென்னை - அரக்கோணம் (செங்கல்பட்டு வழி) இரயில் பாதையில் 105 கி.மீ.இல் மாற்பேறு நிலையம் அமைந்துள்ளது. திருத்தலம் நிலையத்தின் தென்மேற் கில் 4 கி.மீ.இல் உள்ளது.

இறைவர் மால்வணங்கீசர், மணிகண்டேசர். இறைவி கருணைநாயகி, அஞ்சனாக்ஷி-யம்மை. தீர்த்தம் பாலாறு.

சம்பந்தர் I-55,114; 2

அப்பர் IV-108; V-59,60; VI-80 4

கூடுதல் 6.

235. மீயச்சூர்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 56.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறை யும், அங்கிருந்து காரைக்குடிப் பாதையில் 15 கி.மீ.இல் பேரளம் நிலையமும், நிலை யத்திற்கு 3/4 கி.மீ.இல் தலமும் அமைந்துள்ளன.

இறைவர் முயற்சிநாதர். இறைவி சுந்தரநாயகி. தலவிருட்சம் வில்வம். தீர்த்தம் சூரியபுஷ்கரணி.

சம்பந்தர் II-62.

236. மீயச்சூர் இளங்கோயில்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 57.

மேலே காணும் தலத்தின் வடபுறம் அமைந்துள்ள திருத்தலமாகும்.

இறைவர் சகலபுவனேசுவரர். இறைவி மேகலாம்பிகை.

அப்பர் V-11.

237. முண்டீச்சுரம்: நடுநாட்டுத் தலம். எண் 19.

சென்னை - திருச்சிராப்பள்ளி குறுக்கு இரயில் பாதையில் 175 கி.மீ.இல் அமைந்துள்ள திருவெண்ணெய்நல்லூர் நிலையத்திற்குக் கிழக்கில் திருத்தலம் உள்ளது.

இறைவர் சிவலோகநாதர். இறைவி கானார்குழலியம்மை.
அப்பர் VI-85.

238. முதுகுன்றம்: நடுநாட்டுத் தலம். எண் 9.

மேற்படி இரயில் பாதையில் 214 கி.மீ.இல் அமைந்துள்ள விருத்தாசலம் நிலையத்திலிருந்து 3 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் முதுகுன்றநாதர். இறைவி பெரியநாயகி. விருட்சம் வன்னி. தீர்த்தம் மணிமுத்தாறு.

| | |
|---|---|
| சம்பந்தர் I-12,53,93,131; II-64; III-34,99; | 7 |
| அப்பர் VI-68; | 1 |
| சுந்தரர் VII-25,43,63 | 3 |
| | கூடுதல் 11. |

239. முருகன்பூண்டி: கொங்குநாட்டுத் தலம். எண் 2.

சென்னை - கோயம்புத்தூர் இரயில் நெடும்பாதையில் (ஜோலார்பேட்டை வழியாக) 445 கி.மீ.இல் உள்ள திருப்பூருக்கு வடக்கில் 8 கி.மீ.இல் திருத்தலம் உள்ளது.

இறைவர் முருகாவுடையார், முருகநாதேசுவரர். இறைவி ஆவுடைநாயகி, முயங்குபூண்முலையம்மை.
சுந்தரர் VII-49.

240. முல்லைவாயில் (தென்): சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 7.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 261 கி.மீ.இல் உள்ள சீகாழி நிலையத்திற்குத் தெற்கில் 15 கி.மீ.இல் உள்ளது திருத்தலம்.

இறைவர் முல்லைவனநாதர். இறைவி கோதையம்மை. விருட்சம் முல்லை. தீர்த்தம் சக்கரதீர்த்தம்.
சம்பந்தர் II-88.

241. முல்லைவாயில் (வட): தொண்டைநாட்டுத் தலம். எண் 22.

சென்னை - அரக்கோணம் இரயில் பாதையில் 16 கி.மீ.இல் உள்ள அம்பத்தூர் நிலையத்திற்கு வடமேற்கில் $2^1/2$கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் மாசிலாமணீசர். இறைவி கொடியிடைநாயகி.
சுந்தரர் VII-69.

242. மூக்கீச்சுரம்: (உறையூர்) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 5.

சென்னை - திருச்சி இரயில் குறுக்குப் பாதையில் 337 கி.மீ.இல் உள்ள திருச்சிராப்பள்ளிக்கு மேற்கில் $2^1/_2$ கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் பஞ்சவர்ணேசுவரர். இறைவி காந்திமதியம்மை. விருட்சம் வில்வம். தீர்த்தம் சிவதீர்த்தம்.
சம்பந்தர் II-120.

243. வக்கரை: தொண்டைநாட்டுத் தலம். எண் 30.

சென்னையிலிருந்து 159 கி.மீ.இல் விழுப்புரம் உள்ளது. விழுப்புரம் - புதுச்சேரி நெடுஞ்சாலையில் மதகடிப்பட்டு என்னும் ஊர் உள்ளது. அவ்வூருக்கு வடக்கே ஓடும் சங்கராபரணி நதிக்கு வடகரையில் திருத்தலம் அமைந்துள்ளது. விழுப்புரம், புதுவை ஆகிய ஈர் இடங்களிலிருந்தும் பேருந்தில் சென்றால் அவ்வாற்றின் தென் கரையினை அடையலாம்.

இறைவர் சந்திரசேகரர். இறைவி வடிவாம்பாள். தீர்த்தம் பிரமதீர்த்தம், சந்திர-தீர்த்தம்.
சம்பந்தர் III-60.

244. வடுகூர்: நடுநாட்டுத் தலம். எண் 16.

சென்னையிலிருந்து 159 கி.மீ.இல் விழுப்புரம் நிலையம் உள்ளது. அங்கிருந்து புதுச்சேரி செல்லும் கிளைப்பாதையில் 22 கி.மீ.இல் சின்னபாபுசமுத்திர நிலையமுண்டு. நிலையத்திலிருந்து 3 கி.மீ.இல் உள்ள திருவாண்டார் கோயிலையே வடுகூர் எனக் குறிப்பிடுவர்.

[மேலும் விழுப்புரம் - கடலூர் இரயில் பாதையில் 33 கி.மீ.இல் உள்ள நெல்லிக்குப்பம் நிலையத்திற்கு வடமேற்கே 2 கி.மீ.இல் உள்ள திருக்கண்டீசுவரமே வடுகூர் என்று கல்வெட்டுச் சான்றால் தெளிவாகக் குறிப்பிடுவாரும் உளர்.]

இறைவர் வடுகேசுவரர், நடனபாதேசுவரர். இறைவி வடுவகிர்க்கண்ணியம்மை.
சம்பந்தர் I-87.

245. வலஞ்சுழி: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 25.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 320 கி.மீ.இல் உள்ள கும்பகோணத்திற்கு மேற்கே சுவாமிமலை நிலையம் உள்ளது. நிலையத்திற்கு வடக்கே $^{3}/_{4}$ கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் கற்பகநாதேசுவரர். இறைவி பெரியநாயகி. தீர்த்தம் காவிரி.
சம்பந்தர் II-2,106; III-106; 3
அப்பர் V-66; VI-72 2
கூடுதல் 5.

246. வலம்புரம்: (மேலப்பெரும்பள்ளம்) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 44.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 261 கி.மீ.இல் சீகாழி நிலையமும், அதன் தென்கிழக்கே உள்ள பல்லவனீச்சுரத்துக்குத் தென்மேற்கில் 3 கி.மீ.இல் இத்தலமும் அமைந்துள்ளன. சீகாழியிலிருந்து பேருந்துவசதி உண்டு.

இறைவர் வலம்புரிநாதர். இறைவி வடுவகிர்க்கண்ணி.
சம்பந்தர் III-103; 1
அப்பர் IV-55; VI-58; 2
சுந்தரர் VII-72 1
கூடுதல் 4.

247. வலிதாயம்: (பாடி) தொண்டைநாட்டுத் தலம். எண் 21.

சென்னை - அரக்கோணம் இரயில் பாதையில் 13 கி.மீ.இல் கொறட்டூர் நிலையமும், நிலையத்தை அடுத்து 1 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் வலிதாயநாதர். இறைவி தாயம்மை.
சம்பந்தர் I-3.

248. வலிவலம்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 121.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து பிரியும் காரைக்குடிப் பாதையில் 49 கி.மீ.இல் மாவூர்ரோடு நிலையமும், அதன் தென்கிழக்கில் $8^1/_2$ கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன.

இறைவர் மனத்துணைநாதர். இறைவி மாழையங்கண்ணி, வாளையங்கண்ணி. தலவிருட்சம் புன்னை. தீர்த்தம் காரணர்கங்கை.

சம்பந்தர் I-50,123; 2
அப்பர் VI-48; 1
சுந்தரர் VII-67 1
கூடுதல் 4.

249. வல்லம்: தொண்டைநாட்டுத் தலம். எண் 10.

சென்னை - பெங்களூர் இரயில் பாதையில் 118 கி.மீ.இலுள்ள வாலாஜாரோடு நிலையத்தை அடுத்து வடகிழக்கில் 3 கி.மீ.இல் திருத்தலம் உள்ளது.

இறைவர் வல்லநாதர். இறைவி வல்லாம்பிகை. தீர்த்தம் கௌரிதீர்த்தம்.
சம்பந்தர் I - 113.

250. வன்னியூர்: (அன்னூர்) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 62.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 290 கி.மீ.இல் குத்தாலம் நிலையமும், நிலையத்திற்குத் தெற்கில் $9^1/_2$ கி.மீ.இல் திருவீழிமிழலையும், அதற்கு வடமேற்கில் 3 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன. பூந்தோட்டத்திலிருந்து 11 கி.மீ.இல் இத்திருத்தலத்தை அடையலாம்.

இறைவர் அக்நீசுவரர். இறைவி பார்வதியார். தீர்த்தம் அக்நிதீர்த்தம்.
அப்பர் V-26.

251. வாஞ்சியம்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 70.

சென்னை - இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து பிரியும் காரைக்குடிப் பாதையில் 25 கி.மீ.இல் நன்னிலமும், அதற்குத் தென்மேற்கில் 10 கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன. தலத்திற்கு வண்டி, பேருந்து இவற்றில் செல்லலாம்.

இறைவர் வாஞ்சியநாதர். இறைவி வாழவந்த நாயகி. விருட்சம் சந்தனமரம். தீர்த்தம் அனந்ததீர்த்தம்.

சம்பந்தர் II-7;
அப்பர் V-67;
சுந்தரர் VII-76 கூடுதல் 3.

252. வாட்போக்கி: (இரத்தினகிரி) காவிரித் தென்கரைத் தலம். எண் 1.

சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளி வழியாக ஈரோடு செல்லும் இரயில் பாதையில் 374 கி.மீ.இல் குழித்தலை யுள்ளது. நிலையத்திற்குத் தெற்கே செல்லும் மணப்பாறை நெடுஞ்சாலையில் 8 கி.மீ.இல் திருத்தலம் உள்ளது. பேருந்துவசதி உண்டு.

இறைவர் இரத்தினகிரிநாதர். இறைவி சுரும்பார்குழலி. தீர்த்தம் காவிரி.
அப்பர் V-86.

253. வாய்மூர்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 124.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து காரைக்குடி செல்லும் கிளைப்பாதையில் 53 கி.மீ.இல் நெல்லிக்காவல் நிலையமும், நிலையத்திலிருந்து 12 கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன.

இறைவர் வாய்மூர்நாதர். இறைவி பாலினும் நன்மொழி யம்மை. விருட்சம் பலா. தீர்த்தம் சூரியதீர்த்தம்.

சம்பந்தர் II-111; 1
அப்பர் V-50; VI-77 2
கூடுதல் 3.

254. வாழ்கொளிபுத்தூர்: சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 29.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 267 கி.மீ.இல் உள்ள வைத்தீசுவரன்கோயில் என்னும் நிலையத்திற்கு மேற்கே திருப்புன்கூர் வழியில் 8 கி.மீ.இல் அமைந்துள்ளது திருத்தலம்.

இறைவர் மாணிக்கவண்ணர். இறைவி வண்டார்பூங்குழலி. தலவிருட்சம் வாகைமரம்.

சம்பந்தர் I-40; II-94; 2
சுந்தரர் VII-57 1
கூடுதல் 3.

255. வான்மியூர் : தொண்டைநாட்டுத் தலம். எண் 25.

சென்னை மத்திய இரயில் நிலையத்திற்குத் தெற்கில் 12 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் பால்வண்ணநாதர். இறைவி சொக்கநாயகி.
சம்பந்தர் II-4; III-55; 2
அப்பர் V-22 1
கூடுதல் 3.

256. விசயமங்கை: சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 47.

சென்னை - இராமேசுவரம் இரயில் பாதையில் 322 கி.மீ.இல் (கும்பகோணத்தை அடுத்துச்) சுந்தரப்பெருமாள்கோயில் நிலையமும், அடுத்து $6^1/_2$ கி.மீ. தொலைவில் திருத்தலமும் உள்ளன.

இறைவர் விசயநாதர். இறைவி மங்கைநாயகி. தீர்த்தம் அர்ச்சுனதீர்த்தம்.
சம்பந்தர் III-17;
அப்பர் V-71 கூடுதல் 2.

257. விடைவாய் : சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 126.

சென்னை-இராமேசுவரம் இரயில் பாதையில் 351 கி.மீ.இல் தஞ்சாவூரும், அங்கிருந்து நாகூர் செல்லும் பாதையில் 38 கி.மீ.இல் கொரடாச்சேரி நிலையமும், நிலையத்திற்குத் தெற்கே 5 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் புண்ணியகோடிநாதர். இறைவி அபிராமியம்மை. தீர்த்தம் ஆதிசேட தீர்த்தம், அத்திரிதீர்த்தம்.
சம்பந்தர் III-126.

258. வியலூர்: (பண்டாரவாடைத் திருவியலூர்) காவிரி வடகரைத் தலம்.
எண் 43.

சென்னை-இராமேசுவரம் இரயில் பாதையில் 313 கி.மீ.இல் உள்ள கும்பகோணம் நிலையத்திற்குக் கிழக்கில் 6 கி.மீ.இல் உள்ளது திருத்தலம்.

இறைவர் யோகானந்தீசுவரர். இறைவி சாந்தநாயகி. தீர்த்தம் சடாயுதீர்த்தம்.
சம்பந்தர் I-13.

259. விளநகர் : சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 40.

சென்னை-இராமேசுவரம் இரயில் பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து தரங்கம்பாடி செல்லும் கிளைப்பாதையில் 9 கி.மீ.இல் மண்ணம்பந்தர் நிலையமும், நிலையத்திலிருந்து $1^1/_2$ கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன.

இறைவர் துறைகாட்டும் வள்ளலார். இறைவி தோழிநாயகி.
சம்பந்தர் II-78.

260. விளமர் : சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 90.

சென்னை-இராமேசுவரம் இரயில் பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து காரைக்குடி செல்லும் கிளைப்பாதையில் 39 கி.மீ.இல் திருவாரூர் நிலையமும், நிலையத்திற்குத் தென்மேற்கே 5 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன. பேருந்து வசதியுண்டு.

இறைவர் பதஞ்சலிமனோகரர். இறைவி யாழினும் மென்மொழி யம்மை. தீர்த்தம் அக்நிதீர்த்தம்.

சம்பந்தர் III-88.

261. விற்குடி வீரட்டம் : சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 74.

சென்னை-இராமேசுவரம் இரயில் பாதையில், காரைக்குடி-மயிலாடுதுறைக் கிளைப்பாதையில் 32 கி.மீ.இல் விற்குடி நிலையமும், நிலையத்திலிருந்து 1 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் வீரட்டநாதர். இறைவி ஏலவார்குழலி.
சம்பந்தர் II-108.

262. விற்கோலம் : (கூவம்) தொண்டைநாட்டுத் தலம். எண் 14.

சென்னை-இராய்ச்சூர் இரயில் நெடும்பாதையில் 48 கி.மீ.இல் கடம்பத்தூர்

நிலையமும், நிலையத்திற்குத் தெற்கே 10 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் திரிபுராந்தகர். இறைவி திரிபுராந்தநாயகி.
சம்பந்தர் III-23.

263. வீழிமிழலை : சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 61.

சென்னை-இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் (மயிலாடுதுறை நிலையத்தை அடுத்து) 290 கி.மீ.இல் குத்தாலம் நிலையமும், நிலையத்தின் தெற்கில் $9^1/_2$ கி.மீ.இல் தலமும் உள்ளன. பூந்தோட்டம் - நாச்சியார் கோயில் நெடுஞ்சாலையில் (பேருந்தில் சென்றால்) பூந்தோட்டத்திற்கு மேற்கில் 8 கி.மீ.இல் தலம் உள்ளது.

இறைவர் நேத்திரார்ப்பணேசுவரர், வீழியழகர். இறைவி சுந்தரகுசாம்பிகை. விருட்சம் வீழிச்செடி. தீர்த்தம் விஷ்ணுதீர்த்தம்.

| | | |
|---|---|---|
| சம்பந்தர் | I-11,20,35,82,92,124,132; | |
| | III-9,80,85,98,111,116,119; | 14 |
| அப்பர் | IV-64,95; V-12,13; VI-50-53; | 8 |
| சுந்தரர் | VII-88 | 1 |
| | | கூடுதல் 23. |

264. வெஞ்சமாக் கூடல் : கொங்குநாட்டுத் தலம். எண் 5.

சென்னை - ஈரோடு (திருச்சிவழி) இரயில் பாதையில் 477 கி.மீ.இல் கரூர் நிலையமும், நிலையத்தின் தென்கிழக்கில் 24 கி.மீ.இல் திருத்தலமும் உள்ளன. கரூர்-அரவக்குறிச்சி நெடுஞ்சாலையில் சென்று பின்னர்த் தென்கிழக்காக 5 கி.மீ.இல் மணல்வழியே சென்றால் திருத்தலத்தை அடையலாம்.

இறைவர் விகிர்தேசுவரர். இறைவி விகிர்தேசுவரி.
சுந்தரர் VII-42.

265. வெண்காடு : சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 11.

சென்னை-இராமேசுவரம் இரயில் பாதையில் 261 கி.மீ.இல் சீகாழி நிலையமும், நிலையத்திற்குத் தென்கிழக்கில் 11 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் வெண்காட்டீசர், சுவேதாரண்யேசர். இறைவி பிரமவித்யாநாயகி. தீர்த்தம் சோம சூரிய அக்நி தீர்த்தங்கள்.

| | |
|---|---|
| சம்பந்தர் II-48,61; III-15; | 3 |
| அப்பர் V-49, VI-35; | 2 |
| சுந்தரர் VII-6 | 1 |
| | கூடுதல் 6. |

266. வெண்டுறை : (வண்டுறை) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். எண் 112.

சென்னை-இராமேசுவரம் இரயில் பாதையில் 351 கி.மீ.இல் தஞ்சாவூரும், அங்கிருந்து நாகூர் செல்லும் கிளைப்பாதையில் 31 கி.மீ.இல் நீடாமங்கலமும், அங்கிருந்து 13 கி.மீ.இல் மன்னார்குடியும், மன்னார்குடிக்குக் கிழக்கே 10 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் வெண்டுறைநாதர். இறைவி வேல்நெடுங்கண்ணி.
சம்பந்தர் III-61.

267. வெண்ணியூர் : சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 102.

சென்னை-இராமேசுவரம் இரயில் பாதையில் 351 கி.மீ.இல் தஞ்சாவூரும், தஞ்சாவூரிலிருந்து நாகூர் செல்லும் கிளைப்பாதையில் 25 கி.மீ.இல் கோயில்வெண்ணித் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் வெண்ணிக்கரும்பர். இறைவி அழகியநாயகி.
சம்பந்தர் II-14; 1
அப்பர் V-17; VI-59 2
கூடுதல் 3.

268. வெண்ணெய்நல்லூர் : நடுநாட்டுத் தலம். எண் 14.

சென்னை-திருச்சி இரயில் குறுக்குப்பாதை வழியில் 175 கி.மீ.இல் திருவெண்ணெய்நல்லூர்ரோடு என்னும் நிலையம் உண்டு. நிலையத்திலிருந்து $6^1/_2$ கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் தடுத்தாட்கொண்ட நாதர், கிருபாபுரீசர். இறைவி வேற்கண்ணிநாயகி, மங்களாம்பிகை. தீர்த்தம் பெண்ணையாறு.
சுந்தரர் VII-1.

269. வெண்பாக்கம் : (உளம்புதூர்) தொண்டைநாட்டுத் தலம். எண் 17.

சென்னை-இராய்ச்சூர் இரயில் நெடும்பாதையில் 42 கி.மீ.இல் திருவள்ளூர் நிலையம் உள்ளது. நிலையத்திலிருந்து திருத்தலம் 11 கி.மீ.இல் (பூண்டி நீர்த்தேக்கத்திற்கு அருகில்) அமைந்துள்ளது.

இறைவர் ஊன்றீசர். இறைவி மின்னொளியம்மை. தலவிருட்சம் இலந்தைமரம்.
சுந்தரர் VII-89.

270. வேட்களம்: சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். எண் 37.

சென்னை-இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 244 கி.மீ.இல் சிதம்பரம் நிலையமும், அங்கிருந்து கிழக்கில் $3^1/_2$ கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் பாசுபதேசுவரர். இறைவி நல்லநாயகி. தீர்த்தம் சிவகங்கை.
சம்பந்தர் I-39; அப்பர் V-42 கூடுதல் 2.

271. வேட்டக்குடி : சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 49.

சென்னை-இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 281 கி.மீ.இல் மயிலாடுதுறையும், அங்கிருந்து செல்லும் கிளைப்பாதையில் 40 கி.மீ.இல் காரைக்கால் நிலையமும், நிலையத்திற்கு வடகிழக்கில் $9^1/_2$ கி.மீ. தொலைவில் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் திருமேனியழகர். இறைவி சாந்தநாயகி.
சம்பந்தர் III-66.

272. வேதிகுடி : சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 14.

சென்னை-இராமேசுவரம் இரயில் பாதையில் 351 கி.மீ.இல் தஞ்சாவூரும், நிலையத்திற்கு வடக்கே செல்லும் நெடுஞ்சாலையில் 10 கி.மீ.இல் திருக்கண்டியூரும், அதன் தென்கிழக்கே 2½ கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் வேதபுரீசுவரர். இறைவி மங்கையர்க்கரசி.
சம்பந்தர் III-78;
அப்பர் IV-90 கூடுதல் 2.

273. வேள்விக்குடி : சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 23.

சென்னை-இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 290 கி.மீ.இல் குத்தாலம் நிலையம் உண்டு. நிலையத்திற்கு வடகிழக்கில் 5 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் கல்யாணசுந்தரேசுவரர். இறைவி பரிமளசுகந்தநாயகி.
சம்பந்தர் III-90;
சுந்தரர் VII-18,74 கூடுதல் 3.

274. வேற்காடு : தொண்டைநாட்டுத் தலம். எண் 23.

சென்னை-இராய்ச்சூர் இரயில் நெடும்பாதையில் 22 கி.மீ.இல் ஆவடி நிலையம் உள்ளது. நிலையத்திற்குத் தெற்கில் 6 கி.மீ.இல் திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவர் வேற்காட்டுநாதர். இறைவி வேற்கண்ணியம்மை. தீர்த்தம் வேலாயுததீர்த்தம்.
சம்பந்தர் I-57.

275. வைகல்மாடக்கோயில்: சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். எண் 33.

சென்னை-இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 301 கி.மீ.இல் ஆடுதுறை நிலையமும், நிலையத்திற்குத் தெற்கில் 4 கி.மீ.இல் நீலக்குடியும், அங்கிருந்து 5 கி.மீ.இல் திருத்தலமும் அமைந்துள்ளன.

இறைவர் வைகல்நாதேசுவரர். இறைவி கொம்பியல்கோதை.
சம்பந்தர் III-18.

276. வைகாவூர் : சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். எண் 48.

சென்னை-இராமேசுவரம் இரயில் நெடும்பாதையில் 322 கி.மீ.இல் சுந்தரப்பெருமாள்கோயில் நிலையமும், நிலையத்திற்கு வடக்கே 8 கி.மீ. தொலைவில் திருத்தலமும் அமைந்துள்ளன. கும்பகோணத்திலிருந்து பேருந்துவசதி உண்டு.

இறைவர் வில்வவனேசுவரர். இறைவி வளைக்கைநாயகிஅம்மை. தீர்த்தம் எமதீர்த்தம்.
சம்பந்தர் III-71.

# 9. தேவார வைப்புத்தலங்களின் இருப்பிடம் முதலியன

*[தலக்குறிப்புக்களில் சுட்டப்பெறும் எண்கள் (1-34) மேற்கோளாக எடுத்தாண்ட பட்டியல் நூலைக் குறிக்கும், பட்டியல் இப்பகுதியின் இறுதியில் இடம்பெற்றுள்ளது.]*

தேவார வைப்புத்தலங்களின் எண்ணிக்கை பலவகையாகக் கொள்ளப் பட்டுள்ளது. அடைமொழிகள் சில வைப்புத்தலங்களின் பெயர்களாகக் கொள்ளப் பட்டுள்ளன. பாடல் பெற்ற தலங்கள், கோயில்கள் இவற்றின் பரியாயப் பெயர்களை வைப்புத்தலங்களின் பெயராகக் கொண்டு எண்ணியுள்ளதனையும் காண்கிறோம். வைப்புத்தலங்களில் பலவற்றின் இருப்பிடங்கள் கல்வெட்டுத் தொடர்கள், இலக்கியத் தொடர்கள், வழக்காற்றுச் செய்திகள் என்பனவற்றின் துணையால் நிறுவப் பட்டுள்ளன. சான்றோர் பலரும் தேவார வைப்புத்தலங்களின் இருப்பிடம் பற்றி ஆங்காங்கு வரைந்துள்ள செய்திகளை உட்கொண்டு இப்பகுதி வரையப்படுகிறது.

*1. அகத்தீச்சுரம் : தே. 6973. "ஆடகேச்சுரம் அகத்தீச்சுரம்"*

கன்னியாகுமரியிலிருந்து 4.8 கி.மீ. தொலைவில் உள்ள ஊர் இது.[25] இது கல் வெட்டுக்களில் ஆநாங்கூர் அகத்தீச்சுரம் (க.அ. 1926இன் 73-78) என்று வழங்கப் படுகிறது.[28]

நாஞ்சில்நாட்டில் கன்னியாகுமரிக்கு அருகில் இவ்வகத்தீச்சுரம் என்னும் ஊர் காணப்படுகிறது. பிற்காலத்தில் ஆலயத்தின் பெயரே ஊர்ப்பெயர் ஆயிற்று என் பது புலப்படுகிறது. "குமரிமங்கலத்துத் திரு அகத்தீச்சுரம் உடைய மாதேவன்" என்னும் இக்கோயிலிலுள்ள கல்வெட்டுத் தொடரால் குமரிமங்கலம் என்பது பண்டு ஊர்ப்பெயராகவும், அகத்தீச்சுரம் என்பது ஆலயத்தின் பெயராகவும் இருந் தமை பெறப்படும். அக்கல்வெட்டு, மூன்றும் குலோத்துங்க சோழன் அகத்தீச்சுரம் உடைய ஈசனுர்க்கு வழங்கிய நிவந்தம் பற்றிக் குறிப்பிடுகிறது. (திருவாங்கூர் கல் வெட்டுத் தொகுதி I பக்கம் 243,44)[18]

இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள பாண்டியன் சடையவர்மன் ஸ்ரீவல்லபனு டைய இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டினை நோக்க, இது பன்னிரண்டாம் நூற்றாண்டை ஒட்டிக் கற்றளியாக்கப்பட்டிருக்கலாம் என்பது புலனாகிறது.[21]

*2. அக்கீச்சுரம் : தே. 6973. "குக்குடேச்சுர மக்கீச்சுரம்"*

இவ்வூர் ஆழ்வார்குறிச்சிக்கு அண்மையில் உள்ள வன்னிக்கரந்தை என்று வழங் கப்படும் ஊர் என்பர்.[25]

இஃது அக்கீச்சுரம் அன்று; மக்கீச்சுரமே. வீரசிங்காதன புராணத்துள் "மக்கவீச் சுரம்" என்று குறிப்பிடப்படும் தலமே தேவாரத்துள் "மக்கீச்சுரம்" என்று குறிப்பி டப்படும் வைப்புத்தலம் ஆகும் என்பர்.[28]

இக்காலத்தில் அக்நீசுவரர் கோயில் என்று வழங்கப்படும் கஞ்சனூர்ச் சிவாலயம், அக்கினிதேவன் சிவபெருமானை வழிபட்ட தலம் என்பது "அனலோன் போற்றும்

காவலனைக் கஞ்சனூர் ஆண்ட கோவை" என்ற தேவாரத்தொடரால் (7142) போதருவதால், அப்பெயர் பெற்றது. இக்கோயில் கல்வெட்டொன்று இதனை அக்கீச்சுரம் என்று குறிப்பிடுவதால் அக்கீச்சுரம் கும்பகோணத்துக்குக் கிழக்கே 17 கி.மீ. தொலைவில் உள்ளதும் தேவாரத்திருப்பதிகம் பெற்றதுமான கஞ்சனூரே என்பது சிலர் கருத்து.[18] அங்ஙனம் கொள்ளின் இது வைப்புத்தலமாகாது.

"க்ஷ" தமிழில் 'க்க' ஆகும். ஆதலின், அக்ஷீசுவரமே அக்கீசுவரம் ஆயிற்று எனக் கொண்டு, மத்திய பிரதேசத்தில் நருமதை ஆற்றங்கரையில் அமைந்துள்ள அக்ஷீசுவரமே அக்கீச்சுவரம் என்னும் வைப்புத்தலமாகும் என்னும் கருத்துச் சிறக்கும்.

அசோகந்தி : தே. 6963. "ஐயாறு அசோகந்தி ஆமாத்தூரும்"

அயோகந்தி : தே. 6327. "அந்தண் பொழில்புடைசூழ் அயோகந்தி"

இக்காலத்தில் செய்யாத்தமங்கை என்று வழங்கப்படும் சாத்தமங்கை தஞ்சை மாவட்டத்து நன்னிலம் என்ற ஊரிலிருந்து 11 கி.மீ. தொலைவில் உள்ளது. சாத்தமங்கை என்பதன் சுருக்கம் சாந்தை என்பது. தேவாரப்பதிகம் பெற்ற இத்திருத்தலத்தைச் சேக்கிழார் "ஆர்தரு சோலை சூழ்தரு சாந்தை அயவந்தி" என்று குறிப்பிடுகிறார். ஞானசம்பந்தப் பெருமான்,

"கற்றவர் சாத்தமங்கை நகர் கைதொழச் செய்த பாவம்
அற்றவர் நாளும் ஏத்த அயவந்தி அமர்ந்தவனே" தே.3419

என்று பாடியருளினர்.[18] எனவே, சாத்தமங்கை என்பது ஊர்ப்பெயர், அயவந்தி என்பது ஆலயத்தின் பெயர் என்ற செய்தி தெளிவாகிறது. அயவந்தி என்பதன் திரிபுகளே அசோகந்தி, அயோகந்தி என்பன என்பர் ஆய்வாளர்.[28] அசோகந்தி, அயோகந்தி என்பன தேவாரப்பாடல் பெற்ற ஆலயங்கள் ஆதலின், வைப்புத் தலங்கள் ஆகா.

3. அண்ணல்வாயில் : தே. 6972. "கண்ணுதலோன் நண்ணும் இடம் அண்ணல் வாயில்"

புதுக்கோட்டைக்கு மேற்கே 10 கி.மீ. இல் அமைந்துள்ளது, அண்ணல்வாயில். இஃது அன்னவாசல் என வழங்கப்படுகிறது. இதன்பகுதி சித்தன்னவாசல். இவை இரண்டும் பழம்பதிகள். "மலர்ந்த தார் வாள்மாறன் மன் அண்ணல்வாயில்" (பெருந்தொகை 1019) என்னும் பாட்டடியால் இப்பதியின் பெருமை விளங்கும். அண்ணல்வாயிலில் அமைந்த குகைக்கோயில் பழைமை வாய்ந்தது; சிற்ப வேலைப்பாடு உடையது.[18]

4. அத்தங்குடி : "மருவும் அத்தங்குடி தண்திருவண்குடியும்" தே. 1893.
இடம் புலப்படவில்லை.

5. அத்தமயன மலை: தே. 6974. "மேருஉதயம் அத்தம் இந்துசேகரன் உறையும் மலை"
அத்தம(ய)ன மலையாவது சூரியன் மறையும் மலை. இஃது ஒரு வைப்புத்தலமாகக் குறிக்கப்பட்டுள்ளது.

6. அத்தி : தே. 1885. "அண்ணாமலை ஈங்கோயும் அத்தி முத்தாறு அகலா முதுகுன்றம்"
"செயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்துப் பெருநகர் நாட்டு அத்தி அகத்தீசுவரம்உடையார் கோயில் கேரளாந்தக நல்லூர்" (க.அ. 1912இன் 299)[28]

இக்கல்வெட்டுத் தொடரால் அத்தி என்ற வைப்புத்தலம் தொண்டைநாட்டு வெண்குன்றக்கோட்டத்தைச் சேர்ந்தது என்பதும், அது முதல்இராசராசனுடைய விருதுப்பெயர்களுள் ஒன்றால் கேரளாந்தக நல்லூர் என வழங்கப்பட்டது என்பதும் போதரும். இப்பெயர் ஏறத்தாழ 500 ஆண்டுகள் நிலவியது. அகத்தீசுவரம் 'எதிரிலி சோழேச்சுரம்' எனவும் வழங்கப்பட்டது. விஜயநகரப் பெருமன்னனான கிருஷ்ண தேவராயன் காலம்தொட்டு கிருஷ்ணராயபுரம் என்னும் பெயரால் அத்தி வழங்கப் பட்டுவருகிறது.[18]

7. *அத்தீச்சுரம் : தே. 6973. "அயனீச்சுரம் அத்தீச்சுரம்"*

நெல்லைநாட்டில் பொதியமலைத் தொடரின் அடிவாரத்தில் சிவசைலம் என்ற பெயரோடு வழங்கிவரும் சிற்றூர் இது.[18] இஃது ஆழ்வார்குறிச்சி புகைவண்டி நிலையத்திலிருந்து 4.8 கி.மீ. தொலைவில் உள்ளது.[25]

*அமுதனூர் : தே. 7348. "அமுதன்ஊர் தண்டந்தோட்டம் தண்டங்குறை"*

அமுதன்ஊர் என்பது தண்டந்தோட்டம் முதலியவற்றின் அடைமொழியாக இருக்கலாம்.

8. *அயனீச்சுரம் : தே. 6973. "அகத்தீச்சுரம் அயனீச்சுரம்"*

வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள வழுவூரில் அமைந்த பழைமையான ஆலயத் தின் பெயரே அயனீச்சுரம் ஆகும். மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் திரு அயனீச் சுரம் கோயிலில் பழுது பார்ப்பதற்காகவும் பூசனை நிகழ்த்துவதற்காகவும் சம்புவராயர் என்பார் தேவதானமாக அளித்த நிவந்தம் பற்றிய கல்வெட்டு இவ்வாலயத்தில் காணப்படுகிறது. (க.அ. 1908இன் 158) ஆகவே, அயனீச்சுரம் வழுவூர்த் திருக் கோயிலே ஆகும்.[18]

அம்பாசமுத்திரத்துக்கு அருகில் 1.6 கி.மீ. இல் உள்ள பிரமதேசமே அயனீச்சுரம் எனவும், திருப்பனந்தாளில் பண்டு இருந்த திருக்கோயில் ஒன்றன் பெயரே அசனீச் சுரம் எனவும் கூறுவாரும் உளர்.[28]

9. *அரணநல்லூர் : தே. 6324. "உறையூர் நறையூர் அரணநல்லூர்"*

இருப்பிடம் புலப்படவில்லை.

10. *அரிச்சந்திரம் : தே. 6772. "அரிச்சந்திரத்துள்ளார் அம்பருள்ளார்"*

இவ்வூர் பழையாறையில் சோழமாளிகைக்குக் கிழக்கே பட்டீச்சுரத்துக்கு வடதிசை யில் அமைந்துள்ளது. இதன் கீழ் உள்ள பாற்குளம் திருநாவுக்கரசரால் "பழையாறும் பாற்குளமும்" (தே. 6381) என்று குறிப்பிடப்பட்ட தீர்த்தம் ஆகும் என்பர்.[28]

பெண்ணையாற்றினின்றும் பிரிந்து வேதாரணியத்துறையில் கடலோடு கலக்கும் ஒரு கிளைநதி அரிச்சந்திராநதி என வழங்கப்படுகிறது. தஞ்சைமாவட்டத்துத் திரு நாட்டியத்தான்குடிக்கு வடமேற்கில் 1.6 கி.மீ. இல் கற்சாலை வழியில் சந்திராநதியின் தென்கரையில் உள்ள வைப்புத்தலம் இஃது என்பாரும் உளர்.[23]

11. *அளப்பூர் :*

| | |
|---|---|
| "ஆரூருள்ளார் அளப்பூரார்" | தே. 6765 |
| "அச்சிறுபாக்கம் அளப்பூர் அம்பர்" | தே. 6958 |
| "அளப்பூர் ஓமாம்புலியூர் ஒற்றியூரும்" | தே. 6969 |
| "ஆரூர் அத்தா ஐயாற்று அமுதே அளப்பூர் அம்மானே" | தே. 7716 |

என இவ்வைப்புத்தலம் தேவாரப்பதிகங்களில் நான்கு இடங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இப்பொழுது தரங்கம்பாடி புகைவண்டிநிலையம் உள்ள நிலப்பகுதியே பண்டு அளப்பூர் என்று வழங்கப்பட்ட வைப்புத்தலம் ஆகும். [28] இது தஞ்சைமாவட்டத்து மாயூரவட்டத்தில் மாயூரத்தின் கிழக்கே 30.4 கி.மீ.இல் உள்ள கடற்கரை ஊர்; பண்டு துறைமுகமாக விளங்கியது. கி.பி. 1620இல் டேனியர்கள் கட்டிய கோட்டை கி.பி. 1845இல் ஆங்கிலேயர் வசப்பட்டது. திரிபுவன சக்கரவர்த்தி குலசேகர தேவர் காலதததாகிய 15 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்றில் (தெ.இ.க.தொ.IV எண் 399) இவ்வூர் "சடங்கன்பாடியான குலசேகரப் பட்டினம்" என்று குறிக்கப் பட்டுள்ளது. சடங்கன்பாடி என்பது மருவித் திரிந்த பெயர்தான் இக்காலத்துத் தரங்கன்பாடி என வழங்கப்படுகிறது.[7]

*12. அறப்பள்ளி : "அறப்பள்ளி அகத்தியான்பள்ளி"* தே. 1887
*"கொல்லிக் குளிர் அறைப்பள்ளி"* தே. 6955
*"கள்ளார் கமழ் கொல்லி அறைப்பள்ளி"* தே. 6966

அறப்பள்ளி எனவும் அறைப்பள்ளி எனவும் வழங்கும் திருத்தலம் கொங்குநாட்டின் கிழக்கு எல்லையாகிய கொல்லிமலையின்கண் உள்ளதொரு வைப்புத்தலம். இது கொல்லிமலையின் தாழ்வரையினின்றும் மலைமீது 10 கி.மீ. இல் அமைந்துள்ளது. தலத்தின் முன் மலையருவி ஆறாக ஓடுகிறது. இது பல மலைவளங்களும் செறிந்த நல்லிடம். இங்குள்ள சிவலிங்கம் மிகவும் ஒளியுடையது.[16] இத்திருத்தலம் சேலம் மாவட்டத்து நாமக்கல்வட்டத்து வளப்பூர்நாடு என்ற ஊரில் உள்ள சாசனத்தில் நன்கு போற்றப்பட்டுள்ளது.[18] இறைவன் பெயர் அறப்பள்ளியீசுவரர் என்பது. இறைவிபெயர் தாயம்மாள் என்பது. இங்கு முருகன் திருக்கோயிலும் உண்டு. நாமக்கல் லிலிருந்து தென்கிழக்காக இத்திருத்தலத்துக்குப் பேருந்தில் செல்லலாம். இத்திருத் தலம் பற்றிய அறப்பளீசுரசதகம் பிரசித்தமானது.

*13. ஆடகேச்சுரம் : தே. 6973. "ஆடகேச்சுரம் அகத்தீச்சுரம் அயனீச்சுரம்"*

திருவாரூரில் உள்ள மூலட்டானம் என்னும் பூங்கோயிலின் உட்கோயிலாக ஆடகேச்சுரம் அமைந்துள்ளது. புற்றிடங்கொண்டார் கோயிலுக்குத் தென்கிழக்கே "நாக பிலம்" என்று சொல்லப்படும் ஆலயமே ஆடகேச்சுரம் என்பர். அக்கோயில் ஒரு கல்லால் மூடப்பட்டிருக்கிறது.

"இப்பெரும் பிலத்தில் அநாதியாய் உமையோடு
இலங்கொளி ஆடகேச் சுரப்பேர்
ஒப்பிலா மூர்த்தி உலகெலாம் உய்ய
ஊழிதோ றூழிவீற் றிருக்கும்"

என்று திருவாரூர்ப் புராணம் கூறும். எனவே ஆடகேச்சுரம் என்பது திருவாரூர்ப் பூங்கோயிலில் உள்ள நாகபிலமே ஆகும்.

கோதாவரியின் தென்கரையில் உள்ள ஹாடகேசுவரம் என்ற தலமே ஆடகேசு-வரம் என்ற வைப்புத்தலம் ஆகும் என்ற கருத்தும் நிலவுகிறது.[18]

*14. ஆழியூர் : "ஆழி அகத்தியான் பள்ளி அண்ணாமலை" தே. 6961.*
*"நெய்த்தானம் திருமலை ஆழியூர்" தே. 7353.*

தஞ்சை-நாகப்பட்டினம் இருப்புப்பாதை வழியில் கீழ்வேளூருக்கும் சிக்கலுக்கும் இடையில் உள்ள வைப்புத்தலம் ஆகும்.[28]

**15.** ஆறை : தே. 1888. "ஆறை வடமாகறல் அம்பர் ஐயாறு"

ஆறை என்பது ஆற்றூர் என்பதன் மரூஉ என்பர்.[28] ஆற்றூர் என்ற பெயரில் பண்டைய தமிழகத்தில் ஊர்கள் பல இருந்தனவாக அறிகிறோம்.

மயிலாடுதுறைக்கு அண்மையில் ஆற்றூர் என்னும் பழம்பதியுண்டு. அதற்கு மந்தாரவனம் என்ற மறுபெயரும் உண்டு.

"ஓங்கு மந்தார வனத்து மேவும்
உத்தமனே! இஃதொன்று கேள்நீ"

எனவரும் ஆற்றூர்ப்புராணப் பாடலடியால் ஆற்றூரில் இறைவன்ஆலயம் மந்தார வனம் என்று பெயர் பெற்றதாக அறிகிறோம்.[18] இம்மந்தாரம் என்ற பெயர் "வக்கரை மந்தாரம் வாரணாசி" தே. 6960 இல் காணப்படுவதால் ஆறை என்பதனை மயிலாடு துறை அடுத்த ஆற்றூராகக் கொள்ளுதல் பொருந்தாது.

தென்பெண்ணையாற்றங்கரையில் திருக்கோவலூர்நாட்டில் உள்ள ஆற்றூரில் வாழ்ந்த ஏகம்பவாணன் என்ற வள்ளல் "ஆறையர்கோன் வாணன்" என்று புலவர் களால் போற்றப்பட்டவன். எனவே ஏகம்பவாணன் ஆண்ட ஆற்றூர் ஆறை என் னும் வைப்புத்தலமாக இருக்கக்கூடும்.[19]

தென்பாண்டிநாட்டின் பழைய துறைமுகமான கொற்கையை அடுத்துத் தாமிர பரணியாற்றின் அக்கரையில் ஓர் ஆற்றூர் உண்டு. அது மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஆட்சிக்காலத்தில் சேந்தமங்கலம் எனவும், அவனிபசேகரமங்கலம் எனவும் வழங்கப்பட்டது. அவ்வூரில் வாழ்ந்த ஆற்றூர்ச் சேனைவரையன் அவ்வூர்ச் சோமநாத சுவாமிக்கு நிவந்தம் விடுத்த செய்தி க.அ. 1929-30 இன் 465 ஆல் புலனாகிறது.[11] இந்த ஆற்றூரும் ஆறை என்னும் வைப்புத்தலம் ஆகக்கூடும்.

திருச்செந்தூர் நாட்டிலும் ஓர் ஆற்றூர் உண்டு. அது "தென்குட நாட்டு ஆறை" என்று கல்வெட்டில் (க.அ. 1929-30 இன் 438) குறிக்கப்பட்டுள்ளது. இந்த ஆற்றூரும் ஆறை என்ற வைப்புத்தலம் ஆகலாம்.[17]

**16.** ஆறை மேற்றளி : தே. 7586. "அங்கம் ஓதிஓர் ஆறை மேற்றளியினின்றும் போந்து"

ஆறை என்பது பழையாறை என்பதன் முதற்குறை. கும்பகோணத்திற்கு மேற்கே யுள்ள சுவாமிமலை இருப்புப்பாதை நிலையத்திற்குத் தெற்கே 1.6 கி.மீ. இல் திருமேற்றளி என்ற கோயில் உள்ளது.[28] பழையாறைப்பதியில் மேற்றளி என்ற சிவாலயமும் உண்டு[18] என்பதனை, "திருவாறை மேற்றளியில் திகழ்ந்திருந்த செந்தீயின் உருவாளன்" (ஞானசம். 390) என்ற சேக்கிழார் பாடலடியால் உணரலாம். பழையாறையின் வடதளி மேற்றளி என்ற இரண்டு சிவாலயங்களும், அடுத்த முழையூரில் ஒரு சிவாலயமும் உள்ளன.

வடதளியில் காமதேனுவின் புத்திரி விமலி பூசித்ததால் அந்த ஆலயத்தின் இறைவிபெயர் விமலநாயகி. மேற்றளியில் காமதேனுவின் மற்றொரு புதல்வி சபளி பூசித்ததால் அங்குள்ள இறைவிபெயர் சபளநாயகி. காமதேனுவின் மற்றொரு புதல்வி நந்தினி பூசித்த ஆலயம் அருகில் உள்ள முழையூர் மாடக்கோயில்.[23]

திருமேற்றளி உள்ள பகுதி இப்பொழுது திருமத்தடி எனவும் திரிந்து வழங்கும் சிற்றூராகக் காட்சி வழங்குகிறது.[16] பழையாறை அமர்நீதி நாயனாரின் அவதாரத் தலம்.

**17.** ஆன்பட்டி : தே. 6327. "ஆக்கூரும் ஆவூரும் ஆன்பட்டியும்"

கோவைப் பெருநகருக்கு அண்மையில் அதன் பகுதியாகக் கொள்ளப்பட்டுள்ள பேரூர் என்பதுவே ஆன்பட்டி ஆகும். சுந்தரர் பேரூர்ப்பெருமானை,

"பேரூர் உறைவாய் பட்டிப்பெருமான் பிறவா நெறியானே" தே. 7716

"ஆரூரன் தம்பிரான் ஆரூரன் மீகொங்கில் அணிகாஞ்சி வாஅய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்றாம் அன்றே" தே. 8157
என்று போற்றுவதால், கொங்குநாட்டுக் காஞ்சிநதிக்கரையில் (நொய்யலாறு) அமைந்துள்ள பேரூர் ஆன்பட்டி என்ற பெயரும் உடையதாதல் பெறப்படும்.[18] குடகத் தில்லையம்பலம் தே. 7330 என்று போற்றப்படும் மேலைச்சிதம்பரமும் இவ்வூரே.[25]

18. இடவை : தே. 6957. "இன்னம்பர் ஏர்இடவை ஏமப்பேறூர்"

திருப்பனந்தாளுக்கு அருகில் உள்ள இடவை என்ற ஊரைப் பற்றியும், அதற்குப் பாயும் இடவைவாய்க்கால் பற்றியும் "இராசேந்திரசிங்கவளநாட்டு மண்ணிநாட்டு இடவை"[28] எனவும் "இடவையாகிய பாண்டியனை வெந்கண்ட சதுப்பேதிமங்கலம்" எனவும் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இங்கு முதல்ஆதித்தன் பாண்டியனோடு பொருது அவனைப் புறங்காட்டி ஓடச்செய்தான்.

திருப்பனந்தாளிலிருந்து ஆடுதுறைக்குப் போகும் பெருவழியில் இடையார்நல் லூர் என்ற ஊர் உள்ளது. அதனை இடவையாகக் கொள்ளமுடியாது. முதல்இராச ராசனுடைய கல்வெட்டு ஒன்று இடவை வேறு, இடையார்நல்லூர் வேறு என்று உணர்த்துகிறது. சகம் 1369 இல் (கி.பி. 1447) விசயநகர வேந்தர் மல்லிகார்ச்சுன தேவர் காலத்துப் பொறிக்கப்பட்ட திருப்பனந்தாள் கோயில் கல்வெட்டு இடவை என்ற ஊரைச் சேர்ந்த காராம்பிச்செட்டு நாராயணபட்டர் பெயரைக் குறிப்பிடு கிறது.[16] இடவைத் திருவரங்கதாசர் என்பவர் பெயரைக் கல்வெட்டு ஒன்று (தெ.இ.க.தொ. IV-149) குறிப்பிடுகிறது. 13 ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் இக்கல்வெட்டில் இடவை என்ற ஊர்ப்பெயரைக் காண்கிறோம்.[11]

'இராசேந்திரசிங்கவளநாட்டு மண்ணிநாட்டு இடவை' என்ற தொடர் திண்டுக்-கல்லுக்கு அண்மையிலுள்ள இராமநாதபுரம் கல்வெட்டிலும் காணப்படுகிறது. (க.அ. 1905 இன் 690)

இவ்வாறாக இடவை திருப்பனந்தாளுக்கு அண்மையில் அமைந்திருந்ததொரு வைப்புத்தலம் என்று கொள்ளலாம்.

19. இடைக்குளம் : தே. 6975. "தளிக்குளமும் நல் இடைக்குளமும்"

தஞ்சைமாவட்டத்துக் கும்பகோணம்வட்டத்து ஆடுதுறை இருப்புப்பாதை நிலையத்துக்கு அண்மையில் உள்ள மருத்துவக்குடி என்ற சிற்றூரில் உள்ள சிவால யத்துக் கல்வெட்டொன்று அப்பெருமானை "உய்யக்கொண்டார் வளநாட்டுத் திறை யூர் நாட்டு..............திரு இடைக்குளமுடையார்" (க.அ. 1907 இன் 387) என்று குறிப்பிடுவதால், இந்நாளில் மருத்துவக்குடி என்று வழங்கும் ஊரே திருஇடைக்-குளம் என்னும் வைப்புத்தலமாகும் என்று கொள்ளலாம்.[2]

20. இடைத்தானம் : தே. 6325. "எள்ளும் படையான் இடைத்தானமும்"

இருப்பிடம் புலப்படவில்லை.

21. இடைப்பள்ளி : தே. 1887. "வெள்ளச் சடையான் விரும்பும் இடைப்பள்ளி"

இருப்பிடம் புலப்படவில்லை.

22. இராப்பட்டீச்சுரம் : தே. 6515. "இராப்பட்டீச்சுரம் கடந்து மணக்கால் புக்கு"

கும்பகோணம்-திருவாரூர்ப் பெருவழியில் பெருவேளூருக்குத் தெற்கே கரவீரத் திற்கு வடக்காக அமைந்தது இந்த வைப்புத்தலம் என்ப.[28]

23. இரும்புதல் : தே. 6768. "இரும்புதலார் இரும்பூளை உள்ளார்"

தஞ்சைமாவட்டத்துப் பாபநாசம்வட்டத்தில் உள்ள இரும்புதலை என்ற ஊரே இரும்புதல் என்ற வைப்புத்தலமாகும்.[28] பண்டு, இரும்புதல் என்பது ஆலயத்தின் பெயராகவும், மனுகுல சூளாமணி சதுர்வேதிமங்கலம் என்பது ஊர்ப்பெயராகவும் இருந்த செய்தி "நித்தாவிநோத வளநாட்டு ஆவூர்க்கூற்றத்துப் பிரமதேயம் இரும்பு-தலாகிய மனுகுலசூளாமணி சதுர்வேதிமங்கலத்து இரும்புதலுடைய மகாதேவர்" என்ற அவ்வூர்ச் சிவாலயத்தில் காணப்படும் கல்வெட்டுத் தொடரால் வலியுறும். (க.அ. 1910 இன் 32 முதலியன.) இவ்வூர் பாபநாசத்திலிருந்து சாலியமங்கலம் போகும் பெருவழியில் உள்ளது.[18]

24. இளங்கோயில் : தே. 6970. "மறையவர்கள் வழிபட்டேத்தும் இளங்கோயில்"

ஆலயங்களுக்குப் புதுப்பிக்கும் திருப்பணி தொடங்கும்முன் கருவறையிலுள்ள இறைவனுக்குப் பூசனை முட்டாமல் நிகழ அப்பெருமானைப் புதிதாக அமைக்கப்பட்ட சிறுகோயில் ஒன்றில் தாற்காலிகமாக எழுந்தருளச் செய்வர். இவ்வாறு இடைக்கால வழிபாட்டிற்கு அமைந்த கோயில் இளங்கோயில் எனவும் பாலாலயம் எனவும் வழங்கப்படும். இவ்வாறு அமைந்த இளங்கோயில்களில் சில தேவாரஆசி-ரியர்களால் பாடப்பெற்றமையின் அவை நிலையான தனிக்கோயில்களாகவே இன்றும் காட்சி வழங்குகின்றன. மீயச்சூர் இளங்கோயில் (தே. 5343-52), கடம்பூர் இளங்கோயில் என்பன இவ்வகையைச் சார்ந்தன.[28]

"திருவேங்கடக்கோட்டத்துக் கடவூர்நாட்டுத் திருச்சொகினூரில் உள்ள இளங் கோயில் பெருமான்" (க.அ. 1904 இன் 262) என்ற கல்வெட்டுத்தொடரால் திருச்சொகினூர் என்னும் திருச்சானூரிலும் இளங்கோயில் இருந்த செய்தி புலனாகிறது.[18]

ஆகவே இளங்கோயில் என்ற தொடர் தாற்காலிகமாக எடுக்கப்பெற்றுப் பின் நிலையான ஆலயங்களாகவே பெருங்கோயில்களின் உள்ளே இருந்துவரும் பாலாலயங்களைக் குறிப்பதாகும்.

25. இளமர் : தே. 6958. "எச்சில் இளமர் ஏமநல்லூர்"

எசசில் இளமர் என்ற இருபெயர்களையும் ஒன்றாக்கி ஒரே வைப்புத்தலத்தின் பெயராகக் கொள்வர்.

இருப்பிடம் புலப்படவில்லை.

26. இளையான்குடி : தே. 7628. "இளையான்தன்குடிமாறன் அடியார்க்கும் அடியேன்"

இளையான்குடி என்ற ஊர் தஞ்சைமாவட்டத்தில் திருநள்ளாற்றுக்கு மேற்கே 3.2 கி.மீ. பேருந்துசாலை வழியே சென்றால் சாலைக்கு வடக்கில் ஒரு கி.மீ.இல் அடையப்படும் பத்தகுடி இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 1.2 கி.மீ. இல் உள்ளது. இவ்வூருக்கு மட்சாலை வசதியுண்டு. இவ்வூரிலுள்ள பழைமையான சிவாலயத்தில் இளையான்குடிமாறனாரின் கற்சிலை இருக்கிறது. பெரியபுராணம் குறிப்பிடும் நாற்றங் கால் கோயிலுக்குத் தெற்கில் உள்ளது. இதனை முளைவாரிக்குட்டை எனவும், முளை வாரி நாற்றங்கால் எனவும் வழங்குகின்றனர். சோழமண்டலசதகமும் இளையான் குடி சோழநாட்டில் உள்ளதாகவே குறிப்பிடுகிறது. சேக்கிழாரும் மாறனார் "அம் பொன் நீடிய அம்பலத்தினில் ஆடுவார் அடிசூடுவார்" என்று குறிப்பிடுகிறார்.

சிலர் இராமநாதபுரம்மாவட்டம் பரமக்குடிக்கு வடகிழக்கில் 11.2 கி.மீ.இல் இளையான்குடி என்ற பெயரில் அமைந்திருக்கும் ஊரே மாறனார் அவதரித்த இளையான்குடியாகும் என்பர். இவ்வூரில் 'முளைவாரி அமுதளித்த நாற்றங்கால்' என்ற பெயரால் ஒரு சர்வமான்ய நிலம் வழங்கப்பெறுகிறது. இவ்வூரில் உள்ள பழைய சிவாலயத்தில் முளைவாரி அமுதளித்த திருநாள் நடந்துவந்தது என்றும் கூறுகிறார்கள்.[23]

இவ்வூரில் மாறனாரின் திருக்குடிசை, வீட்டுத்தோப்பு, முளைவாரி அமுதளித்த

நாற்றங்கால் என்ற நிலம், கீரை பறித்த கொல்லை ஆகியவை உள்ளன.[3] இவ்விரண்டு ஊர்களுள் எது வைப்புத்தலம் என்று உறுதியாகக் கூற இயலவில்லை.

இறைக்காடு : தே. *7715*. "மாகோணத்தானே இறைக்காட்டானே எங்கட்குன்னை" "இறைக்காட்டாயே எங்கட்கு உன்னை" என்று பாடம் கொண்டு, "எங்களுக்கு உன்திருமேனி அழகினைச் சிறிதேனும் புலப்படுத்தாய்" என்று பொருள் கொள்ளுமிடத்து இறைக்காடு என்று ஒரு தனித்தலம் கொள்ள வேண்டியதில்லை என்ப.[28]

*27*. இறையான்சேரி : தே. *6958*. "இலம்பையங் கோட்டூர் இறையான்சேரி" உய்யக்கொண்டார் வளநாட்டைச் சேர்ந்ததாகக் கூறப்படும் இறையான்சேரி திருத்தருப்பூண்டியின் அண்மையில் இருக்கும் இறைவன்சேரி என்ற ஊராக இருக்கலாம். (தெ.இ.க.தொ. III-45) காஞ்சிபுரத்திற்கு அண்மையிலும் இப்பெயர் உடைய தோர் ஊர் உண்டு என்ப.[32]

*28*. ஈசனூர் : தே. *7552*. "ஈசனூர் எய்து அம்மான்இடம் இடையாறு"
இவ்வூர் தஞ்சைமாவட்டத்தில் திருவாரூருக்குத் தென்கிழக்கில் *24* கி.மீ.இல் உள்ள திருவாய்மூருக்கு அண்மையில் உள்ள ஊர் என்ப.[28]

*29*. உஞ்சேனை மாகாளம் : "உஞ்சேனை மாகாளம்" தே. *1892*
"உஞ்சேனை மாகாளம்" தே. *6962*

இஃது உச்சயினி என்னும் பெரும்புகழ் படைத்த வடநாட்டுத்தலம்; தேவார வைப்புத்தலங்களுள் ஒன்று.[28] காளிதேவி பூசித்த பதியாதலின் மாகாளம் எனப் பட்டது. இது விக்கிரமாதித்தனது தலைநகரம் என்ற கதை பிரசித்தமானது.[23] இஃது இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் உள்ளது; அகமதாபாத் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து *320* கி.மீ. கிழக்கில் உள்ளது; பெருங்கதை முதலிய தமிழ்க் காப்பியங்களில் இடம் பெற்றது. இந்நகரின் அணிமையில் இருந்த மாகாளவனத்தில் பண்டு ஒரு காளிகோயில் இருந்தது. உச்சையினி மாகாளம் என்னும் சிவாலயம் இன்றும் இருக்கிறது.[5] அம்பர்மாகாளம், இரும்பைமாகாளம் முதலிய கோயில்கள் தேவாரப் பதிகங்கள் பெற்றவை.

உண்ணீர் : தே. *6324*. "உண்ணீரார் ஏடகமும்"
உண்ணீர் ஆர் என்ற தொடரை ஏடகத்துக்கு அடைமொழியாகக் கொள்ளுதல் தக்கது.[28] உண்ணீர் என்ற வைப்புத்தலம் ஒன்று கொள்ளல் வேண்டா.

*30*. உதயமலை : தே. *6974*. "பொதியின்மலை மேரு உதயம் அத்தம்"

ஞாயிறு தோன்றும் மலை. இதுவும் வைப்புத்தலங்களில் ஒன்றாகக் குறிக்கப்படுகிறது.[28] உதயமலை என்பதை உதயகிரி என்று கொண்டால், நெல்லூர்மாவட்டத்தில் உள்ள உதயகிரி என்ற ஊரைக் கொள்ளலாம்.[27] ஒரிசாவில் கட்டக் நகரை அடுத்து உதயகிரி, கண்டகிரி என இரண்டு மலைகள் உள்ளன. இவற்றுள் குப்தர்காலக் குடை-வரைகோயில்கள் உள்ளன.

தாராபுரம்-காங்கேயம் பேருந்துவழியில் *16* கி.மீ.இல் உள்ள ஊதியூர் பண்டு ஊதிமலை என வழங்கப்பட்டது. இங்கு மலைமீது முருகன்கோயிலும், கீழே கைலாசநாதர்கோயிலும் உள்ளன. ஊதிமலை என்பது உதயமலை என்பதன் திரிபு ஆகலாம்.[1]

மதுரையிலிருந்து வரிச்சியூர் *10.8* கி.மீ.இல் உள்ளது. இதற்கு அருகில் உள்ள மலை உதயகிரி என்று வழங்கப்படுகிறது. இதனையே உதயமலை என்ற வைப்புத்தலமாகக் கோடலும் ஆம்.[6]

*31. உருத்திரகோடி : தே. 6962. "ஒத்தூர் உருத்திரகோடி மறைக்காட்டுள்ளும்"*
இது கோடி உருத்திரர் வழிபட்ட தலம்; காஞ்சியிலும் கழுக்குன்றத்திலும் உள்ளது என்ப. கழுக்குன்றத்தில் சங்குகோடிதீர்த்தத் தென்கிழக்குக் கரையில் உருத்திர கோடீச்சுரம் என்ற வைப்புத்தலம் உள்ளது என்பர் பலர்.[18]

*32. ஊற்றத்தூர் : "உறையூர் கடல் ஒற்றியூர் ஊற்றத்தூர்" தே. 6964*
*"உறையூரும் ஓத்தூரும் ஊற்றத்தூரும்" தே. 6969*

ஊற்றத்தூர் திருச்சிமாவட்டத்துப் பெரம்பலூர்வட்டத்தில் உள்ள வைப்புத்தலம் ஆகும். இறைவன் பெயர் தொகுமாமணி நாயகர் என்று கல்வெட்டுக்களில் காணப் படுகிறது. ஊற்றத்தூர் ஊறை என மருவி வழங்குகின்றது. இதனைத் தலைநகராகக் கொண்டநாடு ஊறைநாடு எனப்பட்டது. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர் களால் இவ்வூருக்குப் பிரபந்தம் பாடப்பட்டது என்று கூறுப.[18]

*எங்களூர் : தே. 7550. "எங்களூர் எய்து அமரன் இடையாறு இடைமருதே"*
அடியார்களாகிய எங்களுக்கு உரிமை உடைய ஊர் என்று, வைப்புத்தலமாகக் கொள்ளாமல், குறிப்பிடப்பட்ட ஊர்களுக்கு அடைமொழியாகக் கொள்ளலாம்.[28]

*33. எச்சில் இளமர் : தே. 6958. "எச்சில் இளமர் ஏம நல்லூர்"*
எச்சில், இளமர் என்பன இரண்டு வைப்புத்தலங்கள் என்பார் சிலர். எச்சில்-இளமர் என்பது ஒரே வைப்புத்தலத்தின் பெயர் என்பர் ஏனையோர். திருச்சியிலிருந்து 16 கி.மீ.இல் உள்ள மண்ணச்சநல்லூரே இவ்வைப்புத்தலமாகும் என்பர் திரு C.K. சுப்பிர மணிய முதலியார்.[23]

*34. எழுமூர் : தே. 6959. "இடும்பாவனம் எழுமூர் ஏழூர் தோழூர்"*
எழுமூர் இப்பொழுது சென்னையில் இருப்புப்பாதை நிலையமாக விளங்கும்[28] எழும்பூர்ப்பகுதியே. இங்கிருந்த பழைய சிவாலயங்கள் சிதைந்தனபோலும். சென்னை மாவட்டம் தென்சென்னைவட்டம் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் "..... புலி யூர்க் கோட்டத்தில் எழுமூர்நாட்டில் திருவல்லிக்கேணி தெள்ளியசிங்கப்பெருமாள்" என்ற கல்வெட்டுத்தொடர் குலசேகரபாண்டியனின் 49ஆம் ஆண்டில் பொறிக்கப் பட்டுள்ளது.

"செயங்கொண்டசோழமண்டலத்தில் புலியூர்க்கோட்டத்தில் எழுமூர்நாட்டில் திருவல்லிக்கேணி தெள்ளியசிங்கப்பெருமாள்' என்ற 16 ஆம் நூற்றுண்டினதாகக் கருதப்படும் கல்வெட்டு ஒன்றும் காணப்படுகிறது. (சென்னை மாநகர்க் கல். 1967/81 B-1967/79) இக்கல்வெட்டுக்களால் எழுமூர் என்ற வைப்புத்தலம் சென்னையின் பகுதியாகிய எழும்பூர் என்பது புலனுகிறது.

தஞ்சைமாவட்டம் திருத்தருப்பூண்டிவட்டம் அகத்தியான்பள்ளி அகத்தீசுவரர் கோயிலில் "இந்நாட்டு மேலைவகைநாட்டு எழுமூரில் எழுமூர் கிழவன் அரையன் போயன் விழுப்பரையன்" என்று காணப்படும் கல்வெட்டுத்தொடரில் எழுமூர் சுட்டப்பட்டுள்ளது.[22] வைப்புத்தலமாகிய எழுமூர் இவ்விரண்டு எழுமூரிலும் யாதாக இருக்கலாம் என்பது ஆராய்தற்குரியது.

*35. ஏமகூடமலை : "இடைத்தானமும் ஏயீச்சுரமும் நல்ஏமம் கூடல்" தே. 6325*
*"மகேந்திரமாமலை நீலம் ஏமகூடம்" தே. 6974*

புராணங்களில் கூறப்படும் எட்டுமலைகளுள் ஒன்று. இது மேருவின் தெற்கே இமயத்திற்கு அப்பால் 1000 யோசனை தூரத்தில் உள்ளது என்று புராணம் கூறும்.[5] முருகப்பெருமான் சூரனேடு போர்புரியத் திருச்செந்தூரினின்றும் போந்து இலங்-

கையை நீங்கி வீரமகேந்திரபுரம் என்னும் சூரனுடைய கோநகர்க்குப் போகும்முன் பாடிவீடு அமைத்துத் தங்கிய இடம் ஏமகூடம் எனப் பெயர் பெற்றது என்னும் கந்த புராணம். "ஓர் கோநகர் இயற்றியே, நாடும் ஏமகூடம் என்று நாமம் ஒன்று நாட்டி ஞன்" (கந்த. ஏமகூடம்)[33] என்ற பாடல் அடிகளைக் காண்க. ஏமகூடமே கதிர்காமம் என்று வழங்கப்படும் தலம் என்ப. செந்திலைப் போலவே இங்கும் முருகப்பெருமான் சிவபெருமானை வழிபட்டமையின் இது சிவத்தலமாகித் தேவார வைப்புத்தல மாயிற்று.[23]

**36. ஏமநல்லூர் : தே. 6958. "எச்சில் இளமர் ஏமநல்லூர்"**

மண்ணிநாட்டு ஏமநல்லூராகிய திரைலோக்கிய மாதேவி சதுர்வேதிமங்கலம்" (தெ.இ.க.தொ. II-324, 336) என்ற கல்வெட்டுத் தொடரால் முதல்இராசராசன் காலத்தில் அவன் தேவிமாருள் ஒருத்தியின் பெயரால் ஏமநல்லூர் திரைலோக்கிய மாதேவி சதுர்வேதிமங்கலம் என்று பெயரிடப்பட்டு விளங்கியமை போதரும்.[18]

தஞ்சைமாவட்டம் கும்பகோணவட்டம் திருப்பனந்தாளுக்கு அண்மையில் உள்ள திரைலோக்கி என்ற ஊரின் கீழ்ப்புறம் அமைந்துள்ள சிவன்கோயிலில் காணப்படும் பழைய கல்வெட்டு ஒன்று "இராஜேந்திரசிம்மவளநாட்டு மண்ணி நாட்டுத் திரைலோக்கியமாதேவி சதுர்வேதிமங்கலம்" என்று அவ்வூரைக் குறிப் பிடுகிறது.[15]

இவ்விரண்டு கல்வெட்டுத் தொடர்களாலும் ஏமநல்லூர் என்னும் வைப்புத்தலம் இக்காலத்துத் திருப்பனந்தாளை அடுத்து அமைந்துள்ள திரைலோக்கி என்ற சிற்றூரே என்று உறுதி செய்யலாம்.

**37. ஏமப்பேறூர் : தே. 6957. "இன்னம்பர் ஏர்இடவை ஏமப்பேறூர்"**

தென்ஆர்க்காட்டுமாவட்டத்தில் திருவதிகைக்கு அருகில் உள்ள ஏமப்பேர் என்ற ஊரே ஏமப்பேறூர் என்ற வைப்புத்தலமாகும். அவ்வூரில் உள்ள சிவாலயம் ஆலந்துறை என்ற பெயருடன் முதல்இராசராசன் முதலிய மன்னர் பலருடைய கல்வெட்டுக்கள் பொறிக்கப்பெற்ற பழைமையுடையது. நமிநந்திநாயனார் திருஅவ தாரத் தலமாகிய ஏமப்பேறூர் திருவாரூருக்கு அண்மையில் உள்ள பழம்பதியா கும்.[18] வைப்புத்தலமாகிய ஏமப்பேறூர் இவ்விரண்டனுள் ஒன்றாகும்.

**38. ஏயீச்சுரம் : தே. 6325. "எள்ளும் படையான் இடைத்தானமும் ஏயீச்சுரமும்"**

இருப்பிடம் புலப்படவில்லை.

**39. ஏர் :** "இரும்பூளை உள்ளார் ஏரார் இன்னம்பரார்" தே. 6768
"இன்னம்பர் ஏர்இடவை ஏமப்பேறூர்" தே. 6957

ஏரகரம், ஏராரம், ஏராவரம் என்று வழங்கப்படும் சிற்றூரில் உள்ள சிவாலயத் தில் விக்கிரமசோழன் (கி.பி. 1118-36) காலத்துக் கல்வெட்டு ஒன்று அவ்வூரினை "இன்னம்பர் நாட்டு ஏர் ஆகிய மும்முடிச்சோழமங்கலம்" என்று குறிப்பிடுகிறது. தஞ்சைக் கோயில் கல்வெட்டு ஒன்று "இராசேந்திரசிங்கவளநாட்டு இன்னம்பர் நாட்டு ஏராகிய மும்முடிச்சோழமங்கலத்தார்" (தெ.இ.க.தொ II 70) என்று குறிப்பிடு கிறது. இவ்விரண்டனையும் நோக்க, இன்னம்பரைத் தலைநகராகக் கொண்ட பகுதி யில் உள்ளதோர் ஊர் ஏர் என்ற வைப்புத்தலம் என்பது புலப்படும். அதுவே இப் பொழுது ஏரகரம் என்று வழங்கப்படுவதாய்க் குடந்தைக்கு வடக்கே 3 கி.மீ. தொலை விலும், திருப்புறம்பயத்திற்குத் தென்கிழக்கே 3 கி.மீ. தொலைவிலும், இன்னம் பருக்கு வடகிழக்கில் 3 கி.மீ. தொலைவிலும் அமைந்திருக்கும் சிற்றூர் ஆகும்.[15]

**40.** ஏழூர் : தே.6959. "இடும்பாவனம் எழுமூர் ஏழூர் தோழூர்"

ஏழூர் திருச்செங்கோட்டிலிருந்து 22.4 கி.மீ. கிழக்கில் அமைந்துள்ள வைப்புத் தலமாகும். இதன் அருகேயுள்ள மணலி, அகரம் முதலிய ஏழு திருத்தலங்களினின்றும் இங்கு மூர்த்திகளை எழுந்தருளுவித்துத் திருவிழா நடத்தினமையால் இவ்வூர் ஏழூர் என்று பெயர் பெற்றது என்ப. இங்கிருந்த திருக்கோயில் சிதைவுண்டு விளைநிலமாகி விட்டது. சிவலிங்கம் ஒரு கிணற்றுக்கு அருகில் காணப்படுகின்றது. பரிவார மூர்த்திகளுள் ஒன்றிரண்டே உள்ளன.

இவ்வூர்த் திருத்தேர் ஒன்று செப்பனிடப்பட்டுத் திருச்செங்கோட்டு முருகப்பெருமானுக்கு ஏழூர்த் திருத்தேர் என்ற பெயருடன் திருவிழாக் காலங்களில் பயன்படுத்தப் படுகிறது. ஏழூர்த்திருத்தலத்துச் சிவாலயத்தின் செப்புத் திருமேனிகள் ஆங்குள்ள பெருமாள்கோயிலில் பாதுகாப்பாக வுள்ளன.[16]

ஏறனூர் : தே. 7553. "ஏறனூர் எய்து அமான்இடம் இடையாறு இடைமருதே"

ஏறனூர் என்பதனை வைப்புத்தலமாகக் கொள்ளாமல் இடபத்தை ஊர்தியாகவுடைய சிவபெருமான் எழுந்தருளியுள்ள ஊர் என ஏனைய தலங்களுக்கு அடைமொழியாகக் கொள்வது தக்கது.[28]

**41.** ஓரேடகம் : தே. 6964. "ஓமாம்புலியூர் ஓரேடகத்தும்"

'ஓரேடகம்' ஒப்பற்ற ஏடகம் என்று கொள்ளின், ஏடகம் பாடல்பெற்ற தலம்; வைப்புத்தலம் ஆகாது. இனி, ஓரேடகம் என்பதனை உரோடகம் என்பதன் திரிபாகக் கொள்ளலாம். உரோடகம் என்ற ஊர் செங்கற்பட்டுமாவட்டத்தில் உள்ளது. உரோடகத்துக் கந்தரத்தனார் சங்ககாலப்புலவருள் ஒருவர். இவ்வூரில் உள்ள பழைய சிவாலயத்தில் முதல்ஆதித்தன் காலத்துக் கல்வெட்டும், முதல்இராசேந்திரன் காலக் கல்வெட்டும் உள்ளன.[28] ஆகவே, ஓரேடகம் என்னும் வைப்புத்தலம் உரோடகம் என்ற ஊரே என்று கொள்ளலாம்.

**42.** கச்சிப்பலதளி : தே. 6958. "கச்சிப் பலதளியும் ஏகம்பத்தும் கயிலாய நாதனையே காணலாமே"

காஞ்சிபுரத்தில் சிவபெருமான் எழுந்தருளிய கோயில்கள் மிகப் பலவாக உள்ளன. இவற்றுள் பலவற்றின் பெயர்கள் கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடுதூதில் குறிப்பிடப்பட்டுள்ளன. நாவுக்கரசர் காலத்தில் காஞ்சிபுரத்தில் இருந்த பல கோயில்களும் கச்சிப்பலதளி என்ற பொதுப்பெயரால் வழங்கப்பட்டுள்ளன.[28]

**43.** கச்சிமயானம் : தே. 7214. "கச்சிமயானத்தான் வார்சடையான் என்னினல்லான்"

காஞ்சிபுரத்தில் திருவேகம்பம் திருக்கோயிலுக்குள் கொடிநிலையின் அருகே அமைந்த சந்நிதி கச்சிமயானம் என்னும் வைப்புத்தலமாகும். சிவபெருமான் பண்டாசுரனை வேள்வித்தீயில் இட்டு அழித்த இடத்துச் சிவலிங்கம் உண்டாக, அவ்விடமே கச்சிமயானம் எனப்பட்டது என்ற செய்தி

"அண்ணுதற் கரிய அத்தீ அன்றுதொட் டிலிங்க மாகிப்
புண்ணிய மயான லிங்கம் எனப்பெயர் பொலிவுற் றன்றே"

என்ற காஞ்சிப்புராணப் பாடலடிகளால் புலனாகும்.[18]

**44.** கச்சையூர்: தே. 7548. "கச்சையூர் காவம் கழுக்குன்றம் காரோணம்"

இருப்பிடம் புலப்படவில்லை.

(வட) கஞ்சனூர் : தே. 7354. "நாளும் நன்னிலம் தென்பனையூர் வடகஞ்சனூர்"
கஞ்சனூர் கும்பகோணத்துக்குக் கிழக்கிலுள்ள நாரசிங்கம்பேட்டைப் புகைவண்டி நிலையத்திலிருந்து 2. கி.மீ. தூரத்தில் காவிரியின் வடகரையில் அமைந்த தேவாரப் பாடல் பெற்ற தலம். இது காவிரியின் வடகரையில் அமைந்தமை பற்றி வடகஞ்சனூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வடகஞ்சனூர் என்று அடையொடு சுட்டியமை பற்றி இதனைச் சிலர் கஞ்சனூரின் வேறாயதொரு வைப்புத்தலம் எனக் கருதினர் போலும்.[28]

45. கஞ்சாறு : தே. 6962. "கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக்கையும்"
தஞ்சாவூர்மாவட்டம் மாயூரம்வட்டம் இருப்புப்பாதை நிலையம் உடைய ஊராகிய ஆனைதாண்டவபுரமே, மானகஞ்சாறநாயனார் திருஅவதாரத்தலமாகிய கஞ்சாறு ஆகும். இங்குள்ள பழைய சிவாலயத்தில் மானக்கஞ்சாற நாயனாருடைய பழைய படிவம் உள்ளது. இறைவன் பெயர் பஞ்சவடீசுவரர். இறைவர், அடியார் வேடத்தில் வந்து மானக்கஞ்சாற நாயனார் மகளார் கூந்தலைத் தலைமயிரினால் அமைக்கப்படும் பூணூலாகிய பஞ்சவடிக்காகப் பெற்றமையின் இப்பெயர் பெற்றார். காவிரிக்கும் வெள்ளாற்றுக்கும் இடைப்பட்ட பெருநிலப் பரப்பு இராசேந்திரசிங்கவளநாடு. ஆனைதாண்டவபுரத்துள்ள பழைய கோயிலில் காணப்படும் முதல்இராசராச சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்று அவ்வூரை "இராசேந்திரசிங்கவளநாட்டு இந்தளூர்நாட்டுக் கஞ்சாறநகர்" என்று குறிப்பிடுவதால், ஆனைதாண்டவபுரமே பழைய கஞ்சாறு என்னும் வைப்புத்தலம் என்ற செய்தி தெளிவாகிறது.[15]

46. கடங்களூர் : தே. 7547. "கடங்களூர் திருக்காரிக்கரை கயிலாயம்"
இருப்பிடம் புலப்படவில்லை.

47. கடம்பை இளங்கோயில் : தே. 6959. "கடம்பை இளங்கோயில்தன்னினுள்ளும்"
மேலைக்கடம்பூரே கடம்பை எனப்படுவது. இது தென்ஆர்க்காடுமாவட்டத்தில் சிதம்பரத்திலிருந்து 32 கி.மீ. தொலைவிலும்,காட்டுமன்னார்குடியிலிருந்து 6.4 கி.மீ. தொலைவிலும், கங்கைகொண்டசோழபுரத்திலிருந்து 9.6 கி.மீ தொலைவிலும் உள்ள சிற்றூர். இக்கோயில் விமானம் பூட்டிய குதிரைகளும் சக்கரமும் உடைய இரதம் போன்ற அமைப்புடையது. ஆதலின் இக்கோயில் கரக்கோயில் எனப்பட்டது என்ப.[23] கரம் என்பது சக்கரம் என்பதன் முதற்குறை. கடம்பூர் தேவாரப்பாடல் பெற்ற தலம்.[18]

கடம்பூர் கரக்கோயிலின் முற்றத்தில் அமைந்துள்ள பாலாலயமே கடம்பை இளங்கோயில் என்பாரும்[28] கடம்பூர்க்கோயிலுக்குக் கிழக்கில் 1.6 கி.மீ.இல் உள்ளது கடம்பூர் இளங்கோயில் என்பாரும் உளர்.[23]

48. கடையக்குடி : தே. 6968. "கருந்திட்டைக்குடி கடையக்குடி"
"பாண்டியகுலாசினிவளநாட்டு மீசெங்கிளிநாட்டுக் கடையக்குடி" (தெ.இ.க. II 66) என்ற கல்வெட்டுத்தொடர் கடையக்குடி என்ற வைப்புத்தலத்தின் இருப்பிடத்தைக் குறிப்பிடுகிறது.[28] இக்காலத்து இவ்வூர் தஞ்சாவூருக்கு அருகில் வெண்ணாற்றங் கரையில் அமைந்துள்ள கடம்பக்குடியாக இருக்கலாம்.

49. கண்ணை : தே. 6960. "கண்ணை களர்க்காறை கழிப்பாலையும்"
கண்ணை என்பது வடஆர்க்காடுமாவட்டம் திருவண்ணாமலைவட்டத்தில் சங்க காலத்தில் கோநகராக இருந்த செங்கண்மா என்ற பழைய ஊர்ப்பெயரின் மரூஉவாகத் தோன்றுகிறது.[28] இப்பொழுது இவ்வூர் செங்கம் என்று வழங்கப்பெறுகிறது.

(தெ.இ.க.தொ. எண் 117) இங்குள்ள சிவாலயம் திருஇடபத்துறை என்று சாசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கோயிலின் தெற்குத் திருமதிலில் வரையப் பட்டுள்ள சாசனச் செய்யுளில் கண்ணை என்று குறிப்பிடப்பட்ட ஊர் செங்கண்மா எனப்பட்டுச் செங்கம் என்று வழங்கப்படுகின்ற வைப்புத்தலமே யாகும்.[2] இவ்வூரைக் களர்க்காறை என்ற ஊர் என்பாரும் உளர்.[23]

**50.** கந்தமாதனமலை : தே. 6974. "கந்தமா தனத்துள்ளார் காளத்தியார்"

கந்தவேள் சூரபதுமனிடம் தூதாக விடுத்த வீரவாகுத்தேவர் கந்தமாதனக் குன்றிலிருந்து புறப்பட்டு வானவழியே சென்றார் என்பது கந்தபுராணச் செய்தி. இக்குன்று திருச்செந்தூர்க் கோயிலின் வடபால் உள்ள வைப்புத்தலம்.[18] திருச்செந்தூர் தனுக்கோடி கடல்களில் நீர்மூழ்குவோர் இம்மலையின் சார்பு பற்றிச் சங்கற்பம் செய்து நீரில் மூழ்குவது வழக்கம்.[23]

**51.** கரபுரம் : தே. 6324. "கண் ஆர் நுதலார் கரபுரமும்'

வடஆர்க்காடுமாவட்டத்தில் வாலாஜாபேட்டைவட்டத்தில் காவேரிப்பாக்கத்துக்கு 3.2 கி.மீ. தெற்கே உள்ளதாய்ப் பாலாற்றங்கரையில் அமைந்திருக்கும் பாற்கடல் என்ற ஊரே கரபுரம் என்னும் வைப்புத்தலமாகும்.[30] இவ்வூர்க் கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் "திருக்கரபுரம் உடைய நாயனர்" (க.அ. 1905 இன் 699) "திருக்கரபுரத்துப் பெருமான்அடிகள்" என்று பழைய சோழர்காலக் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளார்.[28] இவ்வூரே அருணகிரிநாதர் பாடிய திருக்கரபுரம் ஆகும். இறைவனின் பெயர் கரபுரீசுவரர். இறைவியின் பெயர் அபீதகுசாம்பாள்.

வடஆர்க்காடுமாவட்டத்தில் உள்ள விரிஞ்சபுரத்தைக் கரபுரம் என்பாரும், சேலம்மாவட்டத்தில் உள்ள உத்தமசோழபுரத்தைக் கரபுரம் என்பாரும் உளர்.[23]

**52.** கருகல்குரல் : தே. 7717. "கருகல் குரலாய்! வெண்ணிக் கரும்பே!"

கருகல் என்பதே வைப்புத்தலத்தின் பெயர். அவ்வூரில் தானியங்களின் கதிர் போலத் தோன்றிய இறைவனைக் "கருகல்குரலாய்" என்று சுந்தரர் அழைத்தார். "வெண்ணியில் கரும்பு போன்று இனிமையானவனே" என்பதும் அது.[28]

**53.** கருந்திட்டைக்குடி : தே. 6968. "செங்காட்டங்குடி கருந்திட்டைக்குடி"

தஞ்சைமாவட்டத்தில் தஞ்சாவூருக்கு வடக்கே கரந்தை என்ற பெயரில் 2 கி.மீ. தொலைவில் உள்ள ஊரே கருந்திட்டைக்குடி என்ற வைப்புத்தலமாகும். முதற் குலோத்துங்கன் காலத்தில் அவ்வூர் சுங்கம் தவிர்த்த சோழநல்லூர் என்று வழங்கப் பட்டது.[18]

கருமாரி : தே. 6328. "கான் ஆர் மயில் ஆர் கருமாரி"

திருவேற்காடு தேவாரப்பதிகம் பெற்ற தலம். இக்காலத்து அங்குள்ள கருமாரி அம்மன் கோயில் பிரசித்தமானது. இவ்வம்மன்கோயிலுள்ள பகுதி பழங்காலத்தில் கருமாரி என்ற பெயர் உடைய வைப்புத்தலமாக இருந்திருக்கலாம்.

**54.** கருப்பூர் : தே. 8232. "கச்சியன் இன்கருப்பூர் விருப்பன்"

தஞ்சைமாவட்டத்தில் கும்பகோணத்திலிருந்து திருப்பனந்தாள் செல்லும் வழியில் 3 கி.மீ. தொலைவில் உள்ள கருப்பூர் இவ்வைப்புத்தலம் ஆதல் கூடும். இவ்வூரில் அகத்தீசுவரம்உடையார் கோயில் உள்ளது.[18]

**55.** கழுநீர்க்குன்றம் : தே. 6384. "கல்மலிந்து ஓங்கு கழுநீர்க்குன்றம்"

உற்பலம்-கழுநீர்ப்பூ. திருத்தணிகைமலைக்கு உற்பலவரை என்ற பெயர் இருப்பது கொண்டு, கழுநீர்க்குன்றம் திருத்தணிகைமலையாகிய வைப்புத்தலம் எனலாம். இது செங்கற்பட்டுமாவட்டத்தின் ஒரு வட்டத்தின் தலைநகர்; இருப்புப்பாதை நிலையத்தி லிருந்து கிழக்கே 4. கி.மீ. தொலைவில் உள்ளது; திருத்தணிகை வீரட்டானேசுவரர் கோயில் அபராசித பல்லவன் காலத்தில் கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் நம்பியப்பி என்பவனால் கற்றளியாக்கப்பெற்றது.[34] இப்பழங்கோயிலுடைய திருத்தணிகை மலையே பழைய கழுநீர்க்குன்றம் எனப்படும் வைப்புத்தலமாம்.

56. களந்தை : தே. 7633. "ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்"

கூற்றுவநாயனாரின் அவதாரத்தலமாகிய களப்பாள் என்றும் களப்பாழ் என்றும் மருவி வழங்கும் களந்தை தஞ்சைமாவட்டத்தில் திருத்தருப்பூண்டிக்கு அருகில் உள்ளது.[28] இரண்டாம் இராசேந்திரன் காலத்தில் இவ்வூர் "மாதேவவளநாட்டுப் புறங்கரம்பைநாட்டுப் பிரமதேயம் களப்பாழ்" என்று வழங்கப்பட்டது.[22] இவ்வூரில் அழகியநாதசுவாமி கோயில், கயிலாசநாதர் கோயில், ஆனை காத்த பெருமாள் கோயில் என்னும் மூன்று தேவாலயங்கள் உள்ளன. அழகியநாதசுவாமி கோயிலில் உள்ள திரிபுவன சக்கரவர்த்தி குலசேகரபாண்டியன் காலத்துக் கல்வெட்டு இப் பெருமானைக் 'களப்பாள் உடையார்', 'ஆதித்தேசுவரம் உடையார்' என்று குறிப் பிடுகிறது. ஏனைய இருகோயில் கல்வெட்டுக்களும் இவ்வூரை 'இராசேந்திரசோழ வளநாட்டுப் புறங்கரம்பைநாட்டு அகரம் முடிவழங்கு சோழபுரம்' என்று குறிப்பிடு கின்றன.

கறையூர் : "கறையூர் கருப்பறியல் கன்றாப்பூரும்" தே. 6964.
"கறையூரில் பாண்டிக்கொடுமுடி" தே. 7723.

கருவூர்-ஈரோடு இருப்புப்பாதையில், இடையில் உள்ளதோர் ஊராகிய கொடு- முடி என்ற ஊர் தேவாரகாலத்தில் கறையூர் என்ற பெயரோடு விளங்க, அங்கு அமைந்த திருக்கோயில் பாண்டிக்கொடுமுடி என வழங்கப்பட்டது. நாளடைவில் கறையூர் என்ற ஊர்ப்பெயர் மறையக் கொடுமுடி என்ற கோயில்பெயரே ஊர்ப் பெயர் ஆயிற்று. திருப்பாண்டிக்கொடுமுடி தேவாரப்பதிகங்கள் பெற்ற திருக்கோயில்.[18]

காவிரியின் தென்கரையில் அமைந்த இத்திருத்தலத்தில் வாயுதேவனால் பறித்து எறியப்பட்ட மேருமலையின் கொடுமுடிகளுள் ஒன்று சிவபெருமானாக விளங்குவ தாக ஐதீகம். அதற்கேற்பச் சிவபெருமானது பெயர் மலைக்கொழுந்தீசர் என்று வழங்குகிறது.[16]

57. காட்டூர் : "காட்டூர் கடம்பூர் படம்பக்கம்கொட்டும் கடல் ஒற்றியூர்" தே. 1890
"காட்டூர்க்கடலே கடம்பூர்மலையே கானப்பேரூராய்" தே. 7713

திருவாரூருக்கு அண்மையில் உள்ள காட்டூரே தேவார வைப்புத்தலம் என்பர் சிலர். செங்கற்பட்டுமாவட்டத்து மதுராந்தகவட்டத்தில் ஒரு காட்டூர் உள்ளது. அவ்வூரில் உள்ள பழைய சிவாலயத்திற்கு முதல்இராசராசன் முதலிய சோழமன் னர்கள் நிவந்தம் விடுத்துள்ளனர் என்ற செய்தி கல்வெட்டுக்களால் (தெ.இ.க.தொ. IV-பக். 307,308) பெறப்படுவதால் அக்காட்டூரே தேவார வைப்புத்தலம் ஆகலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.[18]

சீரங்கப்பட்டினமே காட்டூர் என வழங்கப்பட்டது[31] எனவும், திருப்பனந்தாளை அடுத்து ஒரு காட்டூர் காணப்படுகிறது எனவும் கூறுப. "கௌதமகோத்திரத்துப் பிரவசன சூத்திரத்துக் காட்டூர் வந்தவன்" என்ற தொடர் பல்லவர் செப்பேட்டிலும், "வடவாத்துக் காட்டூர்" என்ற தொடர் கன்னியாகுமரிமாவட்டக் கல்வெட்டொன்

றிலும் காணப்படுகின்றன. ஆதலின், காட்டூர் என்ற பெயரில் பல ஊர்கள் இருக்கும் செய்தியை அறிகிறோம்.

58. காம்பிலி : தே. 6956. "பெருந்துறை, காம்பிலி, பிடவூர்"

பெல்லாரிமாவட்டம் ஹொசப்பேட்டைவட்டத்தில் துங்கபத்திரை ஆற்றங் கரையில் அமைந்த இவ்வைப்புத்தலம் வரலாற்றுச் சிறப்புடையது. முதல் இராசாதி ராசன் காம்பிலியில் இருந்த சாளுக்கியர் மாளிகையைத் தகர்ப்பித்துச் சயத்தம்பம் நட்டதும்,[2] வீரராசேந்திரன் காம்பிலி நகரை எரித்து இடைதுறைநாட்டில் உள்ள கரடிக் கல்லில் வெற்றித்தூண் நிறுவியதும் மெய்க்கீர்த்திகள், கல்வெட்டுக்கள், கலிங்கத்துப் பரணி இவற்றால் விளங்கும்.[5]

காம்பிலி நேசநாயனருடைய திருத்தலம். இவர் அதனை விடுத்துத் தஞ்சைமாவட் டத்து மாயூரத்தை அடுத்த கூறைநாட்டில் தங்கித் தாம் காம்பிலியிலிருந்து கொண்டு-வந்த விநாயகர், தண்டபாணி ஆகிய மூர்த்திகளைக் கூறைநாட்டுத் திருக்கோயிலில் தாபித்தார் என்று கூறுவர்.[23]

59. காரிக்கரை : தே. 7547. "கடங்களூர் திருக்காரிக்கரை கயிலாயம்"

தொண்டைநாட்டு வைப்புத்தலங்களுள் ஒன்று திருக்காரிக்கரை. இது செங்கற்-பட்டுமாவட்டம் பொன்னேரிவட்டத்தில் உள்ள இராமகிரி என்னும் ஊராகும். சிவா லயத்தின் சந்நிதிக்கு அருகில் காரிநதி எனப்படும் காலேலு என்ற தெலுங்குப்பெயரு டைய சிற்றாறு ஓடுவதால், இவ்வூர் காரிக்கரை என்று பெயர்பெற்றது. தொண்டை-நாட்டுப் பிறதலங்களை வழிபட்ட சம்பந்தரும் திருநாவுக்கரசரும் காளத்தி செல்லும் வழியில் காரிக்கரையைத் தொழுதனர் என்று பெரியபுராணம் கூறுகிறது. இங் குள்ள இறைவர் இக்கோயில் சாசனங்களில் 'ஜெயங்கொண்டசோழமண்டலத்துக் குன்றவர்த்தனக்கோட்டத்து நின்றையூர்நாட்டு நடுவில்மலை திருக்காரிக்கரை உடைய நாயனார், திருக்காரிப்பிள்ளையார்' (க.அ. 1904 இன் 646) எனக் குறிப்பிடப் பட்டுள்ளார்.[28] இவ்வூர் சென்னையிலிருந்து நாகலாபுரம் சென்று அங்கிருந்து 4 கி.மீ. தொலைவில் அடையத்தக்கது.

60. காவம் : தே. 7548. "கச்சையூர் காவம் கழுக்குன்றம் காரோணம்"

காவம் என்பதன் பெயர்ஒப்புமை கருதி, காவை, காவையம்பதி, காவனூர் என இப்பொழுது வழங்கப்படுகின்ற ஊர்ப்பெயர்கள் காவை என்பதன் மரூஉவாகக் கொள்ளப்படுகின்றன.[15] இவ்வூர் மதுரைக்கு அணித்தாக உள்ள 'மன்றலஞ்சோலைக் குன்றநன்னாட்டிலே பூஅலர் வாவி சூழ்ந்த' ஊராகும். காவை வடமலையப்பப்பிள்ளை என்ற வள்ளல் இவ்வூரினரே.

61. காளிங்கம் : தே. 6322. "கழுநீர் மதுவிரியும் காளிங்கமும்"

இருப்பிடம் புலப்படவில்லை.

காறை : தே. 6960. "கண்ணை களர்க்காறை கழிப்பாலையும்"

காறாயில் என்ற பாடல் பெற்ற தலப்பெயரின் திரிவு ஆகலாம்.[28] இக்காலத்தில் இவ்வூர் திருக்காறவாசல் என வழங்கப்படுகிறது; சத்தவிடங்கத் தலங்களுள் ஒன்று.

காற்றூர் : தே. 1891. "காற்றூர் வரை அன்று எடுத்தான் முடிதோள் நெரித்தான்"

காற்றூர் என்பதனை வரைக்கு அடையாக்கிக் காற்று உலாவும் கயிலைமலை என்று பொருள்செய்வதே ஏற்றதாகலின், காற்றூர் என்பதனை ஒரு வைப்புத்தலமாகக் கொள்ளல் வேண்டா.

62. கிழையம் : தே. 7351. "கீழைவழி பழையாறு கிழையமும்"
இருப்பிடம் புலப்படவில்லை.

63. கிள்ளிகுடி : தே. 7353. "கீழையில் அரனார்க்கு இடம் கிள்ளிகுடியதே"
தஞ்சைமாவட்டத்து நாகப்பட்டினத்தை அடுத்துள்ள கீழ்வேளூருக்கு அருகில் உள்ள வைப்புத்தலம்.[28]

கிள்ளிகுடி - கிள்ளியுடைய குடிமக்கள் இருக்கும் ஊர்; அன்மொழித்தொகை தொல்.சொல். 463 நச். நன். 368 மயிலை. என இலக்கணஉரையாசிரியர்களால் அன்மொழித்தொகைக்கு எடுத்துக்காட்டாக இவ்வூர்ப்பெயர் குறிப்பிட்டுள்ளது.

64. கீழையில் : தே. 7353. "கீழையில் அரனார்க்கு இடம் கிள்ளிகுடியதே"
கடைமுடி என்னும் பெயருடன் தேவாரம் பெற்ற திருத்தலம் கீழையூர் என்று வழங்குகின்றது. இது கீழையில் என்பதன் திரிபு ஆகலாம்.[13] நாகப்பட்டினவட்டத்திலுள்ள கல்வெட்டு ஒன்று "அருமொழித்தேவவளநாட்டு அளநாட்டுக் கீழையூர்" என்று குறிப்பிடுவதால், கீழையில் என்பது நாகப்பட்டினவட்டத்துள்ள கீழையூராக இருக்கலாம் என்ப.[28]

கடைமுடி என்ற தேவாரம் பெற்ற திருத்தலம் தஞ்சைமாவட்டம் ஆனைதாண்டவபுரம் புகைவண்டி நிலையத்திற்குக் கிழக்கில் 8 கி.மீ. இல் உள்ள கீழையூரே என்பர் சிலர்.

தஞ்சைமாவட்டத்தில் திருக்காட்டுப்பள்ளியிலிருந்து கோயிலடிக்குச் செல்லும் வழியில் 6 கி.மீ. உள்ள திருச்சென்னம்பூண்டிபடுகை என்ற சிற்றூரிலுள்ள பழைய சிவாலயத்தில் 9,10 ஆம் நூற்றாண்டுகளில் பொறிக்கப்பட்ட சோழர் கல்வெட்டுக்களில் இச்சிவாலயம் உள்ள ஊர் திருக்கடைமுடி எனவும், சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள இறைவர் பெயர் திருக்கடைமுடி மகாதேவர் எனவும் பொறிக்கப்பட்டிருப்பதால், கடைமுடி என்பது திருக்காட்டுப்பள்ளியை அடுத்த திருச்சென்னம்பூண்டி-படுகையே என்பது சிலர் கருத்து. இதனை நோக்க, கீழையூர் என்பது கடைமுடியின் வேறானதோர் ஊர் என்றும், அது நாகைவட்டத்திலுள்ள கீழையூரே என்றும் கொள்ளின் அக்கீழையூர் தேவாரவைப்புத்தலமாகும்.[2]

65. கீழைவழி : தே. 7351. "கீழைவழி பழையாறு கிழையமும்"
கீழையூர் எனவும் கீழைவழி எனவும் வழங்கப்பெற்ற ஊர் திருச்சி-அரியலூர்ச் சாலையில் திருச்சியிலிருந்து 48 கி.மீ.இல் அமைந்துள்ளது. கீழையூரும் மேலைப்பழுவூரும் ஒன்றன் பக்கல் ஒன்றாக 1.6 கி.மீ. க்குள் அமைந்துள்ளன. இவ்விரண்டு ஊர்களும் ஒன்றுசேர்ந்து ஒருகாலத்து "மன்னு பெரும்பழுவூர்" என வழங்கப்பட்டன. கீழைப்பழுவூர் என்னும் சிறுபழுவூர் இவற்றினும் வேறாயதோர் ஊர் ஆகும். இக் கீழையூரே கீழைவழி என்னும் வைப்புத்தலமாகலாம்.[30]

66. குக்குடேச்சுரம் : தே. 6973. "திண்டீச்சுரம் குக்குடேச்சுரம்"
குக்குடம் என்பது கோழி என்று பொருள்படும். பண்டைய சோழர் தலைநகரான உறையூர் கோழி என்ற பெயரும் உடையதாயிருத்தலின் உறையூர்க்கோயில் குக்குடேசுவரம் ஆகலாம்.

இந்நாளில் சிந்தூர்நாட்டைச் சேர்ந்துள்ள புங்கனூர் பெருஞ்சோழமன்னரது ஆதரவு பெற்ற ஊராக விளங்கியது. அவ்வூர்க் கோயிலில் கண்ட சாசனங்களில் அது பெரும்பாணப்பாடி புலியூர்நாட்டில் உள்ளது என்றும், அவ்வூர்ச் சிவாலயத்தின் பெயர் கோழீச்சுரம் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. சோழர்குலப் பெருவேந்தரால்

ஆதரிக்கப்பட்ட கோழீச்சுரம் நாவுக்கரசர் தேவாரத்தில் குறித்த குக்குடேச்சுரம் என்ற வைப்புத்தலம் ஆகலாம்.[18]

67. குடப்பாச்சில் : தே. 7386. "குடப்பாச்சில் உறை கோக் குளிர் வானே"

திருச்சிராப்பள்ளிக்கு நேரே கொள்ளிடத்தின் வடக்கிலுள்ளது. "வடகரை ராஜ ராஜவளநாட்டு மழநாட்டுப் பாச்சில்கூற்றத்துப் பாச்சில்" என்று கல்வெட்டுக்களில் காணப்படும் பாச்சில் என்பது ஆச்சிராமம் என்ற பாடல்பெற்ற தலமாகும். இது சோழநாட்டுத் தலங்களுள் மேற்கில் இருப்பதால், குடப்பாச்சில் என்று கூறப்பட்டது என்பர். அங்ஙனமாயின் இது வைப்புத்தலம் ஆகாது. திருவண்ணுமலேக்கு மேற்கே பாய்ச்சல் என்பதோர் ஊர் உளது. அது தேவாரம் குறிப்பிடும் வைப்புத்-தலம் ஆகலாம்.[19]

68. குணவாயில் :"கொடுங்கோவலூர் திருக்குணவாயில்" தே. 1890
"குடவாயில் குணவாயில் ஆனஎல்லாம்" தே. 6972

குணவாயில் சேரநாட்டுத்தலம். குணவாயிற்கோட்டம் என்பதும் இதுவே. கொடுங்கோளூருக்கு மேற்புறத்தில் உள்ளது என்ப.[28] குணவாயில் என்னும் பெயருடைய ஊர்கள் பல உள. சேரநாட்டுக் குணவாயிற்கோட்டத்தை அடியார்க்குநல்லாரும் குறிப்பிடுகிருர்.[18] குணவாயில் கொங்குநாட்டில் உள்ளது எனவும், சேரர் தலேநகரான கருவூருக்கு நேர் கீழ்ப்பால் உள்ளதனுல் இஃது அப்பெயர் பெற்றது எனவும் கூறுப. சிதம்பரம்வட்டத்தில் உள்ளதாய்க் குணவாயில் என்று இன்று வழங்கப்படும் ஊர் தேவார வைப்புத்தலமாகும். இதனே அடுத்து மேல்பால் குடவாயில் இருந்திருத்தல் வேண்டும் என்ற கருத்தும் உண்டு.[2]

69. குண்டையூர் : தே. 7434. "குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்"

திருக்கோளிலி என்ற தலத்தை அடுத்துள்ளது திருக்குண்டையூர். சுந்தரர் குண்டையூரில் பெற்ற நெல்லினேத் தம் வீட்டில் சேர்க்க ஆளில்லாக் குறையைத் திருக்கோளிலி (திருக்குவளே)ப்பெருமானிடம் முறையிட்டார். இக்காலத்தில் குண்டையூர் தஞ்சைமாவட்டத்து நாகப்பட்டினவட்டத்தில் குன்னியூர் என்னும் பெயரோடு விளங்குகிறது.[18]

70. குத்தங்குடி : தே.1893. 'குத்தங்குடி வேதிகுடி புனல் சூழ் குருந்தங்குடி."

தஞ்சைமாவட்டத்தில் குத்தாலத்தை அடுத்த தேரழுந்தூருக்கு அண்மையில் உள்ள வைப்புத்தலம் இது.[28]

71. குமரி : "குருகாவூர் வெள்ளடை குமரி கொங்கு" தே. 6963
"கோதாவரி குமரி" தே. 8032

இது கன்னியாகுமரி என்ப.[28] இதனேத் தனித்தலமாகக் கொண்டு திரிபுரம் எரித்த வீரம் நிகழ்ந்த தலமாகும் என்பாரும் உளர்.[23]

72. குயிலாலந்துறை : தே. 6976. "குயிலாலந்துறை சோற்றுத்துறை பூந்துறை"

'இமயச் சிமையத்து இருங்குயி லாலுவத்து, உமையொரு பாகத்து ஒருவனே வணங்கி' என்ற சிலப்பதிகார 28 ஆம் காதையில் வரும் அடிகளால் குயிலாலுவம் இமயமலேப் பக்கத்தில் உள்ள ஒரு சிவாலயம் என்பது பெறப்படும். இது நீலகேசி மொக்கலவாதச் சருக்கம் 190 ஆம் பாடல் உரையில் குறிக்கப்பட்டுள்ளது.[12] இக்குயிலாலுவம் கங்கையின் வடகரையில் உள்ள உத்தரைநாட்டினகத்து உள்ளது என்

பார் சிலர்.[24] தஞ்சைமாவட்டத்து மாயூரம்வட்டத்தில் நல்லக்குடி, நல்லத்துக்குடி, நல்லடி என வழங்கும் ஊரில் உள்ள இறைவன் ஆலந்துறை அப்பர் எனவும், இறைவி குயிலாண்ட நாயகி எனவும் வழங்கப்படுகின்றனர். இறைவிபெயரோடு இறைவன்பெயர்ப்பகுதி சேர்ந்து குயிலாலந்துறை என்று நல்லடி என்ற ஊரிலுள்ள தேவாலயப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்பர்.[18]

**73.** குரக்குத்தளி : தே. **7714**. *"கொங்கிற் குறும்பிற் குரக்குத்தளியாய்!"*

இவ்வூர் திருப்பூருக்குக் கிழக்கே 8 கி.மீ.இல் உள்ளது என்ப. ஈரோட்டுக்கு அண்மையில் கூனிப்பாளையம் இருப்புப்பாதை நிலையத்திற்குத் தெற்கே முகுந்தனூர் என்ற இக்காலப்பெயருடன் வழங்கும் ஊர் என்ப. (க.அ. 1909இன் 304)[28] கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த குறும்புநாட்டில் முகுந்தனூரில் காணப்படும் பழைய சிவாலயம் சுக்கிரீவனால் வழிபடப்பட்டுச் சுக்கிரிவேசுவரம் என்று வழங்கப்படுவதாய் உள்ள குரக்குத்தளி என்ற வைப்புத்தலமாம்.[18] கூனிப்பாளையம் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து 1.6 கி.மீ. கற்சாலை வழியாகத் தெற்கே சென்று நஞ்சராயன் குளம் என்ற ஏரிக்கரையை அடைந்து அதன் கிழக்கில் ஒரு கி.மீ. சென்று, அவிநாசியிலிருந்து வரும் நள்ளாறுநதியும், பேரூரில் இருந்துவரும் காஞ்சிநதியும் கூடும் சங்கமத்துறைக்கு அண்மையில் உள்ள முகுந்தனூரை அடையலாம். இவ்வூர் இப்போது சர்க்கார் பெரியபாளையம் என்ற பெயரால் வழங்கப்படுகிறது.[24]

**74.** குருக்கேத்திரம் : தே. **8032**. *"குருக்கேத்திரம் கோதாவரி குமரி"*

தீர்த்தச்சிறப்பு வாய்ந்த வடநாட்டுத் திருத்தலம்.[28] இது டெல்லிக்கு அருகில் பஞ்சாப்மாநிலத்தில் கார்குல்மாவட்டத்தில் சரஸ்வதி, திரிஷத்வதி (ராக்ஷி) ஆறுகளுக்கு இடையில் உள்ள சமவெளி. இது பாரதப்போர் நிகழ்ந்த இடம். இதற்குத் துக்கமற்றது என்ற பொருள் உடைய 'நிர்துக்' என்ற பெயரும் உண்டு. சீனயாத்திரிகர் இதனை 'இன்பநிலம்' என்று குறிப்பிட்டுள்ளார். இப்பெயரில் இருப்புப்பாதை நிலையம் டெல்லிக்கு வடக்கில் 162 கி.மீ.இல் உள்ளது.[5]

**75.** குருந்தங்குடி : தே. **1893**. *"குத்தங்குடி வேதிகுடி புனல்சூழ் குருந்தங்குடி"*

இறைவன் குருந்தமரத்தடியில் எழுந்தருளிய நீர் சூழ்ந்த வளமான பகுதியில் இப்பெரிய வைப்புத்தலம் அமைந்திருந்ததுபோலும்.

**76.** குன்றியூர் : *"நீரூர்வயல் நின்றியூர் குன்றியூரும்"* தே. **1884**

*"கொங்கணம் குன்றியூர் குரக்குக்காவும்"* தே. **6959**

"அருமொழித்தேவ வளநாட்டுக் குன்றியூர்" தஞ்சைமாவட்டத்து இராசமன்னார்குடிக்கு அண்மையில் உள்ள குன்னியூர் ஆதல் கூடும்.[28]

**77.** குன்றையூர் :

தே. **7628**. *"விரிபொழில் சூழ் குன்றையார் விறல்மிண்டர்க்கு அடியேன்"*

விறல்மிண்டநாயனாருடைய திருப்பதியாகிய மலைநாட்டுச் செங்குன்றூர் குன்றை என மருவியது.[28] இது மலையாளநாட்டில் பரசுராமர் வேதியர்க்கு அளித்த 64 ஊர்களில் தெற்குக் கோடியில் உள்ளது; செங்கண்ணூர் என்று வழங்கப்படுகிறது. இவ்வூர்ச் சிவாலயமும் பகவதியம்மையார் ஆலயமும் பிரசித்தமானவை. இவ்வைப்புத்தலம் திருவாங்கூர் நாட்டில் கொல்லம் என்ற துறைமுக நிலையத்திலிருந்து கிழக்கே 16.2 கி.மீ. இலும், தென்காசியிலிருந்து 77 கி.மீ. இலும், எர்ணுகுளத்திலிருந்து 88 கி.மீ. இலும் அமைந்துள்ளது. [23] குன்றையூர், கொடிமாடச்-

செங்குன்றூர் என்று குறிக்கப்படும் திருச்செங்கோடு என்பாரும் உளர். செங்கோடு சுந்தரர் தேவாரம் பெற்ற தலம்.

*78. கூந்தலூர் : தே. 6963. "கொண்டீச்சுரம் கூந்தலூர் கூழையூர் கூடல்"*

கூந்தலூர் "சோழமண்டலம் குலோத்துங்கசோழவளநாட்டுத் திருநறையூர்ப் பற்று கீழ்கூறு கூந்தலூர்" எனக் கும்பகோணம்-திருவாரூர்ச்சாலையில் கும்பகோணத்துக்குக் கிழக்கில் 6.2 கி.மீ. தூரத்தில் உள்ளது என்று கூறப்படும் கூந்தலூரின் வேறு யதாய், நன்னிலம்வட்டத்தில் பேணுபெருந்துறைக்கு அண்மையில் உள்ளது. இது கிருஷ்ணதேவராயர் காலமான 16 ஆம் நூற்றாண்டிலும் சிறப்புற்றிருந்தது என லாம் (நன்.கல்.தொ. VII க.எண் 477/1972)

*79. கூரூர் : தே. 1884. "கூரூர் குடவாயில் குடந்தை"*

"திருநறையூர்நாட்டுக் கூரூர்"[28] என்ற கல்வெட்டுத்தொடரால் இவ்வைப்புத்-தலம் தஞ்சைமாவட்டத்துக் கும்பகோணம்வட்டத்தைச் சார்ந்தது என்பது புலப் படும்.

*80. கூழையூர் : தே. 6963. "கொண்டீச்சுரம் கூந்தலூர் கூழையூர்"*

இருப்பிடம் புலப்படவில்லை.

*கூறனூர் : தே. 7553. "திருமாலோர் கூறனூர் குரங்காடுதுறை"*

திருமாலை ஒருகூறுகவுடைய சிவபெருமானுடைய ஊர் குரங்காடுதுறை எனத் 'திருமால் ஓர்கூறன் ஊர்' என்பது குரங்காடுதுறைக்கு அடையாகக் கொள்ளத்தக்கது. கூறனூர் வைப்புத்தலமன்று.[28]

*81. கைம்மை : தே. 7352. "தென்னூர் கைம்மைத் திருச்சுழியல்"*

இருப்பிடம் புலப்படவில்லை.

*82. கொங்கணம் : தே. 6959. "செங்குன்றூர் கொங்கணம் குன்றியூர்"*

கொங்கணம் என்பது கொண்கானம் என்பதன் திரிபாகலாம். கொண்கானம் என்னும் மலை புறநானூறு 154-156 ஆம் பாடல்களில் கொண்பெருங்கானம் எனக் குறிக்கப்படுகிறது.[28] இது சேலம்கோயம்புத்தூர் மாவட்டங்களின் கீழ்ப்பகுதி நாட்டின் தலைநகராக இருந்திருக்கலாம். கொங்கு என்பது பொன்னுக்குப் பெயரா தலின், இக்கொண்கானம் 'பொன்படு கொண்கானம்' என்று நற்றிணை 391 ஆம் பாடலில் போற்றப்பட்டுள்ளது. கொண்கானநாடு கொங்கணநாடு என மருவி வழங்கவே, கொண்கானம் என்ற ஊரும் கொங்கணம் என மருவிற்று.

*83. கொங்கு : தே. 6963. 'குருகாவூர் வெள்ளடை குமரிகொங்கு"*

பொதுவாகக் கொங்குநாட்டில் (சேலம்கோயம்புத்தூர் மாவட்டங்கள்) உள்ள திருத்தலங்கள் பலவற்றையும் கொங்கு என்ற சொல் குறிப்பதாகக் கொள் வர்.[7] 'குமரிகொங்கு' 'கொங்குதண் குமரித்துறை ஆடில் என்' (தே. 6236) என்ற தொடர்களைக்கொண்டு, கொங்குநாட்டின் காவிரியின் பலதுறைகளில் குமரித் துறை என வழங்கும் வைப்புத்தலமே கொங்கு என்ப. அத்தலம் இக்காலத்து மோகனூர் என்னும் பெயரோடு நாமக்கல்லிலிருந்து 25.6 கி.மீ.இல் உள்ளது. இங்குள்ள சிவாலயத்தில் உள்ள பெருமான் பெயர் குமரீசுவரர் என்பது இக்கருத் துக்கு அரணாக உள்ளது.[23]

கொடுங்கோவலூர் : தே. 1890. "கொடுங்கோவலூர் திருக்குணவாயில்"

இப்பொழுது திருக்கோயிலூர் என்று வழங்கப்படும் தேவாரப்பாடல் பெற்ற வீரட்டத்தலம் இது. [28] மெய்ப்பொருள்நாயனூர் ஆட்சி செய்த சேதிநாட்டின் கோநகரம் சிவபெருமான் அந்தகாசுரனை அழித்த வீரச்செயல் நிகழ்ந்தமை பற்றிக் கொடுங்கோவலூர் எனப்பட்டது. இக்காலத்தில் சிவாலயம் உள்ள பகுதி பெண்ணை யாற்றின் தென்கரையில் உள்ள கீழூர் என்ற பகுதியாகும்.[18] இத்தேவாரம் பெற்ற தலம் வைப்புத்தலம் ஆகாது. கொடுமை கோவலூருக்கு அடைமொழியே.

கொடுங்கோளூர் : தே. 6959. "கொடுங்கோளூர் அஞ்சைக்களம் செங் குன்றூர்"

கொடுங்கோளூர் ஊர்ப்பெயரே. அஞ்சைக்களம் என்பது கோயிற்பெயர். அஞ்சைக்களம் சுந்தரருடைய பாடல் பெற்ற தலம்.[28] இது செலுவண்ணூர் — கொச்சி கிளைப்பாதையில் திருச்சூர் எனவழங்கும் சிவப்பேறூர் நிலையத்தினின்றும் பேருந் தில் சுற்சாலைவழியே 32.2 கி.மீ.இல் உள்ள புல்லூற்று என்னும் கடற்கரைத் தோணித் துறையினை அடைந்து அதனின்றும் காட்டுத்தோணி மூலம் 3.2 கி.மீ.இல் அடை யத்தக்க அஞ்சைக்களத்துறைக்கு அண்மையில் உள்ளது.[23] சேரநாட்டில் சிறந்திருந்த முசிரிப்பட்டினத்தின் ஊர் என்ற பெயருடைய பகுதி கொடுங்கோளூர்; கடற் கரையை அடுத்த பகுதி அஞ்சைக்களம் என வழங்கல் ஆயிற்று என்ப.[18]

கொடுமுடி : தே. 6957. "கொடுமுடி குற்றாலம் கொள்ளம்புதூர்"

கொங்கு நாட்டில் தேவாரம் பெற்ற ஏழு தலங்களில் ஒன்றாய்க் காவிரியின் மேல்கரையில் சிறந்து விளங்கும் திருப்பாண்டிக்கொடுமுடி என்ற தனிப்பெயரின் சுருக்கமாகும்.[28] இறைவன் பெயர் மகுடேசுவரர் என்பது.

84. கொண்டல் : "கொண்டல் உள்ளார் கொண்டீச்சுரத்தினுள்ளார்" தே. 6771
"கொண்டல்நாட்டுக் கொண்டல் குறுக்கைநாட்டுக் குறுக்கையே"
தே. 7348

கொண்டல்வண்ணனாகிய திருமால் விரும்பியபடி இறைவன் எழுந்தருளி முருக னால் சிறையிடப்பட்ட பிரமதேவனை விடுவித்தமை குறிப்பிடும் தலபுராணக் குறிப் பினால் தாரகபரமேசுவரர் என்ற பெருமான் சிவாலயம் உடையதும் சீகாழிக்கு மேற்கே 5.6 கி.மீ. தொலைவில் உள்ளதும் ஆன கொண்டல்வண்ணன்பதியின் மரூஉப்பெயரே கொண்டல் ஆகும். இது கொண்டல் வள்ளுவக்குடி எனவும் வழங் கப்படுகிறது.[18]

85. கொல்லிமலை : தே. 5576. "கொல்லியான் குளிர்தூங்கு குற்றாலத்தான்"

சேலம்மாவட்டம் நாமக்கல்ஆத்தூர் வட்டங்களில் 27.2 கி.மீ. நீளம் உடைய தாய்ப் படர்ந்து விரிந்து வளம் மிக்குச் சங்ககாலப்புலவர் பாடிய புகழுடைய மலை கொல்லிமலை. இதன்கண் அறப்பளீசுவரர் கோயில் உள்ளது. கொல்லிமலையே ஒரு வைப்புத்தலமாகக் கொள்ளப்பட்டதுபோலும்.[21] கொல்லிமலையின் புகழுக்குக் கொல்லிப்பாவை என்ற தெய்விகப்பாவை காரணமாக இருந்தது. இப்பாவையைப் பற்றிய சங்கச்செய்யுள் அடிகள் பல.

'உரைசால் உயர்வரைச் கொல்லிக் குடவயின்
தேனுடை நெடுவரைத் தெய்வம் எழுதிய
வினைமாண் பாவை' (நற். 185)

'பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிதியல் பாவை' (நற். 192)

'செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி
தெய்வம் காக்கும் தீதுதீர் நெடுங்கோட்டு
அவ்வெள் அருவிக் குடவரை அகத்துப்
பெருநிலம் கிளரினும் திருநல உருவின்
மாயா இயற்கைப் பாவை' (நற். 261)

'பெரும்பூண் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்
கருங்கண் தெய்வம் குடவரை எழுதிய
நல்லியல் பாவை' (குறுந். 89)

'வல்வில் ஓரிக் கொல்லிக் குடவரைப்
பாவையின்' (குறுந். 100)

'ஆங்கேஓர்
வல்லவன் தைஇய பாவைகொல்' (கலி. 56:7)

'களிறுகெழு தானைப் பொறையன் கொல்லி
ஒளிறுநீர் அடுக்கத்து வியலகம் பொற்பக்
கடவுள் எழுதிய பாவை' (அகம் 62)

'செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி
நிலைபெறு கடவுள் ஆக்கிய
பலர்புகழ் பாவை' (அகம் 209)

முதலியன காண்க. இப்பாவை தன்னைக் காண வருவோரைத் தன்பேரழகினால் மயக்கிக் கொல்லும் இயல்பிற்று என்ப. இக்கொல்லிமலைப் பகுதியைக் கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய ஓரி என்பவன் ஆண்டு வந்தனன் என்ற செய்தி,

'மாரி வண்மகிழ் ஓரி கொல்லி' (நற். 265)

'வல்வில் ஓரி கொல்லிக் குடவரை' (குறுந். 100)

'ஓரி
பல்பழப் பலவின் பயங்கெழு கொல்லி' (அகம் 208)

'முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலர்க் கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி' (அகம் 209)

'கொல்லி ஆண்ட வல்வில் ஓரியும்' (புறம் 158)

முதலிய பாடற்பகுதியால் அறியலாம். காரி, ஓரியைக் கொன்று கொல்லிமலையைச் சேரனுக்கு உடைமையாக்கிய செய்தி நற்றிணை 320, அகம் 209 முதலியவற்றால் அறியமுடியும்.

கொல்லி அறைப்பள்ளி : தே. 6966. "கள்ளார் கமழ் கொல்லி அறைப்பள்ளி"

வல்வில் ஓரி ஆண்ட கொல்லிமலையின் ஒருபகுதி கொல்லிஅறைப்பள்ளியாகும். இங்கு அறப்பளீசுவரர் ஆலயம் உள்ளது. அறப்பளீச சதகம் என்ற பிரபந்தம் மிகவும் பிரசித்தமானது. அறைப்பள்ளி காண்க. [21]

86. கொழுநல் : தே. 7713. "அழுந்தூர் அரசே கொழுநல் கொல்லேறே"

87. கோட்டுக்கா : தே. 6322. "கொழுநீர் புடைசூழிக்கும் கோட்டுக்கா"

88. கோட்டுக்காடு : தே. 6957. "கோத்திட்டை கோட்டாறு கோட்டுக்காடு கடைமுடி"

இவற்றின் இருப்பிடங்கள் புலப்படவில்லை.

89. கோணம் : தே. 1885. "கண்ணார் கழுக்குன்றம் கயிலை கோணம் பயில் கற்குடி"

இது சுந்தரர் குறிப்பிடும் மாகோணம் (தே. 7715) ஆகிய திரிகோணமலையாய் ஈழத்தில் உள்ளதாகும்.

90. கோத்திட்டை :"கொள்ளம்புதூர் கோத்திட்டை கோட்டாறு" தே. 6957

"குறுக்கை வீரட்டம் கோத்திட்டைக்குடி வீரட்டானம்" தே. 6967

"கோத்திட்டையும் கோவலும் கோயில் கொண்டீர்" தே. 7246

கோத்திட்டை திருப்பரங்குன்றம்போலும். இது கோத்திட்டைக்குடி வீரட்டம் என்று நாவுக்கரசரால் வீரட்டங்களுள் சேர்க்கப்பட்டுள்ளது. 'பரன் குன்றம்' என்பதன் பரியாயமாகக் கோத்திட்டை என்ற பெயர் இறைவன் எழுந்தருளியுள்ள மேடு என்ற பொருளில் அமைந்தது; பல்லவர் காலத்துக் குடைவரைகோயில் உடையது. இறைவர் பரங்கிரிநாதர்; இறைவி ஆவுடைநாயகி. தீர்த்தம் சரவணதீர்த்தம்; மலையின்மேல் காசிதீர்த்தம், கந்ததீர்த்தம் என்பன உள. மதுரைக்கு மேற்கே 6.5 கி.மீ.இல் உள்ள இவ்வைப்புத்தலம் முருகன் திருத்தலமும் ஆகும்.[23]

கோவந்த புத்தூர் : தே. 5951. "கொள்ளிடக்கரை கோவந்தபுத்தூர்"

கோவந்தபுத்தூர் என்பது ஊர்ப்பெயர். விஜயமங்கை என்பது ஆலயத்தின் பெயர். பசு ஒன்றுக்கு இறைவன் அருள்புரிந்த தலம் ஆதலின் கோவந்தபுத்தூர் என்று பெயர் பெற்ற இத்தலம் இப்பொழுது கோவிந்தபுத்தூர் என்று வழங்குகிறது. இங்குள்ள பழைய சிவாலயத்தில் உள்ள சோழர்காலக் கல்வெட்டுக்கள் இறைவனை "ஸ்ரீவிசயமங்கைஉடையார்" "ஸ்ரீவிசயமங்கலத்து மகாதேவர்" என்றே குறிப்பிடுகின்றன.[2] பாண்டவருள் ஒருவனான விசயன் வழிபட்ட தலமாதலின் விசயமங்கை என்று பெயர் பெற்றதாகத் தலபுராணம் கூறுகிறது. கோவிந்த-புத்தூர் திருச்சிமாவட்டத்து உடையார்பாளையம்வட்டத்தில் உள்ளது.[30]

கும்பகோணத்திற்கு மேற்கே 10 கி.மீ. தொலைவில் உள்ளசுந்தரப்பெருமாள்-கோயில் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 6.4 கி.மீ.இல் உள்ள சிவத்தலமாகக் கருதப்படும் கோவிந்தபுத்தூர் இக்கொள்ளிடக்கரைக் கோவந்தபுத்தூரின் வேறானது. கொள்ளிடக்கரைக் கோவந்தபுத்தூர் தேவாரம் பெற்ற தலம்; மற்றொரு கோவிந்த புத்தூர் வைப்புத்தலம் ஆதல்கூடும்" என்று கூறுவதற்கு வேறோரிடத்தும் கோவிந்த

புத்தூர் தனித்துக் கூறப்படாமையால் அவ்வூரையே வைப்புத்தலமாகவும் கொள்ள இயலவில்லை. தேவாரத்தில் கொள்ளிடக்கரையிலுள்ள கோவந்தபுத்தூரே இடம்பெற்றுள்ளது.[2]

கோழி : "தென்னன் கோழி எழில் வஞ்சியும்" தே. 2772
"பூழியன் தென்னன் கோழிமன்" தே. 2773

சோழநாட்டுப் பண்டை உள்நாட்டுத் தலைநகரம் உறையூர் என்னும் கோழி. இங்குள்ள மூக்கீச்சுரம் பாடல்பெற்ற சிவாலயம் ஆகும்.[28] குக்குடேச்சுரம் காண்க.

91. சடைமுடி : தே. 6957. "சடைமுடி சாலைக்குடி...............கடைமுடி கானூர்"

தஞ்சைமாவட்டத்தில் திருக்காட்டுப்பள்ளிக்கு மேற்கே 8 கி.மீ.இல் உள்ள கோயிலடி என வழங்கும் பண்டைத் திருப்பேர் நகரத்தில் திருப்புறம் என வழங்கப் பட்ட பகுதியே சிவாலயப்பகுதிக்குப் பண்டு வழங்கப்பட்ட பெயராகும்.[28] "பாண்டியகுலாசினி வளநாட்டு மேலைமுறி திருச்சடைமுடி" (தெ.இ.க.தொ VII பக்கம் 303,304,307) "இவ்வூர்ப் பிடாகை திருச்சடைமுடித் திருச்சடைமுடி உடைய மகாதேவர்" என்ற கல்வெட்டுப்பகுதிகளை நோக்குக. இச்சிவாலயத்து இறைவனைத் "திருப்பேர்த்திருப்புறத்துறை மகாதேவர்", "உடையார் திருப்புறத்து உறைவார்", "திருப்புறத்துறையும் பெருமான்அடிகள்" என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இதனால் திருப்புறம் என்ற பெயரில் சிவாலயம் வழங்கப்பட்டமை அறியப்படும். இச்சடைமுடி, கோயிலடித் திருமால்கோயிலுக்கு 0.5 கி.மீ. கிழக்கில் உள்ளது. சடைமுடிக்குக் கீழ்பால் 2.4 கி.மீ.இல் கடைமுடி என்ற திருத்தலம் அமைந்துள்ளது. இதனால் கடைமுடியும் சடைமுடியும் ஒன்றனை ஒன்று அடுத்த திருத்தலங்களாம். இனிச் சடைமுடியைத் திருக்காட்டுப்பள்ளிக்கு 6 கி.மீ. கிழக்கே அமைந்துள்ள திருச்சடைவளந்தை என்ற சிற்றூராகக் கருதுவாரும் உளர்.[2]

92. சாலைக்குடி : தே. 6957. "சடைமுடி சாலைக்குடி தக்களூர்"

இருப்பிடம் போதரவில்லை.

93. சித்தவடம் : தே. 4182. "சித்தவடமும் அதிகைச் சேணுயர் வீரட்டம்"

பண்ணுருட்டியை அடுத்த திருவதிகைப்புறத்துள்ள திருமடம். இங்கு நம்பி யாரூரர் துயில்கொண்டபோது சிவபெருமான் அவர்முடியில் திருவடிசூட்டினார் என்பது பெரியபுராணம் கூறும் வரலாறு. 'தம்மானை அறியாத' என்ற சுந்தரர்பதிகம் (தே. 7618-7627) இந்நிகழ்ச்சியை ஒட்டி எழுந்தது. ஆக, சித்தவடம் வைப்புத்-தலங்களுள் ஒன்றாயிற்று.

சிரப்பள்ளி : தே. 6966. "சிரப்பள்ளி சிவப்பள்ளி"

திருச்சிராப்பள்ளியே சிரப்பள்ளியாகும். 'சிராப்பள்ளிக் குன்றுடையானை' (தே. 1058) வழிபட்டு ஞானசம்பந்தர் ஒரு பதிகமே பாடியுள்ளார். சிராப்பள்ளியே சிரப்பள்ளி, சிரகிரி என மருவித் திரிசிரபுரம் ஆகி இப்பொழுது மீண்டும் திருச்சி ராப்பள்ளி ஆகியுள்ளது[18] என்ப.

94. சிவப்பள்ளி: தே. 6966. "சிரப்பள்ளி, சிவப்பள்ளி, செம்பொன்பள்ளி"

தஞ்சைமாவட்டத்து மாயூரவட்டத்திலுள்ள சிவன்பள்ளி என்ற வைப்புத்தலம் திருச்சிவம்பள்ளியாக இப்பொழுது திருச்சம்பள்ளி என மருவி வழங்குகிறது.[18]

95. சிறப்பள்ளி : தே. 1887. "சிறப்பள்ளி சிராப்பள்ளி செம்பொன்பள்ளி"
இருப்பிடம் புலனாகவில்லை.

96. சூலமங்கை : தே. 6964. "துறையூர் சோற்றுத்துறை சூலமங்கை"
பசுபதிகோயில் என்ற இருப்புபபாதை நிலையம் தஞ்சையிலிருந்து கும்பகோணம் செல்லும் இருப்புப்பாதைவழியில் 4 ஆவது நிலையமாக உள்ளது. அந்த நிலையத்தை அடுத்துள்ள ஊரே சூலமங்கை.[23]

செங்குன்றூர் : தே. 6959. "அஞ்சைக்களம் செங்குன்றூர்"
இது குன்றை என்று வழங்கும்.[28] குன்றையூர் காண்க. கொடிமாடச்செங்குன்றூர் எனப்படும் பாடல்பெற்ற திருச்செங்கோட்டுத் திருத்தலம் இதனின் வேறானது.

97. செந்தில் : தே. 6489. "நம்செந்தில் மேய வள்ளி மணாளர்க்குத் தாதை
கண்டாய்"

இது முருகப்பெருமானுக்குரிய சிறப்பான தலங்களுள் ஒன்று. இது தென் பாண்டிநாட்டில் கடற்கரைக் கோயிலாக விளங்கும் பழம்பதி; சங்ககாலம்தொட்டுச் சிறப்புடையது.[28]

'வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறை' (புறம் 55)

முதலிய பகுதிகளைக் காண்க. "உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர், அலைவாய்" என்று நக்கீரர் இத்திருப்பதியை முருகாற்றுப்படையில் போற்றுகிறார். சூரனை வென்று அறத்தை நிலைநாட்ட அவதரித்த முருகப்பெருமான் அவன் கோநகரான வீரமகேந்திரத்தை அடையும் முன் படைவீடாகக் கொண்ட இடம் திருச்சீர் அலைவாய் ஆகும். செந்திலம்பதி என்று கந்தபுராணம் கூறும். இங்கு முருகப்பெருமான் போருக்குப் புறப்படும் முன் சிவபெருமானை வழிபாடு செய்த சிறப்புப் பற்றி இத்தலம் தேவார வைப்புத்தலமாயிற்று.[18]

98. செம்பங்குடி : தே. 6968. "நற்கொடிமேல் விடைஉயர்த்த நம்பன் செம்பங்குடி"
சீகாழிக் கோயிலுக்கு வடகிழக்கே 3.2 கி.மீ.இல் உள்ள வைப்புத்தலம். இது செம்பியன்குடி என்ற பெயரின் மரூஉ ஆகலாம்.[18]

99. சேலூர் : திருஞானசம்பந்தர் புராணம் - 364
காவிரி பாயும் சோழநாட்டு வைப்புத்தலங்களுள் ஒன்றான சேலூர் தஞ்சை மாவட்டத்துப் பாபநாசவட்டத்தில் பாபநாசத்துக்குத் தென்மேற்கில் 5 கி.மீ.இல் உள்ள தேவராயன்பேட்டை என்று இக்காலத்து வழங்கப்படும் ஊராகும்.[28]

இவ்வூர்ச் சிவாலயக் கல்வெட்டுக்களில் இவ்வூர் 'இராசகேசரி சதுர்வேதிமங்கலத்துச் சேலூர்' எனவும், பெருமான் 'சேலூர் மகாதேவர்' எனவும் சோழர்காலத்து வழங்கப்பட்ட செய்தியை அறியலாம். இவ்வூர் பிற்காலத்து மச்சபுரி என வழங்கப்பட்டது. இறைவன் பெயர் மச்சபுரீசுவரர் என்றாயிற்று. சம்பந்தர் வழிபட்ட சிவாலயம் தேவராயன்பேட்டையிலுள்ள மச்சபுரீசுவரர் ஆலயமே.[18]

"இன்னிசைத் தமிழ்புனைந்து இறைவர் சேலூருடன்
பன்னு பாலைத்துறைப் பதிபணிந்து ஏகினர்" (பாடல் 364) என்று
சேக்கிழார் திருஞானசம்பந்தர் புராணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சேற்றூர் : தே. 6969. "நாலூரும் சேற்றூரும் நாரையூரும்"

திருச்சேறை என்னும் பாடல்பெற்ற தலம் 'சத்திரிய சிகாமணி வளநாட்டுச் சேற்றூர்க் கூற்றத்துச் சேற்றூர்' என்று கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.[23] இது கும்பகோணம்-திருவாரூர்ப் பேருந்து சாலையில் இடையே உள்ள தேவாரம் பெற்ற திருப்பதியாம்.

100. சையமலை : தே. 6974. "விந்தமாமலை வேதம் சையம் மிக்க வியன்பொதியில்"

இது மேற்குத் தொடர்ச்சிமலையில் காவிரி தோன்றும் ஸஹ்யமலைப்பகுதியாகும்.

101. சோமேசம் : (சோமீச்சுரம்) தே. 6964. "தோணிபுரம் துருத்தி சோமீச்சுரம்"

இது கும்பகோணத்திலுள்ள சோமநாதர் கோயில்.[28] இங்குச் சந்திரன் சிவபெருமானை வழிபட்டுச் சிறப்புற்றதால் இவ்வாலயம் சோமீச்சுரம் எனவும் சோமநாதர் கோயில் எனவும் வழங்கப்பட்டது.[18]

102. ஞாழல்வாயில் : தே. 6972. "முல்லைவாயிலொடு ஞாழல்வாயில்"

ஞாழல்வாயிலும், ஞாழற்கோயிலும் ஒன்றாக இருக்கலாம்.

ஞாழற்கோயில் : தே. 6970. "கடிபொழில்சூழ் ஞாழற்கோயில்"

பாடல்பெற்ற தலமாகிய திருப்பாதிரிப்புலியூர் கடைஞாழலூர் என்று வழங்கப்பட்டு இக்காலத்துக் கடலூராக மருவிற்று. இங்குள்ள ஆலயத்தை ஞாழற்கோயில் என்றார்போலும்.[23]

ஞாழல் என்பது கொன்றைமரத்தின் ஒருவகையாகிய புலிநகக்கொன்றையாம். கொன்றை சிவபெருமானுக்கு மிக உகப்பான மலர்.

தஞ்சைமாவட்டத்தில் விளநகர் என வழங்கும் விளைநகரில் அமைந்த கோயிலே திருஞாழற்கோயில் என்ப. உத்தமசோழனுடைய முதற் பெருந்தேவியார் இவ்வூர்ப் பெருமானுக்கு அளித்த நிவந்தம் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டொன்று "ஆற்றங்கரையில் அழகுற அமர்ந்த ஞாழற்கோயிலுடையார்க்கு அர்த்தயாமக் கட்டளைக்காக" விடுத்த நிலக்கொடை பற்றி இயம்புவதால் ஞாழற்கோயில் விளநகரில் உள்ள கோயில் ஆகலாம்.[18]

103. தகடூர் : தே. 7347. "தாழையூர் தகடூர் தக்களூர்"

'நிகரிலி சோழமண்டலத்துத் தகடூர்நாட்டுத் தகடூர்' (க.அ. 1927இன் 285) என்று குறிப்பிடப்படும் இக்காலத் தருமபுரி, சங்ககாலத்தில் அதியமான்கள் ஆண்ட பகுதியாகும். இப்பொழுது அப்பெயருடைய மாவட்டத்துத் தலைநகராக இருக்கும் தருமபுரியே தகடூர் ஆகும்.

தகட்டூர் என்று பாடம் கொண்டு, தஞ்சைமாவட்டத்துத் திருத்தருப்பூண்டியிலிருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ளதும், பிரசித்தமான பைரவர்கோயில் உடையதும் ஆகிய ஊர் என்ற கருத்தும் நிலவுகிறது.[25]

| | | |
|---|---|---|
| 104. தக்களூர் : | "தருமபுரத்துள்ளார் தக்களூரார்" | தே. 6265 |
| | "தஞ்சைத் தளிக்குளத்தார் தக்களூரார்" | தே. 6770 |
| | "சாலைக்குடி தக்களூர் தலையாலங்காடு" | தே. 6957 |
| | "தாழையூர் தகடூர் தக்களூர்" | தே. 7347 |

திருநள்ளாற்றிலிருந்து 1.6 கி.மீ.இல் அமைந்துள்ள வைப்புத்தலம். இது

அருமொழித்தேவவளநாட்டுத் தக்களூர்நாட்டுக்குத் தலைநகரமாக இருந்த செய்தி கல்வெட்டொன்றால் புலனாகிறது.[4]

*105.* தங்களூர் : தே. 7550. "நாலூர் தங்களூர் தமிழானென்று பாவிக்கவல்ல"
இருப்பிடம் புலனாகவில்லை.

*106.* தஞ்சாக்கை : தே. 7355. "பாம்பணி பாம்புரம் தஞ்சை தஞ்சாக்கையே"
பாண்டியநாட்டுத் தஞ்சாக்கூர் பாண்டியநாட்டில் மதுரையிலிருந்து இராமேசுவரம் இருப்புப்பாதையில் திருப்பூவணத்தை அடுத்த திருப்பாசேத்தி நிலையத்திற்குத் தெற்காக 5 கி.மீ. தொலைவில் உள்ளது. மிகப் பிரசித்தமான தஞ்சைவாணன் கோவை இவ்வூரை யாண்ட தஞ்சைச் சந்திரவாணன் என்னும் தலைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது.[21]

*107.* தஞ்சை : "மஞ்சார் பொதியின்மலை தஞ்சை வழுவூர்" தே. 6962
"பாம்பணி பாம்புரம் தஞ்சை தஞ்சாக்கையே" தே. 7355
'மருகல்நாட்டுத் தஞ்சை' இக்காலத்துக் கீழைத்தஞ்சாவூர் என்று வழங்கப்படுகிறது.[28] இத்தலம் திருமருகலிலிருந்து தென்கிழக்கில் 6.4 கி.மீ.இல் உள்ளது. நன்னிலம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து திருமருகல் 12 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூர் செருத்துணை நாயனாருடைய திருத்தலம் ஆகும்.[25]

*108.* தஞ்சைத் தளிக்குளம் : "தஞ்சைத் தளிக்குளத்தார் தக்களூரார்" தே. 6770
"வளைகுளமும் தளிக்குளமும்" தே. 6975
'வெண்ணிநாட்டுத் தஞ்சை' எனப்படும் தஞ்சை இக்காலத் தஞ்சைமாவட்டத் தலைநகராகும். தளிக்குளம் என்பது தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் முன்னை நிலை என்பர் சிலர்.[28] தஞ்சைத் தளிக்குளம்கோயில் கல்வெட்டுச் சிதைவுகளில் இரண்டாம்இராசராசன் காலத்தனவாகியவைகளும் கிட்டியிருப்பதால், தஞ்சைப் பெரியகோயிலின் வடபுறத்துள்ள சிவகங்கைத்தீர்த்தக் குளக்கரையில் அமைந்திருந்த பழைய கோயிலே என்ற கருத்தே ஏற்றது.[23]

*109.* தண்டங்குறை : தே. 7348. "தண்டந்தோட்டம் தண்டங்குறை தண்டலையாலங்காடு"

இக்காலத்தில் தண்டாங்கோரை என வழங்கப்படும் வைப்புத்தலம். பசுபதிகோயில் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 3.2 கி.மீ. தொலைவில் மேற்கே அமைந்துள்ள திருத்தலம் இது.[26]

*110.* தண்டந் தோட்டம் : தே. 7348. "தண்டந்தோட்டம் தண்டங்குறை"
"உய்யக்கொண்டார்வளநாட்டுத் திருநறையூர்நாட்டுத் தண்டந்தோட்டம்" என்று கல்வெட்டுக்கள் கூறும் இவ்வூர் திருநாகேசுரத்துக்கு அருகில் உள்ளது; பேணுபெருந்துறையிலிருந்து 3.2 கி.மீ.இல் உள்ளது.[28]

*111.* தண்டலை : தே. 6771. "தண்டலையார் தலையாலங்காட்டினுள்ளார்"
தண்டலை என்பது ஊர்ப்பெயராகவும், நீணெறி என்பது ஆலயத்தின் பெயராகவும் இருக்கலாம் என்பர் சிலர்.[18] அங்ஙனமாயின் தண்டலைநீணெறி பாடல்பெற்ற தலமாகும்.[28] தண்டலை என்ற தலம் 'கணமங்கலம்' என்ற பெயரில் சோழநாட்டில் உள்ளது. இது அரிவாட்டாய நாயனாருடைய திருத்தலம். இது திருத்தருப்பூண்டி

இருப்புப்பாதை நிலையத்திலிருந்து வடக்கே 3.5 கி.மீ.இல் திருவாரூருக்குச் செல்லும் பெருவழியில் உள்ளது. இவ்வூருக்குக் கீழ்பால் 0.5 கி.மீ.இல் உள்ள கணமங்கலத் திடல் என்ற இடமே தண்டலை என்ற வைப்புத்தலம். இவ்வூர் இப்போது அழிந்து-விட்டது.[23]

*112.* தவத்துறை : தே. 6976. "பண்டெழுவர் தவத்துறை"

சப்தரிஷிகள் தவம்செய்து பயன்பெற்ற தலம் இது. சம்பந்தர் தவத்துறைப் பெருமானைப் பாமாலை பாடித் தொழுதார் என்ற செய்தியைச் சேக்கிழார்

"மன்னும் தவத்துறை வானவர்தாள் எய்தி இறைஞ்சி எழுந்து நின்றே

இன்தமிழ்மாலை கொண்டு ஏத்தினர் " (திருஞான. 347) என்று குறிப்பிடுகின்றார். இக்காலத்து அப்பதிகம் கிட்டிற்றிலது. தவத்துறை இக்காலத்து லால்குடி என்ற பெயருடன் திருச்சிராப்பள்ளியை அடுத்த திருவானைக்காவுக்கு 19 கி.மீ. வடகிழக்கில் உள்ளது. சோழர்கள் காலத்தில் இத்தலம் "வடகரைமழநாட்டுப் பாண்டியகுலாசனி வளநாட்டு இடையாற்றுநாட்டைச் சேர்ந்தது."

இக்கோயிலில் முதற்பராந்தகனின் 37 ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கல் வெட்டு சிவகோசரி பிடாரன் என்பார் திருத்தவத்துறைப்பட்டாரகர் திருமுன்பே நித்தம் மூன்று காலமும் பிராமணர் இருவர் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய நிலம் வழங்கிய செய்தியைக் குறிப்பிடுவதால், இக்கோயில் 10 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் மிகவும் சிறப்புற்றிருந்த செய்தி பெறப்படுகிறது.[2]

*113.* தவப்பள்ளி : தே. 6966. "செழுநனிபள்ளி தவப்பள்ளி"

இடம் புலப்படவில்லை.

*114.* தளிச்சாத்தங்குடி : தே. 6515. "எல் ஆரும் தளிச்சாத்தங்குடியிற் காண"

பெருவேளூருக்குத் தென்புறத்திலும் மணக்காலுக்கு வடபுறத்திலுமாக இரண்டு ஊர்களுக்கும் இடையில் உள்ளது தளிச்சாத்தங்குடி.[28] குளிக்கரை இருப்புப்பாதை நிலையத்திலிருந்து வடக்கே சாலைவழி வந்து ஆற்றைப் பரிசிலால் கடந்து அக்கரை யில் 6.4 கி.மீ.இல் உள்ள கரவீரத்திலிருந்து ஒரு கி.மீ.இல் தளிச்சாத்தங்குடியை அடையலாம். பெயருக்கு ஏற்ப இச்சிற்றூர் நிலம் முழுதும் அண்மைக்காலம் வரை கோயிலுக்கு உடைமையாகவே இருந்தது என்ற செய்தி குறிப்பிடத்தக்கது.[18]

*115.* தாழையூர் : தே. 7347. "தாழையூர் தகடூர் தக்களூர்"

வடஆர்க்காடுமாவட்டத்தில் செங்கம்வட்டத்தில் உள்ள தாழையூர் வேடியப்பன் கோயில் நடுகல்லில் முதல் பராந்தகன் காலத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு "பல்குன்றக் கோட்டத்து வேணாட்டுத் தாழையூர்" என்ற தொடரைக் கொண்டிருப் பதை உட்கொண்டும், இரண்டாம் நந்திவர்மன் காலத்ததாகிய நடுகல் கல்வெட்டு "வேணாடிளவேண் மறுக்கோட்டு வேட்டுவர் தாழையூர்" என்று குறிப்பிடுவது கொண்டும், செங்கம்வட்டத்திலுள்ள தாழையூர் வைப்புத்தலம் ஆகலாம்.[20]

திரு அருணைக்கலம்பகம், திருவாரூர்க்கோவை முதலிய பிரபந்தங்களை இயற்றிய தோடு, சவுந்தரியலகரிக்கு உரைஎழுதிய உண்ணாமுலைஎல்லப்பநயினார் என்னும் புலவர் இவ்வூரினர் என்பது,

"கவிராச பண்டிதன் தன்நிறைமனம் கருதித்

தாழை மாநகரில் நிலைபெற வாழ்கவி எல்லான்

உரை தேர்ந்தெழுதினன்" என்று இவ்வாசிரியர் உரைப்பாயிரம் கூறுவதனால் அறியலாம். இவ்வாசிரியர் பிறந்த தாழையூர் திருவண்ணாமலைக்கு 40 கி.மீ. தொலை

வில் உள்ளது என்ற குறிப்பும் முன் குறிப்பிட்ட தாழையூரைப் பற்றியதே.[19]

தருமபுரிவட்டத்துத் தாளநத்தம் என்ற ஊரில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றில், 'ஆரப்பூர்ப்பற்றில் பெரியதாழையூர் உடைய' என்ற தொடர் காணப்படுவ தால் அவ்வூர் 'பெரியதாழையூர்' என்பதும் எல்லப்பநாவலர் தோன்றிய தாழையூரே சுந்தரர் பாடிய வைப்புத்தலம் என்பதும் போதரும்.[28]

*116*. திங்களூர் : தே. *6508*. "தேரூரார் மாவூரார் திங்களூரார்"

அப்பூதியடிகள் பிறந்துள்ள திருத்தலமாகிய திங்களூர் திருவையாற்றிற்கும் திருப்பழனத்திற்கும் இடையே திருப்பழனத்துக்கு வடக்கே 1.6 கி.மீ.இல் உள்ள சிற்றூ ராக உள்ளது. இவ்வூரில் மாசி மாதத்தில் சந்திரதரிசனம் விசேடம். இவ்வூரில் பாம்புக்கடியால் மாய்ந்ததில்லை என்கின்றனர். இறைவர் ஆபத்சகாயர். இறைவி பெரியநாயகி. கோவைமாவட்டத்தில் உள்ள மற்றொரு திங்களூரும் சந்திரனுடன் தொடர்பு உடையது என்ப.[18,23]

*117*. திண்டீச்சுரம் : "கெடில வீரட்டமும் திண்டீச்சுரமும்" தே. *6325*
"திண்டீச்சுரம் சேய்ஞலூர் செம்பொன்பள்ளி" தே. *6963*

திண்டீச்சுரம் என்னும் திருக்கோயில் தென்னார்க்காடுமாவட்டத்திலுள்ள திண்டி-வனம் என்ற ஊரில் உள்ள சிவாலயமே. ஆங்குள்ள கல்வெட்டு "ஓய்மாநாட்டுக் கிடங்கில் திருத்திண்டீசுவரம்" என்று குறிப்பிடுகிறது. சங்ககாலத்தில் நல்லியக்-கோடன் ஆண்ட கிடங்கில் என்ற ஊர் இப்பொழுது திண்டிவனத்தின் உட்பகுதி யாக உள்ளது. இக்கோயில் முதல்இராசராசன் முதலிய சோழமன்னருடைய ஆதர வைப் பெற்ற செய்தி இங்குள்ள கல்வெட்டுக்களால் புலப்படுகிறது.[18]

*118*. திரிபுராந்தகம் : தே. *6322*. "திரிபுராந்தகம் தென்னார் தேவீச்சுரம்"

இது தெலுங்குநாட்டுக் கர்நூல்மாவட்டத்தில் உள்ளது என்ப. (தெ.இ.க.தொ. XII 247)[28]

மதுராந்தகநல்லூர் எனவும், தியாகசமுத்திரநல்லூர் எனவும் சாசனங்களில் கூறப்படும் பதி தொண்டைநாட்டு மணவிற்கோட்டத்து அமைந்த கூகம் என்னும் ஊரே. ஞானசம்பந்தர் பாடிய திருவிற்கோலமுடையார் திரிபுராந்தக கோலத்தில் அமர்ந்தருளும் இத்திருப்பதியிலுள்ள கோயிலே திரிபுராந்தகம். இறைவன் பெயர் திரிபுராந்தகர் என்பது.[18]

*119*. திருக்குளம் : தே. *6975*. "இடைக்குளமும் திருக்குளத்தோடு அஞ்சைக்களம்"

இருப்பிடம் புலப்படவில்லை

*120*. திருச்செந்துறை : ஞானசம்பந்தர்புராணம் -*342* 'திருசெந்துறையே முதலா'

காவிரித் தென்கரையில் சம்பந்தர் வழிபட்ட தலங்களுள் ஒன்று. திருச்சி-குளித் தலைப் பேருந்து சாலையில் திருச்சிக்கு மேற்கில் 10 கி.மீ.இலும், அந்தநல்லூருக்குக் கிழக்கே 1.6 கி.மீ.இலும் உள்ள ஜீயபுரமே திருச்செந்துறை ஆகும். இவ்வூர்ச் சிவா லயம் பராந்தகன்மகன் அரிகுலகேசரியின் தேவியால் கற்றளியாக்கப்பட்டது. இறைவர் கற்றளிப் பரமேசுவரர்; சந்திரசேகரர் எனவும் வழங்கப்படுகிறார்.[2]

*121*. திருமலை : தே. *7353*. "துருத்தி நெய்த்தானம் திருமலை"

வடஆர்க்காட்டில் திருமலை என்னும் குன்றம் வைகனூரை அடுத்து இருத்தலால் வைகைத் திருமலை என வழங்குகிறது. சமணமுனிவர் பலர் அம்மலையில் வாழ்ந்தனர்.

முதல்இராசராசன் காலத்தில் குணவீரமாமுனிவர் திருமலை ஏரிக்குக் கலிங்கு அமைத்து வைகைமலையின் இருமருங்கும் நெல் விளைவித்தார் என்று அம்மலைக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.[18]

முதல்இராசராசன் திருத்தமக்கையார் அம்மலையில் தம்பெயரால் அமைத்த குந்தவை ஜினலயத்தில் பொன்னூரைச் சார்ந்த நங்கை ஒருத்தி, அருகன் திருவுருவை நிறுவிப் பொன்னெயில்நாதனை வைகைத்திருமலைக்கு ஏறிஅருளப்பண்ணினுள் என்று அக்கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவ்வூர் அருகதேவன் வீற்றிருந்த மலையாதலின் "எண்குண இறைத் திருமலை" என்று கல்வெட்டுக்களில் போற்றப்படுகிறது. இதுவே நாவுக்கரசர் பாடிய வைப்புத்தலம் ஆகலாம் என்பர்.

தென்காசியிலிருந்து 13 கி.மீ. தொலைவில் குற்றாலத்துக்கு அருகில் உள்ள திருமலை என்ற ஊரில் இப்பொழுது முருகன்கோயில் விசேடமாகவுள்ளது. இதன் தலவிருட்சம் புளியமரம். இதுவும் திருமலை என்ற வைப்புத்தலம் ஆதல் கூடும்.[14]

*122. திருவண்குடி : தே. 1893. "அத்தங்குடி தண் திருவண்குடி"*

இருப்பிடம் போதரவில்லை.

*123. திருவாதிரையான் பட்டினம் : தே. 7550. "திங்களூர் திருவாதிரையான் பட்டினமூர்"*

தஞ்சைமாவட்டத்தில் பட்டுக்கோட்டைவட்டத்தில் உள்ளதோர் ஊர் என்ப. இது காவிரிப்பூம்பட்டினப்பகுதி ஆகலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.[28]

*124. திருவாலந்துறை : 'திருஆலந்துறை திருச்செந்துறை' ஞானசம்பந்தர் புராணம் - 342.*

காவிரியின் வடகரையில் அமைந்தது புள்ளமங்கை ஆலந்துறை. அந்நதியின் தென்கரையில் திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 11.2 கி.மீ. தொலைவில் காவிரியின் தென்கரை வைப்புத்தலமாகிய அந்துவநல்லூரே இக்காலத்து அந்தநல்லூர் என்று வழங்கப்படுவதாய்த் திருஆலந்துறை என்ற பழைமையான சிவாலயம் உடைய ஊர். இறைவன் பெயர் வடதீர்த்தநாதர் என்பது. வடதீர்த்தம் என்பது ஆலந்துறையைக் குறிக்கும் வடசொல்.[18]

*125. திருவேட்டி : தே. 6324. "தீக்காலி வல்லம் திருவேட்டி"*

இது சென்னையைச் சேர்ந்த திருவல்லிக்கேணிப் பகுதியில் உள்ள திருவேட்டீசுவரன்-பேட்டை.[28] இறைவர்பெயர் திருவேட்டீசுவரர். கேரளப் பகுதியில் திருவாட்டாறு என்ற திவ்வியதேசத்தை அடுத்துத் திருவேட்டி என்பதோர் ஊர் உளது. அதனைக் கொள்ளுதலும் ஆம்.

*126. துடையூர் : தே. 6969. "தொழூர்தானும் துடையூரும்"*

திருச்சிராப்பள்ளிக்கு அண்மையில் உள்ள துறையூர் திருப்பாச்சில் ஆச்சிராமத்திலிருந்து 5 கி.மீ. தொலைவிலுள்ளது. இத்துறையூரே துடையூர் ஆகும். ஆகவே திருச்சிமாவட்டத்து லால்குடிவட்டத்தில் உள்ள துறையூரே துடையூராகும். அங்குள்ள ஆலயத்தின் பெயர் கடம்பந்துறை.

இனி, கடம்பந்துறை என்ற கோயில்பெயரை ஊர்ப்பெயராகக் கொள்ளின், 'காவிரிசூழ் கடம்பந்துறை' என்று தேவாரத்தில் (6976) போற்றப்படும் துறை திருச்சிமாவட்டத்துக் குழித்தலை என்ற ஊராகும்; இங்குள்ள இறைவன் கடம்ப-

வனநாதர் எனப்படுகிறார்; கோயில் கடம்பங்கோயில் எனப்படுகிறது. "காவிரியின் தென்பால் குழித்தண்டலையானைக் கூறு" என்பது காடவர்கோன் திருவெண்பா. சுந்தரருடைய 13 ஆம் பதிகமுடைய பெண்ணை வடபால் துறையூர் இவ்வைப்புத்-தலமன்று.[18]

127. துவையூர் : தே. 6969. "துவையூரும் தோழூர்தானும் துடையூரும்"
இடம் புலப்படவில்லை.

128. தெள்ளாறு : தே. 6975. "தெள்ளாறும் வளைகுளமும் தளிக்குளமும்"
வடஆர்க்காடுமாவட்டம் வந்தவாசி வட்டத்தில் திண்டிவனம்-வந்தவாசி வழியில் தெள்ளாறு என்னும் ஊர் உள்ளது. நந்திவர்மன் காலத்தில் நிகழ்ந்த தெள்ளாற்றுப் போரினை நந்திக்கலம்பகம் பாராட்டுகிறது. இவ்வூர் வெண்குன்றக் கோட்டத்தைச் சேர்ந்தது என்றும், இங்குள்ள சிவன்கோயில் திருமூலத்தானம் என்னும் பெயருடையதென்றும் கல்வெட்டுக்கள் கூறும்.[18]

129. தென்களக்குடி : தே. 6968. "கற்குடி தென்களக்குடி செங்காட்டங்குடி"
பாண்டியநாட்டின் களக்குடிநாட்டின் தலைநகர் இது. இஃது இக்காலத்தில் கரவந்தபுரம் என்று வழங்குகின்றது என்ப. கி.பி. 8 ஆம் நூற்றாண்டினனான நெடுஞ்சடையன் பராந்தகன் தான் தென்திசையில் வென்ற நாடுகளைப் பாதுகாத்தற்கும் அங்கு வாழ்ந்துகொண்டிருந்த குறுநிலமன்னர்களைக் கண்காணித்தற்கும் கரவந்தபுரத்தில் அகழும் மதிலும் உடையதொரு கோட்டையை அமைத்து அதில் நிலைப்படை ஒன்றை நிறுவினான். அவ்வூர், கல்வெட்டுக்களில் 'களக்குடிநாட்டுக் களக்குடியான கரவந்தபுரம்' என்று கூறப்பட்டுள்ளது. இப்பொழுது இது திருநெல்வேலி வட்டத்தில் உக்கிரன்கோட்டை என்னும் பெயருடன் இழிந்த நிலையில் இருக்கிறது.[29]

130. தென்கோடி : தே. 1884. "வெண்ணி கடல்சூழ் கழிப்பாலை தென்கோடி"
இது கோடிக்குழகர் என்ற தலமா, தனுக்கோடியா, என்பது திட்டமாகப் புலப்பட்டிலது. தனுக்கோடியில் கோயில் இல்லாமையால் இது கோடிக்குழகர் என்ற தலமாகலாம்.[28]
தான் ஏழுநாள் வேண்டியும் கடலைக் கடக்க வழிகூற வாராத கடலரசன்மீது ஸ்ரீராமபிரான் வில்லை வளைத்துக் கடுஞ்சரம் துரந்த இடம் தனுக்கோடி.
திருவிடைமருதூருக்கு அருகில் திருக்கோடிகா என்பது ஒரு சோலைக்கோயில் ஆதலின், திருக்கோடிகாவல் என்ற பெயருடன் காணப்படுகிறது.[18]

தென்பனையூர்: தே. 7354. "நாளும் நன்னிலம் தென்பனையூர் வடகஞ்சனூர்"
பனையூர் பாடல் பெற்ற தலம். காவிரியின் தென்கரையில் உள்ள தலமாதலின் தென் என்னும் அடைமொழி பெற்றது என்ப.[28]

131. தென்னூர் : தே. 7352. "தென்னூர் கைம்மைத் திருச்சுழியல்"
கன்னியாகுமரிமாவட்டம் தோவாளைவட்டத்தில் உள்ள தெரிசனங்கோப்பு என்ற ஊர் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் வேணாட்டரசிற்கு உட்பட்டதாயிருந்தகாலை, வேணாட்டு வேந்தன் ஆதித்தவர்மனாகிய சிறைவாய் மூத்ததம்பிரான் அவ்வூர் ஸ்ரீராமேசுவரசுவாமிக்கு வேண்டும் நிவந்தங்களுக்குத் தென்னூரில் சிலநிலங்கள் அறக்கொடையாக வழங்கியதைக் கல்வெட்டுக் குறிப்பதால், தென்னூர் தெரிசனங்-கோப்புக்கு அண்மையில் உள்ளதொரு சிற்றூர் ஆகலாம்.[8]

132. தேங்கூர் : "தேங்கூரும் திருச்சிற்றம்பலமும் சிராப்பள்ளி" தே. 7350
"நாங்கூர் உறைவாய் தேங்கூர் நகராய்" தே. 7718

தேங்கூர் தஞ்சாவூர்மாவட்டத்தில் திருவாரூருக்குத் தெற்கே 16 கி.மீ. தொலைவில் உள்ள ஊர். இவ்வூரில் பாண்டியன் குலசேகரதேவனின் 31ஆம் ஆண்டுக் கல்வெட்டு (கி.பி. 1298-99) காணப்படுகிறது.[7]

133. தேசனூர் : தே. 7552. "தேசனூர் வினை தேயநின்றான் திருஆக்கூர்"
இருப்பிடம் புலப்படவில்லை.

134. தேரூர் : தே. 6508. "தேரூரார் மாவூரார் திங்களூரார்"

கன்னியாகுமரிமாவட்டம் அகத்தீசுவரம்வட்டம் சுசீந்திரத்தில் உள்ள பெருமாள்கோயிலில் 13,17 ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தனவாகக் கொள்ளப்படும் கல்வெட்டுக்களில் "நாஞ்சிநாட்டுத் தேரூர் நாகமணி மகள் நாகம்மை" என்று காணப்படும் (கன்.கல்.தொ. எண்.220,239 ஆண்டு 1968) குறிப்பைக்கொண்டு தேரூர் நாஞ்சில்நாட்டில் உள்ளதோரூர் என்பது பெறப்படுகிறது.[8]

சுசீந்திரம் பழையஆற்றின் வடகரையில் அமைந்துள்ள சிற்றூராகிய தேரூரே கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் ஊராகும். சுசீந்திரம்இறைவனை வழிபட வந்த தேவேந்திரன் தன்தேரை இவ்வூரில் நிறுத்திவிட்டுக் கால்நடையாகவே சுசீந்திரம் நோக்கிச் சென்றான் ஆதலின் இவ்வூர் தேரூர் என்று பெயர்பெற்றதாகத் தலபுராணம் கூறும்.[9]

135. தேவனூர் : தே. 7352. "எங்கள்பிரான் உறையும் திருத்தேவனூர்"

சயங்கொண்டசோழமண்டலத்து உத்தமசோழவளநாட்டுச் சிங்கபுரநாட்டுத் தேவனூர் திருநாகேசுவரம் உடைய மகாதேவர் (செ.க.அ. 1928இன் 241) என்ற கல்வெட்டுத் தொடரால் இவ்வூரின் இருப்பிடம் போதரும்.[28] செஞ்சியிலிருந்து சேத்துப்பட்டு செல்லும் பேருந்துச்சாலையில் 13 கி.மீ. உள்ள குறுக்குச்சாலையில் இறங்கி இவ்வூர்க்குச் செல்லலாம். அருணகிரிநாதர் திருப்புகழ் பெற்ற முருகன்கோயிலும் இங்குண்டு. திருக்கோவலூருக்கு 3 கி.மீட்டரிலும், செய்யூர் கள்ளக்குறிச்சி சயங்கொண்டசோழபுரம் ஆகிய வட்டங்களிலும் தேவனூர் என்ற பெயருடைய சிற்றூர்கள் உள்ளன என்ற கருத்தும் நோக்கத் தக்கது.[1]

136. தேவன்குடி : "புனல்சூழ் குருந்தங்குடி தேவன்குடி" தே. 1893
"நல்லூரும் தேவன்குடி மருகலும்" தே. 6318
"செம்பொன்பள்ளி தேவன்குடி" தே. 6955
"புற்குடி மாகுடி தேவன்குடி" தே. 6968

இக்காலத்தில் கும்பகோணத்தை அடுத்த வேப்பத்தூர் பண்டு திருந்துதேவன்குடி என்ற பெயரிலும், அங்குள்ள சிவாலயம் அருமருந்து என்ற பெயரிலும் வழங்கப்பட்டன. இது சம்பந்தர் பதிகம் பெற்ற தலம்.[18] தேவன்குடி என்பது திருந்து தேவன்குடியின் பெயர்ச்சுருக்கமா, அன்றித் தனிப்பட்ட வேறோர் வைப்புத்தலமா என்பது ஆராயத்தக்கது.[28]

137. தேவீச்சுரம் : தே. 6322. "திரிபுராந்தகம் தென்னூர் தேவீச்சுரம்"

இவ்வைப்புத்தலத்தின் இருப்பிடம் போதரவில்லை. தேவீச்சுரம் இந்நாளில் வடிவீச்சுரம் என வழங்கப்படுகிறது என்ப.[28]

நாஞ்சில் நாட்டில் கன்னியாகுமரிக்கு அணித்தாகத் தேவி சிவனை வழிபட்டுப்

பேறு பெற்ற தலம் ஒன்றுள்ளது, அங்குள்ள இறைவன் பெயர் தேவீசுவரர் என்பது. இறைவியின் பெயர் அழகியநாயகி என்பது. பிற்காலத்தில் அம்பிகை 'வடிவுடைய அம்மை' எனப் பெயர் பெற்றமையால் ஊர்ப்பெயரும் தேவீச்சுரம் என்பது நீங்கி வடிவீச்சுரம் என வழங்கத் தலைப்பட்டது எனலாம். கோயில்பெயர் ஊர்ப்பெயரா யிற்று.[18]

*138.* தேற்னூர் : தே. 7553. "பெருவேளூர் தேறனூர்.... திருமாலோர் கூறனூர்"
இருப்பிடம் புலப்படவில்லை.

*139.* தேனூர் : "தேனூரான், செங்காட்டங்குடியான்" தே. 664
"சிந்தையாய், தேனூராய் நீயே" தே. 6670

தேனூர் என்ற பெயரில் ஊர்கள் திருச்சிராப்பள்ளிக்கு அருகிலும் கழுமலநாட்டிலும் பாண்டிய நாட்டிலும் உள்ளன. மதுரைக்கு அருகில் உள்ள தேனூர் இயற்கை வளம் மிக்கதோரூர் என்ற செய்தி ஐங்குறுநூறு 54,55,57 ஆம் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. வைப்புத்தலமாகிய தேனூர் எது என்பது உறுதியாகத் தெரியவில்லை.[28]

*140.* தோழூர் : "ஏழூர் தோழூர் எறும்பியூர்" தே. 6959
"துவையூரும் தோழூர்தானும்" தே. 6969

இராசேந்திரசிங்க வளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்துத் தோழூர் என்று (தெ.இ.க.தொ. II முகவுரை பக். 23) கல்வெட்டுக்களில் காணப்படும் தோழூர்[28] நாமக்கல்லிலிருந்து மோகனூர் செல்லும் வழியில் 9.6 கி.மீ.இல் உள்ளது.[23]

*141.* நங்களூர் : தே. 7550. "நங்களூர் நறையூர் நனிநாலிசை நாலூர்"
இடம் புலப்படவில்லை.

*142.* நந்திகேச்சுரம் : தே. 6973. "நந்திகேச்சுரம் மாகாளேச்சுரம்"

நந்திகேச்சுரம் என்பது மைசூர்ப்பகுதியில் உள்ள நந்தீச்சுரம் ஆகும். நந்தீச்சுரம் உடையார்க்கு முதல் குலோத்துங்கசோழன் பசும்பொன்னால் செய்த பட்டம் சாத்தினான் என்று ஒரு சாசனம் கூறுகிறது. (க.அ. 1911 இன் 180) இக்கோயிலைத் தன்னகத்தே உடைய ஊர் நந்தி என்று வழங்கலாயிற்று. இதுவே நாவுக்கரசர் குறிப்பிடும் வைப்புத்தலம் என்ப.[18]

செங்கல்பட்டுமாவட்டம் கூடுவாஞ்சேரி இருப்புப்பாதைநிலையத்திற்கு அருகில் உள்ள நந்திவரம் என்ற ஊரே நந்திகேச்சுரம் என்பர் சிலர்.[25]

பழையாறையிலுள்ள நந்திவனமே நந்திகேச்சுரம் என்ற கருத்தும் உண்டு.[28]

*143.* நம்பனூர் : தே. 7349. "நாலனூர் நரையேறு உகந்து ஏறிய நம்பனூர்"
இருப்பிடம் புலப்படவில்லை.

*144.* நல்லக்குடி : தே. 6968. "நம்பன் செம்பங்குடி நல்லக்குடி"

நல்லக்குடி இக்காலத்தில் நல்லத்துக்குடி என்று மருவி வழங்குகின்றது. இது மாயூரம் எனப்படும் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ளது. இங்குக் கோயில் கொண்ட இறைவன் திருநாமம் ஆலந்துறைஅப்பர் என்பர். அம்பிகை திருநாமம் குயிலாண்டநாயகி என்பது. இறைவிபெயரையும், இறைவன்பெயரையும் இணைத்த குயிலாலந்துறை என்ற வைப்புத்தலம் (தே. 6976) நல்லக்குடியின் திருக்கோயிலின் பெயர் ஆகலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.[18]

145. நல்லாற்றூர் : தே. 6969. "நறையூரும் நல்லூரும் நல்லாற்றூரும்"
புதுச்சேரியை அடுத்த கண்டமங்கலம் இருப்புப்பாதை நிலையத்திருந்து 5 கி.மீ.இல் உள்ள ஊர் என்பர்.[25]

நாரசிங்கன்பேட்டை என்ற இருப்புப்பாதை நிலையம் கும்பகோணத்துக்கும் மாயூரத்துக்கும் இடையில் உள்ளது. அதனைச் சார்ந்த நிலப்பரப்பு பழங்காலத்தில் நல்லாற்றூர்நாடு என்று வழங்கப்பட்டது.[2] அந்நாட்டின் தலைநகரான நல்லாற்றூர் தஞ்சைமாவட்டத்து மாயூரம்வட்டத்தில் குத்தாலத்திற்கு வடகிழக்கே 2.4 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள கோயில் கல்வெட்டுக்களில் 'வடகரை நல்லாற்றூர் நாட்டு குணமலப்பாடி', 'நல்லாற்றூர்நாட்டு ஆலங்குடி' முதலிய ஊர்கள் குறிப் பிடப்பட்டுள்ளன. இதுவே நல்லாற்றூர் என்ற வைப்புத்தலம் என்ப.

குத்தாலத்துக்கு மேற்கில் உள்ள திருக்கோடிகாவிற்குக் கிழக்கே நல்லாத்தடி என்ற ஊர் உள்ளது. இது கோப்பரகேசரிவர்மன் காலத்தில் விடேல்விடுகு சதுர்வேதி மங்கலம் எனவும் விக்கிரமசோழன் காலத்தில் பூலோகமாணிக்கச் சதுர்வேதிமங்கலம் எனவும் வழங்கப்பட்டது. இதுவே நல்லாற்றூர் என்னும் வைப்புத்தலம் என்ற கருத்தும் உண்டு.[21]

146. திருநற்குன்றம் : தே. 1892. "திருநற்குன்றம் வலம்புரம் நாகேச்சுரம்"
புதுக்கோட்டைநாட்டில் உள்ள குடுமியாமலை திருநலக்குன்று எனவும், திருநீலக் குன்று எனவும் சாசனங்களில் குறிக்கப்பட்டுள்ளது. அங்குத் திருமேற்றளி முதலிய சிவாலயங்கள் உண்டு. குன்றின் சிகரத்தில் உள்ள பெருமான் குடுமியான் என்று அழைக்கப்பட்டார்; இப்பொழுது சிகாநாதர் என்று வழங்கப்படுகிறார். 'திருநற் குன்றம்' திருநலக்குன்றம் என மருவிற்று.[18]

147. நாகளேச்சுரம் : தே. 6973. "நாகேச்சுரம் நாகளேச்சுரம் நன்கான கோடீச்சுரம்"
இவ்வைப்புத்தலம் சீகாழியில் உள்ள நாகேச்சுரம் என்ற கோயிலே என்பர். தஞ்சை மாவட்டத்து நன்னிலம்வட்டத்துக் குழிக்கரை என்னும் ஊரில் உள்ள சிவாலயம் கல்வெட்டுக்களில் (க.அ. 1911இன் 82) நங்காளீச்சுரம்[28] என்று காணப்படுகிறது. இப்பெயர் நாகளேச்சுரம் என்பதன் திரிபாகலாம். இவ்வூரே நாகளேச்சுரம் என்ற வைப்புத்தலம் என்பர் சிலர்.[18]

148. நாங்கூர் : தே. 7718. "நாங்கூர் உறைவாய் தேங்கூர் நகராய்"
சீகாழிக்கு அருகில் உள்ள திருநாங்கூர் சிறந்த விஷ்ணுத்தலமும் தேவார வைப்புத்தலமும் ஆகும். இங்குப் பழுதுற்றுக் காணப்படும் சிவாலயம் மிகப் பழைமை யானது. திருப்பல்லாண்டும் திருவிசைப்பாச் சிலவும் பாடிய சேந்தனாருடைய தலமும் இதுவே.[18]

(பாவ) நாசனூர் நனிபள்ளி :
தே. 7552. "பாவநாசனூர் நனிபள்ளி நள்ளாற்றை"
பாவநாசனூர் என்பதனை நனிபள்ளிக்கு அடைமொழியாகக் கொள்வர்.[28] நனிபள்ளி தேவாரப்பாடல் பெற்ற திருத்தலம். தலைச்சங்காட்டுக்கு அண்மையில் உள்ள இத்திருத்தலம் மூவர்தேவாரமும் பெற்று, இக்காலத்துத் தஞ்சைமாவட்டத்து மாயூரம்வட்டத்துப் புஞ்சை என்னும் பெயரோடு உள்ளது.[18]

நாட்டுத்தஞ்சை :

தே. 7355. "பழனம் பாம்பணி பாம்புரம் தஞ்சை தஞ்சாக்கையே"

திருநாட்டுத்தொகையில் சுந்தரரால் குறிப்பிடப்பட்ட தஞ்சை என்பது தோன்ற வைப்புத்தலக் கோவையில் நாட்டுத்தஞ்சை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[28]

149. நாலனூர் : தே. 7349. "நாலனூர் நரையேறு உகந்த நம்பனூர்"

150. நாலாறு : தே. 6975. "நலந்திகழும் நாலாறும் திருவையாறும்"

இவற்றின் இருப்பிடம் புலப்படவில்லை.

151. நாலூர் : தே. 7550. "நறையூர் நனி நாலிசை நாலூர்"

நாலூர்மயானம் என்ற பாடல் பெற்ற தலம் குடவாயிலுக்குப் பக்கத்தில் திருமெய்ஞானம் என்ற பெயருடன் வழங்குகிறது. அதனை அடுத்து அமைந்திருப்பது நாலூர். இவ்வூர் புறநானூற்றில் நாலை என்று குறிக்கப்பட்டுள்ளது.[28]

152. நாற்றுனம் : தே. 7621. "நாற்றுனத்து ஒருவனை நாணுகிய பரனை"

இருப்பிடம் புலப்படவில்லை.

153. நியமநல்லூர் : தே. 6959. "நெல்லிக்காவும் நின்றியூர் நீடூர் நியமநல்லூர்"

நியமமும் நல்லூரும் தனித்தனி ஊர்கள் ஆகலாம். அவற்றுள் நல்லூர் பாடல் பெற்ற திருத்தலம்.[28]

154. நியமம் : தே. 6384. "நெய்த்தானம் சோற்றுத்துறை நியமமும் துருத்தியும்"

தஞ்சைமாவட்டத்தைச் சார்ந்த நியமம் என்ற நேமம் திருக்காட்டுப்பள்ளியிலிருந்து கல்லணை செல்லும் வழியில் காவிரியின் தென்கரையில் 3.2 கி.மீ. தொலைவில் உள்ளது. இது சிலப்பதிகாரத்திலும் "தீதுதீர் நியமத் தென்கரை எய்தி" (சிலப். 10:217) என்று சுட்டப்பட்டுள்ளது. விசயாலயன் ஆட்சிக்கு முன் தஞ்சையையும் வல்லத்தையும் ஆண்ட முத்தரையர் என்ற குறுநிலமன்னர் ஆட்சியில் நியமம் பேரூராக விளங்கியது. இரண்டாம் நந்திவர்மனுடைய படைத்தலைவனும் இப்பகுதியை ஆண்டுவந்த பெரும்பிடுகுமுத்தரையனுன சுவரன்மாறன், மாகாளத்துப் பிடாரியார் கோயிலை நியமத்தில் எடுப்பித்தான். அதற்கு மூன்றும் நந்திவர்மன் விளக்கெரிக்கப் பொன்வழங்கிய செய்தி கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. இங்குள்ள இறைவர் பெயர் ஐராவதேசுவரர் என்பது. இங்கு நடுவில் பெரிய லிங்கம் ஒன்றை அமைத்துச் சுற்றிப் பலப்பல லிங்கங்கள் பிரதிட்டிப்பிக்கப்பட்டதால், இவ்வூர் நியமம் ஆயிரத்தளி எனவும் வழங்கப்பட்டது. இதுவே நியமம் என்ற வைப்புத்தலம் என்ப.[30]

மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சியில் (13 ஆம் நூற்றுண்டு முற்பகுதி) பாண்டிநாட்டுப் பெரிச்சிகோயில் என்ற ஊரில் உள்ள சிவாலயத்துக் கல்வெட்டு ஒன்று, திருப்புத்தூர் (இராமநாதபுரம் மாவட்டம்) சேகரத்துத் தென்னுற்றுப் போக்கைச் சார்ந்த நியமம் என்ற ஊர்த் தலைவனும் சுந்தரபாண்டியன் தலைமைஅதிகாரியுமான கண்டன் உதயம்செய்தான் காங்கேயன் தன்மேல் பிள்ளைக்கவி பாடிய ஆதிச்சதேவர் என்ற புலவருக்குப் புலவர்முற்றூட்டு வழங்கிய செய்தியைக் கூறுகிறது.[11] பாண்டியநாட்டு முகவைமாவட்டத்து நியமம் குன்றக்குடிக்கு வடபால் 2.4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஊரே என்ற கருத்தும் உண்டு.[21]

155. நிறைக்காடு : தே. 7715. "நிறைக்காட்டானே நெஞ்சத்தானே நின்றியூரானே"

156. நிறையனூர் : தே. 7549. "நிறையனூர் நின்றியூர் கொடுங்குன்றம்"
இவற்றின் இருப்பிடம் புலப்படவில்லை.

157. நின்றவூர் : தே. 7638. "மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்"
பூசலார்நாயனுருடைய திருத்தலம். அவரது படிவம் இக்கோயிலில் வைக்கப் பட்டுள்ளது. அவர் சிவபெருமானுக்குக் கட்டிய மனக்கோயிலைச் சிவபெருமான் மகிழ்வோடு ஏற்ற செய்தி பெரியபுராணத்துக் காணப்படுகிறது. இறைவர் மனக்கோயில் நாதர். இறைவி உமையம்மை. சென்னை - அரக்கோணம் இருப்புப்பாதை வழியில் தின்னனூர் நிலையத்திலிருந்து 1.6 கி.மீ. கற்சாலை வழியில் உள்ளது இவ்வைப்புத்தலம்.[23]

158. நீலமலை : தே. 6974. "மகேந்திரமாமலை நீலம் ஏமகூடம்"
இது நீலகிரிஆகும். "நீல கிரியின் நெடும்புறத்து இறுத்து" என்பது சிலப்பதிகாரம் (26:85).[28]

159. நெடுவாயில் : "நிறைநீர் மருகல் நெடுவாயில் குறும்பலா" தே. 1892
"நெடுவாயில் நிறைவயல்சூழ் நெய்தல்வாயில்" தே. 6972
தஞ்சைமாவட்டத்துப் பட்டுக்கோட்டைவட்டத்துள்ள நெடுவாசலே என்பர் ஆராய்ச்சியாளர்.[18]

160. நெய்தல்வாயில் : தே. 6972. "நெடுவாயில் நிறைவயல்சூழ் நெய்தல்வாயில்"
காவிரிப்பூம்பட்டினத்தின் அண்மையில் உள்ள நெய்தலங்கானல் ஆகலாம். கடல் கொள்ளப்பட்டு எஞ்சிய இவ்வூர் நெய்தல்வாசல் என்ற பெயருடன் உள்ளது என்ப.[28] இது திருவெண்காட்டிற்கும் பட்டினத்துப் பல்லவனீச்சுரத்திற்கும் இடையே உள்ளது.[18]

சென்னை மயிலாப்பூர் சிவாலயக்கல்வெட்டொன்றில் நெய்தல்வாயில்உடையான் என்ற பெயர் காணப்படுகின்றமையால், நெய்தல்வாயில் அக்கல்வெட்டின் கால மாகிய 12 ஆம் நூற்றுண்டிலும் பிரசித்தி பெற்றிருந்தமை புலனுகிறது. (செ.கல். எண். 137)

161. நெற்குன்றம் : தே. 1892. "நெற்குன்றம் ஓத்தூர் நிறைநீர் மருகல்"
திருச்சிமாவட்டம் முசிறிவட்டம் தின்னகோணம் என்ற ஊரிலுள்ள முதற்பராந் தகன் கல்வெட்டு இவ்வூரினைத் திருநெற்குன்றம் எனவும், இங்கு எழுந்தருளியிருக்கும் பெருமானைத் திருமாடத்துக் கூனனுர் எனவும், கூருண்டார் எனவும் குறிப்பிடும் (க.அ. 1932இன் 249,57).[28]

தென்னுர்க்காடுமாவட்டத்துத் திருக்கோயிலூர்வட்டத்திலுள்ள நெற்குணம் என்னும் ஊரின் பழம்பெயர் நெற்குன்றம் என்பது பெறப்படுகின்றது.[10] இவை யன்றியும் தொண்டைநாட்டில் ஒரு நெற்குன்றம் உள்ளது. ஒட்டக்கூத்தர் காலத்தில் நெற்குன்றவாணர் என்னும் புரவலர் தம்மைச் சிறப்பித்துப் பாடிய யாதவர்கோன் நம்பிக்கு மிக்க பொருளைத் தந்துவிட்டுச் சோழநாட்டுத் திருப்புகலூரை அடைந்து அங்குப் பெருமானை வழிபட்டு வாழ்ந்தவர்.

குன்றத்தூர்க் கல்வெட்டொன்று ஜயங்கொண்டசோழமண்டலத்துப் புலியூர்க் கோட்டத்துப் பேரூர்நாட்டு தெற்குன்றம் (க.அ. 1929-30இன் 205) என்று நெற்குன் றத்தின் இருப்பிடத்தைக் குறிப்பிடுகிறது.[19] தஞ்சைமாவட்டத்து நன்னிலம்வட் டத்துப் புகலூர் அக்நீசுவரர்கோயிலில் முதல்குலோத்துங்கன் காலத்துப் பொறிக் கப்பட்ட கல்வெட்டு ஒன்று அரையன் கருவுள்நாயகரான களப்பாளராசரை "ஜயங்-கொண்டசோழமண்டலத்துப் புலியூர்க்கோட்டத்துப் பேரூர்நாட்டு நெற்குன்றத்து நெற்குன்றங்கிழார்" என்று குறிப்பிடுவதும் தொண்டைநாட்டு நெற்குன்றத்தைச் சுட்டும் செய்தியாகும். (நன்.கல். II 1978இன் 322)

இவற்றால் நெற்குன்றம் என்ற பெயரில் பல ஊர்கள் உள்ளமை போதரும். எனினும் பழைய சிவாலயம் உடைய திருச்சிமாவட்டத்துத் தின்னகோணமே திருநெற்குன்றம் என்ற வைப்புத்தலமாகும் என்பது பல்லோர் துணிபு.

**162.** பஞ்சாக்கை : தே. 6962. "கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக்கையும்"
இது திருக்கடவூருக்கு அருகில் உள்ளது என்பர்.[25]

**163.** படம்பக்கம் : தே. 7251. "படம்பக்கம் கொட்டும் திருவொற்றியூர்"
படம்பக்கம் என்பது தலமன்று. இஃது ஒருவகையான பறை. இப்பறை திருவொற்றியூர்க் கோயிலில் முழக்கப்பட்டுவந்தது என்பது சிலர் துணிவு.[28]

செங்கற்பட்டுமாவட்டம் சைதாப்பேட்டைவட்டம் திருவொற்றியூர் ஆதிபுரே சுவரர் ஆலயத்தில் உள்ளதும், இராஜகேசரிவர்மன் திரிபுவனசக்கரவர்த்தி இரண் டாம் இராசாதிராசதேவனது (கி.பி. 1181) ஒன்பதாம் ஆட்சியாண்டில் பொறிக்கப் பட்டுள்ளதுமான கல்வெட்டு, படம்பக்கநாயகதேவர் ஆலயத்தில் பங்குனி உற்சவத்தின் போது அரசன் முன்னிலையில் ஆளுடையநம்பியின் புராணம் வாசிக்கப்பெற்றதைக் குறிப்பிடுவதுகொண்டு, திருவொற்றியூர் ஆதிபுரீசுவரரது ஆலயத்துள் படம்பக்க-நாயகர் கோயில் இருந்துள்ளதாக அறிகிறோம் (க.அ. 1911இன் 371).. இதுவே படம்பக்கம் என்னும் வைப்புத்தலமாகும் என்ற கருத்தும் நிலவுகிறது.[16]

(ஆன்)பட்டி : "ஆக்கூரும் ஆலூரும் ஆன்பட்டியும்" தே. 6327
"பேரூர் உறைவாய் பட்டிப் பெருமான்" தே. 7716

கொங்குநாட்டில் கோயம்புத்தூரை அடுத்த திருப்பேரூர்க் கோயில் கல்வெட்டு ஒன்று அவ்வூரைத் திருவான்பட்டி என்று குறிப்பிடுகிறது. பட்டிப்பெருமான் என்று சுந்தரரும் மேலைச்சிதம்பரம் என்று போற்றப்படும் அவ்வூர்ச் சிவாலயத்து இறைவனைப் போற்றுகிறார்.[28]

**164.** பந்தையூர் : தே. 7545. "பந்தையூர் பழையாறு பழனம் பைஞ்ஞீலி"
இவ்வூர் குத்தாலம் இருப்புப்பாதை நிலையத்திற்கு 10 கி.மீ. வடமேற்கில் உள்ள தும், சம்பந்தரும் அப்பரும் திருப்பதிகம் பாடியுள்ளதும் ஆன பந்தணைநல்லூர் என்று கொள்வர்.[25] அது கல்வெட்டில் "வடகரை விருதராசபயங்கர வளநாட்டு விளத்தூர்நாட்டுப் பந்தணைநல்லூர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[7] பந்தையூர் பந்தணைநல்லூர் ஆயின், அது பாடல் பெற்ற தலமாகும்; வைப்புத்தலம் ஆகாது.

**165.** பரப்பள்ளி : தே. 6966. "செழுநனிபள்ளி தவப்பள்ளி சீரார் பரப்பள்ளி"
கோவைமாவட்டம் தாராபுரவட்டத்துப் பரன்சேர்பள்ளி என்ற ஊர் இக்காலத் தில் பரன்சேர்வலி என மருவி வழங்குகின்றது. இறைவன்பெயர் நட்டூர் அமர்ந்தார் மத்தியபுரீசுவரர் என்பன. இதுவே பரப்பள்ளி என்ற வைப்புத்தலம் ஆகலாம்.[18]

166. பருத்திநியமம் : தே. 7720. "பருத்திநியமத்து உறைவாய் வெயிலாய்"

திருப்பருதிநியமம் என்பது ஞானசம்பந்தர்பதிகம் கொண்ட திருத்தலம். பருதி-நியமம் என்பது எதுகை நோக்கிப் பருத்திநியமம் என விரிந்தது.[28] நியமம் என்பது கோயிலைக் குறிக்கும் சொல்லாம். ஆகவே, பருதிநியமம் என்பது சூரியன் கோயில் என்னும் பொருளது. இக்காலத்துப் பருதியப்பர்கோயில் என வழங்குகிறது. இந்தக் கோயிலைப் பருத்தியப்பர் கோயில் என்று கொண்டு, பருத்திச்செடியோடு தொடர்புபடுத்துவாரும் உளர்.[18] தஞ்சாவூரிலிருந்து இவ்வூர் செல்லப் பேருந்து வசதியுண்டு.

பருப்பதம் : தே. 6323. "பௌவம் திரியும் பருப்பதமும் பறியலூர்"

கிருஷ்ணநதி வெள்ளமாக அருகில் ஓடும் தலம் பருப்பதமலை என்ற ஸ்ரீசைலம். பௌவம் திரியும் என்பதனைப் பவ்வத்திரியும் என்று பாடம் கொண்டு, பவத்திரி என்ற ஊரையும் அடுத்த மலையையும் குறிக்கும் என்பாரும் உளர். இப்பவத்திரி என்ற ஊர் அகநானூறு 340 ஆம் பாடலில்,

'செல்லா நல்லிசைப் பொலம்பூண் திரையன்
பல்பூங் கானல் பவத்திரி' என்ற தொடரால் குறிக்கப்பட்டுள்ளது.[28] ஸ்ரீசைலம் மல்லிகார்ச்சுனம் எனவும், சீபர்ப்பதம் எனவும் பெயர்பெறும். தலவிருட்சம் மருது. இறைவர் பருப்பதநாதர், ஸ்ரீசைலநாதர், மல்லிகார்ச்சுனர் என்ற பெயரால் அழைக்கப்படுகிறார். இறைவியின் திருப்பெயர்கள் பருப்பதநாயகி, மனோன்மணி, பிரமராம்பிகை என்பன. ஆந்திரமாநிலத்தில் கர்நூல்மாவட்டத்தில் நந்தியால் எனும் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து வடகிழக்கே 37 கி.மீ. உள்ள ஆத்மகூரை அடைந்து, அங்கிருந்து 40 கி.மீ.இல் உள்ள பெத்தசரிவை அடைந்து, அங்கிருந்து 16 கி.மீ.இல் கடல்மட்டத்திலிருந்து 1500 அடி உயரத்தில் உள்ள பருப்பதத்தை அடையலாம். இது வீரசைவர்களுக்கு முக்கியத்தலம். தேவாரமூவருமே இத்தலத்தைப் பாடியுள்ளனர்.[14] தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள பருப்பதமலை என்னும் ஊராக இக்காலத்துச் சிலர் கருதுகின்றனர். பர்வதகிரி என்பது பவத்திரி ஆகியிருக்கலாம் என்பர் சிலர்.

பழையாறு : தே. 638. "பாசூர் பழையாறும் பாற்குளமும்"

கும்பகோணத்திற்குத் தென்மேற்கே 4.8 கி.மீ.இல் பழையாறு என்று இக்காலத்து வழங்கப்படும் சிற்றூர் ஒருகாலத்தில் "தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து, பாரில் நீடிய பெருமை சேர்பதி பழையாறை" (பெரிய. அமர்நீதி-1) என்று போற்றப் படும் தகையதாய் 8. கி.மீ. நீளமும் 4.8 கி:மீ. அகலமும் உடைய பெருநகரமாக விளங்கியது. பழையாறைவடதளியை நாவுக்கரசரும், பட்டீசுவரத்தைச் சம்பந் தரும் பாடியுள்ளனர்.

எட்டாம் நூற்றாண்டில் இரண்டாம் நந்திவர்மன் பழையாறையில் ஓர் அரண்-மனையும், நந்திபுரவிண்ணகரம் என்ற திருமால்கோயிலும் எடுப்பித்து இதனைத் தன் கோநகரங்களுள் ஒன்றாக்கினான். (க.அ. 1931 இன் 30, 1924இன் 365, 367)

பத்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அரசாண்ட சுந்தரசோழன் என்னும் இரண்டாம் பராந்தகன் இந்நகரத்திலிருந்து அரசாண்டான். வீரசோழியஉரைப் பாடல்கள் "நந்திபுரி மன்னர் சுந்தரசோழர்", "பழையாறைநகர்ச் சுந்தரசோழர்" என்று குறிப்பிடுகின்றன.

முதல் இராசேந்திரன் காலத்தில் இவ்வூர் முடிகொண்டசோழபுரம் என்று வழங் கப்பட்டது. (க.அ.1908 இன் 463, 1906 இன் 585) முடிகொண்ட சோழபுரத்தில் இருந்தே இம்மன்னன் திருவாலங்காட்டுச் செப்பேடுகளை வழங்கினான்.

ஒட்டக்கூத்தர் தக்கயாகப்பரணியில் இப்பழையாற்றை இராசராசபுரம் என்று கூறுகிறார். மாறவர்மன் சுந்தரபாண்டியன் மூன்றும்இராசராசனை வென்று இம்முடி கொண்ட சோழபுரத்தில் விசயாபிஷேகமும் வீராபிஷேகமும் செய்துகொண்டான் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.[15]

பனங்காடு : தே. 6971. "பழையனூர் ஆலங்காடு பனங்காடு"

இது புறவார்பனங்காட்டூர் என்ற பாடல்பெற்ற தலம் என்ப.[28] இது தொண்டை மண்டலத்துக் காலியூர்க்கோட்டத்துக் கழுமலநாட்டுப் பனங்காடு என்று பழைய கல்வெட்டுக்களில் கூறப்படுகிறது. இப்பொழுது திருப்பனங்காடு என்ற திருத்தலம் செய்யாறுவட்டத்தில் உள்ளது. பனங்காட்டினிடையே பரமன் கோயில்கொண்ட தனால் இத்தலத்தின் பெயர் பனங்காடு எனப்பட்டது.[18]

பனங்காட்டூர் : தே. 6961

இது வன்பார்த்தான் பனங்காட்டூர் என்னும் பாடல் பெற்ற தலமாகும்.[28] விழுப்புரத்துக்கு வடக்கே 8 கி.மீ. உள்ள பனையபுரம் என்னும் ஊரே பனங்காட்டூர் என்ப.[18]

167. பன்னூர் : தே. 7532. "பன்னூர் புக்குஉறையும் பரமர்க்கிடம்"

திருத்தலையூரை அடுத்துள்ள பன்னூர் என வழங்கும் ஊராதல் கூடும் என்ப.[28]

168. பாங்கூர் : தே. 7350. "சிராப்பள்ளி பாங்கூர்...... பராய்த்துறை"

169. பாசனூர் : தே. 7552. "திருவாக்கூர் பாசனூர் பரமேட்டி"

இவற்றின் இருப்பிடம் போதரவில்லை.

170. பாட்டூர் : தே. 7713. "பாட்டூர் பலரும் பரவப்படுவாய்"

இது திருப்பட்டூர் என வழங்குவதாகவும் கூறுப. கல்வெட்டுக்களில் இது திருப்படையூர் எனவும், மூவாயிரநல்லூர் எனவும் வழங்குவதாகவும் கூறுப. திருச்சி மாவட்டம் துறையூருக்குக் கிழக்கே 19 கி.மீ.இல் உள்ளது. இப்பெயர் பிடவூர் என்பதன் திரிபு என்பர் சிலர்.[1]

பாதாளம் : தே. 6961. "பழனம் பனந்தாள் பாதாளம் பராய்த்துறை"

பாம்பணி : தே. 7355. "பழனம் பாம்பணி பாம்புரம் தஞ்சை"

பாதாளீச்சுரம் என்பது பாடல்பெற்ற தலம். இது பாதாள் எனத் திரிந்தும் வழங்குகிறது.[28] இத்தலம் பாம்பணி எனவும் வழங்குகிறது. சாசனங்களில் இக்கோயிலின் பெயர் பாம்புணி என்று காணப்படுகிறது. பாம்பின் வடிவுடைய முனிவர்சிலை ஒன்று பாதாளீச்சுரத்தில் காணப்படுகிறது. தஞ்சைமாவட்டத்து மன்னார்குடியை ஒட்டி, அதன் வடபால் உள்ளது இத்திருத்தலம்.[18]

171. பாவநாசம் : தே. 6323. "பறியலூர் வீரட்டம் பாவநாசம்"

பொதியமலையின் அடிவாரத்தில் பொருநையாறு செல்லும் துறையுள் பாவ-நாசம் என்ற திருத்தலம் அமைந்துள்ளது, தஞ்சைமாவட்டத்திலும் பாவநாசம் என்ற தலம்ஒன்று வட்டத்தின் தலைநகராக உள்ளது.[18]

பாற்குளம் : தே. 6381. "பழையாறும் பாற்குளமும் கைவிட்டு"

பழையாற்றில் உள்ளதொரு தீர்த்தக்குளம். 'சித்தவடமும் கெடிலப்புனலும்

உடையார்' (தே. 4182) எனத் தலமும் தீர்த்தமும் இணைந்து வருதல் மரபு ஆதலின், இது தலத்தோடியைந்த தீர்த்தமாகும்.[28]

172. பிடவூர் : "கெடில வீரட்டமும் செழுந்தண் பிடவூரும்" தே. 6323
"பெருந்துறை காம்பிலி பிடவூர்" தே. 6956

இராசேந்திரசிங்க வளநாட்டுப் பிடவூர் திருச்சிமாவட்டத்தில் துறையூருக்கு அணிமையில் உள்ளது எனவும், திருவிடைக்கழிக்கு அணிமையில் உள்ளது எனவும் கூறுப. இங்குள்ள ஐயனாரைப் பிடவூரன் என்று போற்றுவர். இங்குச் சாத்தனார் கோயில் பழுதுபட்ட நிலையில் உள்ளது.[28] இது 'பிடவூர்நாட்டுப் பிடவூர்' எனவும் சுட்டப்படுகிறது. (க.அ. 1930-31இன் 139)

"......... உறைந்தைக் குணஅது
அருங்கடிப் பிடவூர் அறப்பெயர்ச் சாத்தன்" (புறம் 395)

என்று இவ்வூர்ச் சாத்தனார்கோயில் புறநானூற்றில் சுட்டப்பட்டுள்ளது. சோழ நாட்டுப் பிடவூர் வேளிர்களுக்கு உரிய பழைய ஊர். தொண்டைநாட்டிலும் ஒரு பிடவூர் உண்டு. அது தொண்டைநாட்டுப் பிடவூர் (க.அ. 1923இன் 68) என்று குறிக்கப்படுகிறது. சோழநாட்டுப் பிடவூரே வைப்புத்தலமாகும் என்ப.[11]

173. பிரம்பில் : தே. 6960. "பெண்ணுகடம் பிரம்பில் பெரும்புலியூர்"

தஞ்சை - பூதலூர்ப் பேருந்துவழியில் தஞ்சைக்கு மேற்கே 15 கி.மீ.இல் உள்ள கள்ளப்பிரம்பூர் எனவும்,[28] மங்கைநல்லூரை அடுத்த பிரம்பூர் எனவும்,[25] திருச்சி மாவட்டம் பிரம்பலூர்வட்டத்தலைநகரான பிரம்பலூர் எனவும் பலவாறு கூறுப.[23]

பிறையனூர் : தே. 7549. "பிறையனூர் பெருமூர் பெரும்பற்றப்புலியூர்"

இதனைப் பெருமூருக்கு அடையாக்கிப் பிறைசூடி ஆகிய சிவபெருமானுடைய திருத்தலமாகிய பெருமூர் என்று கொள்வர்.

174. புதுக்குடி : தே. 6968. "தேவன்குடி நீலக்குடி புதுக்குடியும்"

தஞ்சைமாவட்டத்தில் குத்தாலத்தை அடுத்துள்ள புதுக்குடி என்னும் இவ்வைப்புத்-தலம் உய்யக்கொண்டார்வளநாட்டுத் திருவழுந்தூர்நாட்டுப் புதுக்குடி என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளது.[28]

175. புரிச்சந்திரம் : தே. 6772. "புரிச்சந்திரத்துள்ளார்"

இருப்பிடம் புலப்படவில்லை.

176. புரிசைநாட்டுப் புரிசை : தே. 7352. "புரிசைநாட்டுப் புரிசையே"

காஞ்சிபுரத்தை அடுத்துள்ள புரிசை,[28] மணவிற்கோட்டத்துப் புரிசை என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளது. (க.அ. 1910இன் 252) புரிசையில் உள்ள சிவாலயம் திருப்படக்காடு என்று வழங்கப்பட்டது. இறைவர் புரிசையில் அமர்ந்த படக்காடுடைய மகாதேவர் என்று கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகிறார்.[18]

177. புலிவலம் : "புலிவலம் புத்தூர் புகலூர்" தே. 6965
"பூவணத்தார் புலிவலத்தார்" தே. 6773

திருவாரூரிலிருந்து 3.2 கி.மீ.இல் உள்ளதோர் ஊர் என்பர்.[28] செங்கற்பட்டு மாவட்டத்து மதுராந்தகவட்டத்து உத்தரமேரூர் அருகேயுள்ள திருப்புலிவனம்

என்ற ஊர் பராந்தகசோழன் முதலிய மன்னர்களின் கல்வெட்டுக்களில் திருப்புலிவலம் என்றே குறிக்கப்படுவதால், அதுவே இவ்வைப்புத்தலம் என்ற கருத்தும் உள்ளது.[18] புலிவலம் திருச்சிக்கு மேற்கே 40 கி.மீ.இல் உள்ள முசிரி என்ற ஊரே என்பாரும் உளர்.[23]

*178.* புவனம் : தே. 6773. பாடபேதம் - "புவனத்தார் புலிவலத்தார்"

புவனத்தார் என்பது இறைவன் இவ்வுலகில் யாண்டும் உள்ளான் என்பதனைக் குறிப்பதற்கு அமைந்த பொதுப்பெயர் ஆகலாம்; முதல் இராசேந்திரன் செப்பேட்டில் குறிக்கப்பெற்றதும் தஞ்சாவூரை அடுத்த பூண்டி என்ற ஊரின் அருகில் உள்ளதும் ஆகிய திரிபுவனம் என்ற ஊராகலாம்;[28] தஞ்சைமாவட்டத்தில் கும்பகோணத்திற்கும் திருவிடைமருதூருக்கும் இடையே பேருந்துசாலையில் அமைந்திருக்கும் திரிபுவனம் என்ற ஊராகலாம். இவ்வூர் மூன்றும் குலோத்துங்கனால் அமைக்கப்பட்டுத் திரிபுவனவீரபுரம் என்று பெயரிடப்பட்டுக் கம்பஹரேசுவரம் என்ற திருக்கோயில் எடுப்பிக்கப்பட்டது. ஆதலின், இது தேவாரகாலத்து ஊர் அன்று ஆகவே, பூண்டிக்கு அருகில் உள்ள திரிபுவனமே தேவாரம் குறிப்பிடும் வைப்புத்தலம் ஆகலாம்.[18]

*179.* புற்குடி : தே. 6968. "புற்குடி மாகுடி தேவன்குடி"

*180.* பூங்கூர் : தே. 7350. "கடம்பந்துறை பூங்கூரும் பரமன் பரஞ்சோதி பயிலும் ஊர்"

இவற்றின் இருப்பிடம் புலப்படவில்லை.

*181.* பூந்துறை : தே. 3806. "சிந்து பூந்துறை கமழ் திருநெல்வேலி"

திருநெல்வேலி வழியே பாயும் தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்த துறைகளில் ஒன்று "மதுத்திவலை சிந்து பூந்துறை" என்று ஞானசம்பந்தரால் புகழப்பட்டது. அதுவே பூந்துறை என்பர் சிலர்.[25]

கொங்குநாட்டின் 24 நாடுகளுள்ளும் தலைநாட்டின் தலைநகரான பூந்துறை என்ற தலம், ஈரோடு-காங்கேயம் கற்சாலையில் தெற்கே 12.8 கி.மீ.இல் உள்ளதாய், புஷ்பவனநாதர் என்ற சுயம்புலிங்கம் கொண்ட தொன்மையான சிவாலயம் உடையதாய் அமைந்திருக்கும் பூந்துறை என்ற வைப்புத்தலம் என்ப.[16]

*182.* பூழியூர் : தே. 1891. "தென்புறம்பயம் பூவணம் பூழியூரும்"

இது பூழிநாட்டின் தலைநகராக இருத்தல் கூடும்.[28]

*183.* பெருந்துறை : "பெருந்துறை காம்பீலி பிடவூர்" தே. 6956

"பூந்துறை பெருந்துறையும் குரங்காடுதுறை" தே. 6976

அரிசில்ஆற்றங்கரையில் கும்பகோணத்திலிருந்து 10 கி.மீ.இல் உள்ள திருப்பெருந்துறை என்னும் திருப்பந்துறையாகும். அங்கு உள்ள பழைய சிவாலயம் கரிகால ஆதித்தன் காலத்தில் கற்றளியாயிற்று. முதல் இராசராசன் முதலிய பெருமன்னர் பலருடைய கல்வெட்டுக்கள் அச்சிவாலயத்துள் உள்ளன.[28]

மணிவாசகருக்குச் சிவபெருமான் அருள்புரிந்த திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார்கோயில் புதுக்கோட்டைமாவட்டத்து அறந்தாங்கிவட்டத்தில் உள்ளது.

புதுக்கோட்டைநாட்டில் பழைய கானனூர்நாட்டைச் சார்ந்த பெருந்துறை என்ற ஊரும் உண்டு. அங்குப் பழுதுற்றுக் காணப்படும் சிவாலயத்தில் பழைய கல்வெட்டுக்கள் பல உள்ளன. திருப்பெருந்துறை, ஆலயத்தின் பெயராயிருந்து பின்னர் ஊர்ப்பெயர் ஆகிஇருக்கலாம். (க.அ. 1906இன் 404)[18]

184. பெருமூர் : தே. 7549. "பிறையனூர் பெருமூர் பெரும்பற்றப்புலியூர்"
இருப்பிடம் புலப்படவில்லை.

185. பேராவூர் : "பேரூர் பிரமபுரம் பேராவூரும்" தே. 6956
"பெரும்பற்றப் புலியூரும் பேராவூரும்" தே. 6969

தஞ்சைமாவட்டத்து நாரசிங்கன்பேட்டையை அடுத்த பேராவூர்நாட்டின் தலை நகரம் இது.[28] திருவாவடுதுறை முதலிய திருத்தலங்களும் பேராவூர்நாட்டைச் சார்ந்தவை. பேராவூர் மாயூரம்வட்டத்தே உள்ளது. அங்குள்ள பழைமையான திருக்கோயில் ஆதித்தேச்சுரம்.[18]

186. பேரூர் : "பேரூர் நன்னீர்வயல் நெய்த்தானமும்" தே. 1884
"பேரூர் பிரமபுரம் பேராவூர்" தே. 6955
"பேரூர் உறைவாய் பட்டிப் பெருமான்" தே. 7716
"திருச்சுழியல் பேரூர் என உறைவான்" தே. 8076
"மீகொங்கில் அணிகாஞ்சிவாஅய்ப் பேரூரர் பெருமானை"
தே. 8157

கோயம்புத்தூர்ப் பகுதியாக விளங்கும் திருப்பேரூர் என்னும் மேலைச்சிதம்பரமே பேரூராகும். அதன் அருகில் ஓடும் காஞ்சிநதி இக்காலத்தில் நொய்யலாறு என வழங்கப்படுகிறது.[28] வடஆர்க்காடுமாவட்டத்தில் திருப்பத்தூர்வட்டத்தில் உள்ள திருப்பத்தூர், பிரமீச்சுரம் என்ற பழைய சிவாலயத்தையுடையது. அத்திருப்பத்தூரின் பழைய பெயர் பேரூர் என்பது கல்வெட்டுக்களால் விளங்கும். (க.அ. 1900 இன் 248,252). அதுவே பேரூர் என்ற வைப்புத்தலம் என்ப.[18]

பேறூர் எனப் பாடங்கொண்டு 'ஜயங்கொண்டசோழமண்டலத்துப் புலியூர்க் கோட்டத்துப் பேறூர்நாட்டுப் பேறூர்' எனத் தொண்டைமண்டலத்து நெற்குன்றம் என்ற ஊரை அடுத்த பேறூரைக் கொள்வாரும் உளர்.[26]

187. பேறனூர் : தே. 7553. "பேறனூர் பிறைச் சென்னியினுன்றன் பெருவேளூர்"
இருப்பிடம் புலப்படவில்லை.

188. பொதியில்மலை : தே. 6962. "மஞ்சார் பொதியின்மலை தஞ்சை வழுவூர்"
பொதியமலையே இறைவனுக்கு வைப்புத்தலம் ஆகும்; அம்மலைப்பகுதியில் உள்ள பாவநாசம் என்ற தலமும் ஆகலாம்.[18] பாவநாசம் காண்க.

189. பொய்கைநல்லூர் : தே. 6965. "புறம்பயம் பூவணம் பொய்கைநல்லூர்"
வடஆர்க்காடுமாவட்டம் அரக்கோணம்வட்டத்தில் "தாமற்கோட்டத்துப் பொய்கைநல்லூர் அகத்தீச்சுரமுடையார்" என்ற கல்வெட்டுத்தொடரைக்கொண்டு, பொய்கைநல்லூர் அரக்கோணத்தை அடுத்துள்ளது என்ப. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அறந்தாங்கிக்கும் பொய்கைநல்லூர் என்ற பெயர் உண்டு.[28]

பொய்கைநல்லூர் என்ற தொடரைப் பொய்கை எனவும் நல்லூர் எனவும் பிரித்துப் பொய்கைநாடு என்பது பண்டு காவிரியின் வடகரையில் திருவையாறு முதலிய தலங்களைக் கொண்டுள்ள பகுதியாகவே, அதன் தலைநகரமாகப் பொய்கை என்ற ஊர் இருந்திருத்தல் வேண்டும் எனக் கூறுவர். வடஆர்க்காடுமாவட்டத்தில் பொய்கை என்ற ஊர் உள்ளது என்பர்.[18] நல்லூர், தஞ்சைமாவட்டத்தில் பாபநாசத்தை அடுத்த பாடல் பெற்ற தலமாகும்.

பொருப்பள்ளி :

தே. 6966. "பொருப்பள்ளி வரைவில்லாப் புரம்மூன்று எய்து
புலந்தழியச் சலந்தரனைப் பிளந்தான் பொற்சக்கரப்பள்ளி"

பொருப்பு அள்ளி எனப் பிரித்து மலையை எடுத்து அந்த மலையை வில்லாக வளைத்து முப்புரங்களை எய்து அழித்த ஈசன் என்று பொருள்செய்வாரும் உளர்.[28] பொருப்பள்ளி ஒரு வைப்புத்தலம் என்பாரும் உளர். அஃது இக்காலத்து இன்னது என்பது அறியப்படவில்லை.

190. பொன்னூர்நாட்டுப் பொன்னூர் :

தே. 7352 "பொன்னூர்நாட்டுப்......... புரிசைநாட்டுப் புரிசையே"

அன்னியூர் என்னும் தலம் பொன்னூர் என்றும் வழங்கப்படுகிறது. அவ்வூர் மாயூரத்தை அடுத்த நீடூருக்கு மேற்கே 5 கி.மீ.இல் உள்ளது. அன்னூர் என்ற ஊர் பொன்னூர் என்பதன் திரிபாகலாம் என்பர். அது திருவீழிமிழலைக்கு வடமேற்கே 3 கி.மீ.இல் உள்ளது. இறைவர் ஆபத்சகாயர். இறைவி பெரியநாயகி. தீர்த்தம் அக்நி-தீர்த்தம்.

போற்றூர் : தே. .1891. "போற்றூர் அடியார் வழிபாடு ஒழியா"

ஊர் போற்று அடியார்கள் என்று மொழிமாற்றி, திருத்தலங்களை வழிபடும் அடியார்கள் என அத்தொடரை அடியார்களுக்கு அடைமொழி ஆக்கலாம் என்பர்.[28]

191. மகாமேருமலை : தே. 6974. "பொதியின்மலை மேரு உதயம் அத்தம்"

இறைவன் வீற்றிருக்கும் மலைகளுள் ஒன்று. இது புராணங்களில் மிகச் சிறப்பாகப் போற்றப்படுகிறது.

192. மகேந்திரமாமலை : தே. 6974. "மகேந்திரமாமலை நீலம் ஏமகூடம்"

திருவானைக்காத் திருப்பதிகம் குறிப்பிடும்[28] (தே. 3967-77) மகேந்திரமலை தென்கடலை ஒட்டிய மலையாக இராமாயணம் குறிப்பிடுகிறது. இங்கிருந்து அநுமன் இலங்கைக்குப் புறப்பட்ட செய்தியை அஃது இயம்புகிறது. இம்மலையும் சிவ பெருமானுக்கு ஒரு வைப்புத்தலமாகும்.

மகோதை :

தே. 7267. "கடலங்கரைமேல் மகோதை அணியார்பொழில்
அஞ்சைக்களத்து அப்பனே"

சேரநாட்டின் தலைநகரான கொடுங்கோளூர் மகோதை எனவும் வழங்கப்படும். இங்குள்ள கோயில் அஞ்சைக்களம் ஆகும். அங்குச் சிவன்கோயில், கண்ணகி கோயில், பகவதிகோயில் என்பன உள. திருவஞ்சைக்களத்தில் சேரமான்பெரு-மாள் சரியைத்தொண்டு செய்துவந்தார். இறைவர் அஞ்சைக்களத்தப்பர். இறைவி உமையம்மை. மரம் கொன்றை. தீர்த்தம் சிவகங்கை.

செறுவண்ணூர்-கொச்சி இருப்புப்பாதைக் கிளைப்பாதையில் திருச்சூர் என வழங்கும் திருச்சிவப்பேறூர் நிலையத்தினின்றும் பேருந்து செல்லும் கற்சாலைவழி 35.2 கி.மீ. தொலைவிலுள்ள கடற்கழித் தோணித்துறையினின்றும் தோணிவழி யாக 3.2 கி.மீ. தொலைவில்உள்ள திருவஞ்சைக்களத்தினை அடைந்தால் அங்கிருந்து அரைக்கிலோமீட்டரில் இத்தலம் அமைந்துள்ளது.[23]

193. மக்கீச்சுரம் : தே. 6973. "குக்குடேச்சுரம் மக்கீச்சுரம்"
அரேபியாவிலுள்ள மக்காநகரம் என்ப.[28] அக்கீச்சுரம் என்ற தலைப்பைப் பார்க்க.

194. மணற்கால் : தே. 6515. "பட்டீச்சுரம் கடந்து மணற்கால் புக்கு"
திருவாரூரை அடுத்துப் பெருவேளூர்க்கு அண்மையில் உள்ளது என்ப.[28] திருச்சி மாவட்டத்திலும் மணற்கால் என்ற ஊர் உள்ளது.[18]

195. மணிக்கோயில் : தே. 6970. "இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்"
பெருங்கோயில் என்றாற்போலக் கோயில்அமைப்பினைக் குறித்த பெயர் இது. திருவாரூர் மணிக்கோயில் அமைப்பினது என்ப.[28] தஞ்சையை அடுத்த திருமால் கோயில் தஞ்சைமாமணிக்கோயில் என்று ஆழ்வார்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. அம் மாமணிக்கோயில் போல்வதொரு சிவாலயம் என்று கொள்வது பொருத்த மாகும்.[18]

மணிமுத்தம் : தே. 6323. "மவ்வந் திரையும் மணிமுத்தமும் மறைக்காடும்"
இது திருவாரூரை அடுத்த பூந்தோட்டத்திலிருந்து 2 கி.மீ.இல் உள்ள திலதைப் பதியில் உள்ள திருக்கோயிலின் பெயர். திலதைப்பதிமணிமுத்தம் ஞானசம்பந்தரால் பாடப்பெற்றுள்ளது. (தே. 2747-57)

196. மத்தங்குடி : தே. 1893. "தேவன்குடி மருவு மத்தங்குடி தண் திருவண்குடி"
இருப்பிடம் புலப்படவில்லை.

197. மந்தாரம் : தே. 6960. "வக்கரை மந்தாரம் வாரணாசி"
மாயூரத்திற்கு அண்மையில் உள்ள ஆற்றூர் என்னும் பழம்பதியில் மந்தார வனத்தில் இறைவன் வெளிப்பட்டானாதலின் அதற்கு மந்தாரம் என்ற பெயரும் வழங்குவதாயிற்று.

"ஓங்கு மந்தார வனத்து மேவும்
உத்தமனே இஃதொன்று கேள்நீ" என வரும் ஆற்றூர்ப்புராணச் செய்யுள் அடியினால் 'மந்தாரம்' ஆற்றூரில் இறைவன் திருக்கோயில்கொண்ட இடம் என் பது இனிது விளங்கும்.[18]

198. மயிண்டீச்சுரம் : தே. 1890. "மயிண்டீச்சுரம் வாதவூர் வாரணாசி"
முண்டீச்சுரம் என்பதனை மயிண்டீச்சுரம் என்று பாடம் கொள்வாரும் உளர்.[28] தருமபுரிமாவட்டத்துத் தருமபுரியில் உள்ள அதமன்கோட்டைச் சிவாலயத்தில் (அதியமான் கோட்டை) இறைவர் மயீந்தீசுவர முடையார் என்று குறிப்பிடப்படுவ தால், திந்திரினீச்சுரம் திண்டீச்சுரம் ஆயினமை போல, மயிந்தீச்சுரம் மயிண்டீச்சுரம் ஆயிற்று எனக் கொள்ளலாம். ஆகவே மயிண்டீச்சுரம் அதமன்கோட்டையில் உள்ள சோமேசுவரர் கோயிலே ஆகும்.[28]

199. மறையனூர் : தே. 7549. "மறையனூர் மறைக்காடு வலஞ்சுழி"
இருப்பிடம் புலப்படவில்லை.

200. மாகாளம் : "வாழ்கொளிபுத்தூரார் மாகாளத்தார்" தே. 6767
"மருகல் உறைவாய் மாகாளத்தாய்" தே. 7717
மாகாளம் என்ற பொதுப்பெயர் உஞ்சேனைமாகாளம், அம்பர்மாகாளம், இரும்பை

மாகாளம் என்பனவற்றைக் குறிக்கும் என்ப.[28] உஞ்சேனை என்பது மத்தியபிர-தேசத்தில் உள்ள உச்சையினி ஆகும் வைப்புத்தலம். அம்பர்மாகாளம்,

"அரிசிலம் பொருபுனல் அம்பர் மாநகர்க்
குரிசில் செங்கண்ணவன் கோயில் சேர்வரே" என அரிசிலாற்றங்கரையில் உள்ள தாய்ப் பூந்தோட்டத்திலிருந்து 2 கி.மீ.இல் உள்ள திருத்தலம் ஆகும்;[18] இப்பொழுது திருமாளம் என்ற பெயரில் வழங்குகிறது. இறைவர் மாகாளநாதர். இப்பெருமான் கல்வெட்டுக்களில் மதுராந்தகி சருப்பேதிமங்கலத்துத் திருமாகாளமுடையார் என்று வழங்கப்படுகிறார்.[22] இத்திருத்தலம் பற்றிச் சம்பந்தர்பதிகங்கள் மூன்று உள்ளன. இம்மாகாளங்கள் மூன்றும் சிவபெருமானைக் காளி வழிபட்ட தலங்கள் ஆகும்.[18] இரும்பைமாகாளம் புதுச்சேரியிலிருந்து 8 கி.மீ.இல் உள்ளது; சம்பந்தர் பதிகம் உடையது.

201. மாகுடி : தே. 6968. "புற்குடி மாகுடி தேவன்குடி"
இக்காலத்து மாமாகுடி என்று வழங்கும் ஊராகலாம்.[28]

மாகோணம் : தே. 7715. "திருமாந்துறையாய், மாகோணத்தானே"
இலங்கையில் உள்ளதும், இக்காலத்தில் திருக்கணமலை என்று வழங்கப்படுவதும் ஆகிய திரிகோணமலை தேவாரப்பதிகம் பெற்றுத் தெக்கிண கயிலாயம் என்று போற்றப்படும் சிவத்தலமாகும்.

202. மாட்டூர் : "மாட்டூர் மடப்பாச்சிலாச்சிராமம்" தே. 1890
"மாட்டூர் அறவா! மறவாதுன்னைப் பாடப் பணியாயே" தே. 7713
மாயூரத்திற்கு அண்மையில் உள்ள சேவூர் என்பர் சிலர். கோவைமாவட்டத்து அவிநாசிக்கு மேற்கில் 8 கி.மீ.இல் உள்ள சேவூர் என்பர் சிலர். மாடு, சே இரண்டும் ஒரே பொருளுடைய சொற்கள் ஆதலின், 'மாட்டூர்' சேவூர் என வழங்கப் பட்டது. செய்யுளில் இடபபுரி என்ற பெயர்வழக்கும் உள்ளது. இது நந்தியம்பெருமானால் வழிபாடு செய்யப்பட்ட திருத்தலம் என்பது தலபுராணச்செய்தி.[16]

மாணிகுடி : தே. 6968. "வேதிகுடி மாணிகுடி விடைவாய்க்குடி"
குறுமாணிகுடி என்பது குறுமாணக்குடி என்று திரிந்து வழங்குகின்றது. இது கண்ணார்கோயில் என்ற பாடல் பெற்ற தலமாதல் வேண்டும் என்ப.[28] சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

203. மாதானம் : தே. 6962. "வழுவூர் வீரட்டம் மாதானம் கேதாரத்துள்ளும்"
இது மாதனம் என்னும் கந்தமாதன மலையாகலாம்.

204. மாநதி : தே. 6321. "வரையார் அருவிசூழ் மாநதியும் மாகாளம்"
205. மாநிருபம் : தே. 6329. "வருநீர் வளம்பெருகும் மாநிருபமும் மயிலாப்பில்"
இவற்றின் இருப்பிடம் புலப்படவில்லை.

206. மாந்துறை :
தஞ்சைமாவட்டத்துத் திருமங்கலக்குடிக்கு அண்மையில் உள்ளது. "மஞ்சு அணி மாமதில் சூழும் மாந்துறை வந்து வணங்கி, அஞ்சொல் தமிழ்மாலை சாத்தினார் ஆளுடைய பிள்ளையார்" என்று சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார். ஆனால் சம்பந்தருடைய மாந்துறைப்பதிகம் இக்காலத்துக் கிட்டவில்லை.[28]

திருச்சி-லால்குடி இருப்புப்பாதையில் 10 கி.மீ.இல் ஒரு மாந்துறை உள்ளது. திருமங்கலக்குடியை அடுத்த மாந்துறையைக் கோடல் சிறக்கும். இது சேக்கிழார் குறிப்பிடும் தலமே ஆகும்.

*207. மாவூர் : தே. 6508. "தேரூரார் மாவூரார் திங்களூரார்"*

திருவாரூர்-திருத்தருப்பூண்டி இருப்புப்பாதை வழியில் 6 கி.மீ.இல் மாவூர்-ரோடு நிலையம் உள்ளது. இப்பொழுது இங்குள்ள புதிய காளிகோயில் பிரசித்த மாக உள்ளது.[10]

*208. மாறன்பாடி : தே. 1886. "களம்அஞ்சும் பாடிநான்கும்"*

சம்பந்தர் குறிப்பிடும் பாடிநான்கில் ஒன்று. இதன் இருப்பிடம் தெற்றெனப் போதரவில்லை.[28]

*209. மிழலைநாட்டு மிழலை : தே. 7351. "மிழலைநாட்டு மிழலை வெண்ணிநாட்டு மிழலையே"*

மாயூரத்துக்கு மேற்கே 19.2 கி.மீ.இல் பழைய மிழலைநாட்டு மிழலை சிற்றூராகக் காட்சியளிக்கிறது. இது பெருமிழலைக்குறும்பர் பிறந்தருளிய தலம்.[28] மூவர்தேவாரமும் பெற்ற பழம்பெரும்பதி வெண்ணிநாட்டு மிழலை எனப்படும் திருவீழிமிழலை. பழைய மிழலைநாடு மாயூரம் நீடூர் போன்ற ஊர்களைத் தன்னகத்துக்கொண்டு, மாயூரத்துக்கு 19 கி.மீ. மேற்கில் உள்ள மிழலையைத் தலைநகராகக்கொண்ட பகுதியாகும். இம்மிழலையில் உள்ள கோயிலில் பெருமிழலைக்குறும்பர் படிவம் உள்ளது. இம்மிழலைநாடு கும்பகோணம்வட்டத்தில் காவிரிக்கு வடக்கும் மண்ணியாற்றுக்குத் தெற்கும் உள்ள நிலப்பரப்பு என்றும் கூறப்படுகிறது.[15]

*210. மிறைக்காடு :*

*தே. 7715. "நின்றியூரானே மிறைக்காட்டானே புனல்சேர்சடையாய்"*

இதன் இருப்பிடம் போதரவில்லை.

*முதல்வனூர் : தே. 7349. "முக்கண்ணன் முதல்வனூர் நாவலூர்.....நம்பனூர்"*

முக்கண்ணன் முதல்வன் என்பன சிவபெருமானைக் குறிக்கவே, ஊர் என்பது அவன் கோயில்கொண்டுள்ள நாவலூர் முதலியவற்றிற்கு அடையாகலாம்.

*முந்தையூர் : தே. 7545. "முந்தையூர் முதுகுன்றம் குரங்கணில்முட்டம்"*

முந்தையூர் மிகப் பழைய ஊரான முதுகுன்றத்துக்கு அடையாகலாம்.

*211. மூலனூர் : தே. 7349. "மூலனூர் முதலாய முக்கண்ணன் முதல்வன் ஊர்"*

தாராபுரத்திலிருந்து கருவூர் செல்லும் கற்சாலையில் 16 கி.மீ. கிழக்கில் உள்ள-தாய்ப் பழைய சிவாலயம் உடையதாய், ஆதிசைவபரம்பரைஆதீனப் பரமசிவ-பண்டிதர் என்னும் பட்டம் வாய்ந்த கர்த்தர் நிருவகிக்கும் மடாலயத்தோடு காணப் படுகிறது.[16]

*212. மூவலூர் : தே. 5898. "கோவலூர் குடவாயில் கொடுமுடி மூவலூர்"*

குத்தாலத்துக்கும் மயிலாடுதுறையாகிய மாயூரத்துக்கும் இடையே அமைந்து ஞானசம்பந்தரால் வழிபடப்பட்ட தலமாகப் பெரியபுராணத்தில் பேசப்படும்

மூவலூர் மாயூரத்துக்கு அணிமையில் உள்ளதாய்ப் புராணங்களில் 'புன்னுகவனம்' என்று பேசப்படும் வைப்புத்தலமாகும்.[18]

213. முழையூர் : தே. 6955. "முல்லைப்புறவம் முருகன்பூண்டி முழையூர் பழையாறை"

குடந்தையை அடுத்த பட்டீசுரத்துக்குக் கிழக்கிலும் பழையாறை வடதளிக்குத் தெற்கிலும் உள்ளது. பழையாறை, முழையூர், சத்திமுற்றம் என்பன பக்கம்பக்கம் அமைந்த திருத்தலங்களாம்.[18] சோழமண்டலத்து மண்ணிநாட்டு முழையூருடையான் அரையன் மதுராந்தகனை குலோத்துங்கசோழகேரளராசன் கன்னியாகுமரி மாவட்டம் அகத்தீச்சுரம்வட்டத்தைச் சேர்ந்த சோழபுரம் என்ற ஊரில் இராசேந்திரசோழீச்சுரம் எடுப்பித்தான் என்ற கல்வெட்டுத்தொடரால், முழையூர் குடந்தைக்கு அருகில் உள்ள பகுதி என்பது உறுதி.[33]

214. வஞ்சி : தே. 2772. "கோழி எழில் வஞ்சியும்"

கொச்சிநாட்டிலுள்ள திருவஞ்சைக்களமே வஞ்சி என்பர் சிலர். திருச்சிமாவட்டத்துக் கருவூரே வஞ்சி என்பர் ஒருசாரார்.

'வஞ்சியை விட்டகல் அஞ்சிய கோதை
மகோதை' (மூவருலா)

'வஞ்சியும் உறந்தையும் மரந்தையும் மகோதையும்' (குலோத்துங்கசோழன் பிள்ளைத் தமிழ்)

'வஞ்சிக்கும் ஓதை மகோதைக்கும் மாமதுரை, இஞ்சிக்கும்' (சங்கரசோழனுலா)

'கருவூரின் மேற்காகிய கொடுங்கோளூர்' (தொல்.சொல்.தெய். 393)

முதலிய தொடர்களால் மகோதை என்னும் திருவஞ்சைக்களத்தின் வஞ்சி வேறுனது என்ப.

வஞ்சிக்கருவூர் கொங்குநாட்டில் ஒன்றும், சேரநாட்டு முசிரித் துறைமுகத்தருகு ஒன்றுமாக இரண்டு இருந்தன எனவும், சேரநாட்டு வஞ்சிக்கருவூர் கடல்கோளால் அழிந்துவிட்டது எனவும் கூறும் ஆய்வுமுளது.[32]

215. வடபேறூர் : தே. 7548. "பிச்சை ஊர்திரிவான் கடலூர் வடபேறூர்"

216. வடமாகறல் : தே. 1888. "ஆறை வடமாகறல் அம்பர் ஐயாறு"

217. வரந்தை : தே. 658. 'வரந்தையான் சோபுரத்தான் மந்திரத்தான்"

இவற்றின் இருப்பிடம் போதரவில்லை.

218. வரிஞ்சை : தே. 7634. "கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்"

வரிஞ்சை சத்திநாயனுர் பிறந்த திருத்தலம்.[28] இது வரிஞ்சையூர் எனப்படும். கீழ்வேளூர் என்னும் இருப்புப்பாதை நிலையத்தினின்றும் கற்சாலையில் 5 கி.மீ.இல் உள்ளது, கீழ்வேளூர்க் கிராமம். அவ்வூருக்குத் தென்கிழக்கில் 3 கி.மீ.இல் திருவரிஞ்சை என்ற இவ்வைப்புத்தலம் உள்ளது. இக்கோயிலில் சத்திநாயனுர் படிவம் உள்ளது.[23]

219. வழுவூர் : தே. 6962. "தஞ்சை வழுவூர் வீரட்டம்"

மயிலாடுதுறைக்குத் தெற்கே 5.4 கி.மீ.இல் உள்ளது, வழுவூர் வீரட்டம்.[28] அது ஜயங்கொண்டசோழவளநாட்டில் திருவழுந்தூர்நாட்டைச் சேர்ந்தது. இரண்டாம் இராசராசன் முதலாய இடைக்காலச் சோழமன்னர்களின் கல்வெட்டுக்கள் அக் கோயிலில் உள்ளன.[18] வடஆர்க்காடுமாவட்டத்தில் ஒரு வழுவூர் உள்ளது. அயனீச் சுரம் காண்க.

*220. வள்வி :* "கொடுங்கோளூர் தண்வளவி கண்டியூரும்" தே. 6381
"மதிசூடும் வளவியானை" தே. 6931

இருப்பிடம் போதரவில்லை.

*221. வளைகுளம் :* "வளைகுளமும் மறைக்காடும் மன்னினானை" தே. 6760
"தெள்ளாறும் வளைகுளமும் தளிக்குளமும்" தே. 6975

வடஆர்க்காடுமாவட்டம் அரக்கோணவட்டத்தில் உள்ள வளைகுளம் இக்காலத்தில் வளர்புரம் என்று வழங்குகிறது. இங்குள்ள பழைய சிவாலயத்தின் பெயர் கொண்டீச்சுரம் என்பது.[28] இதற்குச் சுந்தரபாண்டியன் முதலானோர் நிவந்தம் விடுத்துள்ளனர். (க.அ. 1911 இன் 26)[18]

*வன்னி : தே. 6965. "வலஞ்சுழி வாஞ்சியம் மருகல் வன்னி"*

திருவீழிமிழலைக்கு அருகில் வன்னியூர் என்ற பெயருடன் இக்காலத்தில் நிலவும் வைப்புத்தலமாகும்.[28]

*222. வாதவூர் : தே. 1890. "மயிண்டீச்சுரம் வாதவூர் வாரணசி"*

பாண்டியநாட்டுத் தென்பறம்புநாட்டுத் திருவாதவூர் சங்கப்புலவராகிய கபிலரும், சமயகுரவருள் ஒருவராகிய மாணிக்கவாசகரும் தோன்றிய பதியாகும்.[28] இவ்வூரை அடுத்துப் பாரியால் வழிபடப்பட்டதுஎனப்படும்பாரீசுரம் என்ற கோயில் பறம்பு மலையாகிய பிரான்மலைப் பக்கத்தில் உள்ளது. ஆகவே வாதவூர் பாண்டிநாட்டு வைப்புத்தலமாம்.[11]

*223. வாரணசி :* "மயிண்டீசுரம் வாதவூர் வாரணசி" தே. 1890
"வக்கரை மந்தாரம் வாரணசி" தே. 6960
"மதில் உஞ்சை மாகாளம் வாரணசி" தே. 6328

வாரணசி என்பது பிரசித்தமான காசிக்ஷேத்திரத்தின் பெயர். இது தேவார வைப்புத்தலங்களில் ஒன்று. இனி இரண்டாம் குலோத்துங்கன் காலத்து அமைந்த ஓர் ஊரின் பெயர் வாரணவாசி என்பதும், அங்கு ஆண்ட தலைவர் யோகீசுவரர் ஆனபோது வாரணவாசித் தேவர் என்று அழைக்கப்பட்டார் என்பதும், அவர் பெயரால் வாரணவாசி என்று ஒரூர் அமைக்கப்பட்டது என்பதும் இரண்டாம் குலோத்துங்கன்காலக் கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றன.

கன்னியாகுமரியும் அதன் சுற்றுப்புறங்களும் புறத்தாயநாடான வாரணவாசி-நாடு எனப்பட்டன என்பதும், கெடிலநதிக்கு வாரணவாசியாறு என்ற பெயரும் உண்டு என்பதும், வயலைக்காவூர் கோயிலுக்கு வாரணவாசீசுவரம்உடையார் கோயில் என்பது பெயர் என்பதும், அக்கோயிலைக் கற்றளி ஆக்கியவன் வாரண-வாசியுடையான் களப்பாளன் என்பதும், சிதம்பரம் தில்லைக்காளிகோயிலுக்கு அருகில் வாரணவாசிமகாதேவர் கோயில் இருந்தது என்பதும் கல்வெட்டுக்கள் வாயிலாக அறியப்படுகின்றன. இவ்வாரணவாசி தேவாரமூவருக்குப் பிற்பட்டுத் தோன்றியதாதலின் தேவாரம் குறிப்பிடும் வாரணவாசி காசிநகர் என்பதே தெளிவு.[21]

'தெருவின்கண், காரணமின்றிக் கலங்குவார்க் கண்டுநீ
வாரண வாசி பதம்பெற்று ஏதில
நீநின்மேற் கொள்வ தெவன்' (60:12-14) எனக் கலித்தொகையிலும் வாரண-வாசியாம் காசி இடம்பெற்றுள்ளது.

224. விடங்களூர் : தே. 7547. "விடங்களூர் திருவெண்ணி அண்ணுமலே"
இருப்பிடம் போதரவில்லே.

விடைவாய்க்குடி : தே. 6968. "வேதிகுடி மாணிகுடி விடைவாய்க்குடி"
நன்னிலம்வட்டத்தில் உள்ள திருவிடைவாசல் 'திருவிடைவாய்' என்று பண்டு வழங்கப்பட்டது. இவ்வூர்த் தேவாரம் இங்குள்ள சிவாலயத்தில் பொறிக்கப் பட்டுள்ளது. (க.அ. 1894 இன் 180)[18]

225. விந்தமாமலே : தே. 6974. "விந்தமாமலே வேதம் சையம் வியன்பொதியின்மலே"
இப்பாரதநாட்டின் நடுப்பகுதியில் கொற்றவைக்கு இருப்பிடமாகக் கூறப்படும் விந்தமாமலே.

226. விராடபுரம் : தே. 6960. "வேள்விக்குடி விளமர் விராடபுரம்"
திருச்சிமாவட்டத்தில் பெரம்பலூர்வட்டத்தில் உள்ளது என்ப. பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் செய்தபோது அவரை ஆதரித்த விராடமன்னனுக்கு அவ்வூர் உடைமையாக இருந்திருத்தல் கூடும். அங்கு இடிந்துபோன கோட்டையும் அரண்-மனேயும் உள்ளன.[18]

227. விவீச்சுரம் : தே. 6962. "வைகா வேதீச்சுரம் வி(ல்)வீச்சுரம்"
கோதாவரிமாவட்டம் திராக்ஷாராமம் என்ற ஊரில் உள்ள பீமிசுவரர் ஆலயம் வீவிச்சுரம் எனவும் விவீசுவரம் எனவும் மருவி வந்திருக்கலாம் என்பர். திராக்ஷாரா-மம் என்ற ஊரின் பெயர் பண்டு 'இடர்க்கரம்பை' என்று கல்வெட்டுக்களில் காணப்படுகிறது.[28] முதற்குலோத்துங்கன் காலத்ததாகக் கருதப்படும் கல்வெட்டுப் பாட்டுப் பின்வருமாறு :

இம்பர் நிகழ்விளக்(கு) இட்டான் இடர்க்கரம்பைச்
செம்பொன்னின் வீமிச் சுரந்தன்னில் — உம்பர்தொழ
விண்ணுய நின்றுடு வானுக்கு வேலேசூழ்
மண்ணுய்ய நின்றுடு வான்.[18]

வில்லீச்சுரம் என்று பாடம் கொண்டு புதுச்சேரிக்கு 8 கி.மீ. தென்மேற்கில் உள்ள வில்லவநல்லூர் ஆகிய வில்லியனூர் என்று கூறுவாரும் உளர்.

228. விளத்தூர் : தே. 7354. "வேளார்நாட்டு வேளூர் விளத்தூர்நாட்டு விளத்தூர்"
இருப்பிடம் போதரவில்லே.

229. விளத்தொட்டி : தே. 6960. "வெள்ளி விளத்தொட்டி வேள்விக்குடி"
மாயூரம்வட்டத்தில் திருச்சிற்றம்பலம் அண்மையில் விளத்தொட்டி உள்ளது என்ப.[28]

230. வெகுளீச்சுரம் : தே. 6328. "ஏனோர்கள் ஏத்தும் வெகுளீச்சுரம்"
இருப்பிடம் புலப்படவில்லை.

231. வெள்ளாறு : தே. 7621. "நள்ளாற்று நம்பியை வெள்ளாற்று விதியை"
வெள்ளாறு பாண்டியநாட்டின் வடஎல்லையில் அறந்தாங்கிவட்டம் வழியாக ஓடிக் கடலில் கலக்கும் ஆறு. இதன் தென்புறம் பாண்டியநாடு, வடபுறம் சோழ நாடு.[29]

232. வெற்றியூர் : "இரும்பைப்பதி மாகாளம் வெற்றியூரும்" தே. 1889
"வி(ல்)வீச்சுரம் வெற்றியூரும்" தே. 6962
"வேலனூர் வெற்றியூர் வெண்ணிக் கூற்றத்து வெண்ணியே" தே. 7349

பாண்டியநாட்டில் திருவாடானையிலிருந்து 12.8 கி.மீ.இல் உள்ள ஐயபுரி என்ற ஊரே பழைய வெற்றியூராகும். திருவாடானை தேவகோட்டையிலிருந்து 40 கி.மீ.இல் உள்ளது.[28]

233. வேங்கூர் : தே. 6961. "வீழிமிழலை வெண்காடு வேங்கூர் வேதிகுடி"
இது கல்லணையின் மேற்கே 8 கி.மீ.இல் உள்ள வேங்கூர் என்ப.

234. வேதீச்சுரம் : தே. 6962. "வேதீச்சுரம் வி(ல்)வீச்சுரம் வெற்றியூரும்"

235. வேலனூர் : தே. 7349. "வேலனூர் வெற்றியூர் வெண்ணி"
இவற்றின் இருப்பிடம் புலப்படவில்லை.

236. வேளார்நாட்டு வேளூர் : தே. 7354 "வேளார்நாட்டு வேளூர்"
பரங்கிப்பேட்டைக்கு 6.4 கி.மீ.இல் வட வெள்ளாற்றின் தென்கரையில் கணம்புல்லநாயனார் அவதரித்த வேளூர் உள்ளது. இங்கு வெள்ளாறு முட்டமாக வருதலால் இவ்வூரை முட்டவேளூர் என்பர். இது குறுநிலமன்னர்களின் கணராச்சியம். என்னும் வேளார்நாட்டில் உள்ள வேளூரே ஆகும்.

இப்பட்டியலில் வைப்புத்தலக்கோவையில் காணப்பெறும் பொற்குளம், சீக்காலி, மாந்தலம், தென்பரம்பைக்குடி, தெக்கேச்சுரம், திருமலம், எச்சனூர் என்பன இடம் பெறவில்லை. சீக்காலி என்பது தீக்காலி என்பதன் சிதைவு. தீக்காலி என்பது தீக்காலி வல்லம் எனவும், திருவல்லம் எனவும், வாணபுரம் எனவும் வழங்கும் செங்கற்பட்டுமாவட்டத்தில் உள்ள திருவலம் என்னும் பாடல் பெற்ற தலமாகும்.

அத்தமயனமலை, உதயமலை, ஏமகூடம், கந்தமாதனமலை, கழுநீர்க்குன்றம், கொல்லிமலை, கோணம், நீலகிரி, பருப்பதம், மேரு, விந்தியமலை என்பன மலைகளாம். வெள்ளாறு பாண்டியநாட்டின் வடஎல்லையில் ஓடும் ஆறுகும். சாத்தமங்கையில் உள்ள கோயிலாகிய அயவந்தியே, அசோகந்தி, அயோகந்தி என்பனவாம்.

அறப்பள்ளியும் கொல்லி அறைப்பள்ளியும் ஒன்றே.

கறையூரில் உள்ள கோயில் பாண்டிக்கொடுமுடி யாகும்.

கோழியாகிய உறையூரில் உள்ள கோயிலே குக்குடேசுவரம் என்ப.

பாதாளீச்சுரமும் பாம்பணியும் ஒரேதலத்தின் இரு பெயர்கள்.

பாற்குளம் என்பது பழையாறை ஆலயத்திலுள்ள திருக்குளம் ஆகும்.

ஞாழல்வாயிலும் ஞாழற்கோயிலும் ஒன்று ஆகலாம்.

துடையூரும் பாடல்பெற்ற தலமாகிய துறையூரும் ஒன்றாகலாம்.
மாகோணமும் திரிகோணமலையும் ஒன்றே.
மாணிகுடியும் கண்ணார்கோயிலும் ஒன்றே எனலாம்.

கொடுமுடி, கொடுங்கோவலூர், கோவந்தபுத்தூர், தண்டலை, தண்தலையாலங்காடு, தென்கோடி, தேவன்குடி, பனங்காட்டூர், பனங்காடு, பாச்சில், பாதாளீச்சுரம், மகோதை, மாகோணம், மாணிகுடி, வடகஞ்சனூர், வன்னி, விடைவாய் முதலியன பாடல்பெற்ற தலங்கள்.

இறைக்காட்டானே (தே. 7715) என்பதனை 'இறைக் காட்டாயே' என்ற பாடமாக மாற்றிக்கொண்டு 'உன்வடிவினைச் சிறிது காட்டுக' என்று பொருள்செய்யலாம். அப்பொழுது இறைக்காடு என்ற வைப்புத்தலம் கொள்ளவேண்டிய தேவை ஏற்படாது.

அமுதனூர், உண்ணீர், எங்களூர், ஏறனூர், காற்றூர், கூறனூர், தங்களூர், நம்பனூர், பாவநாசனூர், படம்பக்கம், பிறையனூர், பொருப்பள்ளி, போற்றூர் என்பன அடைமொழிகளாகலாம்.

எஞ்சியுள்ள 236 வைப்புத்தலங்கள் எண்ணிடப்பட்டுள்ளன.

இக்குறிப்பு எழுதப் பயன்படுத்தப்பட்டுள்ள நூல்களின் பட்டியல்
(முன்னர் எண்கள் குறிக்கப்பட்டுள்ளவற்றின் விளக்கம்)

| | |
|---|---|
| 1. அருணகிரிநாதர் அடிச்சுவட்டில் | சுவாமிநாதசாமி திருக்கோயில் பதிப்பு |
| 2. ஆராய்ச்சித்தொகுதி | மு. இராகவ ஐயங்கார் |
| 3. இராமநாதபுரம் மாவட்டம் | 'சோமலெ' |
| 4. ஒன்பதாந் திருமுறை | தருமையாதீனம் |
| 5. கலைக்களஞ்சியம் | தமிழ்வளர்ச்சிக் கழகம் |
| 6. கல்வெட்டியல் | தொல்பொருள் ஆய்வுத்துறை |
| 7. கல்வெட்டில் ஊர்ப்பெயர் | R. ஆளவந்தார் |
| 8. கன்னியாகுமரி கல்வெட்டு | தொல்பொருள் ஆய்வுத்துறை |
| 9. கன்னியாகுமரி மாவட்டம் | 'சோமலெ' |
| 10. கோவைமாவட்டம் | 'சோமலெ' |
| 11. சாசனத்தமிழ்க்கவிசரிதம் | மு. இராகவஐயங்கார் |
| 12. சிலப்பதிகாரம் | உ.வே.சா. பதிப்பு |
| 13. சிவஸ்தலமஞ்சரி | த. சுப்பிரமணிய பிள்ளை |
| 14. சுப்பிரமணியக்கடவுள் க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழ் | திருவாவடுதுறை ஆதீனம் |
| 15. செந்தமிழ்-தொகுதிகள் | மதுரைத்தமிழ்ச்சங்கம் |
| 16. செந்தமிழ்ச்செல்வி-தொகுதிகள் | சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் |
| 17. சேரமன்னர் வரலாறு | ஔவை.சு. துரைசாமிப்பிள்ளை |
| 18. தமிழகம்—ஊரும்பேரும் | ரா.பி. சேதுப்பிள்ளை |
| 19. தமிழ்நாவலர் சரிதை | ஔவை. சு. துரைசாமிபிள்ளை |
| 20. தருமபுரிமாவட்டம் | 'சோமலெ' |
| 21. திருக்கோயில் தொகுதிகள் | அறநிலையத்துறை |
| 22. திருத்தருப்பூண்டிக் கல்வெட்டு | தொல்பொருள் ஆய்வுத்துறை |
| 23. திருத்தொண்டர்புராண விரிவுரை | C.K. சுப்பிரமணிய முதலியார் |
| 24. தென்னாட்டுப் போர்க்களங்கள் | கா. அப்பாத்துரை |
| 25. தேவார ஒளிநெறி | வா.சு. செங்கல்வராயபிள்ளை |

| | |
|---|---|
| 26. நன்னிலம் கல்வெட்டு | தொல்பொருள் ஆய்வுத்துறை |
| 27. பல்லவர் செப்பேடுகள் | தமிழ்வளர்ச்சிக் கழகம் |
| 28. பன்னிருதிருமுறை வரலாறு தொகுதி-I | க. வெள்ளைவாரணனார் |
| 29. பாண்டியர் வரலாறு | T.V. சதாசிவ பண்டாரத்தார் |
| 30. முற்காலச் சோழர்கலையும் சிற்பமும் | S.R. பாலசுப்பிரமணியன் |
| 31. விஜயநகரப்பேரரசு வரலாறு | தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் |
| 32. *Journal of Tamil Studies 9, 1976* | p. 113 |
| 33. *Political Geography of the Chola Country* | Y. Subbarayalu |
| 34. *Temples Pallava construits* | J. Dumarçay |

# பாகம் - 4

# புராணச் செய்திகள்

# 10. பதிக வரலாறுகளின் அட்டவணை

திருஞானசம்பந்தர்

| எண் | பதிக வரலாறு | தலம் | பதிகம் | திருமுறை பதிக எண் |
|---|---|---|---|---|
| 1. | அண்ணாமலையைக் கண்டு பாடி யடைந்தது | திருஅண்ணாமலை | உண்ணாமுலை... | 1-10 |
| 2. | அந்தணர்க்கு அஞ்செழுத்துண்மை அறிவித்தது | பொது | துஞ்சலும்... | 3-22 |
| 3. | ஆண்பனையைப் பெண்பனையாக ஆக்கியது | திருஒத்தூர் | பூத் தேர்ந்து... | 1-54 |
| 4. | ஆலங்காட்டை அயர்த்து இறைவன் உணர்த்தப் பாடியது | திருஆலங்காடு | துஞ்சவரு- வாரும்... | 1-45 |
| 5. | ஆலவாயிற் பிதா முதலியவரைச் சந்தித்துத் தோணி-யப்பரை வினவிப் பாடியது | திருக்கழுமலம் | மண்ணின்... | 3-24 |
| 6. | இடைச்சுரநாதர் திருமேனியின் வண்ணங் கண்டு அதிசயித்தது | திருஇடைச்சுரம் | விரி வளர்... | 1-78 |
| 7. | இரும்பூளையில் வேதப்பொருள் விளங்க வினவுரையாகப் பாடியது | திருஇரும்பூளை | சீரார் கழலே... | 2-36 |
| 8. | உலவாக் கிழிப்பேறு | திருப்பூந்தராய் | தக்கன்வேள்வி... | 3-5 |
| 9. | என்பைப் பெண் ஆக்கியது | திருமயிலாப்பூர் | மட்டிட்ட... | 2-47 |
| 10. | கண்ணப்பநாயனார் தலையன்பின் சிறப்பு | திருக்காளத்தி | வானவர்கள்... | 3-69 |
| 11. | கயிலாயத்தைத் திருக்காளத்தியிலிருந்து பாடியது | திருக்கயிலாயம் | பொடிகொள்... | 1-68 |
| 12. | கோச்செங்கண்ணர் திருப்பணியை வியந்து பாராட்டியது | திருப்பூவணம் | மாதமர்... | 3-20 |
| 13. | கோதன பூசைச் சிறப்பு | வைகன்மாடக்கோயில் | துளமதி... | 3-18 |
| 14. | சமணரை வாதில் வெல்ல இறைவனது திருவுள்ளக்-குறிப்பை அறியப் பாடியது | திருஆலவாய் | காட்டுமாஅது... | 3-47 |
| 15. | சம்பாதி சடாயு முதலாயினார் பூசையைச் சிறப்பித்தது | புள்ளிருக்குவேளூர் | கள் ஆர்ந்த... | 2-43 |
| 16. | சிவனடியார்களுக்கு நாள்களும் கோள்களும் நல்லன என்றது | பொது | வேய் உறு... | 2-85 |
| 17. | சிறுத்தொண்டநாயனார் திருத்தொண்டின் சிறப்பு | திருச்செங்காட்டங்குடி | பைங்கோட்டு | 3-63 |

திருஞானசம்பந்தர்

| எண் | பதிக வரலாறு | தலம் | பதிகம் | திருமுறை பதிக எண் |
|---|---|---|---|---|
| 18. | செங்காட்டங்குடித் திருவோலக்கத்தைத் திருமருகலிற் கண்டது | (திருமருகல்-திருச்செங்காட்டங்குடி) | அங்கமும்... | 1-6 |
| 19. | ஞானப்பால் உண்டது | திருக்கழுமலம் | மண்ணின்... | 3-24(-2) |
| 20. | தந்தையார்பியல்மிசை இருந்து பாடியது | திருநனிபள்ளி | காரைகள்... | 2-84(-2) |
| 21. | தம்மைப் பாலன் எனப் பயந்த மங்கையர்க்கரசியாரைத் தேற்றியது | திருஆலவாய் | மானின் நேர்... | 3-39 |
| 22. | திருப்பதிக இசை யாழில் அளவுபடாத தன்மையைத் தெரிவித்தது | திருத்தருமபுரம் | மாதர்... | 1-136 |
| 23. | தில்லை மூவாயிரவரைச் சிவகணங்களாகக் கண்டு பாடியது | திருக்கோயில் | ஆடினாய்... | 3-1 |
| 24. | தீயிலிட்ட ஏடு இன்ன ஏதுவால் பச்சையாய் இருக்குமெனப் பாடியது | திருநள்ளாறு | தளிரிள... | 3-87 |
| 25. | தீயிலிட்ட ஏடு பச்சையாயிருக்க அருளியதைப் போற்றியது | (நள்ளாறு-ஆலவாய்) | பாடக மெல்லடிப்... | 1-7 |
| 26. | தோணியிலிருந்த காட்சியைத் திருவீழிமிழலையிற் கண்டது | (புகலி-வீழிமிழலை) | மைம் மரு... | 1-4 |
| 27. | நாவுக்கரசர், முருகநாயனார், நீலநக்கர், சிறுத் தொண்டர் இவர்களோடிருந்து திருப்புகலூரைச் சிறப்பித்துப் பாடியது | திருப்புகலூர் | குறி கலந்த... | 1-2 |
| 28. | நீலகண்டத்தைச் சுட்டி நளிர்சுரம் நீங்கப் பாடியது | பொது | அவ் வினைக்கு... | 1-116 |
| 29. | நீலகண்டப்பெரும்பாணரின் திருவருட்பேற்றைச் சிறப்பித்தது | திருஆலவாய் | ஆலநீழல்... | 3-116 |
| 30. | நீலநக்கநாயனார் திருத்தொண்டின் சிறப்பு | திருச்சாத்தமங்கை | திருமலர்க்... | 3-58 |
| 31. | பழுவூரில் மலையாளர்வழிபாட்டைச் சிறப்பித்துப் பாடியது | திருப்பழுவூர் | முத்தன் மிகு... | 2-34 |
| 32. | பாலை நெய்தல் பாடியது | திருநனிபள்ளி | நாரைகள்... | 2-84 |

| எண் | பதிக வரலாறு | தலம் | பதிகம் | திருமுறை பதிக எண் |
|---|---|---|---|---|
| 33. | பிள்ளையார் திருநல்லூர்ப்பெருமணத்து இறைவனிடம் முத்தி விண்ணப்பம்செய்தது | திருநல்லூர்ப்பெருமணம் | நல்லூர்ப்... | 3-25 |
| 34. | புனல்வாதத்தின்பொருட்டுத் திருவேட்டில் எழுதப் பாடிய திருப்பாசுரம் | பொது | வாழ்க... | 3-54 |
| 35. | பொன்தாளப் பேறு | திருக்கோலக்கா | மடையில்... | 1-23 |
| 36. | மடத்தில் சமணர் தீக்கொளுவ, தீயை வெட்புநோயாகத் தென்னவன்மீது ஏவியது | திருஆலவாய் | செய்யனே... | 3-51 |
| 37. | மறைக்கதவம் அடைக்கப் பாடியது | திருமறைக்காடு | சதுரம்மறை... | 2-37 |
| 38. | முத்துச்சிவிகை முதலியவற்றின் பேறு, | திருநெல்வாயில் அரத்துறை | எந்தையீசன்... | 2-90 |
| 39. | முத்துப்பந்தரைப் பெற்றது | திருப்பட்டீச்சுரம் | பாடல்மறை... | 3-75 |
| 40. | முயலகனைத் தீர்த்தது | திருப்பாச்சிலாச்சிராமம் | துணி வளர்... | 1-44 |
| 41. | முருகநாயனார் திருத்தொண்டைச் சிறப்பித்தது | திருப்புகலூர் வர்த்த-மானீச்சுரம் | பட்டம்... | 2-92 |
| 42. | முருகன் வழிபாட்டையும் சண்டேசுரரது பாதகப் பயனையும் பாடியது | திருச்சேய்ஞலூர் | நூல் அடைந்த... | 1-48 |
| 43. | முள்ளிவாயில் ஓடம் உய்த்துத் திருக்கொள்ளம்புதூர் அடைந்தது | திருக்கொள்ளம்புதூர் | கொட்டமே... | 3-6 |
| 44. | வடகுரங்காடுதுறையில் வாலியின் வழிபாடு கூறியது | திருவடகுரங்காடுதுறை | கோங்கமே... | 3-36 |
| 45. | வணிகனை விடம் தீர்த்தது | திருமருகல் | சடையாய்... | 2-18 |
| 46. | வாசி தீரப் பாடியது | திருவீழிமழலை | வாசி தீரவே... | 1-92 |
| 47. | வாய்மூர் அடிகளின் ஆடலைத் தாம் கண்டு அப்பருக்குக் காட்டியது | திருவாய்மூர் | தளரிளவளர்... | 2-111 |
| 48. | வீட்டுநெறியினை அறிவுறுத்தவும், திருச்சோதியிற் கலப்போர் பாசம் தீரவும் திருவைந்தெழுத்து உரைத்தது | பொது | காதல் ஆகிக்... | 3-49 |
| 49. | திருவெண்காட்டு முக்குளத்தைச் சிறப்பித்தது | திருவெண்காடு | கண்காட்டு... | 2-48 |
| 50. | திருவெண்ணீற்றினால் பாண்டியனின் சுரம் தீர்த்தது | திருஆலவாய் | மந்திரம்... | 2-66 |
| 51. | வைகையில் எதிர் ஏறிச்சென்ற ஏடு தங்கப் பாடியது | திருஏடகம் | வன்னியும்... | 3-32 |

திருநாவுக்கரசர்

| எண் | பதிக வரலாறு | தலம் | பதிகம் | திருமுறை பதிக எண் |
|---|---|---|---|---|
| 1. | அப்பூதியடிகளைச் சிறப்பித்தது | திருப்பழனம் | சொல்மாலை... | 4-12 |
| 2. | அம்பலக்கூத்தனை மறவேன் எனப் பாடியது | கோயில் | பனைக்கை... | 5-2 |
| 3. | அரவின் விடம் அகற்றியது | (திங்களூர்-திருப்பழனம்) | ஒன்று-கொலாம்... | 4-18 |
| 4. | ஆழிமிசைக் கல்மேல் மிதந்தது | பொது | சொல்-துணை... | 4-11 |
| 5. | ஆளுடையபிள்ளையார் திருவாய்மூர்நாதரைக் காட்டச் கண்டு பாடியது | திருவாய்மூர் | பாட அடியார்... | 5-77 |
| 6. | இடபச்சூலஇலச்சினைகளை இட்டருள விண்ணப்பித்தது | திருத்தூங்கானைமாடம் | பொன் ஆர்திரு... | 4-109 |
| 7. | கழுமலஊரர்க்குக் கிழி அருளியதைப் போற்றியது | திருஆவடுதுறை | மாஇருஞாலம்... | 4-56 |
| 8. | கொலைக்களிறு வணங்கப் பாடியது | திருஅதிகை | சுண்ண வெண்... | 4-2 |
| 9. | சபாநாயகரின் திருநிருத்தம் கண்டு ஆனந்த பரவசரானது | கோயில் | கரு நட்ட... | 4-81 |
| 10. | சமணசமயத்தைச் சார்ந்து இறைவனை இகழ்ந்தது நினைத்து வருந்தியது | திருஅதிகை | வெறி விரவு... | 6-3 |
| 11. | சிவத்தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் பெறப்படுமோ என இரங்கியது | திருஆரூர் | குலம் பலம்... | 4-101 |
| 12. | சூலை தீர்த்து ஆட்கொள்ளப்பெற்றது | திருஅதிகை | கூற்றுஆயின... | 4-1 |
| 13. | திருக்கயிலாயக் கோலத்தைப் போற்றியது | திருக்கயிலாயம் | வேற்றாகி... | 6-55 |
| 14. | திருநல்லூரில் திருவடி சூட்டப்பெற்றது | திருநல்லூர் | நினைந்து உருகு... | 6-14 |
| 15. | திருப்பழையாறை வடதளியில் சமணரால் மறைக்கப்பட்ட சுவாமியை வெளிப்படுத்திப் பாடியது | திருப்பழையாறை வடதளி | தலைஎலாம்... | 5-58 |
| 16. | திருவாய்மூருக்கு வரப் பணிக்க, இறைவர்பின்னே எழுந்தருளியது | திருவாய்மூர் | எங்கே என்னை... | 5-50 |

| எண் | பதிக வரலாறு | தலம் | பதிகம் | திருமுறை பதிக எண்கள் |
|---|---|---|---|---|
| 17. | திருவாரூர்த் திருவாதிரைத் திருவிழாச் சிறப்பைப் பிள்ளையார்க்கு உரைத்தது | திருஆரூர் | முத்து விதானம்... | 4-21 |
| 18. | திருவீழிமிழலையில் உய்யும் நெறியை உணர்த்தியது | திருவீழிமிழலை | போரானை... | 6-50 |
| 19. | திருவேகம்பத்தானைத் தன் எண்ணத்தானென அருளியது | திருக்கச்சிஏகம்பம் | கூற்றுவன்... | 6-64 |
| 20. | திருவையாற்றில் திருக்கயிலாயக் காட்சியைக் கண்ணுற்றது | திருஐயாறு | மாதர் பிறைக்... | 4-3 |
| 21. | நஞ்சுண்டது | நனிபள்ளி | முன்-துணை... | 4-70(-5) |
| 22. | நமிநந்தியடிகள் திருத்தொண்டினைச் சிறப்பித்தது | திருஆரூர் | வேம்பினை... | 4-103 |
| 23. | நீற்றறையில் உயிர் உய்ந்தது | பொது | மாசில்... | 5-90 |
| 24. | படிக்காசு பெற்ற செய்தி | திருவாய்மூர் | எங்கே என்னை... | 5-50(-7) |
| 25. | பல்லவராசனுடைய மந்திரிகளுக்கு மறுமாற்றம் உரைத்தது | பொது | நாம் ஆர்க்கும்... | 6-98 |
| 26. | பூம்புகலூரான் பாதம் பொருந்தியது | திருப்புகலூர் | எண்ணுகேன்... | 6-99 |
| 27. | பொன்மணிகளாலும் விண்மாதர்களாலும் சித்தநிலை தடுமாறாது நின்றது | திருஆரூர் | பொய்ம் மாயப்... | 6-27 |
| 28. | மறைகள் காப்பிட்ட திருக்கதவம் திறப்பித்தது | திருமறைக்காடு | பண்ணின் நேர்... | 5-10 |

சுந்தரர்

| எண் | பதிக வரலாறு | தலம் | பதிகம் | பதிக எண் |
|---|---|---|---|---|
| 1. | அப்பர் ஏழெழுநூறு திருப்பதிகம் பாடினமையைச் சிறப்பித்தது | திருநின்றியூர் | திருவும்... | 65 |
| 2. | அப்பர்சம்பந்தர் இவர்களுடைய பாடல்களைச் சிறப்பித்தது | திருவலிவலம் | ஊன் அங்கத்து... | 67 |
| 3. | ஆரூரில் இறைவனைக் கைக்கிளையாற் பாடியது | திருஆரூர் | குருகு பாயக்... | 39 |
| 4. | ஆரூரில் வலக்கண் பெற்றது | திருஆரூர் | மீளா அடிமை... | 95 |
| 5. | ஆலம்பொழிலில் இறைவன் கனவில் எழுந்தருளியது | திருமழபாடி | பொன்ஆர் மேனி... | 24 |
| 6. | ஆவடுதுறையில் கண் மறைந்தமை கருதிக் கவன்று பாடியது | திருஆவடுதுறை | கங்கை வார்... | 70 |
| 7. | ஆறு விலகியது | திருஐயாறு | பரவும் பரிசு... | 77 |
| 8. | இல்லறம் நடத்தியது | திருநொடித்தான்மலை | தான்எனை... | 100 (-3) |
| 9. | இறைவன் கூடலையாற்றூர்க்கு வழிகாட்டியது | திருக்கூடலையாற்றூர் | வடிவுடை... | 85 |
| 10. | இறைவன் தடுத்தாட்கொண்டது | திருவெண்ணெய்-நல்லூர் | பித்தா பிறை... | 1 |
| 11. | இறைவன் பந்தர் அமைத்துப் பொதிசோறருளியது | திருக்குருகாவூர்-வெள்ளடை | இத்தனைஆம்... | 29 |
| 12. | உடம்பின் பிணி தீரப்பெற்றது | (திருத்துருத்தியும் - திருவேள்விக்குடியும்) | மின்னுமா... | 74 |
| 13. | உறையூர்ச் சோழரின் மணிமாலையை இறைவன் அணிந்தமையைச் சிறப்பித்தது... | திருஆனைக்கா | மறைகள் ஆயின... | 75 |
| 14. | ஊன்றுகோல் அருளப்பெற்றது | திருவெண்பாக்கம் | பிழைஉளன... | 89 |
| 15. | ஊன்றுகோல் கேட்டது | திருஒற்றியூர் | அழுக்குமெய்... | 54(-4) |

சுந்தரர்

| எண் | பதிக வரலாறு | தலம் | பதிகம் | பதிக எண் |
|---|---|---|---|---|
| 16. | ஏயர்கோன் கலிக்காமர் பகையைத் தீர்த்து அவரை நட்புக் கொண்டது | திருப்புன்கூர் | அந்தணாளன்... | 55 |
| 17. | ஒற்றியூரில் ஆரூரரை நினைத்துப் பாடியது | திருஆரூர் | பத்திமையும்... | 51 |
| 18. | ஓணகாந்தன்தளியில் பொன் பெற்றது | திருஓணகாந்தன்தளி | நெய்யும் பாலும்... | 5 |
| 19. | கச்சியேகம்பத்தில் ஆரூரரை நினைத்துப் பாடியது | திருஆரூர் | அந்தியும்... | 83 |
| 20. | கச்சியேகம்பத்தில் இடக்கண் பெற்றது | திருக்கச்சிஏகம்பம் | ஆலந்தான்... | 61 |
| 21. | கழுமலத்திற் கயிலைக் காட்சி அளிக்கப்பெற்றது | திருக்கழுமலம் | சாதலும்... | 58 |
| 22. | குண்டையூரில் நெல்லெடுக்க ஆள் பெற்றது | திருக்கோளிலி | நீள நினைந்து... | 20 |
| 23. | கூடலையாற்றூருக்கு வழிகாட்டி இறைவன் மறைந்தது | திருக்கூடலையாற்றூர் | வடிவுடை மழு... | 85 |
| 24. | கொடுங்கோளூரில் ஆரூரை நினைத்துப் பாடிப் புறப்பட்டது | திருஆரூர் | பொன்னும்... | 59 |
| 25. | கோட்புலியாரைச் சிறப்பித்துச் சிங்கடிவனப்பகையாரை மகண்மை கொண்டது | திருநாட்டியத்தான்குடி | பூண்நாண்... | 15 |
| 26. | கோலக்காவிற் காட்சி கண்டு சம்பந்தர் தாளம் பெற்றதைச் சிறப்பித்தது | திருக்கோலக்கா | புற்றில்வாள்... | 62 |
| 27. | சங்கிலிநாச்சியாரை இறைவன் சுந்தரருக்கு மணம் செய்வித்தது | திருஆரூர் | பத்திமையும்... | 51(-11) |
| 28. | சித்தவடமடத்தில் திருவடி தீட்சை பெற்றது. | திருஅதிகை | தம்மானை... | 38 |
| 29. | சிற்றின்பத்தைத் திருவருள் நினைவோடு அனுபவித்தது | திருஆமாத்தூர் | காண்டனன்... | 45(-4) |
| 30. | சுழியலில் கனவில் இறைவன் எழுந்தருளியது | திருக்கானப்பேர் | தொண்டர் அடி... | 84 |
| 31. | சூளுறவால் கண்கள் மறைவுற்ற செய்தி | திருஒற்றியூர் | அழுக்குமெய்... | 54 |
| 32. | செங்கணான் பிறப்பைச் சிறப்பித்துப் பாடியது | திருஆவடுதுறை | மறையவன்... | 66 |
| 33. | செங்கல்லைப் பொன்னாக்கியது | திருப்புகலூர் | தம்மையே... | 34 |
| 34. | தவநெறி வேண்டிப் பெற்றது | திருத்துறையூர் | மலைஆர் அருவி... | 13 |
| 35. | திருக்கச்சூரில் இறைவன் பிச்சையேற்றுச் சோறளிக்கப் பெற்றது | திருக்கச்சூர்-ஆலக்கோயில் | முதுவாய் ஓரி... | 41 |

சுந்தரர்

| எண் | பதிக வரலாறு | தலம் | பதிகம் | பதிக எண் |
|---|---|---|---|---|
| 36. | திருத்தொண்டத்தொகை பாடியது | திருஆரூர் | தில்லை வாழ்... | 59 |
| 37. | தொண்டர் எதிர்கொள்ளத் திருவாரூர் அணைந்தது | திருஆரூர் | கரையும்... | 73 |
| 38. | பரவைநாச்சியாரை இறைவன் சுந்தரருக்கு மணம் செய்வித்தது | திருஆரூர் | பத்திமையும்... | 51(-10) |
| 39. | பனையூரில் திருக்கூத்துக்காட்சி கொடுத்தருளக் கண்டது | திருப்பனையூர் | மாடமாளிகை... | 87 |
| 40. | பாச்சிலாச்சிராமத்தில் பொன் பெற்றது | திருப்பாச்சிலாச்சிராமம் | வைத்தனன்... | 14 |
| 41. | பாண்டிக்கொடுமுடியில் நமச்சிவாயப் பதிகம் பாடியருளியது | திருப்பாண்டிக்-கொடுமுடி | மற்றுப்பற்று... | 48 |
| 42. | புகழ்த்துணைநாயனரைச் சிறப்பித்துப் பாடியது | திருஅரிசிற்-கரைப்புத்தூர் | மலைக்கும்... | 9 |
| 43. | பேரூரிற் கண்ட திருக்கூத்தைத் தில்லையில் நினைந்து பாடியது | கோயில் | மடித்து ஆடும்... | 90 |
| 44. | பைஞ்ஞீலியில் இறைவனை மயலாற் பாடியது | திருப்பைஞ்ஞீலி | கார்உலாவிய... | 36 |
| 45. | மகிழமரத்தின்கீழ்ச் சபதம் பற்றிய குறிப்பு | திருவெண்பாக்கம் | பிழைஉளன... | 89(-9) |
| 46. | முதலைவாய்ப் பிள்ளையை அழைத்தது | திருப்புக்கொளியூர்-அவிநாசி | எற்றான் மறக்கேன்... | 92 |
| 47. | முதுகுன்றத்து இட்ட பொன்னை ஆரூர்க்குளத்தில் பெற்றது | திருமுதுகுன்றம் | பொன் செய்த... | 25 |
| 48. | முருகன்பூண்டியில் வேடர் பறித்த பொன்னை மீண்டும் பெற்றது | திருமுருகன்பூண்டி | கொடுகுவெஞ்... | 49 |
| 49. | மூவேந்தருடன் பரங்குன்று தொழுதமை | திருப்பரங்குன்றம் | கோத்திட்டை... | 2 |
| 50. | வடதிருமுல்லைவாயிலில் கண்கள் மறைத்ததையும் தொண்டைமானுக்கு அருளியதையும் பாடியது | வடதிருமுல்லைவாயில் | திருவும் மெய்ப்... | 69 |
| 51. | வாழ்கொளிபுத்தூரை நினைந்து அணைந்தது | திருவாழ்கொளி-புத்தூர் | தலைக்கலன்... | 57 |
| 52. | வெள்ளையானையின்மேல் ஏறித் திருக்கயிலை சென்றது | திருஅஞ்சைக்களம் | தலைக்குத் தலை... | 4 |

# 11. ஆலயங்களின் சிறப்புப்பெயர் முதலியன

| தலப்பெயர் | கோயிலின்பெயர் |
|---|---|
| 1. ஆரூர் | பூங்கோயில் |
| 2. ஆவூர் | பசுபதீச்சுரம் |
| 3. கச்சூர் | ஆலக்கோயில் |
| 4. கடம்பூர் | கரக்கோயில் |
| 5. கருப்பறியலூர் | கொகுடிக்கோயில் |
| 6. கருவிலி | கொட்டிட்டை |
| 7. கருவூர் | ஆன்நிலை |
| 8. கொட்டையூர் | கோடீச்சுரம் |
| 9. கோடி | குழகர்கோயில் |
| 10. கோவந்தபுத்தூர் | விசயமங்கை |
| 11. சாத்தமங்கை | அயவந்தி |
| 12. செங்காட்டங்குடி | கணபதீச்சுரம் |
| 13. நறையூர் | சித்தீச்சுரம் |
| 14. பனந்தாள் | தாடகேச்சுரம் |
| 15. பெண்ணுகடம் | தூங்கானைமாடம் |
| 16. வெண்ணெய்நல்லூர் | அருட்டுறை |

## கோயிலுக்குள்கோயில்

| கோயில் | உட்கோயில் |
|---|---|
| 1. திருஆரூர் | திருஆரூர் அரநெறி |
| 2. திருப்புகலூர் | திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம் |
| 3. மீயச்சூர் | மீயச்சூர் இளங்கோயில் |

## பிரமன்சந்நிதி உள்ள தலங்கள்

1. திருக்கண்டியூர்
2. திருப்பாண்டிக்கொடுமுடி

## விஷ்ணுசந்நிதி உடைய சிவாலயங்கள்

| | |
|---|---|
| ஒத்தூர் | ஆதிகேசவப்பெருமாள் |
| கச்சிஏகம்பம் | நிலாத்துண்டப்பெருமாள் |
| கொடிமாடச் செங்குன்றூர் | ஆதிகேசவப்பெருமாள் |
| கோயில் | கோவிந்தராசப்பெருமாள் |
| சிக்கல் | கோலவாமனப்பெருமாள் |
| திருநணு | ஆதிகேசவப்பெருமாள் |
| திருநாவலூர் | வரதராசப்பெருமாள் |
| திருநெல்வேலி | நெல்லைக் கோவிந்தர் |
| பாண்டிக்கொடுமுடி | அரங்கநாதர் |

# திருத்தலங்களின் இக்காலப்பெயர்களும் தேவாரப்பெயர்களும்

| இக்காலப்பெயர் | தேவாரப்பெயர் |
|---|---|
| 1. அரித்துவார மங்கலம் | அரதைப்பெரும்பாழி |
| 2. அழகார்புத்தூர் | அரிசிற்கரைப்புத்தூர் |
| 3. அன்னப்பன்பேட்டை | கலிக்காமூர் |
| 4. ஆச்சாபுரநல்லூர் | நல்லூர்ப்பெருமணம் |
| 5. ஆடுதுறை | தென்குரங்காடுதுறை |
| 6. ஆண்டார்கோயில் | வடுகூர் |
| 7. ஆண்டான்கோயில் | கடுவாய்க்கரைப்புத்தூர் |
| 8. ஆப்புடையார்கோயில் | ஆப்பனூர் |
| 9. ஆரணியேசுவரர்கோயில் | கீழைத்திருக்காட்டுப்பள்ளி |
| 10. ஆலங்குடி | இரும்பூளை |
| 11. இலுப்பைப்பட்டு | மண்ணிப்படிக்கரை |
| 12. உடையார்கோயில் | திருச்சேறை |
| 13. உய்யக்கொண்டான் | திருக்கற்குடி |
| 14. உறையூர் | மூக்கீச்சுரம் |
| 15. ஐயர்மலை | வாட்போக்கி |
| 16. ஒழுந்தியாப்பட்டு | அரசிலி |
| 17. ஓகைப்பேரையூர் | பேரெயில் |
| 18. கடம்பர்கோயில் | கடம்பந்துறை |
| 19. கரையபுரம் | கரவீரம் |
| 20. கற்பகனூர் கோயில் | கடிக்குளம் |
| 21. காளையார் கோயில் | கானப்பேர் |
| 22. காணாட்டம்புலியூர் | காணாட்டுமுள்ளூர் |
| 23. கிராமம் | முண்டீச்சுரம் |
| 24. கீழன்பில் | அன்பில்ஆலந்துறை |
| 25. கீழையூர் | கடைமுடி |
| 26. குத்தாலம் (தஞ்சை மாவட்டம்) | துருத்தி |
| 27. கும்பகோணம் | குடந்தை |
| 28. கும்பகோணம் காசிவிசுவநாதர்கோயில் | குடந்தைக்காரோணம் |
| 29. கும்பகோணம் நாகேசுரசுவாமிகோயில் | குடந்தைக்கீழ்க்கோட்டம் |
| 30. குழகர்கோயில் | கோடி |
| 31. குறுமாணக்குடி | கண்ணார்கோயில் |
| 32. கூவம் | விற்கோலம் |
| 33. கோயிலூர் | திருஉசாத்தானம் |
| 34. கோயிற்பத்து | தெளிச்சேரி |
| 35. கோனேரிராசபுரம் | திருநல்லம் |
| 36. சாக்கோட்டை | கலையநல்லூர் |
| 37. சாயாவனம் | சாய்க்காடு |
| 38. சிதம்பரம் | கோயில், தில்லை |
| 39. சிவாயம், இரத்தினகிரி | வாட்போக்கி |
| 40. சிற்றூமூர் | சிற்றேமம் |
| 41. தக்கோலம் | ஊறல் |

| இக்காலப்பெயர் | தேவாரப்பெயர் |
|---|---|
| 42. தண்டலைச்சேரி | தண்டலைநீள்நெறி |
| 43. திட்டை | தென்குடித்திட்டை |
| 44. தியாகவல்லி | திருச்சோபுரம் |
| 45. திருக்கடாவூர் | திருக்குருகாவூர் |
| 46. திருக்களாவூர் | திருக்கருகாவூர் |
| 47. திருக்கள்ளம் | திருக்கள்ளில் |
| 48. திருக்காறைவாசல் | திருக்காறுயில் |
| 49. திருக்குவளை | கோளிலி |
| 50. திருக்கொட்டாரம் | திருக்கோட்டாறு |
| 51. திருச்செங்கோடு | கொடிமாடச்செங்குன்றூர் |
| 52. திருத்தாளமுடையார்கோயில் | திருக்கோலக்கா |
| 53. திருநாமநல்லூர் | திருநாவலூர் |
| 54. திருப்பனங்காடு | வன்பார்த்தான்பனங்காட்டூர் |
| 55. திருவண்டுதுறை | திருவெண்டுறை |
| 56. திருவாசி | திருப்பாச்சிலாச்சிராமம் |
| 57. திருவிங்கநாதமலை | திருஈங்கோய்மலை |
| 58. திருவெறும்பூர் | திருஎறும்பியூர் |
| 59. திலதர்ப்பணபுரி | திலதைப்பதி |
| 60. தில்லைஸ்தானம் | திருநெய்த்தானம் |
| 61. தீர்த்தனகிரி | திருத்திணைநகர் |
| 62. துருவாசர்கோயில் | திருவாரூர்ப் பரவையுள்மண்டளி |
| 63. துலாநாயனார்கோயில் | |
| 64. துவாய்நாயனார்கோயில் | |
| 65. தென்னல்குடி | திருநீலக்குடி |
| 66. தேரழுந்தூர் | திருவழுந்தூர் |
| 67. நெய்வெணை | திருநெல்வெண்ணெய் |
| 68. பசுபதிகோயில் | திருப்புள்ளமங்கை |
| 69. பருத்தியப்பர்கோயில் | பரிதிநியமம் |
| 70. பவானி | திருநணா |
| 71. பனையபுரம் | புறவார்பனங்காட்டூர் |
| 72. பாடி | திருவலிதாயம் |
| 73. பாமணி | பாதாளேச்சுரம் |
| 74. பிரான்மலை | கொடுங்குன்றம் |
| 75. புஞ்சை | திருநனிபள்ளி |
| 76. பொன்னூர் | திருஅன்னியூர் |
| 77. மதுரை | திருஆலவாய் |
| 78. மருதாந்தநல்லூர் | திருக்கருக்குடி |
| 79. மேலைத்திருமணஞ்சேரி | எதிர்கொள்பாடி |
| 80. ராசேந்திரப்பட்டினம் | எருக்கத்தம்புலியூர் |
| 81. விருத்தாசலம் | திருமுதுகுன்றம் |
| 82. வேதாரணியம் | திருமறைக்காடு |

## வனவிசேடப்பெயர்கள்

| | |
|---|---|
| 1. திருஆடானை | வில்வவனம் |
| 2. திருஉசாத்தானம் | சூதவனம் |
| 3. திருநாகேச்சுரம் | சண்பகவனம் |
| 4. திருநீடூர் | மகிழவனம் |
| 5. திருநெல்வேலி | வேணுவனம் |
| 6. திருமுருகன்பூண்டி | மாதவிவனம் |
| 7. திருவக்கரை | குண்டலிவனம் |
| 8. நன்னிலம் | மதுவனம் |
| 9. மதுரை | கடம்பவனம் |
| 10. வேதாரணியம் | மறைவனம் |

## சூரிய சந்திர பூசைத்தலங்கள்

| | |
|---|---|
| 1. கண்டியூர் | சூரிய பூசை |
| 2. குடந்தைக் கீழ்க்கோட்டம் | சூரிய பூசை |
| 3. தெளிச்சேரி | சூரிய பூசை |
| 4. நெல்லிக்கா | சூரிய பூசை |
| 5. புறவார்பனங்காட்டூர் | சூரிய பூசை |
| 6. வேதிகுடி | சூரிய பூசை |
| 7. திங்களூர் | சந்திர பூசை |

## பொதுவான முடிபுள்ள தலங்கள்

### 1. ஆறு

1. இடையாறு
2. ஐயாறு
3. கோட்டாறு
4. நள்ளாறு

### 2. ஈச்சுரம்

1. இராமன்நந்தீச்சுரம்
2. இராமேச்சுரம்
3. கணபதீச்சரம் (செங்காட்டங்குடி)
4. கேதீச்சுரம்
5. தொண்டீச்சுரம்
6. சம்புகேச்சுரம் (ஆனைக்கா)
7. சித்தீச்சுரம் (நறையூர்)
8. தாடகேச்சுரம் (திருப்பனந்தாள்)
9. நாகேச்சுரம்
10. பட்டீச்சுரம்
11. பசுபதீச்சுரம் (ஆவூர்)
12. பல்லவனீச்சுரம் (காவிரிப்பூம்பட்டினம்)
13. பாதாளேச்சுரம்
14. முண்டீச்சுரம்
15. மூக்கீச்சுரம்
16. வர்த்தமானீச்சுரம் (புகலூர்)

### 3. ஊர்

1. அழுந்தூர்
2. அன்னியூர்
3. ஆக்கூர்
4. ஆப்பனூர்
5. ஆமாத்தூர்
6. ஆரூர்
7. ஆவூர்
8. இடைமருதூர்
9. எறும்பியூர்
10. ஒற்றியூர்
11. ஒத்தூர்
12. கச்சூர்
13. கஞ்சனூர்
14. கடம்பூர்
15. கடவூர்
16. கண்டியூர்
17. கருகாவூர்
18. கருப்பறியலூர்
19. கருவூர்
20. கலிக்காமூர்
21. கன்றாப்பூர்

ஊர் (தொடர்ச்சி)

22. காளுட்டுமுள்ளூர்
23. கானூர்
23 அ. கிளியன்னவூர்
24. குருகாவூர்
25. கூடலையாற்றூர்
26. கொடிமாடச்செங்குன்றூர்
27. கொட்டையூர்
28. கொள்ளம்பூதூர்
29. கோவலூர்
30. துறையூர்
31. தெங்கூர்
32. தேவூர்
33. நறையூர்
34. நாரையூர்
35. நாவலூர்
36. நின்றியூர்
37. நீடூர்
38. பயற்றூர்
39. பழுவூர்
40. பறியலூர்
41. பனையூர்
42. பாசூர்
43. புகலூர்
44. புறவார்பனங்காட்டூர்
45. புன்கூர்
46. பூவனூர்
47. மயிலாப்பூர்
48. மீயச்சூர்
49. வடுகூர்
50. வன்பார்த்தான்பனங்காட்டூர்
51. வன்னியூர்
52. வாய்மூர்
53. வான்மியூர்
54. வியலூர்
55 வெண்ணியூர்
56. வைகாவூர்

4. களம்

1. அஞ்சைக்களம்
2. நெடுங்களம்
3. வேட்களம்

5. கா

1. ஆனைக்கா
2. குரக்குக்கா
3. கோடிகா
4. கோலக்கா
5. நெல்லிக்கா

6. காடு

1. ஆலங்காடு
2. கச்சிநெறிக்காரைக்காடு
3. கொள்ளிக்காடு
4. சாய்க்காடு
5. தலைச்சங்காடு
6. தலையாலங்காடு
7. மறைக்காடு
8. வெண்காடு
9. வேற்காடு

7. காரோணம்

1. கச்சிக்காரோணம்
2. குடந்தைக்காரோணம்
3. நாகைக்காரோணம்

8. காவதம்

1. அநேகதங்காவதம்
2. கச்சிஅநேகதங்காவதம்

9. குடி

1. கருக்குடி
2. கற்குடி
3. சிறுகுடி
4. செங்காட்டங்குடி
5. திருந்துதேவன்குடி
6. நாட்டியத்தான்குடி
7. நீலக்குடி
8. மங்கலக்குடி
9. விற்குடி
10. வேட்டக்குடி
11. வேதிகுடி
12. வேள்விக்குடி

10. குன்றம்

1. கழுக்குன்றம்
2. கொடுங்குன்றம்
3. பரங்குன்றம்
4. முதுகுன்றம்

11. கூடல்

1. கூடல்
2. பள்ளியின்முக்கூடல்
3. வெஞ்சமாக்கூடல்

12. கோட்டூர்

1. இலம்பையங்கோட்டூர்
2. கோட்டூர்

13. கோயில்

1. அம்பர்ப்பெருந்திருக்கோயில்
2. கண்ணார்கோயில்
3. தில்லைக்கோயில்
4. நன்னிலத்துப்பெருங்கோயில்
5. மீயச்சூர்இளங்கோயில்
6. வைகல்மாடக்கோயில்

14. சேரி

1. தெளிச்சேரி
2. மணஞ்சேரி

15. தளி

1. ஆரூர்ப்பரவையுள்மண்டளி
2. ஓணகாந்தன்தளி
3. கச்சிமேற்றளி
4. பழையாறைவடதளி

16. தானம்

1. திருஉசாத்தானம்
2. திருநெய்த்தானம்

17. துருத்தி

1. துருத்தி
2. பூந்துருத்தி

18. துறை

1. அன்பில்ஆலந்துறை
2. ஆவடுதுறை
3. கடம்பந்துறை
4. (தென்) குரங்காடுதுறை
   (வட) குரங்காடுதுறை
5. சோற்றுத்துறை
6. நெல்வாயில்அரத்துறை
7. பராய்த்துறை
8. பாலைத்துறை
9. பாற்றுறை
10. பேணுபெருந்துறை
11. மயிலாடுதுறை
12. மாந்துறை
13. வெண்டுறை

19. நகர்

1. தினைநகர்
2. விளநகர்

20. நல்லூர்

1. அவள்இவள்நல்லூர்
2. அறைஅணிநல்லூர்
3. கலையநல்லூர்
4. சேய்ஞலூர்
5. நல்லூர்
6. பந்தணைநல்லூர்
7. வெண்ணெய்நல்லூர்

21. நெறி

1. ஆரூர்அரநெறி
2. சேறைச்செந்நெறி
3. தண்டலைநீள்நெறி

22. பருப்பதம்

1. இந்திரநீலபருப்பதம்
2. சீபருப்பதம்

23. பள்ளி

1. அகத்தியான்பள்ளி
2. கீழைத் திருக்காட்டுப்பள்ளி
3. சக்கரப்பள்ளி
4. சிராப்பள்ளி
5. செம்பொன்பள்ளி
6. நனிபள்ளி
7. மயேந்திரப்பள்ளி
8. மேலைத் திருக்காட்டுப்பள்ளி

24. பனங்காட்டூர்

1. புறவார்பனங்காட்டூர்
2. வன்பார்த்தான்பனங்காட்டூர்

25. பாக்கம்

1. அச்சிறுபாக்கம்
2. வெண்பாக்கம்

26. பாடி

1. ஆப்பாடி
2. எதிர்கொள்பாடி
3. மழபாடி

27. புத்தூர்

1. அரிசிற்கரைப்புத்தூர்
2. கடுவாய்க்கரைப்புத்தூர்
3. திருப்புத்தூர்
4. வாழ்கொளிபுத்தூர்

28. புரம்
1. சிவபுரம்
2. சோபுரம்
3. தருமபுரம்
4. பாம்புரம்
5. வலம்புரம்

29. புலியூர்
1. எருக்கத்தம்புலியூர்
2. ஓமாம்புலியூர்
3. பாதிரிப்புலியூர்
4. பெரும்பற்றப்புலியூர்
5. பெரும்புலியூர்

30. மங்கை
1. சாத்தமங்கை
2. புள்ளமங்கை
3. விசயமங்கை

31. மயானம்
1. கச்சிமயானம்
2. கடவூர்மயானம்
3. நாலூர்மயானம்

32. மலை
1. அண்ணுமலை
2. ஈங்கோய்மலை
3. கோணமலை
4. நொடித்தான்மலை

33. மாகாளம்
1. அம்பர்மாகாளம்
2. இரும்பைமாகாளம்
3. உஞ்சேனைமாகாளம்

34. வாயில்
1. குடவாயில்
2. நெல்வாயில் (அரத்துறை)
3. திருப்புனவாயில்
4. தென்திருமுல்லைவாயில்
5. வட திருமுல்லைவாயில்

35. வேளூர்
1. கீழ்வேளூர்
2. புள்ளிருக்குவேளூர்
3. பெருவேளூர்

## ஐந்து ஆரணியங்கள்

| | |
|---|---|
| 1. ஆலங்காடு | வடாரணியம் (ஆலமரம்) |
| 2. எவ்வுளூர் | வீக்ஷாரணியம் (ஈந்து) |
| 3. கூவம் (திருவிற்கோலம்) | நைமிசாரணியம் (தருப்பை) |
| 4. பாசூர் | வம்சாரணியம் (மூங்கில்) |
| 5. வெண்பாக்கம் | பதரிகாரணியம் (இலந்தை) |

## ஐந்துசபைகள்

| | |
|---|---|
| 1. ஆலங்காடு | இரத்தினசபை |
| 2. குற்றுலம் | சித்திரசபை |
| 3. சிதம்பரம் | கனகசபை (பொன்) |
| 4. நெல்வேலி | தாமிரசபை |
| 5. மதுரை | இரசதசபை (வெள்ளி) |

## பஞ்சபூதத் தலங்கள்

| | | |
|---|---|---|
| 1. திருஆரூர், காஞ்சி | — பிருத்வி | — நிலம் |
| 2. திருஆனைக்கா | — அப்பு | — நீர் |
| 3. திருஅண்ணுமலை | — தேயு | — தீ |
| 4. திருக்காளத்தி | — வாயு | — காற்று |
| 5. சிதம்பரம் | — ஆகாசம் | — விசும்பு |

## சத்தவிடங்கத்தலங்கள்

1. திருஆரூர் — வீதிவிடங்கர் — அசபாநடனம்
2. திருநள்ளாறு — நகரவிடங்கர் — உன்மத்தநடனம்
3. திருநாகைக்காரோணம் — சுந்தரவிடங்கர் — பாராவாரதரங்கநடனம் (வீசி நடனம்)
4. மறைக்காடு — புவனிவிடங்கர் — ஹம்ஸபாதநடனம்
5. காறுயில் — ஆதிவிடங்கர் — குக்குடநடனம்
6. கோளிலி — அவனிவிடங்கர் — பிருங்கநடனம்
7. திருவாய்மூர் — நீலவிடங்கர் — கமலநடனம்

## மலைத்தலங்கள் — 18

1. அண்ணுமலை
2. அநேகதங்காபதம்
3. இந்திரநீலப்பருப்பதம்
4. ஈங்கோய்மலை
5. எறும்பியூர்
6. கயிலாயம்
7. கழுக்குன்றம்
8. கற்குடி
9. காளத்தி
10. குற்றுலம்
11. கேதாரம்
12. கொடிமாடச்செங்குன்றூர்
13. கொடுங்குன்றம்
14. சிராப்பள்ளி
15. பரங்குன்றம்
16. பருப்பதம்
17. முதுகுன்றம்
18. வாட்போக்கி

## கடற்கரைத் தலங்கள் — 22

1. அகத்தியான்பள்ளி
2. அஞ்சைக்களம்
3. இராமேச்சுரஉம்
4. ஒற்றியூர்
5. காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சுரம்
6. கேதீச்சுரம்
7. கோணமலை
8. சாய்க்காடு
9. சோபுரம்
10. தருமபுரம்
11. தெளிச்சேரி
12. நல்லூர்ப்பெருமணம்
13. நாகைக்காரோணம்
14. பாதிரிப்புலியூர்
15. புனவாயில்
16. மயிலாப்பூர்
17. மறைக்காடு
18. முல்லைவாயில்
19. வலம்புரம்
20. வான்மியூர்
21. வெண்காடு
22. வேட்டக்குடி

## கோச்செங்கணன் மாடக்கோயில் —

1. அம்பர்ப்பெருந்திருக்கோயில்
2. நன்னிலத்துப்பெருங்கோயில்
3. வைகல்மாடக்கோயில்
4. பெண்ணுகடம்தூங்கானைமாடம்

## கட்டுமலைக்கோயில்

1. கீழ்வேளூர்
2. சிக்கல்
3. வலிவலம்

## ஊர்ப்பெயரும் கோயில்பெயரும்

| | | 
|---|---|
| 1. அதிகை | வீரட்டம் |
| 2. அம்பர் | பெருந்திருக்கோயில், மாகாளம் |
| 3. அன்பில் | ஆலந்துறை |
| 4. ஆக்கூர் | தான்தோன்றிமாடம் |
| 5. ஆரூர் | பூங்கோயில், அரநெறி, பரவையுள்மண்டளி |
| 6. ஆவூர் | பசுபதீச்சுரம் |
| 7. இரும்பை | மாகாளம் |
| 8. கச்சி | ஏகம்பம், அநேகதங்காபதம், நெறிக்காரைக்காடு, திருமேற்றளி |
| 9. கச்சூர் | ஆலக்கோயில் |
| 10. கடந்தை | தூங்கானைமாடம் |
| 11. கடம்பூர் | கரக்கோயில் |
| 12. கடவூர் | வீரட்டம், மயானம் |
| 13. கண்டியூர் | வீரட்டம் |
| 14. கருவிலி | கொட்டிட்டை |
| 15. காவிரிப்பூம்பட்டினம் | பல்லவனீச்சுரம் |
| 16. குடந்தை | கீழ்க்கோட்டம், காரோணம் |
| 17. குருகாவூர் | வெள்ளடை |
| 18. குறுக்கை | வீரட்டம் |
| 19. கொட்டையூர் | கோடீசுவரம் |
| 20. கோவலூர் | வீரட்டம் |
| 21. சேறை | செந்நெறி |
| 22. நறையூர் | சித்தீச்சுரம் |
| 23. நன்னிலம் | பெருங்கோயில் |
| 24. நாகை | காரோணம் |
| 25. நெல்வாயில் | அரத்துறை |
| 26. பழையாறை | வடதளி |
| 27. புகலூர் | வர்த்தமானீச்சுரம் |
| 28. புக்கொளியூர் | அவிநாசி |
| 29. புள்ளமங்கை | ஆலந்துறை |
| 30. பெண்ணுகடம் | தூங்கானைமாடம் |
| 31. விற்குடி | வீரட்டம் |
| 32. வெண்ணெய்நல்லூர் | திருஅருட்டுறை |
| 33. வைகல் | மாடக்கோயில் |

# 12. தேவாரம் குறிப்பிடும் புராணவரலாறுகள் முதலியன

| எண் | வரலாறு | திருமுறை | பதிகஎண் | பாடல்எண் | பாடல் தொடர் எண் |
|---|---|---|---|---|---|
| 1. | அந்தகாசுரனை அழித்தமை | II | 119 | 6 | 2763 |
| | | VII | 16 | 2 | 7392 |
| 2. | அயனுடைய ஐந்தாம் தலையை அறுத்தமை | I | 40 | 6 | 431 |
| | | VI | 20 | 1 | 6444 |
| 3. | அயனும் அரியும் அடிமுடி தேட நின்றமை | I | 1 | 9 | 9 |
| 4. | அருச்சுனனுக்குப் பாசுபதம் அருளியமை | I | 12 | 6 | 124 |
| | | I | 20 | 6 | 211 |
| | | VII | 55 | 7 | 7801 |
| 5. | ஆலின்கீழ் அறம் பகர்ந்தமை | I | 20 | 5 | 210 |
| 6. | ஆனைக்காவில் காவிரியாற்றில் சோழன் நெகிழவிட்ட ஆரத்தை இறைவன் கொண்டமை | VII | 75 | 7 | 8002 |
| 7. | இந்திரன் தான் பெற்ற முனிசாபம் நீங்க வழிபட்டமை | I | 101 | 7 | 1097 |
| 8. | இராமன் இறைவனை வழிபட்டமை | III | 10 | 2 | 2901 |
| 9. | இராவணனுக்கு வாள் அருளியமை | I | 131 | 8 | 1402 |
| 10. | இலக்குவன் முதலோர் இறைவனை வழிபட்டமை | III | 33 | 1 | 3150 |
| 11. | இலிங்கோற்பவமூர்த்தி வெளிப்பட்டமை | I | 13 | 9 | 138 |
| 12. | உமையம்மை இறைவனுடைய கண்களை மூடியதால் நெற்றிக்-கண் தோன்றியமை | IV | 14 | 8 | 4310 |
| 13. | உமையம்மைக்கு இறைவன் ஆகமம் உபதேசித்தமை | V | 15 | 4 | 5388 |
| 14. | உமையம்மை தழுவ இறைவன் குழைந்தமை | III | 114 | 7 | 4030 |
| | | VI | 4 | 10 | 6296 |
| | | VII | 61 | 10 | 7868 |
| 15. | உமையம்மையால் மயிலுருவில் வழிபடப்பெற்றமை | II | 47 | 1 | 1971 |
| 16. | உமையம்மை வெருவுமாறு யானையைக் கொன்று அதன் தோலை இறைவன் போர்த்தியமை | I | 13 | 1 | 130 |

| எண் | வரலாறு | திருமுறை | பதிகஎண் | பாடல்எண் | பாடல் தொடர் எண் |
|---|---|---|---|---|---|
| 17. | உமைமேவும் உரி யுடுத்தமை | I | 131 | 5 | 1409 |
| 18. | எலி மறுபிறப்பில் மாவலிச்சக்கரவர்த்தி ஆயினமை. | IV | 49 | 8 | 4652 |
| 19. | ஐயனாரை இறைவன் தோற்றுவித்தமை | IV | 32 | 4 | 4486 |
| 20. | கங்கையைச் சடையில் ஏற்றமை | I | 35 | 2 | 372 |
| 21. | கங்கையைப் பகீரதனுக்காகத் தரையில் விட்டமை | III | 122 | 3 | 4113 |
| 22. | கண்ணப்பர்க்கு அருளியமை | IV | 49 | 7 | 4640 |
| 23. | கருடனுடைய கருவத்தை அடக்கியமை | II | 119 | 6 | 2763 |
| 24. | காமனை எரித்தமை | I | 3,66 | 7,3 | 29,714 |
| | | VII | 99 | 7 | 8247 |
| 25. | காமன்தேவிக்கு அருள்செய்தமை | I | 66 | 3 | 714 |
| 26. | காலனை உதைத்தமை | I | 20,24,79 | 7,4,7 | 212,253,859 |
| 27. | காளி தாருகனை அழித்தமை | I | 32 | 5 | 1812 |
| 28. | காளி முன் காண இறைவன் கானிடை நடமாடியமை | I | 41 | 5 | 441 |
| 29. | சக்கரத்தை இறைவன் திருமாலுக்கு அளித்தமை | I | 20,41,132 | 2,7,8 | 207,443,1423 |
| | | IV | 65 | 9 | 4806 |
| | | VII | 9,66 | 2,3 | 7308,7898 |
| 30. | சந்திரனை இறைவன் தலையில் சூடியமை | I | 2,7 | 7,2 | 18,66 |
| 31. | சந்திரன், பாற்கடல் கடையும்போது தோன்றியமை | I | 41 | 6 | 442 |
| 32. | சலந்தரன் தலையை அறுத்தமை | I | 20 | 2 | 207 |
| 33. | சிபிமன்னனுக்கு இறைவன் அருளியமை | III | 67 | 8 | 3521 |
| 34. | சிலந்தியைச் சோழன்ஆக்கினமை | I | 63 | 7 | 2152 |
| | | IV | 49,62 | 4,9 | 4648,4776 |
| 35. | சுந்தரனைக் கவரி வீசப் பணித்தமை | VII | 96 | 4 | 7199 |
| 36. | தக்கன்வேள்வியில் தேவரைத் தடிந்தமை | I,III,VI,VII | 131,118, 96,16 | 3,5,9,6 | 1407,4072, 7202,7396 |
| 37. | தக்கன்வேள்வியைச் சாடியமை | I | 9,20,131 | 4,3,3. | 90,208,1407 |
| | | III | 118 | 5 | 4072 |
| | | VI | 96 | 3 | 7202 |
| | | VII | 16 | 6 | 7396 |

| எண் | வரலாறு | திருமுறை | பதிகஎண் | பாடல்எண் | பாடல் தொடர் எண் |
|---|---|---|---|---|---|
| 38. | தருமிக்குப் பொற்கிழி அளித்தமை | VI | 76 | 3 | 7011 |
| 39. | தாரகனை முருகன் அழித்தமை | VII | 16 | 9 | 7399 |
| 40. | தாருகவனத்து இருடிகள் விடுத்த அரவுகள், மழு, தலைமாலை, | I | 5,7,8,19,22 | 6,7,8,6,6 | 49,71,83 |
| | புலி,கனல், மழு, தமருகம், முயலகன், சிங்கம், யானை, மான் | | | | 200,233 |
| | முதலியவற்றை வென்று தோல் முதலியவற்றை | IV,VI | 95,90 | 3,9 | 5094,7150 |
| | அணியாக்கியமை | VII | 99 | 6 | 8246 |
| 41. | திரிபுரம் எரித்தபோது உய்ந்த மூவர்க்கு அருள்செய்து அவர்களை | I | 69 | 1 | 743 |
| | வாயில்காப்போர் மணிமுழா வாசிப்போர் ஆக்கியமை | VII | 55 | 8 | 7801 |
| 42. | திரிபுரம் எரித்தபோது மூவர்அரக்கர் அழலுள் இறந்தமை | I | 51 | 3 | 550 |
| 43. | திரிபுரம் எரித்தமை | I | 2,3,131,134 | 4,9,4,6 | 15,31,1408,1442 |
| | | III | 28 | 7 | 3102 |
| | | VI | 86 | 9 | 7114 |
| | | VII | 55 | 8 | 7802 |
| 44. | திருமாலாகிய ஆமைஓட்டினைச் சிவபெருமான் தரித்தமை | I | 1 | 2 | 2 |
| | | I | 42 | 1 | 448 |
| 45. | திருமாலாகிய வர்ாகத்தின் கொம்பினைச் சிவபெருமான் தரித்தமை | I | 1 | 2 | 2 |
| 46. | திருமால் இறைவனுக்குக் கண்ணைத் தாமரையாக இட்டு | IV | 64 | 8 | 4795 |
| | அர்ச்சித்துச் சக்கரம் பெற்றமை | VII | 9 | 2 | 7319 |
| 47. | திருமால் வராகமூர்த்தியாய்ச் சிவனை வழிபட்டமை | I | 21 | 7 | 223 |
| 48. | தும்புருநாரதர் பாட, இறைவன் நடம்புரிந்தமை | VI | 25 | 8 | 6513 |
| 49. | தேவரும் அசுரரும் பாற்கடல் கடைந்தமை | I | 22 | 1 | 228 |
| 50. | தேவரும் அசுரரும் பாற்கடல் கடையப் புறப்பட்ட நஞ்சினை இறைவன் உண்டமை | I | 2 | 4 | 15 |

| எண் | வரலாறு | திருமுறை | பதிகஎண் | பாடல்எண் | பாடல் தொடர் எண் |
|---|---|---|---|---|---|
| 51. | நந்தி முழா ஒலிக்க, இறைவன் நடனம் ஆடியமை | II | 32 | 3 | 1810 |
| 52. | பாணன் இசைபாடப் பரிந்தளித்தமை | I | 62 | 9 | 675 |
| 53. | பாற்கடலைப் பாலருகிய உபமன்யுவுக்கு அளித்தமை | IV | 107 | 6 | 5190 |
| 54. | பிரமன் இறைவனைப் பூசித்தமை | I | 1 | 1 | 1 |
| 55. | பிரமன்தலையைக் கொய்தமை | VI | 20 | 1 | 6444 |
| 56. | பிரமன்தலையோட்டில் இறைவன் பிச்சை ஏற்றமை | I | 1,40 | 4,6 | 4,431 |
| 57. | பிரளயத்தில் அயன்அரி உருவங்களை இறைவன் சுமந்து திரிந்தமை | I | 22 | 7 | 234 |
| 58. | பிரளயத்தில் இறைவனுடைய பாதங்களை நாலஞ்சு புள்ளினம் ஏந்தியமை | IV | 82 | 1 | 4959 |
| 59. | பிரளயத்தில் இறைவன் வீணைவாசித்துப் பிரளயம் வற்றச் செய்தமை | IV | 112 | 7 | 5225 |
| 60. | பிரளயத்தில் சீகாழி உயர்ந்தமை | I | 1 | 5 | 5 |
| 61. | பிரளயத்தில் முதுகுன்றம் உயர்ந்தமை | I | 53 | 4 | 573 |
| 62. | மயிடனை இறைவி சங்கரித்தமை | II | 74 | 7 | 2274 |
| 63. | மறைகளை இறைவன் தேர்க்குதிரைகள் ஆக்கியமை | VI | 96 | 5 | 7198 |
| 64. | மாகாளனை இறைவன் வாயிற்காப்பான் ஆக்கியமை | VI | 96 | 5 | 7198 |
| 65. | மாது ஒருபாலும் மால் ஒருபாலும் அமைந்தமை | I | 97 | 2 | 1048 |
| 66. | மார்க்கண்டற்கு அருளியமை | I | 20 | 7 | 212 |
| 67. | முருகன் சூரனை அழித்தமை | II | 62 | 1 | 2135 |
| 68. | முருகன் தாரகனை அழித்தமை | VII | 16 | 9 | 7399 |
| 69. | முருகன் மாதொருபாகனைப் பூசித்தமை | I | 48 | 11 | 525 |
| 70. | வாமனன் இறைவனைப் பூசித்தமை | I | 101 | 5 | 1095 |
| 71. | வாமனன்நெற்றியிலிருந்து சிவபெருமான் உதிரம் கொண்டமை | VII | 96 | 1 | 7194 |
| 72. | விநாயகர் அவதரித்த வகை | I | 123,126 | 5,6 | 1330,1364 |
| 73. | விநாயகர் கசமுகனை அழித்தமை | VI | 53 | 4 | 6787 |
| 74. | விருத்தபாலராக இறைவன் திருவிளையாடல் நிகழ்த்தியமை | I | 52 | 6 | 564 |
| | | IV | 22 | 9 | 4384 |

| எண் | வரலாறு | திருமுறை | பதிகஎண் | பாடல்எண் | பாடல் தொடர் எண் |
|---|---|---|---|---|---|
| 75. | விறல் மிக்க கரிக்கு இறைவன் அருளியமை | II | 23 | 4 | 1713 |
| 76. | வெள்ளானை இறைவனை வழிபட்டுச் சாபம் தீர்ந்தமை | VI | 83 | 6 | 7082 |
| 77. | வெள்ளைப்பன்றி இறைவனை வழிபட்டமை | VI | 87 | 6 | 7109 |
| 78. | வேதங்களையும் அறங்களையும் சிவபெருமான் வெளிப்படுத்தியமை | I | 42 | 7 | 454 |
| 79. | வேதங்கள் இறைவனை வழிபட்டுச் சாபம் தீர்ந்தமை | II | 37 | 6 | 1867 |

## ஆ) சிவபெருமான் உருவங்கள்

| எண் | மூர்த்தங்களின் பெயர் | வடிவம் | தேவாரத் தொடர் | பாடல்கள் |
|---|---|---|---|---|
| 1. | அர்த்தநாரீசுவரர் | மாது ஒருபாகர் | ஒருபால் விரும்பு மெல்லியல் புல்கியதோர் வலஞ்சுழிவாணன் | 3937 |
| 2. | உமாமகேசர் | உமையொடு கூடிய இறைவன் | உண்ணுமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன் | 97 |
| 3. | ஏகபாத திரிமூர்த்தி | ஒற்றைக்காலால் தாங்கப்படும், அரி அயன், அரன் என்று மூவடிவுடைய இறைவன் | இருவர்கள் உடல்பொறையொடு திரி எழில் உரு உடையவன் | 234 |
| | | | இருவரொடு ஒருவன் ஆகி நின்றனே | 1382 |
| 4. | கங்காதரர் | கங்கையைச் சடையில் தாங்கியவர் | கங்கை பொங்கு செஞ்சடைக் கரந்த கண்டர் | 2567 |
| 5. | கங்காவிஸர்ஜனர் | கங்கையைக் கீழே விடுபவர் | படர்சடைக் கரந்த நீர்க்கங்கை தாங்குதல் தவிர்த்துத் தராதலத்து இழித்த தத்துவன் | 4113 |
| 6. | கங்காளர் | முழுஎலும்புக்கூட்டை அணிந்தவர் | கங்காள வேடக் கருத்தர்போலும் | 6539 |
| 7. | கருடாந்தகர் | கருடனுக்கு முடிவைத் தந்தவர் | புள்ளரசைக் கொன்று உயிர் பின் கொடுத்தார்போலும் | 6791 |
| 8. | கல்யாணசுந்தரர் | மணஅழகர் | குரும்பைமுலை மலர்க்குழலி கொண்ட தவம் கண்டு விரும்பு வரம் கொடுத்தவன் | 7391 |
| 9. | கஜயுத்தர் | யானையுடன் போர்செய்தவர் | உரித்திட்டார் யானையின் தோல் | 4483 |
| 10. | கஜானுக்ரஹர் | யானைக்கு அருள் செய்தவர் | அடைந்து அயிராவதம் பணிய மிக்கதனுக்கு அருள் சுரக்கும் முதல்வனே | 1999 |
| 11. | காமதஹனர் | மன்மதனை எரித்தவர் | காமவேளைக் கனல் எழ விழிப்பர் போலும் | 4830 |

| எண் | மூர்த்தங்களின் பெயர் | வடிவம் | தேவாரத் தொடர் | பாடல்கள் |
|---|---|---|---|---|
| 12. | காலஸம்ஹாரர் | இயமனை அழித்தவர் | மறையவன் உயிரது கொளவரு சலம் மலிதரு மறலிதன் உயிர்கெட உதை-செய்தவன் | 212 |
| 13. | கிராதர் | வேட்டுவ வடிவினர் | பாடகம் சேர் மெல்அடி நல்பாவையாளும் நீயும் போய்ப் பார்த்தனது பலத்தைக் காண்பான், வேடனாய் வில் வாங்கி எய்த நாளோ | 6596 |
| 14. | குரு | ஆசாரியத் திருமேனி உடையவர் | நெய்த்தானனைக் குரவனைத் தொழுவாம் | 5577 |
| 15. | கூர்மஸம்ஹாரர் | ஆமையை அழித்தவர் | முற்றல்ஆமை பூண்டு | 2 |
| 16. | கேசவார்த்தமூர்த்தி | திருமாலைப் பாதித் திருமேனியில் உடையவர் | வெண்பொடி ஆடும் மேனிப் பாகம் மால் உடையார்போலும் | 4815 |
| 17. | சக்ரதானர் | திருமாலுக்குச் சக்கரத்தை அளித்தவர் | ஏறுடன் ஏழ் அடர்த்தவன் வேறும் ஓர் பூக்குறைய மெய்ம் மலர்க்கண்ணை மிண்டக், கூறுமோர் ஆழி ஈந்தார் குறுக்கைவீரட்டனாரே | 4649 |
| 18. | சண்டதாண்டவர் | அதிவேகமாகக் கூத்தாடுபவர் | ஆடினார் காளி காண ஆலங்காட்டு அடிகளாரே | 4835 |
| 19. | சண்டேசானுக்ரஹர் | சண்டி என்ற அடியாருக்கு அருள் செய்தவர் | ஆங்கணைந்த சண்டிக்கும் அருளி அன்று தன்முடிமேல் அலர்மாலை அளித்தல் தோன்றும் | 6442 |
| 20. | சதாசிவன் | மங்கள வடிவினர், அமைதி வடிவினர், ஐந்து முகமுடையவர் | சதாசிவன் கண்டாய் | 6983 |
| 21. | சதாநிருத்தர் | எப்பொழுதும் கூத்தாடிக் கொண்டிருப்பவர் | ஞாலமும் குழியநின்று நட்டம்அது ஆடுகின்ற, மேலவர் | 4539 |
| 22. | சந்திரசேகரர் | சந்திரனைத் தலையில் சூடியவர் | ஓர் தூவெண்மதி சூடி | 1 |
| 23. | சரபமூர்த்தி | நரசிங்கத்தை அழிக்கச் சரபம் என்ற விலங்கின் வடிவைத் தாங்கியவர் | மடங்கலானைச் செற்று உகந்தீர் | 7287 |

| எண் | மூர்த்தங்களின் பெயர் | வடிவம் | தேவாரத் தொடர் | பாடல்கள் |
|---|---|---|---|---|
| 24. | சார்த்தூலஹாரி | புலியைக் கொன்றவர் | புலியின் அதளர் | 733 |
| 25. | சிம்ஹக்நர் | சிங்கத்தைக் கொன்றவர் | சிங்கமும் நீள்புலியும் செருமால் கரியோடு அலறப், பொங்கிய போர் புரிந்து பிளந்து ஈருரி போர்த்தது என்னே | 8246 |
| 26. | சுகாசனர் | சுகமாக அமர்ந்திருப்பவர் | தூங்கிருள் பேய்களோடு, அணையலாவது எமக்கு அரிதே எனு, இணையிலா இடைமா மருதில் எழு, பணையில் ஆகமம் சொல்லும் தன் பாங்கிக்கே | 5388 |
| 27. | தட்சயக்ஞஹதர் | தக்கன்வேள்வியை அழித்தவர் | தக்கன்தன் வேள்விஎல்லாம் அச்சம் எழ அழித்துக்கொண்டு அருளும் செய்தார் | 7202 |
| 28. | தட்சிணமூர்த்தி | தென்முகம் நோக்கிய திருமேனியர் | அறம் கிளரும் நால்வேதம் ஆலின்கீழ் இருந்து அருளி | 1411 |
| | | | மாதவர்குழுவுடன் கேட்பக் கோல ஆல் நீழற்கீழ் அறம் பகர | 7905 |
| 29. | திரிபுராந்தகர் | மும்மதில்களையும் அழித்தவர் | வில்லால் எயில் எய்தான் | 113 |
| 30. | பாசுபதர் | பாசுபத தர்சனிகர்களின் வேடம் கொண்டவர் | பாசுபத வேடத்தானே | 6754 |
| 31. | பிரம்மசிரச்சேதர் | பிரமனின் தலையைக் கொய்தவர் | செந்தாமரையோன் சிரம்ஐந்தின் ஒன்று அறுத்த நிமலர் | 1411 |
| 32. | பிக்ஷாடனர் | பிச்சைக்காகச் சுற்றி யலைபவர் | எருது ஏறிப் பலிபேணி | 12 |
| 33. | பைரவர் | பயப்படத்தக்க வடிவினர் | விரித்த பல் கதிர் கொள் சூலம் வெடிபடு தமருகம் கை, தரித்ததோர் கோல கால பயிரவனுகி | 4881 |
| 34. | ரக்தபிக்ஷாடனர் | குருதியைப் பிச்சையாக ஏற்றவர் | வாமனனர் மாகாயத்து உதிரம் கொண்டார் | 7194 |

| எண் | மூர்த்தங்களின் பெயர் | வடிவம் | தேவாரத் தொடர் | பாடல்கள் |
|---|---|---|---|---|
| 35. | ரிஷபாரூடர் | காளையை வாகனமாகக் கொள்பவர் | விடை ஏறி | 1 |
| 36. | லிங்கமூர்த்தி | சிவலிங்கத் திருமேனி உடையவர் | சோதி லிங்கத் தூங்கானைமாடத்தானே | 6588 |
| 37. | லிங்கோத்பவர் | லிங்கத்தில் தோன்றியவர் | உளம்பட்டெழு தழல் தூணதன் நடுவே ஒரு உருவம், விளம்பட்டு அருள் செய்தான் | 138 |
| 38. | வராகதந்தஹரதர் | பன்றியின் கொம்பை அழித்தவர் | ஏனமுளைக்கொம்பு பூண்டு | 2 |
| 39. | விஷாபஹரணர் | விடத்தை (உண்டு) அழித்தவர் | உலகு உய்யக் காரின் மல்கு கடல்நஞ்சமது உண்ட கடவுள் இடம் ..... புகலூரே | 15 |
| 40. | ஜலந்தரவதமூர்த்தி | ஜலந்தரன் என்ற அசுரனை அழித்த திருமேனியை உடையவர் | சலந்தரன் வீயத் தழல் உமிழ் சக்கரம் படைத்த எம்பெருமானுர் | 4112 |

சிவமகாபுராணம், சிவபராக்கிரமம், உபதேச காண்டம் முதலிய நூல்களில் சிவபெருமானுடைய 64 மூர்த்தங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் 40 மூர்த்தங்கள் பற்றிய குறிப்புக்கள் தேவாரத்தில் தெளிவாக உள்ளன.

## இ) விநாயகனைப் பற்றிய பாடலடிகள்

| தொடர் | பாடலெண் |
|---|---|
| 'தந்த மதத்தவன் தாதையோ தான்' | 1239 |
| 'மருப்பு உருவன், கண்ணர், தாதையைக் காட்டுவர்' | 1266 |
| 'தனது அடி வழிபடுமவர் இடர் கடி கணபதி வர அருளினன்' | 1330 |
| 'ஒற்றைச் சேர் முற்றல்கொம்பு உடைத் தடக்கை முக்கண் மிக்கு ஓவாதே பாய் மா தானத்து உறு புகர்முக இறை' | 1364 |
| 'கரியின் மா முகம் உடைய கணபதி தாதை' | 2509 |
| 'பலபல காமத்தர் ஆகிப் பதைத்து எழுவார் மனத்துள்ளே கலமலக்கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறும்' | 4184 |
| 'வாரணன், குமரன், வணங்கும் கழல்' | 5900 |
| 'கோ ஆய இந்திரன் உள்ளிட்டார் ஆகக் குமரனும், விக்கின விநாயக(ன்)னும்' | 6390 |
| 'கைவேழமுகத்தவனைப் படைத்தார்போலும்' | 6787 |
| 'தண் கட மா முகத்தினுற்குத் தாதைகாண்' | 6913 |
| 'அறுமுகனோடு ஆனைமுகற்கு அப்பன்தன்னை' | 6994 |
| 'மெல்லியலும் விநாயகனும் தோன்றக் கண்டேன்' | 7026 |
| 'கங்கையாளேல், வாய் திற(வ்)வாள்; கணபதி(ய்)யேல், வயிறுதாரி;' | 7278 |
| 'எண்ணிலி உண் பெருவயிறன் கணபதி ஒன்று அறியான்' | 7710 |

## ஈ) முருகனைப் பற்றியன

| தொடர் | பாடலெண் |
|---|---|
| 'கருகுகுழல் மடவார் கடிகுறிஞ்சிஅது பாடி முருக(ன்)னது பெருமை பகர் முதுகுன்று அடைவோமே' | 128 |
| 'சேய் அடைந்த சேய்ஞலூரில் செல்வன சீர் பரவி' | 525 |
| 'தழைமயில்ஏறவன் தாதையோ தான்' | 1240 |
| 'மாயச் சூர் அன்று அறுத்த மைந்தன் தாதை' | 2135 |
| 'வள்ளிமுலை தோய் குமரன் தாதை' | 2151 |
| 'இளங்குமரன்தன்னைப் பெற்று, இமையவர்தம் பகை எறிவித்த இறைவன் ஊரே' | 2256 |
| 'சேந்தனை முன் பயந்து உலகில் தேவர்கள்தம் பகை கெடுத்தோன் திகழும் ஊரே' | 2273 |
| 'மடமயில் ஊர்தி தாதை என நின்று, தொண்டர் மனம் நின்ற மைந்தன்' | 2411 |
| 'சாமி தாதை சரண் ஆகும் என்று தலைசாய்மினோ' | 2722 |
| 'ஒன்றி மால் கூறினர், அமர்தரும் — குமரவேள் தாதை — ஊர்' | 3175 |
| 'பெற்று முகந்தது கந்தனையே; பிரமபுரத்தை உகந்தனையே' | 4012 |
| 'ஆறுகொல் ஆம் அவர்தம் மகனார் முகம்' | 4351 |

| தொடர் | பாடலெண் |
|---|---|
| ஏல நல் கடம்பன்தாதை இலங்கு மேற்றளியனூரே' | 4594 |
| 'செல்வியைப் பாகம் கொண்டார் சேந்தனை மகனுக் கொண்டார்' | 4600 |
| 'குறவிதோள் மணந்த செல்வக் குமரவேள் தாதை' | 4749 |
| 'கடம்பு அமர் காளை தாதை கழல்அடி காணல் ஆமே' | 4898 |
| 'சூர் அட்ட வேலவன் தாதையை' | 5175 |
| 'முன்னையார்; மயில்ஊர்தி முருகவேள்- தன் ஐயார்' | 5397 |
| 'நன் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்' | 5431 |
| 'சமர சூரபன்மாவைத் தடிந்த வேல் குமரன் தாதை' | 5889 |
| 'வாரணன், குமரன் வணங்கும் கழல் பூரணன்' | 5900 |
| கடம்பன் தாதை கருதும் காட்டுப்பள்ளி' | 6074 |
| 'முருகவேள்தன்னைப் பயந்தாய், போற்றி!' | 6307 |
| 'சரவணத்தான் கைதொழுது சாரும்(ம்) அடி' | 6308 |
| 'கோ ஆய இந்திரன் உள்ளிட்டார் ஆகக் குமரனும், விக்கின விநாயக(ன்)னும்' | 6390 |
| 'பன்னிரண்டுகண் உடைய பிள்ளை தோன்றும்' | 6436 |
| 'நம் செந்தில் மேய வள்ளிமணாளற்குத் தாதைகண்டாய்' | 6489 |
| 'குறைவு உடையார் மனத்து உளான்; குமரன் தாதை' | 6677 |
| 'குமரனையும் மகன்ஆக உடையார்போலும்' | 6785 |
| 'முருகவேட்குத் தந்தைகாண், தண் கட மா முகத்தினுற்குத் தாதைகாண்' | 6913 |
| 'அறுமுகனோடு ஆனைமுகற்கு அப்பன்தன்னை' | 6994 |
| 'கூர் இலங்கு வேல் குமரன் தாதைபோலும்' | 7004 |
| 'கோழிக்கொடியோன்தன் தாதைபோலும்' | 7133 |
| 'அம் கை வேலோன் குமரன் பிள்ளை' | 7278 |
| 'பொரும் பலம்அதுஉடை அசுரன் தாரகனைப் பொருது பொன்றுவித்த பொருளினை முன் படைத்து உகந்த புனிதன்' | 7399 |
| 'குறவனார்தம் மகள், தம் மகனார்மணவாட்டி' | 7418 |
| 'மயில்ஊர்தி முருகவேள் தாதை' | 7625 |
| 'மலை அரையன் பொன்பாவை, சிறுவனையும், தேறேன்' | 7710 |
| 'திருத் தினைநகர் உறை சேந்தன் அப்பன்' | 7830 |
| 'காதலால் கடல் சூர் தடிந்திட்ட செட்டி அப்பனை' | 7847 |
| 'குமரனைப் பயந்த வார்த் தயங்கிய முலை மடமானை வைத்து வான்மிசைக் கங்கையைக் கரந்த தீர்த்தனை' | 7873 |
| 'குமரன் முதல் தேவர்தங்கள் நம்பி' | 7881 |
| 'கடல் சூர் தடிந்திட்ட சேந்தர் தாதையை' | 7895 |
| 'அமரர்சேனைக்கு நாயகன்ஆன குறவர்மங்கைதன் கேள்வனைப் பெற்ற கோனை' | 7929 |
| 'குமரன், திருமால், பிரமன், கூடிய தேவர் வணங்கும் அமரன் இருப்பதும் ஆரூர்' | 7983 |

## உ) அட்டவீரட்டங்கள்

| எண் | வீரத்தானத்தின் பெயர் | வீரச்செயல் | திருமுறை எண் | பதிகஎண்கள் | | பாடல் எண்கள் | கூடுதல் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | அதிகை | திரிபுரங்களை | i | 46 | | 493-503, | 11 |
| | | அழித்தமை | iv | 1,2,10 | | 4170-4189,4263-4272, | |
| | | | | 24-28, | | 4408-4452, | |
| | | | | 104 | | 5171-5177 | 82 |
| | | | v | 53,54 | | 5769-5790 | 22 |
| | | | vi | 3-7 | | 6276-6329 | 54 |
| | | | vii | 38 | (18) | 7618-7627 | 10 (179) |
| 2. | கடவூர் | காலனை அழித்தமை | iii | 8 | | 2878-2888 | 11 |
| | | | iv | 31,107 | | 4473-4482; 5185-5194 | 20 |
| | | | v | 37 | | 5606-5616 | 11 |
| | | | vi | 28 | (5) | 7514-7523 | 10 (52) |
| 3. | கண்டியூர் | பிரமன்தலையைக் | iii | 38 | | 3200-3210 | 11 |
| | | கொய்தமை | iv | 93 | (2) | 5072-5081 | 10 (21) |
| 4. | குறுக்கை | காமனை அழித்தமை | iv | 49,50 | (2) | 4645-4656 | 12 (12) |
| 5. | கோவலூர் | அந்தகாசுரனை | ii | 100 | | 2550-2560 | 11 |
| | | அழித்தமை | iv | 69 | (2) | 4838-4847 | 10 (21) |
| 6. | பறியலூர் | தக்கனை அழித்தமை | i | 134 | (1) | 1437-1447 | 11 (11) |
| 7. | வழுவூர் | யானையை | | | | | |
| | | அழித்தமை | vi | 71 | (1) | 6967 | 1 (1) |
| 8. | விற்குடி | சலந்தராசுரனை | | | | | |
| | | அழித்தமை | ii | 108 | | 2638-2647 | 10 |
| | | | vi | 71 | (2) | 6968 | 1 (11) |
| | | | | பாடல்களின் கூடுதல் | | 308 | |

## ஊ) அட்டமூர்த்தங்கள் பற்றிய பாடலடிகள்

| எண் | பாடற்பகுதி | பாடல் எண் |
|---|---|---|
| 1. | மண்ணும், புனல், உயிரும், வருகாற்றும், சுடர் மூன்றும், விண்ணும், முழுது ஆனான் இடம் வீழிம்மிழலையே. | 111 |
| 2. | மற்றும் ஆகி வானுளோர்க்கு, பல்கதிரோன், மதி, பார், எற்று நீர், தீ, காலும், மேலைவின், இயமானனோடு, ... முற்றும் ஆகி வேறும் ஆனான் மேயது முதுகுன்றே. | 571 |
| 3. | மண்ணொடு, நீர், அனல், காலோடு, ஆகாயம், மதி, இரவி, எண்ணில் வரும் இயமானன் ... ஆம் பேராளன் | 1984 |
| 4. | அட்ட மூர்த்தி அழல் போல் உருவன் | 2743 |
| 5. | அட்டமா உருவினானே ஆவடுதுறையுளானே. | 4719 |
| 6. | அட்டமூர்த்தி அண்ணாமலை கைதொழக் கெட்டுப் போம், வினை; கேடுஇல்லை; காண்மினே! | 5281 |
| 7. | இருநிலனாய், தீயாகி, நீரும் ஆகி, இயமானனாய், எறியும் காற்றும் ஆகி, அருநிலைய திங்களாய், ஞாயிறாகி, ஆகாசமாய், அட்ட மூர்த்தி ஆகி ... அடிகள் நின்றவாறே! | 7174 |
| 8. | தரிக்கும் தரை, நீர், தழல், காற்று, அந்தரம், சந்திரன், சவிதா, இயமானன், ஆனீர்; பொழிலார் திருப்பத்தூர்ப் புனிதனீரே! | 7319 |
| 9. | அட்டன் அழகாக அரைதன்மேல் அரவு ஆர்த்துச் சிட்டன் நமை ஆள்வான் திருக்கேதீச்சுரத்தானே. | 8055 |

## எ) எண்குணத்தான் என்று குறிப்பிடுவன

| எண் | தேவாரப் பாடற்பகுதிகள் | பாடல் எண் |
|---|---|---|
| 1. | மெய்த்து ஆறுசுவையும் ஏழ்இசையும் எண்குணங்களும் விரும்பும் நால்வே-<br>தத்தாலும் அறிவு ஒண்ணு நடை தெளியப் பளிங்கே போல் அரிவைபாகம்<br>ஒத்து ஆறுசமயங்கட்கு ஒருதலைவன் கருதும் ஊர் ... ... ... முதுகுன்றமே. | 1405 |
| 2. | எட்டுக்கொலாம் அவர் ஈறில் பெருங்குணம் | 4353 |
| 3. | (கலைஞானிகள் காதல், எண்)குணவன்காண் குரங்காடுதுறைதனில்<br>அணவன்காண், அன்பு செய்யும் அடியார்க்கே. | 5872 |
| 4. | எட்டு மூர்த்தியாய் நின்று இயலும் தொழில்<br>எட்டு வான்குணத்து ஈசன் எம்மான்தனை | 6120 |
| 5. | பண்குணத்தார் பாடலோடு ஆடல் ஓவாப்<br>பரங்குன்றம் மேய பரமர்போலும்,<br>எண்குணத்தார் எண்ணுயிரவர்போலும் —<br>இடைமருது மேவிய ஈசனரே. | 6417 |
| 6. | இரும்புயர்ந்த மூவிலைய சூலத்தினனை,<br>இறையவனை, மறையவனை, எண்குணத்தினனை,<br>... ... கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேனே. | 7641 |

## பாகம் - 5

# இலக்கியச் செய்தியும் யாப்பும்

# 13. பழமொழிகள்

| | பாடலெண் |
|---|---|
| அரைத்த மஞ்சள்அது ஆவதை அறிந்தேன் | — 7850 |
| அவ்வினைக்கு இவ்வினையாம் | — 1249 |
| அறம் இருக்க மறம் விலைக்குக் கொள்ளுதல் | — 4213 |
| ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதார் | — 7186 |
| ஆற்றில் கெடுத்துக் குளத்தில் தேடிய ஆதர் | — 5117 |
| இருட்டறையில் மலடு கறத்தல் | — 4216 |
| இருதலை மின்னுகின்ற கொள்ளிமேல் எறும்பு | — 4900 |
| இன்பம் உண்டேல் துன்பம் உண்டு | — 7304 |
| உறங்கி விழித்தால் ஒக்கும் இப்பிறவி | — 7260 |
| ஏதன் போர்க்கு ஆதனுய் அகப்படுதல் | — 4215 |
| ஓடு புனல்கரையாம் இளமை | — 7260 |
| கரும்பிருக்க இரும்பு கடித்தல் | — 4220 |
| கல்லா நெஞ்சில் நில்லான் ஈசன் | — 3224 |
| கழுதை குங்குமம் சுமந்து எய்த்தால் கைப்பர், பாழ்புக | — 7849 |
| கற்றவர் காய்வது காமனையே | — 4012 |
| கன்று முட்டி உண்ணச் சுரந்த காலியவை | — 8201 |
| கனி இருக்கக் காய்கவர்தல் | — 4211 |
| காட்டுவித்தால் ஆர் ஒருவர் காணுதார் | — 7186 |
| கூவல்ஆமை குரைகடல் ஆமையைக் கூவலோடு ஒக்குமோ கடல் எனல் | — 6249 |
| கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டுவித்தல் | — 5126 |
| தந்தையார் போயினுர்; தாயாரும் போயினுர்; தாமும் போவார் | — 2325 |
| தவம் இருக்க அவம் செய்தல் | — 4219 |
| தோளாத சுரையோ தொழும்பர் செவி | — 6125 |
| தோற்றம் உண்டேல் மரணம் உண்டாம் | — 7298 |
| நரியைக் குதிரை செய்தல் | — 4202 |
| நரிவரால் கவ்வச்சென்று நற்றசை இழந்தது ஒத்த | — 4442 |
| நிலவரை நீலம் உண்டதும் வெள்ளைநிறமாமே | — 1062 |
| பலவின் கனி ஈஅது | — 7265 |
| பனிநீரால் பரவை செய்யப் பாவித்தல் | — 4214 |
| பாம்பின்வாய்த் தேரை யாக்கை | — 2329 |
| பாழூரில் பயிக்கம் புக்கு எய்த்தல் | — 4218 |
| பிழுக்கை வாரியும் பால் கொள்வர் | — 7785 |

| | பாடலெண் |
|---|---|
| பிறவியால் வருவன கேடுள | — 2328 |
| புல்நுனைப்பனி வெங்கதிர் கண்டாற்போலும் வாழ்க்கை | — 7851 |
| பேயோடேனும் பிரிவு ஒன்று இன்னாது | — 8207 |
| பொற்குன்றம் சேர்ந்ததோர் காக்கை பொன்னாம் | — 7746 |
| மணக்கோலமதே பிணக்கோலமதாம் பிறவி | — 7263 |
| மணமென மகிழ்வர் முன்னே ... பிணமெனச் சுடுவர் பேர்த்தே | — 7313 |
| மத்தார் தயிர்போல் மறுகும் என்சிந்தை | — 5104 |
| மத்துறு தயிர்போல மறுகும் என் உள்ளம் | — 4675 |
| மன்றத்துப் புன்னை போல மரம்படு துயரம் | — 4435 |
| முயல்வலை யானை படும் | — 7834 |
| முயல் விட்டுக் காக்கைபின் போதல் | — 4212 |
| மோத்தையைக் கண்ட காக்கை | — 4901 |
| யார்அறிவார் சாம்நாளும் வாழ்நாளும் | — 1908 |
| வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம் | — 8027 |
| வித்தின்றி நாறு செய்தல் | — 4202 |
| விளக்கு இருக்க மின்மினித்தீக் காய்தல் | — 4217 |
| வெற்பில் தோன்றிய வெங்கதிர் கண்ட அப்புல் பனி கெடுமாறு | — 6217 |

# 14. தேவாரத்தில் அகப்பொருள் அமைந்த பாடல்கள்

'காமப்பகுதி கடவுளும் வரையார், ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்' (தொல்.பொ. 83 சூ.) என்ற புலனெறி வழக்கினை ஒட்டிக் கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் பற்றி முக்கணன் முயக்கம் வேட்ட மக்கட் பெண்டிரின் மனநிலையைத் தலைவி கூற்றாகவும், செவிலி கூற்றாகவும், தோழி கூற்றாகவும் அமைத்து அருளிய பதிகங்களும், பாசுரங்களும் தேவாரத்தில் அருகிக் காணப்படுகின்றன. சுட்டி இறைவன் பெயர் கூறப்படுதலின் இப்பாடல்கள் அகப்புறத்தைச் சார்ந்தனவாம். இவை பதிகம் முழுவதும் அமைந்தும் ஒரோவொரு பதிகத்தில் சில பாசுரங்களிலேயே அமைந்தும் இரு திறத்தனவாகியுள்ளன. பதிகங்களின் சில பாடல்களில் அகப்புறப்பொருள் வெளிப்படையாக அமைந்தவழி ஏனைய பாடல்களிலும் அகப்புறப்பொருள் குறிப்பாக அமைந்திருப்பதாகக் கோடல் வேண்டும் என்பது ஒரு சாரார் கருத்து. வெளிப்படையாக அகப்புறச் செய்தியை விளம்பும் பாடல்களையே அகப்புறப்பாடல்களாகக் கோடல்வேண்டும் என்பது மற்றைச் சாராரின் கருத்து. இங்கு இரண்டாவது கருத்தை அடியொற்றியே தேவாரத்திலுள்ள அகப்புறப் பாடல்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. ஏற்ற பெற்றி அப்பாடல்களின் துறைகளும் சுட்டப்பட்டுள்ளன.

| திருமுறை | பதிக எண் | திருத்தலப்பெயர் | பதிகம் பாடல் எண் | பாடல் தொகை | துறை |
|---|---|---|---|---|---|
| I | 1 | பிரமபுரம் | 3,6 | 2 | 'பண்டு இன்னை அல்லையால்; வளை கழலுதல் எற்றினுயிற்று' என்று வினய தோழிக்குத் தலைவி விடையிறுத்தது. |
| | 44 | பாச்சிலாச்சிராமம் | 1-10 | 10 | இறைவன்மாட்டு மையல் கொண்ட தலைவிநிலையைத் திருத்-தாயர் அயலாரிடம் விரித்துரைத்து அழுங்கியது. இது கொல்லி மழவன் மகளுக்கு ஏற்பட்ட முயலகன் என்ற நோயைப் போக்கவேண்டிச் சம்பந்தர் இறைவனைப் பரவிய பதிகம் என்பது சேக்கிழார்பெருமான் கருத்து. |
| | 56 | திருப்பாற்றுறை | 3-6, 8,10 | 6 | தன்வேறுபாடு கண்டு வினய தோழிக்குத் தலைவி உண்மை செப்பும் கிளவியால் தன் உள்ளநிலையை வெளிப்படுத்தது. |
| | 60 | தோணிபுரம் | 1-10 | 10 | தலைவி பறவைகளை இறைவனிடம் தூது விடுத்ததும் கிளி வாயிலாக இறைவன் திருப்பெயர் கேட்க விழைந்ததும். |
| | 63 | பிரமபுரம் | 1-10 | 10 | கைக்கிளைத்தலைவி தலைவனுடைய செயலை எடுத்துச் சுட்டி அவனைக் குறை கூறியது. |
| | 73 | கானூர் | 2-10 | 9 | தன் மெலிவுகுறித்து வினய தோழிக்குத் தலைவி தன் நலிவின் காரணத்தை வெளியிட்டது. |
| | 76 | இலம்பையங்கோட்டூர் | 1-10 | 10 | வினய தோழிக்குத் தலைவி தன் எழில் கொண்டான்திறம் உரைத்தது. |
| II | 18 | மருகல் | 1-10 | 10 | தலைவிக்கு இறைவன் மையலுறுத்திய திறத்தைத் திருத்தாயர் அவன்முன் நின்று முறையிடல். இதனை வணிகப்பெண்ணை மணக்க இருந்த அவள்மாமனை அரவந் தீண்டிய விடத்தைப் போக்கி அவள்துயர் தீரப் பாடிய பதிகமாகச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். |
| III | 63 | செங்காட்டங்குடி | 1-9 | 9 | தலைவி பறவைகளிடம் தன் துயர்கூறி அவற்றை இறைவனிடம் தூதுவிட்டது. |

| திருமுறை எண் | பதிக | திருத்தலப்பெயர் பாடல் | பதிகம் தொகை எண் | பாடல் | துறை |
|---|---|---|---|---|---|
| | 100 | தோணிபுரம் | 1-6 | 6 | விஞய தோழிக்குத் தலைவி தனக்கு மையல் விளைத்தான்திறம் கூறியது. |
| | 104 | பரிதிநியமம் | 1-10 | 10 | விஞய தோழிக்குத் தலைவி தனக்கு மையல் விளைத்தான்திறம் கூறியது. |
| | | | கூடுதல் | 92 | |
| IV | 6 | திருக்கழிப்பாலை | 1-10 | 10 | தலைவியின் புதுமையலும் சொற்களும் உட்கொண்டு திருத்தாயர் தமக்குள் எண்ணமிட்டது. |
| | 12 | திருப்பழனம் | 1-10 | 10 | தலைவி தனக்கு மையல்செய்தான் திறத்தைப் பெரிதும் மனங்கொண்டு, பறவைகள், செடிகொடிகள், தென்றல் முதலியவற்ளுேடு உரையாடி அவனைத் தவருது அடைவதற்கு நிமித்தமான கூடல்சுழி கூடவேண்டும் என்று வேண்டியது. |
| | 97 | திருநல்லூர் | 1-4,9 | 5 | தலைவி தான் கொண்ட மையலைத் தோழிக்கு உரைத்து மையல் தீர அங்கணன் அருள் வேண்டிய திறத்தைக் குறிப்பிட்டது. |
| V | 7 | திருஆரூர் | 7,8 | 2 | தலைவிமையல் கண்டு தாய் தன்னுள் கூறிக்கொண்டது. |
| | 18 | திருக்கடம்பந்துறை | 1 | 1 | தலைவியின் மூதறிவு கண்டு தாயர் மருண்டுரைத்தது. |
| | 23 | திருநின்றியூர் | 2,5 | 2 | இறைவன் கன்னியரை மையலுறுத்தும் திறத்தைச் செவிலி நினைத்தலும், அவனை அயலவர் கேட்ப ஏசுதலும். |
| | 29 | திருஆவடுதுறை | 1-10 | 10 | தலைவிமையல் கண்டு சொற்கள் கேட்டு மருண்ட செவிலி அயலாரிடம் அவள்நிலையை விரித்துரைத்தது. |
| | 39 | திருமயிலாடுதுறை | 1,2 | 2 | தோழி தலைவி மையற்காரணம் உணர்ந்து அதற்கு மருந்தாகும் பொருளையும் தன்னுட்கொண்டது. |
| | 40 | திருக்கழிப்பாலை | 1-8 | 8 | தலைவிமையல் கண்டு மருண்ட தாய் அவள்சொற்களையும் செயல்களையும் அயலாரிடம் வெளிப்படுத்தது. |
| | 45 | திருத்தோணிபுரம் | 1-10 | 10 | தலைவி தன் சொல்லை மீறிப் பேசுவது கேட்ட தாய், அவள் இறைவனிடம் மையல்கொண்ட திறத்தை நினைத்து, அவளுடைய வளைகவர்தல் இறைவனுக்குத் தக்கதன்று என்று |

| திருமுறை | பதிக எண் | திருத்தலப்பெயர் | பதிகம் பாடல் எண் | பாடல் தொகை | துறை |
|---|---|---|---|---|---|
| | | | | | கூறி, அவன் கிட்டுதற்கரியவனுதலின் அவன்பால் கொண்ட மையலை ஒழி என்று கூறியும் அவள் கேளாமல் அவனது கொன்றைமாலையை வேண்டி அவனுடைய பல குறைகளையும் மனங்கொள்ளாது அவனிடமே மாறு மையல் கொண்டுள்ள திறத்தை அயலாரிடம் சொற்றது. |
| V | 46 | திருப்புகலூர் | 2,3 | 2 | இறைவனிடம் மையல்கொண்ட தலைவியை மையல்செய்தான் யாவன் என்று அவளையே வினவித் தான் பரிகாரம் கருதி அவனிடம் முறையிடுவதாகத் தாய் சொற்றது. |
| | 88 | திருமருகல் | 4-9 | 6 | தலைவி இறைவன்பால் மையல்கொண்டு கைவளை சோரக் கண்கள் நீர்மல்க அவன்பால் கிளியைத் தூதுவிடத் தொடங்கி அவன் வருகையை வீதிப்புறம் நின்று எதிர்பார்த்துக் கூடல் இழைத்து அவன்நினைவால் திகைத்திருந்த செய்தியைத் தாய் அயலவரிடம் கூறியது. |
| VI | 9 | திருஆமாத்தூர் | 1-9 | 9 | தலைவி தான் இறைவன்பால் கொண்ட அனுபவத்தைத் தோழி-மார்களுக்கு விரித்துரைத்தது. |
| | 13 | திருப்புறம்பயம் | 2,3, 6-8 | 5 | தலைவி இறைவனைக் கண்டவாறும் அவன்பால் தான் மையல் கொண்டவாறும் தன் செயலும் தோழிக்குச் சொற்றது. |
| | 25 | திருஆரூர் | 1 | 1 | செவிலி தலைவிநிலை கண்டு மருண்டு உரைத்தது. |
| | 35 | திருவெண்காடு | 1,3-7 | 6 | தலைவி தோழிக்குத் தான் இறைவனிடம் மையல்கொண்ட நிகழ்ச்சியை விரித்துரைத்தது. |
| | 45 | திருஒற்றியூர் | 4-8,10 | 6 | தலைவனும் இறைவனுடைய ஊரினை வினவ கைக்கிளைத்தலைவி அந்நிகழ்ச்சியும் பின்விளைவும் பற்றித் தோழிக்கு விரித்துரைத்தது. |
| | 58 | திருவலம்புரம் | 1,3-9 | 8 | தலைவி தனக்கு இறைவன் மையல் விளைவித்த சந்திப்பினைத் தோழிக்கு விரித்துரைத்தது. |
| | | | கூடுதல் | 103 | |

| திருமுறை எண் | பதிக | திருத்தலப்பெயர் பாடல் | பதிகம் தொகை எண் | பாடல் | துறை |
|---|---|---|---|---|---|
| VII | 37 | திருஆரூர் | 1-10 | 10 | தலைவி தன் நிலைமைகளைப் பறவைகளிடத்தும் மேகத்திடத்தும் சொல்லி அவற்றை இறைவனிடம் தெரிவிக்குமாறு அவற்றைத் தூதுவிட்டது. |
| | 91 | திருஒற்றியூர் | 4 | 1 | தலைவி இறைவனிடம் கொண்ட மையலைத் தனக்குள் கூறிக்கொண்டது. |
| | | | கூடுதல் | 11 | |

கூடுதல் 92 + 103 + 11 = 206 பாடல்கள்

# 15. ஏழுதிருமுறைகள் - யாப்பமைதி

## அ) திருஞானசம்பந்தர் தேவாரம் — முதல் திருமுறை

பதிக எண்

1) கலித்துறை :

'தோடுடைய செவியன் விடைஏறிஓர் தூவெண் மதிசூடி' 1-1

'அருநெறிய மறைவல் லமுனிஅகன் பொய்கை அலர்ம்மய' 11-1

2 ஆம் 4 ஆம் சீர்கள் ஈரசைச்சீர்; ஏனைய மூன்றும் மூவசைச்சீர். அடிதோறும் நேர சையில் தொடங்கின் 18 எழுத்தும், நிரையசையில் தொடங்கின் 19 எழுத்தும் நிகழும் கட்டளை நெடிலடி. (மூன்றும் சீர் கனியாதல் காண்க.)

2) இதுவுமது.

'குறிகலந்த இசைபா டலினனசை யாலிவ் வுலகெல்லாம்' 1-1

'புற்றில்வாழும் அரவம் மரையார்த்தவன் மேவும் புகலூரை' 11-1

முதற்சீர் எழுத்து மிகைபடாது தண்பூ ஆதலும் அமையும்.

3) இதுவுமது.

'பத்தரோடு பலரும்-பொலியம்மல ரங்கைப் புனல்தூவி' 1-1

'படையிலங்கு கரமெட் டுடையான்படி றாகக் கனலேந்தி' 2-1

4) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் :

'மைம்மரு பூங்குழற் கற்றைதுற்ற
வாணுதல் மான்விழி மங்கையோடும்' 1-1

'செறிமுள ரித்தவி சேறியானும்
செற்றதில் வீற்றிருந் தானுமற்றை' 9-1

நேரசையில் தொடங்கின்,
கூவிளம், கூவிளம், கூவிளங்காய், கூவிளம், கூவிளம், கூவிளங்காய்.
(கூவிளம் 'தேமாங்காயாக' வரினும் அமையும்;
விளங்காய் 'தண்பூ'ச் சீராயினும் அமையும்.)
நிரையசையில் தொடங்கின்,
கருவிளம், கூவிளம், கூவிளங்காய், கூவிளம், கூவிளம், கூவிளங்காய்.
(ஈண்டும், கூவிளச்சீர் 'தேமாங்காய்' என வரினுமாம்; விளங்காய்ச்சீர் 'தண்பூ' என வரினுமாம்.)

5) இதுவுமது.

'செய்யரு கேபுனல் பாயஓங்கிச் செங்கயல் பாயச் சிலமலர்த்தேன்' 1-1

'பிறையுடை யான்பெரி யோர்கள்பெம்மான் பெய்கழல்
நாடொறும் பேணியேத்த' 7-1

விளங்காய் வருமிடத்தே தண்பூச்சீர் வருதலும், கூவிளம் வருமிடத்தே மாச் சீர் வருதலும் கொள்க. விளச்சீர் மாச்சீராக வருவழி, அடுத்தசீர் நேரில் தொடங் காது நிரையில் தொடங்கி எழுத்தெண்ணிக்கை ஒப்பாம். மிக அருகியே கூவிளம் வருமிடத்தே கருவிளம் வந்து ஓரெழுத்து மிகையாகிறது.

(பாடல் 2,7,8- இவற்று நாலாஞ்சீர் நோக்குக.)

6) இதுவுமது.
'அங்கமும் வேதமும் ஓதுநாவர் அந்தணர் நாளும் அடிபரவ' 1-1
'புனையழல் ஓம்புகை அந்தணாளர் பொன்னடி நாடொறும் போற்றிசைப்ப' 6-1

விளச்சீர் மாங்காய்ச்சீராமிடத்து எழுத்தெண்ணிக்கை மாறுது.
(பாடல் 7-1)

'மருகனி லாவிய மைந்த சொல்லாய்'
எனப் பாடல்தோறும் கூவிளத்திற்குக் கருவிளம் வந்தது.
'கணபதி யீச்சுரம் காமுறவே' என்புழியும்' அது.
பிறவிடத்தும் சிறுபான்மை இவ்வாறு வந்தனவும் கொள்க.
(பாடல் 3,8,9)

7) இதுவுமது.
'பாடக மெல்லடிப் பாவையோடும் படுபிணக் காடிடம் பற்றிநின்று' 1-1
'பணியுடை மாலும லரினானும் பன்றியும் வென்றிப்ப றவையாயும்' 9-1
கூவிளம் வரற்பால இடத்தே கருவிளம் சிறுபான்மை வருதலுமாம். விளச்சீர் மாங்காய்ச்சீராக நிகழினும் எழுத்தெண்ணிக்கை இழுக்காது.

8) இதுவுமது.
'புண்ணியர் பூதியர் பூதநாதர் புடைபடு வார்தம் மனத்தார்திங்கள்' 1-1
நான்காம் சீர்க்கண் கூவிளமும் கருவிளமும் ஒத்த வரவின.
அடிதோறும் 20,21 எழுத்தாக வந்த கட்டளையாப்பு.
கூவிளம் வருமிடத்தே தேமா வரினும் அடுத்த சீர் நிரையில் தொடங்கி எழுத்தெண்ணிக்கையை நிரப்புதல் காண்க.

9) கலிவிருத்தம் :
'வண்டார்குழ லரிவையொடு பிரியாவகை பாகம்' 1-1
'படைப்புநிலை யிறுதிப்பயன் பருமையொடு நேர்மை' 2-1
இடைச்சீர்களை ஒரோவழி விளங்காய் ஆக்காது மாங்கனியாகவே கொள்க.

10) இதுவுமது.
'உண்ணமுலை யுமையாளொடு முடனாகிய ஒருவன்' 1-1
'விளவார்கனி படநூறிய கடல்வண்ணனும் வேத' 9-1
பதிகமுழுதும் மூன்று மாங்கனி ஒரு மாச்சீர் என அடிதோறும் பிழையாமல் வந்தவாறு.

11) இதுவுமது.
'சடையார்புன லுடையானொரு சரிகோவண முடையான்' 1-1
'ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய் 2-1

12 —— 18) இவையுமது.

19) இதுவுமது. அடிதோறும் நாற்சீரும் கருவிளங்கனியாக நிகழ்கிறது.
'பிறையணிபடர் சடைமுடியிடைப் பெருகியபுன லுடையவனிறை' 1-1

முதற்பாடல் நாலாமடி இரண்டாஞ்சீர் 'விரைபுல்குநல' என்பதன்கண் லகரத்தை நீக்கி அலகிடுக.

20) இதுவுமது.

'தடநிலவிய மலைநிறுவியொர் தழலுமிழ்தரு படஅரவுகொ' 1-1

'கலைநிலவிய புலவர்களிடர் களைதருகொடை பயில்பவர்மிகு 3-3

மூன்றும் பாடல்மூன்றுமடி இரண்டாஞ்சீராகிய 'புலவர்களிடர்' என்பதன்கண் ரகரம் நீக்கி அலகிடுக.

21) இதுவுமது.

'புவம்வளிகனல் புனல்புவிகலை உரைமறைதிரி குணமமர்நெறி' 1-1

22) இதுவுமது.

'சிலைதனைநடு இடைநிறுவியொர் சினமலியர வதுகொடுதிவி' 1-1

தலநிலவிய மனிதர்களொடு தவமுயறரு முனிவர்கள்தம' 4-3

இவ்விரண்டாம் நான்காம் சீர்களில் ரகரம் நீக்கி அலகிடுக.

23) இதுவுமது.

'மடையில் வாளை பாய மாதரார்' 1-1

'பெண்டான் பாக மாகப் பிறைச்சென்னி' 2-1

'எறியார் கடல்சூ ழிலங்கைக் கோன்றனை' 8-1

முதன் மூன்று சீர்கள் மாச்சீர்; இறுதிச்சீரொன்றும் கூவிளம் அல்லது காய்ச்சீர்.

24) இதுவுமது.

'பூவார் கொன்றைப் புரிபுன் சடையீசா' 1-1

'மாணு வென்றிக் காலன் மடியவே' 4-1

'பெருக்கப் பிதற்றும் சமணர் சாக்கியர்' 10-1

நான்காஞ்சீர் கூவிளம் ஆதலேயன்றி, காய்ச்சீராகவும் கருவிளமாகவும் வருதல் கொள்க.

25) இதுவுமது.

'மருவார் குழலி மாதோர் பாகமாய்' 1-1

'காரார் வண்ணன் கனக மனையானும்' 9-1

26) இதுவுமது.

'வெங்கள் விம்மு வெறியார் பொழிற்சோலை' 1-1

'இசைவி ளங்கு மெழில்சூழ்ந் தியல்பாக' 5-1

முதல் மூன்று சீரும் மாச்சீர்; இறுதிச்சீர் புளிமாங்காய்; கட்டளையாப்பு.

27) இதுவுமது.

'முந்தி நின்ற வினைக ளவைபோக' 1-1

'கரையு லாவு கதிர்மா மணிமுத்தம்' 4-1

நாலாஞ்சீர் பெரும்பான்மையும் புளிமாங்காய்; 8 ஆம் பாசுரம் மூன்றுமடியிறுதிச்சீர் கருவிளம்; 9,10,11 ஆம் பாசுர நாலாமடி இறுதிச்சீர்களும் கருவிளம். மாங்காய் வருமிடத்தே விளம் வருதலின், எழுத்தெண்ணிக்கை இழுக்காது. இதுவும் கட்டளையாப்பு.

28) இதுவுமது.

'செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பம்' 1-1

'பிணிகொ ளாக்கை யொழியப் பிறப்புளீர்' 4-1

நாலாஞ்சீர் பெரும்பான்மையும் புளிமாங்காய். மாங்காய் வருமிடத்தே விளம் வந்து எழுத்தெண்ணிக்கை ஒத்தது. சிறுபான்மை கூவிளம் வந்து ஓரெழுத்துக் குன்றியது.

29) இதுவுமது.

'ஊரு லாவு பலிகொண் டுலகேத்த' 1-1

'அரக்க னுண்மை யழிய வரைதன்னால்' 8-1

நான்காம் சீர் புளிமாங்காயாக வந்த கட்டளையாப்பு. 11 ஆம் பாடலில் மூன்றுமடி, 'அத்தன் பாத மணிஞான சம்பந்தன்' என, மூன்றுஞ் சீர் புளிமாங்கா யாக வர, நாலாஞ்சீர் தேமாங்காயாக வந்து எழுத்தெண்ணிக்கையைச் சமமாக்கியது.

30) இதுவுமது.

அடிதோறும் நாலாஞ்சீர் புளிமாங்காயாக வர, வெண்டளை பிறழாது வந்த கட்டளை யாப்பு.

31) இதுவுமது.

'விழுநீர் மழுவாட் படையண் ணல்விளங்கும்' 1-1

'மாடார் மலர்க்கொன் றைவளர் சடைவைத்து' 7-1

'கல்லார் மதிற்காழி யுள்ஞான சம்பந்தன்' 11-1

பெரும்பான்மையும் முதல்மூன்று சீரும் வெண்டளை பிறழாத மாச்சீர். ஈற்றுச் சீர் புளிமாங்காய் ஆகாது கூவிளங்காயாக வரினும் எழுத்தெண்ணிக்கை பிறழாது. இறுதிப் பாசுரத்துள் முதலடிக்கண் இடைச்சீர்கள் காய்ச்சீராக நிகழ்கின்றன; நாலாஞ் சீர் தேமாங்காய்; அடிதோறும் வெண்டளை பிறழாமல் எழுத்தெண்ணிக்கை ஒத்த லின் கட்டளை யாப்பு.(ணல்விளங்கும் என்பதனை லகரம் நீக்கி அலகிடுக.)

32) இதுவுமது.

'ஓடே கலனுண் பதுமூ ரிடுபிச்சை
காடே யிடமா வதுகல் லானிழற்கீழ்' 1-1,2

'தடங்கொண் டதொர்தா மரைப்பொன் முடிதன்மேல்' 2-1

'கண்ணார் கமழ்காழி யுள்ஞான சம்பந்தன்' 11-1

முதற்பாசுரத்துள் இரண்டாமடிக்கண் இறுதிச்சீர் கூவிளங்காயாக நிகழினும் புளிமாங்காய்க்குரிய எழுத்தெண்ணிக்கை பெற்றது. இறுதிப் பாசுரத்தின் இடைச் சீர்களாகக் காய்ச்சீர் வர இறுதிச்சீர் தேமாங்காய் ஆயிற்று. எழுத்தெண்ணிக்கை யாண்டும் பிழையாமையால் கட்டளையாப்பு.

33) இதுவுமது.

'கணைநீ டெரிமா லரவம் வரைவில்லா' 1-1

'ஊரு மரவஞ் சடைமே லுறவைத்து' 3-1

சிறுபான்மை நாலாஞ்சீர் புளிமாங்காயாக நிகழாது கருவிளமாக நிகழ்தல் காண்க. (1-2;2-2;4-1,3;5-1) அடிதோறும் வெண்டளை பிழையாது எழுத்தெண்ணிக் கையும் பிழையாமையால் கட்டளை யாப்பு.

34) வஞ்சிவிருத்தம்:

'அடலே றமருங் கொடியண்ணல்' 1-1

அடிதோறும் புளிமா, புளிமா, புளிமாங்காய் என வந்த கட்டளை யாப்பு.

35) இதுவுமது.

'அரையார் விரிகோ வணவாடை' 1-1

பதிகமுழுதும் பாசுரங்களின் மூன்றுமடி யிறுதிச்சீர் 'மூிம்மிழலே' எனக் கூவிளங்காய் வந்து புளிமாங்காய் போலவே எழுத்தெண்ணிக்கை நிரப்பிற்று ஆதலின் கட்டளையாப்பு. நாலாம் பாடல் இரண்டாமடிக்கண் இறுதிச்சீர்'தவமுகன்' என்புழித் 'த' விட்டிசைப்பாகக் கொள்ளின் கூவிளங்காய்; அன்றேல் கருவிளம். எவ்வாறுயினும் எழுத்தெண்ணிக்கை பிழையாமை காண்க.

36) இதுவுமது.

'கலையா மதியோ டுரநீரும்' 1-1

மூன்றுஞ்சீர் புளிமாங்காயாகாது கூவிளங்காயாக வரினும் (3-3), தேமாந் தண்பூவாக வரினும் (4-2;10-2) எழுத்தெண்ணிக்கை பிழையாமையால் கட்டளை யாப்பு.

37) இதுவுமது.

'அரவச் சடைமேல் மதிமத்தம்' 1-1

கட்டளை யாப்பு; மேற்கூறிய அமைதி கொள்க. (36)

38) இதுவுமது.

'கரவின் றிநன்மா மலர்கொண்டு' 1-1

கட்டளையாப்பு. மூன்றுஞ்சீர் தேமாந்தண்பூவாக (7-3) நிகழினும் எழுத் தெண்ணிக்கை இழுக்காமை காண்க.

39) ஆசிரிய இணைக்குறட்டுறை :

'அந்தமு மாதியு மாகிய அண்ணல்
ஆரழ லங்கை யமர்ந்திலங்க' 1-1
'சந்த மிலங்கு நகுதலை கங்கை
தண்மதி யம்மய லேததும்ப' 1-3
'சடைதனைத் தாழ்தலு மேறமு டித்துச்
சங்கவெண் தோடுச ரிந்திலங்க' 2-1
'புடைதனிற் பாரிடம் சூழப் போதரு மாறிவர் போல்வார்' 2-2
'மந்த முழவ மியம்ப மலைமகள் காணநின் றுடி' 1-2
'வெந்தவெண் நீறுமெய் பூசும் வேட்கள நன்னக ராரே' 1-4

முதலடி மூன்றுமடிகள் எழுசீர், ஏனையிரண்டடியும் அறுசீர் என வந்தவாறு. எழுசீரடியுள், ஏழாஞ்சீர் கூவிளங்காய்; நாலாஞ்சீர் ஒருதலையாகத் தேமா; பிறவெல் லாம் மாச்சீரும் விளச்சீரும். அறுசீரடியுள் எல்லாம் மூன்றுஞ்சீரும் ஆறுஞ் சீரும் மாச்சீர்; பிறவெல்லாம் மாச்சீர் விளச்சீர்கள்; சிறுபான்மை முதற்சீர் காய்ச்சீராக வருதலும் (பாசுரம் 4) கொள்க.

40) இதுவுமது.

'பொடியுடை மார்பினர் போர்விடை யேறிப் பூதக ணம்புடை சூழ' 1-1
'கல்லுயர் மாக்கட னின்றுமு ழங்கும் கரைபொரு காழியம் மூதூர்' 11-1
'கொடியுடை யூர்திரிந் தையம் கொண்டு பலபல கூறி' 1-2

'நல்லுயர் நான்மறை நாவி னற்றமிழ் ஞானசம் பந்தன்' 11-2

எழுசீரடியுள் நாலாம்சீரும் ஏழாஞ் சீரும் தேமா; பிறவெல்லாம் பெரும்பான்மையும் கூவிளம், சிறுபான்மை கருவிளம்.

அறுசீரடியுள் மூன்றும் ஆறுஞ் சீர்கள் தேமா; பிறவெல்லாம் பெரும்பான்மையும் கூவிளம், சிறுபான்மை கருவிளம். விளச்சீர் தேமாங்காயாக வரினும் இழுக்காது.

41) எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் :

'சீரணி திகழ்திரு மார்பில்வெண் ணூலர் திரிபுர மெரிசெய்த செல்வர்' 1-1
'விடைத்தவல் லரக்கன் வெற்பினை யெடுக்க மெல்லிய திருவிர லூன்றி' 8-1

அடிதோறும் நாலாம் ஏழாஞ் சீர்கள் மாச்சீர்; பிறவெல்லாம் பெரும்பான்மையும் விளச்சீர். விளச்சீர் மாங்காய்ச் சீராயினும் இழுக்காது.

42) இதுவுமது.

'பைம்மா நாகம் பன்மலர்க் கொன்றை
பன்றிவெண் கொம்பொன்று பூண்டு' 1-1
'கடையார் மாடம் நன்கெழு வீதிக்
கழுமல வூரன் கலந்து' 11-1

அடிதோறும் நாலாம் ஏழாஞ் சீர்கள் மாச்சீர்; மூன்றுஞ்சீர் ஒருதலையாக விளச்சீர்; ஐந்தாஞ்சீரும் அது. பிறசீர்கள் மாச்சீர், விளச்சீர். விளச்சீர் மாங்காயாக வரினும் இழுக்காது.

43) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் :

'வடந்திகழ் மெல்முலை யாளைப் பாகம தாகம தித்து' 1-1
'காமரு வார்பொழில் சூழுங் கற்குடி மாமலை யாரை' 11-1

கருவிளம் அல்லது கூவிளம், கூவிளம், தேமா, கூவிளம், கூவிளம், தேமா-என வந்த கட்டளையாப்பு; நேரில் தொடங்கும் அடிக்கு எழுத்து 16; நிரையில் தொடங்குமதற்கு 17.

44) எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் :

'துணிவளர் திங்கடு ளங்கிவி ளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமு டித்து' 1-1
'ஏவலத் தால்விச யற்கருள் செய்தி
ராவணன் தன்னையீ டழித்து' 8-1

அடிதோறும் நாலாம் ஏழாஞ்சீர்கள் மாச்சீர்; பிறவெல்லாம் விளச்சீர்; ஒரோவழி மாச்சீர் வரினுமாம் (பா6-அடி 2-சீர்2); விளச்சீர் மாங்காயாக வரினும் இழுக்காது (6-1-5,6)

45) கலித்துறை:

'துஞ்ச வருவாரும் தொழுவிப் பாரும் வழுவிப்போய்' 1-1
'கணையும் வரிசிலையும் எரியுங் கூடிக் கவர்ந்துண்ண' 8-1
'வஞ்சப் படுத்தொருத்தி வாழ்நாள் கொள்ளும் வகைகேட்' 1-3
'வீடு மாநெறி விளம்பி னூரெம் விகிர்தனூர்' 2-2
'கால னுயிர்செற்ற கால னுய கருத்தனூர்' 4-2

அடிதோறும் முதற்சீரும் மூன்றுஞ்சீரும் மாச்சீர்; நாலாஞ்சீர் ஒருதலையாகத் தேமா; இரண்டாஞ்சீர் காய்ச்சீர் அல்லது விளச்சீர்; ஐந்தாஞ்சீரும் அது. மிக அருகியே ஐந்தாஞ்சீர்க்கண் மாச்சீர் நிகழ்கிறது. (1-3)

46) கலிவிருத்தம்:

'குண்டைக் குறள்பூதங் குழும அனலேந்தி' 1-1

'ஞாழல் கமழ்காழி யுள்ஞான சம்பந்தன்' 11-1

'அரும்புங் குரும்பையு மலைத்த மென்கொங்கை' 2-1

'கரிபுன் புறமாய கழிந்தா ரிடுகாட்டில்' 5-1

'விண்ட தொடையலா ளுடும்வீ ரட்டானத்தே' 1-4

முதற்சீர் மாச்சீர். பெரும்பான்மையும் மூன்றுஞ்சீரும் அது; சிறுபான்மை காய்ச்சீர் வரினுமாம் (9-1; 11-1,2); எல்லாப் பாசுரத்தும் ஈற்றடி காண்க. ஈற்றடி யிறுதிச்சீர் தேமாந்தண்பூவாக நிற்பினும் புளிமாங்காய் நின்றதாகவே அமையும். இரண்டாம் நான்காஞ்சீர்கள் பெரும்பான்மையும் காய்ச்சீர்; மிக அருகியே விளச் சீர் காண்க. (2-1, 2-2........)

47) தரவுகொச்சகம்:

'பல்லடைந்த வெண்டலையில் பலிகொள்வ தன்றியும்போய்' 1-1

'புரிமெரித்த வெற்றியோடும் போர்மத யானைதன்னை' 5-1

'மலையெடுத்த வாளரக்கன் அஞ்ச ஒருவிரலால்' 8-1

'தெங்கநீண்ட சோலைசூழ்ந்த சிரபுர மேயவனே' 11-1

மூன்றுஞ்சீர் காய்ச்சீராதலன்றி, மாச்சீர் விளச்சீராதலும் கூடும். பிறவெல்லாம் காய்ச்சீர்.

48) இதுவுமது.

49) இதுவுமது. ஈற்றுச்சீர் காய்ச்சீராதலேயன்றித் தண்பூச்சீராதலும் கொள்க. (7-3)

50) இதுவுமது.

51) —— 53) இவையுமது.

54) ஆசிரிய இணைக்குறட்டுறை: முதலடியும் மூன்றுமடியும் அளவடி; ஏனை யிரண்டடியும் சிந்தடி.

55) — 58) இவையுமது.

59) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் :

'ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை யுடைத்தாய
வாழ்க்கை யொழியத்தவம்' 1-1

'மண்ணுர் முழவதிரு மாடவீதி வயற்காழி ஞானசம் பந்தனல்ல' 11-1

மாச்சீர், காய்ச்சீர், கனிச்சீர் என இவையே விரவி வந்தவாறு.

60) தரவுகொச்சகம்:

'வண்டரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும்' 1-1

'பண்பழனக் கோட்டகத்து வாட்டமிலாச் செஞ்சூட்டு' 3-1

'போர்மிகுத்த வயற்றேணி புரத்துறையும் புரிசடையெம்' 11-1

வெண்சீர் வெண்டளையும் கலித்தளையுமே விரவிவந்த யாப்பு.

61) — 63) இவையுமது.

64) கலித்துறை :
'அறையார் புனலு மாமலரும் ஆடர வார்சடைமேல்' 1-1
'தின்ஞர் புரிசை மாடமோங்குந் தென்திருப் பூவணத்து' 11-1
1,2 ஆம் சீர்கள் மாச்சீர்; 4 ஆம்சீர் விளச்சீர் (மிக அருகியே 9-3-4 ஆம் சீர் மாச்சீர் வந்தது; ஆண்டு விளம் வாராத குறையை ஐந்தாஞ்சீர் கருவிளங்காயாக வந்து நிரப்பிற்று). 3,5 ஆம் சீர்கள் பெரும்பான்மையும் கூவிளங் காய்; சிறுபான்மையே கருவிளங்காய்.

65) இதுவுமது.
'அடையார் தம்புரங் கள்மூன்று மாரழ வில்லமுந்த' 1-1
'எண்ணு ரெயில்கள் மூன்றுஞ்சீறு மெந்தை பிரானிமையோர்' 2-1
'தாரார் கொன்றை பொன்தயங்கச் சாத்திய மார்பகலம்' 4-1
1,2,4 ஆஞ் சீர்கள் மாச்சீர் அல்லது விளச்சீர். மூன்றாஞ்சீர் காய்ச்சீர். ஐந்தாஞ் சீர் ஒருதலையாக விளங்காய்ச்சீர். மூன்றாஞ்சீர் ஒரோவழி தண்பூச்சீராதலும் (2-1, 11-2) கொள்க.

66) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் :
'பங்க மேறு மதிசேர் சடையார் விடையார் பலவேதம்' 1-1
'மகரத் தாடு கொடியோ னுடலம் பொடிசெய் தவனுடைய 3-1
முதல் ஐந்து சீரும் மாச்சீர். ஆறாஞ் சீர் காய்ச்சீர்; சிறுபான்மை தண்பூச் சீருமாம் (11-3). மிக அருகியே ஐந்தாஞ்சீர் விளமாக நிகழ்கிறது. (11-4)

67) இதுவுமது.

68) இதுவுமது.
'பொடிகொ ளுருவர் புலியி னதளர் புரிநூல் திகழ்மார்பின்' 1-1
'போரார் கடலிற் புனல்சூழ் காழிப் புகழார் சம்பந்தன் 10-1
ஆறாஞ்சீர் மிகச் சிறுபான்மையே விளமாக நிற்றல் (9-1,2) கொள்க; மாங் காயாக நீட்டி (சாக்கியர், அணியராஅய்) ஒலித்தலுமாம்.

69) இதுவுமது.

70) இதுவுமது. மிகச் சிறுபான்மையே இறுதிச்சீர் விளச்சீராக நிகழ்தல் கொள்க.

71) இதுவுமது.
'பொங்கார் சடையர் புனல ரனலர் பூதம் பாடவே' 2-1
என மிகச் சிறுபான்மையே ஆறாஞ்சீர் விளச்சீராக வரப்பெறும். ஆண்டு 'பாடவ்வே' என இடையே மெய்யெழுத்து விரித்துக் காய்ச்சீராக ஒலித்தலுமாம். இடையே மாச்சீர் வாராது நிரையசையே சீராக நின்று, குறில் நீண்டு தேமாப் போல ஒலிக்குமாறு காண்க.
'குயிலார் கோல மாத விகள் குளிர்பூஞ் சுரபுன்னை' 11-1
(விகள்: 'வீ கள்' எனத் தேமாவாக ஒலித்தவாறு.)

72) இதுவுமது. மிகச் சிறுபான்மையே ஆறாஞ் சீர் விளச்சீராக (10-1) வருமாறு கொள்க.

73) இதுவுமது. ஆறுஞ் சீர் விளமாகச் சிறுபான்மை நிகழ்தல் (9-2; 11-3) காண்க.

74) இதுவுமது. ஆறுஞ் சீர் சிறுபான்மையே விளமாக நிகழ்ந்தவாறு (4-1). இடைச்சீர் நிரையாக வந்து குறில் நீண்டொலிப்பத் தேமாவாக வொலித்தலும் கொள்க.
[ருதோ: 'ரூ தோ' என நீண்டொலித்துத் தேமா ஆயிற்று.]

75) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்:
'காலைநன் மாமலர் கொண்டடி பரவிக்
கைதொழு மாணியைக் கறுத்தவெங் காலன்' 1-1
'சடையினர் மேனி நீறது பூசித்
தக்கைகொள் பொக்கண மிட்டுட னுக' 5-1
நாலாம் எட்டாஞ் சீர்கள் ஒருதலையாக மாச்சீர். பிற சீரெல்லாம் பெரும் பான்மையும் விளச்சீர். இரண்டாஞ் சீர் மாச்சீராதலும் கூடும்.

76) இதுவுமது. விளச்சீர் ஒரோவழி மாங்காயாக நிகழ்தலும் (2-1-5; 4-1-1...) கொள்க.

77) இதுவுமது. நாலாம் எட்டாஞ் சீர்களேயன்றி இரண்டாஞ்சீரும் ஒருதலையாக மாச்சீர்; பிறவெல்லாம் விளச்சீர்.

78) இதுவுமது. நாலாம் எட்டாஞ் சீர்கள் ஒருதலையாக மாச்சீர். பிறவெல்லாம் விளச்சீர்; அவற்றுள்ளும் கருவிளமே மிகுதி.

79) இதுவுமது.

80) கலிவிருத்தம் :
'கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே' 1-1
'நிறைவெண் கொடிமாட நெற்றி நேர்தீண்ட' 4-1
முதலாம் மூன்றுஞ் சீர்கள் மாச்சீர்; ஏனையிரண்டும் காய்ச்சீர்.

81) இதுவுமது.
'நல்லார் தீமேவும் தொழிலார் நால்வேதஞ்' 1-1
'துள்வண் டேன்பாயு மிதழி தூமத்தம்' 2-1

82) — 89) இதுவையுமது.

90) —— 96) வஞ்சித்தாழிசை: ஒரு பொருள்மேல் பதினொன்று அடுக்கி வந்த வாறு. குறளடிக்கண் முதற்சீர் மாச்சீர்; ஏனையது பெரும்பான்மையும் விளச்சீர்; காய்ச்சீருமாம்.

97) கலித்துறை:
'எய்யா வென்றித் தானவர் ஊர்மூன் றெரிசெய்த' 1-1
'பொன்னியல் மாடப் புரிசை நிலாவு புறவத்து' 11-1
இரண்டாம் நாலாஞ் சீர்கள் ஒருதலையாக மாச்சீர், ஐந்தாஞ்சீர் புளிமாங்காய், பிறசீர்கள் மாச்சீரும் விளச்சீருமாம்.

98) இதுவுமது.

'நன்றுடை யானைத் தீயதி லானை நரைவெள்ளே' 1-1

'துறைமல்கு சாரற் சுனைமல்கு நீலத் திடைவைகி' 4-1

'அரப்பள்ளி யானு மலருறை வானு மறியாமை' 9-1

இரண்டாம் நாலாம் ஐந்தாம் சீர்கள் மேற்கூறியவாறு (97) வருவன. ஐந்தாஞ்சீர் சிறுபான்மை தேமாங்காயும் ஆம் (8-3). ஏனைய முதலாம் மூன்றாஞ்சீர்கள் காய்ச்சீர் அல்லது விளச்சீராக வருதல் அமையும்.

99) இதுவுமது.

'வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர்வேங்கை' 1-1

'பொடிகள் பூசித் தொண்டர்பின் செல்லப் புகழ்விம்ம' 2-1

மூன்றாஞ்சீர் பெரும்பான்மையும் விளச்சீர்; சிறுபான்மை காய்ச்சீர். இறுதிச்சீர் பெரும்பான்மையும் புளிமாங்காய்; சிறுபான்மை தேமாங்காய், ஏனைய மூன்று சீர்களும் மாச்சீர்.

100) இதுவுமது.

'நீடலர் சோதி வெண்பிறை யோடு நிரைகொன்றை' 1-1

'தடமலி பொய்கைச் சண்பைமன் ஞான சம்பந்தன்' 11-1

'அயிலுடை வேலோ ரனல்புல்கு கையி னம்பொன்றல்' 7-1

'குண்டாய் முற்றுந் திரிவார் கூறை மெய்போர்த்து' 10-1

இரண்டாம் நான்காம் ஐந்தாஞ்சீர்கள் மேற்கூறியவாறு நிகழ்வன (97). மூன்றாஞ்சீர் பெரும்பான்மையும் விளச்சீர்; சிறுபான்மை காய்ச்சீர்; மிக அருகியல்லது மாச்சீர் வரப்பெறாது (10-1). முதற்சீர் மாச்சீர் அல்லது விளச்சீராதல் அமையும்.

101) — 103) இதுவையுமது.

104) ஆசிரிய இணைக்குறட்டுறை:

'ஆட லரவசைத்தான் அருமாமறை தான்விரித்தான் கொன்றை' 1-1

'சூடிய செஞ்சடையான் சுடுகா டமர்ந்தபிரான்' 1-2

'ஏடவிழ் மாமலையா ளொருபாக மமர்ந்தடியா ரேத்த' 1-3

'ஆடிய எம்மிறையூர் புகலிப் பதியாமே' 1-4

முதலடியு மூன்றாமடியும் ஐஞ்சீர் பெற, ஏனையடிகள் ஒருசீர் குறைந்தன.

105) —— 108) இவையுமது.

109) வஞ்சி விருத்தம்: அடிதோறும் முதலிருசீர் விளச்சீர்; மூன்றாஞ் சீர் காய்ச்சீர்.

110) —— 115) இவையுமது. மூன்றாஞ்சீராம் காய்ச்சீர் தண்பூவாக வரினும் இழுக்காது.

116) கட்டளைக் கலித்துறை:

'அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்' 1-1

(இறுதிச்சீர்க்கண் ஆய்தம் அலகு பெற்றது.)

'பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்' 10-1

117) இதுவுமது.

*118)* கலிவிருத்தம்:

'சுடுமணி யுமிழ்நாகம் சூழ்தர அரைக்கசைத்தான்' 1-1

'வெண்செநெல் விளைகழனி விழவொலி கழுமலத்தான் 11-1

இரண்டாம் நான்காஞ் சீர்கள் காய்ச்சீர்; ஏனைய சீர்கள் பெரும்பான்மையும் விளச்சீர். முதற்சீர் காய்ச்சீராதலும் (2,7,10), மூன்றுஞ் சீர் காய்ச்சீராதலும் (9-1) உள.

*119)* இதுவுமது.

'முள்ளின்மேல் முதுகூகை முரலுஞ் சோலை' 1-1

'திசைநான்கும் புகழ்காழிச் செல்வ மல்கு' 11-1

பெரும்பான்மையும் முதற்சீரிரண்டும் காய்ச்சீர்; பின்னிரண்டு சீரும் மாச்சீர். சிறுபான்மை முதற்சீரிரண்டும் விளச்சீராதலும் (2-1; 7-1-2, 7-2-2; 10-1), மூன்றுஞ் சீர் காய்ச்சீராதலும் (2-1), நான்காஞ் சீர் நிரையாக நின்றது முதல் நீண்டு தேமாவாக ஒலித்தலும் (7-2) கொள்க.

*120)* இதுவுமது.

'பணிந்தவ ரருவினை பற்றறுத் தருள்செயத்' 1-1

'கீர்த்திமிக் கவனகர் கிளரொளி யுடனடை' 2-1

சீர்கள் விளச்சீராக நடப்பன. இடையே ஒருசீர் மாங்காயாக வரினும் அமையும்.

*121)* இதுவுமது. நாலாஞ்சீர் புளிமா, புளிமாங்காய் என வரினும் அமையும்.

*122)* இதுவுமது. பதிக முழுதும் நான்காமடி இறுதிச்சீரொன்றும் புளிமா, பிற வெல்லாம் கருவிளம்.

*123) —— 125)* இவையுமது.

*126)* எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்:

'பந்தத்தால் வந்தெப்பாற் பயின்றுநின்று உம்பரப்

பாலேசேர்வா யேனோர்கான் பயில்கண முனிவர்களும்' 1-1

நாலாம் ஏழாம் சீர்கள் விளச்சீர், ஐந்தாஞ்சீர் தண்பூச் சீர். பிற வெல்லாம் பெரும்பான்மையும் காய்ச்சீர். ஏழாஞ்சீர் (விளச்சீர்) ஒரோவழிக் கனிச்சீராதலும் கொள்க.

*127)* கலிவிருத்தம்: ஓரடி முற்று மடக்கு.

*128)* (எழுகூற்றிருக்கை) இணைக்குறளாசிரியம்.

*129)* அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்:

காய்ச்சீர் 4, மாச்சீர் 2 என வருவது.

*130)* இதுவுமது.

*131)* இதுவுமது. இடையே ஒன்றிரண்டு சீர் காய்ச்சீராகாது கருவிளமாக நிகழினும் இழுக்காது. (1-1-4; 1-3-4)

*132)* இதுவுமது.

133) தரவுகொச்சகம்:

'வெந்தவெண்பொடிப் பூசுமார்பின் விரிநூலொரு பால்பொருந்த' 1-1

'வரந்திகழு மவுணர்மா நகர்மூன்றுடன் மாய்ந்தவிய' 2-1

பெரும்பான்மையும் காய்ச்சீர் வரப்பெறும். சிறுபான்மை கனிச்சீரும் விளச்சீரும் நிகழ்தலும் அமையும். தண்பூச்சீர் மிக அருகியே வரப்பெறும்.

134) கலிவிருத்தம்:

'கருத்தன் கடவுள் கனலேந்தி யாடும்' 1-1

'குளிர்ந்தார் சடையன் கொடுஞ்சிலை விற்காமன்' 3-1

புளிமாச்சீர், மாச்சீர், காய்ச்சீர் அல்லது விளச்சீர், மாச்சீர் அல்லது காய்ச்சீர் - என நிகழும் நாற்சீரடி. முதற்சீர் காய்ச்சீராதலும் (4-1,2), இரண்டாஞ் சீர் காய்ச்சீராதலும் (2-2) மூன்றாம்சீர் காய்ச்சீராதலும் (11-2,3) சிறுபான்மையே என்க. மூன்றாம் சீர் மாச்சீராதலும் (8-1) அருகியே வருதல் காண்க.

135) ஆசிரிய இணைக்குறட்டுறை:

'நீறு சேர்வதொர் மேனியர் நேரிழை
கூறு சேர்வதொர் கோலமாய்' 1-1,2

'செல்வன் ஞானசம் பந்தன செந்தமிழ்
செல்வ மாமிவை செப்பவே' 11-3,4

முதலடி மூன்றாமடிகள் அளவடி; இரண்டாமடி நான்காமடிகள் சிந்தடி. மாச்சீர் விளச்சீர்களே வந்தவாறு,

136) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்:

'மாதர் மடப்பிடியு மடஅன்னமு மன்னதோர்
நடையுடைம் மலைமகள் துணையென மகிழ்வர்' 1-1

'பொன்னெடு நன்மணிமா ளிகைசூழ்விழ வம்மலி
பொரூஉபுனல் திருஉவமர் புக(ல்)வியென் றுலகில்' 11-1

(அளபெடை அலகு பெறாமல் நின்றது.)

1. மாச்சீர் அல்லது விளச்சீர், 2. காய்ச்சீர், 3. கனிச்சீர், 4. விளச்சீர் அல்லது மாச்சீர், 5. விளச்சீர், 6 விளச்சீர், 7. விளச்சீர், 8. மாச்சீர் - எனப் பெரும்பான்மையும் வரும் எண்சீரடி.

இரண்டாஞ்சீர் விளமாதலும் (7-1...), நாலாஞ்சீர் காயாதலும் (6-1....), ஆறாஞ்சீர் காயாதலும் (4-1,6-1,7-1....) சிறுபான்மை தண்பூவாதலும் (2-1,......) அமையும்.

## இரண்டாம் திருமுறை

137) கலிநிலைத்துறை:

'செந்நெ லங்கழ னிப்பழ னத்தய லேசெழும்' 1-1

'வருக்க மார்தரு வான்கடு வன்னொடு மந்திகள்' 7-1

தேமா அல்லது புளிமா, கூவிளம், கூவிளம், கூவிளம், கூவிளம் என நிகழும் ஐஞ்சீரடி. இறுதிச்சீர் தேமாங்காயாக நிற்பினும் (10-1) அமையும். (காய்ச்சீர் நிகழின் கலித்துறை என்ப.)

138) இதுவுமது. பாடல் 8. இரண்டாஞ் சீர்கள் (றநறு, றநசை, றகளிற், றதலை) முதற் குறில் நேரசையாக விட்டிசைப்பக் கூவிளமாக நிற்கின்றன.

139) இதுவுமது. சிறுபான்மையாகத் தேமா வந்தது (9-1-2). விளச்சீர் மாங்கா யாக நிற்பினும் அமையும்.

140) இதுவுமது.

141) கலித்துறை: இரண்டாஞ் சீர்கள் பெரும்பான்மையாகக் காய்ச்சீர் வந்தன. சிறுபான்மை கனியும் ஆம் (4-1-2). நான்காஞ்சீரும் ஒரோவழிக் காய்ச்சீராம் (4-1). மிக அருகியே தேமா இடையே நிகழ்தலும் (2-3-4; 5-2-2) கொள்க.

142) கலிநிலைத்துறை: பெரும்பான்மையும் விளச்சீர்களே; காய்ச்சீர் சிறுபான்மையே வந்தது.

143) — 146) இவையுமது.

147) கலிவிருத்தம்.

'நல்லானை நான்மறை யோடிய லாறங்கம்' 1-1

'கழியார்சீ ரோதமல் குங்கடற் காழியுள்' 10-1

காய்ச்சீர், கூவிளம், கூவிளம், கூவிளம் அல்லது காய்ச்சீர் (சிறுபான்மை தேமாவும் ஆம் 7-3) என வரும் நாற்சீரடி.

148) — 152) இவையுமது.

153) இதுவுமது. புளிமா நாலகு நிகழும் அடி. தேமாச்சீர் முதற் சீராதலுமாம் மாங்காய்ச்சீர் சிறுபான்மையே ஆம் (10-3-4).

154) இதுவுமது. காய்ச்சீர் மிகச் சிறுபான்மையே ஆம். (11-1-2, 11-3-4)

155) — 160) இவையுமது.

161) இதுவுமது. தேமா அல்லது புளிமா, கூவிளம், தேமா, கூவிளம் அல்லது புளிமா என நிகழும் அடி.

162) இதுவுமது. இறுதிச்சீர் கூவிளம் அல்லது தேமாங்காய் அல்லது தேமா என நிகழும்.

163, 164) இவையுமது.

165) இதுவுமது.

'முன்னிய கலைப்பொருளும் மூவுலகில் வாழ்வும்' 1-1

'பரப்புறு புகழ்ப்பெருமை யாளன்வரை தன்னால்' 8-1

இரண்டா மூன்றுஞ் சீர்கள் பெரும்பான்மையும் விளங்காய்ச்சீர்; மூன்றுஞ் சீர் சிறுபான்மை மாங்கனியுமாம். காய்ச்சீர் விளமாக நிற்றலுமாம். நான்காஞ் சீர் தேமா. முதற்சீர் பெரும்பான்மையும் விளச்சீர்; சிறுபான்மை காய்ச்சீராம் (7-1,2). ஓரடிக்கண் இரண்டு காய்ச்சீர் வரப்பெறும் யாப்பு இது.

*166)* இதுவுமது.

'மறம்பய மலிந்தவர் மதிற்பரிசு றுத்தனை' 1-1

'கருங்கழி பொருந்திரை கரைக்குலவு முத்தம்' 11-1

ஈற்றுச்சீர் பெரும்பான்மையும் மாச்சீர்; மிகச்சிறுபான்மையே விளச்சீர். மூன்றாஞ்சீர் பெரும்பான்மையும் காய்ச்சீர். பிறசீரெல்லாம் பெரும்பான்மையும் கருவிளம். காய்ச்சீர் ஒன்றே அடிதோறும் வரப்பெறும் யாப்பு இது.

*167)* இதுவுமது.

'சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்து' 1-1

'வேதமொடு வேதியர்கள் வேள்விமுத லாக' 3-1

'மடம்படு மலைக்கிறைவன் மங்கையொரு பங்கன்' 4-1

'ஒருத்தியுமை யோடுமொரு பாகம தாய' 5-1

ஈற்றுச்சீர் மாச்சீர்; பிறசீர்கள் காய்ச்சீர் அல்லது விளச்சீர் விரவி வரப்பெறும். மூன்று காய்ச்சீர் நிகழ்தலும் கொள்க. விளச்சீர் எச்சீராக வரப்பெறினுமாம். மேலைக் குறிப்புக்களைக் காண்க.

*168) — 170)* இவையுமது.

*171)* இதுவுமது.

'பரவக் கெடும்வல் வினைபா ரிடஞ்சூழ' 1-1

'நல்லார் பயில்கா ழியுள்ஞான சம்பந்தன்' 11-1

முதற்சீர் மாச்சீர், நான்காஞ்சீர் பெரும்பான்மையும் காய்ச்சீர்; மிகச் சிறுபான்மையே விளச்சீர். இடைச்சீர்கள் பெரும்பான்மையும் மாச்சீர்; மிக அருகியே காய்ச்சீர் நிகழ்தல் (11-1-3) காண்க.

*172, 173)* இவையுமது. நாலாஞ்சீர் தண்பூவாக நிகழ்தலுமமையும்.

*174)* இதுவுமது.

'நித்தலு நியமஞ் செய்துநீர் மலர்தூவி' 1-1

'இருக்கு நீள்வரை பற்றியடர்த் தன்றெடுத்த' 8-1

நாலாஞ் சீர் காய்ச்சீர்; முதலிரு சீர்கள் விளச்சீரும் மாஞ்சீரும் விரவி வரப் பெறும். மூன்றாஞ்சீர் அவற்றோடு காய்ச்சீரும் வரப்பெறும்.

*175)* எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்:

'ஆரூர் தில்லையம் பலம்வல்லம் நல்லம்
வடகச் சியுமச் சிறுபாக்கம் நல்ல' 1-1

'அம்மானை அருந்தவ மாகி நின்ற
அமரர் பெருமான் பதியான உன்னி' 11-1

நாலாம் எட்டாஞ்சீர்கள் ஒருதலையாக மாச்சீர். பிற சீர்கள் ஏற்ற பெற்றி மாச்சீரும் விளச்சீரும் காய்ச்சீரும் விரவி வரப்பெறும்.

*176)* தரவுகொச்சகம்:

'எம்பிரா னெனக்கமுத மாவானுந் தன்னடைந்தார்' 1-1

'சிலையதுவே சிலையாகத் திரிபுரமூன் றெரிசெய்த' 7-1

காய்ச்சீராக வரும் நாற்சீரடி. முதற்சீர் விளமாயினுமாம்.

*177) — 179)* இவையுமது. முதற்சீர் மிக அருகி மாச்சீராக வருதலும் *(178-11)* கொள்க.

*180)* இதுவுமது. மாச்சீர், விளச்சீராக இருசீர் நிகழ்தலுமாம். பதிக முழுதும் வெண்டளை பிறழாத யாப்பு இது.

*181, 182)* இவையுமது. மாச்சீர் இடைச்சீராக நிகழ்கிறது. ஆண்டு வெண்டளை பிழையாமல் வருதல் காண்க.

*183)* இதுவுமது.

'மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலே' *1-1*

'உரிஞ்சாய வாழ்க்கை அமணுடையைப் போர்க்கும்' *10-1*

'மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலே' *5-1*

காய்ச்சீரோடு மாச்சீர் விளச்சீர்களும் இடைமிடைய வெண்டளை பிறழாது வந்த யாப்பு. ஓரடிக்கண் பெரும்பான்மையும் இரண்டு காய்ச்சீர்.

*184)* இதுவுமது. வெண்சீர் வெண்டளையும் கலித்தளையுமே பயின்ற காய்ச்சீரடி.

*185)* ஆசிரிய இணைக்குறட்டுறை:

'பண்ணி னேர்மொழி மங்கை மார்பலர்
பாடி யாடிய ஓசை நாடொறும்' *1-1*

'கண்ணி னேரய லேபொலி யுங்கடற் காழி' *1-2*

முதலடியு மூன்றுமடியும் எண்சீர்; ஏனை யிரண்டடியும் ஐஞ்சீர்.

*186) — 189)* இவையுமது.

*190)* தரவுகொச்சகம்:

'உருவார்ந்த மெல்லியலோர் பாகமுடையீ ரடைவோர்க்கு' *1-1*

'ஒப்பறிய பூம்புகலி ஓங்குகோயில் மேயானே' *11-1*

மூன்றுஞ்சீர் பெரும்பான்மையும் கனிச்சீர் அல்லது தண்பூ என்னும் நாலசைச் சீர்; பிறவெல்லாம் காய்ச்சீர். பாசுரந்தோறும் *(1-10)* ஈற்றடி இரண்டாஞ்சீர் விளச் சீர்.

*191)* இதுவுமது. மூன்றுஞ் சீர் விளங்காய் அல்லது தண்பூச் சீர்.

*192)* இதுவுமது.

*193)* இதுவுமது. மூன்றுஞ் சீர் சிறுபான்மை நறும்பூ என வருதல் *(1-1)* காண்க.

*194)* இதுவுமது. முதற்சீர் சிறுபான்மை கூவிளம் அல்லது புளிமாவாக *(7,11)* நிகழ்கிறது.

*195)* கலித்துறை:

'நலங்கொள் முத்து மணியு மணியுந் திரளோதம்' *1-1*

'ஊழி யாய பாரி லோங்கு முயர்செல்வ' *11-1*

முதற்சீர் நான்கும் மாச்சீர், ஐந்தாஞ்சீர் பெரும்பான்மையும் புளிமாங்காய்; சிறுபான்மையே தேமாங்காய்; மிக அருகியே கூவிளம் வருதல் (9-4) காண்க. [இதனைக் கவிநிலைத்துறை என்றலும் ஒன்று. ஏற்புழியெல்லாம் இக்குறிப்பைக் கடைப்பிடிக்க.]

*196)* இதுவுமது. இறுதிச்சீர் மிக அருகியே கருவிளம் நிகழ்தல் (3-2) காண்க.

*197)* இதுவுமது. இறுதிச்சீர் முற்றும் மாங்காயாகவே வருதல் காண்க.

*198) — 200)* இவையுமது. இறுதிச்சீர் மிகச் சிறுபான்மையே கருவிளம் நிகழ்கிறது. (3-3); (1-1, 3-4); (2-1, 3-1).

*201)* அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்:
'கறையணி வேலிலர் போலும் கபாலந் தரித்திலர் போலும்' 1-1
'கூரம் பதுவிலர் போலும் கொக்கி னிறகிலர் போலும்' 2-1
விளச்சீர் அல்லது மாச்சீர், விளச்சீர், தேமா, மாச்சீர், விளச்சீர், தேமா- என வரும் அறுசீரடி.

*202)* இதுவுமது.
'மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு' 1-1
'வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு' 2-1
'காண இனியது நீறு கவினைத் தருவது நீறு' 4-1
'அருத்தம தாவது நீறு அந்தம தாவது நீறு' 6-1
விளச்சீர் அல்லது தேமா அல்லது தேமாங்காய், விளச்சீர், தேமா, கூவிளம் அல்லது புளிமா, விளச்சீர், தேமா- என வரும் அறுசீரடி. குற்றுகரம் முற்றி நின்றது.

*203)* இதுவுமது.
'மண்ணுமோர் பாக முடையார் மாலுமோர் பாக முடையார்' 1-1
'துன்னுக டற்பவ ளஞ்சேர் தூயன நீண்டதிண் டோள்கள்' 2-1
'மறையுடை யாரொலி பாடல் மாமலர்ச் சேவடி சேர்வார்' 7-1
'கருமை யுடைநெடு மாலுங் கடிமல ரண்ணலுங் காணு' 10-3
விளச்சீர் அல்லது மாச்சீர், விளச்சீர் அல்லது மாச்சீர், மாச்சீர், விளச்சீர், தேமா அல்லது கூவிளம், மாச்சீர்- என வரும் அறுசீரடி.

*204)* இதுவுமது. முற்கூறியவை கொள்க.

*205)* இதுவுமது. முதற்சீர்கள் மாங்காய்ச் சீராதலும், இரண்டாஞ் சீரும் காய்ச்சீராதலும் (11-3) மிகச் சிறுபான்மையே நிகழ்வன.

*206)* இதுவுமது. இறுதிச் சீரிரண்டும் ஒருதலையாக மாச்சீர்; பிற சீர்கள் காய்ச்சீரும் விளச்சீரும் மாச்சீருமென ஏற்ற பெற்றி வருவன.

*207)* இதுவுமது.
'திருந்த மதிசூடித் தெண்ணீர் சடைக்கரந்து தேவி பாகம்' 1-1
'நாள்பலவும் சேர்மதியம் சூடிப் பொடியணிந்த நம்பான் நம்மை' 2-1
'மூடிய சீவரத்தர் முன்கூறுண் டேறுதலும் பின்கூ றுண்டு' 10-1

'பொன்றெத்த கொன்றையும் பிள்ளை மதியும் புனலுஞ் சூடி' 7-1

இறுதிச் சீரிரண்டும் மாச்சீர், பிறசீர்கள் நான்கும் பெரும்பான்மையும் காயச் சீர்; சிறுபான்மை மாச்சீரும் *(1-1-1; 3-1-3,4; 5-1-2; 7-1-3,4....)* விளச்சீரும் *(10-1-1; 7-1-2; 11-1-3,4)* ஆம்.

*208)* இதுவுமது. பிற வுரைத்தனவும் கொள்க.

*209, 210)* இவையுமது. இறுதிச் சீரிரண்டும் மாச்சீர்; பிற நான்கு சீரும் பெரும் பான்மையும் காய்ச்சீர்; சிறுபான்மையே விளச்சீர் என்க. *(2-1-3; 3-1-4....) (1-1-4; 1-2-4.....)*

*211)* *கலித்துறை:*

'விண்ணி யங்கு மதிக்கண்ணி யான்விரி யுஞ்சடை' 1-1
'பல்ல யங்கு தலையேந்தி ஞன்படு கானிடை' 4-1
'சுழியி லங்கும் புனற்கங்கை யாள்சடை யாகவே' 6-1

தேமா அல்லது புளிமா, தேமா, புளிமாங்காய், கூவிளம், கூவிளம் என வந்த கட்டளை யாப்பு. சில பாசுரத்துள் இரண்டாஞ்சீர் விளச்சீராதலும், மூன்றாஞ் சீர் காய்ச்சீராகாது மாச்சீராதலும் உரிய; அதுபோது கட்டளை நியமம் தப்பும் *(9-1, 9-4, 10-2, 11-3)*

*212)* கலிவிருத்தம்:

'வாடியவெண் தலைமாலை சூடி வயங்கிருள்' 1-1
'உடுத்ததுவும் புலித்தோல் பலிதிரிந் துண்பதும்' 3-1
'காய்ந்ததுவும் அன்றுகாமனை நெற்றிக் கண்ணிஞல்' 4-1

காய்ச்சீர் இரண்டு, மாச்சீர் அல்லது விளச்சீர் இரண்டு; காய்ச்சீர் ஒன்று, மாச்சீர் ஒன்று, விளச்சீர் இரண்டு; காய்ச்சீர் ஒன்று, கனிச்சீர் ஒன்று, மாச்சீர் ஒன்று, விளச்சீர் ஒன்று — எனப் பலவாறு நிகழும் நாற்சீரடி.

*213)* *கலித்துறை:*

'பீடி ஞற்பெரி யோர்களும் பேதைமை கெடத்தீதிலா' 1-1
'விரையி ஞர்கொன்றை சூடியும் வேகநா கமும்வீக்கிய' 6-1
'இலையி ஞர்சூல மேறுகந் தேறியே யிமையோர்தொழ' 2-1

மாச்சீர், கூவிளம் அல்லது தேமாங்காய், கூவிளம், கூவிளம், புளிமாங்கனி — என வந்த ஐஞ்சீரடி.

*214)* இதுவுமது.

'ஒளிரி ளம்பிறை சென்னிமே லுடையர்கோ வணவாடையர்' 1-1
'அக்க ரவ்வணி கலனென அதனொடார்த்த தொராமைபூண்டு' 2-1
'உக்க வர்சுடு நீறணிந் தொளிமல்கு புனற்காவிரி' 2-2
'வாளி சேரடங் கார்மதி ற்றலைய நா றியவம்பின்வேய்த்' 3-1

மாச்சீர், விளச்சீர், விளச்சீர், காய்ச்சீர், புளிமாங்கனி (சிறுபான்மை காய்ச் சீரும் தண்பூவும் ஆம்) என வரும் ஐஞ்சீரடி. மூன்று நான்காஞ்சீர்கள் காய்ச்சீர் விளச்சீரென முறை மாறினுமாம் *(10)*.

*215)* *அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்:*

'பவனமாய்ச் சோடையாய் நாவெழாப் பஞ்சுதோய்ச் சட்ட வுண்டு' 1-1

'தந்தையார் போயினூர் தாயரும் போயினூர் தாமும் போவார்' 2-1

இறுதி இருசீரும் ஒருதலையா மாச்சீர். பிறசீரெல்லாம் பெரும்பான்மையும் விளச்சீர், சிறுபான்மை காய்ச்சீர்.

216) இதுவுமது. மாச்சீரால் நிகழும் அறுசீரடி.
'வரிய மறையார் பிறையார் மலையோர் சிலையா வணக்கி' 1-1
'மங்கை மணந்த மார்பர் மழுவாள் வலனொன் றேந்தி' 2-1

217) தரவுகொச்சகம்:
'பூதத்தின் படையினீர் பூங்கொன்றைத் தாரினீர்' 1-1
'நிலையார்ந்த வுண்டியினர் நெடுங்குண்டர் சாக்கியர்கள்' 10-1
பெரும்பான்மையும் நாற்சீரும் காய்ச்சீர்; சிறுபான்மை இரண்டாம் நான் காஞ்சீர்கள் விளச்சீராதலுமுரிய (1-1-2; 4-2-4)

218) கலிநிலைத்துறை:
'பண்ணி லாவிய மொழியுமை பங்கனெம் பெருமான்' 1-1
'மறைக ளான்மிக வழிபடு மாணியைக் கொல்வான்' 3-1
தேமா அல்லது புளிமா, கூவிளம், விளச்சீர், விளச்சீர், மாச்சீர் - என வந்த ஐஞ்சீரடி.

219) எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்:
'நீலநன் மாமிடற்ற னிறைவன் சினத்த நெடுமாவு ரித்த நிகரில்' 1-1
'விடையுடை யப்பனொப்பி னடமாட வல்ல விகிர்தத்து ருக்கொள் விமலன்' 2-1
இரண்டாஞ்சீர் கூவிளங்காய், ஐந்தாஞ்சீர் புளிமாங்காய், ஏனை ஐந்து சீரும் விளச்சீரும் மாச்சீருமாம். மாச்சீர் சிறுபான்மை மாங்காய்ச் சீராதல் (2-1-3; 9-1-3; 10-1-3) கொள்க. ஐந்தாஞ்சீர் மாச்சீராதல் அருகிக் காணப்படும் (9-3; 10-2,4)

220) இதுவுமது.
'காரைகள் கூகைமுல்லை களவாகை யீகை படர்தொடரி கள்ளி கவினி' 1-1
'கடல்வரை யோதமல்கு கழிகானல் பானல் கமழ்காழி என்று கருத' 11-1
இரண்டாஞ்சீர் விளங்காய், மூன்றும் ஐந்தும் காய்ச்சீர்கள், முதற்சீர் விளச் சீர், ஏனைமூன்றும் மாச்சீர் — எனவரும் எழுசீரடி.

221) இதுவுமது.
'வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி' 1-1
'உருவளர் பவளமேனி ஒளிநீற ணிந்து உமையோடும் வெள்ளை விடைமேல்' 3-1
'ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியார வர்க்கு மிகவே' 1-4
இரண்டாஞ் சீர் விளங்காய், மூன்றுஞ் சீர் மாங்காய்ச்சீர், ஐந்தாஞ்சீர் மாங் காய்ச்சீர், முதற்சீர் விளச்சீர், ஏனை மூன்றும் மாச்சீரென வரும் எழுசீரடி. குற்றுகரம் முற்றி நின்றது.

222) இதுவுமது.
'உரையினில் வந்தபாவ முணர்நோய்க ளும்ம செயறீங்கு குற்ற முலகில்' 1-1
மூன்றுஞ்சீரும் ஐந்தாஞ்சீரும் பெரும்பான்மையும் மாங்காய், மிகச்சிறுபான் மையே புளிமாவாம் (7-1-3, 7-1-5, 8-2-5); பிறவெல்லாம் மேலுரைத்தவாறே கொள்க.

223) இதுவுமது. மூன்றாஞ் சீரும் ஐந்தாஞ் சீரும் சிறுபான்மை புளிமா ஆதல் (8-1-3,5) காண்க. பிறவெல்லாம் மேலுரைத்தன (221) கொள்க.

224) இதுவுமது.

'துளிமண்டி யுண்டு நிறம்வந்த கண்ட னடமன்னு துன்னு சுடரோன்' 1-1
'வாராத நாடன் வருவார்தம் வில்வி னுருமெல்கி நாளு முருகில்' 3-1

1,3,5 ஆம் சீர்கள் காய்ச்சீர்; 2,4,6ஆம் சீர்கள் தேமா; ஈற்றுச்சீர் புளிமா-என வரும் எழுசீரடி. 11-3-7இல் மிக அருகியே கூவிளம் வந்தது.

225) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்:

'அறையும் பூம்புன லோடு மாடர வச்சடை தன்மேல்' 1-1
'பாலை யன்னவெண் ணீறு பூசுவர் பலசடை தாழ' 3-1
'சுண்ணத்தர் தோலொடு நூல்சேர் மார்பினர் துன்னிய பூத' 2-1

மாச்சீர் அல்லது மாங்காய்ச்சீர், கூவிளம், தேமா, விளச்சீர், விளச்சீர், மாச்சீர்- எனவரும் அறுசீரடி.

226) இதுவுமது.

'எந்தை யீச னெம்பெருமா னேறமர் கடவு ளென்றேத்தி' 1-1
'பிணிக லந்த புன்சடைமேற் பிறைய ணிசிவ னெனப்பேணி' 3-1
'கரையி னூர்பொ ழில்சூழ்ந்த காழியுள் ஞான சம்பந்தன்' 11-1

மாச்சீர், தேமா, காய்ச்சீர், விளச்சீர் அல்லது புளிமா, மாச்சீர், காய்ச்சீர்- என வரும் அறுசீரடி. மூன்றாஞ் சீருள் ஒரோவழி முதற்குறில் விட்டிசைத்துக் காய்ச் சீராதல் (10-1,2; 11-4) காண்க; அன்றிச் சிறுபான்மை புளிமாச்சீராக நின்றதென்ற லும் ஒன்று.

227) இதுவுமது.

'பொங்கு வெண்மணற் கானல் பொருகடற் றிரைதவழ் முத்தம்' 1-1
'அரவம் வீக்கிய அரையும் அதிர்கழ றழுவிய அடியும்' 5-1

மாச்சீர், விளச்சீர், மாச்சீர், விளச்சீர், விளச்சீர், மாச்சீர்- என வந்த அறுசீரடி. இரண்டாஞ்சீர் தேமா ஆதலும் (7-4-2; 8-4-2), மூன்றாஞ் சீர் கூவிளங்காய் ஆதலும் (7-4-3; 8-4-3), இறுதிச்சீர் காய்ச்சீராதலும் (7-4; 8-4) சிறுபான்மையே என்க.

228) இதுவுமது.

'பட்டம் பானிற மதியம் படர்சடைச் சுடர்விடு பாணி' 1-1
'முயல்வ ளாவிய திங்கள் வாண்முகத் தரிவையிற் றெரிவை' 3-1

முதற்சீரும் மூன்றாஞ் சீரும் இறுதிச்சீரும் மாச்சீர், பிறசீர்கள் விளச்சீரென நிகழும் அறுசீரடி. விளச்சீர் சிறுபான்மை காய்ச்சீராக நிகழ்தலும் (1-3-5; 3-2-5; 3-3-5; 4-1,2,3,4-2; 9-2-4; 11-3-4) கொள்க.

229) இதுவுமது. விளச்சீர் மாங்காயாகச் சிலவிடத்தே நிகழுமாறும் (4-1-2; 11-3-5) காண்க.

230) இதுவுமது. விளச்சீர் சிலவிடத்தே (5-2-5; 7-3-5; 10-2-4) மாங்காயாக நிற் றலும் கொள்க.

231) இதுவுமது. விளச்சீர் மாங்காயாக நிகழ்தலும் (7-3-2) கொள்க.

232) இதுவுமது. விளச்சீர் மாங்காயாக நிகழ்தலும் (1-3-5; 5-3-4; 8-3-2) கொள்க.

233) தரவுகொச்சகம்: அடிதோறும் 3 காய்ச்சீர், ஒரு விளச்சீர்; ஈற்றடிதோறும் காய்ச்சீர், விளச்சீர், காய்ச்சீர், கூவிளம் (காய்ச்சீர் தண்பூ வாதலுமாம்). காய்ச்சீர் கூவிளமாதலும் (3-4-1; 9-1-3; 10-1-1,3) கொள்க.

234) கலிவிருத்தம்:

'வரைத்தலைப் பசும்பொனோ டருங்கலங்கள் உந்திவந்' 1-1

'கற்றுமுற்றி னார்தொழு கழுமலத் தருந்தமிழ்' 11-1

அடிதோறும் மூன்றுஞ் சீர் பெரும்பான்மையும் விளங்காய்; சிறுபான்மை கருவிளம். ஈற்றுச்சீர் பெரும்பான்மையும் விளச்சீர் அன்றி மாங்காய்ச்சீர். பிறசீர் கள் பெரும்பான்மையும் கருவிளம்; சிறுபான்மை மாங்காய்ச்சீர்.

235) இதுவுமது. முதற்சீர் பெரும்பான்மையும் காய்ச்சீர்; ஈற்றுச்சீர் விளச்சீர்; இடைச்சீர்கள் விளச்சீர் அல்லது காய்ச்சீர்.

236) இதுவுமது. முதற்சீர் காய்ச்சீர் அல்லது கனிச்சீர் அல்லது தண்பூச்சீர், ஈற்றுச் சீர் பெரும்பாலும் விளச்சீர், சிறுபான்மை காய்ச்சீர். இடைச்சீர்கள் விளச்சீர் அல்லது காய்ச்சீர் அல்லது தண்பூச்சீர்.

237) இதுவுமது. முதற்சீர் பெரும்பான்மையும் காய்ச்சீர்; சிறுபான்மை விளச்சீர். ஈற்றுச்சீர் பெரும்பான்மையும் விளச்சீர்; சிறுபான்மை மாங்காய்ச்சீர். இடைச்சீர் கள் விளச்சீர் அல்லது காய்ச்சீர்.

238) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்:

'அன்ன மென்னடை யரிவையோ டினிதுறை யமரர்தம் பெருமானார்' 1-1

'பரசு பாணியைப் பத்தர்க ளத்தனை பையர வோடக்கு' 11-1

மாச்சீர், கூவிளம் அல்லது மாங்காய், விளச்சீர் அல்லது மாங்காய்ச்சீர், விளச்சீர், விளச்சீர் அல்லது சிறுபான்மை காய்ச்சீர், மாங்காய்ச்சீர்- எனவரும் அறுசீரடி.

239, 240) இவையுமது. மேலுரைத்தன கொள்க.

241) இதுவுமது. நாலாஞ்சீர் சிறுபான்மை காய்ச்சீராதலும் (10-2-4), இறுதிச்சீர் தண்பூச் சீராதலும் (10-3-6) சிறுபான்மையே என்க.

242) இதுவுமது.

'என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து' 1-1

'திருந்த லார்புரந் தீயெழச் செறுவன இறலின்க ணடியாரை' 3-1

மாச்சீர், கூவிளம், விளச்சீர், விளச்சீர், விளச்சீர் அல்லது மாங்காய், மாங் காய் - எனவரும் அறுசீரடி. விளச்சீர் மாங்காயாதல் (5-1-2; 7-4-4; 10-1-3; 11-4-3,4,5) கொள்க.

243) இதுவுமது.

'விருது குன்றமா மேருவி னாணர வாஅன லெரியம்பா' 1-1

'பாடல் வீணையர் பலபல சரிதைய ரெருதுகைத் தருநட்ட' 2-1

முதற்சீர் மாச்சீர்; இறுதிச்சீர் மாங்காய்; இடைச்சீர்கள் விளச்சீர். சிறுபான்மை நாலாஞ்சீர் காய்ச்சீராதலும் (11-4) கொள்க.

244) இதுவுமது. சிறுபான்மை நாலாஞ் சீர் காய்ச்சீராதலும் (10-4), ஐந்தாஞ் சீர் காய்ச்சீராதலும் (8-4) கொள்க.

245) இதுவுமது. சிறுபான்மை நாலாஞ் சீர் காய்ச்சீராதலும், ஐந்தாஞ் சீர் காய்ச் சீராதலும் கொள்க. (1-3-4,5)

246) இதுவுமது.

247) இதுவுமது.

'தளிரிள வளரென உமைபாடத் தாளம் மிடவோர் கழல்வீசி' 1-1

'திங்களொ டருவரை பொழிற்சோலைத் தேனலங் கானலந் திருவாய்மூர்' 11-1

விளச்சீர், விளச்சீர், காய்ச்சீர், மாச்சீர் அல்லது விளச்சீர், மாச்சீர் அல்லது விளச்சீர், காய்ச்சீர்- என வரும் அறுசீரடி. விளச்சீர் காய்ச்சீராதல் (2-2-1; 4-3-4; 6-1-2; 11-2-5) காண்க.

248) ஆசிரிய இணைக்குறட்டுறை: முதலடியு மூன்றுமடியும் அளவடி; ஏனையிரண்டுஞ் சிந்தடி.

249) கலிவிருத்தம்:

'பொடியிலங்குந் திருமேனி யாளர்புலி யதளினர்' 1-1

'கூர்விலங்குந் திரிசூல வேலர்குழைக் காதினர்' 3-1

விளங்காய், மாங்காய், மாங்கனி, விளச்சீர்- என நிகழும் நாற்சீரடி. இரண்டாஞ் சீர் மாச்சீர் அல்லது விளச்சீராதலும் (2-1; 9-3), நான்காஞ் சீர் காய்ச்சீராதலும் (2-1; 8-1) கொள்க.

250) இதுவுமது. முதற்சீர் காய்ச்சீர். இறுதிச்சீர் விளச்சீர். இரண்டாஞ்சீர் காய்ச் சீர், மூன்றாஞ்சீர் கனிச்சீர்; சிறுபான்மை அவை முறையே கனிச்சீரும் காய்ச் சீருமாம் (7-1). இறுதிச்சீர் சிறுபான்மை தண்பூவுமாம் (11-2). சிறுபான்மை இரண் டாஞ்சீர் மாச்சீராதலும் (3-2; 8-2), மூன்றாஞ்சீர் விளச்சீராதலும் தண்பூவாதலும் (6-3; 9-3) உரிய.

251) இதுவுமது.

'வெங்கள்விம்மு குழலிளைய ராடவ்வெறி விரவுநீர்' 1-1

'மடையினெய்தல் கருங்குவளை செய்யம்மலர்த் தாமரை' 3-1

விளங்காய் அல்லது தண்பூச்சீர், காய்ச்சீர், கனிச்சீர், விளச்சீரென வரும் நாற்சீரடி. இறுதிச்சீர் காய்ச்சீராதலும் (8-1; 10-3) கொள்க.

252) இதுவுமது. இரண்டாஞ் சீர் சிறுபான்மை கனிச்சீராதலும் (1-3,4; 2-3,4), மாச்சீராதலும் (7-1,2; 8-1,2) கொள்க. மூன்றாஞ் சீர் சிறுபான்மை காய்ச்சீராதலும் (1-4), விளச்சீராதலும் (1-3; 2-3) உரிய. நான்காஞ் சீர் புளிமா ஆதலும் சிறுபான்மை (6-1) என்க.

253) இதுவுமது.
'மண்டுகங்கை சடையிற் கரந்தும்மதி சூடிமான்' 1-1
'வண்டுகீதம் முரல்பொழில்சு லாய்நின்றமா காளமே' 1-4
'வேதவித்தாய் வெள்ளைநீறு பூசிவினை யாயின' 2-1
'குறைவதாய் குளிர்திங்கள் சூடிக்குனித் தான்வினை' 6-1
காய்ச்சீர், மாச்சீர் அல்லது காய்ச்சீர். கனிச்சீர் அல்லது காய்ச்சீர். கூவிளம் - என வரும் நாற்சீரடி.

254) இதுவுமது.
'பொடிகள்பூசிப் பலதொண்டர் கூடிப்புலர் காலையே' 1-1
'மந்தமாரும் பொழில்சூழ் திலதைம்மதி முத்தர்மேல்' 11-1
காய்ச்சீர் அல்லது தண்பூச்சீர், காய்ச்சீர் அல்லது புளிமா, கனிச்சீர் அல்லது கூவிளம், கூவிளம் அல்லது காய்ச்சீர் - என வரும் நாற்சீரடி.

255) இதுவுமது.
முதற்சீர் காய்ச்சீராதலேயன்றித் தண்பூச்சீராதலும் (2-1; 3-1), இரண்டாஞ்சீர் காய்ச்சீராதலேயன்றிச் சிறுபான்மை மாச்சீராதலும் (7-2; 8-2), மூன்றாஞ்சீர் கனிச்சீராதலேயன்றிச் சிறுபான்மை விளச்சீராதலும் (8-2,3; 10-1) காய்ச்சீராதலும் (11-2), நாலாஞ்சீர் காய்ச்சீராதலும் (11-3) எல்லாம் கொள்க.

256) இதுவுமது. காய்ச்சீர் அல்லது தண்பூச்சீர் (1-1), காய்ச்சீர் அல்லது மாச்சீர் (1-3, 2-1, 7-3....), கனிச்சீர் அல்லது காய்ச்சீர் (2-1) அல்லது தண்பூச்சீர் (2-3), விளச்சீர் அல்லது காய்ச்சீர் (3-3)- எனவரும் நாற்சீரடி. மூன்றாஞ்சீர் மாச்சீர் (3-1), விளச்சீர் (3-2; 4-3; 5-3; 6-2.....) ஆதலும் காண்க.

257) இதுவுமது.
'முன்னநின்ற முடக்கால் முயற்கருள் செய்துநீள்' 1-1
'மருளினல்லார் வழிபாடு செய்யுமழு வாளர்மேல்' 3-1
'போதினாலும் புகையாலு முய்த்தேயடி யார்கடம்' 4-1
காய்ச்சீர், காய்ச்சீர் அல்லது மாச்சீர், காய்ச்சீர் அல்லது கனிச்சீர், கூவிளம் அல்லது காய்ச்சீர் - எனவரும் நாற்சீரடி. சிறுபான்மை முதற்சீர் கூவிளமாதலும் (11-1,2), மூன்றாஞ் சீர் விளச்சீராதலும் (1-1; 6-1) கொள்க.

258) இதுவுமது.
'விடையதேறி வெறியக் கரவர்த்த விமலனார்' 1-1
'எய்தவொண்ணா இறைவ னுறைகின்ற புகலியை' 10-1
'தொலைவிலாத அரக்கன் னுரத்தைத்தொலை வித்தவன்' 7-1
காய்ச்சீர், மாச்சீர், காய்ச்சீர் அல்லது கனிச்சீர், விளச்சீர்- எனவரும் நாற்சீரடி. இரண்டாஞ் சீர் காய்ச்சீராதலும் (3-1; 5-2....), மூன்றாஞ் சீர் விளச்சீராதலும் (10-2), நான்காம்சீர் காய்ச்சீராதலும் (10-2,3) இரண்டாஞ் சீர் மிக அருகியே கனிச்சீராதலும் (10-2) கொள்க.

மூன்றும் திருமுறை

259) ஆசிரிய இணைக்குறட்டுறை:
'ஆடினாய் நறுநெய்யொடு பாறயிர் அந்தணர் பிரியாதசிற் றம்பலம்
நாடினாய் இடமாநறுங் கொன்றைந யந்தவனே' 1-1,2
முதலா மூன்றுமடிகள் அறுசீர்; ஏனையடிகள் நாற்சீர்.

260) இதுவுமது.

261, 262) நாலடிமேல் வைப்பு: முதல் நாலடி ஓரெதுகை வஞ்சிவிருத்தம். கடையிரண்டடியும் ஓரெதுகைக் கலிவிருத்தநடை.

263) ஈரடிமேல் வைப்பு: முன்னிரண்டடி ஓரெதுகை, பின்னிரண்டடி மற்றோரெதுகை. கலிவிருத்தநடை.

264) ஈரடிமேல் வைப்பு: முன்னிரண்டடி ஓரெதுகை; கலிவிருத்த நடை. பின்னிரண்டடி மற்றோரெதுகை. இறுதியடி குறைதலின் ஆசிரிய நேர்த்துறை.

265) கலித்துறை :
'கண்ணுத லானும்வெண் ணீற்றினா னுங்கழ லார்க்கவே' 1-1
'கரும்புநல் வார்சிலைக் காமன்வே வக்கடைக் கண்டானும்' 3-1
விளச்சீர், காய்ச்சீர் அல்லது கூவிளம், கூவிளம் அல்லது காய்ச்சீர், கூவிளம், கூவிளம் அல்லது காய்ச்சீர் என வரும் ஐஞ்சீரடி. ஈற்றடி நாலாஞ் சீர் மூன்று குறிலாய் முதற்குறில் விட்டிசைக்கக் கூவிளமாம்; இறுதிச்சீர் புளிமாவாகவும் வரப்பெறும். (2,3,5,6,7,9)

266) கலிநிலைத்துறை: கூவிளம் அல்லது கருவிளம், கூவிளம், கூவிளம், கூவிளம், கூவிளம்-எனப் பெரும்பான்மையும் நிகழும் ஐஞ்சீரடி. இறுதிச்சீர் சிறுபான்மை காய்ச்சீராதல் (3-1; 6-1; 9-1) கொள்க. நாலாஞ்சீர் மூன்று குறிலாய் முதலெழுத்து விட்டிசைப்பக் கூவிளமாதலும் (4-1; 5-2; 7-1,2; 11-3) கொள்க. காய்ச்சீர் நிகழும் யாப்புக் கலித்துறையாம். இவ்விதியைப் பின்னரெல்லாம் கடைப்பிடிக்க.

267) கலித்துறை: முதற்சீர் காய்ச்சீராதலும் (7-1,2), இரண்டாஞ்சீர் காய்ச்சீராதலும் (2-2,3; 7-2) மாச்சீராதலும் (8-4; 9-4), மூன்றாஞ்சீர் காய்ச்சீராதலும் (1-3; 2-1; 3-1...) மாச்சீர்விளச்சீராதலும் (8-1; 11-4), நான்காஞ்சீர் மாச்சீராதலும் (பாசுரந்தோறும் இரண்டாமடி), இறுதிச்சீர் காய்ச்சீராதலும் (2-3; 3-1; 5-3; 7-1; 8-3) கருவிளமாதலும் (1-4) கொள்க.

268) கலிநிலைத்துறை: பெரும்பான்மையும் விளச்சீர் ஐந்தான் வருமடி. ஒரு சீர்க்கண் மூன்று குறில்கள் வந்தவழி (மூன்றாமெழுத்து நெடிலாதலுமாம்) முதற்குறில் விட்டிசைக்கக் கூவிளம் என நிற்றல் (1-1-5; 1-2-4.......) கொள்க. விளச்சீர் சிறுபான்மை காய்ச்சீராக நிற்றலும் (2-3-3; 3-3-3.........) கொள்க.

269) இதுவுமது. விளச்சீர் சிறுபான்மை காய்ச்சீராக நிற்றலும், முதற்குறில் விட்டிசைக்கச் சீர் கூவிளமாக நிற்றலும் கொள்க.

*270)* இதுவுமது. மேலுரைத்தன *(269)* கொள்க. மூன்றுமடி இறுதிச்சீர் பதிகமுழு தும் காய்ச்சீராக வந்தது. பதினோராம் பாசுரத்தில் முதலடிக்கண் அது காண்க.

*271)* கலிவிருத்தம்:
'மின்னன எயிறுடை விரவ லோர்கடம்' *1-1*
'புரமெரி செய்தவர் பூந்த ராய்நகர்' *11-1*
விளச்சீர், விளச்சீர், மாச்சீர், கூவிளம்- எனவந்த நாற்சீரடி. இரண்டாஞ்சீர் காய்ச்சீராகச் சிறுபான்மை வந்தது *(11-3)*

*272)* இதுவுமது. முதற்சீர் காய்ச்சீராக வருதலும் *(4-1,2)*, இரண்டாஞ் சீர் காய்ச் சீராக வருதலும் *(8-3; 9-3)*, மூன்றுஞ்சீர் அருகிக் கூவிளமாக வருதலும் *(11-2)* கொள்க.

*273)* இதுவுமது. முதற்சீர் காய்ச்சீராதலும் *(5-1,2,3,4)*, இரண்டாஞ் சீர் காய்ச் சீராதலும் *(1-3; 2-3,4; 5-3,4; 8-3,4)* நான்காஞ் சீர் காய்ச்சீராதலும் *(11-2)* கொள்க.

*274)* இதுவுமது. இறுதிச்சீர் காய்ச்சீராதலன்றி *(11-3)* சிறுபான்மை மாச்சீராதலும் *(8-1,2; 11-1)* கொள்க.

*275) — 281)* இவையுமது: விளச்சீர் சிறுபான்மை காய்ச்சீராதல் கொள்க.

*282)* இதுவுமது. விளச்சீர் நான்கான் வந்த அடி. சிறுபான்மை இரண்டாஞ்சீர் காய்ச்சீராதலும் *(2-1; 6-3....)* கொள்க.

*283)* இதுவுமது. விளச்சீர் சிறுபான்மை காய்ச்சீராதலும் கொள்க. பாடல்தோறும் *(1-10)* நான்காமடி மூன்றுஞ்சீர் காய்ச்சீராதல் காண்க.

*284)* இதுவுமது.

*285) — 294)* இவையுமது. காய்ச்சீர் விளச்சீரோடு மிக்கு வரும் பாசுரங்களைத் தரவுகொச்சகம் எனினும் இழுக்காது.

*295)* இதுவுமது. கனிச்சீர் மூன்று, கூவிளம் ஒன்று-எனவரும் நாற்சீரடி. மூன்றுஞ் சீர் மிக அருகித் தண்பூச்சீராதலும் *(9-2)*, இறுதிச்சீர் மாங்காய்ச் சீராதலும் *(9-2)* கொள்க.

*296)* இதுவுமது. கனிச்சீர் தண்பூச்சீராதலும் *(1-4-1, 4-1-1, 4-3-3....)* காய்ச்சீரா தலும் *(4-4-3, 5-4-3....)*, இறுதிச்சீர் காய்ச்சீராதலும் *(1-2; 4-2; 5-2.....)* கொள்க.

*297)* இதுவுமது. கனிச்சீர் தண்பூச்சீராதலும் காய்ச்சீராதலும், இறுதிச்சீர் காய்ச் சீராதலும் *(1-3; 11-3)* கருவிளமாதலும் *(4-3; 9-3)* கொள்க.

*298, 299)* வஞ்சித்தாழிசை: ஒரு பொருள்மேல் பதினொன்று அடுக்கி வந்தது.

300) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்:
'நிறைவெண் டிங்கள் வாண்முக மாதர் பாட நீள்சடை' 1-1
'கல்வி லோத மல்குதண் கானல் சூழ்ந்த காழியான்' 11-1
மாச்சீர், தேமா, விளச்சீர், மாச்சீர், மாச்சீர், கூவிளம் அல்லது காய்ச்சீர்-என வந்த அறுசீரடி.

301) கலிவிருத்தம்:
'சந்த மார்முலை யாடன கூறனர்' 1-1
'நலியுங் குற்றமு நம்முட னேய்வினை' 5-1
ஒருமாச்சீர், மூன்று கூவிளம் - என வந்த நாற்சீரடி. கூவிளம் சிறுபான்மை காய்ச்சீராதலும் (2-4-2; 5-2-4; 6-2-4) கொள்க.

302) இதுவுமது. கூவிளம் சிறுபான்மை காய்ச்சீராதலும் (5-4-3; 11-3-2; 11-4-3), தேமா ஆதலும் (11-1-2) கொள்க.

303) இதுவுமது.

304) இதுவுமது. முதற்சீர் மாச்சீர், இறுதிச்சீர் கூவிளம் (கூவிளம் சிறுபான்மை மாங்காய்ச் சீராதல் அமையும்), இரண்டாஞ் சீர் விளங்காய் (சிறுபான்மை கூவிள மாதலும் மாங்கனியாதலும் கொள்க), மூன்றுஞ் சீர் கூவிளம்.

305) இதுவுமது. மாச்சீர் ஒன்று, கூவிள மூன்றென வரும் யாப்பு. கூவிளம் காய்ச் சீராதலும் கொள்க.

306) இதுவுமது.

307) இதுவுமது. 1-10 பாசுரங்களின் ஈற்றடி தேமா, தேமா, புளிமா, கூவிளம் என நிகழ்கிறது. கூவிளச்சீர் தேமாவாக, காய்ச்சீராக, கருவிளமாக நிற்றலும் கொள்க.

308) இதுவுமது. கூவிளச்சீர் மேற்கூறியவாறு நிற்றலும் கொள்க.

309) இதுவுமது.

310) இதுவுமது.
'வீடலால வாயிலாஅய் விழுமியார்க ணின்கழல்' 1-1
'முதிருநீர்ச் சடைமுடி முதல்வநீ முழங்கழல்' 4-1
காய்ச்சீர் விளச்சீர் விரவிய நாற்சீரடி.

311) இதுவுமது. காய்ச்சீர் சிறுபான்மை முதற்சீர்க்கண் தண்பூவாதலும் கொள்க.

312) முதல் மூன்று பாசுரங்களும் ஒரு மாச்சீர், மூன்று விளச்சீர் - என நிகழும் நாற்சீரடிக் கலிவிருத்தம். பத்தாம் பாசுரம் நீங்க ஏனையெட்டும் மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர் இவற்றாலாகிய ஐஞ்சீரடிக் கலித்துறை. பத்தாம் பாசுரம் முதலடி நாற்சீரடி, ஏனைய மூன்றும் ஐஞ்சீரடியாக வந்த ஆசிரிய நேர்த்துறை.

***313)*** கலிவிருத்தம்:
'விரையார் கொன்றையினுய் விடமுண்ட மிடற்றினனே' 11-1
'கன்ற ரும்கமுகின் வயல்சூழ்தரு காழிதனில் 10-1
முதற்சீர் மாச்சீர், ஏனைய மூன்றும் காய்ச்சீர். மூன்ருஞ்சீர் அருகிக் கனிச்சீராக வரினும் (1-2-3; 2-2-3...) கொள்க.

***314)*** இதுவுமது. விளச்சீர், விளங்காய், கனிச்சீர், விளங்காய்ச்சீரென வரும் நாற்சீரடி. விளங்காய் தண்பூச்சீராதலும், கனிச்சீர் சிறுபான்மை தண்பூச்சீராதலும் (11-3) காய்ச்சீராதலும் (11-2) கொள்க.

***315) — 320)*** தரவுகொச்சகம்; விளச்சீர்கனிச்சீர்கள் அருகி விரவின.

***321) — 324)*** இவையுமது. காய்ச்சீர் நான்கான் வந்தவாறு.

***325)*** கலித்துறை: விளங்காய், விளங்காய் அல்லது மாங்கனி, விளங்காய், விளங்காய், விளங்கனி- எனவரும் ஐஞ்சீரடி. இறுதிச்சீர் தண்பூவுமாம்.

***326) — 328)*** இவையுமது. இறுதிச்சீர் தண்பூ நறும்பூவாதலும் அமையும்.

***329) — 338)*** இவையுமது. இறுதிச்சீர் தண்பூ நறும்பூவாதலும் கொள்க.

***339)*** இதுவுமது. காய்ச்சீர் நான்கு, தேமா ஒன்று - என வந்த ஐஞ்சீரடி. நான்காஞ் சீர் கனிச்சீராதலும் (6-2; 8-1) ஆம்.

***340, 341)*** இவையுமது.

***342)*** கலிநிலைத்துறை:
'பெண்ணிய வுருவினர் பெருகிய புனல்விர வியபிறைக்' 1-1
'வரிதரு புலியத ளுடையினர் மழுவெறி படையினர்' 7-1
கூவிளம் அல்லது கருவிளத்தைத் தொடர்ந்து கருவிளம் நான்கு நிகழும் ஐஞ்சீரடி. கருவிளம் சிறுபான்மை புளிமாங்காயாதல் (10-2-3) கொள்க.

***343)*** இதுவுமது.

***344)*** இதுவுமது. கருவிளச்சீர் காய்ச்சீராதலும் (1-2-4; 5-3-2; 8-2-5), கூவிளமாதலும் (5-2-5; 11-2-5; 11-3-4,5) கொள்க. பாசுரந்தோறும் ஈற்றுச்சீர் கூவிளமாதல் காண்க.

***345.)*** இதுவுமது. பாசுரந்தோறும் (1-10) மூன்ருமடி நாலாஞ்சீர் தேமாங்காயாதலும், அவ்வடி யிறுதிச்சீர் கூவிளமாதலும், நாலாமடி இறுதிச்சீரும் கூவிளமாதலும், பிறவும் (11-2,3,4-5) கண்டுகொள்க.

***346)*** இதுவுமது. கூவிளச்சீர் (2-3-5;, 8-2-4; 9-1-4,5; 9-2-4,5; 11-3-5) வருதலும், காய்ச்சீர் வருதலும் (4-2-3; 5-4-3; 6-1-3; 6-3-3....) கொள்க.

347 கலித்துறை:

'திருந்துமா களிற்றின மருப்பொடு திரள்மணிச் சந்தமுந்தி' 1-1

'காய்ந்துதங் காலினுற் காலனைச் செற்றவர் கடிகொள்கொச்சை' 11-1

முதற்சீர் நான்கும் விளச்சீர் (கருவிளமே மிகுதி). இறுதிச்சீர் காய்ச்சீர்; சிறு பான்மை தண்பூச்சீர்.

348) இதுவுமது. ஈற்றுச்சீரே யன்றிப் பிறசீரும் சிறுபான்மை காய்ச்சீராதல் கொள்க (2-2-3,4; 3-1-4). பாசுரந்தோறும் (1-10) நாலாமடி நாலாஞ் சீர் காய்ச் சீராதல் கொள்க. ஈற்றுச்சீர் தண்பூவாதலும் (11-3) காண்க.

349) — 351) இவையுமது. ஈற்றுச்சீரேயன்றிப் பிறசீரும் சிறுபான்மை காய்ச் சீராதலும், ஈற்றுச்சீர் தண்பூவாதலும் கொள்க.

352) ஆசிரிய இணைக்குறட்டுறை: முதலடியு மூன்றுமடியும் அளவடி; ஏனையிரண் டும் சிந்தடி.

353) — 357) இவையுமது.

358) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்:

'கரும்பமர் வில்லியைக் காய்ந்து காதற் காரிகை மாட்டருளி' 1-1

'கொங்கியல் பூங்குழற் கொவ்வைச் செவ்வாய்க் கோமள மாதுமையாள்' 2-1

விளச்சீர், விளச்சீர் அல்லது மாச்சீர், மாச்சீர், மாச்சீர் அல்லது விளச்சீர், மாச்சீர் அல்லது விளச்சீர், காய்ச்சீர்-எனவரும் அறுசீரடி. முதற்சீர் சிறுபான்மை காய்ச்சீராதல் (3-3, 4-2) காண்க. இறுதிச்சீர் சிறுபான்மை மாச்சீராதலும் (5-2) கொள்க.

359) கலித்துறை: விளச்சீர், கூவிளம், விளங்காய், மாச்சீர் அல்லது விளச்சீர், காய்ச்சீர்- எனவரும் ஐஞ்சீரடி. இரண்டாஞ்சீர் தேமா வாதலும் (3-3), காய்ச்சீராத லும் (4-4; 11-2) கொள்க.

360) இதுவுமது.

'காம்பினை வென்றமென் றோளிபாகங் கலந்தா னலந்தாங்கு' 1-1

'தண்மதி தாழ்பொழில் சூழ்புகலித் தமிழ்ஞான சம்பந்தன்' 11-1

'கள்ளி யிடுதலை யேந்துகையர் கரிகாடர் கண்ணுதலார்' 7-1

மூன்றுஞ்சீர் விளங்காய், ஐந்தாஞ்சீர் காய்ச்சீர், பிறசீர்கள் மாச்சீர் அல்லது விளச்சீர்கள் எனவரும் ஐஞ்சீரடி. இரண்டாம் நான்காஞ் சீர்கள் சிறுபான்மை காய்ச் சீருமாம் (2-2-2,4...). விளச்சீர் காயாதலும் (3-4-4, 4-4-4, 7-4-4, 10-4-2) இறுதிக் காய்ச்சீர் விளமாதலும் (3-4; 4-4; 7-4; 10-4) கொள்க.

361) இதுவுமது.

362) இதுவுமது. முதற்சீர் காய்ச்சீராதலும் (1-1,2,3,4) இரண்டாஞ் சீர் காய்ச் சீராதலும் (1-2) கொள்க.

363) — 365) இவையுமது.

*366)* நாலடிமேல் வைப்பு: கலிவிருத்தநடை. மாச்சீர் விளச்சீர்களால் வந்த நாற்சீரடி சிறுபான்மையே காய்ச்சீர் விரவுதல் கொள்க.

*367)* வஞ்சிவிருத்தம்: விளச்சீர் அல்லது சிறுபான்மை காய்ச்சீர், விளச்சீர், விளங் காய் அல்லது தண்பூச்சீரென வரும் முச்சீரடி.

*368)* குறட்டாழிசை:

'வரம தேகொளா வுரம தேசெயும் புரமெ ரித்தவன் பிரம நற்புரத்
தரன ஞமமே பரவு வார்கள்சீர் விரவு நீள்புவியே' *(1)*

முதலடி எண்சீர், இரண்டாமடி அறுசீர்.

*369, 370)* இவையுமது.

*371)* அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: விளச்சீர், விளச்சீர், விளங்காய்ச் சீர், விளச்சீர், விளச்சீர், விளங்காய்ச்சீர் -எனவரும் அறுசீரடி.

*372)* இதுவுமது. கனிச்சீர் அல்லது காய்ச்சீர், விளச்சீர் அல்லது மாச்சீர் (மிகச் சிறுபான்மையே காய்ச்சீர்), விளச்சீர், காய்ச்சீர் அல்லது கனிச்சீர், விளச்சீர் அல்லது மாச்சீர் (மிகச் சிறுபான்மையே காய்ச்சீர்), விளச்சீர் - என வருவது.

*373)* இதுவுமது.

*374)* இதுவுமது. மாச்சீர், விளச்சீர் அல்லது காய்ச்சீர், விளச்சீர், மாச்சீர், விளச் சீர் அல்லது காய்ச்சீர், விளச்சீர்- என வருவது.

*375)* வெண்செந்துறை: 1-7,9 இவை எட்டுப்பாசுரமும் தேமாந்தண்பூ, தேமாங் காய், தேமாந்தண்பூ, தேமாங்காய்- என வரும் நாற்சீர் ஈரடி. 8,10,11 இவை மூன் றும் கூவிளந்தண்ணிழல், கூவிளங்காய், கூவிளந்தண்ணிழல், கூவிளங்காய்- என வருவன.

*376)* எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்:

'மடன்மலி கொன்றை துன்றுவா ளெருக்கும் வன்னியு மத்தமுஞ் சடைமேல்' *1-1*
கானலங் கழனி யோதம்வந் துலவுங் கழுமல நகருறை வார்மேல்' *11-1*

விளச்சீர், மாச்சீர், விளச்சீர், மாச்சீர், விளச்சீர், விளச்சீர், மாச்சீர்- என வரும் எழுசீரடி.

*377)* இதுவுமது. காய்ச்சீர் அல்லது விளச்சீர், மாச்சீர், விளச்சீர், மாச்சீர், விளச் சீர், விளச்சீர் அல்லது காய்ச்சீர், மாச்சீர் - என வருவது.

*378)* இதுவுமது. ஐந்தாஞ் சீர் காய்ச்சீராக வருதலும் *(1-2; 7-1; 10-3; 11-3)* ஆம்.

*379)* இதுவுமது. மூன்றுஞ் சீர் காய்ச்சீராதலும் *(1-1; 7-1; 8-3; 10-4)*, ஐந்தாஞ் சீர் காய்ச்சீராதலும் *(1-1; 2-3)* கொள்க.

*380)* இதுவுமது. மூன்றுஞ் சீர் காய்ச்சீராதல் *(10-4)* காண்க.

*381)* இதுவுமது.

*382)* கலிவிருத்தம்: விளச்சீர் நான்காய் வருமடி; பாடலிறுதிச் சீர் தேமா. சிறு பான்மை இரண்டாஞ் சீர் தேமாவாதலும் *(2-1)*, மூன்றாஞ் சீர் தேமாவாதலும் *(1-1)*, நான்காஞ் சீர் தேமாவாதலும் *(2-1; 3-1; 4-1,2...)* புளிமாவாதலும் *(3-2)* கொள்க.

*383)* இதுவுமது. பாசுரம் 6,7 காய்ச்சீரும் விளச்சீரும் விரவி வந்த நாற்சீரடி. பிற பாசுரமெல்லாம் மாச்சீர், விளச்சீர், சிறுபான்மை காய்ச்சீர் விரவி வந்த நாற்சீரடி.

*384)* இதுவுமது. பாசுரம் 1,4,5 பெரும்பான்மையும் அடிதோறும்காய்ச்சீர் இரண்டும் மாச்சீர் இரண்டும் வந்தன. பிற பாசுரமெல்லாம் அடிதோறும் காய்ச்சீர் ஒன்றே வர, சீர்கள் மாச்சீரும் விளச்சீருமாய் நிகழ்ந்தன.

*385)* வெள்ளிப் பாடல்; அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: விளச்சீர் அல் லது காய்ச்சீர், புளிமா, தேமா, விளச்சீர், மாச்சீர், மாச்சீர்- என வரும் அறுசீரடி.

*386)* கலிவிருத்தம் (கிளியனூர்ப் பதிகம்): மாச்சீர் விளச்சீர்களாகிய நாற்சீரடி.

## ஆ) திருநாவுக்கரசர் தேவாரம் — நான்காம் திருமுறை

பதிகஎண்

*1)* அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்; முதலாம் நான்காஞ் சீர்கள் கனிச் சீர் அல்லது காய்ச்சீர், இரண்டாம் ஐந்தாஞ் சீர்கள் மாச்சீர் அல்லது விளச்சீர்; சிறுபான்மை காய்ச்சீருமாம் *(3-1-2)*. ஏனையிரண்டு சீர்களும் காய்ச்சீர்; சிறுபான்மை தண்பூச்சீராம். *(3-3-6)*

'கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நானறியேன்' *1-1*
'பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர் படுவெண்டலை யிற்பலி
கொண்டுழல்வீர்' *3-1*

*2)* அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: (நாலடிமேல் ஓரடி வைப்பு); மாச் சீர் விளச்சீர் விரவி வந்த அறுசீரடி. இடையே காய்ச்சீர் விரவுதலுமாம். (பாசுரந் தோறும் ஐந்தாமடி இரண்டாஞ்சீர்; *3-3-5............*)

'சுண்ணவெண் சந்தனச் சாந்தும் சுடர்த்திங்கள் சூளா மணியும்' *1-1*
'நரம்பெழு கைகள் பிடித்து நங்கை நடுங்க மலையை' *10-1*

*3)* இதுவுமது. மாச்சீர் விளச்சீர் விரவி வந்த அறுசீரடி. இடையே காய்ச்சீர் விரவுதல் (பாசுரந்தோறும் மூன்றாமடி ஐந்தாஞ்சீர்; *1-1-2; 7-2-5; 10-2-2*) கொள்க.

'மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடி' *1-1*
'வளர்மதிக் கண்ணியி னானை வார்குழ லாளொடும் பாடி' *11-1*

*[2), 3)* நாலாமடி நீண்டிசைப்பதாகக் கொண்டு, கலித்தாழிசை என்றலுமாம்.*]*

4) இதுவுமது. முதற்சீரும் இடைச்சீர்களும் காய்ச்சீராதலும் கொள்க. (2-2; 7; 10;) (1-1-4,5; 2-2-4; 2-3-5; 3-3-5...)

'பாடிளம் பூதத்தி னானும் பவளச்செவ் வாய்வண்ணத் தானும்' 1-1
'தொழிற்கங்கை துன்னிநின் றூர்க்குத் தோன்றி யருளவல் லானும்' 7-1

5) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: காய்ச்சீர் நான்கு மாச்சீர் இரண்டு- என வந்த அறுசீரடி. காய்ச்சீர் சிறுபான்மை கூவிளமாதல் (1-1-4...) கொள்க; மூன்றாமடிக்கண் 'ஆரூரரை' என்புழி, 'ஆரூ ர(ர்)ரை' என மாச்சீராகும்.

'மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான் தாடொ ழாதே' 1-1
'மறுத்தானோர் வல்லரக்க னீரைந்து முடியினொடு தோளுந் தாளும்' 10-1

6) இதுவுமது. முதற்சீர் விளச்சீராகவும் (பாசுரம் 5,9), மாச்சீராகவும் (6-2,3,4; 7-1,3) நிற்றலும், இடைச்சீர்கள் அவ்வாறு நிற்றலும் (6-1-2,3; 6-2-3; 6-3-3....) கொள்க.

'வனபவள வாய்திறந்து வானவர்க்குந் தானவனே என்கின் றாளால்' 1-1
'வண்டுலவு கொன்றை வளர்புன் சடையானே என்கின் றாளால்' 2-1

7) தரவுகொச்சகம்: காய்ச்சீர் பயின்ற நாற்சீரடி.

'கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானை கரவார்பால்' 1-1
'நல்லானை நல்லான நான்மறையோ டாறங்கம்' 7-1

8) எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: விளச்சீர், விளங்காய், மாச்சீர் அல்லது காய்ச்சீர், மாச்சீர், காய்ச்சீர் அல்லது மாச்சீர், மாச்சீர், மாச்சீர்- என வந்த எழுசீரடி.

'சிவனெனு மோசையல்ல தறையோ வுலகில் திருநின்ற செம்மை யுளதே' 1-1
'தேய்பொடி வெள்ளைபூசி யதன்மேலொர் திங்கள் திலகம் பதித்த நுதலர் 3-1
'புதுவிரி பொன்செயோலை யொருகாதொர் காது சுரிசங்க நின்று புரள' 10-1

9) கலித்தாழிசை: ஈற்றடி ஒரு சீர் மிக்கு நெடிலடியாய் நிகழ்ந்த ஈரடிப் பாசுரம்.

'தலையேநீ வணங்காய்தலை மாலைதலைக் கணிந்து
தலையாலே பலிதேருந் தலைவனைத் தலையேநீ வணங்காய்' (1)

நான்கடியாக்கி வெண்டுறை என்பதும் ஒன்று.

10) கலிவிருத்தம்: விளச்சீர் இரண்டு, மாச்சீர், விளச்சீர்- என வரும் நாற்சீரடி.

'முளைக்கதி ரிளம்பிறை மூழ்க வெள்ளநீர்' 1-1
'கிடந்தபாம் பருகுகண் டரிவை பேதுற' 8-1

11) இதுவுமது.

'சொற்றுணை வேதியன் சோதி வானவன்' 1-1

12) தரவுகொச்சகம்: காய்ச்சீர் பயிலும் நாற்சீரடி.

'சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே' 1-1
'துணையார முயங்கிப்போய்த் துறைசேரு மடநாராய்' 7-1

13) இதுவுமது. அருகி முதற்சீர் விளமாயினும் ஆம்.

'விடகிலே னடிநாயேன் வேண்டியக்கால் யாதொன்றும்' 1-1

'முத்திசையும் புனற்பொன்னி மொய்பவளங் கொழித்துந்த' 9-1

14) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: விளச்சீர், தேமா, தேமா, காய்ச்சீர் (சிறுபான்மை கனிச்சீர்), தேமா (சிறுபான்மை கூவிளம்), மாச்சீர் அல்லது காய்ச்சீர், தேமா, புளிமா- என வரும் எண்சீரடி.

'பருவரை யொன்று சுற்றி யரவங்கை விட்ட
இமையோரி ரிந்து பயமாய்' 1-1

'நீலநன் மேனிச் செங்கண் வளைவெள்ளெயிற் றின்னெரி
கேச னேடி வருநாள்' 6-1

'கடுகிய தேர்செ லாது கயிலாய மீது
கருதேலுன் வீர மொழிநீ' 11-1

15) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: மாச்சீர், மாச்சீர், காய்ச்சீர் அல்லது விளச்சீர்- இவை இரட்டித்து வரும் அறுசீரடி.

'பற்றற் றார்சேர் பழம்பதியைப் பாசூர் நிலாய பவளத்தை' 1-1

'மதியங் கண்ணி நாயிற்றை மயக்கந் தீர்க்கு மருந்தினை' 3-1

16) கலிவிருத்தம்: வெண்டளை பிறழாத காய்ச்சீர், மாச்சீர், விளச்சீர் பயிலும் நாற்சீரடி.

'செய்யர்வெண் ணூலர் கருமான் மறிதுள்ளும்' 1-1

'பெருந்தாழ் சடைமுடி மேற்பிறை சூடி' 3-1

17) இதுவுமது.

'எத்தீப் புகினு மெமக்கொரு தீதிலை' 1-1

'பொருள்மன் னனைப்பற்றிப் புட்பகங் கொண்ட' 11-1

18) இதுவுமது. காய்ச்சீர் மிக்கு வருமடியுடைய பாசுரத்தைத் தரவுகொச்சகம் எனினும் இழுக்காது (பாசுரம் -10).

'ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை' 1-1

'இரண்டுகொ லாமிமை யோர்தொழு பாதம்' 2-1

19) தரவுகொச்சகம்: காய்ச்சீர் பயிலும் வெண்டளையான் வரும் நாற்சீரடி. மாச்சீர் விளச்சீர் இடையே விரவுதலும் கொள்க. 10ஆம் பாசுர முதலடி 'தாடமுவு கையன் தாமரைப்பூஞ் சேவடியான்' என ஓரிடமே வெண்டளை பிழைத்தல் காண்க.

'சூலப் படையானைச் சூழாக வீழருவி' 1-1

'தாங்கோல வெள்ளெலும்பு பூண்டுதம் ஏறேறி' 5-1

20) ஆசிரிய இணைக்குறட்டுறை: முதலடி மூன்றாமடிகள் அறுசீர், ஏனையிரண்டடியும் நாற்சீர். மாச்சீரும் விளச்சீரும் காய்ச்சீரும் (சிறுபான்மை கனிச்சீரும்) விரவிய அடிகள்.

'காண்டலே கருத்தாய் நினைத்திருந் தேன்மனம் புகுந்தாய் கழலடி' 1-1

'பூண்டுகொண் டொழிந்தேன் புறம்போயி னலறையோ' 1-2

'ஈண்டுமா டங்க ணீண்டமா ளிகைமே லெழுகொடி வானிளமதி' 1-3

'திண்டிவந் துலவுந் திருவாரூ ரம்மானே' 1-4

*21)* கலித்துறை: முதற்சீர் நான்கும் மாச்சீர் விளச்சீர், இறுதிச்சீர் காய்ச்சீர்- என வரும் ஐஞ்சீரடி. (இறுதிச்சீரும் விளமாயின் அவ்யாப்புக் கலிநிலைத்துறை என்ப.)

'முத்து விதானம் மணிபொன் கவரி முறையாலே' 1-1
'வீதிக டோறும் வெண்கொடி யோடுவி தானங்கள்' 3-1
'குணங்கள் பேசிக் கூடிப் பாடித் தொண்டர்கள்' 4-1

[இவ்யாப்பினைக் கலிநிலைத்துறை என்னும் யாப்பருங்கல விருத்தி. 195 குறிப்புரை காண்க.]

*22)* அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: விளச்சீர், மாச்சீர், மாச்சீர், விளச் சீர், மாச்சீர், மாச்சீர்- என வரும் அறுசீரடி.

'செஞ்சடைக் கற்றை முற்றத் திளநிலா எறிக்குஞ் சென்னி' 1-1
'மதியிலா அரக்க னோடி மாமலை யெடுக்க நோக்கி' 11-1

*23) — 79)* இவையுமது. முதலாம் நான்காம் சீர்கள் விளச்சீராதலேயன்றிக் காய்ச்சீராயினும் அமையும். (25-9-1-4; 10-1,2-1)

*80)* கட்டளைக் கலித்துறை: 10-2-5 'கோன்சிரித்து' குற்றுகரம் அலகு பெற்று நின்றது. (வகர உடம்படுமெய் பெற்று அடுத்து வரும் உயிரோடு புணரும்.)

*81) — 113)* இவையுமது. ஐந்தாஞ்சீர் விளங்காயாகாது மாங்கனியாயினும் எழுத்தெண்ணிக்கை பிழையாமையால் அமையும். கூவிளங்காயினைத் தேமாந் தண்பூ ஒக்கும்; கருவிளங்காயினைப் புளிமாந்தண்பூ ஒக்கும் என்க.

## ஐந்தாம் திருமுறை (குறுந்தொகை)

குறுந்தொகை கலிவிருத்த யாப்பாம்; மாச்சீரும் விளச்சீரும் நான்காய் நிகழு மடி. சிறுபான்மை காய்ச்சீர் நிகழ்தலும் கொள்க. (91-7-1-2,3; 92-1-1-4, 1-2-2....) 100 பதிகத்துப் பாசுரங்களும் அடிதோறும் பெரும்பான்மையும் முதற் சீரொழித் தேனைச் சீர்கள் வெண்டளை பிறழாமை வந்துள்ளமை மிக்கதோர் யாப்பு நயம். முதற்பதிகத்துப் பாசுரம் 9 முதற்சீருட்பட வெண்டளை பிறழாமை வந்தது; பிற வரினும் காண்க.

## ஆறுந்திருமுறை (நெடுந்தாண்டகம்)

இரண்டு காய்ச்சீர், இரண்டு மாச்சீர்- இவை இரட்டித்து வரும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் நெடுந்தாண்டகம் எனப்படும். இது பொதுவிலக் கணம். 99 பதிகங்களையுடைய இத்திருமுறையில் மேலைப் பொதுவிலக்கணத்தின் விலகிய சில வேறுபாடுகள் கீழ்வருவன. இவை எஞ்சாமல் காட்டப்பெற்றில.

*1)* காய்ச்சீர் சிறுபான்மையாகக் கனிச்சீர் (சிறப்பாக மாங்கனி) ஆதலும் உண்டு. (பதிக எண், பாசுர எண், அடியெண், சீரெண் எனக் காண்க.)

*1-1-2-6, 3-3-5, 4-1-5, 7-2-2; 30-6-3-1; 31-4-3-2; 40-1-1-5; 43-10-3-2; 45-5-3-1; 52-3-3-1; 60-8-2-2; 61-1-4-1; 67-9-3-6; 71-2-2-2, 2-2-6, 8-1-2,6; 8-2-1,2,5, 8-3-1,2,5,6, 8-4-2; 73-5-3-1; 74-2-4-2; 75-10-3-5; 77-5-1-5,6; 79-2-1-5; 80-7-3-5; 83-6-4-1, 10-2-5; 88-2-1-5; 90-1-1-2; 91-7-3-6; 94-4-2-2; 96-4-1-6, 4-4-1, 9-2-1.*

2) காய்ச்சீர் (முதலாம் இரண்டாம் ஐந்தாம் ஆறுஞ் சீர்கள்) மாச்சீராதலும் விளச்சீராதலும் பாசுரம் பலவற்றுள் காணலாம். காய்ச்சீர்கள் ஒரேவொரு பாசுரத்தில் விளமாதலுடைய பதிகங்கள் 1,18,27,40,50,62,65,76,79,80,86,88,90 ஆம் எண்ணின. அவை அவ்வாறு மாச்சீராக நிகழ்வன 33,53 ஆம் எண்ணுடைய பதிகங்கள். அவை இருசீர்க்கண் மாத்திரம் விளமாகவும், மாவாகவும் வரும் பதிகங்கள் 48,64,74 ஆம் எண்ணின. அவை ஒரு சீர்க்கண் மாத்திரம் விளமாக அல்லது மாவாக நிகழும் பதிகங்கள் 24,33,69,75,92 ஆம் எண்ணின. மேற்கூறிய நெடுந்தாண்டக யாப்புப் பிழையாமல் வந்த பதிகங்கள் 14,84 ஆம் எண்ணின.

3) சில பாசுரங்களில் நிரையசை நின்றே சீராந்தன்மை பெற்று நிகழ்தல் பின் வருமாறு காண்க.

| | |
|---|---|
| பாசுரந்தோறும் 'அடி' என்ற 4,8 ஆம் சீர்கள் அசையளவாய் நின்று சீர்நிரம்பின | (பதிகம்.-6) |
| பாசுரந்தோறும் 'களே' என்ற நிரையசை சீராக ஒலித்தது | (பதி.7) |
| 'சுரம்' என்ற நிரையசை சீராக ஒலித்தது | 7-5-1-8 |
| 'வது' என்ற நிரையசை சீராக ஒலித்தது | 10-3-4 |
| 'வடம்' என்ற நிரையசை சீராக ஒலித்தது | 12-1-8 |
| 'கடம்' என்ற நிரையசை சீராக ஒலித்தது | 12-3-8 |
| 1-9 பாசுரந்தோறும் 'பஞர்' என்ற நிரையசை சீராக ஒலித்தது | (பதி.12)-3-8 |
| 'துறை' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | 13-4-2-4 |
| 'உரு' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | 25-1-1-7 |
| 'வது' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | 4-1-4 |
| 'விரி' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | 60-3-2-3 |
| 'சுரம்' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | 70-3-1-4 |
| 'சுரம்' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | 10-2-8 |
| 'சுரம்' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | 71-8-3-4 |
| 'துறை' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | 70-3-4-4 |
| 'துறை' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | 71-11-2-4 |
| 'குடி' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | 70-6-2-4 |
| 'கடம்' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | 6-3-4 |
| 'பெரும்' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | 7-2-8 |
| 'குடி' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | 71-3-1-8 |
| 'குடி' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | -2-4 |
| 'குடி' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | -3-4 |
| 'குடி' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | -3-8 |
| 'பதம்' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | -9-2-4 |
| 'களம்' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | -10-2-8 |
| 'துறை' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | -11-2-4 |
| 'பொழில்' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | -2-8 |
| 'யரும்' எனும் நிரையசை சீர்நிலை எய்திற்று | 86-9-1-4 |

4) இனி, மாச்சீர் (3,4 - ஆம் சீர்கள்) விளமாதலுண்டு; (7,8 ஆம் சீர் விளமா காது என்க.) பின்வருவனவற்றுள் காண்க.

24-3-4-3
-8-3-3
49-5-4-3
-10-4-3
70-6-1-3
71-2-3-3

71-3-4-4
-11-4-4

5) மாச்சீர் விளச்சீராதலேயன்றிக் காய்ச்சீராதலும் ஒரோவழி நிகழ்தல் காண்க.

71-2-1-7
-2-7
8-1-3
-7
91-6-3-7

6) இனி, மாச்சீர்ஈற்றுக் குற்றுகரம் முற்றுகரமாயொலித்து உடம்படுமெய் யேற்று வருமொழி முதல் உயிரோடு புணருமிடங்களும் சில உள.

| | | | |
|---|---|---|---|
| 12-1-1-4 | 89-10-1-4 | 15-5-2-8 | 61-7-1,3-4 |
| 13-3-2-4 | 93-9-3-4 | -11-1-8 | 70-9-2-8 |
| 20-1-1-4 | 97-9-3-4 | 25-10-3-8 | 97-9-2-8 |
| 54-1-1-4 | -4-4 | 27-10-3-8 | -3-8 |

7) இனி, மாங்காய்ச்சீர்கள் தண்பூச்சீராதலும் மிக அருகியே நறும்பூச் சீராதலும் உரிய.

53-2-4-1 88-5-3-2 (நறும்பூ)

8) ஒரோவழி மாச்சீர்க்கண் மிக அருகியே 'து தான்' (25-4-1-8) என்புழிப் போல முதற்குறில் விட்டிசைத்து நேரசையாகி வருமசையோடு கூடித் தேமாவாக நிற்றலும் கண்டுகொள்க. (இந்நயம் முதல் திருமுறை 71 ஆம் பதிகத்துள் (11-1) கண்டமையை நினைவு கூர்க.)

## சுந்தரர் தேவாரம் — ஏழாம் திருமுறை

பதிக எண்

1) கலிவிருத்தம்: மூன்று மாங்கனிச்சீர்கள், ஒரு மாச்சீர்- என வந்த நாற்சீரடி. பாசுரந்தோறும் மூன்றுமடி முதலிரு சீர்களும் தண்பூவாக வருதல் கொள்க.

'பித்தாபிறை சூடீபெரு மானேயரு ளாளா' 1-1
'வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறையுள்' 1-3

2) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: 3,4,7,8ஆம் சீர்கள் பெரும்பான் மையும் மாச்சீர், சிறுபான்மையே விளச்சீர் (7-1-4); ஏனைய நான்கும் காய்ச்சீராதலே

யன்றி விளச்சீரும் மாச்சீரும் கனிச்சீரும் ஆதலுரிய. (1-1-2, 2-1-1....; 1-1-1, 1-2-5, 2-2-1, 2-3-1....)

'கோத்திட்டையும் கோவலும் கோவில் கொண்டீர்
உம்மைக்கொண் டுழல்கின்றதோர் கொல்லைச் சில்லை' 1-1

'அடிகேளுமக் காட்செய அஞ்சு தும்மென்
றமரர்பெரு மானையா ரூர னஞ்சி' 11-1

3) இதுவுமது. மேலையிலக்கணத்துள், மாச்சீர் விளச்சீராதலும் (1-3-7, 3-3-7....), காய்ச்சீர் கனிச்சீராதலும் (1-2-5) கொள்க.

'கல்வா யகிலும் கதிர்மா மணியும்
கலந்துந் திவரும் நிவவின் கரைமேல்' 1-1

'நீரூ ருந்நெடு வயல்சூழ் புறவின்
நெல்வா யில்லரத் துறைநின் மலனே' 10-1

4) இதுவுமது. மேலையிலக்கணம் (2) கொள்க. சீர்முதற்குற்றெழுத்து நீண்டிசைத்து நேரசையாகி வரும் நேரோடு கூடித் தேமாவாதல் (1-3-7; 2-3-4; 3-4-4; 4-3-8) கொள்க. பாசுரந்தோறும் ஈற்றடி யீற்றில் நிற்கும் 'பனே' என்ற நிரையசை சீராக ஒலித்து நின்றது. பிறவிடத்தும் நிரையசை சீராக நிற்றல் (6-2-8; 9-1-4,8; 10-2-8) கண்டுகொள்க. காய்ச்சீர் கனியாக நிற்றலும் (1-2-5; 2-1-1,5....), தண்பூவாக நிற்றலும் (2-2-1) காண்க.

'தலைக்குத் தலைமாலை யணிந்த தென்னே
சடைமேற்கங் கைவெள்ளந் தரித்த தென்னே' 1-1

'எந்தம் மடிக ளிமையோர் பெருமான்
எனக்கென்று மளிக்கும் மணிமி டற்றன்' 10-1

5) எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: ஆறு மாச்சீர், ஒரு விளங்காய் அல்லது தண்பூச்சீர்- எனவரும் எழுசீரடி. மாச்சீர் விளச்சீராக வரினும் (3-1-6; 6-1-2,6.....) ஆம். அது மிக அருகியே காய்ச்சீராதலும் (6-4-2; 10-4-3,6) கொள்க. 7-4-4: 'ரு மான்': முதற்குறில் விட்டிசைப்பத் தேமா என ஒலித்தவாறு (அன்றிக் குறில் நீண்டு நேராயிற்று என்றலும் ஒன்று).

'நெய்யும் பாலுந் தயிருங் கொண்டு நித்தல் பூசை செய்யலுற்றால்' 1-1
'ஒவ ணம்மே லெருதொன் றேறும் ஓண காந்தன் தளியுளார்தாம்' 10-1

6) இதுவுமது. மேலை யிலக்கணம் கொள்க.

'படங்கொ ளுகஞ் சென்னி சேர்த்திப் பாய்பு லித்தோ லரையில்வீக்கி' 1-1
'விரிந்த வேத மோத வல்லார் வேலை சூழ்வெண் காடுமேய' 10-1

7) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: ஐந்து மாச்சீர், ஒரு மாங்காய்ச்சீர் — எனவரும் அறுசீரடி, இறுதிச்சீர் விளங்காயாதலும் கொள்க. மாச்சீர் விளமாதலும் (2-3-5; 3-3-5; 4-2-5; 5-1-5.........) கொள்க. மாச்சீர் மாங்காய்ச் சீராதல் (3-1-5) மிக அருகியதென்க.

'மத்த யானை யேறி மன்னர் சூழ வருவீர்காள்' 1-1
'முத்து நீற்றுப் பவள மேனிச் செஞ்சடை யானுறையும்' 11-1

8) இதுவுமது. விளச்சீர் அல்லது மாங்காய்ச்சீர், மாச்சீர், மாச்சீர், விளச்சீர் அல்லது மாங்காய்ச்சீர், தேமா, தேமா — எனவரும் அறுசீரடி,

'இறைகளோ டிசைந்த வின்ப மின்பத்தோ டிசைந்த வாழ்வு' 1-1
'பொய்த்தன்மைத் தாய மாயப் போர்வையை மெய்யென் றெண்ணும்' 9-1

9) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: மாச்சீர் விளச்சீர் இவற்றானுய எண் சீரடி. சிறுபான்மை காய்ச்சீர் நிகழ்தலும் (3-2-3,7; 3-3-7 ........) கொள்க.

'மலைக்கும் மகளஞ் சம்மத கரியை
யுரித்தீ ரெரித்தீர் வருமுப் புரங்கள்' 1-1
'காரூர் மழைபெய் துப்பொழி யருவிக்
கழையோ டகிலுந் திட்டிரு கரையும்' 11-1

10) எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: மாச்சீர் விளச்சீர் தம்முள் விரவித் தொடர இறுதிக்கண் விளங்காயாக நிகழும் எழுசீரடி.

'தேனெய் புரிந்துழல் செஞ்சடை யெம்பெரு மான திடந்திக ழைங்கணைய' 1-1
'கொடிக ளிடைக்குயில் கூவுமி டம்மயி லாலு மிடமழு வாளுடைய' 3-1

11) கலிவிருத்தம்: விளச்சீர் நான்கான் வருமடி. நான்காஞ் சீர் மாச்சீராதலும், அருகி நாற்சீரும் மாச்சீராய் நிகழ்தலும் கொள்க.

'திருவுடை யார்திரு மாலய ஞலும்' 1-1
'எண்ணி யிருந்துங் கிடந்து நடந்தும்' 2-1
'மிக்கிறை யேயவன் துன்மதி யாய்விட' 7-1

(மாச்சீரான் நிகழும் அடிக்கணன்றி, பிறசீரான் நிகழடியுள் வெண்டளை பிறழாமை ஓர் யாப்பு நயம்.)

12) கலிநிலைத்துறை : மாச்சீர் விளச்சீர்களான் வரும் ஐஞ்சீரடி. அருகியே காய்ச்சீர் வருதல் (1-4-3; 2-3-2; 2-4-4......) காண்க.

'வீழக் காலனைக் கால்கொடு பாய்ந்த விலங்கலான்' 1-1
'தழலு மேனியன் தையலோர் பாகம் அமர்ந்தவன்' 9-1

13) கலிவிருத்தம்: மாச்சீர், கனிச்சீர், விளச்சீர் அல்லது மாச்சீர், மாச்சீர் — எனவரும் நாற்சீரடி. பாசுரந்தோறும் (1-10) ஈற்றடி யிறுதிச்சீர் விளங்காய். கனிச் சீர் சிறுபான்மை நாலசைச் சீராதலும் (1-2-2; 1-3-2; 4-2-2; 6-2-2......), மிக அருகியே காய்ச்சீராதலும் (10-1,2-2; 11-2,3,4-2) கொள்க. பாசுரந்தோறும் (1-10) ஈற்றடி 'தேமா, மாங்காய், தேமா, கருவிளங்காய்' என நிகழ்கிறது.

'மலையா ரருவிததிரள் மாமணி யுந்தி' 1-1
'செய்யார் கமலம்மலர் நாவலூர் மன்னன்' 11-1

14) எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: விளச்சீர், மாச்சீர், விளச்சீர், மாச் சீர், விளச்சீர், விளச்சீர், மாச்சீர் — எனவரும் எழுசீரடி. விளச்சீர் ஒரோவழிக் காய்ச் சீராதல் (1-2-5; 2-2-3; 7-1-5; 7-2-3,5; 9-1-5) கொள்க. குற்றுகரம் முற்றுகரமாக இதழ்குவிபட ஒலித்தலும் (6-1-8) கண்டுணர்க.

'வைத்தனன் தனக்கே தலையுமென் னுவும் நெஞ்சமும் வஞ்சமொன் றின்றி' 1-1
ஒருமையே யல்லே னெழுமையு மடியே னடியவர்க் கடியனு மானேன்' 11-1

15) இதுவுமது. மாச்சீர் விளச்சீர்கள் விரவிவரும் எழுசீரடி. விளச்சீர் மாங்காய்ச் சீராதலும் (1-1-3; 2-1-2......) கொள்க.

'பூணு ணுவதோ ரரவங்கண் டஞ்சேன்
புறங்காட் டாடல்கண் டஞ்சேன்' 1-1
'குண்டா டிச்சமண் சாக்கியப் பேய்கள்
கொண்டா ராகிலும் கொள்ள' 9-1
'கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற
கொடிறன் கோட்புலி சென்னி' 10-1

16) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: மூன்று காய்ச்சீர் ஒரு மாச்சீர் இரட்டித்து வரும் எண்சீரடி.

'குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவடன் குணத்தினைநன் கறிந்து' 1-1

17) கட்டளைக்கலித்துறை: இறுதிச்சீர் தண்பூவுமாம்.
(7-1-3,4 கட்டளை யாப்புப் பிறழ்தல் காண்க.)

'கோவல ஞன்முகன் வானவர் கோனுங்குற் றேவல்செய்ய' 1-1
'படமாடு பாம்பணை யானுக்கும் பாவைநல் லாடனக்கும்' 9-1
'மிடுக்குண்டென் றேடியோர் வெற்பெடுத் தான்வலி யைந்நெரித்தார்' 10-1

18 —— 20) இவையுமது.
(20-1-2-5: வெண்டளை பிறழ்தலின், கட்டளையாப்புத் தவறுபட்டமை உணரப் படும்.)

21) கலிவிருத்தம்: ஓரடிக்கண் இரண்டு காய்ச்சீராதல் நிகழும் நாற்சீரடி. அருகிக் கனிச்சீர் வருதலும் (8-1-3.........) கொள்க. மாச்சீர் வருதலன்றி விளச்சீர் நிகழு மாறில்லை.

'நொந்தா வொண்சுடரே நுனையே நினைந்திருந்தேன்' 1-1
'பாரூர் பல்லவனூர் மதிற்காஞ்சி மாநகர்வாய்' 10-1

22) இதுவுமது. விளச்சீர் அல்லது காய்ச்சீர், காய்ச்சீர், விளச்சீர் அல்லது காய்ச் சீர், காய்ச்சீர்- எனவரும் நாற்சீரடி. காய்ச்சீர் தண்பூவாதலேயன்றி (1-3-4.....), கனிச்சீராக வரினும் (1-1-3; 4-1-2; 2-2-3) கொள்க. (கட்டளைக் கலித்துறையாக் கினும் அமையும் 5-1-3; 5-2-3,4; 10-2-3,4; 10-2-3,4 இவை அயற்றளை விரவின.)

'முன்னவ னெங்கள்பிரான் முதல்காண்பரி தாயபிரான்' 1-1
'அடுதலையே புரிந்தானவை யந்தர மூவெயிலும்' 4-1

23) இதுவுமது . ஓரடிக்கண் இரு காய்ச்சீரின் குறையாமல் மாச்சீர் விரவி வரும் நாற்சீரடி.

'செடியேன் தீவினையிற் றடுமாறக் கண்டாலும்' 1-1
'பழிசே ரில்புகழான் பரமன் பரமேட்டி' 10-1

24) இதுவுமது. காய்ச்சீரே யன்றிக் கனிச்சீர் வருதலும் (2-1-3; 4-1-3..........), முதற்சீர் மாச்சீராதலுமுடைய நாற்சீரடி. ஈற்றுச்சீர் தண்பூ வாதலும் (4-1) கொள்க. மூன்றும் சீரின் முதல் நிரையசை விட்டிசைக்கும் சிறப்பிற்று இது.

'பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து' 1-1
'நீளார் கோவணமும் திருநீறுமெய் பூசியுன்றன்' 2-1
'பண்டே நின்னடியே னடியாரடி யார்கட்கெல்லாம்' 4-1

*25)* இதுவுமது. முதற்சீர் மாச்சீர் அல்லது காய்ச்சீர்; பிறவெல்லாம் பெரும்பான்மையும் காய்ச்சீர். இடையே மாச்சீர் வரினுமாம். கனிச்சீர் சிறுபான்மை நிகழ்தலுமாம். தண்பூ வருமாறும் (9-2-2; 10-1-4) காண்க. (பாசுரங்கள் 1,2,4,7 இவற்றை நெடிலடியாக்கிக் காணுமிடத்தே கட்டளைக்கலித்துறை அமையக் காணலாம். பிறவற்றை அவ்வாறமைக்கக் கூடவில்லை.)

'பொன்செய்த மேனியினீர் புலித்தோலை யரைக்கசைத்தீர்' 1-1
'பரசா ருங்கரவா பதினெண்கண முஞ்சூழ' 8-1
'பிறையா ருஞ்சடையெம் பெருமா னருளாயென்று' 10-1

*26)* இதுவுமது: முதற்சீர் மாச்சீர் அல்லது விளச்சீர்; பிறசீர்கள் காய்ச்சீர்; சிறுபான்மை கனிவரினும் (1-3-3; 2-2-3......) கொள்க.

'செண்டா டும்விடையாய் சிவனேயென் செழுஞ்சுடரே' 1-1
'கடியேன் காதன்மையால் கழற்போதறி யாதவென்னுள்' 7-1

*27)* இதுவுமது. முன்னுரைத்தன கொள்க.

'விடையா ருங்கொடியாய் வெறியார்மலர்க் கொன்றையினாய்' 1-1
'வருங்கா லன்னுயிரை மடியத்திரு மெல்விரலால்' 9-1

*28)* இதுவுமது. தண்பூச்சீர் இடைவரினுமாம் (4-1-3). மூன்றாம்சீர் முதலசை விட்டிசைத்தல் காண்க.

'பொடியார் மேனியனே புரிநூலொரு பாற்பொருந்த' 1-1
'அன்றா லின்னிழற்கீ ழறநால்வர்க் கருள்புரிந்து' 3-1

*29)* இதுவுமது. விளச்சீர், காய்ச்சீர், விளச்சீர், காய்ச்சீர்- எனவரும் நாற்சீரடி. மூன்றாஞ் சீர் சிறுபான்மை காய்ச்சீராதலும் (1-3; 2-1..) கொள்க.

'இத்தனை யாமாற்றை.யறிந்திலே னெம்பெருமான்' 1-1
'மலக்கினி னடியார்கள் மனத்திடை மால்தீர்ப்பாய்' 8-1

*30)* அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: காய்ச்சீர் நான்கு,மாச்சீர் இரண்டு - எனவரும் அறுசீரடி.

'சிம்மாந்து சிப்புளித்துச் சிந்தையினில் வைத்துகந்து திறம்பா வண்ணம்' 1-1
'கலைமலிந்த தென்புலவர் கற்றோர்த மிடர்தீர்க்குங் கருப்ப றியலூர்' 11-1

*31)* கலிநிலைத்துறை: மாச்சீர் விளச்சீர்கள் தம்முள் விரவி வரும் ஐஞ்சீரடி. இறுதிச்சீர் மாச்சீர். விளச்சீர் ஒரோவழிக் காய்ச்சீராதலும் (1-2-2; 2-2-2; 3-3-3.....) கொள்க. கொண்டவழி அது கலித்துறையாம்,

'முந்தை யூர்முது குன்றங் குரங்கணில் முட்டம்' 1-1
'ஊறி வாயின ஞடிய வன்றொண்ட னூரன்' 10-1

*32)* கலிவிருத்தம்: அடிதோறும் காய்ச்சீர் ஒன்று தவறாது வரப்பெறும். [அருகியே இரண்டு மூன்று வரப்பெறுதல் கொள்க. (2-1;4-3; 5-1...)] பிறசீர்கள் மாச்சீரும் விளச்சீரும்.

'கடிதாய்க் கடற்காற்று வந்தெற்றக் கரைமேல்' 1-1
'பாரூர் மலிசூழ் மறைக்கா டதன்தென்பால்' 10-1
'மையார் தடங்கண்ணி பங்காகங் கையாளும்' 5-1

33) எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் : மாச்சீர், விளச்சீர், மாச்சீர், விளச்சீர், மாச்சீர், விளச்சீர், விளச்சீர் — எனவரும் எழுசீரடி. இறுதிச்சீர் இரண்டும் முறையே மாச்சீர் விளச்சீர் ஆதலும் (5-1) கொள்க. விளச்சீர் ஒரோவழிக் காய்ச்சீராதலும் (8-1-6, 8-2-6) அமையும்.

'பாறு தாங்கிய காட ரோபடு தலைய ரோமலைப் பாவையோர்' 1-1
'படிசெய் நீர்மையின் பத்தர் காள்பணிந் தேத்தி னேன்பணி யீரருள்' 10-1

34) இதுவுமது. மாச்சீர், விளச்சீர், மாச்சீர், விளச்சீர், மாச்சீர், விளச்சீர், விளச்சீர் — என வரும் எழுசீரடி. விளச்சீர் மாங்காயாதலும் (1-1-6; 3-1-4,6; 8-1-2) கொள்க. ஓரடிக்கண் மாத்திரம் ஈற்றுச்சீர் கருவிளங்காயாக நின்றது (10-1)

'தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்வி னுந்தொண்டர் தருகிலா' 1-1
'காணி யேல்பெரி துடைய னேகற்று
நல்ல னேசுற்ற நற்கிளை' 3-1
'எள்வி ழுந்தஇடம் பார்க்கு மாகிலும்
ஈக்கு மீகல னுயினும்' 8-1

35, 36) இவையுமது. மேலுரைத்தன கொள்க. விளச்சீர் மாங்காயாத லுரித்து. ஒரோவழி இறுதிச்சீரிரண்டும் மாச்சீர் விளச்சீராதல் கொள்க. (35-4-1)

'அங்க மோதிநல் லாறை மேற்றளி
நின்றும் போந்துவந் தின்னம்பர்' 35-1-1
'துஞ்சி யும்பிறந் துஞ்சி றந்துந்து
யக்க ருதம யக்கிவை' 10-1
'காரு லாவிய நஞ்சை யுண்டிருள்
கண்ட வெண்டலை யோடுகொண்' 36-1-1

37) கலிவிருத்தம் : ஒரு விளச்சீர் அல்லது காய்ச்சீர், மூன்று விளச்சீர் — என வரும் நாற்சீரடி. விளச்சீர் காய்ச்சீராக நிற்பினும் அமையும். (4-1-4; 5-1-3,4; 7-1-4)

'குருகுபா யக்கொழுங் கரும்புகள் நெரிந்தசா' 1-1
'கூடுமன் னப்பெடை காள்குயில் வண்டுகாள்' 10-1
'நித்தமா கந்நினைந் துள்ளமேத் தித்தொழும்' 11-1

38) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: மூன்று காய்ச்சீர் ஒரு மாச்சீர் இவை இரட்டித்து வரும் எண்சீரடி. காய்ச்சீர் விளச்சீராயினும் கொள்க. (1-1-3; 4-1-2,6)

'தம்மானை யறியாத சாதியா ருளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்' 1-1

39, 40) இவையுமது. மேலுரைத்த இலக்கணம் கொள்க. காய்ச்சீர் விளச்சீராதலும் (39-1-1-7; 5-1-1,7; 3-1-6......; 40-7-1-2; 8-4-3; 11-3-3.....) கொள்க.

'தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனுர்க் கடியேன்' 39-1-1
'உள்வாய மதிமிளிரும் வளர்சடையி னுனை
மறையவனை வாய்மொழியை வானவர்தங் கோனை' 40-1-1

*41)* எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: மாச்சீர் ஆறு, மாங்காய்ச்சீர் ஒன்று — என வரும் எழுசீரடி.

'முதுவா யோரி கதற முதுகாட் டெரிகொண் டாடல் முயல்வானே' 1-1
'அன்ன மன்னும் வயல்சூழ் கச்சூர் ஆலக் கோயி லம்மானை' 10-1

*42)* அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: மாச்சீர் அல்லது விளச்சீர், கனிச்சீர், காய்ச்சீர் — இவை இரட்டித்து வரும் அறுசீரடி. கனிச்சீர் தண்பூ ஆதலுமாம்; அருகிக் காய்ச்சீராதலும் கொள்க (8-1-2). இதனை எண்சீர் விருத்தமாகவும் கொள்ளலாம்.

'எறிக்குங் கதிர்வேயுதிர் முத்தம்மொ
டேலம் மிலவங்கந்தக் கோலமிஞ்சி' 1-1
'காடும் மலையுந்நா டும்மிடறிக்
கதிர்மா் மணிசந்தன மும்மகிலும்' 8-1
'வஞ்சிநுண் ணிடையார்மயிற் சாயலன்னார்
வடிவேற் கணல்லார்பலர் வந்திறைஞ்சும்' 10-1

*43)* கலிநிலைத்துறை : (காய்ச்சீர் பயிலப்பெருத பாசுரம் கலிநிலைத்துறையாம் என்ப.)

'நஞ்சியி டையின்று நாளையென் றும்மை நச்சுவார்' 1-1
'எத்திசை யுந்திரிந் தேற்றக் கால்பிற ரென்சொலார்' 10-1
'முந்திமுத் தாறு வலஞ்செ யும்முது குன்றரை' 11-1

*44)* இதுவுமது : (காய்ச்சீர் பயிலப்பெறும் பாசுரம் கலித்துறையாம் என்ப. அது பாசுரம் 2, 10.)

'முடிப்பது கங்கையும் திங்களும் செற்றது மூவெயில்' 1-1
'கரிய மனச்சமண் காடி யாடுக ழுக்களால்' 9-1

*45)* இதுவுமது. [காய்ச்சீர் இரண்டு ஈண்டு விரவிவரும் அடியினையுடைய பாசுரங்கள் (1-3; 4-1; 8-3....) கலித்துறையாம் என்க.]

'காண்டனன் காண்டனன் காரிகை யாடன் கருத்தனுய்' 1-1
'எண்ணவ னெண்ணவ னேழுல கத்துயிர் தங்கட்கு' 7-1

*46)* எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: மூன்று காய்ச்சீர், ஒரு மாச்சீர் - இவை இரட்டித்து வரும் எண்சீரடி. சிறுபான்மையே காய்ச்சீர் விளமாதல் (3-1-1, 8-1-1, 9-1-3....) கொள்க. அடியீற்று மாச்சீரின் குற்றுகரம் முற்றுகரமாய் நிறைதல் காண்க. (8-1-8)

*47)* அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: மாச்சீர் ஐந்து, ஈற்றில் மாங்காய்ச் — என நிகழும் அறுசீரடி.

'காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே கானப் பேரூராய்' 1-1
'நிறைக்காட் டானே நெஞ்சத் தானே நின்றி யூரானே' 3-1

*48)* எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் : மாச்சீர், விளச்சீர், மாச்சீர், விளச்சீர், மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர் அல்லது விளச்சீர் - எனவரும் எழுசீரடி. ஆறுஞ்சீர் ஒரோவழி மாச்சீராயினும் (10-1) கொள்க. விளச்சீர் மாங்காயாக வரினும் (9-1-2,4,6) அமையும். சீர்முதற்கண் குற்றெழுத்து விட்டிசைத்து நேரென நின்று வருமசையோடு கூடிக் கூவிளமாக அமைதல் (10-1-2) காண்க.

'மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப் பாத மேமனம் பாவித்தேன்' 1-1
'கோணி யபிறை சூடி யைகறை யூரிற் பாண்டிக் கொடுமுடி' 10-1

*49)* கலித்தாழிசை: மாச்சீர், விளச்சீர், மாச்சீர், விளச்சீர், மாச்சீர், விளங்காய்- என வரும் அறுசீரடி மூன்று; மாச்சீர், விளச்சீர், மாச்சீர், விளச்சீர், மாச்சீர், விளச்சீர், மாச்சீர், மாங்காய்ச்சீர்- என வரும் எண்சீரடி ஒன்று. இறுதிப்பாசுரம் (10) ஒன்றும் அறுசீரடி நான்காய் நிகழும் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

'கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் விரவ லாமைசொல்லி' 1-1
'இடுகு நுண்ணிடை மடந்தை தன்னொடு மெத்துக் கிங்கிருந்
தீரெம் பிரானீரே' 1-4

*50)* கலிவிருத்தம்: விளச்சீர் அல்லது மாச்சீர் அல்லது காய்ச்சீர், கனிச்சீர், விளச்சீர், விளச்சீர் - என வரும் நாற்சீரடி. முதற்சீர் கனியாதலும் (7-1), இரண்டாஞ்சீர் காயாதலும் (10-1) நாலசைச் சீராதலும் (9-2), மூன்றாஞ் சீர் மாச்சீராதலும் (8-1; 10-1), நாலாஞ் சீர் கனியாதலும் (10-1) சிறுபான்மையே எனக் கொள்க. 4ஆம் பாசுரம் கனிச்சீரும் காய்ச்சீரும் அடிதோறும் பல பெற்று வந்தவாறு; முதலடி ஈற்றுச்சீர் தண்ணிழல் ஆயிற்று.

'சித்தநீ நினையென்னொடு சூளறு வைகலும்' 1-1
'கொள்ளிவா யினகூரெயிற் றேனங் கிழிக்கவே' 8-1
'பொடியாடு மேனியன்பொன் புனஞ்சூழ் புனவாயிலே' 10-1
இதனைக் கலிநிலைத்துறை யாக்கலும் ஒன்று.

*51)* தரவுகொச்சகம்: காய்ச்சீர் நான்கானியன்ற அடி. இறுதிச்சீர் சிறுபான்மை விளச்சீர் (1-1-4; 1-3-4; 11-3-4) ஆதலுமாம்; பிறசீர் ஆதலும் கொள்க.

'பத்திமையும் அடிமையும் கைவிடுவான் பாவியேன்' 1-1
'பேரூரு மதகரியி னுரியானைப் பெரியவர்தம்' 12-1

*52)* அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: மாச்சீர், மாச்சீர், காய்ச்சீர்-இவை இரட்டித்து வந்த அறுசீரடி.

'முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையா ளுமைபங்கா' 1-1
'பத்தர் சித்தர் பலரேத்தும் பரமன் பழைய னூர்மேய' 10-1

*53)* இதுவுமது. மேலுரைத்தது கொள்க.

'மருவார் கொன்றை மதிசூடி மாணிக் கத்தின் மலைபோல' 1-1
'மாட மல்கு கடவூரில் மறையோ ரேத்து மயானத்து' 10-1

*54)* எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் : மாச்சீர் விளச்சீர்கள் விரவிய எண்சீரடி.

'அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவு நான்படப் பாலதொன் றானால்' 1-1

'ஓதம் வந்துல வுங்கரை தன்மேல்
ஒற்றி யூருறை செல்வனை நாளும்' 10-1

55) இதுவுமது. மேலுரைத்தது கொள்க.
'அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக' 1-1
'அறிவினால் மிக்க அறுவகைச் சமயம்
அவ்வவர்க் கங்கே யாரருள் புரிந்து' 9-1

56) இதுவுமது. மேலுரைத்தது (54) கொள்க.
'ஊர்வ தோர்விடை யொன்றுடை யானை
ஒண்ணு தற்றனிக் கண்ணுத லானை' 1-1
'பேரா ராயிர மும்முடை யானை
பேசி னாற்பெரி தும்மினி யானை' 11-1

57) இதுவுமது. மேலுரைத்த இலக்கணம் கொள்க. மிக அருகி மாங்காய்ச்சீர் வருதல் ஈற்றடிதோறும் 5 ஆம் சீர்க்கண் காண்க.
'தலைக்க லன்றலை மேற்றரித் தானை
தன்னையென் னைநினைக் கத்தரு வானை' 1-1
'வளங்கி ளர்பொழில் வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந் தென்னினைக் கேனென்' 12-1

58) இதுவுமது. மேலையிலக்கணமே (54) கொள்க. அருகியே காய்ச்சீர் நிகழ்தல் (2-1-3; 8-1-2,3) காண்க.
'சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத்
தன்னரு டந்தவெந் தலைவனை மலையின்' 1-1
'செழுமலர்க் கொன்றையுங் கூவிள மலரும்
விரவிய சடைமுடி யடிகளை நினைந்திட' 10-1

59) — 62) இவையுமது ஒரோவழிக் காய்ச்சீர் வரினுமாம்.
'பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானை
போக முந்திரு வும்புணர்ப் பானை' 59-1-1
'கழுதை குங்குமந் தான்சுமந் தெய்த்தால்
கைப்பர் பாழ்புக மற்றது போல' 60-1-1
'ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
ஆதி யையம ரர்தொழு தேத்தும்' 61-1-1
'புற்றில் வாளர வார்த்தபி ரானைப்
பூத நாதனைப் பாதமே தொழுவார்' 62-1-1

63) இதுவுமது. கனிச்சீர் விரவி வரப்பெற்ற மேலையாப்பு. மாச்சீர், மாச்சீர், கனிச்சீர், மாச்சீர்- இவை யிரட்டித்து வந்த எண்சீரடி. பாசுரந்தோறும் நாலாமடி யீற்றரையடி விளச்சீர், காய்ச்சீர், விளச்சீர், மாச்சீர்- என முடிந்தமை காண்க.
'மெய்யை முற்றப் பொடிப்பூசியொர் நம்பி
வேத நான்கும் விரித்தோதியொர் நம்பி' 1-1
'பின்னை நம்பும் புயத்தானெடு மாலும்
பிரம னும்மென் றிவர்நாடியுங் காணா' 7-1

'கரக்கு நம்பி கசியாதவர் தம்மைக்
கசிந்த வர்க்கிம் மையொடம்மையி லின்பம்' 10-1

64) இதுவுமது மாச்சீர் விளச்சீர் விரவிய எண்சீரடி.
'நீறு தாங்கிய திருநுத லானை
நெற்றிக் கண்ணனை நிறைவளை மடந்தை' 1-1
'நீடு பொக்கையின் பிறவியைப் பழித்து
நீங்கலா மென்றும னத்தினைத் தெருட்டி' 10-1

65) — 68) இவையுமது. சிறுபான்மை காய்ச்சீர் நிகழ்தலுமாம் (65-4-1-7; 66-2-1-3; 67-8-3-7; 68-3-2-7)
'திருவும் வண்மையுந் திண்டிற லரசுஞ்
சிலந்தியார் செய்த செய்பணி கண்டு' 65-1-1
'மறைய வன்னொரு மாணிவந் தடைய
வார மாயவ னுருயிர் நிறுத்த' 66-1-1
'ஊனங் காத்துயிர்ப் பாயுல கெல்லாம்
ஓங்கா ரத்துரு வாகிநின் றானை' 67-1-1
'செம்பொன் மேனிவெண் ணீறணி வானை
கரிய கண்டனை மாலயன் காண' 68-1-1

69) எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: விளச்சீர், மாச்சீர், விளச்சீர், மாச்சீர், விளச்சீர், விளச்சீர், மாச்சீர் - என வரும் எழுசீரடி.
'திருவுமெய்ப் பொருளுஞ் செல்வமு மெனக்குன்
சீருடைக் கழல்களென் றெண்ணி' 1-1
'பல்கலைப் பொருளே படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே' 10-4

70) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: மாச்சீர் விளச்சீர்கள் விரவி வந்த எண்சீரடி, (மாச்சீர், விளச்சீர், விளச்சீர், மாச்சீர்- இவை இரட்டித்து வந்தவாறு.)
'கங்கை வார்சடை யாய்கண நாதா
கால காலனே காமனுக் கனலே' 1-1
'வெண்ட லைபிறை கொன்றையு மரவும்
வேரி மத்தமும் விரவிமுன் முடித்த' 10-1
('லை பிறை' என்புழி 'லை' விட்டிசைத் தொலிப்பதாகக் கொண்டு, அது விளச்சீர் எனக் கொள்க. பகரம் விரிப்பினும் அமையும்.)

71) கலிவிருத்தம்: மூன்று கனிச்சீர் ஒரு மாச்சீரென முறையே வரும் நாற்சீரடி. கனிச்சீர் ஒரோவழிக் காய்ச்சீருமாம்.
'யாழைப்பழித் தன்னமொழி மங்கையொரு பங்கன்' 1-1
'சிகரத்திடை யிளவெண்பிறை வைத்தானிடந் தெரியில்' 2-1

72) இதுவுமது. விளச்சீர் நான்கான் வந்த அடி. நாலாஞ் சீர் சிறுபான்மை மாச்சீராதலும் கொள்க.
'எனக்கினித் தினைத்தனைப் புகலிட மறிந்தேன்' 1-1
'சடைசட விடுபெணை பழம்படு மிடவகை' 9-1

73) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் : மாச்சீர் விளச்சீர் விரவி வரும் அறுசீரடி. சிறுபான்மை காய்ச்சீர் வருதலும் (3-1-2; 8-1-1) கொள்க. பாசுரந் தோறும் (1-10) ஈற்றடியும், இறுதிப் பாசுரத்தில் முதலடியும் நான்காஞ் சீராக 'அவரெம்மையும்' எனப் புளிமாங்கனி பெற்று வந்தவாறு.

'கரையுங் கடலு மலையுங் காலையு மாலையு மெல்லாம்' 1-1

'சொல்லிற் குலாவன்றிச் சொல்லேன்
தொடர்ந்தவர்க் குந்துணை யல்லேன்' 3-1

'எந்தை யிருப்பது மாரூர் அவரெம்மையு மாள்வரோ வென்று' 11-1

74) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: விளச்சீர் மூன்று, மாச்சீர் ஒன்று- இவை இரட்டித்து வந்த எண்சீரடி. விளச்சீர் சிறுபான்மை காய்ச்சீராயினுமாம். (7-1-1; 9-1-6,7; 10-4-1,3)

'மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி
வெடிபடக் கரையொடுந் திரைகொணர்ந் தெற்றி' 1-1

'புலங்களை வளம்படப் போக்கறப் பெருகிப்
பொன்களே சுமந்தெங்கும் பூசல்செய் தார்ப்ப' 9-1

75) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: மாச்சீர், கூவிளம், தேமா, விளச்சீர் (பெரும்பான்மையும் கூவிளம்), விளச்சீர், மாச்சீர் - என வரும் அறுசீரடி. சிறுபான்மை ஐந்தாஞ் சீர் தேமா ஆதலும் (7-1; 9-1) கொள்க.

'மறைக ளாயின நான்கு மற்றுள பொருள்களு மெல்லா' 1-1

'ஆழி யாற்கரு ளானைக் காவுடை யாதிபொன் னடியின்' 10-1

76) தரவுகொச்சகம்: ஒரு விளச்சீர் அல்லது காய்ச்சீர், மூன்று காய்ச்சீர் - என வரும் நாற்சீரடி. காய்ச்சீர் பூச்சீராதலும் (3-1-3.......) ஒரோவழி உரித்து. மூன்றாஞ் சீர் கனிச்சீராதலும் (2-1......) கொள்க.

'பொருவனார் புரிநூலர் புணர்முலையுமை யவளோடு' 1-1

'தூர்த்தர்மூ வெயிலெய்து சுடுநுனைப்பகழி யதுவொன்றால்' 3-1

'செந்நெலங் கலங்கழனித் திகழ்திருவாஞ் சியத்துறையும்' 10-1

77) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: இரண்டு மாச்சீர், ஒரு காய்ச்சீர் - இவை இரட்டித்து வந்த அறுசீரடி.

'பரவும் பரிசொன் றறியேனான் பண்டே யும்மைப் பயிலாதேன்' 1-1

'கூடி யடியா ரிருந்தாலுங் குணமொன் றில்லீர் குறிப்பில்லீர்' 11-1

78) கலிவிருத்தம்: கனிச்சீர் மூன்று, மாச்சீர் ஒன்று - என வரும் நாற்சீரடி. கனிச் சீர் தண்பூவாதலும் (3-1-2) கொள்க.

'வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்' 1-1

'நாவின்மிசை யரையன்னொடு தமிழ்ஞானசம் பந்தன்' 10-1

79) இதுவுமது. கனிச்சீர் மூன்று, மாச்சீர் ஒன்று எனப் பிழையாமல் வந்த நாற் சீரடி.

'மானும்மரை யினமும்மயி லினமுங்கலந் தெங்கும்' 1-1

'மலைச்சாரலும் பொழிற்சாரலும் புறவேவரு மினங்கள்' 2-1

80)இதுவுமது: மேலுரைத்தது கொள்க.
'நத்தார்புடை ஞானன்பசு ஏறிந்நனை கவுள்வாய்' 1-1
'கரையார்கடல் சூழ்ந்த(க்)கழி மாதோட்டநன் னகருள்' 10-1

81) கலிநிலைத்துறை: மூன்று மாச்சீர் இரண்டு கூவிளம் - என முறையே வரும் ஐஞ்சீரடி.
'கொன்று செய்த கொடுமை யால்பல சொல்லவே' 1-1
'பல்லில் வெள்ளைத் தலையன் தான்பயி லும்மிடம்' 10-1

82) கலிவிருத்தம்: மூன்று கனிச்சீர், ஒரு மாச்சீர்- என முறையே வரும் நாற்சீரடி.
'ஊனுயுயிர் புகலாயக விடமாய்முகில் பொழியும்' 1-1
'மலந்தாங்கிய பாசப்பிறப் பறுப்பீர்துறைக் கங்கை' 6-1

83) இதுவுமது. மாச்சீர் அல்லது விளச்சீர், காய்ச்சீர், மாச்சீர் அல்லது விளச்சீர், காய்ச்சீர் - என வரும் நாற்சீரடி. வெண்டளை பிறழாமை காண்க.
'அந்தியு நண்பகலு மஞ்சு பதஞ்சொல்லி' 1-1
'மின்னெடுஞ் செஞ்சடையான் மேவிய ஆரூரை' 10-1

84) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: மாச்சீர் அல்லது விளச்சீர், காய்ச்சீர், மாச்சீர் அல்லது விளச்சீர், காய்ச்சீர் - இவை இரட்டித்து வரும் எண்சீரடி.
'தொண்ட ரடித்தொழலுஞ் சோதி யிளம்பிறையுஞ்
சூதன மென்முலையாள் பாகமு மாகிவரும்' 1-1
'கன்னலை யின்னமுதைக் கார்வயல் சூழ்கானப்-
பேருறை காளையையொண் சீருறை தண்டமிழால்' 10-1

85) கலிவிருத்தம்: விளச்சீர், காய்ச்சீர், விளச்சீர், காய்ச்சீர் - என வரும் நாற்சீரடி.
'வடிவுடை மழுவேந்தி மதகரி யுரிபோர்த்து' 1-1
'கூடலை யாற்றூரிற் கொடியிடை யவளோடும்' 10-1

86) தரவுகொச்சகம்: காய்ச்சீராக வரும் நாற்சீரடி. சிறுபான்மை விளச்சீர் வரினும் (5-1-3), தண்பூ வரினும் (1-4-2) கொள்க.
'விடையின்மேல் வருவானை வேதத்தின் பொருளானை' 1-1
'பாரூரும் பனங்காட்டூர்ப் பவளத்தின் படியானை' 10-1

87) ஆசிரிய இணைக்குறட்டுறை: முதலடி மூன்றுமடிகள் அறுசீர், ஏனை யிரண்டும் ஐஞ்சீர்.
'மாடமா ளிகைகோ புரத்தொடு மண்டபம் வளரும் வளர்பொழில்
பாடல் வண்டறை யும்பழ னத்திருப் பனையூர்' 1-1,2
'வஞ்சிநுண் ணிடைமங்கை பங்கினர் மாதவர் வளரும் வளர்பொழில்
பஞ்சின் மெல்லடி யார்பயி லுந்திருப் பனையூர்' 10-1,2

88) இதுவுமது:
'நம்பினார்க் கருள்செய்யு மந்தணர் நான்மறைக் கிடமாய வேள்வியுள்'
'அம்பொன் வீழிகொண் டீரடி யேற்கு மருளுதிரே.' 1-1,4

'வேதவே தியர்வேத நீதியர் ஓதுவார் விரிநீர் மிழலையுள்'
'பாத மோதவல் லார்பர னோடு கூடுவரே' 10-1,4

89) தரவுகொச்சகம்: காய்ச்சீர்களா னியன்ற நாற்சீரடி.
'பிழையுள்ன பொறுத்திடுவ ரென்றடியேன் பிழைத்தக்கால்' 1-1
'ஏராரும் பொழினிலவு வெண்பாக்க மிடங்கொண்ட' 11-1

90) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: நாலு காய்ச்சீர், இரு மாச்சீர்- என முறையே வந்த அறுசீரடி. காய்ச்சீர் சிறுபான்மை விளச்சீராதல் (1-1-3, 1-2-2, 2-1-4, ..........) கொள்க.
'மடித்தாடு மடிமைக்க ணன்றியே மனனேநீ வாழும் நாளும்' 1-1
'பாரூரு மரவல்கு லுமைநங்கை யவள்பங்கன் பைங்க ணேற்றன்' 10-1

91) கலிவிருத்தம்: மாச்சீரான் நிகழும் நாற்சீரடி.
'பாட்டும் பாடிப் பரவித் திரிவார்' 1-1
'பவளக் கனிவாய்ப் பாவை பங்கன்' 3-1

92) தரவுகொச்சகம்: மூன்று காய்ச்சீர். ஒரு விளச்சீர்- என முறையே வரும் நாற்சீரடி. சிறுபான்மை தண்பூச்சீர் வருதலும் (1-2-2) கொள்க. கனிச்சீர் வரினும் (3-1-2), இறுதிச்சீர் காயாக (3-1-4) நிகழினும் அமையும்.
'எற்றான்மறக் கேனெழுமைக் கும்மெம்பெரு மானையே' 1-1
'எங்கேனும் போகினுமெம் பெருமானை நினைந்தக்கால்' 3-1

93) கலிவிருத்தம்: மாச்சீர் நான்கான் நிகழுமடி.
'நீரு மலரு நிலவுஞ் சடைமேல்' 1-1
'அலைப்பை யரவே ரிடையா ளஞ்ச' 2-1

94) இதுவுமது.
'அழனீ ரொழுகி யனைய சடையும்' 1-1
'சுற்றார் தருநீர்ச் சோற்றுத் துறையுள்' 10-1

95) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: ஐந்து மாச்சீர், இறுதியில் ஒரு காய்ச்சீர் என நிகழும் அறுசீரடி.
'மீளா வடிமை யுமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே' 1-1
'துருத்தி யுறைவீர் பழனம் பதியா சோற்றுத் துறையாள்வீர்' 4-1

96) கலிவிருத்தம்: காய்ச்சீர் ஒன்று, விளச்சீர் இரண்டு, இறுதியில் காய்ச்சீர் அல்லது விளச்சீர் ஒன்று - என வரும் நாற்சீரடி. இடை விளச்சீர் காயாதலும் (1-2-2; 2-1-2; .........) ஒரோவழி மாச்சீராதலும் (6-1-3) கொள்க.
'தூவாயா தொண்டுசெய் வார்படு துக்கங்கள்' 1-1
'கரந்தையும் வன்னியு மத்தமுங் கூவிளம்' 10-1

97) — 100) கட்டளைக்கலித்துறை: ஈற்றுச்சீர் விளங்காயாதலன்றி (அவ்வெண்ணிக்கை மாறாத எழுத்துவகையால்) தேமாங்கனி யாதலும் (98-1-1), தேமாந்தண்பூ புளிமாந்தண்பூ வாதலும் (97-9-3; 98-11-1) கொள்க.

98-11-3-5, 100-1-3-5 என இவ்விரிடத்து மாத்திரம் வெண்டளை யாப்புப் பிறழ்தல் உணரப்படும்.

101) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்: இரண்டு மாச்சீர், ஒரு காய்ச்சீர் - இவை இரட்டித்து வரும் அறுசீரடி.

'பொன்னு மிதழி விரைமத்தம் பொங்கு கங்கைப் புரிசடைமேல்' 1-1
'மறையன் றுலின் கீழ்நால்வர்க் களித்தீர் களித்தார் மதில்மூன்றும்' 10-1

# பாகம் - 6

# பாட பேதங்கள்

# 16. பாடபேதங்கள்

## பாடபேதத்திற்கு இடப்பட்டுள்ள எண்ணும், பதிப்பாசிரியரின் பெயரும்

பதிப்புக்கள்

1. சுப்பராயஞானியார் [சபாபதி முதலியார்]
2. சிற்றம்பல ஞானியார் [அப்பர் தேவாரம் மட்டும்]
3. ஞானசம்பந்தம் பிள்ளை
4. செந்திவேலு முதலியார்
5. அப்பு பிள்ளை
6. நாகலிங்க முதலியார் [சுந்தரர் மட்டும்]
7. சாமிநாத பண்டிதர்
8. இராமாநந்த யோகிகள் [சுந்தரர் மட்டும்]
9. சைவசித்தாந்தக் கழகம்
10. சமாஜம்
11. தருமபுரம்
12. திருவாவடுதுறை
67. சண்முகம்பிள்ளை 1904
68. மணி. திருநாவுக்கரசு 1928

தலமுறைப் பதிப்பு

பதிப்புக்கள் சுவடிகள் பற்றிய விரிவான செய்திகளைத் தேவாரம் - முதல்தொகுதியுள் காண்க.

## பாடபேதத்திற்கு இடப்பட்டுள்ள சுவடிகளின் எண்ணமைப்பு - பிரஞ்சுஇந்தியஇயல் கலைக்கழகச் சுவடிகள்

13. R.E. 43615 முழுச்சுவடி
14. R.E. 10884 தலமுறை
15. R.E. 10885 தலமுறை
16. R.E. 30353
17. R.E. 47114 3-6
18. R.E. 47716 ஞான. 1-33 முதல் 3-92 வரை
19. R.E. 47731 அடங்கன்முறை
20. R.E. 47733 ஞானசம்பந்தர் தேவாரம்
21. R.E. 47735 தேவாரம் 2-5
22. R.E. 47736 தேவாரம் 1-6
23. R.E. 47741 ஞானசம்பந்தர் தேவாரம்
24. R.E. காஞ்சிச்சுவடி

Dr. சுவாமிநாதஐயர் நூல்நிலையச் சுவடிகள்

25. எண் 266B பண்முறை
26. எண் 1366 பண்முறை
27. எண் 1367 பண்முறை
28. எண் 1368 தலமுறை
29. எண் 1369 பண்முறை
30. எண் 1373 பண்முறை
31. எண் 1374 தலமுறை
32. எண் 1392 எழுகூற்றிருக்கை உரை
33. எண் 1393 எழுகூற்றிருக்கை உரை
33. A புதுச்சுவடி

அருணாசலம்பிள்ளை சுவடிகள்

34. பண்முறை
35. பண்முறை
36. தலமுறை
37. பண்முறை
38. பண்முறை

திருவாவடுதுறை ஆதீனச் சுவடிகள்

39. 38/161 பண்முறை
40. 38/164 பண்முறை
41. 38/.. பண்முறை
42. 38/166 பண்முறை
43. 38/167 பண்முறை

திருப்பதி கீழ்க்கலைஆராய்ச்சிநிலையச் சுவடிகள்

44. எண் 3726
45. எண் 4604
46. எண் 4607
47. எண் 4608
48. எண் 4609

சென்னை கீழ்க்கலைநூல்நிலையச் சுவடிகள்

49. D. 1130
50. D. 1131
51. D. 1132
52. D. 1133

தருமபுர ஆதீனச் சுவடிகள்

53. எண் 39
54. எண் 37

தஞ்சை சரசுவதிமகால் சுவடிகள்

55. 799G
56. 436A

துறையூர் பெரிய மடத்துச் சுவடி

57. எண் 215

| | | |
|---|---|---|
| 58. | | மார்ரே ராஜம் அவர்களின் செப்பறைச் சுவடி<br>கேரளா பல்கலைக்கழகச் சுவடிகள் |
| 59. | எண் 3870 | மூன்றாம்திருமுறை 118 ஆம்பதிகம் முதல் 6 ஆம் திருமுறை 95ஆம்பதிகம் முடிய. |
| 60. | எண் 3874 | அப்பர் திருமுறை மூன்றும் சுந்தரர் தேவாரம் சில ஏடுகளும் |
| 61. | எண் 4103A | பதிகங்கள் சிலவற்றின் சிலபாடல்கள் தமிழிலும் சில மலையாளத்திலும் எழுதப்பெற்றவை. |
| 62. | எண் 8507 | முதல்திருமுறை 12 ஆம் பதிகம் முதல் மூன்றாம் திருமுறை 115 முடிய. |
| 63. | எண் 10379 | மூவர்தேவாரப் பாடல்கள் சில. |
| 64. | எண் 11412 | சம்பந்தர் தேவாரமும் அப்பர் தேவாரமும் (VI-48 ஆம் பதிகம் முடிய) |
| 65. | எண் 11457 | IV 5-3 முதல் VI 68-1 வரை |
| 66. | எண் 11458 | பண்ணுக்குச் சில பாடல்களாக 4 ஆம் திருமுறை முடிய. |

## முதல் திருமுறை — பாடமும் பாடபேதங்களும்

| பாட்டு எண் | அடி | பாடம் | பாடபேதம் |
|---|---|---|---|
| 10 | 2 | சொல்ல — 1,3-5,7,9-12 | சொல — 58 |
| 12 | 2 | நீர்மையனாய் — 3-5,7,9-12<br>ஏறி — 7,9-12 | சீர்மையனாய் — 1,7,24,58<br>ஏறும் — 1,3-5,7 |
| 14 | 3 | ஒருவன் — 7,9-12 | ஒருவற்கு — 1,3-5,7<br>ஒருவர்க்கு — 24,58 |
| 15 | 2 | முனிந்தான் — 3,4,7,9-12 | முனிந்தன்று — 1,5,7,24,58 |
| 17 | 4 | முந்நீர் — 1,3-5,7,9-12 | முன்னீர் — 58 |
| 18 | 3 | கடவுள் — 7,9-12 | கடவுட்கு — 1,3-5,7,24,58 |
| 24 | 3 | நிழல் — 1,3-5,7,9,11,12 | நீழல் — 10 |
| 27 | 3 | கடுவனொடும் — 3,4,7,9-12 | கடுவனொடு — 1,5,7,24,58 |
| 29 | 1 | உயிர் — 1,3-5,7,9-12 | உரு — 7 |
| 30 | 1 | நஞ்சம் அமுது — 1,3-5,7,9-12 | நஞ்சம் அது — 24,58 |
| 33 | 2 | அருள் மாலை — 3,4,7,9-12 | அருமாலை — 1,5,24,58 |
| 36 | 1 | வாடை — 1,3-5,7,9,10,12 | ஆடை — 11 |
| 37 | 2 | பூகவளம் பொழில் — | பூகவனம் பொழில் — 1,3-5, 7,9-12 |
| 38 | 2 | புந்தியின் நால் மறையோர் — 3-5,7,9-12,68 | புந்தியினார் மறையோர் — 1,7 |
| 39 | 1 | ஒலி — 3-5,7,68 | ஒளி — 1,7,9-12,24,58 |
| 44 | 4 | பண்ணியல் — 1,3-5,7,9-12 | பண்ணிய — 24,58 |
| 48 | 4 | சொல்லுவோமே — 1,3-5, 7,9-12 | சொல்லுதுமே — 58 |

| பாட்டு எண் | அடி | பாடம் | பாடபேதம் |
|---|---|---|---|
| 49 | 2 | களை அவிழும் குழலார் — 1,3-5, 7,9-12 | களையவிழப் பூங்குழலார் — 58 |
| | 3 | துதைந்த — 3-5,7,9-12,68 | துதைந்து — 1,7,24,58 |
| 50 | 1 | தருக்கை — 3-5,7,9-12,68 | தருகை — 1,7 |
| | 2 | காதலித்தான் — 7 | காதல்செய்தான் — 1,3-5,7,9-12 24,58 |
| 52 | 1 | நன்றும் — 1,5,7 | நின்றும் — 3,4,7,9-12 |
| | 4 | பெற்று அமரும் — 1,3-5, 7,9-12 | பெற்றம் ஊரும் — 7 |
| 55-63 | 4 | கணபதி — 1,3-5,7,9-12 | கணவதி — 24 |
| 55-64 | 3 | செங்காட்டங்குடி — 1,3-5, 7,9-12 | செங்காட்டக்குடி — 58 |
| 56 | 3 | ஏத்தும் — 1,3-5,7,9-12 | ஏத்தருஞ் — 24 |
| 59 | 4 | காடுஅகமே — 3-5,7,9-12,68 | காடயலே — 1,7,24,58 |
| 61 | 4 | பெயர்த்து — 3,4,7,9-12 | பெயர்ந்து — 1,5,7 |
| 63 | 2 | நீங்கி நின்று — 3,4,7,9-12 | நீங்கி நின்ற — 7<br>நீங்க நின்று — 1,5,7 |
| 66 | 4 | களக — 1,5,24,49,58 | களப — 7; கழக — 3,4,7,9-12 |
| 67 | 1 | தண் நறு — 1,3-5,7,9-12 | தண் உறு — 7 |
| 71 | 1 | நீற்றுப்பூச்சும் — 3,4,49 | நீறுப்பூச்சும் — 7,9-12<br>நீறு பூச்சும் — 1,5,68 |
| 74 | 3 | இன்பினேடு — 1,5,7,9-12 | அன்பினேடு — 3,4,7 |
| 77 | 3 | பொழில்பாடு — | பொழில் மாடு — 1,3-5,7,9-12 |
| | 4 | பத்திமை — 3,4,7,9-12 | பத்திசை — 1,5,7 |
| 79 | 1 | செல்வினர் — | செலவினர் — 1,3-5,7,9-12 |
| 83 | 3 | கண்டவர் — 3,4,7,9-12 | கண்டலர் — 1,5,7 |
| 89 | 1 | அவள் — | அவர் — 1,3-5,7,9-12 |
| 91 | 1 | உருவான் — 3,4,7,9,11,12 | உருவாய் — 1,5,7,10 |
| | 4 | இரங்கும் — 1,5,7 | இறங்கும் — 3,4,7,9-12 |
| 92 | 1 | விண்ணேர்களும் மண்ணேர் களும் — 7 | மண்ணேர்களும் விண்ணேர் களும் — 1,3-5,7,9-12,68 |
| | 4 | விண் ஆர்குதி — 3,4,7,9-12 | விண்ணேர்துதி — 1,5 |
| 96 | 1 | ஒலியானும் — 1,3,4,7,9-12 | ஒலியானம் — 5,7 |
| | 2 | பந்தன்தன — 1,3-5,7,9-12 | சம்பந்தன — 7 |
| 97 | 4 | வணம் — 13 | வண்ணம் — 1,3-5,7,9-12 |
| 98 | 1 | தீண்டி — 1,3-5,7,9-12 | கீண்டி — 58 |
| | 2 | துறுகல் மிசை — 11,12 | துறுவல்மிசை — 1,3-5,7,9, 10,24,58<br>துறுவண்டு இசை — 7 |
| ஆர்த்த | எளிய | 6663 |
| | நிறைந்த, சேர்ந்த, அணிந்த, நிறைத்த | 526 |
| ஆர்த்தவன் | தற்பெருமை பேசி ஆரவாரித்தவன் | 1220 |
| ஆர்த்தார் புனல் | ஒலிமிக்க நீர்ப்பரப்பு | 4174 |
| ஆர்த்தான் | ஆப்தன், ஆர்ந்தான், நிறைந்தவன், அருளால் பிணித்தவன் | 1629 |
| ஆர்த்தி | உண்பித்து | 8192 |
| ஆர்தரு | பொருந்தும் | 131 |
| ஆர்தலை | ஆர்தல் உடையாய் | 433 |
| ஆர்திரை | ஆதிரைநாள் | 1974 |
| ஆர்ப்ப | அலர்தூற்ற | 1078 |
| ஆர்மலிஆழி | ஆரக்கால்கள் நிறைந்த சக்கரப்படை | 1467 |
| ஆர்வச்செற்றக்குரோதம் | ஆசை, மதம், கோபம் | 4219 |
| ஆர்வணம் | திளைத்து இன்புறுதல் | 3039 |
| ஆர்வலித்து | அன்பு மேலிட்டு | 4842 |
| ஆர்வித்த | நிறைவித்த | 1644 |
| ஆரணம் | வேதம் | 2009 |
| ஆரணீய | காட்டில் வாழும் | 7596 |
| ஆரம் | சந்தனம் | 156 |
| | முத்து | 382 |
| ஆரம்பக் குண்டர் | ஆரம்பவாதக்கொள்கை உடைய சமணர் (ஆரம்பவாதமாவது முதற்காரணம் இன்றியே காரியம் நிகழும் என்பது.) | 7159 |
| ஆரம்பர் | ஆரம்பவாதக்கொள்கை உடைய சமணர் | 106 |
| ஆரல் | மீன்வகை | 1918 |
| ஆரவன் | நிறைதலை யுடையவன் | 4526 |
| ஆரன் | ஆத்திமாலையான் | 5277 |
| ஆரா | ஆசை நிரம்பாத-தெவிட்டாத | 968 |
| ஆரார் | பகைவர் | 906 |
| ஆரானை | தெவிட்டானை | 6448 |
| ஆரிடத்தில் | அணுகுதற்கரிய சுடுகாட்டில் | 6389 |
| ஆரிடம் பாடலர் | இருடிகளுக்கு அருளிய வேதத்தைப் பாடலாக உடையவர் | 2943 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | **ஆ** | |
| ஆரும் | ஆரவாரம் செய்யும் | 706 |
| ஆரும்தனையும் | நிறையுமளவும் | 2114 |
| ஆரை | கொடிவகை | 2377 |
| ஆல் | அசையும் | 1198 |
| ஆலக்கோலத்தின் நஞ்சு | ஆலகால விடம் | 877 |
| ஆலம் | விடம் | 1986 |
| | கலப்பை, மலர்ந்த பூ | 2352 |
| | நீர் | 2063 |
| ஆலவாய் இலாய் | ஆலமரத்தின் அகமே இல்லமாக உடையாய் | 3350 |
| ஆலவாயிலாய் | மதுரை ஆலவாய்க்கோயிலில் இருப்பவனே | 3350 |
| ஆலி | நீர்த்துளி | 99 |
| ஆலிக்குமாறு | களிக்கும்வண்ணம் | 5240 |
| ஆலியா | ஆலித்து-துளிகளை வீசி | 2667 |
| ஆலும் | அகவும் | 780 |
| | அசையும் | 1549 |
| ஆலை | கரும்பு ஆலை | 78 |
| | கரும்பு | 691 |
| | தடுமாற்றம் | 6492 |
| ஆவ | இரக்கக்குறிப்பு | 2508 |
| ஆவணம் | உரிமைப்பத்திரம் | 2968 |
| ஆ வணவர் | காளை ஏறிவரும் கோலம் உடையவர் | 3638 |
| ஆவணவீதி | கடைத்தெரு | 71 |
| ஆவநாழி | அம்பு அறாத தூணி | 4832 |
| ஆவம் | அம்புப்புட்டில் | 5127 |
| ஆவாத அடல் ஏறு | வாத ஆ அடல் ஏறு-காற்றைப் போன்ற வலிய காளை | 6990 |
| ஆவி | வாவி-குளம் | 1109 |
| ஆவியர் | உயிர் போன்றவர் | 79 |
| ஆவில் ஐந்து | பஞ்ச கவ்வியம்-பசுவின் பால், தயிர், நெய், மூத்திரம், கோமயம் ஆகிய ஐந்து | 1213 |
| ஆவினில் ஐந்து | பஞ்சகவ்வியம் | 68 |
| ஆழி | ஆழமுடைய | 2551 |
| ஆழியவன் | சக்கராயுதமுடைய திருமால் | 4312 |
| ஆழிவலவன் | கடல் அரசன் | 4191 |
| ஆழிவிரல் | பெருவிரல் | 3664 |
| ஆள் அரி | விலங்குகளை ஆளும் சிங்கம் | 2393 |
| ஆள் ஆகார் | அடியார் ஆகமாட்டார் | 6125 |
| ஆள்உரு | அடிமைப்படாத | 5829 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | **ஆ** | |
| ஆள்வினை | முயற்சி | 3774 |
| ஆளி | சிங்கம் | 3163 |
| ஆளிய(காமன்), ஆளிய (குஞ்சரம்) | ஆண்ட | 7254 |
| ஆளியவே கிற்றீர் | அடிமைகொள்ள மாத்திரமே வல்லீர் | 7254 |
| ஆற்ற | மிக | 528 |
| ஆற்றற | 'ஆறற' என்றதன் விரித்தல்; வழிகெட | 5396 |
| ஆற்றனே | எல்லாச்சமய நெறிகளாகவும் உள்ளவனே | 5274 |
| ஆற்றாய் | நன்னெறி ஆகியவனே | 7243 |
| ஆற்றுத் தண்டத்து | நன்னெறியான அறத்தின் தண்டனையினால் | 5476 |
| ஆறன் | கங்கையைத் தரித்தவன் | 2330 |
| ஆறினர் பொய்அகத்து | பொய்ப்பொருள்கள்மீது செல்லும் ஆசை அடங்கப்பெற்றவர்கள் | 3175 |
| ஆறு | காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்ற ஆறு குற்றங்கள் | 2564 |
| | சிக்ஷை, வியாகரணம், சந்தம், நிருத்தம், சோதிடம், கல்பம் என்ற வேதாங்கங்கள் ஆறு | 2704 |
| ஆறுசமயம் | சைவத்தின் அகச்சமயம் ஆறு: அவை சைவம், பாசுபதம், மாவிரதம், காளமுகம், வாமம், வைரம் என்பன | 1405 |
| ஆறுபதம் (அடி 39) | ஆறுஆதாரம் | 1382 |
| | அங்கந்நியாச மந்திரங்கள் ஆறு: அவை ஹிருதயாயநம: சிரஸேஸ்வாஹா, சிகாயைவஷட், கவசாயஹூம், நேத்திராயவெளஷட், அஸ்த்ராயபட் என்பன. (அறுபதம் என்பதும் காண்க.) ஆறுகாலம் எனலுமாம். | 3564 |
| ஆறும் | (உள்ளம்) அடங்கும் | 7430 |
| ஆறும் செற்று | காமம் முதலிய உட்பகைகள் ஆறையும் அழித்து | 42 |
| ஆறும் நான்கும் | ஆறு அங்கங்களும் நான்கு வேதமும் | 1526 |
| ஆன் | பசு | 528 |
| | காளை | 664 |
| ஆன்அஞ்சு | பஞ்சகவ்வியம் | 1528 |
| ஆன்ஏறு | இடபம் | 1976 |
| ஆன | பசுவிலிருந்து பெறும் பஞ்சகவ்வியம் | 252 |
| ஆனகம் அஞ்சு | பஞ்சகவ்வியம் | 4682 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ஆ | |
| ஆனத்து முன் எழுத்து | ஆ என்ற எழுத்திற்கு முற்பட்ட அகரமாகிய எழுத்து | 6537 |
| ஆனலம் | அக்நி சம்பந்தம் | 1999 |
| ஆனலம் கொடுப்பார் | அக்நியில் அவி கொடுப்போர் | 1999 |
| ஆனன் | காளையை ஊர்தியாக உடையவன் | 5272 |
| ஆனாய் | நீங்காமல் இருப்பவனே, இடபத்தை உடையவனே | 7242 |
| | ஆனையே | 3390 |
| ஆனில் அம் கிளர் ஐந்து | அழகு பெருக்கும் பஞ்சகவ்வியம் | 1573 |
| ஆனில் பொலி ஐந்து | அழகு பெருக்கும் பஞ்சகவ்வியம் | 141 |
| ஆனே | பசுபதியே | 1680 |
| | இ | |
| இக்கத்தே | இடையூறாக | 1365 |
| இக்கு | கரும்பு; ஆகுபெயரால், இன்சொல் | 3718 |
| இகலி | மாறுபட்டு | 2370 |
| இகலியார் | பகைவர் | 1731 |
| இங்கணார் | எளிதில் இங்கே வருபவர் | 6209 |
| இங்கு | தங்குகின்ற | 3573 |
| இச்சித்து | விரும்பி | 1855 |
| இசங்கும் | இயங்கும் | 117 |
| இசுக்கு | இழுக்கு | 7735 |
| இசை | வேதமுழக்கம் | 1511 |
| இசையவர் | இசைபவர் | 2403 |
| இசையான் | இசைதலை உடையவன் | 136 |
| இஞ்சாயல் | இன்சாயல் | 1401 |
| இஞ்சி | மதில் | 1093 |
| இட்டத்தால் | விருப்புடன் | 3473 |
| இட்டம் | விருப்பம் | 1327 |
| இட்டளம் | சிறுமை, தொல்லை, துன்பம் | 7484 |
| இட்டன் | உன்னால் விரும்பப்படும் அடியேன் | 7724 |
| இட்டனை | விரும்பப்படுபவனை | 5271 |
| இட்டிது | விருப்பம் | 7566 |
| இட்டு | என்னைத் தனியே விட்டு | 7448 |
| | புறத்தோளில் தொங்கவிட்டு | 813 |
| இட்டு ஆறு | சிறிய வழியாக, விரும்பியவாறே | 5990 |
| இட்டுவர் | ஈட்டுவர் | 1263 |
| இட | கருணை மேலிட | 7707 |
| இடக்கிலேன் | இடமாட்டேன் | 7846 |
| இடக்கை | வாத்தியவகை | 3618 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | இ | |
| இடகிலேன் | கொடுக்கமாட்டேன் | 4293 |
| இடகிலோம் | கொடுக்கமாட்டோம் | 7600 |
| இடந்து | அகழ்ந்து | 556 |
| இடப்பான் | அகழ்வான் | 1367 |
| இடர்நோய் | இடர்செய்யும் பிறவிநோய் | 23 |
| இடல் | துன்பம் | 3923 |
| இடவை | ஒருதலம் | 6957 |
| இடறேன்மின் | இடையில் நின்று தடுக்காதீர் | 6523 |
| இடிஞ்சில் | இடிந்த வீடு | 4454 |
| இடுக்கு | துன்பம் | 3220 |
| இடுகு | சுருங்கிய | 7733 |
| இடு மிஞ்சு இதை | உயர்த்தப்பட்ட மிகுதியான கப்பற்பாய்கள் | 8267 |
| இடுமின் பலி என்று அடைவார் | சட்டநாதர் | 1049 |
| இடை | காலம் | 7670 |
| இடைஇரா | நடுஇரவு ஒழிந்த பிற இரவு யாமங்கள் | 4616 |
| இடை இலார் | இடையூறு இல்லாதவர்கள் | 3193 |
| இடைக்கணுய் | துன்பம் வரும்போது பற்றுக்கோடாக | 5450 |
| இடைக்கலம் | இடையே வந்த பொருள் | 4956 |
| இடையாது | இடையருது | 1009 |
| இண்டு | புலிதொடக்கிக்கொடி | 1842 |
| இண்டை | தலையில் சூடும் மாலை | 3557 |
| | இலை விரவிய பூமாலை | 577 |
| இணக்குறு | இணங்கும் | 1778 |
| இணங்கிலா மறை | இறைவனைக் கண்டிலாத மறை | 1570 |
| இணர்ந்து | தளிர்த்து, பூத்து | 6214 |
| இணைந்து | ஒன்றுகி | 1445 |
| இணைபத்து | இணைந்தபத்து-இருபது | 878 |
| இணைமலர் | தாமரைமலர் இரண்டு | 3884 |
| இணையல் | நட்பு | 1115 |
| இணையா | இணைந்து | 349 |
| இணையாரம் | இரு நுனிகளும் இணைக்கப்படாத மாலை | 4289 |
| இணைவன் | இணைபவன் | 195 |
| இதணம் | பரண் | 744 |
| இதம் | இன்பம் | 223 |
| இதழ் | இறகு | 7019 |
| இதழி | கொன்றை | 231 |
| இந்த நின்றேும் | இதோ நிற்கின்றேும் | 5134 |
| இந்திரஞாலம் | மாயப்பேச்சு | 1141 |
| இந்திரம் | ஐந்திரவியாகரணம், இந்திரச்செல்வம் | 6540 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | இ | |
| இந்து | சந்திரன் | 80 |
| இந்துசேகரன் | சந்திரனைத் தலையில் சூடியவன் | 7948 |
| இப்பி | முத்துச்சிப்பி | 709 |
| இமைத்து | மாத்திரைகொண்டு | 1369 |
| இமையார் | இமயமலையை உடையவர் | 1595 |
| இயக்கம் | முதல் | 4642 |
| இயக்கர் | யக்ஷர் என்னும் தேவசாதியினர் | 3620 |
| இயபரம் | இகபரம்; இம்மையும் மறுமையும் | 5143 |
| இயமானன் | ஆன்மா-உயிர் | 7320 |
| இயல் | தற்பெருமை | 127 |
| இயல்பு(வு) | உலக இயல்பு | 237 |
| இயலின் பறை | இசையிலக்கணத்திற்கு ஏற்ப அமைந்த வாத்தியம் | 1705 |
| இரங்கல் ஓசை | நெய்தல்யாழின் இரங்கற்பண் | 1876 |
| இரண்டு | சிவனும் சக்தியும் | 1538 |
| இரண்டும் மூன்றும் | ஐம்பொறிகள் | 4693 |
| இரண்டையும் நீக்கி | வேண்டுதல் வேண்டாமை எனும் இரண்டையும் அகற்றி | 4491 |
| இரணமதில் | புண்படுத்தும் மதில் | 3520 |
| இரத்து | கெஞ்சிவேண்டுதல் | 3103 |
| இரதம் | இரசம்-சுவை | 4851 |
| இரதி | ஆசை | 3651 |
| இரந்தவன் | இச்சித்தவன் | 7965 |
| இரப்பு | இரவு | 5264 |
| இரப்புஉள்ளீர் | இரத்தல் உடையீர் | 1066 |
| இரலை | மான் | 1267 |
| இரவணம் | இராதவண்ணம் | 1333 |
| | அழுதல் | 1333 |
| இரவணன் | இராவணன் | 1333 |
| இரவத்து | இரவில் | 7272 |
| இரவல் | யாசிக்காதே | 2551 |
| இரவன் | சந்திரன் | 885 |
| இரவனை | பிச்சை எடுப்பவனை | 5577 |
| இரவில் திரிவோர் | நிசாசரர்-அரக்கர் | 878 |
| இரவு | இரத்தல் | 136 |
| இரவு அண | இரத்தலைப் பொருந்த | 1333 |
| இரவு அமரும் நிறம் | இரவு போன்ற கரியநிறம் | 2928 |
| இரவொடு | இரத்தலோடு-வேண்டுகோளுடன் | 8003 |
| இராவணம் | (1) இல்லாதபடி (2) அயிராவணம் என்ற யானை | 5737 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | இ | |
| இராவணன் | (1) ராவணன் (2) கரிய நிறமுடையவன் (3) அகோர மூர்த்தி | 5737 |
| இரிய | அஞ்சி ஓட | 1519 |
| இருக்க | வாளா இருக்க | 7707 |
| இருக்-கீதம் | சாம வேதம் | 4167 |
| இருக்கு | வேதம் | 1508 |
| இரு கிரகம் | இராகுவும் கேதுவும் | 3520 |
| இருதலைப் போகம் | இம்மை மறுமை இன்பங்கள் | 1257 |
| இருது உடை அகலம் | பல ருதுக்கள் கொண்ட நீண்டகாலம் | 1312 |
| இருந்தவர் | பெருந்தவத்தோர் | 2513 |
| இருநிதி | சங்கநிதி பதுமநிதி (அடி-29) | 1382 |
| இரும்பு பிடித்தவர் | கோடரி பிடித்த சண்டேசர் | 5159 |
| இருமூன்று | வேதத்தின் ஆறு அங்கங்கள் | 1838 |
| இருமூன்று சமயம் | ஆறு சமயங்கள் | 6759 |
| இருமையின் ஒருமை | அம்மையப்பர் வடிவம் (அடி-42) | 1382 |
| இருவகை | இருவகையான திருவுள்ளக்குறிப்பு; "இறுவகை": இற்றுப்போம்படி | 1322 |
| இருவர் | திருமாலும் பிரமனும் | 234 |
| | சிவனும் சக்தியும் | 449 |
| இருவரையும் மூவரையும் | இருவினை, முக்குணம் இவற்றை | 7235 |
| இருவளி | பிராணன், அபானன் ஆகிய வாயுக்கள் (அடி-18) | 1382 |
| இருவி | தினை கொய்த தாள் | 825 |
| இருள் போழும் | இருளைப் போக்கும் | 2453 |
| இரை | முழக்கம் | 2353 |
| இரைக்கு இடைந்து | உணவுக்காக அல்லலுற்று | 4926 |
| இரைக் கொடி | இரையைக் கவர்ந்த காக்கை | 3154 |
| இரைத்து | ஒலித்து | 117 |
| இரைப்பதன்முன் | மூச்சுவாங்குதலுக்கு முன் | 2524 |
| இரைப்பன் | ஆரவாரச் சொற்களையுடையேன் | 7850 |
| இரைப்பா | முழக்கம் உடைய, ஓசை ஒலியாவும் ஆனவனே | 5235 |
| இரைப்பானேன் | வெறும் ஆரவாரம் செய்யும் நான் | 7850 |
| இரைபயப்புணரி | அமுதத்தை பயக்கும் பாற்கடல் | 3615 |
| இரைபவப்புணரி | அமுதம் உண்டாக்கும் இடமான பாற்கடல் | 3615 |
| இல்அகவிளக்கு | வீட்டிற்குள் விளங்கும் விளக்கைப் போல்வது | 4280 |
| இல்ஆடி | வீடுவீடாகச் சென்று | 6337 |
| இல்செய்தல் | மணத்தல்-இல்லறம் மேற்கொளல் | 7257 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | இ | |
| இல்லக் கோலம் | மனைவாழ்க்கையாகிய வேடம் | 5436 |
| இல்லாத தரவு | பொய்யான யான் எனது என்னும் செருக்கு | 7235 |
| இல்லி | இல்லாதவன் | 1763 |
| இலம் | இல்லம் - மனை | 850 |
| இலம்காலம் | நற்காலமின்மை | 6868 |
| இலயம் | நடனஒழுங்கு, தாளம் | 2192 |
| | கூத்து | 4405 |
| இலாடம் | (இ)லலாடம்- என்றதன் முதற்குறை; நெற்றி | 6867 |
| இலாப்பட்ட | இல்லாது மறைந்த | 5509 |
| இலைஆர்படை | முத்தலைச்சூலம் | 1681 |
| இலைமருது | மருதோன்றி இலை | 63 |
| இலை மலிதர | வாயில் வெற்றிலை நிறைய | 1335 |
| இலையே ஒத்தி | இல்லாதவனைப் போலவும் உள்ளாய் | 7270 |
| இவர் ஆணீர் | இவர் பாரீர் | 2670 |
| இழக்கோ | இழப்பேனோ | 3479 |
| இழியாமை | இகழாமல் | 1639 |
| இழுதையேன் | அறிவில்லாத நான் | 7849 |
| இழை | பூணூல் | 1240 |
| இழை ஆர் இடை | நூல் போன்ற இடுப்பு | 120 |
| இழைத்த இடை | நூல் போன்ற இடுப்பு | 746 |
| இள எழுந்த | இளமையுடன் மலர்ந்த | 6182 |
| இளக | வேகம் குறைய | 1388 |
| இளகான் | இளமை அடையான் | 4971 |
| இளகு அக்கமலத்து ஈன் கள் | மலரும் தாமரை பிலிற்றும் தேன் | 1104 |
| இளம்உழை | இளமையை உடைய மான் | 2469 |
| இள மண நாகு | இளமையும் மணமும் உடைய பெண்பசு (சுரபி) | 4200 |
| இளி | ஏழிசையுள் ஒன்று | 2202 |
| இறக்கம் செய்வான் | உயிரினங்களைத் தன்பால் ஒடுக்கிக் கொள்பவன் | 6886 |
| இறங்கும் | நிலைகுலையும், சினக்கும் | 2711 |
| இறந்த பிறவி | முன்னைத் தொடர்ச்சியான பிறவி | 1258 |
| இறப்பன் | (இம்மண்ணுலகைக்) கடப்பேன் | 5236 |
| இறவி | இறத்தல் | 6541 |
| இறவு | இறத்தல் | 1185 |
| | மிகுதி | 2665 |
| இறுத்தான் | நெரித்தான் | 933 |
| இறுதி | அழித்தல் | 88 |
| இறுவரை | பெரிய மலை | 6855 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | இ | |
| இறை | முன்கை | 159 |
| | சிறிதும் | 203 |
| | இறையளவு | 4626 |
| | இறைமை-கடவுள்தன்மை | 1693 |
| இறைக் காட்டாய் | அழிவைக் காட்டமாட்டாய் | 5331 |
| இறைக் காட்டி | சிறிது காலம் தன் வலிமையைக் காட்டி | 5331 |
| இறைகளோடு இசைந்த இன்பம் | இராஜசுகம் | 7308 |
| இறைச்சிமண்சுவர் எறிதல் | இறைச்சியாகிய மண்ணை அப்பிச் சுவர் எடுத்தல் | 2331 |
| இறைபடாத | சிறிதும் தளராத | 510 |
| இறையின் | சிறியதனல்-சிறிய தீப்பொறியால் | 3279 |
| இறையும் | சிறிதும் | 149 |
| இறைவு | அழிவு | 1843 |
| இறைவைத்து | விடைகூறி | 1862 |
| இன்பவாணரே | இன்பத்துடன் வாழ்பவரே | 5581 |
| இன்னாள் | இனிய வாழ்நாள் | 1267 |
| இனது | இன்னது | 1312 |
| இனது அளவில் | இன்ன கால அளவிற்குள் | 3545 |
| இனம் | மறையோர் கூட்டம், மான் கூட்டம் | 2698 |
| இனம் மலி கணம் | பல இனத்தால் நிறைந்த அரக்கர்கணம் | 235 |
| இனித்தம் | இனிதாகும் தன்மை | 4952 |
| இனிதன் | இனியவன் | 1614 |
| இனிது இருந்தான் | இனிது இருந்த சம்பாதி என்ற கழுகரசன் | 1930 |
| | ஈ | |
| ஈகை | இண்டஞ்செடி | 2377 |
| ஈங்கை | ஒருகொடி | 6783 |
| ஈச்சோப்பி | ஈஓட்டி | 2330 |
| ஈஞ்சு | ஈச்சமரம் | 2662 |
| ஈடகம் | இடும் வழக்கமுள்ள வீடுகள் | 2412 |
| ஈடம் | இடம் | 2628 |
| ஈடு | பெருமை | 338 |
| | ஒப்பு | 2337 |
| | இடப்படுதலையுடைய அணிகலன்கள் | 7952 |
| ஈண்ட | நெருங்க | 188 |
| | தோண்ட | 4649 |
| ஈமவனம் | சுடுகாடு | 40 |
| ஈர் | ஈர்க்கு | 581 |
| | குளிர்ச்சி | 7428 |
| ஈர்அயில் | பிளக்கும் கூர்மை (அடி-10) | 1382 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ஈ | |
| ஈரம் | அன்பு | 32 |
| ஈளை | கோழைத்தொடர்பான நோய் | 2557 |
| ஈளைப் படுகு | உலராத சேறு-ஒருவகைக் களிமண் | 727 |
| | உ | |
| உக்கத்தே கனன்று | தீ ஊழியிலும் அழியாது ஒளிவீசி | 1363 |
| உக்கவர் | இறந்துபட்ட அரியும் பிரமனும் | 2314 |
| உக்களித்து | கர்ச்சனை செய்து | 4042 |
| உக்கிரம் | மிக்க சினம் | 7610 |
| உகக்கும் | உயரும், உவக்கும் | 18 |
| உகந்த | உயர்ந்த, உவந்த | 548 |
| உகந்தான் | உயர்ந்தவனும் சம்பாதி | 1934 |
| | அருள்செய்து உயர்ந்தவன் | 950 |
| உகலி | உகளி-துள்ளி | 1731 |
| உகவாதார் | பகைவர் | 2055 |
| உகவை | விரிப்பு | 2055 |
| உகளித்து | குதித்து | 4042 |
| உகளும் | துள்ளும் | 2235 |
| உகிர்இடை | நகங்களின் இடையே | 223 |
| உகுத்தி | உகச்செய்து | 2027 |
| உகைத்து | செலுத்தி | 741 |
| உச்சம் | உச்சிப்போது | 1360 |
| உச்சம்போதா | உச்சிப்போதிலும் | 7651 |
| உச்சிகொளாமை உண்டு | உச்சிப்போது ஆவதன்முன் உணவுண்டு (பௌத்தர்கள்) | 53 |
| உச்சியே தாள் தங்கன் (தங்கன்தாள்) | என் உச்சியில் தன் தாளைத் தங்கச்செய்தவன் | 5595 |
| உச்சி வம் | உச்சிப்போதில் வாருங்கள் | 2521 |
| உசிர்ப்பு | உயிர்ப்பு | 4614 |
| உட்க | அஞ்ச | 700 |
| உடல் அஞ்சினர் | பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை என்ற ஐந்து திருமேனி உடையவர் | 1538 |
| உடல்கவசர் | உடம்பை மூடுபவர் | 3590 |
| உடற்று | மாற்றாரது பகைமை | 1463 |
| உடறிய | உடற்றிய-சீற்றத்துடன் வருத்திய | 5191 |
| உடை நவின்றார் | உடுத்தார் | 2701 |
| உண் | உண்ணுதல் | 4 |
| உண்டியால் வருந்த | உணவின்மையால் வருந்த | 2008 |
| உண்டுஇலை | அஸ்தி, நாஸ்தி என்னும் சமணர்கொள்கை | 1056 |
| உண்டு உடுப்பு இல் வானவர் | உண்பதும் உடுப்பதும் இல்லாத தேவர்கள் | 3513 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | உ | |
| உண்டு உணப்பாலதே | உண்ணுதல் செயற்பாலதோ | 2783 |
| உண்டும் | உள்ளது என்றும் | 7280 |
| உண்ணம் | உஷ்ணம்-வெம்மை | 3906 |
| உண்ணவனே | உண்ட அவனே | 1096 |
| உண்ணுழிகையார் | மூலத்தானத்தில் இருப்பவர் | 6765 |
| உண்ணி | உண்பவன் | 434 |
| உண்ணிய | உண்பதற்கு | 4275 |
| உண்ணீர் | ஒரு வைப்புத்தலம் | 6324 |
| உண்பின உலகு | முன்னே வினைப்பயனைத் துய்க்கும் மண்ணுலகம் | 2953 |
| உண்பினுல் | உண்டபின்னர் | 2778 |
| உண்பு | உண்ணுதல் | 536 |
| | உணவு | 825 |
| உண்புநீங்கி | பிராரத்தவினே நீங்கி | 536 |
| உணங்கல் | வற்றல் | 4447 |
| | சோறு | 5283 |
| உணங்கல் ஓடு | வற்றிய தலேஓடு | 3110 |
| உணர்வெனும் ஊர்வது | ஞான ஊர்தி | 6831 |
| உத்தரமலேயர் பாவை | இமவான் மகளான உமாதேவி | 4422 |
| உதகரணம் | வாகனமாக் கோடல் | 4302 |
| உதைகொண்ட | உதைத்த | 943 |
| உந்திய | மிக்க | 107 |
| உந்நின்ருர் | உதோ நின்ருர் | 5745 |
| உம்பர் | தேவர் | 711 |
| உம்பர்வாணரே | தேவர்களுடன் ஒப்ப வாழ்பவரே | 5582 |
| உம்பரான் | தேவேந்திரன் | 7420 |
| உம்பரும் மாறு ஏலாதார் | தேவராலும் எதிர்க்கமுடியாத அரக்கர் | 1362 |
| உமிழ்திரை | அலேகள் வீசும் கடல் | 3008 |
| உமிழ்ந்தனே | முன்பு விழுங்கிய உயிர்களே உடம்புகளில் புகுத்தினுய் | 1788 |
| உமைதனே இகழ்வு செய்தவன் | பிரமன் | 1341 |
| உய்த்தல் | பொருந்துவது | 1004 |
| உயர்ந்தபோது | வளரும் பருவம் | 2734 |
| உயர்ந்தவன் | மண்ணுக்கும் விண்ணுக்குமாய் ஓங்கிய திருமால் | 1827 |
| உயர்ந்தேன் | நீங்கினேன் (கலி. 94-17, 129-17) | 4176 |
| உயிர்ஆவணம் | உயிரை அடிமை கொண்டு எழுதிய பத்திரம் | 6506 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | உ | |
| உயிர்நிலே (உடம்பு) | உயிர் நிற்றலுக்கு இடமாகிய (உடல்) | 4673 |
| உயிர் வவ்வு பாசம் | உயிரைக் கவரும் பாசக்கயிறு | 4308 |
| உயிராவணம் இருந்து | உயிர்ப்பு இயங்காத வண்ணம் மூச்சை அடக்கி | 6506 |
| உரகம் | பாம்பு | 4784 |
| உரங்கள் | வலிமை அனைத்தும் | 4189 |
| உரநீர் | வலிய நீர்-கங்கை | 382 |
| உரம் | திண்ணிய அறிவு | 2055 |
| உரவம் | உரகம்-பாம்பு | 101 |
| | உரம்-வலிமை | 374 |
| உரவு | ஞானம் | 1102 |
| | கடல் | 2305 |
| உரன் | உரம்-மார்பு | 1989 |
| உரி | தோல் | 513 |
| உரிஞ்சன | உரிந்தன | 829 |
| உரிஞ்சி | மோதி | 46 |
| உரிஞ்சு | உராயும் | 37 |
| உரிஞ்சு ஆய | உடையை அகற்றிய | 1980 |
| உரித்தனர் | தோலே உரித்தார் | 1261 |
| உரித்தோல் | உரியாகிய தோல் | 1618 |
| உரிதா | உரியதாக | 375 |
| உரிதாய | உரியது ஆக்கவேண்டி | 1290 |
| உரிந்து | ஆடையை அகற்றி | 4077 |
| உரிப்பை | தோல் | 5651 |
| உரிமை | திருவருள் உரிமை | 2198 |
| உரிவை | தோல் | 130 |
| உரு | அழகு | 1230 |
| | அச்சம் | 1328 |
| உரு அமர் சடை | அழகு பொருந்திய சடை | 3867 |
| உருத்திரபட்டம் | தோள்பட்டிகை | 4182 |
| உருத்திரபல்கணத்தார் | சிவனடியார்கள் | 1971 |
| உருத்திரர்கள் | சிவனடியார்கள் | 1778 |
| உரும் | இடி | 8152 |
| உருமம் | உச்சிப்போது | 2723 |
| உருவ | நேரே செல்ல | 6502 |
| உருவம் கடியானே | உருவம் சிறந்த மன்மதனே | 6410 |
| உரு வரைகின்ற நாள் | உடம்பு நீங்கும் காலம் | 2406 |
| உருவிலாளர் | உருவத்தை மறைத்துக்கொள்பவர் | 248 |
| உருளும் கதிர் இரண்டும் | உருண்டு ஓடும் சூரியசந்திரர் | 6399 |
| உருளும்போது | இறக்கும்போது | 5552 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | உ | |
| உரை | வேதம் | 46 |
| | புகழ் | 132 |
| உரையா | உரைத்து—புகழ்ந்து | 1649 |
| உரையினல் உயர்ந்தவர் | புகழால் மேம்பட்டவர் | 2307 |
| உரையும் ஆறு | உரைக்கும்(-துதிக்கும்)வகை | 7992 |
| உரைவந்த பொன்னின் | உரைகல்லில் உரைக்கப்பட்டு மாற்று உயர்ந்து விளங்குகின்ற பொன்னைப் போல | 2428 |
| உலகில் | உயர்ந்தோர் நடையில் | 4072 |
| உலகினை ஏழும் | ஏழுலகினையும் | 4310 |
| உலகு | சிவலோகம் | 2607 |
| உலகுண்டது | உலகறிந்தது | 2771 |
| உலந்தவர் | வாடியவர் | 464 |
| உலந்து | வற்றி | 953 |
| உலப்பு இல் | அழிவு இல்லாத | 772 |
| உலம் | வலிமை | 249 |
| உலவில் மட்டு வரும் தழல் | உலகை அழிக்கும்அளவில் வரும் காலாக்கினி | 1263 |
| உலறு | வற்றிய | 725 |
| உலை | உடல் | 8258 |
| உலோபி உண்ணுர் | உண்ட நஞ்சினை விழுங்காமல் கழுத்திலேயே தங்க வைத்துக்-கொண்டமையால் உலோபி என்பது நகைக்குறிப்பு | 6610 |
| உவகை | மகிழ்ச்சி | 2119 |
| உவமனே ஒக்கும் | போலியே போன்று பொய்யாகும் | 7369 |
| உவர் | உவர்நீர்க்கடல் | 1697 |
| உவரி | கடல் | 2157 |
| உவரோதம் | தடை—இடையூறு | 2403 |
| உழல் | திரியும் | 894 |
| உழல் பிஞ்ஞகன் | உழலும் சிவன் | 1814 |
| உழலும் | வருந்தும் | 1030 |
| உழலை யாக்கையை | துன்பத்திற்கு வாயிலான உடம்பை | 5358 |
| உழறிய | கலக்கிய | 4075 |
| உழறும் | உழலும்-சுற்றித்திரியும் | 6527 |
| உழிதந்து | திரிந்து | 7 |
| உழிதர்வேனை | திரிந்த என்னை | 4214 |
| உழிதரும் ஆதனேனை | அலையும் குருடனை என்னை | 4432 |
| உழிதலை ஒழிந்து | திரிதலை ஒழித்து | 3007 |
| உழுவை | புலி | 736 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | உ | |
| உழை | பக்கம் | 584 |
| உழைஞர் | பக்கத்தில் உள்ள உறவினர் முதலியோர் | 4820 |
| உழைமான் | புள்ளிமான் | 3493 |
| உள்அகப் பாடும் | மனம் பொருந்தப் பாடும் | 1104 |
| உள் ஆடி | உள்ளம் களிசிறந்து | 1990 |
| உள்க | நினைக்க | 2198 |
| உள்கு | (உண்ண) நினைப்பது | 4241 |
| உள்குதல் | நினைத்தல் | 33 |
| உள்குதும் | நினைப்போம் | 5121 |
| உள்மயத்த | நெஞ்சு அறிந்த வகையில் | 7712 |
| உள் முத்து அரும்ப | உள்ளத்தில் முத்துப் போன்ற மாசற்ற நிலை தோன்ற | 2126 |
| உள்வேர் | நினைப்பீர் | 582 |
| உள்ளத்தீரே | உள்ளமே | 2552 |
| உள்ளல் நோக்கி | நினைத்தலைக் கண்டு | 5953 |
| உளர் இளஞ்சினை | அசையும் இளங்கொடி | 2469 |
| உளையா | உளைந்து-வருந்தி | 378 |
| உளையும் பூசல் | வருந்துவதற்குக் காரணமான போர் | 1558 |
| உளையே ஒத்தி | இருப்பவனைப் போலவும் உள்ளாய் | 7270 |
| உறக் கணித்து | இறைவன் புகழை நன்கு எண்ணிப்பார்த்து | 5850 |
| உறவி | உறவு – உயிர் | 2196 |
| உறவுகோல் நட்டு | அன்புகொள்ளும் உறவாகிய கோலை நட்டு | 6132 |
| உருமைகள் | பொருந்தாச் செயல்கள் | 7933 |
| உறுக்கிய | சினந்து அதட்டிய | 5188 |
| உறை | உறைவிடம் | 2893 |
| உறைப்பு | திருவருள் முதிர்ச்சி | 1887 |
| | வலி | 7076 |
| உறைப்புப் பாடி | உறுதியுடன் பாடி | 5745 |
| உறைபதி | தங்கும் இடம் | 203 |
| உறை பிணர் திரை | நீர்த்துளிகளுடன் மடங்கும் அலைகள் | 205 |
| உறை வளர் ஊன் | வாழ்நாள் பொருந்தி வளரும் உடம்பு | 2404 |
| உறைவு | இருப்பிடம் | 3676 |
| உன் | உன்னுதல்-தியானம் | 2605 |
| உன்மத்தன் | பித்தன் | 1989 |
| உன்னதமாய் | உயர்வாக | 8141 |
| உன்னம் | தியானித்தல் | 1897 |
| உன்னி உணரும் | தியானம் செய்து உணருமின் | 2408 |
| உன்னிய | (உண்ணக்) கருதிய | 462 |
| | ஊ | |
| ஊகம் | குரங்குவகை | 824 |
| ஊசலாள் | ஊஞ்சல் ஆடுபவள் | 6046 |
| ஊடு அலில் (அல்லில்) | இரவூடே-நள்ளிரவில் | 2192 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ஊ | |
| ஊண் அருந்தவம் | உண்ணாநோன்பு | 2035 |
| ஊத்தை | அழுக்குக்கள் ஊறும் தன்மை உடையது | 4901 |
| ஊதல் ஆக்கை | பருத்த உடல் | 2557 |
| ஊர்தி | ஊர்பவன் | 2356 |
| ஊர் முனி பண்டம் | ஊரார் வெறுக்கும் பொருள் | 6126 |
| ஊரல் | ஏறுதல் | 6436 |
| ஊரன் | சுந்தரன் | 7804 |
| ஊழிஆய பார் | யுகமுடிவிலான நிலஉலகம் | 2112 |
| ஊழி(க்)கன்றை | ஊழிகளைக் கோபிப்பவனை (-கடந்தவனை); ககரம் விரித்தல், ஓசைபற்றி. | 7056 |
| ஊழியான் | உருத்திரன் | 7420 |
| ஊழும் மாறும் | மாறாத முறையாகிய ஊழும் என்னிடத்து மாறுபடும் (வளைகழலுதல் முதலிய) நிகழ்வுகள் | 7609 |
| ஊற்றம் | வலிமை | 552 |
| ஊற்றுத்தண்டு | கரும்பு | 5476 |
| ஊறல் | பழகுதல் | 275 |
| | தக்கோலம் என்ற திருப்பதி | 6324 |
| ஊறுவார் | கசிவார் | 5946 |
| ஊன் | உடம்பு | 136 |
| ஊன் உற்ற தலை | இறைச்சி நாறும் பிரம்மகபாலம் | 1487 |
| ஊன் கண்ணோட்டம் | உடம்பின்மீது கொள்ளும் தாட்சிண்யம்-ஆசை | 8153 |
| ஊன் சலிக்கும் | உடல் வாடும் | 1385 |
| ஊன சம்பந்தத்து | இழிந்த உடல் முதலிய பாசபந்தங்களின் | 4078 |
| ஊனத்து இருள் | குறையினை உண்டாக்கும் மும்மலம் | 406 |
| ஊனம் | பிறவித்துயர் | 895 |
| | குறைபாடு | 4944 |
| ஊனம் இல்லி | குறை ஏதும் இல்லாதவன் | 3395 |
| ஊனிகள் | உடம்பை வளர்ப்பவர், ஊனம் உடையோர் | 1414 |
| ஊனைக் காவி | வெற்றுடலைச் சுமந்து | 5545 |
| ஊனொடு உண்டல் | இதனைத் 'தீது' என்றவர் சிவகோசரியார்; 'நன்று' என்றவர் கண்ணப்பர் | 3369 |
| | எ | |
| எக்கர் | இறுமாப்புடைய சமணர் | 3215 |
| எக் கரையாரும் | உலகின் எந்தப்பகுதியில் உள்ளோரும் | 3430 |
| எச்சம் | யக்ஞம்-வேள்வி | 885 |
| | புகழ் | 3601 |
| எச்சன் | வேள்விவடிவினன் (அடி-38) | 1382 |
| | யாகத்தின் அதிதேவதை | 4309 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | எ | |
| எச்சன் இணைதலை | யக்ஞபுருஷனுடைய தலை இரண்டு: "த்வே சீர்ஷே" 'இவனுக்கு இரண்டு தலைகள்' என்பது வேதம். | 7202 |
| எச்சு | யக்ஞம்-வேள்வி | 7707 |
| எச்சும் | போற்றும் | 935 |
| எஞ்சத் தேய்வு இன்றிக்கே | எஞ்சாமல்-தேயாமல் | 1369 |
| எஞ்சல் | குறைதல் | 2739 |
| எட்டர் | அட்டமூர்த்தி ஆனவர் | 1538 |
| எட்டினுல் திகழும் திருமூர்த்தி | எட்டுவகையாகத் திகழும் திருவடிவங்களை உடையவன் | 7786 |
| எட்டு இசைந்த மூர்த்தி | எட்டுவகையாகத் திகழும் திருவடிவங்களை உடையவன் | 3351 |
| எட்டுக் கலை | எட்டுப்பொழில்களையும் ஆடை போலச் சூழ்ந்துள்ள கடல்கள் எட்டு: அவை (1)உவர்க்கடல் (2)பாற்கடல் (3)தயிர்க்கடல் (4)நெய்க்கடல் (5)கருப்பஞ்சாற்றுக்கடல் (6)தேன்கடல் (7) நன்னீர்க்கடல் என்ற ஏழும், அவற்றிற்கு அப்பால் சக்கரவாளகிரியைச் சூழ்ந்துள்ள பெரும்புறக்கடலும் என எட்டு. | 6602 |
| எட்டுக் களைகண் | களைகண்-ஈண்டுப் பயன் என்னும் பொருளது; பயன்கருதிச் சிவ-பருமானை வழிபட்டார் அடையும் உலகங்கள் எட்டு: அவை (1)புவலோகம் (2)சுவலோகம் (3)மகலோகம் (4)சனலோகம் (5)தவலோகம் (6)பிரம்மலோகம் (7)விட்டுணுலோகம் (8) உருத்திரலோகம் என்பன. | 6602 |
| எட்டுக் காட்சி | நாவலந்தீவு முதலிய எட்டுப் பகுதிகளிலும் காணப்படும் மலைகள், ஆறுகள், உயிரினம் முதலியவை பற்றிய எட்டு இயல்புகள் | 6602 |
| எட்டுக் காப்பு | காப்பு-அரண்: மலையரண்எட்டு: ஏழுகடல்களையும் சூழ்ந்துள்ள மலைகளுடன் சக்கரவாளகிரியையும் சேர்க்க அவை எட்டாம். | 6602 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | எ | |
| எட்டுத்திகை | திகை-திசை; கிழக்கு முதலிய நான்கும் கோணத்திசைகள் நான்கும் | 6602 |
| எட்டு நகை | நகை-ஒளி– ஒளியுடைய பொருள்கள்; இராகு கேதுக்கள் ஒழிய ஏனைக்கோள்கள் ஏழும் விண்மீன்கள் அனைத்துமான ஒன்றும் | 6602 |
| எட்டு நன்மை | அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப்பயன்கள் நான்கும் அவற்றின் மறுதலையான மறம், இன்மை, துன்பம், பிறப்பு என்ற நான்கும் | 6602 |
| எட்டு நாள் | நாள்-இங்கே காலம்; காலத்தை (1) நாள் (2) வாரம் (3) பக்ஷம் (4) மாதம் (5) இருது (6) அயனம் (7) வருடம் (8) யுகம் எனப் பகுப்பர். | 6602 |
| எட்டுப்புகை | புகை-புகுதல்-கதி-பிறப்பு: (1) தேவர் (2) மனிதர் (3) விலங்கு (4) பறப்பன (5) ஊர்வன (6) நீர்வாழ்வன (7) தாவரம் என்ற ஏழினோடு நரகரையும் சேர்க்கப் பிறப்பு எட்டாகும். | 6602 |
| எட்டுப்புலன் | கருவிகள் எட்டு: (1) பஞ்சதன்மாத்திரைகள் (2) பஞ்சபூதங்கள் (3) ஐம்புலன்கள் (ஞானேந்திரியம்) (4) ஐந்து கன்மேந்திரியங்கள் (5) அந்தக்கரணம் (மனம், புத்தி, சித்தம்) (6) குணங்கள் மூன்று (சத்துவம், ரஜஸ், தமஸ்) (7) மூலப்பிரகிருதி (8) புருடன் என்பன அவை. | |
| எட்டுப் பூதலங்கள் | பூமியும் மற்ற ஏழு உலகங்களும் | 6602 |
| எட்டுப் பொழில்கள் | எட்டுத்தீவுகள்: (1) நாவல் (2) சாகம் (3) குசை (4) கிரௌஞ்சம் (5) சான்மலி (6) கோமேதகம் (7) புட்கரம் என்னும் ஏழு மக்கள்வாழ்வனவற்றுடன், தேவர் வாழும் பொன்னுலகமும் சேர எட்டு | 6602 |
| எட்டுப் போக்கு | குற்றங்கள் எட்டு: (1)அறியாமை (2)மயக்கம் (மோகம்) (3)நான் எனல் (அகங்காரம்) (4)எனது எனல் (மமகாரம்) (5)விருப்பு (6)வெறுப்பு (7)நல்வினை (8)தீவினை என்பன | 6602 |
| எட்டும் | பொருந்தும் | 7310 |
| எட்டும் ஒன்றும் இரண்டும் | இறைவனுடைய எட்டு மூர்த்திகளும், சிவப்பொருளாகிய ஒன்றும், சக்தியும் சிவமும் ஆகிய இரண்டும் | 6237 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | **எ** | |
| எட்டும் ஒன்றும் இரண்டும் மூன்றும் ஆயினர் | மேலே கூறியவற்றுடன் அரி, அயன், அரன் என்னும் மும்மூர்த்திகளும் ஆனவர் | 5661 |
| எட்டுமனத்தகத்து மலர்கள் | ஞானிகள் உள்ளத்தில் மலரும் ஞானபூசைக்குரிய மலர்கள் எனப்படும் எட்டு நல் இயல்புகள்: அவை (1)கொல்லாமை (2)பொறிஅடக்கம் (3)பொறுமை (4)இரக்கம் (5)அறிவு (6)மெய்ம்மை (7)தவம் (8)அன்பு என்பன. | 6602 |
| எடுத்தமொழி | எடுத்துக்காட்டுக்கள் | 3376 |
| எடுத்து | குரலால் எடுத்து | 990 |
| எடுத்துரைப்ப | வசைமொழிகளைக் கொண்டாட | 1980 |
| எண் | தியானம் | 134 |
| எண் கணம் | பதினெட்டாக எண்ணப்படும் தேவகணம் | 7877 |
| எண்கு | கரடி | 756 |
| எண்ணர் | எண்ணத்தில் உள்ளவர் | 2620 |
| எண்ணார் | பகைவர் | 702 |
| எண்ணான் | அடியார்களின் எண்ணத்துள் அகப்படுவோன் | 1625 |
| எண்ணிலார் | பகைவர் | 3102 |
| எண் தள இல் | எட்டு இதழ்களையுடைய (தாமரை வடிவான) இல்லம் | 7047 |
| எண் துணை | எட்டு மடங்கு | 2677 |
| எண் வசுக்கள் | வசு என்னும் தேவகணத்தவரான எண்மர்; நூல்கள் இருவகையாகக் கூறும்: I தரன், துருவன், ஸோமன், ஆபன், அநிலன், அனலன், பிரத்தியூஷன், பிரபாஸன் என்பதொன்று; II துரோணன், பிராணன், துருவன், அருக்கன், ஸோமன், அக்கினி, தோஷன், வஸு என்பது மற்றது. | 5129 |
| எத்தர் | ஏமாற்றுபவர் | 2636 |
| எதிர்காட்டும் | அர்க்கியம் அளிக்கும் | 390 |
| எதிர்கொள் மொழி | முன்னிலைப்படுத்தும் தோத்திரம் | 1694 |
| எந்து | ஏந்து என்பதன் குறுக்கல் விகாரம் | 2045 |
| எப்பரிசில் | எந்தவகையிலும் | 2058 |
| எம் ஐயார் | எம்மைக் காக்கும் தாயும் தந்தையும் | 5306 |
| எம்மாடு சும்மாடு ஆம் | எந்தச்செல்வம் சுமை தாங்கும் | 6874 |
| எம்மான் | எம்முடைய இறைவன் | 7838 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | எ | |
| எய்த்து | உடலை வருத்தி | 7041 |
| எய்து அமான் | அனைவராலும் சென்று அடையத்தக்க பெருமான் | 7545 |
| எய்தொணுமை | எய்த இயலாமை | 2418 |
| எய்ப்பு | இளைத்தல் | 1636 |
| எயில் | மதில் | 37 |
| | முப்புரம் | 2184 |
| எயிறு ஆர | பற்களைப் போல | 2375 |
| எயினன் | வேடன் | 124 |
| எரி | தீப்போல ஒளிர்தல் | 2316 |
| எரி ஆட்டு | தீயில் ஆடுதல் | 40 |
| எரி கிளர் மதியம் | காமத்தீ மிகுதற்குக் காரணம் ஆன சந்திரன் | 2673 |
| எரிகேசன் | நெருப்பைப் போன்ற சடையை உடையவன் | 4308 |
| எரிச் சந்தி வேட்கும் இடத்தார் | முச்சந்திக் காலங்களிலும் அந்தணர் தீஓம்பி வேள்வி செய்யும் யாகசாலையில் இருப்பவர் | 6772 |
| எரிச் சுற்றக் கிடந்தார் | நெருப்புச் சூழச் சிதையில் கிடந்தார் | 5242 |
| எரித்த மயிர் | தீப்போலச் சிவந்த சடை | 1902 |
| எரிந்து சொன்ன | மனம் புழுங்கிப் பழித்துப் பேசிய | 2789 |
| எரிவிஞல் | சினத்திஞல் | 4755 |
| எருத்தஞய் | காளை போன்றவஞய் | 4631 |
| எருத்து | கழுத்து | 1787 |
| எல்லி | இரவு | 41 |
| | காலைமாலைச் சந்திகள் | 2457 |
| | பிறை | 2480 |
| எல்லை | சிவன் | 7977 |
| எல்லை ஏற்றல் | எல்லையினின்றும் வெளியேற்றல் | 5954 |
| எவ்வம் | துன்பம் | 608 |
| எவ்வல | ஏவல-அம்புத்தொழில் வல்ல | 5903 |
| எவ்விட | நீங்கிட | 7554 |
| எழா | எழாமல் | 2324 |
| எழில் | எழுச்சி | 2416 |
| | எழில்தரும் தேமல் | 2650 |
| | எழுதல் | 3537 |
| எழுத்து ஏழ் | ஏழ் எழுத்துக்களாலாகிய ஏழ்இசை | 7430 |
| எழுதர வெறி மறி | கையை விட்டுப் புறப்படுவது போலும் வெறித்த பார்வையை உடைய மான்-குட்டி | 233 |
| எழுமை | எழுவகைப் பிறப்பு | 7379 |
| எழுவிக்கொண்டு | தெறித்து மீட்டிக்கொண்டு | 4452 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | எ | |
| எள்க | இகழ | 534 |
| | அஞ்ச | 5425 |
| எள்காதும் | இகழாமலும் | 4344 |
| எள்தனை | எள்ளளவு | 1762 |
| எளித்த | தன்னை எளிதாக நினைத்த | 5610 |
| எளிவந்த | எனக்கு மிகவும் எளிமையாய் அருளிய | 7838 |
| எற்ருல் | எதனுல் | 7447 |
| எற்றித்து | எற்றியது | 1260 |
| எற்றின் (ஆர்கொடி) | 'ஏற்றின்' என்றதன் குறுக்கல்; இடபவடிவத்தின் | 5384 |
| எற்றே | எத்தன்மையதோ | 1856 |
| எறி | சினம் கிளரும் | 2673 |
| | அர்ச்சிக்கப்படும் | 395 |
| | பாயும் | 841 |
| எறிஆர் | ஒளி வீசும் | 1638 |
| எறி ஆரும் | பகைவரை எறியும் | 2095 |
| எறிந்தானே | பிரகாசித்தவனே | 6700 |
| எறியா | (அலை) எறிந்து | 347 |
| என் அத்தா என | "என் தலைவனே!" என்று தேவர் ஒவ்வொருவரும் வேண்ட | 1675 |
| என் ஆனவன் | என் தலைவன் | 168 |
| என் ஆனுய் என் ஆனுய் | எவ்வாறு எந்தப்பொருளாகவும் ஆனுய் | 7190 |
| என் நம்பு ஆலிக்குமாறு | என் விருப்பம் மிகும் வண்ணம் | 5240 |
| என்பர் | எலும்புமாலை அணிந்தவர் | 7304 |
| என்பு | எலும்பு | 343 |
| என்று | என்ன | 4743 |
| என்னனை | என்னை அடிமையாக உடையானை | 5275 |
| என்னுனை | எனக்கு உரியவனை | 7625 |
| என்னி | என்று கூறுபவன் | 2564 |
| என்(னி)யாய் | என்தாய் | 6830 |
| என்னேல் | என்று கூருதே | 1131 |
| எனீர் | என்று கூறுங்கள் | 152 |
| | ஏ | |
| ஏ | அம்பு | 124 |
| ஏ ஆர் எரி | அம்பாகப் பொருந்தும் அக்கினி | 2147 |
| ஏ இலானை | ஏவப்படுதல் இல்லாதவனை | 6133 |
| ஏக்கு இயலும் அண்ணல் | அம்பு செலுத்தும் இராமன் | 2908 |
| ஏகபடம் | ஒற்றை ஆடை | 8019 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ஏ | |
| ஏகபாதர் | சிவபெருமானுடைய இருபத்தைந்து வடிவங்களில் ஒன்றான ஒரே காலில் நிற்கும் மூர்த்தம் | 6605 |
| ஏகம்வைத்தல் | ஒன்றுதல் | 20 |
| ஏகவடம் | ஒற்றைமாலை | 476 |
| ஏகாசம் | ஏகாயம்-மேலாடை-மேற்போர்வை | 1931 |
| ஏகாதசர்கள் | உருத்திரர் பதினொருவர்: (1)மகாதேவன் (2)சிவன் (3)உருத்திரன் (4)சங்கரன் (5)நீலலோகிதன் (6)ஈசானன் (7)விசயன் (8)வீமதேவன் (9)பவோத்பவன் (10)கபாலி (11)சௌமியன் என்போர். | 5129 |
| ஏகாந்தம் | ஒருமுடிவாக | 4616 |
| ஏச்சும் | (ஏத்தும்) போற்றும் | 935 |
| ஏசற்று | ஏசு அற்று-இகழ்தல் இன்றி | 7749 |
| ஏசு மா முண்டி | இகழப்படும் மண்டை-ஓடு | 6831 |
| ஏடு | இதழ் | 1 |
| | குற்றம் | 254 |
| | எடுத்தல் | 527 |
| ஏடு உடைய மலராள் | தாக்ஷாயணி | 818 |
| ஏடு உடைய மலரான் | பிரமன் | 1 |
| ஏண் | பெருமை | 1433 |
| ஏணி முறையில் | உயர்ந்தது என்ற வகையால் | 3518 |
| ஏத்த | ஏத்துக | 626 |
| ஏத்தாதார் | போற்றாதவர்கள் | 580 |
| ஏத்தான் | பிறர்போற்றுதலை உடையான் | 1629 |
| ஏதத்தார் | தொடர்ந்துவரும் துன்பங்கள் | 1735 |
| ஏதம் | துன்பம் | 614 |
| ஏதவித்து | குற்றத்துக்கு மூலகாரணம் | 2737 |
| ஏதன் | உலகிற்கு முழுமுதற்காரணம் (ஏது) ஆனவன் | 1603 |
| ஏதில் சமண் | அயலான சமணர்கள் | 1871 |
| ஏதுக்கள் | யுக்தியாகக் கூறும் காரணங்கள் | 3376 |
| ஏந்தல் | ஏந்துவது | 1265 |
| ஏந்தி | ஏந்தியவன் | 337 |
| ஏபதம் | ஏஏ என இகழும் சொல் | 1522 |
| ஏம்பலிப்பார் | ஏங்குகின்றவர்கள் | 5132 |
| ஏமத்தும் | பகலிலும் | 4616 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ஏ | |
| ஏமம் | யாமம்-நள்ளிருள் | 4596 |
| | கடையாமம் | 7586 |
| ஏமம்தோறும் | ஒவ்வொரு யாமத்திலும்; யாமம்: பத்து நாழிகைப்போது | 6293 |
| ஏமாப்பு | ஆசை | 5675 |
| ஏய்க்கும் | இயைவிக்கும் | 1593 |
| | பொருந்தும் | 2272 |
| ஏயவன் | பொருந்தியவன் | 2949 |
| | ஒத்தவன் | 6735 |
| ஏயாமே | பொருந்தாமல் | 1363 |
| ஏயிலானை | ஒப்பிலானை | 6133 |
| ஏர் | எழுச்சி | 530 |
| ஏரின் ஆர் உலகத்து | அழகு மிக்க விண்ணுலகின் | 3270 |
| ஏரினல் | அழகுடன் | 3116 |
| ஏல | மனம் பொருந்த | 6239 |
| ஏலம் | ஏலக்கொடி | 2668 |
| | மயிர்ச்சாந்து | 329 |
| ஏலா வலையம் | சுமக்கமுடியாத வட்டம் | 887 |
| ஏலும் | எனினும் | 5240 |
| ஏவம் | எவ்வம்-துன்பம் | 2519 |
| ஏவலம் | அம்பினது வலிமை | 477 |
| ஏவலனர் | அம்பு எய்தலில் வல்லரான இராமர் | 3887 |
| ஏவள் என்று | இவள் யார் என்று | 6021 |
| ஏவு இயல் கணை | எய்யப்படும் இயல்புடைய அம்பு | 1326 |
| ஏழ் உகந்தார் | இசையெழுத்தாகிய ஏழையும் (ச,ரி,க,ம,ப,த,நி) விரும்பி ஏற்றவர் | 7430 |
| ஏழ் ஓசை | குரல் முதலான ஏழின் இசை | 109 |
| ஏழ் கடல் | எழுகின்ற கடல் | 3499 |
| ஏழி | இதழி-கொன்றை | 5786 |
| ஏழின் இசை | குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற ஏழு சுரங்கள் | 3564 |
| ஏழு சாலேகம் | சாலேகம்-வாசல்-பலகணி; உடலில் உள்ள பானம் அபானம் என்னும் இரண்டல்லாத ஏனை ஏழு வாசல்கள் | 4496 |
| ஏழே ஏழு நாலே மூன்று | இருபத்தொரு பண்கள் | 1369 |
| ஏழை | பெண் | 471 |
| ஏழைத்தலைவர் | மங்கைஒருத்திக்குத் தலைவர் | 7783 |
| ஏழைமார் | மகளிர் | 1877 |
| ஏழைமை | அறியாமை | 2636 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ஏ | |
| ஏற்றம் | தண்ணீர் இறைக்கும் கருவிகளில் ஒன்று | 4673 |
| ஏற்றர் | இடபத்தை உடையவர் | 7298 |
| ஏற்றாய் | இடபத்தை உடையவனே | 4170 |
| | (கங்கையை) ஏற்றுக்கொண்டவனே | 7243 |
| ஏற்றார் | பகைவர் | 7243 |
| ஏற்றுத் துள்ளலைப் பாகன் | காளையின்மீது துள்ளி ஏறிச் செலுத்துபவன் | 4443 |
| ஏற்றேன் | கொள்ளமாட்டேன் | 6724 |
| ஏற்றை | கடுவன் | 843 |
| ஏறவன் | ஏறுதலை உடையவன் | 1240 |
| ஏறாமை | பொருந்தாத செயல் | 5746 |
| ஏறான் | ஏற்றை உடையவன் | 963 |
| ஏறி | ஏறுபவன் | 962 |
| ஏறியர் | ஏறியவர் | 475 |
| ஏறுஅது | இடபம் | 995 |
| ஏறுஅரிய | அரிய ஏறு-சிறந்த காளை | 6832 |
| ஏறு அறிய ஏறும் | உலகோர் அறியக் காளைமீது ஏறும் (பாடபேதம்) | 6832 |
| ஏறு கால் இற்றது இல்லையாய்விடில் | ஊர்தியாகிய காளையின் கால் ஒடியவில்லை என்றால் | 7736 |
| ஏன்று | ஏற்று | 763 |
| ஏன்றுகொளும்கொலோ | ஏற்றுக்கொள்வானோ | 3277 |
| ஏனப்பூண் | பன்றியின் கொம்பாகிய அணிகலன் | 3078 |
| ஏனம் | பன்றி-ஆதிவராகம் | 2 |
| | ஆகுபெயரால், ஏனத்தின் கொம்பு | 4597 |
| ஏனல் | தினை | 1074 |
| ஏனன் | பன்றிக்கொம்பு அணிந்தவன் | 5272 |
| ஏனைக் காவல் வேண்டுவார் ஏதம் | தம்மைத்தாமே காத்துக்கொள்ள இயலாது வேறுதுணை வேண்டும்படியான பெரிய துன்பம் | 3361 |
| ஏனையோர் | ஆதிசேடன், இயற்பகை, உபமன்யு முதலானவர் | 1883 |
| | ஐ | |
| ஐ | கோழை | 1394 |
| | வியப்பு | 5265 |
| ஐஅஞ்சின் அப்புறத்தான் | நிலம் முதலிய இருபத்தைந்து தத்துவங் களுக்கும் அப்பாற்பட்டவன் | 4210 |
| ஐ உணர்வு எய்தி | ஐந்துஉணர்வுமாகிய மனம் ஒருதலைப்பட்டு | 3175 |
| ஐக் கின்னரர் | வியத்தற்குரிய கின்னரர் | 7905 |
| ஐங்கணையோன் | மன்மதன் | 420 |
| ஐத்தானம் | கோழை தங்கும் இடம் | 7165 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ஐ | |
| ஐது வண்ணம் | அழகிய வண்ணம் | 5522 |
| ஐந்தினர் | (மண்ணில்) ஒளி, ஒலி, சுவை, ஊறு, நாற்றம் என ஐந்தாயும் இருப்பவர் | 855 |
| ஐந்து அமர் கல்வி | ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், விரையம் என்னும் ஐந்து | 1382 |
| ஐந்துகில் | பௌத்தர் உடுக்கும் ஐந்து ஆடைகள் | 3469 |
| ஐந்து புரியன் | புரி-உடல்; உடலில் உள்ள ஐந்துகோசங் களாகிய (1)அன்னமயம் (2)பிராணமயம் (3)மனோமயம் (4)விஞ்ஞானமயம் (5)ஆனந்தமயம் என்னும் அவை ஐந்துமாய் இருப்பவன்-இறைவன் | 5419 |
| ஐந்தும் ஆய | ஐவகை வேள்விவடிவாகிய | 2884 |
| ஐநெரிந்து | கோழைகட்டி | 4688 |
| ஐம்புரி | பஞ்சாதி | 6331 |
| ஐம்புலன் நிலையாத வண்ணம் நினைதல் | யோகநிலையை விரும்புதல் | 2011 |
| ஐம்பொழில் | வானுலகத்துக் கற்பகச்சோலைகள் ஐந்து | 3035 |
| ஐயம் | ஈவோன் இரப்போரைத் தானே அழைத்து இடுவது | 432 |
| ஐயன் | அழகியவன் | 25 |
| ஐயாய் | வியக்கத்தக்கவனே | 6828 |
| ஐவகை அரையர் | அரசர்போல் என்னை ஆளும் ஐம்புலன்கள் | 7856 |
| ஐவகையர் ஐயர் | ஐம்புலன்களான தலைவர் | 7856 |
| ஐவகை வேள்வி | சிவபூசை, குருபூசை, மகேசுவரபூசை, பிராம்மணர்க்கு அன்னம் அளித்தல், அதிதி உபசாரம் என்பன ஐந்து | 1382 |
| ஐவணம் ஆம் பகழி | ஐந்து வகையான மலர்அம்புகள்: அவை மா, அசோகு, தாமரை, முல்லை, நீலம் என்பன. | 7754 |
| ஐவர் | ஐம்பொறிகள் | 543 |
| ஐவர் தொண்ணூற்று அறுவரும் | ஐம்புலன்களும், தத்துவதாத்துவிகங்களான தொண்ணூற்று ஆறும் | 4822 |
| ஐவர் நக்கரைப் பி(ய்)க்க | நம்மை எள்ளி நகைக்கும் ஐம்புலப் பகைவரைப் பிய்க்க (அகற்ற) | 5100 |
| ஐவர் நக்கு அரைப்பிய்க்க | ஐம்புலன்களும் சிரித்து நம் உயிரைத் தேய்க்க | 5100 |
| ஐவரை ஆசு அறுத்து | ஐம்புலன்களையும் பற்றுக்கோடு இல்லாமல் அழித்து | 3924 |
| ஐவனம் | மலைநெல் | 7858 |
| ஐவாய் அரவு | ஐந்தலைப்பாம்பு | 2117 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ஐ | |
| ஐ வேள்வி | தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்னும் ஐந்து வகையினரைப் பேணிஅருத்துதல் | 519 |
| | ஒ | |
| ஒசிதர | கசங்க-குலைய | 3708 |
| ஒட்ட மலி பூகநிரை | வரிசையாக உள்ள பாக்குமரங்கள் | 3633 |
| ஒட்டெனும் ஒட்டெனும் | தீவினைக்குச் சார்பாகும் | 7683 |
| ஒண்கணவர் | ஒளி படைத்த கண்களை உடைய பெண்கள் | 2425 |
| ஒண்கழலாள் | சிறந்த கழற்சிக்காயால் விளையாடுபவள் | 6046 |
| ஒண்டு | ஒன்று | 3908 |
| ஒண்ணு | இயலா | 2343 |
| ஒண்பு ஒழிய | ஆண்மை நீங்க | 3522 |
| ஒத்தன் | ஒத்தவன் | 5367 |
| ஒப்பர் | ஒப்புஆவர் | 294 |
| ஒப்பாரி | ஒப்புமை | 5228 |
| ஒப்பாரித்து | ஒத்து | 5228 |
| ஒப்பான் | ஒத்த எண்ணம் உடையவன் | 1585 |
| ஒப்புஆர | ஒப்புஆக | 5228 |
| ஒப்புடை ஒருவன் | உருவில் தனக்குத் தானே நிகரான மன்மதன் | 2840 |
| ஒருக்கம் | ஒருங்குசேர்தல் | 4642 |
| ஒருக்காலர்கள் | ஒருக்குகால்-அடங்கிய காற்று; மூச்சுக் காற்றை அடக்கும் யோகிகள் | 8029 |
| (ஒருகாலர்கள்) | (பாடபேதம்)ஒற்றைக்காலால் நின்று தவம்புரிவோர் | 8029 |
| ஒருக்கிய | ஒருங்குசேர்ந்த | 1344 |
| ஒருக்கை | ஒருகை | 3197 |
| ஒருகாலம் அன்றி | எக்காலத்திலும் | 2668 |
| ஒருகூறுமறை | சாமவேதம் | 3484 |
| ஒரு(வு)கை | நீங்குதல் | 497 |
| ஒருங்கிய வானோர் | மூலாதாரத்தில் யாவற்றையும் ஒடுக்கி மனம் ஒன்றிய தேவர்கள் | 1382 |
| ஒருங்கும் | கெடும் | 2400 |
| ஒருங்குவர் | இல்லையாவர் | 1796 |
| ஒருத்தி | நீலி | 481 |
| ஒருதலை | துணிவு | 1282 |
| ஒருதலைமை | துணிவான தன்மை | 200 |
| ஒருதாள் | ஒருகாம்பு | 1382 |
| ஒருநால் | நான்குவேதங்கள் | 1838 |
| ஒருமை | ஒருபாகம் | 5 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ஒ | |
| ஒருவராய், இரு, மூவரும் ஆயவன் | சக்தியுடன் இரண்டற இணைந்த சிவன் என ஒருவராகவும், பிரித்தால் சக்தி சிவன் என இருவராகவும், பிரமன் மால் அரன் என மும்மூர்த்திகளாகவும் ஆன இறைவன் | 5434 |
| ஒல்க | தளர | 367 |
| ஒல்லை | விரைவாக | 537 |
| ஒலியானம் | செல்லுகை | 96 |
| ஒழிகில | தங்குவன அல்ல | 1357 |
| ஒழிதல் | தங்குதல் | 7464 |
| ஒழிந்தம் | ஒழிந்தனம்-ஆட்பட்டு நின்றேம் | 5184 |
| ஒழியா | ஒழிந்து | 22 |
| ஒள்ளிது | சிறந்தது | 612 |
| ஒளி விங்கி | ஒளி மிகுந்து | 3528 |
| ஒளிறா | ஒளிவீசும் | 104 |
| ஒற்றி | கடன் தீரும்வரை அநுபவிக்குமாறு விட்டுவைக்கும் நிலம் முதலியன (போக்கியம்) | 8200 |
| ஒற்றியான் | அழுத்தியவன் | 3412 |
| ஒற்றியூர் என்ற ஊனம் | பிறருக்கு ஒற்றிவைத்த ஊர் என்ற குறை | 7562 |
| ஒற்றினர் | ஊன்றினர் | 1749 |
| ஒறுத்து | (இருவினை ஒப்பிற்கு) நீக்கி | 1792 |
| ஒறுவாய்த் தலை | உடைந்த தலைஓடு | 7655 |
| ஒன்பது ஆம் அவை நீத்தொழிலின் உரை ஒன்பது ஒத்து | ஒன்பது என்ற எண்ணின் பெருக்கல்தொகை ஒன்பதே ஆவதுபோல, உடலில்உள்ள ஒன்பது வாயில்களும் தம் தீய செயல்களால் மாறுபடாமல், நான் என்னும் அகங்காரத்தின் விளைவேயாக என்னுள் அடங்குமாறு | 6121 |
| ஒன்பது ஒன்றொடு ஏழு பதினெட்டொடு ஆறும் உடனாய நாள்கள் | ஆகாத நாள்கள் எனச் சோதிடநூல்கள் கூறும் ஆயில்யம் (9), மகம் (10), விசாகம் (16), கேட்டை (18), திருவாதிரை (6) என்ற நாள்கள் | 2389 |
| ஒன்றர் | தனக்கு வேறாக யாதொன்றும் இல்லாத ஒரே தத்துவம் ஆனவர் | 1538 |
| ஒன்றாதார் | பகைவர் | 3496 |
| ஒன்றார் | பகைவர் | 587 |
| ஒன்றி | ஒருநிலைப்பட்டு | 27 |
| ஒன்றிய | ஒத்த | 383 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ஒ | |
| ஒன்று | சிவனுக்கு ஒரே ஊர்தியான இடபம் | 832 |
| | முழுமுதற்பொருளான சிவபெருமான் | 1838 |
| ஒன்றுஅலர் | ஒன்றல்லாத பலவேடத்தை உடையவர் | 2775 |
| ஒன்று இரண்டு ஒரு மூன்றொடு சேர் பதி (1+2+3=6) | சீகாழிக்குரிய பன்னிரண்டு பெயர்களில் ஆறுவதான திருப்பூந்தராய்ப்பதி | 2813 |
| ஒன்று ஒன்றொடு ஒன்றும் ஒருநான்கொடு ஐந்தும் இருமூன்றொடு ஏழும் (1+1+1+4+5+6+7=25) | இருபத்தைந்து தத்துவங்கள் | 2424 |
| ஒன்றும் வழுவேன் | பொருந்திய வழுவுதலையுடையேன் | 7979 |
| ஒன்னலர் | பகைவர் | 8145 |
| | ஓ | |
| ஓக்கம் | உயர்வு | 2266 |
| ஓகை | மகிழ்ச்சி | 3414 |
| ஓங்கு ஒலிமா | ஒலிசிறந்த வேதங்களாகிய குதிரைகள் | 4362 |
| ஓட்டந்தர | ஓடிவர | 8018 |
| ஓட்டந்து | ஓடி | 2577 |
| ஓட்டுப் பள்ளி | நிலையின்றி அழியும் வீடாகிய உடம்பு | 6069 |
| ஓடு அரங்காக | தேடி ஓடும் வெளியிடமாக | 4209 |
| ஓணப் பிரான் | திருவோண நாளுக்குரிய திருமால் | 5181 |
| ஓத்து | வேதம் | 3301 |
| ஓத்தைக் கிடையாதவன் | புறச்சமயத்தார் ஓதும் நூல்களுக்கு அகப்படாதவன் | 325 |
| ஓதநீர் | கடல் | 2334 |
| ஓதம் | அலை | 417 |
| | வெள்ளம் | 706 |
| | ஓத்து-வேதம் | 4228 |
| ஓதலார்கள் | ஓதுதலை உடையவர்கள் | 512 |
| ஓதவண்ணன் | கடல்வண்ணன்-திருமால் | 1445 |
| ஓ(த்)தான் | வேதம் ஓதியவன் (ஆகஇருந்தும்) | 1367 |
| ஓதியார் | ஓதியவர் | 1748 |
| ஓம் என்று இயம்புவர் | 'அங்ஙனமே ஆகுக' என்று அருளுவார் | 2622 |
| ஓமம் | அக்கினியில் இடுதல், பிரணவம் | 6703 |
| ஓமியம் | பயனில் நோக்கமின்றிச் செய்யும் வேள்வி (ஸௌம்யம் என்பதன் திரிபு; ஸோமலதைத் தொடர்புடையது.) (ஓமத்திற்கு அங்கமான கருமம்) (பிரணவத்தொடர்புடையது) | 5461 |

| அருஞ்சொல்-சொற்றெடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ஓ | |
| ஓய்ந்த ஆரமதி | நுணுகிய மாலே போன்ற பிறை | 1911 |
| ஓர் ஐம்பதோடு ஆறு எட்டும் | 50+(6×8)=98 வகை நோய்கள் | 5813 |
| ஓர் ஓதம் ஓதி | ஒப்பற்ற வேதம் ஓதி | 4228 |
| ஓர்ப்பன | கூர்ந்துநோக்குவன | 843 |
| ஓர் வாணிகன் | அம்மரபில் வந்த அமர்நீதி நாயனர் | 5118 |
| ஓரா | உணராத | 484 |
| ஓரி | ஆண்நரி | 6548 |
| ஓலக்கச் சூளேகள் | திருமுன்பு ஆடும் தேவதாசிகள் | 5134 |
| ஓலி | ஒலியைச் செய்வது | 5788 |
| ஓவ | நீங்க | 1812 |
| ஓவணம் ஏல் எருது | நீக்குதற்குரிய எருது, சித்திரத்தில் எழுதத்தக்க அழகுடைய எருது | 7286 |
| ஓவா | இடையருத | 58 |
| ஓவி உண்ணுர் | உண்ணுதலேவிட்டு (ஒன்றும் உண்ணுமல்) இருப்பார் | 6610 |
| | ஔ | |
| ஔவதன்மை | அவ்வ தன்மை-அந்தஅந்தத் தன்மை | 6207 |
| | க | |
| க உணியன் | 'கம்' என்னும் பிரம்மகபாலத்தில் உண்பவன் | 1382 |
| கங்காளர் | முழுஎலும்புக்கூட்டை அணிந்தவர்; கங்காளம்-முழுஎலும்புக்கூடு | 765 |
| கங்கு | கங்கை | 7542 |
| கங்குல் | ஆகாயம் | 701 |
| | இரவு | 2530 |
| கங்குல் கொண்ட திங்கள் | இரவில் தோன்றும் மதி | 2530 |
| கங்கைக் கன்னிகள் | கங்கையும் அதன் கிளேநதிகளும் | 2190 |
| கச்ச | கைக்க, தெவிட்ட . | 1360 |
| கட்டங்கம் | கட்வாங்கம்-கட்டிற்கால் போன்ற ஆயுதம் | 715 |
| கட்டம் பேசிய | செருக்கான சொற்களேக் கூறிய | 5695 |
| கட்டர் | பிறரைத் துன்புறுத்துவோர் | 3231 |
| கட்டராய் | பந்தபாசங்கள் உடையோராய் | 4574 |
| கட்ட வாழ்க்கையன் | கஷ்டப்படும் வாழ்க்கை உடையவன் | 6198 |
| கடத்துவர் மொய்த்து | கடுக்காயால் உண்டாகிய துவர்நிறம் செறிந்து | 1468 |
| கடந்து | வென்று | 2535 |
| கடந்தை | பெண்ணுகடம் என்ற ஊர் | 634 |
| கடம் | மதநீர் | 89 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | க | |
| கடம் பட(ந்)நடம் ஆடினாய் | முழவு ஒலிக்கத் திருக்கூத்து ஆடிய சிவபெருமானே | 4368 |
| கடம்மணி | மலைச்சாரலில் தோன்றிய மணி | 845 |
| கடம் மல்கு மா | மதம் நிறைந்த யானை | 1951 |
| கடமுடை உரிவை | யானைத்தோல் | 4610 |
| கடல் கழி தழி(ய) | உப்பங்கழிகள் பொருந்திய | 6068 |
| கடவிராய் | கடப்பாடு உடையவர்களாய் | 6213 |
| கடறினார் | காட்டில் இருப்பவர் | 4101 |
| கடி | மணம் | 6 |
| | சிறப்பு, காவல் | 2065 |
| கடிகட்டுஅரவினார் | அரையில் கட்டிய பாம்பை உடையவர் | 3581 |
| கடிகுறிஞ்சி | தெய்வத்தன்மையுடைய குறிஞ்சிப்பண் | 128 |
| கடிகை | உடைத்தல் | 50 |
| கடிகொள் நீடுஒலி | திருமணக்காலத்தில் ஒலிக்கும் மிக்க ஒலி | 2435 |
| கடிப்பதும் ஏறும் | (பாம்பு) கடித்தபோது நஞ்சு ஏறும் | 7681 |
| கடிமலர் அண்ணல் | தாமரைமீது இருக்கும் பிரமன் | 2198 |
| கடிய | காவலையுடைய | 940 |
| கடிய ஏறு | விரைந்து செல்லும் காளை | 2642 |
| கடியவன் | காத்தலை உடையவன் | 632 |
| கடு | கடுக்காய் | 468 |
| | கடுமை | 937 |
| கடுக்கை ஆனை | கொன்றையை அணிந்த ஆனை | 5616 |
| கடுக் கொடுத்த துவர் ஆடை | கடுக்காய்நீரில் தோய்த்த காவி ஆடை | 2930 |
| கடுக் கொள் சீவர் | கடுக்காய்த்தூளை உட்கொள்ளும் சமணர் | 990 |
| கடுஞ்சுடர் | மிக்க ஒளி-மின்னல் | 6636 |
| கடுத்து | கறுத்து,கோபித்து | 257 |
| | (சினம்) மிகுந்து | 739 |
| | (துன்பம்) மிகுந்து | 2601 |
| கடுப் படுத்த மேனியார் | கடுப்பொடி தோய்ந்த காவி உடுத்த உடம்பினர் | 2570 |
| கடுப்பொடி | கடுக்காய்ப்பொடி | 3590 |
| கடுவரிமா | சூர்மா (மாமரமாய் நின்ற சூரபன்மன்) | 8081 |
| கடுவன் | ஆண்குரங்கு | 27 |
| கடுவாய் | அரிசில் என்ற சிற்றாறு | 1709 |
| கடுவுடை வாயினர் | கடுக்காய் தின்னும் வாயை உடைய பௌத்தர் | 2996 |
| கடை | வாயிற்கடை | 689 |
| கடைக் கண்டவன் | (இராவணனது) வலிமையின் முடிவைக் கண்டவன் | 3284 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | க | |
| கடைக் கண்டான் | கடைக்கண்ணால் பார்த்தவன் | 2869 |
| கடைகள் | கடையர்-மருதநிலத்து மாக்கள் | 7644 |
| கடைகொள் செல்வம் | முடிதலையுடைய இம்மைச்செல்வம், பொருள்களை விற்கும் கடைகளின் செல்வம் | 2730 |
| கடைதூங்கு மணி | ஆராய்ச்சி மணி | 5231 |
| கடைபோகார் | இறுதிவரை ஒரே நிலையில் இரார் | 6511 |
| கடையர் | இழிந்தோர் | 5824 |
| கடையார்மாடம் | வாயில்மாடம் | 458 |
| கண் | இடுக்கண் | 1906 |
| | கணுவை உடைய நெல் | 2953 |
| கண் ஆர் கமுகு | கண்ணுக்கு அழகான பாக்குமரம் | 1105 |
| கண் ஆர் குருதி | கண்ணில் நிறைந்த இரத்தம் | 4976 |
| கண்ஆளன் | உயிர்களிடத்துக் கண்ணோட்டம் உடையவன் | 1936 |
| கண் இயன்று | கண்ணைப் போன்று | 2816 |
| கண்கண இருமி | சத்தம் கேட்க இருமி | 4447 |
| கண்காட்டா | கண்ணைக் காட்டி | 7172 |
| கண்டகங்காள் | நீர்முள்ளிகளே | 4284 |
| கண்டகம் | முள்; ஆகுபெயரால், தாழை | 1465 |
| கண்டகர் | கையில் வாளை யேந்தியவர் | 7672 |
| கண்டநூலார் | தாம் கண்டதே நூற்கொள்கை என்று வாதாடுபவர் | 2592 |
| கண்டயலே | கண்டல்அயலே | 4222 |
| கண்டர் | கழுத்தை உடையவர் | 1879 |
| | காலனும் காலதூதரும் | 4616 |
| கண்டல் | நீர்முள்ளி | 2698 |
| கண்டல் முண்டல் | தாழை போன்ற கடற்கரைச்செடிகள் | 7348 |
| கண்டலும் | காண்டலும் | 6060 |
| கண்டன் | நீலகண்டன்-நாமஏகதேசக்கிரகணம்-பெயரின் ஒருபகுதியைக் கூறுதல்; பீமசேனன் என்பதைப் பீமன் என்றோ, சேனன் என்றோ கூறுவதுபோல. | 3522 |
| கண்டனன் | கண்டனம் செய்தவன் | 4016 |
| கண்டான் | உலகு கண்டான்-உலகம் யாவும் படைத்தவன்-பிரமன் | 116 |
| கண்டி | உருத்திராக்கமாலை | 848 |
| கண்டிகை | உருத்திராக்கமாலை | 2892 |
| கண்டு | கற்கண்டு | 1764 |
| | கண்டல்செடி | 4222 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | க | |
| கண்ணத்தர் | கண்ணம்-கணம்; பூதகணங்களையுடையவர் | 2433 |
| கண்ணறையன் | கண்ணோட்டம் இல்லாதவன் | 7710 |
| கண்ணி | முடிமாலை | 76 |
| கண்ணும் | ஆராயும், கருதும் | 1833 |
| கண் துணை நெற்றியான் | கண்ணுடன் கூடிய நெற்றியை உடையவன் | 3054 |
| கண்பு | சம்பங்கோரை | 647 |
| கண் புணர் கா | கண்கள் தாமாகவே பார்க்கும் சோலை | 2205 |
| கண்மதி | கண் போன்ற அறிவு | 3853 |
| கண் மயத்த கத்தூரி | கண்ணுக்கு அழகான கத்தூரிதிலகம் | 7712 |
| கண்மாயம் | கண்கட்டுவித்தை | 6510 |
| கண் முத்து அரும்புதல் | கண்கள் முத்துப் போலும் ஆனந்தக் கண்ணீர் துளித்தல் | 2126 |
| கணக்கு என்ன | கணக்காக-ஒரே நிகராக | 3483 |
| கணநாதன் | வாயிற்காவலன், பூதகணங்களின் தலைவன் | 7494 |
| கணம் | கூட்டம் | 43 |
| கணுடி | கண்ணுடி | 1418 |
| கணி | எண்ணம் | 862 |
| | கண்ணி-முடிமாலை | 2212 |
| கணிகநோன்பர் | பொருள்கள் கணந்தோறும் அழியும் என்ற கோட்பாட்டை உடைய பௌத்தர்கள் | 2832 |
| கணிகை | கங்கை; ஜான்ஹவி-ஜானவி-ஜன்ஹு முனியின் காது வழியே (கர்ணிகை) பெருகியவள் | 2415 |
| கணிவடமுகம் | ஜபமாலை; கணி-கண்ணி-அக்கி | 233 |
| கணை நீடு எரி மால் | நெடிது எரியும் தீயும் திருமாலும் | 349 |
| கணையல் செய்தான் | அம்பு எய்தான் | 1115 |
| கத்திட்டோர் | ஓதியவர் | 1365 |
| கத்திரிகை | வாத்தியவகை | 3618 |
| கத்து இரட்டுதல் | மிக முழக்குதல் | 2732 |
| கத்துமொழி | சமணரும் பௌத்தரும் பொருள் இன்றிச் சத்தம் போட்டுக் கூறும் மொழிகள் | 3590 |
| கத்தை | கற்றை | 3288 |
| கதத்தது | சினம் கொண்டது | 4393 |
| கத நாகம் | சினம் கொண்ட பாம்பு | 955 |
| கதம் | சினம் | 223 |
| கத மாக் கங்கை | சினத்துடன் வந்த பெரிய கங்கை | 5031 |
| கதலி | வாழை | 91 |
| கதன்உளார் | சினம்உடையோர் | 4494 |
| கதி | நடை | 232 |
| | நடனஅசைவு | 441 |

| அருஞ்சொல்-சொற்ருெடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | க | |
| | சிவகதி | 1552 |
| | இடம் | 8035 |
| கதியம் | கதி | 2587 |
| கதிர் ஆயிரம் உடையான் | சூரியன் | 121 |
| கதிர்ப்பொறி | ஒளி வீசும் புள்ளி | 4543 |
| கதுவ | பற்றுதற்கு | 2270 |
| கதுவாய் | வடுப்பட்ட வாய் | 126 |
| கதுவாய்த் தலை | பிளந்த வாயை உடைய தலைஓடு | 7650 |
| கந்தம் | நறுமணம் | 62 |
| கந்தனை | வாசனை | 830 |
| கந்தாரம் | காந்தாரம்-குறிஞ்சிப்பண் | 6342 |
| கந்திரம் | மேகம்(கந்தரம்) | 4451 |
| கந்து | கந்தம் | 1092 |
| கந்து அண் பூ | நறுமணமுடைய பூ | 1600 |
| கந்துக ஆடை | பந்தாட்டத்திற்கு ஏற்ற ஆடை | 36 |
| கந்துக வாடை | பந்தாடும்வீதி; கந்துகம்-பந்து | 36 |
| கபாலக்கலன் | தலையோட்டுமாலை | 4186 |
| கபாலம் | தலைஓடு | 765 |
| | கறவைக்கலன் | 774 |
| கபாலிமதில் | மதுரைக்கோயிலின் வெளிமதில் | 3350 |
| கபோதகம் | புரு | 649 |
| கம் | தலை | 4807 |
| கம்பதாளி | கால்களை நடுங்க வைக்கும் நோய் | 2553 |
| கம்பலைத்து | முழக்கம் செய்து | 2804 |
| கம்பு | நீர், நறுமணம் | 8140 |
| கம்பு அரிய | அசைத்தல் முடியாத | 3679 |
| கமர் | நிலவெடிப்பு | 3697 |
| கமி | க்ஷமி-பொறுத்துக்கொள் | 4309 |
| க(ம்)முதமுல்லை | மணத்தாலும் வெண்மையாலும் உவகையூட்டும் முல்லை | 3289 |
| கமை | பெருமை | 3410 |
| | க்ஷமை-பொறுமை | 4617 |
| கயந்திரம் | யானைஅரசு; கஜேந்திரம் என்பதன் மரூஉ | 2960 |
| கயம் | குளம் | 94 |
| | யானை | 860 |
| கயம் ஆரும் சடையாய் | நீர்ப்பெருக்குத் தங்கிய சடையை உடையவனே | 7522 |
| கயம்பல பட | யானைகள் பலவற்றைப் போல | 860 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | க | |
| கயலசேல கருங் கண்ணியர் | கயல்மீனும் சேல்மீனும் போன்ற கண்களை உடைய பெண்கள் | 3119 |
| கயன் | கையன் | 390 |
| கரக்ககில்லாது | வஞ்சிக்கமாட்டாமல் | 2109 |
| கரக்கனம் | கைகளின் ஆற்றல் | 1344 |
| கரக்கும் உரை | வஞ்சகமான பேச்சு | 259 |
| கரக்குமாறு அறியா | கொடுக்காமல் ஒளிப்பதை அறியாத | 4075 |
| கரக்கை | மறைத்தல் | 999 |
| கரணம் இட்டு | கூத்துக்கள் ஆடி | 7289 |
| கரணம் தீர்த்து உயிர் கையில் இகந்தபின் | பொறிபுலன்களும் அந்தக்கரணமும் ஒய்ந்து உயிரும் கைவிட்ட பிறகு | 6211 |
| கரத்தான் மலி சிரத்தான் | கையில் ஏந்திய தலையை உடையவன் | 114 |
| கரந்தை | சிவகரந்தை மாலை | 658 |
| கரப்பு | (இறைவன்)மறைந்திருத்தல் | 1066 |
| கரம் முனம் மலரால் | கைமலராலும் மனமலராலும் | 3190 |
| கரவம் | கையில் உள்ளது | 3696 |
| கரவன் | மறைத்துக்கொள்பவன் | 6405 |
| கரவா | (கரம்-கை) கையை உடையவனே | 1106 |
| கரவாள் | கைவாள் | 878 |
| கரவு | முதலை | 3204 |
| கரவுஅமர | வஞ்சகமாக | 2928 |
| கரவுஇல் | மறைத்தல் இல்லாத | 878 |
| கரன் | கைகளை உடையவன் | 209 |
| கரி | யானை; ஆகுபெயரால், யானைஉருவம் | 842 |
| கரிகாடு | சுடுகாடு | 296 |
| கரிகாலினர் | எல்லாம் கரிந்துபோன சர்வ சங்கார காலத்திலும் உள்ளவர் | 2321 |
| கரிசு | தீமை | 853 |
| கரிதரு காலன் | கரியநிறமுடைய யமன் | 2879 |
| கரியாக | எரிந்து கரியாக | 6538 |
| கரு | கருமை | 261 |
| | கர்ப்பகிருஹம் | 1094 |
| | பிறவி | 1255 |
| | எல்லையில்லா நலம் | 2048 |
| கருஉரு | கரிய மேனி | 223 |
| கருக்கம் | மேகம், இலந்தை மரம் (கற்கந்து) | 279 |
| கருக்கும் | கருநிறத்து | 955 |
| கருக்கு வாள் | கூரிய வாள் | 3059 |
| கருகும் உடல் | கரிய உடம்பு | 2165 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | க | |
| கருடத் தனிப்பாகன் | கருடனை வாகனமாகக் கொண்ட திருமால் | 5196 |
| கருத்தவன் | கருத்தில் உள்ளவன் | 1196 |
| கருத்தினால் | கருதினால் | 2531 |
| கருத்து | அடையாளம் | 8087 |
| கருத்து உரு ஒணாவகை | தம் கருத்தில் உருவத்தை உணர முடியாதவகை | 1816 |
| கருதலர் | பகைவர் | 2475 |
| கருதார் | பகைவர் | 3278 |
| கருந்திரை மிடறு | கடல் போலும் கரிய கழுத்து | 2218 |
| கரு நட்ட கண்டன் | கரிய நிறம் நிலைத்த கழுத்தை உடையவன் | 4949 |
| கருப்பம் | கருமை | 1423 |
| கரும்பின் வில்லான் | கரும்பை வில்லாக உடைய மன்மதன் | 1722 |
| கருமஞ்ஞை | நீலமயில் | 1989 |
| கருமருந்து | பிறவிப்பிணி தீர்க்கும் மருந்து | 4770 |
| கருமலர் | நெய்தல் | 821 |
| கருமானின் உரி | யானைத்தோல் | 13 |
| | கிருஷ்ணாஜினம்-மான்தோல் | 6257 |
| கரு வரு உந்தி | உலகப் படைப்பிற்கான கருக்களைக் கொண்ட உந்தி | 3336 |
| கருவரை | கோவர்த்தனமலை | 423 |
| | கரிய மலை போன்ற இராவணன் | 2208 |
| கருவை | கரிய வைக்கோல் | 2288 |
| கருள் | கரிய நிறம் | 4345 |
| கரைதல் | குற்றமாகக் கூறுதல் | 3069 |
| கரையா உரு | அழியாத வடிவு | 914 |
| கரையா வரை | ஓட்டற்ற பொன்மலை | 6474 |
| கரோடி | தலைமாலை | 5192 |
| கல் அயங்கு திரை | கற்களின்மீது அசையும் அலைகள் | 2283 |
| கல் அரக்கி | மலையின் கீழே வருத்தி | 2287 |
| கல் ஆர் கடல் | கல் என்ற ஒலி நிறைந்த கடல் | 913 |
| கல் ஊர்ப் பெருமணம் | அம்மி மிதித்தல் போன்ற சடங்குகள் கொண்ட பெரிய திருமணம் | 4137 |
| கல் தம் குடையவன் | மலையைக் குடையாக எடுத்த திருமால் | 5076 |
| கல்தரு வடம் | சபமாலை | 2319 |
| கல்துறை வரை கொள் | மலைகள் போன்ற பாறைகளைக் கொண்ட நீர்த்துறை | 4073 |
| கல் பொலி சுரம் | பருக்கைக்கற்கள் வெப்பம் தரும் பாலை | 3614 |
| கல்லல் | தோண்டுதல் | 2733 |
| கல்லலகு | ஒரு வாத்தியம் | 6318 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | க | |
| கல்லவடம் | ஒருவகைப்பறை | 256 |
| கல்லறை | மலைக்குகை | 736 |
| கல்லாடை | காவியுடை | 7163 |
| கல்லாலன் | கல்ஆலமரத்தின்கீழ் உள்ளவன் | 7551 |
| கல்லான் | கற்றுணரப்படாதவன் | 1642 |
| கல் வளர் ஆடையர் | காவிக்கல்லால் நிறம் ஊட்டப்பட்ட ஆடையுடையோர் | 3921 |
| கல் வித்தகத்தால் | கல்லில் சிற்பம் முதலிய பெருமையுடன் | 2255 |
| கல்வில் | வில்லாகிய மேருமலை | 113 |
| கல | கலத்தல் | 5424 |
| கலகல | ஒலிக்குறிப்பு | 48 |
| கலச்செலவு | கப்பல் போக்குவரவு | 7271 |
| கலதி | மழித்த தலையினன் | 4088 |
| கலம்பெறுகடல் | திருப்பாற்கடல் | 2641 |
| கலமலக்கிட்டு | கலந்து பிறழச்செய்து-அஞ்சச்செய்து | 4184 |
| கலவத்திரள் | மயிற்கூட்டம் | 1826 |
| கலவம் | தோகை | 726 |
| கலவமஞ்ஞை | தோகைமயில் | 3297 |
| கலவர் | கலந்து அணிபவர், ஆபரணமாக உடையவர் | 5601 |
| கலவலான் | கலக்க வல்லவன் | 5424 |
| கலவலின் | கலத்தலால் | 3736 |
| கலவைத்திரள் | ஆடலுக்குரிய வாத்தியங்கள் | 1826 |
| கலன் | பிச்சை ஏற்கும் பாத்திரம் | 2 |
| கலி | தீவினை | 864 |
| | ஆரவாரம் | 7329 |
| | வறுமை | 1997 |
| கலி ஆர் கடல் | ஒலி நிறைந்த கடல் | 913 |
| கலிக்க | ஆரவாரம் செய்ய | 17 |
| கலிக்கோவை | ஒலிமாலை | 1600 |
| கலியின் அமண் | துன்புறுத்தும் சமணர் | 1567 |
| கலியேன் | களியேன் - செருக்குக்கொள்ளமாட்டேன் | 7388 |
| கலை | மான் | 387 |
| | மேலாடை | 471 |
| | ஆடை | 1348 |
| | மேகலை | 2203 |
| கலைஅது ஊர்தி | கலைமானை வாகனமாகக் கொண்ட துர்க்கை | 2390 |
| கலைஆறு | வேதத்தின் அங்கங்கள் ஆறு | 93 |
| கலை இல்லவன் | ஆடையற்றவன் - திகம்பரன் | 2775 |
| கலைக்கன்று | ஆண்மான் கன்று | 5094 |
| கலைக் கையான் | மானைக் கையிலே பிடித்தவன் | 5606 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | க | |
| கலை களித்து ஏறி | ஆண்குரங்கு விளையாடி ஏறி | 4074 |
| கலைப்பாடு | உடை அணிந்த சீர்மை | 6709 |
| கலை மலி கரத்தான் | மான் ஏந்திய கையை உடையவன் | 4095 |
| கலையன் | கலாநாதன் என்பதன் மரூஉ | 7629 |
| கலையான் | பீதாம்பரம் அணிந்த திருமால் | 1701 |
| கவ்வை | துன்பம் | 687 |
| | தோத்திர முழக்கம் | 2590 |
| | ஓசை | 3551 |
| கவடு | கிளை | 848 |
| கவணர் | மாறுபட்ட இயல்புடையோர் | 2985 |
| கவர்செய்து | மனம்திரிந்து | 686 |
| கவர் தலை | ஐந்தாகப் பகுக்கப்பட்ட தலை | 848 |
| கவர் வாய்மொழி | வஞ்சனையான சொற்கள் | 391 |
| கவளம் | உருண்டையான உணவு (யானைக்கு இடுவது) | 1496 |
| | கையால் பிடித்து உண்ணும் பிடிஉணவு | 2985 |
| கவனம் | விரைவு | 2324 |
| கவாலி | கபாலி-தலைஓட்டை உண்கலனாகக் கொண்ட சிவன் | 5524 |
| கவிகோளும் இலவாக | கவிகள் பொருள்கொள்ளுதல் இல்லாதனவாக | 3559 |
| கவிப்பெயர்ச் சத்திரத்தின் | பாடல்களாகிய ஆயுதத்தினால் | 3213 |
| கவின் | அழகு-சிவப்பொலிவு | 2181 |
| கவுணி | கவுணியன் (கௌண்டின்ய கோத்திரத்தில் உதித்தவன்) | 151 |
| கழகம் | களபம்-சுண்ணம்புச் சாந்து | 66 |
| கழகின்மேல் | வஞ்சனையாக | 5371 |
| கழல் | கழற்சிக்காய் | 35 |
| | திருவடி | 1534 |
| | காலில் அணியும் அணி | 4733 |
| கழல் ஏத்தர் | திருவடிப்புகழ் பாடுபவர் | 5336 |
| கழல் நம் கோவை | நம் கழல்கோவை-நம் கால்களில் பூணும் தளை | 7167 |
| கழற | இகழ | 2592 |
| கழறர் | காலில் கழல் அணிந்தவர் | 4733 |
| கழறி | வெளிப்படையாகச் சொல்லி | 784 |
| கழனி | வயல் | 662 |
| கழி | உப்பங்கழி | 7473 |
| கழி அம்பு | வில்லினின்றும் கழிந்த அம்பு | 2136 |
| கழிகாடலன் | சுடுகாட்டில் இரவில் நடம்இடுபவன் | 1679 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | க | |
| கழி சம்பிரசம் | சம்பிரதம்-மிக்க விளைவு; | 1107 |
| | சம்பிரசாதம்-நல்ல அநுக்கிரகம் | 1107 |
| கழித்தலைப்பட்ட நாய் போல | கழியில் கட்டப்பட்ட நாய் போல | 7789 |
| கழிந்தவர் | அரியும் பிரமனும் | 2534 |
| கழிப்பால் கண்டு அடங்கச் சுழி ஏந்தும் | நீர்ச்சுழிகளை, அவை கழியை அடைந்து அடங்குமாறு தாங்குகின்ற | 7468 |
| கழுக்கள் | கழு ஏற்றுதற்கு உரியோர் | 1556 |
| கழுகு | கழுகரசரான சம்பாதியும் சடாயுவும் | 6991 |
| கழுகுஆளவன் | பறவைவடிவம் கொண்ட பிரமன் | 1870 |
| கழுது | பேய் | 103 |
| கழுமலம் | ஓர் ஆறு | 4961 |
| கழுமலமுதுபதிக் கவுணியன் | தீக்ஷைமுறைகளால் மலத்தை கழுவும் கவுணிய கோத்திரத்தில் வந்த ஞானசம்பந்தன்(அடி-44) | 1382 |
| கழை | கரும்பு | 230 |
| | மூங்கில் | 828 |
| | ஓடக்கோல் | 3203 |
| கழை இறுத்த | (நெல்லையில்) மூங்கிலில் தங்கிய | 6729 |
| கழைக்கரும்பு | வேழக்கரும்பு | 7831 |
| கள் ஆறுத | தேன் நீங்காத | 5919 |
| கள்ள ஆனை | காண்பதற்கரிய யானை போன்றவர் | 5607 |
| கள்ள நகு வெண்தலை | வஞ்சனையுடைய வாய் பிளந்த தலைஓடு | 2339 |
| கள்ளப்பிள்ளை | மாயக்குழந்தை-கண்ணன் | 7823 |
| கள்ளம் மதித்த | வஞ்சனையை நினைத்த | 2191 |
| கள்ளி | கள்ளம்செய்து-வஞ்சித்து | 7590 |
| கள்ளிக்காடு | மயானம் | 5582 |
| கள்ளியார் | கள்ளம் உடையவர் | 5742 |
| கள்ளுரை | திருட்டுச்சொல் | 2810 |
| களா | களாச்செடி | 2377 |
| களகம் | களபம்-சுண்ணம்புச்சாந்து | 66 |
| களங்கம் | கறை-விடத்தின் கறுப்பு | 2272 |
| களபம் | களகம்-களவம்-சுண்ணம்புச்சாந்து | 66 |
| களம் | கழுத்து | 462 |
| | நெற்றி | 1367 |
| களரும் | கரிய நிறமுடைய | 5423 |
| களி | கள்ளி என்ற முட்செடி | 1307 |
| | செருக்கு | 2054 |
| களியின் ஆர் | சிற்றின்பக் களிப்பைக் காட்டும் | 4691 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | க | |
| களிறு | (மதயானைகள் போன்ற) ஐம்புலன்கள் | 4475 |
| களேபரம் | உடம்பு | 4934 |
| களை | ஒளி | 121 |
| களை கட்டவர் | களைகளை நீக்கியவர் | 41 |
| களைகண் | பற்றுக்கோடு | 189 |
| கற்குன்றம் | கோவர்த்தனமலை | 1892 |
| கற்பம் | கற்பகம் | 2270 |
| | எண்ணம் | 4851 |
| கற்றமணர் | கற்ற சமணர் | 1784 |
| கற்றென | கல் போன்று நிலைபெற | 1806 |
| கறவு | பசு | 4792 |
| கறி | மிளகு | 420 |
| கறிஆர்கழிசம்புரசம் | மிளகு நாவல் இவற்றின் சாறு | 1107 |
| கறித்து | கடித்து | 3083 |
| கறியும் | கறிக்கும்-கடித்துண்ணும் | 7989 |
| கறுத்தான் | சினம்கொண்டான் | 322 |
| கறும்பி | சிறிது சிறிதாக அரித்துத் தின்று | 5984 |
| கறுவு | சினம் | 2358 |
| கறை | கறுப்பு | 6 |
| | சினம் | 385 |
| | விடத்தின் கறுப்பு | 765 |
| | குருதி பட்டு உலர்ந்த கறை | 2167 |
| கறை ஆர் கதிர்வாள் | களங்கத்துடன் கூடிய கதிர்களை உடைய சந்திரனது பெயர் கொண்ட வாள்-சந்திரஹாசம் | 159 |
| கறை இலங்கு மலர் | நீலமலர் | 666 |
| கறை கணித்தவர் | தம் குற்றங்களை உணர்ந்து வருந்தியவர்கள் | 5850 |
| கறை கொள் காசு | அழுக்குப் படிந்த காசு | 993 |
| கறையானை | தொண்டையில் நஞ்சுண்ட கறையை உடையவனை | 6284 |
| கன் | கல்-மலை-திருக்கயிலாயம் | 1905 |
| கன்மையால் | இது வெறுங்கல் என்ற எண்ணத்தால் | 4742 |
| கன்றல் மணி | இருண்ட நீலமணி | 1703 |
| கன்றன் | மான்கன்றைக் கையில் கொண்டவன் | 1703 |
| கன்றி | சினந்து | 669 |
| கன்றிவரு | செருக்கி வந்த | 1812 |
| கன்னல்அம் பெரிய | கரும்பு மிகுந்த | 4100 |
| கன்னி | ஓர் ஆறு | 7179 |
| கனகம் | பொன் | 1881 |
| கனகமுக்கு | மீன்வகை | 3177 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | க | |
| கனகியின் முகை | மஞ்சள் ஊமத்தம்பூ | 231 |
| கனத்தகத்து | மேகத்தில் | 6636 |
| கனத்து ஆர் திரை | மேகம் பருகும் அலைகடல் (பாற்கடல்) | 1675 |
| கனம் | பெருமை | 221 |
| | மேகம் | 473 |
| கனமாய் | பருப்பொருளாய் | 6367 |
| கனமேனி | பருத்த உடல் | 2754 |
| கனல் மேனி | சினத்தால் வெப்பம் கொண்ட உடல் | 2754 |
| கனலா(க) | தீயாக | 4547 |
| கனவரை | பெரியமலை-கயிலாயம் | 3136 |
| கனிகைமார் | கன்னிகையர் | 3614 |
| கனிந்தவர் | கசிந்துஉருகி வழிபடுவோர் | 1614 |
| கனை | செறிதல் | 60 |
| | ஒலித்தல் | 372 |
| | கனைத்தல் | 2553 |
| கனை ஆர் | ஒலி மிகுந்த | 801 |
| கனைவில் ஆர் புனல் | விரைவில் பொருந்திய நீர்ப்பெருக்கு | 3200 |
| கனைவு | வேகம் | 3200 |
| | கா | |
| காகம்பர் | கா கம்பர்-காக்கின்ற கம்பவடிவத்தினை யுடையவர் (காம்பரர்-இகழத்தக்க ஆடையை உடையவர்) | 4733 |
| காகுத்தன் | ககுத்தன் மரபில் வந்த இராமன் | 6991 |
| காச்சு இலாத பொன் | காய்ச்சுதல் இல்லாத பொன் போன்ற உமாதேவி | 1559 |
| காசம் | ஒளி | 6469 |
| காசுஅக்கடல் | இழிந்த மணி (கருமணி) நிறைந்த பாற்கடல் | 1648 |
| காசு அடை மேகலை | மணிகள் பதித்த மேகலை | 3919 |
| காசை | காஷாயம் | 3286 |
| காசை செய் குழல் | காயாம்பூப் போன்ற கரிய கூந்தலையுடைய உமாதேவி | 2939 |
| காசை போர்க்கும் கலதிகள் | காஷாயஉடை அணியும் தீவினையோர் | 3286 |
| காசைமலர் | காயாம்பூ | 2341 |
| காஞ்சிவாய் | ஓர்ஆறு | 8157 |
| காட்சி இல்லாதது ஓர் தடுக்கு | அழகில்லாத பாய் | 2930 |
| காடகக் கால் | காட்டில் நடந்த கால் | 5124 |
| காண் | காட்சிஅழகு | 61 |
| காண்டவன் | காணத் தக்கவன் | 7696 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | கா | |
| காண்டு | காணத் தக்கது | 5361 |
| காண்டும் | காண்போம் | 2194 |
| காண்பு | காணுதல் | 2242 |
| காணம் | காசுபணம் | 7277 |
| காணுதார் | கற்றவாறு ஒழுகாதார் | 1364 |
| காணர் | காணப்படார் | 2483 |
| காணி | உரிய இடம் | 3548 |
| காணிய | காண விரும்பி | 9 |
| காதல் | பிள்ளை(மகன்) | 420 |
| காதல்வண்டு | ஆண்வண்டு | 1879 |
| காதலன் | (காட்டுப்பள்ளியை) மிக விரும்பும் சிவபெருமான் | 54 |
| | அன்புசெய்வான், வேண்டுதல் இலான் | 5353 |
| காதினன் | காதியவன்-உதைத்தவன் | 1803 |
| காதுபொத்தர் | கேள்வியால் துளைக்கப்பட்ட காதினை உடைய கல்விகேள்வி மிக்க சனகர் முதலிய நால்வர் | 7905 |
| காந்தள் ஆரும் விரல் | காந்தள்மொட்டுப் போன்ற விரல் | 2769 |
| காந்தாரம் | குறிஞ்சிப்பண் | 1399 |
| காப்புக் கொள்ளி | உலகைக் காக்கும் இறைவன் | 6176 |
| காபாலம் கட்டங்கக் கொடியார் | கபாலத்தையும், கட்டங்கம் என்ற ஆயுதத்தைப் பொறித்த கொடியையும் உடையவர் | 6534 |
| காபாலி | கபாலி-தலைஓட்டை ஏந்தும் சிவபெருமான் | 3503 |
| காம் | (ஏவல்வினை) காத்தருளுங்கள் | 1896 |
| காம்பினொடு நேத்திரங்கள் | காம்பு, நேத்திரம் என்னும் பெயருடைய பட்டாடைகள் | 7703 |
| காம்பு | மூங்கில் | 862 |
| | பட்டாடை விசேடம் | 7703 |
| காம்பு அடு தோள் | மூங்கிலை வெல்லும் தோள் | 2207 |
| காம்பு அன தோளி | மூங்கிலைப் போன்ற தோள்களை யுடையவள் | 40 |
| காமக்கொடி | காமாட்சிஅம்பிகையாகிய கொடி | 1855 |
| காம கோபனை | மன்மதனைச் சினந்த சிவபெருமானை | 7928 |
| காமசெற்றகுரோத லோபமதவர் | காமம் முதல் மதம் ஈறுக இவ்வைந்து குற்றங்களையும் இகழ்ச்சிக்குறிப்பால் உயர்திணையாகக் கூறினர். | 7284 |
| காமர் | மன்மதன் (இகழ்ச்சிக் குறிப்பு) | 7121 |
| காமரம் | பண்வகை | 506 |
| | இசைபாடுதல் | 4931 |
| காமரு | அழகிய (காமம் மருவு) | 2816 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | கா | |
| காமனை | விருப்பம் | 1391 |
| காமாத்தம் | காமம் அர்த்தம்; இன்பமும் பொருளும் | 5677 |
| காமியம் | ஏதேனும் ஒரு விருப்பத்தை வேட்டுச் செய்யும் வேள்வி; இது வீடுபேற்றுக்குத் துணை ஆகாது. | 5461 |
| காமுறவு | ஆசைப்படுதல் | 55 |
| காய்தல் | சினத்தல் | 2237 |
| காயத் தொட்ட | எரியுமாறு தொடுத்த | 6430 |
| காயம் | உடம்பு | 543 |
| | ஆகாயம் | 1691 |
| கார் | கருமை | 437 |
| | கார்மேகம் | 2694 |
| | யானை | 4530 |
| கார்அரவு | கரும்பாம்பு (கிருஷ்ணசர்ப்பம்) | 507 |
| கார் ஆர்தரும் | கார்காலத்தில் மலரும் | 3122 |
| கார் ஆர் வயல் | நீர் நிறைந்த வயல் | 260 |
| கார் இடு மாமலர் | கார்காலத்து மலரும் கொன்றை | 429 |
| கார்வணன் | கரிய நிறமுடைய திருமால் | 3039 |
| கார் வருத்துவகை நீர் கொள் பொழில் | மேகத்தைத் தடுத்து வருத்தும் வகையால் அதன் நீரைக் கொள்ளும் பொழில் | 1816 |
| காரண | யாவற்றுக்கும் முதல்ஆனவனே | 7731 |
| காரழல் | விடம் | 4722 |
| காரான் | கார்மேகமாய் இருப்போன் | 1605 |
| காரிகை | அழகு | 686 |
| காரிகையாள் | பெண்-உமாதேவி | 4196 |
| காரினர் | அடியார்க்கு வரைவின்றி அருளுதலால் மேகம் போன்றவர் | 3166 |
| காரும் | கரிய நிறத்தைக் கொள்ளும் | 7415 |
| காரை | பாலைநிலத்துச் செடிவகை | 2377 |
| கால் | காற்று | 1499 |
| | வாய்க்கால் | 1742 |
| | காம்பு | 2429 |
| கால்அத்தால் | காலினால் | 7085 |
| கால் ஆய முந்நீர் | கரியதான கடல் | 3381 |
| கால் ஆர் சிலை | கால்விரலருகே வைத்து வளைக்கும் வில் | 1868 |
| கால் நிமிர்தல் | நிற்றல் | 446 |
| கால் நின்று அதிர்தல் | நடனம் செய்தல் | 2118 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | கா | |
| காலம் பகராதார் | பிறிதொரு காலம் கூருமல் அப்பொழுதே கொடுக்கும் வள்ளல்கள் | 879 |
| காலம்பெற | விடியற்காலத்திலேயே | 160 |
| காலமும் பொய்க்கினும் | காலமழை பொய்த்தாலும் | 3929 |
| காலர் கழலர் | கழல் அணிந்த காலை உடையவர் | 2141 |
| கால வைத்தார் | (யமன்) உயிரைக் கக்குமாறு செய்தார் | 4544 |
| [கால் அவைத்தார் | (யமனை) காலினுல் உதைத்து அழித்தார் | 4544] |
| காலா | (கால்ஆக) ஏற்றத்திற்கு ஆதாரமாக நட்ட கம்புஆக | 4673 |
| காலினொடு போக்கி | காலினுல் நீக்கி | 185 |
| காலையில் உண்பவர் | பௌத்தர் | 1172 |
| காவன் | காப்பவன் | 7100 |
| காவா | காத்து | 1365 |
| காவாய் | காப்பாயாக | 113 |
| காவி | நீலப்பூ | 1109 |
| காவிரி | ஈண்டு, குடமுருட்டியைக் குறித்தது. | 173 |
| கா விரி கொன்றை | சோலையில் மலர்ந்த கொன்றை | 2204 |
| காவிரித்துறை காட்டுதல் | காவிரித்துறையில் தீர்த்தம் கொடுத்தல் | 2319 |
| காவிரிப் புக்கவர் | காவிரியில் தீர்த்தம் கொடுக்க நீராடியவர் | 2314 |
| காளகூடம் | பெருநஞ்சு | 7327 |
| காளம் | கறுப்பு | 466 |
| காற்றில் பெருவலி இருவர் | காற்றில் மிக்க வலிமையுடைய ஊறு (பரிசம்) ஓசை என்னும் இரண்டாக இருப்பவர் | 4793 |
| காற்றின் கடுத்து | காற்றைவிடவும் விரைந்து | 5117 |
| காற்றினுன் | அகற்றினுன் | 7013 |
| காற்று ஈர்க்கு | காற்ருகிய இறகு | 113 |
| காறு | கருமை | 4831 |
| காறை | ஓர் அணிகலன் | 6289 |
| கான் | காடு | 17 |
| | சுடுகாடு | 517 |
| கானயானை | சாமகானத்துக்கு வயப்படும் சிவக்களிறு | 5609 |
| கானல் | கடற்கரைச்சோலை | 7 |
| | கி | |
| கிஞ்சுக இதழ் | முள்முருக்கம்பூப் போன்ற உதடு | 3620 |
| கிஞ்ஞரம் | (கின்னரம்) இசை | 4452 |
| கிடங்கு | அகழி | 2795 |
| கிடை | கூட்டம்; ஈண்டு, வேதம் ஓதும் சிறுவர்கூட்டம் | 350 |
| கிடைப்பல்கணம் | வேதம் ஓதுவோர் பலருடைய கூட்டம் | 88 |
| கிணின்என | ஒலிக்குறிப்பு | 2594 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | கி | |
| கிணை | பறை | 7604 |
| கிரமம் | முறை | 2710 |
| கில்லீர் | சம்மதியீர் | 7252 |
| கிலா | மாட்டா | 335 |
| கிலாய்ப்பேன் | கலாய்ப்பேன்-மாறுபடுவேன் | 7982 |
| கிழக்கே சலம் இடுவோர் | விடியற்காலையில் கிழக்குநோக்கி நின்று சூரியனுக்கு அர்க்கியம் கொடுப்போர் | 8030 |
| கிழி | துணி | 1470 |
| கிழிஇலார் | ஆடையற்றவர்-திகம்பரர் | 2947 |
| கிள்ளி | சோழன் | 2778 |
| கிளை (கிள்ளை) | கிளி | 837 |
| கிளைகிளையன் | கிளைகிளையாக | 2235 |
| கிளைஞர் | உறவினர்; ஈண்டு, அந்தணச்சிறுவர் | 2696 |
| கிளைத்த | கல்லிய | 463 |
| கிளைவான் | நீக்குபவன் | 6927 |
| கிற்றிலேன் | சம்மதிக்கிலேன் | 7855 |
| கிற்று | வலிமைகொண்டு | 1253 |
| கிறி | வஞ்சனை | 88 |
| கிறிப்பானை | வஞ்சனை செய்வானை | 6934 |
| கிறிபட உழிதர்வர் | எள்ளப்படுமாறு திரிவர் | 4271 |
| கிறிபட நடந்து | விளையாட்டுடன் நடந்து | 3790 |
| கிறிபடும் | பரிகாசம் செய்யப்படும் | 3014 |
| | கீ | |
| கீண்டு | பிளந்து | 2235 |
| கீதர் | பாடுபவர் | 564 |
| கீழ்ந்து | பிளந்து | 2711 |
| கீள் | துணியால் ஆகிய அரைஞாணோடு கூடிய கோவணம் | 239 |
| கீள்பல (பலா) | பிளக்கப்படும் பலாப்பழம் | 2235 |
| கீறின உடையினர் | கிழிந்த உடை உடுத்தவர் | 4264 |
| | கு | |
| குசை | தருப்பைப்புல் | 5949 |
| குஞ்சரத்தின் படம் | யானைத்தோல் ஆடை | 1280 |
| குஞ்சரத்தும்பி | யானை | 2990 |
| குஞ்சரம் | யானை | 2945 |
| குஞ்சித்து | காலைத் தூக்கி வளைத்து | 2881 |
| குஞ்சி மேகலை உடையார் | மணிக்குஞ்சங்கள் தொங்கும் மேகலையை அணிந்தவர் | 2489 |
| குட்டம் | குளத்தினும் சிறிய குட்டை | 3473 |
| | ஆழமுடைய கடல் | 5078 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல். எண் |
|---|---|---|
| | கு | |
| குட்ட வல்வினை | குழியில் வீழ்த்தும் வலிய வினைகள் | 5663 |
| குட்டாச் சுனை | ஆழமாக்கப்படாத சுனை; குட்டம்-தீர்த்தசுனை; கொடுங்குன்றத்தில் சுவாமி சந்நிதியில் முன்பு இருந்து, இப்போது தூர்க்கப்பட்டது. | 148 |
| குடங்கை | உள்ளங்கை | 3530 |
| குடசம் | மல்லிகை மலர் | 3756 |
| குடதிசை | மேற்குத்திசை | 1201 |
| குடபால் | மேற்கு | 3483 |
| குடி | விற்குடி | 6967 |
| குடி ஆரும் கொள்கையினர் | தலவாசம் செய்யும் விரதியர் | 1632 |
| குடிமை | குடிப்பிறப்பிற்கு ஏற்ற ஒழுக்கம் | 14 |
| குடை | குடைகின்ற-மூழ்கும் | 54 |
| குடை ஆர் புனல் | முழுகுதற்கு அமைந்த நீர் | 328 |
| குண்டர் | உடல்பருத்த சமணர் | 53 |
| குண்டிகை | கமண்டலம்-துறவிகளின் நீர்க்குடுக்கை | 2187 |
| குண்டிகைசுரை | சுரைக்குடுக்கை | 502 |
| குண்டு | உடற்பருமை | 292 |
| | சமணர் | 457 |
| | ஆழம் | 2370 |
| குண்டு ஆக்கர் | பருத்த உடலை உடையவர் | 1236 |
| குண்டு ஆடி | விதண்டாவாதம் பண்ணி | 3501 |
| குணக்கு | கிழக்கு | 3483 |
| குணங்கள் தோள் எட்டு மூர்த்தி | எண்குணத்தான்– எட்டுத்தோள்களை உடையவன், எட்டு மூர்த்தங்களை உடையவன்; எண்குணங்களாவன: (1)இயல்பிலேயே பாசமின்மை (2)இயற்கை உணர்வுடைமை (3)தன்வயத்தன் ஆதல் (4)தூய உடம்பினன் ஆதல் (5)பேரருள் உடைமை (6)முடிவில் ஆற்றல் உடைமை (7)முற்றும் உணர்தல் (8)வரம்பில்லா இன்பம் உடைமை என்பன. எட்டு மூர்த்தங்களாவன: (1) இயமானன் (2)காற்று (3)சந்திரன் (4)சூரியன் (5)தீ (6)நிலம் (7)நீர் (8)வெளி என்பன. | 5501 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | கு | |
| குணநாமம் | இராவணன் என்னும் பெயர்; இஃது அவன் அழுதமை காரணமாக வந்த பெயர். | 181 |
| குணம் இல் குணம் | வரையறையுடைய குணங்களுக்கு அப்பாற்பட்ட குணம் | 1572 |
| குணம் மூன்று | சத்துவகுணம், இரசோகுணம், தமோகுணம் என்பன | 109 |
| குணலை | கூத்துவகை | 2649 |
| குதிகொளும் | குதிக்கும் | 92 |
| குதிரைமுகத்தார் | தேவசாதியில் ஒருவரான கின்னரர் | 2706 |
| குந்தளம் | கூந்தல் | 3603 |
| கும்மலித்து | (கும்பலித்து) கூடி ஒலித்து, பூசலிட்டு | 4704 |
| குமண்டை | செருக்குக் கொண்ட செயல் | 5763 |
| குமரன் | முருகன் | 2151 |
| குமிழ்சிரிப்பு | முகிழ்சிரிப்பு-மலர்ந்த சிரிப்பு; குமிழ்-முகிழ் என எழுத்துநிலைமாற்றம் | 4952 |
| குமிறும் | உறுமுகின்ற | 120 |
| குய் | ஒலிக்குறிப்பு | 2243 |
| குய்யம் | வஞ்சனை, மறைவு | 5127 |
| குயிலன் | பதியாதவன்-பொருந்தி அமராதவன் | 1708 |
| குர | குராமலர் | 2830 |
| | குரவமரம் | 5997 |
| குரத்திகள் | குருமார் என்பதன் பெண்பால்; சமணசமயப் பெண்துறவியர் | 785 |
| குரம்பை | குடம்பை-கூடு | 651 |
| | குடில் | 2331 |
| குரல் | கழுத்து | 7717 |
| குரவன் | குரு | 5997 |
| குரு | நிறம் | 144 |
| குருக்கேத்திரத்தார் | குருக்ஷேத்திரத்துப் ப்ாண்டவர் | 5356 |
| குருகு | அன்னப்பறவை | 2652 |
| | (தந்தக்)குருத்து | 2711 |
| | நாரை | 3475 |
| குருகுஆம் வயிரம்ஆம் | மரத்தின் மெல்லிய குருத்தும் திண்ணிய காழும் ஆகிற | 6402 |
| குருண்ட | கடைசுருண்ட | 2615 |
| குருந்துஅவன், குருந்தவன் | குழந்தை ஆகியவன், குருந்த மரத்தடியில் இருப்பவன் | 1228 |
| குருவது ஆகிய குழகன் | குருவடிவமான வாலிபப் பருவமுடையவன்; யுவா | 5434 |
| குருளை | இளமை | 2505 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | கு | |
| குரை | ஒலி | 7957 |
| குலகுலை | கரை | 7957 |
| குலம் | மேன்மை | 1654 |
| குலவர் | நற்குலத்தில் பிறந்தோர் | 2719 |
| குலவான் | நற்குடிப் பிறந்தோன் | 7329 |
| குலவோடு | குலாவுதலுடன் | 4186 |
| குலா | பெருமை | 7977 |
| குலை | கரை | 7987 |
| குலைக்கின்று | குலைக்கும் இன்று | 5094 |
| குவ | குவவு-திரட்சி | 4805 |
| குவலயம் | பூமி | 82 |
| குவை | குவியல் | 1850 |
| குழகர் | அழகர் | 4708 |
| குழகன் | இளையோன் | 241 |
| | குளகன்; குளமுனி பூசைசெய்தலத்துக் கடவுள் (கோடிக்குழகர் வேறு) | 6491 |
| குழ்கு | இளமை | 776 |
| குழல் ஆர்தல் | குழலிசை போல நிறைதல் | 2094 |
| குழல் ஆர் பண் | குழல் போன்ற இசை | 245 |
| குழிக்கரை | குட்டையினும் சிறிய குழி | 3473 |
| குழை | தழை | 454 |
| | காதணி | 681 |
| | காது | 847 |
| குழைத்தது ஓர் அமுதம் | சுவைபடக் குழைத்த அமுதம் போன்ற சிவாநந்தம் | 4647 |
| குழை தரு கண்ணி | தளிர்கள் மிடைந்த மாலை | 2373 |
| குளிர்ஆரூர் | வைப்புத்தலங்களுள் ஒன்று; வேதாரண்யத்திற்கு மேற்கே இருப்பது; ஒரு குளவடிவமுள்ளது. | 6491 |
| குளிரும் | தங்கும் | 1422 |
| குற்றன் | குற்றியவன், சிறுமைப்படுத்தியவன் | 1608 |
| குற்றுவிட்ட உடுக்கை | மிகக் குறைந்த உடை | 446 |
| குறங்கு | துடை | 1915 |
| குறவி | குறத்தி-வள்ளி | 4749 |
| குறள்ஆய் நிமிர்ந்தான் | வாமனனாக இருந்து நெடிது உயர்ந்த திருமால் | 2099 |
| குறள் பாரிடம் | குறுகிய வடிவுள்ள பூதகணம் | 17 |
| குறி | குறித்த சுரத்தானங்கள் | 12 |
| | குறிக்கோள் | 1562 |
| | அரும்பு மலரும் குறிப்பு | 2095 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | கு | |
| குறிக்கோள் | ஞானம் | 4826 |
| குறிநீர்மையர் | சிவஞானிகள் | 179 |
| குறிப்பு | சிவத்தியானம் | 2130 |
| குறியார் | நூல் உணர்ந்தோர் | 246 |
| குறியின்மை | பொருளின்மை | 1478 |
| குறியே | குறிக்கொள்ளும் பரம்பொருளே | 7497 |
| குறும்பி | உடல்அழுக்கு | 5984 |
| குறுவித்தல் | குறுகுவித்தல் | 5042 |
| குறை | குறைகளைச் சொல்லுதல் | 2035 |
| குறைக் காட்டான் | குறைகளைக் காணாதவன் | 5331 |
| குறைகொள | வேண்ட | 1295 |
| குன்றம் எடுத்தவன் | கண்ணன் | 420 |
| குன்றர் ஐ | மலைகளுக்குத் தலைவனான இமவான் | 4997 |
| குன்று அடுத்த மாளிகை | குன்று போல் உயர்ந்த மாளிகை | 2022 |
| குன்றை | மலைநாட்டுக் குன்றத்தூர்; விறல்-மிண்டர் ஊர் | 7628 |
| குனித்தார் | நடம் ஆடியவர் | 17 |
| குனிமதி | வளைந்த பிறை | 2371 |
| குனி வெண்திங்கள் | வளைந்த வெண்பிறை | 3249 |
| | கூ | |
| கூகம் | ஓர் ஊரின் பெயர் | 3046 |
| கூகை | கோட்டான் | 145 |
| | ஒரு மரம் | 2377 |
| கூகை அம் மாக்கள் | கோட்டான் போன்றவர்களும், விலங்குகளை ஒத்தவர்களுமான பௌத்தரும் சமணரும் | 3414 |
| கூச்சு இலேன் | கூசுதல் இல்லேன் | 4928 |
| கூசம் | கூச்சம் | 7303 |
| கூசன் | கூசுதலை உடையவன் | 6906 |
| கூசுதல் | இறைவனது அளவற்ற பெருமை கண்டு அஞ்சுதல் | 1756 |
| | தம்செயல் குறித்து நாணுதல் | 2120 |
| கூட்டம் | பற்று | 2196 |
| கூட்டை | உடம்பை | 4623 |
| கூடத்தார் | ஏம கூடத்தில் உள்ளவர்; ஏமகூடம் ஒரு வைப்புத்தலம் | 6765 |
| கூடவேடத்தார் | இரகசியமான கோலங்களை உடையவர் | 6241 |
| கூடாதன | அரிய செயல்கள் | 330 |
| கூடு அரவம் | ஒத்துவரும் ஓசை | 3685 |
| கூத்தை | கூத்திற்கு | 1243 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | கூ | |
| கூதல் | கூதல்மாரி, குளிர் | 1396 |
| கூதல் மாரி | குளிர்ந்த மழை | 1076 |
| கூந்தல் | கூந்தல் கமுகு, கூந்தற்பனை | 2661 |
| கூர் | கூரிய நுனி | 2004 |
| கூர் உலாவு படை | கூரிய சூலப்படை | 310 |
| கூர் எரி | மிகுந்த தீ | 60 |
| கூர்க்கும் | கூர்ஆக்கும் | 2776 |
| கூர்ச்சம் | தர்ப்பைகளின் நுனிகளைச் சேர்த்து முடிந்த பவித்திரம் | 5632 |
| கூர்மையர் | திருவருட்சிறப்பு எய்துவோர் | 1654 |
| கூரம் | குரூரம்-கொடுமை | 289 |
| கூவித்து | கூவுவித்து | 5002 |
| கூவிளம் | வில்வம் | 812 |
| கூவை வாய் | திரண்ட முகத்தினைஉடைய | 4290 |
| கூழ்ஆட்கொண்டு | உணவுக்காக அடிமைகொண்டு (உணவு- ஈண்டு, அருள்) | 4212 |
| கூழை | கூந்தல் | 1464 |
| | வால் குறைந்தது | 1877 |
| கூழை மாந்தர் | அறிவுமுதிர்ச்சி பெறாத மாந்தர் | 7857 |
| கூழைமை | குழைந்து உருகிய தன்மை | 4953 |
| கூழையேன் | குழையும் இயல்புடையேன் | 4935 |
| கூற்றத்தார் | கூற்றுவன் தூதர் | 2325 |
| கூற்றவன் | (உமாதேவியை) பாகமாய்க் கொண்டவன் | 1196 |
| கூற்றனை | சொல்லின் வடிவமாக உள்ளவனை | 6546 |
| கூற்றுவன் | யமனுடைய ஆள் | 4646 |
| கூறாத நா | ஊமையான நாக்குகள் | 1945 |
| கூறிட கிற்றி | கூறும் வல்லமை பெறுவாயாக | 6034 |
| கூறை | ஆடை | 53 |
| கூறைக்கொடி | துணிக்கொடி | 1282 |
| கூறை கொள்ளும் இடம் | அரைத்துணியையும் பறித்துக் கொள்ளும் இடம் | 7734 |
| கூன் ஆர் திங்கள் | வளைந்த பிறை | 3248 |
| | கெ | |
| கெடுகிட | கெடும்படியாக | 830 |
| கெண்டி | கல்லி | 110 |
| கெண்டுற்று | கிளறி | 2748 |
| கெதி | கதி-நன்னிலை | 8035 |
| கெந்தசாலி | நெல்வகை | 4373 |
| கெந்தத்தன் | மணம் போன்றவன் | 6744 |
| கெந்தம் | கந்தம்-நறுமணம் | 2705 |
| கெழியார் | கெழுமியவர்-பொருந்தியவர் | 1698 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | கெ | |
| கெழும | ஒலிப்ப | 684 |
| கெழுவினர்அவர் | பொருந்தினர் | 2312 |
| கெளிறு ஆருடன் | கெளிறுமீன்களுடனும் ஆரல்-மீன்களுடனும் | 3556 |
| | கே | |
| கேட்குமா | கேட்குமாறு | 4400 |
| கேடுஅவன் | உலகிற்கு அழிவுசெய்பவன் அவனே | 1186 |
| கேண்மையாள் | உறவுடையாள்-உமாதேவி | 2041 |
| கேண | சிதைக்க | 1113 |
| கேதகை | தாழை | 3928 |
| கேதம் | துன்பம் | 96 |
| கேதுகின்றேன் | துன்புறுகின்றேன் | 4667 |
| கேழ் | நிறம் | 1630 |
| கேழல் | காட்டுப்பன்றி | 463 |
| | பொருந்துதல் | 491 |
| | காட்டுப்பன்றியின் கொம்பு | 2493 |
| கேள்வன் | கணவன் | 2206 |
| கேள்விக்கிடை | வேதம் ஓதும் சிறுவர் கூட்டம் | 883 |
| கேளா | கேட்டு | 2239 |
| | கேளாக-உறவாக | 7475 |
| கேளாச்செவி | செவிடு | 1946 |
| | கை | |
| கை | ஆதிரைநாள் | 728 |
| கைஅளகு | சிறிய கைவாள், ஒரு வாத்தியம் | 7212 |
| கைக்கொண்டு | ஏற்று | 482 |
| கை கோடி | கையை வளைத்து | 2140 |
| கைத்தவர் | வெறுத்தவர்கள் | 7912 |
| கைதல் | தாழை | 2731 |
| கைதவம் | வஞ்சகம் | 21 |
| கைது | கையது-கையில் உள்ளது | 5522 |
| கைதை | தாழை | 854 |
| கைப் பயந்த | கைமேல் பயன்கொடுத்த | 1972 |
| கைப்பர் | வெறுத்து ஒதுக்குவர் | 7849 |
| கைபோய் | இருபக்கமும் தெறிக்க | 7992 |
| கைம்மா | யானை | 146 |
| கைம் மான | கை போல | 6878 |
| கைம்மை | ஒழுக்கமுடைமை | 7352 |
| கையது வீழினும் | கையில் உள்ள பொருள் இழப்பினும் | 2838 |
| கையர் | கீழ்மக்கள் | 446 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | கொ | |
| கொக்கரை | வாத்தியவகை | 3430 |
| கொக்கின் கோடு | மாமரத்தின் கிளை | 1072 |
| கொக்கு | கொக்கின் இறகு | 1822 |
| | மாமரம் | 7001 |
| கொகுடி | ஒருவகை முல்லைக்கொடி | 1806 |
| கொங்கு | கோங்கு-ஒருமரம் | 2567 |
| கொங்கு அரவப்படு வண்டு | மகரந்தத்தில் புரண்டு ஒலிசெய்யும் வண்டு | 2786 |
| கொங்கை ஆரும் | இயற்கை மணத்தால் நிறையும் | 2092 |
| கொச்சை | சீகாழிப்பதி | 925 |
| | இழிதகவு | 1948 |
| கொச்சை முரவு அச்சர் | கொச்சை கண்டு வருந்திய பராசரமுனிவர் | 3524 |
| கொச்சையார் | அறிவற்றவர்கள் | 5707 |
| கொட்டம் | நறுமணம் | 2802 |
| | வாசனைப்பொருள் | 5890 |
| கொட்டாறே | கொட்டின வழியே - வெட்டித் தோண்டும் இடத்தில் | 5990 |
| கொட்டி | கொடுகொட்டி வாத்தியம் | 4954 |
| | ஒலித்து | 6608 |
| கொடி | காக்கை | 3154 |
| | உவம ஆகுபெயரால், கொடி போன்ற பாம்பு | 6297 |
| கொடி புல்கு மென்சாயல் | கொடி போன்ற மெல்லிய அழகை உடையவள் | 2065 |
| கொடிறனர் | உறுதிப்பாடு உடையவர் | 4101 |
| கொடு | கொடுமை | 937 |
| கொடுகொட்டி | கிடுகிட்டி என்ற வாத்தியம் | 812 |
| | சர்வசங்காரக்கூத்து | 5215 |
| கொடும்பாடன் | கொடுமைக்குணம் உடையவன் | 7710 |
| கொடுவரி | புலி | 2454 |
| கொண்டல் | கொள்ளுதல் | 435 |
| | ஒரு வைப்புத்தலம் | 3179 |
| கொண்டலார் | கீழ்காற்று; உயர்ச்சிக்குறிப்பு | 2033 |
| கொண்டலை | (ஐ-அசைநிலை)கொண்டல்-நீருண்டமேகம் | 1874 |
| கொண்டி | காதல் மிகுந்து பிச்சி ஆனவள்; தன் தாய்-தந்தையரையும் மீறிக் காதல் வசப்பட்டவள். தேவார காலத்திற்கு முன்பே திருவாரூரில் இருந்த புகழ்பெற்ற ஒரு தேவதாசியின் பெயர் இது என்பர் சான்றோர். | 5307 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | கொ | |
| கொண்டு | ஓர் உவமஉருபு | 2562 |
| கொத்து | பூங்கொத்து | 2610 |
| கொத்தைக்கு மூங்கர்..... | குருடர்க்கு ஊமையர்..... | 5126 |
| கொத்தையேன் | குருடனான நான் | 4838 |
| கொதி | கோபம் | 2391 |
| கொதியா | கொதித்து-கோபித்து | 316 |
| கொதுகு | கொசு | 5563 |
| கொந்த | குத்த | 2325 |
| கொந்து | கொத்து | 80 |
| கொந்து அரத்த மதிச் சென்னி | கொத்தாகவும் செந்நிறம் கொண்டதாகவும் மதிசூடியதாகவும் உள்ள (சடையை-யுடைய) தலை | 674 |
| கொம்பல் | கும்மிப்பாட்டு | 2380 |
| கொம்பின் ஏர் துகிலின்கொடி | கழியில் கட்டித்தூக்கிய துணிக்கொடி | 2029 |
| கொய் | கொய்த பூக்கள் | 7539 |
| கொல் | கொலைத்தொழில் | 553 |
| கொல் நவிலும் | கொலையைப் பயிலும் | 2543 |
| கொல்லாடி நின்று | கொலைசெய்து | 4986 |
| கொல்லி | கொல்லுதலை உடையோன் | 7336 |
| கொல்லியான் | கொல்லிமலையில் இருப்போன் | 5576 |
| கொல்லை | முல்லைநிலம் | 505 |
| கொல்லை ஏற்றினர் | முல்லைநிலத்திற்குரிய காளையை ஊர்தியாக உடையவர் | 6020 |
| கொல்லைச் சில்லைச் சேத் திட்டுக் குத்தி | முல்லைக்குரிய இளஎருது மணல் மேடுகளைக் கொம்பால் குத்தி | 7246 |
| கொழுமுனை | பருத்த நுனி | 1079 |
| கொள்வனார் | கொள்பவர் | 3271 |
| கொள்வானே | கொள்ளும்பொருட்டாக | 7831 |
| கொள்ளெலும் | கொள்ளாதீர் | 599 |
| கொள்ளேலும் | கொள்ளாதீர் | 599 |
| கொள்ளைக் குழைக் காது | மிக்க ஒளி வீசும் குழை அணிந்த காது | 6608 |
| கொளுவும் | கொளுத்தும் | 3339 |
| கொற்று அட்டி ஆளார் | நாட்கூலி கொடுத்து ஆட்கொள்ளமாட்டார் | 7278 |
| கொற்றுஅடியாள் | உமக்கே அடிமை பூண்டவள்; (கொற்றடிமை) அவள் பிறரை ஆட்கொளல் இயலாது | 7278 |
| கொன் | அச்சம், பெருமை | 673 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | கொ | |
| கொன்றளம் | குந்தளம்-கூந்தல் | 4965 |
| கொன்றனை | கொன்றவனை | 5276 |
| கொன்றை தான் நக | கொன்றை மலர | 1114 |
| கொன்றை வாசன் | வாசக்கொன்றையன்-வாசனையுடைய கொன்றைப்பூ அணிந்தவன்; கொன்றை மரத்தடியில் தங்குபவன் | 6906 |
| | கோ | |
| கோ | கண் | 6471 |
| கோ அடு குற்றம் | கோவதை போன்ற பாவம் | 4664 |
| கோ ஆடி | தனது தலைமையைச் சொல்லி | 7225 |
| கோ ஏந்திய வினயத்தொடு | தலைமை அமைந்த வணக்கத்துடன் | 8074 |
| கோகநதம் | தாமரை | 1418 |
| கோகம் | கோகநதம்-தாமரை | 5505 |
| கோகமாலை | கோகு அம்மாலை-தோள்மாலை, தாமரைமாலை | 5505 |
| கோகிலம் | குயில் | 1092 |
| கோகு | தோள் | 5505 |
| கோகுசெய்ய | போருக்கழைத்துத் தோள்தட்ட | 4672 |
| கோசம் | புத்தகம் | 5949 |
| கோசரம் | நீரில் வாழும் மீன் | 3877 |
| கோசரம் கொள்ளியர் | மீனை உட்கொள்ளும் சமணர் | 3877 |
| கோசரம் நுகர்பவர் | மீன் உண்போர்; கோள்களின் போக்கால்-காலக்கோளாறினால் — புறச்சமயத்தில் உழல்வோர் எனல் பொருந்தும். (கோசரம்-கோசாரம்-கிரகசாரம்) | 3710 |
| கோ சார | தன் இறைமைக்கு ஏற்ப | 1948 |
| கோசாரக் கலதிகள் | கோளின் போக்கால் புறச்சமயத்தில் உள்ள மழித்த தலையினர் | 4088 |
| கோசிகம் | பட்டு | 8090 |
| கோட்டகக் கழனி | புறத்தே நீர்தேங்கி நிற்கும் வயல் | 2857 |
| கோட்டகம் | நீர்நிலைக்கரை | 1918 |
| | குளம், கரை | 3084 |
| | வரப்புக்களின் அகப்பட்ட இடம் | 7872 |
| கோட்டம் இல்லது | கோணுத செங்கோன்மை | 4274 |
| கோட்டாறு | கரையுடைய ஆறு | 1107 |
| கோட்டினர் | வளைத்தார் | 4266 |
| கோடத்தார் | வேதகோஷம் செய்பவர் | 5356 |
| கோடரம் | மரப்பொந்து; ஆகுபெயரால், அது போன்ற உள்ளிடம் | 7879 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| 1. | 2. | 3. |
| | கோ | |
| கோடரவம் | துன்பம் (கோள் தரு அவம்) | 668 |
| கோடல் | காந்தள் | 1079 |
| கோடல் அரவு ஈனும் | காந்தட்செடிகள் பாம்பைப் போல் மலர் தரும் | 3656 |
| கோடல் கைம்மறிப்ப | காந்தட் பூக்கள் கை ஆட்டிச சுவைப்ப | 3592 |
| கோடல் சால உடையார் | பிச்சை வாங்குவதை மிகவிரும்பி ஏற்றவர் | 3120 |
| கோடலர் | வளைந்த மாலை | 4365 |
| கோடு | கரை | 1483 |
| கோடு இயை | கூடலின் கோட்டைக் கூட்டு | 4292 |
| கோண் | வளைவு | 796 |
| கோண்ஆகரம் | கோணமாகிய இருப்பிடம் | 785 |
| கோண் இல் பிடி மாணி | குற்றமற்ற பெண்யானையின் உருவைக் காணும் பெருமை உடையவர் | 3515 |
| கோணப் பிரானை | சாய்ந்த திருக்கோலமுடைய இறைவனை (திருப்புகலூர் சுவாமியின் பெயர்) | 5181 |
| கோணிக் கொண்டையர் | சேர்த்துக்கட்டிய சடையை உடையவர் | 5287 |
| கோணுநுதல் நீள்நயனி | வளைந்த நெற்றியும் நீண்ட கண்களும் உடைய உமாதேவி | 3515 |
| கோத் திட்டைக் குடி | பெரிய மேட்டிலுள்ள விற்குடி | 6967 |
| கோதனம் | நந்திதேவர் | 2977 |
| | பசுக்களாகிய செல்வம் | 7797 |
| கோது | குற்றம் | 303 |
| கோது வித்தா | அழியச்செய்யும் காரணமாய் | 2737 |
| கோதை | மாலை | 834 |
| கோமளம் | மெல்லிய, அழகிய | 6021 |
| கோமி | கோதாவரி (மரூஉவழக்கு) | 5461 |
| கோயில் | தலம் | 2034 |
| கோல் | திரட்சி | 340 |
| | கிளை | 672 |
| | ஏற்றம் இறைப்போரின் பிடிகம்பு | 4673 |
| கோல் ஓட | அபிநயக்கோல் செலுத்த | 1402 |
| கோல்தேன் | கொம்புத்தேன் | 2239 |
| கோல்வளை | கங்காதேவி | 1673 |
| | உமாதேவி | 1853 |
| கோலச் சிலை | அழகுக்காக எடுத்த வில் | 900 |
| கோலம் | சைவ வேடம் | 160 |
| கோலாலம் | ஆரவாரம்; கோல்ாகலம் என்ற வட-மொழியின் சிதைவு | 6294 |
| கோலானை | ஐங்கணையானை-மன்மதனை | 6471 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| 1. | 2. | 3. |
| | கோ | |
| கோவி | வில் | 2952 |
| கோலும் | வரையறுக்கும் | 807 |
| கோவணம் | பின்னால் போக்கிக் கட்டும் ஆடை—கௌபீனம் | 416 |
| கோவலன் | கோபாலன்-திருமால் | 6285 |
| கோவாய் | கோபமாய் விரைந்து | 5102 |
| கோவி | கிருஷ்ணநதி-ஒருதீர்த்தம்; கோதாவிரி | 7007 |
| கோவியா | கோபித்து | 1761 |
| கோ விரிப் பயன் | பசுவிலிருந்து பெறும் பயனாகிய ஐந்து (பஞ்சகவ்வியம்) | 3207 |
| கோழி | உறையூர் | 2772 |
| கோழையா அழைப்பினும் | கோழை கட்டிய காரணத்தால் இனிமை இல்லாத குரலால் அழைத்தாலும் | 3787 |
| கோள் | பகை | 667 |
| | கொள்ளுதல் | 1942 |
| | குலை | 2235 |
| கோள்வித்து | கொலைக்குக் காரணம் | 2130 |
| கோள களிறு ஆளி | திரண்ட வடிவுடைய ஆண்யானையை அடக்கி ஆண்டவர் | 3526 |
| | ங | |
| ஙகர வெல்கொடியான் | (இடபம் படுத்திருக்கும்போது அதன் வடிவம் ஙகரம் போல் இருக்கும்) இடபத்தைக் கொடியாகக் கொண்ட சிவபெருமான் | 6210 |
| | ச | |
| சக்கரதாரி | சக்கரத்தை ஆயுதமாக உடைய திருமால் | 5971 |
| சக்கரம் | சக்கரபந்தம்-சித்திரகவி | 2267 |
| சகலசிவன் | திருவுருவத்துடன் கூடிய சிவபெருமான் | 3545 |
| சகலசேகரன் | சகலம்-துண்டு-மதியின் பகுதி; பிறையை முடியில் அணியாகக் கொண்டவன் | 3980 |
| சகளி செய்து | சகளீகரணம் என்ற, பூசைக்கு முற்படச் செய்யும் கிரியையைச் செய்து | 7904 |
| சங்கக் கலன் | சங்கினால் ஆன காதணி | 5209 |
| சங்கதபங்கமாப் பாகதத்தொடு | பொருள்தொடர்பு கேடாகப் பிராகிருத மொழியில் (உரைத்த) | 3212 |
| சங்கம் | அடியார் கூட்டம், சங்கநிதி | 514 |
| சங்கரன் | மங்களத்தைச் செய்பவன் | 624 |
| சங்காட்டம் | சங்காத்தம்-சங்காதம்-கூட்டம்-தொடர்பு; ஈண்டு, கூடி விளையாடும் தோழியர் கூட்டம் | 3471 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ச | |
| சங்காத்தி (சங்காதி) | மிகுந்த நட்புடையவன் | 7013 |
| சங்கியாது | ஐயப்படாமல் | 5580 |
| சங்கு உலாவு திங்கள் | சங்கு போலும் வெண்மை உடைய சந்திரன் | 2565 |
| சங்கை | ஐயப்படுதல் | 998 |
| | அச்சமும் துன்பமும் | 3528 |
| சங்கையவர் | ஐயம் கொண்டவர்கள் | 7337 |
| சசி | சந்திரன் | 125 |
| சட்ட | விரைவாக, செம்மையாக | 5092 |
| சட்ட கலை எட்டு மருவு-எட்டும் | முறையோடமைந்த அறுபத்துநான்கு கலைகள் | 3606 |
| சட்டங்கம் | சடங்கம்-ஆறு அங்கங்கள் | 1365 |
| சடம் | அறியாமை | 1280 |
| | பொய்யான உடம்பு | 2484 |
| சடாய் | சடாயு | 1928 |
| சடை | கூந்தல் | 5961 |
| சடைச்சுரம் | சடைக்காடு | 852 |
| சண்டன் | யமன் | 686 |
| சண்டி | சண்டேசுரர் | 2168 |
| சண்ணிப்பானை | பொருந்தியிருப்பவனை | 5682 |
| சதி | தக்கன்மகளது இயற்பெயர், பதிவிரதை, | 1814 |
| | கூத்தில் அடிஇடும் முறை | 2509 |
| சதி பிழையாமை | தாளம் தவறுமல் | 7934 |
| சதிர் | வல்லமை | 1353 |
| சதிர்வு | பெருமை | 7 |
| சதிரர் | சதுரர்-சாமர்த்தியம் உடையவர் | 1500 |
| சதிரினர் | பெருமை உடையவர் | 3092 |
| சதுர் | திறமை | 8072 |
| சதுரம்மறை | நான்கு வேதங்கள் | 1862 |
| சதுரர் | அறிவாற்றல் நன்கு பெற்றவர் | 459 |
| சதுரன் | எல்லாம் வல்லவன் - சிவன் | 3353 |
| சந்தம் | அழகு | 182 |
| | இயல்பு | 3266 |
| சந்தம் அறுத்தல் | வண்ணம்படப் பாடுதல் (சந்தம்-ஆசை எனலும் ஆம்) | 7981 |
| சந்திமூன்று | காலை, நண்பகல், மாலை என்பன | 7904 |
| சந்தியானை | சந்தி மூன்றிலும் வணங்கப்படுபவனை | 5676 |
| சந்தின் திண்சிறை | சந்தன மரங்களாலாகிய வலிமையான வேலி | 4165 |
| சந்து | சந்தனமரம் | 465 |
| | சந்தம் | 2658 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| 1. | 2. | 3. |
| | ச | |
| சந்தோகசாமம் | வேத இருக்குகளைப் பாடுவோர் சந்தோகர்; அவர்களுடைய வேதமான சாமவேதம் | 6756 |
| சம்பிரசம் | விளைவு (முதல் இல்லா விளைவு) | 1107 |
| சமழ்ப்பது | நாணம் கொண்டு வருந்துதல் | 5232 |
| சமிதை அஞ்சு | ஓமம் செய்தற்குரிய ஐந்துவகைச் சுள்ளி; அவை ஆல், அத்தி, அரசு, மா, வன்னி என்பன. | 6410 |
| சமைவு | பொறுமை | 3135 |
| சயம்பு | சுயம்பு-தானே தோன்றிய இறைவன் | 4616 |
| சயவிரிமாமலர் | வாகைமலர் | 433 |
| சரக்க | விரைவாக | 5342 |
| சரக்கு அறை | பலவகைப் பொருளும் நிறைந்து கிடக்கும் கருவூலம் | 5208 |
| சரக்குக் காவி | (தீய குணங்களாகிய) சரக்குக்களைச் சுமந்து | 5989 |
| சரண் உகிர் | கால் விரல் | 93 |
| சரண இணை | இரு திருவடிகள் | 3514 |
| சரணம் | திருவடி, புகல் | 3516 |
| சரதம் | துணிவு | 1388 |
| | திண்ணம் | 3645 |
| சரம் | அம்பு | 518 |
| சரவா | அம்பை உடையவனே | 1102 |
| சரவிசை | அம்பின் வேகம் | 3514 |
| சரி | வளையல் | 2509 |
| சரி(சரிந்த) | இயங்கிய | 376 |
| சரிதை | ஒழுக்கம் | 845 |
| சரேல் | சரேலென ; ஒலிக்குறிப்பு | 2705 |
| சல்லரி | ஒருவகைப்பறை | 3669 |
| சலசம் | தாமரை | 1421 |
| சலசல | ஒலிக்குறிப்பு | 228 |
| சலஞ்சலம் | ஆயிரம் வலம்புரிச்சங்குகள் சூழ இருக்கும் உயர்ந்த சங்கு | 7960 |
| சலத்துளே | வஞ்சனையில் | 4590 |
| சலந்தரனே | கங்கையைத் தரித்தவனே | 4013 |
| சலநெறி | பொய்நெறி | 204 |
| சலப்பாடே | வஞ்சகமே | 6709 |
| சலம் | வஞ்சனை | 2064 |
| சலம் துக்க | கங்கை நீர் மறைந்த (தொக்க) | 6488 |
| சலவம் | கங்கை | 190 |
| சலவர் | கங்கைநீரை உடையவர் | 5601 |
| சலவார்கள் | சலவர்கள்-வஞ்சனையுடையவர்கள் | 6250 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| 1. | 2. | 3. |
| | ச | |
| சவம் தாங்கு தோளானை | பிரமன், விஷ்ணு ஆகியோரின் எலும்புக்கூடுகளைச் சுமந்த தோள்களை உடையவனை | 7143 |
| சவிதா | சூரியன் | 7320 |
| சவை | சபை-கூட்டம் | 4584 |
| சழக்கர் | வஞ்சகர்கள் | 7558 |
| சழக்கு | துன்பம் | 4668 |
| சழிந்த | நெருங்கிக் கிடந்த | 575 |
| சள்ளை | மீன்வகை | 8009 |
| | சா | |
| சாக்கியர் | பௌத்தர் | 21 |
| சாகம் | வில் | 1432 |
| சாகரம் | கடல் | 717 |
| சாகை | வேதத்தின் பிரிவு, கிளை | 2486 |
| சாடி | அழித்து | 707 |
| சாடு மதி | உரோகிணியுடன் கூடிய சந்திரன் | 5684 |
| சாத்து | கூட்டம் | 7744 |
| சாதகஉரு இயல் | பூதங்கள் சஞ்சரிக்கின்ற | 3704 |
| சாதகம் | சாதகப்பறவை | 713 |
| | பூதம் | 3704 |
| சாதனம் | உருத்திராக்கம் | 6867 |
| சாதி | சாதிக்காய் மரம் | 3181 |
| சாதி இன் பலங்கள் | உயர்ந்த இனிய பலவகைப் பழங்கள் | 2660 |
| சாதி கீதம் | ச(ஸ)ஆதி-ஸகாரம் முதலாகப் பாடும் பாடல்கள் | 720 |
| சாதியை | உயர்ந்த சாதிரத்தினம் போன்றவனை | 4891 |
| சாந்தம் | சந்தனம் | 185 |
| | சாந்த நிலை | 3266 |
| சாந்த வெண்நீறு | சந்தனம் போலப் பூசும் திருநீறு | 2769 |
| சாந்தி | பவித்திர உற்சவம் | 1980 |
| சாந்து | சந்தனம் | 1911 |
| சாம் அவத்தையினுர்கள் போல் | இறந்தோர்க்கு நீர்க்கடன் செய்யும் நிலையில் இருப்பவரைப் போல் | 3219 |
| சாமம் | உரிய காலம் | 1165 |
| | சாமவேதம் | 3897 |
| சாமம்போல் கண்டத்தானை | (சாமம்-சியாமம்) கரிய கழுத்தை உடையானை | 6946 |
| சாமரை | கவரிமான் மயிர் | 7663 |
| சாமவரை | மேருமலை (சியாம-பசிய) | 1944 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| 1. | 2. | 3. |
| | சா | |
| சாமி | முருகன் | 2722 |
| | (சியாமி) கரிய யமுனை, பொன்னிறக் காவிரி (பொன்னி) | 5461 |
| சாய் | சாயல்-மென்மை-அழகு | 525 |
| | புகழ் | 2578 |
| | மெலிவு | 7570 |
| சாய்ந்து | மெலிந்து | 1954 |
| | திருவடியில் வீழ்ந்து | 2040 |
| சாயல் | மென்மை, அழகு | 2051 |
| சாயினர் | இழிந்தார் | 479 |
| சார்வு இடம் | புகலிடம் | 1566 |
| சாரணன் | சரணமாக இருப்பவன் | 6744 |
| சாரேலும் | சாராதீர்கள் | 2311 |
| சாலம் | ஆலமரம், ஆச்சாமரம், மராமரம் | 3143 |
| சாலி | செந்நெல் | 78 |
| சாலியாதவர்கள் | சாதிக்காதவர்கள் | 2952 |
| சாலி வயல் | செந்நெல் விளையும் வயல் | 3608 |
| சாலும் | சாலவும் | 512 |
| சாலேகம் | சாளரம் | 4496 |
| சாவம் | சாபம்-வில் | 449 |
| சாவாய் | தமது பக்கம் தோல்வியுறும் காலம் | 1588 |
| | சி | |
| சிக்கனவு | மனவலிமை | 4672 |
| சிக்கு | சிக்கு நாற்றம் | 891 |
| சிகரம் | சிரம் | 7263 |
| சிங்க அரை | சிங்கத்தினது இடைபோன்ற இடை | 3528 |
| சிங்கி | சிங்கடி | 8240 |
| சிட்டப்பட்டார்க்கு | நியமத்துடன் இருப்பவர்க்கு | 4142 |
| சிட்டம் | பெருமை | 533 |
| சிட்டன் | வேதாகமங்களில் வல்லவன் | 1556 |
| | நீதிநெறி தவறுதவன் | 3342 |
| சிட்டார் | ஒழுங்கினை உடையோர் | 688 |
| சிட்டு | சிஷ்டத்தன்மை-ஒழுக்கம் | 688 |
| | நல்லறிவு | 1762 |
| | சிறுமை | 6432 |
| | ஒழுக்கம் | 7430 |
| சிட்டு இலகு | சிறப்புப் பெற்றுத் திகழும் (சிட்டு-சித்து-அறிவின் தன்மை) | 3746 |
| சித்தர் | யோகசித்தி பெற்றவர்கள் | 513 |
| சித்தி | அணிமா முதலிய எட்டுச் சித்திகள் | 2180 |

| அருஞ்சொல்-சொற்ஞெடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| 1. | 2. | 3. |
| | சி | |
| சித்திரப் புணரி | வண்ணங்களால் அழகு பெற்ற அலைகள் | 3133 |
| சிதடர் | குருடர் | 2443 |
| சிதம்பட நின்ற | வெற்றி கிட்டநின்ற, அறிவுடைய | 4743 |
| சிதம்ப நாயேன் | சிதம்பு+அ+நாயேன்-இழிவுடைய நாய் போன்ற அடியேன் | 4838 |
| சிதம்பு | பண்பு இல்லாதது-உடம்பு | 4901 |
| சிதைசெய்வது | வருத்துவது | 472 |
| சிந்தணச் சிந்தணர்க்கு | குறள்தன்மையுடைய சைனச் சித்தர்களுக்கு | 3217 |
| சிந்தாய் | சிந்தையகத்து உள்ளவனே | 1656 |
| சிந்திமின் | நினையுங்கள் | 2300 |
| சிந்திரமாக | சித்திரமாக; சித்திரம்-ஓட்டை, இடைவெளி; தகுந்த நேரத்தில் | 4451 |
| சிந்தைச் சுருதி | மனத்துக்குள் ஜபிக்கப்படும் மந்திரம் | 6872 |
| சிம்புளித்து | கண்களைச் சிறிதே மூடி | 7534 |
| சிம்மாந்து | நேரேநின்று | 7534 |
| சிமயம் | மலைச்சிகரம் | 7898 |
| சிரந்தையான் | சிரத்தை உடையவன் | 658 |
| சிரம் | தலை, கபாலம் | 35 |
| சிரம் எனும் கலன் | பிரம்மகபாலம் என்னும் உண்கலன் | 1489 |
| சிரமம் செய்து | யோகம் முதலியவற்றால் வருத்தி | 5462 |
| சிரமாலை | பிரமகபாலத்தினது தன்மை | 6436 |
| சில்காழி செய | சிலவான கோவைகளைக் கொண்ட மேகலை அணிந்த காளி போற்றிசெய்ய | 3523 |
| சில்லை | இழிவு | 1484 |
| | அற்பம், ஒழுங்கின்மை | 7246 |
| சில்லைச் சிரைத்தலை | வட்டமானதும் உரோமம் அற்றதுமான தலை | 6300 |
| சில | இரண்டு | 162 |
| சிலம்ப | மலையில் உள்ளவை | 2382 |
| சிலம்பன்நகர் | சிரபுரம்-சீகாழி | 2226 |
| சிலம்பனூர் | சிரபுரம-சீகாழி | 2257 |
| சிலம்பா | கயிலைமலையானே | 1729 |
| சிலை | வில் (சிலைமரத்தால் செய்யப்பட்டது) | 15 |
| | மரவகை | 101 |
| சிலை மல்கு மதிள் | மலை போல் திகழும் மதில் | 1209 |
| சிலை மலி மதிள் | மலை போல் திகழும் மதில் | 208 |
| சிவதன்மம் | சரியைகிரியையோகஞானங்களாகிய சிவதருமங்கள் | 1933 |
| சிவந்தான் | சினம்கொண்டான் | 1670 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| 1. | 2. | 3. |
| | சி | |
| சிறப்பாடு | சிறத்தல் | 1440 |
| சிறப்பு உலவான் | பெருமை குறையாதவன் | 3479 |
| சிறப்புலவன் | சிறந்த சிவஞானமுடைய சிறுத்தொண்டன் | 3479 |
| சிறவார் | பகைவர் | 1721 |
| சிறுகடம் முடி | குண்டிகை வைக்கப்பட்ட உறி | 237 |
| சிறுநோன்பர் | அற்ப நோன்பிகள் | 2789 |
| சிறுப்பெரியார் | சமணர் | 6660 |
| சிறுபறவை | வண்டு | 2329 |
| சிறுமனவன் | சிறிய மனத்தை உடைய பிரமன் | 208 |
| சிறை | மதகு | 220 |
| | கரை | 266 |
| | வேலி | 465 |
| | குற்றம் | 510 |
| | அணை | 2083 |
| சிறை அணி பறவை கழித்த வெண்தலை | அன்னப்பறவை உருவான பிரமனது கபாலம் | 2479 |
| சிறைகொண்ட(வ்)வினை | (மக்கள்அறிவைச்) சிறைப்படுத்தும் இருவினைகள் | 5417 |
| சின் போர்வை | இழிவான (அழுக்கேறிய) போர்வை | 2079 |
| சின்னம் | ஊதுகொம்பு | 2718 |
| சினகருக்கு | சமணருக்கு | 3216 |
| சினத்து இருந்த | சினம் மிக்க உருத்திரனாக இருந்த | 6636 |
| சின பவளம் | செம்பவளம் (சினம்-ஆகுபெயரால், செம்மை) | 4221 |
| சினமா முகம் செய்தல் | முகத்தால் சினம் காட்டுதல் | 2709 |
| சினை | கிளை | 60 |
| | உடம்பு, மரப்பட்டை | 6484 |
| | சீ | |
| சீத்தை | வெறுத்தற்குரியது-உடல் | 4901 |
| சீயம் | சிங்கம் | 7905 |
| சீரம் ஆக | சீரணம் ஆக-நிலைகுலைய | 6058 |
| சீரியன் | மிக மேம்பட்டவன் | 5504 |
| சீரை | மரஉரிஉடை | 4331 |
| சீவரக் கையர் | காவி உடுக்கும் வெறுப்பிற்குரிய பௌத்தர் | 3050 |
| சீவரத்தார் | சீவரம் உடுத்தவர் | 2614 |
| சீவரம் | மரவுரி | 106 |
| | காவியாடை | 578 |
| சீறடி | சிறிய அடி | 2649 |
| சீறு | சீறுதல், சினத்தல் | 2614 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| 1. | 2. | 3. |
| | சு | |
| சுடர்வாணரே | ஒளியுடன் வாழ்பவரே | 5579 |
| சுடரவன் | அக்கினி | 4072 |
| சுடலைக் களரி | சுடுகாடு | 5000 |
| சுடலைப்பொடி | சுடுகாட்டு நீறு | 1 |
| சுடும்ஆறு வல்லாய் | சுடும்வகை செய்ய வல்லாய் | 1683 |
| சுண்ணம் | பொடி | 847 |
| சுணங்கு | தேமல் | 357 |
| சுத்தி | மழு. | 715 |
| சுத்தியும் | சுற்றியும்- அணிந்தும் | 5096 |
| சுந்தரம் | அழகு | 2178 |
| சுபத்தராய் | நல்ல கட்டுப்பாடு உடையராய், நலம் சான்றவராய் | 5304 |
| சும்மை ஆர் | (வண்டுகளின்) ஒலி சேர்ந்த | 5672 |
| சுமடர் | அறிவற்றவர் | 452 |
| சுரநதி | தேவகங்கை | 207 |
| சுரபதி | தேவர்களுக்குத் தலைவனுன இந்திரன் | 4946 |
| சுரர் தரு | கற்பக மரம் | 215 |
| சுரிச்சு | சுரித்து-வருந்தி | 6081 |
| சுருதங்கள் | வேதமந்திரங்கள் | 6611 |
| சுருதி | கேள்விவழியே வரும் வேதம் | 1477 |
| சுருதி சிர(ம்)உரையினுல் | வேதங்களின் முடிவான உபநிடத வசனங்களால் | 3514 |
| சுருதிமுடி | உபநிடதம்-வேதாந்தம் | 6661 |
| சுருதியார்க்கும் | வேதம் அறிந்தவர்க்கும் | 7306 |
| சுருதியான் | வேதங்களை உடையவனும் பிரமன் | 4072 |
| சுரும்பித்த | சுரும்பு முதலிய வண்டினங்களை உடைய | 6311 |
| சுரும்பு | வண்டு | 730 |
| | மலை | 2614 |
| சுரும்பு அற்றப்பட | வண்டுகள் நீங்க | 5241 |
| சுரை | சுரைக்குடுக்கை-ஒரு பாத்திரம் | 3083 |
| சுலவி | கலந்து | 3790 |
| சுலா ஆய | எங்கும் பரந்த | 6633 |
| சுலா மாலை | வளைந்த மலர்மாலை | 7207 |
| சுலாவி | சுற்றி | 76 |
| சுவடு ஒற்றி | கால்சுவட்டினுல் தாளம் இசைத்து | 79 |
| சுவண்டு | பொருத்தம் | 300 |
| | அழகு | 7705 |
| சுவறிடு | வற்றுகின்ற | 4835 |
| சுழிஉளார் | சுழியிலே இருப்பவர் | 4102 |
| சுழித்துணை | சுழலாகிய துணை | 6661 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| 1. | 2. | 3. |
| | சு | |
| சுள்ளலை | சுள்ளிகள் (ஐ: சாரியை) | 4443 |
| சுளிந்த | சினந்த | 2932 |
| சுளிய | முகம் சுளிக்க | 2655 |
| சுளிவு | கோபம் | 1814 |
| சுற்றக் கருளொடு | சுற்றமாகிய இருளோடு | 4040 |
| சுற்று | சுற்றம் | 3123 |
| | வலம்வருதல் | 1856 |
| சுறவம் | சுறுமீன் | 798 |
| சுற வேந்தன் | சுறுமீன் கொடியுடைய மன்மதன் | 1670 |
| சுனை | குளம் | 85 |
| | பொய்கை, கங்கை | 2469 |
| | சூ | |
| சூகரம் | பன்றி | 717 |
| சூட்சியமே | வஞ்சகமே | 6527 |
| சூட்டு | உச்சிக்கொண்டை | 647 |
| சூடகம் | வளை | 65 |
| சூடலன் | சூடுதலை உடையவன் | 1080 |
| சூடி | சூடியவன் | 334 |
| சூடும் இனமலர் | அணியும் எட்டு வகை மலர் (அட்டமாமலர்கள் காண்க) | 4353 |
| சூதம் | மா | 652 |
| சூது | சூதாடும் காய் | 713 |
| சூர் | சூரபன்மன் என்ற அசுரன் | 2135 |
| சூல் இம்மணி | சூல் இருந்து ஈன்ற இந்த முத்து | 99 |
| சூல்விப்பது | தோண்டச்செய்வது | 5128 |
| சூல தரன் | சூலத்தை ஏந்தியவன் | 3595 |
| சூலபாணி | சூலம் ஏந்திய கையை உடையவன் | 1075 |
| சூலை | வயிற்றுநோய் | 2553 |
| சூழ் ஒளி | வேள்வித்தலைவன் | 8082 |
| சூள் | உறுதிமொழி கூறல் | 7744 |
| சூள் அறு | சூள்செய்தலை ஒழி | 7744 |
| சூளாமணி | தலையின் உச்சியில் அணியும் இரத்தினம் | 4180 |
| சூளிகை | நிலாமுற்றம் | 1831 |
| சூளை | உருத்திரகணிகை | 5134 |
| சூறை நல் அரவு | காற்றை உண்ணும் பாம்பு | 439 |
| சூறைப் பங்கியர் | சூறையாடிய பொருளின் பங்கைக் கொள்பவர் | 7736 |
| | செ | |
| செக்கர் | செந்நிறம் | 1495 |
| செகுத்தவன் | அழித்தவன் | 630 |
| செகும் | செகுக்கும்-குலைக்கும் | 1738 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| 1. | 2. | 3. |
| | செ | |
| செகுவாய் உகுபல் | அழிந்த வாயிலிருந்து விழுந்த பல் | 2121 |
| செங்கண்ணவன் | கோச்செங்கட்சோழன் | 2998 |
| செங்கண் நல்இறை | கோச்செங்கட்சோழன் | 3002 |
| செட்டு | அளவறிந்து செலவு செய்யும் இயல்பு | 7678 |
| செடி | நாற்றம் | 355 |
| செடி ஏறு தீவினைகள் | துன்பம் மிகத் தரும் தீவினைகள் | 6565 |
| செடிச்சிகள் | சேடிச்சிகள்-தொண்டான பெண்கள் | 7676 |
| செடிச்சியர் | தாழ்ந்த குலத்துப் பெண்கள் | 3789 |
| செடித் தவம் | குற்றமுள்ள தவம் | 7374 |
| செடி நாய் | இழிந்த நாய் | 7676 |
| செடி படு சடை | செடிகளைப் போல் அடர்த்தியான சடை | 3726 |
| செடியர் | குற்றமுடையோர் | 3291 |
| செண் | 'சேண்' என்றதன் குறுக்கல்; ஆகாயம் | 3594 |
| செண்டர் | செண்டு என்னும் ஆயுதத்தை உடையவர் | 5763 |
| செண்டு | பூச்செண்டு | 1403 |
| செண்டு அடித்து உளற | வளைத்து அடித்து உளறுமாறு செய்ய | 3304 |
| செண்டு சேர் | வட்டமாக நடைபயிலும் | 3130 |
| செதிள் | மரத்தூள் | 2590 |
| செதுகு | குற்றம் | 5563 |
| செது மதி | ஒளிமழுங்கிய புத்தி | 226 |
| செது வாய்மை | பொல்லாத வாய்ச்சொல் | 126 |
| செந்தி | 'செந்தீ' என்றதன் குறுக்கல் | 4401,5020 |
| செந்து இசை | செவ்வழிப்பண் | 1092 |
| | செவ்விய இசை | 1237 |
| செந்து இலங்கு மொழியவர் | செவ்வழிப்பண் ஒத்த மொழியுடைய பெண்டிர் | 1500 |
| செந்து எனு முரலும் | சிந்துகள் பாடும் | 3308 |
| செந்நீர் | குருதி | 2252 |
| செப்பட | செவ்விதாக | 6527 |
| செப்பத்தால் | செம்மையால் | 6191 |
| செம்பியர்கோன் | சோழர்குலத் தலைவன் | 1714 |
| செம்பியன் | சோழன் | 2774 |
| செம்பு நல் கொண்ட | செம்பு என்ற நல்ல உலோகத்தாலான | 4204 |
| செம்பொன் | பொன்நிறம் | 2650 |
| | பொன்நிறப் பூக்கள் | 2659 |
| செம்பொன் ஆர் திலகம் | செம்பொன் திலகம் போன்றது | 3321 |
| செம்பொன்ன செவ்வி | பொன்னின் அழகு | 2425 |
| செம்மாந்து | இறுமாந்து | 448 |
| செம்மாப்பு | இறுமாப்பு-பெருமைப்படல் | 4386 |
| செய் | வயல் | 775 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| 1. | 2. | 3. |

செ

| | | |
|---|---|---|
| செய்அரி | வயல்களில் நெல்அரி | 4390 |
| செய்த அவத்தர் | தவம் அல்லாதன செய்வோர் | 21 |
| செய்ய | சிவந்த | 16 |
| செய்ய கண் இறை | கோச்செங்கட்சோழன் | 2999 |
| செய்ய கண் வளவன் | கோச்செங்கட்சோழன் | 2988 |
| செய்யவன் | சிவந்த நிறம் உடையவன்; சிவபெருமான் | 3044 |
| செய்யாள் | திருமகள் | 1008 |
| செய்யான் | சிவபெருமான் | 866 |
| செய்யீர் | செம்மேனியை உடையவரே | 2076 |
| செருடக் கடிமலர்ச் செல்வி | சிரீடம் என்னும் மிக்க மென்மையுடைய மலரைப் போன்ற மெல்லியலாளான உமாதேவி | 5196 |
| செருத்தது | அழித்தது | 1262 |
| செருத்தனல் | போரினல் | 5858 |
| செரு மருதம் துவர்த் தேர் | நெருங்கிய மருதமரத்தின் துவர் தோய்ந்த ஆடை அணிந்த தேரர்-பௌத்தர் | 3072 |
| செரு மலேவான் | போரிடுபவன் | 135 |
| செரு மால் விடை | போர்ஆற்றல் கொண்ட பெரிய எருது | 912 |
| செரு வடி தோள் | போரில் வல்ல தோள்கள் | 3477 |
| [செரு அருந்திய | பகைவர் செருவை அருந்திய (போரில் வெற்றி பெற்ற)] | 3336 |
| செரு வருந்திய | போர் முயன்ற | 3336 |
| செரு வில் | போர்செய்யும் வில் | 747 |
| செல் | செல்லுதல் | 504 |
| செல்கு சோறு | உண்ணும் சோறு | 2386 |
| செல்ல உந்துக | தனக்குத் தானே தள்ளப்படுக | 2856 |
| செல்லம் | செல்வம்-(வில்வம்-வில்லம் போல) | 8080 |
| செல்வாய செல்வம் | நித்தியஸ்ரீ-விபூதி | 6640 |
| செல்வு | செல்வம் | 2073 |
| செலவு செய்து | (சமணர் கூறிய வழியே யானும்) சென்று ஒழுகி | 4558 |
| செலுத்துணேன் | (உங்கள் விருப்பப்படி) ஒழுகமாட்டேன் | 6528 |
| செவ்வணம் ஆம் | செந்நிறமான | 7754 |
| செவ்வி | அழகு | 2247 |
| செழுமலிய பூங்காழி | செழுமை மிக்க சீகாழி | 2231 |
| செற்ற மலின் ஆர் | மிகுந்த வளம் பொருந்திய | 3569 |
| செற்றவர் | பகைவர் | 52 |
| செற்று | அழித்து | 30 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| 1. | 2. | 3. |
| | செ | |
| செறப்பு | சிறப்பு | 1440 |
| செறிகழல் இறை | வீரக்கழல் அணிந்த மன்னன் செங்கட்சோழன் | 3006 |
| செறியுள்ஆர் | மண் திணிந்த வன்மையான | 3160 |
| செறு | வயல் | 271 |
| செறுத்தான் | அடக்கினன் | 322 |
| சென்றடையாத திரு | நித்தியஸ்ரீ-விபூதி | 1058 |
| சென்றனே | சென்றவனே | 5276 |
| சென்னி ஆறனர் | தலையில் கங்கையை உடையவர் | 4388 |
| சென்னியர் | தலைமை உடையவர் | 1775 |
| | சே | |
| சே | இடபம் | 525 |
| சேகரம் கொண்டல் தலை | மாமரங்களின் மேகம் தங்கும் உச்சி | 7957 |
| சேட்டார் | சேடு+ஆர்; மலை உச்சியில் உள்ள | 2246 |
| சேட்டைகட்கு | மூதேவிகளுக்கு | 3215 |
| சேடகம் | கேடயம் | 59 |
| சேடர் | பெருமை உடையவர் | 282 |
| | தொலைவில் இருப்பவர் | 2895 |
| | தலைமை உடையவர் | 3150 |
| சேடு | பெருமை | 59 |
| | மலையுச்சி | 2246 |
| | சேறு | 7824 |
| சேடை | அட்சதை (வெண்மைக்கு உவமை) | 8267 |
| சேண் | ஆகாயம்-தேவர் உலகம் | 61 |
| சேணம் | உயர்வு-வீடுபேறு | 2181 |
| சேணர் | தேவர் | 872 |
| சேதம் | சேறு | 3599 |
| சேதீ | சேதித்தவனே-அரிந்தவனே | 3389 |
| சேந்தன் | முருகன் | 2273 |
| சேமம் | பாதுகாப்பு | 796 |
| | பொன் | 996 |
| சேய் | முருகன் | 525 |
| | தொலைவு | 1064 |
| சேய் ஓங்கு | தொலைவில் தெரியுமாறு உயரமான | 2067 |
| சேய்து ஆய | செந்நிறமுடையது ஆகிய | 1082 |
| சேயிழை | தலைவி | 2622 |
| சேர்த்தான் | (திருவருளைக்) கூட்டியவன் | 1629 |
| சேர்ப்புஅது | சேரும் இடம் | 2873 |
| சேர்வார் | இடைவிடாது நினைப்பவர் | 7996 |
| சேர்வு இன்றிக்கே | சேராமல் | 1361 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | சே | |
| சேரே சேரே | மிகச்சேர்ந்தது | 1361 |
| சேரே வாரா | சேர்ந்து வந்து | 1366 |
| சேல் | மீன்வகை | 57 |
| சேவகன் | வீரச்செயல் புரிந்தோன் | 3049 |
| சேவடியாய் | செம்மையான அடிகளையுடையாய் | 4292 |
| சே வல | இடபமாகிய வல்லமை உடைய | 3887 |
| சேவலில் மடுத்து | (குறவர்)தம் வீட்டில் அடுப்பு மூட்டி | 3542 |
| சேனம்தான் இலா அரக்கன் | சேனம்-சேதனம்-அறிவு; அறிவிலா அரக்கன் | 4745 |
| | சை | |
| சைவத்த | சிவாகமங்களில் கூறப்பட்ட | 8073 |
| | சொ | |
| சொக்கம் | சுவர்க்கம் | 1363 |
| | சுத்தநிருத்தம் என்ற கூத்து | 2897 |
| சொக்கன் | கண்டோர் மயங்கிவிழும்படியான அழகுடைய சிவன் | 3221 |
| சொக்கு | அழகு | 6174 |
| சொல் பதம் | சொல்லப்படும் பதங்களைச் சேர்த்துச் சொல்லும் கிரமம் என்னும் வேதம் ஓதும் முறை | 653 |
| சொல்பாடாய் | சொல்லுக்கு அகப்பட்டதாய்-சொல்லிவைத்ததாய் | 7708 |
| சொல் பாவும் பொருள் | சொல்லில் பரவியுள்ள பொருள் | 6926 |
| சொல்லான் | வேதமுடையான் | 1642 |
| சொல்லி | நீக்கி | 4746 |
| சொல்லை நம்பி | சொல்-வேதம் (ஐகாரம் சாரியை); வேதமாய் நின்ற நம்பி | 7887 |
| சொலவு செய்து | (சமணர்) கூறியதை யானும் கூறி | 4558 |
| சொற்பாடாய் | சொல்லி அழைக்க வந்தமை போல் | 7708 |
| சொற்பால பொருட்பால சுருதி ஒருநான்கும் | சொல்வகையும் பொருள்வகையும் சிறந்த நான்குவேதங்களும் | 7395 |
| சொற்றம் | சொல் | 1806 |
| | சோ | |
| சோடை | வறட்சி | 2324 |
| சோடைகள் | உள்ளீடு அற்றவர்கள் | 2209 |
| சோத்தம் | அஞ்சலிசெய்வோர் அதற்குத் துணையாகக் கூறும் சொல் | 4656 |
| சோத்தானை | தோத்திரத்திற்கு உரியவனை | 7915 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | சோ | |
| சோத்திட்டு | துதித்து-வணக்கம் சொல்லி | 7246 |
| சோத்து | தோத்திரம்-(ஸ்வஸ்திகம்-அஞ்ஜலி) | 8173 |
| சோதி வானவன் | சூரியன் | 2357 |
| சோமன் | சந்திரன் | 600 |
| சோன்றுகொண்டாய் | மீட்டுக்கொண்டாய் | 5133 |
| | ஞ | |
| ஞமண ஞாஞண ஞாண ஞோணம் | சமணர் ஜபம் செய்யும் மந்திரங்களில் மெல்லெழுத்துக்கள் பயின்று வருவதை நகைக்குறிப்புடன் உரைத்தது | 7573 |
| ஞமன் | நமன்-யமன் | 6212 |
| ஞரம்பு | நரம்பு | 4452 |
| | ஞா | |
| ஞாழல் | புலிநகக்கொன்றை | 503 |
| ஞானகம் | ஞானம்அகம்; தத்துவஞானம் உள்ள மனம் | 6658 |
| ஞானப்பேர் ஆயிரம் | ஞானம் அருளும் ஆயிரம் பெயர்கள் | 3078 |
| ஞானம் | சிவஞானம் | 2420 |
| ஞான மா மலர் | ஞானமலர்கள் ('எட்டு மனத்தகத்து மலர்கள்' காண்க) | 3080 |
| ஞானன் | சிவபெருமான் | 3010 |
| ஞின்ற, ஞின்று | நின்ற, நின்று | 4943 |
| ஞெண்டு | நண்டு | 7264 |
| | த | |
| தக்கிருந்தார் | தகுதி உடையவர் | 1917 |
| தக்கை | (வாத்தியம்) உடுக்கை | 574 |
| தகரத்திடை | தகரமரங்களின் அடியில் | 7955 |
| தகரம் | மயிர்ச்சாந்து | 952 |
| தகுணிச்சம் | வாத்தியவகை | 3409 |
| தகுதிக்கு உழத்தல் | மேம்பாடுபெற முயலுதல் | 2405 |
| தகைந்து | தங்கி | 964 |
| தகையும் | சேரும் | 1551 |
| தகைவது | தடுப்பது | 2181 |
| தங்கு அலப்பிய | வீண்பேச்சுக்களுடன் இருந்த | 5969 |
| தசக் கிரீவன் | பத்துக்கழுத்துக்களை உடைய இராவணனின் இயற்பெயர் | 1509 |
| தஞ்சம் | நல்ல சார்பு | 568 |
| தஞ்ச வண்ணத்தர் | புகலிடம் கொடுக்கும் இயல்புடையவர் | 4337 |
| தஞ்சைச் சார் | தஞ்சமாகச் சார்கின்ற | 1369 |
| தட்டு | தடுக்கு | 752 |
| தட்டு அலர்த்த பூ | தட்டுப் போல மலர்ந்த பூ | 1909 |
| தட்டு இட்டே | மண்டையை ஏந்தி | 1368 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | த | |
| தட்டெனும் தட்டெனும் | தடுமாற்றம் தடையாகும் என்று அறிந்த | 7683 |
| தட்டை | தடுக்கினை | 752 |
| தட | அகலம் | 206 |
| தடம் | குளம் | 127 |
| தடவந்து | பூசி, தடவி | 3679 |
| தட வரையால் | பெரிய கயிலைமலையில் | 1913 |
| தடுக்கு | ஓலைப்பாய் | 74 |
| தடுகுட்டம் | சேர்ந்து ஆடும் கூத்து; 'குணலை' என்ப. | 5215 |
| தடுமாற்று | பிறவித் தடுமாற்றம் | 932 |
| தடுமாறு வல்லாய் | உயிர்கள் உன்னை உணர்தலில் தடுமாற்றம் செய்விக்க வல்லாய் | 1683 |
| தண்டம் | ஒறுத்தல் | 5307 |
| தண்டலை | சோலை | 1874 |
| தண்டு | தண்டாயுதம், பரசு | 457 |
| | ஒரு வாத்தியம் | 2491 |
| தண்டு அரனை | இலிங்கவடிவினன் ஆகிய அரனை; தண்டு-தாணு எனினும் ஆம். | 7047 |
| தண்டுடுக்கை | தண்டமும் உடுக்கையும் | 710 |
| தண்டுடைத் தண்டி | தண்டத்தை ஏந்திய தண்டி என்ற சிவகணத்தலைவர் | 7973 |
| தண்ணம் | மழுப்படை | 4205 |
| தண்ணு | கருணை காட்டாத | 1978 |
| தணக்குவார் | அடக்கி ஒடுக்குபவர் | 5392 |
| தணம் | குளிர்ச்சி | 3607 |
| தணி | தண்மை | 682 |
| தணி ஆர் மதி | கலைகள் தணிதலையுடைய பிறை | 166 |
| தணி கிளர் வேந்தர் | பணிவு மிக்க சிற்றரசர் | 73 |
| தணியார் | மனம் தணிந்தவர் (தவத்தோர்) | 398 |
| தணிவார் | அமைதியுற வாழ்வார் | 1007 |
| தத்தளகம் | வாத்திய வகை | 7738 |
| தத்துவன் | மெய்ப்பொருளானவன் | 1159 |
| தந்தத் திந்தத் தடமென்று | ஒலிக்குறிப்புக்கள் | 1516 |
| தந்த மதத்தவன் | தந்தம், மதம் இரண்டையும் உடைய விநாயகக் கடவுள் | 1239 |
| தந்தயன் | தந்த அயன் (பிரமன்) | 1055 |
| தந்திரம் | ஆகமம் | 2178 |
| | செய்வகை | 4802 |
| தபோதனனை | தவமே செல்வமாகப் பெற்றவனை | 6761 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | த | |
| தம் கரவம் | தமது கரத்தில் உள்ளது | 3696 |
| தம் திரமா(க) | தமது நிலையான தன்மையாக (இடமாக) | 1141 |
| தமர் | சிவனடியார் | 2680 |
| தமரம் | ஆரவாரம் | 7983 |
| தமருகம் | உடுக்கை | 233 |
| தமிழின் நீர்மை | தமிழ்இனிமை | 794 |
| தயக்கம் | தடுமாற்றம், அசைதல் | 6371 |
| தரங்கம் | அலை | 645 |
| தரங்கு | அலை | 5869 |
| தரம் | மலை | 6600 |
| தரளம் | முத்து | 2817 |
| தராய் | சீகாழி | 1611 |
| தரா வ(ண்)ணம் | மீண்டும் பிறவி தாராதது | 2185 |
| தரியா | தரித்து | 941 |
| தரியாது | காலம் தாழ்க்காமல் | 1028 |
| தரியார் | பகைவர் | 746 |
| தருக்க சாத்திரத்தவர் | தருக்க நூல்களால் யுக்தி காட்டித் தம் கொள்கையை நிறுவும் பௌத்தர் | 676 |
| தருக்கதாக | அவனுக்கு அடியோம் என்ற இறுமாப்புடன் | 5726 |
| தருக்கி | செருக்குற்று | 851 |
| தருக்கிய | செருக்குக் கொண்ட | 3197 |
| தருக்கேன்மின் | கர்வம் கொள்ளாதீர் | 6524 |
| தருணேந்துசேகரன் | இளமதியைத் தலைக்கு அணியாகக் கொண்டவன் | 6559 |
| தருப்பம் | செருக்கு | 1423 |
| தருமராசன் | தென்திசைக் கிழவன் | 4646 |
| தருமன் ஊர் | வெங்குரு-சீகாழி | 2267 |
| தரைத்தேவர் | பூசுரர்-அந்தணர் | 2260 |
| தலக்கம் | நாணம்; ஆகுபெயரால், நாணத்தக்க இழிசெயல் | 4477 |
| தலம் | பாதாளம் | 1870 |
| தலை | மண்டைஓடு-பிரம்மகபாலம் | 28 |
| தலை அரங்க | தலை சிதைய | 3664 |
| தலை ஊண் | மண்டையோட்டில் இரந்து உண்ணும் உணவு | 2046 |
| தலைஒடினர் | மண்டையோட்டை உடையவர் | 1750 |
| தலைக் கலன் | தலையாகிய உண்கலன், தலைகளால் ஆன அணிகலன் | 2653 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | த | |
| தலைப்படுதல் | கண்டு கூடுதல் | 2622 |
| தலைபண்டு ஆண்ட மூதூர் | இராகுகேதுக்களின் தலை இரண்டும் பூசித்த ஊர்-சிரபுரம்-சீகாழி | 2225 |
| தலை பறிக்கச் சுகம் என்னும் | தம் தலைமயிரைப் பிறர் பறிக்கும்போது, 'சுகம்சுகம்' என்றே சொல்லி அத்துன்பத்தைப் பொறுத்துக்கொள்ளும் (சமணர்) | 5152 |
| தலைமதி | (முதற்பிறை) பிறைச்சந்திரன் | 199 |
| தலைமறைவு | ஒடுங்கும் நிழல்-புகல் | 5230 |
| தலை முன் ஆண்ட அண்ணல் நகர் | 'தலை பண்டு ஆண்ட மூதூர்' காண்க. | 2227 |
| தவ்வலி | ஒடுங்கும் வலிமை | 4741 |
| தவ்வை | தமக்கை | 7419 |
| தவ்வையார் | தாயார் | 7305 |
| தவத் தேவு வைத்தான் | (கண்ணப்பரை) தவமுடைய தெய்வமாகச் செய்தவன் | 3176 |
| தவந்த | வெந்த | 3334 |
| தவந்தான் | 'தவத்தான்' என்றதன் மெலித்தல் | 5218 |
| தவம் இல்லிகள் | தவம் இல்லாதவர்கள் | 2780 |
| தவர் கொண்ட தொழில் | தவமுடையோர் போல மேற்கொள்ளும் போலிச்செயல் | 1697 |
| தவர்செய் | துளைக்கும் | 686 |
| தவள நீறு | வெண்ணிறமுடைய நீறு | 2859 |
| தவளம் | வெண்மை | 87 |
| தவனி | (தவனம்-தபனம்-தாபம்-)காமநோயால் துன்புற்றவள் | 5308 |
| தழல் தாமரை | தீப்போன்ற நிறமுடைய செந்தாமரை | 1674 |
| தழல் வீசிக் கிளர் | நெருப்பெனச் சீறிச் சினக்கும் | 2670 |
| தழி | 'தழீஇ' என்றதன் விகாரம்; தழுவி | 1589 |
| | 'தழீஇய' என்றதன் விகாரம்; தழுவிய | 6068 |
| தழுக்குழி | விழும்போது, தழுதழுத்தபோது | 5445 |
| தழை மயில் | பீலியுடன் கூடிய மயில் | 1240 |
| தள்ளாய | இழிந்தது எனக் கருதும் பறவை இனமான | 1928 |
| தளத்து | சாந்திலை | 1973 |
| தளம் | தலம்-இடம் | 140 |
| தளவம் | முல்லை | 1723 |
| தளவு | முல்லை | 85 |
| தளிசாலைகள் | தேவாலயங்கள் | 8032 |
| தளியினர் | திருக்கோயிலை உடையவர் | 4691 |
| தளிரும் | தளிர் போலத் திகழும் | 918 |

| அருஞ்சொல்-சொற்ருெடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | த | |
| தற்குறியா | தன்னே வழிபடும் அடையாளமாக | 1095 |
| தற்பரம் | தானே எல்லாவற்றிற்கும் பரமான தத்துவம் | 6530 |
| தற்பரன் | தானே எல்லாவற்றிற்கும் பரமான சிவன் | 672 |
| தற்றவர் | இறுக உடுத்தவர் | 4339 |
| தறி | தடி | 1247 |
| | தறித்தல்-பிரித்தல் | 7978 |
| தறை | தரை | 7750 |
| தன் இயலும் உரை | தன்போக்கில் பேசும் வார்த்தை | 85 |
| தன் ஒப்பானே | தனக்குத் தானே நிகர் ஆவானே | 5268 |
| தன்னம் தாள் | எளிதில் காணும் திருவடி | 2788 |
| தன்ஞனே தன்னேப் புகழ்ந்திடும் | யாவும் அவனே யாதலின், துதிசெய்வோரும் துதியை ஏற்போனும் அவனே என்பது கருத்து. இது வேதம் ஓதுவதைக் குறித்ததும் ஆம் | 8211 |
| தன்னே | தந்தை | 5397 |
| தனகு | உள்ளக்களிப்பு | 5414 |
| தனஞ்சயன் | அருச்சுனன் | 811 |
| தனத்தகத்து | செல்வத்தில் | 6636 |
| தன மனர் | செல்வம் மிக்க மனமுடையோர் | 216 |
| தனல் | தணல்-தீயின் நிறம் | 1791 |
| தனே | அளவு | 2780 |
| | தா | |
| தாக்காதான் | எதிர்ப்படாதவன் | 6745 |
| தாக்கிஞர் | வெட்டிஞர் | 1921 |
| தாட்சி | தாழ்ச்சி-குறைவு | 3274 |
| தாட உடுக்கையன் | தாளம் இடும் உடுக்கையை உடையவன் | 4365 |
| தாடு உடைய தருமஞர் | தாடு-தடுத்தல்; பாசமும் ஆம்; அதனே உடைய யமதருமராசர் | 8156 |
| தாணு | நிலேயான பொருள் | 675 |
| | சிவபெருமான் பெயர் | 5254 |
| தாணுதல் | நிலேபெறுதல் | 9 |
| தாணு மிகு ஆண் இசைகொடு | சிவபெருமான் வலிமை மிக்க ஆண்யானேயினது வடிவைக் காண இசைந்து | 3515 |
| தாது | மகரந்தத்தூள் | 1879 |
| தாதை | தந்தை | 2135 |
| தாபரம் | மணலால் பிடித்து வைத்த சிவலிங்கம் | 4638 |
| தாபரம் நிறுத்திச் சகளிசெய்து | சிவலிங்கத்தைப் பிரதிட்டைசெய்து, கலேயுருவம் அமைத்து | 7904 |
| தாம்பு | ஊசல் | 1979 |
| தாம் முகம் ஆக்கிய | நேருக்குநேர் எதிர்த்து வந்த | 2940 |
| தாமம் | மாலே | 2586 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | தா | |
| தாமரையான் | பிரமன் | 391 |
| தார் | மாலே | 2168 |
| | மலர் | 2261 |
| தார்மணி | மணிவரிசை | 2477 |
| தாரகை | நட்சத்திரம் | 461 |
| தாரம் | பண்டம் | 8002 |
| தாரமும் பூண்பர் | மனைவியான உமையையும் பாகமாகக் கொள்வார் | 4336 |
| தாரா | சிறுநாரை | 714 |
| தாரித்திரம் | வறுமை | 5202 |
| தாரை | நீர்ஒழுக்கு | 2694 |
| தாவி | தாபினி என்னும் ஆறு | 7007 |
| தாவினுன் | மூவுலகையும் திருவடியால் கடந்த திருமால் | 3230 |
| தாவும் | கெடும் | 5412 |
| தாழ் கரி விட்ட விசை | மூங்கிலே அதன் நுனியைப் பற்றி இழுத்த யானே அதை விட்ட வேகம் | 466 |
| தாழ்ந்தீர் | விரும்பி எழுந்தருளினீர் | 2059 |
| தாழ் வடம் | தாவடம்-தாழ்ந்து தொங்கும் மாலே | 2892 |
| தாழ்விடம் | வாழ்கின்ற இடம் | 2742 |
| தாள் தழுவு கையன் (இதுதாடவுடுக்-கையன் என்பதன் பாடபேதம்) | முழங்காலேத் தொடும் அளவு நீண்டகைகளே உடையவன் (ஆஜானுபாகு) | 4365 |
| தாள் நுதல் செய்து | திருவடியையும் திருமுடியையும் காணும் குறிக்கோள் கொண்டு | 9 |
| தாளாளர் | முயற்சி உடையார் | 1919 |
| தான் அ(வ்)வண்ணத்தன் | தானும் அவ்அனல் நிறம் உடையவன் | 6203 |
| தானம் காட்டுவர் | அடியார்கள் அடைதற்குரிய சாலோக சாரூப சாமீப சாயுஜ்யங்கள் ஆகிய பதவிகளேக் காட்டுவார் | 5497 |
| தானமோடு தலே பிடியாமுனம் | நாம் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து நம் தலேயையும் பிடிப்பதற்குள்ளாக | 6088 |
| தானவர் | அசுரர் | 68 |
| | வித்தியாதரர் | 4712 |
| தானவன் | அருட்கொடை புரிபவன் | 4456 |
| தானவேடம் | தானன்-தகனன்-அக்கினி; அக்கினிவேடம் | 5735 |
| தானுக | சிவமாக | 1365 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | தி | |
| திக்கம் | தீர்க்கம்-துணிவு | 618 |
| திக்கன் | நமக்குக் கதியாக இருப்பவன் | 7116 |
| திக்கா | (வட)திசையை உடையவனே | 5110 |
| திக்கானே | அனைத்துத் திசைகளையும் உடையவனே | 6759 |
| திக்கில் தேவு | திக்பாலகர்கள் | 1363 |
| திகன் | திகழ்-விளக்கம் | 643 |
| திகை | திக்கு-திசை | 1292 |
| திகைச் சுடரை | திசை காட்டும் கலங்கரை-விளக்குப் போல்வானை | 6452 |
| திகையன்மின் | திகையேன்மின்-திகைக்காதீர் | 6076 |
| திங்களம்போது | பிறை | 66 |
| திசைமுகன் | நான்கு முகங்களையுடைய பிரமன் | 3115 |
| திடர் | மேடு | 207 |
| திடல் | மேடு | 1349 |
| திடுகுமொட்டென | வழிப்போக்கர்களைக் கொள்ளையடிக்கும் வடுகவேடுவர் அதட்டி அச்சுறுத்திக் கூறும் சொற்கள் | 7733 |
| திண்உண்ட திருவே | சென்று அடையாச் செல்வமே | 4407 |
| திண்டி வயிறு | பருத்த வயிறு | 7170 |
| திண்பால் | அழியாத இடம் | 5090 |
| திணம் | திண்ணம் | 2085 |
| திதையும் | துதையும்-நெருங்கிய | 8193 |
| திமில் | வேங்கைமரம் | 344 |
| திமில | தினவுகொள்ள, திமிர்ப்புஉற (மலைநாட்டுவழக்கு) | 2674 |
| திமிலம் | (துமுலம்-வடசொல்)பேரொலி | 2674 |
| தியக்கம் | அசைவு-தளர்வு | 4642 |
| தியக்காது | கலங்கச்செய்யாமல் | 7592 |
| தியக்கு | தியக்கம்-தளர்வு | 5030 |
| தியம்பகன் | திரியம்பகன்-முக்கண்ணன் | 4018 |
| திரங்கல் முகவன் | தோல் சுருங்கிய முகத்தையுடைய குரங்கு | 735 |
| திரிசிகைப் படை | முத்தலைச்சூலம் | 233 |
| திரிசெய் நான்மறையோர் | முத்தீ ஓம்பும் அந்தணர் | 8131 |
| திரிபுரம் | முப்புரம்-வானில் திரியும் மூன்று மதில் வடிவானவை | 91 |
| திரியும் சரிதைத்தொழில் | பிச்சையெடுத்தல் | 1506 |
| திருக்கு | வளைத்து முறுக்கிய | 5396 |
| | கண் | 5217 |
| திருக்குருகாவூர் வெள்ளடை (இது பதிகத்தின் தலைப்பு.) | வெள்விடை-வெள்ளிடை ஆயிற்று என்பர்; திருமால் வழிபட்டு, | |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | தி | |
| | விடைவடிவு பெற்றுச் சுவாமியைத் தாங்கிய தலம். | 4131 |
| திருகல் | மாறுபாடு | 1828 |
| | வளைதல் | 2165 |
| திருத்தம் | செம்மை | 988 |
| | தீர்த்தம் | 3805,4081 |
| திருத்தளி | ஸ்ரீதளி-இலக்குமி பூசித்த கோயில் | 7009 |
| திருத்தன் | தீர்த்தன்-தூயவன் | 3278 |
| திருத்தனார் | செம்மைப்பொருளாய் இருப்பவர் | 5246 |
| திருதிமையால் | திருதி (மனஉறுதி) உடைமையால் | 6872 |
| திருந்தலார் | பகைவர் | 2618 |
| திருநாமம் அஞ்சு | திருஐந்தெழுத்து | 6870 |
| திரு நின்று ஒருகையால் | திருமகள் நிலைபெற்றுப் பிறவிகளில் நில்லாது நீங்குதலால் | 497 |
| திருநெறி | கோயில் | 11 |
| திரு மரு மார்பு | திருமகள் நிலைபெற்ற மார்பு | 2208 |
| திருமாது | உமாதேவி | 25 |
| திருவடி | இறைவன் | 3477 |
| திருவின் நேரனார்கள் | திருமகள் போன்ற மகளிர் | 2568 |
| திருவெண்டுறை | திருவண்டுறை என்னும் தலம் | 3449 |
| திரூஉ அமர் | திருஅமர்-செல்வம் பொருந்திய | 1469 |
| திரை | அலை | 706 |
| திரைத்துப் பாடி | சர்வசங்கார காலத்து அனைத்தையும் அழித்து வீணைகொண்டு பாடி | 5469 |
| திரை தோல் | சுருங்கிய தோல் | 639 |
| திரை மதி | கடலில் தோன்றிய மதி | 1776 |
| திரையான் | கடலில் பள்ளிகொள்ளும் திருமால் | 6474 |
| திலகம் | நெற்றிப்பொட்டு | 3506 |
| திலகமண்டலம் | நெற்றிப்பொட்டு | 6175 |
| திவம் | தேவலோகம் | 217 |
| திவர் | தேவர்கள் | 3797 |
| திவள | அசைய | 1496 |
| திவள வானவர் | விளங்கும் தேவர்கள் | 5749 |
| திவி | தேவலோகம் | 3515 |
| திவிதலம் | தேவலோகம் | 207 |
| திளைத்த | ஒத்த | 64 |
| திறம்பியாது | மாறுபடாமல் | 7588 |
| திறை | கப்பம் | 690 |
| திறை வளர் தேவர் | தம்மைத் திறைப்பொருளாக அர்ப்பணம் செய்யும் தேவர் | 2404 |
| தினைத்தனை | தினையளவு | 560 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | தீ | |
| தீ | விடம் | 6620 |
| தீஅதனில் மூவர் | தீயினில், ஒளி ஊறு ஓசை என்ற மூன்றாய் இருப்பவர் | 4793 |
| தீ அம்பன் | தீயை அம்பாகக் கொண்டவன் | 6747 |
| தீக்கு இயல் குணம் | அக்கினிகாரியம் செய்வதற்கு உகந்த இயல்பு | 2024 |
| தீத்தாடித் திறம் | தீத்து-சர்வசங்கார காலத்தில் அனைத்தையும் எரித்து ஆடிய சிவபெருமானது புகழ்; இது பாண்டரங்கம் | 5455 |
| தீத்தொழில் | அக்கினிகாரியம் | 2202 |
| தீது இலா வீடு | மாசாகிய பற்று நீங்கிய துறவுநிலை | 2302 |
| தீப்போலி | தீப்போன்றவன் | 3218 |
| தீப மனத்தார்கள் | எழுதிய சுடர் போன்ற அசையாத மன முடையவர் | 933 |
| தீயின் ஆர் திகழ் மேனி | தீப் போலத் திகழும் மேனி | 2306 |
| தீர்க்கம் | துணிவு | 618 |
| தீர்த்தம் | தூய்மை | 492 |
| | ஜினஆகமம் | 3296 |
| தீர்த்தம் ஆம் அட்டமீ முன் சீருடை ஏழுநாளும் | தீர்த்தவாரியாகம் நிகழும், பட்சத்தின் எட்டாம் நாளுக்குமுன் ஏழுநாளும் | 4656 |
| தீர்ப்பு | தீர்வது | 1026 |
| தீர்மை | தீரும் தன்மை | 638 |
| தீர(ம்)மிக்கான் | இராமன் | 4761 |
| தீரன் | அறிஞன் | 5359 |
| தீவண(ம்)மலர் | செந்தாமரைப்பூ | 3358 |
| | து | |
| துக்கம் | ஆகாயம் | 6488 |
| துகள் | குற்றம் | 643 |
| துங்க நகம் | உயர்வான கைநகம் | 7088 |
| துங்கம் | மேன்மை, சிறப்பு | 36 |
| துங்கு இயல் | பெரிய | 2937 |
| துச்சு | துச்சத்தன்மை, இழிவு | 4845 |
| துச்சுள் | துன்பம் | 4845 |
| துச்சேன் | இழிவுடையேன் | 7382 |
| துஞ்சல் | அழிதல் | 568 |
| துஞ்ச வருவார் | தூங்கும்போது கனவில் வருவார் | 481 |
| துட்டர் | தீயவர் | 5488 |
| துட்டுத் தீர்த்து | துட்டத்தனத்தை நீக்கி | 4932 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | து | |
| துடக்கிமுடக்கிஇட | சுருட்டிமுடக்கிவிட | 4170 |
| துடி | உடுக்கை | 299 |
| துடிஅடி | யானை | 3529 |
| துடும்பல் | நிறைந்திருத்தல் (துறும்பல்) | 6074 |
| துண்டன் | துணித்தவன் | 4553 |
| துண்டு | துண்டம் | 2927 |
| துணி | துண்டம் | 3252 |
| | ஒளி | 297 |
| துணி ஆர் உடை | கிழிக்கப்பட்ட கோவணம் | 897 |
| துணிச் சிரம் | அறுபட்ட தலைமாலை | 2534 |
| துணி நீர் | ஒளியாம் தன்மை | 635 |
| துணியார் | சிவபெருமானே தலையான தெய்வம் என்பதை உறுதியாகக் கொள்ள மாட்டாதவர் | 452 |
| துணியின் உடை | கோவணக்கீள் உடை | 951 |
| துணைஇல் துத்தம் | நிகர்அற்ற தீ | 3124 |
| துணையல் | மலர்களை இரண்டிரண்டாகத் தொடுக்கும் மாலை | 1115 |
| துத்தம் | ஏழிசைகளில் ஒன்று | 3124 |
| துத்தி | புள்ளி | 70 |
| துத்தியம் | தோத்திரம் | 6246 |
| துத்திரி | ஒருவாத்தியம் | 3618 |
| துதைந்த | நெருங்கிய | 879 |
| துதைந்தார் | தழுவியவர் | 3901 |
| துதைந்து | செறிந்து | 77 |
| துந்துமி | ஒருவாத்தியம் | 7738 |
| துப்பறை | செல்வமின்மை | 6532 |
| துப்பன் | துய்ப்பவன், உண்ணுவேன் | 294 |
| துப்பு | உணவு | 6876 |
| தும்பி | யானை | 1364 |
| துய்ப்பன | திருவமுதுசெய்பவை | 1972 |
| துயக்கம் | துயக்கு-அறிவினது திரிபு | 4822 |
| துயக்கு | அறிவுதிரிதல் | 1797 |
| | சுழலுதல் | 7595 |
| துயரல் | துயரப்படாதே | 2554 |
| துயில் | உறக்கம் | 679 |
| | தாமசகுணம், கேவலசகல நிலைகள் | 2184 |
| துயிற்கு எதிர்ந்த | உறக்கத்தை ஏற்றுக்கொண்ட | 2533 |
| துரக்க | செலுத்த | 1815 |
| துரக்கனை | நீக்குபவனை | 5280 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | து | |
| துரங்க(ன்)வாய் பிளந்தான் | குதிரைமுகமுடைய கேசி என்ற அசுரனுடைய வாயைப் பிளந்து கொன்ற திருமால் | 8123 |
| துரந்தனை | துரந்தவனை-ஓட்டியவனை | 5015 |
| துரந்து | ஓட்டி | 50 |
| துரவையாக | அறவே அகற்றும் வகையில் | 5315 |
| துரிசர் | குற்றமுடையோர் | 6920 |
| துரிசு | குற்றம் | 7930 |
| துலங்க | துளங்க-விளங்க | 836 |
| துலை | இருவினை ஒப்பு | 511 |
| | ஒருதலம் | 1888 |
| துலை எடுத்த சொல் | நிறுத்துப்பேசும் சொல் | 511 |
| துலைப்படுப்பான் | வசப்படுத்துவதற்கு | 6526 |
| துவர் | காவி | 53 |
| | பவழம் | 2178 |
| | சிவந்த நிறம் | 4805 |
| துவர் இழுகிய துகில் | காவி ஊட்டிய ஆடை | 204 |
| துவர்க்காய் | கடுக்காய் | 63 |
| துவர்வாய் | பவழம் போல் சிவந்த வாய் | 2178 |
| துவரும் புரிசை | காவி பூசப்பட்ட மதில் | 940 |
| துவலை | துளி | 4083 |
| துழனி | ஓசை | 3098 |
| துள்ளும் | தருக்கும் | 989 |
| துளக்கம் | நடுக்கம் | 3358 |
| துளக்கு | நடுக்கம் | 1973 |
| துளங்க | அசைய, நடுங்க | 2038 |
| துளங்காத | கலங்காத | 650 |
| துளங்கு | துளக்கம்-நடுக்கம் | 140 |
| | வணங்கு | 1789 |
| துளங்கும் | வணங்கும் | 3221 |
| துள மதி | துள்ளவேண்டும் என்ற எண்ணம் | 2987 |
| துளவம் | துளபம்-துளசி | 2660 |
| துளி | விடத்துளி | 2421 |
| துளியானை | மழையாய் இருப்பவனை | 6923 |
| துளிரும் | தளிரும் | 1846 |
| துற்ற | செறிந்த | 34 |
| துற்றி | உண்டு | 491 |
| துற்று | உணவு | 599 |
| துறப்பு | இறப்பு | 7808 |
| துறம் காட்டி | துறவை விளக்கி, ஞானத்தை அருளி | 6267 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | **து** | |
| துறவி | துறவு | 982 |
| | வீடுபேறு | 2196 |
| துறுகல் | பாறை | 98 |
| துறும்பு | பொருந்திய, நிறைந்த | 5983 |
| துன் அமர் | பொருந்தித் தங்கிய | 1097 |
| துன் ஆரும் | நெருங்கி நிறையும் | 2611 |
| துன்மதியால் | தீய புத்தியால் | 5117 |
| துன்று | செறிந்த | 3532 |
| துன்று பொதுளி | செறிதல் நிறைந்து | 2385 |
| | தைத்த ஆடை | 2445 |
| துன்னம் | தைத்தல் | 1939 |
| துன்னலின் ஆடை | கோவணம் | 439 |
| துன்ன வண்ண ஆடை | கோவணம் | 553 |
| துன்னாகத்தேன் | துர்நாகத்தேன்-கொடிய பாம்பு போன்றேன் | 4215 |
| துன்னார் | பகைவர் | 1050 |
| துன்னி | நெருங்கி | 699 |
| துன் னில் | துன் இல்; துன்னிய இடம்-இருக்கும் இடம் | 6142 |
| துனி | வருத்தம் | 1273 |
| | **தூ** | |
| தூ இலா | தூய்மை இல்லாத | 3347 |
| தூங்காதார் | சாதாரணமான அறிவுநிலை நீங்கி, மெய்ஞ்ஞான நிலையில் நிற்காதவர்கள் | 6926 |
| தூசு | ஆடை | 95 |
| தூணி | அம்புப்புட்டில் | 3518 |
| தூபம் | நறுமணப்புகை | 814 |
| தூமக் கண் | புகையுடன் கூடிய நெருப்புக் கண் | 996 |
| தூமம் | புகை | 3705 |
| தூய் | தூவி | 1857 |
| தூர் அறுத்து | வேருடன் அழித்து | 5822 |
| தூர்த்தர் | அழித்தவர் | 8008 |
| தூர்த்தன் | துட்டனை இராவணன் | 1043 |
| தூ வணம் | பற்றுக்கோடாகும் தன்மை | 3358 |
| தூவல் | இறகு | 4357 |
| தூவி | (அன்னத்தின்) மெல்லிய அடிவயிற்று இறகு | 2044 |
| தூவிய | தூவும்பொருட்டு | 3925 |
| தூளி | அடிப்பொடி | 7456 |
| தூற்றியேன் | பலரும் அறிய எடுத்துரைத்தேன் (முன்பு சிவநிந்தனை செய்தேனாகிய யான் எனவும் ஆம்.) | 6285 |
| தூறு | காடு, மயானம் | 7682 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | தெ | |
| தெக்கு | 'தெற்கு' என்றதன் விகாரம் | 6667 |
| தெண்ணர் | (திண்ணர்) தெளிவு பெறுதவர்கள் | 5545 |
| தெத்தே | ஒலிக்குறிப்பு | 2249 |
| தெய்வத் தரு | கற்பகம் முதலிய தேவருலகத்து மரங்கள் | 2257 |
| தெரிபுரி | தத்துவத்தை ஆராய்கின்ற | 4565 |
| தெரியவன் | தெரிய நிற்பவன் | 1225 |
| தெருட்டர் | தெளிவிப்பவர் | 5827 |
| தெருட்டல் | தெளிவித்தல் | 2944 |
| தெருவம் | தெரு | 2422 |
| தெருள் உடை | தெருட்சி(-தெளிவு) கெட்ட | 1302 |
| தெருள்செய்தவர் | தேர்ந்து தெளிந்தவர்கள் | 379 |
| தெழிக்கும் | ஒலிக்கும் | 1844 |
| தெழித்து | மிதித்து, உதைத்து | 2479 |
| | அதட்டி | 4503 |
| தெழியா | அதட்டி | 4382 |
| தெள்ள | தெளியுமாறு | 631 |
| தெள்ளி | தெளிந்து | 2151 |
| தெளி | மதுத்தெளிவு | 2054 |
| தெளிவு | சிவஞானம் | 28 |
| தெற்றல் | தெளிதல் | 1554 |
| தெற்றி | பின்னி, பெயர்த்து | 708 |
| தெற்றித்து | மாறுபட்டு | 4999 |
| தெற்றியால் | உதையினுல் | 3412 |
| தெற்றினர் | பகைவர் | 4864 |
| தெற்றிஞர் | உலகங்களை அழித்த முப்புர அரக்கர் | 6095 |
| தெற்றும் | சேர்ந்திருக்கும் | 5914 |
| தென் | அழகு | 736 |
| தென்என | ஒலிக்குறிப்பு | 1150 |
| தென்ற | தெற்ற-சிதறச்செய்ய | 3965 |
| தென்றி | சிதறி | 737 |
| தென்றில் அரக்கன் | தெற்கே இருந்த அரக்கன்-இராவணன் | 977 |
| தென்ன | ஒலிக்குறிப்பு | 1536 |
| தென்னன் | பாண்டியன் | 2772 |
| | தே | |
| தே அரியும் | தே-தேவு; தேவஞகிய திருமாலும் | 5970 |
| தே ஆர்ந்த தேவர் | தேவராகும் தன்மையுடைய தேவர் | 6582 |
| தே இரிய | தேவர்கள் அஞ்சிக் கலைந்து ஓட | 6461 |
| தேக்கு நீர் | தேங்கிய நீர்-கடல் | 4763 |
| தேசம் | தேசு-ஒளி | 2761 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | தே | |
| தேசவேந்தன் திருமால் | உலகிற்குத் தலைவனான அரி | 8025 |
| தேசன் | தேசங்களை உடையவன் | 4501 |
| தேசு | ஒளி | 524 |
| தேட்டு | செல்வம் | 3226 |
| தேது | (தேயுஅது) 'தேயது' என்றதன் தொகுத்தல்; ஒளியுடையது | 3882 |
| தேது எரி | ஒளியுடையதாகிய தீ | 3882 |
| தேம்தாம் | ஒலிக்குறிப்பு | 1399 |
| தேம் படு மலர் | தேன் விளையும் மலர் | 2207 |
| தேம்பல் | தேய்தல் (உள்ள) | 1941 |
| தேமொழியாள் | தேன் போன்ற மொழியை உடையாள் | 4199 |
| தேர் | தேரர்-புத்தர் | 380 |
| தேர் அமண் ஆதர்கள் | புத்தரும் சமணருமான பயனற்ற மாந்தர் | 2821 |
| தேர்தரு | ஆராய்ந்த | 93 |
| தேர்வலவன் | தேர் ஓட்டுவதில் வல்லவனான சிபிச் சக்கிரவர்த்தி | 685 |
| தேரர் | புத்தர் | 63 |
| தேரிய | ஆராயுமாறு | 4 |
| தேரின் ஆர் மறுகு | தேர் ஓடும் வீதி | 2015 |
| தேவண விழா | தெய்வவண்ணத் திருவிழா. தேவணம்-தேவணம்-சூதாடுதல் முதலியன; திருவிழாக் காலத்து இத்தகைய வேடிக்கை விநோதங்கள் நிகழ்வதால், தேவணவிழா என்று கொள்ளுதலும் ஆம். | 1777 |
| தேவர்கோன் ஊர் | இந்திரன் ஊர்-சீகாழி | 2264 |
| தேவர கண்டனை | தேவர்களுக்கு முதல்வனை | 5307 |
| தேவு | தெய்வத்தன்மை | 780 |
| தேவேந்திரன் ஊர் | வேணுபுரம் என்னும் சீகாழி | 2257 |
| தேள் அரவு தென்றல் | பிரிவில் வாடும் பெண்களுக்குத் தேள் கொட்டுவது போலத் துன்பம் தரும் தென்றல் | 3593 |
| தேற்றனை | தெளிவிப்பவனை | 5274 |
| தேற்றி | (தெற்றி) சினந்து பிழையைத் தெளிவித்து | 3963 |
| தேறல் | தேன் | 792 |
| தேறிய சிந்தை | தெளிந்த மனம் | 2407 |
| தேன் | வண்டுவகை | 117 |
| தேன் அயங்கிய | தேன் சொரியும் | 1504 |
| தேன் அவன் | தேன்பருகுவது போன்ற இன்பம் செய்பவன் | 2498 |
| தேன்பொதி | தேன்கூடு | 316 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | தே | |
| தேன்மொழிப் பாவை | தேன் போலும் இனிய மொழியை உடையவள் | 2658 |
| தேனனை | தேன் போல இனியவனை | 5272 |
| தேனே போர் ஆரும் | தேன் என்ற வண்டின் வகையுடன் போர் செய்யும் | 1369 |
| தேனைக் காவில் இன்மொழி | தேனைக் கலந்துள்ள இனிய மொழியை உடையவள் | 3361 |
| | தொ | |
| தொகுவான் | அருள் கூர்பவன் | 964 |
| தொகை ஆக்கினான் | தமிழ்ச்சங்கத்தை நிறுவியவன் | 3382 |
| தொங்கல் | மாலை | 548 |
| தொங்கி | மனம் பணிந்து | 5570 |
| தொட்டிமை | பொருத்தம், ஒற்றுமை, அழகு | 4679 |
| தொட்டும் | தோண்டியும்-(குளம்) வெட்டியும் | 1250 |
| தொடரி | ஒரு முட்செடி | 2377 |
| தொடல் | தொடுத்தல் | 1913 |
| தொடை | அம்பு | 549 |
| தொண்டு | தொண்டர், தொண்டன் | 1480 |
| தொண்டுபட்டார் | ஆட்பட்டவர் | 6923 |
| தொண்டைவாய் உமை | கொவ்வைக்கனி போன்ற சிவந்த வாயினை உடைய உமை | 2002 |
| தொத்த கொன்றை | கொத்தாகப் பூக்கும் கொன்றை | 2240 |
| தொத்தின | கொத்தாக இருந்த | 2950 |
| தொத்து | கொத்து | 77 |
| தொந்தம் | (இன்பதுன்பம், தட்பவெப்பம் போன்ற) இரட்டைகள் | 5243 |
| தொல் அயங்கு புகழ் | தொன்றுதொட்டு நிலவும் புகழ் | 2283 |
| தொல் நீர் | பழைய பிரளயவெள்ளம் | 2226 |
| தொல்நெறி | அநாதியான சைவநெறி | 1962 |
| தொல்லை அவள் | அநாதிசக்தியான உமாதேவி | 4248 |
| தொல்லையார் | தேவர்கள் | 2805 |
| தொழ | தொழுதலைச் செய்ய | 2399 |
| தொழிலவன் | படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் என்ற ஐந்தொழிலையும் உடையவன் | 1232 |
| தொழும்பு | அடிமை | 7706 |
| தொறு | மந்தை | 743 |
| | தோ | |
| தோட்டீர் | பூக்களை அணிந்தீர் | 583 |
| தோய் | தோயம் என்பதன் கடைக்குறை; நீர் | 525 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | தோ | |
| தோய்ச்சு அட்டுதல் | தோய்த்துப் பிழிந்து வார்த்தல் | 2324 |
| தோலானே | யானை, புலி, மான் ஆகியவற்றின் தோலை அணிந்தவனே | 4295 |
| தோழம் | ஒரு பேரெண் | 804 |
| தோழன் விட்ட | தோழனான குபேரன் தோற்றுக் கைவிட்ட | 7151 |
| தோள் நப்பிரானை | தோள்வலிமைக்குச் சிறந்த பெயர் பெற்ற இராவணனை | 5181 |
| தோற்றம் கண்டான் | படைப்புக்கடவுள்-பிரமன் | 1642 |
| தோற்றனார் | தோல்வி அடையச் செய்பவர் | 4530 |
| தோற்றினும் தோற்றும் | தோன்றுதலையும் புரிவான் | 1256 |
| தோற்று அவன் | படைப்பும் அவன் | 1186 |
| | ந | |
| நக்க | வெளிப்படுத்திய | 2781 |
| நக்க உருவர் | ஆடையற்ற உருவமுடையவர் | 6038 |
| நக்கம் | நக்னம்-ஆடை இல்லாத தன்மை | 4040 |
| நக்கம் ஏய் சித்திரர்க்கு | ஆடை இல்லாமல் இருப்பதே அழகெனக் கொண்ட சமணர்க்கு | 3213 |
| நக்கர் | நக்னர்-ஆடைஉடுக்காதவர்-சிவபெருமான் | 2897 |
| நக்கா | திகம்பரனே | 722 |
| நக்கீர் | மகிழ்வீர் | 585 |
| நக்குருவர் | திகம்பரர்-ஆடையற்றவர்-சிவபெருமான் | 6038 |
| நக்குருவு | ஆடை அற்ற உருவம் | 3458 |
| நக நெதி | மலை போன்ற செல்வம் | 1333 |
| நகழ | துன்புற | 4629 |
| நகு தலை | நகைப்பது போல் வாய்பிளந்த பிரம்மகபாலம் | 231 |
| நகுதலை வடம் | பிரம்மகபாலங்களால் ஆன மாலை | 3707 |
| நகுவர் | சிரிக்கத் தக்கவர் | 479 |
| நகுவாய் மலர் | மலர்ந்த இதழ்களை உடைய தாமரை | 2121 |
| நச்சம் | நஞ்சு | 186 |
| நச்சினர் | விரும்பிப் பணிந்தவர் | 3034 |
| நச்சு | விரும்புதல் | 2232 |
| நசை | விருப்பம் | 12 |
| நஞ்ச நெஞ்சர் | நைந்த உள்ளமுடைய அடியார்கள் | 5925 |
| நஞ்சி | (மனம்) நைந்து | 7670 |
| நஞ்சேன் | நைந்தேன் | 7498 |
| நட்டக் கொட்டு | நடனத்திற்கான முழவு முதலியன கொட்டும் ஓசை | 4142 |
| நட்டங்கம் | நடனம் | 6458 |
| நட்டம் | நடனம் | 533 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ந | |
| நட்டவா | என்னுடன் நட்புக் கொண்டவனே | 7724 |
| நட்டார் | (ஆற்றின் நடு) நட்டாறு | 688 |
| நட்டிருள் | நடுஇருள் (நட்டாறு போன்ற முடிபு) | 2767 |
| நட | நடனம் | 209 |
| நடத்த | நடாத்திய | 1826 |
| நடம்மின் | நடமின்-நடப்பிர் | 2540 |
| நடல் | நடலை-துன்பம் | 6457 |
| நடலை | துன்பம் | 156 |
| நடன் | கூத்தன் | 2003 |
| நடு இலாக் காலன் | பிறர் உள்ளத்தில் இடம்பெறுதல் இல்லாத யமன் | 4914 |
| நடுநடுத்து | மிகவும் நடுங்கச்செய்து | 2460 |
| | நடுநடுங்கி | 2481 |
| நடை | வைதிகமான ஒழுக்கம் | 1726 |
| | உலக நடப்பு | 5550 |
| நண்ணலார் | பகைவர் | 542 |
| நண்ணார் | பகைவர் | 700 |
| நணுகலார் | பகைவர் | 2969 |
| நத்து | 'நந்து' என்றதன் வலித்தல்; சங்கு | 1967 |
| | விருப்பம் | 8047 |
| நத்து ஆர் புடை ஞானன் | சங்கைக் கையில் கொண்ட திருமாலைப் பாகமாகக் கொண்ட ஞானவடிவன் | 8047 |
| நந்தன் | பராசரன் | 688 |
| நந்தி | நமிநந்தி நாயனார் | 6587 |
| நந்தி மாகாளர் | சிவகணத்தில் ஒருவர் | 4714 |
| நந்தியார் | சிவபெருமான் | 830 |
| நந்து | வளரும் | 1127 |
| | நந்தவனம் | 1809 |
| நம்பர் | விரும்பப்படுபவர் | 4834 |
| | மேம்பட்டவர் | 6789 |
| நம் பரம் இது | இது நமது கடமை | 3139 |
| நம்பன் | விரும்பத்தக்கவன் | 622 |
| நம்பான் | நம்பன்-விரும்பத்தக்கவன் | 1586 |
| நமரங்காள் | நமர்காள் (இடையே 'அம்'சாரியை)-நம்மவர்களே | 1069 |
| நமன் தமர் | யம கிங்கரர் | 7855 |
| நமைப்புஉண்ணேன் | தேய்க்கப்பட்டுக் கெடமாட்டேன் | 6525 |
| நமையல | வருத்தமாட்டா | 204 |
| நயங்கு | கசங்கிய | 1504 |
| நயர் | கலந்த உறவை உணர்ந்தவர்கள் | 414 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ந | |
| நயவர் | விரும்பத்தக்கவர் | 605 |
| நயவன் | நயமுடையவன் | 1682 |
| நயன் | நீதிவடிவினன் | 2003 |
| நயனம் | கண் | 152 |
| நயனம் இடந்தார் | தன் கண்ணைப் பறித்துச் சிவபெருமானுக்கு அர்ச்சனை செய்த திருமால் | 2169 |
| நரலும் வாரி | ஒலிசெய்யும் நீர்வளம் | 5799 |
| நரி கதிக்க | நரி பாட | 3879 |
| நரி கான்றிட்ட | நரி உமிழ்ந்த | 7457 |
| நரிச்சு இராது | தங்கி இராமல் | 6081 |
| நரி புரி சுடலை | நரிகள் திரியும் இடுகாடு | 4565 |
| நரியார்தம் கள்ளத்தால் பக்குஆன பரிசு ஒழிந்து | நரியைப் போன்ற வஞ்சனையால் இரண்டு விதமான மனப்பான்மை நீங்கி | 8150 |
| நரை | வெண்மை | 263 |
| நரையார் | தலைநரைத்தல்; ஆர்: இகழ்ச்சிக் குறிப்பு | 2127 |
| நரையின் ஆர் விடை | வெண்ணிற எருது | 2307 |
| நல் அதிசயன் | மிக்க மேம்பாடு உடையவன் | 3044 |
| நல்குண்டு | நல்க உண்டு-பிறர் இட உண்டு | 2410 |
| நல்கூர்ந்தீர் | வறுமை யுற்றீர் | 7709 |
| நல்புலம் | நன்செய் | 1654 |
| நல்லஃது | நல்லது (ஆய்தல் விரித்தல்) | 3052 |
| நல்லன்ஆகி | இனியன்ஆகி | 4618 |
| நல்லார்கள் | சிவஞானியர் | 72 |
| நல்லார் பவரும் | பெண்களாகிய கொடி(யை உடைய) | 940 |
| நல்லாளை | நல்லாடை-ஒரு வைப்புத்தலம் | 6388 |
| நலங் கவின | மீண்டும் நலம்பெற | 1793 |
| நல பாலனம் | நன்றாகக் காத்தல் | 330 |
| நலிந்து | வருந்திமுயன்று | 2634 |
| நவம் | புதுமை | 1217 |
| நவில் | பொருந்திய, சாதனம் ஆகும் | 2210 |
| நவில்வான் | விரும்புகிறவன் | 1085 |
| நவிலும் | பயிலும்-மிகுந்துள்ள | 2210 |
| நவை | குற்றம், சிதைவு | 1850 |
| நழுவு | தவிர்தல் | 2758 |
| நள்இருள் யாமம் | நள்ளிருளை அடுத்த வைகறையாமம் | 4119 |
| நள்ளாமே விள்ளப்-பெற்றோம் | நட்புச்செய்யாமல் நீங்கப்பெற்றோம் | 7225 |
| நள்ளிகள் | நண்டுகள் | 7590 |
| நள்ளையில் | நடுவே | 5100 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ந | |
| நளிர் சிரம் | குளிர்ந்த (உயிர் நீங்கிய) தலை | 6335 |
| நளிர் பொழில் | குளிர்ந்த சோலை | 844 |
| நளிரும் | குளிரும் | 918 |
| நற்றவா | நல்ல தவமே வடிவானவனே | 7723 |
| நற்ற(வ்)வை | நல்ல தாய்; நற்றாய் எனினும் ஆம். | 7419 |
| நற்று | 'நன்று' என்றதன் வலித்தல் | 6876 |
| நற | நறவு-தேன், கள் | 201 |
| நறவம் | தேன், உணவு | 725 |
| நறவு | நறுமணம் | 2668 |
| | தேன் | 3594 |
| நறி | நறுமணம் | 3723 |
| நறை | தேன் | 195 |
| | நறுமணம் | 352 |
| நறை மலிதரும் அளறு | மணம் மிக்க சந்தனச்சேறு | 220 |
| நன்கடம்பனை | நல்ல கடம்பமலர் சூடும் முருகனை | 5431 |
| நன்றான் | நல்லறமே வடிவானவன் | 1587 |
| நன்று | உயர்நலமாகிய வீடுபேறு | 737 |
| நன | நனவுநிலை-தெளிந்த உள்ளம் | 2386 |
| நனிதன் | மிக்கோன் | 1614 |
| நனை கவிழ்வாய் | நனையும்படி ஒழுகுமிடங்களில் | 8047 |
| | நா | |
| நா அணங்கு இயல்பாம் | நாக்கிற்கு அழகு செய்வதான | 4097 |
| நாஅதால் | நாவினால் | 2508 |
| நா இயலும் மங்கை | கலைமகள் | 1383 |
| நாக அரையன் | பாம்புகளுக்கு அரசன் | 687 |
| நாகணை | நாக அணை-பாம்பாகிய படுக்கை | 796 |
| நாக பணம் | பாம்பின் படம் | 37 |
| நாகம் | ஆதிசேடன் | 247 |
| | பாம்பு போன்ற மலர் | 2115 |
| நாகம் அரும்பு(ம்) | பாம்பு போல் அரும்பும் | 2014 |
| நாகம் முகத்தவர் | தேவர் | 4161 |
| நாக வளையினர், நாக உடையினர் | பாம்பை வளையாகவும், யானைத்தோலை உடையாகவும் அணிந்தவர் | 4326 |
| நாகு இளவெண்மதி | மிக்க இளமையுடைய பிறை மதி | 1875 |
| நாட்டம் | கண் | 7407 |
| நாட்டு அகத் தேவர் | பூசுரர்-அந்தணர் | 7872 |
| நாண் அஞ்சு கையன் | வில்நாண் அஞ்சிநீங்கிய கையையுடையன் | 4511 |
| நாண்முகம காட்டி | நான் பிறரைக் கண்டு நாணம் கொள்ளுமாறு செய்து | 3914 |
| நாணி | வில்லின் நாண் | 2411 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | நா | |
| நாணும்படியார் | திகம்பரச் சமணர் | 2144 |
| நாத்த (ஞாத்த) | கட்டிய | 929 |
| நாத்த நெறி | முடிவில்லாத வழி (ந+அஸ்த)- அடைய வேண்டியது யாதும் இல்லாத வழி | 929 |
| நாத்திகம் | கடவுள், வேதங்கள், ஆகமம், மேல்உலகு முதலியன இல்லை எனக் கூறும் உலோகாயதம் | 5550 |
| நாதான் | நாதன்-இறைவன் | 320 |
| நாதி | ஆதிஇல்லாதவன்; அநாதி என்பதன் முதற்குறை | 6455 |
| நாபிக்கு மேலே ஒருநால்விரல் | உந்திக்குமேலே நான்கு விரற்கிடையில் உள்ள இருதயம் | 7699 |
| நாமதேயம் | பெயர் | 2471 |
| நாமம் | புகழ் | 933 |
| நா மரு | புகழ் பொருந்திய | 1101 |
| நாயாடியார் | தலைமையை ஆள்பவர் | 7409 |
| நாயிற்றை | ஞாயிற்றை-சூரியனை | 4316 |
| நார் | அன்பு | 447 |
| நாராசம் | கம்பி | 4680 |
| நாரி | மடந்தை | 572 |
| நால் | (நாலர்)நான்மறை | 1538 |
| நால்அஞ்சு புள்ளினம் | பிரளய காலத்தில் தோணிபுரத்தைச் சுமந்த இருபது பறவைகள் | 4959 |
| நால்கள் | நான்கு | 69 |
| நால்தானத்து ஒருவனை | மும்மூர்த்திகளுக்கு அப்பாற்பட்ட நான்காவது பொருளான ஒப்பற்ற சிவனை | 7621 |
| நால்வர் | சனகர் முதலான முனிவர்கள் நால்வர் | 515 |
| நால்வாய் | தொங்கும் வாய் | 1382 |
| நாலும் | தொங்குகின்ற | 64 |
| நாலு வேதியர்க்கு | நான்குவேதம் உணர்ந்த அந்தணர்க்கு | 5962 |
| நாவலா | நாவன்மை உடையவனே | 7725 |
| நாவிவாய்ச் சாந்து | கத்தூரி கலந்த சந்தனம் | 3076 |
| நாவினுள் | கலைமகள் | 2795 |
| நாழல் | ஞாழல்-சுரபுன்னை | 2045 |
| நாள் | முக்கோடி வாழ்நாள் | 2655 |
| நாள்அங்கடி | காலை நேரத்துக் கடை | 5177 |
| நாள் பலவும் சேர் மதியம் | முழுமதி வளரக் காரணமான பிறைச்சந்திரன் | 2235 |
| நாள்மலர் | நாட்காலையில் மலரும் பூ | 110 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | நா | |
| நாள்வாயும் | நாள்தோறும் | 6531 |
| நாளார் | சாகும் நாள்; இகழ்ச்சிக் குறிப்புப் பற்றி உயர்திணையாற் கூறிற்று. | 7479 |
| நாளிகேரம் | தென்னை | 716 |
| நாற்றம் (சூடுவர்) | மணமுள்ள மலர் | 5354 |
| நாற்றி | தொங்கவிட்டு | 4839 |
| நாற்றியேன் | புறச்சமயத்தில் உறுதியாய் இருந்த நான் | 6285 |
| நாறு | மணம் | 530 |
| | நாற்று | 1212 |
| நான் அமரும் | நான் விரும்பி அடையும் | 3949 |
| நான் ஆய பரனை | என்னிலும் வேறு ஆகாது நானாகவே ஆன முதல்வனை | 7621 |
| நான்மறைதன்னினுர் | நான்கு வேதங்களுடைய உட்பொருள் ஆனவர் | 3087 |
| நான்ற | தொங்கிய | 450 |
| நானம் | கத்தூரி | 844 |
| நானுவிதம் | பலவகை | 2251 |
| நானேனும் | நான்எனினும் | 7381 |
| | நி | |
| நிகர் | ஒளி | 156 |
| நிகரும் நாமம் | தமக்குத் தாமே நிகரான திருப்பெயர்கள் பன்னிரண்டு | 2818 |
| நிகழ்த்தீர் | சொல்வீராக | 649 |
| நிகழ்ந்தீர் | எப்பொழுதும் விளங்கினீர் | 2078 |
| நிகழ் மதி | என்றும் உள்ள வளர்பிறை | 506 |
| நிகழ்வித்த | பொருந்தச் செய்த | 1635 |
| நிகழ்வித்து | முன்போலவே விளங்கச்செய்து | 1957 |
| நிச்சம் | நித்தியம்-தவிரா வகை | 186 |
| நிசாசரன் | இரவில் திரிபவன்-அரக்கன்-இராவணன் | 2011 |
| நிசிசரன் | இரவில் திரிபவன்-அரக்கன்-இராவணன் | 224 |
| நிட்கண்டகம் | கருணையற்ற செயல் | 7979 |
| நிட்கண்டகன் | எதிரியில்லாதவன் | 7867 |
| நிட்டுரவர் | கொடியவர் | 6426 |
| நிணம் | தசையின் கொழுப்பு | 2085 |
| நித்தம் | நாள்தோறும் | 3627 |
| நித்தம் பயில் | அழியாத்தன்மை யுடைய | 161 |
| நித்தல் | நாள்தோறும் | 7708 |
| நித்தல் படி | நாள்தோறும் தரும் படி (படி-அன்றைய செலவுக்கான பணம்) | 7323 |
| நித்தன் | நிலையாய் இருப்பவன் | 967 |
| நித்திலத் தொத்து | கொத்தாகத் தொங்கும் முத்து | 2597 |
| நித்திலன் | முத்துப் போன்றவன் | 1347 |
| நிதனம் | அழிவு | 4307 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | நி | |
| நிதானம் | (புதையல்) நிதி, பொன் | 81 |
| நிந்தியா | நிந்தித்து-இகழ்ந்துரைத்து | 2666 |
| நிமலர் | மாசற்றவர் | 748 |
| நியதம் | தவறாமல் (நாள்தோறும்) | 221 |
| நியர் | ஒளி | 3055 |
| நிர்த்தம் | (ந்ருத்தம்) நடனம்-ஊர்த்துவ தாண்டவம் | 1363 |
| நிரக்க | வரிசைப்பட | 861 |
| நிரக்கும் | வரிசைப்பட்டுக் கிடக்கும் | 2561 |
| நிரந்த மொழி | ஒழுங்குபட்ட மொழி | 3655 |
| நிரந்தரம் | இடைவிடாமை | 2159 |
| நிரந்தரம் செய்த | நிலந்தரம் செய்த-அழித்த | 7867 |
| நிரந்து | வரிசைகொண்டு | 39 |
| நிரப்பர் | அறிவற்ற முப்புர அரக்கர் | 6427 |
| நிரம் | நிறம் எதுகை நோக்கித் திரிந்தது; மார்பு; ஈண்டு, ஆகுபெயரால் மார்புவலிமை | 4166 |
| நிரவ | வரிசைப்பட, நிரம்ப | 147 |
| நிரவனை | அழித்தவனை | 5577 |
| நிரவி | ஒழுங்குபடுத்தி | 878 |
| நிரவிக்க | அளவுபடுத்த | 6674 |
| நிரவிட்டு | செம்மைசெய்து | 885 |
| நிராமய | நோயற்றவனே | 3519 |
| நிருத்த கீதர் | நடனம் ஆடுபவரும் பாடுபவரும் | 564 |
| நிருபமன் | உவமை இல்லாதவன் | 1338 |
| நிரை | வரிசை | 530 |
| நிலந்தரத்து | யாவும் அழிந்த ஊழிக்காலத்து | 6600 |
| நிலமை | இம்மை | 844 |
| நிலாசும் | நிலாவும்-நிலைத்து நிற்கும் | 6870 |
| நிலாமுளை | பிறைமதி | 1513 |
| நிலாயது | நிலைபெற்றது | 2326 |
| நிலாவி | விளக்கமுற, நிலையாகப்பெற்று | 5244 |
| | அடைந்து, நிலைபெறச்செய்து | 5708 |
| நிலை | காத்தல் | 88 |
| | நிலையான பேரின்பம் | 2608 |
| நிலை ஆர்ந்த உண்டியினர் | நின்றுகொண்டே உண்பவர் | 2355 |
| நிலைஇலா வெள்ளைமாலையன் | நிலையிலாது மாண்டோருடைய வெள்ளெலும்புகளை மாலையாகப்-பூண்டவன் | 5471 |
| நிலைகொள் ஆனை | நிலைத்து நின்று அடங்காத யானை போலத் துயர்செய்யும் (வல்வினைகள்) | 5606 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | நி | |
| நிலையவன் | ஒற்றைக்காலில் நின்று தவமியற்றும் அருச்சுனன் | 135 |
| நிவஞ்சகத்து | (நிஷ்பஞ்சகத்து) ஐந்து நீங்கிய நிலையில்-அறியாமை, அகங்காரம், அவா, பெருவிழைவு, வெறுப்பு என்னும் ஐந்து குற்றங்களும் நீங்கிய நிலையில் | 4929 |
| நிவஞ்சகம் | நிர்வஞ்சகம்-வஞ்சனை இல்லாமை | 4929 |
| நிவந்தான் | உயர்ந்தான் | 1670 |
| நிவவின் | நிவா என்னும் ஆற்றினது | 7258 |
| நிழல் | ஒளி | 199 |
| நிழல் ஆலன் | ஆலமரத்தின் நிழலில் இருந்தோன் | 5962 |
| நிழலான் | நிழலில் | 20 |
| நிறம் | மார்பு | 750 |
| நிறுத்தனை | 'நிருத்தனை'எதுகை நோக்கித் திரிந்தது; ஆடல்வல்லானை | 5014 |
| நிறை | நீர், மனநிறைவு | 1745,1736 |
| நிறைத்துண்டப் பிறைக்கற்றை | வெண்மை நிறைந்த பிறைத்துண்டம் கற்றையாக(ஒளிவீசும்) | 3512 |
| நிறைதை உழி | நிறைவு தேவைப்பட்டபொழுது | 3521 |
| நிறையால் | மனநிறைவோடு | 1031 |
| நின்ஆனுர் இருவர் | நின்னைப் போலவே தாமும் கடவுளர் எனச் செருக்குக் கொண்ட பிரமனும் திருமாலும் | 4300 |
| நின்மலன் | மாசுஅற்றவன் | 511 |
| நினைக்குறூர் | நினைக்கவிடமாட்டார் | 6054 |
| நினையா | நினைத்து | 1365 |
| நினையார் | பகைவர் | 2409 |
| | நீ | |
| நீங்கும் நீர் | நில்லாது ஓடும் நீர் | 1743 |
| நீட்டி | நீள-(எப்போதும்) நினைந்து | 5569 |
| நீட | நெடுங்காலம் வாழ | 1553 |
| நீடவல்ல | நெடுங்காலம் நிகழும் | 2017 |
| நீடு | பெருமை உறுகின்ற | 6 |
| நீணம் | நீளம் | 2046 |
| நீணுதல் | நீளுதல் | 9 |
| நீணுலா | உயர்வு பொருந்திய | 6366 |
| நீதர் | நீசர்-இழிந்தோர் | 63 |
| நீதனேன் | நீசனுகிய நான் | 6366 |
| நீதி | நீதிவடிவினன் | 2384 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | **நீ** | |
| நீந்தானை | நீத்தானை என்பதன் மெலித்தல் விகாரம்; கங்கைநீர்ப்பெருக்கைச் சடையிலே கொண்டவனை (நீத்து-நீர்ப்பெருக்கு) | 1618 |
| நீர் | நீர்மை-தன்மை | 682 |
| நீர்ஆழி | கடல் | 3380 |
| நீர் இரி புன்சடை | கங்கைநீர் வழியும் செஞ்சடை | 3435 |
| நீர் உரு மகள் | நீர் வடிவான பெண்-கங்கை | 833 |
| நீர்க்கோடு | நீர்நிலைக்கரை | 2713 |
| நீர்கள் | நீங்கள் | 4588 |
| நீரில் நால்வர் | நீரில், சுவை ஒளி ஊறு ஓசை நான்காகவும் இருப்பவர் | 4793 |
| நீரின் ஆர் வரை கோலி | நீர்ப்பரப்பால் எல்லை வகுத்து | 2042 |
| நீல் | நீலம் | 478 |
| நீலத்து ஆர் | நீலநிறம் பொருந்திய | 2573 |
| நீலம் | விடம் | 6359 |
| நீலம் உண்டது | நீலநிறம் தோய்ந்த துணி போன்ற பொருள் | 1062 |
| நீலி | துர்க்கை | 2274 |
| நீழல் | புகலிடம் | 1878 |
| நீளமாய் நின்று | நெடுந்தூரம்பட நின்று | 2763 |
| நீற்றுத் தண்டத்தராய் | நீறுபூசி விழுந்து வணங்குபவராய் | 5476 |
| | **நு** | |
| நுங்கி | விழுங்கி | 7763 |
| நுடங்குஉண இடந்த இடைஅல்லி இருந்தவன் | அசைவுள்ள (திருமாலின்) கொப்பூழிலிருந்து தோன்றிய தாமரையின் அகஇதழ்களிடை இருந்த பிரமன் | 1794 |
| நுடங்குவ | தவழ்வன | 3530 |
| நுணங்கும் | துவளும் | 410 |
| நுதல் | தலை | 276 |
| | நெற்றி | 603 |
| நுதல்பட்டம் | நெற்றிப்பட்டம் | 2802 |
| நுதி | நுனி | 223 |
| நுளைச்சியர் | வலைச்சியர் | 1877 |
| நுனை | நுனி | 712 |
| | **நூ** | |
| நூக்கியிட | தள்ளிவிட | 4174 |
| நூபுரம் | சிலம்பு | 1916 |
| நூல் | வேதம் | 660 |
| நூல் விரி | வேதத்தை விரித்தவன் | 5894 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | நூ | |
| நூலின் கிழவர் | நூல்களை ஓதி அவை விதித்தவாறே ஒழுகுபவர் | 4528 |
| நூறி | நூறியவன்-அழித்தவன் | 3197 |
| நூறிய | அழித்த | 105 |
| நூறினான் | அழித்தவன் | 5560 |
| | நெ | |
| நெகிழ்த்து | சிந்தச்செய்து | 2032 |
| நெடி | சில்வீடு என்ற வண்டு | 4536 |
| நெடுந்தூவி | நீண்ட வால் | 4235 |
| நெடுமா | யானை | 2367 |
| நெடுமூக்கின் கரி | நீண்ட மூக்கை (துதிக்கையை) உடைய யானை | 7201 |
| நெண்டிக்கொண்டேயும் | வலியச் சென்றேனும் | 7982 |
| நெண்பு | நண்பு-நட்பு | 1752 |
| நெதி | நியதி, நிதி | 781 |
| | தியானம் | 888 |
| நெதித்தவன் | நிதி போன்ற தவம் உடையவன் | 4626 |
| நெதியம் | நிதியம்-செல்வம் | 2587 |
| நெதியானே | நிதிபோன்றவனே | 4298 |
| நெய் ஆடுதல் ஐந்து | நெய் முதலாகிய பஞ்சகவ்வியம் ஆடுதல் | 2115 |
| நெருக்கன் | நெருக்கியவன் | 1021 |
| நெல்லியான் | திருநெல்லிக்கா என்னும் திருத்தலத்தில் உள்ளவன் | 5576 |
| நெற்றி | நெற்றிக்கண் | 2544 |
| நெறி | நெறிப்பு | 377 |
| | வேதாகம நன்னெறி | 2095 |
| நெறி கொள் கரன் | நன்னெறிகாட்டி உபதேசம் அருளும் திருக்கையை உடையவன் | 3520 |
| நெறிப் பாலர் | சிவநெறியிலே ஒழுகும் அடியார் | 2761 |
| | நே | |
| நே | நேயம் | 154 |
| நேசு | நேசம் | 524 |
| நேட | தேட | 84 |
| நேயவனை | நேயம் உடையவனை | 4753 |
| நேர் | ஒப்பு | 1463 |
| | நேரம் | 2137 |
| நேர்ந்தான் | கொடுத்தான் | 878 |
| நேரிசை | பண்வகை | 811 |
| நேரியன் | நேரில் தோன்றுபவன் | 2410 |
| | நேரிமலைத் தலைவனான சோழன் | 2774 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | நை | |
| நைவான் அன்று | துயரப்படுவதற்காக அன்று | 7387 |
| | நொ | |
| நொங்க | அழியும்படியாக | 3528 |
| நொடி | சொல் (பெயர்கள்) | 2488 |
| நொடிந்த | சொல்லிய | 862 |
| நொடிப்பது மாத்திரை | கைநொடிக்கும் அளவில் | 7681 |
| நொடிமை | பொய்பேசுதல் | 582 |
| நொடிய | பேச | 3529 |
| நொடிவரை | இமைப்பொழுது | 1118 |
| நொந்தினர் | அழிந்தனர் | 6247 |
| நொ(ய்)ம் | கனம் இல்லாத | 1916 |
| நொய்யன் | நுண்ணியன் | 25 |
| நொய்யன செய்யல் | நுண்ணிய ஐந்தொழில்கள் | 421 |
| நொய்யேனை | சிறியேனை | 7763 |
| | நோ | |
| நோக்கல் செய்து | நோக்கி | 2782 |
| நோதங்கம் | நோவது அங்கம்-பசியும் பிணியுமான நோய்களுக்கு இடமான உடம்பு | 6351 |
| நோய் | பாவங்கள் | 2400 |
| நோயில் | நோய் (இல்: சாரியை) | 4125 |
| நோற்றலார் | தவம் செய்யாதவர் | 839 |
| நோன்பு இற ஊன்று சொல்லி | தன் தவம் கெடும் வண்ணம் இறைவன் ஊன்றியதை நீக்கி அவன் அருளும்படி-யாகச் சாமவேதத்தைப்பாடி | 4746 |
| | ப | |
| பக்கவாய் | பகுவாய்-பிளந்த வாய் | 2460 |
| பகட்டேன்மின் | வெருட்டாதீர் | 6530 |
| பகடு ஆர் உரி | யானைத்தோல் | 959 |
| பகடு ஊர் பசி | யானைத் தீப்பசி | 643 |
| பகரா | விலைபகர்ந்து | 156 |
| பகவனர் | இறைவன் | 1479 |
| பகன் | ஆதித்தியர் பன்னிருவரில் ஒருவன் | 7202 |
| பகன்றில் | அன்றிற் பறவை | 714 |
| பகுவாயன | பிளந்தவாயை உடையன | 1474 |
| பங்கம் | குற்றம் | 514 |
| | குறை, வளைவு | 712 |
| | பாதி | 972 |
| | தோல்வி | 2507 |
| பங்கம் எனப் படர் | குறைவென்று கூறப்படும் | 3068 |
| பங்கயம் | தாமரை | 78 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ப | |
| பங்கயமங்கை | திருமகள் | 78 |
| பங்கி | விழுங்கி | 5570 |
| பச்சம் | (பக்ஷம்) விருப்பம் | 186 |
| பச்சிறவு | பச்சை இறுமீன் | 841 |
| பச்சை | பசை-பற்று | 2778 |
| பச்சையான் | பச்சை நிறமுடைய திருமால் | 2875 |
| பசு | விடை | 2396 |
| பசுபதி | இடபம், சிவபெருமான் | 232 |
| பசும்பொன் உந்தி | பசும்பொன்போல் காட்டி | 2236 |
| பசு வேட்டு | யாகபசுக்களால் (ஆடு) வேள்விசெய்து | 865 |
| பசை | பற்று | 238 |
| பசைந்து | பொருந்தி | 2679 |
| பஞ்ச துட்டனை | ஐந்து பெரும்பாவங்களும் செய்தவனை | 7579 |
| பஞ்சமந்திரம் | ஈசான:, தத்புருஷாய, அகோரேப்ய, வாமதேவாய, ஸத்யோஜாதம் என்னும் தொடக்கமுடைய ஐந்து மந்திரங்கள்; இவற்றின் முதற்குறிப்புக்களாக, ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம் எனவும் வழங்குதல் உண்டு. இவற்றைச் சிவபெருமானுடைய முகங்கள் என்றும் கூறுவர். | 5345 |
| பஞ்சமம் | ஒரு பண் | 4455 |
| பஞ்சவன் | பாண்டியன் | 3344 |
| பஞ்சாக்கை | பஞ்சார்க்கபுரம்; அர்க்கர்-சூரியர்; ஐந்துசூரிய தேவதைகள் பூஜித்த தலம் (கடலூரர்க்கருகில்) | 6962 |
| பஞ்சி இடப் புட்டில் கீறுமோ? | பஞ்சைத் திணிப்பதால் குடுக்கை உடையுமோ? | 7670 |
| பஞ்சி நுண் துகில் | பஞ்சினால் ஆன நுண்ணிய ஆடை | 2489 |
| பஞ்சு | செம்பஞ்சிக்குழம்பு | 2649 |
| பஞ்சுரம் | பண்வகை | 2945 |
| பட்ட அங்கம் மாலை | இறந்தோரின் என்புகளாலான மாலை | 6458 |
| பட்ட கட்டம் | உற்ற துன்பம் | 6180 |
| பட்ட நெற்றியர் | உருத்திரபட்டம் (அணி) தரித்த நெற்றியை உடையவர் | 5488 |
| பட்டம் | மேலாடை | 2464 |
| பட்டர் | குருக்கள், கல்விமேன்மை உடையோர் | 6237 |
| பட்டன் | வேதாசாரியன், புலவன், இறைவன் | 1556 |
| | ஆசிரியன் | 7941 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ப | |
| பட்டிஏறு | (பட்டி-அடக்கமின்றி வேண்டியவாறு ஒழுகுதல்) கடவுட்கென்று விடப்பட்ட, யாரும் தடை செய்யக்கூடாத காளை (பட்டிமாடு) | 5215 |
| பட்டி துட்டங்களுய் | கள்வனும் துட்டனுமாய் | 6198 |
| பட்டி மன் | கற்றுத்தேர்ந்த பாண்டியமன்னன் | 3342 |
| பட்டியாய் | மீளா அடிமையாய் | 5567 |
| பட்டியை | அரவாகிய உடை கட்டியவனை | 7847 |
| பட்டிவெள்ளேறு | 'பட்டிஏறு' காண்க. | 6609 |
| பட்டை கொண்டு பகடு ஆடி | கிளி முதலியவற்றை விரட்ட ஒலிக்கும் பட்டையைக்கொண்டே யானையைத்-துரத்தி | 8018 |
| பட்டைத் துவர் | மரப்பட்டையிலிருந்து பெறும் காவி | 873 |
| படக்கர் | (படம்-ஆடை) ஆடை உடுத்தவர்; பௌத்தர் | 1795 |
| | பிருதக்கர் என்பதன் திரிபாகக் கொண்டு, வேறுபடுத்தப்பட்டவர் எனக்கொள்ளு தலும் கூடும். | 1795 |
| படகம் | வாத்தியவகை | 3618 |
| படப்பின் | படம்பின் ; ஆகுபெயரால், நூல்கயிற்றால் பின்னப்பட்ட உறி | 7973 |
| படப்பை | மனைக்கொல்லை | 444 |
| படம் | போர்வை | 114 |
| படம் ஆர் கச்சி | மாடங்களில் கொடி பறக்கும் காஞ்சி | 3237 |
| படம்பக்கம் | ஒரு பறைவகை | 7251 |
| படலைச் சடை | திரளான சடை | 5220 |
| படவடகத்தொடு | தோல் ஆடையுடன் | 7972 |
| படி | நிலஉலகம் | 219 |
| | வடிவம் | 1734 |
| | படிமை-உவமை | 5727 |
| | பண்பு, உண்மை | 2642 |
| படிஆன சிந்தை | இறைமைத் தன்மையான எண்ணம் | 947 |
| படி எலாம் | உலகம் எல்லாம் | 3202 |
| படி ஏயும் | உலகம் முழுவதும் உடைய | 6883 |
| படிகால் | தலைமுறை | 7773 |
| படி கொள் பாணி | முறையாக இடும் தாளம் | 299 |
| படித்தார் | பழகுபவர் | 276 |
| படிதம் | கூத்துவகை | 2138 |
| படிபட்ட | ஒப்பற்ற | 1133 |
| படி படு கோலம் | ஒப்பற்ற அழகு, தவக்கோலம் | 2216 |
| படிமக் கலம் | பிரதிமைக்குப் பூட்டும் அணிகலன் | 5157 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ப | |
| படிமத்தான் | வடிவத்தை உடையவன் | 7014 |
| படிமம் | தவவேடம் | 563 |
| படி மலர்ப் பாலன் | மலர் போன்ற குழந்தை-உபமன்யு | 2175 |
| படியா | அடங்காத | 806 |
| படியார் | உலகமக்கள் | 693 |
| படிறன் | வஞ்சகன்-பிச்சை ஏற்கும் பொய்யன்-சிவபெருமான் | 3192 |
| படிறுஆக | பொய்யாக | 24 |
| படிறோ | வஞ்சனையோ | 7707 |
| படுகடல் | ஆழ்கடல் | 1953 |
| படுகர் | ஆற்றுப்படுகை | 1444 |
| படுகு | ஆற்றுப்படுகை | 727 |
| படுத்திடு | அழித்த | 1575 |
| படுதம் | கூத்துவகை | 495 |
| படுதலை | கபாலம் | 854 |
| படை | ஞானப்படை | 1637 |
| படைத்தனை | படைத்தவனை | 5015 |
| படை நீடது | படைவீரர் நெடுக ஆரவாரம் செய்வது | 2370 |
| பண் அங்கு எழுவு பாடல் | இசை கூட்டி எழுப்பப்படும் பாட்டு | 3607 |
| பண் கவர் செய் | வளங்கள் காண்போர் மனத்தைக் கவர்கின்ற வயல்கள் | 3585 |
| பண்டங்கன் | பாண்டரங்கக்கூத்து ஆடுபவன் | 1535 |
| பண்டம் | பெறும் பேறு | 7240 |
| பண்டான் | பண்டையான் என்றதன் விகாரம்; பழமை உடையவன் | 6861 |
| பண்டி | வயிறு, உடல் | 3148 |
| பண்டி மன் | பாண்டியநாட்டு அரசன் | 3348 |
| பண்டு | பழம் | 83 |
| பண்டு உரியார் | வழிவழித் தொண்டுரிமை உடையார் | 86 |
| பண்ண வண்ணத்தர் | பண்இசைப்போர் | 2467 |
| பண்ணி | அலங்காரம் செய்து | 1732 |
| பண்ணு மூன்று | பண், திறம், திறத்திறம் என்பன | 509 |
| பண் தடவு | பண்ணின் இனிமை தோய்ந்த | 3594 |
| பணி | பாம்பு | 73 |
| | பணிதல் | 941 |
| | கடமை | 2351 |
| பணிஆயவன் | தொண்டிற்கு இடமானவன் | 166 |
| பணிகை | பணிதல் | 2415 |
| பணிபவர் | பணியப்படுபவர் | 5773 |
| பணிய(க்)கிலாது | பணியமாட்டாமல் | 3218 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ப | |
| பணிலம் | சங்கவாத்தியம் | 3658 |
| பணை | மூங்கில் | 45 |
| | கிளை | 2165 |
| | ஆகுபெயரால், (மருத) மரத்தடி | 5388 |
| பணை ஆரவாரத்தான் | பெரிய ஆரவாரம் உடையவன் | 4289 |
| பணைத்த | பெருத்த | 2564 |
| பத்தி மன் | பக்தியுடைய பாண்டிய மன்னன் | 3340 |
| பத்திமை(ப் பாடல்) | பக்தி தருகின்ற | 77 |
| பத்திரம் | உடைவாள் | 7736 |
| பதகர் | பாவிகள் | 1817 |
| பதம் | பாதம் | 223 |
| | மந்திரம் | 646 |
| | செவ்வி | 653 |
| பதம் அஞ்சு | திருஐந்தெழுத்து | 6419 |
| பதம் ஏழு | சுரத்தானங்கள் ஏழு | 111 |
| பதம் சந்திப்பொருள் உருவாம் | சொல், அவற்றின் புணர்ச்சி (தொடர்) ஆகியவற்றின் வடிவான | 4238 |
| பதினெட்டு | பதினெட்டுப்புராணங்கள் | 1529 |
| பதுமன் | பதுமம்-தாமரை | 217 |
| பந்தணம் | பாசபந்தங்கள் | 3217 |
| பந்தம் | உதரபந்தம் என்னும் அணி | 800 |
| | உறவு, அருள் | 1840 |
| | பற்று, துணை | 1916 |
| பந்தரத்து | பண்தரத்து என்றதன் விகாரம்; இசைவகைகளைக் கொண்ட | 6743 |
| பந்த விடை | கட்டுதலையுடைய காளை | 1029 |
| பந்தனை | பந்தம்-பற்று | 1828 |
| பந்தனையவர் | பாசத்தால் கட்டுண்டவர்கள் | 3325 |
| பந்தி | இடம் | 1017 |
| பந்திச் செஞ்சடை | பின்னிக் கட்டிய சிவந்த சடை | 5484 |
| பந்தித்த | கட்டிய | 4540 |
| பந்தித்திருந்த | அறிவை மறைத்திருந்த | 749 |
| பந்திவட்டத்து இடைப்பட்டு | வேந்தருடைய யானைப்பந்தி, குதிரைப்பந்தி முதலியவற்றில் அகப்பட்டு | 4977 |
| பந்து | உறவு | 5957 |
| பந்து அணவு மெல்விரலாள் | பந்தாடும் மெல்லிய விரல்களை உடையாள் | 2091 |
| பந்து ஆர் விரல் | பந்தாடிப் பயிலும் விரல் | 178 |
| பந்து இயல் அங்கை மங்கை | பந்தோடு பயிலும் அழகிய கையை உடைய பெண் | 1088 |

| அருஞ்சொல்-சொற்ளெடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ப | |
| பந்து உலாம் விரல் | பந்து ஆடும் விரல் | 2658 |
| பப்பு | வீண்மை; ஆகுபெயரால், வீடுபேற்றுக்கு உதவாத நூல்கள் | 4216 |
| பம்மி விம்மு | செறிந்து நிறைந்த | 2377 |
| பயப்பால் | விருப்பத்தால் | 774 |
| பயலே | பசலே-பசப்புநோய் | 646 |
| பயன் | பயம்-அச்சம் | 94 |
| பயிக்கம் | பைக்ஷம்-பிச்சை உணவு | 4218 |
| பயில் | பயிலுதல் | 2051 |
| பயில்வு | நிறைவு | 2651 |
| பயின்று | செழித்து | 1570 |
| பரக்கழித்தவர் | இகழ்ந்து பழித்தவர், பெரும்பழி செய்பவர் | 6092 |
| பரக்கினர் | அலேந்து திரிந்தவர் | 620 |
| பரசு | மழுஆயுதம் | 2174 |
| பரசுபாணி | மழுஏந்திய கையன் | 2582 |
| பரம் | மேன்மை | 411 |
| | அளவு | 7420 |
| பரம் ஆய பான்மை | மேலாந்தன்மை | 2013 |
| பரம் கெடுத்து | பரம்-சுமை; பாவச்சுமையை அகற்றி | 6657 |
| பரம்பரர் | மிகவும் மேலானவர் | 1825 |
| பரம் முதல் ஆய தேவர் | யாவற்றிற்கும் யாவர்க்கும் அப்பால் ஆன முதற்கடவுள் | 4304 |
| பரமாபரமன் | மேலான பொருள்கள் எவற்றினும் மிக மேலான பொருளாயிருப்பவன் | 3449 |
| பரமேட்டி | பரமான நிலேயில் உள்ளவன் | 89 |
| பரல் ஆய்த்து | பருக்கைக் கற்களால் ஆகியது | 1390 |
| பரவனே | துதிக்கப்படுபவனே (பரவுதல்-துதித்தல்) | 5577 |
| பரவாதார் | துதிசெய்யாதவர்கள் | 596 |
| பரவு ஆர் | துதித்தல் (போற்றுதல்) பொருந்திய | 359 |
| பராபர | உயர்வுடையதும் தன்னின் உயர்ந்தது யாதுமற்றதுமான பொருளே | 3519 |
| பராமரியா | நடந்ததை ஆராய்ந்து | 8077 |
| பராவணம் | பராசக்தி வடிவம் | 2185 |
| பராவு சிவ ராக | அனேவரும் துதிக்கும் சிவனே, விரும்பத்தக்கவனே | 3519 |
| பரிகலம் | பிரம்மகபாலமாகிய பிச்சைப்பாத்திரம் | 2653 |
| பரிசாந்தம் | விரும்பிப் பூசும் சந்தனம் | 7426 |
| பரிசிற்பதி | தோணிபுரம்-சீகாழி | 2058 |
| பரிசு | அழகு | 699 |
| | தன்மை | 810 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ப | |
| பரித்துவிட்டாய் | தரித்துவிட்டாய் | 5005 |
| பரிதி | சூரியன் | 2106 |
| பரிந்தவன் | அன்பு காட்டியவன் | 1176 |
| பரிந்தார் | அன்புசெய்தார் | 489 |
| பரிபவம் | அவமானம் | 1462 |
| பரியர் நுண்ணியர் | பருமையினும் பருமையுடையவரும் நுண்மையினும் நுண்மை உடையவரும் ஆன சிவபெருமான் | 5508 |
| பரியவன் | அளவு கடந்தவன் | 7461 |
| பருக்கினவாறு | பருகச்செய்தமை | 5001 |
| பருக்கினர் | பருகினர் | 1455 |
| பருக்குஓடி | பருகுதல் போன்ற வேட்கையுடன் ஓடி | 7188 |
| பருக்கும் | பருகும் | 955 |
| பருங்கி | பருகி | 3539 |
| | பறித்து | 7397 |
| பருத்து | பருந்து என்பதன் வலித்தல் | 1816 |
| பருதியான் | சூரியன் | 4072 |
| பருப்பதம் | பர்வதம்-மலை; மேருமலை | 2502 |
| | ஸ்ரீசைலம் எனப்படும் திருப்பருப்பதம் | 4727 |
| பருப்பனை | பருத்த பனைமரம் போன்ற கையை உடையானை, பருமை உடையவனை | 4892 |
| பரு விலா(க) | பெரிய வில்லாக | 2944 |
| பருவி விச்சி | பரந்தும் திணை விளைக்கப்பட்டும் உள்ள பெரிய விச்சிமலைச்சாரல் | 8018 |
| பல் அயங்கு | பற்கள் நிலைகுலைந்த | 2283 |
| ப்ல் அரும்பு | பல் போன்ற அரும்பு | 2116 |
| பல் ஆர் பகுவாய் | பல் நிரம்பிய பிளந்த வாய் | 500 |
| பல் கண் கொண்ட கண்டகனை | சூரியனுடைய பல்லையும் பகனுடைய கண்ணையும் பறித்த கொடியவனை | 7144 |
| பல்லவம் | தளிர் | 652 |
| பல்லவன்ஊர் | காஞ்சி | 7453 |
| பலகின் ஆர் | பலகு-பலகை (அல்லது பறைவகை); அதனோடு சேர்ந்த | 3409 |
| பலம் இலா | நோன்புகளால் இளைத்து உடல் வலிமை குன்றிய (சமணர்) | 4556 |
| பலி | பிச்சை | 2 |
| | பூசை | 2206 |
| | நிவேதனம் | 2717 |
| பலிவிழா | பிக்ஷாடன உற்சவம் | 1977 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ப | |
| பவந்த நாதர் | பவந்தம்-பிரபந்தம்-தோத்திர நூல்; அத்தகைய நூல் பாடுதற்கு உரிய ஒரே தலைவர் | 6384 |
| பவந்திட்ட | தோன்றிய | 4484 |
| பவர் | கொடி, திரள் | 3759 |
| பவனம் | காற்று, மூச்சுக்காற்று | 2324 |
| பழனம் | வயல் | 647 |
| பழனை | பழையனூர்-திருவாலங்காட்டிற்கு அருகே உள்ளது | 4828 |
| பழிபாடு | பழிக்கப்படுதல் | 1679 |
| பழியாமை | இழிவு நிகழாதவாறு | 1639 |
| பள்குவார் | அஞ்சுவார் | 4621 |
| பளகர்கள் | பாவிகள் | 3148 |
| பளகீர் | பொய்ம்மையுடைய பூதங்களே | 6525 |
| பளகு | பொய்ம்மை, குற்றம் | 4772 |
| பற்று(க) | பற்றுக்கோடாக | 864 |
| பற்றிற்று | பற்றியது | 1260 |
| பறண்டை | பறவைவகை | 5060 |
| பறப்பை | வேள்விச்சாலை | 865 |
| பறப்பையும் பசுவும் படுத்து | பறவைவடிவில் வேள்வித் தீ இடும் இடத்தினை அமைத்து, யூபத்தம்பத்தில் பசுவையும் கட்டி | 5913 |
| பறி | உடம்பு | 8028 |
| | ஆகுபெயரால், வயிறு | 8030 |
| பறிதலை | கையாலேயே பிடுங்கி உரோமம் அகற்றப்பட்ட தலை | 3007 |
| பறைதல் | தேய்த்தல், அழித்தல் | 1531 |
| பறைந்து | மனம் வருந்தி | 5931 |
| பறை நவின்ற பாடல் | பறையின் ஒலியோடு கூடி இயலும் பாடல் | 2083 |
| பறையும் | நீங்கும் | 184 |
| பன் | பலமுறை சொல்லுதல் | 2605 |
| பன்னவே | பலமுறை சொல்லவே | 600 |
| பன்னிரு வேலி | (ஈராறு வேலி) திருப்புன்கூருக்கு மேற்கே ஒரு கல் தூரத்தில் உள்ளது | 7796 |
| பனம் மணி அரவு அரி | பனம்-பணம்; படங்களில் மணியுடைய ஆதிசேடன்மீது உள்ள திருமால் | 1246 |
| பனி கால் | குளிரைச் சொரிகின்ற | 2801 |
| பனித்த சடை | குளிர்ந்த சடை | 4952 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ப | |
| பனிநீரால் பரவை செய | நீர்த்துளிகளால் கடல்செய்ய | 4214 |
| (பாடபேதம்) பனிநீரால் பாவை செய | நீர்த்துளிகளால் பதுமைசெய்ய | 4214 |
| பனுவல் | நூல், பாசுரம் | 569 |
| பனை | மிகுதி, ஒருவகை மீன் | 1278 |
| | யானை | 5468 |
| | பா | |
| பா | பா என்னும் ஓசை | 1101 |
| பாக்க | பார்க்க, நினைக்க | 5589 |
| பாக்கியம் | புண்ணியம் | 5867 |
| பாகம் | பகுத்துக் கொடுப்பது | 1790 |
| பாகு | குழம்பு | 6383 |
| | சோறு | 6607 |
| பாங்கர் | சுவாமி-இறைவன் | 5543 |
| பாங்கன் | தோழன்-இறைவன் | 1157 |
| பாங்கனை | நல்லிடத்தானை | 2877 |
| பாங்கு இலா | நற்குணம் இல்லாத | 816 |
| பாசடை | பசுமையான இலைகள் | 3919 |
| பாசி | நீர்ப்பாசி | 2120 |
| பாசிப் பல் | பாசி பிடித்த பற்கள் | 4556 |
| பாசு அற்றவர் | பாசு: பாசம் என்பதன் கடைக்குறை; பாசம் நீங்கிய மெய்யறிவு உடையோர் | 7749 |
| பாசுபத இச்சை | பாசுபத வேடத்தில் விருப்பம் | 3577 |
| பாசுபதர் | சைவருள் ஒருவகையினர் | 715 |
| பாசுபதன் | சிவபெருமான் | 1052 |
| பாசுரவினை தரு பளகர்கள் | (பயனற்ற)பாட்டுக்களைப் பாடும் செயலையுடைய பாவிகள் | 3710 |
| பாட்டிக்கொண்டு | பாடச்செய்துகொண்டு | 7417 |
| பாடகம் | காலணிவகை | 65 |
| பாடத்தார் | வேதமாகிய மூலபாடம் போற்றுபவர் | 5356 |
| பாடம் கொள் | மனப்பாடமான, ஒளி பொருந்திய | 6104 |
| பாடர் | பாடல் | 7879 |
| பாடலன் | பாடலை உடையவன் | 1080 |
| பாடலார் | பாடல் பாடுவோர் | 991 |
| பாடலீர் | பாடுதலை உடையீர் | 2071 |
| பாடு | துன்பம் | 818 |
| | பக்கம் | 2654 |
| பாண் | பாட்டு | 518 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | பா | |
| பாண் அஞ்சுமுன் இழந்து | அஞ்சுமுன் பாண் இழந்து-உயிர்போய்விடுமோ என்று அஞ்சுமுன்னரே சாமவேதமாகிய கீதத்தினைப் பாடுதலை நீங்கி | 4511 |
| பாண்டு | 'பண்டு' என்றதன் நீட்டல்; முன்பு | 7767 |
| பாண் நிலாவிய | பாட்டிலே விளங்குகின்ற | 2817 |
| பாண் பேசி | இசை பாடி | 7704 |
| பாண்முக வண்டினம் | பாடும்வண்டுகள் | 3914 |
| பாணன் | பாணபத்திரன் | 675 |
| பாணி | பாட்டு | 1093 |
| | கடல்நீர் | 1382 |
| | கங்கை | 2464 |
| பாணி அமர் பூண | கையால் செய்யும் மற்போர் செய்யவந்தபோது | 3518 |
| பாணி செய்ய | தாளம் போட | 4392 |
| பாதங்கநீறு ஏற்றார் | (பதங்கம்-பாதங்கம்)பொடி நீற்றைப் பூசியவர் | 6351 |
| பாதம் கம் நீறு ஏற்றார் | கால்முதல் தலைவரை நீறு பூசியவர் | 6351 |
| பாதம் நிகழ்ந்தவர் | பாதத்தை நிகழ்பொருளாகக் கண்டோர் | 1224 |
| பாதாள்(பாதாளீச்சுரம்) | பாம்பணி என்னும் தலம்-ஆதிசேடன் தனஞ்சயனுகை வந்து பூசித்த தலம்; அன்னமகாராஜா, சொர்ணமகாராஜா என்போர் இருவர் அன்னமும் சொர்ணமும் கொடுத்து வழிபட்ட தலம். அங்கு மூவர் பிம்பங்களும் உண்டு. | 1163 |
| பாதாளக் கருவை | கீழ் உலகிற்கும் அடிநிலை போன்றவனை | 6531 |
| பாம்பு இரண்டு | இராகு, கேது என்னும் இரு கோள்கள் | 2388 |
| பாய் | பரவி | 2067 |
| பாய் கனி | பரவிய கனி | 1072 |
| பாய் திமிலர் | கடலில் பாயும் வலைஞர் (திமில்-மீன் பிடிக்கும் படகு) | 3504 |
| பாயவன் | பரவியவன் | 2949 |
| பாயன(ம்)நாடு | பாசனம் உள்ள வளமான நாடு | 4494 |
| பாயினாய் | பரவிநின்றாய் | 2306 |
| பார் ஆழி வட்டம் | உருளை வடிவான மண்ணுலகம் | 3380 |
| பார்த்திவன் | மன்னன்-பாண்டியன் | 3346 |
| பார்ப்பதி | பார்வதி | 1495 |
| பார்ப் பதி | உலக நாயகன் | 7692 |
| பார்ப்பாரைப் பரிசழிப்பார் | தாருகாவனத்து இருடிகளைச் சீர்குலைப்பவர் | 6343 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | பா | |
| பார்ப்பு அரிது | பார்ப்பதற்கு அரிது | 6249 |
| பாரமும் பூண்பர் | தம்மிடம் அன்பு கொண்டவர்களைக் காக்கும் பொறுப்பையும் ஏற்பார் | 4336 |
| பாரல் | நீளுதல் | 1481 |
| பாரல் வாய் | நீண்ட அலகு | 3475 |
| பாரிடம் | (பரிவாரம்) பூதம் | 416 |
| பாரித்த | பரவச்செய்த | 5202 |
| பால் | இடப்பக்கம் | 2531 |
| பால் ஆடு | பாற்கடலில் இருக்கும் | 2429 |
| பால் உந்து உறுதிரள் | பாலைக் கடைந்து பெற்ற திரண்ட வெண்ணெய் | 163 |
| பால்நெய் ஐந்து | பஞ்சகவ்வியம் | 1562 |
| பால் பட | பால்போன்ற வெண்ணிறம் தோன்ற | 3079 |
| பால் வழிபாடு செய் பாலற்கு (இன்பம்) கொடுத்தனர் | தன் பக்கத்திலேயே இருந்து பூசை செய்த சிறுவனை மார்க்கண்டேயனுக்கு இன்பம் தந்தவர் | 2896 |
| பாலது | அருகில் உள்ளது | 1014 |
| பால மதி | இளம்பிறை | 484 |
| பால வண்ணன் | குழந்தையாகும் தன்மை உடையவன் | 1549 |
| பாலன் | உபமன்யு | 443 |
| | மார்க்கண்டேயன் | 877 |
| பாலாவி | திருக்கேதீச்சுரத்துத் தீர்த்தம்; இது ஒரு பெரிய குளம் | 2636 |
| பாலின்கீழ் நெய் | பாலில் உள்ள வெண்ணெய் போல மறைந்துள்ள இறைவன் | 4528 |
| பாலை அன்ன நீறு | பால் போலும் திருநீறு | 2434 |
| பாவகம் | மெய் அல்லாத் தன்மை | 1491 |
| | நினைவு-எண்ணுதல் | 8090 |
| பாவணத் தமிழ் | பாவழகு மிக்க தமிழ்ப்பாட்டுக்கள் | 7286 |
| பா வணமா(க) | பாடும் சாமவேதமாக | 1466 |
| பாவனை | விருப்பம் | 1053 |
| | பரவியுள்ளவனை | 6449 |
| பாவி | பாவிய-பரவிய | 5323 |
| பாவியாது | நினைக்காமல் | 1761 |
| பாவினான் | பரவியவன் | 1563 |
| | பற்றுக்கொளச் செய்தவன் | 3347 |
| பாவைக் குரவம் | பாவை போல பூக்கள் மலரும் குரவமரம் | 2122 |
| பாழி | குகை | 1886 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | பா | |
| பாழிமை | வலிமை-அடிமைத்திறத்தின் உறைப்பு | 6142 |
| பாழியார் | ஊழியிறுதியில் உலகத்தைச் சங்கரிப்பவர், அனைத்தும் கடந்த பெருவெளியில் இருப்பவர் | 4527 |
| பாற்குளம் | பட்டீச்சுரத்துக்கு ஈசான மூலையில் (வடகிழக்கில்) ஒரு கல் தூரத்தில் உள்ளது; இதன் நீர் வெண்மை, சுவை, குளிர்ச்சி உடையது. திருச்சத்திமுற்றத்து சுவாமி ரதசப்தமி தினத்தில் தீர்த்தம் கொடுக்கும் இடம் இது. | 6381 |
| பாற்ற | நீக்க | 4172 |
| பாற்றுவர் | நீக்குபவர் | 16 |
| பாறிட | கலைந்து ஓட | 82 |
| பாறி வீழ | சிதறி விழ | 4827 |
| பாறு | வெடிப்பு, பருந்து | 180 |
| பாறு ஆர் | வெடித்துள்ள, பருந்து விரும்பும் | 7501 |
| பாறு உடைய படுதலை | இறந்தோருடைய வெடித்த தலை | 6346 |
| பாறு ஏறு | உலர்ந்த | 4235 |
| பாறு புத்தர் | தோற்று ஓடிய பௌத்தர்கள் | 2365 |
| பான் அமர் ஏனம் | பான்: பத்து; பத்து அவதாரங்களில் ஒன்றான பன்றி | 4715 |
| பானல் | நீலோற்பல மலர் | 609 |
| பானவனை | பானமாகப் பருகும்படி இருப்பவனை | 6953 |
| | பி | |
| பிச்சம் | பிஞ்சம்-மயிற்பீலி | 838 |
| பிச்சாடல் | பித்துக்கொண்டு ஆடுதல், பிச்சை ஏற்றல் | 6758 |
| பிச்சி | பித்துக் கொண்டவள் | 6512 |
| பிஞ்ஞகன் | சிவபெருமான், அழித்தற்கடவுள் | 559 |
| பிட்டர் | பித்தர்கள் | 752 |
| | புறச்சமயத்தைச் சேர்ந்தவர்கள் | 3231 |
| | ஆசாரம் தவறியவர்கள் (பிரஷ்டர்) | 3786 |
| பிட்டான் | ஒடித்தவன் | 148 |
| பிடக்கு | பிடகம் (தொகுப்பு). புத்தர் கூறிய உரைகளின் தொகுப்புக்கள் மூன்றும் திரிபிடகம் எனப்படும்; அவை (1)சூத்திரபிடகம் (2)விநயபிடகம் (3)அபிதர்மபிடகம் என்பன. | 139 |
| பிடக்குஉரை | திரிபிடக நூல்களின் பேச்சு; பிருதக்குரை; வேறான-தள்ளத்தக்க-உரைகள் எனலும் ஆம். | 1795 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | பி | |
| பிடகர் நூன்மை | புத்தர் நூலாகிய திரிபிடகம் என்ற நூலின் பொருள் | 2952 |
| பிடகுஉரை | 'பிடக்குரை' காண்க | 2996 |
| பிடவம் | வாத்தியம் | 6352 |
| பிண்டம் | ஊன்உடம்பு, கருத்திரள் | 985 |
| பிண்டி | அசோகு | 502 |
| பிண்டிபாலம் | பீலி கட்டிய ஓர்ஆயுதம் | 2592 |
| பிண்டியார் | சமணர் | 720 |
| பிணக்குவார் | மாறுபடச் செய்வார் | 5392 |
| பிணம் புல்கு பீறல் குரம்பை | பிணமாவதற்குரிய ஓட்டைக் குடிசை-உடம்பு | 6377 |
| பிணி | பிணிப்பு | 2444 |
| | பாசம் | 2547 |
| பிணிந்தார் பொடி | இறந்தோரின் சாம்பல், கண்டோர் மனத்தைப் பிணித்து ஆர்ந்த பொடி | 4172 |
| பிணை | அன்பு | 205 |
| | பிணைந்த | 349 |
| | பெண்மான் | 820 |
| | புணை | 4282 |
| பிணைத் தேரை வால் | தேரை பிறக்கும்போது அதனுடன் ஒட்டியிருந்த வால் போன்ற பகுதி, தேரை முழுவளர்ச்சி பெறும்போது மறைந்துவிடும். அதுபோலவே அரசாளுதல் போன்ற பெருமை யாவும் கடைசிக்காலத்தில் மறையும். | 7591 |
| பிணைந்து | இணைந்து | 1445 |
| பிணை பயின்று | இரண்டிரண்டாக இணைந்து | 4698 |
| பிணையர் | கையில் மான் உடையவர் | 3124 |
| பிணையல் | பெண்மான் | 844 |
| | மேவுதல் | 1115 |
| பித்தர் பித்தன் | பெரும்பித்தன் | 2537 |
| பிதக்க | நசுங்க, பிருதக்காக (வேறுஆக) | 5401 |
| பிதிகாரம் | பிரதிகாரம்-மாற்று உபாயம், போக்கீடு | 4303 |
| பிதிர் மதியவர் | கலையை உடைய மதி சூடியவர் | 3712 |
| பிதிர்முகன் | காலனுக்கு ஒரு பெயர் | 4471 |
| பியல் | தோள் | 2387 |
| பியற்கு | பிடரியில் | 964 |
| பிரசம் | தேன் | 1400 |
| பிரட்டே திரிவார் | தனியே ஒதுக்கப்பட்ட இடங்களில் திரிபவர்கள் | 3888 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | **பி** | |
| பிரம்புரி | நெல்வகை | 4373 |
| பிரமன் போலும் திறலவர் | பிரமனைப் போன்ற ஒளி படைத்த அந்தணர் | 163 |
| பிரமாணம் | ஆதாரமாகக் காட்டும் சான்று | 7706 |
| பிரளயங்கள் | உலகமெல்லாம் ஒடுங்கும் காலங்கள் | 6697 |
| பிராந்தர் | மயக்கம் கொண்டவர் | 292 |
| பிரார்த்தித்தார்க்கு | வேண்டிக்கொண்டவர்க்கு | 6250 |
| பிரிதியானை | பிரீதி-விருப்பம்; விருப்பம் உடையவனை | 6167 |
| பில்க | சிந்த | 4452 |
| பில்கு | துளிக்கும் | 2583 |
| பில்கும் | சிதறும் | 2676 |
| பிலம் தரு வாய் | குகை போன்ற வாய் | 8234 |
| பிலயம் | பிரளயம் | 2240 |
| | கங்கை வெள்ளம் | 5855 |
| பிலிற்றும் | துளிக்கும் | 2238 |
| பிழைத்த | காணாமற்போன | 746 |
| பிள்ளை துள்ளி | கிளிப்பிள்ளைகள் துள்ள | 2706 |
| பிள்ளைமதி | பிறைச்சந்திரன் | 2191 |
| பிள்ளை வான்பிறை | இளம்பிறை | 3201 |
| பிறவு | பிறப்பு | 1185 |
| | பிறகு; உரிய நேரத்தின் பிற்பாடு | 7748 |
| பிறவேன் ஆகிலும் | நான் வேறு கருத்துடையேனாயினும் | 7381 |
| பிறழ | மாறிமாறி ஒளிசெய்ய | 803 |
| பிறைக் கணிச் சடை | பிறையைக் கண்ணியாகச் சூடிய சடை | 5850 |
| பிறைப் பிளவு | பிறைத் துண்டம் | 1820 |
| பின் இரக்கம் செய்வான் | (தக்கயாகத்தில்) நிருதியின் தவற்றைப் பொறுத்துப் பின்னர் அவனுக்கு இரங்கித் திசைக்காவலன் பதவியை அளித்தவன் | 6886 |
| பின் தொத்த | முதுகில் தாழ்ந்த | 2240 |
| பின்பினல் | பின்பக்கத்தில் | 2304 |
| பின்றியும் | பிந்தியும் | 2173 |
| பின்னை | மறுமை | 2780 |
| | **பீ** | |
| பீடர் | பெருமை உடையவர் | 3120 |
| பீடு அரவம் | பெரிய ஓசை | 3685 |
| பீடு அல் | பெருமையுடைய இரவு | 2192 |
| பீடு உடையார் | பெருமை உடைய சிவனடியார் | 2193 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | பீ | |
| பீர் | (பால்) சுரப்பு | 521 |
| பீர் கொண்டது | பசலைநோய் உற்றமை | 7611 |
| பீழ்ந்த | ஒடித்த | 7823 |
| பீழ்ந்து | பிடுங்கி | 544 |
| பீறல் கூறை | கிழிந்த துணி | 7736 |
| பீறி | கிழித்து | 6178 |
| | பு | |
| புக்கரம் | (புட்கரம்) தீர்த்தம் | 2267 |
| புகல் | அடைக்கலம் | 680 |
| | விருப்பம் | 1421 |
| | சிவகதி | 1544 |
| புகல் இலி | தனக்குப்புகலாக யாரும் இல்லாத, தானே அனைவர்க்கும் புகலான சிவபெருமான் | 4685 |
| புகல்லி | புகலி-சீகாழி | 1469 |
| புகழ் ஊர்தி | புகழ் பெற்ற வாகனம்-இடபம் | 4343 |
| புகு வாய் | சிவபெருமானைக் காண்பதற்குப் புகலாம் இடம் | 2121 |
| புகை | ஓமப்புகை | 1277 |
| புங்கம் எனப் படர் | உயர்வு எனவே கருதப்படும் | 3068 |
| புட்டத்தே இட்டு | பின்புறம் பூசி | 1368 |
| புடை | பக்கம் | 581 |
| புடைபட்டு | சார்ந்து | 3029 |
| புடை படுவார் | அருகில் வந்து பணிபவர் | 76 |
| புண்டரிகத்தோன் | பிரமன் | 1053 |
| புண்டரிகப் பொதும்பில் | இறைவன் திருவடியாகிய தாமரைக்காட்டில் | 6000 |
| புண்டரிகம் | செந்தாமரை | 2911 |
| புணர்வு | உமையோடு கூடுதல் | 70 |
| புணரி | கடல் | 703 |
| புத்தணம் அது | அதுவே பௌத்தசமயக் கொள்கை | 3217 |
| புத்தேள் | தேவர் | 2268 |
| புதல் | புதர் | 1875 |
| புது வீ | புதிய மலர் | 7650 |
| புயங்கம் | (புஜங்கம்)பாம்பு | 576 |
| புயங்கமங்கள் | பாமபுகள் | 1361 |
| புயங்க ராக மாநடத்தன் | பாம்புநடனத்தில் விருப்பம் உடையவன் | 576 |
| புயங்கன் | பாம்பு அணிந்தவன் | 3353 |
| புயம் கம் ஐஞ்ஞான்கும் பத்தும் | தோள்கள் இருபதும் தலை பத்தும் | 4807 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | பு | |
| புயல் | மேகம் | 12 |
| | மேகம் போன்ற ஒப்புரவு, ஆகுபெயரால் | 2693 |
| புயல் அன மிடறு | மேகம் போல் கரிய கழுத்து | 2823 |
| புயல் கால் ஒளி மின்இடை | மேகம் வெளிவிடும் ஒளியான மின்னல் போன்ற இடை | 2818 |
| புரட்டாள் | புரட்டித் தள்ளமாட்டாள் | 7217 |
| புரத்தார் | வரிசையான முப்புரங்கள் | 114 |
| புரந்தரன் | இந்திரன் | 2218 |
| புரந்தரன் ஊர் | வேணுபுரம்-சீகாழி | 2266 |
| புரவு உடையார்கள் | ஆளுதல் உடையவர்கள் | 7853 |
| புரளம் உறும் | புரளுதலை அடைகின்ற | 3520 |
| புராணனுர் | அநாதிப் பழைமை உடையவர் | 1536 |
| புராதன | மிகப் பழமையானவனே | 3519 |
| புரி | புரிதல்-விரும்புதல் | 2673 |
| புரிச்சந்திரம் | சந்திரபுரி-பிறையனூர் | 6772 |
| புரிசை | மதில் | 700 |
| புரித்தானை | பிரித்து உணர்த்தியவனை | 4238 |
| புரிநூல் | பூணூல் | 733 |
| புரிநூலார் | அந்தணர் | 2065 |
| புரியவர் | போதலை உடையவர் | 3005 |
| புரிவு | அன்பு | 131 |
| புரை | உயர்வு | 197 |
| | குற்றம் | 427 |
| புரைக்கும் | உயரும் | 326 |
| புரை கடிந்து ஓங்கிய | மாசு நீக்கி உயர்ந்த | 2886 |
| புரைப்பு | குற்றம் | 5697 |
| புரைய | ஒப்ப | 833 |
| புரையாய் | உள்ளீடு உள்ள பொருளாய் (கனம் என்பதற்கு மறுதலை) | 6367 |
| புரோதயம் | உதயத்திற்கு முன்னர் | 2705 |
| புல்கு | நிறைந்த, தழுவிய | 57 |
| | போலும் | 853 |
| புல்லம் | எருது | 1741 |
| | புன்மை | 5560 |
| புல்லார் | பகைவர் | 2250 |
| புல்லி | அடைந்து | 7336 |
| புல்வாய்க் கணம் | மான்கூட்டம் | 7747 |
| புலம் | ஞானவடிவம் | 1668 |
| | சிவஞானம் | 2056 |
| | வயல் | 2579 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | பு | |
| புலம்ப | ஒலிக்க | 771 |
| புலவம் | வயற்பரப்பு | 2719 |
| புலிஅதள் இடை | புலித்தோலை உடுத்த இடுப்பு | 201 |
| புலி செங்கயல் ஆனையினன் | தன் பொறியில் புலி, மீன், யானை மூன்றுமுடைய கோச்செங்கணன் | 2771 |
| புலை | இழிவான எண்ணம், சொல், செயல் ஆகியன | 164 |
| புவம் | ஆகாயம் | 217 |
| புவ லோகம் | மேல் உலகங்கள் | 6943 |
| புவனி | உலகம் | 1049 |
| | உலகத் தலைவியான சக்தி | 7293 |
| புவி திகழ் சுரர் | பூமியில் உள்ள தேவர்-அந்தணர் | 215 |
| புழுக்கல் | சோறு | 1975 |
| புழுவுக்கும் குணம் நான்கு | (1) உணவுபெற முயலுதல் (2) உண்ணல் (3) உறங்கல் (4) இன்பதுன்ப நுகர்வு என்ற நான்கும் புழுவுக்கும் உள்ள இயல்புகளே. | 6136 |
| புழை நெடுங்கை நன்மா | துளையுடைய நெடிய துதிக்கையை உடைய யானை | 3203 |
| புள் | பறவை | 18 |
| | கொக்குவடிவுடைய பகாசுரன் | 456 |
| | கருடன் | 1947 |
| புள் அரையன் | அரையன்-அரசன்; பறவைகளின் அரசனை கருடன் | 6519 |
| புள்ளி | நண்டு | 1742 |
| புள்ளுவர் | வஞ்சகர் | 6369 |
| புளம் | புலம்-உடம்பு | 1789 |
| புளித் தட்டையர் | புளித்த பழைய சோற்றைத் தட்டில் இட்டு உண்ணும் சமணர் | 1150 |
| புளை | புழை-தொளை | 4700 |
| புளைகயப் போர்வை | துளையுடைய கையினை உடைய யானையின் தோலாகிய உடை | 4700 |
| புற்கென்று | பொலிவிழந்து | 7746 |
| புற்றன் | புற்றுவடிவில் உள்ள வன்மீகநாதன் | 1583 |
| புற்று ஏறி உணங்குவார் | உடம்பின்மீது புற்றுத்தோன்றி வளரும் வகையில், பட்டினியாகப் பலநாள் மண்மீது கிடக்கும் கடுமையான நோன்புடைய சமணத்துறவியர் | 3490 |
| புற | புறவு-முல்லைநிலம் | 2385 |
| புறணி | உப்பங்கழிக்கரை | 5324 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | பு | |
| புறம்கண்டார் | வென்றவர் | 2064 |
| புறம் நின்று ஓரார் | சமயத்திற்குப் புறம்பே செல்லாமல் அகச்சமயம் சார்ந்த சிவனடியார் | 2067 |
| புறம் பயத்து உறை | வெளியில் அச்சத்துடன் சூழும் | 7588 |
| புறம்பயம் | திருப்புறம்பயம் என்னும் தலம் | 7588 |
| புறம் பூசல் அடிப்ப | கரைமேல் ஓசையுடன் மோத | 344 |
| புறவம் | சீகாழி | 798 |
| புறவன் எதிர் நிறை நிலவு பொறையன் | புறாவிற்கு உரியவனை வேடன் எதிரே, புறாவின் எடைக்கு நிறைஆகும் வகையில் தன் உடலையே அரிந்து இட்ட சிபிச்சக்கிரவர்த்தி | 3521 |
| புறவு | முல்லைநிலம் | 199 |
| புன்சடை | செஞ்சடை | 2548 |
| புனல் | குளிர்ச்சி | 2836 |
| புனல் துறந்த | நீராடாமை உடைய | 2068 |
| புனல் படப்பை | நீர்ப்பரப்பு | 127 |
| புனலும் கங்கை | கங்கைப்புனலும் | 6896 |
| புனை | நீர் | 2190 |
| புனைக்கின்றேன் | பெருக்குகின்றேன் | 4702 |
| புனை செய்வது | இயல்பினை வேறுபடுத்துவது | 479 |
| புனைவன் | புனைபவன் | 196 |
| | பூ | |
| பூ | மலர் | 1360 |
| | பூமி, மண் | 1363 |
| பூஉளான் | பிரமன் | 2831 |
| பூக்கமலத்தோன் | பிரமன் | 2266 |
| பூகம் | கமுகு(பாக்குமரம்) | 37 |
| பூசத்தினர் | பூசுதலை யுடையார் | 7424 |
| பூசநீர் | பூசநாள் நீராட்டம் | 5866 |
| பூசம் | பூசநாள்-தைப்பூசம் | 342 |
| பூசல் | ஆரவாரம் | 2383 |
| பூசல் துடி பூசல் அறா | வேடருடைய போர்ப்பறையின் சத்தம் ஒழியாத | 7749 |
| பூசனை | பூசிக்கப்பட்டவனை | 4236 |
| பூசி | பூசியவன் | 2737 |
| பூசுரன் | அந்தணன் | 75 |
| பூட்சி | உடம்பு | 6810 |
| பூணல் செய்து | அலங்காரம் செய்து | 2657 |
| பூணி | (அன்பு) பூண்டவன் | 5571 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | பூ | |
| பூணி பூண்டு | எருதுகளைப் பூட்டி | 7577 |
| பூதமும் அஞ்ச | (அஞ்சு-அ) பூதங்களும் ஐந்தே | 3035 |
| பூதி | செல்வம் | 76 |
| | விபூதி-திருநீறு | 5033 |
| பூதியர் | செல்வம் உடையார் | 76 |
| பூந்துகிலாள் | மெல்லிய பட்டுடை அணிந்த பார்வதிதேவி | 4191 |
| பூப் பிணை | மலர்மாலை | 4282 |
| பூம் படுகல் | மலர்ப் பொய்கை | 2868 |
| பூமகன் | பிரமன் | 2259 |
| பூரித்து | நிறைத்து | 1569 |
| பூவினன் | பிரமன் | 3230 |
| பூவை | நாகணவாய்ப்புள் | 1835 |
| பூவையாய் | நாகணவாய்ப்புள்ளைப் போல ஆராய்ச்சி இன்றிப் பிறர் கூறுவதையே தாமும் கூறிக்கொண்டு | 4218 |
| பூழ்தி | புழுதி | 2707 |
| பூழியன் | பாண்டியன் | 2773 |
| பூளை | பூவகை | 3258 |
| | பெ | |
| பெங்கை | பெங்கம்-பங்கம்-ஒழுக்கக்கேடு | 880 |
| பெட்டன் ஆகிலும் | தவறினேன் ஆயினும் | 7786 |
| பெடை | பெட்டை-பெண்பறவை | 7 |
| பெண் | ஈண்டு, இரதியைக் குறிக்கும் | 886 |
| பெண்ணன் | பெண்ணைப் பாகமாக உடையவன் | 1640 |
| பெண்ணை | பனை | 1100 |
| | பெண்ணை என்ற ஆறு | 2554 |
| பெண்நயம் கொள் திருமேனி | அர்த்தநாரீசுவரர் | 2280 |
| பெண் போத்தன் | காளியை வென்றவன் | 5875 |
| பெணை | பனை | 1987 |
| பெய்து | கையில்கொண்டு | 2096 |
| பெயர் சாய்கெட | புகழ் குறைந்து அழிய | 2907 |
| பெயரும்பொழுது | மீண்டும் வரும்பொழுது | 2114 |
| பெயல் | கங்கை | 679 |
| பெயல்வு | கருணை மழை | 978 |
| பெயலர் | மழை நீரில் நின்று தவம்செய்வோர் | 1388 |
| பெரிய இன்பத் துறவி | துறவி-துறவு; வீடுபேறாகிய பேரின்பம் பயக்கும் துறவறம் | 2328 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | பெ | |
| பெருக்கு | ஆக்கம் | 1098 |
| பெருக்கும் | பெருகும் | 2109 |
| பெருந் திருமகள் | கங்காதேவி | 2632 |
| பெருந்துயர்ப் பிணக்கு | பிறவிப் பெரும்பகை | 2575 |
| பெருநெறி | வீடுபேறு | 11 |
| பெரும் புலர் காலே | விடியற்கருக்கலில்-இரவின் நான்காவது பாகத்தில் | 4197 |
| பெருமைக்கள் | பெருமைகள் | 2418 |
| பெருவர் | பெருமை உடையவர் | 4128 |
| பெற்றம் | இடபம் | 2 |
| பெற்றம் ஏறு | ஆண்ஏறு-இடபம் | 7869 |
| பெற்றர் | பெற்றத்தை உடையவர் | 3123 |
| பெற்றி | தன்மை | 2194 |
| பெற்றிமை | முறைமை | 1471 |
| பெற்று | பெற்றம் | 52 |
| | பே | |
| பேசு | பேச்சு என்றதன் இடைக்குறை | 3168 |
| பேடு அலி ஆணர் | பெண் அலி ஆண் ஆனவர் | 4866 |
| பேணுதல் | விரும்புதல் | 9 |
| பேய்க்கு ஆடல் | பேய்களின் பாட்டுக்கு ஏற்ப ஆடுதல் | 1907 |
| பேய்த்தொழிலாட்டி | பேய்களின் தொழிலை ஆள்பவள்-பார்வதி | 5095 |
| பேர்த்தவர் | நடமாடச்செய்தவர் | 1264 |
| பேர்தல் செய்தான் | பெயரச் செய்தான் | 1118 |
| பேர் வணம் | சிவனது திருப்பெயராகிய தன்மை | 3039 |
| பேரகலம் | பெரியகலம் என்றதன் மரூஉ; மழு | 7337 |
| பேராத சோதி | நீங்காத ஒளியுடைய கௌத்துப மணி | 2423 |
| பேராவாணி விண்ணவனே | வாணி-சொல்-ஓசை; இது விண்ணினது குணம; இக்குணம் என்றுமே நீங்காத ஆகாயமாய் இருப்பவன் | 6860 |
| பேரி முழங்க | பேரிவாத்தியம் போல் முழங்க | 1874 |
| பேரும்பொழுது | இடம்விட்டு எழும்போது | 2114 |
| பேழ்கணிக்க | மருளும்படி | 8241 |
| பேழ்வாய் | பிளந்த வாய் | 70 |
| பேழை | பெருமை | 2632 |
| பேறு | வீடுபேறு | 995 |
| | பை | |
| பை | பாம்பின் படம் | 267 |
| பைக்கையும் பாந்தி விழித்தலும் | படத்தை விரித்தலும் பதுங்கி விழித்தலும் | 5021 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | **பை** | |
| பைங்கண் ஏற்றூர் பலி ஏற்றூர் | பசிய கண்களையுடைய இடபத்தையுடைய சிவபெருமான் பிச்சையும் ஏற்றூர். | 6351 |
| பைதல் பிணக்குழைக் காளி | சிறுகுழந்தையின் பிணத்தைக் காதணியாகக் கொண்ட காளி | 5136 |
| பைந்து | பந்து | 1916 |
| பைம் மாலும் அரவா | படமுடைய பாம்பை உடையவனே | 6190 |
| பைய | மெல்ல | 16 |
| | பசிய | 2047 |
| | **பொ** | |
| பொக்கணத்த | துணிப்பையில் உள்ள | 7116 |
| பொக்கணம் | துணிப்பை | 813 |
| பொக்கம் | பொய் | 793 |
| | பொற்பு | 1939 |
| | வஞ்சகம் | 6177 |
| பொக்கர்கள் | பொய்யர்கள் | 3458 |
| பொக்கன் | பொலிவுடையவன், செறிவுடையோன் | 7116 |
| பொக்கை | நிலையில்லாத | 7899 |
| பொச்சம் | பொய் | 3601 |
| பொட்ட | விரைவாக | 5660 |
| பொட்ட நூக்கி | விரைவில் தள்ளிக்கொண்டு | 6091 |
| பொடிக்கொண்டு | அழிந்து தூள்தூளாக | 421 |
| பொடிபடும் உருவினர் | திருநீறு பூசிய வடிவமுடையவர் | 3726 |
| பொத்தில் | பொந்தில் | 7583 |
| பொத்தினன் | அணைத்துக்கொண்டவன் | 2950 |
| பொத்து | பொந்து | 167 |
| | பொள்ளல்-குற்றம்குறைகள் | 7302 |
| பொத்தை | உடம்பு | 4838 |
| பொதி | சுமை, உடல் | 8035 |
| பொதியும் | மூடுகின்ற | 1049 |
| பொதுளிய | செறிந்த | 1304 |
| பொந்தை | (ஒன்பது) பொந்தினையுடைய உடம்பு | 6226 |
| பொய்கை | பொய்க்கை-பொய் கூறுதல் | 7836 |
| பொய்கைப் பா | பொய்கைப் பரப்பு | 2044 |
| பொய்ச்சார் | பொய்த்தார்-இறைவனிடம் அன்பு செய்யாமல் பொய்த்தவர்; பகைவர் | 6806 |
| பொய்த்தவம் பொறி நீங்க | பொய்யான தவமாகிய தீவினை அகல | 3199 |
| பொய்து | பொய்யது-புரைபட்டது | 2731 |
| பொய்யர் | பொய்ப்பொருளையே சார்வோர் | 5587 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | **பொ** | |
| பொய்யார் | பொய்யாமல் (தவறாமல்) ஈவோர் | 1008 |
| பொரி ஏர் புன்கு | நெற்பொரி போன்று பூக்கும் புன்கு | 2149 |
| பொரி புல்கு காட்டிடை | நெற்பொரிகள் கிடக்கும் இடுகாட்டில் | 4135 |
| பொரு ஆக | ஒப்பாக | 1622 |
| பொரு ஆர்ந்த | மோதுதல் செறிதல் மிக்க | 2048 |
| பொரு(க்)கடல் | கரையை மோதும் கடல் | 2934 |
| பொருது | பொருந்தி | 1912 |
| பொருப்பின் மங்கை | மலையரசான இமவான் மகள்-பார்வதி | 2361 |
| பொருப்பு | கயிலைமலை | 137 |
| பொருள் | மெய்ப்பொருள் | 2721 |
| பொருளார் | சிவமாகிய மெய்ப்பொருள் பெற்றவர் | 2187 |
| பொல்லாப் படுதலை | பொலிவற்ற பிரம்மகபாலம் | 2073 |
| பொல்லார் | பொலிவற்றவர் | 2148 |
| பொ(ல்)லா அங்கதர்க்கு | பொல்லாத வசை கூறும் சமணர்க்கு | 3220 |
| பொழில் | உலகம் | 4530 |
| பொள்ளல் இவ் உடலை | பொத்தல் நிறைந்த இந்த உடம்பை | 7843 |
| பொற்பு | பொலிவு, குளிர்ச்சி | 68 |
| பொற்றூப்பு | பொன்தாம்பு-பொன்ஊஞ்சல் | 1979 |
| பொற்றை | மலை | 6244 |
| பொறி | அறிவு, நல்விதி | 10 |
| | வண்டு | 12 |
| | புள்ளி | 2213 |
| பொறி இலா அழுக்கை | பொலிவற்ற அழுக்கு மலிந்த உடம்பை | 4690 |
| பொறை | பாரம் | 165 |
| பொறைபடாத | தணியாத | 510 |
| பொன் | பொலிவு | 7 |
| | பொன் நிறமுடைய பசலை | 648 |
| பொன் இயன்ற சடை | பொன்னால் ஆனது போன்ற சடை | 1536 |
| பொன் உள்ளத் திரள் | பொன் நிறமான திரண்ட சடை | 6185 |
| பொன் உரையாய் | பொன்னை உரைத்துப் பார்க்கும் கட்டளைக்கல்லாக | 6313 |
| பொன்திரள் | பொன் திரண்டது போன்ற பூங்கொத்து | 2796 |
| பொன் நெடுங்கோல் | பொன்மயமான நீண்ட அம்பு-பாசுபதம் என்னும் அத்திரம் | 2874 |
| பொன் பவளம் பழுக்கும் | பொன் போலவும் பவழம் போலவும் கனிகள் பழுக்கும் | 2092 |
| பொன் போது | பொன் போலப் பூக்கும் பூ | 2150 |
| பொன் மலை | மேருமலை | 882 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | பொ | |
| பொன் முடி | அழகிய தலை | 339 |
| பொன்னம் பாலிக்கு-மேனும் | அமரர்உலகமான பொன்னுலகத்து வாழ்வைத் தந்தாலும் | 5240 |
| | போ | |
| போக்கது | அழிவது | 2555 |
| போக்கு | போகும் உபாயம் | 2332 |
| போகரும் யோகரும் | இல்லறத்தில் இருப்போரும் துறவு பூண்டு யோகத்தில் இருப்போரும் | 7988 |
| போதகத்து | யானையினது | 2852 |
| போதகம் | ஆண்யானை | 1220 |
| போதம் | சிவஞானம் | 1932 |
| போதன் | போதில் (பூவில்) இருப்பவன்-பிரமன் | 1132 |
| போதா | போது (அந்த நேரத்தில்) | 4902 |
| போதி | அரசமரம் | 2723 |
| போதித்த | அறிவித்த | 1936 |
| போதியவர் | புத்தர் | 172 |
| போதியார் | புத்தர் | 720 |
| போதியோ | போகக் கடவாயோ | 1971 |
| போதின்கண் பாதன் | அடியார் இதயத்தாமரையில் உள்ள திருவடிகளை உடையவன் | 2880 |
| போதினல் | உரிய பொழுதிலே | 2783 |
| போதினொடு | உரிய பொழுதிலே | 1799 |
| போது | பொழுது | 491 |
| | மலரும் பருவத்து அரும்பு | 2379 |
| போது ஆர் பாகம் | பூப்போன்று மெல்லிய இடப்பாகம் | 738 |
| போதும் | வாருங்கள் | 641 |
| போதே | வருவாயாக | 5743 |
| போதை ஆர் | மலர் போன்ற | 3053 |
| போம் ஆத்தை | ஆத்தை-ஆற்றை; மீளும் வழியை | 5677 |
| போர் அகலம் | போர் செய்தற்கு ஏற்ற மார்பு | 461 |
| போர் ஆழி | போருக்குரிய சக்கராயுதம் | 3380 |
| போல் | ஒப்பில் போலி-உரையசை | 1842 |
| போலனை | புகல் ஆனவனை | 5012 |
| போலிய | போன்ற | 1832 |
| போலும் | ஒப்பில் போலி-உரையசை | 2113 |
| போவதோர் நெறி | அடைவதற்கான ஓர் உபாயம் | 4524 |
| போழ் அயில | கிழிக்கும் கூரிய பற்களையுடைய | 3526 |
| போழ்து | மாலைப்பொழுது | 177 |
| போழ்ந்த திங்கள் | பிளந்த சந்திரன்-பிறை | 2715 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | போ | |
| போழ்நிலா | மறைந்து துண்டமாய்த் தோன்றும் சந்திரன் | 2817 |
| போழம் | மாறுன சொல், கவர்த்த மொழி | 491 |
| போற்றுன் | பிறர் போற்றுதலுக்கு உரியவன் | 1628 |
| போற்றி | பாதுகாத்தருள்க | 8233 |
| போற்று | துதி | 16 |
| போனகம் | உணவு | 1147 |
| | பௌ | |
| பௌவம் | வெள்ளம் | 573 |
| | ம | |
| மக | குட்டி | 1059 |
| மகத்தில் புக்கதோர் சனி | மக நட்சத்திரத்தில் உள்ள சனி; அந்தக் கோள்நிலை நேருங்கால் நாட்டிற்கும் மக்களுக்கும் தீங்கு வரும் என்பது சோதிடநூற் கருத்து. | 7793 |
| மகரம் | சுறுமீன் | 714 |
| மகவோனை | இந்திரனை | 4311 |
| மகிடன்-செற்று | மகிடாசுரனை அழித்து | 2274 |
| மகிழ் | மகிழம்பூ | 837 |
| மகோதை | திருஅஞ்சைக்களம் என்னும் திருக்கோயில் உள்ள நகரம் | 7267 |
| மங்கலியத்தில் | இறைவனை வழிபடுவதற்குரிய பூ முதலிய மங்கலப்பொருள்களால் | 3929 |
| மங்கு நோய் | உடல் மங்குவதற்குக் காரணமான நோய் | 2547 |
| மங்குல் | மேகம் | 55 |
| மங்கை | கொல்லிமழவன் மகள் | 470 |
| மச்சம் மதம் நச்சி | மீன்நாற்றத்தை விரும்பி | 3524 |
| மசங்கல் | மயங்கல் | 117 |
| மஞ்சர் | மேகவாகனர்-வித்யாதரர் | 3165 |
| மஞ்சன் | மைந்தன் | 407 |
| | சுவாமி | 3678 |
| மஞ்சு | வலிமை | 407 |
| | வெண்மேகம் | 671 |
| மஞ்ஞை | மயில் | 850 |
| மட்டித்து | தோள் வீசி | 6257 |
| மட்டு | தேன் | 1971 |
| மட்டு உரம் | மணமும் வளமும் | 3730 |
| மட்டையர் | மொட்டையர் | 3436 |
| மடப்பால் | கோயிலில் | 7386 |
| மடமயிலைக் கட்டு | அழகிய மயிலாப்பூர்க்கோயில் | 1971 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ம | |
| மடமாதர் இருவர் | உமையும் கங்கையும் | 2621 |
| மடல் | பூ | 360 |
| | இலைகள் | 4230 |
| மடவரலாள் | மடந்தை-உமாதேவி | 1201 |
| மடவரலியர் | மகளிர் | 1332 |
| மடு | நீர்நிலைப்பள்ளம் | 767 |
| மடுப்பு அடுக்கும் சுருதி | மனத்தில் பதியும் வேதம் (குரு சொன்னபின் சீடர் கூறுவது) | 2799 |
| மடை | வாய்க்கால் | 893 |
| | நீர்மடை | 1742 |
| மடைச் சுரம் | நீர்மடைகளின் வழி | 852 |
| மண் | புற்று | 4 |
| | நன்கு ஒலிப்பதற்காக முழவில் பூசும் ஒருவகைக் கரிய கலவை | 496 |
| | நிலஉலகத்தவர் | 2081 |
| | மண்ணும் அதைப் படைத்த பிரமனும் | 2189 |
| மண் இழி சுரர் | மண்ணுலகில் வந்த தேவர்-அந்தணர் | 3659 |
| மண்டி | சேர்ந்து | 2353 |
| | மிகுந்து | 2421 |
| மண்டை | பிச்சைப்பாத்திரம் | 117 |
| | ஒருவகைப் பாத்திரம் | 3018 |
| மண்ணகத்து ஐவர் | மண்ணில், சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்தாகவும் இருப்பவர். இவை பஞ்ச தன்மாத்திரை எனப்படும்; இவை இறைவனுடைய அம்சங்களே; இவை ஐம்பூதங்களிலும் அமைந்து ஐம்புலன்களுக்கும் பற்றுக்கோடாகின்றன. | 4793 |
| மண்ணுதல் | நீரில் மூழ்குதல்; மொட்டையாக்கல் எனினும் அமையும் | 1205 |
| மண்ணை | பேய் | 7021 |
| மண் பகிரி | மண்ணைக் கிளறும் பன்றி | 3522 |
| மண மொய்ம்பு | திருமணச் சிறப்பு | 122 |
| மணல் கவர் உறு புனல் | மணலை ஊடறுத்து ஓடும் காவிரி | 1313 |
| மணி | நீலமணி | 591 |
| மணி அணி கண்டம் | நீலமணி நிறமுடைய கழுத்து | 2333 |
| மணியான் | மணிபோன்றவன் | 408 |
| மணிவண்ணன் | நீலமணி நிறமுடைய திருமால் | 3093 |
| மத்தக மணி | தலைக்கு அணியும் ஓர் ஆபரணம் | 3745 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ம | |
| மத்தம் | மதம் | 161 |
| | ஊமத்தம் பூ | 547 |
| | மயக்கம் | 2618 |
| மத்தமான இருவர் | மயங்கிய அரியும் பிரமனும் | 2853 |
| மத்தர் | (மத்தகர்) தலையை உடையவர் | 4867 |
| மத்தரம் | மந்தரம் என்றதன் வலித்தல் | 3728 |
| மதக்களிறு அஞ்சினை | மதயானை போன்ற ஐம்புலன்களையும் | 5703 |
| மதமச் சிறுமி | செம்படவப் பெண்ணான சத்தியவதி | 3524 |
| மத மத்தம் | மயக்கம் தரும் ஊமத்தம்பூ | 143 |
| மதர் கூளி | செருக்கு மிக்க பேய்கள் | 3526 |
| மதர்த்து | களித்து | 4393 |
| மதன் | மன்மதன் | 4624 |
| மதனன் | மன்மதன் | 736 |
| மதி உச்சியான் | திங்களைத் தலையிலே கொண்ட சிவன் | 2304 |
| மதிமுத்தம் | திலதைப்பதி என்னும் தலத்துத் திருக்கோயில் | 2747 |
| மதியார் | பகைவர் | 798 |
| மதுத் திவலை | தேன்துளி | 3795 |
| மது நாணும் வகையே ஏணுகரி | மது என்ற அரக்கன் நாணும் வகையில் வலிமை மிக்க கயமுகன் என்ற அசுரன் | 3515 |
| மதுரன் | இனியவன் | 3353 |
| மதுரைத் தொகை ஆக்கினன் | மதுரைச் சங்கத்தை நிறுவிய பாண்டியன் | 3382 |
| மந்தணம் | மந்திராலோசனை-இரகசியம் | 1836 |
| மந்தம் | குறைந்த ஓசை | 415 |
| | தென்றல் | 896 |
| மந்தம் ஆய பொழில் | தென்றல் வீசும் சோலை | 2746 |
| மந்த முழவு | மந்தமாய் ஒலிக்கும் முழவு | 1060 |
| மந்தர வரி சிலை | மந்தரமலையாகிய கட்டமைந்த வில் | 3727 |
| மந்தல் | மென்மை | 707 |
| மந்தி | பெண்குரங்கு | 27 |
| மந்திரக் கால் | மந்திரங்களின் அடிகள் | 1362 |
| மம்மர் ஆணை | அறியாமையின் மயக்கமே மிக்க ஆட்சி | 6531 |
| மயல் | மயக்கம் | 414 |
| மயானத்து மைந்தன் | மயானத்தில் வாழ்பவன் | 6330 |
| மயிர்கள் தழுவு முனி | உரோமச முனிவர் | 3525 |
| மயில் ஆல | மயில்போல் ஆட | 1881 |
| மயில் குயில் கிளி என மிழற்றிய | மயில்போலத் தோன்றி குயில்போல் கூவிக் கிளிபோல் மழலை பேசிய | 2649 |
| மயிற்கு எதிர்ந்து | மயிலோடு மாறுபட்டு | 2533 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ம | |
| மரக் கொக்காம் என | மரத்தில் உள்ள கொக்கைப் போல | 5989 |
| மரவடியினர் | பாதுகைகளை உடையவர் | 3746 |
| மரவம் | மரவமரம் | 101 |
| மராம் | வெண்கடம்ப மரம், கனிமரம் | 2001 |
| மரியார் | (சீவன் முத்தர்) இறவாதவர் | 1663 |
| மரு | பொருந்திய | 34 |
| | நறுமணம் | 1622 |
| மருகல் | ஒருவகை வாழை - அதனை உடைய ஊர் | 55 |
| மருதங்களா(க) மங்கையோடு மொழிவர் | புலவிக்காலத்தில் உமாதேவியுடன், மருதத்திணைச் சொற்களாக மனைவியின் உயர்வும் கணவனது பணிவும் காட்டும் சொற்களாகப் பேசுவார் | 6611 |
| மருதவானவர் | மருத்தர் ஆகிய அசுவினி தேவர்கள், இந்திரன் முதலான தேவர்கள் | 2664 |
| மருது அமர் வன்மலர் துவர் | மருதமலரால் ஊட்டிய துவர் | 1346 |
| மருப்பு | தந்தம் | 716 |
| மருப்பு உருவன் | விநாயகக் கடவுள் | 1266 |
| மருவலர் | பகைவர் | 209 |
| மருவார் | பகைவர் | 2431 |
| மருவும் | பொருந்துங்கள் | 195 |
| மருள் | பண்வகை | 493 |
| | மயக்கம் | 2782 |
| மருள் இல் நல்லார் | சிவஞானியர் | 2782 |
| மல் | வளம் | 2090 |
| | வலிமை | 2779 |
| மல் அயங்கு தோள் | மற்போரில் அசையும் தோள் | 2283 |
| மல்கும் | நிறையும் | 14 |
| மல் சூழி அருகே | வளம் சூழ்ந்த மதிலின் பக்கங்களில் | 3561 |
| மல்லல் | வளம் | 618 |
| மலக்கிட்டு | மயங்கச்செய்து | 4177 |
| மலக்குவார் | கலக்குபவர் | 4477 |
| மலங்கி | கலங்கி | 861 |
| மலர்மிசை எழுதரு பொருள் | பிரம்மரந்திரத்தில் உள்ள ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரைமேல் இருக்கும் பேரொளிப் பிரம்மம் | 221 |
| மலர்மேல் நண் அவன் | பிரமன் | 3600 |
| மலரமுதம் | தேன் | 2945 |
| மலரான் | பிரமன் | 1 |
| மலரான் நன்னகரம் | பிரம்மபுரம்-சீகாழி | 2231 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ம | |
| மலன் | மலம்-ஆணவம் | 451 |
| மலி கரம் உடை நிட்டுரன் | எண்ணில் மிகுந்த இருபதுகைகளை உடைய தீயவன்-இராவணன் | 3730 |
| மலை | தோணிமலை-சீகாழி | 859 |
| மலைஅதனுர் | மலைதற்கு (போரிடற்கு) உரியராகிய அசுரர் | 290 |
| மலைக் கொள் ஆனை மயக்கிய வல்வினை | மலையில் வாழும் யானைபோல் அச்சுறுத்தி மயக்கிய வல்வினைகள் | 5606 |
| மலைந்தவர் | போருக்கு வந்தவர்-திரிபுர அசுரர் | 2492 |
| மலை நிலாவிய மைந்தன் | மலை போன்ற எடுப்பான தோற்றம் கொண்ட இறைவன் | 2612 |
| மலைமகளை வேறாக நில்லாத வேடம் | பார்வதியை விட்டகன்று இல்லாத அர்த்தநாரீசுவரர் ஆன திருமேனி | 1945 |
| மலை மல்கு கோயில் | மலைபோல் உயரமான கோயில் | 2082 |
| மலையார் | மயக்கமில்லாத சிவஞானியர் | 2338 |
| மலையார் நாரி | இமவான்மகளாகிய பார்வதிதேவி | 3616 |
| மலையாளர் | நம்பூத்திரிமார் | 1833 |
| மலையான் | இமவான் | 128 |
| மவ்வம் | மேகம் | 2590 |
| மவ்வல் | காட்டுமல்லிகை | 608 |
| மழ | இளமை | 125 |
| மழலை | பொருள் விளங்கா ஒலி | 97 |
| | இனிய குரல் | 2624 |
| மழு | கோடரி போன்ற ஆயுதம் | 509 |
| மழுங்க | மறைய | 734 |
| மழை | மேகம் | 120 |
| மழை ஆர் மிடறு | மழைபோல் கரிய கழுத்து | 1710 |
| மழையான் | கரிய நிறமுடைய திருமால் | 8115 |
| மளித்து | மடித்து | 4630 |
| மறம் | பாவம் | 4213 |
| மறலி | யமன் | 212 |
| மறவல் | மறக்கவேண்டா | 976 |
| மறவித்தொழில் | மறத்தல் | 5206 |
| மறி | மான்குட்டி | 193 |
| மறித்த | தடுத்து அழித்த | 2935 |
| மறித்தலை மடப்பிடி | வளைந்த தலையை உடைய இளம்பெண்யானை | 3083 |
| மறித்திட்டு | நரகத்திலிருந்து மீட்டு | 6603 |
| மறித்தும் நோக்கு | மீண்டும் பார்த்தல் | 4625 |
| மறியும் போது | கவிழும்போது | 4624 |
| மறிவாய் | தடைப்படுதலாய் | 5237 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | ம | |
| மறுக்கம் | வருத்துதல் | 8151 |
| மறுக | கலங்க | 10 |
| மறுகிட | கலங்கிட | 815 |
| மறுகு | கலங்குதல் | 202 |
| | தெரு | 1973 |
| மறுத்தவர் | பகைவர் | 1181 |
| மறுமாண் உரு | குற்றம் மிக்க பெரிய உருவம் | 1095 |
| மறை | வேதம் | 6 |
| | வேதமாகிய குதிரைகள் | 113 |
| | உபநிடதம் (மேலானதாக இருப்பது) | 515 |
| மறைத்தான் பிணி | பிறவிப்பிணியைப் போக்கினன் | 1673 |
| மறையவன் | பிரமன் | 213 |
| மறையா | மறைத்து | 106 |
| மறையாளர் | அந்தணர் | 1834 |
| மறையான் | பிரமன் | 1701 |
| மறையினோடு இயல் மல்கிடுவார் | வேதஒழுக்கம் நிறைந்த வேதியர் | 1572 |
| மறையுடைய வேதம் | உபநிடதம் எனும் இரகசியத்தை உடைய வேதம் | 6816 |
| மறையோன் | மார்க்கண்டேயன் | 1800 |
| மறை வல்ல முனி | பிரமன் | 11 |
| மன் ஐயாறு மருவிய | நிலையான திருவையாற்றில் உள்ள | 5511 |
| மன்றல் | நறுமணம் | 413 |
| மன்றி | ஒறுத்து | 4629 |
| மன்றில் | மன்றம்-நடன அரங்கு | 2275 |
| மன்று ஏய்க்கும் | பொன்னம்பலம் போன்றே (பிருதிவியம்பலம் எனப் புகழ்பெற்ற காஞ்சி) | 1593 |
| மன்னியும் | பொருந்தியும் | 5006 |
| மனகனாய் | மன்அகனாய் (ஒறுத்தற்கு) நிலைபெற்ற மனத்தனாய் | 4625 |
| மனத்தினை வலித்து | மனத்தை வன்மையுடன் இழுத்து | 1278 |
| மனப் பாறை | பாறை போல இளகாத மனம் உடையார் | 6246 |
| மனம் மிகு வேலன் | ஊக்கம் மிக்கவனும் வலிய வேலினை உடையவனுமான இராவணன் | 2917 |
| மனமணி | மனோன்மணி; மனம் உள்நோக்கும் நிலையிலிருப்பவன் | 4908 |
| மனவஞ்சர் | வஞ்சகம் நிறைந்த மனம் உடையோர் | 1889 |
| மன வாரம் | மனமார்ந்த அன்பு | 3699 |
| மனவினும் | மனத்தாலும் | 2836 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | மா | |
| மா | குதிரை | 522 |
| | யானை | 1835 |
| மாக்கம் | (மாகம்)வானம் | 1817 |
| மாகம் | ஆகாயம் | 572 |
| மா கம்பம் அறியும் | மிக்க நடுக்கம் தரும் | 1598 |
| மா காசம் | மிக்க ஒளி | 6469 |
| மாகாளன் | திருக்கைலாயத்து வாயிற்காப்பான் | 7198 |
| மாகு | ஆகாயம் | 3137 |
| மாங் கரும்பும் | மாவும் கரும்பும் | 3131 |
| மாங் கலி | மாமரச் செழிப்பு | 6314 |
| மா சதுரன் | மிக்க சாமர்த்தியம் உடையவன் | 6330 |
| மாசிக் கடலாட்டு | மாசிமக நாளில் கடல்நீராடுதல் | 1976 |
| மாசு | குற்றம்-மும்மலங்கள் | 451 |
| | மேகம் | 2589 |
| மாசுணம் | மலைப்பாம்பு | 828 |
| மாசு பனி | பனிமாசு | 1780 |
| மாட்டி | மாளச்செய்து | 533 |
| மாட்டுப் பள்ளி | செல்வம் மிகுந்த இருப்பிடங்கள் | 6069 |
| மாட்டே | பொன்னே, செல்வமே | 7445 |
| மாடம் நீடு வரை | மலை போன்ற நெடிய மாடம் | 2372 |
| மாடு | பக்கம் | 353 |
| | பொன் | 5941 |
| மாடு அமர் சனம் | பக்கத்தில் உள்ள சுற்றத்தார் | 1340 |
| மாடு அவல | (சடைக்கு ஒப்பு ஆகாமையால்) பொன் அவலம் உறுமாறு செய்யும் | 1819 |
| மாடு ஆரும் | இடப்பக்கம் நிறையும் | 1360 |
| மாடுவன் | உள்ளே அகப்படுத்துவேன் | 7699 |
| மாண் | மாணி-(வாமனன் ஆக) பிரம்மசாரி உருக்கொண்ட திருமால் | 2110 |
| | மாண்பு-நலம் | 2545 |
| மாண் உருவாய் | மாணியின் உருவமுடையோனாக | 1095 |
| மாணம் | மரணம்-இறப்பு | 2181 |
| மாணு உரு | மாணிவடிவம் | 7265 |
| மாணி | பிரம்மசாரி (மார்க்கண்டேயன்) | 809 |
| | சண்டேசுவரர் | 5254 |
| மாணிதன் | பிரம்மசாரி (மார்க்கண்டேயன்) | 2563 |
| மாத்தன் | மகா ஆப்தன்-மிக்க நட்புடையோன் | 5875 |
| மாத்தாய் | பத்தரை மாத்துத் தங்கமாக | 4774 |
| மாத்தானை | பெருந்தகுதி உடையவனை | 7915 |
| மாத்திரையில் | ஒரு நொடிப்போதில் | 3279 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | மா | |
| மாத்து | மகத்து(வம்)-பெருமை | 5675 |
| மாதவி | குருக்கத்திக்கொடி | 610 |
| மாதி | அணிமா முதலான எட்டுச் சித்திகள் (அணிமாதி 'அணி' குறைந்தது) | 720 |
| | மாதினைப் பாகமாக உடையவன் | 1234 |
| மாதிமை | காதல்-விருப்பம் | 3449 |
| | பெருமை | 5168 |
| மாது | மாதர்-காதல், பெருமை | 779 |
| மாது இயன்று | பெண்ணின் இயல்புக்கு ஏற்பக் காதல் மிகுந்து | 5686 |
| மாதுமை | உமை மாது | 4868 |
| மாந் தில்லை | பெரிய தில்லை | 869 |
| மாப் பிணை | பெண்மான் | 4282 |
| மா பதம் | பெரும்பதவி | 1522 |
| மாமகளூர் | சீகாழி | 2268 |
| மாமடம் | தேரழுந்தூர்க்கோயில் | 1677 |
| மாமடி | மாமனுரான தக்கன் | 1836 |
| மா மழை | கரிய மேகம் | 98 |
| மாய மனத்தவர்கள் | வஞ்சமுடைய மனமுடையோர் | 5006 |
| மாயவன் | கருநிறத்தவன் | 3892 |
| மார்க்கம் | சிவநெறி | 2328 |
| மார்பு | உடம்பு | 4666 |
| மார்வு | மார்பு | 2694 |
| மால் | மயக்கம் | 412 |
| | பக்தியாகிய பித்து | 2118 |
| | கருமை | 2316 |
| மால் அன | மேகம் போன்ற | 2995 |
| மால் ஏயப் படர்வு உறுமவன் | மயக்கமுறப் பறந்து செல்லும் பிரமன் | 1361 |
| மால் மதலை | திருமாலின் மகனுன மன்மதன் | 2771 |
| மால் வரை | மேருமலை (வில்) | 2021 |
| மாலன் | இந்திரன் | 4598 |
| மாலினுர் | திருமால் | 594 |
| மாலும் | மயங்கும் | 295 |
| மாலை | திருமாலை | 6413 |
| மா வரைத்தலத்தால் | பெரிய கைலாயமலையினுல் | 3207 |
| மாவலி | மகாபலிச் சக்கிரவர்த்தி | 1095 |
| மாவின் வளம் | வண்டுகளின் கூட்டம் | 2426 |
| மாழை | மாவடு | 1464 |
| மாள்வு உற | அழிவடைய | 3753 |

| அருஞ்சொல்-சொற்றொடர் | பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| | மா | |
| மாளா நாள் | முடிவில்லா வாழ்நாள் | 7479 |
| மா(ற்)றார் | பகைவர் | 131 |
| மாறில் | பண்டமாற்றுச்செய்தால் (விற்றால்) | 1526 |
| மாறு | ஒப்பு | 2330 |
| மாறுதான் ஒருங்கும் வயல் | பகையான களைகள் தாமே அழியும் வயல் | 5916 |
| மாறும் | தணியும் | 4247 |
| மான் | மான்தோல் | 136 |
| மான் (அடி-1) | சக்தி | 1382 |
| மான்று | மயங்கி | 637 |
| மானதன் | மானமுடையவன் (பெருமை) | 2774 |
| மானம் | ஆணவம் (நான், எனது என்பன) | 1581 |
| | மி | |
| மிசைசெயா | தீங்கு செய்யமாட்டா | 3992 |
| மிஞ்சுக்கே | உச்சியில் | 4088 |
| மிடல்கொடு | வலிமையுடன் | 211 |
| மிடறு | கழுத்து | 756 |
| மிண்ட | குத்திப் பெயர்த்து வைக்க | 4649 |
| மிண்டர் | உடல்வலிமை உடையவர் | 578 |
| மிண்டி | நெருங்கி | 323 |
| மிண்டிட்டு | செருக்குக் கொண்டு | 82 |
| மிண்டிய | கிளறிய | 2016 |
| மிண்டு | வழக்குரை (விதண்டாவாதம்), மூர்க்கத்தனம் | 1991 |
| மிண்டு ஆடி | வலிய சொற்களைப் பேசி | 3501 |
| மிண்டும் | குறும்புசெய்யும் | 457 |
| மித்திர வச்சிரவணற்கு | தோழனை குபேரனுக்கு | 6792 |
| மிலேச்சு | மிலேத்து-சூடி | 3524 |
| மிலேத்த | சூடிய | 1776 |
| மிளிர்வன | பிறழ்வன | 843 |
| மிளிர | கீழ்மேலாகப் புரள | 4954 |
| மிறை | நடுவுநிலையின்மை | 7978 |
| மிறைசெய்த | தண்டித்த | 1076 |
| மிறைத்தான் | துன்புறுத்தினன் | 1673 |
| மிறையும் தறியும் | பிறரை வருத்துதலையும் பிரித்தலையும் | 7978 |
| மின்னனை | மின்னல் போலும் ஒளிவடிவினனை | 5275 |
| | மீ | |
| மீ | ஆகாயம் | 1363 |
| மீகம் | உயர்ந்த சிவலோகம் | 1653 |

